# வேதாகமப் பாடங்கள்

"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும்
அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்
பிரகாசம் போ-ருக்கும்."

தொகுதி *4*

# அர்மகெதோன் யுத்தம்

# THE BATTLE OF ARMAGEDDON

"ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின் மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையி-ருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று.......... மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக்கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளிலே நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது..... அப்பொழுது எபிரேயு பாஷையிலே **அர்மகெதோன்** என்னப்பட்ட இடத்திலே அவர்களை கூட்டிச் சேர்த்தான்." *(வெளி : 16:12-16)*"

முதல் பதிப்பு : *2011*

**சென்னை வேதமாணவர் சபை**
*22*, முதல் தெரு, ராஜீவ் நகர்,
காலடிப்பேட்டை, சென்னை - *600 019.*

STUDIES IN THE SCRIPTURES
VOLUME IV

THE BATTLE OF ARMAGEDDON
*Tamil Version*

I Edition 2011 - 2000 copies

**NOT FOR SALE**

*Translated by :*
**BANGALORE BIBLE STUDENTS**
*&*
**CHENNAI BIBLE STUDENTS**
No. 22, First Street, Rajiv Nagar,
Kaladipet, Thiruvottiyur,
Chennai-600 019,
India.

# அர்ப்பணிப்பு

**ராஜாதிராஜாவுக்கும் கர்த்தாதிகர்த்தாவுமானவருக்கும்**

புத்திர சுவிகாரத்துக்குக் காத்துக்கொண்டிருக்கும்
பிரதிஷ்டைக்குட்பட்ட அவருடைய பரிசுத்தவான்கள்
மற்றும்
கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளும் விசுவாச வீட்டார்கள்
மற்றும்
தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருந்து
தவித்து பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிகள் ஆகியோரின் நலன்களுக்காக

**இந்தப் பணி அர்ப்பணிக்கப்படுகிறது.**

இ இ இ

*"தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம்
இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கறதற்கு," "அந்தக்
கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில்
பெருகப் பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது
விளங்கும் நியமத்தின்படி சகலமும் கிறிஸ்துவுக்
குள்ளே கூட்டப்படவேண்டு மென்று
தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்
முடைய தயவுள்ள சித்தத்
தின் இரகசியத்தை எங்
களுக்கு அறிவித்தார்."*
*(எபே. 3:11;ண 1:8 - 10)*

இ இ இ

**போதகர் ரசல் அவர்களால் 1897ல் எழுதப்பட்டது.**

இ இ இ

# வெளியீட்டாளரின் முன்னுரை

"அர்மகெதோன் யுத்தம்" என்கிற இந்த நூலானது மிகமுக்கியமான உலக சம்பவங்களின் மீது வேதத்தின் தீர்க்கதரிசனங்களை மையப்படுத்துகிறது. 1897ல் எழுதப்பட்ட இது அந்த காலகட்டத்தினுடைய சீர்திருத்தத்தை தூண்டிவிடும் காரணிகளின் வழிகாட்டுதலையும், அதிகாரத்தையும் விவரிக்கிறது. இவைகளே 1914ல் "புறஜாதியாரின் கால"த்தின் முடிவு சமயத்தில் இராஜ்யங்களின் வீழ்ச்சிக்கு காரணமாய் இருந்த சக்திகள் ஆகும். மேலும் இவைகள் சமுதாய ஒழுங்குகள் யாவற்றையும் தரைமட்டமாக்கிவிடும். இந்த உலகம் தன்னுடைய கடைசி யுத்தத்தை நோக்கி இரக்கமற்று இழுக்கப்படுவதின் நிமித்தம் இந்த புத்தகத்தின் மீதான நம்பகத்தன்மை கூடிக்கொண்டே வருகிறது. கட்டுப்படுத்தமுடியாத இந்த போராட்டத்தை விட்டு வெளியே வர ஒரு வழியைத் தேடுவதில் உலகத் தலைவர்கள் மிகவும் களைப்படைந்து வருவதை குறிப்பாய் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது.

தி வேர்ல்டு மேகசின் (ஆகஸ்டு 30, 1914) என்கிற அந்நாட்களின் குறிப்பிடத்தக்க ஒரு பத்திரிகையில், ஆசிரியருடைய முன்கூறப்பட்ட காரியங்களைக் குறித்து எழுதப்பட்டது. "ஐரோப்பாவில் ஆரம்பமான பயங்கரமான போர் அசாதாரணமானதொரு தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது." வேதத்தில் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டிருக்கும் கோபாக்கினையின் நாள் 1914ல் உதயமாகும் என்று கடந்த 25 ஆண்டுகளாக வேத மாணவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கின்றனர்."

தி கிரேட் ஐடியாஸ் டுடே, 1963 பிரிட்டானிக்கா கிரேட் புக்ஸ், என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா, இங்க், பக்கம் 107, 108ல் கீழ்கண்டவற்றின் பிரதிப-ப்பு இருந்தது. "விஞ்ஞானம் மற்றும் வளர்ச்சியினால் வசீகரிக்கப்பட்டு தன்னையிழந்த உலகமானது, 1914ல் இவ்வுலகம் முடிவுக்கு வரும் என்று வெகுகாலத்திற்கு முன்பே குறிப்பிட்டுக்கொண்டிருந்த சமய பிரிவுகளின் ஆன்மீக நம்பிக்கையை கே- செய்தது; ஐம்பது வருடங்களுக்குப் பிறகு 1914ல் உலகம் முடிவுக்கு வரவில்லை என்பதைக் குறித்து அத்தனை நம்பிக்கை உடையதாக இல்லை.

உலகத்தை உற்று நோக்குகிறவர்கள் உலகின் மீது 1914ன் விளைவுகளைக் கவனிக்காமல் போனார்கள். உற்றுக் கவனித்த ஒருவரின் விமர்சனம் இதோ: "ஒரு சகாப்தத்தின் முடிவையும், அடுத்ததின் ஆரம்பத்தையும் எப்போதாவது ஒரு வருடம் குறிக்கும் என்றால், அது 1914 ஆகும். பாதுகாப்பின் உணர்வைக் கொண்டிருந்த பழைய உலகத்திற்கு அந்த வருடம் ஒரு முடிவைக் கொண்டு வந்தது; அனுதினமும் பாதுகாப்பே இல்லாத பிரதான நாகரீக காலத்தை ஆரம்பித்து வைத்தது." (ரவுஸ் ஆக்ஸ்ஃபோர்ட் சரித்திர மற்றும் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் ஜூன் 28, 1959).

துண்டு துண்டாகிப்போன இக்கால உலகமானது, புதுவிதமான அரசாங்கத்தையோ அல்லது இயக்கங்களையோ இனிமேல் கற்பனை செய்துகூட பார்க்கமுடியாது. இது தற்போது சோஷ-சம், கம்யூனிசம், நேஷன-சம் அல்லது இது போன்றவைகள், உலகத்தின் சுகவீனத்துக்கு பரிகாரம் அல்லது மாற்றுவழி என்பது போல் பார்க்கிறது? அர்மகெதோன் நமது காலத்தில் இருப்பது போல் அத்தனை உண்மையாயும், தப்பிக்க முடியாததாயும் என்றுமே இருந்ததில்லை. அனால், அதன் உச்சக்கட்டம் இன்றும் வரவில்லை என்பதைக் கூட ஆசிரியர் காண்பித்திருக்கிறார். கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சி, அரசாங்கத்தின் மீது கொண்டிருக்கும் மானிட முயற்சிகளை சீர்படுத்துகிறதாக இருக்கும். தற்போதிருக்கும் நம்பிக்கையைப்போல் நேசமாயும், அதிகப்படியாய் வரவேற்கப்பட்டதுமாய் இதுவரை இருந்ததில்லை. உண்மையில் உலகத்தின் ஒரே நம்பிக்கை இதுதான்.

ஆசிரியர் அவர்கள் நாளிதழ்கள், பத்திரிக்கைகள் மற்றும் 1890ல் எழுதப்பட்ட சொற்பொழிவுகளில் இருந்து விஸ்தாரமான விஷயங்களை சேகரித்தார். இந்த வசீகரமான காரியங்களை சரித்திரமாகவும், காரணம், விளைவுகளுடைய அடிப்படை கொள்கைகளின் செயல்முறை விளக்கமாகவும் அநேகர் கண்டுகொள்வர். நாங்கள் இதயபூர்வமாய் இந்த புத்தகத்தை வெளியிடுகிறோம். மேலும் தீர்க்கதரிசனத்தின் ஆழ்ந்த அறிவினை அதனுடைய மிகச்சிறந்த பாணியில் இது அளிக்கிறது. இதைக்குறித்து உங்களது தியானத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

**- வெளியீட்டாளர்-**

# அர்மகெதோன் யுத்தம்

## ஆசிரியரின் முன்னுரை

இந்த தொகுப்பின் முதல் பதிப்பு 1897ல் வெளியிடப்பட்டது. இது, இந்த சுவிசேஷயுக சகாப்தத்தின் முடிவுடன் சம்மந்தப்பட்டது. அதற்கும் புதிய யுகத்திற்கும் இடையே ஒன்றன் மீது ஒன்றாக இந்த உலகுக்கு உன்னதமான ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் ஒரு காலக்கட்டத்தை குறித்தும், அதற்கு பதில் இருதயத்தின் தயாரற்ற நிலையானது மென்மேலும் அதிகமான எதிர்ப்பு, அதிருப்தி, கஷ்டங்கள் ஆகியவற்றுக்கு காரணமாகியும் விட்டது என்பது குறித்தும் கூறுகிறது. தற்போது பெருகிவரும் வேகத்தில் கடந்த 43 வருடங்களின் ஆசீர்வாதங்கள் தொடருமேயானால், அதேவிதத்தில் மனுக்குலத்தின் அதிருப்தியும் கூட பெருகியிருக்கும். அதோடு மேசியாவின் அரசாட்சியின் ஸ்தாபகமும் அதன் மூலமாய் மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும் தேவனுடைய விசேஷ திட்டமும் கூட ஏமாற்றம் அடைந்திருக்கும்.

இந்த காரணத்திற்காகத்தான், ஆயிரவருட அரசாட்சியின் ஆரம்பத்தை உலகின்மீது படிப்படியாக வர தேவன் அனுமதித்திருக்கிறார். காலத்தின் மதிமயக்கத்தி-ருந்து மனிதன் விழிப்படைந்து கொண்டிருக்கும் வேளையில், தற்போதிருக்கும் மேலும் வரப்போகும் ஆசீர்வாதங்களோடு தொடர்புடைய அவரது கிருபையை அவர்கள் ஒப்புக்கொள்ளவும் இல்லை அல்லது கர்த்தரை குறித்து அதிகமாய் ஆலோசிக்கவும் இல்லை. நாம் கணக்கிட்டுப் பார்த்தபடி இந்த 43 வருடங்கள் மனுக்குலம் அடைந்திருக்கும் செல்வமானது உலகம் உண்டாக்கப்பட்டது முதல் இந்த ஆறாயிரம் வருடங்களாக கிடைத்ததைவிட ஆயிரம் மடங்கு அதிகமாய் இருக்கிறது. வளர்ச்சியடைந்த நாடுகளில் மனுஷருடைய முன்னேற்றமடைந்த நிலைமை, கடின உழைப்பின் நேரங்கள்

குறைக்கப்பட்டிருப்பது முத-யவை மேலான அறிவும் மற்றும் அதன் பின்னாக வரும் அதிருப்தியும் இதை ஈடு செய்கின்றன. இக்காலத்திற்கு உரிய கர்த்தருடைய வெளிப்படுத்துதலுடன் இது இசைந்திருக்கிறது. தானியே-ன் தீர்க்கதரிசனத்தில் நமது நாட்களை விவரிக்கும் விதமாய், அவர் கூறுகிறதாவது: "அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள் அறிவும் பெருகிப்போம்," "ஞானவான்களோ உணர்ந்து கொள்வார்கள்," "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்." *தானி 12: 1-4,10*

வேறு வார்த்தைகளால் கூறுவதானால் அறிவு பெருக்கம், அதிருப்தி, பயம் ஆகியவைகள் பெருக காரணமாகிறது - இவையே அர்மகெதோன் அல்லது தேவனின் நீதியைச் சரிகட்டும் நாளை இவ்வுலகமனைத்தின் மீதும் வரவழைக்கிறது. தற்போதைய மாபெரும் யுத்தத்தில் - பெரும்பாலான நாடுகள் ஒருவர் மற்றொருவரின் செழுமையான வளர்ச்சியினால் அச்சம் கொள்வதை நாம் பார்க்கிறோம். எல்லாருமே நம்பமுடியாத அளவுக்கு செல்வந்தராய் பெருகினாலும், எப்போதும் இல்லாத ஒரு அதிருப்தியுடனேயே யாவரும் இருக்கின்றனர். மேலும் தங்களது செழுமைக்கு ஒரு தடை உண்டாக ஏதோ நடந்துவிடும், இதனிமித்தம் செல்வத்தின் ஓட்டமானது போட்டியாளரின் பக்கத்துக்கு திசை திருப்பப்பட்டுவிடும் என்றும் மிகவும் அச்சப்படுகின்றனர். ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அச்சமானது யுத்தம் வந்தே தீரவேண்டும் என்று உறுதி செய்கிறது. பெலவீனர் இன்னும் அதிகமாய் வ-மை பெற்றுவிடும் முன், தற்போதைய காலமே யுத்தத்திற்கு மிகவும் ஆதாயமான சந்தர்ப்பம் என்று தெரிந்து கொள்ளப்பட்டது. கடந்த காலம் மற்றும் நிகழ்காலத்திற்கு உரிய நன்றி மறந்தநிலை, எதிர்காலத்தை குறித்த பயம், மற்றும் சுயநலம் ஆகிய அதே ஆவிகள் எவ்விடங்களிலும் வெளிப்படையாய் தெரிகிறது. இவை பொன்னான பிரமாணத்திற்கு நேராய் சிறிது கவனத்தை செலுத்துகிறது. முதலாளித்துவத்துக்கும் தொழிலாளித்துவத்துக்கும் இடையேயான போராட்டம் இந்த வழியில் தான் இருக்கின்றது, இப்படிப்பட்ட காரியங்கள் மோசத்தி-ருந்து படுமோசமான நிலைக்கு மிகவும் வேகமாய் கொண்டு போய்விடும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.



யுத்தம் செய்துகொண்டிருக்கும் தேசங்களுடைய கடன்தொகை 55 மில்-யன் டாலர்கள் இருக்கும் என்று அதிகாரப்பூர்வமாக கணக்கிட்டு சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை உண்மையில், தங்கமாக திருப்பிச் செலுத்தவே முடியாது; அதோடுகூட உலக கடனுக்கான வட்டிகளை செலுத்துவதற்கே போதுமான அளவு தங்கம் கையிருப்பில் இல்லை என்பதை யாவரும் அறிவர். இது திவாலான நிலையை குறிக்கிறது. யுத்தம் நின்ற உடனேயே பிற பத்திரங்களுக்கான வட்டியை செலுத்துவதற்காக பத்திரங்கள் விநியோகிப்பது நிறுத்தி வைக்கப்படும். இவ்வண்ணமாய் ஜாதிகள் திவாலா என்னும் பாதாளத்துக்குள் விழுகின்றன. மனுஷனுடைய வீழ்ச்சியின் காரணமாய் இவைகள் சம்பவிக்கின்றன. ஆனால், ஒழுக்கக்கேட்டின் பெரும் பாதிப்பில் போய் முடியாத வரைக்கும் இந்த கிளர்ச்சியானது அத்தனை மோசமில்லை. ஆனால் உணவு பற்றாக்குறையினாலோ, அல்லது பண பற்றாக்குறையினாலோ சுட்டு வீழ்த்தப்படுவதற்கும், சுட்டு வீழ்த்துவதற்கும் போதுமான அளவிற்கு மனுஷர் இல்லாமல் போகுமட்டும் யுத்தம் நிற்கப்போவதில்லை என்பது தெளிவாய் தெரிகிறது. இன்னும் வரப்போகும் நாட்களில் இப்படியாக இருக்கும் என்பது ஆசிரியருடைய கருத்து.

போர் நிறுத்தத்துக்கு பிறகு - அதிருப்தியாளர்களின் உலகளாவிய புரட்சியை தடுத்து நிறுத்துவதற்கு என்ன செய்வது என்று ராஜாக்களும், அரசியல், பொருளாதாரம் மற்றும் அவைகளுடைய ஆலோசகர்களும் ஏற்கனவே பெரும் குழப்பத்தில் தடுமாறிக்கொண்டிருக்கின்றனர். தற்போது படைகளில் இருக்கும் இருபது மில்-யன் ஆண்களுக்கு வேலைவாய்ப்புகள் தேவைப்படும். ஒரு வேளை அதில் 4ல் ஒரு பகுதியினரை ராணுவத்திலேயே தக்கவைத்துக் கொள்வதாக இருப்பினும் மீதமுள்ள 4ல் மூன்று பகுதியினரை என்ன செய்வது? இந்தக் கேள்வியானது உலகத்தின் ஞானவான்களை திகைக்க வைக்கிறது. தற்போது இவர்கள் இல்லாமல் உலகம் போய்க்கொண்டு இருக்கிறது. அதோடு ஏராளமான அளவில் . மொத்தமாய் அந்த இருபது மில்-யன் ஆட்கள் இல்லாமலேயே செல்லக்கூடும் என்பது வெளிப்படையாகிறது. கவனிப்பற்ற மனித வாழ்வுக்கு எல்லா

தேசங்களிலுமே இவர்கள் ஒரு அச்சுறுத்தலாகவே இருப்பார்கள். தேவைக்கும் மேல் இருக்கும் தங்களவர்களை கனடா மற்றும் ஆஸ்திரே-யாவில் விவசாயிகளாகும்படி தூண்டிவிடும்படியாக பிரிட்டிஷ் ஆயத்தங்களை செய்கிறது. சந்தேகமின்றி பிறநாடுகளும் கூட தங்களால் கூடுமானவரையில் இதற்கொத்த நடவடிக்கையை பின்தொடர்கின்றன. ஆனால், இந்த சூழ்நிலைக்கு ஈடுகொடுக்க தங்களிடத்தில் பிரச்சனைகள் போதுமானதாய் இருக்கும் என்பதை அவர்கள் யாவரும் உணர்கின்றனர்.

இந்த சமயத்தில் உலகத்தின் பெயரளவிலான சபை அமைப்பானது மறுபடியும் சமூக அதிகாரங்களோடு தொடர்பு கொண்டு மாபெரும் முக்கியத்துவத்துக்கு உயரும் என்று வேதம் குறிப்பிடுக்கிறது. இதற்கான ஆதாரங்களை நாம் காண முடிகிறது. பொருளாதாரரீதியில் ந-வடைந்த எல்லா ராஜ்யங்களும் - சோஷ-சம் மறறும் அராஜகத்துக்கு தொடர்புடைய எதையும் தடுப்பதையும், அதோடு பொதுமக்களின் மீது ஆதிக்கம் செலுத்தும்படியான ஒரு பிடிப்பை வைத்திருப்பதின் அவசியத்தையும் உணர்வார்கள். எதிர்காலத்தின் சித்திரவதைகளை காட்டி ஜனங்களை பயமுறுத்துவதற்கும், அரசாங்கம் என்ற கப்பல் கவிழ்ந்து விடாதபடி உதவி செய்வதற்கும் பொதுவாக சபை என்ற மாபெரும் சமய ஸ்தாபனங்கள் தங்களுக்கு ஆதரவு அளிக்கும்படி அவர்கள் உண்மையில் எதிர்பார்ப்பார்கள். சபைகளும் கூட இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திற்கு விருப்பமும் ஆயத்தமும் உடையதாயிருக்கும். ஏற்கனவே ஒரு சுருளைப் போல் அவர்கள் உழன்றுக் கொண்டிருக்கின்றனர் - ஒருபுறம் கத்தோ-க்கரும், மறுபுறம் புராட்டஸ்டன்ட்டாரும், எதிரான ஆனால் இன்னும் இணைக்கப்பட்டவர்களாய் - இயன்றவரை இருபக்கத்தினரும் பிணைக்கப்பட்டு கூட்டாக இருக்கின்றனர்.

ஆனால் "இராணியைப் போன்ற" இந்த ஆட்சிக்காலம் குறுகிய ஒன்று என்றும், பாபிலோனுடைய வீழ்ச்சி சமுத்திரத்தில் ஒரு பெரிய இயந்திரக்கல்லை எறிந்ததைப் போல், அது பயங்கரமாய் இருக்கும் என்றும் வேதம் கூறுகிறது. "இராணி" என்கிற இந்த அதிகாரத்தின் வேளையில் அல்லது காலத்தில், கொஞ்ச காலத்திற்கு, சத்தியம் சம்மந்தமான எதற்குமே இவ்வுலகம் மிகுந்த சிரமத்துக்கு



உள்ளாகும். மேலும், தேவனுக்கும், கொள்கைகளுக்கும் விசுவாசமாய் இருப்பவர்கள் சந்தேகமின்றி கஷ்டத்துக்குள்ளாவர்கள்.

பாபிலோனின் வீழ்ச்சியின் சமயத்தில், பூமியின் பலவான்களும், பொருளாதார மற்றும் அரசியல் ராஜகுமாரர்களும், மன்னர்களும் - அவளோடு மிக நெருக்கமான ஐக்கியத்துடன் இருந்தவர்கள் - தூரத்தில் நின்று - அவளுடைய அழிவுக்காக மிகுதியாய் புலம்பினாலும் கூட, இந்த அழிவு அவர்களுக்கும், வரப்போகிற ஒன்று என்பதை உணர்வார்கள். பின்பு வெகு குறுகிய காலத்தில் முழுமையான ஒரு கவிழ்க்கப்படுதலும் அழிவும் தற்போதைய புறஜாதிகளின் அரசாங்கத்துக்கு வரும். எல்லா மத, சமூக, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்தாபனங்களையும் - பூமியனைத்தையும் வேதத்தில் அடையாளமாய் சொல்லப்பட்ட ஒரு மாபெரும் அக்கினி அழித்துவிடும்.

இந்த தொகுப்பானது 20 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டது என்பதை கவனிக்கும் போது இதனுடைய சில விவரங்கள், கடுமையாய் திடுக்கிட செய்தாலும், எதிர்பார்த்ததற்கும் முன்பாகவே தற்போது முழு சத்தியமும் வெளிவருதைக் காணும்போது யாரும் வியப்படையத் தேவையில்லை. உதாரணமாக இவ்வுலகத்தின் செல்வம் இந்த இருபது வருடத்தில் பெருமளவிற்கு பெருகிவிட்டது. அமெரிக்க நாட்டின் முதலீடானது கடந்து 4 வருடகாலத்தில் வருடத்துக்கு 10 பில்-யன் என்ற விகிதத்தில் அதிகரித்துவிட்டது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த தொகுப்பில் குறிப்பிடப்பட்டிருப்பது என்னவெனில், இது எழுதப்பட்ட காலத்தின் "டிரஸ்ட்"கள் யாவும் தீங்கு இழைப்பதைக் காட்டிலும், நன்மை பயக்கின்றவைகளாகவே இருந்தன, இருந்தபோதிலும் பேராசையில் பிறந்து, சுய லாபத்தினால் வளர்ந்துவிட்ட இந்த ராட்சதர்கள் கடைசியில் மக்களுக்கும், அவரது நலன்களுக்கும் ஒரு ஆபத்தாய், ஒரு அச்சுறுத்தலாய் மாறிவிடக்கூடும். அந்த நேரத்தை நாம் வந்து அடைந்துவிட்டோம், மேலும் அந்த ஆபத்து நம்மீது இருக்கிறது என்பதை அநேகர் உணர்கின்றனர். இயந்திரங்கள் ஒழுங்காகவும், கட்டுப்பாட்டின்

கீழும் வேலை செய்கின்றவரையில் எந்த தீங்கும் செய்ய இயலாது; ஆனால் மேலாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களின் கவனம் தங்களுடைய வேலையாட்கள் மற்றும் பொதுமக்களின் விருப்பத்துக்கு நேர்மாறான திசையில் சென்றால் என்ன ஆகும் பாருங்கள்! "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் (அக்காலமட்டும்) உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என்கின்ற வேத வார்த்தையை நினைவு கூறுங்கள்.

இந்த ஆபத்து காலத்தில் மனிதருடைய கடைசி முடிவானது கர்த்தருக்கு ஒரு நல்ல தருணமாக இருக்கும். இரக்கப்படுவதற்கு அவர் காத்துக்கொண்டிருக்கிறார். ஆயிரவருடயுகத்தின் ஆசீர்வாதங்களை மனுக்குலத்தின் மீது பொழியவும், பாவத்தி-ருந்தும், மரண நிலையி-ருந்தும் அவர்களை தூக்கியெடுத்து, தேவனுடைய சாயலாகவும், அவரைப் போன்ற பழைய நிலைமைக்கு மறுபடியும் அவர்களை மாற்றவும் அவர் விருப்பமுள்ளவராய் இருக்கிறார். தங்களுடைய படிப்பினைகளை முத-ல் அவர்கள் பெறவேண்டும் என்பதை அவர் முன்னறிந்திருக்கிறார். காணக்கூடிய கண் உடையவர்களுக்கு இதை ஏற்கனவே அவர் காண்பித்திருக்கிறார். விடியற்காலத்தில் 40 வருடங்களுக்கு மேலாக அனுக்கிரகம் செய்தும் - இது, உலகத்துக்கு ஆசீர்வாதத்தையும், சந்தோஷத்தையும் கொண்டுவருவதற்கு மாறாக அதிகமாய் அதிருப்தியையே கொண்டு வந்திருக்கிறது. தங்களுடைய சொந்த திட்டங்களையும், ஏற்பாடுகளையும் சுமந்துகொண்டு அவர்களால் முடிந்த தூரம் செல்வதற்கு மனுக்குலத்தை கர்த்தர் இப்போது அனுமதிப்பார். இந்த திட்டங்களில் உபயோகமற்ற எல்லா பரிசோதனைகளையும் செய்யும்படியாய் அவர் அவர்களை அனுமதிப்பார். ஆனால் அவர்களை சமுதாயத்தின் முழு கட்டுமானத்தின் சேதத்தி-ருந்து தெய்வீக தலையீடின்றி வேறு எதுவும் அவர்களை காப்பாற்றாது. உண்மையில் அந்த சேதத்தை அவர் அனுமதிப்பார், அதன் பின்பு மேசியாவின் மூலம் மனுக்குலத்தை தெரிந்துகொள்வார்; ஏனெனில் அவரது ராஜ்யம் "சகல ஜாதிகளாலும் விரும்பப்படும்" என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். ஆகா . 2:7

கர்த்தருக்குள் உங்கள் உடன் ஊழியன்,

புரூக்ளின், நியூயார்க். **சார்லஸ் டி ரசல்**

அக்டோபர் 1, 1916



# பொருளடக்கம்

## அத்தியாயம் 1

## "நீதியைச் சரிக்கட்டும் நாள்"

இதைக்குறித்த தீர்க்கதரிசன குறிப்பு - சமீபமாயிருக்கிற காலம் - இந்த தொகுப்பின் மையப்பொருள் - பொதுவான கருத்து ...1

## அத்தியாயம் 2

## "பாபிலோனின் அழிவு" - "கிறிஸ்தவ தேசங்கள்" "மெனே, மெனே, தெக்கேல், உபார்சின்"

பாபிலோன் - கிறிஸ்தவ தேசங்கள் - நகரம் - பேரரசு - தாய் - குமாரத்திகள் - பாபிலோனின் அழிவு - அதனுடைய பயங்கரமான முக்கியத்துவம். ...15

## அத்தியாயம் 3

## நீதியைச் சரிக்கட்டும் நாளின் அவசியமும் நியாயமும்

இந்த சந்ததியின் மீதான, நிழலும் நிஜமும்-முன் கூறப்பட்ட காரணங்களினால் நியாயமானதொரு விளைவாகிய மகா உபத்திரவம் - கிறிஸ்தவ தேசங்களின் பொறுப்புகளும், அவர்கள் சார்பான அவளது மனப்போக்கும் - சமூக அதிகாரிகள், மதத் தலைவர்கள், வளர்ச்சியடைந்த நாடுகளின் மக்கள் கூட்டத்தின் பல்வேறு ஸ்தாபனங்கள் - மகா உபத்திரவத்துடனும் கிறிஸ்தவ ராஜ்யத்துடனும் புறஜாதி தேசங்களுக்கு இருக்கும் சம்பந்தம் - தேவனுடைய நியாயத்தீர்ப்பு - "பழிவாங்குதல் எனக்குரியது; நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." ...51

## அத்தியாயம் 4

## மகா நீதிமன்றம் முன் பாபிலோன் குற்றம் சாட்டப்படுதல்

பாபிலோனின் சமூக, சமுதாய, மத சம்மந்தமான அதிகாரங்கள், கிறிஸ்தவ

தேசங்கள், தற்போது தராசில் நிறுக்கப்படுதல் - சமுதாய அதிகாரங்களின் மீதான குற்றச்சாட்டுக்கள் - தற்போதைய சமூக அமைப்பின் மீதான குற்றச்சாட்டுக்கள் - மத அதிகாரங்களின் மீதான குற்றச்சாட்டுகள் - இப்போதும் கூட அவளது களியாட்டத்தின் நடுவே அவளது அழிவைக் குறித்த கையெழுத்து காணப்படுதல் மற்றும் தெளிவாக படிக்கக்கூடியது, சோதனையானது இன்னும் முடிவு பெறவில்லை. ...89

**அத்தியாயம் 5**

**மகா நீதிமன்றம் முன் பாபிலோன்**

**அவளது குழப்பம் - தேசிய அளவிலானது**

தங்களுக்கு எதிரான தீர்ப்பைக் கண்டு சமுதாய அதிகாரங்கள் கஷ்டத்துக்குள் இருத்தல் - பயத்தினாலும், துயரத்தினாலும் ஒருவரோடு ஒருவர் கூட்டணியை நாடுகின்றனர் - தனது பழங்கால அதிகாரத்துக்காக சபையை வீணாக எதிர்நோக்குகின்றனர் - தங்களுடைய ராணுவம் மற்றும் கப்பற்படையை அவர்கள் அதிகரிக்கின்றார்கள் - தற்கால போர் ஆயத்தங்கள் - பூமி மற்றும் கடல் மீது ராணுவ படைகள் - போரின் முன்னேற்றமடைந்த அமுலாக்கம், புதிய கண்டுபிடிப்புகள், புதிய உருவாக்கம், வெடிப்பொருட்கள், முத-யன - வல்லமையுள்ளவர்களை எழுப்பிவிடு; நான் வ-மையானவன் என்று பெலனற்றவர் சொல்லட்டும்; மண்வெட்டிகளை பட்டயங்களாகவும், அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள் - அமெரிக்க ஐக்கிய நாடு தனது அந்தஸ்தில் தன்னிகரற்று இருப்பது, ஆனாலும் முந்தையை உலகத்தைக் காட்டிலும் இன்றும் பெரிய தீமைகளினால் அச்சுறுத்தப்படுதல் - சமாதானமே இல்லாத போது சமாதானம்! சமாதானம்! என்ற கூக்குரல். ...143

**அத்தியாயம் 6**

**மகா நீதிமன்றம் முன் பாபிலோன்**

**அவளது குழப்பம் - மதசம்பந்தமானது**

கர்த்தரால் அறியப்பட்ட, மெய்யான சபைக்கு பாபிலோனின் நியாயத் தீர்ப்பில் பங்கில்லை - கிறிஸ்தவ தேசங்களின் சமய சூழலானது அரசியல் சூழ்நிலைக்கு எதிராய் எந்த நம்பிக்கையையும் காண்பிக்கவில்லை - மாபெரும் குழப்பம் - இராணுவத்தை நடத்துவதற்கான பொறுப்பு மதகுருவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது - மாபெரும் சீர்திருத்த ஆவி அழிந்து போனது - பாதிரியாரும் பொதுமக்களும் ஒரே நிலையில் இருக்கின்றனர் - விருப்பத்துடன் எதிர்பார்க்கப்படும் குற்றச்சாட்டுக்கள் - ராணுவம் - உத்தேசிக்கப்பட்ட சதி - தேடிச்செல்லும் முடிவு - பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள் - சமாதான உடன்பாட்டிற்கான பொதுவான எண்ணம் - கிறிஸ்தவ தேசங்களின் மத நிறுவனங்களுக்கு எதிராக நியாயத்தீர்ப்பு செல்லுதல். ...203

**அத்தியாயம் 7**

**ஜாதிகள் ஒன்று கூடுதலும் தேவனுடைய**

**கோபாக்கினையின் மாபெரும் அக்கினிக்காக**

**பூதங்கள் தயாராகுதலும்**

ஜாதிகள் ஏன், எப்படி ஒன்று கூடின - சமுதாய சக்திகள் அக்கினிக்கு ஆயத்தமாகின்றன - செல்வம் குவிக்கப்படுதல் - ஏழ்மை அதிகரித்தல் - சமுதாய சச்சரவுகள் எரியும் நிலைக்கு நெருங்குதல் - அமெரிக்க தொழிலாளர் அமைப்பின் தலைவரிடமிருந்து ஒரு வார்த்தை - செல்வந்தர்கள் சில நேரம் கடுமையாய் கண்டித்து ஒதுக்கப்படுதல் - சுயநலமும், சுதந்திரமும் இணைந்திருத்தல் - பணக்காரர் மற்றும் ஏழைகள் நோக்கில் சுதந்திரம் - ஏன் தற்போதையை சூழ்நிலை தொடர முடியாது - மாபெரும் அக்கினிக்கு தயாராவதற்கு இயந்திரங்கள் ஒரு முக்கிய காரணி - பெண்களின் போட்டி - தொழிலாளியின் நியாயமான மற்றும் நியாயமில்லாத சூழ்நிலையை குறித்த கண்ணோட்டம் - தேவை மற்றும் வினியோகத்தின் சட்டம் யாவர் மேலும் இரக்கமற்று இருத்தல் - திடுக்கிடச் செய்யும் வெளிநாட்டு போட்டி குறித்த கண்ணோட்டம் - இங்கிலாந்தை பற்றிய திரு. ஜஸ்டின் மெக் கார்தியின் அச்சம் - இங்கிலாந்தின் தொழிலாளரின் மனோநிலை குறித்து கையர் ஹார்டி, எம்.பி. - பிரிட்டிஷ் தொழிலாளிகளை குறித்த மதிப்பிற்குரிய ஜாஸ் சாம்பர்-னுடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் - தொழில் ஆர்வத்துக்கு சம்மந்தம் உடைய தேசிய ஆக்கிரமிப்பு - ஜெர்மனியின் சமூக மற்றும் தொழில் போர் மீதான ஹெர் லீப்நெட்டின் கருத்து - சர்வதேச தொழிற்சங்க ஸ்தாபனத்தின் தீர்மானங்கள் - இந்நாட்களின் ஜாம்பாவான்கள் - டிரஸ்ட் மற்றும் கூட்டுறவுகளின் பட்டியல் - மூர்க்கத்தனமான அடிமைத்தனத்துக்கு எதிராய் நாகரீகமான அடிமைத்தனம் - இயந்திரக்கல்-ன் மேல் தட்டுக்கும் கீழ்தட்டுக்கும் இடையே உள்ள மக்கள் கூட்டம் - சரிபடுத்தமுடியாத உலகளாவிய, மனுஷீக சக்திக்கும் மிஞ்சிய சூழ்நிலைகள்... ...367

## அத்தியாயம் 8

## அறுவடையாளர்களின் கூக்குரல்

சமுதாயத்தின் பழமைவாத காரணி - குடியானவர், உழவர் - கிறிஸ்தவ தேசங்களின் புதிய நிலைமை - விவசாய போராட்டம் - அதற்கான காரணங்கள் - பொன் மற்றும் வெள்ளியின் தரமே காரணிகள் - முன்குறித்து சொல்லப்பட்ட வேதவசனம் நிறைவேறுதல் - இந்த மகாநாளின் யுத்தத்துடன் இந்த விஷயங்கள் தொடர்புள்ளவைகள்... ...533

## அத்தியாயம் 9

## கட்டுப்படுத்த முடியாத போராட்டம் உலக ஞானிகளின் சாட்சியங்கள்

எல்லா கணிப்பிலும் பொதுவான புத்திகூர்மை ஒரு புதிய காரணி - செனட்டர் இன்கல்ஸ் அவர்களின் கருத்துக்கள் - போதகர் லேமன் அபாட்டின் கருத்துக்கள் - பிஷப் நியூமேனின் (M.E.) கருத்துக்கள் - ஒரு பிரபலமான நீதிபதியின் கருத்துக்கள் - கர்னல் ராபர்ட் இங்கர்சா-ன் கருத்துக்கள் - தொழிலாளர் சட்டம் பற்றி மேதகு ஜே.எல். தாமஸ்-வென்டல் பி-ப்சின் கருத்து - சரித்திர ஆசிரியர் மேக்குலேயின் முன்னுரைத்தல் - மேதகு. சாவுன்சி டீப்யூவின் நம்பிக்கைகள் - பிஷப் ஒர்திங் டன் (பி.இ)யிடம் நேர்காணல் - டபள்யூ.ஜெ. பரேயனின் பதில் - ஆங்கிலேயர் ஒருவரின் கருத்து - சூழ்நிலையை குறித்தான எட்வர்ட் பெல்லாமியின் கூற்று - போதகர் ஜெ.டி. மேக்லைனின் கருத்து - பேராசிரியர் கிரஹாமின் கண்ணோட்டம் - சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவரின் கருத்துக்கள் - பிரஞ்சுக்காரரின் கருத்து, ஒரு சமுதாய பூசல். ...569

## அத்தியாயம் 10

## உத்தேசிக்கப்பட்ட பரிகாரங்கள் - சமூகம் மற்றும் பொருளாதாரம்

மதுவிலக்கு மற்றும் பெண்களின் வாக்குரிமை - தாராளமயமாக்கப்பட்ட வெள்ளி மற்றும் பாதுகாக்கப்பட்ட விலைப்பட்டியல் - "கம்யூனிசம்" - "எல்லாவற்றையும் அவர்கள் பொதுவாய் பெற்று இருந்தனர்" - அராஜகவாதம் - "சோஷ-சம்" அல்லது "பொதுவுடைமைக் கொள்கை" - சமுதாய கட்டுமான பணியில் பாபிட் - சோஷ-சம் குறித்து ஹெர்பட் ஸ்பென்சர் - இரண்டு சோஷ-ச சமுதாயங்களின் உதாரணங்கள் - "நாட்டுடமை" (நேஷன-சம்) - ஒரு பரிகாரமாக பொதுவான இயந்திர தொழில் கல்வி - "ஒற்றை வரி" என்ற பரிகாரம் - உழைப்பாளிகளைப் பற்றி போப் 13ம் -யோவுக்கு ஹென்றி ஜார்ஜின் பதில் - சூழ்நிலையை பற்றி டாக்டர். லேமேன் அபாட் - ஒரு எம்.இ. பிஷப்பின் ஆலோசனைகள் - பிற நம்பிக்கைகளும் அச்சங்களும் - ஒரே நம்பிக்கை - "ஆசீர்வதிக்கப்பட்ட அந்த நம்பிக்கை" - இந்தக் காரியங்களை பார்க்கும் தேவ ஜனங்களுக்கு சரியாகப்படுகின்ற மனோநிலை - உலகத்தில் இருந்தும் கூட அதற்குரியவர்களாக அல்ல. ...651

## அத்தியாயம் 11

## அர்மகெதோன் யுத்தம்

தீர்க்கதரிசிகளால் பல்வேறு விதங்களில் அடையாளமாய் கூறப்பட்ட வரப்போகும் உபத்திரவம் - கி.பி. 70ல் இஸ்ரவே-ன் வீழ்ச்சியிலும் பிரெஞ்ச் புரட்சியிலும் அடையாளப்படுத்தப்பட்டது - அதனுடைய பொதுவான குணாதிசயமும் விஸ்தாரமும் - தேவனுடைய மாபெரும் சேனை - "புறஜாதிகளின் துஷ்டர்கள்" - "யாக்கோபின் இக்கட்டுக் காலம்" - அவரது விடுதலை - கோகு மற்றும் மாகோகுவின் தடை ...737

## அத்தியாயம் 12

## நமது கர்த்தரின் மாபெரும் தீர்க்கதரிசனம்

இந்தத் தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவம் - இதை முன் வைக்கும்படியான மூன்று கேள்விகளும், நிபந்தனைகளும் - போ- கிறிஸ்துக்களை குறித்து எச்சரிக்கையாய் இருங்கள் - 18 நூற்றாண்டுகளைப் பற்றிய சுருக்கமான சரித்திரபூர்வமான முன்குறிப்பு - எல்லா சுவிசேஷர்களுடைய பாஷையில் கலந்திட்ட, யூத யுக மற்றும் சுவிசேஷ யுகமுடிவின் கால உபத்திரவம் - பாழாக்கும் அருவருப்பு - மலைகளுக்கு ஓடிப்போங்கள் - பிள்ளைகளை உடையவர்கள் முதலானோர் - மாரிகாலத்துக்கும் ஓய்வு நாளுக்கும் முன்னதாக - இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொன்னால் நம்பாதிருங்கள் - அந்நாட்களின் உபத்திரவம் - அடையாளமாய் சூரியனும் சந்திரனும் இருளடைதல் - நட்சத்திரங்கள் விழுதல் - அடையாளமான நிறைவேறுதலும் கூட - மனுஷ குமாரனுடைய அடையாளம் - பூமியின் கோத்திரத்தார் எதை காண்பர் - அத்திமரம் - "இந்த சந்ததியார்" - விழித்திருங்கள்! - "நோவாவின் நாட்களில் இருந்தது போல அவர்கள் எதையும் அறியமாட்டார்கள்" - லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் - ஒருவன் ஏற்றுக்கொள்ளப்பட்டு மற்றவன் கைவிடப்படுதல் - சத்தியத்துக்குள்ளாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுதல் - சாத்தானின் வீட்டார் உடைத்தெறியப்படுதல் - விசுவாச வீட்டாரை போஷிப்பதற்கான முன்னேற்பாடுகள். ...783

## அத்தியாயம் 13

## ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் மற்றும் அது தன்னை வெளிப்படுத்தும் விதம்

*விசுவாசத்தில் நடத்தல் - ராஜ்யத்தை யார் அமைப்பது - ஆவிக்குரிய ராஜ்யத்தை நிர்மாணித்தல் "பூமியெங்கும் பிரபுக்களை" நியமித்தல் - சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் - ராஜ்யத்துக்கும் அதன் மந்திரிகள் அல்லது பிரபுக்களிடையேயான நெருக்கமான தொடர்பு - யாக்கோபின் ஏணி - மோசேயின் முக்காடு - மாபெரும் மாறுதல்கள் தொடங்கப்படுதல் - புதிய சக்கரவர்த்தியின் கரத்தில் இருக்கும் அத்தனை வல்லமையினால் ஆபத்து இருக்குமா? - இரும்புக் கோ-ன் ஆட்சி எவ்வளவு காலத்திற்கு? - உலகத்தின் மனமாற்றம் - ஒரே நாளில் பிறந்த ஒரு ஜாதி - "பிரேதக் குழியிலுள்ள அனைவரும்" - அவரது ராஜ்யத்தின் பெருக்கம் - பிரதிநிதித்துவம் ஒப்புவிக்கப்பட்டது - தேவனுடைய சித்தம் பூமியில் செய்யப்பட்டது. ...857*

## அத்தியாயம் 14

## யேகோவாவின் பாதபடியை மகிமைப்படுத்துதல்

*தேவனுடைய பாதபடி பாவத்தினால் தூய்மையை இழந்து, கைவிடப்பட்டது - அதனுடைய மகிமையின் மறுமலர்ச்சிக்கான வாக்குத்தத்தம் - கிரயத்துக்கு கொள்ளப்பட்ட சொத்து புதுப்பிக்கப்படுதல் - அதனுடைய மிக பிரகாசமான ஆபரணம் - "ஒ-வ மலையின் மேல்" யேகோவாவின் பாதம் மறுபடியும் நிர்மாணிக்கப்படுதல் - அதன் பலனான ஆசீர்வாதங்கள் - உண்மையில் பாதபடி முடிவில் மகிமைப்படுதல்....897*




# முகவுரை

# அர்மகெதோன் யுத்தம்

*"ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின் மேல் ஊற்றினான், அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையி-ருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப் போயிற்று. அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக்கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள். அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களை சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்ததிற்கு கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது. இதோ திருடனைப் போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான். அப்பொழுது எபிரேயு பாஷையிலே அர்மகெதொன் என்னப்பட்ட இடத்திலே அவர்களை கூட்டிச் சேர்த்தான்." வெளி 16 : 12-16*

அர்மகெதோன் என்ற எபிரேயு பதம் மெகிதோ அல்லது அழிவின் சிகரம் என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. மெகிதோவானது எஸ்டிரிலான் சமவெளியின் தென்கோடியில் ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. அதோடு மலைப்பிரதேசத்தினுள் மிகமுக்கியமானதொரு கணவாயையும் பெற்றிருக்கிறது. பழைய ஏற்பாட்டு சரித்திரத்தின் மிகபிரபலமான யுத்தங்கள் நடந்த பாலஸ்தீன யுத்தகளத்தின் இடமாக இது இருக்கிறது. அங்கு கிதியோனும் அவனது சிறுகுழுவும் சத்தமிட்டு மீதியானியரை அவர்களே ஒருவரை ஒருவர் யுத்தத்தில் தங்களை நாசப்படுத்திக் கொள்ளும்படி செய்தனர். *(நியா 7 :19 - 23)* அங்கு தான் பெ-ஸ்தியரால் சவுல் ராஜா தோற்கடிக்கப்பட்டான். *(1 சாமு 31 : 1-6)*. அங்கு தான் இஸ்ரயேல் சரித்திரத்தின் மிகமோசமான பேரழிவை கொண்டுவந்த யுத்தங்கள் ஒன்றில் யோசியா ராஜா எகிப்தின் ராஜா நேகோவால் சங்கரிக்கபட்டான். *(2 நாளா 35: 22-25)* ஆகாப் ராஜாவும் அவனது மனைவி யேசபேலும் இங்கு யெஸ்ரயேல் பட்டணத்தில் வாழ்ந்தனர். பிறகு இங்குதான் யேசபேல் மிக பயங்கரமானதொரு மரணத்தை சந்தித்தாள். *(2ராஜா 9 : 30 - 37)*

இந்த யுத்தங்கள் நிழலான அர்த்தத்தில் உள்ளன. மீதியானியருடைய தோல்வியானது மீதியானியரிடம் அடிமைத்தனத்தி-ருந்த இஸ்ரயேல் ஜனத்தை விடுதலை செய்தது.

ஆகவே, கிதியோனும் அவனது படைகளும் நமது கர்த்தரையும், சபையையும் அடையாளமாய் காட்டுகிறது. இவர்களே மனுக்குலத்தை பாவம் மற்றும் மரணம் என்ற அடிமைத்தனத்தி-ருந்து விடுதலையாக்குபவர்கள். சவுல் ராஜாவின் மரணமும், பெ-ஸ்தியரால் அவரது ராஜ்யத்தின் வீழ்ச்சியும் - மேசியாவை குறிக்கும் தாவீதின் ஆளுகைக்கு வழியைத் திறந்தது. வெளிப்படுத்துத-ல் வலுசர்ப்பம் என்று அடையாளமாய் அழைக்கப்படுவது, ஆகாப் ராஜாவின் அரசாட்சியைக் குறிக்கிறது. யேசபேல் ராணி மகாவேசி என்ற பெயரால் அழைக்கப்படும் பாபிலோனை முன்னறிவிக்கிறாள். "தன்னை தீர்க்கதரிசி என்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளை புசிக்கவும் அவர்களுக்கு போதித்து, அவர்களை வஞ்சித்தாள்." *(வெளி 2:20)*

அர்மகெதோன் என்னும் இந்த பிரபலமான போர்க்களத்தை, சத்தியம் - பிழை, சரி - தவறு, தேவன் - பணப்பேய் என்ற மாபெரும் முரண்பாடுகளோடு இணைத்து பேசுவதை மிகபொருத்தமான ஒன்றாய் வேதத்தில் தெளிவாய் கர்த்தர் காண்பிக்கிறார். இவைகளின் மூலமாய் சுவிசேஷயுகம் முடிவுக்கு வருவதும் மேசியாவின் யுகம் ஆரம்பமாவதும் அறிவிக்கப்படுகிறது. வேதத்தின் கடைசி புத்தகத்தில் அவர் மிக பலமான அடையாள மொழியை காரணத்துடனேயே உபயோகப்படுத்தியிருக்கிறார். அவைகளுடைய வெளிப்படுத்துத-ன் சரியான காலம் வரும்வரை குறிப்பிட்ட முக்கியமான சத்தியங்களை மறைத்து வைக்கும் தெளிவான நோக்கத்துடன் அவ்வாறு செய்திருக்கிறார். ஆனால் சரியான நேரத்திலும் கூட துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள்." *(தானி 12:10)* தேவனோடு இருதயத்தில் ஒன்றுபடாத எவரும் இதை அறியமாட்டார்கள்; ஆண்டவருடைய உவமையின்படி புத்தியுள்ள கன்னிகை என்ற பிரிவினர் மட்டுமே உணர்ந்துகொள்வார்கள். *(மத் 25:1-13)*

ஆகவே, நமது பாடத்தைக் குறித்து நாம் பார்க்கும் போது, மெகிதோன் மலையில் ஜனங்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்று நேரடியான அர்த்தத்தில் நாம் எதிர்பார்க்கக்கூடாது. அதற்கு பதிலாக



அந்த மலைக்கு அடையாளமாய் காட்டப்பட்டிருப்பவைகளை நாம் பார்க்கவேண்டும். "அர்மகெதோன் யுத்தம்" என்று அநேக காரியங்கள் அழைக்கப்படுகின்றன. இந்த வார்த்தையானது அநேக வழிகளிலும், பல கருத்துகளிலும் உபயோகிக்கப்படுகிறது. ஆனால், இந்த அர்மகெதோன் என்ற வார்த்தை விசேஷமாய் வேதத்தை சேர்ந்தது என்று கிறிஸ்தவர்கள் உணர்கிறார்கள். ஆவிக்குரிய அர்த்தத்தில் இது உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒருவேளை, அர்மகெதோன் யுத்தத்தை அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்கவேண்டிய ஏற்றவேளையாக தற்காலம் இருக்குமேயானால், அந்த வார்த்தையை மெய்யான சமய கண்ணோட்டத்துடனே நிச்சயமாய் பார்க்கவேண்டிய ஏற்ற வேளையாகவே இது இருக்கும்.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகம் முழுவதும் அடையாள பாஷையில் இருப்பதை நாம் யாவரும் அறிவோம். மிக முக்கியமான, மாபெரும் சத்தியங்களை மறைத்துவைக்கும் உத்தேசத்தோடு வேதத்தில் இந்த புத்தகத்தை கடைசியில் தேவன் வைத்திருப்பதாக தோன்றுகிறது. இது விலைபேறப்பெற்ற சத்தியங்களை உள்ளடக்கியுள்ளது என்பதே எல்லா வேதமாணவர்களின் அபிப்பிராயம் ஆகும். இருப்பினும் தன்னுடைய ஜனங்கள் கடந்த காலத்தில் அவைகளை முழுமையாயும் தெளிவாயும் உணர்ந்து கொள்ள முடியாதபடி தேவன் அந்த சத்தியங்களை அத்தனை நேர்த்தியாய் மூடிவைத்திருக்கிறார். இது தெய்வீக நோக்கமாகும் என்று வேத மாணவர்கள் நம்புகின்றனர். ஏனெனில், இந்த சத்தியங்கள் புரிந்துக்கொள்ளப்படவேண்டிய காலமாக அது இல்லாதது மட்டுமின்றி, உலகத்தி-ருந்து தமது சத்தியத்தின் குறிப்பிட்ட சில அம்சங்களை தூரமாக வைப்பது தேவனுடைய திட்டமாகும். மனுக்குலம் எப்பொழுதுமே தெய்வீக திட்டத்தை தவறாகவே புரிந்து கொண்டிருக்கிறது. ஏனெனில், மனுக்குலம் தெய்வீக திட்டத்தை தவறாகவே புரிந்து கொள்ளவேண்டும் என்று தேவன் தன் ஞானத்தினால் விரும்புகிறார். வெளிப்படுத்துத-ல் பதிவு செய்யப்பட்டிருக்கும் உண்மைகள் இந்த உலகத்துக்கானவைகளோ, அல்லது பெயரளவிலான கிறிஸ்தவர்களுக்கோ இல்லை. ஆனால் அது கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்காகும்; பரிசுத்தவான்களான "பரலோகத்தில் பேர்

எழுதியிருக்கிற முதற்பேறான சபைக்காகும்." இவர்களுக்கு அறிவானது "ஏற்றவேளையில் கிடைக்கும் போஜனமாக" இருக்கும், "ஞானவான்கள் புரிந்துகொள்வார்கள்."

அர்மகெதோன் என்ற சொல்லுக்கு வேதம் அநேக மறைபொருளை கொண்டிருக்கிறது. "உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம்" என்று நமது கர்த்தராகிய இயேசு இதை அழைக்கிறார். *(மத் 24:21)* யாதொரு ஜாதியாரும் தோன்றியது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்து காலம் என்று தானியேல் தீர்க்கதரிசி இதை விவரிக்கிறார். *(தானி 12:1)* இந்த சொல்லுக்கு மிக நெருக்கமாய் தானியேல் உரைப்பதாவது: தேவனுடைய பிரதிநிதியாகிய மிகாயேல் எழும்புவார், இஸ்ரயே-ன் பிள்ளைகளுக்காக அவர்கள் பட்சமாய் நிற்பார். மிகாயேல் என்ற வார்த்தை தேவனைப் போலவே இருப்பவர் - தேவசாயலான ஒருவர் என்பதைக் குறிக்கிறது. இவர் தேவனுடைய ஜனத்தின் ரட்சிப்புக்காக, பிழைகள், தவறுகளை சரிசெய்வதற்காக, மற்றும் சத்தியத்தை நிலைநிறுத்துவதற்காக, ஆபிரகாமின் காலமுதல் பிரசங்கிக்கப்படுகிற - மனுக்குலத்தின் இந்த உலகத்துக்கு தேவனுடைய மாபெரும் இராஜ்யத்தை கொண்டு வருவதற்காக, அவர் எழும்பி நிற்பார்.

### மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான காலம்

பரிசுத்த யோவானின் வெளிப்படுத்துதல் புத்தகம் அடையாளங்களின் புத்தகமானபடியினால், உலகத்தினால் அதை புரிந்துக்கொள்ள முடியாது. சபையே கூட ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே இதை புரிந்துகொள்ளும்படியாய் எதிர்பார்க்கும் என்று தேவன் தாமே கூறியிருக்கிறார். தீர்க்கதரிசி தானியேல் தன்னுடைய தரிசனத்தின் அர்த்தத்தை குறித்தான காரியத்தை விசாரித்த போது தேவதூதன் பதிலளிக்கிறார்: "தானியேலே போகலாம்; இந்த வார்த்தைகள் முடிவு காலமட்டும் புதை பொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கும்." உலத்தின் முடிவுகாலம் அல்ல,



யுகத்தின் முடிவுகாலம் ஆகும். "பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது." *பிரச 1:4*

இந்த யுகமானது மாபெரும் அக்கினி என அடையாளமாய் கூறப்படுகின்ற உபத்திரவத்தின் காலத்தில் அழிந்துவிடும்; இதில் தற்காலத்தின் நிறுவனங்கள் விழுங்கப்பட்டுவிடும் என்று அப். பேதுரு நமக்கு சொல்கிறார். *(2பேது 3:8-13)* இந்த பயங்கரமான உபத்திரவத்தின் காலம் புயல் என்றும், சுழல் காற்று என்றும், அக்கினி என்றும் அடையாளமாக சொல்லப்பட்டுள்ளது. அது எல்லாவற்றையும் விழுங்கி அழித்துவிடும் என்றும் வேதத்தில் பல்வேறு இடங்களில் கூறப்பட்டு இருக்கிறது. இந்த மகா உபத்திரவத்தின் காலத்தில் தற்கால அமைப்புகள் யாவும் அகன்று போன பிறகு, "உமது ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல் பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று நாம் ஜெபித்து கேட்கிற ஒன்றாகிய அவரது ராஜ்யத்தை தேவன் தாமே நிர்மாணிப்பார்.

அப்பொழுது நாம் சுவிசேஷ யுகத்தின் முடிவில் வாழ்கிறோம் என்பதை சுட்டிகாட்டும்படி ஏதாவது இருக்குமேயானால், கன்னிகைகள் தங்கள் விளக்குகளை சரிசெய்வதற்கான அறிகுறி ஏதாவது இருக்குமேயானால், புத்தியுள்ள கன்னிகைகள் மகிமைக்குள் பிரவேசிக்கும் காலம் சமீபமாயிருக்கிறது என்று மீதமுள்ள காரியங்களை குறித்து நிச்சயிக்கலாம். "அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும்" எப்படிப்பட்ட ஆசீர்வாதமான செய்தி இது!

முடிவின் காலம் என்பது தேவனுடைய ஞானவான்கள் இதை புரிந்து கொள்ளுகிற காலமாக இருக்கும் என்று அதே தீர்க்கதரிசனம் நமக்கு சொல்கிறது. இந்த காலமானது விசேஷமாய் இரண்டு அம்சங்களால் குறிக்கப்பட்டிருக்கிறது என்று நாம் அறிவிக்கப்பட்டிருக்கிறோம். முதலாவது, "அநேகர் இங்கும் அங்கும் ஓடுவார்கள்;" இரண்டாவது, "அறிவும் பெருகிப்போம்." *(தானி 12:4)* இன்று இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியதை நாம் பார்க்கிறோம். எப்போதும் இதுவரை இல்லாதவிதமாய் ஜனங்கள் உலகமெங்கும் இங்கும் அங்குமாய் ஓடுகிறார்கள். இரயில்பாதைகள், நீராவி படகுகள், மோட்டார் வண்டிகள், மின்சார வாகனங்கள் - நிலத்திலும், சுரங்கப்பாதையிலும், மேலேயும் மனுஷரை எல்லா இடங்களுக்கும்

எடுத்துச் செல்கின்றன. பொதுவாய் வியப்புக்குரிய நாட்களின் விசேஷ குணங்களை விவரிக்கிறது. 10 வயது நிரம்பிய எல்லா குழந்தைகளாலும் படிக்க முடிகிறது. உலகெங்கிலும் ஒவ்வொரு வீட்டிலும் புத்தகங்களும், செய்தித்தாள்களும், வேதபுத்தகமும் இருக்கிறது - மனுஷன் பூமியில் உண்டான நாள் முதலாய் அறியப்படாத வகையில் அறிவு வளர்ச்சிக்கு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

இந்த தீர்க்கதரிசனத்தின் குறிப்பிடும்படியான நிறைவேறுதலானது, நமது நாட்களை முடிவு காலம் என்று குறிக்கிறது. இதில் தற்போதைய யுகம் முடிவுக்கு வந்து, புதிய யுகமானது ஆரம்பிக்க வேண்டும் - இந்த சமயத்தில் தான் தேவனுடைய ஜனங்கள் இந்த சூழ்நிலையை புரிந்துக்கொண்டு தங்களது மாறுதல்களுக்கு தயாராவார்கள்.

### விவாதத்தின் கீழ் கோட்பாடுகள், தனிப்பட்டவரது அல்ல

எல்லா கிறிஸ்துவ ஜனமும், பரி. யோவான் செய்வது போலவே வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை கிறிஸ்துவுக்கே ஒப்புவிக்கின்றனர். (வெளி 1:1) ஆனபடியால் இந்த புத்தகத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள சங்கேத குறிகளால் தெரிவித்திருக்கும் முறைக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. ஒரு காரியத்தை தவறாக புரிந்துகொள்ள பல்வேறு வழிகள் உள்ளன, நல்ல கிறிஸ்தவ ஜனங்களாகிய நாம் கூட, நமது கருத்துக்களை விவரிப்பதில் ஒரு தயக்கத்தை இயற்கையாகவே உணர்கிறோம். வெளிப்படுத்துத-ன் அடையாள மொழிக்கான புரிந்துகொள்ளுதலை முன்வைக்க நாம் தொடர்கிற வேளையில், தெய்வ பக்தி உள்ள கிறிஸ்தவர் எங்கிருந்தாலும் எவ்வேளையிலும், எந்த சபைக்கு உள்ளாகவும், வெளியிலும் இருந்தாலும் கூட அவர்களுக்கெதிராய் எதையும் சொல்லவில்லை என்பதை மிகுந்த அழுத்தமாக சொல்-க்கொள்ள ஆசைப்படுகிறோம். ஜனங்களை குறித்து சொல்வதற்கு நம்மிடத்தில் ஒன்றுமில்லை. நாம் **கோட்பாடுகளை, போதனைகளை, எப்போதுமே** விவாதிக்கிறோம். தனிப்பட்டவரை குறித்து என்றுமே **பேசுவதில்லை.** ஜனங்களைக் குறித்து விவாதிப்பதற்கு தேவன் நம்மை நியமிக்கவில்லை. அவரது வார்த்தையை விவாதிப்பது தான் நம்முடைய வேலை.



வெளிப்படுத்துத-ன் அடையாளங்களைக் குறித்து நாம் விளக்கம் தருகின்ற வேளையில், நமது நாளின் மாபெரும் சில அமைப்புகளின் மீது பயங்கரமான குற்றச்சாட்டை தேவனுடைய வார்த்தை அறிவிப்பதை நாம் உணர்கிறோம் - நாம் நீண்ட காலமாய் கௌவரப்படுத்தும், உயர்வாய் மதிக்கும் சிலவற்றை - வார்த்தையிலும், செய-லும் தெய்வீக தன்மை உடையவராக அநேகரை நாம் நினைத்துக் கொண்டிருந்தோமே அவர்களையே குற்றம் சாட்டுகிறது. ஆகவே தனிப்பட்டவருக்கும் அமைப்புகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை தெளிவாய் நாம் வேறுபடுத்துவோமாக. தெய்வீக தன்மையுடைய தனிப்பட்டவருக்கு எதிராய் நாம் எதையும் கூறவில்லை. ஆனால், தேவ வார்த்தையை விளக்கும்போது அது நிச்சயமாய் இந்த அமைப்புகளையே குறிக்கும் என்பதை நாம் சொல்-க்கொள்கிறோம். பரிசுத்த தேவ ஜனங்கள் இந்த அடையாளங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதை நாம் உண்மையில் நம்புகிறோம். ஏனெனில் தேவனுடைய பரிசுத்தவான்கள், நூற்றுக்கணக்கான கோடி மனுஷரில் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இவர்கள் “பயப்படாதே, சிறுமந்தையே” என்று இயேசு சொன்னவிதமாக மிகச்சிறிய கூட்டமாக இருக்கிறார்கள்.

வெளி 16:13-16ன் அடையாளத்தை விளக்க வரும்போது, இந்த அர்மகெதோன் யுத்தத்துக்கு கூட்டி அழைக்கப்படுவதற்கு மூன்று ஸ்தாபனங்கள் காரணிகளாய் இருப்பதை நாம் காண்கிறோம். அதனை மிருகத்தின் வாயி-ருந்தும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயி-ருந்தும், வலுசர்ப்பத்தின் வாயி-ருந்தும் மூன்று அசுத்தமான தவளை போன்ற ஆவிகள் வெளிப்படுவதை நாம் வாசிக்கிறோம். மேலும், இந்த மூன்று தவளைகளைப் போன்ற அசுத்த ஆவிகள் அர்மகெதோன் யுத்தத்துக்கு உலகமனைத்தையும் கூட்டி சேர்ப்பதற்கு உலகெங்கிலும் சுற்றித்திரிகின்றன.

அப்பொழுது இந்த அடையாள வார்த்தைகளான - வலுசர்ப்பம், மிருகம் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி என்பன எந்த ஸ்தாபனங்களை குறிக்கிறது என்பதை குறித்து விசாரிப்பது நமக்கு அவசியமாக இருக்கிறது. இந்த பதங்கள் எதை குறிக்கின்றன என்பதை நாம் பிறகு கண்டு கொள்வோம். அவைகளின் வாயி-ருந்து

வெளிவந்தவைகள் எதற்கு அடையாளமாய் இருக்கிறது என்பதை நாம் கண்டுபிடிக்கலாம்.

வேதாகமம் முழுவதிலும் அரசாங்கத்தை குறிப்பதற்காக மிருகம் அடையாளமாக உபயோகபடுத்தப்பட்டிருக்கிறது. தானியே-ன் தீர்க்கதரிசனத்தில் பூமியின் மாபெரும் உலகளாவிய பேரரசுகள், இவ்வண்ணமாய் தான் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறன. பாபிலோன் சிங்கமாகவும், மேதோபெர்சியா கரடியாகவும், கிரேக்க நாடு சிறுத்தையாகவும், ரோம் வலுசர்ப்பமாகவும் இருந்தன. (தானி 7:1-8) கிறிஸ்துவ ராஜ்யமானது மகா ரோம பேரரசின் ஒரு பாகமாக இன்றும் விடாப்பிடியாய் இருக்கிறது. இது ராயனுடைய காலத்தில் ஆரம்பித்தது - வேதத்தின்படி இது இன்னும் உலகத்தில் இருக்கிறது.

வேதத்தில் எந்த இடத்தில் காணப்பட்டாலும், வெளிப்படுத்த-ன் வலுசர்ப்பமானது முற்றிலும் சமூக அதிகாரங்களையே குறிப்பிடுவதாக உண்மையில் எல்லா வேத வல்லுநர்களும் ஒப்புக் கொள்கின்றனர். இதனால் உலகத்தின் எல்லா அதிகாரங்களும் தீயவை என்றோ பிசாசுக்குரியவை என்றோ நாம் குறிப்பிடுவதாக புரிந்து கொள்ளக்கூடாது. ஆனால் வலுசர்ப்பம் என்ற அடையாளத்தை சமூக அதிகாரங்களைக் குறிக்க பயன்படுத்துவதில் கர்த்தர் விருப்பமுள்ளவராய் இருக்கிறார்.

வெளி 16:13ன் அதே மிருகமானது வெளி 13:2லும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சிறுத்தையைப் போன்று விவரிக்கப்பட்டிருக்கிறது. வெளிப்படுத்தலை விளக்கிச் சொல்லும் புராட்டஸ்டன்ட் சபையார் இந்த அடையாளமானது போப்பு முறைமையை - போப்பை அல்ல, கத்தோ-க்க சபையை அல்ல, கத்தோ-க்க தனிநபரையும் அல்ல, ஆனால், நூற்றாண்டுகளாய் இருந்து வரும் ஒரு முழு அமைப்பை குறிக்கிறது என்பதை ஒப்புக்கொள்கின்றனர்.

தேவன் தனது வார்த்தையில் போப்பு மார்க்கத்தை ஒரு அமைப்பாக, ஒரு அரசாங்கமாக அடையாளம் காட்டுவதில் விருப்பம் கொள்கிறார். தேவ ராஜ்யம், மேசியாவின் ராஜ்யம் கி.பி. 799ல் நிறுவப்பட்டதாக போப்பு மார்க்கம் கோருகிறது; மேலும் வேதத்தில் அறிவிக்கப்பட்டபடியே ஆயிர வருஷம் கூட 1799ல்



இருந்து இந்த கிறிஸ்துவின் ராஜ்யம், (இதை, இந்த போப்பு அமைப்பை மிருகத்துக்கு அடையாளமாக வெளிப்படுத்துத-ல் காட்டியிருக்கிறது) தீமையை அனுபவித்துக் கொண்டிருப்பதாகவும், வெளி 20:7 நிறைவேறும்படி இந்த காலகட்டத்தில் பிசாசு அவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

வரலாற்று குறிப்பின்படி 1799 முடிவின் சகாப்தத்தில், நெப்போ-யனின் எகிப்தின் படையெடுப்பில், ஜாதிகள் மேல் ஆளுகை செய்யும் போப்பு மார்க்கத்தின் அதிகாரத்தை கட்டுப்படுத்தினார். நெப்போ-யன் போப்பை கைதியாக பிரான்ஸிற்கு அழைத்து சென்றார். அங்கு போப் மரித்தார். ரோமன் கத்தோ-க்கர்கள் இந்த அவமான நிகழ்வை வெளி 20:7ன் படி சாத்தான் விடுதலையாகுதல் நிறைவேறிவிட்டது என்று உரிமை கொண்டாடுகின்றனர்.

நமது கத்தோ-க்க சகோதரருடைய தீர்க்கதரிசன விளக்கங்களை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. இந்த உலகத்தின் பிரபு சாத்தான் என்றும், இப்போது தான் தற்போதைய பொல்லாத உலகம் என்று நமது கர்த்தர் நிச்சயமாக சரியாய் கூறியிருக்கிறார். இவ்வளவாய் லஞ்சம், பொய் போதகம், ஏமாற்றல், அறியாமை, மூடநம்பிக்கை எல்லா இடங்களிலும் ஏன் இருக்கிறது என்பதற்கு காரணம் இந்த உலகத்தை வஞ்சிக்கும் மாபெரும் சக்தியாக சாத்தான் இருப்பது தான். வேதவசனப்படி 1000 வருஷத்திற்கு சாத்தான் கட்டப்பட்டிருக்க வேண்டும். அப்போது ஜாதிகளை அவன் மோசம் போக்க முடியாது. (வெளி 20:3) 1000 வருடங்கள் முடிந்த பிற்பாடு, மனுக்குலத்தை சோதிப்பதற்காக பிசாசு கொஞ்சகாலத்திற்கு கட்டவிழ்க்கப்படுவான். பிறகு இரண்டாம் மரணத்தில் அவனும், அவனோடு ஒன்றுபட்டிருப்பவர்கள் யாவரும் அழிக்கப்படுவார்கள்.

இப்பொழுதுதான் வேதமாணவர்களின் கண்கள் திறக்கப்பட்டு தேவ அன்பின் நீள, அகல, உயர, ஆழத்தை காண்கின்றனர் - முதலாவது, ராஜ்யத்தின் மகிமையில் பங்கு கொள்ளப் போகிற சபைக்கு அவரது ஆச்சரியமான வாக்குத்தத்தங்கள் செய்யப்பட்டிருப்பதையும், இரண்டாவதாக, ஆயிர வருட அரசாட்சியின் போது பூரண மனுஷரின் நிலைக்கு உயர்த்தப்படும்

ஆசீர்வாதத்தை பெறுகிறவர்களாகிய உலகத்தின் மனுகுலம் யாவருக்கும் வைத்திருக்கும் சலுகைகளையும் காண்கிறார்கள். இந்த மகிமையான சகாப்தம் முடிந்துபோன ஒன்றாக இல்லாமல் தற்போது எதிர்கொண்டு வருகின்றதாய் இருக்கிறது. மேசியாவின் ராஜ்ய முடிவில் மனுக்குலத்தின் நிலைமையானது, அத்தனை மகிமை உடையதாய், இதுவரை என்றுமே கனவில் கூட பார்த்திராத வண்ணம் அதோடு ஒப்பிடமுடியாத அளவிற்கு இருக்கும். ஆனால், ஒவ்வொரு மனுஷனும் பரிபூரணத்தை அடையும் வரைக்கும், அல்லது நீதியின் பாதையில் வருவதற்கு மறுத்ததால் இரண்டாம் மரணத்தினால் அவர்களை அழிக்கும்வரைக்கும் தேவனுடைய மாபெரும் பணி பூரணமடையாது. அப்பொழுது வானத்திலும் பூமியிலும் உள்ள சகல சிருஷ்டிகளும், “சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக” என்று சொல்லக் கேட்பார்கள். வெளி *5:13*

பிறகு வலுசர்ப்பமானது, ரோம அதிகாரத்தை அடையாளமாய் காட்டுகிறது. உலகத்திலுள்ள சமூக அதிகாரங்களுக்கு மாதிரியாக இருக்கிறது. மிருகமானது போப்பு மார்க்க அமைப்பின் அடையாளமாக இருக்கிறது. மூன்றாவதான கள்ளத்தீர்க்கதரிசியின் அடையாளம், விளக்கப்படும்படி மீதியாய் இருக்கிறது. மிருகத்தின் உருவம் என்று வேறு இடத்தில் அழைக்கப்படுகிற அமைப்புக்கான மற்றொரு பெயர் இது என்று நாம் நம்புகிறோம். (வெளி 13:14) வேத வசனத்தின் படி இந்த உருவம் மிருகத்துக்கு மிகச்சரியான வர்ணனை. கள்ள தீர்க்கதரிசி அல்லது மிருகத்தின் உருவம் என்பது புராட்டஸ்டன்ட் சபைகளின் கூட்டமைப்பு என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

## மிருகத்தின் உருவம்

மிருகத்தின் உருவமும், கள்ளத் தீர்க்கதரிசியும் ஏன் புராட்டஸ்டன்ட் சபைகளின் கூட்டமைப்பாக இருக்கக்கூடும் என்பதை அறியும் பொருட்டு, பிற அடையாள வேத வசனங்களை நாம் சோதித்து பார்க்கவேண்டும். வெளி 17:5ல் நமது கவனம் மாபெரும் “இரகசியத்தை” நோக்கி இழுக்கப்படுகிறது. வேசி என்ற



வார்த்தை வேத அடையாள மொழியில் ஒரு நெறி தவறிய மனிதனை குறிப்பிடவில்லை. இது தேவனுடைய ராஜ்யமாக இருக்கவேண்டிய சபையை, தன்னுடைய பரலோக மணவாளனுடன் இணைந்திருப்பதற்கு பதிலாக பூலோக மணவாளனுடன் இணைந்ததால் தனது கற்பை/பரிசுத்தத்தை இழந்த சபையை இது குறிக்கிறது. எந்த உலக மணவாளனுடன் சபை இணைந்தது? ரோம பேரரசுடன், உலகத்துக்கும் சபைக்கும் நெருக்கமான உறவு இருந்தது என்பது பற்றி லூத்தர் மற்றும் பிற சீர்திருத்தவாதிகளின் உள்ளத்தில் சந்தேகமில்லை. கிறிஸ்து தனது ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு ஒரு சமயத்தில் சபையானது காத்திருந்ததாக கூறப்படுகிறது. முடிவில் “கிறிஸ்துவின் வருகை மட்டும் நான் காத்திருக்கமாட்டேன், நான் ரோம பேரரசுடன் இணைந்துவிடுவேன்” என்று அவள் கூறினாள்.

இதன் விளைவை யாவரும் அறிவர். ரோமன் கத்தோ-க்க சபையானது உயர்த்தப்பட்டது. அதோடு நூற்றாண்டு காலங்களாய் ராணியைப் போல் ஆளுகை செய்தது. சபை மற்றும் அரசாங்கத்தின் இந்த இணைப்பானது இத்தா-யில் காணப்படும் ஒரு புகழ்பெற்ற ஓவியத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. சிம்மாசனத்தின் மீது அருகருகே போப்பும் பேரரசரும் அமர்ந்திருக்கின்றனர். ஒரு புறத்தில் கார்டினல்கள், ஆயர்கள், கீழ்மட்டத்து குருமார்கள், மற்றும் சபை மக்கள் யாவரும் அவரவரது பதவியின்படி இருக்கின்றனர். மறுபுறத்தில் ஜெனரல்கள் லெஃப்டினெட்டுகள், போர் வீரர்கள் போன்றவர்கள் பொதுமக்கள் வரை இருக்கின்றனர். இவ்வண்ணமாய் சபை மற்றும் அரசாங்கத்தின் ஐக்கியம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஒருமைப்பாட்டின் அடிப்படையின் கீழ் உலகின் எல்லா அரசாங்கங்களும் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். எனவே, சபையின் அங்கமாய், பாகமாய் அவர்கள் ஒருமைப்பாட்டை கோருகின்றனர். பல நூற்றாண்டுகளாய் சபை தான் உலகத்தின் ராஜாக்களை தெரிந்தெடுத்து அமர்த்தியதாக நமக்கு சரித்திரம் கூறுகிறது. போப் விரும்புகிறவர் யாராக இருப்பினும் அவர் முடி சூடப்பட்டார். சபையின் மேன்மையை நிரூபிக்கும் வகையில் ஜெர்மனியின் பேரரசர் நான்காம் ஹென்றியை குறித்த ஒரு கதை சொல்லப்படுகிறது. போப்பின் அதிருப்திக்கு

ஆளான இவருக்கு தண்டனையாக வெறும் காலுடன் கனோசா மாளிகையின் வாயிலண்டை மூன்று நாட்களுக்கு, தண்டனைக் கைதிக்குரிய அங்கியில் திறந்தவெளியில் கடுமையான குளிர்காலத்தில் வலுக்கட்டாயமாய் நிற்கவைக்கப்பட்டார்; அதன்பிறகு முழங்கா-லும், கையிலுமாய் போப்பின் முன்பு தவழ்ந்து வரும்படி வற்புறுத்தப்பட்டார்; பேரரசர் போப்பின் மகாமேன்மையான பாதங்களை முத்தமிடும் பொருட்டு அவரது பட்டு காலுறைகள் அகற்றப்பட்டன. இது சங் 2:12ன் படி "பூமியின் ராஜாக்களே, குமாரரை முத்தஞ்செய்யுங்கள்" என்பது நிறைவேற்றப்பட்டதாம்.

நமது அறிவுக்கு எட்டியபடி வேதவசனம் இங்கு தவறாய் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. குமாரன் என்பது போப் அல்ல. பரிசுத்த பர்வதம் என்பது தேவனுடைய ராஜ்யம். அவருடைய ஸ்தாபனம் பரிசுத்த சீயோன் பர்வதம் என்று அடையாளமாக கூறப்பட்டுள்ளது. தற்போதிருக்கும் எல்லா காரியங்களையும் முற்றிலுமாய் தூக்கி எறிந்துவிட்டு, மேன்மைமிகு மேசியா-மனுக்குலத்தை பாவத்தி-ருந்தும், தாழ்த்தப்பட்ட நிலையி-ருந்தும் உயர்த்தக்கூடியதான, சத்தியம் மற்றும் நீதியின் ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்.

கிறிஸ்துவின் பிரதிநிதியென்றும், அவருக்கு பதிலாய் ஆளுகை செய்பவர் என்றும் போப்பைக் குறித்து ரோமன் கத்தோ-க்கர்கள் நம்புகின்றனர்; காலத்தில் தான் சாத்தான் ஜனங்களை வஞ்சிப்பதற்காய் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாகவும், வெகு சீக்கிரத்தில் சபையானது மறுபடியும் உலகத்தின் முழு அதிகாரத்தையும் பெறப்போகிறது என்றும் நம்புகின்றனர்; எனவே அதன் விளைவாக அவர்களுக்கு கீழ்படியாத யாவரும் அழிக்கப்படுவார்கள் என்றும் நம்புகின்றனர். இந்த விளக்கமானது வெளி 13ம், 20ம் அதிகாரங்களை நமக்கு சுட்டிக்காட்டுகின்றன. புராட்டஸ்டன்டு இந்த சூழ்நிலையை பாராட்டுவதில்லை. சிந்திக்கின்ற எல்லா ஜனங்களும் ஒருமைப்பாட்டின் பூர்வாங்க பேச்சு புராட்டஸ்டன்டிடம் இருந்துதான் வந்ததேயன்றி கத்தோ-க்க மார்க்கத்தி-ருந்து ஒருபோதும் வரவில்லை என்பதை சந்தேகமின்றி கவனித்திருக்கின்றார்கள்.



புராட்டஸ்டன்ட் சபையை மிருகத்தின் சாயலாக வேதம் ஏன் படம்பிடித்துக் காட்டவேண்டும்? என்ற கேள்வி இப்போது எழும்புகிறது. இது எப்போது, எப்படி வந்தது? சீர்திருத்தத்தின் காலம் தொடங்கி, புராட்டஸ்டன்டார் தனிப்பட்ட முறையில் முற்காலத்தின் இருளில் இருந்து வெளிவர போராடிக் கொண்டிருந்தனர். மேலும், இப்படியாக பல விசுவாசப் பிரமாணங்களை அமைத்துக் கொண்டு, பல்வேறு சபை பிரிவுகளை அமைத்தனர். ஆனால், ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் வேதத்தை வாசிக்க ஆரம்பித்ததால் ஒவ்வொரு வரும் தனக்கென்று ஒரு தனிப்பட்டவிசுவாசப் பிராமணத்தை பெறுவார்கள் என்பதை ஏறக்குறைய கடந்த நூற்றாண்டின் மத்தியில் தலைவர்கள் காணத்துவங்கினர். இதனால் தாங்கள் வ-மையை இழந்துவிடுவதைப் போல் தோன்றியதால் அதை தடுப்பதற்காக, இவாஞ்ச-க்கல் அலையன்ஸ் என்று அழைக்கப்பட்ட ஒரு அமைப்பில் புராட்டஸ்டன்ட்டாரை ஒருங்கிணைக்க அவர்கள் திட்டமிட்டனர்.

இவாஞ்ச-க்கல் அலையன்ஸ் என்ற பல்வேறு புராட்டஸ்டன்ட் பிரிவினரின் ஒருங்கிணைப்பு, 1846ல், கத்தோ-க்கர்கள் தனக்குரிய சொந்த வழியில் செயல்படுவதைப் போலவே, தாங்களும் தங்களுக்குரிய சொந்த வழியில் செயல்படவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக உருவாக்கப்பட்டது. ஒரு ஐக்கிய அமைப்பின் காரணமாக ரோமன் கத்தோ-க்கர் பெற்றிருந்த மாபெரும் அதிகார வல்லமையை பார்த்தபோது, புரட்டஸ்டன்ட்டார் கூறினர்: "நாங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறோம், எங்களுக்கு வல்லமை இல்லை. நாங்கள் ஒருங்கிணைவோம்." அப்பொழுதே (அந்த இடத்திலேயே) வேத வசனத்தின்படி, அவர்கள் மிருகத்தின் உருவத்தை உண்டாக்கினார்கள்.

வேதம் சொல்லுகிறது, எப்படியாகிலும் அந்த சொரூபம் எந்த ஒரு பிரத்தியோகமான தீமையையும் செய்வதற்கு முன் அது, இரண்டு - கொம்புகளுடைய மிருகத்திடமிருந்து ஜீவனை பெற்றுக்கொள்ள வேண்டும். (வெளி 13:15) இந்த இரண்டு கொம்புகளுடைய மிருகமானது, ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான இரண்டு கொம்புகளையும்

ஆனால் வலுசர்ப்பத்துக்கு ஒப்பான குரலும் கொண்டிருப்பது இங்கிலாந்து சபையை குறிக்கிறதாக நாம் நம்புகிறோம், இது இவாஞ்ச-க்கல் அலையன்ஸ்சோடு சேர்ந்த சபை அல்ல. இந்த இங்கிலாந்து சபையானது - ரோம சபையைப் போலவே - தானே மெய்யான சபை என்றும், மற்றெல்லாரும் தவறானவர்கள் என்றும் தனக்கு அசலான அப்போஸ்தல வாரிசுரிமை உண்டு என்றும், தெய்வீக அப்போஸ்தல கரங்கள் தன் மீது படாதவரையில் பிரசங்கிப்பதற்கு ஒருவருக்கும் உத்தரவு இல்லையென்றும் கூறிக்கொண்டது. இதுவே பல நூற்றாண்டுகளுக்கு இங்கிலாந்து சபையின் முக்கிய வாதமாக இருந்தது. அத்தோடு அந்த சபைக்கும் மற்ற எல்லா புராட்டஸ்டன்ட் பிரிவினருக்கும் இடையிலான வேறுபாட்டையும் நிர்ணயித்தது.

இவாஞ்ச-க்கல் அலையன்ஸ் 1846ல் ஏற்படுத்தப்பட்டாலும் கூட, செயல்பட தெரியாததினால் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற அதனால் கூடாமல் போனது. இந்த கூட்டணியில் சபைகள் பெயரளவிலே ஐக்கியத்தில் இருந்தன. ஆகவே, ஒருவருக்கொருவர் எதிராகவே செயல்பட்டனர். இந்த கூட்டணிக்கு புறம்பே நின்ற மற்ற பிரிவுகள் சட்டபூர்வமானவைகள் அல்ல என்று அறிவிக்கப்பட்டது; இதற்கு பதிலடியாக இவர்கள் - தங்களுக்கு பிரசங்கம் செய்யும்படியான அதிகாரத்தை அவர்கள் எங்கு பெற்றார்கள் என்று கேட்டு இவாஞ்ச-க்கல் சபையோடு போட்டியிட்டனர். இதன் விளைவாக சொரூபத்துக்கு செயல்படுவதற்கான வல்லமை இல்லாதிருந்தது; காலால் மிதிபட்டது; அது ஜீவனை - முக்கியத்துவத்தை பெற - அப்போஸ்தல வாரிசுரிமை அதற்கு தேவைப்பட்டது; செயல்படுவதற்கு ஒரு அடிப்படையாக ஏதாவது ஒன்று அதற்கு தேவைப்பட்டது.

இங்கிலாந்து சபை, இவாஞ்சிக்கல் அலையன்சோடு மிக நெருக்கமாய் வந்து, அதற்கு பிரசங்கம் செய்வதற்குரிய அப்போஸ்தல அதிகாரத்தை கொடுக்கும் என்று வேதவசனங்கள் குறிப்பிடுகின்றன. இ ந் த இ ணை ப் பி ன ா ல் , “[illegible] அதிகாரம் உண்டு. எங்கள் அனுமதி இன்றி யாரும் பேசக்கூடாது” என்று அலையன்ஸ் கூறிக்கொள்ள முடியும். இவர்களுடைய இந்த செய்கையானது வெளி 13:17ல் விவரிக்கப்பட்டுள்ளது. அந்த



மிருகத்தின் முத்திரையாவது அல்லது அந்த சொரூபத்தின் முத்திரையாவது இல்லாவிடில் ஒருவரும் ஆவிக்குரிய சந்தையில் ஆவிக்குரிய காரியங்களை கொள்ளவோ விற்கவோ அனுமதிக்கபட மாட்டார்கள்.

வெளி 16:13ல் சொரூபத்தின் மற்றொரு அடையாளம் கள்ளத்தீர்க்கதரிசியை குறிக்கும் பொருட்டு இருப்பதை நாம் காணலாம். இவாஞ்ச-க்கல் அலையன்ஸ், சபைகளின் கூட்டமைப்பு என்ற வடிவத்தைப் பெற்று, இன்று அத்தியாவசியமான மாபெரும் கொடுக்கல் வாங்கலை கொண்டிருக்கிறது. இன்னும்கூட மீதமிருக்கும் அதனுடைய காரியங்களை பார்க்கவேண்டியுள்ளது என்று நாம் எதிர்பார்க்கலாமா? ரோமன் கத்தோ-க்கசபை ஆதிகாலத்தில் செய்த அதே காரியங்களை செய்யும் அளவிற்கு இந்த மிருகத்தின் சொரூபம் மாபெரும் அதிகாரத்தை பெற வேண்டியுள்ளது என்பதை வேதவசனம் தெளிவாய் சுட்டிக்காட்டுகிறது; மேலும் கத்தோ-க்க மற்றும் புரோட்டஸ்டன்ட் என்கின்ற இந்த இரண்டு அமைப்புகளும், வளர்ச்சியடைந்த உலகத்தினை சமூக அதிகாரத்தின் மூலம் தன்னிச்சையாக ஆளும் - இதுவே வலுசர்ப்பம்.

## தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள்

சபை மற்றும் அரசாங்கம் ஆகியவற்றின் அதிகார இணைப்பினால் வரும் பேச்சுகளினாலேயே இந்த பலன் கொண்டுவரப்படும் என்று வேதவசனம் நமக்கு சொல்லுகிறது. “வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டன.” இந்தப் பகுதியில் ஆவி என்பது போதனை - ஒரு அசுத்தமான போதனை - ஒரு பொய் போதனையாகும். இந்த ஒவ்வொரு அமைப்பும் ஒரே காரியத்தையே பேசும். மகா அர்மகெதோன் யுத்தத்துக்கு உலக ராஜ்யங்கள் யாவையும் ஒன்றாக கூட்டி சேர்க்கும்படியானதொரு விளைவை அது ஏற்படுத்தும்.

வேத வசனத்தின் அடையாளங்கள், மிகச்சரியாய் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. அது மிகவும் வ-மை மிக்கது. அதனுடைய அடையாளத்திற்கும், அடையாளமாய் சொல்லப்பட்ட

காரியத்திற்கும் இடையே எப்போதுமே மிக நெருக்கமான ஒற்றுமை இருக்கிறது. குறிப்பிட்ட போதனைகளை அல்லது பாடங்களை வர்ணிப்பதற்கு பரிசுத்த ஆவி தவளையை பயன்படுத்துமேயாகில், அது மிகச்சரியாய் பொருந்தும் என்பதை நாம் நிச்சயிக்கலாம். தவளை ஒரு சிறிய ஜந்துவாக இருந்தாலும் உடல் குலுங்கும் அளவிற்கு அது குப்பென்று துள்ளி மேலெழும்பும். அதற்கு அவ்வளவாய் எதுவும் தெரியாமல் போனாலும் கூட, தவளைக்கு மிக ஞானமான பார்வை உண்டு. தவளையானது ஏதாவது சப்தம் கேட்டவுடனே அது கத்தும்.

பகட்டான பேச்சுத்திறன், மேன்மைமிகு ஞானம் மற்றும் அறிவு, தொடர்ச்சியான ஒரு கத்தல் ஆகிய இவையே, தவளையின் மூன்று மிக முக்கியமான குணாதிசயங்கள். இந்த குணாதிசயங்களை தேவவார்த்தையில் கொடுக்கப்பட்டிருக்கும் காட்சிக்கு பொருத்தினால் - சமூக அதிகாரத்தி-ருந்தும் கத்தோ-க்க சபையி-ருந்தும் மற்றும் புராட்டஸ்டன்ட் சபை கூட்டமைப்பி-ருந்தும் ஒரே விதமான பாடங்கள் தான் வெளியே போகும் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இவர்கள் எண்ணங்கள் பெருமையானதாக இருக்கும்; மேன்மையான ஞானம், அறிவு குறித்த பகட்டுத்தனமானது மேற்கொள்ளப்படும்; தங்களது ஆலோசனைக்கு கீழ்ப்படிவதில் ஏதாவது தோல்வி நேரிட்டால் அதைத் தொடர்ந்து வரும் மிக பயங்கரமான விளைவை யாவருமே முன் அறிவிக்கக்கூடும். விசுவாசத்தில் முரண்பாடுகள் இருந்தாலும்கூட, மிகப்பழமையானவற்றை மாற்றாமல், துருவி ஆராயாமல் இந்த வேற்றுமைகள் எல்லாம் பொதுவான திட்டத்தின்படி புறக்கணிக்கப்படும்.

சபைக்கு அப்பால், சபையின் தெய்வீக அதிகாரமும், ராஜாக்களின் தெய்வீக உரிமையும், அபிப்பிராய பேதம் உண்டாக அனுமதிக்கப்பட மாட்டது. இந்த பகட்டுத்தமான பெருமை நிறைந்த, வேதத்துக்கு புறம்பான விஷயங்களுக்கு முரண்பாடான எந்த மனிதரும் அல்லது பாடங்களும் - துஷ்டத்தனமானவை என்று பெயரிடப்பட்டு அதை பிரசங்க பீடங்களிலும், மேடைகளிலும் தவளைகளின் வாயால் கத்திக்கொண்டு, மத மற்றும் சமூக பத்திரிக்கைகளிலும் அறிவிக்கப்படும். நமது கர்த்தராகிய இயேசுவை குறித்து, பிரதான ஆசாரியரான காய்பா பேசியது போல் சில



உத்தமமானவருடைய உணர்வுகள், அதே தீய எண்ணங்களின் தத்துவங்களினால் நசுக்கப்பட்டுவிடும். காய்பா அறிவித்தவண்ணம் இயேசுவையும் அவரது போதனைகளையும் விட்டு நீங்கியது மனுஷீக மற்றும் தெய்வீக நீதியை மீறுகிறதான ஒரு குற்றத்தை செய்வதற்கு சமமானது. எனவே இந்த தவளையை போன்ற ஆவி சுய பாதுகாப்பிற்காக எப்படிப்பட்ட கோட்பாடுகளின் மீறுதலையும் அங்கீகரிக்கும்.

நமது கர்த்தராகிய இயேசுவின் பெயரிலும், தேவன் மற்றும் நீதியின் பெயரிலும் எப்படிப்பட்ட பயங்கரமான செயல்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை பார்ப்பதற்கு சரித்திரத்தின் பக்கங்களை புரட்டினால் ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனும் வெட்கப்பட வேண்டியிருக்கிறது. இந்த தவளை ஆவிகள் அல்லது போதனைகள் எல்லாமே கெடுதலானவைகள் என்று நாம் நினைத்துவிடக்கூடாது, ஆனால் அதற்கு மாறாக, தங்களைத் தாங்களே மிகவும் உயர்வாக, ஞானமானவர்களாக வெளிப்படுத்திக்கொள்ளும், நூற்றாண்டு கால பின்னணியையும் கொண்ட, பகட்டும் ஆடம்பரமும் நிறைந்த போதனைகளாக அவை இருக்கின்றன. வலுசர்ப்பத்தின் வாயி-ருந்து ராஜாக்களின் தெய்வீக உரிமை என்ற போதனை வெளிவந்தது. "இந்த உரிமையை ராஜாக்கள் எங்கிருந்து பெற்றார்கள் என்பதைக் காண சரித்திரத்தின் திரைக்கு பின்னால் பார்க்க வேண்டாம். போதனையை ஏற்றுக்கொள்; அப்படியில்லாவிட்டால், இந்த விஷயத்தை குறித்து ஆராய மனிதன் ஆரம்பித்தால், ஒரு பயங்கரமான புரட்சி எழும்பும். அப்போது எல்லாமே தரைமட்டமாகும்!"

மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியும் ஒரே மாதிரியான சத்தத்தை உடையவை. கத்தோ-க்க சபை கூறுகிறது: "பின்னாக திரும்பி பார்க்க வேண்டும். சபையைக் குறித்து கேள்விகள் எதையும் எழுப்ப வேண்டாம்." புராட்டஸ்டன்டிசம் கூட கூறுகிறது: "நாங்கள் மேன்மையானவர்கள், நாங்கள் ஞானவான்கள், எங்களுக்கு பெரியபெரிய காரியங்கள் தெரியும். பேசாமல் இருங்கள். அப்பொழுது உங்களுக்கு எதுவும் தெரியாது என்பது யாருக்கும் தெரியாது." "தற்போதைய ஒழுங்கமைப்புகளுக்கு எதிராக நீங்கள் ஏதாவது கூறினால், நாங்கள் உங்களுக்கு சொல்வது என்னவெனில்,

பயங்கர காரியங்கள் நேரிடக்கூடும்" என்று எல்லாரும் கூறுகின்றனர் (கத்துகின்றனர்).

அரசியல் கட்சிகள் இதில் குறிப்பிடப்படுகின்றன. எல்லோருமே சொல்வது என்னவென்றால், "ஏதாவது மாறுதல் வரவேண்டுமென்றால், அது பயங்கரமான அழிவைக் குறிக்கும்." சிலருக்கு பலமான பின்னணி உண்டு. மேலும் சிலருக்கு பின்னால் சமூக அதிகாரங்கள் உண்டு. ஆனால், ஒட்டுமொத்தமாய் ஜனங்களை பார்த்து ஏதாவது மாறுதல் உண்டாக்கப்பட்டால், அது தற்போதைய ஒழுங்குகளுக்கு அழிவு என்றே அர்த்தம் என்று கத்திக்கொண்டே இருக்கின்றன. நமது காலத்தின் பாஷையில் "தட்டிக் கொடுத்து நில்." இது தான் சபையிலும் அரசாங்கத்திலும் இருக்கும் ஒழுங்கு. ஆனால், ஜனங்கள் பயத்தால் ஆடிப் போயிருக்கின்றனர். இந்த மிருகம், வலுசர்ப்பம் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசியின் சத்தம் தான் பூமியின் ராஜாக்களை எழுப்பும்; பின் அர்மகெதோன் யுத்தத்துக்கும், நாசத்துக்கும் அவர்களை ஒன்றுகூட்டி சேர்க்கும்.

மதத்தின் தலைவர்களும், பிரபுக்களும் குருமார்கள் மற்றும் உண்மையுள்ள ஆதரவாளர்களுமாகிய தங்கள் பரிவாரங்களுடன் புராட்டஸ்டன்ட் மற்றும் கத்தோ-க்கராக ஒரு முழுமையான சேனையாக ஒன்று திரள்வார்கள். அரசியல் மன்னர்களும், பிரபுக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், மேலும் உயர் பதவியில் இருக்கும் யாவரும், தங்களுடைய விசுவாச ஊழியரோடும், தொண்டர்களோடும் அதே பக்கமாய் வழி விலகாமல் பின்தொடர்வார்கள். பொருளாதார மேதைகளும், வியாபார பிரபுக்களும் மற்றும் இதுவரை உலகின் வழக்கத்தில் என்றும் இல்லாத மிகவும் பிரம்மாண்டமான வல்லமையினால் மேற்கொள்ளப்படும் யாவரும் இந்த தீர்க்கதரிசனத்தின் பிரகாரம் அதே பக்கத்தில் சேருவார்கள். ஆயினும் தாங்கள் அர்மகெதோனுக்கு வருகிறோம் என்பதை அவர்கள் உணராதிருக்கிறார்கள். இருப்பினும் "அர்மகெதோனுக்கு சேர்ந்து வாருங்கள்!" என்பதே அவர்களது கூக்குர-ன் ஒரு பகுதியாக இருக்கிறது.

நமது நாட்களை குறித்து பேசும்போது, நமது கர்த்தர் தெரிவிக்கிறார்: "வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும், ஆதலால் பூமியின் மேல் வரும் ஆபத்துக்களுக்கு பயந்து



எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷனுடைய இருதயம் சோர்ந்து போம்." (லூக் 21:26) ஐரோப்பாவின் ராஜாக்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எல்லா சபைப் பிரிவுகளும் அசைக்கப்பட்டு போயிருக்கின்றன. தேவனுடைய அநேக ஜனங்கள் குழப்பத்தில் இருக்கின்றனர்.

தவளையின் ஆவியின் சத்தமோ அல்லது போதனைகளோ பொருளாதாரம், அரசியல், மதம் மற்றும் தொழில் ராஜாக்களையும், பிரபுக்களையும் கூட்டி சேர்த்து ஒரு மாபெரும் சேனையாக்கும். சத்தத்தினால் தூண்டப்பட்ட பயத்தின் ஆவியானது நல்லவரும், மிகுந்த அறிவுக்கு ஏற்புடைய மனுஷரையும் கூட தூண்டிவிட்டு ஆவேசம் உள்ளவராக மாற்றிவிடும். இந்த தீய ஆவிகள், தீய போதனைகளை தங்களது குருட்டாட்டமான பின்பற்றுத-ல், நீதியின், சத்தியத்தின், நியாயத்தின் ப-பீடம் தெய்வீக ஒழுங்கின்படி இருக்கிறது என்று தவறாக புரிந்து கொண்டு அவைகளுக்காக தங்கள் உயிரை மற்றும் சகலத்தையும் தியாகம் செய்ய அவர்கள் தயாராக இருப்பார்கள்.

இந்த மாபெரும் சேனையில் இருக்கும் அநேக உத்தம ஜனங்கள் தங்களது விருப்பத்திற்கு மாறான மனப்பாங்கை மேற்கொள்ளுவார்கள். ஒரு காலத்தில் சுதந்திரம் மற்றும் முன்னேற்றத்தின் சக்கரங்கள் பின்னுக்கு திரும்பிவிடும். தற்கால காரியங்களின் ஒழுங்கினை பராமரிக்கவும், காலம் நெருங்கிவிட்டதால் தேவன் தீர்மானித்திருக்கிற புதிய ஒழுங்கினை தடுப்பதற்காகவும், இவர்களது சுய பாதுகாப்புக்காகவும் இடைக்கால தடை அவசியம் என்று கருதப்படும். கடந்த ஆறாயிரம் வருஷமாய் இருக்கின்ற வண்ணமாகவே காரியங்கள் இனியும் தொடரவேண்டும் என்பது அவரது சித்தமா என்று தேவனுடைய ஜனமாய் இருப்பவர்களும் கூட யோசிப்பதை நிறுத்திக்கொள்ளவில்லை. இப்படியானவைகள் தேவனுடைய சித்தம் அல்ல என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் புதிய அமைப்பு உள்ளே வருவதால் ஒரு மாபெரும் கவிழ்ப்பு வேண்டியிருக்கிறது.

வசனத்தை நாம் புரிந்துகொண்டபடி, ஒரு குறுகிய காலத்திற்கு, இந்த அர்மகெதோனின் கூட்டான சேனைகள் ஜெயம் கொள்ளும். நமது நாட்களில் சுதந்திரமான பேச்சு, சுதந்திரமான தபால்

(பேச்சுரிமை/தாராளமான கடிதபோக்குவரத்து) மற்றும் பிற சுதந்திரங்கள் ஜனங்களின் உயிர் மூச்சாய் மாறிப் போயிருக்கின்றனவே. இவைகள் யாவும் தேவமகிமை, சபையின் கட்டளை போன்றவற்றின் அவசியத்தினிமித்தம் கொஞ்சமும் இரக்கமின்றி நிறுத்தப்பட்டுவிடும். மேலும் பூமியதிர்ச்சி ஒன்று சம்பவிக்கும் என்று வெளிப்படுத்துத-ல் விவரித்திருக்கும் மாபெரும் சமுதாய புரட்சி வெடிக்கும் வரையிலும், எல்லாம் அமைதியாகக் காணப்படும். அடையாள மொழியில் பூகம்பம் என்பது சமுதாய புரட்சியை குறிக்கும், வேதவசனத்தின் படியோ, இது இன்றுவரைக்கும் சம்பவித்திராத ஒரு சம்பவம் ஆகும். (வெளி 16:18,19) நமது கர்த்தரின் குறிப்பு இதைக்குறித்து கூறுவதைப் பாருங்கள். (மத் 24:21)

### கர்த்தரின் மாபெரும் சேனை

இந்த சந்தர்ப்பத்தில், தேவன் அர்மகெதோனுக்கு அதாவது அழிவின் சிகரத்துக்கு சேனைகளைக் கூட்டிச் சேர்ப்பார் என்று வேதவசனம் காட்டுகிறது. (வெளி 16:16) தங்களுடைய ஐக்கியம், கூட்டமைப்பு போன்றவற்றால் இவர்கள் தடுக்க நினைத்த அதே காரியமானது, அவர்களே துரிதப்படுத்துகிற ஒரு காரியமாய் இருக்கும். தேவன் மேசியாவின் மூலம் வெளிப்படுத்தப்படுவார் என்றும் அவரே ஜனங்களின் பட்சமாய் இருப்பார் என்றும் வேத வசனங்கள் நமக்கு கூறுகின்றன. "பெரிய அதிபதியாகிய மிகாயேல் (தேவனைப் போன்றவர் - மேசியா) அக்காலத்திலே எழும்புவார்." (தானி 12:1) அவர் அதிகாரத்தை பெற்றுக்கொள்வார். அவரது ராஜ்யம் என்றும், அவரது பெயரில் மற்றும் அவரது ஸ்தானத்தில் இருந்து ஆளும்படியாய் அதிகாரம் பெற்றவர்கள் என்றும் தவறாய் தங்களை உரிமைப்படுத்திக் கொண்டிருந்த அநேகரிடமிருந்து அவருடைய ராஜ்யத்தின் சுயாதீனத்தை அவர் எடுத்துக் கொள்வார்.

நமது கர்த்தராகிய இயேசு அறிவித்தப்படி, "அவருடைய பணிவிடைக்காரரே நீங்கள் யாருக்கு சேவை செய்கிறீர்கள்." சிலர் சாத்தானுக்கும், தவறான காரியங்களுக்கும் சேவை செய்துவிட்டு, தேவனுக்கும், நீதியின் காரியங்களுக்கும் சேவை செய்வதாய் தெரிவித்துக்கொள்கிறார்கள். மேலும், தர்சு பட்டணத்தின் சவுல்



சபையை துன்புறுத்துவதினால் "தேவனுக்கே ஊழியம் செய்வதாய் மெய்யாகவே நினைத்துக் கொண்டது" போல், சிலர் அறியாமையினாலும் ஊழியம் செய்யக்கூடும். இதே கொள்கையானது உண்மையை வேறுவிதமாய் கொண்டிருக்கிறது. தன்னுடைய படையில் போர் புரியும் ஒவ்வொரு வீரருடைய நல்லொழுக்க சுபாவங்களுக்கு பூமியில் ராஜா ஒருவன் எப்படி எந்த பொறுப்பையும் தான் சுமக்கிறதில்லையோ, அதே போல தன்னிமித்தமாய் அவரது பக்கம் எவ்விதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்டு போரிடுவோரின் நல்லொழுக்க குணநலனுக்கு கர்த்தர் உத்தரவாதம் அளிப்பதில்லை. ஒருவரது குறிக்கோளோ அல்லது காரியமோ எதற்காக இருப்பினும் அவரது ஊழியக்காரர் அவருக்காக சேவை செய்கின்றனர்.

வரப்போகிற அர்மகெதோன் யுத்தத்திலும் கூட இதே கொள்கையே பயன்படுத்தப்படும். யுத்தத்தில் தேவனுடைய பக்கம் இருப்பவர்கள் ஜனங்களுடைய பட்சமானவர்களாய் இருப்பார்கள்; யுத்தத்தின் ஆரம்பத்தில் சேனைகள் என்று சொல்லப்படுகிற ஜனங்கள் படுகுழியில் தள்ளப்படுவார்கள். இந்த யுத்தத்தின் முன்னணியில் புரட்சிக்காரர், சோஷ-ஸ்ட் மற்றும் அதிதுணிகரமான தீவிரவாதிகள் ஆகியோர் காரணத்தோடும் காரணமின்றியும் காணப்படுவர். எல்லா வகுப்பைச் சார்ந்தவர்களும் ஒரு சேனையில் இருப்பார்கள் என்பது ராணுவ வாழ்க்கையை குறித்து அறிந்த எவருக்கும் தெரிந்ததே.

தங்களுடைய தடைகளின் நிமித்தம் பொதுமக்கள் நிம்மதியின்றி இருப்பார்கள்; ஆனால் அவர்கள் ஆட்சியை பிடித்துவைத்திருக்கும் ராஜாக்கள், பிரபுக்கள், சமுதாயம், மதம் மற்றும் அரசியலோடு ஒப்பிட்டு பார்க்கும்போது தங்களது பலவீனத்தை உணர்ந்தவராய் இருப்பார்கள். ஏழைகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தின் பெரும்பான்மையோர் எவ்விலை கொடுத்தாகிலும் சமாதானத்தை பெற நாடுவார்கள். அராஜகத்தை குறித்த எந்த ஈவு இரக்கமும் பொதுமக்களுக்கு கிடையாது. அரசாங்கமே இல்லாமல் இருப்பதைவிட இந்த மோசமான நிலையில் இருக்கும் அரசாங்கமே மேலானது என்று அவர்கள்

உண்மையில் உணர்கிறார்கள். ஓட்டுச்சீட்டின் மூலம் விடுதலையையும், தீமைகள் நீங்கப்பட்டு உலகத்தின் காரியங்களில் சமாதானமான ஒரு மாற்று அமைப்பையும் தேடுகின்றனர். மேலும் இதுவரையில் சட்டத்தைப் பாதுகாத்தவரே சட்டத்தினை மீறுகிறவராய் மாறும் போதும், ஓட்டுச்சீட்டின் மூலம் தெரிவிக்கப்பட்டதாகிய பெரும்பான்மையானோரின் விருப்பங்களை அவர்களே தடை செய்பவர்களாயும் மாறும்போது குழப்பங்கள் உச்சநிலையை அடையும். எதிர்காலத்தைப் பற்றிய பயமானது, நல்லெண்ணம் கொண்ட பொது ஜனத்தை நம்பிக்கையிழக்கச் செய்யும் சோஷ-சம் தோல்வியடையும் போது அது அராஜகத்தினை விளைவிக்கும்.

இந்த யுத்தத்தில் கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இடம்பெறுவதில்லை. மேசியாவின் ராஜ்யத்தையும், யூபி-யின் மகிமையான வருடத்தையும் மற்றும் அது ஆரம்பிக்கப்போகும் புதுப்பிக்கப்படுதலையும் தங்கள் இருதயத்தில் வாஞ்சிக்கும் தேவனுடைய அர்ப்பணிப்பின் ஜனங்கள், கர்த்தருடைய நேரத்திற்காக பொறுமையுடன் நிலைநின்று, முறுமுறுக்காமல் அதற்காக காத்திருப்பார்கள். தங்களுடைய தீவட்டிகளைச் சீர்படுத்தி, எரியச் செய்து கொண்டு, வெகுசீக்கிரத்தில் நடக்கவிருக்கும் யுத்தத்திற்குரிய மிகமுக்கியமான சம்பவங்களை குறித்ததான இருளில் அவர்கள் இருக்கமாட்டார்கள். ஆனால், "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்தினால்," மிகத்தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கும் விளைவுகளை அறிந்தவர்களாய், "பொழுது விடிந்து விடிவெள்ளி உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கை கவனத்துடன் பார்ப்பதற்கு" தாங்கள் நலமானதை செய்திருக்கிறபடியால் அவர்கள் மிகுந்த தைரியத்துடன் இருப்பார்கள். 2பேது *1:19*

தேவன் தமது ராஜ்யத்தை ஏன் இன்னும் சீக்கிரமாய் ஸ்தாபிக்கவில்லை? என்றும் அர்மகெதோன் ஏன் அவசியம் என்றும் கேள்விகள் தற்போது எழும்புகின்றது. கிறிஸ்துவின் ஆளுகைக்காக அவர் மாபெரும் ஏழாவது ஆயிரமாண்டின் நாளை குறித்து வைத்திருக்கிறார். மேலும், தேவன் அவருக்கே சொந்தமான காலத்தையும், நேரத்தையும் கொண்டிருக்கிறார் என்று நாம் பதில்



அளிக்கிறோம். கோடீஸ்வரர்களும், அதிருப்தியாளர்களும் ஒரே சமயத்தில் உருவாக காரணமாய் இருக்கும் ஞானமும், திறமையும் நிறைந்த நமது நாட்கள் வரும் வரைக்கும் தெய்வீக ஞானமானது தடுத்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. ஒரு ஆயிரம் வருடத்துக்கு முன்னதாகவே அறியாமை என்னும் திரையை தேவன் விலக்கியிருப்பாரே ஆகில், அர்மகெதோன் யுத்தத்துக்கு இந்த உலகம் ஒரு ஆயிரம் ஆண்டு முன்னதாகவே அணிவகுத்து நின்றிருக்கும். தற்காலத்தைவிட முன்னதாகவே இந்தக் காரியங்களை தேவன் கொண்டுவரவில்லை. ஏனெனில், அவரது திட்டமானது பல்வேறு பகுதிகளைக் கொண்டது. இவை யாவும் ஒரே நேரத்தில் ஒன்று திரண்டு வந்து கொண்டிருக்கின்றன. தமது மகா வல்லமையைக் கொண்டு ராஜ்யபாரம் பண்ணும்படி மேசியாவை உடனடியாய் உயர்த்தும்படியாக அர்மகெதோனுக்கு ஒன்று சேர்க்கப்படும் வரையிலும் மனுக்குலத்தின் கண்களுக்கு தேவன் இரக்கத்தின் நிமித்தமாய் திரை போட்டார். *(வெளி 11:17,18)*

எல்லா நன்மைகளையும் கொடுப்பதற்கு மிகுந்த நன்றியுடன் இருக்கும்வகையில் தேவனுடைய ஜனங்களது மனப்போக்கு இருக்கவேண்டும். வந்துகொண்டிருக்கிற மகாபெரிய புயலுக்காக தேவைப்படும் காரியங்களை செய்பவர்களாய் மிகுந்த அமைதியை காத்துக்கொண்டு ஏழையோ பணக்காரரோ யார் பக்கமும் தேவையற்ற அக்கறை எடுக்காமல் இருக்கவேண்டும். ஜனங்களின் பட்சத்தில் கர்த்தர் இருக்கிறார் என்பது நமக்கு ஏற்கனவே தெரியும். அவரே அர்மகெதோன் யுத்தத்தை நடத்துவார், அதோடு எல்லா வகுப்பினர் அடங்கிய விநோதமான சேனையே, அவரது பிரதிநிதித்துவமாகவும் இருக்கும். சமூக புரட்சியாகிய இந்த மாபெரும் பூமியதிர்ச்சி வரும் போது, கொஞ்ச அராஜகவாதிகள் அல்ல, தங்களை நெருக்கி நசுக்குகின்ற மாபெரும் சக்தியையே ஜனங்களுடைய கிளர்ச்சி தூக்கியெறிந்துவிடும். இந்த மொத்த காரியத்துக்கும் அடிமட்டத்தில் இருப்பது சுயநலம்.

## இன்னும் இல்லை, ஆனால் விரைவில்

கடந்த 40 வருடங்களாய் அர்மகெதோனின் சக்திகள் குழப்பத்தின் இருபக்கங்களிலும் கூடிவந்திருக்கிறது. வேலை

நிறுத்தங்கள், கதவடைப்புகள், பெரிதும்,சிறிதுமான தானாய் ஏற்படும் கலகங்கள் ஆகியவை ஒருவருடைய பாதையில் ஒருவர் குறுக்கிடும் போராளிகளைப் போல் இருக்கின்றன. ஐரோப்பாவின் நீதிமன்றம் மற்றும் இராணுவ ஊழலும், அமெரிக்காவின் இன்சூரன்ஸ், டிரஸ்ட் மற்றும் நீதிமன்றத்தின் ஊழலும் பொதுமக்களின் நம்பிக்கையை அசைத்துவிட்டன. மிகக்கடுமையான சூழ்ச்சிகள் முதலாளிகள் மீதும் தொழிலாளிகள் மீதும் மாறிமாறி செய்யப்பட்டன. இதன் காரணமாக ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை இழக்கும்படி ஆயிற்று. கசப்பும், கோபமுமான உணர்வுகள் இருபக்கத்திலும் மேலும், மேலும் வெளிப்படுத்தப்பட்டது. படையின் அணிவகுப்பு தினந்தோறும் இன்னும் தெளிவாய் முன்னேறி வருகிறது. இருந்தபோதிலும் அர்மகெதோன் இன்னும் துவங்கவில்லை.

புறஜாதிகளின் காலம் முடிய இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கின்றன. மிருகத்தின் சொரூபம் இன்னும் தனது ஜீவனை-வல்லமையை பெறவேண்டியுள்ளது. அதன் வெறும் ஜடத்தில் இருந்து ஒரு உயிருள்ள சக்தியாக மாறுதல் அடையவேண்டும். போதிப்பதற்குரிய அப்போஸ்தல உரிமையையும் அதிகாரத்தையும் பெற்றவராக, அதனுடைய மதகுருக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அங்கீகரிக்கப்படாதவரையிலும், அது ஜீவனைப் பெற்று பலமடையாதவரையிலும், தங்களுடைய அமைப்பானது பிரயோஜனமற்ற ஒன்றாய் தான் தொடர்ந்து இருக்கும் என்பதை புராட்டஸ்டன்ட் கூட்டமைப்பு உணர்ந்துகொண்டிருக்கின்றது. இதுதான், இரு கொம்புள்ள மிருகத்தி-ருந்து எழும்பும் என்று தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கிலாந்து சபையை இது அடையாளமாய் குறிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். புராட்டஸ்டான்டிசம் மற்றும் கத்தோ-க்க மார்க்கத்தின் மேலோங்கிய செயல்கள், மனித உரிமைகளை நசுக்கும்படியாய் இணைந்து செயல்படுவது, சொரூபத்தின் உயிரூட்டலுக்காக எதிர்நோக்கியிருப்பதை காட்டுகிறது. இது விரைவில் சம்பவிக்கக்கூடும். ஆனால், அமர்கெதோன் இதற்கு முன்னே நடந்துவிடாது. ஆனால், தீர்க்கதரிசன வார்த்தையினை குறித்த நமது கண்ணோட்டத்தின்படி அது ஒருவேளை ஒரு வருடம் கழித்து தொடரவேண்டும்.



இன்னும் மற்றொரு காரியமும் கூட குறுக்கிடுகிறது. யூதர்கள் படிப்படியாய் பாலஸ்தீனத்துக்குள் வந்தாலும், கானான் தேசத்தின் மீதான கட்டுப்பாட்டை படிப்படியாகப் பெற்றுக் கொண்டிருந்தாலும், மேலும் ஏற்கனவே 19 கோடீஸ்வரர்கள் அங்கிருப்பதாய் அறிக்கைகள் கூறினாலும், அர்மகெதோன் போரை அடைவதற்கு முன் இன்னும் குறிப்பாய் ஏராளமான எண்ணிக்கையில் எபிரேய செல்வந்தர்கள் அங்கிருக்க வேண்டியது தீர்க்கதரிசனத்துக்கு அவசியமாகிறது. உண்மையில் பரிசுத்த நாட்டில் யாக்கோபின் உபத்திரவமானது அர்மகெதோனின் கடைசி முடிவில் வரும் என்று நாம் புரிந்து கொள்கிறோம். அதன் பிறகு மேசியாவின் ராஜ்யம் வெளிப்படத் துவங்கும். அப்போதி-ருந்து வாக்குத்தத்தின் தேசமதில் இஸ்ரவேலானது கடந்த காலத்தின் சாம்ப--ருந்து படிப்படியாய் தீர்க்கதரிசனத்தின் மேன்மையான சிறப்புக்கு எழும்பும், அதனுடைய தெய்வீக நியமத்தின்படியான பிரபுக்கள், சாபத்தை புரட்டிப் போடவும், மனுக்குலத்தை தூக்கியெடுக்கவும், சாம்பலுக்கு சௌந்தரியத்தை கொடுக்கவும் ஆரம்பிப்பார்கள்.

*உலகம் முழுவதும் அவைகள் சுழல்கின்றபடியால், அவரது*
*வரப்போகும் நியாயத் தீர்ப்பை என்னால் காணமுடிகிறது,*
*இரண்டாம் பிறப்பு நேரிடுவதற்காக, அடையாளங்களும்,*
*முணுமுணுப்புகளும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டன;*
*பூமியின் நொறுங்கிக் கொண்டிருக்கும் சிம்மாசனங்களில்,*
*நான் அவரது நீதியின் தீர்ப்பை வாசிக்கிறேன்;*
*நமது ராஜா பவனி வருகிறார்.*

*ஏழாவது எக்காளம் தொனிக்கிறது, மேலும் நமது ராஜா*
*தோல்வி இல்லை என்பதை அறிவார்,*
*அவரது தீர்ப்பு நிறைவேறும் முன் மனுஷருடைய*
*இருதயத்தினை அவர் ச-த்து தூற்றுவார்.*
*ஓ! என் ஆத்துமாவே, அவரை வரவேற்க துரிதப்படு;*
*என் பாதங்களே களிப்போடு கொண்டாடு;*
*நமது ராஜா பவனி வருகிறார்.*

**அ அ**

## அத்தியாயம் 1

# "நீதியைச் சரிக்கட்டும் நாள்"

இதைக் குறித்த தீர்க்கதரிசன குறிப்பு - சமீபமாயிருக்கிற காலம் - இந்த தொகுப்பின் மையப்பொருள் - பொதுவான கருத்து .

"நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதி-ருந்தது; என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது." "அது கர்த்தர் பழிவாங்கும் நாள், சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம்." *ஏசா 63:4; 34:8.*

இப்படியாக ஏசாயா தீர்க்கதரிசி, தானியேல் *(தானி 12:1)* விவரித்த "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என்பதை சுட்டிக்காட்டுகிறார். மல்கியா *(4:1)* "இதோ சூளையைப் போல எரிகிற நாள் வரும் ; அப்பொழுது அகங்காரிகள் யாரும் அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்" என்றும் அதே சமயம் அப்போஸ்தலர் யாக்கோபு *(5:1-6)*, ஐசுவரியவான்கள் தங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களின் நிமித்தம் அலறி அழுவார்கள் என்றும், யோயேல் *(2:2)*, "அது இருளும், அந்தகாரமுமான நாள்" என்றும், ஆமோஸ் *(5:20)*, "அந்தநாள் வெளிச்சமாயிராமல், இருளும் பிரகாசமற்ற அந்த காரமுமாயிருக்கும்" என்றும், *(மத் : 24 :21,22)*, "மகா உபத்திரவம்" என்றும் அந்த நாளைக் குறித்து குறிப்பிடுகிறார்கள். மேலும் இது மகா அழிவுக்குரியதொரு குணம் கொண்டதாக இருக்கின்றது என்றும், அந்த நாள் குறைக்கப்படாவிட்டால் அதனுடைய அழிவி-ருந்து மாம்சமான யாதொன்றும் எஞ்சி வாழாது என்றும் கர்த்தர் கூறுகிறார்.

இருளும் அந்தகாரமுமான நாள் என்று தீர்க்கதரிசியால் விவரிக்கப்பட்ட நாளானது தேசம் முழுவதிலும் சமூகம் முழுவதிலும் மனுக்குலத்தின் மீது நியாயம் தீர்க்கும் நாள், இழந்ததை

திரும்பப்பெறும் ஒரு தேசிய நாள் ஆகும். இது அநேக வசனங்களின் மூலம் தெளிவாக விளங்குகிறது. ஆனால், இவைகளை நோக்கும் போது, ஜாதிகளின் மீதான தீர்ப்புக்கும், தனிமனிதன் மீதான தீர்ப்புக்கும் இடையிலேயான வேறுபாட்டை இதை வாசிப்பவர் மனதில் கொள்ளவேண்டும். ஜாதிகள் தனிமனிதரின் கூட்டாகவும், அதோடு ஜாதிகளின் செயல்பாடுகளுக்கு தனிமனிதனும் பெரும்பாலும் பொறுப்புடையவர்களாய் இருக்கின்ற பட்சத்தில், தங்களுக்கு நேரிடும் நாசத்தில் பெரிதும் துன்பப்படவேண்டியது கட்டாயமாகிறது. இருப்பினும் தனிப்பட்டவருக்கான உலக தீர்ப்பி-ருந்து ஜாதிகளுக்கான தீர்ப்பானது வேறானதாக இருக்கும்.

ஏற்கெனவே காண்பிக்கப்பட்டது போல (தொகுதி 1, அத்தியாயம் 8) ஆயிரவருட அரசாட்சியின் காலமே தனிப்பட்டவருக்கான உலகத்தின் தீர்ப்பாக இருக்கும். அதன் பிறகு, புதிய உடன்படிக்கையின் மிகவும் சாதகமான சூழ்நிலையின் கீழும், சத்தியத்தை குறித்த தெளிவான அறிவு கொடுக்கப்பட்டபின்பும், அதோடு நீதியின் எல்லா உதவிகளோடும், ஜாதிகளின் கூட்டாகவோ, பிற சமூக அமைப்புகளாகவோ இல்லாமல், எல்லா மனிதரும் தனித்தனியாக நித்திய வாழ்வுக்கான சோதனையில் அல்லது நியாய தீர்ப்பில் இருப்பர். தற்போது நடத்தப்படும் ஜாதிகளுக்கான தீர்ப்பானது (மத ரீதியாய், சமூக ரீதியாய்) தங்களுக்கு கூட்டாக இருக்கும் தகுதிகளில் மனிதருக்கான ஒரு நியாயத் தீர்ப்பாகும். உலகின் சமூக அமைப்புகள் அதிகாரத்தின் வெகுநீண்டகால குத்தகையை பெற்றிருந்தன ; ஆனால் இப்போது புறஜாதிகளின் காலம் முடிவுக்கு வந்துவிட்டபடியால், அவர்கள் தங்கள் கணக்குகளை ஒப்புவிக்கவேண்டும். அதோடு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பானது தீர்க்கதரிசிகளால் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட ஒன்றின்படி அப்படிப்பட்ட அதிகார குத்தகைக்கோ அல்லது வாழ்வின் தொடர்ச்சிக்கோ அவர்களில் ஒருவராகிலும் தகுதியுடையவராக காணப்படமாட்டார்கள். அவர்களிடமிருந்து ஆளுகை பிடுங்கப்படும் என்பதே ஆணையாகும். அதோடு உரிமைக்காரர் ராஜ்யத்தை எடுத்துக்கொள்வார். மேலும், ஜாதிகள் யாவும் அவருக்கு சுதந்தரமாக கொடுக்கப்படும். எசே 21:27; தானி 7:27; சங் 2:8 ; வெளி 2:26,27



கர்த்தர் தமக்கு முன்பாக நியாயத்தீர்ப்புக்காக கூட்டப்பட்ட ஜாதிகளிடம் அவர் கூறும் வார்த்தையைக் கேளுங்கள் : “ஜாதிகளே கேட்கிறதற்கு கிட்டி வாருங்கள்; ஜனங்களே கவனியுங்கள்; பூமியும், அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதில் உற்பத்தியான யாவும் கேட்கக்கடவது. சகல ஜாதிகளின் மேலும் கர்த்தருடைய கடுங்கோபமும், அவைகளுடைய சகல சேனைகளின் மேலும் அவருடைய உக்கிரமும் மூளுகிறது.” “கர்த்தரே ...நித்திய ராஜா; அவருடைய கோபத்தினால் பூமி அதிரும்; அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள். ” “ஆரவாரம் பூமியின் கடையாந்தரம் மட்டும் போய் எட்டும்; ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது....கர்த்தர் சொல்கிறார். இதோ, ஜாதி ஜாதிக்குத் தீமை பரம்பும், பூமியின் எல்லைகளி-ருந்து மகா புசல் எழும்பும். அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவங்கி மறுமுனை மட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்.” “ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள் மட்டும் எனக்கு காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்கிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள் மேல் சொரியும்படி ஜாதிகளை சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்ச-ன் அக்கினியினால் அழியும்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன். ” ஏசா 34:1,2; எரே 10:10; 25:31-33; செப் 3:8,9; லூக் 21:25

ஏற்கனவே நாங்கள் காண்பித்தவண்ணம் காலம் சமீபமாய் இருக்கிறது. மேலும் யேகோவாவின் நாட்களுடைய சம்பவங்கள் நம்மீது நெருக்கமாய் சுழலுகின்றது. முன் குறித்த உபத்திரவத்தின் திசையை நோக்கி செயல்பட்டுக் கொண்டிருக்கும் காரியங்கள் முதிர்வடைய இன்னும் சில காலமே தேவைப்படும்; மேலும், உறுதியான தீர்க்கதரின வசனத்தின்படி, தற்போதைய தலைமுறை பயங்கரமான நெருக்கடியைக் குறித்து சாட்சி கூறி, தீர்மானிக்கப்பட்ட போராட்டத்தின் வழியாய் கடந்து போவார்கள்.

வீணான மனக்கிளர்ச்சியை எழுப்பும்படியோ, அல்லது

வெறுமையான ஆர்வத்தினால் மனநிறைவு செய்யும்படிக்கோ இந்த விஷயத்தின் மீது கவனத்தை ஈர்ப்பது நமது நோக்கமல்ல, அல்லது வரவிருக்கும் அழிவை விட்டு விலகும் விதத்தில் தற்போதைய சமூக, அரசியல் மற்றும் மதத்தின் சமுதாய அமைப்பில் மாறுதல் ஏதேனும் உண்டாக்கும் விதத்தில் கிரியைச் செய்யும்படியோ மனுஷருடைய இருதயத்தில் தவறு செய்ததற்கான வருத்தத்தை உருவாக்கவும் நாம் எதிர்பார்க்கமுடியாது. எதிர்கொண்டு வரும் உபத்திரவம் தவிர்க்கமுடியாத ஒன்று; வ-மை மிக்க காரணங்கள் யாவும் கிரியை செய்து கொண்டிருக்கின்றன,குறிப்பிட்ட ஒரு முடிவை நோக்கி செல்லும் அவைகளுடைய செயல்பாடுகளையோ அல்லது முன்னேற்றத்தையோ எந்த மனுஷீக சக்தியினாலும் தடுக்க இயலாது. கர்த்தர் முன் கணித்து அறிவித்தபடி அந்த பாதிப்புகள் தொடர்ந்தே ஆகவேண்டும். நிகழ்வுகளின் தற்போதைய ஓட்டத்தை தேவனுடைய கரத்தை தவிர வேறு எந்த கரமும் தள்ளிப்போட முடியாது; அதோடு இந்த போராட்டத்தின் கசப்பான அனுபவங்கள் அவைகளுடைய பாடத்தை மனித இருதயங்களின் மீது முத்திரை பதிக்கும் வரை அவரது கரம் அப்படி செய்யாது.

ஆகவே, நிகழ்ச்சிகளின் அடிப்படை முறைமைகளை மெச்சிக் கொள்வதைத் தவிர வேறு எதையும் செய்யமுடியாத இவ்வுலகை விழிப்படையச் செய்வது இந்த நூ-ன் முக்கிய நோக்கம் கிடையாது. ஆனால் "விசுவாச வீட்டாரை" முன்னெச்சரித்து, கரம் கொடுத்து, ஆறுதல்படுத்தி, உற்சாகப்படுத்தி மற்றும் பெலப்படுத்துவதற்காகவே ஆகும். அப்பொழுது தான் அவர்கள் திகிலடையாமல், அதற்கு பதிலாய் மிகவும் கடுமையான அளவில், தெய்வீக சட்டத்தினால் இவ்வுலகம் கண்டித்து திருத்தப்படும்போது நீடிய சமாதானம் மற்றும் அதிவிசேஷமான நீதியின் பலன்களின் மகிமையான வெளிப்படுதலை விசுவாசத்தினால் கண்டு முழுமையான இசைவுடனும் இரக்கத்துடனும் இருப்பார்கள்.

சமாதான பிரபுவாகிய கிறிஸ்துவின் கீழ் பூமியில் தேவனுடைய ராஜ்யம் நிரந்தரமாய் நிறுவப்படுவதற்கான முன்ஏற்பாடாக தற்போதைய முறைமைகள் முற்றிலுமாக தூக்கியெறியப்படுவதற்கும், தெய்வீக அனுமதியுடன் கூடிய



இலக்கிற்கும் சம்மந்தமுடையதாக இந்த நீதியைச் சரிக்கட்டும் நாள் நிற்கிறது.

தீர்க்கதரிசி ஏசாயாவின் *(63:1-6)* தீர்க்கதரிசனத்தை எடுத்துக் கொண்டால் சுவிசேஷ யுகத்தின் அறுவடையின் முடிவில், தன்னுடைய மகிமையின் ஆடையில் (ஆளுகையும், வல்லமையும் உடுத்தி) தனது எதிரிகளின் இரத்தத்தால் தன் உடை கறை பட்டு, எதிரிகளின் முன் ஜெயத்துடன் ஏறும் மகா வல்லமையான வெற்றியாளரைக் காணலாம். யார் இந்த அற்புதமான புதியவர் என்றும், "ஏதோமிலும் அதிலுள்ள போஸ்றா பட்டணத்தி-மிருந்து, சாயந்தீர்ந்த வஸ்திரங்களுடையவராகவும், மகத்துவமாய் உடுத்திருக்கிறவராகவும், தமது மகத்தான வல்லமையிலே எழுந்தருளினவராகவும் வருகிற இவர் யார்?" என்றும் கேட்பார்கள்.

ஏதோம் என்பது ஏசாவுக்கு, தனது சேஷ்ட புத்திர பாகத்தை விற்று போட்ட பிறகு கொடுக்கப்பட்ட பேராகும். *(ஆதி 25:30-34)* இதன்நிமித்தம் இந்த பேரானது அவனது சந்ததியார் மற்றும் அவர்கள் சென்று குடியமர்ந்த தேசம் ஆகிய இரண்டுக்குமே பொருந்துகிறது. *(ஆதி 25:30; 36:1; எண் : 20:18,20, 21; எரே 49:17 பார்க்கவும்)* இதன் விளைவாக இந்த யுகத்தில் இதே விதமாய் தனது சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுவிட்ட ஜனங்களுக்கு, அதிலும் ஏசாவை மேற்கொண்ட பயற்றங் கூழைப்போல அத்தனை அற்பமாய் சேஷ்டபுத்திர பாகத்தை எண்ணுகிற வகுப்பாருக்கு மிகச்சரியான அடையாளமாகவும் ஏதோம் என்ற இந்த பெயர் பொருந்துகிறது. இந்தப் பெயரானது திரள்கூட்ட கிறிஸ்தவர்களை, சில சமயம் கிறிஸ்தவ உலகம் மற்றும் கிறிஸ்தவ ராஜ்யம் (அதாவது கிறிஸ்துவின் ராஜ்யம்) என்றும் அழைக்கப்படுவர்களைக் குறிப்பிட்டுக் கூறுவதற்கு தீர்க்கதரிசிகளால் அடிக்கடி உபயோகிக்கப்பட்டது. இவர்கள் தவறானதொரு பெயரால் அழைக்கப்படுகிறார்கள் என்றும், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மெய்யான கருத்தையும், குணாதிசயத்தையும், அது நிறுவப்படும் விதத்தையும், காலத்தையும் குறித்த புரிந்துகொள்ளுத-ல் மாபெரும் குறையை உடையவர்கள் என்றும் புரிந்து கொள்ளலாம். அவர்கள் சத்தியத்தை தவறாக அறிவிக்கிற பெருமையான பட்டங்களை மட்டும் உடையவர்கள்.

உண்மையில் உலகம் இன்னும் கிறிஸ்தவராகவே இருக்கிறதா? “அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் எந்த ஒரு பகுதியாவது அந்த பெயருக்கு உரிமை கோருகிறவராக இருக்கின்றனரா”? பீரங்கிகளின் குண்டு வெடிப்பதின் சத்தமும், நசுக்கப்படுகிறவரின் புலம்பலும் மற்றும் கோபத்துடன் இருக்கும் ஜாதிகளின் முணுமுணுப்பும், காதுகளை துளைப்பது கேட்கிறதா என்பதற்கு இல்லை என்று பதில் கூறுகிற இவைகள் கிறிஸ்துவின் ராஜ்யத்தை, ஒரு மெய்யான கிறிஸ்தவ தேசங்களை நிர்மாணிக்கின்றனவா? இப்படிப்பட்ட பயங்கரமானதொரு பிரச்சனையின் நிரூபணத்தை உண்மையில் யார் தான் தம்மீது சுமத்திக் கொள்வார்கள்? பெருமை மிகுந்த உரிமைகளின் தவறான தர்க்கத்தினை அதை நிரூபிக்கும் சாட்சியோடு எதிர்த்து தாக்கினால் இந்த மாயத்தோற்றமானது முற்றிலுமாய் முடிவுக்கு கொண்டு வரப்படும். அப்போது அதனை அழியாமல் நிலைபெற செய்யும்படி விரும்புகிற எவரும் அப்படி செய்வதற்கு யோசனை செய்வார்கள்.

ஏதோம் என்ற அடையாளமானதொரு பெயர் கிறிஸ்தவ உலகிற்கு பொருத்தமாயிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவ ராஜ்யங்கள் என்று கூறிக்கொள்ளும் தேசங்கள், பிற தேசங்களைக் காட்டிலும் அநேக சலுகைகளை பெற்றிருக்கின்றன. எப்படியெனில், அதாவது தேவனுடைய வாக்கிற்கு உட்பட்டிருந்த கடந்த யுகத்தின் இஸ்ரயேலரைப் போல் நேரடியாகவும், மறைமுகமாகவும் தேவ வார்த்தையின் செல்வாக்கினால், நாகரீக வளர்ச்சியின் ஆசீர்வாதங்கள் யாவும் இந்த தேசங்களுக்கு வந்து சேர்ந்தன; அதோடு தங்கள் மத்தியில் இருக்கும் சில பரிசுத்தவான்களின் (ஒரு சிறுமந்தை) பிரசன்னத்தினால் முன்னேறி உலகத்தின் உப்பாக இருந்துகொண்டு, நீதியின் சீர்கேட்டி-ருந்து தங்களை ஓரளவிற்கு பாதுகாத்துக்கொள்கின்றன. மேலும், இவர்கள் தங்களுடைய தெய்வீக முன்னுதாரணங்களால், உலகத்தின் ஒளியாகிய ஜீவ வார்த்தையை தங்களுடைய சக்தியினால் தூக்கிப் பிடித்து, தேவனிடத்திற்கும் நீதியினிடத்திற்கும் திரும்பி செல்லும் வழியை மனுஷருக்கு இவர்கள் காண்பிக்கின்றனர். ஆனால், நேரடியாகவோ, மறைமுகமாகவோ வந்த தேவனுடைய வார்த்தையின் நிமித்தம், பூமியில் தாங்கள் பிறந்த காரணத்தினால்,



இவர்களுக்கு சுயாதீனமாய் கிடைத்த உரிமைகளை, இப்படிப்பட்ட அனுகூலமான தேசங்களில் எல்லாம் வெகுசிலரே சரியான விதத்தில் உபயோகப்படுத்தியிருக்கின்றனர்.

ஏசாவைப் போல, கிறிஸ்தவ உலகின் பெருவாரியான ஜனங்கள் தங்களுடைய சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப் போட்டனர். பெருவாரியான ஜனங்கள் என்று நாம் குறிப்பிடுவது, தேவனையும் அவருடைய காரியங்களையும் அறிவது அசாத்தியம் என்று நம்பும் கொள்கையுடைய பகுதியினரை மட்டும் அல்ல, ஆனால் பெரும்பான்மையான கிறிஸ்தவ மதத்தின் இவ்வுலக ஞானமுடைய மேதாவிகளையும், பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவர்களாகவும், கிறிஸ்துவை தங்களுடைய வாழ்வில் பெற்றிராதவர்களையுமே ஆகும். இவர்கள் தேவனோடும் கிறிஸ்துவோடும் கொள்ளும் ஐக்கியத்தின் மூலம் பெறும் எல்லா ஆசீர்வாதங்களையும், அதோடு கிறிஸ்துவின் ப-யின் அடிச்சுவடுகளில் உண்மையோடு பின் தொடருபவர்களுக்கென்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கும் இயேசுவினுடனான மகிமையான புத்திர சுவிகாரத்தையும் காட்டிலும் தற்போதைய உலகின் மேன்மைகளாகிய கேவலம் ஒரே ஒரு கவளம் உணவை அவர்கள் முக்கியமென தேர்ந்தெடுத்துவிட்டனர். இவர்கள், பெயரளவில் தேவனுடைய ஜனமாக, சுவிசேஷ யுகத்தின் பெயரளவான இஸ்ரேயலராக இருக்கிறார்கள்; இவர்களுக்கு யூத யுக மாம்சீகமான இஸ்ரேயலர் முன்னடையாளமாயிருக்கிறார்கள்; இவர்களுக்கு தேவனுடைய வாக்குதத்தங்களின் மீது மிகசொற்பமான நம்பிக்கையே இருந்தது அல்லது எந்த நம்பிக்கையும் இருக்கவில்லை. இவர்கள் கிறிஸ்துவின் பெயரை சுமக்கும் மாபெரும் சேனையாகவும் உலகிற்குத் தங்களைக் கிறிஸ்துவின் சபையாகவும் காண்பித்துக் கொள்கிறார்கள். கிறிஸ்துவின் சரீரத்தில் பல்வேறு பாகங்களை பிரதிப-க்கும் மாபெரும் (முறையல்லாத) அமைப்புகளை அவர்கள் நிறுவியபோதிலும், முறையான வேதசாஸ்திரங்களின் பெருவாரியான தொகுப்புகளை அவர்கள் எழுதியுள்ள போதிலும், மேலும் இவர்கள் போதிப்பதற்கென எண்ணிலடங்காத கலாசாலைகளையும், கல்லூரிகளையும்

நிறுவியபோதிலும், மேலும் கிறிஸ்துவின் பெயரால் அநேக அற்புதமான காரியங்களை செய்தபோதிலும் - இவைகள் பெரும்பாலும் கிறிஸ்துவினுடைய வார்த்தைகளின் போதனைகளுக்கு முரண்பட்டதாகவே இருக்கின்றன - தங்களுடைய சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏதோம் வகுப்பினர் என்பதை இவைகள் யாவும் நிச்சயப்படுத்துகின்றன. இந்த கூட்டத்தில் ஏறக்குறைய சகல கிறிஸ்தவ தேசங்களும் அடங்கும்; பூமியில் கிறிஸ்தவ தேசங்கள் என்று (பெயரளவில்) அழைக்கப்படும் தேசங்களில் வாழும் அனைவரும், அதோடு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய மேன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளாமலும், அதற்கென தங்களது ஜீவியத்தை கீழ்ப்படுத்திக் கொள்ளாத யாவரும் அடங்குவர். மீதமுள்ள தனிப்பட்ட வெகுசிலரே நீதிமான்களாக்கப்பட்டு, ஜீவப-யாய் தங்களை ஒப்புக்கொடுத்து, உண்மையோடிருக்கும் ஜீவனுள்ள விசுவாசத்தினால் தங்களை கிறிஸ்துவுடன் சேர்த்துக்கொண்டிருப்பவர்கள்; இவர்கள் மெய்யான திராட்சை செடியாகிய கிறிஸ்துவோடு கிளைகளாக தங்களை நிலைநிறுத்திக் கொண்டவர்கள்; இவர்கள் தேவனுடைய மெய்யான இஸ்ரயேலரை பிரதிப-க்கின்றனர்; இவர்களிடத்தில் வஞ்சகம் இல்லை.

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் அடையாளமாய் கூறப்படும் ஏதோமானது, வெளிப்படுத்துத-ல் அடையாளமாய் கூறப்படும் பாபிலோனுக்கு ஒத்திருக்கிறது. மேலும் ஏசாயா, எரேமியா மற்றும் எசேக்கியல் தீர்க்கதரிசனங்களையும் கூட ஒத்திருக்கிறது. கிறிஸ்துவின் ராஜ்யம், கிறிஸ்தவ தேசங்கள் என்று தவறாக மனுஷர்கள் கூறிக் கொண்டிருக்கும் மாபெரும் அமைப்புகளை இவ்வண்ணமாக கர்த்தர் பெயரிட்டு விவரிக்கின்றார். ஆகவே, ஏதோமின் பூமியனைத்தும் கிறிஸ்தவ உலகத்திற்கு அடையாளமாய் இருப்பது போல் அதனுடைய தலைநகரமான போஸ்றாவும் சபைகளின் அமைப்புகளுக்கு, கிறிஸ்தவ தலைமை கோட்டைக்கு அடையாளமாய் இருக்கிறது. தீர்க்கதரிசியானவர் ஏதோமில் அதுவும் விசேஷமாய் போஸ்றாவில் ஒரு மாபெரும் சங்காரத்தை உண்டாக்கும் ஒரு வெற்றி சிறந்த போர்வீரராய் கர்த்தரை



குறிப்பிடுகிறார். போஸ்றா என்ற பெயர் "ஆட்டுத்தொழுவத்தை" குறிக்கிறது. அதிலும் போஸ்றா என்பது கடாக்களுக்கு பெயர் போனது. மேலும் நீதியைச் சரிக்கட்டும் இந்த நாளுடைய சங்காரக்காரன் கடாக்களையும், ஆட்டுக்குட்டிகளையும் வெட்டுகிறவனாவான். *(ஏசா 34:6)* ஆட்டுகடாக்கள் களைகளுக்கு ஒப்பிட்டு பேசப்படுகிறது. ஆட்டுக்குட்டிகளோ தங்களது மேலான அழைப்பின் பந்தய பொருளை பெற்றுக்கொள்ளும் விதத்தில் ஓடாமல், தங்களுக்காகக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளை அலட்சியப்படுத்தி, உபத்திரவப்பட்ட பரிசுத்தவான்களை குறிக்கிறது. *(வெளி 7:14; 1கொரி 3:1)* மேலும், இவர்கள் கர்த்தரை முற்றிலுமாய் புறக்கணிக்காவிட்டாலும் அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்ட உண்மையுள்ள தேர்ந்த செம்மறி ஆடுகளாய் எண்ணப்பட்டு இந்த உபத்திரவத்தி-ருந்து தப்பிக் கொள்வதற்கு தகுதி படைத்தவராய் எண்ணப்படவில்லை.

தீர்க்கதரிசியின் கேள்வியாகிய "ஏதோமிலும், அதிலுள்ள போஸ்றா பட்டணத்திலுமிருந்து வருகிற சாயந்தீர்ந்த வஸ்திரங்களுடையவர் யார்?" என்பதற்கான பதில் "அவர் நீதியாய்ப் பேசி இரட்சிக்க வல்லவராகிய நான்." இவர் வெளிப்படுத்தின ஆசிரியரால் *(வெளி 19:11-16)* விவரிக்கப்பட்ட அதே வல்லமையுள்ளவர். இவர் "ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமாகிய" யேகோவாவின் அபிஷேகம் பண்ணப்பட்ட, ஆசீர்வதிக்கப்பட்ட நமது மீட்பரும் கர்த்தராகிய இயேசு தான்.

நமக்கு தெரிவிக்கும்படி தீர்க்கதரிசி இன்னும் மேற்கொண்டு கேட்கிறார். " உம்முடைய உடுப்பு சிவப்பாகவும், உம்முடைய வஸ்திரங்கள் ஆலையை மிதிக்கிறவன் வஸ்திரங்கள் போலவும் இருக்கிறதென்ன?" இதற்கான பதிலை கேளுங்கள்; "நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்; ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை நான் என் கோபத்தில் அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப் போட்டேன்; அதினால், அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின் மேல் தெறித்து, என் உடுப்பையெல்லாம் கறைபடுத்திக் கொண்டேன். நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதி-ருந்தது; என்னுடையவர்களை மீட்கும்

வருஷம் வந்தது. நான் பார்த்தேன், துணை செய்வார் ஒருவருமில்லை; தாங்குவார் ஒருவருமில்லை என்று ஆச்சரியப்பட்டேன், அப்பொழுது என் புயமே (வல்லமையே) எனக்கு இரட்சிப்பாகி, என் உக்கிரமே என்னை தாங்கிற்று. நான் என் கோபத்திலே ஜனங்களை மிதித்து அவர்கள் சாரத்தைத் தரையிலே இறங்கப்பண்ணினேன்." "அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்." வெளி 19:15

ஆலையை மிதிப்பது அறுவடை பணியில் கடைசி அம்சமாகும். அறுப்பும், சேகரிப்பும் முத-ல் செய்யப்படும். ஆகவே (கிறிஸ்தவர், கிறிஸ்துவின் ராஜ்யம் என்னும் பெயர்கள் பொருத்தமற்ற வகையில் உபயோகித்த பொய்யான திராட்சை பழங்கள்) "பூமியின் திராட்சை பழங்கள்" தங்களுடைய அநீதியின் செயல்களின் குலைகள் யாவும் முற்றிலும் பழுத்துவிட்டபடியினால் (வெளி 14:18-20) அவை அறுக்கப்பட்டு தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டு மிதிக்கப்படுகிறது. இது அறுவடை காலத்தின் கடைசி வேலையைக் குறிப்பிடுகிறது. (தொகுதி 3, அத்தியாயம் 6) வேதத்தினால் நாம் மிகவும் முன்னெச்சரிக்கப்பட்ட காரியமாகிய, மகாஉபத்திரவ காலத்தில் எல்லா ஜாதிகளும் சம்மந்தப்படுத்தப்படப் போகிறதின் கடைசி கட்ட அம்சங்களை நமது அறிவுக்கு இது படம் பிடித்துக்காட்டுகிறது.

ஆலையை ராஜாதிராஜாவானவர் ஒருவராக மிதிப்பதாக கூறப்பட்டிருப்பதின் உண்மையென்னவெனில், ஜாதிகளை முற்றிலுமாய் வீழ்த்துவதற்கு பயன்படுத்தப்படும் வல்லமையானது தெய்வீக வல்லமையாகவே இருக்கும். இது வெறும் மனுஷீக வல்லமையாக இருக்காது. தேவனுடைய வல்லமை தானே ஜாதிகளை தண்டிக்கும். அத்தோடு முடிவாக (நீதி, நியாயம், சத்தியம்) ஜெயத்தை தீர்ப்பாக கொண்டுவரும். "அவர் பூமியை தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் (தனது சத்திய ஆவியின் மற்றும் வல்லமையினால்) துன்மார்க்கரைச் சங்கரிப்பார்." (ஏசா 11:4; வெளி 19:15; சங் 98:1) சத்தியத்துக்கும் நீதிக்கும் கிடைக்கப்போகிற ஜெயத்திற்கான கனம் எந்த ஒரு மனுஷீக



தலைமைக்கும் கிடையாது. கோபமுடன் இருக்கும் ஜாதிகளுக்கு மூர்க்கத்தனமே போராட்டமாய் இருக்கும். போர்க்களமும், ஜாதிகளின் துன்பமும் உலகெங்கிலும் காணப்படும், மகா பயங்கரமான குழப்பத்தி-ருந்து அலெக்ஸாண்டரோ, சீசரோ, நெப்போ-யனோ எந்த ஒரு மனிதனும் ஒரு அமைதியை கொண்டுவருவதற்கு அங்கு காணப்படமாட்டார்கள். ஆனால், முடிவிலோ ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமானவருடைய மாபெரும் வல்லமையினால் கொண்டுவரப்பட்ட நீதிக்கும் சத்தியத்துக்கும் கிடைத்த வெற்றியும் மீறுதலுக்கான தண்டனையும் தெரியவரும்.

இப்படிப்பட்ட எல்லா காரியங்களும் சுவிசேஷ யுகத்தின் முடிவில் நடந்து முடிந்தாகவேண்டும். ஏனெனில் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் உரைக்கிறதாவது : (ஏசா 63:4; 34:8) "என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது." மற்றும் "அது கர்த்தர் பழிவாங்கும் நாள், சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம்." சுவிசேஷ யுகம் முழுவதிலும் பெயரளவிலான சீயோனின் முரண்பாடுகளின் மீதும் சச்சரவுகள் மற்றும் சண்டைகள் மீதும் தேவன் தொடர்ந்து கண்ணோட்டமாய் இருக்கிறார். தம்முடைய உத்தம பரிசுத்தவான்கள் சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும் போராடவேண்டியிருக்கிறது என்பதையும், கர்த்தருடைய பெயரால் தங்களை எதிர்ப்பவரது கைகளில் நீதியினிமித்தம் தூஷிக்கப்படும் வேதனையை மேற்கொள்கின்றனர் என்பதையும் அவர் கூர்ந்து கவனிக்கிறார். மேலும், ஞானமான காரணத்தினால் குறிப்பிட்ட காலம் வரைக்கும் கர்த்தர் தலையிடாமல் தாமதிக்கிறார். ஆனால், இப்போது ஈடுகட்டும் காலம் வந்துவிட்டது. மேலும் கர்த்தருக்கு அவர்களோடு ஒரு வழக்கு உண்டு (ஓசி 4:1-3) என்று எழுதப்பட்டிருக்கிறது. "தேசத்து குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது. அதேனென்றால் தேசத்திலே உண்மையும் இல்லை. இரக்கமும் இல்லை. தேவனைப் பற்றிய அறிவும் இல்லை. பொய்யாணையிட்டு, பொய் சொல்-, கொலை செய்து, திருடி, விபசாரம் பண்ணி, மிஞ்சி மிஞ்சிப் போகிறார்கள். இரத்தப்பழிகளோடே இரத்தப்பழிகள் சேருகிறது. இதினிமித்தம்

தேசம் புலம்பும், அதில் குடியிருக்கிற அனைவரோடுங்கூட மிருகஜீவன்களும், ஆகாயத்துப்பறவைகளும் தொய்ந்து போகும்." இந்த தீர்க்கதரிசனமானது மாம்சீக இஸ்ரயேலர் மீது நிறைவேறுவதில் அத்தனை உண்மையாய் இருக்கிறது. பெயரளவில் ஆவிக்குரிய இஸ்ரயேல் எனப்படும் கிறிஸ்தவ தேசங்கள் மீது முழுமையாய் அது இரட்டிப்பாய் பொருந்துவதற்குரியதாய் இருக்கிறது.

*"ஆரவாரம் பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும்; ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; மாம்சமான யாவரோடும் அவர் நியாயத்துக்குள் பிரவேசிப்பார்; துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

*"கர்த்தர் சொல்லுகிறதைக் கேளுங்கள்; .........பர்வதங்களே, பூமியின் உறுதியான அஸ்திபாரங்களே (சமுதாயம்), கர்த்தருடைய வழக்கை கேளுங்கள்; கர்த்தருக்கு அவர் ஜனத்தோடே (முன் குறிக்கப்பட்ட/தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட) வழக்கு இருக்கிறது." "துன்மார்க்கரை அவர் பட்டயத்துக்கு இரையாக்குவார்." எரே 25:31; மீகா 6:1,2*

இந்த வழக்கைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி பேசுவதை மறுபடியும் கேளுங்கள்: *"ஜாதிகளே கேட்கிறதற்குக் கிட்டிவாருங்கள்; ஜனங்களே, கவனியுங்கள்; பூமியும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதில் உற்பத்தியான யாவும் (உலக ஆவிகளின் நிமித்தம் வருகின்ற சகல சுயநலமும், தீமையான காரியங்களும்) கேட்கக்கடவது. சகல ஜாதிகளின் மேலும் கர்த்தருடைய கடுங்கோபமும், அவைகளுடைய சகல சேனைகளின் மேலும் அவருடைய உக்கிரமும் மூளுகிறது; அவர்களைச் (எதிர்காலத்தை முன்னாக வைத்து) சங்காரத்துக்கு நியமித்து, கொலைக்கு ஒப்புக் கொடுக்கிறார். அவர்கள் தேசம் இரத்த வெறி கொண்டு, அவர்கள் மண் நிணத்தினால் கொழுத்துப்போம். அது கர்த்தர் பழிவாங்கும் நாள், சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம்." ஏசா 34: 1,2,7,8*

இவ்வண்ணமாய் கர்த்தர் ஜாதிகளை நொறுக்கி, தமது வல்லமையை உணரும்படி செய்வார். தீயவழியில் திரளானவர்களோடு செல்லாத தம்முடைய உத்தமமான ஜனங்களை



அவர் மீட்பார். ஆனால், நேர்மையற்ற, கோணலான பாதையில் செல்லும் சந்ததிகளின் மத்தியில், தங்களுடைய தேவனாகிய கர்த்தரை முழு இருதயத்தோடு பின்பற்றுகிறவர்களையே அவர் மீட்பார். அத்தோடு உலகத்தின் மீது ஜாதிகளோடு இருக்கும் இந்த பயங்கரமான நியாயத் தீர்ப்பில் குயவனுடைய பாத்திரத்தைப்போல் நொறுக்குவது, கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியின் கீழ் வரப்போகிற தனிமனித நியாயத்தீர்ப்பின் போது இவர்களுக்கு ஒரு விசேஷித்த பாடத்தை புகட்டும். இவ்வண்ணமாய், தமது கோபாக்கினையில், கர்த்தர் இரக்கத்தை நினைவு கூறுவார்.

அ அ

<u>அத்தியாயம் 2</u>

# " பாபிலோனின் அழிவு "- "கிறிஸ்தவ தேசங்கள்," மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் "

பாபிலோன்-கிறிஸ்தவ தேசங்கள் - நகரம் - பேரரசு- தாய் - குமாரத்திகள் - பாபிலோனின் அழிவு - அதனுடைய பயங்கரமான முக்கியத்துவம்.

"ஏசாயா ....... பாபிலோன் மேல் வரக்கண்ட பாரம். உயர்ந்த பர்வதத்தின் மேல் கொடியேற்றுங்கள்; உரத்த சத்தமிட்டு ஜனங்களை வரவழையுங்கள்; அவர்கள் பிரபுக்களின் வாசல்களுக்குள் பிரவேசிப்பதற்குச் சைகை காட்டுங்கள்."

"நான் பரிசுத்தமாக்கினவர்களுக்கு கட்டளை கொடுத்தேன்; என் கோபத்தை நிறைவேற்ற என் பராக்கிரமசா-களை அழைத்தும் இருக்கிறேன்; அவர்கள் என் மகத்துவத்தினாலே களி கூறுகிறவர்கள் என்கிறார்."

"திரளான ஜனங்களின் சத்தத்துக்கொத்த வெகு கூட்டத்தின் இரைச்சலும், கூட்டப்பட்ட ஜாதிகளுடைய ராஜ்யங்களின் அமளியான இரைச்சலும் மலைகளில் கேட்கப்படுகிறது; சேனைகளின் கர்த்தர் யுத்தராணுவத்தை இலக்கம் பார்க்கிறார்."

"கர்த்தர் வருகிறார்; அவருடைய கோபத்தின் ஆயுதங்களும், தேசத்தையெல்லாம் அழிக்க, வானங்கவிழ்ந்த கடையாந்தர தேசத்தி-ருந்து வருகிறது."

"அலறுங்கள், கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது, அது சர்வ வல்லவரிடத்தி-ருந்து மகா சங்காரமாய் வரும்."

"ஆதலால் எல்லாக் கைகளும் நெகிழ்ந்து, எல்லா மனுஷரின் இருதயமும் கரைந்துபோம்."

"அவர்கள் திகிலடைவார்கள்; வேதனைகளும் வாதைகளும்

அவர்களை பிடிக்கும்; பிள்ளை பெறுகிறவளைப் போல வேதனைப்படுவார்கள்; ஒருவரையொருவர் பிரமித்துப் பார்ப்பார்கள்; அவர்கள் முகங்கள் நெருப்பான முகங்களாயிருக்கும்."

"இதோ, தேசத்தைப் பாழாக்கி, அதின் பாவிகளை அதி-ருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும், உக்கிர கோபமுமாய் வருகிறது."

"வானத்தின் நட்சத்திரங்களும், ராசிகளும் ஒளி கொடாதிருக்கும்; சூரியன் உதிக்கையில் இருண்டுபோம்; சந்திரன் ஒளி கொடாதிருக்கும்."

"பாவத்தினிமித்தம் உலகத்தையும், அக்கிரமத்தினிமித்தம் துன்மார்க்கரையும் நான் தண்டித்து, அகங்காரரின் பெருமையை ஒழியப்பண்ணி, கொடியரின் இடும்பைத் தாழ்த்துவேன். புருஷனைப் பசும்பொன்னிலும் மனுஷனை ஒப்பீரின் தங்கத்திலும் அபூர்வமாக்குவேன். இதினிமித்தம் சேனைகளின் கர்த்தருடைய உக்கிரத்தினால் அவருடைய கடுங்கோபத்தின் நாளிலே பூமி தன்னிடத்தை விட்டு நீங்கும்படி வானத்தை அதிரப்பண்ணுவேன்." ஏசா 13:1-13; வெளி 16 :14; எபி 12:26-29 ஒப்பிடவும்.

"நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டு போகும். " ஏசா 28:17.

ஏசாயா, எரேமியா, தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவைகளில் பாபிலோனைக் குறித்த பல்வேறு தீர்க்கதரிசனங்கள் எல்லாம் முற்றுமாய் ஒத்துப்போகின்றன. அதோடு அதே மாநகரத்தையே தெளிவாய் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் புராதன சொல்லர்த்தமான அந்த பட்டணத்தின் மீது இந்த தீர்க்கதரிசனங்கள் மிகக்குறைந்த அளவிலேயே நிறைவேறி இருக்கின்றன. ஆனால் உண்மையாகவே சொல்லர்த்தமான இந்த பாபிலோன் பட்டணம் பாழாக்கப்பட்டு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு பின்பே வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டிருக்கின்றது. பழமையான சொல்லர்த்தமான இந்த பாபிலோன் வேறுஒரு காரியத்திற்காக ஒரு எடுத்துக்காட்டின் விளக்கமாகவே எல்லா தீர்க்கதரிசிகளாலும் விசேஷமாய் சுட்டிகாட்டப்படுகிறது என்பது தெளிவாக தெரிகிறது. அதோடுகூட இந்த நகரத்தின் வீழ்ச்சியை குறித்த ஏசாயா மற்றும் எரேமியாவின்



தீர்க்கதரிசனங்கள் அப்பட்டணத்துக்கு நிறைவேறித்தீர்ந்தன. அப்படிப்பட்ட வீழ்ச்சியானது அதனுடைய குணாதிசயத்தின் வீழ்ச்சியாகவும் இருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தை (அதி 17,18) அடையாள மொழியில் எழுதியவர் குறிப்பிட்டிருக்கும் அந்த மகாநகரத்தை குறித்த விளக்கமும், அதோடு முக்கியமாய் மற்ற தீர்க்கதரிசிகளும் சுட்டிகாட்டுகின்றதையும் பார்க்கும் போது இது தெளிவாக தெரிகிறது.

ஏற்கனவே தெரிவிக்கப்பட்டபடி கிறிஸ்தவ தேசங்கள் இந்நாட்களில் புராதன பாபிலோனின் உண்மைப் பொருளாக இருக்கிறது. ஆகவே, பாபிலோன் எனப்படும் கிறிஸ்தவ தேசங்கள் பற்றிய கண்டிப்பான எச்சரிப்புகளும் முன்சொல்லப்பட்ட காரியங்களும், தற்கால சந்ததியாருக்கான ஆழ்ந்த கவலைக்குரிய காரியங்களாகும். அவைகளை கருத்துடன் கவனிக்க அந்த ஜனங்கள் போதுமான ஞானமுள்ளவர்களாக இருப்பார்களா? கிறிஸ்தவ தேசங்களுக்கு வேதத்தில் ஏதோம், எப்பிராயீம், ஏரியல் போன்ற பல்வேறு அடையாளப் பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், பாபிலோன் என்ற இந்த பதமே மிக அதிகமாய் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், அதனுடைய அர்த்தமான "குழப்பம்" என்பது மிகவும் விசேஷமாய் பொருந்துகிறது. அப்போஸ்தலர் பவுலும் கூட பெயரளவிலான மாம்சீக இஸ்ரயேலரையும், பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலரையும் வேறுபடுத்திக் காண்பிக்கிறார். (1கொரி 10:18; கலா 6:16; ரோ 9:8 பார்க்கவும்) அதேவிதமாய் பெயரளவிலான, ஆவிக்குரிய சீயோனும், பெயரளவிலான மாம்சீக சீயோனும் கூட இருக்கிறது. (ஏசா 33:14; ஆமோ 6:1 பார்க்கவும்) ஆனால் கிறிஸ்தவ தேசங்களுக்கும், பாபிலோனுக்கும் அவைகளின் தோற்றத்தில் இருக்கும் இசைவுகளையும் தேவ வார்த்தையின் நேரடியான சாட்சியையும் நாம் ஆராய்வோமாக. அப்பொழுது நாம் கிறிஸ்தவ தேசங்களின் தற்கால போக்கினையும், அதோடு முன்சொல்லப்பட்ட தற்கால தண்டனைகளையும் கண்டுகொள்வோம்.

இந்த மாபெரும் புதிரான நகரத்தை கண்டுபிடிப்பது அத்தனை சிரமமாக இருக்காது என்று வெளிப்படுத்தினாகம ஆசிரியர் தெரிவித்திருக்கிறார். ஏனெனில் அவளுடைய பெயர்

அவளது நெற்றியில் இருக்கும்; ஏனெனில் நாம் கண்களை மூடிக்கொண்டு பார்ப்பதற்கு மறுத்தாலன்றி, அதை கவனிக்க நாம் தவறவே முடியாது. அந்த அளவிற்கு கவனத்தை கவரும் வகையில் அவள் அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறாள். “இரகசியம், மகா பாபிலோன்,வேசிகளுக்கும், பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவளது நெற்றியில் எழுதப்பட்டிருக்கிறது.” (வெளி 17:5) ஆனால் இந்த இரகசியமான பாபிலோனைக் குறித்து பார்ப்பதற்கு முன், நிழலான பாபிலோனை முத-ல் கவனிப்போம். பிறகு அதனுடைய மிகத்தெளிவான அம்சங்களை மனதில் கொண்டு நிஜமான பாபிலோனை பார்க்கலாம்.

பாபிலோன் என்ற பெயர் பாபிலோனிய பேரரசின் தலைநகருக்கு மாத்திரம் அல்ல, அதனுடைய பேரரசுக்கே உபயோகப்படுத்தப்படுகிறது. பாபிலோன் என்ற தலைநகரம், மகா உன்னதமும், அநேகமாய் புராதன காலத்தின் நகரங்களிலே மிகப்பெரியதாகவும் இருந்தது. அது ஐபிராத்து நதியின் இருபக்கங்களிலும் சதுரமான அமைப்பில் கட்டப்பட்டிருந்தது. மேலும், அந்நியரின் படையெடுப்பி-ருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக, 75 முதல் 300 அடி உயரமும்,32 முதல் 85 அடி வரையிலான கனமும் கொண்ட இரட்டை மதிற்சுவருடன் நீர் நிரம்பிய ஆழமான அகழியினால் நாற்புறமும் சூழப்பட்டிருந்தது. அதன் உச்சி முகட்டில் தாழ்வான 250 கோபுரங்கள் இருந்தன. இந்த கோபுரங்கள் ஒன்றை ஒன்று பார்த்தவண்ணம் பெரும்சுவரின் உட்புற வெளிப்புற விளிம்புகளில் பொருத்தப்பட்ட வண்ணம் இருந்தன. மேலும், இந்த சுவர்கள் ஒரு பக்கத்திற்கு 25 ஆக, செங்குத்தான கோணத்தில் பிரிக்கப்பட்டிருந்த தெருக்களின் எண்ணிக்கைக்கு இசைவாக 100 பித்தளை வாயிற்கதவுகள் இருந்தன. அற்புதமான அரண்மனைகளாலும் கோயில்களாலும், போரில் வென்ற (வெற்றிகளின்) கொள்ளைப் பொருட்களாலும் அந்த நகரம் அழகுடன் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

நேபுகாத் நேச்சார் பாபிலோன் பேரரசின் மாபெரும் சக்கரவர்த்தியாக இருந்தான். இப்பேரரசு நீடித்த காலகட்டத்தின் ஏறக்குறைய பாதிகாலத்தில் இவனது நீண்டகால ஆளுகையே இருந்தது. அக்காலத்தின் சிறப்பும், ராணுவ மகிமையும் பெரிதும் இவனுக்கே உரியது. இந்த நகரமானது தன்னுடைய செல்வச் செழிப்புக்கும், பிரம்மாண்டத்துக்கும் பெயர் பெற்றதாய் இருந்தது. இவைகளே இதற்கு இணையான அவமதிப்புக்கும், அதனுடைய சரிவுக்கும் வீழ்ச்சிக்கும் நிச்சயமான முன்னோடியாய் அமைந்துவிட்டன. அது முற்றிலுமாய் விக்கிரக ஆராதனைக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு, அநீதி நிறைந்ததாய் மாறிப்போனது. இம்மக்கள் பாகாலை வணங்குகிறவர்களாகி, அதற்கு நரப-களை காணிக்கையாய் செலுத்தினார்கள். இவர்களது விக்கிரக ஆராதனையின் ஆழமான இழிவு, இவர்களோடு தொடர்புகொண்டு தங்களை கறைப்படுத்திக் கொண்ட இஸ்ரயேலர் மீதான தேவனுடைய கோபாக்கினையின் மூலமாய் புரிந்து கொள்ளப்படும். எரே 7:9; 19:5 காணவும்.



பாபேல் (குழப்பம்) என்ற பெயர் அந்த மாபெரும் கோபுரத்தைக் கட்டும் திட்டத்தில் ஏற்பட்ட விரக்தியினால் தோன்றியது. ஏனெனில், அங்கே தேவன் மனித பாஷையை தாறுமாறாக்கிபோட்டார். ஆனால், சொந்த நாட்டின் சொல்-லக்கணம் அதை பாபில் என்று ஆக்கியது. இது கர்த்தருடைய அதிருப்திக்கான நினைவூட்டலையும், கடிந்து கொள்ளுதலையும் குறிப்பதற்கு பதிலாக “தேவனுடைய வாசல்” என்று குறிப்பிடுகிறதாகிவிட்டது.

மாபெரும் பாபிலோனிய பேரரசின் தலைநகரம் என்னும் மேன்மையும், செல்வ செழிப்பும் உடைய ஸ்தானத்தை பாபிலோன் நகரம் அடைந்தது. அதோடு, “ பொன்னகரம்,” “ராஜ்யங்களுக்குள் அலங்காரமும் கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோன்” என்றெல்லாம் அழைக்கப்பட்டது. ஏசா 13:19; 14:4

நேபுகாத்நேச்சரின் ஆளுகைக்கு அவனது பேரன் பெல்ஷாத்சார் வாரிசாக வந்தான். இவனது ஆளுகையில் அந்நகரத்தின் பெருமை, அபரிமிதமான உணவு மற்றும் உபயோகமற்ற கேளிக்கைகளுக்கு சடுதியான வீழ்ச்சி வந்தது. ஆனால், ஜனங்களோ, வரவிருக்கும் ஆபத்தைக் குறித்து எந்த உணர்வும் இன்றி, தங்களது ராஜாவின் முன்மாதிரியை பின்தொடர்ந்து, மிதமிஞ்சிய ஒழுக்கக் கேடுகளுக்கு தங்களை கீழ்ப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சைரஸ்

தலைமையின் கீழ் பாரசீக படைகளானது ஐபிராத்து நதியின் கால்வாய் வழியாக வஞ்சகமாய் நுழைந்து (தண்ணீரின் போக்கை மாற்றியதின் மூலமாய்) களியாட்டத்தில் இருந்தவர்களை சங்காரம் செய்து நகரத்தைக் கைப்பற்றின.

இவ்வண்ணமாய் சுவரில் எழுதப்பட்ட விசித்திரமான கை எழுத்துக்களான "மெனே, மெனே, தெக்கேல் உப்பார்சின்" என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. அது "தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார். நீ தராசிலே நிறுத்தப்பட்டு குறையக் காணப்பட்டாய். உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது" என்ற அர்த்தமுடையது. அது நிறைவேறப்போகும் வெறும் சில மணி நேரங்களுக்கு முன் தானியேல் மூலம் அதன் அர்த்தம் சொல்லப்பட்டது. அந்த மாநகரத்தின் ரூபம் மறக்கப்பட்டும், வெகுகாலத்துக்கு நிச்சயமற்றதுமாய் போகும் மட்டும் அதன் அழிவு அத்தனை முழுமையானதாய் இருந்தது.

இப்படியே தான் நிஜமான நகரமும் இருந்தது; ஒரு பெரிய இயந்திரக்கல் சமுத்திரத்தில் எறியப்பட்டது போல் மறுபடியும் எழும்பாத வண்ணம் அது பல நூற்றாண்டுகளுக்கு முன் அமிழ்ந்து போனது; அதைகுறித்த ஞாபகம் கூட வெட்கத்திற்கு உரியதாகவும், ஒரு பழமொழியாகவும் மாறிப்போனது. இப்போது நாம் அதனுடைய உண்மைப் பொருள் குறித்துப் பார்ப்போம். முதலாவது வேதம் இதைக் குறித்து தெளிவாய் சுட்டிகாட்டியிருப்பதையும், அதன் பிறகு அடையாளமாய் கூறப்பட்டிருப்பதன் இசைவையும் பார்ப்போம்.

தீர்க்கதரிசனமாக நகரம் என்பது அதிகாரம் மற்றும் ஆதிக்கத்தின் ஆதரவுடன் இருக்கும் ஒரு மத ரீதியான அரசாங்கத்தை குறிக்கிறது. ஆகவே, உதாரணமாக "பரிசுத்த நகரம், புதிய எருசலேம்" என்பது மகிமையில் உயர்த்தப்பட்டு ஆளப்போகும் சுவிசேஷ யுக சபையின் ஜெயங்கொண்டவர்களால் நிறுவப்படும் தேவனுடைய ராஜ்யத்தை குறிக்க உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. சபையும் கூட அதே மாதிரி பெண்ணுக்கு அடையாளமாய் "மணவாட்டி, ஆட்டுக்குட்டியானவரின் மனைவி" என்றும் அவளுடைய மணவாளனாகிய கிறிஸ்துவின் மகிமை மற்றும் அதிகாரத்தின்



ஆதரவுடன், மகிமையும் வல்லமையும் பெறும் என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. "அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து : நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்-...எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை....காண்பித்தான்." வெளி *21:9-10*

இதேவிதமான விளக்கமே மறைபொருளான பாபிலோனுக்கும் கூட உபயோகிக்கப்படுகிறது. மிகப்பெரிய மதரீதியான ராஜ்யமாகிய "அந்த மாநகரம்" (வெளி 17:1-6) ஒரு வேசியாக, ஒரு வீழ்ந்து போன ஸ்திரீயாக விவரிக்கப்பட்டிருக்கிறது. (சத்தியத்தை கைவிட்ட ஒரு சபை - உண்மை சபையோ கற்புள்ளது) இவளுடைய ஆவிக்கும், போதனைகளுக்கும் ஏறக்குறைய அடிமையாகிப்போன சமூக அதிகாரங்களாலும், பூமியின் ராஜாக்களாலும் கூடுமான அளவிற்கு, ஆதரவு அளிக்கப்பட்டு இவள் ஆளுகைக்கும், அதிகாரத்துக்கும் உயர்த்தப்பட்டிருந்தாள். சத்தியத்தை கைவிட்ட இவள் தனது கற்பின் பரிசுத்தத்தை இழந்து போனாள். நிச்சயிக்கப்பட்ட கற்புள்ள பரிசுத்த மணவாட்டியாய், பரலோக மணவாளனுடன் உயர்த்தப்படுவதற்காக காத்திருப்பதற்கு பதிலாக, உலகத்தின் எண்ணங்களுக்கு ஒத்துப் போகத்தக்கதாய், போதனையிலும், குணாதிசயத்திலும், தனது கற்பின் பரிசுத்தத்தை காத்துக்கொள்ளாமல் இவ்வுலக ராஜாக்களோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டாள். இதற்கு பிரதி உபகாரமாக, நேரடியாகவும், மறைமுகமாகவும் பெருமளவிற்கு இவர்களது ஆதரவினால், தற்போதைய ஆளுகையை பெற்றுக்கொண்டாள்.

கிறிஸ்துவுக்கு நிச்சயிக்கப்பட்ட "கற்புள்ள கன்னிகைக்கு" உரிய மேன்மையான சிலாக்கியங்களையும் கர்த்தருடைய பெயரையும் உரிமை கொண்டாடும் அந்த சபை கர்த்தருக்கு உண்மையற்றவளாய் இருக்கும் போது, " வேசி" என்ற பட்டம் அவளுக்கு அடையாளமாய் இருக்கிறது. ஒரு ஆசாரியத்துவ ராஜாங்கத்தின் செல்வாக்கோடு, முற்றிலும் நிலையற்ற, குழப்பத்துடனும் இருந்த நிலைமை, "பாபிலோன்" என்ற பெயரால் அடையாளமாய் குறிக்கப்படுகிறது. இது பரவலான அர்த்தத்தில் தனது பெயருக்கு ஏற்றபடி பாபிலோனிய பேரரசை அடையாளமாய்

காட்டுகின்ற விதமாய், நாம் கிறிஸ்தவ தேசங்கள் என்று இதை மிகச்சரியாய் அடையாளம் கண்டுகொள்கிறோம். ஆனால், அதே சமயம் அதனுடைய மிகவும் வரையறுக்கப்பட்ட அர்த்தத்தின் படி, புராதன பாபிலோனிய நகரத்தை அடையாளமாய் காட்டுகிறபடி, பெயரளவிலான கிறிஸ்தவ சபை என்று இதை உணர்ந்து கொள்ளுகிறோம்.

வேதாகம பதமாகிய "பாபிலோன்"மற்றும் அதனுடைய சிறப்பு அம்சமாகிய குழப்பம் அவளுக்கு மிகவும் பொருத்தமாய் இருப்பதை கிறிஸ்தவ தேசங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அது அப்படிப்பட்ட ஒன்று அல்ல என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அதுமாத்திரமன்றி குழப்பம் என்ற வேதாகம சிறப்பை கூட புராதன பாபிலோன் சொந்தம் கொண்டாடவில்லை. புராதன பாபிலோன் தான் "தேவனுடைய வாசல்" என்று வைத்துக் கொண்டது. ஆனால், தேவன் அதை குழப்பம் என்று பெயர் குறிப்பிட்டுள்ளார். *(ஆதி. 11:9)* ஆகவே, அந்தப்பெயர் இன்று உண்மை பொருளுக்கு இசைவாக இருக்கிறது. இவள் தன்னை தேவனிடத்திற்கும், நித்திய ஜீவனுக்கும் போகிற வாசலாகிய கிறிஸ்தவ ராஜ்யம் என்று அழைத்துக்கொள்கிறாள். ஆனால், தேவனோ அவளை பாபிலோன் - குழப்பம் என்றே அழைக்கிறார்.

பாபிலோன் என்ற பெயரும் அதன் தீர்க்கதரிசன விளக்கங்களும் போப்பரசுக்கே பொருந்துவதாக புராட்டஸ்டன்டாரால் மிக பொதுவாகவும் மிகச்சரியாகவும் தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதற்கு மாறாக ரோம சபையை வசப்படுத்தவும், அதோடு இணைந்து, ஒத்துழைக்கவும், புராட்டஸ்டன்ட் பிரிவினரின் சார்பில் எல்லா முயற்சிகளும் செய்யப்படுகின்றன. இவ்விதமாய் இவர்கள் செய்வதனால் பரிசேயரும், வேதபாரகரும் தீர்க்கதரிசிகளை கொன்ற தங்களது தகப்பன்மாருடைய அக்கிரமத்தின் அளவை நிரப்பியது போலவே இவர்களும் அவர்களோடு ஒன்றுக்குள் ஒன்றாகி இவளுடைய காரியங்களை நியாயப்படுத்துவதனால் அவளுடைய அக்கிரமங்களின் அளவை நிரப்புகிறார்கள். *(மத் 23:31, 32)* இவைகள் யாவற்றையும் புராட்டஸ்டன்டாரோ அல்லது போப் மார்க்கத்தார்களோ ஒப்புக்கொள்ள உண்மையில் தயாராக இல்லை.



ஏனெனில், இப்படிச் செய்வதினால் தங்களைத் தாங்களே கண்டனத்துக்கு உட்படுத்துவது போலாகிவிடும். இந்த உண்மையானது வெளிப்படுத்தின விசேஷம் எழுதியவரால் அறிந்துக்கொள்ளப்பட்டது. எனவே, பாபிலோனின் உண்மை சொரூபத்தை கண்டுகொண்ட யாவரும், ஆவியில் வனாந்திரத்தில் தேவனுடைய மெய்யான ஜனங்களுடன் தங்களுடைய பங்கினை பெற்று, உலகத்தையும், அதன் எண்ணங்களையும் விட்டுப்பிரிந்து தெய்வீக தன்மையை முற்றிலுமாய் பெறும் நிலையில், தேவன் மீது மட்டுமே சார்ந்திருக்கும்படியாக முழுமையாய் தங்களை ஒப்புக்கொடுத்தல் மற்றும் உண்மையுள்ள நிலையில் இருக்கவேண்டும் என்று வெளிப்படுத்தின விசேஷ ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். " ஆவிக்குள் என்னை வனாந்திரத்துக்கு கொண்டு போனான்.... மிருகத்தின் மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன்..... அவள் மகா பாபிலோன் ....." வெளி *17:1-5*

நாகரீக உலகின் ராஜ்யங்கள் பெரும்பாலும் மாபெரும் மத சம்பந்த அதிகாரத்தின் செல்வாக்கினால் அதிலும் விசேஷமாய் போப்பு மார்க்கத்தின் செல்வாக்கினால் பெரிதும் ஆளப்படுகின்றபடியினால் அவைகள் "கிறிஸ்தவ ராஜ்யம்" என்ற பட்டப்பெயர்களை அவர்களிடமிருந்து ஏற்றுக்கொண்டு ராஜாக்களுடைய தெய்வீக அதிகாரம் போன்ற பிற போதனைகளை அவர்களுடைய அதிகாரத்தினால் ஏற்றுக்கொண்டு, மகா பாபிலோனோடு தங்களை இவர்களும் இணைத்துக்கொண்டு, அதனுடைய அங்கமாக மாறிப்போயினர். ஆதலால், நிழலாக கூறப்பட்டபடி,பாபிலோன் என்ற பெயர் பட்டணத்துக்கு மட்டும் பொருந்துவதோடு அல்லாமல் முழு பேரரசுக்கே பொருந்தும். "பாபிலோன்" என்ற அடையாள பதமானது இங்கு மாபெரும் மத அமைப்புகளான போப்புமார்க்கம் மற்றும் புராட்டஸ்டன்ட்டாருக்கு மட்டுமே பொருந்தாமல், மிகப்பரவலான அர்த்தத்தில் கிறிஸ்தவ தேசங்கள் அனைத்திற்குமே பொருந்தும்.

ஆகையால், புதிரான பாபிலோனுக்கான தீர்ப்பின் நாளானது கிறிஸ்தவ தேசங்கள் அனைத்தின் மேலும் ஒரு தீர்ப்பின் நாளாக இருக்கும். இதனுடைய பெரும் நாசமானது, ஜனங்கள், சமுதாயம், மத அமைப்புகள் ஆகியவைகளுடனும் முழுமையாய்

சம்மந்தப்பட்டிருக்கும்; மேலும் இதனுடைய பல்வேறு அமைப்புகளோடும் ஒழுங்குகளோடும் தங்களுக்கு இருக்கும் தொடர்பையும் விருப்பத்தையும் பொருத்த அளவிற்கு தனிப்பட்டவரும் கூட இதனால் பாதிக்கப்படுவர்.

கிறிஸ்தவ ராஜ்யங்கள் அல்லாத நாடுகளும் கூட பல்வேறு தேவைகள்,பொருளாதாரம் மற்றும் இது போன்ற பிற காரியங்களால் ஓரளவிற்கு கிறிஸ்தவ நாடுகளுடன் அக்காலங்களில் ஐக்கியப்பட்டிருப்பதனால், இழப்பின் தாக்கத்தை அவர்களும் உணர்வார்கள். அதோடு நியாயமாய் பார்க்கும் போது தாங்கள் கண்ட வெளிச்சத்தின் மதிப்பை உணர்ந்து கொள்ள இவர்கள் தவறிவிட்டார்கள்; அதோடு வெளிச்சத்தைக் காட்டிலும் இருளை இவர்கள் அதிகமாய் நேசித்தார்கள். ஏனெனில், இவர்களது செயல்கள் பொல்லாதவைகளாய் இருந்தன. இவ்வண்ணமாய், தீர்க்கதரிசி அறிவித்தபடி "பூமியெல்லாம் (சமுதாயம்) தேவனுடைய எரிச்ச-ன் அக்கினியினால் அழியும்." *(செப் 3:8)* ஆனால், பாபிலோனாகிய, கிறிஸ்தவ தேசங்களுக்கு எதிராக, அவளுடைய மாபெரும் பொறுப்பு மற்றும் சலுகைகளை தவறாக உபயோகப்படுத்தியதின் காரணமாய் அவளுக்கெதிராக தேவனின் கோபாக்கினை மற்றும் எரிச்ச-ன் அக்கினி பற்றி எரியும். *(எரே 51:49)* "பாபிலோன் பிடிபட்டதின் சத்தத்தினாலே பூமி அதிரும். அதின் கூப்பிடுதல் ஜாதிகளுக்குள்ளே கேட்கப்படும். " *(எரே 50:46)*

## பாபிலோன் - தாயும், குமாரத்திகளும்

புராட்டடஸ்டன்ட் சபையின் சரிவை கண்டு இன்னும் விழித்துக்கொள்ளாத தீவிர கிறிஸ்தவர்கள் சிலர் போப்பரசோடு அநேக பிரிவினர் கொண்டிருக்கும் உறவினை இன்னும் உணரவில்லை. ஆனால், இவர்கள் எல்லா மத அமைப்புகளிலும் நிலையற்ற மற்றும் தவறான போதனைகளும் இருப்பதை கவனிப்பார்கள். கிறிஸ்தவ ராஜ்யங்கள் யாவும் பாபிலோனின் தண்டனையில் தொடர்பு கொண்டிருப்பதினால், மாபெரும் சீர்திருத்தத்தின் விளைவாக வந்த புராட்டடஸ்டன்ட் சபை என்னவாகும்? என்று இன்னும் அதிகமான ஆர்வத்துடன் கேள்வியெழுப்புவார்கள். இது ஒரு மிக முக்கியமான கேள்வி;



ஆனால், தற்போதிருக்கும் புராட்டடஸ்டன்ட் சபை மாபெரும் புரட்சியின் விளைவாக வந்தது அல்ல. அதனுடைய சரிவினால் வந்தது. இதி-ருந்து தற்போது எழும்பியிருக்கும் பல்வேறு கிளைகளும் ரோமசபையின் குணாதிசயத்திலும், பண்புகளிலும் பெருமளவில் பங்கு பெற்றிருக்கின்றன என்பதை வாசகர் கவனத்தில் கொள்வாராக. புராட்டடஸ்டன்ட் சபையின் பல்வேறு பிரிவுகள் தான் (பதர்கள் என்பன நிரம்பிவழியும் எண்ணிக்கையில் இருக்கும்போது அதற்கு மாறாக கர்த்தரால் "கோதுமை " என்று அழைக்கப்படும் வெகுசிலர் தங்களையே தியாகமாக்கிய ஆத்துமாக்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது வித்தியாசம் தெரியும்படி இருப்பார்கள் என்று சொல்லலாம்) போப்பரசு எனப்படும் தரம் கெட்டுப்போன அமைப்பாகிய பெயர் கிறிஸ்துவத்தின் மெய்யான குமாரத்திகள் ; "வேசிகளின் தாய்" என்ற பெயர் போப்பரசாகிய அவளுக்கு பொருந்தும் என்று வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதியவர் சுட்டிக்காட்டுகிறார். *(வெளி 17:5)* ரோம சபையாரும், புராட்டடஸ்டன்டாரும் தாய்க்கும் குமாரத்திகளுக்கும் உள்ள உறவை தற்போது உரிமையாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கவனிக்கத்தவறிவிடக்கூடாது. அதாவது முன்னானது தன்னை பரிசுத்த தாய் சபை என்றும், பின்னானது முக்கியமான புராட்டடஸ்டன்ட் மதகுருக்களும், பாமர மக்களும் வெளிப்படையாய் அநேகமுறை பேசியிருப்பதன்படி தாய் சபையின் கொள்கைகளை சம்மதித்து, திருப்தியுடன் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. இவ்வண்ணமாய் அவைகள் தங்களுடைய அவமானத்தில் மகிமைப்படுகின்றன என்பது தேவனுடைய வார்த்தை மூலமும் வேசிகளின் தாய் என்று போப்பு சபையை பேரிட்டு அழைக்கும் களங்கத்தைக் குறித்து எந்த சிரத்தையும் காட்டாததின் மூலமும் தெளிவாகிறது. கிறிஸ்துவுக்கு நிச்சயிக்கப்பட்ட கன்னிகை என்று வேதத்தில் அழைக்கப்படும் ஒரே உண்மை சபையின் பெயரால் தன்னை அழைக்கும் போப்பு மார்க்கம் தாய் என்ற ஸ்தானத்துக்கு உரிய உரிமைகளை கொண்டாடவோ, அந்த பட்டப்பெயருக்குரிய உரிமைக்காக கேள்விகேட்கவோ அல்லது தனது செயல்பாடுகளில் பொருத்தமில்லாமல் இருப்பதை குறித்து எந்த அக்கறையும் காட்டுவதோ இல்லை. தாய் என்ற உரிமையை அங்கீகரித்துக்

கொண்டதால், அவளும் குமாரத்திகளும் நீங்காத அவமானத்தை அடைகின்றனர். தேவனால் அறிந்து கொள்ளப்பட்டதும் ஆனால் உலகம் இன்னும் அறியாததுமாகிய உண்மை சபை இன்றும் ஒரு கன்னிகையாகவே இருக்கிறது. அதோடு அவளுடைய தூய மற்றும் பரிசுத்தமான நிலையி-ருந்து மகள் என்ற முறைமை என்றுமே எழும்பவில்லை. அவள் இன்னும் கற்புள்ள கன்னிகையாக, கிறிஸ்துவுக்கு உண்மையாய், கண்ணின் மணியைப்போல் அவருக்கு நேசமாய் இருக்கிறாள். *(சக 2:8; சங் 17:6,8)* எவ்விடத்திலுமே உண்மை சபையின் ஒரு கூட்டம் என்று குறிப்பிட முடியாது. பதர்களெல்லாம் பிரிக்கப்பட்டு, மெய்யான கோதுமைகள் மட்டுமே அடங்கிய ஒன்றுதான் உண்மை சபை. இப்படிப்பட்டவர்கள் யாவரையும் உலகம் அறிந்துகொள்ளுகிறதோ இல்லையோ, இவர்கள் தேவனால் அறியப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் போப்பரசின் குமாரத்திகள் என்ற இந்த உறவில் புராட்டஸ்டன்ட் அமைப்பினர் எவ்விதத்தில் நிலைத்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்ப்போம். போப்பரசு என்கின்ற தாய், ஒரு தனிப்பட்ட நபர் அல்ல. இது ஒரு மாபெரும் மத அமைப்பு. இந்த அடையாளத்தை வைத்து குமாரத்திகள் என்ற அதேவிதமான குணாதிசயத்தை உடைய பிற மத அமைப்புகளை நாம் பார்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும். போப்பரசைப் போல் அத்தனை துன்மார்க்கமாகவோ அல்லது அத்தனை பழமை வாய்ந்ததாகவோ இருக்கவேண்டிய கட்டாயம் இல்லை. ஆனால், இருந்தபோதிலும், வேசி என்ற அதே அர்த்தத்தில், அதாவது கிறிஸ்துவின் மணவாட்டியாகவோ அல்லது நிச்சயிக்கப்பட்ட கற்புள்ள கன்னிகையாவோ தங்களை உயர்த்திக் கொள்ளும் எந்த மத அமைப்பும், கிறிஸ்துவுக்கு உண்மையற்றவர்களாய் இருந்து உலகத்தின் ஆதரவையும், சலுகைகளையும் கோருகின்ற எந்த அமைப்பும் இதில் அடங்கும்.

இந்த விளக்கத்திற்கு பல்வேறு புராட்டஸ்டன்ட் அமைப்புகள் முற்றிலுமாய் பொருந்துகின்றன. இவைகளே அந்த மாபெரும் குமாரத்திகளின் அமைப்புகள்.

ஏற்கெனவே குறிப்பிட்டவண்ணம் இந்த பல்வேறு குமாரத்தி



அமைப்புகளின் பிறப்பானது தாய் சபையின் களங்கங்களி-ருந்து கொஞ்சம் சீர்திருத்தப்பட்டவைகளி-ருந்து வந்ததாகும். இந்த குமாரத்திகளின் அமைப்புகள் பிரசவ வேதனையான சூழ்நிலையின் கீழ் தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு, கன்னிகைகளாய் பிறந்திருக்கின்றன. எப்படியானாலும், உண்மையான சீர்திருத்தவாதிகளை விட மேலானவர்களை உடையவைகளாயும், தாயினுடைய ஆவியை இன்னும் பெற்றிருக்கும் அநேகரை கொண்டவைகளாயும், தாயுடைய பொய் போதனைகள் மற்றும் கோட்பாடுகள் பலவற்றை தமதாக்கிக் கொண்டவைகளாயும் இருக்கின்றன. அவளுடைய தீய பழக்கவழக்கங்கள் அநேகமானவற்றில் அவர்கள் வீழ்ந்து, வேசி என்ற தீர்க்கதரிசன நிந்தைக்கு நிச்சயமாய் உரியவர்கள் என்பதை தங்களது குணாதிசயத்தால் நிரூபித்தனர்.

ஆனால், இந்த புனித இடத்தை தூய்மைபடுத்தும் விலையேறப் பெற்ற பணியை பல்வேறு சீர்திருத்த இயக்கங்கள் செய்தபோதும், ஆலயமாகிய வகுப்பினர் மட்டுமே, புனிதமான வகுப்பினர் மட்டுமே, தேவனுடைய கணக்கில் இருக்கும் வகுப்பினர் மட்டுமே என்றும் உண்மையான சபையாய் இருந்து வருகின்றனர் என்பது மறக்கப்பட்டு விடக்கூடாது. சபைகள் என்று அழைக்கப்படும் மாபெரும் மானிட அமைப்புகள், பெயரளவில் சபைகள் என்பதற்கும் அதிகமாய் என்றுமே இருந்ததில்லை. பாவத்துக்கான ஒரே மாபெரும் ப-யின் மேல் விசுவாசம் வைத்து, தங்களை அர்ப்பணம் செய்த உண்மையுள்ள விசுவாசிகள் மட்டுமே முழுவதுமாய் அடங்கிய மெய்யான சபையை உலகுக்கு மறைத்து, தவறாய் எடுத்துரைக்கும், போ-யான ஒரு பொய் அமைப்பை சார்ந்தவர்களாய் இவர்கள் யாவரும் இருக்கிறார்கள். இந்த மெய்யான சபையார் யாவரும் இந்த மனுஷீக அமைப்புகளில் உள்ளும் புறம்பும் அங்குமிங்குமாய் சிதறியிருப்பவர்களாய் காணப்படுகிறார்கள். ஆயினும், தங்களது உலக சிந்தையி-ருந்து எப்போதுமே விலகியிருக்கின்றனர். இவர்கள் தான் கர்த்தருடைய உவமையில் உள்ள கோதுமை வகுப்பார். அவரால் மிகத்தெளிவாய் பதர்களில் இருந்து பிரித்துப் பார்க்கப்படுகிறவர்கள். இவர்கள்

தனிப்பட்டவர்களாய் தேவனோடு தாழ்மையாய் நடந்து, அவரது வார்த்தையை தங்களது ஆலோசகராய், அவரது ஆவியை தங்களது வழிகாட்டியாய் எடுத்துக்கொண்டு, இந்த களை அமைப்புகளின உண்மையான குணாதிசயத்தை தங்களுக்குள் சேர்த்துக் கொள்ளாதவர்கள். இவ்வுலக ஆவியானது பதர் என்ற அறிமுகமற்ற சக்திகளின் மூலம் கிரியை செய்து ஆவிக்குரிய செழிப்புகளுக்கு ஆபத்தை விளைவிப்பதை வேதனையோடு பல சமயங்களில் அவர்கள் கவனிக்கின்ற போது, பெயரளவிலான சீயோனில் என்றுமே அமைதியுடன் இருந்ததே இல்லை. சீயோனில் துயரப்படும் பாக்கியவான்கள் இவர்களே; "இவர்களுக்கு சாம்பலுக்கு பதிலாக சிங்காரத்தையும், துயரத்துக்கு பதிலாக ஆனந்த தைலத்தையும்" தேவன் நியமித்திருக்கிறார். (மத் 5:4; ஏசா 61:3) களைகளி-ருந்து இந்த பிரிவினர் பிரித்தெடுக்கப்படுவது இந்த அறுப்பின் காலத்தில் தான் நடந்தேற வேண்டியதாக இருக்கிறது; ஏனெனில் அறுப்புக்காலம் மட்டும் இரண்டையும் வளரவிடுவது, கர்த்தருடைய நோக்கமாய் இருந்தது. (நாம் இப்போது வாழ்ந்துவருகிறது அறுப்பின் காலம்) மத் 13:30.

இந்த பிரிவினர் தற்போது விழிப்படைந்தபடியினால் இவ்வகை தண்டனைக்குரிய அமைப்புகளின் உண்மையான குணத்தை புரிந்து கொள்ள முடிகிறது. ஏற்கனவே கூறியவண்ணம் (தொகுதி 3, அத்தியாயம் 4) தீர்க்கதரிசியினால் ஏற்கனவே முன்கூறப்பட்டபடி (தானி 11:32-35) பல்வேறு சீர்திருத்த இயக்கங்கள், "இச்சக பேச்சுக்களால்" மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொன்றும், ஓரளவிற்கு தூய்மைப்படுத்தும் பணியை செய்தபின் ஒரு குறுகிய காலத்திற்குள் நின்று போயின. நடைமுறைக்கு ஒத்துவருகின்றது என்பதை கண்டுகொண்டவரையில், உலகத்தின் அனுகூலங்களை தங்களது தூய்மைக்கும், சபைக்கு மெய்யான தலையாகிய கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்துக்கும் விலையாக ரோம சபையின் மாதிரிகளை பிரதிப-த்தனர். சபையின் ஆவிக்குரிய மெய்யான நலனுக்கு விலையாக, தங்களுடைய உலக இச்சைகளில் ஓரளவிற்கு இணைய சபையும் அரசாங்கமும் ஒரு பொதுவான காரணத்தை உண்டாக்கின. இதனால் முன்னேற்றமும் சீர்படுதலும் சபையில்



மறுபடியும் ஸ்தம்பிக்கும் நிலைக்கு வந்தது. உண்மையில் வக்கிரமான இயக்கம் ஒன்று உள்ளே வந்தது. இதனிமித்தம் அதனுடைய நிறுவனர்களுடைய நாட்களை காட்டிலும், விசுவாசம் மற்றும் நடைமுறை வழக்கங்கள் ஆகிய இரண்டிலும் சரியான நிலையை விட்டு அவர்களில் அநேகர் வெகுதூரம் விலகி சென்றுவிட்டனர்.

சீர்திருத்தப்பட்ட சபைகளில் சிலவும் கூட உலக ஆளுகையாளருடன் அதிகாரம் மற்றும் வல்லமைகளில் பங்கு கொள்வதற்கு ஒப்புக்கொள்கின்றன; உதாரணமாக, இங்கிலாந்து சபை, ஜெர்மனியின் லுத்திரன் சபை ஆகியவை. மேலும் அந்த அளவிற்கு போகாதவர்கள் (உதாரணத்துக்கு, இந்த நாட்டை பொருத்தவரை) சிறுசிறு லாபங்களுக்காக அநேக சமாதான உடன்படிக்கைகளை இவ்வுலகத்துடன் செய்துகொண்டனர். மேலும் உலக அதிகாரங்கள் விசுவாசமில்லாத சபையின் உலக ஆசைகளை மிகவும் உயர்த்தி விட்டபடியினால், உண்மையில் சபையும் கூட இவர்களது தோழமைக்கும் ஐக்கியங்களுக்கும் மிகவும் தாராளமாய் விட்டுக்கொடுத்துவிட்டது; உலக ஆசைகளில் மூழ்கியிருக்கும் இவர்கள் தங்களது அங்கத்தினர்களின் எண்ணிக்கையின் மிகப்பெரிய ஆதரவை தற்போது பெற்று கூடுமானவரை எல்லா முக்கிய பதவிகளையும் ஆக்கிரமித்துக்கொண்டு, ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

இவ்வித காரியங்கள் தான் இந்த யுகத்தின் ஆரம்பத்தில் சபையை அவமாக்கியது; இது மாபெரும் வீழ்ச்சியையும் கொண்டு வந்தது; (2 தெச 2:3, 7-10) இது படிப்படியாக ஆனால் மிகத்தீவிரமாக போப்பு சபையை வளர்த்தது.

இந்த கண்டிப்பில்லாத குணமானது, ஆரம்பத்திலேயே பல்வேறு சீர்திருத்த இயக்கங்களால் மேற்கொள்ளப்பட்டது. இதுவே இந்நாள் வரை தொடர்கிற வைராக்கியமுள்ள சபை பிரிவுகளை படிப்படியாய் வளரச்செய்தது; செல்வத்திலும், எண்ணிக்கையிலும், செல்வாக்கிலும் வளர வளர, இந்த சங்கங்கள் கிறிஸ்தவ நெறியி-ருந்து வீழ்ந்து, தங்களுடைய தாயின் கர்வமான சுபாவத்தில் வளர ஆரம்பித்தன. சில உத்தமமான கிறிஸ்தவர்கள் இதை

ஓரளவிற்கு கவனித்து, வெட்கத்துடனும் துக்கத்துடனும் இதை ஒப்புக்கொண்டு அதற்காக புலம்பினர். இந்த உலகத்தை திருப்திபடுத்தவும் அதனுடைய லாபங்களுக்காக உரிமை பாராட்டவும் பல்வேறு மத வைராக்கிய சங்கங்கள் கூடுமான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு தங்களுடைய ஆதரவை தக்கவைத்துக் கொள்கின்றன. மிக நேர்த்தியான மற்றும் விலையேறப்பெற்ற ஆலய கட்டிடங்கள், உன்னதமான கோபுரங்கள், இசையெழுப்பும் ஆலயமணிகள், கம்பீரமான இசைக்கருவிகள், நேர்த்தியான (தட்டுமுட்டு) சாமான்கள், கலைநயமிக்க பாடகர் குழு, வர்ணிப்பான மேடை பேச்சாளர், வியாபார சந்தைகள், கொண்டாட்டங்கள், இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள், குலுக்குச்சீட்டுகள் மற்றும் வியப்பூட்டும் மனமகிழ்ச்சிக்கான வேடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்குகள் யாவும் உலகத்தின் அங்கீகாரத்தையும், ஆதரவையும் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கத்தில் ஒழுங்கு செய்யப்படுகின்றன. ஆரோக்கியமான, உண்மையான கிறிஸ்துவின் போதனைகள் யாவும் பின்னுக்கு தள்ளப்பட்டு, பொய் போதனைகளும் கிளர்ச்சியை உண்டுபண்ணும் தலைப்புகளும் பிரசங்க மேடைகளில் இடம் பெறுகின்றன. சத்தியமானது புறக்கணிக்கப்பட்டும் மறக்கப்பட்டும், அதனுடைய ஆவி தொலைந்து போனதுமாய் இருக்கிறது. இந்த காரியங்களில் குமாரத்திகள், தாய் சபையை எவ்வளவாய் ஒத்திருக்கிறார்கள்.

புராட்டஸ்டன்ட் பிரிவினர் போப்மார்க்கத்தோடு கொண்டிருக்கும் உறவில் இருக்கும் சுதந்திரத்துக்கும் மற்றும் பெருமைக்கும் உரிய அநேக நிரூபணங்களில் ஒன்றாக, பிரிஸ்படேரியன் குருமார் ஒருவரின் மனயெழுச்சியை நாம் கீழே கொடுக்கிறோம். இது தினசரி பத்திரிகையில் வெளியான அவரது பிரசங்கங்கள் ஒன்றி-ருந்து மேற்கோள் காட்டப்பட்டு இருக்கிறது. அந்த கனவான் கூறுகிறார்:

“நீங்கள் இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்தாலும் தாய் சபை என்பது இதுவே (கத்தோ-க்க சபை) என்று நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலர் காலம் வரை (பின்னிட்டு) உடைக்க முடியாத சரித்திரத்தை அவள் கொண்டவள். (ஆம், அங்கு தான் விசுவாச துரோகம் துவங்கியது. 2 தெச 2:7,8) நாம் மிகவும் உயர்வாக மதிக்கும் மதசம்மந்தமான சத்தியங்களின் ஒவ்வொரு பகுதிக்கும் களஞ்சியமாகிய அவளுக்கு நாம் கடமை பட்டவர்கள். இவள் உண்மை சபையாக இருப்பதற்குரிய உரிமை கோராவிடில், நாம் பிள்ளைகளாக இல்லாமல் வேசியின் பிள்ளைகளாய் இருப்போம்.

“ரோமானியரிடையே ஊழியம் செய்யும் மிஷனரிகளைப் பற்றி பேசலாம். அப்படியானால் மெத்தடிஸ்ட், எப்பிஸ்கோபால், யுனைட்டட் பிரிஸ்படேரியன் மற்றும் லுத்திரன் ஆகியோரிடம் இந்த மிஷனரிகளை அனுப்பி அவர்களை பிரிஸ்படேரியனாக மாற்றும்படி நான் உடனே சிந்திப்பேன்.”

ஆம், புராட்டஸ்டன்ட்டாரால் கைவிடப்படாமல் பிடிவாதமாய் கடைபிடிக்கப்படும் பிழைகள் எல்லாம் ரோம சபையால் கொண்டுவரப்பட்டவை. போப்பு மார்க்கத்தின் ஒட்டுமொத்த பிழைகள் யாவுக்கும் மேலாக பூஜை ப-கள், பரிசுத்தவான்கள், கன்னிமரி மற்றும் சிலைகளை வழிபடுதல், போதகரின் காதில் பாவ அறிக்கை செய்தல், பாவமன்னிப்புக்கு அனுமதியளித்தல் ஆகியவைகளில் கணிசமான முன்னேற்றத்தை ஒவ்வொரு சீர்திருத்த இயக்கங்களும் கொண்டு வந்தன. ஆனால், ஐயோ! மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் பழைய தாயின் கொடுங்கோல் ஆட்சிக்கும், துஷ்டத்தனத்துக்கும் அவர்களுடைய பிதாக்கள் தப்பியோடினர். ஆனால் இப்போது அந்த தாயின் உதவிகளுக்கும், நன்மைகளுக்கும் தற்போதைய புராட்டஸ்டன்ட் சபையார் ஆசைப்படுவது மட்டுமின்றி கூடுமானவரை எந்த சமரசத்தையும் செய்து கொள்ள ஆர்வமுடன் இருக்கின்றனர். மேலும் புராட்டஸ்டன்ட்டின் அஸ்திவாரத்தை முத-ல் உருவாக்கிய அந்த சத்திய கோட்பாடுகள் கூட தற்போது படிப்படியாக மறக்கப்பட்டு அல்லது வெளிப்படையாய் மறுக்கப்பட்டு வருகின்றன. “விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்” என்கிற மிகவும் அடிப்படையான போதனையானது கிரியைகளினாலும், ஜனங்களின் பாவநிவாரண பூஜை ப-களினாலும் நீதிமானாக்கப்படுதல் என்ற போப்பு சபையின் பழைய பிடிவாதமான கொள்கைகளுக்கு துரிதமாய் வழிவிடுகின்றன.

மேலும், பிரசங்க மேடையில் நிற்போரும், சபையில் பிரதானமாக இருப்போரும் பாவிகளுக்காக மீட்கும் பொருளாக கிறிஸ்து தனது விலையேறப் பெற்ற ரத்தத்தை சிந்தியதின் பயனை குறித்து தங்களுக்கு விசுவாசம் இல்லையென்று தற்போது வெளிப்படையாய் அறிவிக்கின்றனர்.

அப்போஸ்தல வாரிசு உரிமைகளும், மதகுருவுக்குரிய அதிகாரங்களும் சில புராட்டஸ்டன்ட் மதகுருக்களால் போப்புமார்க்க ஆசாரியத்துவத்தைப் போலவே ஏறக்குறைய இறுமாப்பான வகையில் வரையறுத்து வைக்கபட்டுள்ளன. அதோடு மாபெரும் சீர்திருத்தத்திற்கு வழிகாட்டிய போப்பு மார்க்கத்திற்கு எதிரான ஆட்சேபனைக்குரிய அடிப்படை கோட்பாடாகிய தனிப்பட்ட தீர்ப்பளிக்கும் உரிமை போப்பு சபையைப் போலவே புரட்டடஸ்டன்ட்டாராலும் பெரும்பாலும் தற்போது தொடர்ந்து எதிர்க்கப்படுகிறது. மேலும், தனிப்பட்ட தீர்ப்பளிக்கும் உரிமை வழக்கத்தில் இருந்ததால் சீர்திருத்தம் ஆரம்பமாகி சிறிது காலத்திற்கு முன்னோக்கி சென்றது. அதன்பிறகு பிரபலமான தலைவர்களின் இறுமாப்பான ஆதிக்கத்தினால் முன்னேற்றத்தின் சக்கரங்கள் தடுக்கப்பட்டு, அதற்குப்பின் நிரந்தரமாய் அதனை கடுமையான பாரம்பரிய கோட்டுக்குள் வைத்து, அதனை மீறி பயமின்றிஅடியெடுத்து வைக்கும் யாவர் மீதும் ஒரு தடையை விதித்தனர் என்பதையும் புராட்டஸ்டன்டார் முற்றிலும் அறிந்திருந்தனர்.

இவ்வண்ணமாய் பார்க்கும்போது, ஆரம்பத்தில் இருந்தது போல் புராட்டஸ்டன்ட் சபை (Protestantism) தாய் சபைக்கு எதிராக ஆட்சேபனை செய்யக்கூடியதாக இனி இல்லை என்று தெரிகிறது. செய்தித்தாள் ஆசிரியர் ஒருவர் சமீபத்தில் குறிப்பிட்டதாவது: "இசம் (ISM) இன்னும் நம்மிடையே இருக்கிறது. ஆனால் "புரட்டஸ்ட் (Protest) (ஆட்சேபனை) என்பது என்னவானது?" ஆதியில் இருந்த ஆட்சேபனைகளின் அடிப்படை ஆதாரங்களை புராட்டஸ்டன்டார் உண்மையில் அலட்சியப்படுத்துவதினால்-மறந்து விட்டதினால் - ஒரு அமைப்பாக, மனப்பூர்வமான வரவேற்பை நிச்சயமாய் அளிக்கும் புனித (?) "தாய் சபையின்" விரிந்த கரங்களை நோக்கி இவர்கள் மறுபடியும் பின்னிட்டு மிதந்து செல்கின்றனர்.



("பூமியின் ராஜாக்களுக்கும், ஜனங்களுக்கும்" புராட்டஸ்டன்டாருக்காக போப் -யோவின் பிரசித்தமான (Encyclical) கடிதத்தில் *(1894)* "அன்போடு கூட எங்கள் கரங்களை உங்களுக்காய் விரித்து, கத்தோ-க்க சபையின் மாறாத மற்றும் மாற்றமுடியாத ஐக்கியத்துக்குள் உங்களை வரவேற்கிறோம். நமது பொதுவான தாய் தனது மார்பண்டையில் உங்களை நீண்ட காலமாய் அழைப்பது போன்று; உலகத்தின் அத்தனை கத்தோ-க்கரும் கூட சகோதர அன்பின் ஆவலோடு ........ உங்களுக்காய் நீண்ட காலமாய் காத்திருக்கிறோம், கிறிஸ்தவ விசுவாசத்தில் எங்களுடைய பிரச்சனையில் கடந்த மூன்று நூற்றாண்டுகளாய் இருக்கின்ற அன்பு சகோதரரே, எங்களது வாயின் அழைப்பை காட்டிலும் எங்கள் இதயத்தில் உங்களை அதிகமாய் அழைக்கிறோம்."

மறுபடியும் அமெரிக்காவில் ரோமசபைக்கு தனது (Encyclical 1895) கடிதத்தில் போப் -யோ கூறுவதாவது: "கிறிஸ்தவ விசுவாசத்தின் விஷயத்தில் நம்முடன் அபிப்பிராய பேதம் கொண்டுள்ளவர்கள் மீது நமது கவனம் இப்போது திரும்புகிறது ......... அவர்களது இரட்சிப்பைக் குறித்து நாம் எவ்வளவு அக்கறை உள்ளவர்களாய் இருக்கிறோம். நம் யாவருக்கும் பொதுவான தாயாகிய சபையின் அரவணைப்புக்குள் கடைசியில் அவர்கள் மீண்டும் வரவேண்டும் என்று எத்தனை ஆத்தும தாகத்தோடு நாம் விரும்புகிறோம்!....... அவர்களது விநோதமான மனவிருப்பங்களுக்கு அவர்களை நாம் நிச்சயமாய் விடக்கூடாது. ஆனால், கத்தோ-க்க போதனையின் ஒவ்வொரு பாகத்தையும் கூர்ந்து ஆராயும்படி எல்லாவித மதநம்பிக்கையின் காரியங்களையும் பிரயோகித்து அவர்களை தூண்டி, மேலும் ஏற்கனவே மனதில் பதிந்திருக்கும் கருத்துகளி-ருந்து அவர்களை விடுவிப்பதற்கு, மிகுந்த சாந்தத்தோடும் தரும காரியங்களோடும் அவர்களை கவர்ந்திழுக்க வேண்டும்."

மேலும், "ஆங்கில மக்களுக்கான தனது அப்போஸ்தல கடிதத்தில் *(1895)* கீழ்கண்ட ஜெபத்திற்கான ஒரு அறிக்கையை கொடுக்கிறார். "ஓ, ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி மரியே, கடவுளின் தாயும் மிகுந்த அன்புடைய எங்களது ராணியும் தாயுமானவளே,

*இங்கிலாந்தின் மீது இரக்கத்துடன் கண்ணோக்கி பாரும்...... ஓ, மனத்துயர் நிரம்பிய தாயே, பிரிந்து போயிருக்கும் நமது சகோதரர்கள் மகா மேன்மையான மேய்ப்பனாகிய உமது குமாரனின் பிரதிநிதியாம், போப்பினிடத்தில் ஒரே மெய்யான கொள்கையில் (அவர்களும்) எங்களுடன் ஒன்று சேரும்படி அவர்களுக்காய் பரிந்து பேசுங்கள்."*

இதே திட்டத்தின் தொடர்ச்சியாக "பவுலாரின் பிதாக்கள்" என்று அறியப்பட்டதின் கட்டுப்பாட்டின் கீழ் புராட்டஸ்டன்டாருக்கான ஊழியங்கள் தொடங்கப்பட்டன. இந்த கூட்டங்கள் மிகப்பெரிய பட்டணங்களில் நடத்தப்படுகின்றன. அவைகளின் சமரசம் மற்றும் விளக்கங்களின் அடிப்படையில் இவை நடத்தப்பட்டன. புராட்டஸ்டன்டாரிடமிருந்து கேள்விகள் எழுத்து மூலமாய் பெறப்பட்டு, அதற்குரிய பதில்கள் பகிரங்கமாய் அளிக்கப்பட்டன. புராட்டஸ்டன்டாருக்கான கைப்பிரதிகள் இலவசமாய் விநியோகிக்கப்பட்டன. இந்த ரோம சபையின் ஸ்தானத்துக்கு புராட்டஸ்டன்டார் நடைமுறையில் இணங்கிப் போயினர். உண்மையில் கொடுப்பதற்கு அதற்குரிய பதில் ஏதும் இல்லை. பதில் கொடுப்பவரும் இல்லை. இந்த நடவடிக்கைகளை ஆலோசித்து புராட்டஸ்டன்டார் மற்றும் கத்தோ-க்கர் இருவருமே இதை ஒரு குழப்பத்தை உண்டுபண்ணும் கூட்டம் என்று பகிரங்கமாய் கண்டனம் தெரிவித்தனர்.

புத்திகூர்மையான மனுஷர் யாவரும், இந்த வஞ்சகமான வலையில், புராட்டஸ்டன்டிஸம் சிக்கவைக்கப்பட்டிருப்பதை மிகவும் எளிதாய் காணலாம்; மேலும், ரோம சபையின் சார்பாக பிரபலமான நிகழ்கால நடப்புகள் எவ்வளவு தெளிவாய் அமைக்கப்பட்டிருக்கின்றன ; ரோம சபை உண்மையில் தனது குர-லும், அதிகாரத்திலும் மாறுபட்டு, ஆனால் இருதயத்தில் மாறுதல் இன்றி 16ம் நூற்றாண்டில் சமய கோட்பாடுகளின் முரண்பாட்டை ஒடுக்க திருச்சபையால் அமைக்கப்பட்ட (Inquisition) விசாரணைக்குழுவினையும், பூமியின் ஆளுநர் என்கிறதான தனது உரிமையை கோருவதினிமித்தம் இருண்ட காலத்தின் அவளது பிற வழிமுறைகளையும், அவள் இஷ்டத்தின்படி மாறுபட்ட கருத்துடையவரை தண்டிப்பதையும் இன்னும் நியாயப்படுத்திக் கொண்டே இருக்கிறாள்.



இந்த காரியத்தின் உண்மை நிலையை குறித்த அறியாமையினால், அநேக உத்தம ஆத்துமாக்கள் இந்த பாபிலோன் முறைமைகளிடையே மிகுந்த பக்தியோடு தேவனை தொழுகின்றனர். இருந்தபோதிலும் அதே சமயத்தில் இவர்கள் வேசி அமைப்பில் யாவரும் ஒன்றாக இருக்கிறார்கள் என்ற உண்மையில் எந்த மாறுதலும் இல்லை. அவர்கள் யாவருக்குள்ளும் குழப்பம் ஆளுகை செய்கிறது. மேலும், பாபிலோன் என்ற பெயரானது தாய், குமாரத்தி, அவளுக்கு உடந்தையாய் இருப்பவர்கள் என முழு குடும்பத்துக்கும் (அதாவது) கிறிஸ்தவ தேசங்கள் என்றும் அழைக்கப்படும் ஜாதிகளுக்கும் மிகவும் சரியாக பொருந்துகிறது. *வெளி 18:7; 17:2-6,18.*

அப்போது மனதில் தோன்றவேண்டியது யாதெனில், கிறிஸ்தவ தேசங்கள் என்று மனிதனாலும் ஆனால் பாபிலோன் என்று தேவனால் அழைக்கப்படும் சமய அரசியல் அமைப்பில் தற்போதைய சமுதாய திட்டத்தின் அடிப்படை மட்டுமன்றி அதிமேன்மையான கட்டுமானமும் அதன் கிரீடமான சிகரமும் நமக்கு இருக்கிறது என்பதாகும். இதனை கிறிஸ்தவ தேசங்கள் என்று, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் பெயரில் உணர்த்தப்படுகிறது. பிறகு இது கிறிஸ்தவ பிரிவுகளை சட்டம் மற்றும் வரிவிதிப்பின் மூலம் ஆதரிக்கும் நாடுகளை மட்டுமன்றி, குறிப்பிடும்படியான விதத்தில் எந்த ஆதரவும் அல்லது அனுகூலங்களையும் காட்டாமல் கிறிஸ்தவ தேசங்களிடம் பொறுமையை காண்பிக்கும் எல்லா தேசங்களையும் கூட உணர்த்துகிறது, எடுத்துக்காட்டாக, இந்த அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

"ராஜாக்களின் தெய்வீக உரிமை " என்ற போதனை தான் பழைய சமுதாய அமைப்பின் அஸ்திவாரமாகும். ஒவ்வொரு சபை பிரிவும் இதை போதிக்கிறது அல்லது ஆதரிக்கிறது. இதுவே ஐரோப்பிய ராஜாங்கங்களுக்கு நீண்டகாலமாய் அதிகாரத்தையும், கௌரவத்தையும் ஸ்திர தன்மையையும் கொடுத்துவருகிறது. மேலும் குருமார்களின் தெய்வீக நியமனம் மற்றும் அதிகாரத்தை

குறித்த போதனையானது, தெய்வீக காரியங்களில் முன்னேறாதபடி தேவபிள்ளைகளை தடை செய்து, தவறு இழைக்க கூடிய சக மனிதனை பூஜித்தல், அவர்களை ஆராதித்தல், அவர்களது போதனைகள், பாரம்பரியங்கள் மற்றும் தேவ வார்த்தையை குறித்த அவர்களது விளக்கங்கள் போன்ற அறியாமை மற்றும் மூடநம்பிக்கையின் சங்கி-யால் கட்டிப்போட்டது. மேலும், இந்த சமுதாய, சமூக, சமய அதிகாரங்களின் ஆளுகையின் கீழ் இந்த ஜனங்களை பல நூறு ஆண்டு காலமாய் பணிய வைத்திருக்கிறது. இந்த முறைமைகள் முழுவதும் தான் இந்த மகா நாளின் யுத்தத்தில் வீழ்ந்து அழிய வேண்டியதாக இருக்கிறது. இவை யாவும் தேவனுடைய அனுமதியினாலேயே இவ்விதமாய் இருக்கின்றன. (அவர்கள் கூறிக் கொள்வது போல அவரது நியமனத்திலும், அங்கீகாரத்திலும் அல்ல) அதில் ஒரு தீமை இருப்பினும் கூட, அளவிடமுடியாதபடி மோசமாகிப்போன அராஜகத்தை தடுப்பதில், அது தற்கா-கமாக நன்கு செயலாற்றியது. ஏனெனில், தங்களுக்கு என்று மேலான ஒன்றினை தாங்களே செய்துகொள்ள ஆயத்தமற்றவர்களாய் மனுமக்கள் இருந்தபடியினாலும், கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியின் காலம் இன்னும் வராததினாலும் தான். ஆகவே, "முடிவின் காலம்" - "புற ஜாதியாரின் காலம்" முடிவுக்கு வரும்வரை மனிதனை ஒரு கட்டுக்குள் தடுத்து நிறுத்தும் பொருட்டு தவறான பல்வேறு மாயைகளை தேவன் அனுமதித்தார்.

## பாபிலோனின் அழிவு

தீர்க்கதரிசன ஏடுகளில் கிறிஸ்தவ தேசங்களாகிய பாபிலோனின் அழிவை தெளிவாக நாம் வாசிக்கலாம்; அத்தோடு மட்டுமன்றி, காலங்களின் அடையாளங்களினாலும் அது தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. அவளது அழிவானது சடுதியாயும், பயங்கரமாயும் மற்றும் முழுமையாயும் இருக்கும் என்று ஆணித்தரமாய் கூறப்பட்டிருக்கிறது. "அப்பொழுது பலமுள்ள தூதனொருவன் பெரிய எந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்து சமுத்திரத்திலே எறிந்து, இப்படியே பாபிலோன் மகாநகரம் வேகமாய் தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற்போகும்." *(வெளி 18:8,21; எரே 51: 63,64, 42, 24-26)* எனினும் தானியேல் மூலம்



காண்பிக்கப்பட்டபடி இது படிப்படியாய் நிறைவேறும் அழிவாயிருந்தது. *(தானி 7:26)* "ஆனாலும், நியாய சங்கம் உட்காரும்; அப்பொழுது முடிவு பரியந்தம் அவனைச் சங்கரிக்கும்படியாகவும், அழிக்கும்படியாகவும் அவனுடைய ஆளுகையை நீக்கிப்போடுவார்கள்." போப் சபையின் ஆளுகையானது (பொதுவாக மதசம்மந்த காரியங்களுக்கு மக்களுடைய பெரும்பாலான அவமரியாதையும்) ஏற்கெனவே காண்பிக்கப்பட்டது போல் (வால்யூம் 3, பக்கம் 40), 1799ல் முடிவு காலத்தின் ஆரம்பத்தில் நின்று போனது; மேலும், அழிவின் தொடர்ச்சி நிதானமாய் இருந்தபோதிலும், தற்காலத்தை போன்று அத்தனை போ-யானதாக இல்லாமல் மேலும் பழைய நிலையை அடைவதற்கான தெளிவான அறிகுறிகள் அவ்வப்போது இருந்து கொண்டிருந்தாலும், போப்பரசின் கடைசி அழிவு நிச்சயமானது. மேலும், அதனுடைய மரணப்போராட்டம் கொடூரமாய் இருக்கும். முதலாவது, அவள் ஆதியில் கொண்டிருந்த பெரும்பாலான கௌரவத்தை எப்படியாகிலும் திரும்பவும் அடைய வேண்டும். இது அவளோடு உறவு கொண்ட கூட்டாளியாகிய அவளது குமாரத்திகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும். ஒருங்கிணைந்து இவர்கள் உயர்த்தப்படுவார்கள். அதேவிதமாய் ஒன்றாகவே கொடூரமாய் அவர்கள் கீழே தூக்கி எறியப்படுவார்கள்.

பாபிலோனின் தண்டனையானது மிகப்பெரியதாய் இருக்கும் என உறுதி செய்யப்பட்டுள்ளது. தீர்க்கதரிசனமாய் எழுதப்பட்டிருப்பதாவது! "மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைவூட்டப்பட்டது." "தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே." " அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவுகூர்ந்தார். அவள் உங்களுக்கு பலனளித்தது போல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்து தீருங்கள்; அவள் உங்களுக்கு கலந்து கொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்து

கொடுங்கள். அவள் தன்னை மகிமைப்படுத்தி, செல்வச் செருக்காய் வாழ்ந்தது எவ்வளவோ அவ்வளவாய் வாதையையும் துக்கத்தையும் அவளுக்கு கொடுங்கள்; நான் ராஜாஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்; நான் கைம்பெண்ணல்ல, நான் துக்கத்தைக் காண்பதில்லை என்று அவள் தன் இருதயத்தில் எண்ணினாள்." (வெளி 16:19; 19:2; 18:5-7) நிச்சயமாக இந்த வார்த்தைகள் பெரும்பாலும் போப்பரசையே குறிப்பதாக இருந்த போதிலும், எவ்வளவேனும் அவளுடன் ஐக்கியமோ அல்லது தயையோ கொண்டிருக்கும் யாவரையும் கூட இது சம்மந்தப்படுத்துகிறது. அப்படிப்பட்ட யாவரும் அவளது வாதைகளில் பங்காளிகளாவார்கள். (வெளி 18:4) பூமியின் ராஜாக்கள் அந்த வேசியை வெறுத்து அவளை தூக்கி எறிந்த பின்னும் கூட (வெளி 17:16) அவள் கூறுவதாவது: "நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன். நான் கைம்பெண் அல்ல." ஜாதிகளை ஆளுவதற்கான அவளது உரிமையை சத்தமிட்டு, பெருமை பாராட்டி, சீக்கிரத்தில் மீண்டும் அவளுடைய முந்தைய வல்லமையானது திரும்ப பெறப்படும் என்றும் உரிமை கொண்டாடுகிறாள்.

சமீப காலத்தில் கத்தோ-க்க பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்ட கீழ்கண்டவை அவளது தற்பெருமைக்கும், மிரட்டல்களுக்கும், ஒரு நல்ல மாதிரியாய் இருக்கிறது: "போப்பு மார்க்கமானது அதனுடைய லௌகீக சர்வதிகாரத்தையும் திரும்பப்பெறும். ஏனெனில், அது சபைக்கு உபயோகமும், சௌகரியமுமாய் இருக்கிறது. அது சபையில் தலைமை நிர்வாகத்திற்கு முழுமையான சுதந்திரத்தையும், முழுமையான அதிகாரத்தையும் கொடுக்கிறது. போப் இனிமேல் ராஜாவின் கீழ் குடிமகனாய் இருக்கமுடியாது. தெய்வீக பணியை நிறைவேற்றுபவர் இப்படியாக இருக்கக்கூடாது. இது நன்மைக்காகவே அவரை முடக்கி அவரது செல்வாக்கை கட்டுப்படுத்துகிறது. இந்த செல்வாக்கை ஐரோப்பா அங்கீகரித்திருக்கிறது. அதோடு இதைவிட அவசியம் மிகுந்த நேரத்தில் அதற்கு தலைவணங்கும்படி கட்டாயப்படுத்தப்படும். சமுதாய கிளர்ச்சிகளும், அராஜகத்தின் களங்கமும் இன்னும்கூட -யோவையோ அல்லது அவரது வாரிசையோ தான் அதிகாரத்தின் உண்மை நிலையோடு



முடிசூட்டுவது 3வது வட்டம் அடையாளமாய் காட்டப்படுவதும், உலகமனைத்திலும் ஒரு காலத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததும் இதுதான்."

ஆம், உபத்திரவத்தின் நாள் நெருங்கி வர வர, தன்னுடைய சொந்த அரசியல் நலன்களை தக்க வைத்துக் கொள்வதற்காக, சமுதாயத்தின் கொந்தளிக்கும் சக்திகளின் கட்டுப்பாட்டின் மூலமாய் தனது அதிகாரத்தையும் செல்வாக்கையும் இன்னும் அதிக அதிகமாய் உபயோகிக்க மதவாத சக்திகள் தொடர்ந்து முயற்சிக்கும்.

ஆனால், வெகு சமீப காலத்தில் வரக்கூடிய நெருக்கடியில் நீதி நெறிமுறை அற்ற சக்திகள் பழமைவாத செல்வாக்குகளை ஏற்கமறுத்து, கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்தெறியும், களங்கம் நிறைந்த அராஜகம் தனது பயங்கரமான கிரியைகளை நடப்பிக்கும். அப்போது பாபிலோன், கிறிஸ்தவ தேசங்கள் சமுதாயம், அரசியல், மதஅமைப்பு யாவும் வீழும்.

பரிசுத்த ஆவியால் உந்தப்பட்ட ஆசிரியர் கூறுகிறார். அதாவது, அவள் தனது ஜீவனுக்காகவும், அதிகாரத்துக்காகவும் மூர்க்கமாய் போராடுவாள். "ஆகையால், அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும், துக்கமும், பஞ்சமும் ஒரே நாளில் (திடீரென்று) வரும்; அவள் அக்கினியினாலே (அழிவுக்கான ஆபத்துக்களை நெருப்பு என்று அடையாளமாக கூறப்பட்டுள்ளது) சுட்டெரிக்கப்படுவாள்; அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர்." வெளி 18:8

"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் பாபிலோனுக்கு விரோதமாகவும், எனக்கு விரோதமாய் (பாபிலோனுக்கு தயைகாட்டும் யாவரும்) எழும்புகிறவர்களின் மத்தியில் குடியிருக்கிறவர்களுக்கு விரோதமாகவும் அழிக்கும் காற்றை எழும்பப் பண்ணி, தூற்றுவாரைப் பாபிலோனுக்கு அனுப்புவேன்; அவர்கள் அதை தூற்றி, வெறுமையாக்கிப் போடுவார்கள்; ஆபத்து நாளிலே அதற்கு விரோதமாய்ச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள்......... அதின் சேனையை எல்லாம் சங்காரம் பண்ணுங்கள்." (எரே 51:1-3)

"பாபிலோனுக்கும் (விசேஷமாய் போப்பரசுக்கும்) கல்தேயர்

தேசத்தின் சகல குடிகளுக்கும் (அல்லது பாபிலோனியா - கிறிஸ்தவ தேசங்கள் - கிறிஸ்தவ உலகம் என்று கூறிக் கொள்ளும் எல்லா ஜாதிகளுக்கும்), அவர்கள் உங்கள் கண்களுக்கு முன்பாகச் சீயோனில் செய்த அவர்களுடைய எல்லா பொல்லாப்புக்காகவும் பழி வாங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரே 51:24) உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை (மெய்யான சீயோனை) தனது அளவற்ற கொடுமையினால் துன்புறுத்தி, பாழ்படுத்தும் பாபிலோனைப்பற்றியும், தெரிந்துகொள்ளப்பட்ட தம்முடையவர்களுக்காக தேவன் தம்முடைய எதிரிகளின் கிரியைகளுக்குத் தக்கபடி துரிதமாக பழி வாங்குவார் என்பதைப் பற்றியும், எவ்விதமாய் பாபிலோனுக்கு பிரதிபலனை செலுத்துவார் என்பது பற்றியும் எழுதப்பட்டிருக்கும் விதத்தைப் பற்றியும் சிந்திக்கும்போது, அவளுக்கு வரவிருக்கும் பயங்கரமான அழிவை நாம் உணர ஆரம்பிக்கிறோம். (லூக் 18:7,8; ஏசா 59:18; எரே 51:6) இராஜ்யபாரத்தினுடைய அதிகாரத்தை வற்புறுத்தி பெற்று அதன் பலத்தால் தனது ஆட்சி காலத்தில் அத்தனை பேய்த்தனமான கொடூரத்துடன் செயல்பட்டு, மனதுக்கு தோன்றிய விதத்திலெல்லாம் பரிசுத்தவான்களை எரிக்கவும், கொலை செய்யவும், நாடுகடத்தி,சிறைப்படுத்தவும், சித்தரவதை செய்யவும், போப்பரசு உத்தரவிட்டது. இந்த நிந்தனைக்கும் பலனுக்கும், தற்போதுள்ள சமரச உடன்படிக்கையினிமித்தம் அவளோடு சேர்ந்து புராட்டஸ்டன்ட் சபையும் உள்ளாகிறது. இதினிமித்தம் நீதியான தண்டனை முழு அளவுக்குக் காத்திருக்கிறது. ஏனெனில், "அவள் தன்னுடைய எல்லா பாவங்களுக்கும் இரட்டிப்பாய்" பெற வேண்டியிருக்கிறது. மேலும் (கிறிஸ்தவ தேசங்களின்) அவளது குற்றங்களிலும், சட்ட விரோத காரியங்களிலும் பங்கெடுத்துக் கொண்ட ஜாதிகள் யாவரும் கசப்பான பாத்திரத்தின் வண்டலை அவளோடு சேர்ந்து குடிக்க வேண்டும்.

"நான் பாபிலோனில் இருக்கிற பேலைத் தண்டிப்பேன்; (போப்பாகிய - பாபிலோனின் தேவன்) அது விழுங்கினதை அதின் வாயி-ருந்து கக்கப்பண்ணுவேன்; (அளவுக்கு மிஞ்சிய தனது "மகா பெரிய வார்த்தைகளில்" இருந்தும் நீண்டகாலமாய் பயன்படுத்திக் கொண்ட தெய்வ நிந்தையான தானே தவறா வரமுடைய குரு - கிறிஸ்துவின் பிரதிநிதி "பூமியின் மீது மற்றுமொரு கடவுள்" போன்ற பட்டங்களி-ருந்தும், அவள் உதறி தள்ளப்படுவாள்.) ஜாதிகள் இனி அதினிடத்திற்கு ஓடி வரமாட்டார்கள். பாபிலோனின் மதிலும் (இதனை முன்னொரு காலத்தில் பாதுகாத்தும், தற்போது ஓரளவிற்கே செயல்படுகிறதுமான சமுதாய அதிகாரங்கள்) விழும் .......... பாபிலோனின் விஸ்தீரணமான மதில்கள் முற்றிலும் தரையாக்கப்பட்டு, அதின் உயரமான வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்படும் (அழிக்கப்படுவார்கள்); அப்படியே ஜனங்கள் (பாபிலோனுடைய சுவர்களை தாங்கி நிறுத்த மற்றும் காப்பாற்றுவதற்காக) பிரயாசப்பட்டது விருதாவும் ஜாதிகள் வருத்தப்பட்டுச் சம்பாதித்தது அக்கினிக்கு இரையுமாகுமென்று, சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (எரே 51:44,58) இது ஜனங்களுடைய குருட்டாட்டத்தையும், அவளுடைய மேலான சுய விருப்பங்களை சம்மதத்துடன் ஆதரிப்பதற்காக அவர்கள் பிரயாசப்படுவார்கள் என்பதையும், அவர்கள் மீது பாபிலோனுக்கு இருக்கும் பிடிப்பையும் காட்டுகிறது; ஆனால், தன்னுடைய ஜீவனுக்கான நம்பிக்கையற்ற போராட்டத்திலும், தன்னுடைய செல்வாக்கையும் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்வதிலும் தொடர்ந்து தாக்குபிடிக்க இயலாமல், சமுத்திரத்தில் ஒரு பெரிய இயந்திரக்கல்லை எறிந்தது போல் மீண்டும் எழும்பாத வண்ணம், பாபிலோன் மூழ்கிப் போகும்; "அவளுக்கு நியாயந்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர்." அப்பொழுதுதான் ஜனங்கள் தங்களது அற்புதமான விடுதலையையும் அவளது வீழ்ச்சியானது தேவனுடைய கரத்தினால் வந்தது என்பதையும் உணர்வார்கள். (வெளி 19:1,2)

ஏசாயா மற்றும் பிற தீர்க்கதரிசிகள் முன்கூறிய மற்றும் தீர்க்கதரிசனமாய் கண்ட பாபிலோனாகிய கிறிஸ்தவ தேசங்களின் அழிவு இப்படியாய் இருக்கிறது. மேலும், அவளது எல்லைக்குள்ளாக அவரது சொந்த ஜனங்கள் அநேகர் இருக்கிறார்கள் என்ற உண்மையினால் கர்த்தர் தமது தீர்க்கதரிசியின் மூலம் (ஏசா 13:1,2) பரிசுத்தமாக்கப்பட்ட தம்முடையவர்களுக்கு கட்டளையிட்டு சொல்லுகிறதாவது: "உயர்ந்த பர்வதங்கள் மேல் (தேவனுடைய ராஜ்யத்தின் மெய்யான கருவினை அமைப்பவர்கள் மத்தியில்)

கொடியேற்றுங்கள்; (நீண்டகாலமாய் பாரம்பரிய தவறுகளால் மேகம் போன்று சூழ்ந்து இருக்கிறவைகள் நீக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட சத்திய சுவிசேஷம்) உரத்த சத்தமிட்டு ஜனங்களை வரவழையுங்கள். (இன்னும்கூட பாபிலோனில் இருக்கும் கர்த்தருடைய சிதறடிக்கப்பட்ட ஆடுகளுக்காக இந்த சத்தியத்தை உத்தமமாய், விஸ்தாரமாய் அறிவியுங்கள்); அவர்கள் (கீழ்ப்படிதலும், விருப்பமும் உடைய மெய்யான ஆடுகள்) பிரபுக்களின் வாசல்களுக்குள் பிரவேசிப்பதற்கு (பரலோக ராஜ்ஜியத்தின் உரிமைக்காரருக்கும், மெய்யான அர்ப்பணம் செய்தவருக்கு ஆசீர்வாதங்களை அவர்கள் உணரும்படி) சைகை காட்டுங்கள் (சத்தியம் வெளியரங்கம் ஆவதையும், அவர்கள் காணட்டும். அதோடு கூட அதனுடைய பிரகடனத்தையும் கேட்கட்டும்.)"

ஆகவே, "காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்கிற எச்சரிப்பின் குரல் வருகிறது. நாம் கோதுமை மற்றும் பதர்கள் நிறைந்த மகாபெரிய பெயரளவிலான சுவிசேஷ சபையின் கடைசி அல்லது லவோதிக்கேய சபையின் காலகட்டத்தில் இருக்கிறோம். (வெளி 3:14-22) அவள் வெதுவெதுப்பாய் இருப்பதற்காகவும், பெருமை, ஆவிக்குரிய தரித்திரம், குருடும், நிர்வாணியுமாய் இருப்பதற்காகவும் கடிந்து கொள்ளப்பட்டு, மிகவும் காலம் கடந்து போவதற்கு முன்பு அவளது துன்மார்க்கமான பாதைகளை சடுதியாய் கைவிடும்படி அறிவுறுத்தப்படுகிறாள். ஆனால் இந்த எச்சரிப்புக்கும் அழைப்புக்கும் வெகுசிலரே செவிகொடுப்பார்கள் என்பது கர்த்தருக்குத் தெரியும்; ஆகவேதான் அழைக்கப்பட்ட திரளான ஜனங்களுக்கு அல்ல, சத்தியத்திற்கென்று தங்களது செவிகளை சாய்த்து, பொதுவான விருப்பத்தையும் பாபிலோனின் ஆவியையும் ஜெயங்கொள்ளும் வெகுசிலருக்கே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வெகுமானம் கொடுக்கப்படும். "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடுகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் (கர்த்தருடைய வார்த்தையை கவனிக்கவும், செவி



கொடுக்கவும் விருப்பம் உள்ளவன்) கேட்கக்கடவன். ஆனால், செவியற்றவன் மீதும் அதை கேட்க விருப்பமற்றவன் மீதும் தேவன் தனது கோபாக்கினையை ஊற்றுவார்.

ஆகவே, வெகுசில தனிப்பட்ட விதிவிலக்குகளைத் தவிர அனைத்து கிறிஸ்தவ ராஜ்யங்களின் சுபாவமானது பெருமை, சுயநீதி, சுயதிருப்தி ஆகியவைகளை உடையது என்பதை மிகச்சாதாரணமாய் கவனிப்பவருக்கும் கூட வெளிப்படையாகத் தெரியும். அவள் இன்னும் தன் மனதில் சொல்-க்கொள்வது: "நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்; நான் கைம்பெண்ணல்ல, நான் துக்கத்தைக் காண்பதில்லை." இன்னும் அவள் தன்னை மகிமைப் படுத்திக் கொண்டு சுகபோகமாய் வாழ்கிறாள்."மேலும் அவள் சொல்கிறாள்: "நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லை." அவள் தான் "நிர்பாக்கியமும், தரித்திரமும், குருடும், நிர்வாணியுமாய் இருப்பதை உணரவில்லை." ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும் (தெய்வீக சுபாவம் என்கிற பரலோக ஐசுவரியத்தை, அந்த மெய்யான செல்வத்தை) வெண்வஸ்திரத்தையும் (கிறிஸ்துவின் நீதியின் ஆடையை, தங்களுடைய சுயநீதியினால் தேவனுக்கு முன்பாக தோன்றுவதற்கு அநேகர் புறக்கணிக்கும் ஆடையை) பார்வையடையும்படி கண்களுக்கு க-க்கம் போடவும் (வேதத்தில் விவரித்து கூறப்பட்டபடி தெய்வீக சித்தத்துக்கு பூரணமாய் ஒப்புக்கொடுத்து அர்ப்பணித்தல்) கர்த்தர் சொல்லுகிற ஆலோசனையை அவள் கவனிக்கவில்லை. வெளி 3:18

இந்த அமைப்புக்கு ஒரு சீர்திருத்தம் ஏற்படுவது கூடாத காரியமாகும் அளவிற்கு, கிறிஸ்தவ ராஜ்யங்களின் சமய அதிகாரங்களை உலகத்தின் ஆவியானது அத்தனை முழுமையாய் தன் வசப்படுத்திக் கொண்டுள்ளது; மிகச்சரியான முறையில் ஏற்றவேளையில் இவர்களிடமிருந்து பின்வாங்கினால் மட்டுமே தங்களுடைய மரணத்தி-ருந்து தனிநபர்கள் தப்பிக்கமுடியும். நியாய தீர்ப்பின் வேளை வந்தது. இப்போதும்கூட அவளது சுவரின் மேல் தெய்வீக எச்சரிப்பின் கரமானது இரகசியமான வார்த்தைகளை எழுதுகிறது. "மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்." "**தேவன்**

**உனது ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார். நீ தராசிலே நிறுத்தப்பட்டு குறையக் காணப்பட்டாய்.**" மேலும், தீர்க்கதரிசி கூறுவதாவது: (ஏசா.47)

"பாபிலோன் குமாரத்தியாகிய கன்னிகையே, (கற்புள்ளவள் என்னும் அவளது உரிமை கொண்டாடுதல் ஏளனமாய் கூறப்பட்டிருக்கிறது.) நீ இறங்கி மண்ணிலே உட்காரு; கல்தேயரின் குமாரத்தியே, தரையிலே உட்காரு; உனக்குச் சிங்காசனமில்லை; நீ செருக்குக்காரியும், சுகசெல்வியும் என்று இனி அழைக்கப்படுவதில்லை.... உன் நிர்வாணம் வெளிப்படும்; உன் இலச்சை காணப்படும்; நான் ஒருவனையும் பாராமல் நீதியைச் சரிக்கட்டுவேன்.... கல்தேயரின் குமாரத்தியே, நீ அந்தகாரத்துக்குள் பிரவேசித்து மவுனமாய் உட்காரு; நீ ராஜ்யங்களின் நாயகியென்று அழைக்கப்படுவதில்லை.... என்றென்றைக்கும் நாயகியாயிருப்பேனென்று சொல்-, இந்த காரியங்களை இதுவரைக்கும் உன் மனதிலே வையாமலும் அதின் முடிவை நினையாமலும் போனாய்.

"இப்பொழுதும் சுகசெல்வியே, விசாரமில்லாமல் வாழ்கிறவளே: நான் தான், என்னைத் தவிர ஒருவருமில்லை; நான் விதவையாவதில்லை, நான் சந்தான சேதத்தை அறிவதில்லையென்று உன் இருதயத்திலே சொல்லுகிறவளே, நான் சொல்லுகிறதைக் கேள். சந்தான சேதமும், விதவையிருப்பும் ஆகிய இவ்விரண்டும் உனக்கு சடிதியாக ஒரே நாளிலே வரும்; (வெளி 18:8 ஒப்பிடுக) உன் திரளான சூனியங்களினிமித்தமும், உன் வெகுவான ஸ்தம்பன வித்தைகளினிமித்தமும் அவைகள் பூரணமாய் உன்மேல் வரும். உன் துன்மார்க்கத்திலே நீ திட நம்பிக்கையாயிருந்து: என்னைப் பார்க்கிறவர் ஒருவரும் இல்லையென்றாய். உன் (உலக) ஞானமும் உன் அறிவுமே உன்னை கெடுத்தது; நான்தான், என்னைத் தவிர ஒருவருமில்லையென்று உன் இருதயத்தில் எண்ணினாய். ஆகையால் தீங்கு உன்மேல் வரும், அது எங்கேயிருந்து உதித்ததென்று நீ அறியாய்; விக்கினம் உன் மேல் வரும், நீ அதை நிவிர்த்தியாக்கமாட்டாய்; நீ அறியாதபடிக்குச் (முன்கூட்டியே) சடிதியாய் உண்டாகும் பாழ்க்கடிப்பு உன்மேல் வரும்." 9ம் வசனம் மற்றும் வெளி 18:7ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்.



பாபிலோனுக்கு எதிரான பரிசுத்த தீர்மானம் இப்படியாக இருக்கும்பட்சத்தில், இன்னும் அவளது எல்லைக்குள்ளாகவே இருக்கும் தன்னுடைய ஜனங்களுக்காக கர்த்தர் கொடுக்கும் போதகங்களையும், அவரது எச்சரிப்பின் குரலையும் கவனிக்கும் யாவருக்கும் இது நலமானதாய் இருக்கும்; இவர்களுக்கு "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்.... நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவி-ருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்; இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது; அவர் அதற்குப் பதில் செலுத்துவார்.... பாபிலோன் சடிதியில் விழுந்து தகர்ந்தது.... பாபிலோனை குணமாக்கும்படி பார்த்தோம், அது குணமாகவில்லை; அதை விட்டுவிடுங்கள்...... அதின் ஆக்கினை வானமட்டும் ஏறி ஆகாயமண்டலங்கள் பரியந்தம் எட்டினது.... என் ஜனங்களே, நீங்கள் அதின் நடுவி-ருந்து புறப்படுங்கள்; கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்துக்குத் தப்பும்படி அவனவன் தன்தன் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்ளக்கடவன்." எரே 51: 1,6,8,9,45; வெளி 17:3-6; 18: 1-5 ஒப்பிடுக.

பாபிலோனை விட்டு வெளியே வா என்னும் இந்த கட்டளைக்கு கீழ்ப்படிந்து வரும் யாவருக்கும், அடைக்கலமான இடம் ஒன்று உண்டு; அது புதிய பிரிவிலோ அல்லது அடிமைத்தனக்கட்டிலோ அல்ல. ஆனால் அது "உன்னதமானவருடைய மறைவின் நிழ-ல்"- பூரண அர்ப்பணிப்பின் நிலைமையில் இருக்கிறது. இது ஆசரிப்பு கூடாரத்தின், பரிசுத்த ஆலயத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்துக்கு எடுத்துக்காட்டாய் இருக்கும். (சங்:91) "உன்னதமானவரின் மறைவில் இருக்கிறவன் சர்வவல்லவரின் நிழ-ல் தங்குவான்." அப்படிப்பட்டவர்கள் இத்தீங்கு நாட்களின் ஆபத்துக்களின் மத்தியில் மெய்யாகவே, "கர்த்தர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர்" என்று சொல்வார்கள்.

பாபிலோனை விட்டு வெளியேறு என்பது மாம்சபிரகாரமாக கிறிஸ்தவ ராஜ்யத்தை விட்டு குடிபெயருதல் என்று பொருள் ஆகாது; ஏனெனில் கிறிஸ்தவ ராஜ்யங்கள் மட்டுமின்றி, பூமியனைத்தும்,

கர்த்தருடைய சித்தத்தை அறிந்த அல்லது குறைந்தபட்சம் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் ஏராளமாய் கிடைக்கப்பெற்ற, விழிப்புணர்வுள்ள கிறிஸ்தவ ஜாதிகளும் கர்த்தருடைய கோபத்தின் அக்கினியால் (கொடிய ஆபத்தினால்) விழுங்கப்பட உள்ளது. அவளது சமுதாய, மத மற்றும் சமூக அமைப்புகளில், அதன் கோட்பாடுகள், தெய்வீக வழி நடத்துதல் மற்றும் ஞானமான கொள்கைகள் ஆகிய இரண்டிலுமே பங்கோ பாகமோ வைத்துக்கொள்ளாமல், கிறிஸ்தவ ராஜ்யங்களின் நுகத்தின் கட்டுகளி-ருந்து பிரிக்கப்படவேண்டும் என்பதே இந்தக் கட்டளையின் நோக்கமாகும்.

கொள்கையை பொறுத்தவரை, அறுவடைகால சத்தியத்தின் அதிக வெளிச்சம் நமது மனதை பிரகாசிப்பித்து, குற்றங்குறைகளை தெளிவாய் காட்டுகின்ற போதே, நாம் நமது செல்வாக்கு மற்றும் ஆதரவை வாபஸ் பெற்றுக்கொள்வதன் மூலமாய் அவற்றை விட்டுவிலக வேண்டும். தேவனுடைய வார்த்தையை வெறுமையாக்கி, தவறாய் எடுத்துரைக்கும் போதனைகளை உடைய பல்வேறு மத அமைப்புகளிடம் இருந்து வாபஸ் பெற்றுக்கொள்வதை இது உணர்த்துகிறது; அதோடு நடைமுறையில் இருக்கும் எல்லா சமூக அதிகாரங்களை சார்ந்திராதவர் என்ற நிலையில் அது நம்மை நிறுத்துகிறது; ஆயினும், அந்நியரை எதிர்க்கிறவராக அல்ல, சாந்தமும் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து ராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துகிற அந்நியராக நிறுத்துகிறது. இந்த பூலோகத்தில் தங்கள் குடியுரிமையைப் பெறாமல் பரலோகத்தில் குடியுரிமை பெற்ற அந்நியர்களாக, நீதி, நியாயம், இரக்கம் மற்றும் சமாதானத்தில் எப்போதும் வாஞ்சையுடைய அந்நியர்களாக நிறுத்துகிறது.

சில விஷயத்தில் கோட்பாடுகளும் மற்றவற்றில் கொள்கைகளும் மனுஷரிடையேயான பல்வேறு சமுதாய ஏற்பாடுகளில் இருந்து நம்மை வேறுபடுத்தும். கோட்பாடுகளை பொறுத்தமட்டில் பல்வேறு ரகசிய சங்கங்களின் கடமைகளுக்கும் பிரமாணங்களுக்கும் இடையே சிக்கியிருக்கும் எவரையும் அது விடுவிக்கும். முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளை கடிந்து கொள்ளுங்கள். எபே. *5:6-17*



இந்த “தீங்கு நாளின்” மாபெரும் கஷ்டங்களுக்கு நாம் நெருங்கி வர வர, “அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்தின்படி” இந்த சூழ்நிலையை கண்ணோக்குகிறவர்களுக்கு எந்த சந்தேகமும் இன்றி ஒரு காரியம் தெளிவாகத் தெரியும்; அது என்னவெனில் கோட்பாடுகள் சம்பந்தப்படாத விஷயங்களானாலும் கூட பல்வேறு சமூக மற்றும் பொருளாதார கட்டுகளில் இருந்து விடுவித்துக் கொள்வது என்பது ஞானமாய் நடந்துகொள்வதன் ஒரு பாகமாக இருக்கும்; ஏனெனில், இவைகள் உலகளாவிய புரட்சி மற்றும் அராஜகத்தின் அழிவி-ருந்து தவிர்க்கமுடியாத வண்ணம் இணங்கி இருப்பவைகள். அந்த சமயத்தில் (மனதில் கொள்ளவும், அநேகமாய் இந்த நாட்கள் அடுத்த சில வருடங்களுக்குள்ளாகவே இருக்கும்) பொருளாதார நிறுவனங்கள், இன்சூரன்ஸ் கம்பெனிகள் மற்றும் லாபகரமான பொதுநல ஸ்தாபனங்களும் கூட, வீழ்ந்துபோகும்; மேலும் அவைகளில் இருக்கும் பொக்கிஷம் முற்றிலும் மதிப்பற்றதாய் விளங்கும். இந்த பர்வதங்களுக்கு (ராஜ்யங்களுக்கு) எதிராக பலரும் அறிந்த அதிருப்தியின் மாபெரும் அலைகள் கொந்தளித்து பொங்கும்போது இந்த “தீங்கு நாளின்” கோபாக்கினையி-ருந்து தப்பிக்கும்படி விரும்பத்தக்க பாதுகாப்பை இந்த குகைகளும் குன்றுகளும் கொடுக்காது. (வெளி *6:15-17* ; சங் *46:3*) அப்பொழுது “தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்துவிடுவார்கள்; அவர்களுடைய பொன் வேண்டா வெறுப்பாயிருக்கும் (நஷ்டமாக); கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்கமாட்டாது; (தங்களுடைய செல்வத்தைக் கொண்டு) அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாவை திருப்தியாக்குவதும் இல்லை, தங்கள் வயிறுகளை நிரம்புவதும் இல்லை; அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருந்தது” என்று எண்ணும்படியான ஒருகாலம் மனுஷருக்கு வரும். (எசே *7:19*; வசனம்

*12-18,21, 25-27 ஐயும் ஒப்பிடவும்) இவ்வண்ணமாய் கர்த்தர் மனுஷனுடைய ஜீவனை பசும்பொன்னிலும், ஓப்பீரின் தங்கத்திலும் அபூர்வமாக்குவார். ஏசா 13:12*

ஆனால், உன்னதமானவரை தங்கள் அடைக்கலமாகக் கொண்டவர்கள் இப்படிப்பட்ட காலங்கள் வரப்போவதை குறித்து பயப்படத் தேவையில்லை. அவர் தமது சிறகுகளாலே அவர்களை மூடுவார். அவரது செட்டைகளின் கீழே அவர்கள் அடைக்கலம் புகுவார்கள்; ஆம், அவர் தமது இரட்சிப்பை அவர்களுக்கு காண்பிப்பார். கடுமையான குழப்பங்கள் எதிர்கொண்டு வரும்போது "தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்துக் காலத்தில் மிக அனுகூலமான துணையுமானவர்" என்ற ஆசீர்வாதமான வாக்குத்தத்தால் தங்கள் இருதயங்களை இவர்கள் ஆறுதல் படுத்திக்கொள்வார்கள். "ஆகையால் பூமி நிலைமாறினாலும் (தற்போதைய சமுதாய அமைப்புகள் முற்றிலுமாய் தூக்கி எறியப்பட்டாலும் கூட), மலைகள் (இராஜ்யங்கள்) நடுசமுத்திரத்தில் சாய்ந்து போனாலும் (அராஜகத்தால் அடியோடு அழிந்தாலும்), அதின் ஜலங்கள் கொந்தளித்து பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்" என்பார்கள். தம்மை அடைக்கலமாய் கொண்ட, தமது உண்மையுள்ள பரிசுத்தவான்களின் மத்தியில் தேவன் இருப்பார். ஆகவே, அவர்கள் அசைக்கப்படுவதில்லை. ஆயிரவருட விடியற்காலையில் தேவன் சீயோனுக்கு சகாயம் செய்வார். "உலகத்தின் மீது சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் தப்பிக்கொள்ள அவர்கள் பாத்திரவான்களாக எண்ணப்படுவார்கள்." *சங் 46; லூக் 21:36*

### கூடிச்சேரும் சந்தேகப் புயல்

"எங்கள் தகப்பனே, எங்கள் இருதயங்கள் கற்றுக் கொள்ளாதபோதும்
உமது நாமத்தை தவறாக்கிய விசுவாசங்கள் இருந்தாலும்,
வெறுமையான எங்கள் ப-பீடத்தை எரியப்பண்ணும்
விசுவாசத்தின் அழியாத தழ-னாலே.

"எங்கள் ஆண்டவரின் சித்தத்தை அறிந்துகொள்ள எங்களுக்கு உதவிசெய்யும்
இருளாக்கும் கறைகள் எல்லாவற்றின் ஊடாகவும்
அவரது உருவத்தை இன்னும் மறைக்கிற மேகங்களில்,
அவரை இன்னும் ஒருமுறை பார்க்க.



"சகோதர மனுஷனும், வருந்துகிற சிநேகிதனும்,
மானிட துன்பங்களுக்காக அழுகிறார்கள்,
கெஞ்சும் இவர் வார்த்தைகளில் மன்னிப்பை கலந்து
விரட்டும் பகைவனின் கூக்குரலோடு.

"கூடிச்சேரும் சந்தேகப்புய-ன் நடுவே
எங்கள் இருதயங்கள் மென்மேலும் தளர்ந்து, சில்-டுகிறது,
அந்த பெலனின்றி நாங்கள் வாழ இயலாது
உம் அன்பு இதை தரமறுக்காது.

"எங்கள் ஜெபங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்,
எங்கள் பாவங்களை மன்னியுங்கள்,
எங்கள் யௌவன வைராக்கியத்தை புதுப்பியுங்கள்;
எங்களை செதுக்கும் இன்னும் பரிசுத்தமான வாழ்வை வாழ,
இன்னும் உத்தமமான பணியைச் செய்ய."

மேற்கண்ட அசல் வாசகங்கள் டாக்டர் ஆ-வர் வென்டேல் ஹோம்ஸ் என்பவரால், கிறிஸ்தவ வா-பர் சங்கத்தின் முன் போஸ்டன் நகரில், ஜீன் 1,1893ல் வாசிக்கப்பட்டது. பாபிலோனை ஏதோ ஒரு இருள் கவ்வியிருப்பதை இவர் உணர்ந்துள்ளதாக இந்த வாசகங்கள் குறிப்பிட்டு காட்டுகின்றன.

அ அ

### அத்தியாயம் 3

# நீதியைச் சரிக்கட்டும் நாளின் அவசியமும், நியாயமும்

*இந்த சந்ததியின் மீதான, நிழலும் நிஜமும்-முன் கூறப்பட்ட காரணங்களினால் நியாயமானதொரு விளைவாகிய மகா உபத்திரவம் - கிறிஸ்தவ தேசங்களின் பொறுப்புகளும், அவர்கள் சார்பான அவளது மனப்போக்கும் - சமூக அதிகாரிகள், மதத் தலைவர்கள், வளர்ச்சியடைந்த நாடுகளின் மக்கள் கூட்டத்தின் பல்வேறு ஸ்தாபனங்கள் - மகா உபத்திரவத்துடனும் கிறிஸ்தவ ராஜ்யத்துடனும் புறஜாதி தேசங்களுக்கு இருக்கும் சம்பந்தம் - தேவனுடைய நியாயத்தீர்ப்பு - "பழிவாங்குதல் எனக்குரியது; நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

"மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன், இவை எல்லாம் இந்த சந்ததியின் மீது வரும்." *மத் 23:34-36; லூக் 11:50,51*

**மி**கச்சரியானதொரு நீதியின் தத்துவத்தில் நின்று, அடிப்படை கொள்கைகளை நிதானிக்க பழக்கப்படாதவர்களுக்கு, முந்தைய சந்ததியினரின் திரளான குற்றங்களுக்கான தண்டனையை பின்தொடர்ந்து வரும் மனித சந்ததியானது அனுபவிக்க வேண்டியிருப்பது விசித்திரமாக காணப்படலாம். ஆனால், தவறே செய்யமுடியாத தேவனால் அது விதிக்கப்பட்ட தீர்ப்பாக இருக்கிறபடியினால் அவரது நீதியை தெளிவாய் விளக்கிச் சொல்ல போதுமான அளவிற்கு முதிர்ச்சியை நாம் எதிர்பார்க்கவேண்டும். மேற்கண்ட வார்த்தைகளில் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நிழலான யூதயுகத்தின் முடிவில் அவர் குறிப்பிடும் மாம்ச

இஸ்ரயே-ன் சந்ததியாரோடே அது நிறைவேறும் என்பதாகும். நீதிமானாகிய ஆபே-ன் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் ப-பீடத்துக்கும் நடுவே கொலை செய்யப்பட்ட சகரியாவின் இரத்தம் வரைக்கும் பூமியின் மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப் பழியெல்லாம் அவர்கள் மேல் வரவேண்டும். மத் 23:35

அது மிகவும் பயங்கரமானதொரு தீர்க்கதரிசனம், ஆனால் அது அஜாக்கிரதையான, நம்பிக்கைகொள்ளாதவர்களின் காதுகளில் விழுந்தது. மேலும், அதன் எழுத்தின் உண்மைக்கேற்றபடி சமூக போராட்டமும், பகைவரின் படையெடுப்பும் இந்த பயங்கரமான ஈடுகட்டுதலை நிறைவேற்றியபோது - 37 வருடங்களுக்கு பிறகு அது பூர்த்தியானது. அக்காலந்தொட்டு நாம் வாசிக்கின்ற வண்ணமாய் யூதாவின் குடிகள் பொறாமையின் காரணமாய் சண்டையிடும் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டன. இந்த பொறாமையின் பரிமாற்றம், அதனுடைய உச்சக்கட்டத்தை அடைந்து நண்பர்கள் அந்நியராயினர், குடும்பங்கள் பிளவுபட்டன, ஒவ்வொரு மனிதனும் தன் சகோதரனை சந்தேகித்தான். திருட்டு, மோசங்கள், படுகொலைகள் ஏராளமாகிவிட்டன. எந்த மனிதனுடைய வாழ்வுக்கும் பாதுகாப்பில்லை. ஆலயமும் கூட பாதுகாப்பான இடமாக இல்லை. பொதுவழிபாட்டை நடத்திக் கொண்டிருந்தபோதே பிரதான ஆசாரியர் படுகொலை செய்யப்பட்டார். பிறகு செசரியாவில் இருந்த அவர்களது சகோதரர்களின் படுகொலைகள் மூலம் நம்பிக்கையற்ற நிலைக்கு விரட்டப்பட்டனர். பார்க்கிற இடங்களிலெல்லாம் கொலைக்கு நியமிக்கப்பட்டனர். தேசம் முழுவதும் இந்த கலகத்தில் இணைந்தது. ஆகவே, யூதேயா வெளியரங்கமாய் ரோமருக்கு விரோதமான கிளர்ச்சிக்குள் கொண்டுவரப்பட்டது. மேலும், வளர்ச்சியடைந்த உலகம் முழுவதுக்கும் எதிர்ப்பானது.

வெஸ்பாசியனும் தீத்துவும் அவர்களை தண்டிப்பதற்காய் அனுப்பப்பட்டனர். அவர்களுடைய தோல்வி மிகவும் பயங்கரமாய் இருந்தது. கடைசியில் தீத்து எருசலேமை முற்றுகையிடும் வரை, ஒன்றன்பின் ஒன்றாக அதன் பட்டணங்கள் அழிக்கப்பட்டன. கி.பி. 70ன் வசந்த காலத்தில் பஸ்கா பண்டிகையின் கொண்டாட்டத்துக்காக திரளான ஜனங்கள் கூடிவந்து, பட்டணம் நிறைந்திருந்தபோது, அதனுடைய மதில்களைச் சுற்றி வெளியே அவன் தனது பெரும்



சேனையை கொண்டுவந்தான். சிறையாக்கப்பட்ட, அதனுள் இருந்த நகரவாசிகள் யாவரும் கூடியவிரைவில் பஞ்சத்துக்கும், படையெடுத்து வந்தவரின் வாளுக்கும், சமூக குழப்பங்களுக்கும் இரையாகினர். பட்டணத்தை விட்டு நழுவிச் செல்ல யாராவது முயற்சி செய்தால் அவர்கள் ரோமானியரால் சிலுவையில் அறையப்பட்டனர். தங்கள் சொந்த பிள்ளைகளை பெற்றோரே கொன்று சாப்பிடும் அளவிற்கு பஞ்சம் மிக கோரமாய் இருந்தது. அங்கு அழிந்தவரின் எண்ணிக்கை ஒரு மில்-யனுக்கும் மேலாகும் என்று ஜோசபஸ் கூறுகிறார். அதோடு பட்டணமும், ஆலயமும் சாம்பலாக்கப்பட்டன.

முரட்டாட்டமான மாம்சீக இஸ்ரயே-ன் மீது, தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம் என்ற விசேஷ சலுகையுடன் அவர்களது யுகத்தின் முடிவில் மேற்கண்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலுடைய உண்மை காரியங்கள் இப்படியாக இருந்தன. மேலும், தற்போது இந்த சுவிஷேச யுகத்தின் முடிவில், தீர்க்கதரிசனத்தின் விசாலமான அடையாளங்களின்படி, அதற்கு இணையான உபத்திரவம் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயே-ன் மீது, அதாவது கிறிஸ்துவ ராஜ்யத்தின் மீது "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும்." மேலும் வேறு அர்த்தத்தில் யூதேயா மற்றும் எருசலேமின் மீது வந்ததற்கும் அதிகமான பயங்கரத்தோடு இருக்கும். விவரிக்கப்பட்டதற்கும் மேலாக கடுமையான உபத்திரவம் ஒன்றை நாம் கற்பனை செய்வதென்பது அரிது. அதைத்தவிர, தற்கால நவீன ராணுவ போர்க்கருவிகள் குறிப்பிடுவதைப் பார்த்தால் அது இன்னும் பேரழிவு கொண்டதாகவும், இன்னும் விஸ்தாரமானதாகவும் இருக்கும் எனத்தோன்றுகிறது. மேலும் இது ஒரே ஒரு தேசத்திற்கு அல்லது பகுதிக்கு மட்டும் உட்பட்டதாக இல்லாமல், முழு உலகத்தின் மீதும், அதிலும் விசேஷமாய் வளர்ச்சியடைந்த உலகம், கிறிஸ்தவ ராஜ்யமாகிய பாபிலோனின் மீதும் அதன் முழுவீச்சு இருக்கும்.

ஆகவே, இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்தவ ராஜ்யத்தின் மீது ஊற்றப்படப் போகிற மாபெரும் கோபாக்கினையை முன்கூட்டியே தெரிவிப்பது தான் இந்த மாம்சீக இஸ்ரயே-ன் மீது வரும் ஆக்கினை

என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். இந்த சந்ததியாருக்கு எதிராக சர்வ வல்லவருடைய இந்த செயலைக் காண்பதில் தங்களது அவசரத்தை காட்டுபவர்களுக்கு, இது அநீதியாய் தெரிகிறது. மிகவும் மெதுவாகவே இருப்பினும், தம்முடைய முடிவில் எந்த மாறுதலும் ஏற்படாமல், நிச்சயமாய் நடக்கும் பூரண சட்டமாகிய தெய்வதண்டனையை ஒருங்கிணைத்து பார்ப்பதற்கு அவர்கள் தவறவிட்டிருக்கிறார்கள் என்று மட்டுமே நாம் கூறலாம். ஆம், நீதியின் அவசியமும், தத்துவமும் பக்தியுள்ள சிந்தனை மிகுந்தவர்களுக்கு மிகவும் வெளிப்படையாய் இருக்கிறது. இவர்கள் அநீதியின் தேவன் என்று குற்றம் சாட்டுவதற்கு துரிதப்படுவதைவிட, அவரது வார்த்தையில் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களில் தங்களுடைய மனதை செலுத்துகின்றனர்.

## முன் கூறப்பட்ட காரணங்களினால் நியாயமானதொரு விளைவாகிய மகா உபத்திரவம்

சில விஷயத்தில் உலகத்தின் லாபத்திற்காக பெரிதும் இருக்கவேண்டிய அனுபவத்தின் உச்சத்தின் காலகட்டத்தில் இன்று நாம் நிற்கிறோம். அதிலும் விசேஷமாய், தெய்வீக சத்தியத்தின் வெளிச்சத்தினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் சகாயம் பெற்றிருக்கிற உலகத்தின் பகுதியில், கிறிஸ்தவ ராஜ்யம், பாபிலோன் ஆகிய இவைகளின் இந்த உக்கிராண பொறுப்பு மிகப்பெரியது. மனிதனுக்கு தெரிந்தவைகளுக்கு மட்டுமின்றி, (தங்களுடைய சொந்த மற்றும் பிறருடைய) அனுபவங்களினால் வடிவமைக்கப்பட்ட பாடங்களின் மூலம் கற்றுகொடுப்பதற்காக வைத்திருக்கும், குறிப்புகளின் மீது தங்களது இருதயங்களை வைப்பதால் தெரிந்துக்கொள்ள கூடியவைகளுக்கும் கூட கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக மனிதனை தேவன் வைத்திருக்கிறார். மேலும், ஒருவேளை மனிதர்கள் இந்த அனுபவத்தின் பாடங்கள் மீது கவனம் செலுத்தாமல் போனாலோ அல்லது வேண்டுமென்றே அசட்டை செய்தலோ அல்லது அதனுடைய அறிவுரைகளை ஒதுக்கித்தள்ளினாலோ, அதனுடைய பின்விளைவுகளை அவர்கள் அனுபவிக்கவேண்டும்.

முன்பு கிறிஸ்துவ ராஜ்யம் என்று பெயரளவில் அழைக்கப்பட்டவை, கடந்த காலத்தின் வெளிப்படையான



சரித்திரத்தையும், அத்தோடு கூட தெய்வீக உணர்த்துதலுடனான வெளிப்பாடுகளையும் தருகின்றன. அவைகளுக்குள் என்ன பாடங்கள் அடங்கியிருந்தன! - அனுபவம், ஞானம், புத்தி, கிருபை மற்றும் எச்சரிப்பின் பாடங்களைக் கொண்டிருந்தன. முந்தைய சந்ததியாரின் அனுபவங்களோடு மனித தொழில், அரசியல், பொருளாதாரம் போன்ற பல்வேறு துறைகளின் மீதும் கவனம் செலுத்துவதின் மூலம் லௌகீக வஸ்துக்களில் மிகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உலகம் அடைந்திருக்கிறது. நமது தற்கால நாகரீக முன்னேற்றத்தின் சௌகரியங்களும், வசதிகளும், முந்தைய சந்ததியாரின் அனுபவங்களை உற்று கவனித்து அதன் பாடங்களை அப்பியாசப்படுத்தியதனாலேயே பெரும்பாலும் நமக்கு கிடைத்திருக்கின்றன. இந்தப் பாடங்களை “அச்சுக்கலை” எல்லா மனிதரிடையேயும் கொண்டு வந்திருக்கிறது. இதனால் மட்டுமே தற்கால சந்ததியாருக்கு எல்லா வழிகளில் மிகுந்த அனுகூலம் இருக்கிறது. இதில் தான் கடந்தகாலத்தினுடைய ஒட்டுமொத்த ஞானமும், அனுபவங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் மனிதன் கற்றும், படித்தும் இருக்கவேண்டிய மேன்மையான நெறிமுறைகளின் பாடங்கள் கூட மக்களின் கவனத்தை கவரும்படி அழுத்தமாய் திணிக்கப்பட்டிருந்தாலும், பொதுவாகவே அவைகள் முக்கியமென கருதப்படாமல் போய்விட்டன. நீதியை சிந்திக்கக்கூடிய மனங்களுக்கு இப்படிப்பட்ட பாடங்கள் சரித்திரத்தில் நிரம்பியுள்ளன. மேலும், இக்கால மனிதருக்கு இப்படிப்பட்ட பாடங்கள் வேறு எந்த முன் சந்ததியாருக்கும் இல்லாத அளவிற்கு இருக்கிறது. சிந்திக்கும் மனங்கள் அவ்வப்போது இந்த விஷயங்களை கவனித்து அதற்கு நேராய் கவனத்தை செலுத்தியிருக்கிருன்றன. ஆகவே, பேராசிரியர் ஃபிஷர் என்பவர் பேரரசுகளின் எழுச்சி, முன்னேற்றம் மற்றும் வீழ்ச்சி குறித்த தனது கணிப்பின் முகவுரையில் கூறுகிறதாவது: “மனித சம்பவங்களின் தொடர்ச்சியில் ஒரு பிரமாணத்தின் ஆளுகை இருக்கிறது. இது கிரகிக்கப்பட்ட உண்மைகளினால் உறுதிப்படுத்தப்படுகிறது. அவர்களை நோக்கிவரும் பழைய சரித்திரத்தி-ருந்து சம்பந்தம் இல்லாத சம்பவங்கள் திடீரென்று முளைத்துவிடுவதில்லை. ஏற்கெனவே கடந்துசென்றுவிட்ட காலங்களின் இயற்கையான

விஷயங்களாக அவைகள் கண்டு கொள்ளப்பட வேண்டியவைகள். முன் கூறப்பட்ட சம்பவங்கள் அவைகளை முன்கூட்டியே அறிவித்திருக்கின்றன."

இது முற்றிலும் உண்மையே; காரணமும், விளைவும் என்பதன் கோட்பாடு சரித்திரத்தின் ஏடுகளை காட்டிலும் வேறெங்கும் அத்தனை முக்கியத்துவத்துடன் குறிப்பிடப்படவில்லை. இந்த விதிப்படி அதாவது தேவனின் பிரமாணத்தின்படி, முன்பு விதைக்கப்பட்டது முளைத்து, வளர்ந்து, கனிதருவது அவசியமாகியது. ஆகவே, அறுவடை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. தொகுதி இரண்டில் சுவிசேஷ யுகத்தின் அறுவடைக்காலம் ஏற்கனவே வந்தாயிற்று என்று நாம் காண்பித்திருக்கிறோம். அறுவடையில் ஆண்டவரின் பிரசன்னம் இன்றும் வரவேண்டியிருந்தபோது, அது 1874ல் ஆரம்பமாயிற்று. அந்த நாள் முதல் கொண்டு எப்போதும் இல்லாத ஒரு மாபெரும் அறுவடை பணி முன்னேற்றம் கண்டிருக்கிறது, அறுவடை காலத்தின் இறுதி முடிவினை நாம் இப்போது விரைவாய் நெருங்கிக்கொண்டிருக்கிறோம். இந்த சமயத்தில் பதர்களை சுட்டெரிப்பதும், இந்த பூமியின் திராட்சை தோட்டத்தின் முழுவதும் கனிந்த குலைகளை சேகரிப்பதும், மிதித்து பிழிவதும் (பாபிலோனின் பொய்யான திராட்சை தோட்டத்தின் முதிர்ந்த பழங்கள்) இன்னும் சம்பவிக்க வேண்டியுள்ளது. வெளி 14:18-20

## கிறிஸ்தவ தேசங்களின் பொறுப்புகளும் அவர்கள் சார்பான அவளது மனப்போக்கும்

நீதியை கற்றுக்கொள்ளவும், செயல்படுத்தவும் ஆகிய இரண்டுக்குமே தேவையான அநேக சந்தர்ப்பங்களும், அதிகாரத்தின் மிக நீண்ட பயிற்சிக்காலமும் பாபிலோனாகிய கிறிஸ்தவ ராஜ்யத்துக்கு இருந்தது. அதோடு கூட வரப்போகும் நியாயத்தீர்ப்பை குறித்த எச்சரிப்புகளும் கிடைத்தன. இந்த சுவிசேஷ யுகம் முழுவதிலுமாய் தனது தேவனுடைய பரிசுத்தவான்களாகிய அர்ப்பணிப்பான, சுய தியாகம் செய்த, கிறிஸ்துவைப் போன்ற ஆணும், பெண்ணுமாகிய "இந்த உலகத்தின் உப்புகளை" அவள் பெற்றிருக்கிறாள். அவர்களது வாயி-ருந்து இரட்சிப்பின் செய்தியை



கேட்டிருக்கிறாள். அவர்களது வாழ்வில் சத்தியம் மற்றும் நீதியின் கோட்பாடுகள் உதாரணங்களாய் விளங்கினதை கண்டிருக்கிறாள். நீதியையும், வரப்போகும் நியாயத்தீர்ப்பையும் குறித்து அவர்கள் விவேகத்துடன் விவாதித்ததை கேட்டும் இருக்கிறாள். ஆனால் அவள் தேவனுடைய இந்த ஜீவிக்கும் நிரூபங்களை அலட்சியப்படுத்திவிட்டாள். அது மாத்திரமன்றி, கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைத்துக்கொள்ளும் அவளது தேசங்கள் மூலமாக லாபத்தின் மீதான தங்களுடைய பேராசையினால், புறஜாதிகளின் மத்தியில் கிறிஸ்தவ மிஷினரி ஊழியத்தை தொடர்ந்து சாபக்கேடான, மது மற்றும் வேறுசில 'நாகரீக' தீமைகள் மூலமாயும் கிறிஸ்துவின் பெயருக்கு நிந்தையை கொண்டு வந்தாள்; மேலும் பரலோக ராஜ்யத்தின் மெய்யான கருவானது (பரலோகத்தில் பெயரெழுதப்பட்ட பரிசுத்தவான்களால் மட்டுமே உருவாக்கப்பட்ட) அவளது மத்தியில் மற்றும் அவளது அதிகாரத்தினால் கொடுமைகளை அனுபவித்தது. அவர்களை வெறுத்து அவர்களது மரணம் வரையிலும் கூட அவர்களை துன்புறுத்தியிருக்கிறாள். இதின் நிமித்தம் நூற்றாண்டுகாலமாய், இவர்களில் ஆயிரக்கணக்கானோர் இவளது தீர்ப்பினால், தங்களுடைய சாட்சிகளை தங்களுடைய ரத்தத்தின் மூலம் முத்திரையிட்டனர். தங்களுடைய ஆண்டவரைப் போலவே, காரணமின்றி இவர்கள் வெறுக்கப்பட்டனர். நீதியின் நிமித்தமாய் பூமியின் அசுத்தங்களைப் போல நிராகரிக்கப்பட்டனர். மேலும், விரும்பத்தக்க இருளில் அநீதிகளை நடத்தும் பொருட்டு இவர்களது வெளிச்சமானது மீண்டும் மீண்டும் அணைக்கப்பட்டது. ஓ, கிறிஸ்தவ ராஜ்யத்தின் இந்த ஏடுகள் எத்தனை இருட்டானவைகள்! தாய் சபை "பரிசுத்தவான்கள் மற்றும் இயேசுவின் ரத்தசாட்சிகளின் ரத்தத்தை குடித்திருந்தது;" மேலும் அவளும், அவளது குமாரத்திகளும் இன்னும் குருடாகவே இருக்கிறார்கள். துன்புறுத்துவதற்கும் சிரச்சேதம் செய்வதற்கும் இன்னும்கூட தயாராய் இருக்கிறார்கள். (வெளி 20:4), எவ்வளவோ பண்பட்ட விதத்தில், தேவனுக்கும் அவரது சத்தியத்துக்கும் உண்மையாய் இருப்பவர்கள், துணிவு இருப்பவர்கள், அவர்களை கண்டிக்கிற கர்த்தருடைய வார்த்தையை எளிமையாய் கனிவுடன் அவர்களுக்கு சுட்டிகாட்டினாலும்கூட, இன்னும் குருட்டாட்டத்தில் இருக்கிறார்கள்.

தங்களது சொந்த களங்கத்தின் பளுவினால் பேரரசுகளும், ராஜ்யங்களும் மறுபடியும் மறுபடியும் விழும்போது, கிறிஸ்தவ ராஜ்யத்தின் சமூக அதிகாரமானது அடிக்கடி எச்சரிக்கப்பட்டு வந்தது. மேலும், இப்பொழுது கூட, அதிகாரத்தில் இருக்கும் வல்லமைகள் செவி கொடுத்து கேட்பார்களேயாகில், தேவனால் ஏவப்பட்ட தீர்க்கதரிசிகளுடைய கடைசி எச்சரிப்பை கேட்கலாம். அது சொல்வதாவது, "ராஜாக்களே உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள். பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களி கூறுங்கள். குமாரன் கோபம் கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள்; கொஞ்சங்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெறியும்.... ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக் காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனை பண்ணி: அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு, எறிந்து போடுவோம் என்கிறார்கள். பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார். அப்பொழுது (தொடர்ந்து அவரது எச்சரிப்பை அவர்கள் கவனியாமல் அலட்சியமாய் இருப்பதினால்) அவர் தமது கோபத்திலே அவர்களோடேபேசி, தமது உக்கிரத்திலே அவர்களை கலங்கப்பண்ணுவார்." சங் 2:10-12, 1-5

மறுபடியும் எளிமையான மற்றும் தற்சமயம் விரிவாய் அறியப்பட்ட அவரது பரிசுத்த நீதியின் விதிகள் கூறுகிறபடி, "தேவசபையிலே (அதிகாரத்தில் இருப்பவர்கள்) தேவன் எழுந்தருளியிருக்கிறார். தேவர்களின் (அதிகாரிகள்) நடுவில் அவர் நியாயம் விசாரிக்கிறார். எதுவரைக்கும் நீங்கள் அநியாயத் தீர்ப்புச் செய்து, துன்மார்க்கருக்கு முகதாட்சண்யம் பண்ணுவீர்கள். ஏழைக்கும், திக்கற்ற பிள்ளைக்கும் நியாயம் செய்து, சிறுமைப்பட்டவனுக்கும், திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள். பலவீனனையும், எளியவனையும் விடுவித்து, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள்." (சங் 82:1-4) இந்த ஆலோசனையின் கருத்து என்னவெனில், இக்காலத்து நெருக்கடியில்,



அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எச்சரிக்கை. செய்தித்தாள் ஒரு நிரந்தரமான சாட்சியாய் இருக்கின்றது. இந்த ஆலோசனையை குறித்த பொதுவான நிராகரிப்பின் ஆபத்தை காண்கிற சிந்தனையாளர்களின் எச்சரிப்பின் குரல் அநேகமாய் இருக்கிறது. உலக மனிதரும்கூட சந்தர்ப்பங்களின் நிலையில் நின்று தான் எதிர்காலத்தை சீர்தூக்கி பார்க்கின்றனர். தீர்க்கதரிசிகளால் அறிவுறுத்தப்படும் பாதையினை அனுசரிப்பதின் அவசியத்தை உணர்ந்துகொள்கின்றனர்.

"அப்சர்வேட்டர் ரொமேனோ"வின் (1880) பெர்-ன் நிருபர் குறிப்பிடப்பட்டிருப்பதை ஜெர்மனியின் மறைந்த பேரரசர் வில்-யம் கண்டார். இதைக் கீழே கொடுத்துள்ளோம்:

"ராயருடைய (சீசருடைய) உயிரின் மீது கடைசியாய் நடந்த பயங்கர தாக்குதலைக் குறித்த செய்தியை கேள்விப்பட்டபோது பேரரசர் வில்-யம் மிகவும் ஆழ்ந்த கவலைக்குள்ளானார். சில நிமிடங்கள் மௌனமாய்இருந்தபின், வருத்தம் தோய்ந்த குர-ல் கொஞ்சம் ஆணித்தரமாகவே அவர் கூறினார். நமது கொள்கைகளின் திசையை நாம் திருப்பாமற் போனால், வா-பருக்கு ஆரோக்கியமான புத்திமதிகளை நாம் கொடுக்காமல் போனால், மதத்திற்கு நாம் முத-டம் கொடுக்காமல் போனால், அன்றாட காரியங்களை மட்டுமே நாம் செய்வோமானால், நமது சிங்காசனம் கவிழ்க்கப்பட்டுப் போகும். அதோடு சமுதாயமானது மிகவும் பயங்கரமான சம்பவங்களுக்கு இரையாகப் போய்விடும். காலதாமதம் செய்வதற்கில்லை. எல்லா அரசாங்கங்களும் இந்த நன்மை பயக்கும் வேலையான அடக்குமுறைக்கு ஒருமனப்பட்டு வரவில்லையானால், அது மிகுந்த துரதிர்ஷ்டமான ஒன்றாக இருக்கும்."

ஜெர்மனியில் மிகப்பரவலாய் விற்பனையாகிற "ரிஃபார்ம்" அல்லது "ரெவல்யூஷன்" என்ற ஒரு புத்தகத்தினுடைய ஆசிரியரான ஹெர் வோன் மாசோ என்ற இவர் சோஷ-ஸ்டும் அல்ல, தீவிரவாதியுமல்ல. ஆனால் ஒரு கன்சர்வேடிவ், லேபர் காலனிகளின் மத்திய குழுவின் தலைவராக இருந்தவர். "ஆஸ்டிரிச் அரசியலை" சேர்ந்த தன் தேசத்து மக்களை குற்றப்படுத்துகிறார். இந்த

நெருப்புக்கோழி (ஆஸ்டிரிச்) மண-ல் தலையை மறைத்துக் கொள்ளும் போது அதனால் பார்க்க முடியாமல் போவதால் தான் மற்றவர்களின் கண்களி-ருந்து மறைந்து விட்டதாக நினைத்துக்கொள்ளும் என்றும் பலரும் அறிந்த பழக்கத்தை இந்த கூட்டத்தார் பிரதிப-த்தனர் என்று கூறுகிறார். வோன் மாசோ எழுதுகிறார்:

"உண்மைகளை நாம் அசட்டை செய்யக்கூடும். ஆனால், அவைகளை மாற்றி அமைக்க முடியாது. ஒரு சீர்திருத்தத்தின் நிகழ்வில் நாம் இருக்கிறோம் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது; காண்பதற்கு கண்களும், கேட்பதற்கு காதுகளும் உடைய யாவரும் இதை ஒப்புக்கொள்ள வேண்டும். தான் என்ற எண்ணத்தில் மூழ்கி, சுயதிருப்தியையும், சந்தோஷத்தையும் தேடும் வேட்கை கொண்ட சமுதாயம் வேண்டுமானால் இதை மறுக்கலாம். இப்படிப்பட்ட ஒரு சமுதாயம் தான் எரிமலையின் மேல் நடனமாடுவதை தொடரும்; மெனே - தெக்கேல் என்பதை பார்ப்பதற்கு மறுக்கும்; மேலும் துப்பாக்கி முனையின் வ-மை மீது நம்பிக்கையை தொடரும்."

"கீழ்மட்டத்தவரின் மத்தியில் அசைவாடிக் கொண்டிருக்கிற வெறுப்பின் முக்கியத்துவத்தை குறித்த எந்த ஒரு கருத்தும் இல்லாமல் கற்றறிந்தவரில் பெரும்பான்மையோர் இருக்கின்றனர். சோஷியல் டிமாக்ரடிக் பார்ட்டி வேறு எந்த மற்ற அரசியல் கட்சிகளைப் போலத்தான் கருதப்படுகிறது. இருப்பினும் அரசியல் உரிமைகளை பற்றி எந்த அக்கறையும் இந்த கட்சி எடுத்துக்கொள்வதில்லை. அல்லது நிர்வாக சீர்திருத்தத்தையோ புதிய சட்டங்களையோ குறித்து அக்கறை கொள்ளவில்லை. இந்த கட்சி கீழ்மட்ட மக்களுடைய விருப்பத்தின் மீதும், 100 மார்க் (ரூபாயை) ஒட்டுமொத்தமாய் செலவு செய்வதை கனவு கூட காணமுடியாதவர்கள் சந்தோஷத்தை அனுபவிக்கும் விருப்பத்தின் மீதும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது..... (சோஷி-ஸ்ட் ஆட்சிமுறை வந்தபிற்பாடு) முறைகள், நிச்சயமாய், சீக்கிரத்தில் சீரமைக்கப்படும். ஆனால், நாடு எப்படிப்பட்டதொரு நிலைமையில் இருக்கும்! எண்ணிலடங்கா முடவரும், விதவைகளும் அநாதைகளும் இருப்பார்கள். தனியார் மற்றும் பொது வங்கிகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கும். இரயில் தண்டவாளங்கள், தந்தி



தொடர்புகள், சாலைகள், பாலங்கள், குடியிருப்புகள், தொழிற்சாலைகள், நினைவுச் சின்னங்கள் அனைத்தும் இடித்து நாசப்படுத்தப்படும். யூனியனோ, மாநிலமோ, நகரமோ அல்லது ஆலயங்களோ அழிக்கப்பட்டவைகளின் ஒரு பகுதியை சரிசெய்வதற்கு செலவாகும் கோடிக்கணக்கான பணத்தை சேகரிக்க முடியாது. இந்த பயங்கரத்தி-ருந்து பாதுகாக்கப்பட எதுவும் செய்யப்படாமல் இருப்பது நம்பமுடியாததாய் இருக்கிறது. தர்மம் என்பதல்ல இப்போது தேவைப்படுவது. ஆனால் கீழ்மட்ட வகுப்பினரை கவனிக்கும் கரிசனையான உள்ளங்களே. அன்பு - யாவற்றையும் அணைக்கும் அன்பு, அதுவே உலாவிக் கொண்டிருக்கும் பெரும்பாலான வெறுப்புகளை மேற்கொள்ள முடியும். எதுவுமே தங்களை மீட்டுக்கொள்ள முடியாத அளவிற்கு அநேகர் இழந்திருக்கலாம்; ஆனால், மிருகங்களைப் போல், பட்டியில் அடைக்கப்பட்ட, தீனி பெறும் நிலையைக் காட்டிலும் மோசமாய் - தற்போது இருக்கும் அநேகருக்கு, மனிதனின் சராசரி வாழ்வுக்கான அத்தாட்சி கொடுக்கப்படுமாயின் இன்னும் கோடிக்கணக்கானோர் சட்ட ஒழுங்கினை தங்களுக்கு உரியதாக்கிக் கொள்ள முடியும்."

தாங்கள் வாழும் பயங்கரத்தை காணும்படி பெர்-ன் மக்களுடைய கண்களைத் திறப்பதற்காக ஆசிரியரானவர் இன்னும் கூட நீட்டி எழுதுகிறார். "பெர்-ன் நகரத்தாரே, 60,000 வ-மையான காவலர்களால் தங்களை பாதுகாத்துக்கொள்பவரே, சற்று கற்பனை செய்து பாருங்கள். இது வீணான நம்பிக்கை. இலையுதிர் காலத்திலே, நேரம் முடிந்தாலும், புதிதாக அமர்த்தப்பட்டவர்கள் வரும் முன்னே இவர்கள் தங்கள் படைப்பிரிவுகளை விட்டுப் போய் விடுவார்கள். அந்தப் படையில் அதிகப்பட்சம் 7,000 வீரர் இருக்கலாம். அதிருப்தியடைந்த முன்னாள் அதிகாரிகளின் மூலம் கொடுக்கப்படும் ஆணையினால் இன்னும் 100,000 அல்லது 160,000 படை ஆட்களைக்கூட பங்கேற்கும்படி செய்யமுடியும். இவர்கள் யாவரும் இராணுவத்தில் பணிபுரிந்தவர்கள். எதிராளிகளை மேற்கொள்ள பயிற்சி பெற்றவர்கள். ஒழுங்கு முறைகளின் அவசியத்தையும் தெரிந்தவர்கள். தொலைபேசி, தந்தி தொடர்பு இணைப்புகள் யாவும் துண்டிக்கப்படும். மறுபடையெடுப்பை

தடுக்க ரயில் தண்டவாளங்கள் சீரழிக்கப்படும். தங்கள் பதவிகளுக்கு திரும்புவதில் துரிதப்படும் அதிகாரிகள் இடைமறிக்கப்படுவர். புரட்சிக்காரர், வீரர்களின் பாளையத்தை தகர்த்து, பேரரசரையும், மந்திரிகளையும், இராணுவ அதிகாரிகளையும், மேலதிகாரிகளையும், சீருடை அணிந்த அனைவரையுமே எந்த ஒரு காலாட்படையோ குதிரைப்படையோ இவர்களுடைய உதவிக்கு வராதபடி முன்னேற்பாடாய் நொறுக்கி வீழ்த்துவார்கள்."

ஆனால், அதிகாரத்தில் இருப்பவர்கள் இந்த வேளையின் எச்சரிப்பையும், தெய்வீக படிப்பினையையும் கூர்ந்து கவனிக்கின்றனரா? இல்லை. இவர்களைக் குறித்து தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறதாவது: "அவர்கள் அறியாமலும், உணராமலும் இருக்கிறார்கள், அந்தகாரத்திலே நடக்கிறார்கள்; தேசத்தின் அஸ்திபாரங்கள் எல்லாம் (சமுதாயத்தின் அஸ்திபாரங்கள் - இதுவரையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் சட்டம், ஒழுங்கின் கொள்கைகள்) அசைக்கப்படுகிறது." பயங்கரமாய் அசைக்கப்படுகிறது. அவைகள் நீக்கப்பட்டுவிடும் அளவிற்கு அசைக்கப்படுகிறது. *(எபி 12:27; சங் 82:5; ஏசா 2:19)*

தனது பாட்டனார் வெளிப்படுத்திய பயத்தை பற்றி, அவருக்கு பின் வந்த ஜெர்மனியின் பேரரசர் சிறிதும் கவனமின்றி இருந்தார். பல வருடங்களுக்கு முன், இளவரசர் பிஸ்மார்க் அவர்களுக்கு தங்கத்தால் இழைக்கப்பட்ட அபாரமான உறையுடன் கூடிய வாள் ஒன்றை பரிசளித்து பேரரசர் கூறியதாவது:

"பிரகாசமான மேன்மையுடைய உங்களுக்கு எனது இந்த பரிசை இந்த படைகளுக்கு முன்பாக அளிக்கிறேன். ஜெர்மனியின் உயரியநிலை பொருந்திய ஆயுதமும், உங்கள் மேன்மையின் சின்னமான சாதனமும், எனது பாட்டனாரின் சேனையை உருவாக்கவும், திறமையுடன் செயலாற்றவும் உதவியதும், பீரங்கிகள் இரும்பும் இரத்தமுமாய் இருந்த ஆரம்பகட்ட நேரத்தின் மாபெரும் சின்னமாகவும், என்றுமே தோற்றுப்போகாததும் இராஜாக்கள், மற்றும் இளவரசர்களின் கைகளில் என்றும் இருப்பதுமான, தேவைப்பட்ட நேரங்களில் சொந்த நாட்டின் ஒற்றுமையை பாதுகாப்பதும், தேசத்தின் வெளியிலேயும் கூட பிரயோகிக்கப் பட்டபோதும் கூட, அது உள்நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு



வழிகாட்டியதுமான இந்த வாளைக் காட்டிலும் மேலானதொரு பரிசை என்னால் காணமுடியாது."

லண்டனின் ஸ்பெக்டேட்டர் இந்த கூற்றினைக் குறித்த விமர்சனத்தில் கூறுவதாவது: "அது உண்மையாகவே பெரும் திகிலும் பிரமிப்பும் ஊட்டக்கூடிய கூற்றாக இருக்கிறது. ஜெர்மனியில் இதனுடைய இரண்டு விளக்கங்கள் இருக்கின்றன. முதலாவது, சக்கரவர்த்தியினிடமிருந்து விலகிக்கொள்ளும்படி எந்த ஒரு ஜெர்மானிய மாநிலத்தின் கோரிக்கைக்கும் எதிரான உத்தரவு, அடுத்தது சோஷ-ஸ்டுகள் மற்றும் அராஜகவாதிகளை கையாள, தேவைப்பட்டால் இராணுவ படைகளை சக்கவர்த்தியும் அவரது கூட்டாளிகளும் பயன்படுத்துவார்கள் என்ற முடிவை அறிவிப்பது. இருவிதங்களிலேயும் அந்த அறிவிப்பானது அவசியமற்றதும், முன்யோசனையற்றதுமாய் இருந்தது. ஜெர்மன் பேரரசானது சந்தேகமின்றி லெங்கன்ஸால்சாவின் பட்டயத்தாலும், பிரான்சுடனான போரினாலுமே கட்டப்பட்டது என்பதையும் இதனிடமிருந்து விலகிக்கொள்ள நினைக்கும் எந்த நாடுமே ஜெர்மனியின் இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகும் என்பதையும் யாருமே சந்தேகப்படவில்லை. ஆனால், வாக்கெடுப்பினால் ஜெயிக்க முயற்சி செய்தால், எந்த ஒரு காட்சியையோ, சோஷ-ஸ்டுகளாக இருப்பினும், இராணுவ சட்டத்தினால் மிரட்டவும், உண்மையில் முற்றுகை இட்டாவது அந்த நாட்டின் அரசியல் அமைப்பையே நீக்கவும் செய்யும். இவ்வித காரியங்களை பேரரசர் எந்த நோக்கத்துடனும் செய்வதாக நாம் அனுமானிக்கவில்லை. ஆனால், அந்த சூழ்நிலைகளை குறித்து அவர் ஆழ்ந்த யோசனை செய்து கொண்டிருக்கிறார். சோஷ-ஸ்டுகளின் (சமூகவாதிகள்) எதிர்ப்பை அவர் உணர்ந்து, 'நல்லது, நல்லது, நான் இன்னும் பட்டயத்தை உடையவனாய் இருக்கிறேன். அது என்றுமே தோல்வியைக் காணாத ஒரு பரிகாரம்' என்ற முடிவில் இருந்தார். அவருக்கு முன் இருந்த அநேக மன்னர்களும் அதே முடிவுக்கு வந்திருந்தனர். ஆகிலும், வெகுசிலர் இந்த கருத்தை குறித்து தீவிரமாய் சிந்திப்பது ஞானமுள்ளது என்று கருதினர். இது ஒரு அச்சுறுத்தலாகவே இருக்கிறது. நம்மால் முடிந்தவரை இதை விவரிக்கிறோம். ஞானமான பேரரசர் எவரும் எந்த ஒரு தாக்குத-ன்

சமயம் வரும்வரைக்கும் அச்சுறுத்தலை கையாளவில்லை. ஆனால், வெகுசிலர் உள்நாட்டு கலவரத்துக்கான பரிகாரமாய் இராணுவ வன்முறைகளை காட்டி அச்சுறுத்தியிருக்கின்றனர். 'உள்நாட்டு குறைபாடுகளுக்கு பட்டயமே ஒரு பரிகாரம் என்பது என்றுமே தவறியதில்லை!' மருத்துவரின் கத்தி நோய்க்கு ஒரு பரிகாரமாக இருக்க தவறியதில்லை என்று கூறுவது போல், இளவரசர் ஸ்வாட்ஸ்சென்பர்க் இங்கிலாந்தின் கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்தவர். தனக்கு பின்னால் யாராலும் ஜெயிக்கமுடியாத வ-மையானதொரு படையுடன், அந்தப் பரிகாரம் எனப்பட்டதை மிகவும் சாதகமானதொரு சூழ்நிலையில் முயன்று பார்த்தார். அவரது நீண்ட அனுபவத்துக்கு பின் அவரது முடிவை, அரசியல் நன்மைக்காக ஞானமான கருத்தாய், ஜெர்மனியின் பேரரசர் தீவிரமாய் சிந்திக்கக் கூடிய வகையில் கூறியதாவது: 'வாள் முனை மீது அமர்வதைத் தவிர, நீங்கள் அதைக்கொண்டு எதை வேண்டுமானாலும் செய்யலாம்.'

"என்றுமே தோல்வியடையாத பரிகாரம் வாள்முனையே" என்பதைவிட பலமான ஒன்றினை ரோம பேரரசர் கூறியிருப்பாரா? கொடுங்கோலாட்சியின் சாராம்சமே இந்த வார்த்தைகளில் இருக்கிறது. மேலும், பேரரசர் இந்த வார்த்தைகளுக்கு மதிப்பளித்து, உண்மையாக இதை சொல்-யிருந்தால், ஜெர்மனி தனக்குள் ஒரு தலைவனை கொண்டிருக்கவில்லை. இப்படிப்பட்ட இராஜாக்கள் எல்லாம் நீக்கப்பட வேண்டியவர்கள் என்றே தற்கால சரித்திரம் எல்லாம் நமக்கு காண்பிக்கிறது. சிலவேளைகளில் பேரரசர் வெறுப்பின் வேகத்தோடு உணர்ச்சி வசப்பட்டு, தனது தனிப்பட்ட மிகைப்படுத்தும் உணர்வினால் பாதியும், கவிதை புலமையாக மீதியுமாக ஏற்கனவே இவ்விதமாய் அடிக்கடி எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் அவரது கொள்கையின் வெளிச்சத்தில் அவரது பேச்சை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமாயின், அவர் சொல்லக்கூடியதெல்லாம், 'என்ன ஒரு பரிதாபம், நம்பிக்கைக்குரியதெல்லாம் கடந்து போய்விட்டன!'"

தற்கால ரஷ்ய சக்கரவர்த்தியின் அறிக்கையின் படி, தனது தந்தையின் வழிப்படியே தானும் ஏகாதிபத்தியத்தை மனப்பூர்வமாய் கடைபிடிப்பதாக கூறியது, தேவ வார்த்தையின் எச்சரிப்பை கவனிக்கத்தவறியதற்கான மற்றொரு அறிகுறியாக இருந்தது. மேலும்,



அதிகாரபூர்வமான ஆற்றல் யாவும் கட்டப்பட்டு, சுதந்திரமாய் எதையும் பேசமுடியாமல் தடை செய்யப்பட்டிருந்ததை, அவரது ஆட்சிக்குட்பட்ட ஜனங்கள் எவ்விதத்தில் எடுத்துக்கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ரஷ்ய மனித உரிமைக்கட்சியானது ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டு அதை பேரரசு முழுவதிலும் சுற்றறிக்கையாக வெளியிட்டது.

இந்த அறிக்கை சக்கரவர்த்திக்கு எழுதப்பட்ட ஒரு கடித வடிவில் இருந்தது. தனது சர்வாதிகாரத்தை அவர் திணிப்பதற்காக அவருக்கு கண்டனம் தெரிவித்தபின் அது கூறுகிறதாவது :

"மிகுந்த முன்னேற்றமடைந்த ஒரு செம்ஸ்டோவ்ஸ் (ரஷ்யாவில் ஒரு ஜில்லாவை பரிபா-க்கத் தெரிந்தெடுக்கப்படும் சபை) எதிர்பார்ப்பது சக்கரவர்த்திக்கும் மக்களுக்கும் இடையேயான ஒற்றுமை, பேச்சு சுதந்திரம், நிர்வாகிகளின் நியாயமற்ற தன்னிச்சையான போக்கின் மீதான ஒரு சட்டம் ஆகியவையாகும். இவைகளுக்காகவே நீங்கள் அரசவை உறுப்பினர்கள் மற்றும் அதிகார வர்க்கத்தின் பிரதிநிதித்துவத்தால் பயமுறுத்தப்பட்டும் ஏமாற்றப்பட்டும் இருக்கிறீர்கள். சர்வல்லமையையும் பேராசையுடன் பாதுகாக்கவே அதிகார வர்க்கம் உங்கள் மூலமாக இப்படி செய்கிறது என்பதை சமுதாயம் பூரணமாய் புரிந்துகொள்ளும். அதிகார வர்க்கமானது மந்திரிகளின் ஆலோசனைக் குழு முதல் ஆரம்பித்து கீழ்மட்ட கிராம போலீஸ்காரர் வரை, சமுதாய அல்லது தனிப்பட்டவரின் எந்த ஒரு வளர்ச்சியையும் வெறுக்கிறார்கள். விழாக்கால உடையுடன் வந்து வாழ்த்துக்கள் கூறுவதையும், பிரஜைகளின் பிரதிநிதிகளுடன் தடையில்லாத பரிமாற்றத்தை பேரரசர் வைத்துக்கொள்வதையும் இவர்கள் தீவிரமாய் தடை செய்கின்றனர்.

"நாட்டின் மிக அத்தியாவசியமான தேவைகளை, மிகுந்த நேர்மையான முறையிலும் கூட, அரியணை முன் பேசத்துணிந்தால் அது ஏறக்குறைய, மொத்தத்தில் நிராகரிப்பையே சந்திக்கநேரிடும் என்பதை உங்கள் பேச்சு நிரூபிக்கிறது. சமுதாயம் உங்களிடமிருந்து நினைவு கூறலையும், மக்களிடமிருந்து சக்கரவர்த்திக்கு இருக்கும் முழுமையான பேதத்தினை குறித்த எண்ணத்தை கொடுப்பதை

மட்டுமே கேட்கமுடிகிறது. நீங்களே உங்கள் சொந்த பெயர் பிரஸ்தாபத்தை கெடுத்துக் கொண்டீர்கள். மேலும், முன்னேறுவதற்காக சமாதானத்தோடு போராடும் சமுதாயத்தின் எல்லா பகுதிகளையும் அந்நியராக்கி விட்டீர்கள். சில தனிப்பட்டவர்கள் மட்டுமே உங்கள் வார்த்தைகளை கொண்டாடுகின்றனர். ஆனால், அவர்களது இயலாமையை விரைவில் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

"சமுதாயத்தின் மற்றொரு பகுதியில் உங்களது பேச்சு காயப்பட்ட உணர்வுக்கும் மனசோர்வுக்கும் காரணமாகிவிட்டது. சுதந்திரத்துக்காக சமாதானத்துடன் ஆனால் விடாப்பிடியாய் மற்றும் நிதானத்துடன் தொடருவதற்கு முன், எப்படியாகிலும் நல்லதொரு சமுதாய எழுச்சி இதை சீக்கிரமே மேற்கொள்ளும். மற்ற பகுதியில் தற்கால விரும்பத்தகாத நிலையிலான காரணங்களுக்காக எக்காரணத்தைக் கொண்டும் போராடியே தீரவேண்டிய தயார் நிலைக்கு உங்கள் பேச்சு தூண்டிவிடும். இந்த போராட்டத்தை தொடங்கும் முதல் ஆளாய் நீங்கள் இருக்கிறீர்கள். வருடக்கணக்கில் இது தொடரும்."

இவ்வண்ணமாய் கிறிஸ்தவ ராஜ்யத்தின் எல்லா தேசங்களும், கவனமின்றி இந்த நீண்டகால விரும்பத்தக்க இருளில் தடுமாறுகிறது. சுதந்திரத்தை மேட்டிமையாய் பெருமை பேசும் இந்த மரியாதைக்குரிய தேசமும் கூட, மற்ற தேசங்களைக் காட்டிலும் அநேக வகையில் மிக அதிகமாய் அனுகூலங்களை பெற்றிருந்தாலும், அதுவும் இருளில் தடுமாறுகிறது; அதுவும்கூட அநேக எச்சரிப்புகளை பெற்றிருக்கிறது. உயிர் தியாகம் செய்த ஜனாதிபதி ஆபிரகாம் -ங்கன், இ-னாய்சில் இருக்கும் தனது நண்பருக்கு தான் சுட்டு வீழ்த்தப்படுவதற்கு சற்றுமுன் ஏறக்குறைய தீர்க்கதரிசனத்தைப் போல் எழுதியிருப்பதை கவனிக்கவும், அவர் எழுதியதாவது:

"ஆம், இந்தக் கொடுமைனான போர் அதன் முடிவை நெருங்குவதற்காக நம்மை நாமே வாழ்த்திக் கொள்வோமாக. அது அளவில்லாத பொருளையும், ரத்தத்தையும் அதற்கு விலையாக கொண்டிருக்கிறது. இந்த அமெரிக்கதேசம் வாழ்வதற்கு விலையேறப்பெற்ற தங்கள் உயர்ந்த ரத்தத்தை அமெரிக்க



வா-பர்கள் இலவசமாய் இத்தேசத்தின் ப-பீடத்தில் அளித்துள்ளனர். குடியரசுக்கு இது ஒரு சோதனையான நேரம். ஆனால் என்னை நடுங்கவைக்கும், எனது தேசத்தின் பாதுகாப்புக்காக என்னை பயப்பட வைக்கும் ஒரு நெருக்கடி வெகு அருகில் எதிர் கொண்டுவருவதை நான் பார்க்கிறேன். போரின் விளைவாக, சங்கங்கள் அரியணையில் ஏற்றப்பட்டுவிட்டன. மேல் மட்டத்தின் ஊழல் சகாப்தம் தொடரும், சிலருடைய கைகளில் போய் எல்லா செல்வமும் சேரும் மட்டும் நாட்டின் பொருளாதார வ-மை ஜனங்களுடைய தவறான கருத்துக்களின் மீது கிரியை செய்வதன் மூலம் தன்னுடைய ஆளுகையை நீட்டிப்பதற்கு விடாமுயற்சி செய்யும். அதோடு குடியரசு என்பது அழிந்துவிடும். யுத்த காலத்தின் நடுவிலும் கூட நாட்டின் பாதுகாப்பை குறித்து நான் அடையாத மனவிசாரத்தை இந்த கணத்தில் உணர்கிறேன்."

மறுபடியும் 1896ம் ஆண்டில் பொருளாதாரம் மற்றும் சமூக விஷயங்களுக்காக பேரவையின் பிரதிநிதி ஹேச் ஆஃ மிசோரி கூறியதாக அச்சு ஏறிய ஒரு அறிக்கை கூறுவதாவது:

"நான் சொல்வதை குறித்துக்கொள்ளுங்கள்! ஒருவேளை காரணமும் பலனும் என்ற இணக்கமில்லாத சட்டமானது சர்வவல்லவருடைய புத்தகத்தி-ருந்து நீக்கப்படாவிட்டால், ஒரு நிறுத்தம் விரைவிலேயே கொண்டுவரப்படாவிட்டால், அமெரிக்க அரங்கில் எல்லா நவீன மேம்பாடுகளுடன் கூடிய ஒரு பிரெஞ்சுப் புரட்சியின் பயங்கரத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம். அதுவும், அடுத்த பத்தாண்டுக்கு உள்ளாகவே. நான் மட்டும் தனியாக இல்லை, ஆஸ்டர் என்ற கணவான், சில காலத்துக்கு முன் இங்கிலாந்து சென்றவர், தனக்கென்று ஒரு இடத்தை அந்த தீவில் வாங்கிக்கொண்டு, பிரிட்டிஷ் பிரஜை ஆகிவிட்டார். என்னைப் போலவே அவரும் வரப்போகிற காரியத்தை மிக சாதாரணமாய் பார்த்தார். அடைபட்டுப் போவதற்கு முன்னதாகவே சரியான நேரத்தில், சற்று காலம் கழித்து இருக்கப் போகிற நெரிச்சலுக்கு முன்பாகவே அவர் நழுவிவிட்டார். சிறிது காலத்திற்கு முன் நடந்தவைகளைப் போலவே தொடர்ந்து காரியங்கள் நடக்குமேயாகில் நீங்களும் நானும் பார்த்தது போலவே, வெகு விரைவில் அவரைப் போன்ற வகுப்பார் பெரும் கூட்டமாக வெளியே செல்லும் எல்லா படகுகளையும் விரைந்து பிடித்து, வழி உண்டாக்கிக்

கொண்டு, கூட்டத்தை விட்டு ஓடுவார்கள் என்று அவர் மிக நன்றாய் அறிந்திருந்தார்."

மேதகு எச்.ஆர்.ஹெர்பட், அமெரிக்க நாட்டு கப்பற்படையின் செயலாளர், கிளைவ்லேன்ட்ஓ வில் ஏப்ரல் 30, 1896ல் கீழ்கண்ட வார்த்தைகளை மிகவும் நிதனமாய் வர்த்தகர்களுடன் பேசினார்:

"மனித முன்னேற்றத்தின் சாதாரணமான வழிகள் எல்லாவற்றை காட்டிலும் பிரத்தியேகமான இடத்தை ஆக்கிரமிக்கக்கூடிய அச்சுறுத்தலான மிகப்பிரமாண்டமானதொரு வியாபார யுகத்துக்குள் நாம் நுழைந்து கொண்டிருக்கிறோம். எதிர்கால நம்பிக்கை உள்ளவர்கள், இது மனித வாழ்வின் மேம்பாட்டுக்கான ஒரு நிலை என்றும், ஆகவேதான் பெரிய நிறுவனங்கள் பொருட்களை ம-வாக்குவதும், போக்குவரத்தை ம-வாக்குவதும் நடப்பிக்கின்றன என்று உங்களுக்கு கூறுவர். உங்களுக்குத் தேவையான யாவையும் வாங்கக் கூடிய பிரம்மாண்டமான அங்காடியில் எல்லாம் ம-வு விலையில் எல்லா இடத்திலும் கிடைக்கின்றன. கோடிக்கணக்கான முதலீட்டை உடைய பெரிய தொழிற்சாலைகள், அதேவிதமான சிறிய வியாபாரங்களால் சந்தையில் முன்பு இடம் பிடித்திருந்த ஸ்தானத்தை மிகவேகமாக பிடிக்கின்றன.

"குடிமக்களின் இயல்பான சுதந்திரத்தை பயங்கரமாய் குறைக்கும் இந்த ஏகாதிபதிகளை தடுப்பதற்கான எந்த ஒரு திட்டமும், அதோடு வெகுசிலரால் மிகப்பெரிய அளவில் சொத்துக்கள் முடக்கப்படுவதை தடுக்கவும், அநேகருடைய சந்தர்ப்பங்கள் குறுகிப்போவதும் அதிருப்தியானது பெருகிக்கொண்டே வருவதையும் தடுக்கவும், மனித புத்தி சாதுர்யம் எந்த திட்டத்தையும் வகுப்பதற்கு இயலாததாகிப் போனதாய் தெரிகிறது. ஆகையால் கடந்த காலத்தைவிட எதிர்காலத்தில் உழைப்பு மற்றும் முதலீட்டுக்கும் இடையேயான பிரச்சனை மிகப்பெரியதாக இருக்கும்.

"சிந்தனையாளர்கள் ஏற்கனவே முன்னறிவித்தது என்னவெனில், உழைப்புக்கும் முதலீட்டுக்கும் இடையிலான



கடும்பகையின் விளைவால் வரும் பிரச்சனையானது நம்முடைய ஜனநாயக அரசுக்கு ஒரு மரணஅடியாக இருக்கும். குழப்பமானது முத-ல் அராஜகம் மற்றும் ரத்தம் சிந்துத-ல் துவங்கி பின் மன்னர் ஆட்சியில் யாராவது தீரமிக்க தலைவர், இராணுவ பலத்தால் இந்த ஒழுங்கற்ற பெரும் குழப்பத்தை ஒரு நிலைக்கு கொண்டுவரமுடியும்.

"சில நேரங்களில் சோஷ-சமே தற்சமயத்து சூழ்நிலையின் பொருத்தமான முடிவாக இருக்கும் என்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். இந்த முறையிலான முதலாவது சோதனை பட்டணங்களில் செய்யப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. முதலாளிகள் தங்கள் அதிகாரத்தில் வரைமுறையற்ற எண்ணத்துடனும், தொழிலாளி முன்னேற்றத்துக்கான மிக குறைந்த சந்தர்ப்பங்களுடனும், ஒருவரை ஒருவர் திருப்திபடுத்த வாக்குச்சீட்டை தவிர வேறு ஒன்றுமில்லாமல் முனிசிபல் அரசை கட்டுப்படுத்த ஒரு வகுப்பினருக்கு மற்ற வகுப்பினர் எதிராக இருக்கின்றனர். இது எதிர்காலத்தின் அபாயங்களுள் ஒன்று...... ஒரு காலத்தில் அமெரிக்க விவசாயிகள் என்றுமே அசைக்கப்படாத அரணாக நிற்பார்கள் என்று கருதப்பட்டது. ஆனால் நமது பெரும்பாலான விவசாயிகளின் மனதில் மாற்றங்கள் உருவாகிவிட்டன."

கிறிஸ்தவ தேசங்களின் மத அதிகாரங்களும் கூட மேலும் மேலும் போதனை மீது போதனைகளை பெற்றன. அவ்வப்போதான சீர்திருத்தவாதிகளாலும், தேவன் முன்னிருந்த தம்முடைய ஜனங்களுடன் கொண்ட தெய்வீக தொடர்பினாலும் அவர்கள் எச்சரிக்கப்பட்டனர். ஆகிலும், வெகுசிலரே சுவற்றின் மீதிருந்த கையெழுத்தை வாசிக்க முடிந்தது. மேலும், இந்த பிரசித்தி பெற்ற நிகழ்வுகளை மேற்கொள்ளவோ அல்லது தாங்கிக்கொள்ளவோ அவர்கள் சக்தியற்றவர்களாக இருக்கின்றனர். போதகர் டி.டி. விட் டால்மேக் என்பவர் இதை ஓரளவிற்கு புரிந்தவராக காணப்பட்டார். ஒரு சமயம் தனது உரையில் இவர் கூறியதாவது:

"இயேசு கிறிஸ்துவின் சபை எழுந்து, நாங்கள் தேவனுக்கு மட்டுமல்ல ஜனங்களுக்கும் நண்பன் என்று கூறி, அன்றாட உணவுக்கே போராடுகிற மாபெரும் கூட்டத்துக்கு இரக்கத்தை, காட்டி

அதை நிரூபிக்காவிட்டால், இப்போதிருக்கும் அமைப்பில் சபையானது, காலாவதியாகிப்போனதொரு நிறுவனமாக மாறிப்போகும். அதன் பிறகு கிறிஸ்து மறுபடியும் கடற்கரைக்கு சென்று மனுஷரை அப்போஸ்தலத்துவ ஊழியத்துக்கு வரும்படி, சாதாரண, உண்மையுள்ள மீனவரை அழைக்கவேண்டும். தங்களுடைய வாழ்விற்கான தேவையை பெறும் மாபெரும் போராட்டத்தில் எல்லா வகுப்பு ஜனங்களும் சமஉரிமை பெற்றுக்கொள்ளக்கூடிய நேரம் வந்துவிட்டது."

இருப்பினும், வெகுசிலரே முன்னின்று நடத்தக் கூடிய திறமையும், செல்வாக்கும் பெற்றிருந்தும்கூட, மிகுந்த திடநம்பிக்கையுடன் இவர் விவரித்திருப்பதை ஆபத்தான நேரத்தில் செல்வாக்குடைய கிறிஸ்தவர்கள் தங்கள் கடமையென கருதி அதை பின்பற்றுவதில் எந்த அவசரமும் காட்டுவதாக தெரியவில்லை.

எச்சரிப்புகள் முன் செல்ல, கடமை மற்றும் சலுகையின் குற்ற உணர்வு அநேகருடைய மனதை கட்டிப்போட்டிருக்கிறது. ஆனால், ஐயோ! இவைகளினால் எதுவும் பயனில்லை. அவைகள் கவனிக்கப்படாமல் போகின்றன. சபைகளிடத்தில் மாபெரும் அதிகாரம் முன்பு இருந்தது. இன்னும் கூட ஒரு குறிப்பிட்ட அளவு அதிகாரம் இருக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் பெயராலும், அவரது சுவிசேஷத்தின் பெயராலும், இது சுயநலத்துடன் உபயோகிக்கப்பட்டும், தவறாக பயன்படுத்தப்பட்டும் வந்தது. இன்னும் செய்யப்பட்டும் வருகிறது. "ஒருவரை ஒருவர் கனப்படுத்திக் கொள்ளுதல்," "ஜெப ஆலயங்களில் பிரதான ஆசனங்கள், ரபி என்றும் போதகரே என்றும்," டாக்டர் என்றும் ரெவரென்ட் என்றும் அழைக்கப்படுவதில் ஒவ்வொருவரும் தன்னுடைய ஸ்தானத்தி-ருந்து (அல்லது சபை பிரிவி-ருந்து) *(யோவா 5:44; மத் 23:6-12; ஏசா 56:11)* லாபம் காண்கின்றனர். அதோடு "மனிதனுக்கு பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்." இது சில தேவ ஊழியரைக் கூட உத்தமமாய் நடப்பதற்கு தடை செய்யும் மந்தையின் பொன்னாலான உரோமத்தை (பணம்) சம்பாதித்துக் கொள்வதைத் தவிர மேய்ப்பரில் அநேகருக்கு கர்த்தருடைய மந்தையின் மேல் எந்தவித அக்கறையும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.



அநேக கற்றுத்தேறிய, தெளிந்த மற்றும் பக்தியுடைய கனவான்கள் அநேகர் பெயரளவிலான பல்வேறு சபைப் பிரிவுகளில் இருக்கும் மதகுருமார்களுடன் சேர்ந்து விட்டிருக்கின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்கிறோம்.இந்த யுகம் முழுவதும் தொடர்ந்து கோதுமை மற்றும் களைகளுமாக இவர்கள் கலந்துவிட்டிருக்கிறார்கள். *(மத் 13:30)* இந்த களை வகுப்பைச் சேர்ந்த அநேகர் பிரசங்க மேடைகளிலும், மேன்மையான ஆசனங்களிலும் இடத்தை பிடித்திருக்கிறார்கள். பிரசங்க மேடையை விரும்பும் திறமைமிக்க வா-பருக்கு பெருமை மற்றும் வீணான மகிமை கொடுக்கப்படுகிறது. வேறு எந்த உத்தியோகத்தைக் காட்டிலும் கிறிஸ்தவ ஊழியமே புகழுக்கும், அதிலும் கூடுமானால் செல்வ செழிப்புக்கும் செல்லக்கூடிய மிகவேகமான மற்றும் சுலபமான வழியை அளிக்கிறது. சட்டம் சம்மந்தப்பட்ட உத்தியோகத்துக்கு வாழ்நாள் முழுவதிலும் புத்திகூர்மையான சக்தியும், வியாபார முயற்சியும் தேவைப்படும். மருத்துவ தொழி-லும் இதே விதமான காரியங்களை கூறலாம். இந்த தொழில்களின் மூலம் மனிதன் மேன்மையும், செல்வமும் பெரும் அளவிற்கு உயர்ந்தது. அவர்களது பேச்சு சாதுர்யமும், அறிவுத் திறமையும் மட்டும் அல்ல, இடைவிடாமல் விடாப்பிடியாய் புத்திகூர்மையை பயன்படுத்தி கடின உழைப்பால் முயன்றதினாலேயே உண்மையாகவே மேன்மையை பெற்றிருக்கின்றனர். வேறுவிதத்தில் பார்த்தால், மதகுரு தொழி-ல், ஒரு பண்பட்ட, மனோகரமான நடத்தை, வேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஏதோ ஒரு கருத்தைக் குறித்து வாரத்தில் இருமுறை பொதுக்கூட்டத்தில் பேசக்கூடிய சுமாரான ஆற்றல், இவைகளோடு கூட சுமாரான கல்வியும், நல்ல நெறியுள்ள குணநலமும், கொண்ட எந்த ஒரு வா-பரும் இந்த தொழி-ல் இறங்கினால் அவருக்கு சமூகத்தின் மரியாதையும், கனமும், நல்ல சம்பளமும், அமைதியும் இடையூறு அற்ற சுலபமானதொரு வாழ்வும் நிச்சயம் உறுதி செய்யப்படும்.

ஒருவேளை இதைவிட சிறப்பான தாலந்தை அவர் பெற்றிருந்தால், சொல்வண்மையை மெச்சும் மக்கள், இதை விரைவில் இனம் கண்டுகொண்டு, காலம் தாழ்த்தாமல் ஆதாயம் மிகுந்ததொரு பொறுப்புக்கு அவரை அழைத்துவிடுவர்; அவர் அதை

உணர்வதற்கு முன்னே அவர் மனிதரிடையே பிரபலமாகிவிடுகிறார். அப்போது தனது தெய்வபக்தி, விசுவாசம், பணிவு மற்றும் தெய்வீகத்தன்மை தான், தனது அறிவுத்திறன் மற்றும் நாவன்மையின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்ததா என்று நின்று நிதானிப்பதற்கு கூட முடியாது. ஒருவேளை பின்னால் கூறியது தான் காரணமாய் இருப்பின் சாதாரண ஏழைகள் நுழைய முடியாது. பெரும்பாலும் களைகள் நிறைந்த செழுமையான சபைகளில், அவர் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார். இவ்விதமான சூழ்நிலைகளின் தாக்கத்தை தனது தூய்மையான தேவபக்தியினால் எதிர்த்து நின்றாலும், தனது கண்ணியமான நடத்தையின் நன்மைக்காக தனது பேச்சை கேட்பவர்களது பாரபட்சத்துக்கும், மனவிருப்பங்களுக்கும் எதிராக ஓடும்படி இவர் கடமைபட்டவராகிறார். அப்போது கூடிய விரைவிலேயே விரும்பப்படாத ஒருவராகவும், தன் பிரபலத்தை இழந்தவராகவும் ஆகிவிடுவார். வேதத்தில் குறிக்கப்பட்டிருக்கும் "கூ-க்காக வேலை செய்யும் மேய்ப்பன்" போன்ற ஒரு பெரும் கூட்டத்தினை இப்படிப்பட்ட சூழ்நிலையானது பிரசங்க மேடைக்கு அழைத்து வந்துவிடுகிறது. ஏசா 56:11; எசே 34:2-16; யோவா 10:11-14

கிறிஸ்துவின் பெயரால் சுவிஷேச ஊழியத்தை ஏற்றுக்கொள்கிறவர்களது பொறுப்பு மிகப்பெரியதாய் இருக்கிறது. கிறிஸ்துவின் ஆவியை விளக்கிச் சொல்பவர்களாகவும், அவரது சத்தியத்தை போதிக்கிறவர்களாகவும், கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக மக்களின் முன்பு மிகமுக்கியமானவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அதோடு, ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினராய் சத்தியத்தின் அறிவுக்குள் வருகின்ற மற்ற மனுஷரின் மீது இவர்களுக்கு அனுகூலங்கள் இருந்திருக்கிறது. அதை தாராளமாய் அறிவிக்கவும் செய்கிறார்கள். இந்த காரணத்தினாலேயே, உபத்திரவத்தின் பளுவி-ருந்து இவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். அன்றாட வாழ்விற்கான சம்பாத்தியமானது பொறுப்பெடுக்கப்படுகிறது. அதோடு அவர்களது தற்கா-க தேவைகள் சந்திக்கப்படுகிறது. மிகுந்த சாவகாசமான நேரங்கள் ஒதுக்கப்பட்டு, விசேஷ கல்வி மற்றும் கணக்கற்ற உதவிகளை சங்கங்கள் மற்றும் பிறவற்றி-ருந்து கொடுக்கப்படுகின்றன.

இங்கே, ஒரு பக்கத்தில் சத்தியத்திற்காகவும் நீதிக்காகவும்



அர்ப்பணிக்கப்பட்ட சுய தியாகம், பக்தி வைராக்கியம் ஆகியவற்றிற்கு மிகப்பெரிய சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதோடு, அடுத்த பக்கத்தில், வெறும் சோம்பலுடன் கூடிய இளைப்பாறுதல் அல்லது புகழுக்கான, பணத்துக்கான அல்லது அதிகாரத்துக்கான தூண்டுதல்கள் இருக்கிறது. ஐயோ! குருமார்களில் பெரும்பான்மையோர் தங்களது பதவியில் கிடைக்கும் சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொள்வதற்கு பதிலாக, இச்சைக்குரிய தூண்டுதல்களுக்கு சரணடைந்துவிட்டது மிகத்தெளிவாகத் தெரிகிறது. இதன் பலனாக "குருடர்களுக்கு வழிகாட்டும் குருட்டுத்தலைவர்களாகவும்," அவர்களும் அவர்களது மந்தைகளும் நாத்திகவாதம் என்னும் படுகுழியில் வேகமாய் இடறிவிழுகிறவர்களாய் இருக்கிறார்கள். (அவைகள் பிரபலமானதாய் இல்லாதபடியினால்) சத்தியத்தை அவர்கள் மறைத்து (மிகவும் பிரபலமாய் இருக்கிறபடியினால்) தவறுகளில் விருத்தியடைந்து, (இவ்விதமாய் செய்வதற்கு கூ-க்கு அமர்த்தப்பட்டபடியினால்) இதையே போதனைகளாய் மக்களுக்கு கற்றுக்கொடுத்தனர். தெய்வீக உந்துத-னால் அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகளினால் எழுதப்பட்ட வார்த்தைகளினால், "நலமானதை பிடித்து கொள்ளுங்கள்" என்று அவர்களை வழிநடத்துவதற்கு பதிலாக, "எங்களது அதிகாரத்தினால் நாங்கள் உங்களுக்கு சொல்கிற காரியங்களை விசுவாசியுங்கள்" என்று ஜனங்களுக்கு சில சமயங்களில் கூறுகிறார்கள். பல நூற்றாண்டுகளாய் ரோமசபையின் குருமார்கள் தேவவார்த்தையை புரியாத பாஷைக்குள் புதைத்து வைத்திருந்தனர். ஜனங்கள் தேவவசனங்களை ஆராய்வார்களேயாகில், அவளது போ- தோற்றம் நிரூபிக்கப்பட்டுவிடும் என்ற பயத்தினால், வேதத்தை புழக்கத்தி-ருக்கும் பாஷைகளுக்கு மொழிபெயர்ப்பு செய்வதை அனுமதிக்காமல் இருந்தார்கள். காலப்போக்கில், அவளிடமிருந்து வெகுசில தெய்வீக சீர்திருத்தவாதிகள் எழும்பி, அசட்டைப்பண்ணப்பட்டிருந்த வேதத்தை மீட்டு ஜனங்கள் முன் அதைக் கொண்டு வந்தார்கள். ரோம சபையின் தீய நடைமுறை பழக்கங்களுக்கும் துர்போதனைகளுக்கும் எதிராக ஒரு மாபெரும் புராட்டஸ்டன்ட் இயக்கம் இதன் விளைவாக வந்தது.

ஆனால், சிறிது காலத்துக்குப்பின் புராட்டஸ்டன்டிஸமும் கூட கறைபட்டுப்போனது. மேலும் அவளுடைய குருமார்கள் விசுவாச கொள்கைகளை வகுக்க ஆரம்பித்து, கருத்தாழமிக்க வேதபோதனைகளைப் போல அவைகளையே கண்நோக்கும்படி ஜனங்களுக்கு கற்பிக்க ஆரம்பித்துவிட்டனர். அவர்களாக சிந்திப்பதற்கு கற்றுக்கொள்வதற்கு முன், பாலகராக இருக்கும்போதே அவர்கள் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு, வசீகரமாய் கவரப்பட்டனர். அதன்பிறகு பெரியவராய் அவர்கள் வளருகின்றபோது, அவர்களை இவர்கள் தாலாட்டி உறங்கச்செய்து, மதபோதனைகளை குறித்து எழும் எல்லாக் கேள்விகளுக்கும் இவர்களது வழிகாட்டுத-னை பின்பற்றி, தங்களுக்கு மட்டுமே, தெய்வீக சத்தியத்தை தொகுப்பதற்கு தேவையான கல்வியறிவு முதலானவைகள் இருக்கின்றதாக, சொல்-க்கொண்டு, அதன் காரணமாய், தேவனுடைய வார்த்தை மற்றும் இப்படிப்பட்ட எல்லா காரியங்களிலும் இவர்களையே அதிகாரம் பெற்றவர்களாய் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே மதவிஷயங்களில் அவர்களுடைய பாதுகாப்பான செயல்பாடு என்று எண்ணிக்கொள்ள வேண்டியது அவசியம் என்று போதித்திருந்தனர். இந்த அதிகாரத்தை குறித்து யாராவது கேள்வி கேட்க நினைத்தாலோ, அல்லது வித்தியாசமாய் கருதினாலோ, அப்படிப்பட்டவர்கள், எதிர்மாறான கருத்துடையவராகவும் பிரிவினைக்காராகவும் கருதப்பட்டார்கள். அவர்களுக்குள் அதிக கல்வி கற்றவரும், பிரபலமானவர்களும் முறைமையான இறையியல் என்று அவர்களால் அழைக்கப்பட்டதை குறித்து அநேக புத்தக தொகுப்புகளை எழுதினர். இவையாவும் யூதர்களிடையேயான தல்முட் ஐ (யூத சட்ட பூராணம்) போன்றவை, இவை பெரும் அளவிற்கு தேவவார்த்தையை வெறுமையாக்கும் விதத்தில் திட்டமிடப்பட்டு, மனிதனுடைய சுயமான போதனைகளை கற்றுக்கொடுப்பதாக இருக்கிறது. (மத் 15:6; ஏசா 29:13) மேலும், இளைஞர்களை கிறிஸ்தவ ஊழியத்துக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு, கல்வி பெற்ற, முக்கியஸ்தர்களில் சிலர், இறையியல் கலாசாலைகளில் மதிப்பிற்குரிய மற்றும் லாபகரமுள்ள பொறுப்புகளை ஏற்றுக் கொண்டனர். இது மனித பாரம்பரியங்களை குறித்த எந்த அக்கறையும் இன்றி, பரிசுத்த வேதாகமத்தைக் குறித்த



கட்டுப்பாடுகள் இல்லாத சிந்தனையும், உண்மையான பக்தியுள்ள ஆராய்ச்சியையும் தடைசெய்கிறது. இந்த விதத்தில் குருமார்களுடைய தலைமுறைக்குப் பின் தலைமுறையானது பராம்பரியமான பிழைகள் நிறைந்த மாறுபாடான பாதையில் பலவந்தமாய் சென்று கொண்டிருக்கின்றது. மேலும் வெகுசில சந்தர்ப்பங்களிலேயே யாரோ ஒருவர் பிழைகளை கண்டுபிடித்து, சத்தியத்திற்கென்று உத்தமமாய் இருக்கும் அளவிற்கான விழிப்பை பெற்று, சீர்திருத்தத்திற்காக கூக்குரல் இடுகிறார். பிரபலமானதொரு ஓட்டத்தில், அதுவும் விசேஷமாய் மாமனிதர் வழிநடத்துகிற பாதையில் மிதந்து செல்வது என்பது மிகவும் எளிதாகப் போய்விட்டது.

இவ்வண்ணமாக மதகுருக்கள் என்ற வகுப்பினரின் மேன்மையான அனுகூலங்களும் மற்றும் அதிகாரமும் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவர்களது அந்தஸ்து வரிசையில் (இன்னமும் கூட) உண்மையும் பக்தியும் நிறைந்த ஆத்தமாக்கள் சிலர் இருந்தனர். அவர்கள் தாங்கள் தவறான முறைமைகளை கடைப்பிடித்து தேவஊழியம் செய்து கொண்டிருப்பதையும், அப்படிப்பட்ட தவறுகளினிமித்தம் பெருமளவிற்கு தாங்களும் குருடாக்கப்பட்டிருப்பதையும் மெய்யாகவே சிந்தித்திருக்கின்றனர்.

இந்த பிரதிப-ப்புகள் பல குருமார்களுக்கு விசேஷமாய் பெருமையும், சுயலாபம் தேடுபவருக்கு சந்தேகமின்றி குற்றமாய் தோன்றும். ஆனால், மனித சம்பிரதாயங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு அவரது வார்த்தையி-ருந்து பிரகாசிப்பிக்கின்ற, தேவனுடைய வெளிச்சத்தில் நடப்பதென்ற ஒரு முழுமையான தீர்மானத்துடன் சத்தியத்தை அறிந்துகொண்டால், அதனிடத்தில் தங்களுடைய தாழ்மையானதொரு பாவ அறிக்கையின் மூலம் ஆசீர்வதிக்கப்படக்கூடிய நிலையை அடைய முடியும். இவ்விதமாய் அறுவடை காலத்தின் போது இந்த கூட்டத்தினை சேர்ந்த வெகுசில மதகுருமார்களுக்கு, தங்கள் மீது அறுவடை சத்தியத்தின் விடியல் விழுந்த போது, அவர்கள் தவறுகளை கைவிட்டு, சத்தியத்தை பின் தொடர்ந்து அதற்காக சேவை செய்திருக்கின்றனர் என்று நாம் அறியவந்தோம் என்பதை சொல்வதில் மிகுந்த மகிழ்ச்சி

அடைகிறோம். ஆனால், பெரும்பாலான மதகுருக்களுக்கு ஐயோ! இவர்கள் எளிமையான வகுப்பாரை சேர்ந்தவர்கள் அல்ல. மேலும் நமது ஆண்டவரின் வார்த்தையில் இருந்த அழுத்தத்தை உணர மறுபடியும் நாம் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம். "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது!" அந்த ஐசுவரியம் என்பது கௌரவம், புகழ், கல்வி, பணம் அல்லது சௌகரியமான சூழ்நிலை என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஆகையால் கிறிஸ்தவ ராஜ்யத்தின் குருமார்கள், ஒரு வகுப்பாராய் இந்த அறுவடை காலத்துக்கு உரியதான சத்தியங்களில் குருடாய் இருப்பதை குறித்து சாதாரண மக்கள் ஆச்சரியப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், நிஜமான யூத யுகத்தின் முடிவில் நல்ல அங்கீகாரம் பெற்ற வேதபாரகரும் தலைவர்களும் கூட அக்காலத்திற்கே உரியதான அறுவடையின் சத்தியங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களாகவும், குருடராகவும் இருந்தார்கள். தங்களது தாலந்துகளையும், சந்தர்ப்பங்களையும் துர்பிரயோகம் செய்வதற்கான பிரதி உபகாரமாகவே உண்மையில் இவர்களது குருட்டாட்டம் இருந்தது. எனவே, அவர்களிடமிருந்து வெளிச்சத்தையும், சத்தியத்தையும் எதிர்பார்க்கமுடியாது. "அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?" என்ற கேள்வியினை யூதயுகத்தின் முடிவில் மதத்தலைவர்கள் ஜனங்களின் முன் குறிப்பாக வைத்தனர். *(யோவா 7:48)* மேலும், இப்படிப்பட்ட அவர்களது ஆலோசனையை ஏற்றுக்கொண்டும், அவர்களது வழிகாட்டுதலுக்கு கண்மூடித்தனமாய் பணிந்து போயும், சிலர் தங்களது சிலாக்கியங்களை தவறவிட்டனர். அதோடு புதிய யுகத்தின் ஆசீர்வாதங்களுக்குள் பிரவேசிக்கவும் தவறிவிட்டனர். ஆகவே சுவிசேஷ யுகத்தின் இந்த கடைசி காலத்தில் இருக்கும் ஒரு வகுப்பாருக்கும் இது போலவே இருக்கும். குருமார்களின் வழிகாட்டுதலை கண்மூடித்தனமாய் கடைப்பிடிக்கின்றவர்கள் அவர்களோடு கூடவே நாஸ்த்திக படுகுழிக்குள் விழுவார்கள். தேவனோடு உண்மையுடன் நடந்து, அவரது ஆவியில் பங்கெடுத்துக் கொண்டு, அவரது விலையேறப்பெற்ற வார்த்தையின் எல்லா



சாட்சிகளின் மீதும் தாழ்மையுடன் சார்ந்து இருப்பவர்கள் மட்டுமே, சத்தியத்துடன் நீண்டகாலமாய் கலந்து விட்டிருக்கிறதான தவறுகளின் 'அடித்தாள்களை' கூர்ந்து கவனித்து, களைய முடியும்; அத்தோடு திரளான மக்கள் பரிமாண வளர்ச்சி, மிக உயர்வான விமர்சனங்கள், இறைஞானம், கிறிஸ்தவ விஞ்ஞானம், ஆவியுலக தத்துவம், அல்லது வேறு கோட்பாடுகள் போன்ற பல்வேறு வழிகளில் மேன்மையான கல்வாரியின் தியாகத்தின் புண்ணியத்தையும் அவசியத்தையும் மறுத-க்கின்ற நம்பிக்கை துரோகத்தை நோக்கி செயல் பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், இவர்களால் தைரியத்துடனும், சுவிசேஷத்தின் விசுவாசத்தில் நிலைத்து நிற்கவும், தேவனுக்காக இருதயத்தில் உண்மையான பற்றுதலை பெற்றிருக்கவும் முடியும். ஆனால், இந்த "தீங்கு நாட்களில்" நிலைத்து நிற்பவர்கள் *(எபே 6:13)* இப்படி செய்வதினால், தங்களுடைய கிறிஸ்தவ குணாதிசயத்தின் உறுதியை நிரூபிப்பர். இவர்களுக்கெதிரான பிரவாகம் அவ்வளவு கடுமையானதாய் இருக்கும். ஆகையால், தேவனுக்கும், வைராக்கியத்துக்கும், தைரியத்துக்கும் மற்றும் சகிப்புத்தன்மைக்கும் நேரான மெய்யான கிறிஸ்தவ பக்தி, விசுவாசம் மட்டுமே கடைசி வரைக்கும் நிலைத்துநிற்க முடியும். இப்படிப்பட்ட நம்பிக்கை துரோகத்தினை எதிர்கொண்டு வரும் அலைகள் மற்றெல்லோரையும் நிச்சயமாய் இவர்களுக்கு முன்பாய் கொண்டுச் செல்லும். இப்படியாய் எழுதப்பட்டிருக்கிறது: "உன் இடது பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. ஏனென்றால், கர்த்தர் என் அடைக்கலம் என்றும் உன்னதமானவரை உனக்கு தாபரமாகக் கொண்டிருக்கிறாய் என்றும் சொல்-யிருக்கிறாய்.... உன்னதமானவரின் மறைவில் (அர்ப்பணிப்பும், அவரில் பங்கும், ஐக்கியமும்) இருக்கிறவன், சர்வ வல்லவருடைய நிழ-ல் தங்குவான்.... அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார். அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய். அவருடைய சத்தியம் உனக்கு பரிசையும் கேடகமுமாகும்." *சங் 91*

போதகர்கள், ஆசிரியர்கள் மீதோ அல்லது ஆலோசனை கூட்டத்தார் மற்றும் விசுவாச கோட்பாடு மீதோ பொறுப்புளை சுமத்திவிட்டு தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் ஒதுங்க முடியாது. நாம்

நியாயம் தீர்க்கப்படுவது கர்த்தருடைய வார்த்தையினாலேயே அன்றி (யோ 12:48-50, வெளி 20:12) நமது சகமனுஷன், அவர் எந்த ஸ்தானத்தில் இருந்தாலும், அவரது கருத்தின்படியோ அல்லது திருஷ்டாந்திரத்தாலேயோ அல்ல. எனவே, "தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து" தங்களுக்குப் போதித்த காரியங்கள் உண்மையானதா என்று பார்த்த பெரோயா பட்டணத்து விசுவாசிகளின் மாதிரியை யாவரும் பின்பற்ற வேண்டும். (அப் 17:11) நாம் ஏற்றுக்கொண்ட எல்லா காரியங்களையும் தனிப்பட்ட முறையில் நிரூபிப்பதும், நலமானதை பிடித்துக் கொள்வதும் கிறிஸ்தவராகிய நமது கடமையாய் இருக்கிறது. "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின் படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை." ஏசா 8:20; அப் 17:11; 1 தெச 5:21)

இதே கொள்கையானது உலகத்துக்குரிய மற்றும் ஆவிக்குரிய காரியங்களில் உண்மையாக இருக்கிறது. அரசாங்கத்தின் பல்வேறு துறைகள் என்னும் கப்பல்கள் அழிவை நோக்கி மிதந்து சென்றுகொண்டிருக்கையில் மோதிச்சிதறும் அலைகள் எதிர்கொண்டு வருவதைக் காண்பவர்கள், பொதுவாக இப்படிப்பட்ட தொடர் சம்பவங்களை மாற்றி அமைக்க அவர்களால் கூடாமல் போகும். ஆனால் குறைந்தபட்சம் ஓரளவிற்காவது, தவிர்க்கமுடியாத பெரும் ஆபத்தின் காரணமாக தங்களது சொந்த நடத்தையை சரிபடுத்திக்கொள்ள தற்போதையை சந்தர்ப்பங்களை ஞானமாய் பயன்படுத்திக் கொள்ளலாம். உயிர் தப்பிக்க உதவும் படகுகளையும், உயிரை பாதுகாக்கும் சாதனங்களையும் அவர்கள் தயார் செய்து கொள்ளலாம். அப்பொழுது தான் அராஜகம் என்னும் அலைமோதி அரசாங்கம் என்னும் கப்பல்கள் உடையும்போது, அலைகளுக்கு மேல் தங்கள் தலைகளை தூக்கிப்பிடித்து, உயர்வான இடத்தில் ஒரு இளைப்பாறுதலை கண்டுகொள்ளக்கூடும். வேறுவிதத்தில் சொல்வதானால், கோட்பாடுகளை குறித்து ஏதும் சொல்லாமல், இந்த நாட்களில் நியாயமாய், பெருந்தன்மையாய் மற்றும் இரக்கத்துடன் நமது சகமனிதனுடன் இருப்பதே, ஞானமுள்ள கொள்கை. ஏனெனில் கோபம் கொண்டுள்ள தேசங்களின் கடுமையான கோபாக்கினையி-ருந்து மகாபெரும் உபத்திரவம் திடீரென



வெளிவரும். அது மிகுந்த சாதகங்கள் நிறைந்த, உயர்குலத்து மற்றும் ஆளுகின்ற கூட்டத்தினருக்கு எதிராக விழிப்படைந்த ஜனத்தின் அதிருப்தி மற்றும் வெறுப்பி-ருந்து கிளம்பும். அதிருப்தியின் விஷயம் குறித்து தற்காலத்தில் சற்று விரிவாய் விவாதிக்கப்படுகிறது. தற்போது கோபாக்கினையின் புயல் வெடிப்பதற்கு முன், தங்களது கோட்பாடுகளை வெளிப்படுத்துவதற்கு தனிப்பட்ட மனிதனுக்கு இதுவே சமயம். தங்களுடைய வார்த்தையினால் மட்டுமின்றி, தங்களுடனான சகமனுஷரிடம் உள்ள எல்லா உறவுமுறைகளினாலும் அது வெளிப்படுத்தப்பட வேண்டும். நம்மைப்போல் பிறனை நேசிக்கக் கற்றுக்கொண்டு, அதன்படி கிரியை செய்யவேண்டும் என்ற கோட்பாட்டின் பொன்னான கற்பனைகளை அறிந்து அதை நடைமுறைப்படுத்த வேண்டிய காலகட்டமாக இருக்கிறது. தற்போதைய காரியங்களின் செயல்களின் விளைவாக வரப்போகும் சமீப காலத்தின் சம்பவங்களைக் குறித்து அக்கறை அடைவதற்கு போதுமான ஞானமுடையவராய் மனுஷர் இருப்பாரேயாகில், இவைகளை கோட்பாடுகள் மூலமாக இல்லாவிடினும் கொள்கையின் மூலமாக அவர்கள் செய்யக்கூடும்.

கொடூரமான குழப்பத்தின் மத்தியிலும், நீதி, பெருந்தன்மை மற்றும் இரக்கத்தை காண்பிக்கிறவர்களுக்கு எதிராக பாரபட்சங்கள் இருக்கும்; அதோடு கொடுமைகளை நடத்தி அதற்கு துணை போகிறவர்களுக்கு எதிராய் மிகக்கடுமையான கோபாக்கினையானது வரப்போகிற உபத்திரவத்தில் இருக்கும் என்று, யூகிப்பதும் நியாயமானதே. பிரெஞ்சுப் புரட்சியின் பயங்கரத்தின் மத்தியிலும் கூட இவ்விதம் தான் இருந்தது; எனவே மறுபடியும் அதேவிதத்தில் தான் இருக்கும். இதைக்குறித்து கர்த்தருடைய வார்த்தையின் ஆலோசனையானது ஏற்கனவே முன்னறிவித்திருப்பதாவது: "நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்." "தீமையை விட்டு விலகி, நன்மை செய்; சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்து கொள். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்கு திறந்திருக்கிறது. தீமை செய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்

போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது." *(செப் 2:3; சங் 34:14-16)* இந்த ஞானமான வார்த்தையும், எச்சரிப்பும் பொதுவாய் உலகமனைத்துக்கும் உரியது. "பரிசுத்தவான்கள்", "சிறுமந்தை", "ஜெயம் கொள்ளுகிறவர்கள்" எனப்பட்டவர்களை பொருத்தமட்டில் உலகத்தின் மீது வரப்போகிறதான இவை எல்லாவற்றுக்கும் தப்பித்துக் கொள்ளும் தகுதி படைத்தவராய் எண்ணப்படுவார்கள் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். லூக் *21:36*

## மகா உபத்திரவத்துடனும், கிறிஸ்தவ ராஜ்யத்துடனும் புறஜாதி தேசங்களுக்கு இருக்கும் சம்பந்தம்

அதிகமான வெளிச்சத்துக்கும் சிலாக்கியங்களுக்கும் எதிராக பாவம் செய்தபடியினால், கிறிஸ்தவ ராஜ்யங்களின் மீது கர்த்தருடைய கடுங்கோபம் விசேஷமாய் வரவேண்டியிருந்தபோதிலும், புறஜாதி ராஜ்யங்கள் இதினிமித்தம் பொறுப்பு அற்றவர்களாகவோ அல்லது தண்டிக்கப்படாமலோ போவதில்லை என்று வேதவசனங்கள் தெளிவாய் காட்டுகின்றன. அநேக சந்ததிகளாய், அநேக நூற்றாண்டு காலமாய் இவர்கள் அநீதிகளில் சந்தோஷம் அடைந்து வந்திருக்கின்றனர். கடந்த காலங்களில் இவர்களுடைய பிதாக்கள் தேவனை மறந்துவிட்டனர். ஏனெனில் அவரது நீதியின் அதிகாரத்தை நினைவில் வைத்துக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. வெளிச்சத்தைக் காட்டிலும் அவர்கள் இருளையே விரும்பினார்கள். அதோடு வேண்டுமென்றே தங்களுடைய அதிநவீனமான சுயகற்பனைகளையே தொடர்ந்து அனுசரித்தனர். மேலும், இந்நாள் வரைக்கும் கூட, அவரது பின்சந்ததியார் அதே கீழ்நோக்கிப் போகும் காரியங்களிலேயே கொஞ்சமும் பிசகாமல், தற்காலம் வரை நடக்கின்றனர்.

இந்த தேசங்களின் பொறுப்புகளைப் பற்றி அப்போஸ்தலர் பவுல் நமக்கு கர்த்தருடைய எண்ணத்தில் இருப்பதை மிகத்தெளிவாகக் கூறுகிறார். *(ரோம 1:18-32)* "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷனுடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்தி-ருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய் காணப்படும்; ஆதலால் *(இந்த இயற்கையின் ஒளியைக் கொண்டு, அதாவது இயற்கையின் சாட்சியானது தேவனுடைய வல்லமையையும், நலன்களையும் அவர் இருப்பதை குறிப்பதாகவும், எது தவறு, எது சரியென்று சுட்டிக்காட்டுகின்ற மனசாட்சியை உடையதாகவும் இருக்கிறது)* அவர்கள் போக்குச்சொல்ல இடம் இல்லை. *(வாழ்நாள் முழுவதிலும் ஒரு தீமையான செயலை அனுசரிப்பதில் தொடர்ந்து இருப்பது)* அவர்கள் தேவனை அறிந்தும் *(குறைந்தபட்சம் ஓரளவிற்காவது)*, அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. *(இப்படிப்பட்ட இந்த செயல்களின் இயற்கையான விளைவினால்)* அவர்கள் தங்களை ஞானிகள் என்று சொல்-யும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனின் மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். அவரே என்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர், ஆமென்.

"இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புகொடுத்தார். *(அவர்களை மீட்பதற்கு தேவன் தொடர்ந்து முயற்சி செய்யவோ, போராடவோ செய்யாமல் அவர்கள் தெரிந்து கொண்ட தீமையின் காரியங்களிலேயே தொடர்ந்து இருக்கவும், அதனுடைய கசப்பான கனிகளை அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்ளும்படியாகவும் அவர்களை தனியேவிட்டுவிட்டர்)*...

தேவனை அறியும் அறிவை பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லா திருந்தபடியினால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும், நிறையப்பட்டுப் பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும், நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தை உள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய்... உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கையை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்துக்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்."

இங்கு சொல்லப்பட்டிருப்பதைப் போல் தேவனையும் அவரது நீதியையும் குறித்து ஆரம்ப காலத்தில் உலகம் அறிந்திருந்த உண்மையை புறஜாதி தேசங்கள் நெடுநாளைக்கு முன்னமே நசுக்கிவிட்டபோது, தங்களுடைய செயல்கள் தீமையானபடியினால் வெளிச்சத்தைக் காட்டிலும் இருளையே அதிகம் வாஞ்சித்தனர். தங்களது தீய வழிகளை நியாயப்படுத்துகிறவைகளான பொய்யான மதங்களை தங்களுடைய தீமை மற்றும் பயனற்ற வீணான கற்பனைகளினால் கண்டுபிடித்தனர். மேலும், அவர்களது போதனைகளுக்கு பங்காளர்களாகி, அவர்களது அடிச்சுவடுகளில் நடப்பதின் நிமித்தம், தங்களுடைய முற்பிதாக்களின் தீமையான நடவடிக்கைகளை பின்வரும் சந்ததியார் ஏற்றுக்கொண்டு, நியாயப்படுத்தி வருகிறார்கள். தற்போதைய அதே கொள்கையின் படி தங்களுடைய மீறுதல்கள் மற்றும் குற்ற உணர்வுகளின் திரட்சியினைக்கூட கற்பனை செய்துகொள்கின்றனர். ஆனாலும், இயேசு கிறிஸ்துவினால் இந்த உலகத்திற்குள் ஒளிவந்தது என்ற



உண்மையை புறஜாதி ராஜ்யங்கள் முற்றிலுமாய் அறியவில்லை என்று கூறமுடியாது. கிறிஸ்துவின் வருகைக்கு முன்பேகூட அற்புதமான இஸ்ரயே-ன் தேவனானவர், தமது ஜனங்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்புகளின் மூலம், அநேக புறஜாதி தேசங்களால் அறியப்பட்டிருந்தார். மேலும், சுவிசேஷ யுகம் முழுவதிலும் தேவனுடைய பரிசுத்தவான்கள் நற்செய்தியை பிறநாடுகள் எங்கும் சுமந்து சென்றனர்.

இங்கும் அங்குமாய் சில தனிப்பட்டமனுஷர் சத்தியத்தைக் கண்டு கொண்டனர். ஆனால், தேசங்கள் இதை பொதுவாகவே நிராகரித்து, இருளில் நடந்தன. ஆகவே, "சகல ஜாதிகளின் மேலும் கர்த்தருடைய கடுங்கோபம் மூளுகிறது." *(ஏசா 34:2)* சுவிசேஷமும், அதன் மேன்மையான சிலாக்கியங்களும் இன்றி தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க தகுதியற்றதாய் புறஜாதி தேசங்கள் இப்போது நியாயம் தீர்க்கப்படுகின்றன. கிறிஸ்தவ ராஜ்யங்கள் என்று அழைக்கப்படும் தேசங்களும் கூட சுவிசேஷ வெளிச்சம் மற்றும் சிலாக்கியங்களைப் பெற்றும், சத்தியம் மற்றும் நீதியின்படி நடக்காததால் அவைகள் தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்கு தகுதியற்றவைகளாக நியாயம் தீர்க்கப்படுகின்றன.

ஆகவே, எல்லா வாய்களும் மூடப்பட்டு, உலகம் முழுவதும் தேவனுக்கு முன்பாக குற்றமுள்ளதாய் நிற்கிறது. எல்லா ஜாதிகளுக்குள்ளும், "உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவனும் இல்லை; எல்லோரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை."

தேவனுடைய நீதி, ஜாதிகளை தண்டிப்பதில் மிகவும் வெளியரங்கமாய் இருக்கிறது. புறஜாதி தேசங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்க பிரதிபலனான நீதியைப் பெறுகின்றபோது, கிறிஸ்தவ ராஜ்யங்களின் மேன்மையான பொறுப்பும் மறக்கப்பட்டுவிடக்கூடாது. புறஜாதிகளைக் காட்டிலும் யூதர்கள் பெற்றிருக்கிற சிலாக்கியங்கள், "எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது; தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையே." *(ரோம 3:1,2)* அப்படியானால் பிரமாணம் மற்றும் சுவிசேஷம் ஆகிய இரண்டு

சிலாக்கியங்களையும் பெற்றவர்களாகிய கிறிஸ்தவ ராஜ்யங்களைக் குறித்து நாம் என்ன சொல்லக்கூடும்? எழுதியிருக்கிறபடியே அன்றைய யூத ஜாதிகள், அவர்கள் மத்தியில் இருந்த புறஜாதிகளுக்குள்ளே தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது போலவே, இன்றைய கிறிஸ்தவ உலகமும் நடந்துகொள்வதும் உண்மையாகவே இருக்கிறது. (ரோம 2:24) உதாரணமாக, தங்கத்தின் மேல் இருக்கும் ஆசையினால் கிறிஸ்தவ ராஜ்யங்களிள் மதுபானம் மற்றும் அபின் முத-ய வஸ்துக்களின் சட்டவிரோதமான பரிமாற்றங்களை புறஜாதி தேசங்களுடன் செய்கிறது.

"நியூயார்க் வாய்ஸ்" என்ற பத்திரிக்கையில் தனது சொந்த அனுபவ ஞானத்தில் ஒரு நம்பத்தகுந்த சாட்சியம் சில காலங்களுக்கு முன் வெளி வந்ததாவது :

"காங்கோ மற்றும் மேற்கு கடற்கரையில் (ஆப்பிரிக்காவில்) எனது சொந்த கவனிப்பின்படி தற்போதும், முன்பும் இருந்த அடிமை வியாபாரத்தைக் காட்டிலும் குடிப்பழக்கமானது அந்த நாட்டு ஜனங்களை மிகுந்த கேட்டுக்குள்ளாக்குகிறது என்று அநேக மிஷினரிகளும் மற்றவரும் கூறுகின்றனர். அது ஜனங்களை கொன்று, கிராமங்களை சீரழிக்கிறது. இது ஆயிரமாயிரம் உயிர்களை கொலை செய்வதோடு மட்டுமின்றி மொத்த இனத்தையும் நெறி தவறச்செய்து, சரீரத்தையும் ஆத்துமத்தையும் அழிக்கிறது. அதோடு தங்களது நெறிகெட்ட, சொந்த ரூபத்திலேயே பிறக்கின்றவர்களுக்கு பெற்றோர்களாகும்படி விட்டுவிடுகிறது.... எல்லா தொழிலாளிகளுக்கும் மத்தியான வேளையில் மிக அதிக அளவு ரம் என்ற மதுபானம் கொடுக்கப்படுவதோடு, ஒவ்வொரு சனிக்கிழமை இரவும் அவர்களது வேலைக்கான கூ-யாக குறைந்தபட்சம் இரண்டு பாட்டிலாவது ஜின் என்ற மதுவகையை எடுத்துக் செல்லும்படி வற்புறுத்தப்படுகின்றனர். அநேக தொழிற்சாலைகளில் ஒன்று, அல்லது இரண்டு, மூன்று வருட ஒப்பந்தம் முடிவடையும்போது, ரம் எனப்படும் மதுவகையை ஒரு பீப்பாயோ அல்லது சில பெட்டிகள் அல்லது Demijohns ன் ஜின் என்ற மதுபானத்தை தங்களுடன் வீடுகளுக்கு எடுத்துச்செல்ல நிர்பந்திக்கப்படுகின்றனர். உள்நாட்டு வியாபாரிகளும் தங்களது உள்நாட்டு பொருள்களுக்கு பண்டமாற்றாக பெருமளவிலான மதுபானங்களையே பெற்றுக்கொள்ள



கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அவர்கள் இதற்கு ஆட்சேபனை தெரிவித்தபோதும், எந்த தீர்வும் காணப்படவில்லை. இதனால் இந்த மதுபானங்களை ஆற்றில் ஊற்றிவிடுவர். வியாபாரிகள் கூறுவது, கறுப்பர்கள் தான் ரம்மை எடுத்துச் செல்ல வேண்டும். அவைகளை உப்புக்காகவும், துணிகளுக்காகவும் நாங்கள் விற்றால் எங்களது வீடுகளில் இருக்கும் குடும்பத்தினருக்கு போதிய பணம் சம்பாதிக்க எங்களால் இயலாது. பட்டணங்கள் யாவும் ஒவ்வொரு ஞாயிறு தோறும் குடியின் கலவரமும் குழப்பமும் முழங்குகிறதாய் இருக்கிறது. சில கிராமங்களில் ஆண், பெண் குழந்தைகள் யாவரும் மதிகெட்டு குடிக்கின்றனர். மேலும் இதனால் முன்னிருந்த மதத் தொண்டுகள் யாவும் சிதைந்துவிட்டன. சுவிசேஷகர்களிடம் தலைவர்கள் கவலையுடன் சொல்வதாவது: "தேவ மனுஷராகிய நீங்கள் இந்தக் குடிபழக்கம் வருவதற்கு முன் ஏன் வரவில்லை? இந்தக் குடியானது எங்கள் ஜனத்தின் புத்தியைத் தின்று இருதயம் கடினப்பட்டு விட்டது. அவர்களால் எதையும் புரிந்துக்கொள்ள முடியாது. நலமான எதைக் குறித்தும் அவர்கள் அக்கறை கொள்ளமாட்டார்கள்."

சில புறஜாதியார் கிறிஸ்தவ வேதாகமத்தை தங்கள் முன் பிடித்துக்கொண்டு, "உங்களது நடவடிக்கைகள் உங்களது பரிசுத்த புத்தகத்தின் போதனைகளோடு தொடர்புடையதாக இல்லையே" என்று சொல்வதாகவும் கூட பேசப்படுகிறது. பிராமணர் ஒருவர் சுவிசேஷகர் ஒருவருக்கு எழுதியதாக கூறப்படுவது:" நீங்கள் புறம்பானவர்களாய் இருப்பதை நாங்கள் காண்கிறோம். உங்கள் வேதத்தைப் போல நீங்கள் நல்லவராக இல்லை. உங்கள் வேதத்தைப் போலவே உங்கள் ஜனங்கள் நல்லவராக இருந்தால் மட்டுமே, இந்தியாவை ஐந்து வருடத்தில் கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்துவிட முடியும்." எசே 22:4ஐ பார்க்கவும்.

உண்மையாகவே நினிவேயின் மனுஷரும், தென்தேசத்து ராஜஸ்திரீயும், நியாயத் தீர்ப்பு நாளிலே அந்த சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றம் சுமத்துவார்கள். (மத் 12:41,42) பிறகு இஸ்ரயேலும், மற்றும் முன்னான சந்ததிகளும் அதற்குப்பிறகு புறஜாதியாரும், கிறிஸ்தவ ராஜ்யத்தின் இந்த சந்ததியாருக்கு எதிராக எழும்புவார்கள். ஏனெனில், எவனிடத்தில் அதிகம்

கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகமாய் கேட்கப்படும். லூக் *12:48*

ஆனால், நியாயமான நெறியுடனான பழிவாங்குதல் என்ற கேள்வியை கைவிட்டுவிட்டாலும், இந்த விஷயம் இயற்கையிலேயே கிறிஸ்தவ ராஜ்யம், பாபிலோன் ஆகியவையின் வீழ்ச்சியினால் புறஜாதிகளின் ராஜ்யங்கள் யாவும் உபத்திரவப்பட வேண்டியது எப்படி என்று நாம் பார்க்கிறோம். நேரடியாகவும், மறைமுகமாகவும் தேவனுடைய வார்த்தையின் செல்வாக்கின் மூலமாய், கிறிஸ்தவ ராஜ்யங்கள் எல்லா வழிகளிலும் மாபெரும் முன்னேற்றத்தை நாகரீக வளர்ச்சியிலும், பொருளாதார செழுமையிலும் பெற்றன. ஆகவே, சம்பத்து, சௌகரியம், அறிவுப்பூர்வமான மேம்பாடு, கல்வி, சமுதாய அரசியல், விஞ்ஞானம், கலை, உற்பத்தி, வர்த்தகம் மற்றும் மனிதனுடைய தொழில்களின் எல்லாத்துறைகளிலும், தேவ வார்த்தையின் வெளிப்பாட்டின் செல்வாக்கினால் அவ்வளவு சலுகைகளை பெறாத புறஜாதிகளை விட இவர்கள் அதிக முன்னேற்றத்தில் இருக்கின்றனர். ஆனால், அதற்கு நேர்மாறாக, ஒரே சீரான சரிவையும் அனுபவித்து, அதன் நிமித்தம் கடைசியில் பண்டைக்கால மேன்மைமிகு செழுமையின் சிதைவுகளையே வெளிக்காட்டும் நிலையில் உள்ளன. எடுத்துக்காட்டாய் ஒப்பிடும்போது கல்விக்கும், ஐசுவரியத்துக்கும் இடமாயிருந்த பண்டைய கிரேக்க நாட்டுடன் தற்போதிருக்கும் கிரேக்க நாட்டை ஒப்பிடலாம். உலகமனைத்துக்கும் பிரதான ராஜ்யமாய் முன்னொரு காலத்தில் இருந்த பண்டைய எகிப்தின் மகிமை தற்போது பாழாக்கப்பட்டிருப்பதையும் கூட குறிப்பிடலாம்.

புறஜாதிகளின் வீழ்ச்சி மற்றும் கிறிஸ்தவ ராஜ்யங்களின் செழுமை, நாகரீக வளர்ச்சியின் சரிவு ஆகியவையின் பலனாக, வர்த்தகம், சர்வதேச தொடர்புகள் மற்றும் அதன் பலனாக திட்டங்களின் விரிவாக்கம் போன்ற பல லாபகரங்களுக்காக அநேக சாதகமான மேம்பாடுகளுக்காக ஏறக்குறைய பின்னானவற்றுக்கு முன்னான தேசங்கள் யாவும் கடமைப்பட்டிருக்கின்றன. அதோடு கூட, சமீப காலத்தின் முன்னேற்ற பாதை, பல்வேறு பொதுநாட்டங்களினால் எல்லா தேசங்களும்



இணைக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவேளை ஒருசில நாடுகளில் காரியங்கள் சரிபடுத்தப்படவில்லையென்றால் அது விரைவில் எல்லா தேசங்களையும் பாதிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இவ்விதமாகவே பாபிலோனாகிய கிறிஸ்தவ ராஜ்யமானது திடீரென விழும்போது, அதன் பாதிப்பானது இதனுடன் ஏறக்குறைய சார்புடைய எல்லா தேசங்களின் மீதும் மிகத்தீவிரமாய் இருக்கும். இது வெளிப்படுத்துத-ன் அடையாள பாஷையில், பாபிலோன் மகா நகரத்தின் வீழ்ச்சியின் பெரும் புலம்பலுக்கு ஒப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது. வெளி *18:9-19.*

ஆனால், பாபிலோனின் வீழ்ச்சியினால் மட்டுமே புறஜாதி தேசங்கள் உபத்திரவப்படுவது மட்டுமன்றி, சமூக, அரசியல் குழப்பம் மிக விரைவாய் பரவி, யாவரையும் உட்படுத்தி, விழுங்கிடும்படியாக இருக்கும். மேலும், இவ்வண்ணமாய் முழு உலகமே அழியும். அதோடு மனுஷனின் அகந்தையானது அழியும். ஏனெனில், "பழிவாங்குதல் எனக்கே உரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." *(ரோ 12:19, உபா 32:35)* மேலும் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு கிறிஸ்தவ ராஜ்யத்தின் மீதும், புறஜாதி தேசங்களின் மீதும் சமமான, மிகக்கடுமையான வழியில் இருக்கும்.

## வருகின்ற புயல்

*"ஓ ! வருகின்ற புயலுக்காக என் இதயம் வருத்தமாய் இருக்கிறது;*
*கழுகுகளைப் போல் கார்மேகம் கட--ருந்து*
*அடித்துச்செல்கிறது; கடற்பறவை தன் மறைவிடத்தைத்*
*தேடுகிறது, பைன் மரங்கள் பெருமூச்சு விடுகின்றன,*
*மேலும் இவையாவும் வரும் கடும்புயலுக்கான குறிப்பை*
*தருகின்றன.*

*"ஒரு வார்த்தையானது குகையி-ருந்தோ,*
*கட--ருந்தோ ரகசியமாய் வெளிப்பட்டது,*
*மேய்ப்பர்கள் உறங்கிக்கொண்டிருக்கின்றனர்,*
*காவலர்கள் ஊமைகளாய் இருக்கின்றனர்,*
*மந்தைகள் யாவும் தரிசு நிலத்திலும் மலைகள் மீதும் சிதறிவிட்டன,*
*மேலும் ஆண்டவர் வருகிறார் என்பதை ஒருவரும் நம்பவில்லை.*

*"அவர் வந்துவிட்டார், ஆனால் அவர்களது காவலராய்*

*யாரைக் காண்பார்?*
*ஓ ! எங்கே, அவரது பிரசன்னத்தில் உலகம் விசுவாசம்*
*வைக்கவில்லையே? செல்வந்தர், மிதமிஞ்சிய*
*சௌகரியத்தில் மூழ்குவதிலேயே இருக்கினறனர்.*
*ஏழைகள் வாசலருகே இருக்கும் ஓநாய்க்கு பயந்து*
*வெறுப்புறுகின்றனர்.*

*"ஓ, மனிதனே, ஓ, மனுஷியே, அற்பமானதையும்*
*இன்பத்தையும் கைவிடுங்கள் !*
*ஓ, வரும் துன்பத்தை நான் கூறும்போது உற்று கவனி !*
*அங்கே நகர்ந்து செல்லும் பனிப்பாறையின் பாதையில் நான்*
*முறையிடட்டும், அல்லது கட-ன் அலையினிடத்தில்*
*ஒரு எச்சரிப்பை கூவட்டும்!"*

*அ அ*

## அத்தியாயம் 4

# மகா நீதிமன்றம் முன் பாபிலோன் குற்றஞ்சாட்டப்படுதல்

பாபிலோனின் சமூக, சமுதாய, மத சம்மந்தமான அதிகாரங்கள், கிறிஸ்தவ தேசங்கள், தற்போது தராசில் நிறுக்கப்படுதல் - சமுதாய அதிகாரங்களின் மீதான குற்றச்சாட்டுக்கள் - தற்போதைய சமூக அமைப்பின் மீதான குற்றச்சாட்டுக்கள் - மத அதிகாரங்களின் மீதான குற்றச்சாட்டுகள்-இப்போதும் கூட அவளது களியாட்டத்தின் நடுவே அவளது அழிவைக் குறித்த கையெழுத்து காணப்படுதல் மற்றும் தெளிவாக படிக்க கூடியது, சோதனையானது இன்னும் முடிவு பெறவில்லை.

"வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் வசனித்து, சூரியன் உதிக்குந் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசைவரைக்குமுள்ள பூமியைக் கூப்பிடுகிறார். அவர் தம்முடைய ஜனத்தை (கிறிஸ்தவ தேசங்களை) நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் (மேலான அல்லது ஆளும் அதிகாரங்கள்) பூமியையும் (திரளான மக்களை) கூப்பிடுவார்."

"என் ஜனமே,கேள், நான் பேசுவேன், இஸ்ரயேலே (பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர் மற்றும் கிறிஸ்தவ ராஜ்யம் என்னும் பாபிலோன்) உனக்கு விரோதமாய் சாட்சியிடுவேன்."

"தேவன் துன்மார்க்கனை நோக்கி : நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு."

"சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்கு பின்னாக எறிந்து போடுகிறாய். நீ திருடனைக் காணும்போது அவனோடு ஒருமித்துப்போகிறாய், விபசாரரோடும் உனக்குப் பங்குண்டு. உன் வாயை பொல்லாப்புக்குத் திறக்கிறாய், உன் நாவு சற்பனையை பிணைக்கிறது."

"நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு (பரிசுத்தவான்களாகிய

உண்மையான கோதுமை வகுப்பார்) விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்."

"இவைகளை நீ செய்யும் போது நான் மவுனமாயிருந்தேன், உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவுகொண்டாய், ஆனாலும், நான் உன்னை கடிந்து கொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன்.

"தேவனை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக்கொள்ளுங்கள், இல்லாவிட்டால் நான் உங்களை பீறிப்போடுவேன், ஒருவரும் உங்களைப் விடுவிப்பதில்லை." *சங் 50:1,4,7,16-22*

**கி**றிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சிக்கான ஆயத்த நாளில் எல்லா துறைகளிலும், அறிவு பெருக்கமாகி மிகவும் பொருத்தமான விளைவுகள் அனுமதிக்கப்பட்டிருக்கும் போது, பாபிலோனாகிய கிறிஸ்தவ ராஜ்யத்தின் சமூக மற்றும் சமய அதிகாரங்கள், உலகின் முழு பார்வையிலும் நீதி என்னும் தராசில் இப்போது நிறுத்தப்படுகிறது. நியாய தீர்ப்பின் நேரம் வந்திருப்பதால், நியாயாதிபதி தன் ஆசனத்தில் இப்போது இருக்கிறார். சாட்சிகளும் பொது ஜனங்களும் தற்போது ஆஜராகி உள்ளனர். தங்களுக்காக தாங்களே வாதாட அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இதன் வழக்குகள் வெளியரங்கமான பொது நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன ; இதை முழு உலகமும் தீவிரமான, பரபரப்பான ஆர்வத்தோடு பார்க்கிறது.

இந்த உண்மையான அதிகாரங்களின் மாபெரும் நியாயாதிபதியை சமாதானப்படுத்துவது இந்த விசாரணையின் நோக்கம் அல்ல; ஏனெனில் அவர்களது அழிவானது நமக்கு முன்னெச்சரிக்கையாய் தேவனுடைய "உறுதியான தீர்க்கத்தரிசன வசனத்தால்" ஏற்கனவே அறிவிக்கப்பட்டிகிறது; மேலும், ஏற்கனவே ராஜ அரண்மனையின் சுவரில் மாயமான கரத்தின் எழுத்துக்களான "**மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்**"என்ற வாசகம் மனுஷன் வாசிக்கக்கூடியதாய் இருக்கிறது. ஆகவே, இப்போது நடக்கும் விசாரணையானது போதனைகள், அதிகாரங்கள் முதலானவைகளில் சரி எது தவறு எது என்ற வாக்குவாதம் சம்பந்தப்பட்டது. இதை எல்லா மனிதர் முன்பும் வெளியரங்கமாக்கி உண்மையான



பாபிலோனின் குணாதிசயத்தை தெளிவாய் காட்டவேண்டும். அப்போது இத்தனை காலமும் அவளது போ- உரிமைகளால் மனுஷர் வெகுகாலமாய் ஏமாற்றப்பட்டு வந்திருந்தாலும், கடைசியில் இந்த நியாயத் தீர்ப்பின் காரியங்களால் பாபிலோனின் இறுதியான அழிவிலே தேவனுடைய நீதியை மனுஷர் முழுமையாய் உணர்ந்து கொள்வர். இந்த விசாரணையில், அவளது மேன்மையான புனிதத்தின் உரிமை, தெய்வீக அதிகாரம், உலகை ஆள நியமிக்கப்பட்டதாய் கூறிக் கொள்ளுதல்,மேலும் அருவருப்புமிக்க முரண்பாடான போதனைகளின் உரிமை ஆகிய இவையாவுமே கேள்விக்குறியாகிவிட்டது.

திரளான சாட்சிகள் முன்பு வெளிப்படையான அவமானமும், குழப்பமுமான தோற்றத்துடன், சமூக மத அதிகாரங்கள் தங்கள் பிரதிநிதிகளாகிய ஆட்சியாளர்கள், மதகுருக்கள் மூலமாக தங்கள் கணக்குகளை ஒப்படைக்க முயற்சி செய்வார்கள். இதுவரை சரித்திர ஏடுகளில் காணாத அளவு காரியங்களின் சூழ்நிலை இருக்கும். தற்போது இருக்கும் அளவு சோதிக்கப்படுவதோ, குறுக்கு கேள்விகள் கேட்கப்படுவதோ, விமர்சிக்கப்படுவதோ, வெளியரங்கமான நியாய மன்றத்துக்கு முன்பாக மதஅதிகாரிகள், அரசாங்க நிர்வாகிகள் மற்றும் சமூக ஆளுநர்கள் யாவரும் நின்றதோ இதற்கு முன்பு இருந்தது இல்லை; இதன் மூலம் இருதயத்தை ஆராயும் கர்த்தரின் ஆவியானது அவர்களது மகாபெரிய குழப்பங்களின் மீது கிரியை செய்கிறது. இந்த காலங்களின் ஆவி சோதிக்கப்படுதல், குறுக்குக் கேள்விகள் கேட்கப்படுதல் போன்றவைகளை தவிர்ப்பதற்கு அவர்கள் எடுக்கும் முடிவுகளும் முயற்சிகளும் தாக்குப்பிடிக்க முடியாததால் அவர்கள் சகித்துக்கொள்ள கடமைப்பட்டனர். விசாரணையும் தொடர்கிறது.

## பாபிலோன் தராசில் நிறுக்கப்பட்டது

கிறிஸ்தவ ராஜ்யம் தங்களது சமூக, சமய அதிகாரங்கள் ஆளுவதற்காக தங்களுக்கே கொடுக்கப்பட்ட தெய்வீக அதிகாரம் என்று கூறுவதை திரளான மக்கள் தைரியமாய் இன்று அறைகூவல் விடுகின்ற பொழுது, தேவனே இந்த உரிமையின் குத்தகையை அளித்தார் என்றோ, அனுமதித்தார் என்றோ அவர்களோ அல்லது ஆட்சியாளர்களோ சொல்ல முடிவதில்லை. மேலும் மக்கள்

“புறஜாதியாரின் காலம்” முடியும் மட்டும் நல்லதோ, கெட்டதோ அதிகாரக் குத்தகையை கையில் எடுத்துக் கொண்ட மானிட ஆட்சியாளர்கள் தெரிந்தெடுக்கவோ, சகிக்கவோ செய்வார்கள். இந்த காலகட்டத்தில் தனது சொந்த காரியங்களைத் தாங்களே சமாளித்துக் கொள்ளவும், சுயமாய் ஆட்சி செய்து கொள்ளும்படியாகவும், உலகை பெருமளவில் தேவன் அனுமதித்திருக்கிறார்; இப்படிச் செய்வதினால் அதன் முடிவில் தங்களது வீழ்ந்து போன நிலையில் சுயமாய் தங்களை ஆண்டு கொள்ள தகுதியற்றவர்கள் என்று உணர்ந்து அதனால் தேவனையோ அல்லது ஒருவரை ஒருவரையோ சார்ந்திருப்பார்கள். ரோம. 13:1

உலகின் ஆட்சியாளர்களும், ஆட்சி வகுப்பாரும் இதை கண்டுகொள்ளாமல் ஆனால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தை மட்டும் உணர்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அறிவீனரோ, அறிவாளியோ யாராயிருந்தாலும் அவர்களது அனுமதி மற்றும் சகிப்புத்தனத்தினால் குறைவான சிலாக்கியமுடைய திரளான மக்கள் மீது சுயலாபம் கருதி நெடுங்காலமாய் அதிகாரத்திலேயே நிலைத்து விட்டனர்; கல்வியறிவு அற்ற கூட்டத்தார் மீது முரண்பாடான போதனையான சமூக மற்றும் சமய, தெய்வீக நியாயமான மற்றும் “ராஜாக்களின் தெய்வீக உரிமை ” ஆகியவற்றை திணிக்க விடாமுயற்சி செய்கின்றனர். தங்களுடைய கொள்கைகளுக்கு மிகவும் சௌகரியமானபடி, இந்த போதனைகளை ஆழமாய் பதித்ததின் மூலம் பல நூற்றாண்டுகளுக்கு மக்களிடையே அறியாமையும், மூடநம்பிக்கையும் வளர்க்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டிருந்தது.

வெகு சமீபகாலமாகத்தான் அறிவும் கல்வியும் பொதுவான ஒன்றாய் ஆகியது. அதுவும் ராஜாக்கள் மற்றும் மத அதிகாரிகளின் முயற்சியினால் அல்ல. ஆனால் அதிர்ஷ்டவசமான சூழ்நிலையின் நிர்பந்தத்தினாலேயாகும். அச்சடிக்கும் எந்திரமும், நீராவி எஞ்சின் போக்குவரத்துமே இவைகளின் முன்னேற்றத்தின் முக்கிய காரணமாயின. இந்த தெய்வீக குறுக்கீட்டுக்கு முன்னதாக, திரளான மக்கள், அதிகபட்ச அளவில் ஒருவரைவிட்டு ஒருவர் ஒதுங்கியே தனிமைப்பட்டு இருந்தனர். இவர்களால் தங்கள் சொந்த அனுபவத்தைத் தாண்டி எதையுமே கற்றுக்கொள்ள முடியாமல்



இருந்தது. ஆனால், மேற்கூறிய சாதனங்கள் போக்குவரத்திலும் சமூக மற்றும் வியாபார பரிமாற்றங்களிலும் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தைக் கொண்டுவந்த கருவிகளாய் இருந்தன. இதனால் எந்த ஒரு நிலையிலும், பதவியிலும் இந்த எல்லா மனிதரும், உலக முழுவதிலும் இருக்கும் அநேகரின் அனுபவங்களால் பயன்பெற முடிந்தது.

இப்போது இருக்கும் பொதுமக்கள் படிக்கக்கூடிய பொதுமக்களாகவும், பிரயாணிக்கிற பொதுமக்களாகவும், சிந்திக்கக்கூடிய பொதுமக்களாகவும் இருக்கின்றனர். மேலும், இவர்கள் அதிருப்தியாளர்களாயும், ஆரவாரம் செய்கிறவர்களாயும் வேகமாய் மாறிவருகின்றனர்; பழைய முறைமையின் காரியங்களில் தங்களை அடிமைப்படுத்தி வைத்திருந்த ராஜாக்களுக்கும், பேரரசர்களுக்கும் மிகச்சிறிய அளவே மரியாதை கொடுக்கிறார்கள். ஆகவே, இவர்கள் அமைதியிழந்து, கோபம் மூண்டு இருக்கின்றனர். ஏறக்குறைய மூன்னூற்று ஐம்பது ஆண்டுகளாகத்தான் இங்கிலாந்து நாடாளுமன்ற சட்டத்தில் எழுத்தறிவு இல்லாதவர்களுக்கும் உறுப்பினர் ஆகும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டது; அதில் கூறப்பட்டதாவது, “பாராளுமன்றத்தின் எந்த பிரபுவோ அல்லது பிரபுக்களோ, எந்த ஒரு மகாணத்தின் சீமானோ அல்லது சீமான்களோ அவரது வேண்டுதல் மூலம் இந்த சட்டத்தின் பலனை கோருவதற்கு அவர் படிக்கத் தெரியாதவராயினும்” அவருக்கு பாராளுமன்றத்தில் உரிமையோ அல்லது இடமோ இருக்கிறது. ஆங்கிலேயரது உரிமைகளை அங்கீகரித்த சாசனம், “மேகனா சாட்ராவில்” கையெழுத்திட்ட 26 பேரில் 3 பேர் மட்டுமே தங்கள் பெயர்களை எழுதினர். மற்ற 23 பேரும் கை ரேகைகளையே வைத்ததாக கூறப்படுகிறது.

பாமர மக்களின் பொதுஅறிவு வளர்ச்சியினால், ஆளும் அதிகாரங்களைப் பற்றிய அவர்களது கருத்து, ஆட்சியின் ஸ்திரத்தன்மைக்கு உதவுவதாக இல்லை என்பதைக் கண்ட ரஷ்ய உள்நாட்டு அமைச்சர், ஏழை வகுப்பாரின் மேற்படிப்பை முடிவுக்கு கொண்டு வரவும், எதிலும் நம்பிக்கையில்லாத கொள்கையின் வளர்ச்சியை தணிக்கை செய்யவும் தீர்மானித்தார். 1887ல் அவர் ஒரு கட்டளையை பிறப்பித்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு :

"இனிமேல் வீட்டு வேலைக்காரர்கள், குடியானவர்கள், தொழிலாளிகள், பெட்டிக் கடைக்காரர்கள், விவசாயிகள் இப்படிப்பட்ட மற்றவர்கள் ஆகியோரின் குழந்தைகள் உடற்பயிற் கழகம், உயர்நிலைப்பள்ளி, பல்கலைக்கழகம் ஆகியவைகளில் மாணவர்களாக சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். அவர்களது வட்டத்தி-ருந்து உயர்த்தப்படக் கூடாது. இப்படியாக அவர்கள் வழி நடத்தப்பட வேண்டும். .... தற்போதிருக்கிற சமூக நிலைமையில் தவிர்க்கவியலாத சமமின்மையினால் எரிச்சலையும், அவர்களது தலைவிதியினிமித்தம் அதிருப்தியையும் அடைய வேண்டும்."

இப்படிப்பட்ட ஒரு திட்டம் ரஷ்யாவில் கூட வெற்றி பெற இயலாத காலம் தாழ்ந்த காலமாக அது இருக்கிறது. இந்த திட்டத்தைத் தான் போப்பு சபை அதிகாரத்தில் இருந்த போது அனுசரித்தது. அது தனது ஸ்தாபனத்திற்கு தோல்வி என்பதை இப்போது உணர்கிறது. பாமர மக்களின் உள்ளத்தில் வெளிச்சம் உதித்திருக்கிறது. கடந்த கால இருளில் அவர்களைத் தள்ள முடியாது. சீரான அறிவு பெருக்கத்துடன், மக்களின் தேவைக்கேற்ப, குடியரசு ஆட்சி அவசியப்படுகிறது. முடியாட்சியில் பெருத்த மாற்றம் தேவைப்படுகிறது.

முன்னிருந்த அறியாமையினால், பொய்யான உரிமைகளின் பாதுகாப்பின் கீழ் தாங்களே ஆதரித்துவரப்பட்டதை, வெளிச்சம் உதயமாகும் இந்த புதிய நாளிலே மனிதன் காண ஆரம்பித்தான்; அதோடு ஆளும் வகுப்பினரோ மீதமுள்ள மனுக்குலத்தின் இயற்கை உரிமைகளையும், சிலாக்கியங்களையும் சுயநலத்தோடு வியாபாரமாக்கிக் கொண்டன என்பதையும் காண ஆரம்பித்தான். மேலும், அதிகாரத்தில் இருந்த அவர்களது உரிமைகோருதலை கணித்து தீர்மானிப்பதால் மிக சொற்பமாய் அளிக்கப்படும் மன்னிப்பு கோரல் எதையும் தாக்குப்பிடிக்காமல் மிக விரைவாய் தங்கள் சொந்த முடிவுக்கு வருகின்றனர். ஆனால், ஆளும் வகுப்பாரின் நீதி நியாயத்தின் கொள்கைகளை விட மேலானதல்லாதவைகளையே தாங்களும் செயல்படுத்துவதால் மக்களின் தீர்மானமானது நியாயத்திற்கு வெகுதூரமாக இருந்தது. மறுபக்கத்தில் தேவவார்த்தையின் ஒளியில் எல்லா திசைகளிலும் நீதியின் உரிமைகளை பொறுமையாகவும் உணர்ச்சிவசப்படாமலும் பரிசீ-ப்பதற்கு பதிலாக அவர்களது வளர்ந்து வரும் விருப்பங்கள்



முன்யோசனையற்றதாய் சட்ட ஒழுங்கை அசட்டை செய்கிறது.

கிறிஸ்தவ ராஜ்யமாகிய பாபிலோனோ- அவளது ஆட்சியாளர் மற்றும் மதகுருக்கள் என்று குறிப்பிடப்படுகிற நிறுவனமும், சமூக ஒழுங்குகளும் - பொதுமக்களின் அபிப்பிராய தராசில் எடை போடப்படுகிறபோது அவளது பெரும்பாலான அளவுக்கு மிஞ்சிய உரிமைகள் ஆதாரமற்றதும், அபத்தமானதுமாய் காணப்படுகிறது. கிறிஸ்துவின் பொன்னான கட்டளைகளுக்கு எதிராக தன்னலமுடையவள் என்று அவள் மீது பெரும் குற்றச்சாட்டுகள் உள்ளன. கிறிஸ்துவின் பெயரையும், அதிகாரத்தையும் எடுத்துக்கொண்ட அவள் ஏற்கனவே நடுநிலை தவறிவிட்டதால், நீதித்தராசில் நிலைதவறி நிற்கிறாள். இப்போதும்கூட அவளது "அந்திகிறிஸ்துவுக்குரிய குணாதிசயத்தை" குறித்த சாட்சிகளை கேட்க உலகமானது சிறிதளவே பொறுமையாக இருக்கிறது.

அவளது பிரதிநிதிகள் தங்களது அரசாங்க, மத நிறுவனங்களின் மதிப்பையும், பலத்தையும் பார்க்கும்படியும், தங்களது இராஜ்யத்தின் மகிமையையும், தங்கள் கரத்தின் வெற்றிகளையும், தங்கள் நகரம் மற்றும் அரண்மனைகளின் ஆடம்பர தோற்றங்களையும் கவனிக்கும்படி உலகத்தை அழைக்கின்றனர். மேலும், பழங்காலத்து உணர்வான இனப்பற்று, மூடநம்பிக்கை ஆகியவற்றை விழிப்புடன் கவனித்துக் கொள்வதில் கடும் முயற்சி செய்கின்றனர். இந்த மூட நம்பிக்கையினிமித்தமே அதிகாரத்திலும், வல்லமையிலும் மேலோங்கி இருந்தவர்களுக்கு வணக்கத்துக்குரிய கனமும், தலைவணங்கி பணிந்து போகும்படியான நிலையும் முற்காலத்தில் இருந்தது. மேலும், தேவனின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டவர்களை கனத்துடன் "நீடுழி வாழ்க ராஜாவே" என்று ஆர்வமுடன் கோஷமிடும் காலமாக இருந்தது.

ஆனால், அந்நாட்கள் கடந்துவிட்டன; முற்கால அறியாமையும்,மூடநம்பிக்கையும் வேகமாக மறைந்து வருகிறது; மேலும் அவர்களுக்குள் இருந்த குருட்டுத்தனமான மத மரியாதை மற்றும் இனப்பற்றின் உணர்வுகள் யாவும் கூட மறைந்து வருகின்றன. அதற்கு பதிலாக சுதந்திரமும், சந்தேக உணர்வும், எதிர்ப்பும் எழும்பி உலகளாவிய அராஜக போராட்டத்திற்கு வழிவகுக்கும்படி வாஞ்சிக்கிறது. நாட்டின் பல்வேறு துறைகளில்

இருப்பவர்களும் கோபத்துடனும் மிரட்டும் விதமாய் தலைவர் வழிகாட்டிகளிடம் பேசுவதால் காலப்போக்கில் கிட்டத்தட்ட புரட்சியே உருவானது. தற்போது அதிகாரத்தில் இருப்போரின் கொள்கைகள் தங்களை எதிர்கால அடிமை சந்தைக்கு இழுத்துச் செல்வதாயும், தங்களது நியாயமான உரிமைகளை வியாபாரமாக்கி, தங்களை பிதாக்களின் கொத்தடிமை ஸ்தானம் வரை கீழே கொண்டுச் சென்றுவிடும் என்றும் அவர்கள் முறையிட்டனர். மேலும், அநேகர் மிகத்தீவிரமாய் தற்போதைய தலைவர்களையும், வழிகாட்டிகளையும் இடம் மாற்றும்படி வற்புறுத்தி அதன் மூலம் அவர்கள் தங்கள் ஆதிக்கத்திற்காக வாதிட்டுக் கொண்டிருக்கும் போது அந்த முறைமைகள் அலைக்கழியும்படி விட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இந்த கொடூரமான, பயங்கர கூச்சல்களுக்கு எதிராக ஆட்சியாளரும், வழிகாட்டிகளும், தலைவர்களும் தங்கள் பதவிகளின் ஸ்தானத்தை பிடித்துக்கொண்டு ஜனங்களைப் பார்த்து எப்போதும் சதா காலமும் "உங்கள் கைகளை விலக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் இந்தக் கப்பலை பாறைகளில் மோதிவிடுவீர்கள்" என்று கத்திக்கொண்டே இருக்கின்றனர். இதன்பிறகு மத போதகர்கள் முன்வந்து மக்களை கீழ்ப்படியும்படி ஆலோசனை வழங்கி, அதன் மூலம் தேவனிடம் இருந்து பெற்றது போல தங்கள் சொந்த அதிகார உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளப் பார்த்தனர்; ஜனங்களை கட்டுப்பாட்டுக்குள் வைக்க சமூக அதிகாரங்களுக்கு உடந்தையாயிருந்தனர். ஆனால் அவர்களும் தங்கள் அதிகாரம் பறிபோனதை உணர ஆரம்பித்தனர். மேலும், அதை பலப்படுத்த முடிந்த அளவு முயல்கின்றனர்.

ஆகவே, சங்கங்கள் ஒத்துழைப்பைப் பற்றியும், தங்களுக்குள்ளே பேசி, அதன் மூலமாக அரசாங்கத்திடமிருந்து அதிகப்படியான உதவிகளை பெறும்படியாகவும் அதற்கு ஈடாக சமூக அமைப்புகளை தங்கள் அதிகாரத்தினால் ஆதரிப்பதாக உறுதியளித்தது. அவர்கள் வாதிடுவதை நாம் கேட்கிறோம். ஆனால் ஒரே ஒரு புயல் எழும்பும் வேளையில் ஜனங்களால் இந்த பயங்கரத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனபோது, தொடர்ந்து அலறி கூச்ச-டுகின்றனர். தலைமை பதவியி-ருந்தவர்களின் இதயங்கள் இந்த சம்பவங்கள் நிச்சயமாகிவிடும் என்ற தோல்வியின் பயத்தில் இருக்கின்றன.



மத அதிகாரங்கள் முக்கியமாக, கூடுமானவரை ஒரு போ-யான தோற்றத்தை காட்டும் பொருட்டுத் தங்கள் கணக்குகளை ஒப்புவிப்பது, தங்கள் மீது வலுக்கட்டாயமாய் விழுந்த கடமையாக எண்ணுகின்றனர்; ஆகவே, கூடுமானால், தங்களுக்கு எதிரான இந்த பொதுமக்களின் (புரட்சிகரமான) சிந்தனை ஓட்டத்தை ஒரு எல்லைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றனர். பல நூற்றாண்டுகளாக தங்களின் அதிகாரத்தினால் ஏற்பட்ட மிக சொற்பமான நல்ல பலன்களுக்காய் வருத்தம் தெரிவிக்க முற்பட்டனர். ஆனால் இவையெல்லாம் அவர்களது குழப்பத்தையும், சிக்கல்களையும் அதிகப்படுத்தவே செய்தன, மட்டுமன்றி காரியங்களின் உண்மை நிலையை அறியும்படி மற்றவர்களின் கவனத்தையும் தூண்டிவிட்டன. இந்த வருத்தம் தெரிவித்தல் உலக மற்றும் மத பத்திரிகைகளின் பகுதிகளில் தொடர்ந்து காணப்பட்டன. மேலும், கிறிஸ்தவ ராஜ்யத்தின் பெரும்பாலான சமூக மற்றும் மத அதிகாரங்களுக்கு எதிராக உலகத்தின் பயமற்ற விமர்சனங்கள் குறிப்பிடும்படியான முரண்பாடோடு இருந்தன. பத்திரிகை அறிக்கைகளின் எடுத்துக்காட்டுகளின் சாராம்சம் கொடுக்கப்பட்டுள்ளது.

## சமூக அதிகாரங்கள் மேல் உலகத்தின் வெளிப்படையான குற்றச்சாட்டு

"இந்த இனத்தின் விசித்திரமான நம்பிக்கைகளுக்கு இடையே, இந்த வகையினரில் மிகவும் சாதாரணமானவர்களை அக்கறையுடன் வல்லமையுள்ள தேவன் தெரிந்தெடுப்பதால் அவரைத் தவிர ஒருவருமே அந்நியர் அல்ல. பெரும்பாலும் நோயாளிகளும், அறிவீனரும், துஷ்டருமான இவர்களைத் தன் பிரதிநிதிகளாக தனது விசேஷ பாதுகாப்பினால் பெரும் ஜனத்தின் மீது ஆளச் செய்வார்." நியூயார்க் ஈவினிங் போஸ்ட்.

மற்றொரு பத்திரிக்கையில் சில ஆண்டுகளுக்கு முன்பு பின்வரும் முக்கிய செய்தி வந்தது. "புவர் லோட் ஆஃப் கிங்ஸ்."

"செர்வியாவின் ராஜா மில்லன் என்பவர் மனநோயுள்ளவர் என்று கூறுவது உண்மை என்று கூறப்படுகிறது. அட்டம் பர்கின் ராஜா ஒரு அரைப் பயித்தியம். பவேரியாவின் கடைசி மன்னன்

பயித்தியமாய் இருந்தபோது தற்கொலை செய்து கொண்டார். தற்போதைய ஆட்சியாளரும் ஒரு முட்டாள், ரஷ்யாவின் நேரடி வாரிசானவர் மனநிலை சரியில்லாதவர் என்று முடிவு செய்யப்பட்டதால் அவரது சகோதரர் இவருக்கு பதிலாக அந்த பதவியில் இருக்க வேண்டியதாய் இருக்கிறது. தற்போதைய அரசரும் அவர் முடிசூட்டிக்கொண்ட நேரம் முதல் மெலன்கோ-யா என்ற மனசோர்வினால் பாதிக்கப்பட்டதால், ஜெர்மன், பிரான்சு நாட்டின் மனோதத்துவ நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். ஸ்பெயின் நாட்டின் மன்னர் ஒரு ஸ்க்ரோஃபுலா என்கிற கண்டமாலை நோயாளியும் முழுமனவளர்ச்சி அடையாதவருமாய் இருந்தார். ஜெர்மனியின் பேரரசருக்கு காதில் ஒரு குணமாக்க முடியாத கட்டி இருந்தது. இதன் பலனால் அவரது மூளையும் பாதிக்கப்படலாம். டென்மார்க்கின் மன்னர் அரை டஜன் ராஜபரம்பரைக்கு தனது நச்சு ரத்தத்தை பரம்பரை சொத்தாக விட்டுச்சென்றார். துருக்கி நாட்டு சுல்தானும் மெலன்கோ-யா என்ற மனசோர்வினால் பாதிக்கப்பட்டவரே. ஐரோப்பாவின் எந்த ஒரு அரியணையும் தன் தகப்பனின் பாவத்தை காணக்கூடிய அளவுக்கு அவர்களது பிள்ளைகள் மீது தொடராமல் இருந்ததில்லை. ஒரே சந்ததியிலேயே போர்பன்,ஹேஸ்பர்க்,ரெமேனா அல்லது குல்ஃப் ஆகியவற்றால் வெறுப்படைந்தே உலகை ஆண்டனர். இந்த விதமான பணக்கார வம்சம் 1900களில் ஒரு உயர்வை கொடுக்காது. எதிர்காலத்தின் பிரச்சனைகளி-ருந்து தன்னைத்தானே வெளியேற்றிக்கொள்கிறது."

மற்றொரு நாளேட்டின் ஆசிரியர் கீழே அரச குடும்பத்தின் செலவை கணக்கிட்டுக் காட்டுகிறார்.

"விக்டோரியா மகாராணி அரியணை ஏற பேசிய பேரம் அவர்களுக்கு வருடத்துக்கு £.385,000ம், புதிய ஓய்வூதியத்தை வழங்கும் அனுமதிக்கு வருடத்துக்கு £. 1200, வருட மானியமாய் ஏறக்குறைய £. 19,871ம் ஆனது. இது மொத்தமாக வருடத்தில் £. 404,871 மகாராணிக்கு மட்டும் கிடைத்தது. இதில் £. 60,000 அவரது செலவுக்கென்று ஒதுக்கப்பட்டது. இது வெறும்கை செலவுக்கே. டச்சு நாட்டின் லேன் கேஸ்டர் இன்னும் முடியாட்சிக்குள்ளேயே இருக்கிறது. இவர்களும் கூட மகாராணியின் சொந்த செலவுக்கான கணக்கில் £. 50,000ஐ வருடத்துக்கு கட்டுகின்றனர். இதன் மூலமாக



இப்படியாக ராணிக்கு £. 110,000 வருடத்தில் செலவுக்கு மட்டும் வைக்கப்படுகிறது. அவளது வீட்டு நிர்வாக செலவானது சமூக பட்டிய-ன் பிற வகையி-ருந்து ஒதுக்கப்படுகிறது. £.. 50 அல்லது £. 100 தானமாக வழங்கப்படும் என்கிற ராணியின் அறிக்கையினால் சொந்த செலவுகளில் இருந்து இந்த பரிசுகளின் பணத்தை எடுக்காமல் ராஜரீக ஊக்க ஊதியம், நன்கொடை, தானம் இவைகளுக்கென்று வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட £. 13,200-ருந்து கொடுக்கப்படும். ராஜ குடும்ப பராமரிப்புக்கென்று இருபதுவித அந்தஸ்துகளில் பணியாளர்கள் உண்டு. அவர்களது மொத்த வருடாந்திர சம்பளம் £. 21,582. சம்பளம் வாங்குவது ஒருவரும், அதற்குரிய வேலையை செய்வது வேறொருவருமாய் இருக்கும் வழக்கம் இருந்தது. மருத்துவ பிரிவில் 25 ஆட்கள் இருந்தனர். இதில் சிறப்பு மருத்துவர் முதல் வேதியியல் நிபுணர்களும், மருத்துவ வல்லுநர்களும் அடங்குவர். இராஜ குடும்பத்தினர்களை நல்ல ஆரோக்கியத்தில் வைப்பதே இவர்களது கடமை. மேலும் 36 தனிகுடும்ப குருமார்களும் 9 தலைமை ஆசாரியரும், ராஜரீக ஆத்துமாக்களுக்கு சேவை செய்ய அமர்த்தப்பட்டனர். சேம்பர்-ன் பிரபு என்பவரது பொறுப்புகள் அநேக அலுவலக வேலைகளுடனானது, அவற்றுள் நாடகங்களை சரிபார்ப்பவர், ஆஸ்தான கவிஞர், ஓவியம் மற்றும் நிழற்படங்களை சரிபார்ப்பவர், அன்னப்பறவைகளை பராமரிக்கும் படகுடன் கூடிய பணியாளர், ஆபரண அணிகலன்களை பாதுகாத்து பராமரிப்பவர் முத-யவரும் அடங்குவர். ராயல் ஹன்ட் என்ற பாரம்பரியமான பெரியவேட்டைக்காரரின் தலைமையிலான அலுவல்களும் மிக ஸ்வாரசியமானது. இது செயின்ட் ஆல்பென்சின் சீமானால் வருடம் £. 1200 சம்பளத்தில் நடத்தப்பட்டது. இந்த சீமானுக்கு உண்மையில் ராஜாளி பறவைக்கும் பெங்குவின் பறவைக்கும் கூட வித்தியாசம் தெரியாது. இதை தெரிந்துக்கொள்ளும் எண்ணமும் அவருக்கு எழுந்ததில்லை. விக்டோரியா மகாராணியின் அரசாட்சியின் அநேக உபயோகமற்ற, அவசியமற்ற அலுவலகங்கள் மூடப்பட்டு, அதன் மூலம் ஒரு பெரிய தொகை சேமிக்கப்பட்டு, அது ராணியின் மிகவிரிந்து பரந்த சொந்த பணப்பைக்குள் போனது."

"மிகவும் தாராளமாய் மகாராணிக்கு பிரிட்டிஷ் நாடு கொடுத்த போதும், அவளது கணவருக்கும் தனியாக கொடுக்கவேண்டியதாய்

இருந்தது. இளவரசர் ஆல்பெட் என்பவர் விசேஷ வாக்குமூலமாய் வருடத்தில் £. 30,000 பெற்றார். முக்கியமான சேனாதிபதியாக இருப்பதற்கு தனியாக வருடத்துக்கு £. 6000ம், 2 படைபிரிவுகளுக்கு தலைவனாக இருந்ததற்கு வருடத்திற்கு £. 2933ம், வின்ஸ்டர் மாளிகைக்கு கவர்னராக இருந்ததற்கு £. 1120 வருடத்துக்கும், வின்சர் மற்றும் பூங்கா பொறுப்பாளராய் வருடத்துக்கு £. 1,500 ம் பெற்றார். இப்படியாக மகாராணியின் கணவரான பிறகு அவரது 21 வருட திருமண வாழ்வில் £. 790,000 இவரால் செலவிடப்பட்டது. ஒரு பெரிய குடும்பமும் ஏற்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டது. அடுத்து வருபவர் ஜெர்மனியின் அகஸ்டா சக்கரவர்த்தினி. வருடம் £. 8,000மும் வரதட்சணையாக £. 40,000மும், £. 5,000 திருமண ஏற்பாடுகளுக்கும் பெற்றாள். ஆனால், இத்தனை தாராளமான மானியங்களை பெற்ற பின்னும் தன் தாயாரைக் காண இங்கிலாந்து செல்வதற்கு போதவில்லையென்று, அவளது பிரயாணத்தின் போது £. 40 கொடுக்கப்பட்டது. வேல்ஸ் நாட்டு இளவரசர் மேஜரானபோது ஒரு சிறு தொகையை அதாவது £. 601,721ஐ பிறந்தநாள் பரிசாக பெற்றார். இந்த தொகை அந்நாள்வரை இருந்து கான்வா-ன் டச்சின் மொத்த வருமானத்தின் கூட்டுத்தொகையாகும். இந்த நேரமுதல் அவர் சராசரி £. 61,232ஐ டச்சியிடமிருந்து வருடந்தோறும் பெற்றுக்கொண்டார். மேலும், இளவரசரின் பட்டண தங்கும் இடமான மார்ல்புரோ ஹவுஸ் ஐ செப்பனிடுவதற்கு அந்த தேசம் 1871-ருந்து £. 44,651ஐ செலவிட்டது. 10வது ஹூசார்களில் தலைவனாகையால் £. 1350 சம்பளமாய் கொடுக்கப்பட்டது. £. 23,450ஐ அவரது திருமண செலவுக்கு பெற்றார். அவரது மனைவிக்கு வருடத்திற்கு £. 10,000ம் 1875ல் இந்தியாவுக்கு வந்தபோது செலவுக்கு £. 60,000 கொடுக்கப்பட்டது. மொத்தத்தில் £. 2,45,2,200 , ($. 12,000,000க்கு மேலே) ஜான்புல்-ன் குறிப்பு புத்தகப்படி 10 வருடங்களுக்கு முன்பு வரை தொடர்ந்து பெற்று வந்திருக்கிறார்."

"இப்போது அவரது இளைய மகன்களுக்கும், மகள்களுக்கும் வழங்கப்படுகிறது. 1862ல் தனது திருமணத்தின் போது இளவரசி ஆ - ஸ் £. 30,000ஐ பெற்றார். அவரது மரணம் வரைக்கும் 1878 வரை வருடாந்திர மானியமாய் £. 60,000 பெற்று வந்தாள். எட்டின்பர்கின்



சீமான் 1866 முதல் வருடந்தோறும் £. 15,000 பெற்றுவந்தார். அத்துடன் 1874ல் அவரது திருமணத்தி-ருந்து வருடந்தோறும் £. 10,000 கூடுதலாய் கொடுக்கப்பட்டது. £. 6883 திருமண செலவு மற்றும் வீட்டை பழுது பார்க்கவும் கொடுக்கப்பட்டது. வேலை எதுவும் செய்யாமல் இளவரசராய் இருப்பதால் மட்டுமே இவர் இவ்வளவு பணமும் பெற்று வந்தார். இதற்கு பிறகு கேப்டனாகவும், பின் கடற்படை அட்மிரலாகவும் பணிபுரிந்ததற்கு கூடுதலாக £. 15,000ஐ சம்பாதித்தார். இளவரசி ஹெலனா, ஹெல்ஸ்விக் - ஹேஸ்டின்னின் இளவரசர் கிறிஸ்டியன் என்பவரை திருமணம் செய்தபோது 1866ல் வரதட்சனையாக £. 30,000வும், £. 7,000த்தை வாழ்நாள் முழுவதும் உதவித்தொகையாகவும் பெற்றாள். அவள் கணவரும், வின்ஸ்டர் ஹோம் பார்க்கின் பொறுப்பாளராய் இருந்ததற்கு ஊதியமாக £. 500 வருடந்தோறும் பெற்றார். இளவரசி லூயிசாவும் தன் சகோதரி ஹெலனாவைப் போலவே எல்லா சலுகைகளையும் பெற்றாள். கேனாட்டின் சீமானது வருமானம் வருடத்துக்கு £. 15,000த்தி-ருந்து தொடங்கி, 1879ல் திருமணத்தின் போது £. 25,000ஆக உயர்த்தப்பட்டது. இவர் தற்போது பம்பாய் படையின் தலைமை பொறுப்பை ஏற்பதற்கு £. 6,600ம், படிகளும் வருடந்தோறும் கொடுக்கப்படுகிறது. அல்பேனின் பிரபுவுக்கு 1874ல் வருடத்துக்கு £. 15,000 ஒதுக்கப்பட்டது. 1882ல் திருமணத்தின் போது £. 25,000மாக உயர்ந்தது. அவருக்குப் பின் அவரது விதவை மனைவிக்கு £. 6,000 வருடத்துக்கு வழங்கப்பட்டது. இந்த துரதிஷ்டவசமான பிரபுவானவர் குடும்பத்திலேயே மிகவும் அறிவாளியாக இருந்தார். அவர் மிகுந்த வாக்குதிறமை பெற்றவராகையால் சாதாரண குடிமகனாய் பிறந்திருந்தாலும் கூட அவரது திறமையினால் கிடைத்த மிக சராசரியான வாய்ப்புகளை பயன்படுத்தியே சகல வசதிகளும் பெறக்கூடிய பாரிஸ்டர் வாழ்வை பெற்றிருந்திருப்பார். இளவரசி பீட்ரிஸ் சும் வழக்கமான வரதட்சணையான £. 30,000தையும், வருட ஊதியம் £. 6,000தையும்பெற்றார். இப்படியாக இங்கிலாந்து தேசமான இராணியின் அரசாட்சியின் கீழ் 1886ம் ஆண்டு வரை £. 4,766,083 ஐ இராணியின் கணவரின் ஆடம்பரத்துக்கு செலவு செய்திருக்கிறது. ஐந்து இளவரசிகள், நான்கு இளவரசர்களுக்கும் கைச்செலவுகள், வரிவிலக்கான வாடகை இல்லாத தங்கும் இடங்கள் யாவுக்கும் செலவு செய்யப்பட்டது."

“ஆனால் இதுமாத்திரமன்றி இராணியின் வாரிசுகளுக்கு மட்டுமல்லாமல் அவரது சித்தி சித்தப்பாக்கள் (மாமா , அத்தைகள் ) மற்றும் அவர்களது பிள்ளைகளையும் இங்கிலாந்து தேசம் போஷித்து ஆதரித்து வந்தது. ஆனால் ராஜ ஒய்வூதியத்தை மட்டுமே 1837ம் ஆண்டு முதல் நான் பதிவு செய்கிறேன். பெல்ஜியத்தின் மன்னர் முதலாம் -யோபோல்டு என்பவர் இராணியின் அத்தை ஒருவரை மணந்து கொண்ட காரணத்தினாலேயே மட்டும் 1865ல் அவரது மரணம் வரைக்கும் வருடத்திற்கு £. 50,000 பெற்று வந்தார் தற்போதைய ஆளுகையில் மொத்தம் £. 1,400,000 ஆகும் ஆகிலும் அவருக்கு சற்று நாகரீக குணம் இருந்தால் 1834ல் அவர் பெல்ஜியத்தின் மன்னரானதும், டிரஸ்டிகளுக்கு தன் ஓய்வூதியத்தை கொடுக்கச்செய்தார். மேலும், கிளமண்ட் மாளிகையின் அவரது வேலைக்காரர்களுக்கு வருடாந்திர ஊதியம் மட்டும் பெறும்படி நிர்ணயம் செய்துகொண்டார். அவர் மரித்த உடன் மொத்த தொகையும் இங்கிலாந்தின் கஜானாவிற்கே திருப்பி செலுத்தப்பட்டது. ஹேனாவரின் மன்னரான இராணியின் ஒரு மாமா அப்படிப்பட்டவரல்ல. அவருக்குக் கிடைக்கக்கூடிய எல்லாவற்றையும் எடுத்துக்கொள்பவராக இருந்தார். 1837 முதல் 1851 வரை கணக்கிடப்பட்டவரை வருடத்துக்கு £. 21,000 முதல் £. 294,000 வரை ஆகும். இராணி அடிலெய்டு 4ம் வில்-யம்மின் விதவை மனைவியானவர் 12 வருடங்களில் மொத்தம் £. 1,200,000தை வருடம் £. 100,000 வீதம் பெற்றார். இராணியின் தாய் கென்டின் சீமாட்டியார் தனது மரணம் வரைக்கும் மகளின் ஆட்சியி-ருந்து வருடத்துக்கு £. 30,000 என்று மொத்தம் £. 720,000 பெற்றார். சூசெக்கின் பிரபுவான மற்றொரு மாமா 6 வருடத்தில் மொத்தம் £. 108,000 ஐ வருடம் £. 18,000 என்ற கணக்கில் பெற்று வந்தார். 7வது மாமாவான கேம்பிரிட்ஜின் பிரபுவானவர் உயிரோடிருந்த மட்டும் வருடத்துக்கு £. 24,000 என மொத்தம் £.312,000ஐ பெற்றார். பிறகு, இன்னும் வாழும் அவரது விதவை மனைவி கணவரின் மரணம் முதல், வருடம் £. 6,000 என மொத்தம் £. 222,000 பெறுகிறார். இளவரசி அகஸ்டா என்கிற அத்தைக்கு மொத்தம் £. 18,000 கொடுக்கப்பட்டது. ஹசியின் ஜெர்மானிய சீமாட்டி என்கிற 3வது அத்தை £. 35,000 ஐ சம்பாதித்துக் கொண்டார். 4வது அத்தை குளூசெஸ்டரின் சீமாட்டியானவர் வருடம் £. 14,000 வீதம் 20 ஆண்டுகளில் மொத்தம் £. 280,000 பெற்றார். சீமாட்டி சோப்பியா, 3ம் ஜார்ஜின் சகோதரியின் மகளானவர் 7 வருடமாக £. 7,000 என்று மொத்தம் £. 49,000 ஐ பெற்றார். மேலும் ராணியின் மாமாவின் மகள் மெக்லென்பர்க் ஸ்டிரி-ட்ஸ் சின் சிமாட்டியானவர் 23 வருடத்தில் £. 42,124 (வருடம் £. 1,788) பெற்றார்.”



“கேம்பிரிட்ஜின் பிரபுவானவர் பிரிட்டிஷ் படையின் தலைமை சேனாதிபதியாகவும் பல படைப்பிரிவுகளின் கர்னலாகவும், அநேக தனியார் மயமாக்கப்பட்ட பூங்காக்களின் பொறுப்பாளராகவும், அநேக விளையாட்டுகளின் பாதுகாவலராகவும் இருந்து சம்பளமாக பொதுப்பணத்தி-ருந்து £. 625,000 பெற்றார். அவரது சகோதரி மெக்லென்பர்க் ஸ்டிர-ட்ஸ்ன் சீமாட்டியானவள் £. 132,000 பெற்றார். அவரது 2வது சகோதரி டீக்கின் சீமாட்டியான குண்டு மேரி (Fat Mary) £. 153,000ஐ பெற்றார். இந்த கணக்கின்படி மொத்தம் £. 4,357,124 அளவுக்கு தேசமானது ராணியைச் சேர்ந்த சித்தி/அத்தைகள், மாமா/சித்தப்பாக்கள் அவர்களுடைய பிள்ளைகள் ஆகியோருக்கு அவரது ஆட்சிக் காலத்தில் செலவு செய்துள்ளது.”

“ராணியின் சமூக பட்டிய-ன்படி அல்லாமல் அதோடுகூட உண்மை மதிப்பீடும், நான்கு இராஜாங்க உல்லாச படகுகளின் செலவுகளும் உள்ளபடி அரசு கணக்கில் இருந்தாலும் கடற்படையின் கணக்கில் தான் சேர்க்கப்பட்டிருந்தது. அதன் உண்மை மதிப்பு £. 275,528. பராமரிப்பு, சம்பளம் மற்றும் உணவு செலவுகள் குழுவினருக்காக 10 வருடம் செலவிடப்பட்டது £. 346,560 ஆகும். மொத்தம் £. 622,088. இந்த ஒரு காரியத்துக்கு மட்டும் செலவிடப்பட்டது.”

“மொத்தத்தில் ராணியாரின் ஏராளமான சித்தி/அத்தைகள், மாமா/சித்தப்பாக்கள் அவர்கள் பிள்ளைகளுக்கு செலவு செய்ததின் மொத்த மதிப்பு £. 4,357,124; அவரது கணவர், மகன்கள், மகள்களுக்கான செலவின் மதிப்பு £. ரூ. 4,766,083. அவரது சொந்த செலவுக்கும் அவரது குடும்ப செலவுக்கும் ஆன மதிப்பு £. 19,838,679ம் அவரது கப்பல்களுக்கு £. 622,088ம் ஆனது. இது

மொத்தமாக £. 29,583,974 (ஏறக்குறைய 150 மில்-யன் டாலர்) இவ்வளவு தொகையை பிரிட்டிஷ் அரசாங்கம் தற்போதைய ராஜபரம்பரைக்கு செலவு செய்திருக்கிறது. (1888ம் ஆண்டு வரை). இவர்களது செலவுகள் ஏற்புக்குரியவையா? மிக உயர்ந்த தொகையானது ஒரு ஸ்திரமான நிலைக்கு செலுத்தப்பட்டது. அப்படியெனில் இதற்காக சக்திக்கு ஏற்றவாறு மக்களிடமிருந்து வரிப்பணம் வசூ-க்கப்பட்டு, அதன் மூலம் அநேகரை வீணாக உட்காரவைத்து செலவு செய்யப்பட்டது. ஒருவேளை இவர்கள் உத்தமமாய் உழைத்து வாழ்ந்திருப்பார்களானால் நாட்டுக்கு இதைவிட அதிக நன்மையை இவர்கள் செய்திருக்கக்கூடும்."

ரஷ்யாவின் அரசரது முடிசூட்டு விழாவின் பிரமிக்கத்தக்க கண்கொள்ளா காட்சியானது ராஜபரம்பரையின் மிதமிஞ்சிய விரையத்திற்கு நல்ல ஒரு உதாரணமாகிறது. ராஜரீக பகட்டுடன் அது வடிவமைக்கப்பட்டது. இதை காணும் ஜனங்கள் மேன்மையான மன்னர் குடிகளை தாங்கள் பூஜிப்பதும், மிதமிஞ்சிய தங்களது இழிவான அடிமைத்தனமான கீழ்ப்படிதலும் நியாயமானதே என்று எண்ணும்படி இருந்தது. இந்த ஒரு நிகழ்ச்சிக்கு செலவிடப்பட்டதன் மதிப்பு 25,000,000 டாலர்கள்.

இந்த மிதமிஞ்சிய ஊதாரித்தனம் கோடிக்கணக்கான குடிமக்களின் படுமோசமான நிலைக்கு மிகவும் முரண்பட்டதாய் இருக்கிறது. மேலும், இதுகுறித்து 1893ல் ஏற்பட்ட பஞ்சத்தின் போது இந்த மக்களின் பாடுள்ள வேதனைகளால் உலகெங்கும் தெளிவாக தெரிந்துவிட்டது. "தி ஸ்பெக்டேட்டர்" என்னும் ஆங்கில பத்திரிகையி-ருந்து வெளியான அபிப்ராயங்களின் சாராம்சம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"ரஷ்ய முடிசூட்டு விழாவின் ஆயத்தங்களுக்கான மதிப்பீட்டை கணக்கிடுவது மிக கடினமானது. இவை இளநீலபட்டில் பொன் எழுத்துக்களால் பதிக்கப்படவேண்டியவை. கொஞ்சமும் வெறுப்பு என்ற உணர்வே இல்லாமல், முக்கியமாய் நாம் பார்த்தோமானால், தங்களுக்கு பெலன் இருந்தும் அர்மீனியர்கள் படுகொலை செய்து கொன்று குவிக்கப்பட்டபோது அவர்களை பாதுகாக்காமல் இருந்ததை குறித்து விவரிக்கப்பட்டதை



வாசிக்கிறோம். மிகவும் சிரமப்பட்டு தான் மாஸ்கோவின் ஆச்சரியமான காட்சியை மனதிற்குள் கொண்டுவரமுடியும். ஏனெனில் அதன் ஆசிய கட்டிடக்கலையும் ஒளிவீசும் மேல்மாட வளைவு மண்டபங்களும் அதன் தெருக்களெல்லாம் ஆடம்பர பட்டு பகட்டுடன் ஐரோப்பிய சீருடைகளும், அதைவிட பகட்டான ஆசிய உடைகளும், வெள்ளை இளவரசர்கள் சிகப்பிலும், மஞ்சள் இளவரசர்கள் தங்கள் உடைகளிலும், தூரக் கிழக்கின் அநேக ஆட்சியாளர்களும், சீனாவின் சர்வாதிகாரியும், இவர் முகம் குப்புற விழுந்து வணங்கிய பழுப்புநிற ஜப்பானின் அதிபரும், அவர்களுடன் அருகருகே ஐரோப்பாவின் ஆட்சி செய்யும் எல்லாத்துறை ஆளுநர்களும், மார்மோனைத் தவிர எல்லா பிரபலமான சபைகளும், மன்னருக்கு கீழ்ப்படிந்த எல்லா ஜனங்களும், ஏறக்குறைய 80 பேரும் மேற்கு படைகளின் எண்ணிலடங்கா படைப்பிரிவினர்கள் விதவிதமான சீருடைகளிலும், மேலும் தாழ்மையுள்ள கோடிக்கணக்கான ஜனங்களும், பாதிக்குமேல் ஆசியரும், பாதிக்கும் மேல் ஐரோப்பியரும் பயபக்தியுடனும், கிளர்ச்சியுடனும் தங்கள் பூலோக பிரபுவானவருக்கு வணக்கம் செலுத்தினர். முடிவில்லா கூட்டத்தின் கூச்சலும், திரளான புத்த பிட்சுகளின் பாடல்களும், காலாட்படையினரின் முழக்கமும், ஒரு இடத்தி-ருந்து மற்ற முனை வரை அதாவது ரிகா முதல் விளாடிவோஸ்டாக் வரைக்கும் உலகின் வடபகுதி முழுவதும், மன்னரின் சிரசின் மேல் கிரீடத்தை வைத்தவுடன் ஒரே சமயத்தில் இந்த பெரும் சத்தம் கேட்டது. மூர் என்பவர் எழுதிய கவிதை மூலம் இது மிகவும் ஆடம்பர பகட்டு என்பதையும் ஆரோக்கியமானது அல்ல என்பதையும் இந்த கோலாகலத்தைப் பற்றி ஆங்கிலேயர் படித்து தெரிந்து கொண்டனர். இது ஒரு கம்பீரமான ஆடம்பர தோற்றமன்றோ? இது ஒரு நடைமுறை வாழ்க்கையை போலன்றி ஏதோ ஒரு நாடகத்தை போலல்லவா இருக்கிறது? இத்தனை லட்சோபசலட்ச மக்கள் துன்பத்தில் இருக்கும் போது இது போன்ற பிரம்மாண்டமான செலவின் மூலமாக ராஜரீக தோற்றத்தை கொண்டுவருவதை குறித்து ரஷ்ய சக்கரவர்த்திக்கு குற்ற உணர்வே இல்லையா? 5 மில்-யன் ஸ்டர்-ங் செலவில் ஒரு விழாவா? இது போன்ற செலவு நியாயமானதே என்று சொல்லக்கூடிய விதிமுறை ஏதாவது இருக்கிறதா? இது பெல்ஷாஷாரின் வீணானவை அல்லவா?

பயித்தியக்காரத்தனமான பெருமை, கீழ்த்திசை மன்னர்கள் போன்று பணத்தைக் கொட்டுவது சில நேரங்களில் மிதமிஞ்சிய மனநிலையின் மகிமையின் மனகிளர்ச்சியின் பிரத்தியேகமாய் தூண்டிவிடுவதற்காகவே இருப்பதைப் போலல்லவா இருக்கிறது? ரஷ்யாவைப் போல 10 மடங்கு செலவிட இங்கிலாந்தால் கூடுமானால் இது போன்ற ஒரு வேண்டாத செயலுக்கு செலவு செய்ய எந்த ஒரு ஆங்கிலேயனையும் தூண்டிவிடமுடியாது.

“மேலும், ரஷ்யாவை ஆள்பவர்கள் சந்ததி சந்ததியாய் விவேகம் உள்ளவர்களா? இந்த அளவு ஆற்றலும், பெரும் செலவும் இவர்கள் எதிர்பார்க்கின்றபடி போதிய பலனை கொடுக்குமா என்று ஐயப்பட வேண்டியுள்ளது. இந்த பொருந்தாத செயல்மூலம் மன்னரின் ஸ்தானமானது ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்டது என்ற ரஷ்யர்களின் எண்ணத்தை மேலும் ஆழமாக்கியது. அவரது வல்லமையைப் போலவே அவரது திறமையும் அளவிட முடியாதது. அவர் விசேஷமான தெய்வீக உறவில் இருக்கிறார். அவரது முடிசூட்டலானது மிகவும் பவித்திரமானது. மிகவும் அதிகமானது என்று அதனுடைய ஏற்பாடுகளைக் கண்டு எண்ணிவிடக்கூடாது என்று மனுக்குலத்துக்கு கூறுவதாகவும், வெளியில் சொல்ல முடியாதபடி வெறும் பார்வையாளராக மட்டும் கூட்டப்பட்டனர். ஒரே நிமிடத்தில் மறைந்து போகக்கூடிய நிசப்தமான சமாதானமானது உலகின் வடபகுதி முழுவதும் குறிப்பிட்ட ஒரு சம்பவத்தின் எதிர்ப்பார்ப்பாகவே இருந்தது. ஆளுகின்ற ரஷ்யர்கள் அதன் பலனை பெற்றுவிட்டதாக எண்ணுகின்றனர். இந்த முடிசூட்டுத-னால் வந்த அபிப்ராயமானது ராஜாங்கம் முழுவதிலும் ஒரு வெற்றியின் அபிப்ராயத்துக்கு இணையாகவே ஆகிவிட்டது. இதற்காக அவ்வளவு பணத்தையும் அத்தனை பேரின் கண்ணீரையும் செலவிட வேண்டியதாய் இருந்தது. இவர்கள் இந்த சடங்கை அரியணையில் ஒவ்வொரு அரச வாரிசு மாற்றத்தின் போதும் செய்தார்கள். அதுவும் அதன் அமைப்புகளின் பிரமாண்டமும், சிறப்பும் கூடிக்கொண்டே போனது. ரஷ்யா, உள்ளுக்குள் வீழ்ச்சியைக் காணும் ஜப்பானின் நிலையானாலும், கான்ஸ்டான்டி நோபிளின் மெல்ல நகர்ந்து வரும் அடிமைத்தனத்தினாலும், சைனாவின் தாழ்மையான நிலையாலும் தான் உயர்ந்திருப்பதாய் எண்ணுகிறது. இந்த முடிசூட்டு விழாவானது தங்கள் எஜமானரின் கௌரவத்தை ஐரோப்பாவில் அதிக்கப்படுத்துவதாகக் கூட நம்புகிறார்கள். பேரரசரின் புகழும் ராணுவ வீரர்களின் பெரும்படைகளும் நாகரீகத்தின் எல்லா மூலதனங்களும், தங்கள் காட்டுமிராண்டித்தனமான மூர்க்கத்தின் மூலதனங்களும் மேற்கத்தியரைப் போலவே மனோபாவங்களை கொண்டதாக்கியது. வடபுறத்தின் அதிகாரங்களை வெறுப்பதையும், அதிகப்படுத்துவதாக இருந்தது. பெர்-னில் இருப்பவர்களும் படையெடுப்பைக் குறித்து ஆழ்ந்த நடுக்கம் இருப்பதாக நினைத்தனர். கூட்டணியை நினைவுகூறும் மனிதர்கள் பாரிசில் அதிக ஆரவாரத்தையும், அவளது ராஜதந்திரிகள் தியானத்தில் இருப்பதால் லண்டனில் ஒரு நீண்ட இடைவெளி, இவர்கள் எப்போதுமே தியானித்துக் கொண்டிருப்பதால், பனி ஆற்றைப் போன்று இவர்களது ஓட்டம் நிற்குமா அல்லது திசை திரும்புமா எனவும் நினைத்தனர். முழுமையாய் தாங்கள் தவறியவர்கள் என்று யாராவது உறுதியாய் ஒப்புக்கொள்ள முடியுமா? அல்லது கடந்த ஒரு வருட சாதுர்யமான ரஷ்ய ஆட்சியானது தேசிய விழாவின் பலனாக மட்டுமே அதிகமாகிவிட்டதா, எதிர்ப்பவரின் எதிர்ப்பும் கூட மிகவும் பெலவீனமாய் இருக்கிறது. ஏனெனில் தங்கள் மனக்கண்ணிலாவது குறுகிய காலத்திலேயே ஆராய்ந்து அறிந்த தன் தலைநகர கோட்டைச் சுவர்களுக்குள்ளேயே நடத்தப்படும் ஒரு பேரரசை குறித்து விமர்சிக்கப்படும் நல்லதொரு விளக்கமா? தனது படைதளபதியை கௌரவிக்கும் வட ஐரோப்பா மற்றும் ஆசியாவின் அணிவகுப்பா?”

“இவ்வகையான முடிசூட்டுவிழா உலகுக்கே அபாயகரமான ஒன்று. அது தவறாகவே வழிகாட்டும் என்பதை நாங்கள் திட்டமாய் உணர்கிறோம். அதன் அதிகாரமுடைய மனிதர் நெறிதவறி நடப்பதற்கு அது வழிகாட்டும். தற்போதைய பேரரசரைக் குறித்து யாருக்கும் தெரியாது. ஆழமான உணர்ச்சி பூர்வமான உணர்வுகளுக்கு அடிமைப்பட்ட மனிதர் என்று அவருடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர்கள் கூறுவர். ஆனால், சாதாரண மக்களைவிட சற்று மேலானவராக இருக்கக்கூடும், டில்சிட் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட முதலாம் அலெக்ஸாண்டரின் பின் சந்ததியினராய் இருப்பவராயின், இந்த முடிசூட்டு விழாவின் மையத்தை

நாட்கணக்கில் உணர்ந்திருப்பார், நினைவோடிருந்திருப்பார். பதவியை குறித்த ஒருவித மயக்கம் உண்டு. அதை அதிகார மயக்கம் என்று கூட நாம் எடுத்துக்கொள்ளலாம். யாவருடைய கண்களும் நோக்கி இருப்பவரும், எல்லா இளவரசர்களுமே இவருக்கு முன் சிறியவராகவே காணப்படுபவரும், உண்மையில் சில நேரங்களில் குற்ற உணர்வே மேம்படாதவராய் தானே மனுக்குலத்திலேயே முதன்மையானவர் என்ற திடமான எண்ணம் உடையவராயும் இருந்தார். ரஷ்யாவின் அதிகாரிகள் தங்கள் அரசரை இத்தனை மேன்மைப்படுத்தி கீழ்ப்படிதலை இன்னும் ஆழப்படுத்தியதன் மூலம் மனதை எதிர்க்கும் திறனுக்கு அவசியமான சுயகட்டுப்பாடு என்னும் சக்தியை அழித்துவிட்டனர்."

"ஆனால், கிறிஸ்தவ ராஜ்யம் என்று தங்களை கூறிக்கொள்ளும் ஆட்சியாளர்கள் கிறிஸ்தவ சம்பிரதாயங்களை முற்றிலும் தவிர்ப்பவர்களாய் மனிதநேயமே இல்லாமல் ஏராளமான சொத்துக்களை ராஜாங்கத்தின் ஆதரவுடன் வீணான ஆடம்பரங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் ஊதாரித்தனமாய் பணத்தை தண்ணீரைப் போல் செலவு செய்வதும், உண்மையில் நிரூபிக்கப்படுகிறது. இலட்சக்கணக்கான வீரர்களும், மாலுமிகளும், பயங்கரமான போர்த்தளவாடங்களும் அவர்களது ஆதிக்கத்தின் கீழ் இருந்தனர். அப்படியிருந்தும் பாவப்பட்ட அர்மீனிய கிறிஸ்தவர்களின் துன்பங்களையும் ஆயிரக்கணக்கானவர்களை துருக்கியர் துன்புறுத்தி கொலை செய்ததையும் கேட்டு எந்தவித சலனமும் காட்டாமல் இருந்தனர். அதிநவீன படைகள் மனித நலனுக்காய் அமைக்கப்பட்டதல்ல, உலகின் அரசியல், பொருளாதார ஆட்சியாளர்களின் சுயலாபத்துக்காய் மட்டுமே என்று தெளிவாய் தெரிந்தது. எல்லைகளை பிரித்துக் கொள்வதற்கும், ஒப்பந்தம் செய்துக்கொண்டவர்களை பாதுகாப்பதற்கும், பிறரை அழிக்க பறந்து செயல்படுவதற்கும், கொலை வெறியுடனான கொழுந்து விட்ட குரோதத்துக்கும், தங்களது ராஜாங்கத்தையும், சொத்துக்களையும் பெருக்கிக்கொள்ள நல்லதொரு தருணம் கண்டால் அதை உபயோகித்துக் கொள்ளவும் மட்டுமே பயன்படுத்தப்பட்டன."

இந்த குறிப்பிடத்தக்க மிதமிஞ்சிய ராஜரீக வீண் செலவுகள் ரஷ்யாவில் மட்டுமன்றி ராஜகுடும்பங்கள் ஆண்ட ஒவ்வொரு



நாட்டிலும், ஓரளவிற்கு வியாபித்து இருந்தது. இது ஐரோப்பிய நாடுகளின் மிதமிஞ்சியதான கடமைக்குட்பட்ட நிலைமையாக இருக்கிறது.

"எகானமிஸ்டே பிரான்கைஸ் என்ற பாத்திரிகை எம். ரினே ஸ்டார்ம் என்பவர் மூலம் பிரான்சின் பொதுவான கடனைக் குறித்து விரிவான கட்டுரை ஒன்றை வெளியிட்டது. கடனின் மூலதனத்தைக் குறித்த மிக சாதாரணமானதொரு மதிப்பீடு $. 6,400,000,000 இன்னும் சுமாரான மதிப்பீட்டின் படி சில லட்சங்கள் குறையலாம். எம்.பால் -ரய்-பி-யூ இதை $. 6,343,573,630 என்று வரையறுக்கிறார். அது $. 5,900,800,000 என மொத்தமாக மதிப்பிடக்கூடியது. அப்படியும் அவர் ஆயுட்கால தொகைகளை தவிர்த்துவிட்டார். அது $. 432,000,000. சில பொருளாதார வல்லுநர்கள் இந்த தொகையை கடனின் மூலதனத்தின் ஒரு பகுதி என்றே எடுத்துக்கொள்கின்றனர். மொத்த கடனுக்கான வருடாந்திர வட்டியும் அமிழ்ந்து போகும் தொகைகள், ஆயுட்கால செலவுகளும் சேர்ந்து $. 258,167,083. இவ்விதம் மூலத்தனமான கடனில் $. 2,900,000,000க்கு நிரந்தரமாய் 3%ம், $. 1,357,600,000க்கு நிரந்தரமாய் 4.5%ம், $. 967,906,200 பல்வேறு மீட்டுக்கொள்ளத்தக்கவைகளின் விவரங்கள். அநேக கம்பெனிகளின் மற்றும் கூட்டுறவுகளின் வருடாந்திர விகிதம் $. 477,400,000ம், $. 200,000,000 நிரந்தரமில்லா கடனும் சேர்ந்து எம்.ஸ்டார்ம்ஸ்சின் கூட்டுத்தொகையை சமன் செய்கிறது. உலகின் எந்த நாடுமே சுமக்காத ஒரு பாரமான சுமையாக இது கருதப்படுகிறது. இதில் ரஷ்யாவின் கடனைக் குறித்த ஒரு நெருக்கமான அணுகுமுறையின்படி கண்டது $. 3,605,600,000. அடுத்து வருவது $. 3.565,800,000 வுடனான இங்கிலாந்து, அடுத்து இத்தா- $. 2,226,200,000 கடனுடன் இருக்கிறது. ஆஸ்திரியாவின் கடன் $. 1,857,600,000, ஹங்கேரியினுடையது $. 635,600,000, ஸ்பெயின் $. 1,208,400,000, புரூஷியா $. 962,800,000. இவை எம் ஸ்டார்ம்ஸ்சினுடைய தொகைகள். இதில் இங்கிலாந்தும், புரூஷியாவும் மட்டும் கடனை சமன்படுத்தும் அளவு நிரந்தர வரவு செலவு திட்டத்துக்கான போதுமான நிதியை வசூ-த்தது. இதில் பிரான்சின் பளுதான் எல்லாரையும் விட கூடுதலானது. சமீபகாலத்தில் அதன் கடன் மிகவும் வேகமாக உயரத்தொடங்கிவிட்டது. எதிர்காலத்தைக் குறித்த ஒரு பயப்படக்கூடிய நிலையை பெற்று வருகிறது.

“எம்.ஸ்டார்மின் தீர்மானத்தின்படி சொல்கிறதாவது : ‘நமது தொழிலாளிகள் விழித்துக் கொண்டதால் துன்பம்தரும் சிந்தனைகளை விட்டு நாம் விலகி இருக்கிறோம். இந்த 29 1/2 பில்-யன்களை நாம் எந்தவிதத்தில் எடுத்துக்கொண்டாலும், மற்ற நாடுகளின் கடன்களுடன் ஒப்பிட்டாலும் 10 அல்லது 20 வருடங்களுக்கு முன்பிருந்த நம் நாட்டின் கடன்களுடன் ஒப்பிட்டு பார்த்தாலும் இது அதிகமாக உள்ளது. சரி,எப்படியெனிலும் ஒரு உயரம் தெரியாத மலையின் கோபுரத்தைப் போலவும், இவ்வுலகின் எந்த நாட்டின் மக்களோ அல்லது வேறெந்த யுகமோ அடையவே முடியாததாகவும் இருக்கிறது. ஈஃபிள் டவர் அதற்கு உண்மையில் இணையானதாய் இருக்கும். நமது அதிகப்படி கடனில் நமது அண்டை அயலாரையும், நமது முந்தைய சரித்திரத்தையும் மிஞ்சிவிட்டோம்...... இந்த நிலையில், இந்த சமயத்தில் தான் நம் தேசம் நாட்டுப்பற்றுடனான பயங்கரத்தை உணர்கிறது.”

தி லண்டன் டெ-கிராஃப் என்ற சஞ்சிகை தேசிய பொருளாதாரத்தின் வெளித்தோற்றத்தைக் குறித்த கீழ்கண்ட ஒரு உரையை வெளியிட்டிருந்தது.

“நிதி பற்றாக்குறையானது ஒரு இருட்டான ஏறக்குறைய ஒரு உலகளாவிய மேகத்தைப் போல ஐரோப்பிய நாடுகளின் மேல் தொங்குகிறது. உலகெங்கும் இருக்கும் வல்லரசுகளுக்கு நாட்கள் மிகவும் மோசமாகவும் அதிலும் சிறிய நாடுகளுக்கு மிகமோசமாயும் இருக்கிறது. அந்த கண்டத்தில் எந்த ஒரு நாட்டின் கடந்த வருட வரவு செலவு கணக்கும் ஒரு பிரகாசமான தோற்றத்தை கொடுக்கவில்லை. பெரும்பாலும் திவாலாகிப் போனதான ஒப்புதல்களாகவே இருக்கிறது. இச்சமயத்தில் பல்வேறு நாடுகளின் பொருளாதார அறிக்கைகள், அநேக நிதி அமைச்சர்கள் வரவு செலவை சமன்படுத்த முடியாத பொதுவாய் எப்போதும் இல்லாத நிலையில் போராடுவதை மிகத்தெளிவாய் வெளிப்படுத்துகிறது. இந்த நிலை உண்மையில் பெரும்பாலும் உலகம் முழுவதும் காணப்படுகிறது. நமது கண்டத்திற்கு வெளியே பார்த்தால் ஒருபுறம் அமெரிக்க ஐக்கிய நாடுகளும், மறுபக்கம் இந்தியா மற்றும் ஜப்பானும், அதனுடைய அண்டைநாடுகளும் கூட இந்தக் கொடுமையை நடைமுறையில் உணர்கின்றன....



“மாபெரும் குடியரசானது மிகவும் பெலவீனமானதாய் இருந்தாலும் இந்த பொருளாதார சீர்கேட்டில் மடிந்து போகாமல் இருக்க மிகுந்த விஸ்தாரமாயும் மூலதனமும் இருக்கிறது. கிரேட் பிரிட்டனும் கூட மிகுந்த செலவாளியே. எனவே அது வருகின்ற வரவு செலவு பட்டிய-ல் விழும் பற்றாக்குறையை சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. நிலக்கரி வியாபாரத்தின் வேலை நிறுத்தத்தினால் சரிசெய்ய முடியாத அளவு பெருத்த நஷ்டத்தில் இருக்கிறது. பிரான்சும், நம்மைப்போலும் அமெரிக்காவைப் போலும் திவாலாகிப் போகக்கூடிய நிலையை நினைத்துக்கூட பார்க்கமுடியாதபடி, தனது மண் வளத்தில் செழிப்புடனும். மக்களிடம் நல்ல தொழில் வளமும் உடையதாய் இருக்கிறது. ஆனாலும், அதன் பட்ஜெட் அடிக்கடி பற்றாக்குறையையே காட்டியது. அதன் தேசிய கடன் தொகை பிரம்மாண்டமான பகுதியாய் காணப்படுகிறது. அதன் தரைப்படை மற்றும் கப்பற்படையின் பாரமானது அநேகமாய் நாட்டின் தொழில்களையே நசுக்குகிறது. ஜெர்மனியும் கூட மிகவும் உறுதியாய் பெலமுடன் இருந்தாலும் பெரும்பாலும் தற்கா-க இருளுக்குள் சென்றுவிடும் கூட்டத்தாருடன் சேர்க்கப்படவேண்டி இருக்கிறது. கடந்த வருடக் கணக்கின்படி அது £. 25,000,000 ஐ இழந்திருக்கிறது. அந்த தொகை நாட்டின் சேமிப்பில் பாதியாகும். போர்ச்சுக்கல், கிரீஸ், தென் அமெரிக்கா, மெக்சிகோ, இத்தா- மற்றும் செர்வியா நாடுகளின் சந்தையில் முதலீடு செய்த ஜெர்மனிக்கு பங்கு வந்தது பெரும்பாலும் இழப்பே. மேலும், வெள்ளி சந்தையிலும் மிகச்சரியான குழப்பநிலையை உணர்ந்தது. மேலும், ஆயுத செலவானது அதன் ஜனங்களை நசுக்கிவிடும் பளுவாய் இருந்தது. இவ்விதம் உண்மையில் திவாலாகிப்போன வ-மையான நாடுகளை நாம் தரம் பிரித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஆஸ்ட்ரியா, ஹங்கேரி இரண்டும் சந்தோஷமான கணக்கை காட்டும் நாடுகளாக இருப்பதை கண்டுகொள்ள முடிகிறது......

“இந்தப் பெரும் குழுக்களைவிட்டு திரும்பி இத்தா-யை பார்ப்போமாகில்,மாபெரும் சக்தியானது விலகி ஏழ்மைக்குள் பெரிதும் வந்துவிட்டதற்கு ஓர் உதராணமாய் இருக்கிறது. வருஷத்துக்கு வருஷம் அதன் வருமானம் குறைந்து செலவுகள்

அதிகரித்திருக்கிறது. 6 வருடங்களுக்கு முன் இத்தா-யின் வெளிச்சந்தையின் பொருளாதார மதிப்பு 2,600,000,000 பிரான்க்காக (பிரெஞ்சு நாணயம்) இருந்தது. இப்பொழுது 2,100,000,000 பிரான்க்காக குறைந்தது. தற்போது 30,000,000 ஸ்டெர்-ங்கை பொது கடனுக்கான வட்டியாகவும் இத்துடன் தங்கத்தின் தேவைக்கு பிரிமியமும் கட்டுகிறது. அதனுடைய பங்கு சந்தை ஒரு (மயக்கமூட்டும்) மருந்தாக இருக்கிறது. அந்த நாட்டின் விநோதமான பணப் புழக்கம் தங்கம் மற்றும் வெள்ளியையும் நம்பமுடியாத விலையில் கொண்டு போய் வைத்தது. அதன் மக்கள் கற்பனைக்கு அப்பாற்பட்ட ஏழ்மை மற்றும் உதவியற்ற நிலையில் சிக்கிக் கொண்டுள்ளார்கள். அதனுடைய புதிய மந்திரிகள் வந்து புதுவித வரிகளை விதித்தபோது பயங்கரமான கலகங்கள் வெடித்தன.

"ரஷ்யாவை பொருத்தவரை, ஒருவருமே தைரியமாய் உறுதியுடன் பேசக்கூடாத அளவு அதன் பொருளாதார விவரங்கள் திரைக்குப் பின்னான இரகசியமாய் இருக்கிறது. ரஷ்ய பேரரசர் பெரியவராய் இருப்பதனால் தான் அந்த நாடு திவாலாகாமல் இருக்கிறது என்ற ஒரு சிறு காரணம் மட்டும் சந்தேகப்படும்படியாய் இருக்கிறது. ஜனங்களுடைய உழைப்பின் ரத்தமானது கடைசி துளி வரை உறிஞ்சி எடுக்கப்பட்டு வருகிறது. இரக்கமும், யோசனையும் சிறிது கூட இல்லாத நிதி அமைச்சரானவர் ஏற்கனவே இருக்கும் வரிபளு போதாதென்று இன்னும் சற்றுக் கூடுதல் வரிசுமையை கூட்ட துணிந்தார்.

"ரஷ்யாவின் சூழ்நிலையைக் குறித்து துல்-யமாய் வரம்பு மீறாமல் உள்நாட்டு அதிகாரி கீழ்கண்டவிதமாக எழுதுகிறார்:

"ஒவ்வொரு கோபெக்கையும் (ரஷ்ய நாணயம்) சம்பாதிக்க குடிமக்கள் திட்டமிடுகின்றனர். ஆனால். தன்னுடைய செயல்கள் ஒழுங்கு படுத்தப்படாமல் வரிப்பண பாக்கியை செலுத்துவதில் செலவிட்டுவிடுகிறான்..... குடியானவர்களின் சொந்த மேல்வேலைகளான தோட்ட வேலையில் கிடைக்கும் கூ-யோடு சேர்த்து நாட்டின் மொத்த வருமானத்தில் 2/3 -ருந்து 3/4 பாகம் வரை வரிப்பணம் என்ற பெயரில் வசூ-க்கப்பட்டுவிடுகிறது. அரசாங்கத்தின் நல்லதொரு கையிருப்பைப் போல் தோன்றுவது கூட போ-த்தனமானதே. பேரரசரின் முக்கிய ஸ்தலங்களான சமூக



மற்றும் பொருளாதாரத்தில் அழிவு வரும் என்று மிகவும் உன்னிப்பாய் கவனிப்பவர்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ஐரோப்பாவிலும் கூடஇராணுவத்தின் மூலம் பெறப்படும் சமாதானம் என்ற பிரம்மாண்டமான துர்தேவதை, வர்த்தகம் மற்றும் விவசாயத்தை செய-முக்கச் செய்வதில் பெரும்பங்கு வகிக்கிறது. போர்ச்சுக்கல்-ன் உதாரணமோ நமது கருத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது. ஏனெனில் ஒரு காலத்தில் மிகவும் பேர் போன இராஜங்கமாய் இருந்தபோதும் திவாலா ஆனால் அதற்கான காரணம் உண்மையில் ராணுவ தேவைகளோ , மிதமிஞ்சிய செலவுகளோ அல்ல. கிரீஸ் நாடானது தனது இரண்டு மில்-யன் ஜனத்தொகையோடு சக்தி வாய்ந்த நாடுகளிடையே குறிப்பிடும்படியான ஒன்றாக இல்லாமல் இருந்தும், அதன் பொருளாதார ஊதாரித்தனத்தினாலும், அளவுக்கு மிஞ்சிய விலைவாசி உயர்வு திட்டங்களாலும் ஒரு நாட்டுக்கு வரும் அழிவுக்கு பளிச்சென்ற ஒரு உதாரணத்தை கொடுக்கிறது. இந்த 'மாபெரும் திட்டம்' சின்னஞ்சிறிய கிரீஸ் நாட்டுக்கு ஒரு சாபமாகிவிட்டது. முற்றிலும் நேர்மையற்ற ஒரு செய-னால் தன்னுடைய பொதுவான கடன் சுமையை ஏற்க மறுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டதையும், ஐரோப்பாவின் ஆட்சேபத்தினால் ஒரு பகுதி மட்டுமே தற்கா-கமாக தள்ளி வைக்கப்பட்டதையும் சமீபத்தில் நாம் பார்த்தோம். அந்த நாட்டின் தரைப்படைகளுக்கும் கப்பற்படைகளுக்கும் வீணாய் செலவிட்ட பணம் கட-ல் வீசி எறியப்பட்டதற்கு இணையாகும். அதனுடைய நல்ல திறமையான பொதுமக்களுக்கும் பரவி பாதிக்கக்கூடிய தொற்று நோயைப் போல அவர்களது அரசியல் மாறிவிட்டது. பொதுமக்கள் உழைக்க நன்கு கற்றுக்கொடுக்கப்பட்டும், செங்கல் தொழிலாளிகளைக் காட்டிலும் கல்லூரி மாணவர்கள் அதிகமாக இருந்த போதும், பொது ஜன அல்லது தனிமனித கடன்களை திரும்பி செலுத்த யாருமே எப்போதுமே எண்ணம் கொள்ளவில்லை; ராணுவமும் கப்பற்படையும் நிதியை விழுங்கிக் கொண்டிருந்தன ; நேர்மையின்மை என்பது அரசியலுக்கு ஒரு விதிமுறையாக ஆகிவிட்டது. மேலும் இரகசிய திட்டங்கள் மூலம் அளவுக்கதிகமாய் கடன் பெறுதலோ அல்லது தவறான வழிகளில் பணத்தை அழிக்கக்கூடிய நிலைக்கு வழி வகுத்தல்,

மேலும் ரஷ்யாவுடனான ஆபத்தான பேரம் போன்ற இந்தக் காரியங்கள் தற்கால கிரீஸ் நாட்டின் குணாதிசயங்களை காட்டுகிறது.

"எல்லா கண்டங்களையும் சுற்றி பார்க்கும் போது மக்களின் நலனுக்கான எந்த அக்கறையுடனும் சூழ்நிலைகள் இயங்கவில்லையென்பதும், தேசிய வரவு செலவு பட்டியல் மிகவும் அதிருப்திகரமாகவே இருக்கிறது என்பதும் மறுக்கமுடியாததாய் இருக்கிறது. உண்மையில் இதற்கான ஒரேஒரு முதன்மையான மற்றும் தெளிவான காரணம் என்னவெனில், ஐரோப்பாவை பொறுத்தவரை ஒரு பயங்கரமானதாக இருக்கும் ஆயுதந்தரித்த சமாதானம். இதற்கான ஒரு நிரந்தர முகாமாய் தேசம் முழுவதுமே மாற்றப்பட்டுவிட்டது. ஜெர்மனியை மட்டும் பாருங்கள்! பேரரசின் ராணுவ செலவு 1880ல் 17,500,000 ஸ்டெர்-ங்கி-ருந்து 1893ல் 28,500,000 ஸ்டெர்-ங்காக உயர்ந்துவிட்டது. புதிய ராணுவ தற்காப்பு சட்டத்தின்படி வருடத்துக்கு 3,000,000 ஸ்டெர்-ங் ஜெர்மனியின் ஆயுதம் ஏந்திய பிரம்மாண்டமான பெரும்படைகளுக்கு கூட்டிக்கொடுக்கப்பட்டது.

"பிரான்சும் தனது மாபெரும் எதிராளிக்கு இணையாகும் விதத்தில் தன்னுடைய சக்தி முழுவதையும் அதேவிதமான உடனடி நாசத்துக்காய் செலவிட்டு பிரயாசப்படுகிறது. இந்த போர் உத்தரவாதங்கள் தற்கால ஐரோப்பா ஏற்றுக்கொண்ட பயங்கர காரியங்களை குறித்து சுட்டிக்காட்டுவது பயனற்றதாய் இருக்கிறது. ராணுவ கூடாரங்கள் கட்டவும்,தேவையான வெடி மருந்துகள், குண்டுகள் வாங்கவும், பெரும்பணம் செலவிடப்படுவதற்கு, வருமானங்களிலும்,லாபங்களிலும் இருந்து மட்டும் பெரும்பாலும் சுரண்டி உறிஞ்சி எடுக்கப்படவிடவில்லை. லட்சக்கணக்கான வா-பரை தொழிற்சாலையி-ருந்து எடுத்து ராணுவப்படைக்கென்று பயன்படுத்திக் கொண்டனர். இந்த நாட்களில் தொழிலாளிகள் தங்கள் குடும்பத்தினரை பிரிந்தனர். வாரிசுகளை உருவாக்கக் கூட சந்தர்ப்பங்களை இழந்தனர். உலகம் இதுவரையிலும் கண்டிராத மிகுந்த பயங்கரமான போர் என்ற உச்சக்கட்டத்தை அடைந்ததே தவிர, சர்வதேச காசோலைகள் பணமாக மாற்றித் தரும் ஒன்றை இதுவரை கண்டுபிடிக்கவில்லை."

ஆனால், தேசிய அளவிலான பெரும் கடன் மற்றும்



பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இயலாமல், சில தேர்ந்த கணக்கர்கள் கூடி உண்மையில் ஐரோப்பாவின் பல்வேறு ராணுவ கப்பற்படை வரவு செலவுகளை மதிப்பிட்டு, நகர காவற்படை பராமரிப்பு மற்றும் உற்பத்தி தொழில்களி-ருந்து இழப்பு ஆகியவை வருடத்துக்கு உண்மையில் $. 1,500,000,000ஐ இழக்கச் செய்தது. அளவற்ற உயிர் சேதத்தைப் பற்றி சொல்லவே முடியாது. அது கடந்த நூற்றாண்டில் (1855 முதல் 1880 வரை) சுமார் 25 ஆண்டுகளில் 2,188,000 ஆகவும், திகிலுக்கிடையே கற்பனைக் கெட்டாத விளக்கமாக இருக்கும். திரு. சார்லஸ் டிக்கன்ஸ் உண்மையில் கவனித்து உணர்ந்து கொண்டதாவது :

"ஒரு வேகத்தோடு நாம் வெற்றி கொண்டாட்டத்தோடு, 'அற்புதமான தாக்குதல்,' 'அபாரமான தாக்குதல்' என்று பேசுகிறோம். ஆனால், வெகுசிலரே இந்த இரு வார்த்தைகளின் கொடூரமான விவரங்களைக் குறித்து சிந்திப்பார்கள். 'அற்புதமான ஒரு தாக்குதல்' என்பது கொஞ்சமும் முன் யோசனையற்ற மனிதன், வ-மையான குதிரைகள் மீதமர்ந்து, கால்நடையாய் அவர்களை எதிர்க்கும் கூட்டத்தார் மீது, முழுவேகத்தில் வந்து அவர்களை முற்றிலுமாய் அழிப்பது ஆகும். எதிரிகள் பின்வாங்க செய்வது என்ற விவரத்தை படிப்பவர்களது சிந்தனை இதற்கும் மேல் சிந்திக்க முடியாது. இதை படம் பிடித்து காட்டவும் முடியாது. இந்த 'அபாரமான ஒரு தாக்குதல்' வேலையை முடித்துவிட்டு கடந்து போனபோது ஒரு பயங்கரமான பெரும் ரயில் விபத்து நடந்து முடிந்ததைப் போலவே காட்சியளிக்கும். அந்த இடம் முழுவதும் முதுகு எலும்பு இரண்டாக முறிந்தவர்களும், கைகள் முழுவதும் பிசகிகப் போனவர்களும், தங்கள் சொந்த குத்துவாளால் வெட்டப்பட்டவர்களும், ஆப்பிள் பழத்தை அரிந்தது போல தலை அறுபட்டவர்களும், குதிரைகளின் இரும்பு குளம்புகளால் மிதிபட்டு தலைகள் பழக்கூழைப் போல் கூளமாய் நசுங்கிப் போனவர்களும். மனித முகம் என்ற அடையாளம் காணப்படாத அளவு குதிரையின் இரும்பு லாடத்தில் மிதிபட்டவர்களுமாய், அந்த இடத்தில் நடந்த சம்பவத்துக்கு அத்தாட்சிகளாய் இருக்கும். அற்புதமான தாக்குதல் என்பதன் பின்னால் ஒளிந்திருக்கும் காரியங்கள் இவைதான். எங்களுடைய ஆட்கள் சவாரி சென்று அவர்களது தலைகளை கொய்து வந்தனர்

என்பது இப்படியாய் காலகாலமாய் தொடர்ந்து வரும் காரியமாகிவிட்டது."

மற்றொரு எழுத்தாளர் கூறுகிறார்: "ஐரோப்பா முழுவதிலும் லட்சக்கணக்கானோர் கஷ்டப்படும் அந்த காட்சிகளை நீங்களே பாருங்கள். தேனீக்களைப் போல தங்கள் வேலைகளுக்கு செல்வதும், இடைவிடாமல் விடியற்காலை முதல் பனிபெய்யும் முன்னிரவு வரை வேலை செய்வதும். நிலத்தில் பயிர் செய்வதும், ஆடை உற்பத்தி செய்வதும், உபயோகமான பொருட்களை பண்டமாற்றுவதும், சுரங்கத்திலும், தொழிற்சாலைகளிலும்,உலை களத்திலும், கப்பல் செப்பனிடும் பணியிலும், பட்டறைகளிலும், சேமிப்பு கிடங்குகளிலும், ரயில்வேயிலும், ஆறுகளிலும், ஏரிகள், சமுத்திரங்களிலும், மற்றும் பூமியின் ஆழங்கள் வரை தோண்டி செல்வதிலும், மிருகத்தனமான பிடிவாத காரியங்களை சமாளிப்பதிலும், இயற்கை வளங்களை பயன்படுத்துவதில் தேர்ச்சி பெறுவதிலும், அவற்றை மனித சௌகரியங்களுக்கும் நல்வாழ்வுக்கும் உதவியானதாய் மாற்றுவதிலும், தங்கள் குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் அபரிதமான செல்வமும், சௌகரியமும் கொடுக்கும் என்ற எண்ணத்தில் உழைக்கிறார்கள். இப்படியாய் இருக்கும் போது வ-மையான கரம் வந்து ஒவ்வொரு வருடமும் சுமார் அறுநூறு மில்-யன் பணத்தை இராணுவ செலவு என்னும் ஆழ்கட-ல் போடுவதை கற்பனை செய்து பாருங்கள்."

ஹரிஸ்பர்க் டெ-கிராமின் கீழ்கண்ட குறிப்பு கூட கூறுவதாவது :

"ஐரோப்பிய கிறிஸ்தவ ராஜ்யங்களுக்கு 'பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக' என்ற தங்களுடைய எண்ணத்தை விளக்க கொஞ்சம் விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதாவது தங்களுக்குள் சிறு சிறு பிரிவுகள் உண்டாகும்படி தங்களை சிதறடித்துக் கொள்ள அவர்கள் கொஞ்சம் விலை கொடுக்க வேண்டியதாகிறது. பெர்-னில் வெளியான புள்ளி விவரப்படி, கடந்த மூன்று வருடங்களில் *1888,1889,1890*ல் வல்லரசுகளின் இராணுவ செலவுகளை கீழ்கண்டபடி காணலாம். பிரான்ஸ் *$.1,270,000,000*, ரஷ்யா *$. 813,000,000*, கிரேட் பிரிட்டன் *$.613,000,000*, ஜெர்மனி *$.607,000,000*, ஆஸ்டிரியா-ஹங்கேரி *$.338,000,000*, இத்தா- *$.313,500,000*. இந்த ஆறு வல்லரசுகளும் மொத்தம் *$.3,954,500,000*ஐ மூன்று வருடங்களில் அதாவது வருடத்திற்கு *$. 1,318,100,000* ஐ இராணுவ காரியங்களுக்காய் செலவு செய்திருக்கின்றன. மகா பிரிட்டனின் தேசிய கடனானது அமெரிக்க நாடுகளின் கடனுக்கான வட்டியைக் காட்டிலும் மூன்று மடங்கு கூடுதலாக இருந்தது. ஓய்வூதியங்களை தவிர்த்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் செலவு *$.145,000,000* ஆக இருந்தது. இதையும் சேர்த்துக் கொண்டால் மொத்த செலவின் கூட்டுத்தொகை *$.390,000,000*க்கும் அதிகமாகிவிடும்.



"பிரான்சு மற்றும் ஜெர்மனி புள்ளி விவரக்கணக்கர்களின் மதிப்பீட்டின்படி போரில் கடந்த *30* ஆண்டுகளில் *2,500,000* மக்கள் அழிந்திருக்கின்றனர். அதற்கு காரணமான போருக்காக *$.13,000,000,000*க்கும் குறைவில்லாமல் செலவு செய்யப்பட்டுள்ளது. டாக்டர் என்ஜெல் என்ற ஜெர்மானிய புள்ளிவிவர நிபுணர், கடந்த *30* ஆண்டுகளில் பிரதான போர்களின் தோராய செலவுகள் குறித்த கீழ்கண்ட புள்ளிவிவரத்தை கொடுக்கிறார். க்ரீமின் போருக்கு *$.2,000,000,000; 1859*ன் இத்தா-ய போருக்கு *$. 300,000,000; 1866*ன் புருசோ - டானிஷ் போருக்கு *$.35.000,000*, கலகம் போர் (வடக்கு) *$.5,100,000,000* ; தெற்கு *$. 2,300,000,000; 1866*ன் புருசோ - ஆஸ்டிரியன் போருக்கு *$.330,600,000; 1870*ன்பிரான்கோ-ஜெர்மனி போருக்கு *$.2,600,000,000* ; ரஷ்யா-துருக்கிப் போருக்கு *$.125,000,000;* தென்ஆப்பிரிக்க போருக்கு *$.8,770,000;* ஆப்பிரிக்க போருக்கு *$.13,250,000;* சர்வோ-பல்கேரியன் போருக்கு *$.176,000,000.*

"இந்தப் போர்கள் எல்லாமே எல்லை மீறிய கொலை பாதகங்களாகவே இருந்தன. க்ரீமின் போரில், நடந்த சிறுபோர்கள் *$.750,000* உயிர்களை ப-வாங்கியது. ரிபெல்-யன் தெற்கு, வடக்கு போர்களின் போது கொல்லப்பட்ட அல்லது தங்களது காயங்களால் மரித்தவர்களின் எண்ணிக்கையானது *50,000* விட சற்றே குறைவானது. மெக்சிகன் மற்றும் சீன படையெடுப்புக்கு *$.200,000,000*ம் *85,000* உயிர்களும் ப-யாயின. ரஷ்ய டர்கிஷ் போரில் *250,000* பேர் மரிக்கும் அளவுக்கு காயப்பட்டும், இறந்தும் போனார்கள். *1859*ன் இத்தா-ய போரிலும், புரூஷியா ஆஸ்டிரியா போரிலும் தலா *45,000* பேர் மாண்டனர்."

இங்கிலாந்து பார்-மெண்டின் உறுப்பினர் மறைந்த மாண்புமிகு ஜான்பிரைட் என்பவர் பாரிசின் பிரதிநிதியான பாசிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் கூறியிருப்பதாவது;

“ஐரோப்பிய நாடுகளின் வளங்கள் எல்லாம் இந்நாட்களில் இராணுவ நிர்பந்தங்களால் முழுவதுமாய், விழுங்கப்பட்டு விடுகின்றன. வெளிநாட்டு கொள்கைகள் என்ற பொய்யான கருத்து மீதான மரியாதையின் நிமித்தம் மக்களின் உரிமைகள் ப-யிடப்படுகின்றன. பாமரமக்களின் உரிமைகள், தேசிய மகிமை மற்றும் மரியாதையின் தவறான கோரிக்கைகளால் கா-ன் கீழ் மிதிக்கப்படுகின்றன. ஐரோப்பாவானது ஏதோ ஒரு பெரும் கோரவிளைவின் பாதிப்பை நோக்கி நடப்பதாக நான் நினைக்கவேண்டியுள்ளது. இராணுவ அமைப்பானது பொறுமையை ஆதரிக்கக்கூடியதாக நிச்சயமாக இல்லை. நம்பிக்கையற்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்ட பாமர மக்கள் இராஜ பதவிகளையும் அந்தப் பெயரால் தங்களை ஆளுகின்ற அதிகாரிகளையும் தூக்கி எறிந்துவிடலாம்.”

இப்படியாக சமுதாய சக்தியின் தீர்ப்பு அவர்களுக்கு எதிராக போய்க்கொண்டு இருக்கிறது. பத்திரிக்கைகள் மட்டும் இதை வெளிப்படுத்தவில்லை. மக்களும் கூட அதிகாரங்களுக்கு எதிரான எல்லா இடங்களிலும் சத்தமாய் பேசி கூச்ச-டுகின்றனர். சர்வ லோகமும் அமைதியின்றி இருக்கிறது. இது வருடத்துக்கு வருடம் மென்மேலும் பயங்கரமாக அதிகரித்து வருகிறது.

### தற்கால சமூக அமைப்பின் மீது உலகத்தின் குற்றச்சாட்டு

கிறிஸ்தவ ராஜ்யங்களின் சமூக அமைப்பு கூட ஆய்வுக்குட்பட்டே இருக்கிறது. அதன் பண சம்மந்தமான ஒழுங்குமுறைகள், அதன் பொருளாதார திட்டங்கள், நிறுவனங்கள் மேலும், இதற்கும் மேலாக அதன் சுயநலமான வியாபார நியமங்கள், செல்வத்தை அடிப்படையாக கொண்ட அதன் வகுப்பு பிரிவினைகள், இவை யாவும் அநீதியையும் மக்களின் பாடுகளையுமே குறிப்பிடுவதாக இருக்கின்றன. இவையெல்லாம் இந்த நேரத்தின் நியாயத்தீர்ப்பில் சமூக நிறுவனங்களின் மேல் தீவிரமாக பிரயோகிக்கப்படுகிறது. வெள்ளியைப் போன்ற கேள்விக்கும்,



பொன்னான தரத்திற்கும் முடிவில்லாத விவாதங்கள் சாட்சியாக உள்ளன. முதலீடு மற்றும் உழைப்புக்கு இடையிலான ஓயாத சர்ச்சை. பெருங்காற்றால் பேரிரைச்சலோடு அலைமோதும் கடல் அலை போல், தற்போதைய சமூக அமைப்புக்கு எதிராக ஒருமுகப்பட்ட முணுமுணுப்பின் எண்ணில்லா குரல்கள் ஒ-க்கின்றன. விசேஷமாக வேதத்தில் காணப்படுகின்ற நீதி நெறிமுறைகளை அங்கீகரித்து கடைப்பிடிக்கிறோம் என்று கூறிக்கொள்கிற கிறிஸ்தவ ராஜ்யத்துக்கு எதிராக ஒ-க்கிறது.

மொத்தத்தில் உலகத்துக்கு கூட, கிறிஸ்தவ ராஜ்யத்தின் நியாயத்தீர்ப்பில், தேவனுடைய வசனமே அளவு கோலாக இருக்கும். புறஜாதியார், “உங்கள் புத்தகத்தைப் போல நீங்கள் நல்லவர்களாக இல்லை,” இன்னும் ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்துவை கோடிட்டுக் காட்டி,’ “உங்களுக்கு மாதிரியாய் இருப்பவரை நீங்கள் பின்பற்றவில்லை” என்கின்றனர். புறஜாதியாரும் கிறிஸ்தவ ராஜ்யமும் அன்பின் சட்டத்தையும், பொன்னான பிரமாணங்களையும் கையிலெடுத்துக் கொண்டு கிறிஸ்தவர்களின் போதனைகள், நிறுவனங்கள், கோட்பாடுகள் மற்றும் பொதுவான கிறிஸ்தவ முறைமைகள் ஆகியவைகளை அளந்து பார்க்கின்றன. எல்லாமே அரண்மனை சுவரில் எழுதப்பட்ட விநோதமான கையெழுத்தாகிய, “நீ தராசிலே நிறுத்தப்பட்டு, குறையக் காணப்பட்டாய்” என்ற சத்தியத்துக்கு சாட்சியாய் இருப்பது போலவே இருக்கின்றன.

தற்கால சமூக அமைப்புக்கு எதிரான உலகத்தின் சாட்சியம் பூமியின் எல்லா இடத்திலும் எல்லா தேசங்களிலும் கேட்கப்படுகிறது. இது ஒரு தோல்விமயம் என்று எல்லா மனிதரும் அறிக்கை பண்ணுகின்றனர். எதிர்ப்புகள் எல்லாம் அதிகப்படியாகவே நடைமுறையில் இருக்கின்றது. உலகம் முழுவதிலுமே அபாய ஒ-யை பரப்பிக்கொண்டும் இருக்கிறது. தற்போதுள்ள நிறுவனங்களின் எல்லா நம்பிக்கைகளுமே படுமோசமாக அசைக்கப்படுகின்றன. நிரந்தரமாயும், சடுதியாயும், குழப்பங்களாலும் மற்றும் வேலை நிறுத்தங்களாலும் தொழிற்சாலைகளை முடங்கச் செய்கின்றன. மேலும் கிறிஸ்தவ உலகில் எந்த ஒரு நாடுமே இந்த தற்கால சமூக அமைப்பை எதிர்க்கும்

எதிர்ப்பை உச்சரிக்காமலோ, பின்பற்றாமலோ,கூடியமட்டும் கூடுதலாகவே அச்சுறுத்தாத நாடு எதுவுமே இல்லை.

திரு. கேர்லீல் என்பவர் கூறுகிறார்: "இங்கிலாந்தின் தற்போதைய தொழிற்சாலைகள் ஒரு மாபெரும் துர்நாற்றம் வீசும் தொற்று வியாதியைப் போன்ற சகதியான சிறையாக மிகவேகமாக மாறிவருவதாகத் தோன்றுகிறது. சரீரப்பிரகாரமாயும், ஒழுக்கத்திலும் அச்சமூட்டும் ஒரு கொடூரமான தற்போதைய கொல்கதாவாக, ஆத்துமாவும், சரீரமும் உயிரோடு புதைக்கப்படும் இடமாகவும் மாறி உள்ளது. முப்பது ஆயிரம் தையற்காரிகள் அதிவேகமாக உயிரைக் கொடுத்து வேலை செய்கிறார்கள். மூன்று மில்-யன் நொடிந்து போனவர்கள் வெறுமையாய் இருக்க வேண்டிய கட்டாயத்தினால் அழிவுக்குள் தள்ளப்பட்டு தையல் வேலை செய்யும் பெண்களின் விரைவான மரணத்துக்கே உதவி செய்வதாகவும் இருக்கிறது. இவை யாவும் முற்றிலும் நம்பிக்கையற்ற நிலைமையையே குறிக்கிறது."

"எங் மேன்" என்ற மற்றொரு பத்திரிகையி-ருந்து கீழ்கண்ட காரியத்தை கோடிட்டு நாம் காட்டுகின்றோம். "உலகம் மேம்பட்ட நிலை நோக்கி வளர்கிறதா?" என்ற தலைப்பில் கீழ்கண்டவாறு சொல்கிறது: "வ-மையான மனிதன் நேர்மையான கடும் உழைப்பை வாஞ்சிக்கிறான். ஆனால், பசியும், நிர்வாணமுமான வேதனை போராட்டத்தையே நிரந்தரமாய் கொண்டிருக்கிறான். அநேக சமயங்களில் பலருக்கு தன் குடும்பத்தின் கஷ்டங்களையும் சுமக்கும் கூடுதல் துயரமும் சேர்ந்து விடுகிறது. மற்றொரு பக்கம் அபரிதமான செல்வம் பெரும்பாலும் பேராசையுடனும், அநீதியுடனும் சேர்ந்தே இருக்கின்றன. ஏழைகள் படுமோசமாய் பட்டினி கிடக்கும் போது இந்த செல்வந்தர்கள் பெரும்பாலும் தங்கள் சகோதரர்களின் தேவைகளை அலட்சியம் செய்கின்றனர். அதோடு சங்கடமான நிலையில் லாசருக்கள் (ஏழைகள்) பிரசித்தி பெற்றவராகிவிடக்கூடாது என்று அக்கறை கொள்கின்றனர். ஆயிரக்கணக்கான வா-பர்கள் மூச்சுத்திணரும் வசதியற்ற கடைகளிலும், விரும்பத்தகாத நிலையின் பண்டகசாலைகளிலும் வலுக்கட்டாயமாய், வாரத்தில் 70, 80 மணி நேரம் வேலையில் அடிமைப்படுத்தப்படுகின்றனர். இவர்களுக்கு சரீரம் மற்றும் மனத்தளவிலான பொழுதுபோக்கோ சற்று ஓய்வோ கிடைக்காத



அளவுக்கு தொடர்ச்சியான வேலை. கிழக்கிந்திய நாடுகளில் பெண்கள் துணி தைப்பதிலும் அல்லது தீப்பெட்டி செய்வதிலும் முழுநாளும் உழைத்துப் பெறும் கூ-யில் ஒரு படுக்கையை வாடகைக்கு கூட எடுக்கமுடியாது. அல்லது தங்கும்படியாக தனி அறையை பற்றி பேசக்கூட முடியாது. பெரும்பாலும் பட்டினி அல்லது நெறிதவறிய வாழ்க்கை என்று எதையாவது ஒன்றை தீர்மானித்துக்கொள்ளும் கட்டாயத்துக்கு தள்ளப்படுகிறார்கள். மேற்கத்திய நாடுகளில் சிற்றின்பமும் பாவமும் பொதுப் பாதைகளாய் இருக்கின்றன. ஒவ்வொன்றும் பெலவீனத்துக்கும் கபட்டுத்தனத்துக்கும் கண்டனம் கூறுவதாய் நிற்கின்றது. வா-பரைக் பொறுத்தமட்டில் சூதாடி சிறைக்குச் செல்கின்றனர். குடியினால் தங்களையே கல்லறைக்குள் சடுதியாய் வைக்கின்றனர். எல்லா மதிப்பிற்குரிய செய்தித்தாள்களிலும் குதிரைப் பந்தயத்தைக் குறித்த நீண்ட அறிக்கைகள் ஆக்கிரமித்துள்ளன. மேலும், கிறிஸ்தவ அரசாங்கங்கள் ஒவ்வொரு தெருமுனைகளிலும் பொதுவிடுதிகளை ஸ்தாபிக்க அனுமதிக்கின்றன. பாவம் எளிதாக்கப்படுகிறது. தவறான நெறிகள் ம-வாகிப் போனது. வியாபாரத்தில் சூழ்ச்சியே வியாபித்து இருக்கிறது. அரசிய-ல் கசப்பும், மதத்தில் ஆர்வமின்மையுமே இருக்கிறது."

பிலடெல்பியா பிரஸ், சற்று காலத்துக்கு முன் கீழ்க்கண்டதை பிரசுரித்தது : "அபாயம் எதிர்கொள்கிறது! பெரும் பணக்காரர், பரம ஏழை என்ற 2 பெரும் வகுப்புகள் நியூயார்க் நகரை இரண்டாகப் பிரிக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. கடின உழைப்புடைய, நியாயமானதை செய்யும் ஜனமாகிய நடுத்தவர்க்கமானது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. அதுவும், ஒன்று உலக சொத்துக்களையுடைய மேல்இடத்துக்கோ அல்லது வறுமையின் கீழேயோ சென்றுவிடுகிறது. இந்த இரண்டு வகுப்புகளின் இடையே மிகவேகமாக வளரும், குறிப்பிடும்படியான தீமையை விளைவிக்கக்கூடிய வகுப்பு ஒன்று மறுப்புக்கிடமில்லாமல் காணப்படுகிறது. இங்கு சிலமனிதர் உண்டு. அவர்கள் $. 10,000,000ம், $.20,000,000, மதிப்பு சொத்து உடையவர்கள். உங்களுக்கு அவர்களைப் பற்றி அதிகம் ஒன்றும் தெரியாம-ருக்கலாம். எனக்கு ஒரு பெண்மனியைத் தெரியும். அவர் ஒரு பிரமாதமான வீட்டில்

வசிப்பவரும், ஒரு மந்திரியினுடையதைப் போன்ற வாழ்க்கை முறையையும் கொண்டவர். குறைந்தபட்சம் $. 30,000,000த்தை ஐந்து வருடங்களுக்குள்ளாய் செலவழித்தவர், அவரது இறப்புக்கு முன் தர்ம நெறி கொடைகளே $.7,000,000க்கு குறைவில்லாமல் எட்டிவிடும். அவரது வீட்டில் ஓவியங்கள், வைரங்கள், சிற்பங்கள், விலையேறப்பெற்ற கற்கள், தரமான தங்கம் மற்றும் வெள்ளியிலான பொருட்கள், கற்பனைத் திறனுடைய விலையேறப் பெற்ற கலைப்பொருட்கள் ஆகியவைகள் ஏறக்குறைய $.1,500,000 மதிப்புடையவைகளாக இருக்கின்றன. ஆனால், இவருக்கு அண்டை வீட்டார் இவரை விட பல மில்-யன் பணக்காரர்களாக இருக்கின்றனர். இங்கு வாழும் மனிதரில் சிலர் 20 வருடங்களுக்கு முன் கேத்தம் தெருவில் துணிகளை விற்றவர்கள். இன்றோ வருடம் $.100,000 செலவிடும் வாழ்க்கையை வாழ்கின்றனர். இவர்கள் அணியும் அணிகலன்கள் $. 25,000 மதிப்புடையவை.

"என்னோடு மேடிசன் அவென்யூகாரில் ஒருநாள் வாருங்கள், மழையோ வெயிலோ காலை 10 மணி முதல் மாலை 5 (அ) 6 மணிக்குள் ஒரு காருக்கு பின் ஒரு கார் என்று வரிசையாக அதில் நெருக்கமாக பெண்மணிகள் அமர்ந்து செல்வதை உங்களுக்கு காண்பிக்க முடியும். $.500 முதல் $.5000 வரை பெறுமானமுள்ள வைர காதணிகளையும், கையுறையிடாத சிவந்த, பெருத்த கைகளில் மின்னும் அணிகலன்களுடன் செல்வர் என்னுடன் ஸ்டியூ ஆர்ட்ஸ் பழைய கடை, 9ம் வீதியின் மூலை மற்றும் பிராட்வே, 30ம் வீதி மற்றும் பிராட்வேவுக்கு ஏதாவது ஒருநாள் வாருங்கள். ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் அல்லது விசேஷ தினங்களில் அல்ல, எல்லா நேரமும் கூட்டம் கூட்டமாய் பெண்கள் நீர்நாய் தோ-லான கால்வரையிலான உடுப்புகளுடன், இவை $. 500 முதல் $. 5000 வரை பெறும், இதனுடன் வைர காதணி, மோதிரங்கள்,மற்றும் விலையேறப்பெற்ற ரத்தினக்கற்களை அணிந்து, அலங்கார கைப்பைகளில் பணத்தை நிரப்பிக்கொண்டு வருவதை உங்களுக்கு காட்டுகிறேன். இவர்கள் நியூயார்க்கை நிரப்பிவரும் புதுப்பணக்காரர்களாக காணப்படுகிறார்கள்.

"இதே வீதியில், அதே நேரத்தில் 1 டாலர் பணத்தை மிகப்பெரிய அதிர்ஷ்டமாய் கருதும் ஆட்களையும் உங்களுக்கு என்னால் காட்டமுடியும். அவர்கள் உடைகள் கிழிந்து, கந்தையுடன் மிகவும் அவலமாய் காணப்படுவர். அவர்களது பிடியளவு ஆகிப்போன இடுப்பில் கிழிந்த காற்சட்டை, கயிறு அல்லது மெல்-ய சரடு அல்லது குண்டூசியால் இறுக்கி கட்டப்பட்டிருக்கும். காலுறை அணியாத பாதங்கள் தரையில் தேய்ந்து நடந்து கொண்டிருக்கும், முகத்தின் நிறம் மாறி, முகத்தின் தாடி நீண்டு வளர்ந்து தலைமுடிபோல் அலைமோதும், கைகள் சிவந்து, நகங்கள் வளர்ந்து வளைந்து போய்க் காணப்படும். இந்தக் கூரிய நகங்கள் இந்தப் புதுப்பணக்காரர் மீது பாய எவ்வளவு நேரம் பிடிக்கும்? தவறாய் புரிந்துக்கொள்ள வேண்டாம். இந்த எண்ணம் (பிறந்து) உருவாகிவிட்டது. இந்த உணர்வு வளர்கிறது. இந்த உணர்வு சீக்கிரமாகவோ தாமதமாகவோ நிச்சயம் வெடிக்கும்.



"நேற்று இரவு தான் 14வது வீதி வழியே நடந்து வந்தேன். அதில் ஒருசில வீடுகள் மட்டுமே விடப்பட்டிருக்கின்றன. அவைகளின் ஒன்றின் முன்னே பார்த்தபோது, கதவி-ருந்து நடைபாதை வரை ஒரு விதானம், அதனடியில் மிகவும் நேர்த்தியாய் ஆடை அலங்காரம் செய்த பெண்கள், தங்கள் பாதுகாவலர்களுடன் தங்கள் வாகனங்களி-ருந்து திறந்திருந்த கதவுக்கு சென்றார்கள். அதி-ருந்து ஒளி வெள்ளமும் இசையொ-யும் வந்தது. நான் கூட்டத்தினூடே நின்றேன், மிகப்பெரிய கூட்டம். ஒருநிமிடம் என்னுள் ஒரு எண்ணம் உதித்தது. ஏதாவது செய்தாலொழிய, அதுவும் வெகுவிரைவில், நிச்சயமாய் வெடிக்கப்போகும் ஒரு புரட்சி, திடீர் கிளர்ச்சி ஒன்று வெடிக்கப்போவது தவிர்க்கமுடியாததாய், அதுவும் மிக விரைவில் செய்யப்படாவிட்டால் மிகவும் நிச்சயமானது என்று என் மனது கூறியது. தற்போதுள்ள கேடுகளை அகற்ற மட்டுமின்றி, அது பரம ஏழைகள் மூலம் பெரும்பணக்காரருக்கு எதிராக செய்யப்படுகின்ற ஒன்றாகவும் இருக்கிறது. அந்தப் பெண்மணிகளின் பேச்சு அவ்விதம் நம்மை நினைக்கத் தூண்டுகிறது. மேட்டிமை, பெருமை, கேட்டுக்கு காரணமானவை, மூர்க்கமானவை என்று தேவையான எல்லாமும் அங்கிருந்தன. அங்கு தேவைப்பட்டதெல்லாம் ஒன்றே அது ஒரு தலைவர் மட்டுமே."

வியர்வை சிந்தும் அடிமைத்தனமும், வேலையற்ற ஜனக்கூட்டத்தின் அவலநிலையும், மிகக்குறைந்த கூ- பெறும் மற்றொரு பட்டாளமும், மிகவும் சொகுசும், அளவுக்கு மிஞ்சிய

சொத்துக்களின் ஊதாரித்தனமும் ஒன்றுக்கொன்றுடன் இந்த உலகத்தில் முரண்பாடடைகிறது. இதையே லண்டன் பத்திரிகை கொஞ்ச நாட்களுக்கு முன் கூறியதாவது :

“ஒரு கோடீஸ்வரரின் மாளிகை. திரு. கொர்ண-யு வேன்டர் பில்ட் நியூயார்க்கைச் சேர்ந்த கோடீஸ்வரர், ரயில்வேயில் பெரும்புள்ளி. சமீபத்தில் அவரது புதிய மாளிகையை ஒரு மாபெரும் நடன அரங்கத்துடன் திறந்துள்ளார். இந்த சுமாரான மாளிகையில் வெறும் 10 ஆட்கள் மட்டுமே அதுவும் வருடத்தில் 6 மாதத்துக்கு மட்டும் தங்குவதற்காகும் ; மற்ற 6 மாதத்திற்கு அவ்வீடு பூட்டியே வைக்கப்படும். 57வது வீதி, 5வது அவென்யூவில் இருக்கும் இதன் மதிப்பு $.1,000,000. ஸ்பெயின் கட்டிய வடிவமைப்பை வெளியிலேயும், சாம்பல் நிற கற்களால் கட்டப்பட்டு, சிகப்பு முகப்புடன், கோபுரங்களும், கொத்தளங்களுடன் கட்டப்பட்டு இருந்தது. இது கம்பீரமான மாடங்களுடனான மூன்றுமாடி கட்டிடமாகும். நியூயார்க்கில் இருக்கும் தனியார் நடன அரங்குகளிலேயே இதுவே பெரியது. 75 அடி நீளமும், 50 அடி அகலமும் உடையது. 6வது லூசியின் பாணியில் வெள்ளியும் தங்கமுமாய் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அதன் மேல் கூரை பெரும் மதிப்பு பெறும், இரட்டை கூம்பு வடிவத்தில், மன்மதன் மற்றும் அழகிய மங்கைகளின் வண்ணத்தீட்டுதலுடன் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்த வேலைப்பாடுகளுடைய பூக்களும், அதன் மையத்தில் மின்சார சரவிளக்கும், நடுவில் பிரம்மாண்டமான படிக சரவிளக்கு ஒன்றும் தொங்கவிடப்பட்டிருக்கும். அரங்கத்தின் தரை முதல் மேற்கூரை வரை இயற்கை மலர்களால் இரவில் அலங்கரிக்கப்படும். அதன் மதிப்பு $.1,000 ; அதன் பொழுது போக்கு அம்சங்களுக்கு $.5,000 வரை இருக்கும்; இதன் தோட்டம் போல் பெரிதானது ஒன்று இந்த உலகில் இல்லை ; ஏனெனில் ஒரு சாதாரண பட்டணத்தின் அளவில் அது இருந்தது. அதற்காக $.70,000 கொடுக்கப்பட்டது. $.25,000 மதிக்கத்தக்க ஒரு வீட்டை பூந்தோட்டம் அமைக்க வேண்டி அழிக்க வேண்டியிருந்தது.”

சான்பிரான்சிஸ்கோ, க-போர்னியாவில் தொழில் என்ற பத்திரிக்கையில், இந்த நாட்டின் இரு பணக்காரர்களின் அளவுக்கு மிஞ்சிய ஊதாரித்தனத்தை குறித்து கீழ்க்கண்டவிதம் விமர்சித்து வெளியிட்டது:



“பாரிசில் நடந்த தி வேன்னமேக்கர் இரவு விருந்தும், நியூபோர்டில் நடந்த வெண்டர்பில்ட் இரவு விருந்தும் சேர்ந்து குறைந்தது $.40,000 பிடித்திருக்கலாம். சொல்லப்போனால் அதைவிட அதிகமாகவும் ஆகியிருக்கும் எனலாம். இந்த தேசத்தில் ஏற்படப்போகும் மாறுதலுக்கு ஒரு முன்னெச்சரிக்கையாகவே இவ்வித நிகழ்ச்சிகள் இருந்தன. நூற்றுக்கணக்கான ஆடம்பர செலவீனங்களுக்கு இது ஒரு மாதிரி மட்டுமே, முடிவு வருவதற்கு முன்னே ரோம் நகரிலும் இதையொத்த விருந்துகள் நடக்கலாம், ஒரு நூற்றாண்டுக்கு முன் நடந்த புரட்சிக்கு இவ்வித ஆடம்பரங்களே கட்டியம் கூறின. ஆடம்பரம் மற்றும் தீயவழிகளில் வெளிநாட்டில் இருக்கும் அமெரிக்கர்கள் வருடத்திற்கு செலவிடும் பணமானது நமது நாட்டின் வருடாந்திர வருமானத்தில் 1/3 ஆகும் என மதிப்பிடப்படுகிறது.”

நேஷனல் வியூ என்கிற பத்திரிக்கையில் முன்னொரு காலத்தில் நியூயார்க் நகரத்தின் சமூகத்தலைவராக இருந்த வார்ட் மெக்அ-ஸ்ட்ர் கொடுத்த மிகவும் கவனத்தைத் தூண்டும் ஒரு துண்டு செய்தி கீழ்க்கண்டபடி கூறுகிறது :

“சராசரியான நிலையிலுள்ள கணவன், மனைவி, மூன்று குழந்தைகளுடைய ஒரு குடும்பத்தின் வருட செலவானது $. 146,945. இதில் வீட்டு வாடகை நகரமானால் $. 29,000, கிராமமானால் $.14,000; கிராம வீட்டின் செலவு $.6,000; வீட்டு வேலைக்காரரின் ஊதியம் $.8,016; வீட்டுச் செலவு வேலையாட்களின் ஊதியத்துடன் $. 6,000; அவரது மனைவியின் உடுப்புகள் $.10,000; அவரது உடுப்புகள் $.2,000; குழந்தைகளின் ஆடை, மற்றும் கை செலவுக்கு $. 4,500; குழந்தைகளின் பள்ளிச் செலவுகள் $. 3,600; நடனம் விழாக்களுக்கான செலவுகள் $.7,000; விருந்து உபசாரங்களுக்கு $.6,600; நாடக அரங்கத்துக்கு $.4,500, திரை அரங்கு செலவு மற்றும் அதன் பிறகான இரவு விருந்துகளுக்கு $.1,200; தினசரி பத்திரிக்கை, மாத இதழ்களுக்கு $.300; புத்தகங்கள் $.500; திருமண மற்றும் விடுமுறை பரிசுகளுக்கு $.1,400; ஆலய சந்தாவுக்கு $. 300; கிளப் $.425; மருத்துவருக்கு $.800; பல்மருத்துவருக்கு $.500; கிராமத்தில் இருக்கும் வீட்டிற்கு போய்வரும் வீட்டினரது செலவு $.250, ஐரோப்பாவில் பிரயாணத்துக்கு $.9000, தொழுவங்களுக்கு $.17,000.”

சன்சி எம்.டிம்யூ சொல்கிறதாவது:

“அமெரிக்க ஐக்கிய நாட்டில் 50 நபர்கள் நாட்டின் பொருளாதாரத்தையே தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். அவர்கள் ஒரு முடிவுடன் கூடினால் 24 மணி நேரத்தில் எல்லா போக்குவரத்து மற்றும் பொருளாதாரத்தை ஸ்தாபிக்கச் செய்ய முடியும். எல்லா வியாபாரத்தையும் நிறுத்தி வைக்கவும் முடியும். இந்த 50 பேர் தாங்கள் நினைக்கும் நேரத்தில் பணபுழக்கத்தை கட்டுப்படுத்தி பெரும் பீதியை உண்டு பண்ணக்கூடும்.”

## சபை அதிகாரங்களைப் பற்றிய உலகத்தின் தீர்ப்பு

சபையை குறித்ததான விமர்சனம் முடியாட்சி மற்றும் பிரபுக்களாட்சியைப் போலவே அத்தனை கடுமையாகவே இருக்கிறது. ஏனெனில் அவை சுயவிருப்பங்களுக்காக செய்யப்பட்டவை என்று நன்கு உணரப்பட்டிருந்தது. இந்த மனவெழுச்சிகளுக்கு கீழ்கண்டவைகள் எடுத்துக்காட்டுகளாக கூறப்பட்டுள்ளன:

தி நார்த் அமெரிக்கன் ரிவ்யூ என்ற பத்திரிக்கை சில ஆண்டுகளுக்கு முன் ஜான் எட்கர்டன் ரேமண்ட் என்பவரால் எழுதப்பட்ட ‘சபையின் சரிவு’ என்ற கட்டுரையை வெளியிட்டிருந்தது. இதில் சபைக்கு (தேவலாயங்களுக்கு) எதிரான சக்திகளைக் குறித்தும் முடிவில் நிச்சயம் அவை அழிவுக்கே கொண்டுவிடும் என்பதைப் பற்றியும் அவர் கூறியிருப்பதாவது:

“கிறிஸ்தவ சபை தற்போது மிகுந்த முரண்பாடான போராட்டத்தின் நடுவில் இருக்கிறது. கிறிஸ்தவ மதம் நிறுவப்பட்டது முதல் இல்லாத அளவு அநேக எதிர்சக்திகள் அதன் மீது அடுத்தடுத்து படையெடுக்கின்றன. ‘உலக சக்தி’ என்று சில வேதாந்திகள் குறிப்பிடும் தற்போதுள்ளதைக் காட்டிலும் வ-மையாக இருந்ததில்லை. சபையானது ஏதோ காட்டுமிராண்டித்தனமான ஜனங்களினாலோ அல்லது மூடநம்பிக்கையுடைய வேதாந்திரிகளாலோ அல்லது புராணங்களை நம்பும் மதங்களின் ஆசாரியராலோ எதிர்க்கப்படாமல், மிகவும் மேன்மையான கலாச்சாரமும், ஆழ்ந்த கல்வியும், ஆழமான



தெளிவான ஞானமும் உடைய தேசங்களாலே எதிர்க்கப்படுகின்றன. தனது வளர்ச்சிப் பாதை முழுவதிலுமே ‘உலக சக்தி’யால் தொடர்ந்து எதிர்க்கப்பட்டு அதை சமாளித்ததால் சபை உயர்வான நிலையை பெற்றமைக்கு அடையாளமாகவும், மனித சிந்தனைக்கு ஒரு சீரிய குறிக்கோளாகவும் இருக்கிறது.

“மேலும் (அவளது) சபையின் எதிர்ப்பாளர்கள் யாவருமே வே-க்கு அப்பால் இருக்கவில்லை. நீண்ட அங்கிகளை அணிந்தும், தன் அதிகாரத்தின் குரலோடும், உலகுக்கு தன்னை அடையாளம் காட்டிக்கொண்டும், அவளுக்குள் இருப்பவரில் அநேகர் அவளது தலைமையை தூக்கியெறிந்து, அவளது மேன்மையை குறித்து வாதிடவும் தயாராக இருக்கின்றனர். சபையின் சட்டதிட்டங்களுக்கு இன்னும் கீழ்படிந்து கொண்டிருக்கும் திரளானவர்கள் தற்போது கேள்வி கேட்க ஆரம்பித்திருக்கின்றனர். சந்தேகம் என்பதே கீழ்ப்படியாமை மற்றும் கைவிடுதலுக்குமான முதல்படியாய் இருக்கிறது. சபைகளில் எத்தனை உண்மையுள்ள ஆத்துமாக்கள் தங்கள் ஆவியில் வேதனையோடு முனகுகின்றன என்பதையும், துன்பம் அனுபவிக்கின்றன என்பதையும் உலகத்தால் அறியமுடியாது. ஆனால், இன்னமும் தங்கள் நாவை அடக்கி வாயை மூடி மனசாட்சியின் நிமித்தம் பேசாமல் மௌனமாய் இருக்கின்றனர். தங்கள் சகோதரர் குற்றப்படுத்தப்படாதபடிக்கு இப்படி இருக்கின்றனர். அவர்கள் அமைதலாய் இருப்பது கண்டனத்துக்கு பயந்து அல்ல. ஆனால் காலம் கடந்துவிட்டது, சபை தவறு செய்யாமலேயே நேர்மையற்றது என குற்றப்படுத்தப்படும் என்பதற்காகவே.”

மேலும், அவர் கூறுவது, தற்போதைய தேவை, புதியதொரு சுவிசேஷம் அல்ல. ஆனால், பழைய சுவிசேஷம் புதிய அர்த்தங்களுடன் ஆகும்.

“எல்லா இடத்திலும் கிறிஸ்தவத்தை தோற்றுவித்தவரது உண்மை போதனைகளை விளம்பரப்படுத்துவதே அதிகப்படியான தேவையாய் இருக்கிறது. மலைபிரசங்கமே அநேக தெய்வீக வேதாந்தங்களுக்கான பொழிப்புரையாக இருக்கிறது. ‘இதையே பிரசங்கி,’ இதையே ‘பிரசங்கி’ என்று எல்லா சீர்திருத்த குழுக்களும்

எல்லா இடங்களிலும் கூக்குர-டுகின்றன. பிரசங்கிப்பது மட்டுமன்றி அதற்கு எடுத்துக்காட்டாகவும் இரு என்றும் கூறுகின்றன. ‘இந்த போதனைகளை உறுதிப்படுத்தும் வகையிலான உங்கள் முன் உதாரண செய்கைகளை எங்களுக்கு காண்பியுங்கள். அப்பொழுது நாங்கள் உங்களை நம்புவோம். இயேசுவையும், உங்களையும் பின்பற்றுவோம் என்கின்றனர்.’

“ஆனால், இங்குதான் முரண்பாடான கருத்து இருக்கிறது. சபையானது கிறிஸ்துவின் போதனைகளையும் அவரது நற்செய்தியையும் பரப்பும்படியும் உறுதியாய் கூறுகிறது. உலகமானது அதைக் கேட்டபின் பதில் கூறுகிறது: ‘நீங்கள் சத்தியத்தை தவறான வழியில் மாற்றிவிட்டீர்கள்.’ மேலும் மதநம்பிக்கையற்ற உலகம் ஒரு நம்பிக்கை உள்ள சபைக்கு அதனுடைய மதகோட்பாடுகளை போதிக்கும் பரிதாபமான காட்சியை பாருங்கள்! இதுயுகத்தின் ஒரு குறிப்பிடத்தக்க முக்கியமான அடையாளமாக இருக்கிறது. மேலும் முழுவதும் புதுமையாகவும் உள்ளது. ஆதிமுதல் உலகத்தில் ‘மருத்துவரே முத-ல் உங்களை குணப்படுத்திக் கொள்ளுங்கள்’ என்ற சொல் பழக்கத்தில் இருந்து வந்தது. ஆனால், நவீன காலத்தில் ‘மருத்துவரே உங்களுக்கு நாங்கள் சிகிச்சையளிக்கிறோம்’ என்று சொல்ல மனிதன் துணிந்துவிட்டான்.

“ஏழைகளும் நெருக்கப்பட்டவர்களும், நசுக்கப்படுகிறவர்களும், துன்பப்படுகிறவர்களும் தங்களது நன்மையான உபகாரங்களுக்கு பரலோகத்தை ஏறெடுத்து பார்க்கும்படி போதிக்கப்பட்டிருக்கும் போது, பரிசுத்த ஆசாரியரும், எல்லா வசதிகளும் அமையப்பெற்ற இளவரசர்களும், இராஜரீக ரத்தாம்பரத்தில் அலங்கரித்துக்கொண்டு அதிமேன்மையானவற்றில் தங்கள் நாளை கழிக்கிறார்கள். பூச்சி, துரும்பு, கள்ளர்களால் அழிக்கப்படக்கூடிய உலக சம்பத்துக்கள் மீது படுத்திருக்கிறார்கள்; தங்கள் மனசாட்சியற்ற தன்மையில் கடவுளுக்கும் தேவதைகளுக்கும் பணி செய்கிறார்கள்; இதையெல்லாம் பார்க்கும் போது அவர்களது உத்தமநிலை மீதே சந்தேகம் கொள்கின்றனர்.



“மேலும் தற்போது எல்லா உண்மை சத்தியங்களும் சபையில் இல்லை என்று உறுதியாய் கூறுவதுடன், சபை சக்தியற்றது; அசம்பாவிதங்களை அதனால் தடுக்க இயலாது; வியாதியஸ்தர்களை குணப்படுத்த இயலாது; பசியாய் இருப்பவரை போஷிக்கவோ, நிர்வாணிகளை உடுத்தவோ இயலாது; மரித்தவரை உயிருடன் எழுப்ப இயலாது; ஆத்துமாக்களையும் இரட்சிக்க இயலாது என்றும் கூறுகின்றனர். மேலும்,சபை மிகவும் பெலவீனமாய் இருக்கிறது. இத்தனை உலகப்பிரகாரமானதாய் இருக்கின்ற இது ஒரு தெய்வீக ஸ்தாபனமாய் இருக்க முடியாது என்கின்றனர். வெகுவிரைவிலேயே ப-பீடங்களை வெறுமையாய் விட்டுவிலக ஆரம்பித்துவிட்டனர். ‘சபையின் மாசற்ற தன்மையை, சபையின் சட்டதிட்டங்களால் வரும் பயன்களை, அல்லது சபைக் கோட்பாட்டில் உள்ள சத்தியத்தை நிராகரிப்பதினால் மதத்தின் சக்தியையே மறுத-ப்பதாய் ஆகிவிடாது’ என்கின்றனர். கிறிஸ்தவத்தின் வெளியரங்கமான தோற்றத்தைக் குறித்தே சபையுடன் போராட்டமே தவிர கிறிஸ்தவத்துடன் அல்ல. தெய்வீக சத்தியத்தோடு சபை காரியங்களுக்கான பயபக்தி மிகுந்த இணக்கத்தோடு இருக்கிறது. இந்த பூமியை தன் பாதபடியில் போட்டவரும், அவரது தொடுதலே ஜீவனும், அவரது புன்சிரிப்பே இரட்சிப்புமான கம்பீர மனிதர் (இயேசு) மீதே எங்கள் அன்பும், ஆழ்ந்த மதிப்புமே தவிர இவருக்கு பிரதிநிதி என்று உரிமை பாராட்டும் நிறுவனங்கள் மீது அல்ல.

“தன்னைப் பழி கூறுபவர்களை பார்த்து சபையானது இவர்கள் அவிசுவாசிகள் என்று பகிங்கரமாய் குற்றம் சாட்டிவிட்டு, தன் சொத்துக்களை பெருக்குவதிலும், ஆலயங்களையும், அரண்மனைகளையும் கட்டுவதிலும், ராஜாக்களோடு ஐக்கியப்படுவதிலும், செல்வந்தர்களுடன் உடன்படுவதிலும் தன்வழியே போய்க்கொண்டிருக்கிறது. இதனால், சபையை எதிர்ப்பவர்களது பட்டாளம் எண்ணிக்கையிலும், வ-மையிலும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. சபை தனது மேன்மையை இழந்துவிட்டது. அதன் அதிகாரம் கடந்து போய்விட்டது. தற்போது வெறும் நிழலாய், அடையாளமாய் மட்டுமே நிற்கிறது. இழந்துபோன தனது ஆதிக்கத்தின் உச்சத்தை

மறுபடியும் பெறுவது இயலாததாகிவிட்டது, மட்டுமன்றி மீண்டும் தனது அரியணைக்கு திரும்புவது இயலாததாகிவிட்டது. தனது ஒட்டுமொத்த ஆளுகையின் கனவு ஒரு ஏமாற்றமாகிப் போனது. அதன் செங்கோல் நிரந்தரமாய் உடைந்துபோனது. ஏற்கனவே நாம் மாறுதல்கள் அடையும் காலகட்டத்தில் இருக்கிறோம். இந்த யுகத்தின் இந்த புரட்சிகரமான இயக்கங்கள் பொதுவானதாகவும், எதிர்க்கமுடியாததாகவும் இருக்கின்றன. அரியாசனங்கள் ஆட்டம் காண ஆரம்பித்துவிட்டன. ராஜாக்களின் அரண்மனைகளுக்குக் கீழே ஒடுக்கப்பட்டவர்களின் எரிமலை இருக்கின்றது. அரியணைகள் தலைகீழாய் கவிழும்போது பிரசங்க மேடைகளும் விழும்.

“முற்காலத்தில் நடந்த மத எழுச்சிகள் பெரும்பாலும் தற்கா-கமானதும், உள்ளுக்குள்ளேயே நடப்பவைகளுமாய் இருந்தன. ஆனால், உலகளாவியதொரு மத எழுச்சி வரவில்லை. தேவனைப்பற்றிய நம்பிக்கையும் விசுவாசமும், மனிதன் மீதான அன்பும் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். பொதுவான சகோதரத்துவத்தைக் குறித்த பிரகாசமான கனவு உணரப்படவேண்டும். சபை காரியங்களுக்கான கொடுங்கோலாட்சிக்கு எதிராகவே இந்த விளைவு வரும் ; அதுவும் வெறும் முறைமைகளுக்கும் சடங்காச்சாரங்களுக்கும் எதிரான வகையில் இருக்கும்.”

திபோரம் என்ற பத்திரிக்கையில் 1890 அக்டோபர் மாதம் வெளியான ஒரு குறிப்பு. சமூக மற்றும் சபையின் பிரச்சனைகள் என்ற தலைப்பில் பிஷப் ஹன்டங்டன் என்பவர் எழுதியதில் குறிப்பிடத்தக்க முக்கியமான கூற்றை கீழே தருகிறோம்:

“நியூயார்க் பொதுமண்டபம் ஒன்றில் திரளான பலதரப்பட்ட பார்வையாளர்கள் கூடி இயேசு கிறிஸ்துவின் நாமத்தை உற்சாகப்படுத்தி, சபையின் பெயரால் ஆரவாரித்து கொண்டிருந்தார்கள், ஒரு கேள்வியும் எழும்பவில்லை, எந்த பிரச்சனைக்கும் தீர்வு காணவில்லை, எந்த தீர்மானத்தையும் உறுதிப்படுத்தவில்லை, வேதத்தையும் விளக்கவில்லை; ஆனால் பாதி ஆராதனைக்கு மேல் ஏதோ பிரசங்கம் செய்தது போலவே



குறிப்பிடும்படியாய் இருந்தது. மேலும், ஜனங்கள் ‘கிறிஸ்துவும், சபையும்’ என்ற வார்த்தைகளை கனத்துக்குரிய அமைதி, எழுப்புதலான பக்தியோடு கேட்கும் போது இருந்த ஒரு காரியத்தையும் அவர் மேற்கோள் காட்டி குறிப்பிட்டதாவது: ‘பிற்காலங்களில் தொழிலாளிகள் சிந்திக்கவும், படிக்கவும் காரணங்களையும் பிரதிபலன்களையும் அறிய ஆரம்பித்த பிறகு தான் குழப்பமான இந்தக் கூட்டம் மூர்க்கத்தனமாய், சொல்லப்போனால் கனவீனமாய், ஒருவரை மதிக்கவும் மற்றவரை வெறுக்கவுமான இருவேறுவித செயல்களை செய்கிறது.”

பிரசித்திப் பெற்ற தீர்ப்புகளைப் பற்றிய பத்திரிகைகளின் பிரசுரங்கள் கீழ்கண்டவாறு உள்ளன :

“தி கத்தோ-க் ரிவ்யூ மற்றும் பிற செய்தித்தாள்கள் வற்புறுத்தி கூறுவது: ‘சிறைச்சாலைகளில் மதபோதனைகள் இருக்கவேண்டும் என்பதே.’ அது சரியே, நாம் அதையும் தாண்டிப் போகிறோம். சிறைச்சாலைக்கு வெளியேயும் அதாவது குடும்பங்களிலும், ஓய்வுநாள் பாடசாலைகளிலும் இந்த மதபோதனைகள் இருக்க வேண்டும். ஆம், நாம் பெருந்தன்மையில் அதிகமாய் எதையும் செய்ய இயலாது. சில சபைகளிலும் மதபோதனைகள் தேவை என்று விரும்புகிறோம். தீவிரமின்றி மிதமாய் இதை எடுத்துக்கொண்டால் அதிகப்படியான நல்ல காரியங்களை பெறமுடியாது.”

“ஒரு குறிப்பிட்ட சீர்திருத்தப்பள்ளியின் குருவானவர் கூறியதாவது : இருபது வருடத்திற்கு முன்னர் குற்றவாளிகளில் ஐந்து சதவீதம் ஓய்வுநாள் பாடசாலை மாணவராய் இருந்தார்கள். ஆனால், தற்போது எழுபத்தைந்து சதவீதம் உண்மை மற்றும் சந்தேகிக்கப்படும் குற்றவாளிகள் ஓய்வுநாள் பாடசாலை மாணவர்களாக இருக்கின்றனர். வேறு ஒரு போதகரும் கூட மது அருந்துபவர் புக-டத்தை குறித்த ஒரு கணக்கெடுப்பை கூறும் போது அங்கு எண்பது சதவீதம் அப்படிப்பட்டவர்கள் என்றும், மற்றொரு இடத்தின் பெண் குற்றவாளிகள் அனைவருமே ஓய்வுநாள் பாடசாலையை சேர்ந்தவர்களே என்றும் கூறுகிறார். பத்திரிகைகள் இந்த செய்தியை குறித்து விமர்சிக்கும் போது, ‘பள்ளி என்று முற்காலத்தில் குறிப்பிட்டது சபையின் வளர்ப்பகமே.’ ஆனால்,

அதுவே கே-க்குரியதாக, கொடூரமானதாக மாறிக் கொண்டிருக்கிறது. என்ன செய்யப்பட வேண்டும்?"

சிக்காகோவில் ஞாயிற்றுகிழமைகளில் உலக கொலம்பியா பொருட்காட்சி நடத்துவதற்கு நடந்த கலந்தாய்வின் போது கீழ்கண்ட விவாதம் நடத்தப்பட்டது :

"சில சுகங்கள் போய்விட்டன. சிக்காகோவில் சினிமா அரங்குகளும், மதுக்கடைகளும் ஞாயிறுகளிலும் திறந்துள்ளது போல், தீமை ஒரு சமயம் மோசமாய் வந்தாலும் மிகவும் ஆறுதலான பிரதிப-ப்பு என்னவெனில் ஒரே ஒரு அமெரிக்க குடிமகன் கூட இதனுள் செல்லத்துணிய மாட்டான். இந்த விஷயத்தில் அப்போஸ்தலரும் ஆதிகிறிஸ்தவரும் இருந்த விதத்துக்கும் மேலாய் ஒருவரும் சேதமடையவில்லை. தங்களது கருத்துக்களை பிரஸ்தாபப்படுத்தும் பொருட்டோ அல்லது தங்கள் அயலாரை தாங்கள் இருக்க நினைப்பதற்கும் அதிகமாய் தேவபயத்துடன் இருக்கும்படி நிர்பந்திக்கவோ போலீஸ்காரர்களையோ அல்லது ரோம இராணுவத்தையோ பயன்படுத்த அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. மேலும் அரசாங்கத்திடம் எந்த உதவியும் பெறாத ஒரு ஆரம்பநிலையில் கிறிஸ்தவம் இருந்தது. உண்மையில் நிந்திக்கப்பட்டு பாடுபட்ட கிறிஸ்தவம் உலகை நிச்சயமாகவே ஜெயித்தது."

பொதுவான இந்தக் குழப்பம் நிறைந்த அந்த நாட்களில், சபையில் அநேகரும், உலகத்தாரில் அநேகரும் பெரும் குழப்பத்தினால் சிக்கித் தடுமாறினர். இவ்விதமான கருத்து சில காலங்களுக்கு முன் "நியூயார்க் சன்"னில் மிகத்தெளிவாய் கீழ்க்கண்டபடி கூறப்பட்டது :

"நாம் எங்கிருக்கிறோம்? நாம் எங்கிருக்கிறோம்? என்ற கேள்வியானது கருத்து நிறைந்த மதப்பற்றுள்ள ஒன்றாகிவிட்டது. பெரிய கல்விமான்கள் கருத்தரங்குகளில் அமர்ந்து உண்மையை விட்டு வெகுதூரம் அகற்றப்பட்டுவிட்ட போதனைகளை போதித்து ஆதி ஆதரவாளர்களை கல்லறைக்குள் நித்திரை அடையச்செய்கின்றனர்; குருமார்கள் தங்கள் பட்டமளிப்பின் போது தன்னையே நம்பாத நிர்வாகத்தினரின் உறுதிமொழியில் கையெழுத்திடுகின்றனர்; அநேக காரியங்களின் தரமானது நிலையற்று, சபைகள் தங்கள் திட்டத்தி-ருந்து எவ்வளவு வழி விலகிப் போயிருக்கிறது என்பதையே காட்டுகிறது. 'உன் மனவிருப்பத்தின்படியே போ, ஒவ்வொரு மனிதனும் வாழ்வதே அவனுக்காகத்தான்' என்று கூறும் காலமாக இது இருக்கிறது. இவை யாவும் எதில் போய் முடியும் என்று யாருக்கும் தெரியாது. ஆர்வமுள்ளவர்களும் கூட அநேகமாய் அக்கறையின்றி இருக்கின்றனர்."



சபையின் நடத்தையும், செல்வாக்கும் மட்டும் கடுமையாய் விமர்சிக்கப்படவில்லை, அதன் ஆதாரமான முக்கிய போதனைகளே கூட கண்டனத்துக்குள்ளாகின்றன. உதாரணத்துக்கு, நெடுங்காலமாய் மனிதன் பயத்தினால் கட்டப்பட்டிருந்த (நரக ஆக்கினை) நித்திய ஆக்கினையைக் குறித்த முறையற்ற போதனையானது, சிந்திக்கும் மக்களால் சந்தேகிக்கப்பட்டது. முற்போக்கு கொள்கையாளரின் வளர்ந்து வரும் இந்தக் கருத்தை தடைசெய்யும்படி, குருமார்கள் இந்த நித்திய ஆக்கினை போதகத்தை நிலைநிறுத்தி உறுதிப்படுத்துவதில் மிகவும் அவசரம் காட்டினர்.

மறைதிரு டாக்டர் ஹென்சன், சிக்காகோவைச் சேர்ந்தவர், இந்தக் கருத்தைக் குறித்த தன் எண்ணத்தை வெளிப்படுத்தினார்; இதை கோடிட்டுக் காட்டி செய்தியாளர்கள் குருமார்களை பேட்டிக்கண்டபோது அவர்கள் பொறுப்பற்று உணர்ச்சியற்று ஏளனமாய் இந்த காரியத்தை கையாண்ட விதமானது ரோமானியர்களின் துன்புறுத்தும் மனநிலைக்கு தகுதியானதே என்று கூறலாம். ஆனால், இந்தக் கருத்தை குறித்து உண்மையாகவே எதுவும் தெரியாமலேயே ஏதோ லட்சக்கணக்கான மக்களது நித்திய காரியங்களின் மீது அக்கறை உள்ளதைப் போல உரிமை கொண்டாடுகின்றனர்.

மறைதிரு டாக்டர் ஹென்சன் கூறுவதாவது : "புதிய ஏற்பாட்டின் ஆதேஸ் என்பது மறைமுகமாய் நரகம் என்பதே ; மரணத்தை நாம் நித்திரை என்று அழைத்தாலும் கூட மரணம் என்பது

மரணமே; நரகத்தை நாம் ஆதேஸ் என்று அழைத்தால் கூட நரகம் என்பது நரகமே; நரகம் என்பது உண்மையான ஒன்று, அது கொடூரமான பயங்கரமே. நரகத்தில் சரீரங்களை நாம் உடையவர்களாகவே இருப்போம். சரீரத்தின் உயிர்த்தெழுதல் என்பது இடத்தையும் சரீரப்பிரகாரமான சித்தரவதையும் குறிப்பாக உணர்த்துகிறது. சரீர பிரகாரமாய் அது அத்தனை மோசமானது அல்ல. ஆனால், மனவேதனை, மனசாட்சியின் உறுத்தல், எதிர்பார்ப்பு ஆகியவற்றால் ஆத்துமா வேதனைப்படுவது நெளிவது, எரியும் நெருப்பில் புழு நெளிவதைப் போல் இருப்பதே மிகவும் மோசமானதாகும். இந்த பாவிகள் வேதனைப்படவேண்டி இருக்கும். தாகத்தை தணிக்க தண்ணீர் இல்லை, பசியோடு இருப்பவர்கள் பசியாற உணவு இல்லை. இதயத்தை கத்தி உருவக்குத்தும்; மறுபடியும், மறுபடியும் குத்தும்- முடிவில்லாமல், பயங்கரமானது. இதுதான் நரகம்,இதை நாம் சந்தித்தே ஆகவேண்டும். சாவானது வாழ்வின் உழற்சியி-ருந்து விடுதலை தரும். ஆனால் நரகத்தி-ருந்து விடிவே கிடையாது."

டாக்டரது இந்த பிரசங்கமானது என்னவிதமான கருத்தை விளைவித்திருக்கும்? செய்தியாளர் மற்றும் ஊழியக்காரரின் கீழ்கண்ட பேட்டியை அடுத்த நாள் காலையில் கண்டு ஒருவேளை ஒருவர் ஒரு முடிவுக்கு வரலாம் :

"நரகத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நாம் யாவருமே நமது வழிகளை சரிபடுத்திக் கொள்ளாவிடில் அக்கினி,கந்தகம், உருகிய எஃகு நிறைந்த கட-ல் மூழ்கடிக்கப்படப்போகிறோம் என்றா? என பேராசிரியர் ஸ்விங் (சிக்காகோவில் பிரபல பிரசங்கியர்) என்பவரிடம் ஒரு பத்திரிகையாளர் கேட்டார். அதற்கு பேராசிரியர் ஸ்விங் இதயமே வெடித்துவிடும்படி குலுங்கி, தன் முகம் ஒரு சிறு பள்ளிச்சிறுமியைப் போல் சிவக்கும் அளவுக்கு சிரித்தார். அந்த திறமை மிக்க பிரசங்கியார் சிரித்த வண்ணம் தனது அலங்கார மேஜை மீதும், விளக்கின் மீதும் ஓங்கி அடித்து, முதலாவது இந்த நரகம் என்கிறதான விஷயமும், வருங்கால தண்டனையும் குறித்து நாம் அறிந்தது மிகவும் குறைவே என்று நீங்கள் உணர்கிறீர்கள் என்று நான் எடுத்துக் கொள்கிறேன்.



எனவே, வேதத்திலுள்ளவைகளோடு எல்லாமும் ஒத்துப்போகச் செய்யும்படியாக ஆவிக்குரியவைகளாய் அவைகளை மாற்றி அமைத்து பார்ப்பதை என்னுடைய வழிமுறையாக்கி இருக்கிறேன். எனது கருத்துப்படி பாவத்தின் அளவுக்கு தகுந்தபடி தண்டனையும் வகைப்படுத்தப்படும்; ஆனால், அடுத்த உலகம் ஆவிக்குரியதாகையால், பலன்களும் தண்டனைகளும் கூட ஆவிக்குரியவைகளாகவே இருக்கவேண்டும்.

"மறைதிரு எம்.வி.வேன் ஆஸ்டேல் என்பவர், டாக்டர் ஹேன்சன்னுடைய பிரசங்கத்தை குறித்த ஒரு அறிக்கையை வாசித்தபோது, சிரித்துவிட்டு சொன்னார்: 'ஏன் அவர் சரியாகத்தான் கூறியிருக்கவேண்டும். சில நாட்களாகவே எனக்கு டாக்டர் ஹேன்சனைத் தெரியும், கண்ணை மூடிக்கொண்டு அவருக்கு ஓட்டு போடுவேன். நாம் யாவரும் ஒப்புக்கொள்வதைப் போல் நரகம் அல்லது தெய்வத்தண்டனைக்கு என்று ஒரு இடம் உண்டு. அது டாக்டர் ஹேன்சன் அவர்கள் கூறியபடி அதற்கே உரிய எல்லா குணநலன்களையும் தனக்குள்ளே ஒன்று சேர்த்ததாய் இருக்கிறது.'

"டாக்டர் ரே என்பவர் டாக்டர் ஹேன்சன் அவர்களின் பிரசங்கத்தை பிரசுரத்தில் பார்த்துவிட்டு தானும் ஹேன்சனைப் போலவே அதே கருத்துக்களை தனக்கும் கருப்பொருளாய் எடுத்துக் கொள்வதாய் கூறுகிறார்.

"கிராண்ட் பசுபிக்கில் வழக்கமான கூடுகையில்,சபையின் ஊழியக்காரர்கள் மூடிய கதவுகளுடனும், கடுமையான பாதுகாப்புடனும் கூடி, ஒரே ஒருமாலை செய்தி பத்திரிக்கையின் நிருபரை மட்டும் அனுமதித்துக் கொண்டனர். கூட்டம் முடிந்த போது அந்த நிருபர் கேட்டக் கேள்வி, 'டாக்டர் பி.எஸ். ஹேன்சனின் நரகத்தைக் குறித்ததான பிரசங்கத்தை படிக்கவோ, கேட்கவோ செய்தீர்களா' என்பதே.

"சீனாவைச் சேர்ந்த பீகிங்கின் டாக்டர் எச்.டி.போர்ட்டர் என்பவர் மிகவும் ஆர்வமுடைய பார்வையாளராய் அந்தக் கூட்டத்தில் இருந்தார். அவர் அன்று அதிகாலையில் எழுந்து டாக்டர் ஹேன்சனின் சுருக்கமான பிரசங்கத்தை செய்தித்தாளில் வாசித்தார். அவர் கூறியதாவது :

'எனக்கு டாக்டர் ஹேன்சனைத் தெரியாது. ஆனால், அவருக்குண்டான கருத்து வெளிப்பாட்டில் உண்மை இருக்கிறது. சீனாவில் நான் கந்தகக் கடலையும், உண்மையான சரீர சித்திரவதைகளையும் குறித்து பிரசங்கிக்க மாட்டேன். மேலும், எல்லாமே உண்மையாய் கடுமையான மனக் கவலைக்கும், மன வேதனைக்கும் உரிய இடமாகத்தான் நரகம் இருக்கும் என்றோ பிரசிங்கிக்க முடியாது. ஆனால், நான் மிகவும் மிதமான கண்ணோட்டத்துடன், நரகமானது தெய்வ தண்டனைக்கும், சரீர மற்றும் மனவேதனைக்கும் உரியதான இடம் என்று மட்டும் வர்ணித்து பொதுவாக தற்கால ஊழியர்களின் கோட்பாட்டுக்கு உருவம் கொடுக்கும் வகையிலேயே இதை எடுத்துக் கொள்வேன்.'

"போதகர் ஸ்பென்சர் போனெல், கிளீவ்லேண்ட் ஓ வைச் சேர்ந்த மற்றுமொரு புதியவர், டாக்டர் ஹேன்சனின் எல்லா கருத்துக்களையும் ஒப்புக் கொண்டார். அவர் கூறியதாவது,'ஒரு காலம் வரப்போகிறது. அப்போது எல்லாருடைய சிந்தனையும் நடுநிலைக்கு கொண்டு வரப்படும் வகையில் நரகத்தை குறித்த ஒரு பொதுப்படையான முற்போக்கு சிந்தனை வரப்போகிறது.' போதகர் எச்.எஸ்.வில்சன் என்பவர், டாக்டர் ஹேன்சனுடன் ஒத்துப்போவதாக ஒப்புக்கொள்கிறார். போதகர் டபுள்யூ.ஏ.மூர் என்பரும் இதே கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்.

"மறைதிரு டபிள்யூ. எச்.ஹாம்ஸ் எழுதுகிறார் : 'டாக்டர் ஹேன்சன் ஒரு மிக ஞானமான பிரசங்கியார், அவர் தன் சொந்த நிலையைப் புரிந்து கொண்டு அதை தெளிவாகவும், குறிப்பாகவும் விளக்கக் கூடியவராகவும் இருக்கிறார். இதன் மூலம் எப்பொழுதும் போல, மக்களுக்கு ஒரு மிகவும் உற்சாகமான பிரசங்கத்தை கொடுத்தார், இதி-ருந்து அவரது நிலை பொதுவாகவே நன்றாகத் தெரிகிறது. மாமிச சரீரத்தைக் குறித்து எனக்கு தெரியாது.'

"உங்களுக்கும் தெரியாதா?'

"'இல்லை, ஒரு மனிதன் மரித்து தான் அதை சரியாகக் கண்டுபிடிக்கக்கூடும்.'

"பேப்டிஸ்ட் ஊழியர்கள் நினைப்பதாவது, டாக்டர்



ஹேன்சனின் நரகத்தைப் பற்றியதான பாரம்பரிய பிரசங்கமானது சரியான விஷயங்களை குறித்ததே, இதை காலை நேர கூட்டத்தில் விவாதித்தவர்களும் கூட அன்பாகவே புகழ்ந்து பேசினர். மாலை செய்திகள் பத்திரிகையின் நிருபரும் கூட இந்த பிரசங்கத்தின் அறிக்கையை அநேக ஊழியருக்கு காண்பித்தார். ஆனால் எல்லோருமே இந்த பிரசங்கத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனால் நான்கு பேர் மட்டும் இதை விவாதிக்கிறவர்களாகவே காணப்பட்டனர். ஞாயிறு பள்ளி ஹெரால்டு பத்திரிக்கையில் மறைதிரு. சி.டி.எவரெட் என்பவர் கூறும் போது டாக்டர் ஹேன்சன் அவர்களால் விவரிக்கப்பட்ட கருத்துக்களை பொதுவாகவே பேப்டிஸ்ட் ஊழியக்காரர்கள் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். 'நாங்கள் இந்த உலகத்தின் நித்தியமான மற்றும் வருங்கால தண்டனைகளை குறித்து போதிக்கிறோம். ஆனால், இவரது பிரசங்கத்தில் உண்மையான நரகத்துக்குரிய அக்கினி, கந்தகக்கடல் குறித்து வெகுவாகப் பேசப்படவில்லை' என்கிறார். நாங்கள் தண்டனை உண்டென்று நம்புவதுடன் அது மிகவும் கடுமையாய் இருக்கும் என்றும் அறிந்திருக்கிறோம். ஆனால், நம்மில் அநேகருக்கு இது எவ்விதத்தில் கொடுக்கப்படும் என்பது புரிந்துகொள்ள இயலாத ஒன்றாய் இருக்கிறது. டாக்டர் ஹேன்சன் கூறுவதுபோல கொடூரமான மனிதர்களுக்கு மட்டுமே நரகம், சரீரப்பிரகாரமான எல்லா தண்டனைகளும், மோசமான மனவேதனையும் கொடுக்ககூடியது என்றும், இவ்வித பாவிகள் இதில் கஷ்டப்படவேண்டும் என்று குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது என்றும் நினைத்துக் கொள்கின்றனர். டாக்டர் பெரின் என்பவர் அழுத்தமாக கூறுகிறார், டாக்டர் ஹேன்சன் பிரசங்கிப்பவை எல்லாம் வேதத்தில் காணப்படுவது என்றும், சரியானவையாகவே இருக்கும் என்றும் மறுப்பது பெரும்பாலும் வீணானதே என்றும் கூறுகிறார்.

"மறைதிரு. அம்புரோஸ், ஒரு பழைமைவாத ஊழியர் இந்த பிரசங்கத்தால் மிகவும் திருப்தியடைந்தார். பாவிகளின் எதிர்கால பாடுகளை குறித்து டாக்டர் ஹேன்சன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் நம்பினார். 'நரகம் என்பதை எப்படி நம்புகிறார்களோ அதை அப்படியே பேப்டிஸ்ட் பிரசங்கிமார் போதிக்கவும் செய்கிறார்கள்' என்கிறார்.

"மறைதிரு. வுல்பென்டன் கூற்றுப்படி அவர் பிரசங்கத்தின் அறிக்கையை பார்க்கவில்லை. ஆனால், அதில் எதிர்கால தண்டனைக்குரிய நரகத்தைக் குறித்து கூறப்பட்டது எதுவானாலும் டாக்டர் அவர்களுடன் தான் ஒத்துப்போவதாகக் கூறுகிறார். மேலும், பெரும்பாலான பேப்டிஸ்ட் ஊழியக்காரரும் கூட இதே கண்ணோட்டத்தையே பிடித்துக் கொண்டிருக்கின்றனர். அதிலும் வெகுசிலர் இந்த கடுமையான சம்பிரதாயப்படியான நரகத்தின் காரியத்தை நம்பாதவர்களாக இருந்தார்கள்.

"நிருபர் சேகரித்த விஷயங்களில் கூறக்கூடியது ஒரு கேள்வி எழும்பி அது ஒரு பிரச்சனையாக வேண்டுமா என்பது பேப்டிஸ்ட் ஊழியக்காரர் டாக்டரின் இவ்வித பழங்கால சம்பிரதாயமான நரகத்தின் விவாதத்துக்கு ஒத்துழைப்பதில் பின் வாங்குகிறவர்களே அல்ல."

தங்களுடையவர்களின் நித்திய சித்திரவதை, ஏதோ அற்பமான ஒரு காரியம் போலவும், பொறுப்பற்ற கே-யுடன் விவாதிக்கக்கூடியதாகவும், மதகுருமார்கள் தங்கள் கருத்தை விவரிப்பதுடன், எந்த சிறிய ஆதாரமோ அல்லது வேத ஆராய்ச்சியோ இல்லாமலேயே இது தான் சத்தியம் என்று அறிக்கையிடுகின்றனர். இந்த உத்தேசமான கொடூரத்தை உலகம் கவனித்து இந்த விஷயத்தில் தன்னுடைய சொந்த முடிவுக்கே வருகிறது.

குளோப் டெமாக்ரேட் கூறுவதாவது : "அமெரிக்கன் டிராக்ட் சொசைட்டி, நியூயார்க்கி-ருந்து நற்செய்தி வருகிறது. கடந்த 50 வருடங்களாக சிந்தனைக்கு தீனியை கொடுக்கிறது. அத்துடன் மதத்தையே முழுவதுமாய் மறுபடியும் புரட்டிப்பார்க்கிறது. உண்மை என்னவெனில், உலகம், சென்ற தலைமுறையின் வசதிக்கேற்றபடி மிகவேகமாக வளர்ந்துவிட்டிருக்கின்றது. அது இருக்கிற வெகுசில ஸ்திரமான மனிதர்களின் சக்திக்கும் மீறி, எந்த விளைவையும் ஏற்படுத்த இயலவில்லை. சபையும் கூட உலகத்துடன் சகிப்புத்தன்மை, மனிதநேயம், மன்னிப்பு, ஈகை மற்றும் இரக்கம் குறித்து பிரசங்கித்துக் கொண்டே மிக சௌகரியமாக நடைபோடுகிறது. இவை எல்லாம் ஒருவேளை தவறாகவே



இருக்கலாம். மேலும், இந்தப் போ-த்தனமான தீர்க்கதரிசனங்கள் யாவும் நமக்கு படிக்கவும், தொடர்ந்து விசுவாசிக்கவும், சரியான ஒன்றாகவே இருந்தாலும் மக்கள் அதை செய்வதுமில்லை; பிற்காலத்தில் செய்யப்போவதுமில்லை."

வேறு ஒரு பத்திரிகை கூறுவதாவது, டாக்டர் ரோசிடர் டபிள்யூ, ரேமண்ட், அமெரிக்கன் போர்ட் ஆஃப் பாரின் மிஷினுக்கு பொருளுதவி செய்வதை எதிர்த்து கொஞ்சம் ஆவேசமாகவே கூறுகிறார். "தேவன் அன்பு செலுத்தாத, வெறுக்கிற புறமத கொள்கைகளை நம்புகிற ஊழியக்காரரை தாங்கி ஆதரிப்பதற்கு நான் எடுத்துக்கொள்ளும் வேதனையோடான சகிப்பில் அமெரிக்க போர்டுக்கு செல்வதில் மிகவும் சோர்ந்து போய்விட்டேன். இந்த வெறுக்கத்தக்க செய்தியை பரப்புவதற்கு இனிமேல் சல்-க்காசு கூட தரப்போவதில்லை. என் பணத்தைக் கொண்டு இந்த போதனையை பிறர் மனதில் பதிய செய்ய அனுமதிக்க மாட்டேன். தேவன் அன்புடையவர் என்பதே நற்செய்தி, ஆனால் இதை இந்த மனிதர் சுவாரசியமற்ற ஒன்றாக்கிவிட்டு புறசமயத்தார் மேல் தாங்கமுடியாத கொடுமையான பளுவை ஏற்றி அதை கட்டாயப்படுத்தவும் செய்யவும், இது போன்ற கொடியவர்களை நாம் போஷிக்கவேண்டும் என்கின்றனர். உங்கள் முன்னோர்கள் நரகத்துக்கு போய்விட்டனர் என்று போதிப்பதற்கான எந்த உதவிகளையும் நான் கொடுக்காமல் இருப்பதே என்னுடைய உண்மையான கிறிஸ்தவ கடமையாக இருக்கிறது."

ஆகவே தான் தற்கால காரியங்களின் முறைமைகள் மக்களின் கருத்துக்கு எதிரே தத்தளிப்பதை நம்மால் காணமுடிகிறது. இவையாவும் தூக்கியெறியப்பட்ட முன்குறிக்கப்பட்ட நேரம் வந்துவிட்டது. உலகத்தின் நியாயாதிபதி மனித நியாயம் என்னும் தூக்குக்கோலை உயர்த்துகிறார். சத்தியம், நீதி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டி, அதிகப்படியான ஞானஒளியை திருப்புகிறார். கிறிஸ்தவ உலகின் வெறுமையான, கே-க்குரிய, போ-யான வெளித்தோற்றத்தினை குற்றப்படுத்தும் தமது தீர்மானத்தைக் குறித்த நியாயத்தை சோதித்து நிரூபிக்கும்படி உலகத்தை அழைக்கிறார். படிப்படியாய் ஆனால் தீவிரமாய் உலகம்

அந்த சோதனையை ஆரம்பித்திருக்கிறது. முடிவில் யாவரும் ஒரே தீர்மானத்திற்கு வருவார்கள். ஒரு எந்திரக்கல்லைப் போன்று, பாபிலோன் குழப்பங்களின் மாபெரும் நகரம், தன்னுடைய பிரஸ்தாபமான சமூக, சமய அதிகாரங்களுடன் தனது செருக்கான கௌரவத்துடனும், சம்பத்துடனும், பட்டங்களுடனும், செல்வாக்குடனும், கனத்துடனும், வீணான மகிமையுடனும், சமுத்திரத்தில் தள்ளப்படும் (கட்டுக்கடங்காத ஜனங்களாகிய ஆர்ப்பரிக்கும் கடல்). அது இனி எழும்புவதில்லை. வெளி 18:21; எரே 51:61-64

அவளது அழிவு முழுவதும் புறஜாதியாரின் காலங்கள் (1915) எனப்படும் முன்குறிக்கப்பட்ட காலத்திற்குள்ளாகவே நிறைவேறி விடும். இவ்விதமான நெருக்கடிக்கும், புறக்கணிப்புக்கும் இசைவான காரியங்கள் மிகவேகமாக முன்னேறி வருகிறது. சோதனை இன்னும் முழுவதுமாய் முடியாவிடினும், ஏற்கனவே அநேகரால் இந்த அவளது தீர்ப்பைக் குறித்த கையெழுத்தை வாசிக்க முடிகிறது. “தராசிலே நிறுத்தப்பட்டு குறைவாய் காணப்படுகிறாய்.” மேலும் மேலுமாக இந்த பயங்கரமான பாபிலோனாகிய கிறிஸ்தவ உலகின் அழிவு, சீக்கிரத்தில் உணரப்படும். அவளை உயர்த்தி தாங்கிப்பிடித்த பழைய மூடநம்பிக்கைகள் யாவும் வேகமாய் அகற்றப்படுகின்றன. இதுவரை பயபக்தியுடன் கடைபிடிக்கப்பட்டு வந்த பழைய சமய கோட்பாடுகளும், சமுதாய சட்டங்களும் தற்போது தைரியமாய் கேள்வி கேட்கப்படுகின்றன. அவர்களது முரண்பாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. மிகவும் தெளிவாய் தெரியும் அவளது தவறுகள் ஏளனப்படுகிறன. திரளான மக்களின் சிந்திக்கும் போக்கானது எவ்விதத்திலும் வேதசத்தியத்தை குறித்தோ அல்லது சரியென்று தோன்றுகிறதை குறித்தோ கிடையாது. ஆனால், நம்பிக்கை துரோகத்தை குறித்தே ஆகும். நம்பிக்கை துரோகம் என்பது அளவுக்கு மிஞ்சி பேர் சபைக்கு உள்ளேயும், வெளியேயும் காணப்பட்டது. தேவவார்த்தையானது கிறிஸ்துவின் சபை என்று சொல்-க்கொள்ளும் இடத்தில் வாழ்வுக்கு வழிகாட்டியாகவும், விசுவாசத்தின் ஆதாரமாகவும் இருக்கவில்லை. மனித தத்துவங்களும் கோட்பாடுகளும் அதன் இடத்தை



பிடித்திருக்கின்றன. மேலும், முன்பு ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்த புறமதத்தவரின் விசித்திரமானவைகள் கூட தற்போது மிகவும் செழிப்படைய தொடங்கிவிட்டன.

இந்த மாபெரும் பேர் சபையில் வெகுசிலரே விழித்து நிதானமாய் சபையின் வருந்தத்தக்க நிலையை உணரக்கூடியவர்களாய் இருக்கிறார்கள். சபையின் எண்ணிக்கை மற்றும் பொருளாதார வலுவையும் தவிர, பூஜைகளின் பிரசங்க மேடையும், இருக்கைகளும், உலகத்தின் ஆவியால் மிகவும் நச்சுப்படுத்தப்பட்டு, தெளிவாய் சிந்திக்கவும் முடியாதபடி ஆகியிருக்கிறது. மிகவும் சுதந்திரமாய் வெளிக்கருத்துக்களை கிரகித்துக் கொண்டு, தன் ஆவிக்குரிய வீழ்ச்சியைக் கூட பேர் சபை உணரமுடியாமல் போய்விட்டது. ஆனால், எண்ணிக்கையிலும், பொருளாதாரத்திலும் பின்னடைவு ஏற்பட்டிருப்பது தெளிவாய் உன்னிப்பாய் உணரப்படுகிறது. சபையின் நிறுவனங்களின் நிலையான சொத்துக்கள் யாவும் தற்கால வாழ்வின் விருப்பங்களுடனும் செழுமையுடனும், மனமகிழ்ச்சியுடனுமே பிணைக்கப்பட்டிருக்கிறது. மேலும், இவைகளை தற்காத்துக்கொள்ள உலகை மதம் மாற்றுவது தனது தெய்வீக அர்ப்பணிப்பு என்று நம்பப்பட்டு வருகிறதை ஒரு பொய்யான தோற்றமாய் காட்டவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. சபையின் இவ்வித பிரயாசங்களின் வெற்றியின் அளவை வருகிற பாகங்களில் நாம் கவனிக்கலாம்.

இவ்விதமாக, உலக அரசாங்கத்தில் பாபிலோன் தன்னுடைய செய்கைகளுக்காக நியாயசனத்தின் முன் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இதனை சங்கீதக்காரர் எத்தனை அழுத்தமான தீர்க்கதரிசனத்தால் இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார் என்பதை மறுபடியும் கவனத்திற்கு கொண்டுவரலாம். தேவன் இத்தனை நூற்றாண்டுகளாய் மௌனமாய் இருப்பதும், அதே சமயம் தீமையானது தேவனுடைய உண்மையுள்ள பரிசுத்தவான்களை பலவகையிலும் உபத்திரப்படுவதும் சம்பவிப்பதால் தேவன் இவைகளை கவனிக்கத்தவறிவிட்டார் என்று எண்ண வேண்டியதில்லை. ஆனால்

தீர்க்கதரிசியின் மூலம் அவர் உரைத்த அந்தக்காலம் வந்துவிட்டது. அவர் கூறியிருப்பதாவது, "ஆனாலும் நான் உன்னைக் கடிந்துகொண்டு அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன்."*(சங் 50:21)* எனவே, விழித்திருந்து இந்நாட்களில் சரியான வழியில் நடப்பவர்கள் இந்த பயங்கரமான மிகமுக்கியமான காரியங்களை கூர்ந்து கவனித்து தீர்க்கதரிசனங்களும் நிறைவேறுதலும் எத்தனை நேர்த்தியாய் ஒத்திருக்கிறது என்பதை பார்க்கலாம்.

அ அ

## அத்தியாயம் 5

# மகா நீதிமன்றம் முன் பாபிலோன் அவளது குழப்பம்-தேசிய அளவிலானது

தங்களுக்கு எதிரான தீர்ப்பைக் கண்டு சமுதாய அதிகாரங்கள் கஷ்டத்துக்குள் இருத்தல் - பயத்தினாலும், துயரத்தினாலும் ஒருவரோடு ஒருவர் கூட்டணியை நாடுகின்றனர் - தனது பழங்கால அதிகாரத்துக்காக சபையை வீணாக எதிர்நோக்குகின்றனர் - தங்களுடைய ராணுவம் மற்றும் கப்பற்படையை அவர்கள் அதிகரிக்கின்றார்கள் - தற்கால போர் ஆயத்தங்கள் - பூமி மற்றும் கடல் மீது ராணுவ படைகள் - போரின் முன்னேற்றமடைந்த அமுலாக்கம், புதிய கண்டுபிடிப்புகள், புதிய உருவாக்கம், வெடிப்பொருட்கள் முத-யன - வல்லமையுள்ளவர்களை எழுப்பிவிடு; நான் வ-மையானவன் என்று பெலனற்றவர் சொல்லட்டும்; மண்வெட்டிகளை பட்டயங்களாகவும், அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள் - அமெரிக்க ஐக்கிய நாடு தனது அந்தஸ்தில் தன்னிகரற்று இருப்பது, ஆனாலும் முந்தைய உலகத்தைக் காட்டிலும் இன்றும் பெரிய தீமைகளினால் அச்சுறுத்தப்படுதல் - சமாதானமே இல்லாத போது சமாதானம்! சமாதானம்! என்ற கூக்குரல்.

"எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே.... பூமியின் மேலுள்ள ஜனங்களுக்கு தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும். சமுத்திரமும், அலைகளும் முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின் மேல் வரும் ஆபத்துக்களுக்கு பயந்து எதிர்பார்த்திருக்கின்றதினால், மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம். அப்போது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின் மேல் வருகிறதைக் காண்பார்கள்."

"அவருடைய சத்தம் அப்போது பூமியை அசையப்பண்ணிற்று;

இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்போழுது வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இன்னும் ஒருதரம் என்ற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல் மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது.... நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே." லூக் 21:22, 25-27; எபி 12:26-29

**த**ங்களுக்கு எதிராக நியாயத்தீர்ப்பு நடந்து கொண்டு இருக்கிறது என்பதையும் தங்களது அதிகாரத்தின் ஸ்திர நிலை எவ்வகையிலும் உறுதிப்படுத்தப்பட்டவை அல்ல என்பதையும் மிகவும் வெளிப்படையாய் கிறிஸ்தவ ராஜ்யத்தின் சமூக அதிகாரங்கள் உணர்கின்றன. டிஸ்ராயே-, இங்கிலாந்து பிரதமர் 1874, ஜூலை 2ல் பிரிட்டிஷ் பார்-மெண்ட்டில், பேசியாதவது: (அறுவடைக்கால அல்லது நியாயத்தீர்ப்பின் ஆரம்ப காலத்தில்) "உலகத்துக்கு மாபெரும் உபத்திரவம் வரப்போகிறது. சிலர் நினைப்பதைக் காட்டிலும் மிக அருகிலேயே இருக்கிறது. ஏன் கிறிஸ்தவ ராஜ்யங்கள் இத்தனையாய் அச்சுறுத்தப்படுகிறது? நாகரீகமே சிதைந்துவிடக்கூடும் என நான் அஞ்சுகிறேன்." மறுபடியும் கூறுகிறார். "நமக்கு விருப்பமான எந்தப்பக்கம் திரும்பினாலும் எல்லா பக்கங்களிலும் ஒரு அசௌகரியமான சூழ்நிலை தேசங்களின் துக்கமான நிலை, மனித இதயம் பயத்தினால் சோர்ந்து போகுதல்... எந்தவொரு மனிதனும் இக்காரியங்களை கவனிக்காமல் இருக்க முடியாது. செய்தித்தாளை வாசிக்கும் போது எந்த மனிதனும் தற்காலத்தில் அரசியல் குழப்பங்களினால் நாம் சூழப்பட்டு வருவதை காணாமல் இருக்க முடியாது. ஏதோ ஒரு மிக பெரிய புரட்சி உண்மையில் வரவேண்டும். ஐரோப்பாவின் எல்லா நாட்டின் மந்திரி சபைகளும் நிலைகுலைந்து இருக்கிறது. ஒவ்வொரு மன்னனும், ஆள்பவரும், வாளின் மீது தங்கள் கைகளை தயாராக வைத்திருக்கின்றனர். நாம் தற்போது மிகவும் அசாதாரணமானதொரு பயங்கரத்தில் இருக்கிறோம். நாம் முடிவை நெருங்கி வருகிறோம்!"

நியாயத்தீர்ப்பின் ஆரம்ப காலத்திலேயே இந்த மாதிரியான சூழ்நிலை இருந்திருக்கிறதென்றால் இந்நாட்களில் இன்னும் எத்தனை அதிகமான பிரத்தியோக அடையாளங்கள் இருக்க வேண்டும்!



லண்டன் ஸ்பெக்டேட்டரில் ஐரோப்பாவின் கலக்கம் (The Disquiet of Europe) என்ற தலைப்பில் வெளியானதொரு செய்தியை நாம் கீழே கொடுத்துள்ளோம்:

"ஐரோப்பாவில் நிலவிவரும் அமைதியின்மைக்கு நாம் என்ன காரணம் காட்டமுடியும்? இத்தா-யின் நிலைமைக்கு, எதிலும் தீமையையே காணும்படியான மனப்போக்கு ஐரோப்பாவில் நிலவி வருவதே இதற்கு முக்கிய காரணம்; ஒரு பாதி பொருளாதார இக்கட்டும், மறுபாதி திடீரென்று உலகத்தில் அராஜகத்தால் தோன்றுகிற திடீர் அரசியல் குழப்பங்களும் காரணமாகின்றன. இதில் பின்னான காரியங்களின் பாதிப்பானது இங்கிலாந்தைக் காட்டிலும், ஐரோப்பாவில் மிக அதிகமாகவே இருந்தது. கீழ்க்கண்டதின் மூலமாக வெளிநாட்டு அரசியல் மேதைகள் ஆபத்தை எதிர்பார்த்தனர். உண்மையில் அரசியல் கலகக்காரர்களே, நாகரீக வளர்ச்சியின் மீது முன்னேற்றத்தை உண்டாக்கும் கூட்டத்தினராக கருதப்படுகின்றனர். இதை எதிர்க்கவேண்டும். அல்லது சமரசப்படுத்தவேண்டும் இல்லாவிட்டால் தற்போதிருக்கும் ஒழுங்குமுறைகள் எல்லாம் தகர்க்கப்பட்டுவிடும். அவர்கள் தங்களுக்கு தாங்களே உள்நாட்டு எதிர்காலத்தின் கேடுகளைக் குறித்து முன்னறிவித்துக் கொள்கின்றனர். தற்போது நிலவுகின்ற அமைதி, அவர்கள் நினைக்கும் வண்ணம் (விசேஷமாய்) கத்தி முனையில் மட்டுமே பெற்றதாகும். மிக சொற்பமான நம்பிக்கையுடன் உள்விவகாரங்களை குறித்து ஆராயும்போது உண்மையிலேயே அவர்களது தங்கள் வெளிவிவகாரங்களைப் போலவே எதிர்காலத்தில் இருள் சூழக்கூடியதாகவே இருக்கிறது. இதைக்குறித்து யோசிக்கும்போது இதற்கு மேல் இதன் செயல்பாடுகளில் முன்னேற்றத்தை காணமுடியாது இன்னும் நீண்டகாலத்துக்கு இருக்கமுடியாது.... முடிவை நோக்கி அதிவேகமாக போய்க்கொண்டிருக்கிறது என்பது இதனால் நிரூபணம் ஆகிறது. அரசிய-ல் வியூகம் மனச்சோர்வை நோக்கி செல்வதாகவும் இலக்கியம் மற்றும் சமுதாயத்திலேயே இப்படி குறிப்பிட்டு காட்டியிருப்பதாகவே உண்மையில் அவர்கள் நினைக்கின்றனர். தற்சமயம் இருக்கும் பொருளாதார சீரழிவின் அலையானது இந்த மனச்சோர்வை அதிகமாக்கி இருக்கிறது."

கீழ்க்கண்ட குறிப்பிட்ட மற்றொரு விஷயமும் அதே பத்திரிகையிலேயே வெளியிடப்பட்டுள்ளது:

"உண்மையில் ஐரோப்பாவின் ஆபத்து என்று எம்.ஜூல்ஸ் ரோச் எப்போதுமே ஒரு எச்சரிக்கையை கொடுத்து வந்தார். செவ்வாயன்று பிரென்ச் சேம்பரில் பேசிய அவரது உரையில் எரிமலை குழம்பை இன்னும் மூடிக்கொண்டிருக்கும் வெளிப்பகுதியின் அளவு மிகவும் மெ-தாகி வருவதைக் குறித்து ஐரோப்பாவுக்கு மிக ஆழமானதொரு கவனத்தைக் கவரும் எச்சரிப்பை கொடுத்தார். தனது எல்லா தியாகங்களுக்குப் பிறகும், வ-மை இல்லாத எந்த செழுமையையும் நசுக்கிவிடும்படியான தியாகத்தை செய்த பிரான்சு, போருக்கு தயாரில்லாத நிலையிலேயே இன்னும் இருக்கிறது என்பதை மையமாகக்கொண்டு அவர் பேசினார். இன்னும் பிரான்சு அதிகப்படியாக செய்யவேண்டி உள்ளது. அதிகப்படியாய் செலவு செய்யவேண்டும். அதுவும், பத்திரமாய் இருக்கிறோம், தயாராக இருக்கிறோம் என்று கருதுவதற்கு முன்பு, பிரான்சின் பயங்கரமான, தீங்கிழைக்கப்போகிற எதிரியான ஜெர்மனியின் படையெடுப்புக்கு எதிராக எப்போதும் தயாராகவே இருக்கவேண்டும் என்று தன் பேச்சு முழுவதிலும் ஜெர்மனியைக் குறித்து எச்சரிக்கிறார். ஏனெனில் தற்போது அது பிரான்சைக் காட்டிலும் மிகவும் வ-மையானதாய் இருக்கிறது. (எம். ரோச் கூறுகிறார்) பேரரசர் 2ம் வில்-யமின் கடைசியான இராணுவ கணக்கின்படி தன் மொத்த ஜனங்களையும் ராணுவத்தில் கட்டாயம் பணிபுரியும்படி கவர்ந்திழுப்பதில் வெற்றி கண்டுள்ளதுடன், அனைத்து அதிகாரிகளுடனும், முழு முன்னேற்பாடுகளுடனும், அறிவியல் அமைப்புகளுடனும் 550,000 ஆட்கள் போரிட உண்மையாகவே தயாராக உள்ள ராணுவமாக உருவாகி உள்ளது. கூடிய விரைவில் 'க்ர்ஜ் மொபைல்' என்ற 2 வார்த்தையை அவரது பாட்டனார் உச்சரித்து ஒரு மகா பெரிய அழிவுக்கு உருவம் கொடுத்ததைப் போல் இவரது உதட்டசைவுக்காக எப்போதும் தயாராய் இருக்கின்றனர். ஆனால், அதற்கு மாறாக, பிரெஞ்சின் படைபலமும் சம அளவு பெரிதானாலும், 400 ஆயிரம் வீரர்களே தயாராக உள்ளனர். மேலும், பணத்தை மிச்சப்படுத்தும் பொருட்டு இந்த தொகையையே மெதுவாக குறைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே போரின் தொடக்கத்திலேயே அதன் முடிவைக் குறித்து முடிவெடுத்துவிடுகின்ற தற்போதைய நிலவரப்படி, பிரெஞ்சின் இரு எல்லைகளிலும் ஏறக்குறைய 150 ஆயிரம் வீரர்கள் குறைவாக இருக்கின்றனர். எனவே, தளபதிகளின் கைவசமானவைகளை எல்லாம் உபயோகப்படுத்தும் முன்னரே மிக பயங்கரமான, ஒருவேளை மரண அழிவே சம்பவிக்கக்கூடும். எம்.ஜூல்ஸ் ரோச்சின் மீது அத்தனை நெருக்கமான பற்று இல்லாத சில பிரதிநிதிகள் கூட அச்சத்தால் பீடிக்கப்பட்டனர். மேலும், எம். ஃபெ-க்ஸ் ஃபார், 6 வருட காலத்தில் ஜனநாயக அதிபருக்கு அனுமதிக்கப்பட்டருந்த, மறக்கப்பட்டுவிட்ட அதிகாரப்பூர்வமான முன்னுரிமையை செயல்படுத்தி, மார்ச் 20ஆம் தேதி நடந்த ராணுவ உச்சி மாநாட்டில், தலைமை வகிக்கும்படி முடிவெடுத்தார். ஒரு தேர்ந்த வியாபாரியைப் போல் அவர் தெளிவான ஒரு நோக்கத்துடன், ராணுவத்தின் உண்மை நிலையை அறிய, ஒரு கணக்கெடுப்பு நடத்தி, பிரெஞ்சு கைவசம் உள்ள துப்பாக்கி, குதிரை, வீரர்கள் ஆகியவற்றின் உண்மை கையிருப்பை கண்டுபிடித்து, அபாய சங்கொ- கேட்டதும், புறப்பட ஆயத்தமானவைகளை கணக்கிட்டு, ஒருவேளை தேவைக்கும் குறைவாய் இவை இருக்குமாயின், வெளிச்சந்தையி-ருந்து கூடுதலாக வாங்கிக்கொள்ளும்படியாக வற்புறுத்த ஆயத்தமானார். செழுமையே வியாபாரமாகையால், அதன் முதலீடு குறைவாக இருக்கக்கூடும். புதிய கணக்கெடுப்பு அளவுக்கும் அதிகமான செலவீனமாய் இருக்கும். ஆனால், அவர் எப்படியாகிலும் துல்-யமான உண்மையை அறிந்துக் கொள்வதில் கவனமாய் இருந்தார்.

"எம். ஃபார் ஒரு அறிவுபூர்மான மனிதர். ஆனால், எம். ரோச்சின் வார்த்தைகளை தொடர்ந்து செயல்பட்டதினால் வெளிப்பட்ட வெளிச்சமானது ஐரோப்பாவின் சூழ்நிலைகள் மீது விழுந்தது. போரின் பயத்தினால் சமாதானம் உறுதிப்படுத்தப்படும்படியானது. ஆனாலும் வெளிப்டையாய் போர் என்று குறிப்பிட்டபோது, அதற்குண்டான ஏற்பாடுகளை பார்க்கும்

போது அது 1870 ஆம் வருடங்களில் இருந்ததை காட்டிலும் கூடுதலாக ராஜதந்திரிகளின் முன் அனுபவம் இருக்கவேண்டும். எம். ஜூல்ஸ் ரோச்சின் எச்சரிப்புக்கிணங்க மாற்று ஏற்பாடுகளை செய்ய கடந்த வருடம் ஜெர்மன் சர்க்கரவர்த்தி எத்தனை குறைவான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பது நமக்குத் தெரியும். இத்தனை குறைவான சேவைக்கு மிகப்பெரிய தொகை லஞ்சம் கொடுப்பதை மக்கள் விரும்பவில்லை. அதற்குரிய விலையை கொடுக்க விரும்பாவிடினும், அதற்குரிய அவசியத்தை உணர்ந்து கொண்டதினால் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். ஆகவே, ஜெர்மனி இன்று 24 மணி நேரத்திற்குள் போரிடத்தயாராகிவிடும் நிலையில் உள்ளது. பிரெஞ்சும் கூட பயத்தின் மிகுதியால், நம்பிக்கை இழந்த நிலையில் தானும் தன்னை அர்ப்பணிக்கத் துணியும், ஆயுத்தங்கள் செய்யப்படுவதையும் பணம் செலவழிப்பதையும் நாம் காண்போம். ஆனாலும், அது வெறுப்புடன் நிராகரிக்கப்பட்டுவிடும். ஜெர்மானியர்களைக் காட்டிலும் பிரெஞ்சுக்காரர்கள் செலவு செய்து சோர்ந்துவிட்டனர். ஆனாலும், தாங்கள் செலவு செய்ததற்கு தகுந்தபடி, தங்களுடையதைக் காட்டிலும் வ-மையானதொரு ராணுவம் என்றாவது ஒருநாள் பாரிஸ் அல்லது லயான்ஸ் மீது படையெடுக்கும் என்று எண்ணுகின்றனர். தத்துவமேதைகள் பிரெஞ்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான பதட்டம் குறிப்பிடும் யாராலும் உணரக்கூடிய அளவு குறைந்துள்ளது என்று கூறுகின்றனர். அரசியல் நிபுணர்களும் எல்லாம் சமாதானமாய் இருக்கிறது என்று உறுதிப்படுத்துகின்றனர்; கெய்சரின் (ஜெர்மனியின் பேரரசர்) பண்பான நடத்தையை நன்றியுடன் பத்திரிகைகள் வெளியிடுகின்றன; ஜெர்மனியையும், அதன் கப்பற்படையையும் கௌரவிக்கும் பொருட்டு அதன் விழாவில் பிரான்சு கலந்த கொண்டது; ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக தேசமும், அதன் அதிகாரிகளும் போர் தற்போதே நடக்கப்போவது போல் நடிக்கின்றனர். ஒரு மாதத்துக்குள் சண்டை மூளும் என்ற நிச்சயத்துடன் அவர்கள் எதிர்பார்க்கிறவர்களானால் இவ்வளவு உணர்ச்சிவசப்படவோ, கூக்குர-டவோ, தங்கள் செல்வத்தை செலவிடவோ தயாராக இருக்கமாட்டார்கள். இரண்டு நாடுகளுக்கும்



இருக்கும் பொறாமையை வ-யுறுத்தவே இவ்விதமாய் நடக்கின்றன என்பதை நினைவு கூறவேண்டும். இதைத்தவிர வேறு எதுவுமில்லை. நாட்டின் எல்லைப் பகுதியில் எந்த ஒரு நிகழ்வும் சம்பவிக்கவில்லை. பேரரசர் யாரையும் பயமுறுத்தவில்லை. பாரிசிலும் கூட யாரும் போரில் அத்தனை ஆர்வம் காட்டவில்லை. உண்மையில் பாரிஸ் ஜெர்மனியை விட்டுத் தன் பார்வையை திசை திருப்பிக் கொண்டது. மேலும், கிரேட் பிரிட்டனின் பக்கம் பார்வை சென்றவுடனேயே வெறுப்பும் பொறாமையும் சேர்ந்த தீப்பொறியை கக்குகிறது. மேலும், முடிவில் ரஷ்யாவின் புதிய ஆட்சியாளரிடமும் கூட போரை விரும்பக்கூடிய எந்த அடையாளமோ அல்லது அறிகுறியோ காணப்படவும் இல்லை. போரை எதிர்நோக்கி அஞ்சவுமில்லை அல்லது போருக்கான விசேஷ ஆயத்தமும் செய்யவுமில்லை. ஆனால் ஜெர்மனி மறைமுகமாய் கடைசிவரையிலான எல்லா போர் ஆயத்தங்களையும் செய்வது தெரிகிறது. பிரான்சும் கூட அலறி, தீவிரமாய், அத்தனை அமைத-ன்றி ஆயத்தங்கள் செய்வது அவசியமற்றது. இது ஒரு நிரந்தரமான சூழ்நிலையாகவே நிகழ்கிறது. எல்லாமே எதிர்பாராதவிதமாக, விவாதிக்கப்பட்டு, இந்த சமயமே இப்போதே ஜெர்மனியும், பிரென்சும் போருக்கு தயாராகி 24 மணி நேரத்துக்குள் படையெடுக்க வேண்டும் என்கிற ஒரு சூழ்நிலைக்கு கட்டாயமாய் தள்ளப்படும் நிலை உருவாகி வருவதை இப்போது ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. 'ஜெர்மானியர்களே, உங்கள் புகையிலை வரி 2 மடங்காகிறது. ஏனெனில் ஆட்கள் வேண்டியுள்ளது' என்று இந்த வாரம் இளவரசர் ஹோஹென்லோஹி கூறுகிறார். 'பொருளாதார சீரழிவு' என்று எம். ரோச்சி வீறிட்டு அலறுகிறார். ஏனெனில், தம்மிடம் 150 ஆயிரம் வீரர்கள் குறைவு. மேலும், இவ்விரு நாடுகளிலுமே இவ்வித போர் தூண்ட-ன் விளைவாக வாணிபத்தில் எந்த இடையூறும் ஏற்படவில்லை என்பதை கவனிக்கவேண்டியதாய் இருக்கிறது. இந்த ஆபத்தானது ஒரு தீராத ஒன்று, மிகவும் தெளிவாய் புரிந்துவிட்ட ஒன்று. இது வாழ்வின் ஒரு நிலை என்றே மிகவும் தெளிவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இவ்விதமான ஏதாவது ஒரு காரியம் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும். ஆனால், ஒரு தொடர்

பேச்சாய் இதைக் கேட்டு மிகவும் அலுத்துவிட்டதால், இவ்விஷயத்தை மனிதன் சற்று மறந்திருக்கிறான். இந்த மொத்த காரியத்திலேயே மிகவும் துக்கப்படக்கூடிய விஷயம் அதுவே. வெசுவியசை குறித்து டெரி டெல் கிரிகோ அஞ்சுவது போல, ஜெர்மனியோ அல்லது பிரெஞ்சோ போரின் மேல் இனி பயமே கொள்ளாது. அப்படி இருந்திருக்குமேயானால், ஒரு திடீர் சீற்றுத்துக்கு அசையாமல் இடம் கொடுத்திருக்க முடியுமா?

"எம். ஜூல்ஸ் ரோச்சி பேச்சின் பின்விளைவாக கூடுதல் வரிகளோ, அல்லது பிரதமரின் நெற்றியில் இரண்டு அல்லது மூன்று சுருக்கங்களோ தவிர வேறு எந்த திடீர் நிகழ்வுகளையும் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், பிரதமருக்கு கணக்கெடுப்பின் முடிவுகளில் அத்தனை விருப்பமில்லை. ஏனெனில் தேவையான அனைத்தும் வழங்கப்படும் என்றே அவர் அறிவுறுத்தப்பட்டார். ஆனால், ஐரோப்பாவின் ஆட்சியாளர், அரசியல்வாதிகள் மற்றும் தேசத்துக்கே அவ்வப்போது ஒரு காரியம் நினைவுபடுத்த வேண்டும். அதாவது தற்சமயம் பாதுகாப்பான உறக்கம் இல்லை. கப்பல்கள் பனிப்பாறைகளியிடையிலேயே உழன்று கொண்டிருக்கின்றன. ஒரு நிமிடம் கூட ஓய்வில்லாமல் கவனம் வேண்டும். ஒரே ஒரு நிமிட அஜாக்கிரதை கூட பெருத்த மோதல் மற்றும் இரும்பு கப்பல் மூழ்க காரணமாகிவிடும். நாகரீக முன்னேற்றமடைந்துவிட்ட பகுதியின் மனுக்குலத்துக்கே இது ஒரு கடினமான சூழ்நிலையாகத் தெரிகிறது. எப்போதும் கடினமான உழைப்பு, ஊதியத்தில் பெரும்பகுதி துண்டிப்பு, திறந்த வெளியில் படுக்கவும் தயார் நிலை. ஆனால் இவைகளுக்கெல்லாம் விமோச்சனத்தை எங்கே காண்பது? மக்களும் ஒரு விடையை காணமுடியாமல் வீண் முயற்சியி-ருக்கின்றனர். ராஜதந்திரிகளாவது தங்களால் முடியுமானால் ஜனங்களுக்கு உதவட்டும். ஆனால் சரித்திரத்திலேயே முதன்முறையாக மன்னர்கள் போரை ஒரு விருப்பமற்ற சோர்வுடன் பார்க்கின்றனர். அதாவது எந்தவொரு சந்தோஷத்துக்கான சந்தர்ப்பமும் இல்லை. இந்த அளவிடமுடியாத அபாயத்திற்கு ஈடுசெய்ய இயலாது என எண்ணுகின்றனர். தங்கள் நிலை கடுமையான உழைப்பு, அதிக அசௌகரியம், மிகுதியான பொறுப்பு நிறைந்ததே தவிர எந்தவித



முன்னேற்றத்தையும் இவர்களால் கொண்டு வரமுடியாதபடி வ-மையற்றவர்களாக இருக்கிறார்கள். அமெரிக்காவில் இருக்கும் சகோதரர்களைக் காட்டிலும், தாங்கள் அத்தனை மோசமில்லை என்ற திருப்தி மட்டும் மக்களுக்கு இருக்கிறது. அங்கே கட்டாய ராணுவ சேவை இல்லை, போரின் பயமில்லை, எல்லையிலும் பதட்டமில்லை என்றாலும் நாட்டின் (கருவூலம்) சேமிப்பெல்லாம் ஐரோப்பாவைப் போல் அளவுக்கதிகமாய் செலவிடப்படுகின்றது. ஏதோ போர்க்களத்தில் இருப்பது போன்ற நிலையற்ற பணப்புழக்கத்தினால் ஜனங்கள் சூறையாடப்படுகின்றனர். மற்றும் எந்த சூழ்நிலையிலும் தங்களை காப்பாற்றிக் கொள்ள தயாராக இருக்கவேண்டும். ஐரோப்பாவின் தற்போதைய சூழ்நிலையானது சரித்திரம் காணாததாய் இருக்கிறது. குறைந்தபட்சம் தனிப்பட்ட போர்கள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஆனால் ஜனங்கள் அற்பகாரியங்களில் ஆர்வமுள்ளவர்களாய் இருப்பதும். எம். ரோச்சி அவர்களின் உரையைப் போன்ற ஒன்று இவர்களின் கண்களைத் திறக்கவேண்டியது அவசியம் என்பதும் நம்மை வியப்புற வைக்கிறது. ரோச்சி சொல்கிறார், 'நம்மிடம் 2 மில்-யன் வீரர்கள் உண்டு; ஆனால், 400 ஆயிரம் பேரே ராணுவ குடியிருப்பில் எந்த வேலையும் இல்லாமல் இருக்கின்றனர். இது போதாது இன்னும் 150 ஆயிரம் வீரர்கள் தேவை.' இதை அறிவுபூர்வமாய் யாருமே யோசிப்பதில்லை, மேலும் ஜனங்களின் பிரதிநிதிகளும் எந்தவித, அக்கறையும் இல்லாமல் இருக்கின்றனர். தேசத்தலைவரோ பிரெஞ்சு நாட்டவர் கூறும் 'உண்மையான நிலை' என்ன என்று தனக்கு கூறும்படி ராணுவ தலைவர்களை வற்புறுத்தி அவர்கள் கையில் மறந்த ஆயுதங்களை பறித்துக் கொள்கிறார். கனவில் மட்டுமே காணக்கூடியது என்று நினைக்கும் அளவுக்கு, நாங்கள் சமாதான சமுதாயத்தை சேர்ந்தவர்கள் அல்ல. மேலும், உலகம் ஒரு நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட புத்தியீனத்தில் இருக்கிறது என்று எண்ணும் அளவுக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். இதைக் காட்டிலும் வேறு எதுவும் நலமானதாகவே இருக்கும், எல்சாசின் லோதின்னின் ஜெர்மனுடான சரணாகதியோ அல்லது அல்சாசி லோரேய்ன் பிரான்சுடனானதோ நலமானதாக இருக்கும். இதைக் காட்டிலும்

முடிவில்லாத, விடை கிடைக்காத ஒன்றுக்காக எதிர்காலத்தையே பயத்தின் கீழ்பணயம் வைப்பது மிக மோசமாக இருக்கிறது. இது கற்பனையான ஒன்றல்ல. இது சமூக அமைப்பானதே என்று கூறுகின்றனர். ஆனால், அழிவு வரும்முன் இவைகள் முடிவுக்கு வராதா?"

'கிறிஸ்தவ ஸ்டேஸ்மெனில்' பிரசுரிக்கப்பட்ட பிலெடெல்பியா பாரின் ஜாஸ். பெக். எஸ்க்கின் உரையி-ருந்து எடுக்கப்பட்ட பகுதி கீழ்கண்டவாறு இருக்கிறது. "தேசங்களின் அபாய நிலை" என்ற பொருளின் கீழ், கடந்த நூற்றாண்டை நினைவூட்டும் நோக்குடன் இருக்கிறது.

"மேரெங்கோவின் நில பிரதேசத்தில் நெப்போ-யனின் பீரங்கி முழக்கம், நமது இந்த நூற்றாண்டில் கிழக்கி-ருந்து மேற்கு வரைக்கும் எதிரொ-க்கிறது. ஒரு வருடம் கூட சமாதானம் காணப்படவில்லை. கடந்த 1800 ஆம் வருடம் முதல் இங்கிலாந்து 54 போர்களையும், பிரென்சு 142 போர்களையும், ரஷ்யா 23 போர்களையும், ஆஸ்டிரியா 14, ப்ரூஷியா 9 என 142 போர்கள் இந்த 5 நாடுகளிலும் நடந்துள்ளன. இதில் குறைந்தது 4 நாடுகளில் இயேசுவின் சுவிசேஷமே அரசாங்க மதமாக இருக்கிறது.

"கிறிஸ்தவ நூற்றாண்டின் உதயத்தில், கிப்போன் கூறியபடி, ரோம பேரரசின் தயார்நிலை வீரரில் 400 ஆயிரம் பேர் பல பிரிவுகளுக்குள்ளும் யூப்ரடீஸ் முதல் தேம்ஸ் வரை சிதறடிக்கப்பட்டனர். இன்று ஐரோப்பாவின் தயார் நிலை வீரர்கள் 4 மில்-யனுக்கும் அதிகமாகவும், 2 வருடங்களுக்கு மேல் படையில் வேலை செய்தவர்களும், பயிற்சி அளிக்கப்பட்ட வீரர்களும் சேர்ந்து 6 மில்-யனைத் தாண்டுகின்றனர். இது புத்திக்கு எட்டாத அல்லது கற்பனைக்கும் அப்பாற்பட்ட தொகையாக இருக்கிறது. சமாதான காலத்தில் 1/10 பகுதி நல்ல உடல்நிலை உடைய ஆண்கள் ஆயுதம் ஏந்தியும், 1/5 பகுதி பெண்கள் கடின உழைப்பாளிகளாகவும், ஆண்களுக்கு பதிலாக கடைகளிலும்,வயல்களிலும் மற்றும் அருவருக்கத்தக்க பணிகளிலும் இருக்கின்றனர். 'வீரச் செய-ன் காலம் கடந்துவிட்டது....... ஐரோப்பாவின் மகிமை போய் விட்டது.'



கடந்த 20 வருடங்களில் இந்த படைகள் ஏறக்குறைய 2 மடங்கு பெருகிவிட்டது. ஐரோப்பாவின் கடன் சுமை பெரும்பாலும் போர் காரணங்களாலேயே பெருகி, மக்களின் வியர்வையை குடித்தது. முடிவில் நினைக்க முடியாத அளவு பெருகி 23 ஆயிரம் மில்-யன் டாலர்களாகியது. தான் செலவிடும்படியான விருப்பமுள்ள காரியம் எது என்று கேட்டால் சந்தேகமின்றி நாகரீகமடைந்த 19ஆம் நூற்றாண்டின் ஐரோப்பாவின் முதன்மையான விருப்பம் போர் என்பதே. ஏனெனில் உழைப்பி-ருந்தும், முதலீட்டி-ருந்தும் உறிஞ்சப்பட மூன்றில் ஒரு பகுதி வருமானம் முற்கால போரின் செலவுக்கான வட்டியாகவே செலவிடப்படுகிறது. மற்ற மூன்றில் ஒரு பகுதி எதிர்கால போர் ஆயத்தங்களுக்காகவும், மீதமுள்ள பகுதியே மற்ற எல்லா காரியங்களுக்கும் செலவாகிறது.

"ஈட்டி, வாள், யுத்த கோடா- இவைகளை தன் பிள்ளைகளின் விளையாட்டு பொருட்களாக நவீன மனிதன் ஒதுக்கிவிட்டான். அதற்கு பதிலாக போர் துப்பாக்கி மாற்றாக இருக்கிறது. இது 10 நிமிடம் தொடர்ந்து வெடித்து 3 மைல் தொலைவி-ருப்பவரை கொல்லும். அதன் நீண்ட உலோக குண்டுகள் அது ஓயும் முன் 3 பேரை அழிக்கும். புகையில்லாத வெடி மருந்தினால் பழைய பயங்கரத்தை காட்டிலும் ஒரு மின்னல் வேகத்தில் ஒரு வீரனையே வெடித்து சிதறடிக்கும். அதன் ஆற்றல் உண்மையாகவே கல்வாரி போரை மிஞ்சிவிட்டது. பேலாக்லாவின் மற்றும் பிக்கெட்டின் மனிதரைப் போல் கடந்த காலத்தில் நடந்த மிக பெரிதான தாக்குதலைப் போன்ற ஒன்றை, இப்போது மறுபடியும் நடத்த வேண்டுமாயின் எமிட்ஸ் பர்கின் சாலையை கடக்கும் முன்னமே நிர்மூலமாகிவிடும். இந்த நவீன துப்பாக்கிகளின் அழிவின் விளைவுகள் நம்பமுடியாததாக இருக்கிறது. இது எலும்பை பொடியாக்கும், சதையை கூழாக்கும் என பரிசோதனைகள் காட்டுகின்றன. இதில் பாதிக்கப்பட்ட காலானது சுக்குநூறாகி மறுபடியும் சரிசெய்ய முடியாததாகிவிடும். அதே போல் தலையில் அல்லது மார்பில் ஒரே குண்டில் சந்தேகமின்றி மரணம் நேரிடும். தற்கால இயந்திர துப்பாக்கி ஒரு நிமிடத்துக்கு அல்லது 30 வினாடிக்கு 1860 குண்டுகளை இடைவிடாமல் வெடிக்கச் செய்யும்.

அதன் இடைவிடா ஓசையானது தொடர்ந்து ஒ-ப்பது சாத்தானின் பாடலைப் போல படு பயங்கரமான ஓசையாக இருக்கும். டைட்டனின் நவீனமானதொரு ஆயுதம் 12 அங்குல பீரங்கி ஒரு ஏவுகணையை 8 மைல் தூரம் தூக்கி எறிந்து, 8 அங்குல எஃகு இரும்பை துளைக்கக் கூடியது. ஹார்வைஸ்டு என்ற முறைமூலம் ஸ்டீ-ன் கடினமாக மேற்பகுதி கரியாக்கப்படுவதனால் மிக துல்-யமான துளை கூட அதை ஒன்றும் பாதிக்காது. 'காமர்ஸ் டிஸ்டிராயர்' என்று தற்கால கப்பற்படையால் அழைக்கப்படும் இயந்திரத்தின் நாசவேலைகளை சொல்லவே வேண்டாம். ஒரு கப்பல் 4 மில்-யன் டாலர் செலவில் கட்டப்படுகிறது. 18 அங்குலம் கனமான ஸ்டீல் தகடுகளால் மூடப்பட்டது. 11 ஆயிரம் குதிரை சக்தி கொண்ட இயந்திரத்தின் உதவியால் மணிக்கு 24 மைல் தூரம் நீரில் பிரயாணிக்கக் கூடியது. ஸ்பெயின், பிரான்சு மற்றும் ஆங்கில கப்பற்படை குழுவான 150 கப்பல்களை ஸ்ராஃபெல்கரில் புறாக்கூட்டத்தைப் போலவும், ஸ்பெயினின் அர்மெடாவை புறா கூண்டின் மீது பாயும் ராஜாளியைப் போலவும், இந்த இயந்திர கப்பல் தாக்கக்கூடியது. ஆனாலும், இத்தனை போர் கருவிகளும் ஆயுதங்களையும் ஆற்றலும் உடைய கடல் அரக்கனாகிய கப்பலானது ஒரே ஒரு கண்ணி வெடியினால் மின்னலைப் போன்று வெடித்து சடுதியாய் அழிக்கப்பட்டது.

"இவ்வகையான போர் ஆயத்தங்கள் நம் நீர், நில பரப்பை ஆக்கிரமிப்பதினால் நாகரீக மனிதன் ஒரு பெரும் புரட்சியின் விளிம்பில் நிற்பதையே காட்டுகிறது. அதுவும் பாம்பீஈயின் மக்கள், தங்கள் பட்டணத்தின் அழிவின் நாளன்று எரிமலை முகப்பில் அசாதாரணமான சுருளான புகை மூண்ட அபசகுணத்தை கூட கவனிக்கத்தவறியதைப் போல் அத்தனை அஜாக்கிரதையாய் இருக்கிறார்கள். நமது காலம் போர்படை என்னும் அரக்கனின் பற்களால் விதையூன்றி இருக்கிறது. மனுக்குலமென்னும் விதை, ரத்தத்தை அறுவடை செய்யும் அளவுக்கு முற்றிவிட்டது. நெப்போ-யன் போன்று இவ்வுலகை தீக்கிரையாக்குபவர் தேவைப்படுகின்றனர்.



"நெருஞ்சிலை விதைத்து அத்திப்பழங்களை அறுவடை செய்வதும், அல்லது சூறாவளியை விதைத்து வருட முழுவதுமான சூரிய ஒளியினை எதிர்பார்ப்பதைப் போல இத்தனை தெளிவான இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவு போர் ஆயத்தங்களை செய்துவிட்டு அதை மறுப்பது போல் உள்ளது. ஜப்பான், சீனாவுக்கு இடையிலான சண்டையானது நவீன தளவாடங்கள் பாதி அளவுக்கே உபயோகப்பட்டும் அதன் செயல்பாடுகளை அரைகுறையாகவே மட்டும் அறிந்துகொண்ட மனிதர்களும் எப்படியாயினும் அது வரப்போகிற கலகத்திற்குரிய சாத்தியங்களை விளக்கத் தவறவில்லை. ஆர்ச்சி பெட் ஃபோபர்ஸ் போர் குறித்த மிகப்பெரிய பொறுப்பாளர்களுள் ஒருவரானவர் கூறுவதாவது, 'உலகை தடுமாற்றி, நடுநடுங்க வைக்க வரப்போகும் அடுத்த பெரிய போரின் உண்மையான காட்சியை யாராலும் அத்தனை பூரணமாக மெய்யாகவே படம் பிடித்துக் காட்ட முடியாது. இதன் மூலங்கள் பயங்கரமானதாக இருக்கும் என நாம் அறிவுப்பூர்வமாக அறிந்திருக்கிறோம். அறிவுக்கெட்டாத பெருவாரியான மரணம் வெடிமருந்தின் புகையில்லாததால் எங்கிருந்து வருகிறது என்றே கண்டுபிடிக்க முடியாதபடியான ஆயுதங்களி-ருந்து வலுக்கட்டாயமாய் பொழியும் ஏவுகணைகள், இவற்றின் விளைவுகளின் பயங்கரத்தால் இன்னும் மனிதன் அதிர்ச்சியடையவில்லை.' மேலும் 'வானத்தி-ருந்தே எண்ணற்ற மரணம் மழையைப் போல் பொழியும்' என்றும் கூறுகிறார். மெட்ஸ்சை சுற்றி நடந்ததைப் போல் ஒரு போரை நாம் நினைவு கூறும்போது Mitrailense என்ற பீரங்கி வெடித்து 6000 ஜெர்மனியரை 10 நிமிடத்துக்குள் வீழ்த்திவிட்டது. 1877ல் ப்-வ்நாவின் ஸ்கோபெல்லஃப் ஆனது 3000 பேரை சில 100 கஜம் தூரம் சுட்டு வீசியது. மேலும் (Mitrailense) பீரங்கியும், ஊசி துப்பாக்கியும் தங்களின் நாசவேலையில் 5 மடங்கு கூடுதலாய் செயல்பட வல்லவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவ்வகை எதிர்கால விளைவுகளை நினைக்கும் யாரும் திகிலுற்று, மன சோர்வு அடைவர். ஐரோப்பாவின் ராணுவ நிபுணர்களின் யூகப்படி இனிவரும் போரின் போது மரண எச்சரிக்கை அத்தனை அதிகமாய்

இருப்பதுடன், காயப்பட்டவர்களை கவனிப்பதோ அல்லது மரிப்பவர்களை அடக்கம் செய்வதோ கூட முடியாத அளவுக்காய் இருக்கும் என்பது சந்தேகத்துக்கே இடமில்லை. எனவே, ராணுவ தளவாடங்களை சுமந்து செல்வதுடன் நடமாடும் பிண எரிப்பு சாதனத்தையும் கூட எடுத்துச் செல்வது அவசியமாகும். ஏனெனில் அடக்கம் செய்வதை விட போரில் மரிப்பவரை இதில் இட்டு எரித்துவிடுவது சுலபமான ஒன்றாகிவிடும் என்றும் கூறுகின்றனர்.

“இஸ்ரயேலரின் ரத்தம் பூசப்பட்ட வாசல்களை சங்காரத்தூதன் கடந்து சென்று முதற்பேறானவைகளை தப்பவிட்டது போல இந்த பயங்கர போர்கள் சமாதானமான அமெரிக்காவைப் பாதிக்காமல் கடந்து சென்றுவிடும் என நீங்கள் ஒருவேளை நினைக்கலாம். அது அப்படியே என்று நிரூபிக்கும்படி தேவன் அனுமதிக்கவும் செய்தார். நமது நம்பிக்கைகள் எப்படி, எங்கிருந்து வருகிறது? மிகவும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீராவியும், மின்சாரமும், சிந்தனை, விருப்பங்கள் மற்றும் காரணங்கள் ஆகியவற்றால் மனிதனை ஒன்றுபடுத்தி விட்டிருக்கிறது. ஆகவே, ஒரு பெரிய கண்டத்தில் போர் வருமானால் அது முடியும் முன்னமே இங்கிலாந்து மிக அத்தியாவசியமாக அதில் பங்குபெறக் கூடியதாகிவிட்டது. இந்த நாகரீக உலகமானது உலகளாவிய அக்கினியால் பாதிக்கப்பட்டே தீரும்படி உள்ளது. இது மட்டுமின்றி, உலகின் எல்லையில் தற்போது ஒரு கையளவு மேகத்தை காணமுடிகிறது. ஆனால், அதுவே ஒருநாள் வானத்தையே இருளடையச் செய்துவிடும். சீனா, ஜப்பான் ஆகிய கிழக்கிலுள்ள இருநாடுகளின் மக்கள் தொகை மகா ஆச்சரியமாக 500 மில்-யனை எட்டுகிறது. இதுவரையில் இந்த புற்றீசல் கூட்டமானது போர் கலையை குறித்து அறியாமையில் இருக்கின்றனர். ஏனெனில், கிறிஸ்துவின் பிறப்பி-ருந்து, உலக சமாதானம் எனப்படுவதற்கு ஏற்ப மற்ற நாடுகளோடு ஒப்பிட்டு பார்க்கும் போது இவை மட்டும் தனிமையை அனுபவிக்கின்றன. இதுவரை ஒதுங்கி இருந்துவிட்ட இந்த இரு நாடுகளின் மீது கிறிஸ்தவத்தின் ஒளி படவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் 30 வருடங்களுக்கு முன்பு மிகச்



சிறிய எண்ணிக்கையான ஆங்கிலேய பிரெஞ்சு வீரர்கள், தங்கள் துப்பாக்கி முனையில் பீகிங்கிற்குள் வலுக்கட்டாயமாய் நுழைந்தனர். இவையெல்லாம் மாறிவிட்டது. மேற்கத்திய நாகரீகமானது வேதத்தையும் குண்டுகளையும், தொப்பிகளையும், மதகுரு தலைப்பாகைகளையும் தெய்வ பக்தியையும், பலகுழல் பீரங்கிகளையும், சிலுவைகள் மற்றும் க்ரூப் பீரங்கிகளையும், புனித பேதுருவையும், வெடியுப்பையும் கிழக்கு நாடுகளுக்குள் கொண்டுவந்துவிட்டது. ஷைலாக்குடன் சேர்ந்து கிழக்கு நாடுகள் ஒருநாள் இப்படியாக கூறக்கூடும். ‘பயங்கரங்களை நீ எனக்கு கற்று கொடுத்தாய், நானும் அதை செயல்படுத்துவேன். சில சமயம் அது கடினமாய் இருக்கக்கூடும். ஆனால், நானோ உன் போதனையின் படியே அதை மேற்கொள்வேன்,’ பயங்கரமான பீரங்கிகளை பயன்படுத்துவதை ஏற்கனவே இவர்கள் கற்றிருந்தனர். இந்த போர் மீதான ஆர்வமானது ஒருசமயம் மேலை நாடுகளை வேறுபடுத்தி காட்டியது. செழுமையான கிழக்கு நாடுகளை நூற்றாண்டுகளாய் கொண்டிருந்த உறக்கத்தி-ருந்து தட்டி எழுப்பியது. காட்டு மிராண்டித்தனமான நாடோடிகள் பல லட்சம் பேரை தனக்கு பின் கொண்ட செங்கிஸ்கானை போன்ற மற்றுமொருவன் பெருத்த மாமலை போல் ஐரோப்பாவின் மீது விழமாட்டானா?

“இவ்வித ஆயத்தங்கள் ஒன்றுமில்லை. இவை போரை தூண்டுவதைக்காட்டிலும் சமாதானத்தையே உறுதியளிப்பதாகவும் மேலும், நவீன ஆயுதங்களின் விளைவுகளால் போரானது நிகழாததாகவும் வாதம் செய்யப்படலாம். பார்ப்பதற்கு நிர்பந்திக்கின்றதைப் போல் இந்தக் கருத்து காணப்பட்டாலும், உண்மையில் ஒன்றுக் கொன்று முரண்பாடான உண்மையே இதில் இருக்கிறது. மிகவும் குறைந்த போர் படைகளை உடைய நாடுகள் மிகவும் அதிகமான சமாதானத்தில் இருக்கின்றன. ஆனால் மிகப்பெரிய படைபலத்தை உடைய நாடுகள் பாதாளத்தின் எல்லையில் நடுநடுங்கிக் கொண்டு இருக்கின்றன. ஸ்விட்சர்லாந்து, ஹாலந்து, பெல்ஜியம், நார்வே, ஸ்வீடன் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிற உலக நாடுகளுடன் நல்லதொரு நட்புறவில்

இருக்கின்றன. அதேசமயம் பிரெஞ்சு, ரஷ்யா, ஜெர்மனி, ஆஸ்டிரியா மற்றும் இத்தா- ஆகிய நாடுகள் தங்கள் போர் தளவாடங்களின் இடையில் மாட்டிக் கொண்டு தடுமாறுகின்றன. தங்கள் எல்லைகளுக்கிடையே ஓயாமல் அதிருப்தியோடு அலைமோதுகின்றன. அவர்களிடத்தில் ஏராளமான போர்த் தளவாடங்களும் சர்வதேச விரோதமும் காணப்பட்டது. இவைகளுக்கு ஏதாவது ஒரு அற்ப காரணம் கிடைத்தாலே போதும் உடனே வெடிக்க தயாராக இருந்தன. சமீபத்தில் பேரரசி அகஸ்டா மனமகிழ்ச்சிக்காக பாரிசுக்கு வந்தது உலகையே எச்சரிப்பதாயிருந்தது, மேலும் விலைவாசி உயர்வுக்கும், அந்நிய செலவாணியின் வீழ்ச்சிக்கும் காரணமாய் இருந்ததுடன், எல்லா ஐரோப்பிய அமைச்சரவைகளும் கூடி, பரப்பரப்புடனும், ஆர்வமுடனும் ஆலோசனை செய்தன. ஒரு பொறுப்பற்ற பாரிஸ் வாசியின் நடத்தையினால் அவளது மகன் இளம் ஜெர்மனி பேரரசர் தன் உடைவாளை உருவ நேரிட்டது. இந்த ஒரு சிறு சம்பவம் அவளை மிகவும் அவமதித்துவிட்டது. இவ்வாறு தெருவில் போகும் ஒரு கபடமற்ற இளைஞனால் உலகமே போரினால் அசைக்கப்படும் அளவுக்கு காரியங்கள் மிகவும் மோசமாகவே இருந்தன. செழுமை, கோடிக்கணக்கான நமது சக மனிதர்களின் உயிர்கள் யாவும் தனிமனிதன் ஒருவனுடைய அனுமதியான உணர்வின் மேலேயே சார்ந்திருக்கிறது. நாகரீகத்தைப் பற்றிய வர்ணனை எத்தனை பயங்கரமாய் இருக்கிறது!

"மனுகுலமானது ஒரு பாதையின் பிரிவில் நின்று கொண்டிருக்கிறது என்கிற கருத்து உண்மையான தெளிவான ஒன்று. எல்லா ஆயத்தங்களும் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டன. ஐரோப்பியர்கள் இதற்கும் மேல் ஆயுதங்களை தாங்க இயலாது. இத்தா- ஏற்கனவே திவாலாகிப்போய் இதன் காரணமாய் புரட்சி சூறாவளிக்குள் எந்த நேரமும் மாட்டிக் கொள்ளும் நிலையி-ருக்கிறது. ஆகவே, அநேக சிந்தனையாளர்கள் நம்புவது என்னவெனில், ஐரோப்பிய நாடுகள் ஒன்று போரிடவேண்டும் இல்லாவிடில் நிராயுதபாணிகளாய் எல்லாவற்றையும் வீசி



எறிந்துவிடவேண்டும். நிபுணர் ஒருவர் கூறுவதாவது. '.....தேசங்களின் மீதான நாசங்கள் குழப்பமானதாக உள்ளது..... மனிதனின் இதயம் பயத்துடன், பூமி மீது வரப்போகும் ஆபத்தை எதிர் நோக்கியே இருக்கின்றன."

நியூயார்க் டிரிபூன், மே, 1895ல் ஐரோப்பாவின் நிலையான ஆளுகையை குறித்த நிலையை இவ்வாறாக கூறுகிறது:

"தனிப்பட்ட வாழ்க்கைக்கென ஓய்வு பெற நினைக்கும் ராஜாக்கள், ராஜாங்கத்தை துறப்பது என்பது நடைமுறையில் காணப்பட்டது. பல முக்கிய நிகழ்வுகளைக் கொண்ட காலகட்டமான 1848-1849ல் ஐரோப்பா முழுவதிலுமே ஏகாதிபத்திய நோக்குடனான ஆட்சியாளர்களுக்கு எதிராக வெளிப்படையான கிளர்ச்சிகள் எழுந்ததாக கூறப்படுகிறது. எத்தனையோ சர்வ அதிகாரமுள்ள செல்வாக்கான மன்னர்கள் கூட அரசாட்சியை துறந்துவிடுவதாக அறிவித்தனர். 1848ல் அநேக ராஜ்யங்களின் இளவரசர்கள் முந்தைய நூற்றாண்டில் பிறந்திருந்து, அவர்களது பாரம்பரிய செல்வாக்குள்ளேயே வளர்க்கப்பட்டிருந்தனர். இவர்கள் உண்மையில் எந்த தகுதியுமே அற்றவர்களாயும், மற்றும் தேசிய சட்டதிட்டங்களை புரிந்துக்கொள்ளக்கூடிய ஆற்றல் இல்லாதவர்களாயும் இருந்தார்கள். இரத்த வெறிபிடித்த சீர்திருத்தம் என்ற பெயரில் முழுமையான அழிவின் யோசனைகளுக்கு வழி கொடுத்ததினால் வெகு சீக்கிரத்திலே 16ஆம் லூயிஸ் மற்றும் மேரி ஆன்டோனிட்டி ஆகியோரை தூக்குமேடைக்கே அழைத்துச் சென்றது. இதனால் தங்கள் அரியணையையே துறக்கவும் தயாராயினர். மேலும் அந்த முக்கியத்துவம் வாய்ந்த 2 வருடங்களில், ஆஸ்டிரியா, சார்டினியா, பாவேரியா, பிரென்சு மற்றும் ஹாலந்து ஆகிய நாடுகளின் சிங்காசனங்களை அதன் ஆட்சியாளர்கள் கா-செய்துவிட்டனர். அரை நூற்றாண்டு கடந்துவிட்ட இப்போதும் கூட அவர்களது தலைமுறையினர் தங்கள் வரிசைப்படியே இந்த முடியரசை துறக்க விழைகிறார்கள். அவர்களும் கூட மக்களால் விரும்பப்படுகிற சட்டதிட்டங்களானது நல்லதொரு அரசாங்கத்துக்கு ஒவ்வாததாய் இருக்கிறது என்பதனை உறுதியாய்

ஒப்புக்கொள்கின்றனர். அதுவும் ஒன்றுக்கொன்று நேர் எதிராக முரண்பாடும் இரண்டு நிறுவனங்களான அரசாட்சியும், பாராளுமன்றமும் ஒப்புரவு ஆகுதல் என்பது இயலாத காரியம் என்கிறன்றனர். இதில் ஒரு வகையில் அவர்கள் அத்தனை தவறுள்ளவர்களாக இல்லை. ஏனெனில் இந்த மக்களால் விரும்பப்படும் அரசாங்கத்தின் முன்னேற்றமானது குடியரசை நோக்கி போய்க் கொண்டிருப்பது சந்தேகமின்றி உண்மையாகவே அரியாசனத்தின் கௌரவத்தையும் அதிகாரத்தையும் குறைத்துக்கொண்டே வருகிறதாகவே இருக்கிறது. மக்களுக்கு அல்லது அவர்களது அரசியல் சட்டபூர்வமான பிரதிநிதிகளுக்கு உத்திரவாதமான ஒவ்வொரு சட்டப்படியான அதிகாரம் மற்றும் உரிமைகளும் பெரும்பாலும் மன்னர்களிடமிருந்து எடுக்கப்பட்டுவிடுகின்றன. மேலும் காலம் செல்லச்செல்ல போற்றத்தக்க பிரபலங்களாக இருந்த ராஜாக்களும், மாமன்னர்களும் அவசியமற்றவர்களாகவும், வெறும் பெயரளவிலான தலைவர்களான இவர்களது பெலவீனங்களும், அதிகாரமின்மையும் இவர்களை கனத்திற்கு உரியவர்களாக வைப்பதற்கு பதிலாக கே-க்குரியவர்களாகவும் ஆக்கிவிட்டது என்பது மிகவும் தெளிவாய் தெரிகிறது. அல்லாமலும் அரசியல், பொருளாதார, அறிவியல் முன்னேற்றங்களுக்கு அவர்கள் தீவிரமான தடங்கல்களை உண்டாக்கினர். உண்மையில் பார்க்கப்போனால், வரும் நூற்றாண்டுகளில் வெறும் சமூக நடுவர்களாக இருப்பதைத் தவிர வேறு எந்த நிலையும் அவர்களுக்கென்று இருக்காது. அதுவும் அவர்களது அதிகாரம் எல்லாம் வெறும் சம்பிரதாயமான செயல்பாடு மட்டுமே என்கிற அளவுக்கு வரைமுறைப்படுத்தப்பட்டு, எழுதப்பட்ட சட்ட ஒழுங்கின்படி அல்லாமல் வெறும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவிதமாகவே செயல்படுத்தப்பட்டது.

"அரியாசனத்தை துறப்பதாக அறிவித்த மன்னர்களிடையே முத-டம் வகிப்பவர் ஹெலன்சின் மன்னர் ஜார்ஜ் ஆவார். அவரது அறிக்கையில் தனது சௌகரியமில்லாத அரியாசனத்தை குறித்து தான் சோர்ந்து பெலவீனமாகிவிட்டதாகவும், மேலும் கிரேக்க நாட்டின் சூழ்நிலையானது மன்னராகிய தமக்கு இனிமையற்றதாக முடிவடைந்துவிட்டதாக எந்த தயக்கமுமின்றி கூறுகிறார். மேலும், தனது மகன் கான்ஸ்டான்டினிடம் எத்தனை விரைவில் முடியுமோ அத்தனை விரைவாக தன் செங்கோலை ஒப்படைப்பதில் ஆர்வமாக இருக்கிறார். ஏதென்சில் குடிமக்களுடன் எந்த தொடர்பும் இதற்கு மேல் இல்லை. நண்பர்கள் இல்லை. வெளிநாட்டு விருந்தினர்களும் தடை செய்யப்பட்டனர். மந்திரி சபையின் அவமதிப்பான தீர்மானங்கள் தொடர்ந்து ஒருவித அழுத்தத்தை கொடுத்தன. வெளிநாட்டு மன்னர்களுடனான இவருக்கு இருந்த நெருக்கமான உறவின் பிணைப்பின் காரணமாய் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு இவரது ஆட்சியே இவரை ஒரு தடுமாற்றம் மற்றும் அசௌகரியமான நிலைக்கு கொண்டு வர விரைவாய் செயல்பட்டன.

"ஆஸ்கார் மன்னரும் தான் ராஜினாமா செய்துவிட்டு தனது ராஜ்யபாரத்தை தன் மூத்த மகனுக்கு கொடுப்பதாக கூறுகிறார். இவரைப் பொருத்தவரை வற்புறுத்திக் கூற பாராளுமன்றங்கள் ஒன்றுக்கு பதில் இரண்டு ஆக இருக்கின்றன. கிறிஸ்டியானியாவும், ஸ்டாக்ஹோமும் எப்போதுமே நேருக்கு நேர் விரோதமாய் இருந்தன. ஒருவரை குற்றப்படுத்தாமல் மற்றவரை திருப்திபடுத்த முடியாத நிலை, இதன் விளைவாக அவரது வற்புறுத்த-ன் காரணமாய் நார்வே மற்றும் ஸ்வீடன் ஆகியவை உள்நாட்டு கலவரத்தில் இருக்கின்றன. இந்த இரு நாடுகளுக்கும் இடையே இருக்கும் தகராறு துப்பாக்கி முனையில் தான் பதவியை பறிக்க முயற்சிப்பதே தவிர, இவர் நினைத்தப்படி அரியணையை தானாக துறப்பதை ஆதரிக்கவில்லை என்பது இவர் மனதுக்கு ஆறுதலாக இருந்தது. மேலும், அவர் 'தானும் கூட கிரேக்க நாட்டு மன்னர் ஜார்ஜ் அவர்களைப் போலவே மிக சிறந்த ஒன்றையே செய்திருப்பதாகவும், நேர்மையுடனான அரசியல் சட்டம் என்பதற்கு இணையாகவே தன் செங்கோலுடனான ஆட்சியை நடத்தியிருக்கிறேன்' என்றும் கூறுகிறார். ஆனால், இனி மேலும் அவ்வாறே தொடருவது சாத்தியமில்லை. எனவே தன் பட்டாபிஷேக உறுதிமொழியை மீறுவதா அல்லது பதவியி-ருந்து இறங்கி அவர்

மகனுக்கு அதை கொடுப்பதா என்பது அவருக்குள் கேள்வியாகவே இருக்கிறது.

“அதே போல டென்மார்க்கின் அரசர் கிறிஸ்டியன் கூட தனது 80வது வயதில் நேஷனல் லெஜிஸ்லேட்டரில் அல்டிரா ரேடிகல்ஸ் மற்றும் சோஷ-ஸ்ட்க்கும் இடையேயான சமீபகால பொதுத்தேர்த-ன் விளைவாக, அரியாசனத்துக்கு விரோதம் உருவானதை காண்கிறார். அது பெரும்பான்மையான ஆதரவை பெற்று, எண்ணிக்கையிலும் முத-டம் வகித்து, நடுத்தர -பரெல்சுடனும், சிறுபான்மையான கன்சர்வேடிவ் கட்சியுடனும் கூட்டாகி மூவரும் ஒன்றாகினர். இதி-ருந்து ஏறக்குறைய 20 ஆண்டுகளாய் மன்னராட்சிக்கும், பாராளுமன்றத்துக்கும் இடையே டென்மார்க்கில் தொடர்ந்து வந்த கருத்து வேறுபாட்டுக்கு கடந்த கோடைக்காலத்திலே ஒரு முடிவு ஏற்பட்டதாக இவர் கருதும்படியானது. அதன் பிறகு பல கருத்துவேறுபாடுகளை நீக்க அநேக சலுகைகளை செய்ததினால் எல்லாம் சுமுகமாக செல்லவேண்டியதாக இருந்தது. ஆனால், அதற்கு பதிலாக தற்போது பாராளுமன்றத்தின் பெரும்பான்மையான ஆதரவானது இவருக்கு எதிராக அணி வகுத்தது. மக்களது உரிமைகளை கருதி ஏற்கனவே அதை அமல்படுத்த தன் கருத்தையும் வெளியிட்டது. மேலும், மன்னரின் சார்பாக அரசியல் சட்டத்திட்டத்தின் கருத்தை சம்மதிக்கும்படி வற்புறுத்தவும் செய்தது. வயோதிகத்தின் நிமித்தமும், பெலவீனத்தினாலும், இவரது ஆட்சிக்காலம் முழுவதும் பின்பலமாக இருந்த திடமான எண்ணமுடைய இவரது மனைவியின் சுகவீனத்தினாலும் தன் வ-மையான பின்பலமாகிய மருமகன் ரஷ்யாவின் மறைந்த மாமன்னர் அலெக்ஸாண்டரின் ஆதரவு நீங்கிவிட்டதாலும், இனிமேலும் தற்போதைய சூழ்நிலையை மேற்கொள்ள சக்தியற்றவராக அவர் உணர்ந்ததால், தன்னுடைய மகனுக்கு ஆட்சி பொறுப்பை மாற்றி அமைக்கப்போவதாக அறிவித்தார்.

“இந்த மூன்று மன்னர்களுடன் இத்தா- மன்னர் ஹம்பர்டின் பெயரும் சேர்க்கப்படவேண்டும். ஏனெனில் இவர் தனக்கும் தன் மனைவிக்கும் வெறுப்புண்டாகும்படி வலுக்கட்டாயமாக தன்



ஆட்சியை பிரதம மந்திரியிடம் ஒப்படைக்கும்படி செய்யப்பட்டார். மேலும், தனக்கு மனத்தளவில் சம்மதமின்றி போனாலும், சட்டத்துக்கு உடன்பட்டு தன் பெயரை ஒரு செயல்திட்டத்துக்கு கொடுக்கவேண்டியதாயிற்று. இத்தா- அரியணையை கைவிடப்போவதற்கு முன்னெச்சரிகையாக அவரது எதிர்காலத்துக்குரிய தனிப்பட்ட செல்வமெல்லாம் ஏற்கனவே வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்டுவிட்டது என்பது ரகசியமே இல்லை. மேலும், எப்போதும் இல்லாத அளவு பொறுக்கமுடியாத சூழ்நிலையானது அவரை சுற்றி இருந்த மக்களிடையே அவரையும் அவரது மனைவியையும் வெறுத்து ஒதுக்கும்படியாக நிர்பந்தித்ததை கண்டார். அது மட்டுமின்றி ஆலயத்திலும் இவரது மற்றும் ராணியின் உண்மையான மதஉணர்வுகளுக்கும் எதிரான ஒரு நிலையில் நிற்க வேண்டியிருந்தது. மட்டுமின்றி அதேவிதமாய் இத்தா-யின் ஆட்சி இல்லம் பழைய உலக மாளிகைகளை போன்று மிகவும் தர்மசங்கடமானதும் விகாரமானதுமானதொரு நிலைமையில் வைத்தது. ஹம்பர்ட் மன்னர், மிகவும் மென்மையான இவர் வெளிநாட்டு அரச உரிமையாளர்கள் தன்னை மையமாக வைத்து செய்யும் அவமரியாதைகளை எல்லாம் உன்னிப்பாய் கவனித்து வருகிறார். ரோமுக்கு வந்ததின் நிமித்தம் வாடிகனை குற்றப்படுத்தியததாகுமோ என பயந்து அவர்களை சந்திக்காமல் விட்டுவிட்டார்.

“போர்ச்சுக்கல்-ன் ராணி மேரி அமி- என்பவரும் இப்படி நடந்ததுண்டு. பாரிசின் பிரபுவின் மனைவியான இவர் தனது தாயாரைப் போல மிகவும் திடமனதுள்ளவர். கார்லஸ் மன்னரும் வெகுநாட்களாகவே தன் பதவியை தன் மகனுக்காக கைவிட்டார். ருமேனியாவின் மன்னர் சார்லஸ்சும், பேவரியாவின் இளவரசர் ரீகன்ட்டும் கூட தன் உறவினருக்காய் தன் பதவிகளை விட்டுவிட்டனர். கடைசியாக பல்கேரியாவின் இளவரசன் ஃபெடினான்ட்சின் ரூசோபில்ஸ் நண்பர்களும் கூட முடிதுறக்கும்படி அவரை வற்புறுத்தினர். மேலும், அவர் மஸ்கோவிட் ப்ரொடெக்ஷனின் கீழ் மறு தேர்வு செய்யப்படும்படியாய்

வேலைகளை மேற்கொள்ளவும் செய்தனர். ஆனால், தன் விலகுத-ன் பலனை எண்ணி அவர் நண்பர்களின் வேண்டுகோளுக்கு ஒப்புக்கொள்ள மிகவும் யோசித்தார். ஏனெனில், ஒருமுறை தானாக முன்வந்து தன் மணிமுடியை ஒப்புவித்துவிட்டால் அதை மறுபடியும் பெறுவதற்கு அநேக தடைகள் வரலாம். ஏனெனில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்று அவர் அறிந்திருந்தார்.

“ஆகவே, தங்கள் சொந்த நோக்கின்படி மக்களை பொறுத்தவரை, மணி முடியை, அரச பதவியை துறப்பதினால் எந்தவித முன்னேற்றமும் நடந்துவிடப்போவதில்லை. ஆனால் அதற்கு மாறாக, 50 வருடங்களுக்கு முன் அரசியல் நிர்ணயத்துக்கும் பாராளுமன்ற சலுகைகளுக்கும் நடந்த போராட்டம் ஒருவேளை புதுபிக்கப்படலாம்.”

சோஷ-சத்தின் ஆரவாரமான ஆர்ப்பாட்டங்கள், ஜெர்மன் ரியச் ஸ்டேக், பெல்ஜிய நாடாளுமன்றம் மற்றும் பிரெஞ்சின் பிரதிநிதிகளின் சிறப்பு பிரிவுகளில் பதவியில் இருப்போரது பயத்தை குறைக்கும்படி எந்தவிதத்திலும் திட்டமிடப்படவில்லை. ஜெர்மன் சோஷ-ச அங்கத்தினர்கள் அதிபதியின் நியமன சமயத்தில் கொடுக்கப்பட்ட பேரரசரின் விருந்தில், கலந்துகொள்ள மறுத்துவிட்டனர். தங்கள் இருக்கையை விட்டுக்கூட மரியாதை நிமித்தமாய் எழவில்லை. பெல்ஜிய சோஷ-ஸ்டுகள், மேல் குடிமக்களுக்கும் முதலாளிகளுக்குமே சாதகமாக மன்னர் இருக்கிறதை உணர்ந்து அவருக்கு கொடுக்கப்பட்ட விருந்தில், “மக்கள் நீடூழி வாழ்க! முதலாளிகள் ஒழிக!” என்று கோஷமிட்டனர். மேலும், பிரெஞ்சு பிரதிநிதிகளின் குழு அங்கத்தினர்கள் ஒரு சமயத்தில் தங்களை ஏமாற்றியவர்களைக் கொண்டு, புரட்சி என்பது இன்னும் முடியவில்லை. எவ்வளவு பணிவுடன் அமைதியான முறையில் கேட்டாலும், மறுக்கப்படுகிறது என்று அறிவித்தனர்.

ஜெர்மனியின் சோஷ-சத்தின் வளர்ச்சியை கண்காணிக்கும் வகையில் ஒரு மசோதா, ரியச் ஸ்டேக்கில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஆனால், இது ஒரு சட்டமாக மாறமுடியாமற்போகும்படி நிராகரிக்கப்பட்டதன்



காரணம் கீழ்கண்டவிதமாய் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டது:

“ரிய்ச் ஸ்டேக்கின் புரட்சிக்கெதிரான மசோதாவானது, சமீபத்தில் நிராகரிக்கப்பட்டது. ஏனெனில், நமக்குள் பாஷை மற்றும் நிறுவனங்களில் வேறுபட்டிருந்தாலும், நமக்கு பொதுவாக அநேகம் உண்டு. சோஷ-சத்தை எதிர்க்க ஜெர்மன் அரசு கடைசியாக முயன்றாலும், சரித்திரத்திலேயே இத்தேசம் ஒரு சுவாரசியமான அத்தியாயத்தை உண்டாக்குகிறது.

“ஜெர்மனியில் சோஷிய-ஸ்டிக் கட்சியின் மீது நீண்ட நாட்களாகவே ஈர்ப்பு அதிகரித்துள்ளது. ஆனால், 1878வரை இல்லை. இதனிடையே பேரரசரின் மேல் இரண்டு முறை கொலைமுயற்சி நடத்தப்பட்டபடியால், அரசாங்கம் அடக்குமுறையை தீவிரமாய் கடைபிடித்திருந்தது. 1878 சோஷ-ஸ்டுகளுக்கு எதிரான முதல் சட்டம் பிறப்பிக்கப்பட்டு பின் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை அது 1880, 82, 84, 86 என்று புதுப்பிக்கப்பட்டது.

“இதற்குள்ளாக கூடுதலான சட்டங்கள் இயற்றப்படுதல் அவசியம் என கருதப்பட்டது. ஆகவே, 1887ல் பிஸ்மார்க் என்ற உயர் அதிகாரி ரிய்ச் ஸ்டேகிற்கு புதியதொரு சட்டத்தை குறித்த ஆலோசனையை கொடுத்தார். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள்ளாக சோஷ-ச தலைவர்களை முடக்கி வைக்கவும், குடிமகனுக்குரிய உரிமைகளை பறிக்கவும், அவர்களை தேசத்தை விட்டு வெளியேற்றவும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படும். ஆனால், பாராளுமன்றம் இவரது ஆலோசனையை நிராகரித்துவிட்டு, அது பழைய சட்டத்தை புதுப்பிப்பதிலேயே திருப்தி தெரிவித்தது.

“ஆனாலும், சில பகுதிகளிலாவது இன்னும் அடக்குமுறை சட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கலாம் என தற்போதும் நம்பப்படுகிறது. ஆனால், சோஷ-ஸ்டிக் கட்சியின் வளர்ச்சி தொடர் கொள்கையை பரப்புவதில் இருந்த தைரியத்தின் முன்னேற்றம் ஆகியவை ஜெர்மனி மற்றும் ஐரோப்பாவின் பிற பகுதிகளில் ஒட்டுமொத்தமாய் நடந்த அரசியல் குழப்பத்தின் வன்முறைகள்

யாவும் இன்னும் கூடுதலான அடக்குமுறையை அரசாங்கம் கொண்டு வர தூண்டின. 1894 டிசம்பரில், உள்நாட்டில் ஒழுங்கு முறையை குலைக்கும் முயற்சியை தூண்டுபவர்களுக்கென புதியதொரு அரசியல் சட்டத்தை கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளதாய் பேரரசர் தெரிவித்தார்.

"அந்த வருட முடிவுக்குள்ளாகவே புரட்சியாளர்களுக்கு எதிரான மசோதாவானது மக்கள் மன்றத்தின் முன் வைக்கப்பட்டது. அதன் சாராம்சங்களில் சாதாரண குற்றங்களுக்கான நாட்டின் சட்டத்தோடு கூட ஒரு குற்றத்தொகுதியும் நிரந்தரமான முக்கியத்துவம் பெறும்படியான சட்டத்திருத்தங்களும் இருந்தன. இந்த சட்டதிருத்தம் மூலமாக பொதுவாழ்வின் சமாதானத்துக்கு ஊறுவிளைவிப்பவர், மதத்தை, மன்னர் குடும்பத்தை, திருமணத்தை, குடும்பத்தை, சொத்துக்களை வெளிப்படையாய் தாக்குபவர் மற்றம் தீய வார்த்தையால் சண்டையிடுபவர், வாக்குவாதங்களை செய்பவர், அவர்களுக்கு தெரிந்து காரியங்களை சூழ்நிலைக்கேற்ப கற்பனை செய்து திரிந்து, அதை அரசாங்க நிறுவனங்களுக்கு மற்றும் அதிகாரிகளின் ஆணைகளுக்கு அவமதிப்பை சேர்க்கும் வகையில் பேசுபவர் ஆகிய யாவருக்கும் தண்டனை அல்லது அபராதம் கட்டும்படியாய் செய்யப்பட்டது.

"இராணுவம், கப்பற்படை ஆகியவற்றில் சோஷிய-ஸ்டிக் பிரசாரத்தை குறிவைத்து, இதே விதமான பண்புகள் இந்த புதுச்சட்டத்தில் இடம் பெற்று இருந்தன.

"சோஷ-ஸ்டுகளின் எதிர்ப்பானது நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் மட்டுமிருந்து வந்தால், அதை அரசாங்கம் தன் மசோதாவினால் மேற்கொண்டிருக்க முடியும். ஆனால், குற்றம் என்று சுட்டிக்காட்டப்பட்டவைகளின் தன்மையானது சட்டத்தை விளக்குகின்ற பணியானது போலீஸ் நீதிபதிகளிடம் ஒப்படைக்கும் அளவுக்கு இருந்தபடியால், அதன் நிபந்தனைகளில் பேசுவதற்கும், போதிப்பதற்கும் பொதுகூடுகைகளுக்கும் இருந்த சுதந்திரத்துக்கு எதிராக ஒரு அச்சுறுத்தல் இருப்பதை, பெருவாரியான மக்கள்



பார்த்ததினால் ஒரு அவநம்பிக்கை, பீதி எழுந்துவிட்டது.

"அதேவிதம், ரிய்ச்டேக் இதனைக் குறித்து ஒரு ஆழ்ந்த யோசனை செய்தபோது, சொந்த நாட்டில் எங்குமே காணப்படாத ஒரு இயக்கம் துவங்கியது. படைப்பாளிகள் ( எழுத்தாளர்கள்), பதிப்பாசிரியர்கள், கலைஞர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், குடிமக்கள் ஆகியோரிடமிருந்து மனுக்கள் குவிந்தன. கண்டன கையெழுத்துக்கள் ஏறக்குறைய ஒரு மில்-யனுக்கும் மேல் வந்து அதை உறுதிசெய்தன.

"பெர்-னர் டேக்பிளாட் போன்ற பிரபல பத்திரிகைகள் கூட இருபது ஆயிரம் முதல் நூறு ஆயிரம் பெயர்களை தாங்கிய தங்கள் வாசகர்களின் மனுக்களை ரெய்ச் ஸ்டேகிற்கு அனுப்பிவைத்தன. இதற்கிடையில் தலைநகரில் நடத்தப்பட்ட ஒரு பொதுக்கூட்டத்தில் நானூற்று ஐம்பது ஜெர்மன் பல்கலைக்கழகங்கள் தங்கள் பிரதிநிதிகள் மூலம் இந்த மசோதாவுக்கு எதிர்ப்பை தெரிவித்தன.

"இந்த மறுப்பின் அளவானது பொதுவாகவே எதிர்க்கப்பட்டது தவிர்க்க இயலாததாக இருந்தது. மேலும், இந்த சோஷ-ஸ்ட் கட்சியானது பெரும்பாலும் அரசாங்கத்தை தோற்கடித்துவிடக்கூடும். இருந்தும் கூட ரிய்ச் ஸ்டேக் இந்த மசோதாவை கண்டனம் செய்வது அது சோஷ-ஸ்டுகளை குறிவைத்து தாக்குவதற்காக அல்ல. ஆனால், அரசியல் குழப்பத்தை கருத்தில் கொண்டிருப்பதால் இது மக்களின் உரிமைகளுக்கு பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் தான்."

மேலும், லண்டனில் சோஷ-ஸ்டுகள் தொடர்ந்து வெற்றி பெறுவதாகவும் அராஜகம் மடிந்து வருவதாகவும் பேசப்படுகிறது. இங்கிலாந்தின் மிக வ-மையான தொழிலாளர் ஒருங்கிணைப்பான இன்டிபென்டண்ட் லேபர் பார்ட்டி தற்போது ஒரு பகிரங்கமான சோஷ-ஸ்ட் அமைப்பாக இருக்கிறது. பல காலம் முன்பே ரத்தவெள்ளமான புரட்சியை இது எதிர்பார்க்கிறது. அதனால் மட்டுமே, தற்போதைய மன்னராட்சியின் அழிவின் மீது சோஷ-ச குடியரசு நிலைபெற்று நிற்கமுடியும் என்கிறது.

இந்த உண்மைகளையும் மனோபாவத்தையும் அறிந்து ராஜாக்களும், ஆளுகிறவர்களும், தங்களையும் தங்கள் உரிமைகளையும் புரட்சியின் ஆபத்துகளி-ருந்தும் உலகளாவிய அராஜகத்தி-ருந்தும் பாதுகாத்து கொள்ள முன்னெச்சரிக்கைகளை எடுத்து வருவதை நாம் பார்க்கிறோம். பயத்தின், துயரத்தின் காரணமாய் அவர்கள் இருந்தாலும், சிறிதளவாவது நம்பிக்கையை இந்த கூட்டணி மீது வைக்கின்றனர். எந்த ஒரு நாடும் பிறநாட்டின் மீது கொள்ளும் ஆழ்ந்த வெறுப்பு, பொறாமை, பழி வாங்குதல் மற்றும் விரோதம் போன்ற மனப்போக்கின் இடையிலும் சுய லாபத்தினை கருத்தில் கொண்டு மட்டுமே ஒருவரோடொருவர் தொடர்பு வைத்துக்கொள்கின்றனர். ஆகவே, தங்கள் சுயநல திட்டங்களும், நோக்கங்களும் இணைந்து செயல்படுகிற வரையில் மட்டுமே அவர்களது கூட்டணி செயல்பட முடியும். அன்போ, தர்ம சிந்தையோ அதில் சிறிதும் இல்லை. எந்த கொள்கைகளினாலும் அவர்கள் அனைவரையும் ஒருமனப்பட்ட ஒத்துழைப்புக்குள்ளாய் கொண்டுவருவது என்பது ஒரு இயலாத காரியமாகிவிட்டது என்பதற்கு தினசரி செய்திதாள்களே ஒரு அசைக்கமுடியாத சாட்சியாக இருக்கிறது. எந்த சக்திகளின் கூட்டணியிடமும் நம்பிக்கையை எதிர்பார்ப்பது வீணானதாகவே இருக்கிறது.

## கிறிஸ்தவ குருகுலம் இனியும் ஒரு அரண் இல்லை

இதை ஓரளவுக்காவது உணர்ந்து கொண்டவர்களாக, நீதிமுறைகளை தூண்டுவதாலோ அல்லது மதகுருமார்களின் அதிகாரத்தினாலோ மக்களுக்கும், ஆள்பவர்களுக்கும் இடையிலான விஷயத்தை குறித்த பெரும் பிரச்சனைகளை சமாளிக்க என்ன இயலும் என்று அவர்கள் சபையை (தேவன் தெரிந்தெடுத்த, தன் சபையாக அறிந்துகொண்ட பரிசுத்தவான்களாகிய அவரது சபையை அல்ல உலகம் புரிந்து கொண்டிருக்கிறதான மாபெரும் அந்த உலக சம்மந்தமான பெயர் சபையை) ஆவலுடன் பார்ப்பதை நாமும் காண்கிறோம். சபையும் கூட அரசருக்கும் மக்களுக்கும் இடையிலான அமைதியான உறவை மறுபடியும் திரும்ப கொண்டுவருவதில் மிகவும் மகிழ்ச்சியுடன் உதவி செய்யவும் வழி



ஏற்படுத்தவும் மிக ஆவலாய் இருக்கிறது; ஏனெனில் மதகுருக்களாட்சியின் அக்கறையும் மற்றும் சமுதாயத்தின் பிரபுக்களாட்சியின் அக்கறையும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருந்தது. ஆனால், இவ்விதத்தில் உதவியை எதிர்பார்ப்பது என்பது வீணான ஒன்றாக இருந்தது. ஏனெனில், விழிப்படைந்த மக்களிடையே அரசாங்கம் மற்றும் மதகுருமார்களது வழிமுறைமைகளில் சிறிதளவு மரியாதையே மீதமிருக்கிறது. அதுமட்டுமின்றி சபையின் இந்த ஒருங்கிணைப்பின் உதவியானது பரீட்சைக்குட்படுத்தப்பட்டதாக இருந்தது. உதாரணத்துக்கு ஜெர்மனியின் ரெய்ட்ஸ்டேக், இளவரசர் பிஸ்மார்க்கின் செல்வாக்கின் மூலமாக 1870ல் ஜெர்மனியில் ஜெஸ்சூட் என்ற (இயேசு நாதர்) சங்கம் ஒழிக்கப்பட்டது. ஜெர்மனியின் நலனுக்கு எதிரானது என்று கருதியும், கத்தோ-க்க கூட்டத்தாரின் நன்மதிப்பை பெறவும், இராணுவ நடவடிக்கைகளின் ஆதரவில் தனக்கு செல்வாக்கை சம்பாதிக்கும் எண்ணத்துடனும் சிறிது காலத்துக்குப்பின் தன் போக்கை மாற்றிக்கொள்ளும்படியும் இருந்தது. ஒரு கேள்வி நேர விவாதத்தின்போது குறிப்பிடும்படியான ஒரு கருத்து உருவானது. இது பெரும்பாலும் தீர்க்கதரிசனத்தைப் போல் நிரூபிக்கப்பட்டாலும், அந்த சமயத்தில் சபைக்குள் வெறும் சிரிப்புடன் கூடிய சலசலப்பையே ஏற்படுத்தியது. இந்த கருத்து என்னவெனில், ஜெஸ்சூட் சங்கத்தை மறுபடியும் நினைத்து பார்ப்பது என்பது ஒன்றும் அத்தனை பயங்கரமானது இல்லை. அதுவும் கூட (சோஷ-சம் - அராஜகம்) என்ற பெரும் வெள்ளத்தில் நிச்சயம் சீக்கிரம் மூழ்கிப்போகும்.

இத்தா-யின் அரசரும், ஆட்சியும் ரோம சபையுடன் இணைவதற்காக எடுக்கப்பட்ட முயற்சியின் நோக்கமானது. அராஜகத்தையும் சமூக நலன்களில் செழுமையையும் பரப்பும் என்ற அச்சம் மிகவும் தெளிவாக இருந்தது. இந்த உத்வேகத்தைக் குறித்து பிரதமர் கிரிஸ்பி குறிப்பிடும்போது, இத்தா-யின் தற்போதைய அரசியலை ஒரு சரித்திர கண்ணோட்டத்தோடு ஒப்பிட்டு பேச்சை துவங்கி, இன்றைய சமுதாய பிரச்சனைகளுக்கு புரட்சி இயக்கம் ஒரு முடிவு என்று கூறி பேச்சை முடித்தார்.

அவர் கூறியதாவது :

"சமூக அமைப்பானது இப்போது மிக முக்கியமானதொரு இக்கட்டின் வழியாக கடந்து சென்று கொண்டிருக்கிறது. இந்த சூழ்நிலையானது அத்தனை தீவிரமானதாக ஆகி வருகிறது. இதை பார்க்கும்போது உள்நாட்டு மற்றும் மத அதிகாரங்கள் கூடி ஒருமனப்பட்டு 'கடவுள் இல்லை, அரசரும் இல்லை' என்ற வாசகம் உடைய கொடியை விரும்பத்தகாத இந்த அமைப்புக்கு எதிராக ஒருமைப்பாட்டுடன் செயல்பட வேண்டியது அத்தனை அவசியமாக இருப்பதாக காணப்படுகிறது. இந்த ஒருங்கிணைப்பே சமூகத்தின் மீது போரை அறிவித்தது என்று கூறினார். இந்த சமுதாயம் இந்த அறிவிப்பை ஏற்கட்டும், 'தேவனுக்கும், மன்னருக்கும் மற்றும் நாட்டுக்கும்' என்று பதிலுக்கு யுத்தசத்தம் கூக்கூர-டட்டும்."

எல்லா நாகரீகமடைந்த நாடுகளிலும் சமுதாய அதிகாரங்களின் மீது வரப்போகும் தீங்கை முன்னறிவிக்கும் இந்த பயங்கரமானது, ரோமின் போப்புடன் ஐரோப்பாவின் எல்லா சமுதாய அதிகாரங்களும் சமாதானம் ஆகும் சிந்தனைக்கு காரணமாக இருக்கிறது. மேலும், இழந்துபோன தனது மதசார்பற்ற அதிகாரங்களை திரும்பப்பெறும் தனது நீண்டகால மனவாஞ்சையை தற்போது மிகவும் சாத்தியமான ஒன்றாக பார்க்க ஆரம்பித்திருக்கிறது. கிறிஸ்தவ ராஜ்யங்களின் தலைவர்கள் யாவரும், போப்பரசின் 50வது நிறைவு விழாவின் போது, போப்புக்கு விலையேறப்பெற்ற வெகுமதிகளை கொடுத்ததின் மூலம் தேசங்களின் இந்த சிந்தனை மிகவும் தெளிவாக காட்டப்பட்டது. விழித்துக்கொண்ட உலகத்தின் மாபெரும் சக்தியுடனே கூட தங்களது சொந்த தகுதியற்ற நிலையானது ஒத்துழைத்ததை உணர்ந்த சமுதாய அதிகாரங்கள், வீணான துணிச்சலோடு, கிறிஸ்தவ உலகையே தன் பிடிக்குள் வைத்திருந்த கொடுங்கோலான போப்பரசின் முற்கால அதிகாரத்தை மனதில் கொண்டு, அந்த அரக்கனை வெறுத்தாலும் கூட, திருப்தியடையாத மக்களை தங்கள் கட்டுக்குள் வைத்துக்கொள்வதில் வெற்றி காணமுடியும் என்ற பட்சத்தில், பெருவாரியான சலுகைகளை அளிக்க அவர்கள் முன்வந்தனர்.

ரோமன் கத்தோ-க்க சபையால் முன்வைக்கப்பட்ட உரிமைகளை அநேகர் ஒப்புக்கொண்டனர். ஏனெனில் இது ஒன்று மட்டுமே பொங்கிவரும் சோஷ-சம் மற்றும் அராஜகத்திற்கு



நம்பிக்கையான, வ-மையான அரணாக இருக்கும் என்பதை ஏற்றுக்கொண்டனர். கவுண்ட் பால் வோன் ஹான்ஸ் புரூக் என்ற ஜெசூட் அமைப்பின் முன்னாள் அங்கத்தினரானவர் இந்த மாயையை மேற்கோள் காட்டி, பெல்ஜியத்தின் கத்தோ-க்கருக்கும், அங்கிருக்கும் சமூக குடியரசின் முன்னேற்றத்திற்கும் அந்த பகுதியி-ருந்து நம்பிக்கையற்ற நிலையை தெளிவாய் காட்டுகிறார். 1895ல் பெர்-னில் வெளிவந்த ப்ரூசிஸ்சி ஜார்புச்சில் வெளியான அவரது ஒரு கட்டுரையில் கூறியிருந்ததாவது :

"பெல்ஜியமானது நூற்றுக்கணக்கான வருடங்களாகவே இத்தா-யின் ஒரு முக்கிய பகுதியாகவும், கத்தோ-க்க மத நாடாகவும் இருந்து வந்தது. இந்த நாட்டின் ஜனத்தொகை 6 மில்-யனுக்கும் அதிகம். இதில் 15 ஆயிரம் பேர் புராட்டஸ்டன்டாரும், 3 ஆயிரம் பேர் யூதர்களுமாவர். மீதியான யாவரும் கத்தோ-க்கரே. இங்கு பாவ அறிக்கை திடமாக இருந்தது. பெல்ஜியத்தின் சரித்திரம் மற்றும் வாழ்க்கையில் கத்தோ-க்க சபையே ஒரு வலுவான முன்னோடியாக இருந்தது. மேலும், அது மென்மேலும் பெருமிதத்தை சம்பாதித்து தன் மாபெரும் வெற்றிப்பாதையை கொண்டாடியது. வெகுசில பிரத்தியோக காரியங்களுடன் நாட்டின் கல்வி முறையையே அரசு தன் கட்டுக்குள் வைத்திருந்தது. விசேஷமாய் ஆரம்ப மற்றும் அரசு பள்ளிகளை.....

"தற்போது கத்தோ-க்க பெல்ஜியத்தில் சமூக குடியரசு எப்படி செயல்படுகிறது? இதை கடந்த தேர்தலே காட்டியுள்ளது. ஏறக்குறைய ஐந்தில் ஒரு பாக ஓட்டுக்கள் சோஷியல் டெமாக்ரேட்டுக்கே போடப்பட்டிருந்தது. 'பன்மை வாக்குகள்' என்று இரண்டு (அ) நான்கு முறை அதே ஓட்டுக்களை கணக்கெடுத்து இந்த வகையிலான ஓட்டுக்கள் சோஷியல் டெமாக்ரேட்டுகளைக் காட்டிலும் சோஷி-ஸ்டிக் அல்லாத போட்டியாளர்களுக்குள் அதிக எண்ணிக்கையில் இருந்ததை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இது பெல்ஜியத்தில் ஆளுகை செய்து, செல்வந்தரும், கல்விமானும் இவ்வகையிலான ஓட்டுக்களை போட வகை செய்தது. -பரல் கட்சியினிடமிருந்தே சோஷிய-ஸ்டிக்கிற்கு, ஓட்டுகள் பெருகும் என்று இத்தா-யைச் சார்ந்தவர்கள் உண்மையிலேயே கூறுகின்றனர். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இது உண்மையே. ஆனால் மதகுருக்களோ

இது சோஷ-சத்துக்கும் கடவுள் நம்பிக்கையின்மை மற்றும் சீரழிவுக்கும் எதிரான ஒரு அரண் என்று கூறுகின்றனர். இது நகைப்புக்குரியதே அன்றி வேறேதும் இல்லை. நாட்டின் மற்றும் சமுதாயத்தின் வாரிசுகளின் இந்த சுகவீனத்துக்கு கத்தோ-க்க சபையே வைத்தியரானால், இந்த சுதந்திரவாதிகள் எங்கிருந்து வந்தனர்?"

"சோஷியல் டெமாக்ரசியிடமிருந்து காப்பாற்றும் அளவில், மிகச்சிறிய அளவே மக்களை நாத்திக சீர்திருத்த கொள்கைகளி-ருந்து கத்தோ-க்கர் காப்பாற்ற முடியும். 1886ல் பணியாளர்களின் நிலைமை சம்மந்தப்பட்ட பிரச்சனைகளுடன் பலதரப்பட்ட மக்களின் பிரதிநிதிகளுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. நான்கில் மூன்று பாக அளவு பதில்களில் மக்கள் மதசம்மந்தப்பட்டவரையில் சீர்கெட்டு அல்லது கத்தோ-க்கமானது இன்னும் அதிக அதிகமாய் தன் அந்தஸ்த்தை இழந்து வந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிரபுகளுக்கு தங்கள் முப்பத்தெட்டு ஆலயங்களி-ருந்தும் முப்பத்தைந்து மடங்களி-ருந்தும் (Convent) உபயோகமற்ற பதில்கள் வந்தன. புரூசெல்ஸ் கூறுகிறபடி 'பத்தில் ஒன்பது பாக குழந்தைகள் முறை தவறிய வழியில் பிறந்தவர்களாகவும், நெறி தவறிய வழியில் விவரிக்கமுடியாத அளவுக்கும் இருக்கிறார்கள்.' பெல்ஜியன் சோஷியல் டிமாக்ரேட் இருக்கின்ற இந்த தேசத்திலே, கத்தோ-க்க இத்தா-ய அரசு பள்ளியில் படித்தபடியினால், பள்ளிகளில் கலந்து கொண்டபோது வருடத்துக்கு குறைந்தது அரை மில்-யன் கத்தோ-க்க பிரசங்கங்களும், மதசொற்பொழிவுகளும் கொடுக்கப்படும். அப்படி இருந்தும் கூட இவைகளின் நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கிறது. 'மடங்களின் குருக்களின் தேசம்' என்று சரியான காரணத்துடனே அழைக்கப்பட்ட இந்த தேசமானது சமூக சீர்திருத்தத்தின் சொர்க்க பூமியாக மாறிப்போனது."

## மிதமிஞ்சிய போர் ஆயத்தங்கள்

கூடியவிரைவில் நடக்கப்போகிற புரட்சியை குறித்த பயமானது ஒவ்வொரு கிறிஸ்தவ தேசத்தையும் அளவுக்கு மிஞ்சிய போர் ஆயத்தங்களை செய்யும்படி விரட்டுகிறது. ஒரு தலைநகரின் பத்திரிக்கை கூறுவதாவது:



"ஐரோப்பாவின் ஐந்து பெரிய நாடுகள் 6,525,000,000 ப்ராங்க் அளவு பணத்தை, போரில் மனிதரையும், பொருட்களையும் அழிப்பதற்காக செலவு செய்ய ஒதுக்கி வைத்துள்ளன. இந்த பேராபத்தை விளைவிக்கும் காரியத்துக்காக ஜெர்மன் தேசமே முதன்மையாய் பெருவாரியான பணத்தை ஒதுக்கி வைத்திருக்கிறது. அதனிடம் 1,500,000,000 ப்ராங்குகள் இருக்கிறது. பிரான்சிடம் 2,000,000,000 ப்ராங்கும், ரஷ்யாவில் காலரா மற்றும் பஞ்சத்தினால் நாசம் ஏற்பட்ட பிறகும் கூட 2,125,000,000 ப்ராங்கும், ஆஸ்டிரியா 750,000,000 ப்ராங்கும் எல்லாரிலும் ஏழ்மை நாடான இத்தா-250,000,000 ப்ராங்கு குறைவாகவும் ஒதுக்கின. இந்த மாபெரும் தொகையானது வெறுமனே பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறது. போர் மூண்டாலொழிய இவை தொடமுடியாதபடி உள்ளன. ஜெர்மனியின் பேரரசர் வில்-யம் கூறுகிறார்: 'இந்த போர் நிதியில் ஒரு சல்-க்காசை தொடுவதைக் காட்டிலும் ஜெர்மனியின் பொருளாதார சீர்கேடு வேறெதிலும் இல்லை.' "

1895ன் ஆரம்பத்தில் வெளிநாடுகளின் படைபலத்தைப் பற்றி அமெரிக்க ராணுவத்துறை ஒரு கணக்கை தயாரித்தது. அதன்படி : ஆஸ்டிரோ ஹங்கேரி, 1,794,175; பெல்ஜியம், 140,000; கொலம்பியா, 30,000; இங்கிலாந்து, 662,000; பிரான்சு, 3,200,000; ஜெர்மனி, 3,700,000; இத்தா-, 3,155,036; மெக்சிகோ, 162,000; ரஷ்யா, 13,014,865; ஸ்பெயின், 400,000; ஸ்விட்சர்லாந்து, 486,000. இந்த படைகளை பராமரிக்க வருடத்திற்கு 631,226,825 மில்-யன் டாலர் செலவாகிறது.

பிரதிநிதிநிதித்துவ சபைக்கு ராணுவ காரியதரிசி அறிவித்தபடி அமெரிக்காவின் போர் வீரர்கள் 141,846 பேர் ஆவர். மேலும் இன்னும் ஒருங்கிணைக்கப்படாமல் இருக்கும் கைவசம் உள்ள ராணுவத்தினரின் எண்ணிக்கை 9,582,806 பேர் என்றும் காரியதரிசி கூறுகிறார். இதனை ஐரோப்பிய நாடுகளில் 'War Footing' என்பர்.

ஐரோப்பா சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு தற்போது வந்துள்ள நியூயார்க் ஹெரான்டின் செய்தி தொடர்பாளர் கூறுகிறார்:

"ஐரோப்பாவில் அடுத்த போர் எப்போது வந்தாலும், அதன் அழிவின் பயங்கரமானது இந்நாள் வரை பார்த்திராத அளவாக இருக்கும். அதற்குரிய சாதனங்களுக்காக எல்லா வழிகளிலும்

வருவாயானது உறிஞ்சப்பட்டு இருக்கிறது. இதுவரையில் இப்படிப்பட்ட அழிவுக்கான போரின் உபகரணங்கள் எப்போதுமே ஏற்படாததால், இதுவரை உலகம் காணாத ஒன்றாக இருக்கும் என்பது மிகவும் பொருத்தமான கூற்றாகும். ஐரோப்பா ஒரு மிகப் பெரிய ராணுவ தளமாக இருக்கிறது. தலைமை அதிகாரிகள் ஆயுதங்களை தயார் நிலையிலேயே வைத்துள்ளனர். இது வெறும் வேடிக்கைகாகவோ அல்லது காட்சிக்காகவோ வைக்கப்பட்டது அல்ல. இது ஒரு கூட்டுமுயற்சியின் விளைவாகும். ஏராளமான ராணுவத்தினர் மிகுந்த உச்சநிலையிலான கடும் பயிற்சியில், மிகவும் நவீனமான ஆயுதங்களுடன், தங்கள் துப்பாக்கிகளின் நம்பிக்கையுடன் விரைப்பாக, ஒருவருக்கு ஒருவர் எதிர்த்து போரிட மே-டத்து உத்தரவுக்காக களத்திலும், கூடாரங்களிலும் காத்திருக்கின்றனர். ஐரோப்பாவின் போரானது ஒரே ஒரு காரியத்தை நிச்சமாய் ஊர்ஜிதப்படுத்துகிறது. அது என்னவெனில், அடுத்த போரின் அவசியத்தையேயாகும்.

“இத்தனை பெரும் தயார் நிலை ராணுவம், சமாதானத்தை உறுதிப்படுத்தவே என்று கூறப்படுகிறது. ஆனால், அது வெகுநாட்களுக்கு தாக்குப்பிடிக்கமுடியாது. ஏனெனில், இத்தனை பெரிய அளவிலான ராணுவம் செயலற்று இருப்பது அநேக தியாகங்களை உள்ளடக்கியதாக இருக்கும். இந்த மாபெரும் சுமையானது நிச்சயமாக சந்தேகமின்றி செயலாற்றவும் தூண்டும்.”

## நவீன போர் ஆயுதங்கள்

பிட்ஸ்பர்க் டெஸ்பேச் பத்திரிகையின் செய்தி தொடர்பாளர் வாஷிங்டன் டி.சி. யி-ருந்து எழுதுகிறார் :

“ராணுவம் மற்றும் கப்பற்படையின் பல்வேறு துறைகளின் முடுக்குகளில் எல்லாம் எல்லாவித வடிவங்களிலும் பயங்கரமாக தாக்கும் ஏவுகணைகள் மற்றும் ஆயுதங்கள் ஆயுத கிடங்குகளில் இடம் பிடித்திருக்கின்றன. ஒப்பிட்டுப்பார்த்தால் அவை அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிதறியிருப்பது போலவும், மிகவும் அற்பமானதாகவும் தோன்றினாலும், உண்மையிலேயே பெருத்த முன் யோசனையற்ற எண்ணத்திற்கு நாம் வருவதற்கு அவை போதுமானவை. மனித சமுதாயத்தை அழிப்பதற்கான ஆயுதங்களின்



புதிய கண்டுபிடிப்புகளாகிய இந்த பயங்கரமான சக்திகளின் முடிவு எப்படியானதாக இருக்கும். நமது புதிய நாட்டில் இந்நாள் மட்டும் நாம் உரிமை கொண்டாடும் யாவும், இவ்வகையான கண்டுபிடிப்புகளுக்கு எடுத்துக்காட்டானவைகளே. கொலை பாதகமான இந்த இயந்திரங்களையெல்லாம் பார்க்கும் எவருமே, இந்த உலகை ஆளுகிறவர்கள் மனித குலத்தை முன்னேற்றி, பாதுகாப்பதற்கு பதிலாக அதை பூண்டோடு அழிக்கவே எத்தனிக்கிறார்கள் என்று நினைப்பர்.

“சாதாரணமாய் அந்நாட்களில் படைகள் நேருக்கு நேர் மோதி ஒருவரை ஒருவர் அழிக்க வேண்டியிருந்தது. ஆனால், இந்த நவீன கண்டுபிடிப்புகளின் உதவியோடு கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரு மனிதன் 1000 பேரை கொல்லமுடியும் என்ற அளவுக்கு பயங்கர கொடூரமான ஆயுதங்களாக இருக்கின்றன. ஆனால், போர் கலையின் முன்னேற்றத்துக்கு இதை எடுத்துக்காட்டாய் எடுக்க அவசியமில்லை. சமீபகால பெரிய போர்களின் போது உபயோகிக்கப்பட்ட ஆயுதங்கள் கூட தற்போது பண்டைய பொருள் ஆகிவிட்டது. அமெரிக்க நாட்டில் நாளை ஒரு உள்நாட்டு கலவரம் தொடங்கினாலோ, அல்லது நாமே கூட வேறு ஒரு அயல்நாட்டுடன் போரிடப்போனாலோ, நமது படையின் ஒரு பகுதியைக் கொண்டு கால் நூற்றாண்டுக்கு முன்னான ஆயுதங்களுடன் போரிட நிச்சயம் யோசிப்போம். வழக்கப்படி வெகுசில துப்பாக்கிகளும், போர் கப்பல்களும் போர் முடிவுக்கு வரும் நிலையில் வெளிக்கொண்டு வரப்படும். இவை தங்கள் அசல் வடிவத்தி-ருந்து பெரும்பாலும் உருமாறி புதுவடிவம் அமைக்கப்பட்டும், திருத்தப்பட்டும் சில நிபந்தனைக்கு உட்பட்டு அவை செயல்படுத்தப்படும். ஆனால் இதற்கு பதிலாக தற்போதைய முற்றிலும் புதிய கண்டுபிடிப்புகளான இந்த கொலை பாதக இயந்திரங்களோடு பழங்கால ஆயுதங்கள் எத்தனை சிறந்தது என்று ஒப்பிட்டாலும் இவற்றின் முன் அந்த பழைய ஆயுதங்கள் வ-மையற்ற, முற்றிலும் ஒன்றுக்கும் உபயோகமற்றவைகளாகவே இருக்கும். Automatic Mitrailleuseகளின் விமானங்கள் அதன் மாதிரிகளை காட்டினர். அதுவரைக்கும் நான் அத்தனை திகிலூட்டக்கூடிய ஆயுத வளர்ச்சியை நினைத்துப் பார்க்கவில்லை. மேக்சிம் எனப்பட்ட இந்த ஆயுதமே போர்ப்படைகளுக்கான சமீப

கண்டுபிடிப்புகளிலேயே மிக மோசமான ஆயுதமாகும். நிமிடத்துக்கு 600 குண்டுகள் வெடிக்கும். ஆறு அங்குல தானியங்கி பீரங்கியை தயாரிக்கவேண்டும் என்பதே திட்டமாக இருக்கிறது. மிகச்சிறிய ஏவுகணைகளை தாங்கும் கேட்-ங் மற்றும் பிற துப்பாக்கிகளை விட உண்மையில் இது திறமை வாய்ந்தது தான். ஆனால் மேக்சிம் உடன் ஒப்பிட்டு பார்க்கும் போது இதனை இயக்கி செயல்படுத்துவது மிகவும் கடினமானது. அதிகப்படியான ஆட்கள் தேவைப்படும். அதோடு மிகவும் பளுவானதும் துல்-யக்குறைவானதும் ஆகும். மேக்சிம் துப்பாக்கியை இயக்க ஒரு பெண்ணோ அல்லது சிறுவனோ கூட போதும், அதுவும் இதை தயாராக வைத்தபின் அதை இயக்குபவர் அந்த சிறிய இடைவெளியில் ஒரு தடவை சாப்பிடவும் சென்று திரும்பிவிடலாம். அதற்குள் இந்த ஆயுதம் சில ஆயிரம் மக்களை கொன்று குவித்து விட்டிருக்கும். விருப்பப்பட்டால் குண்டு துளைக்காத கவசத்திற்கு பின்னே துப்பாக்கியை இயக்குபவர் இருக்கையில் அமர்ந்தும் கொள்ளலாம். சில நிமிடங்களிலேயே ஒரு ராணுவத்தையே அழிக்க வேண்டுமானாலும் அவரது வேலையை செய்து முடிக்க முன்சொல்லப்பட்ட ராணுவமானது ஒரு சாத்தியமான நிலைக்கு வரும்வரை மட்டும் காத்திருந்தாலே போதும், பிறகு ஒரு விசையை அழுத்தினால் முதல் தோட்டா வெளிவரும். அதனை தொடர்ந்து தானியங்கி இயந்திரத்தின் பணி துவங்கிவிடும். முத-ல் வெடிக்கும் தோட்டாவின் கா- உறை வெளியே தள்ளப்பட்டு சுழன்று அதன் இடத்துக்கு புதிய தோட்டாவை கொண்டு வந்து வெடிக்கச் செய்யும். இந்த குண்டு வெடிப்பின் சுழல் இயக்கமானது தொடர்ந்து இதேவிதமாய் செயல்பட்டு எண்ணிலடங்கா தேட்டாக்களை வெடிக்கச் செய்யும். இப்படியாக இது தொடர்ந்து கொன்று கொண்டேயிருக்கும். இதன் தயாரிப்பு உரிமையானது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

"இதில் உபயோகப்படுத்தப்படும் விசேஷித்த வெடிமருந்தானது சுத்தமான வெடிகலவையாகும். இதில் எந்த பின்விளைவுகளையும் பெற்றிராத அளவு மிகவும் குறைந்த விகிதத்தில் நைட்ரோ கிளிசிரினும் சேர்க்கப்பட்டிருக்கிறது. யூரியாவின் லேசான கூட்டுக்கலவையை உபயோகித்து கெட்டுப்



போகாமல் காக்கப்படுகிறது. இது கையாள மிக மிக பாதுகாப்பானது. பட்டறை கல்-ன் மீது வைத்து கனமான கத்தியால் அடித்தாலும் வெடித்து சிதறாது. இத்தனை நுட்பமான சக்தியின் ரகசியமானது வெறும் ஒரு சிறிய கணித உண்மையை ஆதாரமாய் கொண்டது. ஆனால், இதுவரை யாரும் அவ்விதம் சிந்தனை செய்திருக்கவில்லை. இந்த பயங்கரமான வெடிமருந்தானது தற்போது சிறு பட்டைகளாகவும், சிறிய வில்லைகளாகவும், கூம்பு வடிவ கனமான கம்பிகளாகவும் அரை முதல் முக்கால் அங்குலத்திற்கும் குறைவான குறுக்களவில் தற்போது உபயோகிக்கப்படுகின்றன. பார்ப்பதற்கு தேன்மெழுகினாலான கட்டுகளாய் பல அடி நீளமுடையவைகளாகவும் இருக்கும். இந்த வெடிமருந்து குழாயில் சட்டென நெருப்பூட்டப்படும் போது மையத்தை நோக்கி எரிய ஆரம்பிக்கும்.

"வேதியியல் மூலம் உந்தப்பட்டு இதனுள் வாயுக்களின் அடர்த்தி குறைந்துகொண்டே வரும். ஏனெனில், அது எரியும் இடமானது மிகவும் குறைவானது. மேலும், வாயுவின் அடர்த்தி கொடுக்கும் விசைவேகமானது ஏவுகணையை துப்பாக்கியைவிட்டு சீறிபாயச் செய்யும். விசை வேகத்தின் இழப்பு தவிர்க்க முடியாததாய் இருக்கிறது. வாயுவின் அழுத்தம் அதிகரிக்கப்படுத்தப்பட்டாலோ அல்லது குறைந்தபட்சம் சமநிலையில் வைக்கப்பட்டாலோ அன்றி ஏவுகணையானது அத்தனை வேகமாய் பாயாது.

"இந்த மேக்சிம் ஸ்கூப்ஃஅஸ்சின் வெடிமருந்து அதன் முழுநீள குழாயில் அநேக சிறு துளைகளின் கடைசிவரை இருக்கும். ஆகவே வெடிமருந்து நெருப்பூட்டப்பட்டவுடனே அந்த தீயானது குழ-ன் சுற்றளவில் பரவுவதோடு, துளைகள் வழியேயும் பரவுகிறது. எரிக்கப்படும் இந்த சிறுதுளைகளினால் வெடிக்கும் வாயுக்களின் அடர்த்தி திடீரென வித்தியாசப்படுவதால், துப்பாக்கியின் ஆரம்பம் முதல் முடிவு வரை 16:1 என்ற விகிதத்தில் அதன் அடர்த்தி இருக்கும்.

"இதனால் ஏவுகணையானது துப்பாக்கியைவிட்டு, படுபயங்கரமான விசை வேகத்துடன் புறப்படும். மேலும். இதிலுள்ள துளைகளும் கூட சேர்ந்து தன் பணியை செய்வதால் மேலும் துரிதப்பட்டு, கண்ணுக்கு எட்டாத தூரம் அநேக

மைல்களுக்குக்கப்பால் தன் நாச வேலையை செய்கிறது. புதிய விநோதமான நவீன பீரங்கியாகிய இந்த பெரிய துப்பாக்கி பெருமளவில் செய்யும் படுகொலையானது அளவிட முடியாததாய் இருக்கும். சான்டி ஹூக்கீன் படை துப்பாக்கிகளிலும், பெரிய கடலோர பாதுகாப்பு துப்பாக்கிகளிலும் இந்த புதிய பயங்கரமான வெடிமருந்தை உபயோகித்ததில் ஆச்சரியமான பலன் கிடைத்தது. 128 பவுண்டு வெடிமருந்தானது 10 அங்குல துப்பாக்கியில் நிரப்பப்பட்டது. 517 பவுண்டு எடையுள்ள ஏவுகணை கடலை விட்டு 8 மைல் வரை தூக்கி வீசப்பட்டது. வெடிமருந்தின் குழல்கள் மீதான அழுத்தமானது இதுவரை இல்லாத அளவு அத்தனை சீராக இருந்தது. உயர்தர வெடிமருந்து என மதிப்பிட்டு முடிவெடுக்க இது மிகவும் முக்கியமான விஷயமாய் இருக்கிறது. இந்த சீரான அழுத்தம் இல்லாவிடில் குறிபார்ப்பதில் துல்-யமாய் இருப்பது என்பது இயலாத ஒன்றாகும்.

"மேக்சிம் மற்றும் ஸ்கூப்ஃஆஸ் நிறுவனம் 20 அங்குல துப்பாக்கியை உருவாக்க திட்டமிட்டது. குறிப்பாக கடற்கரை பாதுகாப்பில் இது உபயோகிக்கப்படும். இந்த துப்பாக்கி மிகவும் பிரத்தியோக அமைப்புகளை உடையது. பல ஸ்டீல் உதிரி பாகங்கள் ஒருங்கிணைக்கபட்டதாக இருக்காது. ஆனால், 20 அடி நீளமுள்ள ஒரே மெல்-ய ஸ்டீல் குழலாக அதன் சுவர்கள் 2 அங்குலத்திற்கும் அதிகமில்லாத கனமுமாக இருக்கும். மேலும், தன் செயல்பாட்டின் அழுத்தத்தை தாங்கும் பொருட்டு 8 அல்லது 10 அங்குலம் கன சுவர்களால் உருவான பெரிய பீரங்கிகளுக்கு முன் முரண்பட்டதாய் இருக்கும். இந்த துப்பாக்கியின் எதிர் சக்தி விசையானது, திரவ சக்தியின் உதவியுடன் இயங்கும் அதிர்ச்சியை தாங்கும் சாதனத்துக்கும் கீழ் அமைக்கப்பட்டிருக்கும். இதற்குள் தண்ணீரும் எண்ணெயும் இருக்கும். 20 அங்குல நீளமுள்ள இவ்வகை துப்பாக்கியானது இந்த புதுவித வெடிமருந்தை உபயோகித்து நியூயார்க்கின் துறைமுக வாயி-ல் அல்லது வாஷிங்டன் கோட்டை, வாட்ஸ்வோர்த் கோட்டையில் அமைக்கப்படலாம். அது 10 மைல் சுற்றளவுக்கு மொத்த கடற்பகுதியையே கட்டுப்படுத்தும். ஆகவே, அழுத்தமும், விசைவேகமும் ஒரே சீராக இருப்பதினால் மிகமிக துல்-யமானதாய் குறிவைத்து சுடுவது என்பது சாத்தியமாயிற்று.



ஆகவே, குறிபார்க்கும் கருவியின் உதவியுடன் எந்த கப்ப-லும் இந்த துப்பாக்கியை உபயோகித்து குறிப்பிட்ட சுற்றளவில் முழுமையான நாசத்தை ஏற்படுத்தும் பயிற்சி மட்டும் செய்தால் போதும். இந்த ஏவுகணை 50 அடி தூரத்துக்குள்ளாக வெடிக்குமானால், 'போர் நாயகனை' மூழ்கடிப்பதற்கு அதனால் தூக்கி வீசப்படும் வெடிமருந்தின் அளவு போதுமானதாக இருக்கும். 500 பவுண்டு எடையுள்ள ஏவுகணையின் தாக்குதல் 150 அடி தூரத்தி-ருந்து வருமானால் அது ஒரு கப்பலை நிலைகுலையை செய்ய போதுமானதாகவும் இருக்கும். "

டாக்டர் ஆர்.ஜே. கேட்-ங் தன் பெயரையே கொண்ட துப்பாக்கியின் கண்டுபிடிப்பாளரான இவர் இந்த புதிய, புகையில்லாத வெடி மருந்தைக் குறித்து கூறுவதாவது :

"எதிர்கால போர் படைகளில் பெருமளவிலான புரட்சியை ஏற்படுத்தப்போகும் இந்த புதிய கண்டுபிடிப்பான புகையில்லா வெடிமருந்தை பாராட்டும் அளவுக்கு மக்கள் இன்னும் அறியவில்லை. ஏற்கனவே பழக்கத்தில் இல்லாத அளவு 3,000,000 முதல் 4,00,000 வரை ஐரோப்பாவில் இந்த வெடிமருந்தை உபயோகிக்கும் தளவாடங்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. மில்-யன் கணக்கில் இருக்கும் தோட்டாக்களையும் சேர்த்து தேசமுழுதும் வைத்திருக்கும் எல்லா தளவாடங்களையும் சொற்பவிலைக்கு விற்க தயாராயிருப்பார்கள். இங்கு பெருந்தொகையானது வீணான முதலீடாய் இருக்கிறது. ஆனால் இது தவிர்க்கமுடியாதது. நம் நாட்டு ராணுவத்தின் துப்பாக்கிகள் எல்லாம் உபயோகமற்ற பொருளாய் வெகுசீக்கிரமே மாறப்போகிறது. உலகத்தின் பிற நாடுகளின் வேகத்துக்கு ஈடுகொடுக்க புகையில்லா வெடிமருந்தை நாமும்கூட ஏற்றுக்கொள்ளவேண்டி வரும். கருப்புப் பொடியை விட இரண்டு மடங்கு தூரத்துக்கு தோட்டாக்களை புதிய வெடிமருந்து அடங்கிய இந்த துப்பாக்கி வீசக்கூடியது. மேலும் இந்த புதிய கண்டுபிடிப்பானது யுத்த தந்திரங்களையே முற்றிலுமாய் மாற்றியிருக்கிறது. எப்படியெனில், எதிர்கால போர்படைகள் எதிரிக்கு முன்பாக இனிமேல் பெருங்கூட்டமாக அணிவகுத்துச் செல்லமாட்டார்கள். பகிரங்கமாய் நேருக்கு நேர் நின்று போர் புரிவதே இத்தனை கால பழக்கமாயிருந்தும், இனி அது

பழங்கதையாகவே இருக்கும். ஏனெனில், இது முழுமையான அழிவுக்கு அர்த்தமாகும். சமீபகால உள்நாட்டு கலவரங்களின் போது இந்த புகையில்லா வெடிமருந்து உபயோகப்படுத்தப் பட்டிருக்குமேயானால், இந்த சண்டைகள் 90 நாட்கள் வரை நாடுகளிடையே நீடித்திருக்காது."

"விரைவு துப்பாக்கி, இயந்திர துப்பாக்கியின் வேகத்தில் சுட ஆரம்பிப்பது இல்லை. முந்தையதில் ஒரே ஒரு குழலும் அதில் தோட்டாக்கள் நிரப்பப்பட்டும் இருக்கும். இவை நீர்மூழ்கி குண்டுகளை வீசும் படகுகளுக்கு மிகவும் பொருத்தமானவை. நிமிடத்துக்கு 15 குண்டுகள் என்ற கணக்கு அதற்கு மிகவும் ஏற்றதாக இருக்கும். ஆனால், கேட்-ங் மாதிரியான இயந்திர துப்பாக்கியில் 6 முதல் 12 குழல்கள் இருக்கும். இதை இயக்க 3 ஆட்கள் இருப்பர். குண்டு பொழிவதில் எந்த தடங்கலும் இருக்காது. நிமிடத்துக்கு 1200 குண்டு வீதம் தொடர்ந்து அடுத்தடுத்து செயல்படக்கூடியது. இந்த 3 பேர்களால் பழங்காலத்து பாணியிலான துப்பாக்கிகளை உபயோகித்து ஒரு முழு அணியையே வீழ்த்தும் எதிரிகளைக் காட்டிலும் அதிகமாகவே அழிக்கமுடியும்."

சின்சினாட்டி என்கொயிரர்ரில் ஒரு எழுத்தாளர் கூறுகிறார் :

"வரப்போகிற போர் லட்சணங்களைப் பார்த்தால், இனி எப்போது நடந்தாலும் அது முற்றிலும் புதியதாகவே இருக்கும். மேலும், அது நாகரீக வளர்ச்சியின் மீது ஒரு காட்டுமிராண்டித்தனமானச் செயலாகவே இருக்கும். புதிய ராணுவ அமைப்புகள் யாவும் வீரர்களை 4 மடங்கு பெருக்கிவிட்டன. எதுவும் அசைக்கமுடியாத அளவுக்கு பயங்கரமான புதியபுகையற்ற வெடிமருந்து இருக்கும். தற்காலத்து காலாட்படை இடியென தாக்குவது ஒரு ஆப்பிள் மரத்தை சூறாவளி ஒன்று தாக்குவதைப் போல் இருக்கும். வான்வழி ஆய்வுக் கூடங்களும், பலூன் பீரங்கிகளும் நகரம் மற்றும் கோட்டைகளின் மீது ஏராளமான பொடியைத் தூவி, அவைகளை வெறுமையாக்கி, குண்டு வெடித்ததைக் காட்டிலும், அதிக நாசத்தை ஏற்படுத்திவிடும். படைகளுக்கான ரயில் போக்குவரத்து வசதியும், மின்சார விளக்கு மற்றும் தொலைபேசி ஆகிய யாவும் சேர்ந்து போர்கால யுக்திகளையே மாற்றிவிட்டன.



அதற்கு அடுத்த போரானது இதைவிட முற்றிலும் மாறுபட்டவிதமாக நடத்தப்படும். இதுவரை அனுபவித்திராத விதத்தில், பெரும் ஆச்சரியத்தை விளைவிக்கும் வகையில் இருக்கும். அழிக்க அல்ல தற்காப்பிற்கே நாங்கள் போரிடுகிறோம் என்று எல்லா வல்லரசுகளும் கூறுகின்றன. எங்கள் பலமே எங்கள் பாதுகாப்பு. இதுவே எங்கள் அண்டை நாடுகளிடம் சமாதானத்தை சம்பாதித்து எங்களுக்குண்டான எல்லா மரியாதையும் காத்துக்கொள்ள தூண்டுகிறது.

"போரின் பிடியி-ருந்து சமாதானத்தை காத்துக்கொள்ளவே அச்சப்படக்கூடிய, கொலை பாதகமான செயல்களுக்கு சமமானவை என்று சொல்லக்கூடிய எல்லாவற்றையும் செய்யும்படி தூண்டப்படுகின்றனர். ஆனால், ஒவ்வொரு நாடும் இதே கொள்கையை பின்பற்றுகின்றன. இது ஒரு எதிர்மறையான சூழலுக்கு உச்சகட்டமாக இருக்கின்றபோதும், போருக்கு எதிராக சமாதானம் என்பது ஆயுதங்களாலேயே நன்றாக பாதுகாக்கப்படுகிறது. அல்லது அதைவிட சரியாக சொல்வதானால் போரின் விளைவுகளையும், கோரத்தையும் குறித்த அச்சத்தினாலேயே சமாதானமானது கடைபிடிக்கப்படுவதாகவே நான் உண்மையில் நம்புகிறேன். ஆனால், அந்த இரக்கமற்ற போர்தளவாட கப்பல்கள், பொதுமக்களின் நலன்கள் யாவற்றையும் உறிஞ்சிக்கொள்ளும் சூறாவளி காற்றை போன்று இருக்கிறது. மேலும் வெடிபொருட்கள் என்ற ரூபத்தில் ஆழங்காணமுடியாத ஒரு எரிமலையை நிரப்பப்போவதைப் போல் இருக்கிறது. இது ஒரு விசித்திர, விநோதமானதாக தோன்றினாலும் கூட, இதுவே உண்மையான சூழ்நிலையாகும். ஐரோப்பாவானது தனக்குத்தானே உருவாக்கிக்கொண்ட மிகப்பெரிய எரிமலையின் மீது படுத்துக்கொண்டிருக்கிறது. இதை மிகவும் அபாயகரமான பொருட்களால் மிகவும் கடினமாக உழைத்து நிரப்புகிறது. ஆனால், அவைகளின் ஆபத்தைக் குறித்த எச்சரிப்பால் எல்லா எரிபொருட்களையும் அந்த எரிமலையின் வாயி-ருந்து தூர வைக்கிறது. சற்று அஜாக்கிரதை ஏற்படும் போதெல்லாம் பெருத்த வெடிசத்தம் ஏற்படுகிறது. அகில உலகும் இந்த அதிர்ச்சியை உணர்ந்து நடுங்கும் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

கொடூரமான காட்டுமிராண்டித்தனம் உலகளாவிய சாபமாக ஒருதேசம் விட்டு மறு தேசம் வரை பரவி மிகவும் கோரமாய் தன்னை வெளிப்படுத்தும். அதோடு கூட இக்காலத்துக்கு ஏற்றவிதத்தில் இந்த உலகநாடுகளின் காரியங்களை இன்னும் நம்பகமான விதத்தில் திட்டமிடவேண்டும் என்று மக்களை தூண்டும் தன் கைகளாலேயே தான் உருவாக்கப்போகும் அழிவின் அடியில் யுத்தங்களை மூடி புதைக்கும்."

### சமாதானத்தை நிர்பந்திக்கும் மற்றுமொரு துப்பாக்கி

"பராக்கிரமசா-களை எழுப்புங்கள்; யுத்தவீரர் எல்லோரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள். ஜாதிகள் எழும்பி யோசபாத்தின் பள்ளத்தாக்குக்கு வருவார்களாக; பலவீனன் தன்னை பலவான் என்று சொல்வானாக, உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்." யோயேல் 3:9-12

கீழே கொடுக்கப்பட்டுள்ள துப்பாக்கியை குறித்ததான விளக்கத்தைப் பார்த்து, யூகிக்கக்கூடியது என்னவாக இருக்கக்கூடும். தேசங்களுக்கு இடையிலான இந்த போர் ஆயத்தங்கள், அரசாங்கங்களும் அதிகாரிகளும் தங்கள் படைகளை கண்டு பயப்படுகிற இந்த காரியத்தை நாம் கவனிக்கவேண்டும். இந்த சேனை ஓஹியோவின் வேலைநிறுத்த இக்கட்டுகளை தடுக்க மறுப்பதையும் பிரேசி-ல் கப்பற்படை தொகுதி அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்வதையும், போர்ச்சுக்கல் போர்வீரர்கள் இராணுவத்தலைவர்களுக்கு எதிராக கொடி பிடிப்பதையும் பார்க்கும்போது இது உலகின் எல்லா நாடுகளிலும் சீக்கிரமே பரவலாக காணப்படும் என்றும் தோன்றுகிறது.

ஜெர்மனியின் சோஷ-சம் மெதுவாக ராணுவ வீரரை தன் வசப்படுத்தி வருவதால் அரசு தன் இராணுவத்திற்கு பயப்பட ஆரம்பித்திருக்கிறது. மேலும் கிரேட் பிரிட்டனும் சேனையின் அல்லது குதிரை வீரர்களின் ஆயுதங்களை பறிக்க வேண்டியதின் அவசியத்தை சமீபத்தில் உணர்ந்திருக்கிறது. அதிகாரங்களை எதிர்க்கும் காரணம் அறிவு, இந்த அறிவுக்கு பின்னால் மறைந்திருப்பது கல்வி. இந்த கல்விக்குப் பின்னால் அச்சடிக்கும் இயந்திரம் என்னும் வல்லமை இருக்கிறது. இது அறியாமை என்னும்



முக்காட்டை நீக்கி, மனுக்குலத்தை மேசியாவின் உபத்திரவங்களோடு கூடிய அந்த மிகப்பெரிய நாளுக்காய் ஆயத்தம் செய்கிறது.

வேதம் குறிப்பாக சொல்-வருகிறபடி இந்த கிளர்ச்சி, கலகங்கள் சமீபகாலத்தில் எப்படி முழு உலகையே என்றும் இல்லாதபடி அசைத்து வருகிறது என்பதை குறித்து நாம் ஆச்சரியப்படுகிறோம். மேலும், முதலீடுகளின் ஆதிக்கமும், நாகரீக வளர்ச்சியும், ஒன்றுபட்ட அதிகாரங்களும் எதிர்த்தும்கூட அராஜகம் கட்டுக்கடங்காமல் போகக்கூடும். ஆனால், கல்வி (அறிவு)யானது உலகின் மாபெரும் அழிவுக்கு வழி வகுப்பதை நாம் இந்நாட்களில் காண்கிறோம். இது வேதம் குறிப்பிடும் வகையில் இன்னும் சில வருடங்களில் நாம் எதிர்பார்க்கலாம். போர் ஆயுதங்கள் மற்றும் ஆயுத கிடங்குகளின் பாதுகாவலர் மற்றும் பொறுப்பாளர்களுக்கு மனித உயிரை அழிக்கும் மிகவும் புதிய ரக உபகரணங்களை உபயோகிக்க பயிற்சி அளிக்கப்பட்டிப்பதை நாம் காணலாம். இதை குறிப்பிடும் கீழ்கண்ட கட்டுரையின் பகுதியை காணலாம் :

"20 பவுண்டு எடைக்கும் குறைவான இந்த துப்பாக்கி, ஒரு சாதாரண வேட்டைக்கருவியைப் போல சர்வ சாதாரணமாய் கையாளப்படுகிறது. அது செயல்படுத்தப்படும்போதோ ஒரு நிமிடத்திற்கு 400 குண்டுகள் என குண்டு மழை பொழிகிறது. இந்த புதிய ஆயுதத்துக்கு பென்ட் மெர்சியர் என்று பெயர். இது ஒரு பிரெஞ்சு நாட்டின் கண்டுபிடிப்பு. இதற்கு தேவையான குண்டுகளை தோள் மீதே சுமந்துகொள்ளலாம். இதை இயக்க இராணுவ வீரன் தரையில் படுத்துக்கொண்டு, 2 ஊன்றுகோல் போன்றவற்றின் மீது துப்பாக்கியை பொருத்துவான். இது ஹிராம் மேக்சிம் துப்பாக்கியை விட மேலான பாதுகாப்பை தருகிறது. ஏனெனில் அந்த துப்பாக்கியில் குண்டுகளை நிரப்ப அதன் இராணுவ வீரன் கட்டாயம் நின்றவண்ணம் இருக்கவேண்டும். இதனால் எதிரியின் பார்வையில் இந்த வீரன் மற்ற இருவருடன் நன்கு காணப்படுவான். ஏனெனில், இந்த கனமான ஆயுதத்தை இயக்க 3 ஆட்கள் தேவைப்படுவர்."

தீர்க்கதரிசி யோயேல் (3:9-11) கூறியவைகள் தேசங்களிடையே நடக்கும் மகத்தான போர் ஆயத்தங்களினால்

நிச்சயமாய் நிறைவேறி வருகின்றது. அவர் தீர்க்கதரிசனமாய் இந்த நாட்களைக் குறித்து கூறும்போது, "இதை புறஜாதிகளுக்குள்ளே கூறுங்கள்; யுத்தத்துக்கு ஆயத்தம் பண்ணுங்கள், பராக்கிரமசா-களை எழுப்புங்கள்; யுத்த வீரர் எல்லோரும் ஏறிவரக்கடவர்கள். உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்; பலவீனனும் தன்னை பலவான் என்று சொல்வானாக. சகல ஜாதிகளே, நீங்கள் சுற்றிலுமிருந்து ஏகமாய் வந்து கூடுங்கள்." இந்நாட்களில் உலகமெங்கும் முழங்கும் முழக்கம் இதுவாக இருக்கிறது அல்லவா? பலவானும் பலவீனனும் யாவரும் தங்களுக்கு வரும் போராட்டங்களுக்குத் தங்களை தயார்படுத்திக் கொள்ளவில்லையா? முன் குறித்த கிறிஸ்தவ சபைகூட தன் வா-பரை முறைப்படி பயிற்சி கொடுத்து, போருக்கான ஆர்வத்தை அவர்களுக்குள் தூண்டவில்லையா? கலப்பையை பயன்படுத்தி தோட்டங்களை பராமரித்தவர்கள் போர்க்கருவிகளை கையாளவில்லையா? மேலும், தேசங்கள் எல்லாம் தங்கள் போர்ப்படைகளை ஒன்று சேர்த்து தங்கள் பொருளாதார ஆதாரங்களுக்காக தயார்படுத்தவில்லையா?

## அமெரிக்கா தன்னிகரற்ற நிலையில் இருந்தும் கூட, பழைய உலகத்தை காட்டிலும் மிகமோசமான தீமைகளால் பயமுறுத்தப்படுகிறது

எந்தவிதத்தில் பார்த்தாலும் அமெரிக்க ஐக்கிய நாடு மற்ற நாடுகளுக்கிடையே தன்னிகரற்றதாகவே இருக்கிறது; தெய்வீக அனுக்கிரகம் பெற்ற விசேஷ பிள்ளையாக சில நாடுகள் இதை மதிக்கின்றன. மேலும், உலகளாவிய புரட்சியில் இந்த நாடு மட்டும் தப்பித்துக் கொள்ளும் என்கிற எண்ணம் கூட எழுகிறது. ஆனால் இது போன்ற கற்பனை பாதுகாப்பெல்லாம், காலத்தின் அடையாளங்களின் கண்ணோட்டத்திலோ அல்லது தேசங்கள் மற்றும் தனிமனிதனின் தீர்ப்பின்படியோ உறுதியானதல்ல.

இந்த அமெரிக்க கண்டம் கண்டுபிடிக்கப்பட்டதின் விசித்திரமான சூழ்நிலை, அதன் மாசுபடாத மண் மீது இந்த நாட்டை நிறுவுவதும், அதன் சுதந்திர காற்றை சுவாசித்து அதன் மகத்தான வளங்களை அபிவிருத்தி செய்வதும், தெய்வீக கிருபையின் திட்டத்தின் ஒரு நடவடிக்கையாகவே இருந்தது என்கின்ற எண்ணம் பாரபட்சமற்றது என்பதில் சந்தேகமே இல்லை. காலமும், சந்தர்ப்ப சூழ்நிலையும் இதனை சுட்டிகாட்டுகிறது. எமர்சன் என்பவர் கூறுகிறார்: "மனுக்குலத்துக்காக தெய்வ கருணையால் எடுக்கப்பட்ட கடைசி முயற்சியாகவே நம் தேசத்தின் சரித்திரம் காணப்படுகிறது." யுகங்களின் தெய்வீக ஏற்பாடுகளை குறித்து மிகத்தெளிவாக தெரியும் வெளிச்சத்தில் இது தெய்வீக கிருபையின் கடைசி முயற்சி அல்ல. ஆனால் தெய்வீக திட்டத்தின் நிறைவில் ஒரு சங்கி-த்தொடர் என்பதை அவர் புரிந்து கொள்ளாமல் இதை சொல்-யிருக்க முடியாது. மதங்களின் சர்வாதிகாரம் மற்றும் உள்நாட்டு கொடுமைகளினால் துன்புறும் எல்லா நாட்டு மக்களுக்கும் இந்நாட்டில் அடைக்கலம் கொடுக்கப்படுகிறது. பெரும் நீர்பரப்பினால் தனிமைப்படுத்தப்பட்டு பழமையான சர்வாதிகாரத்தி-ருந்து வேறுபடுத்தப்பட்டிருப்பதினால் இங்கு சுதந்திர உணர்வுக்கு மூச்சு விட ஒரு இடம் கிடைத்தது. மக்கள் ஆட்சியின் செயல்பாடும் கூட சாத்தியமான உண்மையானது. ஆகவே, மிகவும் சாதகமான இந்த சூழ்நிலையின் கீழ் சுவிசேஷ யுகத்தின் உண்மை சபையை தெரிந்தெடுத்தலாகிய மாபெரும் வேலையானது மிகவும் சுலபமாய் நடக்கிறது. ஆகவே, இந்த யுகத்தின் மாபெரும் அறுவடை இங்கு அதிகமான பலனை சேர்க்க முடியும் என்பதை நாம் நம்புவதற்கான எல்லா காரணங்களும் இங்கிருக்கின்றன.

யுகத்தின் திட்டம், அதனுடைய காலங்களும் வேளைகளும் மற்றும் சலுகைகள் அடங்கிய ஆசீர்வாதமான அறுவடை குறித்த செய்தியை இந்த நாட்டை தவிர எடுத்துக்கூற சுதந்தரமும், அதை கட்டுப்பாடின்றி, பரந்த உள்ளத்தோடு கேட்கிறவர்களும் வேறு எந்த நாட்டிலும் இல்லை. மேலும், இந்த அனுகூலமான தேசத்தின் சுயமாய் செயல்படும் நிறுவனங்களின் மூலமாய், பிடிவாதமான சமய கொள்கை மற்றும் மூட நம்பிக்கையி-ருந்து அநேகர் விடுபட்டு தற்போதைய காலத்தின் சத்தியத்தை பெற்றுக்கொள்ளவும், அந்த நன்மைகளை வெளிநாடுகளுக்கு எடுத்துச்செல்லவும் முடிகிறது. இந்த ஒரே காரணத்தினால் தான் தேவனின் அனுக்கிரகம் அளவில்லாமல் இந்த தேசத்தின் மீது

இருந்தது என்பதை நாம் நம்புகிறோம். வேறு காரியத்தை இந்த தேசத்தில் செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே, சுதந்திரத்தின் குரல்வளையை எதிர்ப்பின் கரங்கள் நெருக்கப்பார்த்த பொழுது வாஷிங்டன் என்ற ஒருவர் எழுப்பப்பட்டு வலுவிழந்த, ஆனால் தேசத்தின் சுதந்திரத்தின் மீது வாஞ்சை உடையவர்களை வழி நடத்தினார். மேலும், மீண்டும் ஒரு பிளவு அந்த நாட்டை அச்சுறுத்திய போதும், நான்கு மில்-யன் அடிமைகளுக்கு விடுதலை கிடைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டபடியினாலும், ஆபிரகாம் -ங்கன் என்ற தைரியமான உயர்ந்த பண்புடைய மற்றொருவரை தேவன் எழுப்பினார். இவர் அடிமைத்தனத்தின் சங்கி-களை உடைத்து நாட்டின் ஒருமைப்பாட்டை காப்பாற்றினார்.

ஆனாலும், தெய்வீக சிலாக்கியங்களை குறித்து இந்த தேசம் எந்த காலத்திலுமே உரிமை பாராட்டவில்லை. சில காரியங்களில் இந்த கிருபைகள் மேலோங்கியிருப்பது தேவபிள்ளைகளின் ஆர்வத்தினால் மட்டுமே. இந்த தேசமானது மற்ற நாடுகளைப் போல் தேவனற்றதாயும் நிலையான நம்பிக்கை இல்லாமலும் இருந்தது. அப்பொழுது அதன் மூலமாகவே தேவன் தமது ஜனத்துக்காக வைத்திருக்கும் தமது சொந்த ஞானமான காரியங்களை தாம் தெரிந்துகொண்ட சிறுமந்தையை கூட்டிச் சேர்க்கும் போதே செய்வார். மற்ற தேசங்களைப் போலவே இதன் மீதும் மகா உபத்திரவத்தின் காற்று வீசும். ஏனெனில் இதுவும் “இந்த உலக ராஜ்யங்களில்” ஒன்று. தேவனின் பிரிய குமாரனின் அரசாட்சிக்கு இந்த நாடும் இடம் கொடுக்கவேண்டி இருக்கிறது.

மேலும் இந்த நாட்டு மக்களின் வாழ்க்கை தரம் மற்றெந்த நாடுகளிலும் இல்லாத அளவுக்கு மிகவும் சாதகமானதாக இருக்கிறது. மற்ற நாட்டு ஏழை மக்களை பார்க்கும் போதும்கூட இவர்களின் வசதி, தனிமனித உரிமைகள், சலுகைகள் யாவுமே பாராட்டத்தக்க அளவு உயர்ந்ததாகவே இருக்கிறது. இந்த நாட்டில் - மிகவும் அடிமட்ட பிரஜைகளின் நிலையில் இருந்து கூட, தன் கொள்கையில் ஆழமான கண்ணோட்டத்துடன் - சுதந்திர உணர்வு, ஆழ்ந்த விருப்பம், தொழில், கடின உழைப்பு, புத்திகூர்மை ஆகிய உணர்வுகளுடன் அநேக ஞானிகளும், சிறந்த அரசியல் வாதிகளும், நாட்டின் அதிபர்கள், சட்டவல்லுனர்கள், வழக்கறிஞர்கள், சட்ட



நிபுணர்கள் மற்றும் புகழ் பெற்ற மனிதர்கள் எல்லா துறைகளிலும் எழும்பி வந்துள்ளனர். எந்த பரம்பரை வாரிசின் ஆட்சியும் ஏகோபித்த நம்பிக்கையையும் லாபத்தையும் இங்கு அனுபவித்தது இல்லை. ஆனால், தாழ்மையான வழிப்போக்கனின் பிள்ளைகள் கூட கௌரவம், செல்வம் மற்றும் உயர்வின் வெகுமதிகளை விரும்பி அவைகளை வெற்றி கொள்ள இயலும். தன் நாட்டு அதிபராக வரக்கூடிய அளவுக்கு ஒருவனுக்கு சந்தர்ப்பங்கள் எத்தனை உள்ளன என்று அமெரிக்க பள்ளி மாணவனுக்கு சுட்டிக்காட்டப்படுவதில்லையா? உண்மையிலேயே நாட்டில் எல்லா உயர் பதவிகளிலும் இருக்கும் மாமனிதர், இதை தம் முயற்சியின் பலனாய் பெற்றார்கள் என்பது ஒவ்வொரு அமெரிக்க வா-பனுக்கும் அவரின் எதிர்கால வெற்றிக்கு வழிகாட்டும். எந்த நிறுவனத்தின் எண்ணமும் இவ்வித வாஞ்சையை சோதித்து பார்ப்பதில்லை. அதற்கு மாறாக எப்போதுமே இந்த விருப்பங்களை தூண்டிவிட்டு உற்சாகப்படுத்துகிறது. எல்லா உயர்பதவி மற்றும் அதற்கும் கீழ்மட்டத்தின் எல்லா கலாச்சாரத்தின் மீதான ஆர்வம் தூண்டப்படுவதுடன் அதன் அவசியத்தையும் கூட தூண்டுகிறது. இந்த தேவையானது இலவச கல்வி திட்டத்தினால் பெரிதும் பூர்த்தி ஆகிறது. தினசரிகள், புத்தகங்கள், வார மற்றும் மாதாந்திர பத்திரிக்கை முத-யவற்றின் மூலம் எல்லா வகுப்பு மக்களும் அறிவு பூர்வமான தொடர்புக்குள் கொண்டு வரப்படுகின்றனர். இதனால் ஒவ்வொரு தனிமனிதனும் தங்களுக்கான ஆர்வங்களுக்கு சம்மந்தமான குறிப்புகளை ஒப்பிட்டுப்பார்த்து தாங்களே ஒரு முடிவுக்கு வரமுடிகிறது. மேலும், தேசிய அளவிலான காரியங்களிலும் தங்கள் செல்வாக்கை வாக்களிப்பு மூலமாய் அறிவுபூர்வமாக உபயோகப்படுத்துகின்றனர்.

ஆகவே, இந்த மேன்மையான மக்கள், மனுக்குலத்தின் உரிமைகளுக்கு ஒரு அங்கீகாரத்தையும், கௌரவத்தையும் கொண்டு வந்தனர். இவர்களே, அதைக் குறித்து உறுதியான கருத்தையும் கொண்டவர்களாய், எந்த ஒரு கருத்துமே இதன் குறிக்கோளை தடுத்து நிறுத்தவோ அல்லது அதன் செயல்பாடுகளை கட்டுப்படுத்தவோ முடியாதபடி காத்தனர். ஆகிலும், இப்போதும் கூட தன்னுடைய நிறுவனங்களில் சுதந்திர எண்ண நோக்கத்தையும், தேசத்தின் எல்லா

பிரிவின் மக்களுக்கும் அவர்கள் அளித்திருக்கும் அளவில்லா அனுகூலங்களையும் பொதுமக்களின் அறிவானது வேறுபடுத்தி உணர ஆரம்பித்துவிட்டது. மேலும், தங்களை வெகுகாலத்துக்கு முன்னமே அடிமைத்தனத்துக்குள் கொண்டு வந்து சுதந்திர மனிதனின் உரிமைகளை அபகரித்துக்கொண்டு, இயற்கையின் எண்ணில்லா ஆசீர்வாதங்களை அனுபவிக்கக்கூட தடுக்கப்பட்டதையும் யோசிக்க ஆரம்பித்துவிட்டனர்.

ஆபத்து வரும் என்று தங்கள் சுதந்திரத்துக்கான ஒரு பய உணர்வுக்குள்ளே அமெரிக்க மக்கள் வர ஆரம்பித்திருக்கின்றனர். இது போன்ற ஆபத்து எல்லாத் துறைகளிலும், எல்லாத் தொழிற்பிரிவுகளிலும் தன் குணாதிசயத்தின் முத்திரையை பதித்திருக்கிறது. இன்னும் கூட தங்கள் ஆபத்துக்களின் காரண காரியங்கள், மக்களுக்கு தெளிவாகாமல் இருக்கும்போதே நிலைமை இவ்வாறாக இருக்கிறது. தெரிந்தால் தங்கள் சக்திகளை இன்னும் விவேகமான முறையில் செயல்படுத்தலாம். ஒரே இடத்தில் சேர்ந்துவிடும் பெரும்செல்வமானது அநேகரை ஏழ்மையாக்குகிறது என்பதை மட்டும் காண்கின்றனர். அதற்கேற்றவிதமாக இயற்றப்படும் சட்டங்கள் இன்னும் அதிகாரத்தினால் பழங்காலத்து கொடுங்கோலாட்சி காலத்தைப் போன்ற எதேச்சதிகாரத்தையும், ஈவு இரக்கமற்ற நிலையையும் உணர்த்துகிறது. இப்படியாக இதுவே உண்மையானதொரு பரிதாபநிலையாக இருக்கிறது. மேலும், இதுமாத்திரமே எதிர்கொள்ளவேண்டிய பயங்கரம் அல்ல. மதசார்புள்ள எதேச்சதிகாரமும் இந்த நாட்டை அச்சுறுத்துகிறது. ஏனெனில் வெறுக்கத்தக்க இதன் சர்வாதிகாரமானது முற்கால பதிவுகளின் மூலம் மிக நன்றாக தீர்மானிக்கமுடிகிறது. "ரோமானிசம்" என்பதே அந்த ஆபத்து. இருந்தாலும், இந்த ஆபத்து பொதுவாய் உணரப்படவில்லை. ஏனெனில் ரோம் தனது வெற்றியை இங்கு ஒரு தந்திரமான கலையாலும், முகஸ்துதியாலும் நிலைநாட்டுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுய நிர்வாகத்தையும், சுதந்திரமான நிறுவனங்களையும் குறித்து தான் வியந்து பாராட்டுவதாக கூறிக்கொள்வதோடு, புத்திசா-யான இந்த மாபெரும் ஜனத்தொகையால் உருவாக்கப்பட்டிருக்கும், புராட்டஸ்டன்டாரின் மாறுபாடான கொள்கைகளை பொய்யாய் புகழ்ந்து மாயையான



வரவேற்பையும் காட்டுகிறது. மேலும், அவர்களை தற்போது தன்னுடைய "பிரிந்து போன சகோதரர்" என்றும் அவர்கள் மீது தனக்கு "நிரந்தரமான நேசம்" இருக்கிறது எனவும் கூறுகிறது. மேலும் தனது போதனையை பரப்பவும், தனது செல்வாக்கை விரிவுபடுத்தவும் பொதுகல்வி திட்டத்தின் மீது தன் பசையுள்ள கரத்தை நீட்டுகிறது. அரசியல் மற்றும் மதசம்மந்தமான காரியங்களில் தனது செல்வாக்கை உணரும்படியாய் செய்கிறது. மேலும், தொடர்ச்சியாய் இந்த நாட்டுக்கு குடிபெயருகிறவர்களில் பெரும்பாலும் தன் பிரஜைகளாக இருக்கும்படியாக பார்த்துக்கொள்கிறது.

ரோமனிசத்தினால் இந்நாட்டுக்கு ஆபத்தை லாஃபாயிடி என்பவர் எதிர்பார்த்தார். இவர் ஒரு ரோமன் கத்தோ-க்கராக இருந்தபோதும், இந்த நாட்டின் சுதந்திரத்தினால் கவரப்பட்டவர். அவர் கூறியதாவது: "அமெரிக்க மக்களின் சுதந்திரமானது எப்போதாவது அழிக்கப்படுமாயின் அவர்கள் ரோம மதகுருமார்களின் கரங்களுக்குள் வீழ்ந்து போவார்கள்." ஆகவே, ரோமானிசம் மற்றும் குடியேறுகிறவர்களின் திரளான செல்வத்தி-ருந்து நாம் மாபெரும் ஆபத்தை காண்கிறோம்.

ஆனால், ஐயோ! மக்கள் சமயோசிதமாய் இதற்கொரு பரிகாரம் செய்வதாக இருக்குமானால், அது நிலைமையை இன்னும் மோசமாக்குவதாகவே இருக்கும். சமூக புரட்சிகள் இங்கு வரும்போது, அது பெருங்குழப்பம் மற்றும் வன்முறையோடு தான் வரும். அப்போது அமெரிக்காவின் சுதந்திரத்தின் மீதான அன்பும் சக்தியும் நிச்சயமாய் அதற்குள் விழுந்துவிடும். ஆகவே, கிறிஸ்தவ ராஜ்யங்களுக்கே உரிய நியதியி-ருந்து அமெரிக்கா மட்டும் விதிவிலக்காக இருக்கும் என்று எதிர்பார்ப்பது நியாயமானதல்ல. மற்றெல்லா நாடுகளைப் போலவே இதுவும் அராஜகத்துக்கும், இழி நிலைக்கும், சீரழிவுக்கும் தேவதீர்மானப்படி தண்டனைக்காக முன்குறிக்கப்பட்டிருக்கிறது. இது பாபிலோனின் ஒரு பகுதியாகவே இருக்கிறது. அநேக தலைமுறைகளாக இங்கு சுதந்திரம் போற்றி வளர்க்கப்படுகிறது. ஏற்கனவே வன்முறையோடு கூடிய குழப்பங்கள் என்றும் இல்லாத அளவுக்கு வேகமாய் அச்சுறுத்துவதோடு அவைகள் மன்னர் ஆட்சியின் வ-மை பெற்ற நிறுவனங்களால் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றன.

பல செல்வந்தர்கள் இதை பார்த்து அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கஷ்டங்கள் இங்கு தான் முதன்முத-ல் உச்சகட்டத்தை அடையக்கூடும் என்று ஓரளவுக்கு அஞ்சுகின்றனர். பல்வேறு அறிகுறிகளும், அதை வெளிப்படுத்துகின்றன. வாஷிங்டன் டி.சி.யின் தி சென்டினல் பத்திரிகையில் சில வருடங்களுக்கு முன் வெளியான ஒரு குறிப்பு கீழ்கண்டபடி கூறுகிறது:

அமெரிக்க நாடுகளி-ருந்து வெளிநாட்டில் குடியேற்றம் குறித்து "திரு. ஜேம்ஸ் கோர்டன் பெனெட் என்ற நியூயார்க் ஹெரால்ட்"ன் உரிமையாளர் கூறுகிறார்: "தேசிய பாதுகாப்பாளர் நெடுநாளாய் ஐரோப்பாவில் வசித்து வந்தார். இவர் ஒரு வெளிநாட்டவராகவே கருத்தில் கொள்ளப்பட்டார். திரு.பு-ஸர் என்ற "நியூயார்க் வோர்ல்ட்" உரிமையாளர் குறித்து கூறும்போது, இவர் பிரான்சில் தன் நிரந்தர குடியிருப்பை அமைத்திருந்தார். ஆன்ரூ கார்னக் என்ற கோட்டீஸ்வர இரும்பு மன்னன் ஸ்காட்லாந்தில் ஒரு மாளிகையை வாங்கி அதை தன் வீடாக மாற்றி வருகிறார். ஹென்றி வில்லார்ட் (வடக்கு பசுபிக் இரயில் பாதை வல்லுநர்) 8,000,000 டாலர் மதிப்புள்ள தன் உடைமைகளை விற்றுவிட்டு நிரந்தரமாய் ஐரோப்பாவிற்கு சென்றுவிட்டார். டபுள்யூ. ஆஸ்டர் நியூயார்க்கி-ருந்து லண்டனுக்கு குடிபெயர்ந்து விட்டார். அங்கு சென்று பிரம்மாண்டமான இல்லத்தை வாங்கி, இங்கிலாந்து பிரஜையாவதற்கான மனுவை சமர்ப்பித்திருக்கிறார். திரு.வான்ஆலன் என்பவர் 50,000 டாலர்களை டெமாக்ரடிக் கேம்பெயின் நிதிக்காக கொடுத்து அதன் மூலம் இத்தா-க்கான அமெரிக்க தூதுவர் பதவியைப் பெற்றுக்கொண்டு, இந்நாட்டின் காரணகாரியங்கள் யாவற்றிலும் ஒரு வெளிநாட்டினரைப் போல் மாறிவிட்டதோடு, இந்த நாடு ஒரு கண்ணியமான மனிதன் வாழ தகுதியற்றதாக இருக்கிறது என்றும் அறிவித்தார்."

ஆனால், உலகத்தின் எந்த ராஜ்யத்தின் பாதுகாப்பும், தற்காப்பும் விருதாவாய் போய்விடும். வரப்போகிற பயங்கரமான உபத்திரவத்தோடு தாங்கள் போராட வேண்டியிருக்கும் என்பதையும் மகாபெரும் சக்தியோடு தாங்கள் அடக்கி வைக்கப்பட்டவர்களாகி விட்டபடியால் எவ்விதத்திலும் சமாளிக்க இயலாது என்பதையும் உணர்ந்தவர்களாய் தற்போது எல்லோரும் பயத்தோடும்,



அலறலோடும் நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். அதோடு மட்டுமன்றி "அப்போது நரரின் மேட்டிமை தாழ்ந்து, மனுஷரின் வீராப்புத் தணியும்." "அந்நாளில் (தற்போது மிக அருகாமையில், வாசலருகே வந்துவிட்டது) மனுஷன் பணிந்து கொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும், துரிஞ்சில்களுக்கும் எறிந்து விடுவான். அவருடைய மகிமை பிரஸ்தாபத்திற்கும், பயங்கரத்திற்கும் விலகி, கன்மலைகளின் கெபிகளிலும், பூமியின் குகைகளிலும் புகுந்து கொள்வார்கள்." ஏசா 2:17-21.

"எல்லா கைகளும் ச-த்து, எல்லா முழங்கால்களும் தண்ணீரைப் போல் தத்தளிக்கும். இரட்டை உடுத்திக் கொள்வார்கள்; தத்தளிப்பு அவர்களை மூடும்; எல்லா முகங்களும் வெட்கப்படும், எல்லாத் தலைகளும் மொட்டையிடப்படும். தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்துவிடுவார்கள்; அவர்களுடைய பொன் வேண்டா வெறுப்பாயிருக்கும்; கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும், அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்க மாட்டாது; அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாக்களைத் திருப்தியாக்குவதும் இல்லை, தங்கள் வயிறுகளை நிரப்புவதும் இல்லை; அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருந்தது." எசே 7:17-19

எந்த அரசாங்கமும் கொடுக்கும் பாதுகாப்பானது மிகவும் குறைந்த அளவிலேயே உபயோகமானதாய் இருக்கும். ஏனெனில், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும், அவர்களது மூடத்தனத்தின் பலனும் அவர்கள் மீது படிந்துவிட்டிருக்கிறது. தங்களது பலத்தின் பெருமையால் கோபாக்கினையின் நாளுக்கு எதிரான கோபாக்கினையை சம்பாதித்துக்கொண்டனர். வெகுசிலருடைய உயர்வை மட்டும் சுயநலத்தோடு நாடினர். ஏழ்மை, வறுமையி-ருப்போரின் கூக்குரலைக் குறித்து சற்றும் அக்கறையின்றி இருந்தனர். ஆனால், அவர்களது கூக்குரல் சேனைகளின் கர்த்தருடைய காதுகளுக்கு எட்டியது. அவர் அவர்களது காரியங்களை ஆதரித்து, மேற்கொண்டபடியால் திட்டமாய் கூறுகிறார் : "பாவத்தினிமித்தம் உலகத்தையும், அக்கிரமத்தின் நிமித்தம் துன்மார்க்கரையும் நான் தண்டித்து, அகங்காரரின் பெருமையை ஒழியப்பண்ணி, கொடியரின் இடும்பைத்

தாழ்த்துவேன். புருஷனைப் பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூர்வமாக்குவேன்." ஏசா 13:11,12

ஆகவே, கடைசியாக வரப்போகும் அழிவினால் ஒடுக்கப் பட்டவர்களுக்கு விடுதலை கிடைக்கும் என்ற நிச்சயம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. திரளான ஜனங்களின் வாழ்வு அப்போது ப-யிடப்படாதது மட்டுமன்றி சமுதாயத்தில் நிலவும் பாகுபாடும் நீடிக்காது.

உண்மையாகவே இது தேசங்களின் குழப்பத்தைக் குறித்து முன் அறிவிக்கப்பட்ட துயரமான காலமாகும். அதிருப்பதியடைந்துள்ள திரளானவர்களின் குரலானது மிகச்சரியாக கொந்தளிக்கிற கடலுக்கு ஒப்பிட்டு கூறப்பட்டிருக்கிறது. மேலும், சடுதியாய் அழிவைக் குறித்த பயம் சிந்தனையாளர்களின் இதயத்தையும் சோர்வடையச் செய்கிறது. ஏனெனில், வானத்தின் வல்லமைகள் (இப்போதைய ஆளுகிற அதிகாரங்கள்) பயங்கரமாய் அசைக்கப்படுகின்றன. உண்மையாகவே பார்ப்போமாகில் சம்பவிக்கும் காரியங்களின்படி, "இதோ, அவர் மேகங்களுடன் வருகிறார்" என்ற வேதவாக்கியத்தை நினைவுப்படுத்தி மனுஷ குமாரனின் பிரசன்னம் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது என்பதை மறைமுகமாய் சுட்டிக்காட்டப்படுகிறது.

பேராசிரியர் ஹெரான் என்பவர் சான்பிரான்சிஸ்கோவில் நடந்த "தேசத்தின் கிறிஸ்தவ எழுப்புதல்" என்ற கூட்டத்தில் கொடுத்த சொற்பொழிவில் கூறியதாவது : "கிறிஸ்து இங்கு இருக்கிறார் ! மேலும், இன்றே நியாயத்தீர்ப்பு ! பாவத்தை குறித்த நமது சமுதாய உணர்வும், மனசாட்சியின் மீது இருக்கும் தேவனின் பலமான கரமும் இதை காட்டுகிறது! மனுஷனும், சமூக அமைப்புகளும் அவரது போதனையால் தற்போது நியாயம் தீர்க்கப்படுகின்றனர் !"

ஆனால், பூமியும் (சமுதாய அமைப்பு) வானமும் (ஆவிக்குரிய அதிகாரங்களும்) அசைக்கப்படுவதை கூர்ந்து கவனிப்பவர்கள், யுகங்களின் தெய்வீக திட்டங்கள் நடந்து வருவதையும் உணர்ந்து இந்த பயங்கரமான அசைவுகளே இந்த பூமி இதுவரை கண்டிராததும் இனி ஒருபோதும் சம்பவியாததுமான கடைசியானதாக இருக்கும் என்ற நிச்சயத்தையும் பெற்று மகிழ்வார்கள். எப்படியெனில் அப்போஸ்தலர் பவுல் நமக்கு நிச்சயித்திருக்கிறவண்ணம், அசைக்கப்படுகிறவைகள் (தற்கால சமூக ஏற்பாடுகள்) அகற்றப்படும், அசைக்கமுடியாத தேவனுடைய ராஜ்யம், ஒளியின் ராஜ்யம் மற்றும் சமாதானம் ஆகியவை மட்டுமே நிலைத்து நிற்கும். ஏனெனில், நம் தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார். அவரது கோபாக்கினையின் நாளில் அவர் எல்லா தீய மற்றும் அநீதியின் முறைமைகளை பட்சிப்பதுடன் சத்தியத்தையும், நீதியையும் இந்த பூமியில் ஸ்திரமாய் நிலைநிறுத்துவார்.



### "சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம், சமாதானம்" என்ற கூக்குரல்

தேசங்களின் மீதான தேவனுடைய வெளிப்படையான நியாயத்தீர்ப்பைத் தாங்க முடியாதிருக்கிறது. தற்போதைய சகல அமைப்புகளின் மீதும் ஏராளமான சாட்சியங்கள் திரளான மக்களிடமிருந்து வந்து அழுத்துவதை தாங்கமுடியாமலும் இருக்கிறது. சரியான தீர்ப்பையும் அதற்கான தண்டனையையும் ஏறக்குறைய உலகளாவிய அச்சத்துடன் எதிர்பார்ப்பதாலும், அநேகர் தங்கள் பயத்தை மறைக்க, சமாதானமே இல்லாதிருந்தும் "சமாதானம்! சமாதானம்!" என்று முழங்குகின்றனர்.

கிறிஸ்தவ ராஜ்யங்கள் யாவுமே பங்குபெற்ற இந்த ஒரு அறிவிப்பானது பால்டிக் கால்வாய் திறப்பு விழாவின் போது கொடுக்கப்பட்டது. தற்போதைய ஜெர்மன் சக்கரவர்த்தியின் பாட்டனாரால் இந்த கால்வாய் திட்டமிடப்பட்டது. இவரது தகப்பனார் ஜெர்மனியின் வியாபார மேம்பாட்டுக்காகவும், கப்பற்படைக்காகவும் இதன் வேலைகளை துவங்கினார். எப்போதும் தனது வாள் ஒன்றையே என்றுமே சமாதானத்துக்கு மாறாத (தடையாக) உறுதுணையாகவும், அதனுடன் கூட பீரங்கிகளும், வெடிமருந்துகளுமே சரிசமமாய் பதில் கொடுக்கும், இது தனக்கிருக்கும் ஆற்றலை மாபெரும் அணிவகுப்பால் நிலை நிறுத்தும் என்ற எண்ணமுடையவராக தற்போதைய சக்கரவர்த்தி இருக்கிறார். இதன்படி ஜூன் 20, 1895ல் மாபெரும் கப்பற்படை அணிவகுப்புக்கு (சமாதான பிரியர்கள்) தங்கள் பிரதிநிதிகளாக அவர்களது போர் கப்பல்களை பால்டிக் கால்வாய் வழியாய்

அனுப்பும்படி எல்லா தேசங்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

இதற்கு செவிசாய்த்து 100க்கும் மேற்பட்ட கப்பல்கள் அணிவகுத்து வந்தன. இதில் தொழில்நுட்பப்படி போர் கப்பல்கள் என்று அழைக்கப்படும் பிரம்மாண்டமான 26 கப்பல்களும் அடங்கும். இவை முழுவதும் போர் ஆயுதங்களால் நிரப்பப்பட்டு, மணிக்கு 17 மைல் வேகத்தில் செல்லக்கூடியனவாய் இருந்தன. லண்டனைச் சேர்ந்த ஒரு பார்வையாளர் கூறுகிறார் : "சில மணி நேரத்திலேயே தற்போதிருக்கும் இந்த துறைமுகத்தை தரைமட்டமாக்கவும் அல்லது இத்தனை சுறுசுறுப்பான, வீரியமான இவ்வுலகத்தின் வர்த்தகமானது ஆழ்கட-ல் மூழ்கிவிடக்கூடிய அளவுக்கு பலமான சக்திகளின் ஒருங்கிணைப்பாய் இருப்பதை நம்புவதற்கே கடினமாக இருக்கிறது. இது மட்டுமின்றி இந்தப்படைகளை எதிர்க்கும் எண்ணம் கூட இவ்வுலகின் எந்த கப்பற்படைக்கும் வரமுடியாது என்பதும் உண்மையே. இதையே ஐரோப்பா தனது ஆதார வஸ்துவாக கருதுகிறது. மட்டுமன்றி, கடல் மீது தற்போது தனது பலத்தை யாரும் எதிர்க்க முடியாது என்று மிகவும் தைரியமாக தன்னை குறித்து சொல்-க்கொள்ளவும் கூடும்... கெயில் என்ற இடத்தில் கூடிய இந்த கப்பற்படையே போரிட தேவையான அதிகபட்ச எல்லா சக்தியும் சேர்ந்து உருவானதாக இருக்கும். எனினும் வெடிப்பொருட்களின் கையிருப்பு தீர்ந்துவிட்டால், அதற்கு மேல் போரை நீட்டிக்க இயலாது."

இந்த கப்பல்களும் அவைகளின் போர் தளவாடங்களும் பல ஆயிரம் மில்-யன் டாலர் பெருமானமுள்ளவை. மரியாதையினிமித்தம் 2500 குண்டு முழங்கும். இதற்கு ஒரு நொடியில் செலவாகும் வெடிமருந்தின் மதிப்பு பல ஆயிரம் டாலர்கள் ஆகும்; மேலும் பெருமதிப்பிற்குரிய தங்கள் விசேஷ விருந்தினரின் கேளிக்கைளுக்காக ஜெர்மன் மக்கள் 2,000,000 டாலர்களை செலவிட்டனர். இந்த மாபெரும் கால்வாயின் திறப்பு விழாவில் நடந்த பன்னாட்டு கடற்படை அணிவகுப்பில் "சமாதானத்தின் புதிய சகாப்தம்" என்று அதனைக் கூறி ஜெர்மன் சக்கரவர்த்தியும் வெளிநாட்டு பிரதிநிதிகளும் தங்கள் பேச்சுக்களை தொடர்ந்தனர். ஆனால், சமாதானம், சமாதானம் என்று மன்னர்களும், பேரரசர்களும் பிரகடனப்படுத்திய அவர்களது வசீகரமான சொற்பொழிவுகளும்



மற்றும் பீரங்கிகளின் முழக்கமும் தீர்க்கதரிசன செய்தியான "பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்ற வசனம் நிறைவேறியது என்று ஜனங்கள் விவரிப்பதற்கு பதிலாக தங்களது வார்த்தையை எதிர்ப்பவர்கள் மீது பழிவாங்கும் எச்சரிக்கையாகவே இருந்தது. இது சோஷ-ச கொள்கைகளை ஆதரிப்பவர்களுக்கு எவ்வித சமாதானத்தையும் அளிப்பதாக இல்லை. சமுதாய ஒழுங்கின்மைக்கு எந்த நிவாரணத்தையும் அது அறிவுறுத்தவில்லை. வாழ்வில் எந்த வாய்ப்புகளும் அற்ற ஏழை ஜனங்களின் பாரத்தை குறைக்கவோ அல்லது அவர்களது கவலைகளை நீக்கி சந்தோஷப்படுத்தவோ பூமியில் எந்தவித நன்மையான காரியத்திற்கும் ஒரு உத்திரவாதமும் கொடுக்கப்படவில்லை. அல்லது எந்தவித நன்மையையாவது எவ்விதத்தில் தேசங்களிடையாவது அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் இடையிலாவது தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்வது என்றுகூட சுட்டிக்காட்டவும் இல்லை. ஆகவே, இது ஒரு மாபெரும் அர்த்தமற்ற, பெரிய, துணிச்சலான தேசிய அளவிலான ஏமாற்றலான காரியம் என்றே மக்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மாபெரும் அணிவகுப்பை குறித்து சிந்தனையாளர்களின் கண்ணோட்டத்தை லண்டனின் ஸ்பெக்டேட்டர் கீழ்கண்ட உண்மை விமர்சனத்தில் கூறுகிறது :

"இந்த சூழ்நிலையின் கடுமையை மறைத்திருக்கும் வெளித்தோற்றம் மிகவும் தெளிவாய் இருக்கிறது. இது சமாதானத்துக்கும் நிலையான தொழில்களுக்குமான ஆடம்பரமானதொரு விழா. ஆனால், இந்த மாபெரும் கடற்படை அழிவுக்கும் போருக்கும் மாபெரும் சக்திகள் மற்றும் பொருட்செலவினால் உருவானதாக இருக்கிறது. படுகொலைக்கான ஒரு மாபெரும் இயந்திரமாக இல்லாவிட்டால் இதனை பெரும் போர்க்கப்பல் என்று கூறுவதில் அர்த்தமே இல்லை. ஆனால் ஒரே ஒரு வாசகம் மட்டும் இந்த சமாதான படையின் ஆடம்பர தோற்றத்தை முழுமையாய் விவரிக்கும் . அதாவது இதை எதிர்க்க யாராவது கூடுவாராகில் ஒரேநாளில் பூமியிலுள்ள எந்த துறைமுகத்தையும் தரைமட்டமாக்காவோ அல்லது உலகின் கடல் வாணிபத்தை நாசப்படுத்தி,கட-ன் அடிமட்டத்தில் போடவோ

இதனால் முடியும். நல்லெண்ணம் என்று சொல்- நடத்தப்பட்ட இந்த ஆடம்பர விழாவுக்குப்பின் எத்தனை ஆழமான மனித வெறுப்புகள் மறைக்கப்பட்டன! பிரான்சு நாட்டின் கடற்படையின் ஒரு பிரிவும் இதில் அடங்கும். இதன் அதிகாரிகள் தங்கள் நாட்டை கூறுகளாக பிரித்துவிட்ட பெருமிதத்துடன் இருக்கும் சக்கரவர்த்தியின் மீது பழிவாங்கும் ஆர்வத்துடன் இருந்தனர். மற்றொன்று ரஷ்யர்களுடையது. இவர்களும் கூட இத்தனை வீண் பகட்டுடன் மரியாதை செலுத்தும் இந்த சக்தியை தங்களது மாபெரும் எதிரி என்று, சக்கரவர்த்தியின் ஆபத்து நிறைந்த இந்த கடற்படையை ஆதரிக்கவேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்ட அன்று விடிய-லேயே உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். மூன்றாவது உள்ளது ஆஸ்திரியர்களுடையது. இவர்களது தலைவர் கால்வாய் உருவான பகுதியி-ருந்து விரட்டப்பட்டவர். இந்த பகுதியின் மீது தனக்கிருந்த பாதி உரிமையினால் தன்னல ஆதாயத்தை தேடியதின் மூலம் இந்த கால்வாயின் முழுநீள வழியும் திருப்பிவிடப்பட்டது. மேலும் டென்மார்க்கின் கப்பல்களும் அங்கு இருந்தன. தற்போதைய உரிமையாளர்களால் ஹோஸ்டன் நகரம் இவர்களிடமிருந்து பிரித்து எடுக்கப்பட்டது. ஹாலந்து நாட்டு படையும் அங்கு இருந்தது. ஒருநாள் அல்லது மறுநாள் வேறொரு வெற்றியாளர் மூலமாய் ஜெர்மன் தனது குடியேறிய பகுதிகள், பொருளாதாரம் மற்றும் கடல்வழி வாணிபங்கள் மீது ஒரு பெரிய அடியை பெற்றுக்கொள்ளக்கூடும் என்று இந்த மக்கள் ஒவ்வொருவரும் எதிர்பார்த்தனர். சக்கரவர்த்தியும் சமாதானத்தை பற்றி பேசினார், கப்பற்படை தளபதிகளும் சமாதானத்தையே எதிர்பார்த்தனர். உலகின் எல்லா பத்திரிகைகளும் ஒருமித்த குரலாய் சமாதானத்தையே எடுத்துரைத்தன. ஆனால், அந்த விழாவில் பேசிய பேச்சுக்கள் எல்லாமே சமீபத்திய போரையும் அல்லது வெகுசமீபத்தில் இனி சம்பவிக்கப்போகிற போரையும் குறித்ததாகவே இருந்தது. அதுமட்டுமின்றி இந்த உலகிலேயே இத்தனை பிரம்மாண்டமான, முற்றிலும் ஊழல் நிறைந்த போ-த்தனமானதொரு கோலாகலமான விழா நடந்ததே இல்லை."

ஈவினிங் போஸ்ட் என்கிற நியூயார்க் பத்திரிகையும் கீழ்கண்டவாறு விமர்சிக்கிறது:



"இந்த பெருத்த போர் கப்பல்களின் கூடுகையில் சமாதானத்திற்கு மாறான நோக்கம் இருந்தது வெளியானது. ஒவ்வொரு நாடும் வெறும் மரியாதையின் நிமித்தம் மட்டும் தங்களது பெரிய கப்பல்களையும், சக்தி வாய்ந்த துப்பாக்கிகளையும் அனுப்பிவைக்கவில்லை. அதோடு கூட தேசிய அளவிலான தங்கள் வ-மையை காட்ட இங்கிலாந்து கடற்படை தன்னிடமிருக்கும் மிகவும் சக்திவாய்ந்த 10 கப்பல்களை ஒரு மாதிரிக்காக அனுப்பிவைத்தது. யாரோ ஒருவர் கூறுகிறார்: ஓ நாடுகளே, ஏற்றகாலத்தில் எச்சரிக்கையாய் இருங்கள், இந்த கடல்ராணியை கண்டு கிளர்ச்சி அடையவேண்டாம். இதே போல் பிரெஞ்சு மற்றும் ரஷ்யாவின் கடற்படை பிரிவுகளும் விருந்தளிப்பவரான வில்-யம்ஸ் இது நட்புக்கான முன்னேற்றமாக இருக்கும் என்று நினைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக தன் அச்சுறுத்தும் கடும் பார்வையை தரித்துக்கொண்டது. நமது அமெரிக்க கப்பல்களும் கூட இந்தப்படையில் சேர்ந்தன. ஒவ்வொரு தளத்திலும் அதிகாரிகளும் மாலுமிகளும் அடங்கிய காட்சி அநேகரை கிளர்ச்சியூட்டியது. கடலுக்கு அப்பால் ஒரு கடற்படை உருவாகிறது என்பது குறித்து அலட்சியமாக இல்லாது இருப்பது நல்லது என்று அகந்தையான ஐரோப்பியர்களுக்கு பாடம் கற்றுக்கொடுக்க இதுவே தக்க சமயமாகவும் இருக்கிறது.

"ரஷ்யா மற்றும் பிரெஞ்சு நாட்டின் விசேஷித்த வானில் தாக்கும் சிறப்பு போஃபர் வகை பீரங்கிகளும் சேர்க்கப்பட்டன. உலக சமாதான பிரியரும், விசேஷமாக ஜெர்மனியை நேசிப்பவர்களுமாகிய இவர்கள் உண்மையிலேயே வேடிக்கையானவர்கள், பிரான்சின் சில காரியங்கள் மேல் கடும் கோபம்.....

"ஆனால், அதிக தெளிவான வஞ்சகங்கள் இந்த கெயில் கால்வாய் திறப்புவிழாவில் காணப்பட்டன. சர்வதேச போக்குவரத்துக்காகவே இது அர்ப்பணிக்கப்பட்டது. ஆகவே, இது ஒரு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த எல்லா சந்தோஷத்துக்கும், பெருமைக்கும் இடமாக இருந்தது. ஆனால் ஜெர்மன், பிரான்சு இன்னும் பிற வல்லரசு நாடுகள் உண்மையிலேயே இந்த சர்வதேச போக்குவரத்தை குறித்து என்ன நினைத்தன? 20 ஆண்டுகள்

கடந்துவிட்ட இந்த நிலையில் ஏன் தங்கள் நரம்புகளை முறுக்கேற்றி, தேசங்களிடையிலான வியாபார பரிமாற்றங்களை தடுக்கவும், முடக்கவும் முடிந்தவரை கடும் முயற்சி செய்கின்றன..... இந்த தடை செய்யும் நோக்கமும், வியாபார பகைமையும் பொறாமையும் ஒழிந்துபோகும் வரை அல்லது காரணமற்ற வீண் செலவுகளை தன்மேல் சுமத்திக்கொள்ளாதவரை சமுத்திரங்களுக்கு இடையிலான கால்வாய்கள் எத்தனை வேண்டுமாயினும் நீங்கள் திறந்து கொள்ளலாம். ஆனால், உங்கள் சர்வதேச நல்உறவு மற்றும் சமாதானத்தின் மீது உள்ள பொதுவிருப்பம் ஆகியவற்றை குறித்த உங்கள் பேச்சுக்களினால் அறிவுபூர்வமான மக்களை ஏமாற்றிவிடமுடியாது. ஏனெனில், இவை யாவுமே வஞ்சகத்தின் ஒரு பகுதியே என்பது தெளிவாய் தெரிகிறது."

தி சிகாகோ க்ரானிக்கல்ஸ் என்ற பத்திரிகை கூறுவதாவது:

"கெயி-ல் நடந்த ஆடம்பர பேரணி ஒரு சுத்தமான காட்டுமிராண்டித்தனம். சமாதானத்துக்காக நடத்தப்பட்ட விழா, போருக்கான சரியான எடுத்துக்காட்டாகவே அமைந்திருந்தது. அழியக்கூடிய பகைவர்கள் யாவரும் அங்கு கூடி வலுக்கட்டாயமான நட்புறவின் பின்னால் தங்கள் பகைமையை மறைத்துக் கொண்டு அவர்கள் தங்கள் ஆயுதபலத்தை காட்சி பொருளாக்கினர். போருக்காக திட்டமிட்டப்பட்ட பீரங்கி மரியாதை உபசாரத்திற்காய் முழங்கின. இந்த ஆயுத பேரணியை புகழ்ந்து பாராட்டிய பேரரசர், இந்த கெயில் துறைமுகத்தில் கூடியிருக்கும் சக்திமிக்க ஆயுதங்கள் யாவும் சமாதானத்தின் சின்னமாகவும், ஐரோப்பிய மக்களின் முன்னேற்றத்துக்கான ஒத்துழைப்பின் சின்னமாகவும், ஐரோப்பிய நாகரீக வளர்ச்சிக்கான இயக்கத்தை பராமரிக்கும் சின்னமாகவும் இருக்க பணிபுரியவேண்டும் என்று கூறினார். ஆனால் உண்மை இந்த தத்துவத்துக்கு மாறாகவே இருந்தது. துப்பாக்கி வைத்திருப்பவர் அதனை சுடுவதற்கு உபயோகிக்கவே விரும்புவார். போருக்கு தகுதிபடைத்த நாடுகள் போரிட விரும்புவர். ஐரோப்பிய சமாதானத்துக்கு உண்மையில் இருக்கும் இன்றைய ஒரே அச்சுறுத்தல் ஒவ்வொரு ஐரோப்பிய தேசமும் போருக்கு தயாராகிவிட்டதே.

"கெயில் கால்வாயை உருவாக்கியது நாகரீக வளர்ச்சிக்கு ஒரு



மகத்தான சேவையாகும். இதன் விழாக் கொண்டாட்டம் காட்டுமிராண்டித்தனத்துக்கு படைக்கப்பட்ட காணிக்கை. உண்மையில் கடல் ஆதிக்க நாடுகளின் வாணிபத்தை ஊக்கப்படுத்தவே உருவாக்கப்பட்டது. ஆனால் இந்த விழாவை கொண்டாட கூடியிருந்த போர் கப்பல்களின் தோற்றம் வாணிப நாசகாரி என்றே அறியப்பட்டன."

செயிண்ட் பால் குளோப் கூறுகிறபடி வியாபாரத்தொழிலைக் காட்டிலும் அதற்கு மாறாக இராஜகம்பீரமும், தனிப்பட்டவர்களின் அனுகூலமுமே கெயி-ல் காட்சிப்பொருளாக இருந்தது. மேலும் அது கூறுகிறதாவது :

"நாகரீக வளர்ச்சியில் இந்த போர் கப்பல்களுக்கு என்ன இடம் கொடுக்கப்படுகிறது? பெரும் கடல் வழியில் விரட்டியடிக்க எந்த கடற்கொள்ளை கப்பல்கள் இருக்கின்றன? எத்தனை தரக்குறைவான, அநாகரீக நாடுகள் இருக்கின்றன? போர் கப்பல்களின் கதிர்விளக்குகளை இதன்மீது வீசி நவநாகரீக வளர்ச்சியின் ஒரு வெட்டவெளிச்சமான செல்வாக்கை இவர்களுக்கு நாம் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், தேசங்கள் யாவும் தங்கள் சேனைகளை ஒன்றுகூட்டி முழுமனதாய் இந்த நேரத்தில் நாகரீக முன்னேற்றத்துக்காகவே தாங்கள் செயல்படுவதாக கூறுகின்றனர். இருந்தாலும் கொடூரமான துருக்கியரை ஐரோப்பாவை விட்டு விரட்டியடிக்கும் காரணத்துக்காக கெயி-ல் கூடிய எந்த ஒரு அரசாங்கமும் மற்றவர்களுடன் கூட்டாக ஒரு படையை உருவாக்க நினைக்கும் அளவுக்கு துணியவில்லை."

"கெயி-ல் கூடிய எந்த இரண்டு தேசங்களுக்கோ அல்லது மகத்தான போர் கப்பல்களுக்கோ இடையேயான கருத்து வேறுபாட்டினால் நாகரீக வளர்ச்சிக்கு எவ்வகையில் அது உதவியாய் இருக்கக்கூடும்? ஆனால், அதற்கு மாறாக இந்த போர் தளவாட கப்பல்கள் இன்னும் கூட தொடர்கிற காட்டுமிராண்டித்தனத்துக்கு ஒரு அடையாள சின்னமாகவும், சாட்சியாகவும் அல்லவோ இருக்கின்றன? எந்த ஒரு தேசத்தின் மோசமான காட்டுமிராண்டித்தன தோற்றம் அதனுடைய போர் ஆயுதங்களே ஆகும். தங்களுக்கு மேல் இருக்கும் அதிகாரங்களுக்கு தாங்களே தாழ்மையுடன் அடங்கியிருக்கும் பிரஜைகளாக மாற்றப்படவும், இந்த பாவப்பட்ட

ஜனங்கள் மீது அபரிவிதமான வரிகளை இந்த ஐரோப்பிய நாடுகள் விதிக்கவும் காரணமாகிவிடுகிறது."

தி மினிபோ-ஸ் டைம்ஸ் என்ற பத்திரிக்கை இந்த கெயி-ன் அற்புதமான பொதுக்காட்சியை "அடக்குமுறையின் பொதுக்காட்சி" என்று கூறி கீழ்க்கண்டவாறு விமர்சிக்கிறது :

"உண்மையில் இந்த மகத்தான கடல்வழி திறப்பானது அதன் வியாபார முன்னேற்றத்திற்கு உதவும் என்று மதிப்பிடுவதைக் காட்டிலும் யுத்த தளவாடங்களின் விளம்பர கொண்டாட்டமாகவே அது இருந்தது. உலகில் நாகரீக வளர்ச்சியடைந்த நாடுகளுக்கே இவ்விதமான பிரம்மாண்டமான ஏற்பாடுகள் அதுவும் இதன் இராணுவ செயல்பாட்டுக்கும், அளவில்லா கடற்படைக்கும் மக்களது செலவில் பராமரிக்கப்படுதல் அவசியம் என்றால் கொலம்பசின் காலம் முதல் அல்லது அவரது பெரிய கண்டுபிடிப்புகளினாலேயோ ராஜரீக அரசியல் சபையில் எந்த முன்னேற்றமும் அடையவில்லை எனலாம். ஆகவே, இப்படிப்பட்ட கடற்படை தான் அவசியம் என்கிறபோது, சுதந்திரம் என்பது அசாத்தியமாகவும், மனுக்குலத்துக்கு கொடுங்கோலாட்சியே அவசியம் என்ற சூழ்நிலையும் உருவாகிவிடுகிறது."

சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம், சமாதானம் என்று தங்கள் பிரதிநிதிகள் மூலம் தேசங்கள் ஒருமித்து எழுப்பும் இந்த பெருத்த சத்தம் எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் வந்த தேவனுடைய வார்த்தைகளை வலுக்கட்டாயமாய் நினைவுகூறச் செய்கின்றன. வசனம் கூறுவதாவது:

"அவர்களில், சிறியோர் முதல் பெரியோர் மட்டும், ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர்; இதுவுமல்லாமல் தீர்க்கதரிசிகள் முதல் ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர். சமாதானமில்லாதிருந்தும் : சமாதானம், சமாதானம் என்று சொல்-, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள். அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆதலால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங் காலத்தில் இடறுண்டு போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." எரே *6:13-15*



இந்த சர்வதேச சமாதான அறைகூவலானது வஞ்சகம் என்ற முத்திரையுடைய முகத்துடன் இருப்பது, ஜான் ஜி. விட்டியரின் தற்போதைய சமாதானத்தின் நிலையை தெளிவாக வர்ணிக்கும் வார்த்தைகளை நினைவுகூற வைக்கிறது.

"ஐரோப்பாவில் பெருத்த சமாதானம்! அந்நிலையே ஆளுகிறது
டைபர் மலையி-ருந்து டேன்யூப் சமவெளி வரை!"
அப்படிக் கூறுகிறவர்கள் அவள் ராஜாக்களும் ஆசாரியரும்;
அப்படிக் கூறுகிறார்கள் பொய்யரான நம் கால தீர்க்கதரிசிகள்.

"போய் செவிகொடுக்கும் காதுகளை பூமியின் மேல் வை ;
சீரான அணிவகுப்பின் காலடி ஓசையைக் கேள்,
பீரங்கிகளின் சக்கரம் உருள்வதையும்,
கொலை பாதக துப்பாக்கிகளின் வெடி முழக்கமும்,
இரவில் எச்சரிக்கும் காவலாளியின் குரலும்,
பெரிய அறைகளிலும், குடிசையிலும் துல்-யமாய்
கேட்கும் ஒற்றனின் காதும்,
துருவக்கடல் முதல் மத்திய சதுப்பு நிலம் வரையில்
நாடு கடத்தக்கட்டவரின் மரண ஓலங்கள்,
தாளிட்ட சிறையும் போர் கப்ப-ன் சங்க-களும்
தூக்கு மரமும் அதன் கறையுடன் புகைந்து கொண்டிருக்கிறது!
அடங்கிவைக்கப்பட்ட அடிமையின் நிசப்தம், ஒழுங்கும்
இருளான நிலவறைகளிலும், கல்லறைகளிலும் சமாதானம்!
இளவரசரும் கெய்சரும், ஆசாரியரும் சக்கரவர்த்தியும்
பேசுகிறபடி இதுதான் சமாதானமானால்,
சிந்தியுங்கள் போர் என்பது என்ன?

"உன் மேன்மையான நாட்களின் கண்டிப்பான கட்டியக்காரன் ,
உனக்கு முன்பாக உம் வழியை ஆயத்தப்படுத்தவும்
ஸ்நானகரின் சுதந்திரத்தின் நிழல் வெறுத்த (பயந்த)
ரோமஅங்கி அணிந்தவரே பலவந்தப்படுத்த வேண்டும்
ரத்தம் கொட்டும் பாதங்களுடன் வனாரந்தரத்தில் !
ஓ, அதன் குரல் காதை கிழித்துவிடக்கூடும்
இளவரசரும், ஆசாரியரும் அதை கேட்கும்போது எபிரேய
ஞானியின் ஒரு அழுகுர-ன்படி மனந்திரும்பு!
தேவனுடைய ராஜ்யம் அருகே நெருங்கியது."

அ அ

## அத்தியாயம் 6

# மகா நீதிமன்றம் முன் பாபிலோன் அவளது குழப்பம்-மதசம்பந்தமானது

கர்த்தரால் அறியப்பட்ட, மெய்யான சபைக்கு பாபிலோனின் நியாயத் தீர்ப்பில் பங்கில்லை - கிறிஸ்தவ தேசங்களின் சமய சூழலானது அரசியல் சூழ்நிலைக்கு எதிராய் எந்த நம்பிக்கையையும் காண்பிக்கவில்லை - மாபெரும் குழப்பம் - இராணுவத்தை நடத்துவதற்கான பொறுப்பு மதகுருவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது - மாபெரும் சீர்திருத்த ஆவி அழிந்து போனது - பாதிரியாரும் பொதுமக்களும் ஒரே நிலையில் இருக்கின்றனர் - விருப்பத்துடன் எதிர்பார்க்கப்படும் குற்றச்சாட்டுக்கள் - ராணுவம் - உத்தேசிக்கப்பட்ட சதி - தேடிச்செல்லும் முடிவு - பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள் - சமாதான உடன்பாட்டிற்கான பொதுவான எண்ணம் - கிறிஸ்தவ தேசங்களின் மத நிறுவனங்களுக்கு எதிராக நியாயத்தீர்ப்புச் செல்லுதல்.

*"பொல்லாத ஊழியக்காரனே, உன் வாய்ச்சொல்லைக் கொண்டே உன்னை நியாயந்தீர்க்கிறேன்."(லூக் 19:22)*

**த**ற்போதைய நியாயத்தீர்ப்பு மகா பெரிய பெயர் கிறிஸ்தவ சபைக்கே என்று நாம் கருதுகிறபோது, தெரிந்தெடுக்கப்பட்டதும், மகா மேன்மையானதும், தேவனுக்கும் அவரது சத்தியத்துக்கும் தங்களை ஜீவ ப-யாக ஒப்புக் கொடுத்ததுமான கிறிஸ்துவின் உண்மை சபையும் கூட இந்த வஞ்சகமும் மூர்க்கமுமான சந்ததியாருக்கு மத்தியில் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. உலகத்தாருக்கு இவர்கள் உடன்படிக்கை செய்த சபையாகத் தெரியமாட்டார்கள். ஆனால் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும் தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும்

இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுத்து தீர்ப்பு செய்கிற தேவனால் தனிப்பட்ட முறையில் அறியப்பட்டவர்கள். எத்தனை விஸ்தாரமாய் அவர்கள் சிதறியிருந்தாலும் ஒரு வேளை களைகளுக்கு நடுவே நிற்கும் கோதுமையைப் போல் தனித்திருந்தாலும் அல்லது பிறரோடு கூடியிருந்தாலும் தேவனுடைய கண் அவர்கள் மீது எப்போதும் நோக்கமாய் இருக்கும். உன்னதமானவரின் மறைவி-ருக்கிறவர்கள் (பரிசுத்தப்படுத்தப்பட்டு முழுமையாய் தேவனுக்கென்று ஒப்புக் கொடுக்கப்பட்டவர்) சர்வ வல்லவருடைய நிழ-ல் தங்குவார்கள். உண்மையில்லாமல் வெறும் அவரது பெயரை மட்டுமே சுமந்திருக்கும் மகாபெரிய சபைகள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பில் பங்குபெறுவர். (சங் 91:14-16) ஆகவே பரிசுத்தவான்களுக்கு மகா பாபிலோனின் நியாயத்தீர்ப்பில் பங்கில்லை. அவர்கள் அதற்கு முன்பாகவே அறிவு பெற்று அவளைவிட்டு வெளியே வந்தவர்கள். (வெளி 18:4) இந்த கூட்டத்தாரே சங்கீதம் 91லும் 46லும் ஆசீர்வாதமாய் ஆறுதல்படுத்தப்படுவதும் கூறப்பட்டிருப்பவர்களும் ஆவர். வெறும் சம்பிரதாய, போ-யான தெய்வீக காரியங்களில் இருப்பவர்களுக்கு மத்தியில் கர்த்தருடைய விழிப்புள்ள கண்கள் அவரில் அன்பு கூறுகிறவர்களை பகுத்துணர்ந்து, அவர்களை புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்களண்டையில் கொண்டு போய் விடுகிறார். அவர்களுடைய இருதயம் அவருடைய சத்தியத்திலும் அவரது அன்பிலும் களிகூறும். “கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்.” (2 தீமோ 2:19) கர்த்தர் தெரிந்துகொண்ட சீயோனே அவரது கணிப்பில் உண்மையான சபையாகிறது. (சங் 132:13-16) இவர்களைக் குறித்தே “சீயோன் கேட்டு மகிழ்ந்தது; கர்த்தாவே, உம்முடைய நியாயத் தீர்ப்புகளின் நிமித்தம் யூதாவின் குமாரத்திகள் களிகூர்ந்தார்கள்” என்று எழுதப்பட்டிருக்கிறது. (சங் 97:8) மேய்ப்பன் தன் ஆடுகளை வழிநடத்துவது போல கர்த்தரும் அவர்களை பத்திரமாய் நடத்துவார். ஆனால் உண்மை சபை என்கிற ஒரு வகுப்பார் இருக்கிறார்கள், இதில் உள்ள ஒவ்வொருவரும் நமக்கு அவர்களை தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் கூட தேவனால் நன்கு அறியப்பட்டவரும் அவரால் நேசிக்கப்படுகிறவருமானவர் என்பதை நம் கவனத்தில் கொள்வோமாக. இதை ஏற்றுக்கொள்ள கூடாதவைகள் என்று கருதி



இவைகள் இங்கு அலட்சியப்படுத்தப்படுகிறது. ஆனால் உலகம் அடையாளம் காட்டுகின்ற சபையானது அநேக அடைமொழிகளால் தீர்க்கதரிசி கூறுகிறபடி ஆதி மேன்மையி-ருந்து பெயரளவிலான சபை வீழ்ந்துபோனது. மேலும் இந்த சுவிசேஷ யுகத்தில் அறுவடை காலத்தில் அவள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பை பார்க்கும்போது இது தெரிகிறது.

கிறிஸ்தவ ராஜ்யங்களின் சமூக அதிகாரங்கள், தடுமாற்றத்திலும் குழப்பத்திலும் இக்கட்டிலும் இருப்பது எல்லா இடங்களிலும் வெளிப்படுத்தப்படுகின்றது. மத சூழ்நிலையும் சமாதனத்திற்கோ பாதுகாப்பிற்கோ நம்பிக்கையை கொடுக்கவில்லை. தற்கால நாகரீக சபைகளோ தேசங்களைப் போலவே தாங்களே பின்னிக் கொண்ட வலையில் சிக்கிக் கிடக்கின்றன. ஒருவேளை தேசங்கள் அநீதி என்னும் விதையை காற்றில் விதைத்திருக்குமாயின் பெரும் துன்பம் என்னும் சுழற்காற்றில் அதன் பலனை மிகுதியாய் அறுவடை செய்யவேண்டும். பேர் சபையாகிய கிறிஸ்தவ ராஜ்யங்கள் இந்த விதைப்பில் பங்கு கொண்டிருந்தால் அறுவடையிலும் கூட பங்கடைவார்கள்.

மனுஷனுடைய சொந்த போதனைகளை அந்த மகாபெரிய பெயர் சபை போதித்து கொண்டு, கர்த்தருடைய வார்த்தையாகிய, விசுவாசம் மற்றும் தெய்வீக வாழ்வுக்குரிய ஒரே சட்டத்தை அலட்சியப்படுத்திக் கொண்டு தேவ தூஷணமும், சத்தியத்துக்கு முரண்பட்டதுமான அநேக போதனைகளை மிகவும் துணிச்சலாக வெளியிட்டு, சத்தியம் நிலைநிறுத்தும் காரியங்களுக்கு எதிராக விசுவாசம் இன்றி இருந்தது. இது கிறிஸ்துவின் ஆவியை வளர்க்கவோ அல்லது வெளிப்படுத்தவோ தவறிவிட்டது மட்டுமன்றி அதற்கு மாறாக உலகத்தின் காரியங்களை மிகவும் தாராளமாய் தனக்குள் கிரகித்துக் கொண்டது. ஆட்டுத்தொழுவத்தின் கதவுகளை திறந்து வெள்ளாடுகளை அழைத்தது. அதோடு கூட ஓநாய்களையும் அழைத்து தந்திரமான வேலைகளை செய்ய உற்சாகப்படுத்தியது. கோதுமைகளுக்கு இடையில் களையை விதைக்க பிசாசை அனுமதித்து சந்தோஷம் அடைந்தது. இப்போது அதன்

பலன்களாகிய களைகளை கண்டு களிகூறுகிறது. பார்க்கப்போனால், அதனிடையில் இன்னும் மீதியாய் இருக்கும் சில முதிர்ந்த கோதுமை மணிகளின் மதிப்பும் மிகவும் குறைந்து அவைகள் களைகளால் நெருக்கப்படுவதை தடுக்க எந்த முயற்சியும் இல்லை. கிறிஸ்தவ உலகத்தில் (சந்தையில்) கோதுமை மணிகள் தங்கள் மதிப்பை இழந்துவிட்டன. தாழ்மையான தேவபிள்ளை, தன் கர்த்தரைப் போலவே தானும் கூட மனுஷரால் நிந்திக்கப்பட்டு, தள்ளப்படுவதையும், தன் நண்பர்களிடையே புண்படுத்தப்படுவதையும் அறிகிறான். தெய்வீக உருவங்கள் அதிகாரத்தை எடுத்துக்கொண்டன. பகட்டான சடங்குகள் கூட இதயபூர்வமான ஆராதனைகளை ஒதுக்கிவிட்டன.

பல காலத்துக்கு முன்பே முரண்பாடான போதனைகள் சபையை பல்வேறு பிரிவுகளாக பிரித்துவிட்டது. இவைகள் ஒவ்வொன்றும் தாங்களே கர்த்தரும், அப்போஸ்தலரும் நிறுவிய உண்மை சபை என்று உரிமை கொண்டாடின. இவை யாவும் சேர்ந்து நம் பரலோக பிதாவின் குணாதிசயத்தையும், திட்டத்தையும் திரித்து தவறானதொரு அபிப்ராயத்தை உலகுக்கு கொடுப்பதில் வெற்றி கண்டன. இதனால் அநேக புத்திசா-களும் கூட தங்கள் சிருஷ்டிகரை இகழ்ந்து வெறுத்து தூரமாய் சென்றுவிட்டதோடு, சிருஷ்டிகர் இருக்கிறார் என்பதையே நம்ப மறுக்கவும் முயன்றனர்.

ரோம சபையானது தவறே செய்யாத ஒன்றாக தன்னை பாவித்துக் கொண்டு, தன் போதனைகளை மறுத்து அதற்கு மாறான கருத்துக்கொண்ட யாவரையுமே கந்தகக்கட-லும் அக்கினிக்குள்ளும் நித்யநித்யமாய் சித்ரவரை செய்வதே தெய்வீக காரியம் என்று கூறுகிறது. அவ்வாறு இல்லாதவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவே சித்ரவதை செய்யும் உத்தரிக்கும் ஸ்தலம் என்ற இடத்தை ஒதுக்கியது. அதி-ருந்து விடுதலை பெற விரும்பினால் விரதம், தவம், ஜெபம், பரிசுத்த மெழுகுவர்த்தி, தூபம், அதிகமாக செலவு செய்து நடத்தும் பூஜை ப-கள் மற்றும் ஆராதனைகள் ஆகியவைகள் மூலம் விடுதலை பெறவும் வழிவகை உண்டு என்றும் கூறுகிறது. இதன் மூலம் கிறிஸ்துவின் ஈடுப-யின் மகிமையை ஒதுக்கிவிட்டது. அதற்கு பதிலாக மனிதனின் விதியை சுயமாய் திட்டமிடும் குருமார்கள் கைகளில் கொடுத்தது. இதனால் விருப்ப



மானவர்களுக்கு பரலோகத்தை திறக்கவும், மூடவும் தங்களுக்கே அதிகாரம் இருப்பதாக இந்த குருமார்கள் உரிமை கொண்டாடுகின்றனர். தெய்வீக முறைமைகளுக்கு பதிலாக அந்த இடத்தில் தெய்வச்சிலைகளை புகுத்தியது மட்டுமன்றி, மனித கண்ணால் காணமுடியாத தேவனையும் அவரது குமாரனான நமது மீட்பரும், ரட்சகருமான இயேசுவையும் இருதயத்தில் துதித்து உயர்த்தி பாராட்டாமல் அதற்கு மாறாக பக்தர்களின் உருவச்சிலைகளையும் படங்களையும் வணங்குதலுக்குரியதாய் செய்தது. மேலும், “நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லோரும் சகோதரராயிருக்கிறீர்கள். பூமியில் ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்தி-ருக்கின்ற ஒருவரே உங்களுக்கு பிதாவாயிருக்கிறார்” *(மத் 23:8,9)* என்ற நமது கர்த்தரின் போதனைக்கு மாறாக, அது மனிதனால் அபிஷேகிக்கப்பட்ட குருமார்கள் கூட்டத்தை, சபையை ஆளுகை செய்யும் அளவுக்கு உயர்த்தியது. உண்மையில் போப்புமார்க்கமே உண்மை கிறிஸ்தவத்துக்கு எதிரான முழுமையான வஞ்சகனாக இருக்கிறது. அதோடு தானே உண்மை சபை (தொகுதி II, அத்தியாயம் 9, தொகுதி III, அத்தியாயம் 3) என்றும் தைரியமாக உரிமை கோருகிறது.

சீர்திருத்த இயக்கங்கள் போப்பு மார்க்கத்தின் சில பொய் போதனைகளை களைந்து, அந்த அநீதியான முறைமைகளி-ருந்து அநேகரை வெளியே வரும்விதமாய் வழிநடத்தின. சீர்திருத்தவாதிகள் தேவ வார்த்தைக்கு நேராக மக்களின் கவனத்தை திருப்பி அதை படித்து நாம் தீர்மானிக்க உரிமை உண்டு என்பதை உறுதிபடுத்தினர்; மிக முக்கியமாய் பன்னிரண்டு அப்போஸ்தலரின் அதிகாரம் தங்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தவறாக கூறிக்கொள்ளும் போப்பு அல்லது பிஷப் போன்றோரின் அதிகார கட்டுப்பாட்டில் இல்லாமல் ஒவ்வொரு தேவ பிள்ளையும் சத்தியத்தை பிரசங்கிக்க உரிமை உண்டு என்பதையும் தெளிவாய் கூறினர். ஆனால் இந்த பாவமான அநீதிக்கு எதிராக நடந்த நற்காரியமான சீர்திருத்தம் நிறைவடையும் முன்னரே அந்தி கிறிஸ்துவாகிய நயவஞ்சக ரோமசபையானது உலகத்தின் சக்திகளால் வெற்றி கொண்டது. உடனே புராட்டஸ்டான்ட் என்று

தங்களை அழைத்துக்கொண்டவர்கள் புது ஸ்தாபனங்களை உருவாக்கினர். அவர்கள் தாங்கள் அறிந்துகொண்ட சத்தியத்தோடு கூட, அநேக பழைய தவறுகளையே நிலைபெறச் செய்ததோடு இன்னும் சிலவற்றையும் சேர்த்துக்கொண்டனர். ஆனால், கொஞ்சம் உண்மை சத்தியத்தையும் விடாமல் தொடர்ந்து ஒவ்வொருவரும் கடைபிடித்தனர். இதன் விளைவாக வேதவசனத்தில் ஒருவரோடு ஒருவர் வழக்காடி தாறுமாறான கொள்கைகள் தோன்றிவிட்டன. ஆகவே, சீர்திருத்த காலத்தின் ஆராய்ந்து அறிகிற தன்மையானது விரைவிலேயே செயலற்று போய், வெகுவிரைவில் புதையுண்டு, இக்காலம் மட்டும் அதே நிலையில் இருக்கிறது.

மேலும் "சிஸ்டமேடிக் தியாலஜி" (இறையியல்) என்று தாங்களே விரும்பி அழைத்த இந்த தப்பறைகள் நிரம்பிய போதனை திட்டத்தை நிறுவவும் நிலைநிறுத்தவும் இவர்களது திறமைகளும், நேரங்களும் தாராளமாய் செலவிடப்பட்டன. இவர்களது கல்விமான்கள் மிகப்பெரிய தொகுதிகளாக அநேக புத்தகங்களை எழுதி, தேவ வசனத்துக்கு பதிலாக இவைகளை வாசிக்கும்படி செய்தனர்; இதன் காரணமாகவே இறையியல் கல்லூரிகள் நிறுவப்பட்டு தாராளமாய் நிதியுதவியும் பெறுகின்றன. இவைகளையே கற்றுக்கொடுத்து, மக்களை அதில் திட்டமாய் நிலைநிறுத்த செய்கின்றனர். இந்த போதகர்கள் தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரர்கள் என்றும் அப்போஸ்தலரின் வழி வந்தவர்கள் என்றும் அவர்களை மதித்து நடத்தும்படியும் ஜனங்களுக்கு போதிக்கின்றனர். அப் 17:11ல், வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர் என்று பெரோயா பட்டணத்தாரைக் குறித்து பவு-ன் நாட்களில் சொன்னபடி இல்லாமல் இவர்கள் தங்களுக்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை வேதத்தோடு ஆராயாமல் அப்படியே ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் இப்போது இந்த விதைப்புகளுக்கெல்லாம் அறுவடைக்காலம் வந்துவிட்டது. எல்லா பேர் சபைகளின் பிரிவுகளிலும் பெருத்த குழப்பமும், தடுமாற்றமும் உள்ளன. முக்கியமாய் மதகுருமார்கள் பாதிக்கப்படுகின்றனர். ஏனெனில், அநேக குற்றஞ்சாட்டுபவர்கள் மற்றும் சாட்சிகளின் மத்தியில்



நடக்கும் இந்த நாளின் நியாயத் தீர்ப்பி-ருந்து மக்களை காப்பாற்றும் பொறுப்பு இவர்கள் மீது சுமத்தப்படுகிறது. தங்களை உண்மை சபை என்று கருதுகிறபடியால் கூடுமானால் முழுமையான அழிவி-ருந்து தங்களை காத்துக்கொள்ள சில பரிகார யுக்திகளையும் இவர்கள் கண்டுபிடிப்பார்கள். இருப்பினும் தங்களது தற்கால இந்த குழப்பத்தினாலும், கோட்பாடுகளில் வேறுபட்ட அநேக பிரிவினர் ஒருவரோடு ஒருவர் விரும்பி உறவு வைத்துக்கொள்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பிரிவே உண்மை சபை என்று கருதியதை நிலை நிறுத்திக்கொள்ள ஏறக்குறைய தயாராகிவிட்டதோடு, உண்மையான சபையாக இல்லாத காரணத்தினால் தங்களது மாறுபாடான கோட்பாடுகளில் நிலைத்திருக்க முடியாமல் தாங்கள் ஒவ்வொருவருமே உண்மை சபையின் ஒவ்வொரு கிளைகள் என்று தற்போது பேசிவருகின்றனர்.

இந்த இக்கட்டான நேரம் இவர்களுக்கு ஐயோ, இதில் வேதனைக்குரிய உண்மை என்னவெனில், மாபெரும் சீர்திருத்தம் என்ற முழு ஆவியும் அழிந்துவிட்டது. புராட்டஸ்டன்டிசம் என்பது இனியும் அந்திகிறிஸ்துவின் ஆவிக்கும் அல்லது உலகம், மாமிசம், பிசாசு ஆகியவைகளுக்கும் எதிரானது அல்ல. அவர்களது கோட்பாடுகளும் தேவ வசனமும், ஒன்றுக்கொன்று விரோதமாய் இருக்கின்றன. மேலும், தங்களுக்குள் தாங்களே முரண்பட்டு, பொது ஆய்வுக்கு பயந்து தங்களை மறைத்துக் கொள்ளவும் பார்க்கின்றன. அதனுடைய திரளான இறையியல் வேலைகள் யாவும் கிறிஸ்தவ ராஜ்யங்களின் நியாய தீர்ப்பு நாளின் அக்கினிக்கு எரிபொருளாக இருக்கிறது. இதனுடைய தலையாய இறையியல் நிறுவனங்கள் வஞ்சகத்தின் நாற்றங்கால்கள். இதன் மூலம் இந்த நயவஞ்சகம் எல்லா இடத்திலும் பரவுகிறது. இதனுடைய பிரபல மனிதர்களான பிஷப்புகள், இறையியல் பண்டிதர்கள், இறையியல் பேராசிரியர்கள் மற்றும் செல்வாக்கும் பிரசித்தமும் பெற்ற குருமார்கள் யாவரும் பெரிய நகரங்களில் பொய்த்தோற்றம் கொண்ட வஞ்சகமான தலைவர்களாக மாறிவருகின்றனர். இவர்கள் பரிசுத்த வேதாகமத்தின் கருத்துக்களையும், அதன் அதிகாரத்தையும் புதைத்து அழித்துவிட பார்க்கின்றனர். அத்தோடு இரட்சிப்பின் திட்டத்தை நீக்கிவிட்டு அதற்கு பதிலான மனிதகோட்பாடான பரிணாம கொள்கையை

வெளிப்படுத்துகிறது. மேலும், ரோம சபையின் நெருக்கமான உறவையும், அதன் போ-களையும் நாடுவதுடன், அதன் சலுகைகளையும் எதிர்பார்த்து, அதன் வழிமுறைகளை புகழ்ந்து பேசி, அதன் குற்றங்களை பெரிதுபடுத்தாமல், மறைத்து இவ்விதமான செய்கைகளினால் ரோம சபையின் ஆவியோடு தன்னை இணைத்து ஐக்கியமாகிறது. மேலும் அவர்கள் தாங்கள் விட்டுவிட்டோம் என்று கூறிக் கொள்கிற உலகத்தின் எல்லா காரியங்களிலும் மிகவும் அதிகமான ஐக்கியத்தோடு உறுதியாய் இணைந்து, உலகின் வீணாண பகட்டு மற்றும் மேன்மைகளின் போ-யான அலங்கரிப்பை நாடுகின்றனர். மேலும், இவர்களது ஆலய கட்டுமானத்திலும், அலங்காரங்களிலும், அறைகலன்களிலும் மிதமிஞ்சிய ஆடம்பர தோற்றத்தினால் பெருத்த கடன் சுமைக்கு உள்ளாகினர் என்பதையும் காணலாம். மேலும், இதற்கு தேவைகளின் நிமித்தம் தொடர்ந்து பிறரிடம் கையேந்தியும் நிதி திரட்டும் திட்டங்களை தீட்டியும் வருகின்றனர்.

-ன்டெல் மெத்தடிஸ்ட் சபையின் புனித லூயிஸ், எம்.ஓ., என்பவரின் கலைப்படைப்பின் மூலமும், “இயேசுவின் பிறப்பு” என்கிற ஆர். பிரிங்கர்ஸ்ட் படைப்பு மூலமும் வந்த புறப்பாடுகளே இந்த வழியில் ஒரு குறிப்பிட்ட ஆரம்பத்தைக் கொடுத்தன. இந்த பாஸ் ரி-ஃப் என்ற சிற்பக்கலை பீடம், பெரியதொரு இசைக்கருவி மற்றும் பாடல் குழுவின் அலமாரிக்கு மேல் இருந்தது. இது ஒரு பரந்த விரிவான வளைவுடன் 46 அடி அகலமும், 50 அடி உயரமும் கொண்டது. அதன் ஒவ்வொரு உருவமும் அதன் உண்மை அளவிலேயே செய்யப்பட்டிருந்தன. அந்த வளைவின் உச்சியில் கன்னிமரியின் உருவம் குழந்தை ஏசுவை கையில் தாங்கி நிற்பதைப்போல இருக்கும். இங்கிருந்து வெளிப்புறமாய் பறப்பது போல இரண்டு உருவங்கள் கேரூபீன்களைப் போல் எக்காளத்துடன், அரசாட்சியை அறிவிப்பதைப் போ-ருக்கும். வளைவின் இருபுறங்களிலும் சிறகுகளை விரித்து வணங்குகிற இரண்டு தேவதூதர்களின் உருவம் இருக்கும். இருபுறமும் அதனடியில் பக்கத்துக்கு ஒன்றாக தூதர் உருவங்கள் இருக்கும். அதில் ஒன்று “பூமியில் சமாதானம்” என்ற வாசகம் பொறிக்கப்பட்ட ஒரு சுருளை கொண்டதாகவும், அதே விதமான மற்ற உருவமானது இயேசுவின்



ஜனன அறிவிப்பின் கடைசி வாக்கியமான “மனுஷர் மேல் பிரியம்” என்ற வாசகத்தை சுமந்ததாகவும் இருக்கும். மேலும் இதற்கு கூடுதல் அழகு சேர்ப்பதற்காகவே இந்த பிரத்தியேக சிற்பமானது 45 சாய்வில் பொருத்தி வைக்கப்பட்டது. அது சபையோரை நோக்கி பார்ப்பதைப் போல் இருக்கும். ஆகவே, மிக நேர்த்தியான இந்த கலைநுட்பம் இன்னும் ஆழமான தோற்றத்தை இங்குள்ள மிகச்சரியான அளவிலான நிழ-ல் மிளிருகிறது.

இது ரோம சபையின் ஆடம்பர செலவினத்துக்கு மட்டுமன்றி, அவர்களது உருவ வழிபாட்டின் மீதான ஈர்ப்பையும் எடுத்துக்காட்டும் நல்லதொரு சான்றல்லவா! மேலும் சில ஆலயங்களின் அமைப்புகளோடு சம்பந்தப்பட்ட பில்-யட்ஸ் ஆடுகளங்களும், சில ஊழியக்காரர்கள் இன்னும் கொஞ்சம் மேலே போய் சில மதுவகைகளையும் அங்கு சிபாரிசின் பேரில் அறிமுகப்படுத்துவதும், கலை நிகழ்ச்சி மற்றும் நாடகங்களும் மிகவும் தாராளமாக சில இடங்களில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதே.

பெரும்பாலும் இந்த சபை மக்கள் குருமார்களின் விருப்பத்துக்கு இணங்கிய கருவிகளாகவே இருக்கின்றனர். அதற்கு பிரதி உபகாரமாய் குருமார்களும் சபையோரின் உலக விருப்பங்களுக்கும் ஆர்வங்களுக்கும் செல்வாக்குடைய அங்கத்தினருக்கும் தடையில்லாத இடைத்தரகர்களாகவே செயல்படுகின்றனர். தங்களது தனிப்பட்ட உரிமையையும் கடமையையும் மக்கள் குருமார்களிடம் ஒப்படைத்துவிட்டு, சத்தியம் என்ன என்பதை வேதத்தி-ருந்து தேடி வாசிப்பதையே நிறுத்திக்கொண்டனர். அவர்கள் மிகவும் வேறுபட்டு, தேவனை விரும்புவதைக் காட்டிலும் உலகத்தையும், அதன் சிற்றின்பங்களையுமே விரும்புகிறவர்களாயிருந்தனர். தேவனுடைய பிரமாணங்களை தியானித்து, நீதி என்பது என்ன என்று பகுத்துணர்வதையும் நிறுத்திவிட்டனர். இவர்கள் தற்போதைய உலகத்தின் அதிபதியான பிசாசானவனால் குருடாக்கப்பட்டு இவ்வுலக ஆசைகளையும், இன்பங்களையும் அடைய உதவும் எந்த திட்டத்தையும் பின்பற்ற தயாராக இருக்கின்றனர். மேலும்,

குருமார்களும் இம்மைக்குரிய தங்களுடைய சொந்த லாபங்களுக்காக இவ்வகையான மனப்போக்கை ஆதரித்து, அதை அடையும்படியான கீழ்த்தரமான முயற்சிகளிலும் உதவுகின்றனர். இந்த மத நிறுவனங்களும் அதன் அலுவல்கள், சம்பளங்கள் மற்றும் சுயபுகழ்ச்சிக்காய் தன்னை கனப்படுத்தி, கௌரவப்படுத்திக் கொள்ளும் குருமார்களும் சேர்ந்து ஒழியவேண்டும். வேதபாரகரும், பரிசேயரும் நியாயப்பிரமாண போதகர்களும், யூத மதத்தை நிலைநிறுத்த தீவிரமாய் இருந்தது போல், அதே காரணங்களுக்காக இவர்கள் தங்கள் பெயரளவிலான கிறிஸ்தவ அமைப்புகளை நிலைநிறுத்திக்கொள்வதில் மிகவும் தீவிரமாய் இருக்கிறார்கள். (யோவா 11:47,48,53; அப் 4:15-18) மேலும் தங்களது தவறான எண்ணத்தினாலும், உலக ஆசைகளினாலும், யூதர்கள் கர்த்தரின் முதல் வருகையில் சுவிசேஷயுகத்தின் வெளிச்சத்தையும், பின் அதன் உதயத்தையும் அறியமுடியாத குருட்டாட்டத்தில் இருந்தது போலவே தற்கால கிறிஸ்தவர்களும் தற்போது உதயமாகிற புதுயுகத்தின் வெளிச்சத்தைக் காண முடியாத குருடராய் இருக்கிறார்கள்.

## சபைமீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள்

பேர் கிறிஸ்தவ சபைகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள், விழித்திருக்கும் கிறிஸ்தவர், விழித்திருக்கும் உலகத்தின் கருத்துணர்வுகளே. இது பாபிலோனின் மத்தியிலும் மற்றும் அதன் ஆளுகைக்கு அப்பாற்பட்ட பகுதிகளிலும் கூட குறிப்பாக திடீரென்று ஒரு ஐந்து வருட காலத்திற்குள், கிறிஸ்தவ சபையானது விமர்சிக்கப்படக்கூடிய அளவுக்கு முக்கியத்துவத்துவம் பெற்றது. மேலும் உற்றுநோக்கி ஆராயும் அளவுக்கு முழு உலகத்தின் பார்வையும் இதன் மீது திரும்பியிருக்கிறது. இந்த விமர்சனங்கள் மிகவும் சர்வசாதாரணமாய் வெளிப்படையாய் யாருமே கேட்கத்தவறாத வண்ணம் இருக்கிறது. அது காற்று வாக்கில் செல்கிறது. தனிப்பட்டவரின் பேச்சுக்களில் தெருக்களில், ரயில்வே பிரயாணத்தில், தொழிற்கூடங்களில், கடைகளில் மட்டுமன்றி எல்லா முதன்மையான தினசரிகள், உலக மற்றும் மதச்சார்பான பத்திரிகைகளில் தலைப்பு செய்திகளாக எல்லா இடத்திலும் வெளிவந்து பிரபலமாகின்றன. தங்களை அச்சுறுத்துகின்ற இந்த அபாயத்தி-ருந்து தங்கள் நிறுவன அமைப்புகளை பாதுகாக்க



வேண்டுமென்றால், இந்த எச்சரிப்புகள் எந்தவிதத்திலும் தங்களுக்கு நன்மையானதல்ல, அதற்கு பதிலாக (தங்கள் சொந்த யோசனைகளின்படி) இந்த காரியத்தை மிகவும் துல்-யமாகவும், ஞானமாகவும், சந்திக்க வேண்டும் என்று சபையின் தலைவர்களால் இக்காரியம் உணர்ந்து கொள்ளப்படுகிறது.

பெயரளவிலான கிறிஸ்தவ சபை மீதான குற்றச்சாட்டானது (1)முரண்பாடு. உலகத்தாரும் கூட வேதத்துக்கும் இவர்கள் போதிக்கும் போதனைகளுக்கும் உள்ள பெரிய வித்தியாசத்தை அடையாளம் கண்டனர். அதுமட்டுமன்றி அதன் அநேக அர்த்தமற்ற காரியங்களும் விசுவாச பிரமாணங்களும் கூட கவனிக்கப்பட்டன. தெய்வ தூஷணமான நித்திய சித்திரவதை (நரகம்) என்ற போதனை உதறித்தள்ளப்பட்டது. இதனால், இனிமேலும் பயமுறுத்தி ஜனங்களை சபைக்குள்ளாய் கொண்டுவருவது என்பது கூடாத காரியம். மேலும், கொஞ்ச காலத்துக்கு முன் பிரிஸ்பிடேரியன் மற்றும் கால்வின் சபையார் தங்களது காலத்துக்கேற்ற கொள்கைகள் மீதான விமர்சனத்தினால், பயங்கரமாய் அசைக்கப்பட்டனர். மதகுருமார்களின் மிகவும் துணிச்சலான தற்காப்பு முயற்சிகளினாலும், இந்த விஷயத்தின் மீது நடத்தப்பட்ட நீண்டகால தர்க்கங்களின் நிமித்தமாயும் எல்லோரும் சிறிது தெளிவு பெற்றனர். இந்த தற்காப்பு முயற்சி யாவுமே மிகவும் சங்கடமானவைகளே. இதை அவர்கள் எளிதாய் தவிர்த்தும் இருக்கலாம். ஆனால், தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. இது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, தங்களால் முடிந்த அளவுக்கு இந்த தற்காப்பு பணிகளை செய்ய வேண்டியதாகிவிட்டது. Rev. டி.டிவிட் டேமேஜ் இவர்களது உணர்வுகளை குறித்து கூறும்போது கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார் :

“என்னைப் பொறுத்தவரையில் விசுவாச அறிக்கையை குறித்தான இந்த முரண்பட்ட கருத்து சபை மீது திணிக்கப்பட்டது. ஆனால் இப்போது இவ்வாறு இருக்கையில் அதை விட்டுவிலகி, நமக்கு ஒரு புதிய பிரமாணத்தை உண்டாக்கலாம் என்று கூறுகிறேன்.”

இவரே மற்றொரு சமயத்தில் கூறியதாவது :

“நான் கடைசியாக ஒருமுறை கூறுகிறேன். கிறிஸ்தவ ராஜ்யம்

முழுவதிலும் இருக்கும் இந்த முரண்பாடுகள் மிகவும் கொடூரமானது, பேய்த்தனமானது, சபையை பிரித்து வேறுபடுத்திவிட மிகவும் படுபயங்கரமான முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. இது உடனே தடுத்து நிறுத்தப்படாவிடில் இதனால் வேதத்துக்கு பெருத்த அவமதிப்பு உண்டாகும்.

“இந்த முரண்பாடுகளை பொருத்தமட்டில் நாம் எந்த நிலையில் இருக்க வேண்டும்? அதைவிட்டு விலகி இருங்கள். இந்த மதசம்மந்த கலவரம் பரவலாக இருக்கும் போது உங்கள் வீடுகளில் தங்கி உங்கள் காரியங்களில் கவனம் செலுத்துங்கள். வெறும் 5 அல்லது 6 அடி உயரமே உள்ள ஒரு மனிதனை 1000 அடி ஆழமுள்ள சமுத்திரத்தின் மீது நடந்து கடக்கும்படி நீங்கள் எப்படி எதிர்ப்பார்க்க முடியும்?... ஊழியத்தில் இப்போது தான் நுழைந்துள்ள வா-பர்கள் தற்போது அடர்ந்த மூடுபனிக்குள் வந்து சேர்ந்திருக்கின்றனர். வேத பண்டிதர்களின் பிரச்னைக்கான பதில் தேடும் முயற்சி நியாயத்தீர்ப்பின் நாளுக்கு பிறகும் கூட ஓயாது.”

உண்மை சத்தியம் என்னவெனில், நியாயத்தீர்ப்பின் நாளுக்குப் பிறகு வரும் நாட்களில் இந்த சிக்கலான பிரச்னைகள் யாவும் தெளிவடைந்து அடங்கி, இந்த பூமியின் மேல் சத்தியமும், நீதியும் நிலைநிறுத்தப்படும்.

தற்காப்புக்கான இந்த இக்கட்டும் அதன் பயங்கரமான விளைவுகளும், நியாயத்தீர்ப்புக்கான அழைப்பு வருவதற்கு சற்று முன் சிகாகோவில் பிரிஸ்படேரியன் குருமார்கள் கூடிய கூட்டத்தின் தீர்மானத்தில் விவரிக்கப்பட்டது. இந்த தீர்மானத்தின் விவரமாவது:

“நம் சபையை நாசப்படுத்தும் சச்சரவுகளை மிக துக்கத்தோடு நாம் கவனித்து வந்தோமே அது முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. அவைகள் சபையின் நன்மதிப்புக்கும், அதன் செல்வாக்குக்கும், அதன் பலன்களுக்கும் ஊறுவிளைவிக்கக் கூடியது. ஒரு பெரும் சுமையாக இருந்த இது நம்மை மேற்கொண்டு வெற்றி பெற்றிருக்குமாயின் அது நம் சொந்த சபைகளின் வேலைகளை மட்டுமன்றி, பொதுவாக நமது கிறிஸ்துவ மதத்தையே நாசப்படுத்தி விட்டிருக்கும். ஆகவே நம் சகோதரர் யாவருக்கும் நாங்கள் கொடுக்கும் ஆலோசனைபடி நீங்கள் ஒருபுறம் புராதன மரபுகளை உபயோகிக்கும் எந்த ஒரு புதிய முயற்சிகயையும் தவிர்க்கவேண்டும். அதனோடு கூட சத்தியத்தை உண்மையான அர்ப்பணிப்போடு தேடுவதற்கான எந்த கடுமையான முயற்சியையும், உண்மையான எந்த கட்டுப்பாட்டையும் தவிர்க்கவேண்டும். மறுபுறம் நம் சகோதரர்களுக்கு அளிக்கும் அவசர ஆலோசனை என்னவெனில், சோதிக்காத எந்த கொள்கையையும், சர்ச்சைக்கும் சந்தேகத்திற்குமுரிய கேள்விகளையும் சபையின் மேல் திணிக்கக்கூடாது என்பதாகும். மேலும் அவைகள் எங்கேயிருந்தாலும், எந்த சூழ்நிலையின் கீழ் இருந்தாலும் வேதத்தை படிக்காதவர்களின் விசுவாசத்தைக் குழப்பக்கூடாது. நம் சபையின் நன்மைக்காகவும் அதன் எல்லா மேன்மையான ஆதாயங்களுக்காகவும், செயல்திட்டங்களுக்காகவும் சபையின் வழக்குகளை தடுக்கவும் நிறுத்தவும் மிகுந்த ஆவலுடன் வேண்டிகேட்கிறோம்.”

“தி பிரிஸ்பிடேரியன் பேனர்” கூட ஒரு வேதனையான மேற்கோளை இது குறித்து வெளியிட்டது. இதில் பிரிஸ்பிடேரியன் சபையின் ஆரோக்கியமற்ற ஆவிக்குரிய நிலையைக் குறித்து சில குறிப்பிடத்தக்க ஒப்புதல்களும் அடங்கி இருந்தது. அதன்படி :

“ஒரு மருத்துவமனையிலோ அல்லது முகாமிலோ ஒரு சலசலப்போ அல்லது சங்கொ-யோ எழும்புமாயின் அது அங்கே யாரோ ஒருவரின் மரணத்தை உறுதிபடுத்துவதாகும். ஒரு தர்ம ஸ்தாபனத்தில் வயதான ஒரு மனிதர் விளையாட்டாக சூரிய உதயத்துக்கு முன் மேளம் ஒன்றினை சிறிது நேரம் அடித்துக் கொண்டிருந்தார். உடனே அதன் அதிகாரிகள் வந்து அந்த “அன்பு சகோதரனை” மேளத்தை எடுத்துக்கொண்டு தூர சென்றுவிடும்படி கேட்டுக்கொண்டார். இது போதகர்கள் மிகவும் கவலையடைகின்றனர் என்பதை தெளிவாக விளக்குகிறது. சபை ஒரு மருத்துவமனைபோல் இருக்கிறது. இதில் காய்ச்சல், குஷ்டரோகம், முடக்குவாதம், காயம், பாதி மரித்தவர்கள் என்ற ஆவிக்குரிய நோயாளிகள் சேர்ந்திருக்கின்றனர். இறையியல் கல்விச் சாலை இந்த ஆபத்தில் கடந்து வரும் ஆத்துமாக்களை நாசப்படுத்திவிடலாம். பேராசிரியர் பிரிகிஸ் அவர்களே தயவு செய்து இந்த மேளத்தை அப்புறப்படுத்துவீர்களா?”

அடுத்து பேர் சபை குற்றம் சாட்டப்படுவது (2) அதன் வெளிப்படையான பக்தி மற்றும் தெய்வீகத்தில் குறிப்பிடும்படியான குறைவு. ஆனால் அத்தனை தெளிவற்றவர்கள் மத்தியிலும் வெகுசில உண்மையான தேவபக்தி உடைய ஆத்துமாக்களை காணமுடிகிறது. கள்ளத்தனமும் கபட்டு வேஷமும் உண்மையில் வேண்டாதவைகள். மேலும் செல்வ செழிப்பும் மூர்க்கத்தனமும் கிறிஸ்துவின் பெயரால் கட்டப்பட்டிருக்கும் இவ்வுலக ஆலயங்களில் ஏழைகளை வரவேற்பதில்லை என்பதை மிகத் தெளிவாக காட்டுகிறது. அநேக மக்களும் கூட இதை கண்டுகொண்டார்கள். அப்படியானால் இதுதான் சபையை உருவாக்கிய மகா தேவனது நோக்கமா! என்று தங்கள் வேதங்களை புரட்டித் தேடுகின்றனர். ஆனால், அவர்கள் வேதத்தில் அறிந்துகொண்டது என்னவெனில், "தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது," "தரித்திரர்கள் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்." ஆகவே அவர்கள் விலை உயர்ந்த ஆடைகள் மற்றும் ஆபரணங்களை அணிந்தவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதில்லை என்பதே. இப்படிப்பட்ட பொன்னான பிரமாணங்களை இவர்கள் கண்டு இவற்றை சபையை நடத்தும் ஒழுங்குகளில் பொதுவாகவும், தனிப்பட்ட வகையிலும் நடைமுறைப்படுத்தி வந்தனர். இப்படியாய், வேதத்தின் வெளிச்சத்தில், சபையானது அவரது கிருபையி-ருந்து விழுந்துவிட்டது என்ற முடிவுக்கு வருகின்றனர். இந்த தெளிவான முடிவானது, சபையை காத்துக்கொள்ள போராடுகிறவர்கள் தாங்களே குழப்பத்தினால் மூடப்பட்டிருக்கிறார்கள் என்பதனை வெளியரங்கமாய் காட்டுகிறது.

பேர் சபை மீதான அடுத்த குற்றச்சாட்டு (3) தன் சேவை என்று உரிமையுடன் கூறிவந்த காரியங்களை நிறைவேற்றுவதில் தோல்வி. அதாவது இவ்வுலகம் முழுவதையும் கிறிஸ்தவத்திற்கு மாற்றுவது என்ற காரியம். சபையின் வேலைகள் முழுமையடைந்துவிட்டதற்கான சில அறிகுறிகள் குறிப்பிட்ட அளவிற்கு இல்லாதபோது இவ்வுலகமானது சமயம் வந்துவிட்டது என்பதை எப்படி கண்டுபிடித்தது. இதே போல யூத கால முடிவில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படப்போகிறது என்று எல்லா மனுஷரும் எதிர்பார்த்திருந்தனர். (லூக் 3:15) இப்பொழுதும் இந்த சுவிசேஷ



யுகத்தின் முடிவில் அதேவிதமானதொரு எதிர்பார்ப்பிலே எல்லா மனுஷரும் இருக்கின்றனர். இவர்கள் தாங்கள் ஒரு மறுமலர்ச்சிக்கான காலகட்டத்தில் இருப்பதை உணர்கின்றனர். மேலும் 20ம் நூற்றாண்டுக்கான காலக் கணிப்பில் இது மாபெரும் மாற்றத்துக்கான மிகுந்த பயங்கரங்களும் புரட்சிகரமான மாற்றங்களும் நிறைந்ததாகவே இருக்கிறது. சார்லோடெஸ்வில்-ன் பல்கலைக்கழகங்களின் கூட்டத்தில் தனது சிறப்பான சொற்பொழிவில் மேதகு ஹென்றி க்ரேடி என்பவர் தற்கால அமைதியின்மையை குறித்து ஆவேசமாய் கூறியதாவது :

"நாம் காலைப்பொழுதின் ஆரம்பத்தில் இருக்கிறோம்.... வானத்தி-ருக்கும் பிரகாசமான நட்சத்திரங்கள் ஒளிமங்க ஆரம்பித்துவிட்டன. சரியான வெளிச்சம் இல்லாமையால் இருட்டில் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். விசித்திரமான உருவங்கள் இருட்டுடன் சேர்ந்து வந்துவிட்டன. ஸ்தாபித்திருந்த வழிகள் யாவும் தொலைந்துவிட்டன. புதிய பாதைகள் குழப்பங்களையும் மற்றும் பார்வைக்கு அப்பால் பரந்துவிரிந்தவைகளுமாய் இருக்கின்றன. இந்த அமைதியற்ற விடியல் நம்மை முன்னும் பின்னும் அலைக்கழிக்கிறது. இந்த குழப்பத்திற்கு மத்தியில் சந்தேகம் நடைபோடுகிறது. மாறுகின்ற கூட்டம் தளர்ந்த பாதை மீது நிற்கின்றன. நிழ-ல் இருந்து காவலாளி கூச்ச-டுகிறான். அங்கு வருவது யார்? மங்கலான காலை வேளையில் மகா பெரிய வல்லமையோடு காரியங்கள் நடக்கின்றனவே, எதுவும் நிலையானதும் அங்கீகரிக்கக்கூடியதுமாகவும் இல்லை. தற்காலத்தின் அற்புதங்கள், கடந்த காலத்தின் மிக எளிய சத்தியங்களையும் பொய்யாக்குகிறது. சபையானது வெளிப்புறத்தில் இருந்து தாக்கப்படுகிறது. உள்ளுக்குள்ளே மறுத-க்கப்படுகிறது. அதன் மதில்களுக்கு அப்பால் கலகக்காரரின் தீவட்டி எரிகிறது. அராஜகவாதிகளின் பிதற்றலால் பயமுறுத்தப்படுகிறது. அரசாங்கமானது கட்சிக்காரர்களின் வாதத்துக்குரியதாகவும் கொள்ளையாடுபவருக்கு இரையாகவும் இருக்கிறது. தனியாரின் பிடியில் வியாபாரமானது அமைதியின்றி அவதிப்படுகிறது. வாணிபமும், கட்டுபாட்டிற்குள் விலங்கிடப்பட்டிருக்கிறது. நகரங்கள் மக்கள் தொகையில் நிரம்பி வழிகிறது. நிலங்கள் வறண்டு

கிடக்கிறது. மாளிகையி-ருந்து ஆடம்பர ஒளி வெள்ளம் பெருகி ஓடுகிறது. வீடுகளிலோ அழுக்கும் அவலமும் புரள்கிறது. உலகளாவிய சகோதரத்துவம் மறைந்து வருகிறது. ஜனங்களும் வகுப்பு வாரியாக குவிகிறார்கள். எதிலும் நம்பிக்கையற்றவர்களின் சீற்றம் தனிப்பட்டவரை கலங்கவைக்கிறது. மக்கள் கூட்டத்தின் கூச்சல் பெரும் வீதிகளில் முணுமுணுக்கிறது."

காலத்தின் முடிவு வந்துவிட்டது என்பதையோ கணக்கை சரிபார்க்கும் நாள் இதுவோ என்பதையோ சபையானது மறுப்பது என்பது முடியாததாக இருக்கிறது. தீர்க்கதரிசன வெளிச்சத்தில் அந்த நேரத்தை சபையானது உற்றுநோக்கி உணர்ந்து கொண்டாலும் இல்லாவிட்டாலும், நியாயத்தீர்ப்பு சபை மீது வலுக்கட்டாயமாய் திணிக்கப்படுகிறது. அப்போது இந்த காரியமானது அறுவடையின் காலம் முடியும் முன்பே உணர்ந்து கொள்ளப்படும்.

## சபை ஒரு நிலையில் நின்று மறைமுகமாய் தன் கணக்கை ஒப்புவிக்கிறது

முழு உலகத்தின் கவனமும் தன் மீது திரும்பி இருப்பதை சபை உணர்கிறது. தனது வேலையே உலகை மாற்றிவிடுவதே என்று கூறிவந்ததையும், நேரம் வந்தபோதோ இதை குறித்துப் பார்த்தால் முழுவதுமாக இந்தப் பணி முடிவுராவிட்டாலும் ஓரளவுக்காவது முடிந்திருக்க வேண்டும் என்று எப்படியோ அதன் குறையை உலகம் கண்டுபிடித்துவிட்டது. இந்தவித அறிக்கையி-ருந்து உண்மையிலேயே உலகத்தினின்று சபை சிறிது மாறுபட்டிருக்கிறது.

இதையே தன்னுடைய இக்காலத்தின் பணி என்று கணித்து வைத்ததால், இந்த சுவிசேஷ யுகத்தின் உண்மையான நோக்கத்தை அறிய சபையானது தவறிவிட்டது. அதாவது "ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசிங்கிக்கப்படும்." ஆகவே சிறுமந்தையானது அழைக்கப்பட்டு, தயார்படுத்துவதற்கு ஏதுவாக இது கூறப்பட்டது. (மத் 24:14; அப் 15:14-17)ஆயிர வருட அரசாட்சியில் கிறிஸ்துவுடன் இணைந்து பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கும். 18 நூற்றாண்டுகளுக்கு பிறகும் தான் கூறிவருகிற பலன் இன்றும் கிடைக்கவில்லை என்ற உண்மைக்கு எதிர்ப்பு காட்டிவருகிறது.



பார்க்கப்போனால் சபையின் பணிகள் முதலாம் நூற்றாண்டை ஒட்டியதான அளவுக்கே இருக்கிறது. அதன் காரணத்தால் வருந்துதல், மன்னிப்பு கோருதல், கணக்குகளை சரிபார்த்து, ஒரு தொகையை குறிப்பிடுதல், உண்மை காரியங்களை செப்பனிடுதல், சமீப கால பெரிய சாதனைகளை குறித்த மிதமிஞ்சிய முன்னறிவிப்புகள் ஆகியவை விசாரிக்கவும், குறுக்கு விசாரணை செய்யும் நோக்கத்தோடும், இந்த நாட்களில் சபை மீது திணிக்கப்பட்டன. இதனால் தன்னை குற்றப்படுத்தும் அநேகர் முன்பு தன்னை காத்துக்கொள்ளும் பொருட்டாக சபையானது முயற்சிக்கிறது.

நன்கு ஒப்புக்கொள்ளப்பட்ட அளவுகோலாகிய வேதத்தோடு ஒப்பிடும்போது தனது முரண்பாடான போதனைகளினிமித்தம் சபையானது குற்றம் சாட்டப்படுவதால், அது ஒரு பெரிய குழப்பத்தில் இருப்பதை நாம் காணலாம். ஏனெனில் தனது முரண்பாடான கோட்பாடுகளை மறுத-க்கவும் முடியாத நிலை. மேலும் சிந்திக்கும் ஜனங்கள் சபையின் பெரும் குழப்பத்தை உரிய சாட்சியங்களோடு குறிப்பிடுவதில் அத்தனை வேகம் காட்டினதினால் அநேக முறைமைகளுக்கு சபை புக-டமானது ஒவ்வொரு சபை பிரிவினரும் தங்கள் கோட்பாடுகளை விடாமல் பிடித்துக்கொள்வதில் மிகுந்த அக்கறை காட்டினர். ஏனெனில், மிகவும் பிரபலமான அமைப்புகளுடன் தாங்கள் ஐக்கியப்பட்டிருப்பதற்கு இந்த கொள்கைகளே ஆதாரம். ஆகவே இந்த கொள்கைகளை உடனடியாய் திடீரென்று கைவிட்டு விடுவதால், அமைப்புகளையும் கலைத்துவிடும்படி ஆகிவிடும். ஆகவே, சபை குருமார்கள் தங்களைக் குறித்து கூடுமானவரை அதிகம் பேசாமல் இருப்பதிலேயே திருப்தி கண்டனர். ஏனெனில், நியாயத்தீர்ப்பின் நாளின் தேடுகிற வெளிச்சத்தில் இருதயப்பூர்வமாய் அவைகளினால் வெட்கப்படுகின்றனர்.

சிலரோ தங்கள் உலக ஞானத்தை மறந்து முழுவதுமாய் தங்களை விலக்கிக் கொள்ளவும் தயாராகி தங்களைக் குறித்து வெட்கப்படுகின்றனர். மற்றவர்களோ மேலும் புதிய போதனைகளை புகுத்தி திருத்தம் செய்து, மாற்றி அமைத்து, கொஞ்சம் கொஞ்சமாய், அவைகளை தங்கள் ஸ்தானத்தில் புகுத்துவதே மிகவும் ஞானமான காரியம் என்று நினைத்தனர்.

பிரிஸ்படேரியன் சபையின் விசுவாச மாற்றத்தின் மீதான நீண்ட வாதத்தில் ஒவ்வொருவரும் பிரபலமானவராக இருந்தனர். அதே விதமாய் பரிசுத்த வேதாகமத்தின் அதிகாரத்தையும், உள்ளுணர்வையும் பலவீனப்படுத்தும்படியாக தங்கள் சொந்த நடையில் பெரும் விமர்சனங்களையும் கொடுப்பதில் முனைந்தனர். மேலும் 20ம் நூற்றாண்டின் கருத்தாகிய பரிணாமம் என்ற கோட்பாட்டை, வேதம் உறுதியாய் கூறும் ஆதாமின் வீழ்ச்சியி-ருந்து மீட்பு என்ற தெய்வீக திட்டத்திற்கு விரோதமாய் புகுத்துகின்றனர். மீட்பின் திட்டத்தை அவர்கள் மறுக்கவும் செய்கின்றனர். அதுமட்டுமன்றி வேறு ஒரு பெருங்கூட்டமான குருக்கள் வகுப்பு உண்டு. அவர்கள் விட்டுக்கொடுக்கக் கூடியதும், பல கருத்துகளி-ருந்து தெரிந்து எடுத்ததுமான ஒரு இறையியலை விரும்பி நாடுகின்றனர். இந்தவிதமான இறையியல் நிச்சயமாய் சுருக்கமான ஒன்றாக, மிகவும் கட்டுப்பாடற்றதாகவும், அதன் மையப் பொருள் கிறிஸ்தவர், புற மதத்தார் மற்றும் எல்லா மதத்தினரது எதிர்ப்புகளையும் ஒதுக்கி உதறித்தள்ளிவிடக்கூடியதும், கூடுமானால் "அவர்கள் யாவரையும்,ஒரே கூடாரத்திற்குள் கொண்டுவரும்" அளவுக்கே இருக்கிறது. சிலர் இதை வெளிப்படையாய் தெரிவிக்கின்றனர். பெருவாரியானவர்களின் ஒரு பெரிய பொதுவான டம்பப் பேச்சு என்னவெனில், கிறிஸ்தவ கூட்டணியை மையக் கருத்தாகக் கொண்டு பெரிய காரியங்களை முடிவுக்குக் கொண்டு வரும்படியான சாதகமான காரணிகள் சமீப காலத்தில் செயல்முறைப்படுத்த ஆரம்பித்துவிட்டன என்பதே; ஆகவே இது முடிவுபெற்றதும், நாங்கள் வாக்கு கொடுத்தப்படியே கூடிய விரைவில் இந்த உலகையே கிறிஸ்தவர்களாக மதம் மாற்றி விடுவோம். இது மிகவும் சீக்கிரத்திலேயே நாங்கள் நினைக்கும் விதத்தில் நடக்கப்போகிறது என்பதாகும்.

பக்தி மற்றும் தெய்வீக வாழ்வின் குறைவுகளை குறித்த குற்றச்சாட்டையும் கூட இவ்வித தற்பெருமையான கூற்றுகளால் அவர்கள் எதிர்கொள்கின்றனர். மத் 7:22,23ல் ஆண்டவர் கண்டிக்கிற "அற்புதமான அநேக கிரியைகள்" நடந்து கொண்டிருப்பதாகவும், பெருமை பாராட்டுகின்றனர். ஆனால், இந்த தற்பெருமையான கூற்றுகள் பாபிலோனின் ஆர்வத்தை அவ்வளவாய் கவரவில்லை. ஏனெனில் ஐயோ, பாவம், தேவகட்டளை மீதான அன்பின் ஆவி அவர்களிடம் இல்லை. இது முழுவதுமாய் மறக்கப்பட்டுவிட்டது என்பது மிகவும் வேதனைக்குரியது. ஆனால் மொத்தத்தில் இந்த தற்காப்பு நடவடிக்கைகள் எல்லாமே வீழ்ந்து போன சபையின் பரிதாபமான நிலைமையை மிகவும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இந்த பெயர்சபையே உண்மையில் மெய்யான தேவ சபையாக இருக்குமானால், தன்னுடைய நாமத்திற்காக ஒரு கூட்டத்தை தெரிந்தெடுக்கும் தெய்வீக திட்டமும் ஒரு தோல்வியே என்பது எத்தனை தெளிவாய் வெளிப்பட்டிருக்கும்.



ஆனால், இப்படிப்பட்ட அநேக மறுப்புகளும், மன்னிப்புகளும் வாக்குத்தத்தங்களும் தற்புகழ்ச்சிகளும் இந்த சபையால் கூறப்பட்டாலும் கூட, தற்போது பிரிவினைப்பட்டு உருக்குலைந்து, குழப்பத்துடன் இருக்கும் நிலையி-ருந்து, தங்களால் நீண்டகாலம் சபையை காப்பாற்ற இயலாது என்பதை அதன் தலைவர்கள் மிகவும் தெளிவாக காண்கின்றனர். மேலும் ஏதோ ஒரு பெரும்முயற்சியானது சபை பிரிவுகளை ஒன்று படுத்தினாலன்றி, சபையின் நசிவையும் கவிழ்ப்பையும் தடுக்கவியலாது என்பதைக் காண்கின்றனர். மேலும் தன்னை உலகத்துக்கு முன் நிலைநிறுத்திக் கொள்ளவோ தனது அதிகாரத்தை வலுப்படுத்திக்கொள்ளும்படி தன் வல்லமையை அதிகப்படுத்திக் கொள்ளவோ முடியாது என்பதையும் காண்கின்றனர். ஆகவே தான் கிறிஸ்தவ கூட்டணிகளை குறித்த பேச்சுக்களை நாம் அதிகமாய் கேள்விப்படுகிறோம். அதை நிறைவேற்ற எடுக்கும் ஒவ்வொரு படியிலும் கிறிஸ்தவ ஒருமைப்பாடு மற்றும் அன்பின் ஆவியின் வளர்ச்சிக்கான சாட்சியம் பாறைசாற்றப்படுகிறது. ஆனால் இந்த இயக்கங்கள் கிறிஸ்தவ ஐக்கியம் மற்றும் அன்பினால் அல்ல. வெறும் பயத்தினால் உண்டானவைகளே. முன்னறிவித்தபடியே கோபாக்கினை என்ற பெருவெள்ளம் வெகுவிரைவில் வருகிறது. மேலும் இந்த கடும் சூறாவளியின் பாதிப்பிற்கு எதிராக தாங்கள் தனித்து சமாளிக்க இயலுமா என்று அநேக சபை பிரிவினர் தங்கள் திறமையை சந்தேகிக்கின்றனர்.

இதனால் எல்லா பிரிவினரும் ஒரு ஐக்கியத்துக்குள் வருவதையே நாடுகின்றனர். ஆனால் தங்கள் முரண்பாடான

கோட்பாடுகளை முன்னிட்டு எப்படி இந்த இணைப்பில் வெற்றி காண்பது என்பதே அவர்களது குழப்பமான பிரச்சனையாகும். பல்வேறு வழிவகைகள் ஆலோசிக்கப்பட்டன. அதில் ஒன்று, முதலாவது தங்கள் போதனைகளில் ஏறக்குறைய ஒத்துப்போகும் பிரிவினர்களை இணைப்பது. உதாரணமாக பிரிஸ்பிடேரியன், பேப்டிஸ்ட் மெத்தடிஸ்ட், கத்தோ-க்கர் போன்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வெவ்வெறு கிளைகள் இந்த நிச்சயிக்கப்பட்ட பெரிய ஐக்கியத்துக்குள் ஆரம்பகட்டமாய் இணையவேண்டும். அடுத்த வேறு ஒரு வழியில் மக்களிடையே இந்த ஒருமைப்பாட்டின் ஆர்வத்தை விதைக்க வேண்டும். அதுவும் போதனைகளின் வேறுபாட்டை கூட ஒதுக்கி தள்ளி வைத்துவிட்டு கிறிஸ்தவ பணி என்று கூறிக்கொண்டு அதில் ஒழுக்கமற்ற மக்களையும் கூட தாராளமான ஐக்கியம் கொள்ளும்படி திட்டமிட்டனர். இந்த உணர்ச்சிப்பூர்வமான கருத்து நடுத்தர மற்றும் வா-ப மக்களிடையே பெருவாரியான ஆதரவை பெற்றது.

கடந்த காலத்தில் சச்சரவுக்குள்ளான அநேக பழமையான போதனைகள் மறக்கப்பட்டுவிட்டதினால் பிற்காலத்தில் அதுவே சபை வா-பரிடையே கூட்டணி என்ற கிறிஸ்தவ தேசத்தின் உணர்வுப்பூர்வமான கருத்தை பெருவாரியாய் ஆதரிக்கும் ஒரு பிரிவினரை உருவாக்கிவிட உதவியாயும் இருந்தது. சபை பிரிவுகளின் இடையே இருந்த கடந்த கால போராட்டங்களை குறித்த அறியாமையினால், தேர்தல்கள், பெருவாரியான உரிமைகள், பதவி ஏற்புகள் ஆகியவற்றோடு தொடர்புடைய காரியங்களில் தங்கள் முன்னோர்களிடையே காணப்பட்ட குழப்பங்களோடு எந்த சம்பந்தமும் இல்லாதிருக்கின்றனர். ஆனால் சிறுபிராயம் தொட்டு (ரோம் மற்றும் இருண்ட காலத்தில் இருந்து வந்த) முளையிலேயே கிள்ளி எறியப்படவேண்டிய நித்திய வேதனை என்ற போதனையை இன்னும் உடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தற்கால யுகத்தின் சுவிசேஷத்தை கேட்டு ஏற்றுக் கொள்ளவில்லை. மட்டுமன்றி அவர்களது கோட்பாட்டின்படி சுவிசேஷத்தின் சேவையே இந்த நாட்களில் இந்த உலகத்தை மதம் மாற்றி, அதன் மூலம் அந்த நித்திய உபத்திரவத்தி-ருந்து இவ்வுலகத்தை காப்பாற்றுவதே என்னும் எண்ணம் கொண்டிருக்கின்றனர். இவை



கீழ்க்கண்ட பல்வேறு இயக்கங்களில் அமைக்கப்பட்டிருந்தன. எங் மென்ஸ் அண்டு வுமன்ஸ் கிறிஸ்டியன் அசோசியேஷன், கிறிஸ்டியன் என்டிவர் சொசைட்டி, எப்வோர்த் லீக்ஸ், கிங்ஸ் டாட்டர்ஸ் மற்றும் சால்வேஷன் ஆர்மி போன்றவை. இவர்களில் அநேகருக்கு உண்மையில் "தேவனைப்பற்றிய வைராக்கியம் இருக்கிறது. ஆனால் அது அறிவுக் கேற்ற வைராக்கியம் அல்ல."

உண்மையில் வேதத்திற்கு மாறான கண்ணோட்டத்தில் ஒரு சமுதாய மேம்பாட்டை இவர்கள் உடனுக்குடன் செய்ய வேண்டும் என்று திட்டமிடுகின்றனர். இவர்களது இந்த முயற்சிகள் நன்மையானவைகளே, தீமையானவைகள் அல்ல என்று பாராட்டத்தக்கது. ஆனால் இவர்கள் தவறு என்னவெனில், மனித கருத்துப்படி இவைகள் எத்தனை தான் ஞானமான, அன்புடைய செயல்களாக இருந்தாலும், வெற்றிவாகை சூடக்கூடிய ஒன்றே ஒன்றான தெய்வீக ஞானத்திற்கும் தெய்வீக திட்டத்திற்கும் நிச்சயமாய் இசைவில்லாமல் போய்விட்டதாகும். ஆகவே மற்றெல்லாருமே தோல்விக்கு உரியவராகின்றனர். அவர்களிடையே இருக்கும் உண்மையானவர்கள் தெய்வீக திட்டத்தை காண்பார்களாகில் அது அவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கும். எப்படியெனில் தற்போது சிறுமந்தையாகிய பரிசுத்தவான்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அதோடு கூடவே இந்த தேர்வு முடிவுபெறும் போது இவர்களால் இந்த உலகமே உயர்த்தப்படும். இந்த சிறுமந்தையே ஆயிரவருட அரசாட்சியில் உடன் சுதந்தரவாளிகளாய் கிறிஸ்துவோடு கூட உயர்த்தப்பட்டு ஆளுகையும் செய்வார்கள். உலகத்தாரால் இவைகளை பார்க்கமுடியுமா? இவர்களுக்கு இடையே உள்ள எல்லா உத்தமமானவர்களும் நிச்சயமாய் ஒரு சிறு கூட்டமாகவே இருப்பார்கள். இவர்கள் பரிசுத்தமாக்கப்படுவதினால் பலன் உண்மையில் இருக்கும் அல்லது இருந்தாக வேண்டும். ஏனெனில் பெரும்பாலான ஜனங்கள் "மரண பரியந்தம்" தேவனுக்கும் அவரது ஊழியத்துக்கும் தங்களை ஜீவப-யாய் அர்ப்பணிப்பதை விட்டுவிட்டு, வேறு பல அநேக காரணங்களுக்காக சமுதாய கழகங்களில் சேருகின்றனர்.

இந்த கிறிஸ்தவ வா-பர்களுக்கு சபை சரித்திரம் கற்பிக்கப்படாததாலும், வேத போதனைகளை அறியாததாலும்

இவர்கள் ஐக்கியம் என்ற கருத்தில் மிகவும் எளிதாக விழுந்துவிடுகின்றனர். பிரிவினைக்கு காரணமான இந்த போதனைகளே கடந்த காலத்தின் தவறு என்று இவர்கள் தீர்மானிக்கின்றனர். ஆகவே, நாம் யாவரும் ஐக்கியப்பட்டு இந்த போதனைகளை பொருட்படுத்தாமல் விட்டுவிடுவோம் என்கின்றனர். கடந்தகாலத்து கிறிஸ்தவர்களும் கூட இப்போதுள்ளவர்களைப் போலவே ஐக்கியம் வேண்டும் என்றே பெரிதும் விரும்பினர். ஆனால் அந்த ஐக்கியம் சத்தியத்தை அடிப்படையாக கொண்டதாகவே இருக்கவேண்டும், அப்படி இல்லாத பட்சத்தில் ஐக்கிய இணைப்பு என்பதே கூடாது என்ற கருத்துடையவர்களாகவே இருந்தார்கள். இதை இக்கால இளைஞர்கள் உணரத்தவறிவிட்டனர். "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய் போராடவேண்டும்," "கனியற்ற அந்தக்காரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளை கடிந்து கொள்ளுங்கள்" *(யூதா 3; எபே 5:11)* என்பதானவைகள் அவர்களது நடத்தையின் கொள்கையாக இருந்தது. இப்படிப்பட்ட போதனைகள் யாவுமே உண்மையான கிறிஸ்தவர்களிடையே தேவனை பிரியப்படுத்தும் ஒரு உண்மையான ஐக்கியமாய் இருக்கவேண்டியது மிகமிக முக்கியம் என்பதை இன்றைக்கு அநேகர் கவனிக்க தவறிவிட்டனர். தங்கள் சொந்த மனுஷீக கொள்கைகளின் போதனைகள் யாவுக்கும் தேவ வார்த்தையை உபயோகித்து சரியானது என்று நிரூபித்து விடலாம் என்ற தவறான அபிப்பிராயம் கொண்டிருந்ததே அக்காலத்து கிறிஸ்தவர்களின் குற்றமாக இருந்தது.

ஆகவே, வேதத்தின் போதனைகளை அலட்சியப்படுத்தி விட்டு, அதற்கு பதிலாக மனுஷீக போதனைகளாகிய நித்திய வேதனை மற்றும் இயல்பான சாவாமை முத-யவைகளோடு மனுஷீக கருத்துக்களையும், வழி முறைகளையும் மிகவும் உறுதியாய் பற்றிக் கொண்டிருந்தமையால், இவ்வித ஐக்கியம் அல்லது கூட்டணிகள் வாஞ்சையோடு ஆலோசிக்கப்பட்டு பின்பற்றப்பட்டன. இதுவே நடைபெறக்கூடிய பேராபத்து ஆகும். இது நிச்சயமாய் படுமோசமான எல்லைவரை போகக்கூடிய பிழையாகும். ஏனெனில் அது "கிறிஸ்துவின் போதனைகளையும்" "பரத்தி-ருந்து வருகிற ஞானத்தையும்" புறக்கணித்துவிட்டு அதற்கு பதிலாக தன்னிடையே இருக்கும் தங்கள் சொந்த ஞானவான்களின் ஞானத்தின் மீது சார்ந்திருக்கின்றனர். இது "அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டுப்போகும்" *(ஏசா 29:14)* என்ற வசனத்தின்படி தெய்வீக முறைகளையும் ஆலோசனைகளையும் எதிர்ப்பது எத்தனை அறிவீனமாய் இருக்கிறது.



இப்படியாய் இருந்தும்கூட முற்போக்கான குருமார்களும் மற்ற அநேகரும் வருங்காலத்தில் சபையின் பணிகளும், குணங்களும் எப்படிப்பட்டவைகளாய் இருக்கவேண்டும் என்று அநேக காரியங்களை நடைமுறையில் இருக்கும்படி அமைத்தனர். இவைகள் உலக கருத்துக்களைக் காட்டிலும் மிகவும் மோசமான அளவுக்கு கொண்டுவர திட்டமிட்டனர். அதனுடைய கிரியைகள் எப்படி இருக்கிறது என்றால் ஏதோ திருந்தாத உலகத்தை தன்னிடம் இழுத்து, அதற்கு ஒரு சுதந்திரமான பொருளாதார ஆதரவை கொடுப்பதைப் போல இருக்கிறது. ஆகவே, இதை செய்து முடிக்க முழு ஆதரவும், விருப்பமும் கொடுக்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டது. ஆனால், இக்காரியங்கள் தன் குடும்பங்களில் இருப்பதை கவனித்தும், வேறு எங்கோ இவைகளை படித்தும் இருந்ததினால் இவ்வகையான மனப்போக்கை குறித்து உண்மை கிறிஸ்தவர்கள் அதிர்ச்சி அடையவில்லை.

மெத்தடிஸ்ட் குருமார்களின் பத்திரிக்கையாகிய "தி நார்த் வெஸ்டர்ன் கிறிஸ்டியன் அட்வகேட்டில்" வெளியானது; அதுவே தற்போதைய மெத்தடிஸ்டுகளின் நிலைமை என்று ஆசிரியரால் ஒப்புக்கொள்ளப்பட்டு கே-யாய் விமர்சிக்கப்பட்டது; இதைக் காட்டிலும் மெய்யான தெய்வீகத் தன்மையின் வீழ்ச்சிக்கு வ-மையான வேறு ஆதாரம் நமக்கு இருக்கக்கூடுமோ. ஆதரவான கருத்தாகவோ அல்லது கே-யான விமர்சனமாகவோ எப்படியானாலும் யாரால் சொல்லப்பட்டதாயினும், உண்மை உண்மையே. ஒருவேளை வலுக்கட்டாயமாக எழுதப்பட்டதாகவோ அல்லது பாவ அறிக்கையாகவோ இருந்தாலும் கூட ஒரு சிரத்தையுள்ள ஊழியர் தன் சொந்த சபை பத்திரிக்கையில் வெளியிட்டியிருக்கிறார். அதன் முழுவிவரத்தையும் நாங்கள் கீழ்க்கண்ட பகுதியில் கொடுத்திருக்கிறோம்:

### அமெரிக்க மெத்தடிஸ்ட் சபையின் சில அம்சங்கள்

"18ம் நூற்றாண்டில் வெஸ்- மற்றும் ஒயிட் ஃபீல்ட் ஆகியவர்களின் தலைமையில் மத சீர்திருத்தம் நடந்து அதன் மூலம் ஆங்கிலோ-சாக்சன் வழியாரின் நெறிமுறைகள் புனிதமாக்கப்பட்டன. மேலும் சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களில் அதை அதிகப்படுத்த செயல்பாடுகள் புதிய வேகத்தோடு செயல்படுத்தப்பட்டன. அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளின் மத சார்பற்ற சரித்திர ஆசிரியர்கள், இவ்விரு மாமனிதர்களால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கங்களுக்கு கூடுதல் நன்மதிப்பை சேர்க்கும் விதத்தில் நமது நாகரீகம் வளர்ந்து பெருகும்படியாக, நவீன சபை ஊழியங்களுடன் இந்த போதனைகளும் சேர்ந்திருக்கிறது. மக்கள் மனதில் மிகவும் அழுத்தமாய் பதிந்திருந்த பிரபலமான உறுதியான கொள்கைகளுள் ஒன்றான "தன்னிஷ்டம்" என்ற கொள்கை இவர்களாலும் இவர்களது ஆதரவாளர்களாலும் இவ்வுலக அரசாங்கத்தில் புதுமையான அனுபவங்களின் பரிசோதனையோடு பிரசங்கிக்கப்பட்டன. இந்த போதனைகள் நம் அமெரிக்க முற்பிதாக்களிடையே மிகவும் விநோதமாய் பரவியது. மன்னர்களின் கெடுபிடியி-ருந்து விடுபட்டு, பாதிரிமார்கள் நிறைந்த தேசிய மயமான சபைகளாலும் வெறுப்படைந்து இருப்பவர்களுக்கு, தன்னுடைய தலையெழுத்தை இப்போதும் இதன் பிறகும் தீர்மானிக்கும் உரிமை உண்டு என்கிறதான போதனையை விட கூடுதலான மகிழ்ச்சியையும் இவர்களது அரசியல் விருப்பங்களோடு ஒத்துப்போகக்கூடியதுமான விஷயம் எதுவும் இருக்க முடியுமோ.

"மெத்தடிஸ்டுகள் வ-யுறுத்தியதும், புது இங்கிலாந்தில் ஒயிட் ஃபீல்டால் பிரசங்கிக்கப்பட்டதுமான 'புது பிறப்பு' என்ற போதனையானது ஏதோ புதுமையான, இதுவரை கேள்விப்படாத புது கதை ஒன்றை கூறுவதுப்போல இருந்தது. அதேசமயம் உலகத்தாரும், மதநம்பிக்கை அற்றவர்களும் கூட ஆதரவு கண்களோடு இதை பார்ப்பது போன்ற ஒரு விளைவை ஏற்படுத்தியது. இந்த போதனையானது 'மனமாறுதலை' வற்புறுத்தியதோடு மட்டுமன்றி, ஒரு மெத்தடிஸ்டினை எளிதாய் அவனது நடத்தையினால்



உலகத்தாரிடமிருந்து வேறுபடுத்திக்காட்டும் அளவுக்கு அவரின் அனுதின வாழ்வில் ஒரு மாறுதலையும் வற்புறுத்தியது. 'இந்த தேசங்களில் ஆவிக்குரிய பரிசுத்தத்தை பரப்பும்' பெரிதான காரணத்துக்காகவே சபைகள் உருவாக்கப்பட்டன. இதை தனது கொடியில் பொறித்திருப்பதின் மூலம் போர் ஆரவாரத்தில் சபை வெற்றி கண்டது.

"இந்த தேசத்தில் மெத்தடிஸ்ட் சபை ஆச்சரியமான வெற்றியை பெறுவதற்கான மற்றொரு உண்மையான காரணம் சந்தோஷத்துடன் வரவேற்கப்பட்ட சாதாரண மக்களிடையே செய்யப்பட்ட சாதாரண, பிரபலமான ஊழியமேயாகும். மதசம்பிரதாயங்களில் அதிகம் பயிற்சி இல்லாதவர்களே இந்த வெளிப்படையான முக்கியத்துவமற்ற ஆனால், முக்கியமான உண்மையை பாராட்டக்கூடும். சபைக் காரியங்களை குறித்த அக்கறை ஏதும் இல்லாத பட்சத்தில் உங்களுக்கு ஒரு சபையின் ஒழுங்குகளும், ஆராதனை முறைகளும் தெரியாது என்பதை காட்டிக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லாமல் எந்த சபைக்கும் நீங்கள் சென்று அதன் ஆராதனையில் பங்கு பெறலாம். ஆகவே, ஆதி அமெரிக்க மெத்தடிஸ்ட் சபையின் முறைமையானது பிற்காலத்தில் பழமையான உலக மதங்களின் ஆடம்பரங்களால் நெறிதவறியவர்களுக்கு மிகவும் பொருத்தமானதாய் இருந்தது. உயர்தர உடைகள், பரிசுத்த குல்லாக்கள், மகுடங்கள், கிரீடங்கள் மற்றும் அங்கிகள் யாவும் இவர்களது சாதாரண எளிமையான ரசனைகளுக்கு எதிரே விரும்பத்தகாதவைகளாய் இருந்தன. தங்களது அன்பின் சுதந்திரத்துக்கு பிரார்த்தனை செய்து தன் சுய கௌரவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து தனது மனுஷீகத்தை மேன்மையாய் கருதும் எந்தவிதமான மத்தியஸ்தரும் இல்லாமலேயே அவர்களே தங்கள் வேண்டுதல்களை எல்லாம்வல்லவரிடம் ஏறெடுக்கலாம் என்று அந்த மதம் அவர்களுக்கு கற்பித்தது.

"இந்த சபை குறிப்பிடும்படியான வெற்றி அடைய காரணமானவைகளில் ஒரு உண்மை என்னவெனில், ஆண்டவரின் சாட்டை என்ற சிறிய கயிறுகளை அது இன்னும் கைவிடவில்லை. அந்த ஆரம்ப நாட்களில் வேளா வேளையில் தகுதியற்றவர்களையும், போ-யானவர்களையும் சபையை விட்டு நீக்கும்படியான ஒரு

தூய்மை படுத்தும் பணி நடந்தது. இது சபையில் மட்டுமன்றி சுற்றியிருந்த சமூகத்திலும் ஒரு அனுகூலமான பலனைக் கொடுத்தது. விசுவாசம் இல்லாதவர்களை வெளியே துரத்தும் பணியோடு கூட அடிக்கடி வரும் புயலுக்குப் பிறகு சுற்றுப்புறத்திலுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் கூட சுத்தமடைந்துவிடும். மேலும், இதைப் பார்க்கும் பரிகாசக்காரர் கூட சபை அங்கத்தினராவது என்பதில் ஏதோ விஷயம் இருக்கிறது என்று நினைக்கக்கூடிய அளவு இருந்தது.

“நான் எழுதுகிறபடியான வெற்றியை அடைந்ததற்கு உதவிபுரிந்த வேறு ஒரு உண்மை காரியமும் உண்டு. அது தான் அந்த சபை பெற்றிருந்த உண்மையான ஊழிய பிரயாணம் சந்தேகமின்றி அந்நாட்களில் அநேக புகழ் பெற்றவர்களும், ஒழுக்கமுடைய ஜாம்பாவன்களும் இருந்தனர். மேலும், உறுதியான சீரிய மனித பண்புகளுடைய அவர்களின் செல்வாக்கானது இங்கு அவருக்கு தொடர்ந்து வாழும் ஸ்தலம் இல்லை. அவரது வயோதிக காலத்திற்கு எந்த மூலதனமும் இல்லை. தனது ஊழியத்தையோ அல்லது ஆதாரத்தையோ பாதுகாத்துக்கொள்ள எந்த ஒப்பந்தமும் தேவையில்லை. மிகுந்த பேராவலுடன் அடையும்படி ஜனங்கள் தேடும் காரியங்களை இவர்கள் வெறுத்து ஒதுக்கி, தன்னையே பட்சித்துவிடும் அளவுக்கான கொழுந்துவிடும் ஆர்வத்துடனும், எந்த இடத்தில் அவசியம் என்று தோன்றினாலும், அங்கு அதை பின்பற்றி, நற்செயல் செய்ய வேண்டியவர் அல்லது எதிர்பார்க்கப்படுவர் என்ற எண்ணம் இருந்தது.

“இந்த நாட்டில் உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பது பழங்காலத்து மெத்தடிஸ்டுகளின் பாடல்களால் காண்பிக்கப்பட்டது. நல்ல ராகத்தோடு கூட முக்கியத்துவம் வாய்ந்த அர்த்தம் நிறைந்த வார்த்தைகளோடு, போதனைகள் நிறைந்த இப்பாடல்கள் இன்னும் ஜீவனுடன் ஆட்சி புரிகின்றன. இவ்விதமாய் பாடும் பாடல்களில் வெறும் இசை கவர்ச்சி இருப்பது மட்டுமன்றி அது ஒரு மத பயிற்சி. எத்தனை நாகரீகம் அற்றவராக இருப்பினும் அந்த மக்கள் மத கொள்கைகளில் போதிக்கப்பட்டனர். இந்த சத்தியப்பாடலை சிறுபிள்ளைகள் அல்லது பெரியோர் மனதிற்குள் பாடும்போது அது கின்டர் கார்டன் (அ) குயின்சி முறையிலான பாடதிட்டத்தை விட அதிக வ-மையாய் இருக்கிறது. இவ்வண்ணமாக மதபோதனைகள் எந்த தர்க்கத்துக்கும் இடமின்றி சிறுபிள்ளைகள் மற்றும் மதம் மாறுகிறவர்கள் மனதில் பதிந்துவிட்டது. எனவே அதன் பின் வரும் எந்த முரண்பாடான கருத்தும் அவர்களை அசைக்க இயலாது. அது இன்னமும் அப்படியே தொடர்கிறது என்பதை காண்பிக்கிறது.



“வெற்றியின் காரணிகள் யாவும் பழமையானதாக மாறிவிட்டன. ஆகவே மெத்தடிஸ்ட் எப்பிஸ்கோபல் சபையானது புதிய வெற்றியின் நியமத்தை நிறுவி இருக்கிறது.

“நான் ஒரு பெருமை பேச்சு பேசுகிறவனாக எண்ணப்படாமல் அதற்கு பதில், சமீபத்திய சரித்திரத்தின் வெளிப்படையான உண்மைகளை சோதித்து பார்க்கிறவனாக இருப்பேனாக. இதுவரையில் போதனைகளின் தரத்தை பொருத்தமட்டில் அவைகள் சபையில் பெற்றிருந்த ஸ்தானத்தில் எந்தவித மாறுதலும் இல்லை. ஆனால் பெரும்பான்மையான அதன் செய்கைகளின் நோக்கத்தினாலும், விதத்தினாலும் திடீரென்று ஒரு நாகரீக வளர்ச்சியின் தோற்றமும், ஒளிவீசும் ஒரு புதுமையும் காணப்பட்டது. இந்த மாபெரும் சபையின் மனோநிலையும் தோற்றமும் இந்த அளவிற்கு மாறி உள்ளது. ஆகவே, அமெரிக்காவின் மத நலனில் ஆர்வம் உள்ளவர்கள் இந்த மாற்றங்களை ஆராய வேண்டும்.

“‘நீ மறுபடியும் பிறக்கவேண்டும்’ என்ற இந்த புதுப்பிறப்பின் போதனையானது எவ்வித பாதிப்பும் இன்றியே இருந்தது. ஆனால், நவீன முன்னேற்றங்கள், பழங்காலத்தில் தனது கண்டிப்பான கட்டுப்பாடுகளினால் அநேக நல்ல ஜனங்கள் சபைக்கு வருவதை தடுத்துவிட்டதை போன்ற காரியங்களி-ருந்து சபையை மீட்டது. ஏனெனில் இவர்களால் இப்படிப்பட்ட போதனைகளை ஒப்புக்கொள்ள இயலவில்லை. மேலும் “பரிசோதனைக்குரிய மதம்” என்று கூறப்பட்டு வந்ததை அறியவும் இவர்களால் இயலவில்லை. இப்போது அனைவருக்கும் இரட்சிப்பு என்று நம்புவோரும் ஒரே கடவுள் என்று நம்புகிறவர்களும் தங்கள் கடமையை முழு ஐக்கியத்தோடு தைரியமாய் செய்வதாக அடிக்கடி உணர்கின்றனர்.

“தற்காலத்து ஊழியமானது மிகவும் நாசூக்காகவும், நாகரீக வளர்ச்சியுடனும் அநேக முன்னணி சபைகளில் இருப்பது போல்

இருக்கின்றது. அதன் குருமார்களும் அந்த தயவைக் கண்டதால் பரிசுத்தத்தைக் குறித்து வ-யுறுத்தும்படி மிகவும் நன்றாக பயிற்சி அளித்தனர். ஆனால் முழுவதும் புனிதமாக்கப்படாத மனிதனிடமும் கூட எந்த தீமையும் இல்லை என்கிற அந்த பரவலான புனிதத்தன்மையை போதிக்கின்றனர். பழங்காலத்து குறுகலான வழி என்ற போதனையை போன்று இதை ஆதரிக்க வேண்டுமாயின், தற்காலத்தில் அது சான்ட்டகா வட்டாரத்திலும் எப்ராத் லீக் ஆட்களிடத்திலும் ஒட்டுமொத்தமாய் ஏற்றுக் கொள்ளப்படும்படியாய் இருக்காது.

“பழங்காலத்து எளிமையான ஆராதனை முறைமைகள் இன்னும் கிராமப்புற மக்களிடையே இருந்து வருகிறது. ஆனால், இக்காலத்து இசை, கலை மற்றும் இலக்கிய உணர்வும் கொண்ட, நாகரீக வளர்ச்சியடைந்த நகர்புற சபைகளில், முன்னோர்களின் பழக்கவழக்கமான தன்னிச்சையான தீவிரமிக்க ஜெபங்கள், கூச்சல்களுக்கு பதிலாக மிகவும் நேர்த்தியானவைகளுக்கு எடுத்துக்காட்டுகளைப் போல் அநேக இடங்களில் நடக்கின்றன. இந்தவகை மாற்றத்தை, விரும்பத்தக்க மனப்போக்கை ஆட்சேபிக்க வேண்டுமாயின், இந்த கலாச்சார உயர்வானது அவலட்சணமான மற்றும் தவறான வழி நடத்துதலோ என்ற கேள்வி எழுகிறது.

“சபையானது தான் ஒரு சோதனை அல்லது பரீட்சிக்கப்படும் காலகட்டத்தில் இருந்தபோது, அப்போதிருந்த தனது தலைவர்களைப் போலவே அத்தனை கண்டிப்போடு இருப்பதில் மிகவும் கவனமாய் இருந்திருக்கக்கூடும். ஆகவே, இழப்புகளும் அக்காலத்தில் மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால், தற்போது பகுத்தறிவுள்ள, ஞானமான மற்றும் விவேகமான மனிதர்கள் செழுமையும், செழிப்புமான சபையை, சட்டதிட்டத்தின் மதவைராக்கியமான ஆளுமையால் ஆபத்துக்குள்ளாக்க மறுக்கின்றனர். அப்படிப்பட்ட காரியம் செல்வந்தர்களையும், புத்தி கூர்மை உள்ளவர்களையும் குற்றப்படுத்தும்படியானதாக இருக்கும். ஜனங்கள் அத்தனை வளைந்து கொடுக்கிறவர்களாய் இல்லாவிட்டாலும், சுவிசேஷம் நிச்சயமாக அப்படித்தான் இருக்கிறது. சபையானது மனுஷனை காப்பாற்றவே உருவாக்கப்பட்டது. அவர்களை திசை திருப்புவதற்காகவோ,



அதைரியப்படுத்துவதற்காகவோ அல்ல. ஆகவே நமது பரந்த நவீன யோசனைகள், தான் என்ற மனப்போக்கை அதிகம் வளர்த்து மற்ற ஜனங்களை விட நாம் மேலானவர்கள், அவர்கள் நமது ஐக்கியத்தி-ருந்து நீக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்தை ஏற்படுத்தியது.

“இந்த தவறான அபிப்பிராயங்களின் பிடிவாதத்தோடு கூடிய அன்பின் உபசார விருந்துகளும், குழுக்களின் கூடுகைகளும் அநேகரது மனதிற்கு குற்றவுணர்வை ஏற்படுத்தும் விதமாக இருக்கின்றன. இவைகள் எப்ஒர்த் (லீக்குகளுக்கும்) மற்றும் என்டீவர் சொசைட்டிகளுக்காக கைவிடப்பட்டன.

“சபை சரித்திரத்திலேயே இதுவரை இல்லாத அளவுக்கு இருக்கும் தற்போதைய நாகரீக வளர்ச்சியுடைய ஊழியமானது ‘சர்ப்பத்தைப் போல் புத்தி கூர்மையும், புறாவைப் போல் கபடற்றதுமாய்’ என்கிற ஆண்டவரது கட்டளைக்கு ஒத்திருக்கிறது. பழங்காலத்து பிரசங்கிமார்கள் மிகுந்த ஆடம்பரத்தில் புரளுகின்ற பெரிய செல்வந்தராகிய தங்கள் சபை அங்கத்தினரிடத்தில், தேவனுக்காகவும், மனுக்குலத்துக்காகவும் தன்னுடையவைகளையெல்லாம் விற்று, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவை பின்பற்றும்படி கூறுகிற செய்கையை செய்யக்கூடியவர் இவர்களில் யார் இருக்கிறார்கள்? அப்படியே சொன்னாலும் அந்த ஊழியர் மிகுந்த துக்கத்துடனே வெளியே சென்றுவிடுவார் என்று தான் நான் கருதுகிறேன்.

“பரிணாம வளர்ச்சியே சட்டமாகவும், முன்னேற்றமே கொள்கை வாசகங்களாகவும் இருக்கும்பட்சத்தில், மூர்க்கத்தனமும் தீவிரவாதமும் என்றுமே வருத்தப்படும்படி வைத்துவிடும். மேலும், நாகரீகமான மெத்தடிஸ்ட் ஊழியருக்கு இவ்விரண்டை குறித்த குற்ற உணர்வு என்றுமே இருந்ததில்லை. தேவ அன்பானது மிகவும் ஆக்கினை நிறைந்ததாக இருப்பதாய் குற்றப்படுத்தும் மூர்க்கமும், முரட்டுத்தனமான போதகர்கள் சற்று இறங்கி வந்து, தன் செயல்முறையில் மிகுந்த கவனமும், தெரிந்தெடுப்பில் நேர்த்தியும் தனது சிந்தனை, உணர்வுகள் மற்றும் நம்பிக்கைகளில் கவிதை நயமும், குற்றமில்லாதும் இருக்கின்ற தனது வாரிசுகளுக்கு இடம் கொடுக்கின்றனர்.

“ஐந்து வருடம் என்ற கால வரையில் ஒரு ஊழியர் ஒரு பொறுப்பில் நிலைநிற்கும்படியாக இருந்தது. ஆனால், அதுவும் அடுத்த பொதுக்கூட்டத்தில் 1896ல் நிராகரிக்கப்படும். ஆரம்பத்தில் ஒருவர் 6 மாத காலத்திற்கு ஒரு பொறுப்பில் செயல்படலாம் என்றிருந்தது. அதற்கு பிறகு அது 1 வருடம், 2 வருடம்,3 வருடம் ஆக இருந்து முடிவில் ஐந்து வருடம் என ஆக்கப்பட்டது. ஆனால் ஆளுகை செய்யும் சபையின் கலாச்சார வட்டாரமானது தனது சமூக வெற்றிகளையும் நிரந்தரத்தன்மையையும் பிற சபைகளோடு ஒப்பிட்டு பார்க்கும் போது சாத்தியமான அளவுக்கு மேன்மையாக இருக்கவேண்டுமாயின் தன் சபையின் குருகுலம் நிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதை கண்டுகொண்டது. ஆகவே, சபையின் வ-மையான உபதேசிமார்கள் சமூக மற்றும் இலக்கிய வட்டாரத்தின் மையமாக இருக்க வேண்டியதாக இருக்கும். ஆகவே, உபதேசிமார்களின் பணியானது முன்பிருந்தது போன்று அல்ல என்பதை நினைவில் கொண்டு, எல்லா கோணத்திலும் கவரும் கூட்டங்களை நடத்துவதுடன், சுவிசேஷகரராகவும் இருக்கவேண்டும். உபதேசிமார்கள் பிறரைக் காட்டிலும் இக்காரியத்தை மிகவும் தெளிவாக கண்டுகொண்டனர். மாபெரும் எழுப்புதலை உண்டாக்குகிறவர்களையே விரும்பத்தக்க பிரசங்கிமார்களாக சபைகள் தேடிச்சென்றன. மேலும், வருடாந்திர கூட்டத்தில் பிரசங்கிமார்கள் அவ்வருடத்தில் எத்தனை பேரை மதம் மாற்றியிருக்கின்றனர் என்ற அறிக்கையை சமர்ப்பிப்பதும் வழக்கமானதாக இருந்தது. ஏனினும் இப்போது அத்தனை ஆர்வமில்லாத, ஒரு நிலையற்ற கருத்தே மக்களையும், குருக்களையும் தற்போது ஒரே விதத்தில் ஆளுகை செய்கிறது. இந்த மாபெரும் சபைகள் இந்த ஊழியர்களே தற்போதைய கலாரசனையை பூர்த்தி செய்யும்படி எதிர்பார்த்தனர். ஏனெனில் இதுவே நாகரீக நாஸ்திக பாதிப்பை தவிர்த்து, அறிவாளிகளையும், நவநாகரீக மனிதர்களையும் ஈர்க்க முடியும். அது மட்டுமன்றி வருடாந்திர முடிவு கூட்டத்தில் இந்த பிரசங்கிமார்களின் அறிக்கையில், அவரது ஊழியத்தின் பண வசூல் தொகையே வற்புறுத்தப்பட்டது. இந்த நவீன மெத்தடிஸ்ட் பிரசங்கிமார்கள் மிகச்சிறந்த வசூல்காரர்களாய் இருக்கின்றனர். இதனால் தனது பழைய பாணியான எச்சரிப்புகளோ அல்லது வேண்டுதல்களோ மனித இதயங்களில் பிடிக்க முடியாதிருந்த இடத்தை இவர்களால் பிடிக்க முடிகிறது.



“கிறிஸ்தவ தலைவர்கள் இதுவரையில் மிகவும் நன்றாக கற்றிருக்கும் மாபெரும் பாடமானது என்னவெனில், சுவிசேஷமானது கலாச்சார மற்றும் நாகரீக உணர்வுகளை என்றுமே குற்றப்படுத்தும்படியாய் இருக்கக்கூடாது. காலத்துக்கு ஏற்றவிதமாய் வளைந்து கொடுத்து அனுசரித்து போவதே அவர்களுக்கு எதிர்காலக்கதவுகள் விசாலமாய் திறக்கப்படுகிறதற்கு பிரயோஜனமாயிருக்கும். ‘பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும்’ என்ற தேவ தூதரது பாட்டை விட, சபைக்கு இலட்சியம் என்று வேறு எதை கண்டுகொள்ள முடியும் என்று போதகர் சாஸ்.எ.கிரேன் கூறுகிறார்.”

எம்.இ. சபையின் பேராயர் ஆர்.எஸ்.ஃபோஸ்டர் கூறுவதை காஸ்பல் டிரம்ட் என்ற பத்திரிக்கையி-ருந்து எடுத்து கீழே கொடுக்கிறோம். வேறு பாஷையில் இருந்தாலும் கூட அவை எல்லாம் இதே சாட்சியையே கொண்டிருக்கின்றன. சிலருக்கு அது மிகவும் எளிமையானதாக இருக்கும், பேராயர் தன் விருப்பங்களுக்கு மாறாக கண்ணீரோடு கூட ஓய்வு பெற வேண்டியுள்ளது.

**பேராயர் ஃபோஸ்டர் கூறியதாவது:**

“தேவனுடைய சபையானது இன்று உலகத்தோடு வழக்காடிக்கொண்டிருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் அதன் ஸ்தானத்தை தெய்வீகமில்லாத அளவுக்கு தாழ்த்த முயன்று வருகின்றனர்; கேளிக்கை அரங்குகள், திரை அரங்குகள், நிர்வாணம் மற்றும் நன்நடத்தையற்ற கலை, சமூக ஆடம்பரங்கள் மற்றும் நெறியற்ற எல்லா காரியங்களும் சபைக்குள் நுழைய ரகசியமாய் வழி அமைக்கின்றனர். உலகத்தின் திருப்திக்காக, கிறிஸ்தவர்கள் லெந்து நாட்கள், உயிர்தெழுந்த நாள், புனித வெள்ளி மற்றும் சபை அலங்காரங்களை பெரிதும் கையாள்கின்றனர். இது சாத்தானின் மிகப்பழமையான தந்திரமே. யூத சபையானது பாறையில் மோதி சிதறியது. ரோம சபையும் அதே பாறையில் மோதியே நாசமடைந்தது. புராட்டஸ்டன்ட் சபையும் அதே அழிவினிடத்திற்கு விரைந்து கொண்டிருக்கிறது.

"நாம் பார்க்கிறவண்ணமாகவே நமது பேராபத்தானது உலக காரியங்களுக்கு ஒத்ததாக இருக்கின்றது. ஏழைகள் ஒதுக்கப்படுதல் தெய்வீகத்திற்கு மாற்றாக உருவ அமைப்புகள், ஒழுக்கம் கைவிடப்பட்டநிலை, பலனை எதிர்பார்க்கும் ஊழியங்கள், கலங்கமான சுவிசேஷம் ஆகிய இவை எல்லாவற்றின் மொத்த உருவமாக நாகரீக சபை இருக்கிறது. மெத்தடிஸ்டுகளே இவ்விதமான விளைவுகளுக்கு பொறுப்பேற்க வேண்டும். மேலும், நூறு வருடம் அது கடந்து வந்த பாதையை பார்த்தால் சரித்திரத்தின் அதிசயம் போலவே தெரியும். ஆனால் தன்னைச் சுற்றிபார்க்கிற ஒருவன் இந்த உண்மைகளை பார்க்கத் தவறக்கூடுமா?

"மெத்தடிஸ்டுகளே தேவ வார்த்தைக்கு புறம்பே நடந்து கொள்வதிலும், தங்கள் சொந்த ஒழுங்கு முறைகளிலும் மிதமிஞ்சிய ஆடை, அலரங்காரத்திலும், நவநாகரீகத்திலும் வேறு மற்ற சபையைப் போல் இல்லையா? பெண்கள் அதிலும் பெரும்பாலும் ஊழியக்காரரின் மனைவிகளும், மகள்களும் பொன்னும், முத்தும் விலையேறப்பெற்ற அணிகலன்களையும் போட்டுக் கொள்ளவில்லையா? ஜான் வெஸ்-, பேராயர் ஆஸ்பரி இவர்களால் எளிமையான உடை அணிதல் வற்புறுத்தப்படவில்லையா? இவர்களுக்கு இணையாக மதிக்கப்படும் தற்கால மெத்தடிஸ்டுகளின் வட்டாரத்தில் மதவெறி என்று கருதப்பட்ட விதத்தில், ஹெஸ்டர் ஆன் ரோகர்ஸ், லேடி ஹட்டிங்டன் போன்ற அநேகர் இவ்வித எளிமையான உடைகளை உடுத்தவில்லையா? நமது முக்கிய நகரங்களின் மெத்தடிஸ்ட் சபைக்குள் சென்று அப்பம் எடுக்கும் அங்கத்தினர்களின் ஆடை, அணிகலனைக் கண்டு அதற்கும் சினிமா அல்லது நடன அரங்குகளுக்கு செல்பவருக்கும் வித்தியாசம் காட்ட முடியுமா? இசையில் உலகத்தனம் காணப்படவில்லையா? மிகவும் சிரத்தையோடு ஆடை அணிந்து நகைகளால் அலங்கரித்துக்கொண்ட பாடற்குழுவினர் அநேக விஷயங்களில் மத சம்மந்தமான வெளிப்பாடுகள் ஏதுமின்றி ஆனால் அடிக்கடி நாஸ்திகர்களை பரிகாசிக்கும் வகையில் மிகவும் கலை நயமும் நாடக பாணியிலான செயல்களும் நாடக அல்லது சினிமா அரங்கத்தை ஒத்ததாகவே இவர்களது ஆவிக்குரிய தொழுகைகள் இருக்கின்றன. இவ்வித உலக சம்பந்தமான செயல்களால் ஆவிக்குரிய காரியங்கள் அழிந்துவிட்டன.



"முன்பெல்லாம், மெத்தடிஸ்டுகள் குழுக்களாக கூடி சோதனைக்குட்பட்டிருக்கும் மதத்தை குறித்த சாட்சி கூறுவார்கள். தற்போதெல்லாம் இவ்வித கூட்டங்களில் வெகுசிலரே கலந்து கொள்கின்றனர். மேலும் அநேக சபைகளில் இது கைவிடப்பட்டுவிட்டது. சபையின் மேலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் ஜெபக்கூட்டங்களில் ஜெபித்து, சாட்சிகூறி உற்சாகத்துடன் பங்குபெற்றனர். ஆனால் தற்போதோ வெகுசிலரே காணப்படுகின்றனர். ஆதியில் ஆரவாரமும், துதித்தலும் அதிகம் காணப்பட்டது. ஆனால் அவ்விதமான பரிசுத்த உற்சாகங்களும், சந்தோஷ குதூகலங்களும் தற்போது மதவெறியாகக் கருதப்படுகின்றன.

"உலக சம்மந்தமான சமூகப்பணிகள், விற்பனைகள், விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவைகள் முற்காலத்தில் இருந்த மதசம்மந்த கூட்டங்கள், எழுப்புதல் கூட்டங்கள், கூடுகைகள், ஜெபக்கூட்டங்கள் ஆகியவைகளின் இடங்களை பிடித்துக் கொண்டன.

"மெத்தடிஸ்ட்டுகளின் ஒழுங்குமுறையானது ஒரு செத்த, உயிரற்ற பத்திரமாகவே மாறிவிட்டது என்பது எத்தனை உண்மையாய் இருக்கிறது. பொன்முத்துக்கள் அல்லது விலையேறப்பெற்ற அணிகலன்களை அணிவதை அதன் ஒழுக்கவிதிகள் தடுக்கின்றன. ஆனால் இதன் அங்கத்தினர் ஒருவர் கூட இதை மீறுவதைக் குறித்து சிந்திப்பதே இல்லை. அதுமட்டுமன்றி இவைகளை அறிவுறுத்தும் புத்தகங்களை வாசிப்பதைக் கூட தவிர்ப்பது மட்டுமன்றி இவ்விதமான மாறுபாடுகளை ஏற்றுக்கொள்வதின் நிமித்தம், தெய்வீகத்துக்கு எவ்வித ஊழியமும் செய்வதும் இல்லை. இருந்தும் கூட சபைகளே இவ்வித நிகழ்ச்சிகள், விழாக்கள், விற்பனைகள் மற்றும் கேளிக்கைகளை நடத்தி வா-பர் மற்றும் வயோதிகர்களின் ஆவிக்குரிய ஜீவியத்தையே பாழ்படுத்திவிடுகின்றன. அதுவே மிகவும் அச்சுறுத்தும் மோசமான நிலைமைக்கு கொண்டு போகிறது.

"ஆதியில் இருந்த மெத்தடிஸ்ட்டுகள் கிறிஸ்துவுக்காக தியாகம் செய்யவும் பாடுபடவும் முன் சென்றனர். அவர்கள் துன்பப்பட்டு, கஷ்டப்பட்டார்களேயன்றி செல்வ செழிப்பான

சௌகரியமான இடங்களை நாடிச் செல்லவில்லை. அவர்கள் தங்களுடைய உயர்வான சம்பளத்தினாலும் நேர்த்தியான குடியிருப்புகளினாலும் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நாகரீக சபை அங்கத்தினர்களாலும் மகிமைப்படாமல், இயேசுவுக்காக சம்பாதித்த ஆத்துமாக்களினால் மகிமைபட்டனர். எப்படியாய் மாறிப்போனது! விசுவாசமும், நீடிய பொறுமையும் பரிசுத்த வல்லமையும் இல்லாத கூ-க்காரர்களைப் போன்று ஊழியமானது மிகவும் பெலவீனமாய், வலுவற்றதாய், எதிர்க்கும் சக்தியற்றதாய், காலத்துக்கேற்றவிதமாய் செய்கிற ஊழியமாகிவிட்டது. முத-ல் மெத்தடிஸம் என்பது மகாபெரிய சத்தியத்தின் மையத்தில் குடிகொண்டிருந்தது. தற்போதோ அதன் பிரசங்க மேடைகள் பொதுப்படையான மற்றும் பிரபலமான சொற்பொழிவுகளையே பெரும்பாலும் கடைப்பிடிக்கின்றன. முழுமையான பரிசுத்தமாக்குதலை குறித்த மகிமையான போதனைகள் பிரசங்க மேடையில் அபூர்வமாய் கேட்கப்படுபவைகளாகவும் சாட்சி கொடுப்பதே அரிதானதாயும் ஆகிவிட்டது."

சபை ஒருமைப்பாட்டின் நிமித்தமாக சபை வா-பர்களின் அனுதாபங்களையும், ஒத்துழைப்புகளையும் பெற விசேஷமான முயற்சிகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், வேதபோதனைகளையும், முரண்பாடான மதகாரியங்களையும் விலக்கி மிகவும் நட்புறவோடு அவர்களை ஒன்று சேர்ப்பதனால் முதியவர்களான அங்கத்தினர்களையும் கூட ஒருமைப்பாட்டுக்குள் கொண்டுவரும்படியான நேரடியான முயற்சிகள் இன்னும் அதிகமாக எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காகவே எல்லா பிரிவின் தலைவர்களும் திட்டமிட்டு உழைத்து வருகின்றனர். மேலும் அநேக சிறுசிறு முயற்சிகள் சிக்காகோவில் 1893 ன் கோடைகாலத்தில் நடந்த மாபெரும் மதக்கூட்டத்தில் உச்சநிலையை அடைந்தது. இந்த பேரவையின் முக்கிய நோக்கமானது தலைவர்களது மனதில் மிகவும் தெளிவான ஒன்றாய் இருந்தது மட்டுமன்றி மிகவும் தெளிவான ஒரு வெளிப்பாட்டையும் காணமுடிந்தது. இதன் அடிப்படை கொள்கையின் மீது சிறிதளவு கூட அக்கறையின்றி சபையின் பெருந்திரளான அங்கத்தினர்கள் தங்கள் தலைவர்களை பின்பற்றினர். அதாவது இது கிறிஸ்துவத்துவம் அல்லாதவைகளுடன்



கிறிஸ்தவத்தை விட்டுக் கொடுத்து செய்து கொண்ட ஒரு பெருத்த சமரசம். மேலும் எல்லா மதங்களின் ஐக்கிய இயக்கமானது விஸ்தாரமாய் திட்டமிடப்பட்டு 1913ம் ஆண்டு நடத்தப்படவுள்ளது. உண்மையில் பார்க்கப்போனால் கிறிஸ்தவ ஐக்கியம் இந்த விட்டுக்கொடுப்பதில் மிகவும் தீவிரமாய் தள்ளப்படுகிறது. தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்க வாஞ்சிக்கிறவர்கள் இந்த மதத்தலைவர்களது தெளிவான போதனைகளை நன்கு மனதில் வைத்துக்கொள்ளட்டும்.

போதகர் ஜெ.எச். பேரோஸ், டி.டி, (சிக்காகோ) உலக மத மகாசபையின் முன்னணி சக்தியாய் இருந்தவர். இதன் விரிவாக்கத்தின் முன்னேற்றத்திற்காய் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கையில், சான் ஃபிரான்சிஸ்கோ பத்திரிகைக்கு மதஒருமைப்பாட்டை கொண்டுவருவதற்கான விசேஷ வேலையை குறித்து விளக்கி கீழ்கண்டவாறு கூறியிருக்கிறார்:

"சுருக்கமாய் அவர் கூறுகிறது என்னவெனில், மதங்களின் ஒருமைப்பாடானது, இரண்டு வழிகளில் ஏதாவது ஒன்றின் மூலமாகவே வரும். முதலாவது, விசுவாசம் மற்றும் போதனைகள் ஆகியவற்றின் பொதுப்படையில் மிகவும் நெருக்கமான சபைகள் ஐக்கியப்படவேண்டும். உதாரணத்துக்கு மெத்தடிசம் மற்றும் பிரிஸ்பிடேரியனிஸம் போன்றவைகள். இப்படியாய் உட்பிரிவுகள் தங்களுக்குள் ஒன்றுபடும்போது பொதுவாக புரோட்டஸ்டன்ட் சபைகள் ஒன்றுக்கொன்று இணையும். மேலும், கல்வியின் மேம்பாடான வளர்ச்சியினால் கத்தோ-க்கர்களும், புராட்டஸ்டன்ட்டாரும் தங்களுக்குள் இருக்கும் வேற்றுமைகள் மிகவும் முக்கியமானவைகள் அல்ல என்று கண்டுகொண்டு ஐக்கியப்பட தொடங்குவார்கள். இது மெதுவாக முகமதிய மார்க்கம், புத்த மார்க்கம், பிராமண மார்க்கம், கன்புயூசிய மார்க்கம் முத-ய பிற மதங்களையும் முடிவில் ஐக்கியப்படுத்திவிடும். ஆனால் அதற்கு கொஞ்ச காலம் ஆகும்.

"இரண்டாவது மதங்கள் மற்றும் சபைகள் யாவும் திரு. ஸ்டெட் (டைட்டானிக்கில் ப-யான ஆன்மீகவாதி) என்பவரின் கூற்றுப்படி தர்ம சாஸ்திரத்தின் அடிப்படையில் சமூக ஒருமைப்பாட்டுக்குள் ஒன்று சேர்ந்துவிடும். இந்த மத அமைப்புகள்

யாவுமே அவைகள் இருக்கும் சமூகத்தின் மீதான பொதுவான அக்கறையும் பொதுவான கடமைகளும் கொண்டவை. ஆகவே இவர்களது முன்னேற்றத்திற்காக இவர்கள் இணைந்து கூட்டாக செயல்படுவார்கள். நானே இந்த ஐக்கியமானது முதலாவது சொல்லப்பட்ட முறையின் வழியே வரவேண்டும் என்று முயற்சி செய்ய பார்க்கிறேன். எது எப்படியானாலும் மத பேரவைகள் யாவும் ஒரு உருவத்தைப் பெற துவங்கிவிட்டன. போதகர் தியோ.ஈ.சீவர்ட் நியூயார்க்கில் 'கிறிஸ்தவ ஐக்கியத்தின் சகோதரத்துவம்' என்பதில் தனது பெரிதான வெற்றியைக் குறித்து அறிக்கை வெளியிட்டார். அதனிடையில் சி.சி.போனி என்பவரது தலைமையில் சிக்காகோவில் சமீபத்தில் ஒரு பெரிய வலுவான 'மதங்களின் ஒருமைப்பாட்டின் முன்னேற்றத்திற்கான சங்கம்' ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது."

## மதங்களின் மாபெரும் மன்றம்

தி சிக்காகோ ஹெரால்ட் என்ற பத்திரிக்கை இந்த மன்றத்தின் முன்னேற்றங்களை குறித்து மிகவும் சாதகமாக விமர்சித்ததாவது :

"பாபேல் குழப்பத்துக்கு பிறகு இதுவரையில் அநேக மதங்கள், பலவகையான கோட்பாடுகள், கடந்த இரவு பெரும் கலையரங்கத்தில் இருந்ததுபோல அடுத்தடுத்து நின்று, கையோடு கை கோர்த்து, ஏறக்குறைய ஒரு மனதோடு நின்றதில்லை. சரித்திரம் எழுதப்பட்ட நாள் முதலாய் பலதரப்பட்ட மக்கள் இவ்விதமான அன்பின் தங்கச் சங்கி-யால் பிணைக்கப்பட்டதில்லை. உலகத்தின் அத்தனை நாடுகளும் கிறிஸ்தவ மார்க்கம், புத்தமார்க்கம், பேப்டிஸ்ட், முகமதியன், மெத்தடிஸ்ட் கத்தோ-க்கர், கன்பியூஷியன், பிராமிண், பிரிஸ்பிடோரியன், பேன்திஸ்ட், மோனோதிஸ்ட் மற்றும் பா-திஸ்ட் ஆகியவைகளின் கோட்பாடுகள் மனித சிந்தனைகள் மற்றும் நிலையை பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்கைகள் யாவும் அனுதாபம், மனிதாபிமானம் மற்றும் மரியாதை ஆகிய ஒரு பொதுவான கட்டுக்குள் கடைசியாக ஒன்றோடு ஒன்று சந்தித்துக் கொண்டன."

இந்த மகா சபையின் எண்ணமும் கூட, பாபே-ன் பாஷை குழப்பத்தை நியாயப்படுத்தும் வகையில் பின்னிட்டு



பார்க்கவேண்டியபடி இருக்கிறது என்ற உண்மை எத்தனை தெளிவாய் இருக்கிறது! இந்த சபையில் ஒரு குறிப்பிடத்தக்க நிழ-ன் உண்மைப் பொருளை இவர் அறிந்துகொண்டார் இல்லையா?

மேலே கூறப்பட்டது போதகர் போரோஸ் அவர்கள், புராட்டஸ்டன்ட் ஊழியர்கள், கத்தோ-க்க குருமார்கள், யூத போதகர்கள், மற்றும் இப்போதிருக்கும் மற்றெல்லா மதத்தலைவர்களிடையே சிக்காகோ கூட்டத்தில் தொடர்பு கொண்டமையால் வெளிப்பட்டிருக்கும் நட்புறவு குறித்து மிகவும் உற்சாகமாக பேசுகிறார். அவர் கூறியதாவது:

"நான் சார்ந்திருக்கும் என்னுடைய மதம் ஒன்றே உண்மையானது என்ற எனது எண்ணம் மிகவும் பழமையானது. அது காலம் கடந்துவிட்ட ஒரு எண்ணம். எல்லா மதங்களிடமிருந்தும் கற்றுக்கொள்வதற்கு ஏதோ ஒன்று இருக்கிறது. எந்த ஒரு மனிதனையும் தன் சகோதரனாக பாவித்து அவன் கரங்களை பற்றிக்கொள்ள தயாராக இல்லாதவன் எவனுமே தன் மதம் என்று சொல்-க் கொள்ளும் அந்த குறிப்பிட்ட மதத்துக்கு தகுதி அற்றவனாகவே இருக்கிறான். யாரோ ஒருவர் கூறியதாவது : மிகச் சிறந்ததொரு மதம் வருவதற்கு தற்போது காலம் கனிந்துள்ளது. தன்னுடைய குறிப்பிட்ட மதம் ஒன்றே மிகவும் மேன்மையானது என்ற எண்ணம் எந்த மனிதனும் மேற்கொள்ள இயலாது. அந்த காலம் கடந்துவிட்டது. இந்த இடத்தில் ஞானவான்களும், கல்விமான்களும் கிழக்கின் இளவரசரும், தலைமை குருவோடும், போதகர்களோடும், ஊழியக்காரரோடும், பிரசங்கிமார்களோடும் மற்றும் குருமார்களோடும் நட்புறவோடு சந்தித்துக் கொள்வர். இவர்கள் அனைவரும் முதல்முதலாக ஒரு பேரவையாக கூடி அமர்வார்கள். இது எல்லா மத கொள்கைகளின் தடைகளையும் உடைத்தெறிய உதவும் என்று நம்பிக்கை அளிக்கிறது."

டிசைப்பிள்ஸ் சபையினரான போதகர் டி.காமர்ஸ் கூறியது : "மதங்களின் முதல் பேரவையானது இன்னும் மிகப்பெரிய அளவில் சகோதரத்துவத்தை உருவாக்குவதற்கு முன்னோடியாக இருப்பதைப் போல் தோன்றுகிறது. இந்த சகோதரத்துவமானது ஒன்றினை மட்டுமன்றி எல்லா சரித்திர புகழ் வாய்ந்த பெரிய நம்பிக்கைகளில், சிறந்த ஒன்று என்று கருதும் வகையில், ஒன்றாகவே இணைந்து ஒரே

உலகளாவிய மதம் என்றாகிவிடக்கூடும். இந்த பெரிய நம்பிக்கையின் வழிகாட்டுத-னால் ஒருவேளை நாமும் கூட நமது சொல், நடையை திருத்திக்கொண்டு கிறிஸ்தவ ஐக்கியம் என்பதைக் குறித்து பேசுவதைக்காட்டிலும் மதங்களின் ஐக்கியம் என்று பேச வேண்டியிருக்கும். மகத்தான சமய வழிபாடுகளையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக கொண்டுவருவதை நான் மிகவும் விரும்புகிறேன். அப்போது இயேசு கௌதமபுத்தரோடும், கன்பியூஷியசோடும் மற்றும் சௌராஷ்டியரோடும் தம்மை தோழமைப்படுத்திக் கொள்வார்."

தி நியூயார்க் சன் என்ற பத்திரிக்கை இந்த விஷயத்தைக் குறித்து ஒரு தலையங்கத்தில் கூறுவதாவது :

"இந்த பேரவையானது எதை நிறைவேற்ற முடிவெடுத்திருக்கிறது என்று நம்மால் சரியாக புரிந்துக் கொள்ள முடியவில்லை. எப்படியானாலும், இந்த சிக்காகோ திட்டமானது எல்லா வகையான மத சம்மந்த மற்றும் மதத்துக்கு அப்பாற்பட்ட கருத்துக்களை எல்லாம் சேர்த்து ஒரு திருப்தி செய்யக்கூடிய அளவிலான விதத்தில் இருக்கும்படியான ஒரு புதிய மற்றும் கலவையான மதம் ஒன்றினை உருவாக்க சாத்தியம் இருக்கிறது. இவ்விதமான ஒரு புதிய கிளர்ச்சியான மதம் எல்லா பக்கமும் திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கக்கூடிய ஒன்றை உருவாக்குவது என்பது மிகப் பெரிய வேலை. ஆனால் சிக்காகோ அதில் மிகவும் நம்பிக்கையாக இருக்கிறது."

கிறிஸ்தவ சிந்தையும் உலக சிந்தையும் திடீரென்று இசைவாக இருப்பதாக நிரூபிப்பது என்பது உண்மையில் மிகவும் விசித்திரமாக இருக்கும். எதிர்மாறான சிந்தையுள்ளவர்கள் நேருக்கு நேர் பார்க்க வேண்டியிருக்கும். ஆனால் உண்மையில் காரியங்கள் அப்படி இல்லை. யாக் 4:4ன்படி உலக சிந்தையானது உண்மையில் இன்னும் கூட தேவ சிந்தைக்கு விரோதமாகவே இருக்கிறது. ஏனெனில், அதன் கோட்பாடுகளும், வேதாந்தங்களும் வீணும் மூடத்தனமுமாய் இருக்கிறது. அப்போஸ்தலராலும் தீர்க்கதரிசிகளாலும் எழுதப்பட்ட வேத வார்த்தைகளில் அடங்கியிருக்கும் தெய்வீக வெளிப்பாடு ஒன்று மட்டுமே தெய்வீக சத்தியம்.



அதன் தலைவர் திரு. போனி என்பவர் கூறுகிறபடி பேரவையின் சிறப்புமிக்க கருத்துக்களில் ஒன்றானது இவ்வுலகின் அத்தனை மதங்களையும் ஒன்று கூட்டி ஒரே சபையாக்குவதே ஆகும். "இதன் மூலம் அவர்களது பொதுவான குறிக்கோள்களையும் ஒற்றுமைக்கான பொதுவான ஆதாரங்களையும் ஒழுங்குப்படுத்தலாம். இதன் மூலம் 19ம் நூற்றாண்டில் மதங்களுடைய ஆச்சரியமான முன்னேற்றமானது பரிசீ-க்கப்படும்."

பார்க்கப்போனால், இந்த பரிசீலனையின் உண்மையும், ஒரேயொரு கருத்துமானது, இந்த நியாயத் தீர்ப்பின் நேரத்துக்கு பதில்கூறி, அதன் மூலம் கூடுமானவரை சபையின் முன்னேற்றத்தைக் குறித்து நல்லதொரு தோற்றத்தை அளித்து, கிறிஸ்தவம் உண்மையில் தோல்வி அடைவதாக இருந்தும், சபையானது தனது மகாபெரிய வெற்றியின் குதூகலத்தில் தற்போது இருக்கிறது என்கிறதான ஒரு நம்பிக்கையின் கருத்தை கொண்டுவருவதாகும். ஆகவே விரைவில், வெகுவிரைவில் சபையின் கடமையான இவ்வுலகத்தையே மதம் மாற்றுகிற காரியம் முழுமை பெற்றுவிடும் என்றும் கூறப்படுகிறது. இப்போது இதை சபை எப்படி செய்து முடிக்க தீர்மானிக்கிறது என்பதையும், இது எப்படி செய்து முடிக்கப்பட இருக்கிறது என்பதையும் கூர்ந்து கவனியுங்கள். இவைகள் நீதியும், சத்தியமுமான சிந்தையுடன் அல்ல. ஆனால், சமரசம், வெளி வேஷம் மற்றும் மோசடி ஆகிய சிந்தையுடன் ஆகும். பேரவையின் தீர்மானம் சகோதரத்துவமும் மத ஒருமைப்பாடும் ஆகும்; மேலும் இதை எந்த வகையிலாவது அடைந்துவிட வேண்டும் என்ற இவர்களது அளவுகடந்த ஆர்வம் மிகவும் துல்-யமாய் வெளிப்படுகிறது. மேற்கூறிய விதத்தில், விக்கிரக ஆராதனைக்காரருடன் கூட ஒத்துப்போகும் வகையில் தங்கள் பாணிகளை திருத்தி மாற்றி அமைத்துக் கொண்டு, கிறிஸ்தவர் என்ற பெயரை கைவிட்டு, இயேசுவானவர் தனது மகா மேன்மையை விட்டிறங்கி புறஜாதி துறவிகள், கௌதம புத்தர், கன்பியூஷியஸ், சௌராஷ்டியர் ஆகியவர்களுக்கு பக்கத்தில் தாழ்மையுடன் தன் ஸ்தானத்தை தாழ்த்திக்கொள்ள வேண்டும் என்பதிலும் மிகவும் திருப்தியடைகிறார்கள். புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களிடமிருந்த

சந்தேகம், குழப்பம், விட்டுக்கொடுத்தல் மற்றும் அவிசுவாசம் ஆகியவையும், ரோமன் கத்தோ-க்கர் மற்றும் மற்றெல்லா மதங்களிடமிருந்து தற்புகழ்ச்சி, ஆலோசனைகள் மற்றும் அதிகாரங்கள் ஆகிய இவைகளே இந்த பேரவையின் மிகத்தெளிவான அம்சங்களாக இருந்தன. இது ரோமன் கத்தோ-க்க கார்டினல் கிப்பன்ஸ் அவர்களுடைய ஜெபத்துடனும் தொடங்கப்பட்டு, ரோமன் கத்தோ-க்க பேராயர் கேன் என்பவரது ஆசீர்வாத ஜெபத்துடன் முடிந்தது. மேலும், கூட்டத்தின் போது ஜப்பானின் ஷின்டோ குருவானவர் கூட்டுக்கதம்பமாய் இருந்த கூட்டத்தின் மீது 8 மில்-யன் தெய்வங்களிடமிருந்து ஆசீர்வாதத்துக்காக தொழுகை நடத்தினார்.

இரண்டு வருடங்கள் முன்னதாகவே போதகர் பேரோஸ் பிறநாடுகளிலுள்ள விக்கிரக புறஜாதியார் பிரதிநிதிகளுடன் தொடர்புகொள்ள ஆரம்பித்தார். மெசிடோனியா கூக்குரலை உலகெங்கும் உள்ள புறஜாதி குருக்களுக்கும், அப்போஸ்தலருக்கும் அழைப்பு விடுத்து, "வாருங்கள், வந்து எங்களுக்கு உதவுங்கள்!" என்றார். இந்த அழைப்பானது பிரிஸ்பிடேரியன் சபையினிடத்தி-ருந்து அவர்கள் சார்பானதாக இருக்கிறது. இதனால் பலவருடங்களாக கூட நியாயத்தீர்ப்பு என்னும் கொடிய சோதனைக்குள்ளாய் கடந்து போகிறது. மேலும், அந்த பிரிவினரிடையே மற்றும் கிறிஸ்தவ உலகம் முழுவதும் நிலவும் நிலையற்ற குழப்பங்களுக்கு தெளிவான காரணமாயும் இருக்கிறது. மேலும் கிறிஸ்தவ உலகமானது இந்த மாபெரும் கூட்டத்துக்கு தயாராகின.

கிறிஸ்தவர்களின் எல்லா பிரிவின் பிரதிநிதிகளும் எல்லா புறஜாதியார் பிரதிநிதிகளுடன் கூட அமர்ந்து பதினேழு நாட்களுக்கு ஆலோசனை நடத்தினர். இவர்களை மிகவும் ஆதரித்து வாழ்த்தும் வகையில் கிறிஸ்தவ பேச்சாளர்கள், "கிழக்கி-ருந்து சாஸ்திரிகள்" என்று கூறினர். இது வேதத்தி-ருந்து எடுக்கப்பட்ட பகுதி. இது மிகவும் வித்தியாசமான கூட்டத்தாரை குறிப்பிட பயன்படுத்தப்பட்ட சொற்றொடர். இஸ்ரயே-ன் தேவனை விசுவாசிக்கும் வெகு சிலரை, யேகோவாவின் அபிஷேகம் பண்ணப்பட்ட இயேசுவின் பிறப்பை முன் குறித்த இஸ்ரவே-ன் தீர்க்கதரிசிகளை குறிக்கவும், மேலும்



மிகவும் பொறுமையாய் அவரது வருகைக்காய் காத்து கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தவர்களை குறிக்கவும், தேவனை அறியாத உலக ஞானத்தின் வசீகரப்படுத்தும் சிந்தனைகளின் மீது எவ்வித கவனமும் செலுத்தாதவர்களை குறிக்கவும் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாகும். இவ்விதமாய் உண்மையான ஞானிகளுக்கு, தாழ்மையானவர்களாக இருந்தாலும், தேவன் தமது ஆசீர்வாதமான சமாதானம் மற்றும் நம்பிக்கையின் செய்தியை வெளிப்படுத்தினார்.

பேரவையின் கடைசி நாளில் மையக்கருத்து அறிவிக்கப்பட்டது. "மனித குடும்பம் முழுவதுக்குமான மத ஒருமைப்பாடு" "பல்வேறுபட்ட நம்பிக்கைகளால் முன்வைத்து அடையாளம் கண்டுகொள்ளப்பட்டதான பூரணமான மதத்தின் உட்கருத்துக்கள்," "அடிப்படை மதத்தின் குணாதிசயங்கள் மற்றும் மனித சமுதாயத்தின் வரப்போகிற மத ஒருமைப்பாட்டின் மையம் என்னும் கண்ணோட்டத்தில் முடிவு செய்யப்பட்டவை."

ஆகவே, கிறிஸ்தவ (?) ஊழியர்கள் இந்த கடைசி காலத்தில் மத ஒருமைப்பாட்டின் மையப் பொருள் எதுவாக இருக்கவேண்டும் என்பதையோ பூரண மதத்தின் குணாதிசயங்கள் யாவை என்பதையோ முடிவு செய்ய முடியாத அளவுக்கு இப்படியானதொரு தங்களுடைய சொந்த குழப்பத்தில் இருக்கின்றனர். உலகளாவிய மதத்தினை அடைய உண்மையில் இவ்வளவு ஆவலுடனா இருக்கிறார்கள்? இதற்காக கிறிஸ்துவத்தின் அடிப்படை கோட்பாடுகள் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றனரோ? கிறிஸ்தவர் என்ற பெயரையுமா? "பொல்லாத ஊழியக்காரனே, உன் வாய்ச் சொல்லைக் கொண்டே உன்னை நியாயத்தீர்க்கிறேன்" என்று கர்த்தர் கூறுகிறார். இந்த கூட்டம் முடிந்தபின் சிலகாலம் பலவித மதங்களின் பிரதிநிதிகளை ஒழுங்குபடுத்தி ஒரு அமைப்புக்குள் கொண்டு வருவதற்காகவே செலவிடப்பட்டது.

இந்த திட்டமானது மிகவும் துணிகரமும் பயங்கரமுமான ஒன்றாக இருந்தது. ஆகவே தேவனுடைய உண்மையான பிள்ளை ஒவ்வொருவரின் கண்களும் அநேக வெளிப்படையான உண்மை சம்பவங்களையும் காணும் பொருட்டு திறந்திருக்க வேண்டும். அவையாவன : (1) மீகா 6:1-2 ன் படி கர்த்தருக்கு அவருடைய

*ஜனத்தோடு வழக்கு இருக்கிறது. ஆனால் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர் பெயரளவிலான கிறிஸ்தவ சபை இந்த நாளின் தீர்க்கமான நியாய தீர்ப்பின் முன் நிற்பதற்கு நம்பிக்கையின் கடைசி கட்டத்தில் நின்று விட்டது. (2) தங்களுடைய அவிசுவாசம், ஆர்வமின்மை, தெய்வீக தன்மையற்ற நிலையினால் பின்னிட்டு போய்விட்டதை உணர்ந்து தன்னை திருத்திக் கொள்வதற்கு பதிலாக, தங்களுடைய மனுஷீக கொள்கைகளின் தவறுகள் வெளிப்பட்டதாலும், தேவனுடைய குணாதிசயத்தை தாங்கள் தவறாய் பிரயோகித்துவிட்டதனாலும் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் முன் நிற்பதற்கு ஒருவருக்கொருவர் ஆதரவாய் இருப்பதற்காக, ஒருவித ஐக்கியத்தில் பிரத்யேகமான ஒத்துழைப்பை பெற எல்லா புறஜாதி உலகத்தையும் தங்களுக்கு உதவியாக பெறுவதற்கு மிகவும் முனைப்பான விடாமுயற்சியில் இருக்கின்றனர். (3) மேலும் இவ்வுலகத்தின் நட்புறவுக்காகவும், அதன் மூலம் கிடைக்கும் அதிகாரம், செல்வாக்கு போன்ற லாபங்களுக்காகவும் கிறிஸ்துவையும், அவரது சுவிசேஷத்தையும் விட்டுக்கொடுக்கவும் தயாராக இருக்கின்றனர். (4) உலக சிந்தைக்கும், சத்தியத்தின் சிந்தைக்கும் அல்லது சத்தியத்துக்கும், அதற்கு புறம்பான தப்புகளுக்கும் வித்தியாசம் காணமுடியாத அளவிற்கு குருட்டாட்டம் இருக்கிறது. (5) அதோடு ஏற்கனவே அவர்கள் கிறிஸ்துவின் போதனைகளை காணும் நிலையை இழந்துவிட்டிருக்கிறார்கள்.*

*சந்தேகமின்றி இந்த தற்கா-க உதவிகள் யாவும் அநேக இடங்களி-ருந்து ஆர்வத்தோடு இவர்கள் வாஞ்சிக்கிற விதமாகவே கிடைக்கும். ராஜாக்களும், வியாபாரிகளும் இவ்வுலகத்தின் அனைத்து வர்த்தகர்களும் வரப்போகிற பாபிலோனின் அழிவைக் கண்டு அந்த மாநாகரத்துக்காய் அழுது புலம்பும்படி இவ்வுலகம் முழுவதுமே இதில் பங்கு கொள்வதற்கான ஆயத்தத்தில் ஒரு அடி எடுத்து வைத்திருப்பதாகவே இருக்கிறது. (வெளி 18:9,11, 17-19)*

*இந்த மாபெரும் மத பாராளுமன்ற தொடர் நிகழ்ச்சிகளை பார்ப்போமாகில், அவை நம்மை அநேக குறிப்பிடும்படியான அம்சங்களுக்கு நேராக இழுக்கிறது. அவை (1) ரோம, கிரேக்க கத்தோ-க்க சபைகளைத் தவிர மற்ற பெயரளவிலான கிறிஸ்தவ சமூகத்தின் சந்தேகப்படும், ஒப்புரவாகும் மனோநிலைமை. (2)*



*கத்தோ-க்க மற்றும் பிற மதங்களின் உறுதியான, தைரியமாய் செயலாற்றும் மனப்போக்கு. (3) கிறிஸ்தவ மதத்தின் பல்வேறு பிரிவுகளின் மிஷினரிமார்கள் வேதத்துடன் கூட தங்களுடைய முரண்பாடான கோட்பாடுகளை அநேக அயல்நாடுகளுக்கு சுமந்து சென்று போதித்த போதனைகளுக்கும்,வேதத்தில் கூறப்பட்டுள்ள கிறிஸ்தவ போதனைகளுக்கும் உள்ள தெள்ளத்தெளிவான வேறுபாட்டை புறஜாதி ஞானி கூர்ந்து கவனிப்பது. (4) மிஷினரிமார்களின் முயற்சிகளும் அதனால் தங்கள் தேசத்தில் அவர்களுக்கு இருக்கும் எதிர்கால எதிர்பார்ப்புகளையும் குறித்த புறஜாதியாரின் அபிப்ராயம். (5) வெளிநாடுகளுக்கு வேதத்தை எடுத்துச் சென்றவர்களின் தவறான விளக்கங்களை எதிர்க்க முடியாதிருக்கும் அநேகரின் ஆதிக்கம். (6) பேரவையின் தற்கால செல்வாக்கும் எதிர்பார்க்கப்படும் பின்விளைவுகளும். (7) தீர்க்கதரிசன கண்ணோட்டத்தில் பார்க்கப்படும் அதன் பொதுவான தோற்றம்.*

### சத்தியத்தை விட்டுக்கொடுத்து ஒப்புரவாகுதல்

*மாபெரும் சமய பேரவையானது கிறிஸ்தவர்களால் முக்கியமாக புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களாலேயே ஒன்றுகூடும்படி அழைக்கப்பட்டது; முற்றிலுமே புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவ தேசத்திலேதான் இது நடத்தப்பட்டது; புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களின் தலைமை மற்றும் ஆணையின் கீழ்தான் நடந்தது. ஆகவே, அதன் எல்லா செயல்பாடுகளுக்கும் புராட்டஸ்டன்ட்டாரே பொறுப்பாவார்கள். இதை உற்று நோக்கும் போது புராட்டஸ்டன்ட்டாரின் தற்போதைய மனநிலையான விட்டுக்கொடுத்து ஒப்புரவாகுதலும், விசுவாசமின்மையுமே காணப்படுகிறது. இந்த பேரவையானது அந்திகிறிஸ்து மற்றும் புறஜாதியாரின் நட்புறவுக்காக கிறிஸ்துவையும், அவரது சுவிசேஷத்தையும் விட்டுக்கொடுக்கவும் தயாராக இருந்தது. இந்த பேரவை கூட்டத்தை ஆரம்பிக்கவும் மற்றும் முடிக்கவும் ஆகிய இரண்டு கௌரவங்களையும் போப்மார்க்க பிரதிநிதிகளுக்கே அளித்தது. மேலும் பலதரப்பட்ட புறஜாதி தேசங்களின் நம்பிக்கைளும், அதன் பிரதிநிதிகளால் அத்தனை விஸ்தாரமாய்*

முன்வைக்கப்பட்டபோது, கிறிஸ்தவர்கள் பல்வேறு கருத்துக்களை பெருவாரியாய் விவாதித்த போதிலும் கூட, அக்கூட்டத்தில் எவ்விதத்திலும் கிறிஸ்தவ ஒழுங்குகளின் அறிமுகமே இல்லாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. அங்கிருந்த புறமத பிரதிநிதிகளுக்கும், ஞானிகளுக்கும் செல்வாக்குடையவர்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கக் கிடைத்த மாபெரும் சந்தர்ப்பத்தை இந்த பெரிய கூட்டத்தினர் கண்டுகொள்ளாமல் அசட்டை செய்தது எத்தனை விநோதமானதாக காணப்படுகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை குறித்து கிறிஸ்தவ பிரதிநிதிகள் வெட்கப்பட்டார்களா? (ரோம 1:16) பதினாறு தடவைக்குக் குறையாமல் இப்பேரவையின் கூட்டங்களில் ரோமன் கத்தோ-க்கர்கள் பெரும்பாலும் அதிகபட்ச கவனத்தை கவர்ந்தனர்.

இதுமட்டுமன்றி, கிறிஸ்துவின் அடிப்படை போதனைகளை அழிப்பதிலேயே தங்களை மிகவும் ஆழ்ந்து ஈடுபடுத்திக் கொண்டு, இவ்வகையில் கிறிஸ்துவத்தை பறைசாற்றிக் கொண்டிருந்தவர்களும் அங்கிருந்தனர். இவர்கள் கிறிஸ்தவ வேதத்தில் அவர்களது சந்தேகங்களைக் குறித்தே புறஜாதியின் பிரதிநிதிகளிடம் பேசினர். அதுவும் வேதத்தின் விவரங்கள் யாவும் வீழ்ந்து போவதற்கு பெருவாரியான காரணமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், அதை நிறைவு செய்ய அவர்களது போதனைகள் யாவும் மனுஷீக காரணங்களும், தத்துவங்களும் கூடுதலாய் சேர்க்கப்பட வேண்டியதாய் இருந்தது. ஆனால், அவைகள் எந்த அளவுக்கு ஒத்துபோகிறதோ அந்த அளவுக்கு ஏற்றுக்கொள்வர். நாங்கள் மிகவும் ஐதீகமான கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்களும் கூட அங்கிருந்தனர். இவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்கே அடித்தளமான மீட்கும் பொருளின் போதனையை மறுத்தனர். வேறுசிலர், மனுஷரின் வீழ்ச்சியை மறுத-த்து அதற்கு நேர் எதிரான பரிணாம வளர்ச்சி தத்துவத்தை பறைசாற்றி, அதன் மூலம் மனிதன் ஒருபோதும் பரிபூரணமாய் படைக்கப்படவில்லை ; ஆகவே, அவன் என்றுமே வீழ்ந்து போகவில்லை. எனவே, அதற்கு பரிகாரமான மீட்பர் ஒருவர் அவனுக்கு அவசியமே இல்லை. அதுமட்டுமன்றி அவன் படைக்கப்பட்ட நிலையானது தெய்வீக சாயலுக்கு மிகவும் தூரமாக தாழ்ந்த நிலையாகவே இருந்தது; எனவே, அவன் பரிணாம



வளர்ச்சியின் செயல்பாட்டிலேயே இன்னும் இருக்கிறான்; மிகவும் பொருத்தமான வாழ்வை வாழ்வதே அவனது நியதி என்கின்றனர். இவைகள் வேதத்தின் போதனைகளான மீட்கும் பொருள் மற்றும் இழந்ததை திரும்ப பெறுதல் ஆகியவைகளுக்கு மிகவும் நேர்மாறானவைகளாக இருக்கின்றன.

அந்திகிறிஸ்துவின் அமைப்பான ரோம சபை மற்றும் கிறிஸ்தவம் அல்லாத விசுவாசங்கள் ஆகிய இரண்டுக்கும் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள் விட்டுக்கொடுத்து ஒத்துப்போகும் மனோநிலையை குறிக்கும் வகையில் சில சுருக்கமான குறிப்புகளை நாங்கள் கீழே கொடுக்கிறோம்.

டாக்டர் சாஸ் ஏ.பிரிக்ஸ் என்ற பேராசிரியர் பிரிஸ்பிடேரியன் வேதாகம மாநாட்டில் பரிசுத்த வேதாகமத்துக்கு எதிராய் ஆற்றிய உணர்ச்சிமிக்க சொற்பொழிவை கேளுங்கள். இந்த மாமனிதரை தலைவர் டாக்டர் பேரோஸ் அறிமுகப்படுத்தும்போது, இவரது திடமான கருத்தைக் குறித்த கல்வி, தைரியம் மற்றும் விசுவாசம் ஆகியவையே உலகளாவிய சபையில் இவருக்கு மிக உயர்ந்த ஸ்தானத்தை கொடுத்திருக்கின்றன என்றார். இது மிகப்பெரிய கைதட்டலோடு அங்கீகரிக்கப்பட்டது. இவர் கூறியதாவது:

“மத சம்பந்தமான கருத்துக்களை எடுத்துக்கூறி சொல்-க்கொடுப்பதில் மிகத்துல்-யமானது, ஊக்கம் அளிப்பது என்று மட்டுமே வேதத்தைக் குறித்து நாம் கூறலாம். தேவன் உண்மையானவர், அவரால் பொய் சொல்ல முடியாது. தன் சிருஷ்டிகளை தவறாய் வழி நடத்தவோ, ஏமாற்றவோ அவரால் இயலாது. எந்த எல்லைக்கும் அப்பாற்பட்ட தேவனானவர் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட மனிதனிடம் பேசும்போது, தவறில்லா வார்த்தைகளைத்தான் பேசவேண்டுமா? (என்ன அபத்தமான கேள்வி இது, தேவன் உண்மையை பேசவில்லை என்றால், பிறகு நிச்சயமாய் அவரும் உண்மையானவர் அல்ல). இது தேவனுடைய பேச்சை மட்டும் சார்ந்தது அல்ல. ஆனால் மனிதனுடைய கேட்கும் தன்மையையும், மட்டுமன்றி தேவனுக்கும் மனிதனுக்கும் இடையேயான தொடர்புக்கான முறையை கூட சார்ந்தது. தேவன் தன் வார்த்தையை சரியாகவே அனுப்பி இருக்கிறார் என்பதை நாம் உறுதி செய்துக் கொள்வதற்கு முன், அந்த

வார்த்தையை பெற்றுக்கொள்ளும் மனிதனின் தகுதியையும் காண்பிக்க வேண்டியது அவசியம். (படித்தவரும் இறையியல் பேராசிரியருமான சிலர் மனதில் கொள்ளவேண்டியது என்னவெனில், தேவன் தன்னுடைய சத்தியத்தை தெரியப்படுத்துவதற்கும், அதை வெளிப்படுத்துவதற்கும் தேவையான மிகச்சரியான காரணகர்த்தாவை தெரிந்தெடுக்க வல்லவர் ஆவார். அதை அவர் அப்படியே செய்தார் என்பது ஒவ்வொரு உண்மையான வேத மாணாக்கருக்கும் மிகவும் தெளிவாய் தெரியும். இப்படிப்பட்ட விவாதம் பரிசுத்த வேதாகமத்தின் நம்பகத்தன்மையை பலவீனப்படுத்தவதாகும், மட்டுமன்றி தெளிவான ஞானம் பெற்ற வாசகங்களின் அறிவு கூர்மைக்கு இது ஒரு அவமரியாதையும் கூட) பரிசுத்த வேதம் எந்த காரியத்திலும் தப்பிதத்தை கொண்டிருப்பதில்லை."

நியு ஹேவனைச் சேர்ந்த போதகர் தியோடர் முங்கர், கிறிஸ்துவை சிங்காசனத்தி-ருந்து இறக்கிவிட்டு அவரது இடத்திற்கு வீழ்ந்து போன பாவ மனுக்குலத்தை உயர்த்திவிட்டார். அவர் கூறுவதை கேளுங்கள்:

"கல்வாரியில்அறையப்பட்ட ஒரு யூதேயனை காட்டிலும் கிறிஸ்து மேலானவர். தேவனுடைய வல்லமை மற்றும் கிருபை பெருகுவதால் கிறிஸ்து தயாள இரக்கமுள்ளவராகவே இருக்கிறார். இந்த உண்மையின் உணர்வோடு இருக்கும் எந்த புத்தகமும் (இயேசு தேவனுடைய அபிஷேகிக்கப்பட்ட குமாரன் என்ற உண்மையை அல்ல, அபிவிருத்தியடைந்த மனித குலம் முழுவதுமே அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவில் பங்குள்ளவர்கள் என்ற உண்மையை கூறும் எந்த புத்தகமும்)கிறிஸ்துவின் இலக்கியத்தை சேர்ந்ததே."

தாந்தே, ஷேக்ஸ்பியர், கோயத், ஷெல்-, மேத்யூ அர்னால்ட், எமர்சன் மற்றும் அநேகரை உதாரணம் காட்டி மேலும் இவர் கூறுவதாவது :

"விதிவிலக்காய் சில இலக்கியங்களைத் தவிர ஊக்கமளிக்கிற எல்லா இலக்கியங்களுமே மனுகுலத்திற்கு பொருத்தமானதாய் அதன் தர்மசாஸ்திர ஆதாரங்கள் மீதும், தர்மசாஸ்திர முடிவுகளை வற்புறுத்துகிறவைகளாகவே இருக்கின்றன. (இதுவே மிகவும் அவசியமான கிறிஸ்தவமாக இருக்கிறது).... உலகத்தின் மேலே



அமர்ந்து அதன் எல்லா செயல்களின் ஆதாரத்தை சுழற்றிக் கொண்டிருப்பவர், தன்னிகரற்ற தேவனை குறித்து வ-யுறுத்தும் ஒரு இறையிலானது, மனித எண்ணங்களை இலக்கியத்தின் மூலமாய் கூறி தங்களை வெளிப்படுத்துவதை கட்டுப்படுத்தவில்லை. புலவர்கள், பரந்த எண்ணமும், உலகளாவிய சிந்தனையாளர் என்று அநேகர் கடந்து சென்றுவிட்டனர். இவர்கள் யாவரும் தேவனுடைய சத்தியத்தை இவ்விதமான விளக்கங்களினால் ஏமாற்றப்படும்படி தேவனுக்கு மிகவும் நெருக்கமாய் நிற்கிறார்கள்."

போஸ்டனை சேர்ந்த போதகர் டாக்டர் ரெக்ஸ்ஃபோர்ட் கூறியதாவது :

"என்னை பொருத்தவரை உலகில் எந்த இடமானாலும், எல்லா இடங்களிலும் பாவ அறிக்கையே உண்மையான தொழுகை .... எழுதப்படாத ஆனால் இந்த நேரத்தில் மிகுந்த செல்வாக்குள்ள கோட்பாடாக நான் கருதுவதாவது: உலகெங்கிலும் எந்த பக்தனும் தனக்கு தெரிந்ததில் மிகச்சிறந்த ஒன்றின் முன் மண்டியிடுகிறான், தனக்கு கிடைத்த தெளிவான வெளிச்சத்தில் உண்மையாய் நடக்கின்றான். இதுவே மோட்சத்தின் மேலான ஆசீர்வாதங்களுக்கு அவனை வழிநடத்தும்."

நிச்சயமாய் அவர் இக்காலத்தில் மிகவும் பிரபலமான மத நம்பிக்கைகளின் உணர்வை காண்கிறார். ஆனால் அப்போஸ்தலர் பவுல் மார்ஸ்மேடை மீதுள்ள "அறியப்படாத தேவனையா" பக்தர்களுக்கு அறிவிக்கிறார்? அல்லது எ-யா பாகா-ன் பூஜாரிகளை ஆதரித்தாரா? பவுல் நமது பாவங்களுக்காய் ப-யான கிறிஸ்துவை விசுவாசிப்பதே தேவனிடத்தில் சேருவதற்கான ஒரே வழி என்று கூறுகிறார். மேலும் பேதுரு சொல்கிறார்: "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை." அப் 4:12; 17:23-31; 1ராஜா 18:21,22

அவுட்லுக் பத்திரிக்கையின் ஆசிரியரும், நியூயார்க், புரூக்ளின் பா-மவுத் சபையின் முன்னாள் போதகருமான போதகர் லேமேன் ஆபோட் என்பவர் கூறுவதை கேளுங்கள்: கிறிஸ்துவினாலும், 12 அப்போஸ்தலராலும் நமக்கு

கொடுக்கப்பட்டிருக்கும் புதிய ஏற்பாட்டின் வழியாய் எந்த தேவ மனுஷனுக்கும் தேவையான சகல காரியங்களும் அருளப்பட்டிருக்கிறது என்ற தெய்வீக உணர்வானது எல்லா சபைகளுக்கும் உரியதே என்று கூறுகிறார். (2தீமோ 3:17) மேலும் கூறுகிறதாவது:

"தேவன் பாலஸ்தீனத்திலோ அல்லது சில சிறு பட்டணங்களில் இருப்பவர்களோடு மட்டுமே பேசி இருப்பதாக நாம் நினைக்கக்கூடாது. அவர் கிறிஸ்தவர்களோடு மட்டும் பேசி, மற்றவர்களிடம் மௌமனாய் இருப்பதாகவும் நினைத்துவிடக்கூடாது. அவர் எல்லா நேரத்திலும், எல்லா காலங்களிலும் பேசுகிற தெய்வம் என்பதை நாம் நம்புகிறோம்."

ஆனால் பாகால் தீர்க்கத்தரிசிகளிடம் அவர் எப்படி பேசினார்? யூத காலத்தில் தாம் தெரிந்துகொண்ட ஜனமாகிய மாம்சீக இஸ்ரயேலரிடத்திலும், சுவிசேஷ யுகத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலரிடத்திலுமேயன்றி, வேறொருவருக்கும் அவர் தம்மை வெளிப்படுத்திக் காட்டவில்லை. "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்." ஆமோ 3:2; 1கொரி 2:6-10.

இங்கிலாந்தின் லேடி சோமர்செட் என்பவரது கடிதத்தை தலைவர் பேரோஸ் கூடுதலான முன்னுரையுடனே வாசித்தார். இது ரோம சபைக்கு கீழ்க்கண்ட சலுகைகளை கொடுத்தது:

"தங்கள் விரோதத்தைக் காட்டிலும் தங்களுடைய ஒப்பந்தத்திற்கு இசைவாக சிந்தித்து தூண்டப்படக் கூடிய மனிதனின் எல்லா முயற்சிகளை குறித்து நான் பரிதாப்படுகிறேன்.... நாம் ஐக்கியப்பட இருக்கும் ஒரே வழி என்னவெனில், நம்மால் மாற்றிக் கொள்ளவே முடியாதிருக்கும் வேறுபாடுகளை குறித்த காரியங்களை என்றுமே பேசாமல் இருப்பதுதான். சந்தேகமின்றி அதின் தலையானது சரித்திர காலமாய் இருக்கும் குருமார் சம்மந்தப்பட்டதாகவே இருக்கிறது. ஆனால் உண்மையில், அவர் அதை நம்புகிறார், நானோ நம்பவில்லை. அயர்லாந்தின் ஆர்ச் பிஷப்பாகிய மாபெரும் சிறந்த குருவானவர் தனது இதயப்பூர்வமான



உதவிகளை நான் ஒரு புராட்டஸ்டன்ட் பெண்மணி என்பதற்காக அன்றி, ஒரு தன்னடக்கமான ஊழியக்காரி என்பதாலேயே செய்வதற்கு எந்த இடைஞ்சலும் வராமல் இருக்கட்டும். இங்கிலாந்திலும் இதேவிதமாக கார்டினல் மேனிங் என்ற அந்த பரிதாபத்துக்குரிய தலைவர் இருந்தார். மக்களுக்காகவே இருக்கும் -வர்பூ-ன் குருவானவர் Mgr.நகன்ட் இன்றும் உண்மையாகவே யாவராலும் மதிக்கப்பட்டும் அன்பு செலுத்தப்பட்டும் வருகிறார். இந்த பொன்னான சட்டத்தின் நடைமுறையிலான வரைமுறைகளைக் குறித்து இருக்கும் ஒருமனப்பட்ட கருத்தானது - கன்பியூஷியசால் எதிர்மறையாகவும், கிறிஸ்துவினால் உடன்பாடாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது நாம் யாவரையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவரக்கூடும்."

பாவத்துக்கு பரிகாரம் என்னும் பாதிரிமார்களின் போதனையானது மிகவும் சுலபமாய், கடந்த கால புனித சின்னமாகவும், அறிவுபூர்மான 19ம் நூற்றாண்டிற்கு தகுதியற்றதாகவும் கருதி ஒதுக்கி வைக்கப்பட்டது. வெகுசிலரே இதை பாதுகாக்கவேண்டும் என்று குரல் எழுப்பினர். பேரவையில் இந்த குரல் மிக குறைந்தபட்சமாகவே இருந்தது மட்டுமன்றி, இவர்களது கருத்தும் குறைந்த மதிப்புடையதாகவே இருந்தது. இந்த சிறுபான்மையினரில் போதகர் ஜோசப் குக் என்பவரும் ஒருவர். இவரது அபிப்ராயங்கள் பிறகு விமர்சிக்கப்பட்டது. அதன் பிறகு சிக்காகோ பிரசங்க மேடையில் முற்றிலும் கண்டனத்திற்கு உரியதானது. திரு.குக் அவர்கள் தன் உரையில் கூறும்போது கிறிஸ்தவ மதம் ஒன்றே ஒரே உண்மையான மதம், மட்டுமன்றி இதை ஏற்றுக்கொள்வது ஒன்றே மரணத்துக்குப் பிறகும் சந்தோஷத்தை தக்க வைத்துக்கொள்ள ஒரே வழியாகும் என்று கூறினார். இந்த பாவ நிவாரணமானது குருமார்களின் மூலம் வரும் மிக மோசமான பாவத்தைக் கூட களைந்துவிடும் என்பதை விளக்க ஷேக்ஸ்பியரின் கதாபாத்திரம் ஒன்றை கோடிட்டு காட்டி அவர் கூறியதாவது :

"லேடி மேக்பத்தை எடுத்துக்கொண்டால் லேடி மேக்பத்தின் பாவக்கறை பட்ட கரத்தை எந்தமதம் கழுவி விடமுடியும்? இந்த கேள்வியை நான்கு கண்டங்கள் மற்றும் கட-ன் தீவுகளின் முன் வைக்கிறேன். இந்த கேள்விக்கு உங்களால் பதில்

கூறமுடியாவிட்டால் நீங்கள் எந்த முக்கியமான நோக்கத்திற்காகவும் இந்த மத பேரவைக்கு வரவில்லை என்றே கூறலாம். முகமதியர்களிடம் கேட்கிறேன். உங்களால் இவளது பாவக்கறை படிந்த கரத்தை கழுவமுடியுமா? கன்பியூஷியஸ், புத்த மதத்தாரிடம் இந்த கேள்வியை திருப்புகிறேன். உங்களால் கறை படிந்த இவள் கரத்தை கழுவ முடியுமா?"

இந்த பேரவை முடிந்த பிறகு சிக்காகோவை சேர்ந்த தூய ஆத்துமாக்கள் சபையின் போதகர் ஜென்கின் லாயட் ஜோன்ஸ் என்பவர் இந்த பேரவையில் மிகவும் ஆர்வமுள்ளவராக இதற்கு கீழ்கண்டபடி பதில் கூறுகிறார்:

"பாவ நிவாரணத்தின் சாவாமையை நாம் காண, 'இயேசுவை நோக்கிப் பார்த்து இரட்சிப்படையுங்கள்' என்ற திட்டத்தை போஸ்டனின் மாபெரும் பேச்சாளர் பேரவையின் போது பிறமத பிரதிநிதி மற்றும் மாறுபட்ட எண்ணங்களின் பேராதரவின் நிமித்தம் மேற்கொண்டார். 'சிலுவையை நோக்கிப்பார்த்தால்' மட்டுமே அவளுக்கு பாதுகாப்பான நிலை உண்டு என்று அவர் வாக்கு செய்தார். அப்படிப்பட்ட அந்த காரியத்தின் தன்மையை, அந்த ஸ்தீரியின் குணாதிசயத்தை நாம் கவனிப்போம். உலகின் எல்லா மத பிரதிநிதிகளின் முகத்துக்கு நேராய் கிறிஸ்துவின் பாவ நிவாரணத்தின்படி 'ஒருவன் மறுபடியும் பிறவாவிடில் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கவே முடியாது' என்று மிகவும் ஆணித்தரமாய் கூறியிருப்பது உண்மையில் எவர் ஒருவராலும் செய்ய இயலாத காரியம். இந்த தெய்வீக பாவ நிவாரணமானது அவளது ரத்தம் படிந்த கரத்தை கழுவி வெண்மையாக்கி, கொலை பாதகியை பரிசுத்தமுள்ளவளாய் மாற்றும் என்று வ-யுறுத்தி பேசினார். கிறிஸ்தவ உலகுக்கு நான் சொல்லவேண்டியது என்னவெனில், நான் இதை நம்பவில்லை என்பதினால் மகிழ்ச்சியடைகிறேன். மேலும் நீதிநெறியின் மீது மிகுந்த ஆர்வமுடைய யாவரையும், நீதியின் நண்பர்கள் யாவரையும், நீதிக்காகவே கிருபை செய்கிறவருமான தேவனை நம்புகிறவர்களையும் இதை மறுக்கும்படி அழைக்கிறேன். இவ்விதமான "மீட்பின் திட்டமானது" தேவையற்ற ஒன்று மட்டுமன்றி, அநீதியானதும் கூட. வருங்காலத்தில் இவ்வுலகில் இது ஒழுக்கக்கேட்டினையும், ஏமாற்றத்தையும், ஒரு வஞ்சக



வலையையும் ஏற்படுத்துகிறது..... லேடி மேக்பத்தைப் போன்ற இன்னும் அநேகர் பாவக்கறை படிந்ததால் கைவிடப்பட்டு பரலோகத்துக்கு புறம்பான இடத்தில் இளவரசர் சித்தார்த்தாவும் சேர்க்கப்பட்டிருப்பதால், என்னை மட்டும் இதி-ருந்து மீட்கும்படி சுயநலத்தோடு ஜெபிக்கும்படி அந்த கல்வாரியின் காட்சி என்னை அனுமதிக்குமானால் நான் அதை விட்டு ஒதுங்கிவிடுவேன்."

அதை தொடர்ந்து அதே ஆலயத்தில் "கிழக்கத்திய நாடுகளின் கூட்டம்" ஒன்று நடைபெற்றது. இதில் ஒரு அமெரிக்க கத்தோ-க்கரின் உரைக்குப் பிறகு அதே கனம் பொருந்திய மரியாதைக்குரியவர் சோரஸ்டர், மோசஸ், கன்பியூஷியஸ், புத்தர், சாக்ரடீஸ் மற்றும் கிறிஸ்துவின் சொற்களி-ருந்து சில பகுதிகளை வாசித்து, இவை யாவும் உலகமனைத்துக்கும் ஒரே மதத்தையே காட்டும்படி அறிவுறுத்துகின்றன என்று கூறினர். இந்த உரைக்கு பிறகு பத்திரிகை செய்திக்கு கொடுத்த விளக்கமானது:

"வாஷிங்டனை சேர்ந்த கத்தோ-க்க பல்கலைக்கழகத்தின் பேராயர் கேன் அவர்களிடம் நீங்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு இத்தனை தீவிரமான மேடையில் நிற்கக்கூடுமா என்று திரு.ஜோன்ஸ் கேட்டார். இதற்கு புன்சிரிப்புடனே பேராயர் தான் ஒருவேளை டிபுக்கில் (Debugue)-ல் இருக்கலாம். சில சமயம் கூட்டத்துக்கு வர தூண்டப்படலாம் என்று கூறினார். அதற்குப் பிறகு திரு. ஜோன்ஸ் பேராயரிடம் அவர்கள் வேறு யாரையாவது அனுப்ப ஆலோசிக்கக்கூடுமா என்றதற்கு, பேராயர், 'நீங்கள் இதற்காக இத்தனை அவசரப்படக்கூடாது; நாங்கள் ஒத்துப்போவதற்கு மிகவும் பிரயாசப்படுகிறோம்; இப்படி செய்வதற்கு வெகுகாலம் பிடிக்காது' என்றார். (எனினும், சிக்காகோ பேரவையானது ரோமுக்கு எவ்விதத்திலும் லாபகரமானதாகவோ அல்லது அதன் ஆதரவாளர்களிடம் பிரபலமடையவோ இல்லை. மேலும் எதிர்காலத்தில் இவ்விதமான ஒழுங்கற்ற பேரவைகளில் தன்னுடைய போப்புமார்கள் எதுவும் செய்வதற்கு இல்லை என்றும் அறிவித்துவிட்டது. மட்டுமன்றி சிக்காகோ பேரவையில் மிகமுக்கிய பங்கெடுத்த ரோம குருமார்களுக்கு எதிராக குறிப்பிட்ட அளவு போப்பின் கண்டனம் காணப்படாமல் இல்லை. புராட்டாஸ்டன்டாருக்கே எல்லா பெருமையும் சேரும்)."

“திரு.ஜோன்ஸ் தொடர்ந்து கூறுகிறார் : கார்டினல் கிப்பன்ஸ் அயர்லாந்தின் ஆர்ச் பிஷப் மற்றும் ஸ்பேல்டிங் பிஷப் ஆகியவர்களின் தலைமையில் ரோமன் கத்தோ-க்க சபையானது மிகவும் நல்லவிதமாய் போய்க்கொண்டிருக்கிறது. இவர்கள் மிகவும் மந்தமாக செயல்படுகிறவர்களை வேலை செய்யும்படி பலவந்தப்படுத்துகின்றனர். ஒருபுறம் கத்தோ-க்கரிடமும் மறுபுறம் அஞ்ஞானிகளிடமும் நாங்கள் இந்த மதசார்பான பேரவையை விட்டுவிட்டோம் என்று எங்களிடம் மக்கள் கூறுகின்றனர். நமது அஞ்ஞான நண்பர்களிடமிருந்து இப்போது கேட்போம். அஞ்ஞானிகள் என்ற வார்த்தைக்கு இவர்கள் கூறும் அர்த்தம் பொருத்தமானது அல்ல, நான் அதற்காக தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.”

பேராசிரியர் ஹென்றி டர்மெண்ட், இந்த பேரவையில் கிறிஸ்தவமும் பரிணாமமும் என்பதைக் குறித்து பேசும்படியாய் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அவர் வந்து சேரமுடியாமல் போய்விட்டது. ஆகவே இவரது செய்தி டாக்டர் பிரிஸ்டோல் என்பவரால் வாசிக்கப்பட்டது. இதில் இவர் கூறியதாவது : ஆதியாகமத்தையும் பாவத்தின் இயல்பையும் குறித்த சற்று மேலான புரிந்து கொள்ளுதலானது குறைந்த அளவுக்காவது சில மாற்றங்களை செய்யும். பாவ நிவாரண போதனையை இழிவாக கோடிட்டு காட்டி இவ்விதம் கூறினார். இது இவரது பரிணாமத்தைப் பற்றிய போதனையை செல்லாததாக்கும்.

### விசுவாசத்திற்காக போராடும் வெகுசிலர்

இவ்விதமாய் தைரியமாய், வெளிப்படையாய் பேசப்படும் இந்த விட்டுக்கொடுக்கும் போக்கின் மத்தியில், நீதிநெறி மற்றும் தைரியத்தோடு இருக்கும் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களின் வெகுசில பிரதிநிதிகளை பார்க்கும்போது உண்மையில் கொஞ்சம் புத்துணர்ச்சியாய் இருந்தது. நேர்முகமான மற்றும் மறைமுகமான எதிர்ப்புகள் இருந்த போது பரிசுத்தவான்களுக்கும் ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக போராடுகிற சிலர் இருந்தனர். ஆனால் யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டத்தையும், இதற்கும் கிறிஸ்தவத்தின் அடிப்படை போதனைகளுக்கும் இருக்கும் முக்கியமான சம்பந்தத்தையும் காணாததினால், இவர்களும் கூட தடுமாற்றத்தை காட்டினர்.



சிக்காகோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் டபிள். யூ. சி. வில்கின்சன், “பிற மதங்களைப் பற்றிய கிறிஸ்துவத்தின் மனப்போக்கு” என்பதை குறித்து பேசினார். இவர் கிறிஸ்தவத்தை விளக்குவதற்கு தன் பேச்சை கேட்பவர்களை புதிய மற்றும் பழைய ஏற்பாட்டின் வசனங்களுக்கு நேராக திசைதிருப்பினார். அதுவும் மற்ற எல்லா மதங்களைப் பற்றி கிறிஸ்தவம் கொண்டிருக்கும் விரோத மனப்போக்கை குறிப்பிட்டார். ஆனால் உண்மையில் பார்க்கப்போனால் இது மெய் அல்ல. அதுவும் கீழ்கண்டவிதத்தில் விவரித்து எடுத்துக்காட்டியிருக்கும் நம் தேவனின் ரட்சிக்கும் மாபெரும் வல்லமை பொய்யல்ல.

- ❖ “என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.”(இயேசுவினாலன்றி ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது)
- ❖ “ஜீவ அப்பம் நானே.”
- ❖ “ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்.”
- ❖ “நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன்.”
- ❖ “நானே ஆடுகளுக்கு வாசல்.”
- ❖ “எனக்கு முன்னே வந்தவர்கள் எல்லாரும் கள்ளரும், கொள்ளைக்காரருமாய் இருக்கிறார்கள்.”
- ❖ “நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான்.”

“இயேசு ஒருவரே தன்னிகரல்லாதவராக மனுக்குலத்தின் ரட்சகர் என்று அவரே தன் வாயால் கூறியிருப்பதற்கு மேலே உள்ளவைகள் சில உதாரணமாய் கூறப்பட்டிருக்கின்றன என்று அவர் கூறினார்.

“மேலும் நான் பூமியி-ருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லோரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன் என்று கூறினார்.

இதன் மூலம் அந்நிய மதங்களில் ஈடுபட்டிருக்கும் அநேகர், அவர்களது மத சூழ்நிலைகளின் துரதிர்ஷ்டங்களையெல்லாம் பொருட்படுத்தப்படாமல் தெரிந்தோ தெரியாமலோ இயசேுவினிடத்திற்கு அழைத்துவரப்பட்டால் அவர்கள் யாவரும் ரட்சிக்கப்படுவார்கள் என்ற உத்திரவாதத்தை நாம் பெறுகிறோம்.

"உண்மையில் இதுவே கிறிஸ்தவ போதனையாக இருக்கவேண்டும். நான் உண்மையுடன் ஏற்றுக்கொள்கிறேன். (ஆனால் இந்த நம்பிக்கை ரட்சிப்பின் தெய்வீக திட்டத்தின் ஞானத்தினால் வருவதற்கு பதிலாக தயாள குணத்தின் இருதயத்தி-ருந்து வருகிறது. பேராசிரியர் வில்கின்ஸன் இவ்வுலகம் கிறிஸ்துவினிடத்திற்கு ஈர்க்கப்படுவது ஆயிரவருட ஆட்சியில் என்பதை பார்க்க தவறிவிட்டார். மட்டுமன்றி, சபையை ஈர்ப்பது மட்டுமே தற்போது செயல்படுத்தப்படுகிறது. மேலும் தற்போது செயல்படும் கர்த்தரை பற்றிய ஞானம், பிற்காலத்தில் "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" என்பதையும் உணரவில்லை (ஆப *2:14*) என் மனதில் ஆழப்பதிய வேண்டும் என்ற எண்ணத்துடன் கேட்கிறேன் நாம் தற்போது விவாதிக்கின்றபடி, மீட்கும்படியாக இயேசுவின் விசேஷித்த வல்லமையி-ருந்து கிடைக்கும் நன்மைகளின் பிரதிபலன் இவைகள் அல்ல, ஆனால் தீர்க்கமான கேள்வி என்னவெனில் கிறிஸ்தவம் அல்லாத மதங்களில் மீட்பின் பலனில் பங்கு ஏதாவது இருப்பதை கிறிஸ்தவ மதம் அடையாளம் கண்டிருக்கிறதா? வேறுவிதத்தில் கூறவேண்டுமாயின் வேதத்தில் எந்த இடத்திலாவது இயேசு தன் மீட்கும் வல்லமையை எவ்விதத்திலாவது கொஞ்சமோ அதிகமோ புறமதத்தின் மூலமாக பயன்படுத்துவதாக வசனம் கூறுகிறதா? புதிய, பழைய ஏற்பாடுகளில் வேதத்தில் இந்த கேள்விக்கு ஆம் என்று பொருள்தரும் சிறு குறிப்போ அல்லது சிறு குறிப்பின் நிழலோ இருக்கிறதா? இவ்விதம் எதையும் நான் கண்டுபிடிக்கவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இதற்கு பெரிதும் மாறான கருத்தையே நான் பார்த்திருக்கிறேன்.

"புதிய ஏற்பாட்டிலோ அல்லது பழைய ஏற்பாட்டிலே இருந்து கிறிஸ்தவ சரித்திரத்தின் உதவிகளை நாடாமல் நீதிநெறிகளில் மிகப்பெரிய உயரத்துக்கு உயர்ந்துவிட்ட தேசிய அளவில் இருக்கும் தனிமனிதனின் தரத்துக்கும் எவ்வகையிலும் சீர்குலைவு ஏற்படுத்திவிடும் என்று தவறாக புரிந்து கொள்ளப்பட்டு விடாதபடிக்கு இதை உன்னிப்பாய் கவனிக்கும்படி நான் உங்களை வேண்டிக்கொள்வது அவசியம் என்று உணர்கிறேன். நான் இங்கு பேசும்படி குறிப்பாய் எடுத்துக்கொள்வது எந்த மனிதனையோ, ஒரு கூட்டத்தாரையோ அல்லது விசேஷமானவரையோ அல்ல. கிறிஸ்தவமல்லாத மதங்களைப் பற்றி கிறிஸ்தவ மதம் கொண்டிருக்கும் மனப்போக்கை கவனிக்கும்படியாக மட்டுமே உங்களை நான் வழி நடத்துகிறேன்.



"புதிய ஏற்பாட்டின் பிரகாரம் இயேசு தனது சொந்த அதிகாரத்துக்கு ஒத்த அதிகாரத்துடன் பேசும்படியான பிரதிநிதித்துவம் பெற்றதாக தங்களை பாவித்துக் கொள்பவர்களின் நடவடிக்கைகளுடன் இயேசுவின் வார்த்தைகளை உள்ளபடியே ஒப்பிட்டு பார்க்க நாம் முனையலாம். பொதுவாக புறஜாதிகளின் மத ஆதரவாளர்களை குறித்து அவர் பேசும் போது இதேவிதமாய் கூறுகிறார்: 'அவர்கள் தங்களை ஞானிகள் என்று சொல்-யும் பைத்தியக்காரராகி அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.'

"மனிதன், பறவை, மிருகம், ஊர்வன இந்த நான்கு பிரிவுகளின் வரிசைகள் கிறிஸ்தவத்தோடு பிற மதங்கள் எவ்விதத்தில் மாறுபட்ட ரூபத்தில் அக்காலத்திலோ அல்லது இந்த நாகரீக காலத்திலோ சரித்திர தொடர்பை பெற்று இருக்கிறது என்பதையே சுட்டிக்காட்டுகிறது. முன்பு மாசில்லாத தேவன் என்ற எண்ணத்தை கொண்டிருந்த மனிதன் தற்போது இவ்விதமாக தேவநிந்தைக்குரிய எண்ணங்களை கொண்டிருப்பதை புண்படுத்துகின்ற, பகிரங்கமான, கடுமையான களங்கப்படுத்தும் செய-னால் தங்களை பிரபலமானவர்களாகவும், பிரசித்தி பெற்றவர்களாகவும் மாற்றிவிட்டது என்று பவுல் தன் வார்த்தைகளினால் கூறுகிறார். எபிரேயர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுடைய எரிச்ச-ன் தேவனிடமிருந்து இவர்களுக்கு வருகிற ஆக்கினையானது : 'இதனிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினால்

ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரை தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்.'

"இந்த மேற்கோளை முடிக்காமல் நிறுத்திக்கொள்கிறேன். மிகுதியான பகுதி முழுவதும் நன்கு தெரிந்த குற்றச்சாட்டிற்குள் போகிறது. அதுவும் உண்மையாகவே புறஜாதி புராதன உலகத்துக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றம் என்று நன்கு தெரிகிறது. இதில் உள்ள எந்த குறிப்புமே மதங்களை குறை கூறுவதில் நல்லதாகவோ அல்லது அவ்வளவு மோசமில்லை என்றோ கூறுவதாக இல்லை. எந்த திருத்தமோ, சமனப்படுத்தும் வார்த்தைகளோ எதுவும் அறிவுறுத்தப்படவில்லை. எல்லா இடங்களிலுமே கடுமையாய் தாக்கப்பட்டு, நேருக்கு நேர் பகிரங்கமாய் குற்றம் சாட்டப்பட்டது. தவறான உருவங்களின் கீழ் உணர்வில்லாமல் பொய்யான தோற்றத்தில், சில விஷயங்களில் உண்மையும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான வழிபாடுகள் மறைந்துபோயின என்பதை குறித்து எந்த கருத்தும் அங்கு இல்லை. சில விக்கிரக ஆராதனைக்காரரால் உருவாக்கப்பட்ட ஒரு வித்தியாசத்தின் மீது பார்வையை செலுத்த எந்த சந்தர்ப்பமும் தரப்படவில்லை. அதுவும் விக்கிரக ஆராதனைக்காரருக்கும், மாசற்ற எரிச்ச-ன் தேவன் என்று தாங்கள் வழிபட்ட போ-யான விக்கிரகங்களின் மூலம் பிரத்தியோகமாய் உருவகப்படுத்திய மிகவும் தந்திரமுள்ள விக்கிரக ஆராதனைக்காரருக்கும் இடையே வெகுசில வித்தியாசங்களே காணப்பட்டன. இழிவான தேவநிந்தையி-ருந்து மறைக்கப்பட்ட ஆழ்ந்த ரகசியங்களில் சுத்தமானதொரு மதத்தை தேடி கண்டுபிடிப்பதில் விவரமான, முனைப்புள்ள சிலருக்காக யாருமே இல்லை. தன்னோடு தொடர்பு கொள்ளுகிற நியாயம் தீர்க்கப்பட்டதும் வழி தவறியதுமான அந்தி கிறிஸ்தவ மதங்களுக்கு அவைகள் தப்பித்துக்கொள்ளும் வழியை கிறிஸ்தவ மதம் விட்டுவைக்கவில்லை. ஆனால் அதற்கு பதிலாக தேவனல்லாத பிற தெய்வங்களுக்கு ஆராதனை செய்யும் திருத்தமுடியாததொரு



பாவகாரியத்தின் மீது பாரபட்சமற்ற அழிவு அவரது மகிமையின் வல்லமையி-ருந்து பாய்கிறதாக காட்டுகிறது.

"உண்மையில் தமக்கு செலுத்தப்படவேண்டிய ஆராதனைகள் தவறுதலாக பிறருக்கு தகுதியானதாகி விட்ட போதிலும், அன்பான தேவன் அதனை ஏற்றுக் கொள்வார் என்கிறதற்கான எந்த உத்திரவாதமோ அல்லது சாத்தியமானதொரு நம்பிக்கையோ கொடுக்கும் வகையில் நல்லதொரு பரிகாரம் எந்த இடத்திலும் கொடுக்கப்படவில்லை. அந்த யோசனையானது நியாயமான ஒன்றோ இல்லையோ, ஆனால் அது வேதத்திற்கு ஒத்தது அல்ல. அது வேதத்துக்கு புறம்பானது. எனவே கிறிஸ்துவத்துக்கும் அது எதிரானதே. இவ்வித பெருந்தன்மைக்கு பாராட்டு எதுவும் கிறிஸ்துவத்திற்கு தகுதியானதல்ல. தேவனுடைய ஒரே விசேஷமான தனிப்பட்ட உரிமையாக கருதப்படும் கிறிஸ்தவ மதமானது தான் ஒரு இடுக்கமான, மிகவும் கண்டிப்பான, கடுமையான, எரிச்சலுள்ள மதம் என்பதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளட்டும். மரிக்கப்போகும் சாக்ரடீஸ் வேண்டுமானால் ஏஸ்கலாபியஸீக்கு செலுத்தும் ப-யான ஒரு கோழிக்கு பதிலாக வேறு ஒன்றை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கலாம். ஆனால், கிறிஸ்தவம், வேதம் சொல்லும் கிறிஸ்தவம், விக்கிரக ஆராதனைக்காரர் செய்யும் ஆராதனைகள், தேவன் தனக்கு செலுத்தக்கூடிய ஆராதனையாக மாற்றி ஏற்றுக்கொள்வார் என்று எடுத்துக்கொள்ளும் வகையில் எவ்வித காரணத்தையும் நிழலாகக்கூட நமக்கு காட்டவில்லை.

"பேதுரு கூறுகிறதாவது : 'தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்கு பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.'

"முத-ல் தேவனுக்கு பயப்படவும் பிறகு அதோடு கூட நீதியைச் செய்கிறவனே தேவனுக்கு எவ்விடத்திலும் என்றென்றும் உகந்த குணாதிசயம் உடைய மனிதனாக இருக்கிறான். ஆனால் தேவனுக்கு பயப்படுதல் என்பது அவரைத் தவிர வேறு யாரையும் வணங்காம-ருப்பது என்கிற எண்ணம் கிறிஸ்துவத்துக்கு இல்லை. எந்த அளவுக்கு ஒருவன் தன்னை தனது பாரம்பரிய மதத்தி-ருந்து விடுவித்துக் கொள்கிறானோ, அதன் மூலமாக அல்ல, அதற்கு

பதிலாக எந்த அளவுக்கு உண்மையான தெய்வீக ஆராதனைகளுக்கு மாறி உயருகிறானோ, அந்த அளவுக்கு தேவனுக்கு உகந்தவனாயிருப்பான்.

“ஆகவே, எந்த பாரம்பரிய மதமும் தான் ஒழுங்காக இல்லாதிருந்தாலும் தன்னை ஒரு உண்மையான மதமே என்று சொல்-க் கொள்ளக்கூடுமா? கிறிஸ்தவம் அதற்கு இல்லை என்ற பதிலை தருகிறது. கிறிஸ்துவைக் குறித்து கேள்வியேப்படாதவருக்கும் கூட கிறிஸ்தவம் வரையரை இல்லாத எல்லையற்ற நம்பிக்கையை கரிசனத்துடன் பேசுகிறது. எனவே நிச்சயமாய் கிறிஸ்தவர்கள் இந்த வார்த்தைகளை பிடித்துக்கொண்டு அதன் அளவிடமுடியாத மதிப்பிற்கிணங்க அதை வாஞ்சையுடன் போற்றுவர். ஆனால் மனுக்குலத்தின் வழிமாறிப்போன மதங்களோடு எந்தவித உறவையும் சகித்துக்கொள்ளும் நோக்குடன் இது நம்மை வழி நடத்துவதாக நாம் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அந்த மதங்கள் வேதத்தின் எந்த இடத்திலுமே பரிதாபத்துக்குரியதும், இருட்டில் தேவனை தடவியும் கண்டதாகவும் வர்ணிக்கப்படவில்லை. ஒட்டுமொத்தமாக அவைகள் யாவும் மேல்நோக்கி அல்ல. ஆனால் கீழ்நோக்கி தட்டுத்தடுமாறி போய்க் கொண்டிருப்பவைகளாகவே விவரிக்கப்படுகின்றன. கிறிஸ்தவத்தைப் பொருத்தமட்டில் அவைகள் உதவி செய்பவைகள் அல்ல. ஆனால் தடங்கல் செய்பவைகளே. அவைகளின் ஆதரவாளர்கள் வேரையும் பாறையையும் பிடித்து மூழ்கிக்கொண்டிருக்கும் மனிதரை பின்பற்றுவதைப் போல் குருட்டாட்டமாகவே பின்பற்றுகின்றனர். இது இவர்களை நிச்சயம் ஆற்றின் ஆழத்துக்கே கொண்டு செல்லுமே அன்றி கரை சேர்க்காது. தவறான மதங்களில் இருக்கும் சிறு சத்தியம் உதவி செய்யக்கூடும். ஆனால் அந்த மதங்கள் எவ்விதத்திலும் அவர்களுக்கு உதவாது என்பதே சத்தியம்.”

“இந்த பொய்யான மதங்கள் தங்களிடையே இருக்கும் கொஞ்சம் சத்தியத்தையும் நெருக்கி மாய்த்துவிடவே தனது சக்தி முழுவதையும் செலவிடுகிறது என கிறிஸ்தவம் கூறுகிறது. ஆகவே தான் ரோமர் முதல் அதிகாரத்தில் சரித்திர சீரழிவு, பொய் மதங்களை பாதிக்கின்றதாக பொதுவாக காட்டப்பட்டுள்ளது. அவர்கள் மேல்நோக்கி வளருகிறவர்களாக இருப்பின் மேன்மேலும் வளர்ந்திருப்பார்கள். ஆனால் பவுல் போதிக்கின்றபடி அவர்கள் மேன்மேலும் கீழ்நோக்கி செல்லுகிறவர்களாக இருக்கிறார்கள்.



“கிறிஸ்தவத்தின் போக்கு, தன்னைத் தவிர பிறமதங்களின் மீது பொதுவானதாகவும், பூரணமானதாகவும், நிலையானதாகவும், சமாதானமாகாத போக்குடன் இருக்கிறது. ஆகவே இந்த பொய் மதங்களின் ஆதரவாளர்கள் எவ்விதத்திலும், எவ்விடங்களிலும் உள்ள அவர்கள் மீது கிறிஸ்தவத்தின் போக்கு, அவர்கள் கிருபை, இரக்கம், சமாதானம், நிறைந்தவர்களாயிருந்தாலும் விடப்படுவதில்லை. இந்த மதத்தை ஏற்றுக்கொள்ளும் எத்தனையோ பேர், தீர்க்கப்படாத எத்தனையோ பிரச்சனைகளை கிறிஸ்தவ மதம் விட்டுவைத்திருக்கிறது என்பதை கண்டுகொண்டிருக்கின்றனர்.”

நியூயார்க் பட்டணத்தைச் சேர்ந்த போதகர் ஜேம்ஸ் டிவைன் என்பவர் கூட கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற ரத்தத்தால் வரும் மீட்பைக் குறித்த போதனையை மிகத்தெளிவாக பிற மதங்களிடையே கிறிஸ்தவர்களின் செய்தியாக பேசியுள்ளார் ; அவர் கூறியது :

“நாங்கள் இப்போது மிகவும் மறைபொருளான போதனையாகிய பாவநிவாரணத்தைக் குறித்த மற்றுமொரு அடிப்படை சத்தியத்தை உங்களுக்கு கொண்டுவருகிறோம். பாவம் என்பது ஒரு மறுக்கமுடியாத காரியமாக இருக்கிறது. இது யாவராலும் அறிந்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமாயும் இருக்கிறது. அதுவே அதற்கு ஒரு சொந்த சாட்சியாய் இருக்கிறது. அதுமட்டுமன்றி தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையே ஒரு தடையாகவும் இருக்கிறது. பாவமானது தன் அருவருப்புடனும் தன் எதிர்ப்புடனும், தன் பயங்கர தரக்குறைவினுடனும் தன் நம்பிக்கையற்ற அழிவுடனும் தெய்வீக பரிசுத்தத்தோடு நீதியான அரசாட்சியில் இணைய முடியாது. தேவனால் பாவத்தை சகித்துக் கொள்ளவோ அல்லது அதனோடு எந்த சந்தர்ப்பத்திலும் ஒத்துப்போகவோ அல்லது

தாம் இருக்கும் ஸ்தலத்தில் அதற்கு இடம் கொடுக்கவோ முடியவே முடியாது. அதோடு கூட அவர் சமரசப்படவே முடியாது. அதை அவர் தண்டித்தே ஆகவேண்டும். பாவத்தோடு கூட அவர் விருந்து உபசாரம் செய்யமுடியாது. அதை தண்டித்தாக வேண்டும். அவர் அதை கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாது. அவர் அதை ஜெயம் கொள்ளவே வேண்டும். அவர் அதற்கு ஒரு நீதியான அந்தஸ்தை கொடுக்க முடியாது. அதற்கு நிச்சயம் கொடுக்கப்படவேண்டிய தண்டனையுடனே அதை சந்திக்க வேண்டியுள்ளது.

“தேவனுடைய பாவநிவாரணமானது மிகவும் நேர்த்தியான நியாயத்தை நிலைநிறுத்தும் வழிமுறையாக இருக்கிறது. இது நிரந்தரமானது. இந்த உலக தோற்றத்துக்கு முன்னமே தமது சுய எண்ணத்தினால், பாவத்திற்கு பரிகாரமாய் ஒரு ப-யை உண்டாக்கினார். இதை அவர் இயேசு என்பவரால் செய்கிறார். கிறிஸ்துவின் பிறப்பு, ஜீவன், வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் யாவுமே மெய்யான சரித்திரத்தின் பகுதியில் ஒரு முக்கிய இடத்தை பெறுகிறது. மேலும் அவரது முழுமையான கீழ்ப்படித-ன் நீதியும், தயவை பெறும் சக்தியும், ப-யினால் ஒப்புரவு செய்யும் பணியில் ஒரு அளவிடமுடியாத மதிப்பை பெறும்படியான மறைபொருளான பொருளாய் மாறிவிட்டது.

“கிறிஸ்து ஒரு பதில் ஈடாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டார். அவரது கீழ்ப்படித-ன் சிறப்பும், அவரது ப-யினால் உயர்த்தப்பட்ட மேன்மையும் விசுவாசத்துக்கு உரியதாய் இருக்கின்றன. பாவியும், தாழ்மையானவரும், பாவத்தினிமித்தம் மனம் வருந்துகிறவரும், தங்கள் ரட்கராய், மத்தியஸ்தராய், தங்கள் மீட்பராய் ஏற்றுக்கொண்டு, கிறிஸ்து மத்தியஸ்தம் செய்து ஈடுகொடுத்ததினால் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களையும், உறுதிமொழிகளையும் நம்பி தேவனுடைய மாறாத அன்பின் வெகுமதியையும், கிறிஸ்துவின் மத்தியஸ்த பணியின் பலன்களையும் தேவனிடமிருந்து பெறுகின்றனர். இதுவே ஒப்புரவாகுதலையும், மன்னிப்பையும் அடையும். தேவனுடைய பாதையாக இருக்கிறது. இதுவே அவர் தாமே நீதியுடன் இருப்பதற்கும் பாவிகளை நீதிமானாக்குவதற்கும் அவர்



வைத்திருக்கும் பாதை. இங்கே மறுபடியும் ஞானத்தின் இரகசியத்தை அதன் உன்னதமான விளக்கத்துடன் நாம் பெறுகிறோம்.

“இதுவே சுவிசேஷத்தின் உயிர்நாடியாய் இருக்கிறது. அது இரகசியமான அன்புடன் துடிக்கின்றது. அது தெய்வீக சுகத்தின் வர்ணிக்கமுடியாத வேதனையோடு துடிக்கிறது. அது ஆட்சியின் முழு திட்டத்தோடு ஒரு விசேஷமான உறவுமுறையைக் கொண்டிருக்கிறது. அது மனித அறிவுக்கு எட்டாத மறைவான செயலாக இருக்கின்றது. ஆனால் சரித்திரத்தின் வாயிலாக அது ஒரு உயிரோட்டமான தொடரை அளிக்கிறது. மேலும், அது கிறிஸ்தவத்திற்கு ஒரு தன்னிகரற்ற முக்கியத்துவத்தையும், அழிவில்லாத சக்தியையும் கொடுக்கிறது. ஏனெனில், கிறிஸ்தவம் பாவத்தை அதன் துன்பங்களி-ருந்து விலக்குகிறது. அதற்கான பரிகாரமானது முழுமையும், முடிவுமாக இருக்கிறது.

“கிறிஸ்தவமானது தேவனுடைய பெயரால் பேசவேண்டும். தான் இருப்பதற்கு அது அவருக்கு கடன்பட்டிருக்கிறது. அவரை வெளிப்படுத்துவதே அதன் வல்லமை மற்றும் மேன்மையின் ஆழமான ரகசியமாயும் இருக்கவேண்டும். தன் சொந்த பொறுப்பில் அல்லது சொந்த ஞானத்தில் சாதாரணமாய் பேசுவது அதற்கு அவமானத்தைக் கொடுக்கும். பரிணாம தத்துவம் அதற்கு இல்லை. தேவனிடமிருந்து பெற்று அளிப்பதற்கு அதற்கு ஒரு செய்தி உண்டு. அது ஒரு தத்துவம் அல்ல; அது ஒரு மதம். அது பூமியில் பிறந்தது அல்ல ; அது தேவனால் உருவாக்கப்பட்டது. அது மனுஷனிடமிருந்து அல்ல தேவனிடமிருந்து வருகிறது. அது அவரது ஆழ்ந்த வல்லமையுடன் உயிரோடிருக்கிறது. அவரது அன்பில் ஊக்கமாகவும், அவரது நன்மைகளின் கிருபையுடனும், அவரது ஒளியுடனும் பிரகாசிக்கிறதாகவும் அவரது சத்தியத்தால் ஊக்கம் பெறுகிறதாகவும், அவரது ஞானத்தால் நிரம்பியதாகவும், ஆவிக்குரிய சுகத்தின் பலனாலும் மேன்மையான அதிகாரத்தின் வல்லமையினாலும் ஊக்குவிக்கப்பட்டதாகவும் இருக்கிறது.”

“அதற்கு மனுஷரிடம் அவர்களை எவ்விடத்தில், எப்பொழுது பார்த்தாலும் ஒரு முக்கியமான பணி உண்டு. அது சிருஷ்டிப்பைப்

போல் அத்தனை மேன்மையானது. அது ஆவிக்குரிய காரியங்களைப் போல் அத்தனை ஆச்சரியமானது. நித்தியத்தைப் போல அத்தனை ரகசியமான அர்த்தங்கள் நிறைந்தது. தான் மனிதனாக வந்தது முதல் பக-ன் வெளிச்சம் வீசிவருகிறவரும் அவரது வருகைக்கும் முன்னமே வெளிச்சத்தின் எல்லா கிரகங்களுக்கும் ஒளிவீசியவருமாகிய மாபெரும் போதகரும், இரகசியங்களை வெளிப்படுத்துகிறவருமாகியவரின் சிறப்பியல்புகளின் மீதே அது தன் முழு கவனத்தையும் வைத்திருக்கிறது; கவனம் ஒளிவீசிடும் மையத்தின் மேலும் இருக்கிறது.

“முழுமையான எளிமையான நேர்மையும், உயர்வான அந்தஸ்தும், இனிமையான சுயநலமின்மையுமே அதன் உயிர் மூச்சாய் இருக்கிறது. ஒப்பிட்டுப்பார்த்து சவால் விடுவதை விட, ஆசீர்வாதத்தை பகிர்ந்தளிப்பதே அதன் நோக்கம். தன்னுடைய ஆதாயங்களை அளிப்பதற்காக தான் உண்மையான ஒன்று என்று நிலைநிறுத்திக் கொள்வதில் அது அத்தனை ஆர்வம் காட்டவில்லை. இருதயங்களை பிடிக்கும் பாதையில் ஜெயிக்கவேண்டும் என்பதற்காக தன் மேன்மையான மதிப்பை காத்துக்கொள்ளவதில் ஆர்வம் காட்டவில்லை. அது யாரையும் நிந்திக்கும் எண்ணம் கொள்வதில்லை. அது தன் எதிராளியை இழிவுபடுத்தவோ, புண்படுத்தவோ செய்யாமல் அதற்கு மாறாக அன்பிலே தாழ்ந்து, தன் சொந்த மேன்மைகளால் பிறரை கவர்ந்து, தன் சொந்த, ஒப்பில்லாத சிறப்பின் பரிசுத்ததால் ஈடுகட்டும். அது தன்னில் தானே எதிராளியுடன் போராடும் தன்மையற்றதாய் இருக்கிறது. அதனை யாரும் நிந்திக்க வேண்டிய அவசியமில்லை. அது யாரையும் அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிட முடியும். அது அராஜகமான ஆயுதம் எதனையும் ஏந்துவதில்லை. அதனை எதிர்த்து யாரும் வாதிடும் வகையிலும் அது இல்லை. அது வஞ்சிக்கவும், தந்திரமான காரியங்கள் செய்யவும் தகுதியற்றது. அது கபட்டு தனத்தை வெறுத்து ஒதுக்குகிறது. அது எப்போதுமே தன் மெய்யான தகுதியின் மீதே நம்பிக்கை வைத்து, தன் எல்லா உரிமைகளையும் கேட்டு, மதிக்கும் அதிகாரத்தின் மீதே ஆதாரப்பட்டிருக்கிறது.

“அதன் ஆச்சரியமான சாட்சியம் ஆளுகையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. பலவீன விசுவாசிகளுக்கு உதவும் ஒரு



அடையாளமாக இருந்தது. இரக்கத்தின் சுபாவத்தால் அது ஒரு சலுகையை அளித்துள்ளது.மாட்சிமை பொருந்தியது என்று எவ்வளவுக்கு எவ்வளவு கூறுகிறார்களோ அவ்வளவிற்கும் ஆச்சரியமான இரக்கத்தையே மறைமுகமாய் தெரிவிக்கிறது. நாம் தெய்வீக வல்லமையின் அளவிடமுடியாத பொக்கிஷங்களை நினைவு கூறும் போதும், மனதை பாதிக்கத்தக்க திகைப்பூட்டும் அடையாளங்கள், அற்புதங்கள் பெருகுவதால் இளைப்பாறுதல் பெறும்போதும் இறுக்கமான பாதுகாப்பின் வல்லமையையும், முற்றிலும் விசேஷமான பிரமிக்கத்தக்க கீர்த்தியையும் நாம் உணர்ந்திருக்கிறோம். கிறிஸ்தவ வரலாற்றின் ரகசியமானது கிறிஸ்தவ மதத்தின் மூலதனத்திற்கு ஒரு விசேஷமான வழியாய் உபயோகப்பட்டிருக்கிறது. அது அடிக்கடி மிகவும் வேதனையோடு செய்யப்படும் விசுவாசத்தின் மீதான பளுவாய் இருக்கிறது. நமது பரிசுத்த மதத்தில் காணப்படுகிற மெதுவான முன்னேற்றத்திற்கு பலவீனத்தையும், சமாளிக்கும் வ-மை இல்லாததையும் கவனிக்க வேண்டும். (காலங்களின் தெய்வீக ஏற்பாட்டை குறித்த ஒரு புரிந்து கொள்ளுதல் இன்னும் வராதவர்களுக்கு இப்படி இருப்பதே அவசியமாய் இருக்கிறது).

“சந்தேகமே இன்றி தேவன் தமக்கென்று காரணங்களை வைத்திருக்கிறார். ஆனால் அந்த இடைக்காலத்தில் கிறிஸ்தவத்துக்குள் ஒரு இரகசியமான அடக்கம், ஒரு அதிசயமான பொறுமை, ஒரு லேசான சமாளிப்பு, ஒரு காரணத்தோடு கூடிய கட்டுப்பாடு என்கிற மனோபாவத்தை உணராமல் இருக்க முடியாது. தெருக்களில் கேட்கப்படும் அளவுக்கு தன் குரலை உயர்த்தவில்லை. பொங்கி எழவும் இல்லை. நூற்றாண்டுகள் பல வந்து போய்விட்டன. ஆனால் கிறிஸ்தவம் உலகின் ஒரு பகுதியை மட்டுமே தொட்டிருக்கிறது. ஆனால் எங்கே தொட்டாலும் அது உருமாறுகிறது. அது அநாவசியமான உலக காரியங்களை அலட்சியப்படுத்தி ஆவிக்குரிய தொடர்பினால் தனிப்பட்ட ஆத்துமாக்களை சம்பாதிக்கும் ஜெயமே தகுதியானதாக காணப்படுகிறது. பிற மதங்களோடு அதன் உறவானது ஒரு தனிப்பட்ட கட்டுப்பாடாகவே உருவகப்படுத்தப்படுகிறது. மேலும் அதன் வளர்ச்சியானது ஒரு ஆடம்பரமற்ற கௌரவமாக குறிப்பிடப்படுகிறது. ஏனெனில் அது

தன் சிருஷ்டிகரான தேவனுடைய அதிமேன்மையான மனோபாவத்துடனே இசைந்து ஒத்துப்போகிறது.

"ஆகவே எதிர்த்து போராடும் பொதுவான கருத்தி-ருந்து முற்றிலும் புறம்பான இந்த செய்தியை குறித்து பேசுவது, நமக்கு சரியே. வெறும் ஆடம்பரமும் பிரமிப்பும் நிறைந்த முறைகளில் முற்றிலும் மாறுபட்ட, வெறும் உபாயங்கள் யாவும் அறவே நீக்கப்பட்ட, போ-த்தனம் அல்லது பொய் முகத்திற்கெல்லாம் முற்றிலும் அப்பாற்பட்டதாக இருக்கிறது. உலகத்தின் அதிகாரம் அல்லது சமுதாய புகழ்ச்சி இவற்றில் ஆர்வம் காட்டாமல், ராஜரீக அரியணையில் ஒரு இருக்கையை காட்டிலும், தாழ்மையான இருதயத்தில் ஒரு இடத்தை பெறுவதிலேயே அதிக அக்கறை காட்டி ஆத்துமாவின் அன்பை பெறுவதிலேயே குறியாக இருக்கிறது. குணாதிசயங்களில் ஒழுக்கமான மாறுதல்களை பெறுவதிலும் தன்னுடைய சொந்த உணர்வுகளும், தத்துவங்களும் மனிதனின் ஆவிக்குரிய வாழ்வில் ஆதிக்கம் செய்தாகவேண்டும் என்கிறதே நோக்கமாய் இருக்கிறது.

"மேலும் அது பிற மதங்களைக் குறித்து சற்றும் ஆட்சேபமற்ற தன் சொந்த சொற்களால், ஈடில்லாத வெளிப்படையான, எளிமையுடன் பேசுகிறது. அறியாமல் ஆராதனை செய்யும் பழைய அத்தேனே பட்டணத்தாரைப் போன்று இருக்கும் சந்தேகத்துக்கே இடமற்ற உண்மையான தங்கள் சுய குற்றவுணர்வையும் நேர்மையுடன் நியாயத்துக்கான போராட்டத்தில் இருக்கும் அநேக தீவிரமானவர்களை அது ஏற்றுக்கொள்கிறது ; அதுவே தனது உரிமை என்று கண்டித்து அதிகாரத்துடன் அறிவுறுத்துகிறது; மார்ஸ் மேடை மீது நாகரீக வளர்ச்சியடைந்த விக்கிரக ஆராதனைக்காரர் முன்பு பவுல் பேசியதைப் போல் உலகம் ஏற்கனவே முன்குறிக்கப்பட்ட நாளில் நியாயம் தீர்க்கப்படவேண்டும் என்றும், யாரால் நியாயம் தீர்க்கப்படும் என்றுமே பேசியது; மறுக்கமுடியாத மாறாத குரலுடன் மறுபடியும் மனம் திரும்புதலுக்கே அது அழைத்தது; அது நீதி தவறாத நிலையை ஏற்பது அவசியம், அர்ப்பணிப்பையும், உண்மையையும், கனத்தையும், தாழ்மையும் அது நிர்ப்பந்திக்கிறது.

"இவை யாவையும் மிக அற்புதமான, சலனமற்ற, ஆணித்தரமான குரலோடு செய்கிறது. இது அவ்வப்போது தனது உரிமையை வாதத்தோடும், மென்மையாகவும் அறிவுறுத்துகிறது. மேலும் தான் எல்லாவற்றிலும் ஒரு தெளிவான, பெருத்த சத்தத்தோடும்; செல்வாக்கோடும் கூடிய, விட்டுக்கொடுக்காத குர-ல் கிறிஸ்தவத்தின் ஸ்தாபகரும் எப்போதும் யாருடைய நாமத்தினால் பேசுகிறதோ அந்த உன்னதமானவரை வெளிப்படுத்த வேண்டிதாய் இருக்கிறது. தன் செய்தியை அது ஒரு அசைக்கமுடியாத நம்பிக்கையின் ஒ-யோடும் ஆளுமையோடும் வெளியிடுகிறது. தன் அந்தஸ்தைக் குறித்த ஆர்வமோ, புறம்பான காரியங்களை குறித்த எந்த அக்கறையோ தற்பெருமையோ போட்டிப்போடும் தரக்குறைவான எண்ணமோ இல்லாதிருக்கிறது. ஆனால் அதற்கு மாறாக அது சர்வசாதாரண இயல்பான, ஈடுஇணையில்லாத, அளவற்ற மேன்மையுடன் பேசுகிறது. இது விரைவிலேயே பகைமையை விலக்கி, கடைசியில் தீய எண்ணமும், துரோகமும் அற்ற இருதய அர்ப்பணிப்பை வற்புறுத்தவும், அதை வாஞ்சித்து நேசிக்கவும் செய்யும்படியாய் அறைகூவல் விடுக்கிறது."

சத்தியத்தை பாதுகாக்கும்படி பேசிய மிகவும் மேன்மையான பேச்சுக்களில் ஜெர்மனியைச் சேர்ந்த மேன்மை பொருந்திய கவுண்ட் போன்ஸ்டாஃபு என்பவரது பேச்சு இருந்தது. அது கீழ்வருமாறு:

"தன் சொந்த மதத்தை மிகவும் துச்சமாய் எண்ணுகிறவர் எவரும் இங்கில்லை என்று எண்ணுகிறேன். (இந்த பேரவை முடியும் முன்னரே அங்கிருக்கும் முரண்பாடுகளை அவர் நிச்சயம் புரிந்து கொண்டார். இது அதற்கும் முன் பேசப்பட்டது.) நான் ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவ சுவிசேஷகராகவே இங்கு வந்திருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். எல்லா மதமும் சமமே என்கிற எந்த கருத்தையாவது இந்த பேரவை குறிப்பிடும்படியாய் நான் நினைத்திருந்தால், நான் இங்கு காலடியே வைத்திருக்கக்கூடாது. அது நேர்மையானதும் சரியானதாக இருக்கவேண்டும் என்பது மட்டுமே அவசியம். நானும் இவ்விதமான கருத்தைத் தவிர வேறு எதையும் ஒத்துக்கொள்ள இயலாது. வேதம் மாத்திரமே உண்மையாக இருக்கவேண்டும் என்று நம்புகிறேன். மட்டுமன்றி புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவ மதம் ஒன்றே உண்மையானதும் இதை எவ்விதத்திலும் விட்டுக் கொடுக்க நான் விரும்பவில்லை.

"இந்த பேரவையில் கூடியிருக்கும் யாவருமே மாபெரும், முக்கியமான கோட்பாடுகளில் தனித்து வேறுபட்டவர்களாய் இருக்கிறோம் என்பதை நாம் மறுக்க இயலாது. இந்த வேற்றுமைகள் எவ்விதத்திலும் கடந்து வரக்கூடியவைகள் அல்ல என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனாலும், ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் விசுவாசிப்பதற்கு உரிமை உண்டு என்ற நம்பிக்கையில் நாம் கூடுகிறோம். தங்களுடைய சொந்த விசுவாசத்தை காத்துக்கொள்ள போராடும்படியாய் நீங்கள் யாவரையும் இங்கு அழைக்கிறீர்கள். பவுலானவர் ரோம நீதிமன்றத்தின் பிரதிநிதிகள் மற்றும் யூத ராஜாவான அக்கிரிப்பாவின் முன் நின்றபோது கொண்டிருந்த அதேவிதமான வாஞ்சையோடு, நான் என்னைப் பொறுத்தவரையில் உங்கள் முன் நிற்கிறேன். நான் இருக்கின்ற வண்ணமாகவே ஒட்டுமொத்தமாய் நான் கூறுவதை கேட்கும் தேவனோடு பேசுகிறேன். இந்த பிணைப்பைத் தவிர வேறு எதையும் என்னால் கூறமுடியாது. நான் மிகவும் சுதந்திரமாய் இருப்பதற்காய் தேவனை துதிக்கிறேன். நான் நினைக்கும் வண்ணமாய் என் கொள்கைகள் தழுவிக்கொள்ள என்னை தடைபண்ணுகிற என்னுள் இருக்கிற தவறுகளையும், குறைகளையும் தவிர மற்றவைகளுக்காக நான் துதிக்கிறேன்.

"நாம் சகிப்புத்தன்மையை காட்ட இயலாதவர்களாய் இருப்பின், நாம் எதற்காக ஒன்று கூடுகிறோம்? சகிப்புத்தன்மை என்கிற வார்த்தையானது அநேக வேறுபட்ட அர்த்தத்தில் உபயோகிக்கப்படுகிறது. புருஷிய மன்னரான ஃப்ரெட்ரிக்கின் வார்த்தைகளின் படி: 'என்னுடைய நாட்டில் அவரவரது, சொந்த பாணியில் எல்லோருமே பரலோகத்துக்குப் போய்விடலாம்' என்பது அதிகபட்ச அரசாங்க அதிகாரத்துடன் கூறப்பட்டதாக இருப்பினும், நாம் அதை மிகவும் மேன்மையானதாக ஒப்புக் கொள்ள இயலாது. இவர் கூறுகிறபடி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் எவ்வளவோ ரத்தம் சிந்துதலையும் எத்தனையோ கொடுமைகளையும் இந்த உலகம் தவிர்த்திருக்கக்கூடும். ஆனால் இந்த கடைசி நூற்றாண்டின் போது நிலவுகிற மதவேறுபாடுகளின் வெளிப்பாடு இவ்விதமாய் இருக்குமாயின் அதுவும் வோல்டேரின் நண்பரான பேரரசரின் சபையானது கூறுமாயின் அதை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடாது.



"கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் பரிசுத்த பவுல் வேறு எந்த போதனையையும நிராகரிக்கிறார். ஒருவேளை அது பரலோகத்தி-ருந்து தேவதூதரே வந்து போதித்தாலும் சரி. கிறிஸ்தவர்களாகிய நாம் ஜீவிக்கிற நம் ரட்சகரான நம் ஆண்டவருக்கு ஊழியராய் இருக்கிறோம். நமக்கு அவர் போதித்திருக்கும் சத்தியத்தை யாரிடமும் விட்டுக் கொடுக்க நமக்கு உரிமை இல்லை. மனுக்குலத்துக்கு அவர் அளித்திருக்கும் செய்தியை நிறுத்திவைப்பதற்கோ அல்லது இதை முக்கியமற்ற ஒன்றாய் நினைக்கவோ கூட உரிமை இல்லை. நாம் அனைவருமே பிறரை தங்களுடைய கொள்கைக்கு இழுக்கும் நோக்குடனேயே இங்கு கூடியிருக்கிறோம். இது சமாதானத்துக்கு பதில் போருக்கான ஒரு பேரவையாக இல்லாதிருக்குமோ? இது நம்மை இன்னும் அருகே நெருக்கமாய் அழைத்து வருவதற்கு பதில் இன்னும் தூரமாய் தள்ளி வைத்துவிடாதா? ஆனால் ஆவிக்குரிய முறைகளில் தற்காக்கவும், பிராச்சாரம் செய்யவும் இந்த மாபெரும் முக்கிய சத்தியத்தை பிடித்துக்கொண்டால் மட்டுமே முடியும் என்று நான் கருதவில்லை. ஆவிக்குரிய ஆயுதங்களோடு நடத்தப்படும் ஒரு நேர்மையான போரானது தன் எதிராளியை இகழ வேண்டிய அவசியமில்லை. அதற்கு மாறாக அநேக சமயங்களில் அது அவர்களை இன்னும் நெருக்கமாக கொண்டு வருகிறது.

"மத சுதந்திர உரிமை என்கிற இந்த மாபெரும் கொள்கையானது பொதுவாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாகிவிட்டால் இந்த பேரவையானது சரித்திரத்தின் ஏடுகளில் என்றென்றும் நினைவூட்டும் வகையில் பொறித்து வைப்பதற்கு போதுமானதை செய்துவிட்டதாக நான் எண்ணுகிறேன். நம் ஒவ்வொருவரின் இதயத்திலும் ஒரு ஒளி உதயமாகிறது. இதைப் பொருத்தமட்டில் 19ம் நூற்றாண்டு நமக்கு பெரும் முன்னேற்றத்தை கொண்டு வந்திருக்கிறது. ஆனாலும் உலகமே ஒப்புக்கொள்ளும் வகையில் இந்த மாபெரும் கொள்கையான சுதந்திர மத உரிமையின் முன் 20ம் நூற்றாண்டில் நுழைவதற்கு நாம் சிரத்தை எடுக்க வேண்டியேயிருக்கிறது."

இந்த பேரவையின் பொதுவான கண்ணோட்டத்துக்கு மாறான குறிப்பிடும்படியான ஒரு சொற்பொழிவை கனடாவைச் சேர்ந்த திரு. கிரான்ட் என்பவர் கொடுத்தார். அவர் கூறியதாவது :

"இந்த மத பேரவையை நாம் பெரிய காரியம் ஏதோ செய்யப்போகிறோம் என்ற எண்ணத்தில் துவக்காமல், தாழ்மையும், பாவத்தை மற்றும் தோல்விகளை குறித்த மேட்டிமை அற்ற குற்ற உணர்வோடு துவக்க வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது. இந்த சத்தியத்தின் முன்பாக இவ்வுலகத்தார் ஏன் விழவில்லை? அதற்கான தவறு நம்முடையதே. அப்போஸ்தலர் பவுல், தேவன் வழிநடத்திய ஆச்சரியமான சரித்திரத்தை பின்னிட்டுப்பார்த்து, அதன் கோட்பாடுகளுக்கெல்லாம் திறவு கோலாக இதைக் கண்டார். அதாவது யேகோவா தேவனானவர் கீழ்ப்படியாத, முறுமுறுக்கும் ஜனங்களுக்காக தன் கரத்தை எப்பொழுதும் நீட்டிக்கொண்டிருந்தார் என்பதே. அதுவும் எப்போதுமே நீதிமான்கள் மீந்தவர்கள் உண்டு. இஸ்ரயேல் தேசமானது யேகோவாவை புரிந்து கொள்ளவேயில்லை. ஆகவே, தன் சொந்த உன்னதமான பணியை புரிந்து கொள்ளவும் தவறிவிட்டது.

"பரிசுத்த பவுல் ஒருவேளை இப்போது இருப்பாராகில் 19ம் நூற்றாண்டின் கிறிஸ்தவ ராஜ்யத்தை குறித்த அவ்விதமானதொரு துக்ககரமான பாவ அறிக்கையை சொல்-யிருக்க மாட்டாரா? நம் கிறிஸ்தவ மதத்தை தாழ்த்தி நம்மை சிலுவையில் அறைவதற்கு பதில் கிறிஸ்தவ மதத்தை குறித்து நாம் பெருமைப்படுகிறோம் என்று சொல்-யிருக்க மாட்டாரா? கிறிஸ்தவம் நம்மை மேற்கொள்ள அனுமதிப்பதற்கு பதிலாக நாம் அதை மேற்கொண்டுவிட்டதாக பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அது நெறிமுறை மற்றும் ஆவிக்குரிய ஒழுங்குகளிடையே ஊடுருவி எளிமையான வழியில் அதை எடுத்துரைத்து, முழுமையாய் அதை சீர்தூக்கி பார்க்கிறதா என்று நோக்குவதை விட்டுவிட்டு அதற்கு பதிலாக நமது ஆவிக்குரிய மற்றும் நெறிகளின் முறைமைகளி-ருந்து அதை ஒதுக்கி தள்ளிவைத்துவிட்டோம். இதனால் நாம் அதனுடைய மகிமையை மறைத்து, அதன் வல்லமையின் புகழை மங்க செய்துவிட்டோம். ஆகவே தான் நம் இரட்சகர், 'இடைவிடாமல் என் கரங்களை கீழ்ப்படியாத முறுமுறுக்கும் மக்களுக்காக நீட்டினேன்' என்கிறார். ஆனால் ஜெயம் கொள்ளுவதற்கான ஒரே ஒரு மறுக்கமுடியாத நிபந்தனை என்னவெனில், நாம் நமது தோல்விக்கான காரணத்தை கண்டுபிடித்து அதற்காக தாழ்மையும், பணிவும், பொறுமையும் உடைய மனதுடன் வருந்தி, நாம் இப்போது கொண்டிருக்கும் தனியாத மேலை நாட்டு மனோதிடம் மற்றும் விசுவாசத்துடன் நாம் இப்போது போக வேண்டும்."



இந்த உணர்ச்சிபூர்வமான கருத்துக்களுக்கு இந்த பேரவையில் ஒரு எதிரொ-க்கும் குரல் எழும்புமா? ஆனால் அவ்விதம் எதுவும் நடக்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக "பத்தொன்பதாம் நூற்றாண்டின் மகததுவமான மத முன்னேற்றம்" என்று பறைசாற்றிக் கொள்ளும் வகையிலே தான் வர்ணிக்கப்பட்டது. மேலும் பேர்ன்ஸ்டிராஃப் பிரபுவின் முதல் அபிப்ரமாயமான இது கிறிஸ்தவ கோட்பாடுகள் மற்றும் போதனைகளின் விட்டுக் கொடுத்தல் என்பது உண்மையான ஒன்று என்று பேரவையில் பின்தொடரப்பட்ட கூட்டங்கள் நிரூபித்தன.

## கத்தோ-க்க, புறமத மற்றும் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களின் முரண்பாடான போக்குகள்

கத்தோ-க்க மற்றும் பல்வேறு புற மதங்களின் திடமான மற்றும் பிடிவாதமான மனோநிலையானது புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களின் பராம்பரியங்களுக்கு குறிப்பிடப்படும் அளவுக்கு முரண்பாடாக இருந்தது. அவர்களுடைய பரிசுத்த வேதத்தின் அதிகாரத்துக்கு எதிராக ஒரே ஒரு வாக்கியம் கூட அவர்கள் யாராலும் சொல்லப்படவில்லை. தங்கள் மதத்தை புகழ்ந்து போற்றியுள்ளனர். ஆனாலும் புற மதத்தவர்களும் கூட பெறும் மதிப்பை காட்டுகின்ற பாரம்பரியமான, நாத்திக பிரசங்கங்களை, புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களே கிறிஸ்தவ மதத்திற்கும் வேதத்துக்கும் எதிராக பேசுவதை ஆச்சரியத்துடன் கேட்கின்றனர்.

கிறிஸ்தவர்களிடையேயான இப்படிப்பட்ட காரியங்களின் நிலையை பார்க்கும் போது கிறிஸ்தவரல்லாதவருக்கு பெருத்த ஆச்சரியம் ஏற்படுவதற்கு நிரூபணமாக, யோகோஹமாவில் நடந்த ஒரு பெரிய கூட்டத்தில் ஜப்பானிய பிரதிநிதி ஒருவர் பேசிய பேச்சின் ஒரு பகுதியை இங்கு பிரசுரிக்கிறோம். அவர் கூறுவதாவது :

"மதங்களின் பேரவைக்கான அழைப்பிதழை நாங்கள் பெற்றபோது, புத்தமத அமைப்பினர் எங்களை தங்கள் பிரதிநிதிகளாக அனுப்ப விரும்பவில்லை. ஏனெனில் எங்களில்

பெரும்பாலோனோர் இது கிறிஸ்தவர்களின் ஒரு மிகவும் மதிநுட்பமானதொரு நடவடிக்கையாகும். இதன் மூலம் நம்மை அங்கு கூட்டி சேர்த்து கேவலப்படுத்துவர் அல்லது மதம் மாற்றம் செய்ய முயற்சிப்பர் என்றே நினைத்தனர். ஆகவே தான் நாங்கள் தனிப்பட்டவராய் வந்தோம். ஆனால் மிகவும் அற்புதமான ஆச்சரியம் எங்களுக்காய் காத்திருந்தது. எங்கள் எண்ணங்கள் யாவும் தவறானவையாகிவிட்டன. கிறிஸ்தவ மதத்தை பற்றிய மேற்கத்திய நாடுகள் கொண்டிருக்கும் தவறான கருத்துக்களையும், தங்கள் பெலவீனங்களையும் உணர்ந்து நமது மதத்தைக் குறித்து நம்மிடம் கேட்டுத்தெரிந்து கொண்டு, பிறகு உண்மையான மதம் எது என்பதை புரிந்துக்கொள்ளவே இந்த பேரவை கூட்டப்பட்டது. அமெரிக்காவைக் காட்டிலும் புத்தமதத்தின் போதனைகளை பிரச்சாரம் செய்ய உலகிலேயே சரியான இடம் எதுவுமில்லை. அமெரிக்காவில் கிறிஸ்தவம் என்பது வெறும் சமூக அலங்காரத்துக்கானதாக மட்டுமே இருக்கிறது. இது வெகு சிலராலேயே வெகு ஆழமாய் நம்பப்படுகிறது. கிறிஸ்தவர்களில் பெரும்பாலோனோர் மதுபானம் அருந்தி, மிகவும் பாவமான பல்வேறு குற்றங்களை புரிந்து மிகவும் சிற்றின்ப பிரியராய் வாழ்கின்றனர். இவைகள் பொதுவான நம்பிக்கையாக இருந்தாலும் சமூக அந்தஸ்து என்ற பெயரில் செய்யப்படுகிறது. அதனுடைய அதிகார குறைச்சலுக்கு அதன் பெலவீனமே சாட்சியாய் இருக்கிறது. கிறிஸ்தவ மதத்தைக் காட்டிலும் புத்த மதத்திற்கு இருக்கும் மாபெரும் மேன்மையையே இந்த பேரவை காட்டுகின்றது. மேலும் அமெரிக்கர்களும், பிற மேற்கத்தியரும் கிறிஸ்தவ மதத்தின் மீது தங்கள் விசுவாசத்தை இழந்துவிட்டதால் அவர்கள் நமது மேன்மையான மதத்தின் போதனைகளை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராகிவிட்டதே இந்த பேரவையை கூட்டியதின் பிரத்தியோக உண்மை காரியமாகும்."

இந்த கூட்டத்தின் முடிவுரையில் "எப்படி அமெரிக்க கிறிஸ்தவர்கள் ஜப்பானில் நடப்பது போலவே இவ்விதமான கூட்டத்தை கூட்டி கிறிஸ்தவத்தை இவ்வளவு புண்படுத்தும்படியான தவறை செய்கின்றனர்?" என்று ஜப்பானிய கிறிஸ்தவர்கள் கூறியதில் வியப்பேதும் இல்லை.



சரித்திரத்தில் தேர்ச்சி பெற்றவருக்கு ரோம சபை என்கிற அந்திகிறிஸ்துவுடன் இணைவதில் புராட்டஸ்டன்டார் காட்டிய உத்வேகம் குறித்து கொஞ்சம் தெரிந்திருக்கும். மேலும் அதன் தற்கால செயல்களை கவனிப்போருக்கு அதன் இருதயமும், குணமும் இன்னும் அப்படியே மாறாமல் இருப்பதை அறிவர். யூதர்களை ரஷ்யர் துன்பப்படுத்திய போது கிரேக்க கத்தோ-க்க சபை அந்த காரியத்தை ஊக்குவிக்காமல் இருந்திருக்குமேயானால், அதற்கு அத்தனை அங்கீகாரமும், ஆதரவும் கிடைத்திருக்காது என்பதை விவரம் அறிந்த யாவருமே நன்கு அறிவர். கிரேக்க சபையில் குருட்டாட்டத்திலும், மூடநம்பிக்கையிலும் இருந்து விழித்துக்கொண்ட மற்ற எல்லா கிறிஸ்தவர்களும் அவரது வார்த்தையை தியானித்து அதன்மூலம் தேவனை தேடிக்கொண்டிருந்தனர். கிரேக்க கத்தோ-க்க குருமார்களால் தூண்டிவிடப்பட்ட உபத்திரவங்களும், போலீசாரின் குற்றச்சாட்டுக்களும் மிகவும் கொடுமையானதும், அதிர்ச்சி தரக்கூடியதுமாய் இருந்தது. ஆனால் இந்த ரோம மற்றும் கிரேக்க கத்தோ-க்க சபையின் அமைப்புகளின் சேர்க்கையும், கூட்டுறவும் எப்படி ஆர்வமுடன் நாடப்பட்டதோ ஏறக்குறைய அதேவிதமாய் புறமதங்களின் அறியாமையோடும், மூடநம்பிக்கையோடும் கூட உறவு வைத்துக்கொள்ளவும் ஆர்வம் காட்டப்பட்டது.

## புறமதத்தாரின் ஒட்டுமொத்த அந்தகாரத்தோடு கூட இணைவதில் கிறிஸ்தவர்கள் காட்டிய விருப்பம்

புறமதத்தாரின் ஒட்டுமொத்த அந்தகாரத்தோடு உறவு வைத்துக்கொள்ள கிறிஸ்தவர் காட்டிய பேராவலை டாக்டர் பென்டிகாஸ்ட் அவர்களின் கீழ்க்கண்ட கோபமான குற்றச்சாட்டி-ருந்து நாம் அறிந்து கொள்ளலாம். இவர் கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவ ஊழியர்களையும் குறித்து சில வெளிநாட்டவரின் கருத்துக் குறித்து எதிர்க்கும் மிகச்சரியானதொரு குரல். அவர் கூறியதாவது:

"இந்த பார்-மென்ட்டின் விவாதங்களை ஏதோ ஒன்று தூண்டி விட்டு தொடர்ச்சியாய் மீண்டும் மீண்டும் குற்றச்சாட்டுக்களையே கேட்கும்படி செய்வதை குறித்து நான்

மிகவும் பரிதாபப்படுகிறேன். அது மட்டுமன்றி சில குறிப்பிட்ட கிழக்கத்திய மத பிரதிநிதிகளிடமிருந்து கிறிஸ்தவ மதத்தின் மீது தொடர்ந்து கூறப்படும் விமர்சனங்களை கேட்க இத்தனை பொறுமையோடு கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட அமர்ந்து கொண்டிருக்கிறோம். உதாரணமாய் சிக்காகோ, நியூயார்க்கின் சேரிப்பகுதிகளின் பெயர் சொல்லக்கூடாத தீய காரியங்கள் நமது விருந்தாளிகளாக இருக்கும் புதியவர்களின் கண்களைக்கூட உறுத்துகின்றது. விபச்சாரம், குடிபோதை, சண்டை, சச்சரவு, கொலை மற்றும் குற்றங்கள் நம் மீது மாறாத அவப்பேரை சேர்த்துவிட்டன. அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய இரு அரசாங்கம் மற்றும் தேசிய கட்சிகளின் தோல்விகளுக்கு கிறிஸ்தவமே குற்றம் சாட்டப்படுகிறது. போதைப் பொருள் வியாபாரம், மதுபான பரிமாற்றம், ஒப்பந்த முறிவு, சீனர்களுக்கு எதிரான மனிதாபிமானம் அற்ற காட்டுமிராண்டித்தன சட்டங்கள் ஆகியவை யாவுமே கிறிஸ்தவ சபை மீது பழிசுமத்தியது. (ஆனால் கிறிஸ்தவ நாடுகளோ, இந்த புறமதத்தாரின் பிரதிநிதிகளை இப்படி தீர்மானிப்பதற்கு சரியானபடி குறை கூற இந்த கிறிஸ்தவர்கள் உரிமையுடன் செயல்படுவார்களா?)

“இந்த அநீதிகள், குடிபோதை, குற்றங்கள், சகோதரத்துவமின்மை மற்றும் சுயநல பேராசையான பல்வேறு அழிவின் நடவடிக்கைகள் யாவும் கிறிஸ்தவத்தின் கட்டுப்பாட்டிற்கும் மீறி நமது நாட்டி-ருந்து கிழக்கத்திய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (இவைகள் கிறிஸ்தவ நாடாக இருந்திருக்காவிடில் இப்படி கூறமுடியாது. இவ்விதமான தேசங்களின் பாவத்தை குறித்த குற்றச்சாட்டுகளுக்கு சபையோ(அ) ஆலயங்களோ குறைகூறப்பட்டிருக்கும். அதுவும் நேர்மையுடன் சபையை குற்றம் சாட்டி இருப்பர்.) இந்த குற்றங்களை திருத்தவும், ஒழிக்கவும் கிறிஸ்துவின் சபையானது இரவும் பகலும் அயராது உழைக்கிறது. கிறிஸ்தவ சபைகளின் ஏகோபித்த குரலானது இந்த போதை மருந்து கடத்தல், சாராய வியாபாரம், சீனர்களின் கொடுங்கோல் செயல்கள் மற்றும் நமது கிழக்கத்திய நண்பர்கள் குறைகூறும் எல்லாவிதமான களங்கம் மற்றும் பேராசைகளின் காரியங்களையும் வன்மையாய் கண்டிக்கிறது.

“விமர்சிக்கப்படுவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால்



எங்களை விமர்சிக்கின்ற கனவான்கள் பிரதிநிதிகளாய் வந்திருக்கும் மதமுறைமைகளில் அவர்களது ஆலயங்கள் உயர்ந்த சாதி எனப்படும் பிராமண குருமார்களால் மட்டுமே நிர்வாகிக்கப்படுகிறது. இவர்களோ நெறி அற்ற தீயசிற்றின்ப காரிய முறைகளுக்கு அங்கீகாரத்தோடு நியமிக்கப்பட்ட மடாதிபதிகளாய் இருக்கின்றனர். இதற்கு இணையான தரக்குறைவான காரியங்கள் மேற்கத்திய நாடுகளில் எங்குமே காணப்படமாட்டாது. மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி என்று நான் கருதுகிறேன். பத்துஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்களுக்கு உங்களை இந்தியாவின் ஒவ்வொரு பகுதிக்கும் அழைத்துச்செல்ல முடியும். இவைகளோடு இணைந்த 200-400 பெண் துறவிகள் உள்ளனர். இவர்களுடைய வாழ்க்கை இருக்கவேண்டிய விதத்துக்கு மிகவும் மாறானதாய் இருக்கிறது.

“இதை நான் என்னுடைய சொந்த கண்ணால் பார்த்திருக்கிறேன். இதை இந்தியாவில் யாருமே மறுக்கமுடியாது. பிராமணர்களோடு இதை குறித்து நீங்கள் பேசுவீர்களாகில், சாதாரண மக்களுக்குரிய முறைமைகளில் இதுவும் ஒரு அம்சம் என்று கூறுவர். இந்து மதத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனம் இது என்பதை மனதில் கொள்ளவும். இந்து மற்றும் புத்தமத கோயில்களை பார்ப்பவர்கள் அதன் இழிவான சிற்பங்களையே காணமுடியும். விகாரமானதொரு பாரம்பரிய சின்னமாகிய ஆண், பெண் உறுப்பை மிகவும் பிரசித்தமானதொரு வழிபாட்டு பொருளாக (சிவ-ங்கம்) இந்தியாவில் வைத்திருக்கின்றனர். இது இந்து மதத்தினையே களங்கப்படுத்துகிறதாய் இருக்கிறது. இவைகளை பொருட்படுத்தாமல் இருந்தது மட்டுமன்றி இவைகளை நடைமுறைப்படுத்தி, வழிநடத்தி, கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதே இந்த மதத்தின் குருமார்கள் தான் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். நிர்வாண ஓவியங்களும், உருவங்களுமே இந்திய கோயில்களின் நுழைவாயி-லேயே வெளிப்படையாய் வைக்கப்பட்டிருப்பதை காணலாம்.

“இந்த இந்து மதத்தைச் சார்ந்த பிரதிநிதிகள் மேற்கத்திய நாடுகளின் தேவையற்ற பகுதிகளை குறித்து செய்யும் விமர்சனத்தை தாங்குவது சற்று கடினமாகத் தோன்றுகிறது. ஆனால், அவர்களோ இதேவிதமாய் ஏராளமான கண்ணாடி மாளிகையில் தாங்கள்

ஒவ்வொருவருமே தங்கள் சொந்த மதத்தலைவர்களால் உயர்த்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, தற்காக்கப்பட்டு வாழும்நிலையில் இருந்துக் கொண்டே பிறரை விமர்சிக்கின்றனர்.

“கிழக்கு தேச மதங்களின் முக்கியமான போதனைகளுள் ஒன்று கடவுள் தகப்பனாகவும் மனிதன் சகோதரனாகவும் இருப்பதாகும். ஆனால், உண்மையில் எந்த ஒரு இந்து மத புனித இலக்கியம் கூட இந்தியா முழுவதிலும் இந்த தேவன் தகப்பன், மனிதன் சகோதரன் என்பது குறித்து நியாயப்படுத்தவோ, சிந்திக்கவோ இல்லை. இது குறித்து நான் சவால் விடுகிறேன். இது கிறிஸ்தவத்தி-ருந்து தான் உண்மையில் களவாடப்பட்டிருக்கிறது. இதை அவர்கள் ஏற்றுக்கொண்டு இணைத்துக் கொண்டதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு பிராமணன் கீழ்ஜாதிக்காரரை அதிலும் ஏழை பறையரை அருவறுப்புடனான கண்ணோட்டத்தில் பார்ப்பதுடன், அவர்கள் ஏதோ குரங்கி-ருந்தும், பிசாசி-ருந்தும் உருவானவர்கள் என்கிறதானதொரு வித்தியாசமான முறையை கடைபிடித்துக் கொண்டு, அவர் மட்டும் கடவுள் தகப்பன், மனிதன் சகோதரன் என்ற கொள்கையை நம்புகிறவர் என்று நாம் எப்படி நம்பமுடியும்? அவ்விதம் பிராமணர்கள் மனிதனுடனான சகோதரத்துவத்தை நம்புகிறவர்களாகில், பிற ஜாதி மனிதனோடு நட்புறவும், சமூக காரியங்களில் உடன்பாடு இல்லாமலும், அதேவிதம் மேற்கத்திய சகோதரர்களிடமும் ஏன் இருக்கவேண்டும்? அதேசமயம் தனது புதிய போதனையான கடவுள் தகப்பன், மனிதன் சகோதரன் என்ற கொள்கையுடன், தயாள குணத்துடன் எப்படி கை கோர்த்துக்கொள்ள முடிகிறது?

“ஒருவேளை இந்தியாவின் மனிதனின் சகோதரத்துவத்தை எத்தனை அக்கறையின்றி கவனிப்பவராயிருந்தாலும் சகோதரிகளை குறித்து அவர்களிடம் அவ்வித கருத்து காணப்படவில்லை என்பதை மறுத்துக் கூறமுடியாது. இந்தியாவில் இருக்கும் இந்து மதப் பெண்கள் சொல்ல முடியாத பயங்கரங்களுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதால் அவர்களே இதற்கு பதிலாக அமையட்டும்.”

“ஆங்கிலேய அரசாங்கம் சதி (உடன்கட்டை ஏறுதல்) என்ற பழமையான இந்து மத சடங்காச்சாரத்தை நீக்கும் வரை, ஒவ்வொரு



வருடமும் நூற்றுக்கணக்கான இந்துமத விதவைகள் தங்கள் இறந்துபோன கணவரது சிதையின் நெருப்பில் சந்தோஷமாய் ஏறினர். இதன் மூலம் இந்து விதவைக்கோலம் என்ற நரகத்தில் உயிரோடு இருக்கிற பயங்கரத்தி-ருந்து தங்களை விடுவித்துக்கொண்டு, தங்களையே மாய்த்துக் கொள்ளும்படி சிதையின் தீயை அணைத்துக் கொண்டனர். அவர்களது மதம் விதவைகளுக்கு குறிப்பாக சிறுவயது விதவைகளுக்கு என்ன செய்திருக்கிறது என்று நம் இந்து நண்பர்களே கூறட்டும்.அவர்கள் தலை குற்றவாளிகளைப் போல் சவரம் செய்யப்பட்டு, ஆபரணங்கள் களையப்பட்டு, கந்தையால் உடுத்தப்பட்டு, நாம் நினைத்துப்பார்க்கக் கூடாத கேவலமானதொரு அடிமையின் நிலைக்கு தாழ்த்தப்பட்டு, குடும்பத்துக்கு பொதுவாய் உழைக்கும் ஒரு இயந்திரமாய் ஒரு இழிவான வேலைக்காரியாய், அவ்வப்பொழுது வெளியில் சொல்லமுடியாத கேவலமான வேலைகள் செய்யவுமே அனுமதிக்கப்பட்டனர். இந்துத்துவம் பாவப்பட்ட விதவைகளை இவ்விதமான நிலைக்கே தள்ளியது. இரண்டு வருடங்களுக்கு முன்பு தான், திருமண வயது வரம்பை 12 வருடமாக்கும்படி பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு புதிய நேர்மையான சட்டத்தை இயற்றும்படி கூறியது. இதன் மூலம் தன் பாலவயது மனைவியுடன் சட்டப்படி உறவு வைத்துக் கொள்ள இந்துக்களுக்கு வழிவகுக்கப்பட்டது. பா-யல் கொடுமைக்கு ஆளான பெண் குழந்தைகளால் கிறிஸ்தவ மருத்துவமனைகள் நிரம்பியிருந்தன. மதம் என்ற பெயரால் நடத்தப்பட்டு வந்த இந்த பா-யல் குற்றங்களை உண்மையில் அரசாங்கம் தலையிட்டு நிறுத்த வேண்டியிருந்தது. இந்தியா முழுவதிலுமே இதைக் குறித்து ஒரு கிளர்ச்சி எழுந்து மதசம்மந்தமான புதிய கலகங்களை ஏற்படுத்துமோ என்று அஞ்சும் அளவுக்கு இருந்தது.

“அறியாமையினாலும், முழுதும் தெரிந்து கொள்ளாமலும் நாம் இவர்களைக் குறித்து குறை கூறுவதாய் கிழக்கத்திய நண்பர்கள் நம்மை குறைகூறுகின்றனர். ஏனெனில், பேரவையின் ஆரம்பத்தில் நடந்த சமீபத்திய விவாதத்தில் புத்தமத வேதத்தை ஐந்து நபர்கள் மட்டுமே படித்திருப்பதாய் கூறினர். ஆகவே நமது தீர்மானம் அறியாமையானதும், அநீதியானதும் என்றே எடுத்துக் கொள்ளப்பட்டது. இதே விவரம் பர்மா அல்லது இலங்கையில்

எடுக்கப்படுமாயின் அங்கேயும் குருமார்களைத் தவிர அநேகர் தங்கள் சொந்த மத புனித நூலையே வாசித்தது இல்லை என்றே கூறுவார்கள் என்பது அநேகமாய் சரியானதாக இருக்கும். இந்துக்களின் வேதங்கள் என்பவையே ஆராதிக்க பயன்பட்டது. இதை பிரமாணர்களைத் தவிர வேறு யாரும் போதிக்கவோ அதை படிக்கவோ முடியாது. கிறிஸ்தவ மிஷினரிமார்கள் இந்தியாவுக்குள் போவதற்கு முன் சமஸ்கிருதம் நடைமுறையில் இல்லாத ஒரு உயிரற்ற பாஷையாகவே இருந்தது. இந்திய வேதங்கள் பிராந்திய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டதும், மேற்கத்திய தேசங்களுக்கு வாசிக்க கிடைத்ததும் எப்படியெனில் கிறிஸ்தவ மிஷினரிகளும் மேற்கத்திய அறிஞர்களும் அவைகளை கண்டுபிடித்து, அவைகளை தோண்டி எடுத்து மொழி பெயர்த்து அவைகளை வெளி உலக வெளிச்சத்துக்கு கொண்டு வந்தனர். ஒரு சராசரி இந்தியனுக்கு தெரிந்திருக்கும் சமஸ்கிருத வேதங்கள் கூட அவரது மேற்கத்திய கல்வி மூலம் கிடைத்ததே, அதுவும் ஆங்கிலத்திலோ அல்லது தாய்மொழியிலோ ஒரு ஐரோப்பியரோ அல்லது மேற்கத்திய அறிஞரோ மொழி பெயர்த்திருக்கும் அளவுக்கு மட்டுமே அவர் அறிந்துக் கொள்ளக்கூடும். 100க்கு 99 சராசரி மக்களுக்கு வெறும் சம்பிரதாயங்கள் மட்டுமே தெரியும். இந்திய மதத்தின் இந்த உயிரற்ற தனித்தன்மையை கிறிஸ்தவன் தனது வேதாகமத்தை 300க்கும் மேற்பட்ட வேற்று மொழிகளிலும், தாய்மொழியிலும் மொழி பெயர்த்து அதை பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள பிரதேசங்களுக்கும், உலக மக்களுக்கும், அவர்களது வார்த்தைகளுக்கும் பரப்பி இருக்கும் உண்மையோடு ஒப்பிட்டு பார்த்து வித்தியாசத்தை காணலாம். வெளிச்சத்தின் மீது நாங்கள் உரிமை கொண்டாடுகிறோம். ஆனால் கிழக்கத்திய வேதமானது வெளிச்சத்தைக் காட்டிலும் இருளை நேசிக்கிறது. ஏனெனில் அவர்களால் உலகமுழுவதும் வெளியாகியிருக்கும் ஒளியை தாங்க முடியாது.

“இப்போதிருக்கும் புதிய மேலான இந்து மார்க்கம் கிறிஸ்தவ சூழ்நிலையின் செல்வாக்கின் கீழ் வளர்ச்சி பெற்றதே, ஆனால் கிறிஸ்தவ ஆலயம் கற்றுக் கொள்ளும் அளவுக்கு அவர்களது நெறிமுறைகளில் இன்னும் தேர்ச்சி பெறவில்லை. Augean அசுத்தத்தைக் காட்டிலும் மோசமானவற்றை இந்திய ஆலயங்கள்



சுத்தப்படுத்தி அகற்றும்வரை, அதன் பூஜாரிகளும், சாஸ்திரிகளும் மதத்தின் பெயரால் செய்யும் செயல்களையும், பயங்கரமான நடவடிக்கைகளையும் கண்டித்து கைவிடும் வரைக்கும் பிறநாடுகளுக்கும், மக்களுக்கும் தங்கள் நெறிமுறைகளை எடுத்துக் கூறாதிருக்கட்டும்.”

## கடவுளை குறித்த புறமத சீர்திருத்தவாதிகளின் உணர்வு

“தான் நிர்பாக்கியமுள்ளவனும், பரிதவிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை” அறியாமல் (வெளி 3:17) புறமத உலகத்தின் சார்பாக கிறிஸ்தவ ராஜ்யமானது பிரதிநிதியாய் நிற்கிறது. சில புறமத நாடுகளில் தேவனை குறித்த உணர்வானது குறிப்பிடும்படியான வித்தியாசத்தோடு காணப்படுகிறது; மிகவும் உன்னிப்பாய் கூர்ந்து நோக்கி கிறிஸ்தவர்களின் முரண்பாடுகளை குறித்து விமர்சிப்பது மிகவும் விசேஷமாய் இருக்கிறது.

இந்துக்களின் இரண்டு பிதிநிதிகளின் முக்கியம் வாய்ந்த சொற்பொழிவுகளின் மூலம் புறமத நாடுகளின் இருளை குறித்த சில கருத்துக்களையும் மிஷினரிகள் கொண்டு சென்ற வேதத்தின் மூலமான பாதிப்பையும் குறித்த இந்தியாவின் குறிப்பிடத்தக்க இயக்கத்தை நாங்கள் நம் முன் வைத்திருக்கிறோம். வேதாகமானது அதோடு இணைந்திருந்த முரண்பாடான கொள்கைகளோடு சேர்ந்து ஒரு வேலையை செய்து வந்தது. இவைகள் விவரித்து கூறும்படி உரிமை கோரினபோது, தடைகள் தோன்றினது. ஆனால், முற்றிலும் அழிக்கப்படவில்லை. ஜப்பானிலும் கூட இதே நிலைமை இருப்பதாக நாம் கேள்விப்படுகிறோம். கீழே மூன்று சொற்பொழிவுகளின் சாராம்சத்தையும் இணைத்திருக்கிறோம். இதில் புறமத சீர்திருத்தவாதிகளின் நேர்மையும், சிந்தனையும், வெளிப்படுத்தும் திறமையும், தீவிர மனோநிலைமையும் வெளிப்படுகிறது. கடவுளைப் பற்றிய உணர்வுடன் இருக்கும் அவர்கள் அதிர்ஷ்டவசமாக கடவுளை கண்டுகொள்ளக்கூடும்.

## புதிய இந்தியாவி-ருந்து ஒரு குரல்

திரு. மசூம்தார் சபையில் கீழ்கண்டவாறு சொற்பொழிவாற்றினார் :

"திரு. தலைவர் அவர்களே, தேசங்களின், மதங்களின் பிரதிநிதிகளே, இந்தியாவின் பிரம்ம சமாஜ் ஒரு புதிய சமுதாயம். அதை பிரதிநிதிப்படுத்துவதில் நான் பெருமைப்படுகிறேன். எங்கள் மதம் புதிதானது. ஆனால் அது மிக மிக பழமையிலும், எங்கள் தேசிய வாழ்வின் வேர்களில் இருந்தும், நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தும் வந்தது.

"அறுபத்து மூன்று வருடங்களுக்கு முன்பு இந்திய தேசம் முழுவதுமே ஒரு பெரிய குழப்பத்தில் இருந்தது. பல தெய்வ நம்பிக்கையின் காரணத்தின் கடூர சப்தமானது வானத்தின் அமைதியை கிழித்தெறிந்தது. விதவைகளின் அழுகை மட்டுமன்றி இறந்துபோன தங்கள் கணவரின் சிதைத்தீயில் உயிரோடு எரிக்கப்பட்டவர்களது மிகவும் பரிதபிக்கத்தக்க அழுகை, கடவுள் படைத்த இந்த பூமியின் பரிசுத்தத்தை கெடுத்தது. தேசத்துக்கென எங்களுக்கு இந்து மத தேவதை இருந்தாள். இவள் மக்களின் தாய் ஆவாள். அவளுக்கு 10 கைகள் உண்டு. தன் பிள்ளைகளை காப்பாற்ற ஒவ்வொன்றிலும் ஆயுதங்களை ஏந்திக் கொண்டிருப்பாள். கல்விக்கு ஒரு தெய்வம். அவள் ஞானம் என்னும் நரம்புகளுடைய வாத்திய கருவியான வீணையை வாசித்துக்கொண்டிருப்பாள். நல்ல செல்வத்துக்கென வேறு ஒரு தெய்வம் இருந்தாள். அவள் கையில் சங்கு அல்ல ஐஸ்வரியங்கள் நிறைந்த கூடை இருந்தது. அதில் இந்திய நாட்டுக்கான எல்லா ஆசீர்வாதங்களும் இருந்தது. யானை தலையை உடைய தெய்வம் உண்டு. வேறு ஒரு தெய்வம் மயில் மீது ஏறிச் செல்லும். அதோடு கூட 33 கோடி தேவர்களும் தேவதைகளும் இருந்தனர். இந்து புராணங்களைக் குறித்த தத்துவ விளக்கங்கள் என்னிடம் இருக்கிறது. ஆனால் அவைகளை எடுத்துப்பேச இது சமயம் அல்ல.

"இந்த பல தெய்வ நம்பிக்கை, சமூக தீமை என்ற குழப்பம், அமளிக்கும், அந்த நாட்களின் இருளுக்கும் இடையே ஒரு மனிதன் தோன்றினான். அவர் ஒரு மாசற்ற குலத்தில் பிறந்த மாசற்ற பிராமணனாய் இருந்தார். அவர் பெயர் ராஜாராம் மோகன்ராய். அவர் ஒரு மாமனிதராகும். முன்பே இருந்த பல தெய்வ நம்பிக்கையின் தப்பறையையும், ஜீவனுள்ள கடவுளை குறித்த சத்தியத்தையும் நிரூபிக்கும் வகையில் ஒரு புத்தகத்தை எழுதினார். இது அவருக்கு மகா நிந்தையை கொண்டு வந்தது. 1830ல் இந்த மனிதர் பிரம்ம சமாஜ் என்கிறதான ஜீவனுள்ள ஒரே கடவுளை வணங்குபவர்களின் சங்கத்தை ஸ்தாபித்தார்.



"வேதங்கள், உபநிடதங்கள் என்னும் புராண இந்து வேதங்களின் தூண்டுத-ன் அடிப்படையில் இந்த பிரம்ம சமாஜ்ஜியத்தின் ஒரே கடவுளின் சித்தாந்தம் நிறுவப்பட்டது.

"காலப்போக்கில் இந்த இயக்கம் வளர வளர இந்து வேதங்கள் உண்மையில் நம்பத்தகுந்தவைகளா? என்ற சந்தேகம் அதனுடைய அங்கத்தினருக்கு வர ஆரம்பித்துவிட்டது. வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் முரண்பாடான ஒரு மெல்-ய சப்தம் முத-ல் தங்கள் ஆத்மாவில் ஒ-ப்பதாக அவர்கள் நினைத்தனர். நமது இறையிய-ன் கோட்பாடுகள் தான் என்னவாக இருக்கக்கூடும்? எந்த கோட்பாட்டின் மீது நம்மதம் நிற்கிறது? மெல்-ய குர-ல் கேட்க ஆரம்பித்த இந்த கேள்வி பெருத்த சத்தமாக வளர்ந்துவிட்டது. எழும்பிக்கொண்டிருக்கும் இந்த மத சமுதாயத்தின் மீது, உண்மையான மதம் எந்த புத்தகத்தின் மீது ஆதாரப்பட்டிருக்கிறது என்கிற ஒரு பிரச்சனை முக்கியமானதாக உருவாகிவிடும் அளவுக்கு அதிக அதிகமாய் எதிரொ-க்க ஆரம்பித்துவிட்டது."

"உண்மையான மதத்துக்குரிய ஆதாரங்கள் இந்து வேதங்களில் மட்டுமே இருக்கக்கூடிய சாத்தியமே இல்லை என்பதை வெகுவிரைவிலேயே கண்டுகொண்டனர். இதற்கு வேதங்களிலும் சில சத்தியங்கள் இருந்தபோதிலும், தெய்வீக உண்மைகளுக்கு இது மட்டுமே ஆதாரமானது அல்ல என்று கண்டுகொண்டனர். எனவே பிரம்ம சமாஜ் தோன்றி 21 வருடங்களுக்கு பிறகு இந்து வேதங்களின் போதனைகள் கைவிடப்பட்டன.

"அதன் பிறகு வேறு வேதங்கள் எதுவும் இல்லையா? என்ற ஒரு கேள்வி எழும்பியது. நான் ஏற்கனவே முன்னொரு நாள் கூறியிருக்கிறேன் அல்லவா? இந்தியாவின் கம்பீரமான அரியணையில் தற்போது கிறிஸ்தவ மதம் சமாதான நற்செய்தியை ஒரு கரத்திலும், நாகரீக வளர்ச்சியென்னும் அரக்கனை மறுகையிலும் ஏந்திக் கொண்டு அமர்ந்திருக்கிறது. வேதாகமம் இந்தியாவுக்குள் ஊடுருவிவிட்டது. மனுக்குலம் புறக்கணிக்க முடியாத ஒரு புத்தகமாக

வேதாகமம் இருக்கிறது. ஆகவே, இந்து வேதங்களை ஒரு கையிலும், மறுக்க இயலாதபடி வேதாகமத்தின் ஆதிக்கத்தை மறுகையிலும் எடுக்க வேண்டியதாகிவிட்டதை உணர்கின்றோம். 1861ம் ஆண்டு எங்களது ஆராதனையில் வாசிக்கும்படியாக எல்லா மத வேதங்களின் சாராம்சங்களும் அடங்கியதொரு புத்தகத்தை வெளியிட்டோம். எந்த கிறிஸ்தவ மிஷினரியும் எங்கள் கவனத்தை வேதாகமத்தை நோக்கி ஈர்க்கவில்லை. எந்த முகமதிய குருவும் குரானி-ருந்து மிக உச்சிதமானதொரு மேன்மைகளை குறித்து எங்களுக்கு காட்டவில்லை. எந்த பார்சி மதத்தினரும் அவரது சென்ட் அவிஸ்டா-ன் மேன்மைகளைக் குறித்து எங்களுக்கு பிரசங்கிக்கவில்லை. ஆனால் தன்னிகரற்ற மெய் தேவன் எங்கள் இருதயத்தில் இருந்தபடியால், வேதாகமம், குரான், சென்ட் அவிஸ்டா என்கிற எல்லா வேதங்களிலும் இருந்த நலமானவைகளின் மூலகாரியங்களையும், மேன்மைகளையும் நோக்கி எங்கள் கவனத்தை திருப்பி, எல்லா புனித காரியங்கள் கூறப்பட்டிருக்கும் இடங்கள் யாவையும் எங்களுக்கு வெளிப்படுத்தினார். அவரது வழிநடத்துத-னாலும், அவரது ஒளியினாலும் இந்த உண்மைகளை எங்களால் கண்டுகொள்ள முடிந்தது. மேலும், அந்த நித்திய, மாறாத உண்மை சத்தியத்தின் மீதே எங்களது இறையிய-ன் அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறது."

"நீதிநெறியற்ற ஒன்று இறையியல் ஆகுமா? இந்த புத்தகத்தின் உட்கருத்து தான் என்ன? அல்லது தேவன் உண்டாக்கிய ஆலயமாகிய சரீரத்தில் பரிசுத்தம் இல்லாமல், சுயஒழுக்கமற்ற ஒரு தீர்க்கதரிசியின் அதிகாரம் தான் என்ன? எங்கள் இறையியலை நாங்கள் பெற்றுக் கொண்ட மாத்திரத்திலேயே, நாங்கள் நல்ல மனிதர்கள் அல்ல, புனிதமான எண்ணம் உள்ளவர்களல்ல, பரிசுத்தவான்கள் அல்ல என்பதும், எங்களிடம் எண்ணிலடங்கா தீமைகள் உண்டென்றும், அதுவும் எங்கள் வீடுகளில், எங்கள் தேசிய காரியங்களில், எங்கள் சமூக நிறுவனங்களில் அவை உண்டு என்பது எங்களுக்கு தெரியவந்தது. ஆகவே அடுத்த கட்டமாக பிரம்ம சமாஜ் சமூக சீர்திருத்தத்தில் தனது வேலையை தொடங்கியது. 1851 முதல் கலப்புத் திருமணம் நடந்தது. இந்தியாவில் கலப்புத் திருமணம் என்பது வேறுபட்ட ஜாதிகளைச் சார்ந்தவர்களிடையே திருமணம் நடப்பது.



ஜாதி என்பது ஒருவகையில் சீனப்பெருஞ்சுவர் போல ஒவ்வொரு குடும்பத்தையும், ஒவ்வொரு சிறு சமூக கூட்டத்தையும் சுற்றியிருக்கும். எந்த ஆணோ அல்லது பெண்ணோ இந்த தடைகளை மீறமுடியாது. இந்த சீனப்பெருஞ்சுவர் தேவனுடைய பிள்ளைகளது சுதந்திரத்தை என்றுமே அவமதிக்கக்கூடுமோ? என்று பிரம்ம சமாஜத்தில் நாங்கள் கேட்டோம். இல்லை, இதை உடைத்தெறிய வேண்டும்.

"அடுத்து எனது மதிப்பிற்குரிய தலைவரும், கழக தோழருமான கேஷப் சந்தர் சென் இவ்வித கலப்பு திருமணத்தை வேறுபட்ட ஜாதிகளிடையே நடக்க ஏற்பாடு செய்தார். பிராமணர்கள் இதனால் குற்றம் சுமத்தப்பட்டனர். பண்டிதர் என்று தங்களை நினைத்துக் கொண்டவர்கள் தங்கள் தலைகளை உலுக்கினர். பிரம்ம சமாஜ் தலைவர்களும் கூட வெறுப்புடன் தங்கள் தோள்கைளை உலுக்கிக் கொண்டு வெறுமையாய் நின்றனர். இந்த வா-ப கொழுந்துகள், இந்த சமுதாயம் முழுவதற்கும் தீயிடப்போகிறோம் என்றனர். ஆனால் கலப்பு திருமணமும் நடந்தது. விதவை மறுமணமும் நடந்தது.

"இந்தியாவில் விதவைகள் என்பது என்னவென்று உங்களுக்கு தெரியுமா? 10 அல்லது 12 வயதுடைய சிறுமி, தன் எதிர்காலத்தை புரிந்துகொள்ளும் முன்னமே தன் கணவரை இழக்கக்கூடும். அந்த சிறு பிராயம் முதல் அவள் மரிக்கும் வரை விரதங்கள், எளிமை மற்றும் கடுமையான வாழ்வுமுறை, துக்கங்கள் மற்றும் தனிமை, அவமதிப்புகள் என பல்வேறு துன்பங்களிடையே வாழவேண்டும். இதை கேட்பதற்கே நீங்கள் அஞ்சவேண்டியதாக இருக்கும். ஒரு பெண் முதல் முறை, 2ம்முறை, 3ம் முறை, 4ம் முறை என்று வருடத்தில் உள்ள பருவ காலங்களைப் போல அத்தனை திருமணங்களை செய்து கொள்வாளானால், அவளது நடத்தையை என்னால் ஏற்றுக்கொள்ளவோ, புரிந்துகொள்ளவோ இயலவில்லை. இப்படிப்பட்ட ஆண், பெண்ணின் நடத்தையை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. ஒரு 11வயதுடைய சிறுபெண் கணவன் என்று அழைக்கப்படுபவனை இழப்பதினால், விதவை என்ற அவல நிலைக்கு காலம் பூராவும் தள்ளப்பட்டு, குற்றவாளியைப் போல அவமதிக்கப்பட்டு இத்தனை இளம்வயதில்

இவ்வித கொடுமைக்கு ஆளாவது கொஞ்சமும் மனிதத்தன்மை அற்றதாகும். ஆகவே தான் இந்த விதவை மறுமணமும், கலப்பு திருமணங்களும் ஏற்படுத்தப்பட்டன. இப்படியாக சமூக பிரச்சனைகள் மீதும், குடும்ப மேம்பாட்டின் மீதும் நாங்கள் தலையிட்டோம். இதனால் பிரம்ம சமாஜத்தில் மிக விரைவிலேயே ஒரு விரிசல் ஏற்பட்டது. ஆகவே இளைஞர்களாகிய நாங்கள் மிகச்சிறந்ததை செய்ய எங்களையே நாங்கள் மாற்றம் செய்துகொண்டோம். எங்கள் சமூக சீர்திருத்தமெல்லாம் ஒரு பாதி முடியும் தருவாயில் வேறு ஒரு கேள்வி எழும்பியது.

"நாங்கள் விதவைகளை மணந்தோம். விதவைகள் எரிக்கப்படுவதை தடுத்தோம். எங்கள் சொந்த புனிதத்தன்மை என்னவானது? எங்கள் சொந்த மனசாட்சியை தூய்மைபடுத்திக் கொள்வது, எங்கள் ஆத்துமாக்களை சீர்படுத்துவது எப்போது? தன்னிகரற்ற நீதியாகிய தேவனின் கனம் பொருந்திய நியாய சபையில் நாங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது எப்படி? சமூக சீர்திருத்தமும், பொது நல நன்மைகளையும் செய்வது என்பது, தனிப்பட்ட புனிதத்தையும், ஆத்தும பரிசுத்தத்தையும் முன்னேற்றுவதுதான் நியாயபூர்வமானது.

"உங்கள் செய்கைகள் அத்தனை பலதரப்பட்டதாக இருக்கிற அமெரிக்க, ஐரோப்பிய சமூக நிலையை நான் ஆழ்ந்து சிந்திக்கும்போது நண்பர்களே, அடிக்கடி நான் பயப்படுகிற ஒன்று உண்டென்று கூறுகிறேன். அதென்னவெனில், உங்கள் காரியங்கள் அத்தனை விஸ்தாரமாய் இருப்பதினால் நீங்கள் அதிலே மூழ்கிப் போகிறீர்கள். ஆகவே, இந்த புதுப்பித்துக் கொள்ளுதல், சுயத்தை புனிதப்படுத்துதல், தேவனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்படுதல், சோதனைகள், நியாயத்தீர்ப்பு ஆகியவைகளைக் குறித்து அக்கறை செலுத்த நேரமே உங்களுக்கு இல்லை. இது எப்படி சாத்தியமாகிறது என்கிற கேள்வியே எல்லா கேள்விகளைக் காட்டிலும் பிரதானமானாய் இருக்கிறது.

"எங்கள் சமூக சீர்திருத்தப்பணிகளின் முடிவுக்குப் பின், புதுப்பிக்கப்படாத இந்த சுபாவமானது எப்படி புதுப்பிக்கப்படக்கூடும்? இந்த மாசு படிந்த ஆலயத்தை (சரீரத்தை) எந்த தண்ணீர் கொண்டு கழுவி, பரிசுத்தப்படுத்தக் கூடும்? என்கிற



பெரியதொரு விஷயத்துக்குள்ளாய் நாங்கள் கடந்து வந்தோம். இந்த நோக்கங்கள் மற்றும் விருப்பங்கள், தீமையான உணர்ச்சிகள் மற்றும் மிருகத்தனமான உணர்ச்சிகள் ஆகிய இவைகளுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளியை வைத்து, மனிதன் தான் இருந்த நிலைக்கு, அதாவது பரிசுத்த தேவ குழந்தையைப் போல், இயேசுவைப் போல் சீர்படுத்தப்பட்ட மனிதரைப் போல், திரும்பவும் எதுதான் கொண்டுவரும்? இறையியல் தத்துவம் முத-லும், நீதிநெறி தத்துவம் அடுத்து; 3வது இடத்தில் பிரம்ம சமாஜத்தின் ஆவிக்குரிய காரியங்களான பக்தி, மனம் திருந்துதல், ஜெபம், துதி, விசுவாசம், தேவ ஆவியின் மீதும், அவரது காக்கும் அன்பின் மீதும் முழுவதுமாகவும், பூரணமாகவும் நம்மை அர்ப்பணித்து விடுதல் ஆகும்.

[இந்த புறமத தத்துவஞானி, "புனிதமானதொரு தேவபிள்ளை.... சீர்திருத்தப்பட்ட மனிதர்" என்று அவர் கூறியது போல பாவம் என்றால் என்ன என்பதன் ஒரு பகுதியை மட்டுமே அவர் அறிந்திருக்கிறார். வீழ்ந்துப்போன மனுக்குலத்தின் மிகச்சிறந்த மனிதன் ஒருவன் கூட உண்மையில் கறையற்ற, புனிதமான, பூரணமான நிலைக்கு மிகவும் தூரமாகவே இருக்கிறான் என்பதை அவர் கண்டுகொள்ளவில்லை. ஆகவே, கிறிஸ்துவின் பூரணமும் பாவநிவிர்த்தியும் அவர்களை நீதிமானாக்குவதற்கு அவசியமாகும். அவர் ஜெபம், விசுவாசம், தேவ இரக்கம் முத-யவைகளைக் குறித்தும் பேசுகிறார். ஆனால் நீதி ஒன்றே தேவனுடைய செயல்பாடுகளுக்கெல்லாம் அஸ்திவாரமாக இருக்கின்றது என்பதனை இன்னும் அவர் உணரவில்லை. அது மட்டுமன்றி கிறிஸ்துவின் ப-யின் தகுதி ஒன்றின் மூலமே தேவன் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறாவராயிருந்து 18 நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஒரே முறையாக, யாவருக்காகவும் இதற்குரிய சாட்சி ஏற்ற வேளையில் விளங்கியும் அவரது மாபெரும் பாவநிவாரணத்தினால் மூடி மறைத்தார் என்பதையும் அவர் அறியவில்லை.]

"நீதிநெறிகளின் மீதான வாஞ்சை என்பது பரிசுத்தத்தைக் குறிக்காது; நன்மையின் மீதான விருப்பம், நல்லவராக இருப்பது என்பதாகாது. நூறு கிலோ சர்க்கரையை சுமந்து செல்லும் எருதானது

அதில் ஒரு துளி சர்க்கரையைக் கூட பாரத்தின் பளுவின் காரணமாய் சுவைப்பது இல்லை. ஆகவே, நமது மனவிருப்பங்கள், மற்றும் நம்முடைய எல்லா நேர்த்தியான வாஞ்சைகள், நமது நல்ல கனவுகள் மற்றும் நேர்த்தியான பிரசங்கங்கள் ஆகிய இவைகளை குறித்து பேசுவதாலேயோ, கேட்பதாலேயோ, கேட்டுக்கொண்டே உறங்குவதாலோ இவைகள் ஒரு மனிதனின் வாழ்வை பூரணப்படுத்திவிடாது. ஆராதனை, ஜெபம், தேவ ஆவியை நேரடியாய் உணரக்கூடிய ஆற்றல், அவரோடான ஐக்கியம், அவரது மாட்சிமையின் முன் முற்றிலுமாய் தன்னை தாழ்த்துவது, பக்தி வைராக்கியம், பக்தியின் கிளர்ச்சிகள், ஆவிக்குரிய ஆழமான ஈடுபாடு, தேவனுக்குள் வாழ்வதும் அசைவதும் தான் தனிமனிதனின் புனிதத்தன்மையின் இரகசியமாகும். ஆகவே, நமது செயல்பாட்டில் மூன்றாவது நிலையில் ஆவிக்குரிய கிளர்ச்சிகள், அதிதீவிர ஈடுபாடு, தியானம், எல்லையற்ற சுயத்தாழ்ச்சி, தேவனுக்கு முன்பாக அல்ல, மனிதனுக்கு முன்பாக, இவை யாவும் நமது வாழ்வின் சட்டங்களாய் மாறிவிட்டன. தேவன் கண்ணால் காணப்படாதவர். "நான் ஒரு பாவி, என்னை மன்னியும்" என்று தேவனிடம் சொல்வாராகில், அது அவரை பரிசுத்த குறைச்சலாக்குவதற்காக அல்ல, இது யாரையும் பாதிப்பதில்லை. ஆனால், மனுஷர் முன்பாக பாவ அறிக்கை செய்வதற்கும். உங்கள் சகோதர, சகோதரிகளுக்கு முன்பாக உங்களை தாழ்த்திக் கொள்ளவும், பரிசுத்த மனுஷரின் பாதங்களை சுத்தம் செய்யவும், நீங்கள் தேவ சந்நிதியில் மிகவும் பரிதாபகரமானவன், துர்பாக்கியவன் என்று கூறிக்கொள்வதற்கும் சிறிது தன்மானத்தை இழக்கவும், கொஞ்சம் மன தைரியமும் கூட வேண்டும்.

"கடைசி கொள்கையாக நான் எடுத்தக் கொள்ள வேண்டியது பிரம்ம சமாஜத்தின் முன்னேற்றத்தைக் குறித்தது.

"கிறிஸ்தவம் தேவனுடைய மகிமையை பறைசாற்றுகிறது. இந்துத்துவம் அவரது தன்னிகரற்ற, நித்திய மேன்மையை குறித்து பேசுகிறது. முகமதியம் நெருப்போடும், வாளோடும் அவரது சித்தத்தை சக்திவாய்ந்ததாய் காட்டுகிறது. புத்தமதமானது அவர் எத்தனை சமாதானமும், இன்பமுமானவர் என்று கூறுகிறது. அவர் எல்லா மதங்களின், எல்லா சபை பிரிவினரின், எல்லா தேசங்களின், எல்லா வேதங்களின் தேவன் இந்த பல்வேறு முறைமைகளை இந்த



பலதரப்பட்ட தீர்க்கதரிசனங்களை, பல்வேறு முன்னேற்றங்களை நாம் இணைந்து ஒரே முறையாக்குவதில் தான் நமது முன்னேற்றம் இருக்கும். ஆகவே, புது மதமாகிய பிரம்ம சமாஜ் என்பது புதிய கோட்பாடு. கிறிஸ்தவத்தை ஆர்வத்துடன் ரசித்து, கிறிஸ்தவர்கள் பேசுகின்றனர். அவ்வாறே யூதமதத்தை யூதரும், குரானை முகமதியரும், சென்ட் சுவிஸ்டாவை பார்சி மதத்தினரும் உயர்வாய் எண்ணுகின்றனர். கிறிஸ்தவர் தங்களது கோட்பாடுகளான ஆவிக்குரிய கலாச்சாரத்தை விரும்புவதுப் போலவே, இந்துக்களும், முகமதியரும் கூட விரும்புகின்றனர்.

"ஆனால் பிரம்ம சமாஜத்தின் இந்த போதனைகள், முறைமைகள், கோட்பாடுகள், தத்துவங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் யாவற்றையும் ஏற்று அவைகளை ஒன்றுபடுத்தி, ஒரே அமைப்பாக்கி உள்ளது. அதுவே, அவர்களது மதமாகும். பத்து வருட காலமாய் எனது நண்பர் கேஷப் சுந்தர் சென், நான் மற்றும் பிரம்ம சமாஜத்தின் பிற சீடர்களும் கிராமம், கிராமமாய், மாநிலம், மாநிலமாய் கண்டம் விட்டு கண்டம் பிரயாணம் செய்து இந்த புதிய கோட்பாடும் எல்லா மத தீர்க்க தரிசனங்களின் மற்றும் முறைமைகளின் ஒருமைப்பாடு யாவுமே ஜீவனுள்ள கடவுளாகிய ஒரே உண்மை தெய்வத்தின் மகிமைக்காகவே செயல்படுகின்றன என்பதை தெரிவித்து வந்தோம். ஆனால் நாங்கள் தாழ்ந்த குலத்தினர், நாங்கள் போதிய கல்வி அற்றவர்கள், நாங்கள் தகுதியற்றவர்கள், எங்கள் செய்தியை கேட்க மக்களை கூட்டி திரட்ட பணபலம் அற்றவர்கள். ஏற்றவேளை வந்தபோது நீங்கள் இந்த மதசார்பான பேரவையை கூட்டியிருக்கிறீர்கள். எந்த விஷயத்தை எங்களால் பிரச்சாரம் செய்ய முடியாமல் போனதோ, அதையே நீங்கள் பிரச்சாரம் செய்யும்படி உங்கள் கையில் எடுத்திருக்கிறீர்கள்.

"நான் இந்த பேரவைக்கு வெறும் மாணவனாகவோ அல்லது தன் சொந்த இயக்கத்தைக் குறித்து நியாயப்படுத்தும் ஒருவனாகவோ வந்து கலந்து கொள்ளவில்லை. நான் ஒரு சீடனாக, பின் தொடர்பவனாக, ஒரு சகோதரனாகவே வந்திருக்கிறேன். உங்கள் பிரயாசங்கள் யாவும் செழுமையால் ஆசீர்வதிக்கப்படுவதாக, அதுவும் உங்கள் கிறிஸ்தவமும், உங்கள் அமெரிக்காவும் மேன்மைப்படுவதாக. ஆனால் பிரம்ம சமாஜ் மேன்மையான புகழை

உணரும். அதுமட்டுமன்றி, உங்கள் இரக்கத்தையும், தயாளத்தினையும் நாடி இத்தனை தூரம் வந்திருக்கும் இந்த சாதாரண மனிதனாகிய நான் போதிய அளவு கௌரவிக்கப்பட்டதாய் உணர்கிறேன்.

"இந்த புதிய கோட்பாடு உங்களிடையே தங்கி, எங்களது சகோதர, சகோதரிகளாய் உங்களை மாற்றக்கடவது. எல்லா மதங்களின் பிரதிநிதிகளும் மற்றும் எல்லா மதங்களும் ஒன்று கலந்து கடவுள் தந்தை, மனிதன் சகோதரன் என்ற கொள்கையோடு இணைந்து கிறிஸ்துவின் தீர்க்கதரிசனங்களும் உலக நம்பிக்கையும் நிறைவேறுவதாக. மேலும் மனுக்குலம் முழுவதும் நம் பிதாவாகிய தேவனுடைய ஒரே ராஜ்யமாக மாறுவதாக."

இங்கே வருகை தந்திருக்கும் தத்துவஞானிகளின் நம்பிக்கை மற்றும் நோக்கத்தைக் குறித்த தெளிவான அறிக்கை இங்கே நமக்கு கிடைத்துள்ளது. அவர்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிட்டார்கள் என்று யாரால் கூறமுடியும்? "தன் மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை" திறக்கவும் அக்கிரமத்தை நிவர்த்தி பண்ணுகிறதற்கும் ஒரு இரட்சகர், ஒரு மீட்பர் தேவை என்பதை உணராமல், கடவுளே தந்தை, மனிதர்கள் சகோதரர்கள் என்பதே இந்த மத பேரவைக்கு மிகவும் முன்னால் கேள்விப்பட்டிருந்தால், இது குறித்து இன்னும் அதிகமாக கேள்விப்பட்டிருக்கலாம். ஒருவேளை சமூக மீட்பு என்பது நீதிநெறி சீர்திருத்தத்தால் வரும் என்று நினைப்பது இந்த பேரவையில் கூறப்படுகிற மீட்பு என்பது, விலையேறப்பெற்ற ரத்தத்தால் வரும் என்ற கருத்திற்கு எதிர்மாறாக இருக்கிறது. இதி-ருந்து கிறிஸ்து இல்லாத இவரது மதத்தை குறித்து அதிகம் கேட்டிருக்கிறோம் என்று தெரிகிறது. இது மேலும் தொடர்வதுடன் அதிகரிக்கவும் செய்யும். இதையே "உன் பக்கத்தில் ஆயிரம் பேர் விழுவர்" என்று வேதம் கூறுகிறது. மேலும் அப்போஸ்தலர் பவுலும் கூட "தீங்கு நாளில் .... நீங்கள் நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அறிவுறுத்துகிறார். மேலும் வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவானும் "யார் நிலை நிற்கக்கூடும்?" என்று கேட்கிறார். வேதம் குறிப்பிடுவது என்னவெனில், கிறிஸ்து என்ற பெயரால் அழைக்கப்படும்



யாவருக்கும் ஒரு மாபெரும் சோதனை வரவேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். மேலும் பெருங்கூட்டமான களையாகிய அறிஞர்கள் யாவருமே நமது கர்த்தர் இயேசுவினால் யாவருக்காகவும் ஒரே தரம் கொடுக்கப்பட்ட மீட்பின் ப-யை குறித்த விசுவாசத்தி-ருந்து விழுந்தாகவேண்டும். ஏனெனில், இந்த சத்தியத்தை அவர்கள் அதன்மீதுள்ள அன்பினால் ஏற்றுக் கொள்ளவில்லை. *2தெச 2:10-12.*

## ஜப்பானி-ருந்து ஒரு குரல்

கின்சா ரிங் எம்.ஹராய் என்கிற ஜப்பானிய புத்தமதத்தவரான ஒரு பேரறிஞர் "கிறிஸ்தவத்தைக் குறித்த ஜப்பானின் உண்மை நிலவரம்" என்கின்ற தன் உரையினை வாசித்தபோது, மேடையி-ருந்த கிறிஸ்தவ மிஷினரிகள் சிலரின் முகம் சுருங்கி, ஒவ்வாத கருத்தைக் கேட்டு, தலைகள் குலுக்கியவண்ணம் இருந்தனர். ஆனால், அந்த புத்தமதத்தவரோ ஜப்பானில் கிறிஸ்தவ மதத்தை பரப்பும் பணியில் முட்டுக்கட்டையாக இருந்த போ-கிறிஸ்தவர்களின் மீது கடுமையான சொற்களால் தாக்கினார். அவரது உரை கீழ்கண்டவாறு கூறுகிறது :

"ஜப்பானை போன்று தவறாக புரிந்துகொள்ளப்பட்ட நாடுகள் உலகில் மிகச்சிலவே. எண்ணிலடங்கா நியாயமற்ற தீர்ப்புகளிடையே, என்னுடைய தேசத்தவரின் சமய கருத்துக்கள் குறிப்பாய் தவறாகவே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் முழுதேசமும் விக்கிரக ஆராதனை செய்கிறவராகக் கருதப்பட்டது. அவர்கள் மதநம்பிக்கை அற்றவராகவோ, புறமதத்தவரோ அல்லது வேறு ஏதாவதாகவோ இருந்தது. ஜப்பானின் சரித்திரத்தில் ஆரம்பம் முதலே எல்லா போதனைகளையுமே நாங்கள் திறந்த மனதுடனேயே எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமன்றி, வெளிநாடுகளி-ருந்து வந்த உபதேசங்கள் யாவுமே தாயகத்து மதத்துடன் முழு ஒத்துழைப்போடு இணைந்தே இருந்தது. புத்தமதமும், ஷிண்டோயிசமும் கலந்த சத்தியம் என்ற பெயரில் அநேக ஆலயங்கள் கட்டப்பட்டிருப்பதை காணலாம். புத்தமத மற்றும் ஷிண்டோ குருமார்கள் கன்பியூஷியிசம், டோயிசம் போன்றவற்றின் போதகர்களுடன் அத்தனை இசைவுடன்

இருப்பதையும் காணலாம். மேற்கூறிய எல்லா போதனைகள் மீதும் தனிப்பட்ட ஒவ்வொரு ஜப்பானியருமே தங்களது மரியாதையை காட்டுவதையும் காணலாம். ஜப்பானிய வீடுகளின் விசேஷித்த கட்டுமானங்களைப் பார்க்கும் போது, பொதுவாய் இரண்டு அறைகள் இருக்கும். அதில் ஒன்று மிகச்சிறிய புத்த ஆலயத்துக்கும், மற்றொன்று ஷின்டோ புனித ஸ்தலத்துக்கும் இருக்கும். இவைகளி-ருந்து குடும்பத்தார் இரு மதங்களின் வேதங்களையும் வாசிக்க உதவியாக இருக்கும். உண்மையில் ஒரு கூட்டு மதமாய் இருப்பதே ஜப்பானியரின் விசேஷமாய் இருக்கிறது. மட்டுமன்றி இதை ஜப்பானிசம் என்று அழைக்கவும் நான் தயங்கமாட்டேன்.

“ஆனால், நீங்களோ, உங்கள் தேசத்தில் பிற மதங்களைப் போல கிறிஸ்தவ மதமானது ஏன் அத்தனை இணக்கத்தோடு ஏற்றுக் கொள்ளப்படவில்லை? என்று கேட்கலாம். இந்த குறிப்பிட்ட கருத்தைத் தான் நான் விசேஷமாக உங்கள் முன்னிலையில் வைக்க ஆசைப்படுகிறேன். கிறிஸ்தவ மதம் மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்ளப்படாததற்கு இரண்டு காரணங்கள் உ ண்டு. இந்த மாபெரும் மதமானது மிகவும் விஸ்தாரமாகவே எங்கள் தேசத்தில் பரவியது. ஆனால் 1637ல் கிறிஸ்தவ மிஷினரிகள், மதம் மாறியவர்களுடன் சேர்ந்து தேசத்துக்கு எதிரான ஒரு குரூரமான கிளர்ச்சியை ஏற்படுத்திவிட்டனர். ஜப்பானை தங்கள் சொந்த தாய்நாட்டுடன் பணியச் செய்யும் நோக்குடன் மிஷினரிகள் இதை செய்ததாக அர்த்தம் கொள்ளப்பட்டது. இது ஜப்பானை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஷோ-கன் அரசாங்கத்தினருக்கு இந்த பயங்கர கலவரத்தை கட்டுப்படுத்த ஒரு வருட காலமானது. கடந்த காலத்தில் எங்கள் தேசம் கிறிஸ்தவ மதத்தை தடை செய்ததே என்று குற்றம் சாட்டுபவருக்கு, இது மத சம்மந்தப்பட்ட இயல்பான வெறுப்பு அல்ல. ஆனால் மறுபடியும் இவ்வித ஆட்சி எதிர்ப்பு கிளர்ச்சி ஒன்றை தவிர்க்கும்படியாகவும், மட்டுமன்றி எங்கள் சுதந்திரத்தை காத்துக் கொள்ளவுமே இப்படி சுவிசேஷத்தை பகிங்கரமாய் தெரிவிக்க தடை விதிக்க கடமைப்பட்டவர்களாக இருந்தோம் தடைவிதிக்க என்று நான் பதில் கூறுவேன்.

“மதம் என்ற போ- வேஷத்தோடு வெளிநாட்டவரின் பாழ்க்கடிப்பு என்ற குறிப்பு எங்கள் சரித்திரத்தில் இல்லாமல்



இருந்திருக்குமேயானால், மேலும் கிறிஸ்தவம் என்ற பெயருக்கு எதிராக பாரம்பரியமானதொரு பயங்கரமும், ஒருதலைபட்சமும் எங்கள் மக்களிடையே இல்லாதிருக்குமேயானால், முழு தேசத்தாலும் இந்த மதமானது வாஞ்சையுடன் தழுவப்பட்டிருக்கும். ஆனால், இந்த சம்பவம் நிகழ்ந்துவிட்டப்பிறகு இந்த மதத்தை நாங்கள் மறக்கவேண்டியதே. இந்த பயங்கர சந்தேகம் அல்லது நீங்கள் கூறுகிறபடி மூடநம்பிக்கையானது, கிறிஸ்தவமானது பாழாக்குவதற்கான ஒரு கருவி என்கிற எண்ணம் முற்றிலும் உண்மையற்றதானாலும், கிழக்கத்தியரது மனதில் தவிர்க்கக் கூடியதோ அல்லது தவிர்க்க முடியாமலோ தோன்றிவிட்டது. அதுவும் பலம் வாய்ந்த கிறிஸ்தவ நாடுகள் கிழக்கத்திய நாடுகளை படிப்படியாக ஆக்கிரமித்து வருவது ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையாகிவிட்ட சூழ்நிலையில், இந்த தொடர்ச்சியான காரியங்கள் அனுதினமும் எங்கள் மனதை பாதித்து, தெளிவான கடந்த கால சரித்திர நிகழ்வினை எங்களுக்கு நினைப்பூட்டிக் கொண்டே இருக்கின்றன. நான் எங்களது தற்கால அனுபவத்தை குறித்து பேசவேண்டிய சூழ்நிலையில் நான் இருக்கிறேன். இதன் மீது சபையின் கவனத்தை விசேஷமாய் ஈர்ப்பதுடன் கிறிஸ்தவ ராஜ்யம் முழுவதையுமே அழைக்கிறேன்.

“1853-ருந்தே, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தூதராக ஜப்பானுக்கு கொமோடோர் பெர்ரி என்பவர் வந்தபோது, மேற்கத்திய நாடுகளால் எங்கள் நாடு நன்கு அறிந்து கொள்ளப்பட ஆரம்பித்தது. புதிய துறைமுகங்கள் விரிவாய் திறக்கப்பட்டன, சுவிசேஷத்துக்கு இருந்த தடையும் நீக்கப்பட்டுவிட்டது. தற்போது டோக்கியோ என்று அழைக்கப்படும் எடோவில் 1858ல் நடந்த கூட்டத்தில் அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையேயான ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அது எங்கள் தேசம் பிரபுக்களின் ஆதிக்கத்தில் இருந்த காலமாய் இருந்தது. மேலும் 1637ல் கிறிஸ்தவ கிளர்ச்சி நடந்து இரண்டு நூற்றாண்டுகள் பிறநாடுகளிடமிருந்து ஒதுங்கியிருந்த காலம். பிரபுக்களின் ஆட்சி அதிகாரிகளுக்கு ராஜதந்திரம் என்பது முற்றிலும் புதியதொரு அனுபவமாய் இருந்தது. ஆகவே இவர்கள் மேற்கத்திய நாடுகள் மீது தங்கள் முழுநம்பிக்கையையும் வைத்து அவர்கள் தங்கள் முன் வைத்த

ஒப்பந்தங்களின் ஒவ்வொரு அம்சத்தையும் எவ்வித மாறுதலும் இன்றி அப்படியே ஏற்றுக்கொண்டனர். அந்த ஒப்பந்தப்படி நாங்கள் மிகவும் அனுகூலமற்ற சூழ்நிலையில் இருந்தோம். அவை எல்லாவற்றிலும் இரண்டு முக்கிய அம்சங்கள் இருந்தன. இவை இரண்டும் எங்கள் உரிமைகள் மற்றும் அனுகூலங்களை இழக்கச் செய்தன. ஒன்று ஜப்பானில் மேற்கத்திய நாடுகளின் அளவுக்கதிகமான ஒரு அதிகாரம். இதன் மூலம் மனிதர் மீதோ சொத்துக்கள் மீதோவான எந்த உரிமையும், அது ஜப்பானியரிடையே ஆகட்டும் அல்லது பிறநாட்டவருடனாகட்டும் அது மேற்கத்திய நாட்டவரின் சட்ட அதிகாரத்திற்கு உட்பட்டதாக மாறிவிட்டது. மற்றது வரி செலுத்துவதை பொருத்ததாய் இருந்தது. இதில் ஐந்து சதவீதம் விலை நிர்ணயம் மட்டுமே விதிவிலக்காய் இருந்தது. இது எந்த இடத்திற்கு பொருந்தும் என்று கட்டாயப்படுத்தவும் கூட எங்களுக்கு உரிமை இல்லாதிருந்தது.

“மேலும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் இருவரில் எந்த ஒருவரும் மற்றொருவருக்கு ஒரு வருடம் முன்னதாகவே அதாவது ஜூலை 1872, 1ம் தேதி முதலோ அல்லது அதற்கு பிறகோ மறுபடியும் அதனை திருத்திக்கொள்ளும்படி கோரிக்கை விடுக்கலாம் என்று கூட நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே 1871ல் எங்கள் அரசாங்கம் மறுபரிசீலனைக்கான கோரிக்கையை விடுத்தது. அன்று முதல் இதனை தொடர்ந்து கேட்டுவருகிறோம். ஆனால் வெளிநாட்டு அரசாங்கங்கள் இந்த வேண்டுகோளை பொருட்படுத்தாமல், ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்- வருகின்றன. இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகிய அமெரிக்கா ஜப்பானுக்கு இடையிலான வரி ரத்துசெய்யப்பட்டுவிட்டது. அமெரிக்க நாட்டின் இந்த இரக்க மனதுக்காக நாங்கள் எங்கள் மனமார்ந்த நன்றியை செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இதேவிதமாய் எந்த ஐரோப்பிய நாடும் அமெரிக்காவின் இவ்விழிப்புணர்வை பின்பற்றவில்லை. எங்கள் வரி சம்மந்தமான உரிமையானது முன்பிருந்ததைப் போலவே இருக்கின்றது என்று கூறுவதில் வருத்தம் அடைகிறேன்.

“எந்த வெளிநாட்டவர் மீதும் சட்டரீதியான அதிகாரம் ஜப்பானில் எங்களுக்கு இல்லை. ஆகவே அதன் பலனாக



உண்மையில் நாங்கள் சட்டப்படியும், நெறிப்படியும் அநேக விதத்தில் காயப்படுத்தப்படுகிறோம். இதற்கான ஆதாரங்கள் நிரந்தரமாக எங்கள் உள்நாட்டு பத்திரிகைகளில் காணப்படுகின்றன. மேற்கத்திய மக்கள் எங்களை விட்டு வெகுதொலைவில் வசிப்பதால் உண்மை சூழ்நிலை என்ன என்பது தெரியாமல் இருக்கிறார்கள். ஒருவேளை ஜப்பானில் இருக்கும் தங்கள் நண்பர்கள் அல்லது மிஷினரிகள் மூலம் அவ்வப்போது அவர்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவர்கள் அறிக்கைகள் உண்மை அல்ல என்று மறுக்கவில்லை. ஆனால் யாருக்காவது தன் நண்பரைக் குறித்த சரியான விஷயங்களை அறிந்துக்கொள்ள வேண்டுமென்றால் அவரை குறித்து பல திசைகளில் இருந்தும் விஷயங்கள் சேகரிக்க வேண்டும். நாங்கள் எவ்விதத்திலெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று ஒருதலைபட்சமற்ற சிந்தனையுடன் நீங்கள் மிகவும் உன்னிப்பாய் கவனித்தால் உண்மையில் நீங்கள் அதிர்ச்சி அடைவீர்கள். அநேகவிதமான தவறுகள் நடந்திருந்தாலும் அதில் சில புறமதத்தாராகிய எங்களுக்கு முன்பின் தெரியாத முற்றிலும் புதியதானவைகளாகவே இருந்தன. தனிப்பட்ட உரையாட-லும் கூட எவரும் பேசத்துணியாதவைகளாய் அவை இருந்தன.

“வெளிநாட்டவரால் கூறப்பட்ட காரணங்களில் ஒன்று என்னவெனில், தேசம் இன்னும் நாகரீகம் அடையவில்லை என்பதாகும். நாகரீக வளர்ச்சியற்ற அல்லது வ-மையற்றவர்களது உரிமைகளும், லாபங்களும் தியாகம் செய்யப்பட வேண்டும் என்பது தான் நாகரீக வளர்ச்சியின் கோட்பாடா? நான் புரிந்துக்கொண்ட வகையில், சட்டத்தின் நோக்கமும், அவசியமும் ந-ந்தோரின் உரிமைகளையும், நலன்களையும் வ-யோரின் தாக்குதல்களி-ருந்து பாதுகாப்பதாகவே இருக்க வேண்டும். ஆனால், சட்டத்தை படித்த நான் ந-ந்தோர் வ-யோருக்காக தியாகம் செய்யவேண்டும் என்பதைக் கண்டதில்லை. மற்றொருவிதமாய் சொல்லப்படும் காரணம் மதவிஷயங்களில் இருந்து வருகிறது. அதுவும் ஜப்பானியர்கள் விக்கிரக ஆராதனைக்காரர் என்றும், மத நம்பிக்கை அற்றவர்கள் என்றும் கூறப்படுகின்றனர். தவறான எந்த எண்ணத்துக்கும் இடமளிக்காமல், நீங்கள் எங்கள் மதத்தை ஆராய்ந்து

பார்ப்பீர்களானால், எங்கள் ஜனங்கள் விக்கிரக ஆராதனைக்காரரா இல்லையா? என்பதை சட்டென்று புரிந்துக்கொள்வீர்கள்.

"ஆனால், வாதத்திற்கென்றே, நாங்கள் விக்கிரக ஆராதனைக்காரரும், மதநம்பிக்கை அற்றவரும் என்றே ஏற்றுக்கொள்வோம். கிறிஸ்தவரல்லாத தேசங்களின் உரிமைகளையும், சாதகங்களையும் காலடியில் போட்டு மிதிப்பது தான் கிறிஸ்தவ நெறியா? 'உன் இடது கன்னத்தில் ஒருவன் அறைந்தால் நீ அவனுக்கு உன் வலது கன்னத்தையும் காட்டு' என்று கூறுவதாகத்தான் நான் வேதத்தில் வாசிக்கிறேன். ஆனால் அதற்கு மாறாக, 'அவரது வலது கன்னத்தில் அறை, அவன் திரும்பி காட்டும்போது மறுகன்னத்திலும் அறை' என்று கூறப்பட்டதாக நான் எந்தப்பகுதியிலும் காணவில்லை. மேலும்,'உன் அங்கியை எடுத்துக்கொள்கிறவனுக்கு உன் வஸ்திரத்தையும் எடுத்துக்கொள்ள தடை பண்ணாதே' என்று வேதத்தில் வாசித்திருக்கிறேனே தவிர, 'நீ ஒருவனுடைய அங்கியை எடுத்துக்கொள்ளும்போது அவன் தன் வஸ்திரத்தையும் கூட உனக்கு கொடுத்துவிடட்டும்' என்று எழுதியிருப்பதாக நான் எங்குமே காணவில்லையே.

"உங்கள் மிஷனரிகளை ஜப்பானுக்கு அனுப்புகிறீர்கள். அவர்கள் எங்களை ஒழுக்கத்துடன் நடந்து, கிறிஸ்தவத்தை விசுவாசிக்கும்படி அறிவுறுத்துகின்றனர். எங்களுக்கும் ஒழுக்கமாய் இருப்பதற்கு விருப்பமே, கிறிஸ்தவம் நல்லது என்றும் எங்களுக்குத் தெரியும். மேலும் இந்த இரக்கத்திற்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். ஆனால் அதே சமயம் இந்த உபதேசத்தை குறித்து எங்கள் ஜனங்கள் குழப்பத்தைவிட அதிகம் சந்தேகம் கொள்கின்றனர். ஏனெனில் பிரபுக்களின் ஆதிக்கத்தின் போது, நாங்கள் வா-பராய் இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட இந்த ஒப்பந்தமானது இன்னும் எங்களை வ-மையான கிறிஸ்தவ நாடுகள் விடாப்பிடியாய் நிர்பந்தப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் மேற்கத்திய கப்பல்கள் ஸீல் வேட்டையில் அதிக எண்ணிக்கையில் ஈடுபடுவதோடு சட்டவிரோதமாய் எங்கள் கடற்பகுதிக்குள் வருகின்றன. இவர்கள் மீது சட்டப்பூர்வமாய் நடவடிக்கை எடுக்க முற்படும்போதெல்லாம் ஜப்பானில் இருக்கும் வெளிநாட்டு அதிகாரிகள் எங்களுக்கு எதிராகவே



செயல்படுகின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த பசுபிக் கடற்கரையோரம் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் ஒரு ஜப்பானியரும் சேர அனுமதிக்கப்படவில்லை. காரணம் அவர் வேறு இனத்தைச் சேர்ந்தவர் என்பதே. சான் பிரான்சிஸ்கோவிலுள்ள ஒரு பள்ளி விடுதியில் சில மாதங்கள் முன்பு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு அதன் மூலம் அங்குள்ள எந்த அரசுப்பள்ளியிலும் ஜப்பானியர் அனுமதிக்கப்படாதபடி செய்யப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒரு மாகாணத்தில் ஒரு வருடத்துக்கு முன் ஜப்பானியர் ஒருவர் மொத்த வியாபாரம் ஒன்றி-ருந்து விரட்டியடிக்கப்பட்டார். சான்பிரான்சிஸ்கோவில் இருக்கும் எங்கள் வியாபாரிகளிடம் சில தொழிற்சங்கங்கள் ஜப்பானிய உதவியாளர் அல்லது கூ-யாட்களுக்கு பதிலாக அமெரிக்கரையே பணிக்கு அமர்த்த வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. ஏற்கனவே அங்கு பணிபுரிபவர்களுக்கு எதிராக அங்கிருக்கும் சிலர் விரோதமான பேச்சுக்களை மேடைகளில் பேசுகின்றனர். 'ஜப்பானியன் வெளியேறவேண்டும்' என்ற வாசகம் பொருந்திய லாந்தர் விளக்குகளை கையிலேந்தி அநேகர் ஊர்வலமாகவும் போகின்றனர். ஹவாய் தீவில் இருக்கும் ஜப்பானியருக்கு அவர்களது ஓட்டுரிமை தடைசெய்யப்பட்டது. ஜப்பானில் வசிக்கும் மேற்கத்தியர் சிலர் தங்கள் வீட்டு முகப்பில் ஒரு விசேஷ கம்பத்தை நிறுத்தி, அதில் ஜப்பானியர் யாரும் இங்கு நுழைய அனுமதியில்லை என்ற வாசகத்தை வைத்துள்ளதை நாங்கள் பார்க்கிறோம். இது 'நாய்களுக்கு அனுமதியில்லை' என்ற வாசகத்தை போன்று இருக்கிறது. நாங்கள் இருக்கும் நிலைமை இவ்விதம் இருக்கும் பட்சத்தில் மிஷனரிகளை அனுப்பும் மேற்கத்திய நாடுகளில் இரக்கத்தை சகித்துக்கொள்ளாம-ருப்பதும், மதநம்பிக்கை அற்ற நாங்கள் கிறிஸ்தவத்தின் பரலோகம் என்னும் இனிப்பான, கதகதப்பான திரவத்தை விழுங்க தயங்குவதும் அர்த்தமற்றதா? ஒருவேளை இதுதான் கிறிஸ்தவர்களின் தர்மம் என்றால், நாங்கள் புறஜாதிகளாகவே இருப்பதில் பூரண திருப்தி அடைகிறோம்.

"ஜப்பானில் இருக்கும் பெரும்பாலான மக்கள் கிறிஸ்தவத்துக்கு எதிராக பேசவும், எழுதவும் செய்கிறார்கள் என்று

யாராவது சொல்லத்துணிவார்களேயாகில், நான் வெறும் வேஷதாரியாய் இல்லாமல் உண்மையிலேயே பகிரங்கமாய் கிறிஸ்தவத்தை தாக்கும் முதல் ஆளாக என் தேசத்தில் இருப்பேன் என்று வெளிப்படையாகவே கூறுகிறேன். ஆனால் உண்மை கிறிஸ்தவத்தையல்ல. ஆனால் போ- கிறிஸ்தவத்தை, இவர்களே கிறிஸ்தவர்கள் என்ற பெயரால் எங்களுக்கெதிராய் தீமைகளைச் செய்தவர்கள். அந்தி கிறிஸ்துவின் வ-மையான சமூகத்தினை உடையவர்கள் ஜப்பானியரை நிந்தித்தால் இதுவரை கிறிஸ்தவத்துக்கு இல்லாத ஒரு எதிரிடையான சமுதாயத்தை உருவாக்கும் முதல் மனிதனாய் இருப்பது நானாகத்தான் இருக்கும் என்பதை மிகவும் நேர்மையுடன் கூறிக்கொள்கிறேன். அதுவும் உண்மை கிறிஸ்தவத்துக்கு எதிராக அல்லாமல் போ- கிறிஸ்தவத்துக்கு எதிராக, எங்களை இவர்களிடமிருந்து காத்துக்கொள்வதற்காகவும், கிறிஸ்தவ ராஜ்யங்களிடமிருந்து நாங்கள் அடையும் அநீதிக்காகவுமே இருக்கும். இதேவிதமான முடிவினை ஒரு புத்தமதத்தவனாக நான் இருப்பதாலேயே எடுத்திருக்கிறேன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். புத்தமத ஆலயத்துக்குள் நான் நுழைவதற்கு வெகுகாலத்துக்கு முன்னமே எனது எண்ணம் இவ்வாறாகிவிட்டது. ஆனால், அதே சமயம் செயற்கையாக உருவான மதம் என்ற தலைப்பில் எல்லா மதங்களின் உறவுமுறைகளை குறித்து பொதுமக்கள் முன்பாக விவாதிக்கக்கூடிய ஒருவர் யாராவது இருப்பார்களானால் அது நானாகத்தான் இருப்பேன். நான் ஒரு புத்தமத வெறி கொண்டவனாக என்னை நீங்கள் புரிந்துக் கொள்ளக்கூடாது என்ற விருப்பத்தினாலேயே நான் இதை உங்கள் முன் கூறுகிறேன்.

“உண்மையில் என் தேசத்தில் மதவாதம் என்பதே இல்லை. கிறிஸ்தவ மதத்தில் இருக்கும் சத்தியத்தின் சாராம்சம் என்ன என்பது எங்கள் ஜனங்களுக்கு நன்கு தெரியும். நான் போதிக்கிற நோக்கத்துடன் பேசுகிறேன் என்று யாராவது எந்த மதத்தின் பெயரையாவது கூறுவார்களெனில் அதைக் குறித்து நான் கவலைப்படவில்லை. கிறிஸ்தவ மதத்தை புத்தமதம் என்ற பெயரிலோ, புத்தமதத்தை கிறிஸ்தவ மதம் என்ற பெயரிலோ, அதை கன்பியூஷியனிஸ்ட் அல்லது ஷின்டோயிஸ்ட் என்றோ எப்படி அழைத்தாலும் அதை குறித்து எங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை. ஆனால் கற்றுத்தரப்படும் சத்தியத்தை குறித்தும், அதன் கொள்கை சீரான செயல்பாட்டை குறித்துமே நாங்கள் கவனமாய் இருக்கிறோம். கிறிஸ்து நம்மை மீட்பாரோ அல்லது நரகத்துக்கு அனுப்புவாரோ, கௌதமபுத்தர் என்பவர் உண்மையானவரா அல்லது அப்படிப்பட்டதொரு மனிதரே இல்லையென்றாலும் இவைகளை குறித்தெல்லாம் எங்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. ஆனால், நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதெல்லாம் போதனைகளிலும், அதற்கேற்ற நடத்தைகளிலும் தான். ஆகவே நாங்கள் காண்கிற முரண்பாடுகளை ஒதுக்கித் தள்ளினால் ஒழிய, அதிலும் குறிப்பாக எங்கள் உரிமைகள் மறுக்கும்படியான நியாயமற்ற ஒப்பந்தம் திருத்தப்பட்டு அதன்மூலம் நடுநிலை வகிக்கும் வகையில் மாற்றங்கள் நடந்தால் ஒழிய, பிரசங்க மேடைகளில் திறம்பட சொற்பொழிவுகள் கொடுக்கப்பட்டாலும் கிறிஸ்தவத்தை குறித்து ஒருதலைபட்சமாய் கொண்டிருக்கும் எங்களது கருத்துக்களை என்றுமே எங்கள் ஜனங்கள் கைவிடப்போவதில்லை. ‘காட்டுமிராண்டிகள்’ என்று பெரும்பாலும் அழைக்கப்படுகிறோம். ஜப்பானியர்கள் மிகவும் முரட்டாட்டமுள்ளவர்கள், மேலும், வேதம் கூறும் சத்தியத்தை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது என்று பேசுவதை நான் கேட்கவும், வாசிக்கவும் செய்திருக்கிறேன். இது ஒருவகையில் உண்மை என்றே நான் ஒப்புக்கொள்கிறேன். எப்படியெனில் பேச்சாளர்களின் திறம்பட்ட சொற்பொழிவுகளை ரசிப்பதுடன், பேச்சாளரது தைரியத்தைக் கண்டு ஆச்சரியமும் அடைவர். மேலும் அவர்கள் அவரது பகுத்தறிவான வாதத்தை ஏற்றுக்கொண்டாலும், பிரசங்கிப்பது ஒன்று நடைமுறையில் செயல்படுவது வேறு என்பதே மேற்கத்தியவரின் நெறி என்று எண்ணிக் கொண்டிருக்கிறவரைக்கும் அவர்கள் மிகவும் பிடிவாதமாய் கிறிஸ்தவத்தோடு இணையமாட்டார்கள்......

“மனுக்குலத்துக்கு அநீதியை எந்த மதம் கற்பித்தாலும், என் ஆத்துமா, ரத்தத்தோடு, இதுவரை எதிர்க்காதவண்ணம் நான் எதிர்ப்பேன். நான் இருப்பதிலேயே மிகவும் மோசமான கிறிஸ்தவ மத பேதமுடையவனாக இருக்கக்கூடும் அல்லது அதன்

சுவிசேஷத்தை நேசிக்கும் மிகவும் ஆர்வமுடையவனாயும் இருக்கக்கூடும். இந்த பேரவையை ஒழுங்கு செய்தவர்களுக்கும், இங்கு கூடியிருக்கும் உலகின் மதிப்பிற்குரிய ஆண்களுக்கும், பெண்களுக்கும் நான் கூறிக்கொள்வது என்னவெனில், உங்கள் நோக்கமானது மதங்களின் ஒருமைப்பாட்டை உணர்ந்துக்கொள்வதாகவே இருக்கவேண்டும். அதுவும் பெயரளவில் இல்லாதபடி நடைமுறைக்கு ஒத்துவருகிறதாய் இருக்கவேண்டும். ஜப்பானின் 40 மில்-யன் ஜனங்களாகிய நாங்கள் சர்வதேச நீதிக்காக நிலையாய் விடாமுயற்சியுடன் இருக்கிறோம். கிறிஸ்தவ நெறியானது இன்னும்கூட தெளிவானதாக உருவெடுக்க காத்திருக்கிறோம்."

இந்த உலகத்தை சத்தியத்துக்கும் நீதியின் பக்கத்துக்கும் மாற்றுவதில் கிறிஸ்தவ ராஜ்யங்கள் தோல்வி அடைந்ததற்கான காரணத்தின் மீது எப்படிப்பட்டதொரு விமர்சனம்! பெருமையை பறைசாற்றுவதற்கு பதில் தாழ்மைப்படவும், தவறுக்காய் வருந்தவும் எப்படி அது கூவி அழைக்கிறது!

கான்ஸ்டான்டிநோபிளைச் சார்ந்த ஹெர்னட் எம். க்ரெட்சன் என்ற கிழக்கத்திய வா-பரின் குரல் இப்படியாய் ஒ-க்கிறது.

"சூரியோதய நாடுகளி-ருந்து வந்திருக்கும் சகோதரர்களே: கிழக்கத்திய இளைஞரின் சார்பாக, குறிப்பாக பிரமிடுகளின் தேசம் முதல் சைபீரியாவின் பனிப்பிரதேசம் வரையிலும் மேலும் பொதுவாய் ஏகன் கடற்கரை முதல் ஜப்பான் கடற்கரை மட்டுக்கும், நான் பிரதிநிதியாய் உங்கள் முன் நிற்கிறேன். கிழக்கத்தியவர் அமர்ந்து அமெரிக்க பிரஜைகள் பார்த்தவண்ணம் இருக்கும் இந்த அருமையான மத பேரவையின் மேடையில் ஒருவனாக நின்று பார்க்கும்போது, உங்களை அறியாமலேயே உங்கள் கடனாளிகள் அடங்கிய கூட்டத்தை நீங்கள் கூட்டியிருக்கிறீர்கள் என்பதை சொல்லவேண்டும் என்பது தான் எனக்கு தோன்றிய முதல் எண்ணம். உங்கள் செயல்களை முடித்துக் கொள்ள அல்லாமல், உங்கள் இருதயங்களை விரிவுப்படுத்தவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். எங்கள் கோரிக்கைகள் சரியானதா? இல்லையா? என்று உங்கள் வேதங்களை புரட்டிப்பாருங்கள். நாங்கள் உங்களுக்கு அறிவியல், தத்துவம், இறையியல், இசை, கவிதைகளை கொடுத்ததோடு, உங்களுக்கென்று மிகப்பெரிய விலைக்கிரயத்தால் கொடுத்த ஒரு சரித்திரத்தை ஏற்படுத்தி இருக்கிறோம். அதற்கும் மேலாய் பரலோகத்தி-ருந்து எங்கள் தேசத்தின் மீது வீசிய ஒளியின் மூலமாக புனிதர்கள், அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், தியாகிகள் என்று உங்களுக்கு என்றுமே முன்னோடிகளாய் இருக்கும்படி திரளான மேகம் போன்ற சாட்சிகளும் ஊக்கமளிப்பவரும் கடந்து சென்றுள்ளனர். ஆகவே அந்த செழுமையான மூலதனத்தினால் ஆச்சரியமான அனுகூலங்களை பெருந்திரளாய் நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள். ஆகவே, உங்கள் பொறுப்புகளை உங்கள் ஆஸ்திகள் மறைத்துவிட்டன. உங்கள் சொத்துக்களை நாங்கள் பங்கு போட வரவில்லை. ஆனால் எங்கள் பங்கை பெறுவதில் எங்களுக்கு உரிமை உண்டு. அதற்குரிய அத்தாட்சியை முன் வைக்கிறோம்.



"இந்த பங்குகளை பணத்தால் நீங்கள் கொடுக்க இயலாது, உங்கள் பொன் உங்களுக்கே தேவைப்படுகிறது. உங்களது வெள்ளி அதன் வசீகரத்தை இழந்தது. உங்கள் இருதயத்தின் இரக்கத்தின் நிறைவால் எங்களுக்கு விலையேறப்பெற்ற பங்குகளைத் தரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். மேலும் கலைநயமிக்க தட்டான் ஒருவன் எடைகளை சோதித்து, பொன்னைத் தன் உலை களத்துக்குள் போட்டு, நெருப்பு மற்றும் ப்ளக்ஸ் (உலோகத்தை எளிதாய் உருக்கும் ரசாயனப் பொருள்) இரண்டும் செலுத்தி, நேர்த்தியாய் பணி தீர்ந்தப்பின், அதை வெளியே ஊற்றி கூர்ந்து நோக்கினால் அது சுத்தப் பொன்னை வெளிக்கொணரும். அதே போல் உலகின் கடைசிமட்டும் இருக்கும் மனுஷரை ஒன்று கூட்டி நேர்மையான சிந்தை மற்றும் சத்தியத்தை தேடும் முயற்சியில் உலைக் களத்தைப் போல் இங்குள்ள யாவரையும் புடமிட்டு, அந்த பேரவையின் முடிவில் பார்ப்பீர்களாகில், இனம் மற்றும் கொள்கை வேறுபாடுகளுக்கப்பாலும், பலதரப்பட்ட பழக்க வழக்கங்கள் (அ) சம்பிரதாயங்கள் மற்றும் வழிபாடுகளுக்கப்பாலும், உங்கள் கண்களுக்கு முன்னால் ஓடிவந்து விழுவது என்னவெனில், கருணை/ இரக்கம் என்னும் சுத்தப் பொன்னைத் தவிர வேறேதும் இல்லை. ஆகவே, சைனா, ஜப்பான் மற்றும் இந்தியாவில் இருக்கும் எங்களை நினைத்துப் பாருங்கள். புறதேசத்து அந்நியராக அல்ல, ஆனால் உங்கள் சகோதரர்களாக. மேலும் கிரீஸ் தீவில் இருப்போரையும்,

ஆர்மோனியாவின் மலை, பள்ளத்தாக்குகளில் இருப்போரையும் உங்கள் சகோதரிகளாக பாவியுங்கள். இதினிமித்தம் உங்கள் இருதயத்தி-ருந்து எங்களுக்குண்டான பங்கை கொடுத்து தீர்த்ததினால், அத்தனை அதிகமான ஆசீர்வாதத்தை நீங்கள் பெறுவீர்கள். அப்படியென்றால், எதிர்காலத்தின் தீர்க்கதரிசன பூமியாம் பியூலாவைப் போலவும் (மீட்கப்பட்ட(அ) புத்துயிர் பெற்ற இஸ்ரவே-ன் பெயர்) 'பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக' என்ற இனிமையான கீதத்தின் எதிரொ-யை முன்பு கேட்டது போல கேட்கும்படியும் செய்யுங்கள்.

"கிழக்கத்திய ஞானிகளும் ஆன்மீக வாழ்வின் அனுபவசா-களும் இந்த இடத்தில் உங்கள் முன் அநேக காரியங்களை பேசிவிட்டனர். எனவே அதோடு கூட நான் இன்னும்கூட சிலவற்றை சேர்க்கவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கமாட்டீர்கள். அதோடு கூட உலக மதங்களை குறித்த விவரங்களை உங்களுக்கு கொடுக்கவேண்டும் என்ற கருத்துடன் உங்கள் முன் நான் நிற்கவும் இல்லை. ஆனால் மாபெரும் கடந்த காலத்தி-ருந்து ஒரு புதிய மனித சந்ததி எழும்பிவிட்டிருக்கிறது. சந்தேகமின்றி இவர்களது ஆதிக்கமானது வருகிற நூற்றாண்டுகளில் மனித சமுதாயத்தின் காரியங்களில் மிக முக்கியமான ஆதாரங்களாகிவிடும். இவர்கள் எல்லா கடந்த காலங்களின் பலனாக உருவாகி, தற்கால புதிய வாழ்வுடன் தொடர்பு கொள்ள வருகிறவர்களாக இருக்கிறார்கள். அதாவது கிழக்கு நாடுகளின் வா-பர்களையே நான் குறிப்பிடுகிறேன். இவர்களே பலமான மேற்கத்திய சகோதரர்களுடன் சேர்ந்து உலகை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள தங்களை தயார்படுத்திக் கொண்டிருக்கிறர்கள்.

"போஸ்பரசின் கடற்கரையி-ருந்து ஒரு தத்துவத்தையும், கான்ஸ்டன்டைன் நகரத்தி-ருந்து ஒரு மதத்தையும் நான் உங்களிடம் கொண்டு வருகிறேன். எனக்குள் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே வளர ஆரம்பித்துவிட்ட என் திடமான நம்பிக்கையும், யூகமும் இந்த பேரவையின் செல்வாக்கினால் அடிமட்டம் வரைக்கும் ஆட்டம் கண்டுவிட்டது. ஆனால் அந்த வேர் இன்றும் இன்னும் ஆழமாக என் மனதில் இருப்பதை நான் உணர்கிறேன். அதன் கிளைகளோ வானத்தை தொடும் அளவுக்கு உயர்ந்துவிட்டன. உங்களுக்கு



புதியதாக எதையும் கொண்டுவரவில்லை. ஆனால் எல்லா யூகங்களுமே மனித அறிவுக்கு ஏற்றுக்கொள்ளும் விதத்தில் சரியான முறையில் இருப்பதாக உங்களுக்குத் தோன்றினால் அப்போது நீங்கள் நேர்மையான காரணத்துக்காக எங்களுக்கு நன்மதிப்பு அளித்து, நான் உங்கள் முன் அறிவித்தபடி அறிவாளிகள் இனிமேல் ஆளுகை செய்யும்படி அனுமதிப்பீர்கள் என்றும் நான் நம்பிக்கை கொள்கிறேன்.

"இந்நாளின் வா-பர்கள், சிறுவர்களாய் இருந்தபோது, வேறுபட்ட மதத்தினரிடையே, தேசத்தினரிடையே பகைமையையும், பிரிவினையையும் தவிர வேறு எதையுமே தங்கள் வாழ்நாளின் ஒவ்வொரு நாளும் காணவும், கேட்கவும் இல்லை. மேலும் தங்கள் தொழில்களினிமித்தம் அனுதினமும் தொடர்பு கொள்ளவேண்டிய சகோதர மனிதருக்கு எதிரான போருக்காக உருவான இராணுவ பாசறைகளிலும், தனிமைப்படுத்தப்பட்டிருக்கிற அவர்கள் வாழ்வின் பாதிப்பு எப்படிப்பட்டது என்பதை நான் இங்கு கூறவேண்டிய அவசியமே இல்லை. மேலும் கல்வியின் ஒளியும், சுதந்திர எண்ணங்களும் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் கிழக்கத்திய தேசம் முழுவதிலும் பரவ ஆரம்பித்தது. இந்த நுகமானது கிழக்கத்திய வா-பரின் கழுத்தில் பாரமானதாகி தாங்கக்கூடாததாய் மிகவும் கடினமாய் இருந்தது.

"கடந்த 30 ஆண்டுகளாய் தங்கள் கல்வியை பாரிஸ், ஹெய்டில் பர்க், பெர்-ன் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளின் பல்கலைக்கழகங்களிலும், கான்ஸ்டான்டின் நோபிளின் இம்பீரியல் லைசீம் ஆகியவற்றில் பெற்ற எல்லா தேசத்தின் வா-பர்களையும் சேர்த்தே நான் குறிப்பிடுகிறேன். இவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ மிதமாகவோ அல்லது தீவிரமாகவோ தங்கள் மதம் என்ற ஆடையை நெய்து கொண்டிருக்கின்றனர். எனவே, இந்த ஆயிரக்கணக்கான வா-பர்களுக்கு இவர்களது குரலானது ஒரு தெய்வ வாக்காகவும் ஒரு வரத்தைப் போலவும், அவர்களது இருதயத்திலும், சிந்தையிலும் ஒரு கொள்கையை பட்டிய-ட்டுவிட்டது.

"ஐரோப்பிய நாகரீகம் நுழைந்த ஆரம்ப காலத்திலேயே அனைத்து கிழக்கத்திய நகரங்களிலும் தங்கள் சகோதரரை பெருத்த எண்ணிக்கையில் கண்டனர். இந்த நூற்றாண்டின் முடிவுக்கு முன்பே

அந்த நாகரீகத்தை உணராத நகரம் இல்லை எனலாம். அவர்கள் மதம் மற்ற எந்த மதத்தையும் விட புத்தம் புதியதாய் இருந்தது. கிழக்கத்திய நாடுகளில் இது மிகவும் வ-மையான பாதிப்பை விளைவிக்கக்கூடிய ஒன்று அல்ல என்கின்ற காரணத்தினால் இந்த பிரசங்க மேடைக்கு இதை நான் கொண்டு வந்திருக்கக்கூடாது. மேலும் கிழக்கத்திய நாடுகளின் மதவாதிகளாகிய வா-பராகிய நாங்கள் எங்கள் தேசங்களின் குறைந்தபட்ச செல்வாக்கையாகிலும் பெறவேண்டுமேயாகில் நாங்கள் மிகவும் திறம்பட ஒன்றுபட்டு செயல்படவேண்டும்.

“ஆகவே, அறிவுபூர்வமான மனிதரும், மிகச்சிறந்த காரியங்களின் மனிதரும், கிழக்கத்திய வா-பர்கள் கலை மற்றும் விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்றவராகவும், நாகரீக உலக சந்தையிலும், தேசங்களின் ராணுவத்திலும், வேறு எந்த ஜாதிகளுக்கும் சரிசமமாய் ராஜாக்களுக்கு வலது கை போலவும் சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரை இருந்திருக்கிறார்கள் என்பதை நினைவு கூற வேண்டும். அதுமட்டுமன்றி, இந்த மனிதர்கள் பெரும்பாலும் நல்லெண்ணம் கொண்டவரும், மிகுந்த உண்மையான உணர்வும் உடையவர்கள். மட்டுமன்றி மதத்தை குறித்த அவர்களது கருத்தை நீங்கள் கேட்டு, இவர்கள் மேற்கொண்டிருக்கும் ஸ்தானத்தை நீங்கள் சிந்தித்து பார்ப்பீர்களாகில் இந்த மதவாத பேரவையின் அங்கத்தினராகிய நீங்கள், அவர்களை குறித்தும், அவர்கள் வசிக்கும் தேசத்தை குறித்தும் மேன்மையான கரிசனையை நீங்கள் உணர்வீர்கள் என்று நிச்சயமாய் நான் கூறுகிறேன்.

“கிழக்கத்திய நாடுகளின் மதவாத வா-பர்களின் தனிப்பட்ட முறையிலான ஒரு பிரதிநிதியாகவும் புதிய மதத்தின் வா-பர்களின் சார்பாகவும், அனைத்து மதங்களின் அப்போஸ்தலராகிய உங்கள் முன் நான் பேசுகிறேன்: ஏற்கனவே நாங்கள் பெற்றிருந்ததையே மதம் என்ற பெயரில் நீங்கள் எங்களிடம் கொண்டு வந்தீர்கள். நீங்கள் கூறுகிறபடி பார்த்தோமானால், பரிபூரண தேவன் மனிதனை உண்டாக்கினார் என்று சொல்வதால், மனிதன் தனக்குத்தானே போதுமானவனாகவே இருக்கிறான் என்று நாங்கள் நம்புகிறோம். நீங்கள் அவனை தனிமையிலேயே விட்டுவிட்டால் அவன் எப்படி



இருக்கவேண்டுமோ அப்படியே இருப்பான். அவன் கை கால்களை கட்டிப்போடாமல் அவனை போதிக்கவும், பயிற்றுவிக்கவும் செய்தால், அவன் ஒரு பூரண மனிதனாக வேறு எந்த ஒரு மனிதனுக்கும் சகோதரனாய் இருக்கும் தகுதி உடையவனாகவே இருப்பான். இயற்கையானது மனிதனை போதுமான அளவுக்கு வளப்படுத்தியிருக்கிறது. தேவனை நோக்கி இன்னும் அதிகமாய் கொடுக்கும்படி வேண்டிக் கொள்வதற்கு முன், உனது அறிவுத் திறமையால் உனக்கு அளிக்கப்பட்டிருக்கும் யாவையும் நீ உபயோகிக்க வேண்டும். அதுமட்டுமன்றி ஒருவருமே தேவனை கண்டதில்லை. இனிமையான பாடல்களிலும், வசீகரமான இசையிலும், நற்பண்பும் நாகரீகமும் உடைய ஆண், பெண்களின் சகோதரத்துவத்திலும் நமக்குத் தேவையான அனைத்து ஊக்கத்தையும் பெறுகிறோம். நாம் அதை கேட்கிறவர்களாயிருந்தால் ஹென்டேல் என்ற சங்கீத வித்துவான் மேசியாவைக் குறித்து சொல்வதை விரும்புவோம். வானங்கள் எதிரொ-த்தால், பீத்தோவனின் (ஜெர்மானிய சங்கீத மேதை) விளக்கமே போதுமானதாக இருக்கும்.

“கிறிஸ்தவர்களாகிய உங்களுக்கு விரோதமாக தனிப்பட்ட முறையில் எங்களுக்கு எதுவும் இல்லை. ஆனால் எல்லா மதங்களை பொருத்தமட்டில் மனிதனுக்கு எதிராக மனிதனையும், தேசத்துக்கு எதிராக தேசத்தையும் எழுப்பி, மனுக்குலத்துக்கு கூடுமானவரையில் அதிகபட்ச கேட்டினை நீங்கள் செய்துவிட்டிருக்கிறீர்கள் என்பதை நாங்கள் கூறியே ஆகவேண்டும். மேலும், தற்போது கேடுகளை இன்னும் மோசமாக்கும் வகையில் இந்நாட்களின் மிக உச்ச நிலையான பொது அறிவோடு, கூடாத காரியங்களால் மனித மனதினை நிரப்பி, அவர்கள் சிந்தனையையும் பாரப்படுத்திவிட்டீர்கள். உங்கள் முன் நான் அநேக காரியங்களை கேள்விப்பட்டுவிட்டேன். எத்தனைப் பேர் இதை பின் தொடரமுடியும் என்றும் எனக்குத் தெரியும். எல்லா மனிதருமே தவிர்க்கக்கூடிய ஒருவராகவே நாங்கள் உங்களை கருதுகிறோம். ஏனெனில் உங்கள் தத்துவங்களும், உங்கள் போதனைகளும் தேசங்களின் மீது தீமையை திணிக்கும் மனப்போக்கை உருவாக்குகிறது.

"அதோடு கூட மதத்தைப் பற்றி எல்லா கிழக்கத்திய நாடுகளும் கொண்டிருக்கும் இயற்கையான சுபாவத்தை நான் உடனே சொல்லவேண்டும்: 'ஆனால் இங்கு பாருங்கள், நாங்கள் நாஸ்திகர் அல்ல, கடவுள் நம்பிக்கை அற்றவர்களும் அல்ல, அல்லது மத நம்பிக்கையற்றவர்களும் அல்ல. ஆனால், உண்மையில் இவ்விதமான காரியங்களுக்கு எங்களுக்கு நேரம் இல்லை. மேன்மையான வாழ்க்கையை குறித்த நோக்கமும், உலக வா-பர் பலருக்கும் சுதந்திரம் வேண்டும் என்ற ஆர்வமுமே முழுவதுமாய் உடையவர்களாய் இருக்கிறோம். எல்லா தேசங்களின் மனிதரையும் இணைத்து, இந்த பூமியை சந்தோஷப்படுத்தும்படியான ஒரு மதம் எங்களிடம் உண்டு. அது மனித தேவைகள் எல்லாவற்றையும் விநியோகிக்கிறது. ஆகவே, அதுவே உண்மையான மதம் என்று நாங்கள் அறிந்துகொண்டோம். விசேஷமாய் அது சமாதானத்தையும் அதிகமான ஒருமைப்பாட்டையும் உருவாக்குகிறது. ஆகவே உங்களுடைய எந்த கொள்கைகளோ, முறைமைகளோ அல்லது போதனைகளோ எங்களுக்கு தேவையில்லை. நாங்கள் இயற்கை வாதிகளோ, சமூகவாதிகளோ, எதிலுமே தீமையை எதிர்ப்பவர்களோ அல்ல. மட்டுமன்றி நாங்கள் இலட்சியவாதிகளோ கூட அல்ல. எங்கள் மதம் ஆதியிலேயே இருந்தது. அதோடு கூட புதியதிலும் புதியதாகவும் இருக்கிறது. நாங்கள் மிகவும் நற்குணசா-கள். சமாதானம், மனிதாபிமானம் என்ற பெயரில் எங்களை தனியே விட்டு விடுகிறீர்களா? எங்களுக்கு மறுமுறை மதம் என்ற பெயரால் அழைப்பு விடுத்தீர்களேயானால், எங்களுக்கு முன்குறித்தே அறிவிக்கவேண்டும். ஒருவேளை பிரசங்கிப்பதற்கு அழைத்தீர்களேயானால் நாங்கள் அதற்கு தயாரா இருக்கமாட்டோம்.'

"ஒரு பசுமையான புன்னை மரத்தைப் போன்றவனே இந்த கிழக்கத்திய வா-பன். ஒருவன் மரித்துவிட்டால் அவனை அந்த இடத்தில் காணமுடியாது. ஆனால் இருபது பேர் அந்த இடைவெளியை நிரப்புவார்கள். நான் மிகைப்படுத்தி கூறுவதாக நீங்கள் நினைக்கவேண்டாம். என் வார்த்தையை நம்புங்கள். வார்த்தைக்கு வார்த்தை, இதைவிட பத்து மடங்கு மேலாய் இராணுவம், கடற்படை நிபுணர்களிடம், பொருளாதார மனிதர் மற்றும் நீதிமன்றத்தின் நிபுணர்கள் இதைக்குறித்து பேசுவதையும், தீவிரமாய் விவாதிப்பதையும், கான்ஸ்டான்டிநோபினிள் தெருக்களிலும், போஸ்பரசின் மற்றும் கோல்டன் ஹர்னின் கப்பல்களிலும், ருமேனியா மற்றும் பல்கேரியாவிலும் மட்டுமன்றி பாரிஸ், நியூயார்க் மற்றும் சிக்காகோவின் அரங்குகளிலும், துருக்கி மற்றும் ஆர்மீனியாவிலும், கிரேக்கம் மற்றும் எபிரேயத்திலும், பல்கேரியா மற்றும் செர்வியன் நாடுகளிலும் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். மேலும் மதத்திற்கு பதிலாக இந்த புதிய மாற்றுவழியான ஐரோப்பாவிற்கும் கிழக்கத்திய நாடுகளுக்கும் இடையிலான வியாபாரம் மற்றும் இலக்கியம், விஞ்ஞானம் மற்றும் சட்டத்தின் வாசல்களை வைத்திருப்பது கிழக்கத்திய நாடுகளின் விதியை வடிவமைப்பதில் ஒரு வ-மையான சக்தியாக விளங்குகிறது. மேலும் மதத்தின் எதிர்காலத்தை புத்திகூர்மையுடன் சிந்தித்து, திட்டமிட்டு செயல்படவேண்டியுள்ளது. கிழக்கத்திய வா-பரின் கண்களுக்கு சக்திவாய்ந்ததாக இருக்கும்படியான விவாதத்தையும் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. இவ்விதத்தில் விஞ்ஞானம் மற்றும் இலக்கியம் ஆகிய இரண்டும் புதிய நேர்மையான கூட்டத்தாராகிய மாபெரும் சேனையின் கரங்களில் கொடுக்கப்படுகிறது.



"கிழக்கு நாடுகளில் வேறு ஒரு வகுப்பாராகிய வா-பரும் கூட இருக்கிறார்கள். இவர்கள் தங்களை மதவாத இளைஞர் என்று அழைத்துக் கொள்கின்றனர். இவர்கள் தங்கள் பிதாக்களின் பழமை வாய்ந்த நம்பிக்கைகளை பிடித்துக்கொண்டவர்கள். இவர்கள் கூட நோக்கத்தில் உண்மையும், மனதில் புத்தி கூர்மையும், அதோடு கூட நிலையான மத பற்றும் உடையவர்கள் என்று கூறிக்கொள்ள என்னை அனுமதியுங்கள். அவர்களுக்காகவும் உங்களிடம் இங்கு நான் பேச வந்திருக்கிறேன். அவர்களுக்காக பேசுவதன் மூலம் நான் எனக்காகவும் பேசுகிறேன். நாங்கள் இந்த புதிய மதத்துடன் முன் நாட்களிலேயே தொடர்பு வைத்திருக்கவேண்டும் என்பதை இயல்பாகவே நீங்கள் பார்த்திருப்பீர்கள். புதிய மதம் என்று நம் சௌகரியத்தை முன்னிட்டு இதை நான் அழைக்க முற்படுகிறேன். அதே வா-பர்களுடன் நாம் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் இருக்க வேண்டியுள்ளது. விஞ்ஞானம், சரித்திரம், இலக்கியம், இசை மற்றும் கவிதை என்று எல்லாத் துறைகளிலும் அவர்களுடனே கை கோர்த்து செல்லவேண்டி

இருக்கிறது. மேலும், உண்மையில் நாம் அவர்களுடன் அறிவியல் யூகங்களின் எல்லா நிலையான நம்பிக்கைகளையும் பகிர்ந்து கொள்கிறோம். மேலும், மனித சுதந்திரத்தின் ஒவ்வொரு கொள்கையிலும் நாம் தீவிர பிடிப்புடன் இருக்கிறோம்.

“முதலாவது கிழக்கத்திய வா-பர் யாவருமே மனித கௌரவத்துக்காக ஆழ்ந்த மத நம்பிக்கையை உடையவர்களாக இருக்கிறார்கள். இதைக் குறித்து நான் விமர்சிப்பதற்காக வருந்துகிறேன். ஆனால், தத்துவ, இறையியல் விவாதங்களின் ஒட்டுமொத்த குர--ருந்து நமக்கு முன் தவிர்க்க முடியாததொரு இடையூறானது அபூரண மனுக்குலத்தி-ருந்து எழும்புகிறது. அதன்படி நமக்குண்டான எந்த மதத்தை குறித்தும் பேசுவதற்கு முன் நாம் அதி-ருந்து வெளியே வந்து நின்று இப்படி கூறவேண்டும்: ‘நாம் மனிதர்கள் என்பதை நாம் நம்புகிறோம்.’ மனிதன் அவனுக்கே போதுமானவன் அல்ல, மதம் என்ற ஒன்று வந்து அவனை பூரண படுத்தவேண்டும் என்று கூறுவது மனுக்குலத்தை தூஷிப்பதும் மனிதனை படைத்த தேவனையே குற்றப்படுத்துவதும் ஆகும்.

*(ஒரே மூச்சில் சாதாரண மனிதன் எப்படி தன்னை குற்றப்படுத்தியும், பழியினின்று விலக்கியும் பேசுகிறான் என்பதை கவனிக்கவும், அபூரணம் என்பது மறுக்க முடியாததே. ஆனால் நம்மை பூரணப்படுத்திக் கொள்ள தக்க சமயத்தில் வல்லமையை கேட்க உரிமை உண்டு. ஆகவே இப்படியாக தேவன் அளித்துள்ள பாவநிவிர்த்தியாகிய விலையேறப் பெற்ற ரத்தத்தின் அவசியத்தை புறஜாதியார் அலட்சியப்படுத்துகின்றனர். இது கிறிஸ்தவ நாடுகளின் உலக ஞானத்தால் தற்போது புறக்கணிக்கப்பட்டு வருகிறது.)*

“இதைச் சாதாரண ஜீவிகளின் விருப்பத்துக்கும் மேலான கொள்கைகளையும், திட்டத்தையும் உருவாக்கி வருவதைப் போல் காண்பிக்கும் விதத்தில் பேசுவது மனித குலத்தின் மீது குற்றச்சாட்டு கூறும்படியாகவே இருக்கிறது. ஏனெனில் ஏதோ ஒரு மனிதனால் மதபோதனையோ அல்லது பரலோகத்தி-ருந்து வெளிப்பாடுகளையோ அவர்கள் பெற்றிருக்கிறார்கள். மனிதன் தன் சரீரபிரகாரமான ஆற்றலோடு அப்படியே இருப்பானாகில் அவனுக்குண்டானவைகளுடன் மனிதன் மனிதனாகவே



இருந்திருப்பான் என்று நாங்கள் நம்புகிறோம். வய-ல் நான் பயிர் செய்யும் கா-பிளவரானது அத்தனை அழகாய், சீராய் தனது சூழ-ல் வளர்கிறது. அதேசமயம் அதே தேவனால் படைக்கப்பட்ட எனது மூளையானது அந்த காயை காட்டிலும் பலநூறாயிரம் மடங்கு அதிகமான நுட்பமும், முழுமையும் உடையதாய் இருந்தும் கூட அதன் சுற்றளவில் வளருவதில்லை. மேலும் அது நான் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறதை செய்கிறதும், நான் பெற்றிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிற மேன்மையான கருத்துக்களை பெற்றிருப்பதுமாய் இருக்கிறது; அதோடு பரிதாபமானதொரு தலைபிரட்டை வளர்ந்து, ஐவ்வைப் போன்ற கால்களையும், நெஞ்சையும் உடைய தவளையாக மாறுகிறது. அந்தவிதமான தவளைகள் ஒன்றுபட்டு மனதிருப்தியுடன் கூட்டமாய் சத்தமிடுகின்றன. ஆனால் மனிதனுக்கு மட்டும் அவன் பூரணமானதொரு வளர்ச்சியை உட-லும் மனதிலும் பெற்று சக மனிதனோடு சகோதரத்துவத்துடனும் தேவன் படைத்த பூமியின் மேல் சமாதானத்துடனும் வாழ மதம் ஒன்று தேவையாயிருக்கிறது. ஏன் இப்படி? இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதை நீங்கள் சொல்லுங்கள். இது போன்ற எந்த போதனையுமே மனிதனை படைத்தவராகிய தேவனையே அவமதிப்பதாகும் என்று நான் கூறுகிறேன்.

“அதோடு பொருத்தமில்லாத எந்த அறிவியல் முடிவுகளையும் கூட நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. குரங்குகளோடு எங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை. ஒரு வேளை அவைகளுக்கு எங்களோடு பேசவேண்டுமாயின், அவைகளே எங்களிடம் வரவேண்டும். சிரமத்தைக் கொடுக்கும் மேற்கத்தியரின் கருத்தானது எங்களால் புரிந்து கொள்ள முடியாததாய் இருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் பிலடெல்பியா பட்டணத்தின் வா-பருக்கான ஒரு கூட்டத்தில் பங்கு பெற்றதே அந்நாட்டினருடன் எனக்கு ஏற்பட்ட முதல் அனுபவம். அந்த மாலை கூட்டத்தின் முக்கிய கருத்தானது மிருகங்களுக்கு ஆத்துமா இருக்கிறதா என்பதாகும். பூனை பிரத்தியேகமாக வெளியே வந்தது. மிகவும் தீவிரமான, புலமைவாய்ந்த கருத்துகளெல்லாம் வாசிக்கப்பட்டன. ஆனால் முடிவிலோ, பூனை என்றால் என்ன?, ஆத்துமா என்றால் என்ன?

என்றே தெரியாமல் அவர்களால் அந்த விஷயத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர இயலவில்லை. ஆனால் மதம் என்ற ஒன்றை சுமந்துக்கொண்டு அது இன்னும் அதிமுக்கியமான விஷயமாகவே இருந்தது. ஒரு வேளை தற்போது அர்மேனிய சிறுமி ஒருத்தி தன் தாயைப் பார்த்து பூனைக்கு ஆத்துமா உள்ளதா என்று ஒரு கேள்வியை கேட்பாளாகில் அந்த கேள்விக்கு ஒரே வாக்கியத்தில் ஒரு வேளை இப்படி பதில் சொல்- சமாதானப்படுத்தக் கூடும். எனக்கு இனிமையானவளே, கீழே சென்று தண்ணீர் கொதிக்கின்றதா என்று நீ பார்த்துவிட்டு வா (உன் மனதில் கேள்விளை எழுப்புவது எது? நிச்சயமாய் பூனைக்கு ஆத்துமா உண்டு. பூனைகளுக்கு பூனைகளின் ஆத்துமா இருக்கும். மனிதனுக்கோ மனுஷருடைய ஆத்துமா இருக்கும்) இப்போது கீழே போய்விட்டு வா; அந்த குழந்தையும் சந்தோஷத்தோடு கீழே சென்றுவிடும். மேலும் எந்த ஒரு அர்மேனிய பெண்மணியும் இத்தனை நேரம் நாம் கேட்டுக்கொண்டிருக்கும் விடுபட்ட இனத்தைக் குறித்து ஒரு தாக்கத்தை எதிர்கொள்வாளாகில் எந்த சலனமுமின்றி கலக்கமின்றி விடுபட்ட இனம், விடுபட்ட இனத்தின் ஆத்துமாவையும், மனிதன், மனித ஆத்துமாவையும் கொண்டிருந்தான் என்றும் உங்களுக்கு தெரிவிப்பாள்.

"இதுவரைக்கும் நாம் மனுக்குலத்தின் பொதுவான திட்டத்தைக் குறித்து ஒருவரோடு ஒருவர் இசைந்து வந்திருக்கிறோம். ஆனால் இந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் நாம் மிகவும் வேறுபட்ட பாதையில் செல்கிறோம். நாங்கள் கூக்குர-ட்டு, "எங்களைத் தனிமையில் விடுங்கள், நாங்களே விருத்தியாகி நாங்கள் நினைக்கும் மேன்மையான இடத்திற்கு உயர்வோம் என்று கத்துகிறோம்." இதோ நாங்கள் கண்ணுக்கு புலப்படாத ஒரு சக்தியை கண்டுவிட்டோம். அது எங்களைத் தனிமையில் விடாது. விஞ்ஞானம் மற்றும் கலையின் வழியில் இருக்கும் எல்லாவற்றையுமே எங்களால் செய்யக்கூடும் என்பதையும் கண்டுகொண்டோம். ஆனால், உயரிய மற்றும் மேன்மையானதாகிய எங்கள் எண்ணங்கள் சரியானதும், எங்கள் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானதுமான இவைகளைத் தொடர நினைக்கும் போது, அதற்கும் அப்பால் கடந்து செல்ல நாங்கள் வ-மையோடும், சக்தியோடும் காத்திருக்கிறோம். இதை இந்த நேரத்தில் மிகவும் விரிவாய் கூறமுடியாததால் இதை மிகவும்



எளிமையான நடையில் கூறுகிறேன். ஆனால் எங்களை பொறுத்தமட்டில் மனித கௌரவம் எவ்வளவு உண்மையானதோ அவ்வளவாய் ஒரு சக்தியானது ஆணையும் பெண்ணையும் அவர்கள் நடக்க வேண்டியது என்று அறிந்திருக்கும் மரியாதைக்குரிய சீரான பாதையி-ருந்து விலகிசெல்ல செய்கிறது. அது நமக்குரியது அல்ல என்று நாம் உணர்வதால் அது மனிதனுக்குள் இயல்பாக இருக்கிறது என்று நாம் கூறிவிடமுடியாது. அவ்வாறு அது நமக்குரியதல்லாமல் இருக்குமேயாகில் அதோடு கூட மனிதனானவன் சீரழிவுக்குள்ளும், அவல நிலைக்குள்ளும் சென்று மிதமிஞ்சிய பண ஆசையுடன் தன் சக மனிதனை மிதிக்கும் எண்ணமுடனும் இருப்பானேயாகில், 'அவனைத் தனிமையில் விட்டுவிடுங்கள், அவன் செய்யவேண்டும் என்று தேவன் நினைக்கிற வண்ணமே அவன் செய்யட்டும் என்று நாம் சொல்லக்கூடும்.'

"ஆகவே, சுருக்கமாக தன் கொள்கைகளை சூடேற்ற ஆயத்தமாகிவரும் எவருக்குமே நான் கூறிக்கொள்வது என்னவெனில், கொதிநிலையை அடையும் முன்னே இதை அதனுள் போடுங்கள். 'மேலும் நான் தேவனுடைய முதன்மையான எதிரியானவனை மனிதனிடத்தில் தேவனை குற்றப்படுத்துகிற பிசாசின் மீது நம்பிக்கை கொள்கிறேன்.' இந்த உலகமனைத்துக்கும் ஒரே பிசாசா? நாங்கள் கவலைப்படவில்லை. ஒரு ஆத்துமாவை சுற்றி ஒரு லேகியோன் பிசாசுகளா? அதுபற்றி எங்களுக்கு கவலை இல்லை. ஏனெனில், மனிதனுக்கு வெளியே இருக்கும் ஒரு சக்தியானது அவனை வ-மையோடு அருகில் இழுக்கிறது என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். பூமியின் எந்த சக்தியாலும் இதை எதிர்க்க முடியாது.

"ஆகவே, எங்கள் மதம் இங்கு தான் வருகிறது. நீங்கள் கிழக்கத்திய இளைஞருக்கு ஒரு மதத்தை கொண்டுவந்தால் அது சமநிலை படுத்தும் வ-மையோடு கூட வரவேண்டும். ஆம், உலகின் தீய சக்தியை சமன் செய்யும் சக்தியாக இருக்கவேண்டும். அப்போது தான் தேவன் மனிதனை எப்படி நினைத்தாரோ அந்த அளவுக்கு வளரக்கூடிய சுதந்திரத்தை மனிதன் அடைவான். எங்களுக்கு கடவுள் வேண்டும். எங்களுக்கு தேவ ஆவி வேண்டும். எங்களிடம் வரும் எந்த பெயருடைய, வடிவுடைய மதமாக

இருந்தாலும், அது அதனைக் கொண்டு வரவேண்டும். இல்லாவிடில் அது எங்களை பொறுத்தமட்டில் மதமே கிடையாது. மேலும் நாங்கள் கடவுளை நம்புகிறோம். ஆனால், பொருட்களின்துகள்களில் தன்னை மறைத்திருக்கும் உயிரணுக்களின் கடவுளையல்ல. ஆனால் நாங்கள் யாருடைய பிள்ளைகளோ அந்த கடவுளையே நம்புகிறோம்.

“ஆகவே எங்களது தத்துவத்தின் மற்றும் தேவனுடைய கௌரவத்தை காக்க எதிர்த்து நிற்கும்படியான மூன்றாவது காரியத்தை உங்கள் முன் வைக்கிறோம். வீரப்பண்பு என்பதே செத்துவிட்டதா? மேன்மையான, கௌரவமான வாழ்வின், உண்மையான நேர்மை இவைகளை குறித்த எல்லா எண்ணமுமே மனிதனுடைய இருதயத்தை விட்டு விலகிப் போய்விட்டதா? இதன் விளைவாக நமது தேவனுடைய சபையில் கிடைக்கவிருக்கும் ராஜபதவியையும் நல்ல போர் வீரனுக்கான கௌரவத்தையும் நம்மால் பெறமுடியாதா? நாம் அவருடைய பிள்ளைகள் என்பதை அறிந்திருக்கிறோம். ஏனெனில் அவருடைய வேலையை நாம் செய்துகொண்டு அவரது எண்ணத்தையே சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அவரைப் போல மாற இன்னும் நாம் என்ன செய்யவேண்டும். ஓ, உண்மையில் நான் கடல் கடந்து, நாடு கடந்து என் தாயுடைய இதயத்தை சென்றடைந்து அவளது தழுவும் கரங்களை தொட்டு உணர என்னால் முடியும். ஆனால் கடவுளுடைய பிள்ளையாக நான் நிற்கும் போதோ, என்னால் மேற்கொள்ள முடியாத சக்திகளுக்கு எதிராய், நான் உதவியற்றவனாக இந்த உலகில் நின்று, அவரை நோக்கி என் கரத்தை நீட்டவோ, அவரை நோக்கி கூப்பிடவோ முடியாமல் போகிறபோது, நான் அவருடைய ஆவியை என் ஆத்துமாவுக்குள் பெற்று, அவரது நித்திய கரம் என் பெலவீனத்தில் என்னைத் தாங்கும் என்பது எப்படி உண்மையாகும்?

“இங்கே தான் பழங்காலத்து, மற்றும் நவீன ஆலயத்தின் பிரசங்கியார் வந்து, வானத்தி-ருந்து ஒருவர் வந்ததாகவும், அவரே இந்த உலகத்தை மேற்கொண்டதாகவும் நமக்குக் கூறுகிறார். மேலேயிருந்து வந்தவர் என்று நம்மிடம் யாரும் கூறவேண்டியதில்லை. ஏனெனில், ஸ்தீரியிடம் பிறந்த எந்த மனிதனும் அவ்விதமான காரியங்களை செய்யவில்லை. ஆனால், நாம் கிருபையின் நிமித்தம் தூண்டப்பட்டவர்களாய், நாம் நடந்து



செல்லக்கூடிய பாதையை காட்டுகிற தேவனுடைய ஆவி மனிதருடைய இருதயங்களில் நிச்சயமாய் வருகிறது. மேலும், என்னுடைய இருதயமும் கூட என்னோடு சேர்ந்து பாவத்துடன் போராடி, எனக்குள் இருக்கும் தெய்வீகத்தினால் நான் சரியென்று அறிந்திருக்கும் தீர்மானத்தைக் கைவிடாமல் பற்றி நிற்க பெலப்படுத்துவதை என்னால் உணரமுடிகிறது.

“ஆகவே, நடுங்கும் கையுடன் ஆனால் உறுதியான திட்டத்தோடு, அதிகமான கவலையுடன் கூடிய மனிதநேயத்துடனும், ஆனால் நித்திய ஜெயத்தின் களிப்போடும், நான் 20ம் நூற்றாண்டின் பொன்னான வாசலருகே மனித இதயங்களை ஆதரிக்கும் வகையில் மதத்தின் மீது தீர்ப்பை வழங்கும்படியாக காமன்வெல்த் சமுதாயத்தின் பெரியோர்களாகிய உங்களுடன் சேர்ந்து வருகிறேன். ஆகவே, பழங்கால கிழக்கத்திய கன்பியூஷியத்தையும் நவீன பிரம்ம ஞானத்தையும் பழங்கால கிழக்கத்திய புத்த மதத்தையும், நவீன ஆவிக்குரிய காரியங்களையும், நவீன ஆன்மீகமற்ற கொள்கைகள், பகுத்தறிவு கொள்கைகள் மற்றும் உயர்ந்த லட்சிய கொள்கைகள் ஆகியவற்றை கிழக்கு நாடுகள் சார்பாகவும், மறுபக்கத்தில் கிறிஸ்துவுடனான கிழக்கத்திய கிறிஸ்தவத்தையும், தேவ வல்லமை மற்றும் தேவ ஞானத்தையும், இன்னும் கூட தேவ அன்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் சிலுவையையும் உங்கள் முன் வைக்கிறேன்;

“காலத்தில் சீர்குலைவின் உச்சகட்டத்தின் மீது வைக்கிறேன்.”

இந்த பேச்சாளர் அர்மேனிய கத்தோ-க்க சபையின் தூதுவராக இல்லாவிடினும், பிற்காலத்தில் துருக்கியரால் காட்டுமிராண்டித்தனமாக துன்புறுத்தபட்ட அர்மேனிய கிறிஸ்தவர்களின் கருத்துக்கேற்ற காரியங்களை தெளிவாக வெளிப்படுத்தினார். அவருடைய பேச்சு அநேக தலைசிறந்த கருத்துக்களை கொண்டிருந்தது. ஆனால், அவர் ஒரு கிழக்கத்திய இளைஞருக்கு சிறந்ததொரு உதாரணம் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. அவர் கிழக்கத்தியவர்களைவிட வெகுதொலைவில் முன்னேற்றமான பாதையில் இருக்கிறார். மட்டுமன்றி ஏறக்குறைய அந்திகிறிஸ்துவின் கொள்கையை பிரதிப-க்கும் மரித்தோருக்கு செய்யப்படும் ஜெபம்,

*பரிசுத்தவான்கள் மற்றும் கன்னிமரியின் படங்களை தொழுதல், பாவஅறிக்கை முறைமை, பூஜைப- என்கின்ற தெய்வ நிந்தனையான போதனை யாவுமே அர்மேனிய கத்தோ-க்கரின் உண்மை நிலையை வெளிப்படுத்தம்படியாக கூட அவரது பேச்சு இல்லை. அந்த பூஜை ப- என்கிற “அருவருப்பை” செய்கிறவர்கள் இதன் நிமித்தம் உண்மை சிலுவையைப் பற்றியும், அதன் யாவருக்கும் ஒரே ப- என்பதைக் குறித்தும் தங்களது குறைவான அறிவை வெளிப்படுத்துகிறார்கள். இந்த இளைஞர் குறிப்பிடுகிற “கிழக்கத்திய கிறிஸ்தவம்” என்பது நாங்கள் மதிக்கின்ற அல்லது முன் உதாரணமாய் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. நாங்கள் கிறிஸ்தவம் என்று பின்னிட்டு திரும்பி பார்ப்பது, நமது கர்த்தரும் இரட்சகருமான கிறிஸ்துவும், அவரது அப்போஸ்தலரும் அறிவித்ததும் விளக்கிக் கூறியதும் மற்றும் வேதம் கூறுகிறதுமான கிறிஸ்தவத்துவம் என்கிறோம். அதில்லாமல் கிழகத்தியதும், மேற்கத்தியதும் அல்லது கத்தோ-க்கமும் (அதாவது உலகளாவிய அல்லது பொதுவான) கூறுகிறது அல்ல. ஆனால், விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாகிற அந்த தேவனுடைய பெலனையும், தேவனுடைய ஞானத்தையும் மட்டுமே விசுவாசிக்கிறோம். (ரோ 1:16)*

சிலர் நீதியை நாடி, தேவனை உணர்ந்து கொள்கிறார்கள். இவர்கள் மனப்பூர்வமான நேர்மையும், மேன்மையான நோக்கமும் உடையவர்களாகவும், அவர்களது தோழர்களை நீதியின் உயர்ந்த நிலைக்கு உயர்த்த முயற்சிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் சத்திய அறிவை பிறப்பினாலும் சூழ்நிலையினாலும் பெற்றிருக்கும் அநேகர், சத்தியத்தை விட்டுக் கொடுக்கும் குணமும், தற்கால நன்மைக்காக இணையில்லா தியாகங்களை காட்டிக் கொடுக்க தீவிரமாகவும் இருக்கிறார்கள். இந்த இரு வகுப்பாருக்கும் இடையே உள்ள வேறுபாட்டை உணராமல் முன்னே கூறப்பட்ட வகுப்பாரின் மேன்மையான உண்வை சிந்தனையுள்ள பார்வையாளர்கள் அறிந்து கொள்ள முடியாது. யாரிடம் அதிகமாக கொடுக்கப்படுகிறதோ அவர்களிடத்தில் தேவன் அதிகமாக எதிர்பார்க்கிறார். அவர் தற்போது அவர்களையெல்லாம் தராசில் நிறுத்தி பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால், நமது அபிமானத்தையும், மரியாதையையும் சில



வெளிநாட்டு பிரதிநிதிகள் மதிப்பளிக்கும் வேளையில், அவர்களில் பெரும்பாலானோர் நாகரீக வளர்ச்சி பெற்ற, அறிவில் தெளிவு பெற்ற தேசங்களின் பிரதிநிதித்துவ பேரவையில் தங்கள் பகுத்தறிவற்ற மூடநம்பிக்கைகளை பரிந்துரைப்பதில் மகிழ்ந்து கொண்டும் இருந்தார்கள். புத்தமதம், ஷின்டோயிசம், பிராமணத்துவம், கன்பியூஷியனிசம் மற்றும் முகமதியனிசம் ஆகியவை திரும்பத்திரும்ப மிகுந்த தைரியத்துடன் யாவர் முன்னும் வைக்கப்பட்டன. மேலும் முகமதிய அப்போஸ்தலருக்கு பல பெண்களை மணந்துகொள்ளளும் முறைமையை பரிந்துரை செய்யக்கூட துணிவு இருந்தது. பார்வையாளர்களுக்கு இது மிக அதிகமானதாகவே இருந்தது. ஆனால் வெளியான இவர்களது அதிருப்தியானது சபைத்தலைவர் டாக்டர். பேரோஸ்-னால் மிகவிரைவில் அமைதிபடுத்தப்பட்டது. எந்த முணுமுணுப்பும் இன்றி எல்லா விவாதங்களுக்கும் செவி கொடுக்கவேண்டும் என்கின்ற சபை ஒழுங்கின் சாராம்சத்தை நினைவு படுத்தி, அவர்களை அமைதி படுத்திவிட்டார். ஆகவே அனைவரும் ஏராளமாய் கேள்விப்படவும், நிலையற்ற மனதுடைய ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் எனப்பட்டவர்கள் முன்பு தங்கள் கருத்துக்களை எந்த தடையின்றி விவாதிக்கவும், சந்தர்ப்பம் பெற்றனர். மேலும் இதன் விளைவாய் அமெரிக்காவில் அநேகம் பேர் தங்களுடைய மதத்துக்கு மாறிவிடுவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு நியாயமான காரணங்கள் தோன்றலாயின. இதேவிதமான சலுகைகள் கிறிஸ்தவ விஞ்ஞானம், பிரம்மஞானம், ஸ்வீடன் கோர்கெயினிஸம் போன்ற அந்தி கிறிஸ்தவ இயக்கங்களுக்கும் அளிக்கப்பட்டன.

## பேரவையின் முடிவுரை கருத்துக்கள்

இந்த பேரவையின் முடிவு சம்பிரதாயங்கள் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களின் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை எவ்வளவு உறுதியாய் இருக்கிறது என்பதை தெளிவாய் காட்டுகிறது. நியாய தீர்ப்பின் நாள் மிகவும் நம்பிக்கையற்றதொரு கஷ்டமான நிலைமைக்கு அவர்களை விரட்டியடிக்கிறது. ஏனெனில் மிகவும்

மடத்தனமாக புறஜாதியாரின் முறைமைகள் இருப்பதை அறிந்தும் கூட, கொஞ்சமும் தயக்கமின்றி மிகுந்த உற்சாகத்தோடு அவர்களோடு ஐக்கியப்படுவதற்கு இவர்கள் அழைப்பு விடுக்கின்றனர். மிகவும் சுருக்கமாக அதன் சாராம்சத்தை நாங்கள் கீழே கொடுக்கிறோம்:

சுவாமி விவேகானந்தா (இந்தியா, பம்பாயின் ஒரு துறவி) கூறினார்:

"சமய ஒருமைப்பாட்டினை குறித்த பொதுவான ஆதாரங்கள் குறித்து இங்கு அதிகமாய் கூறப்பட்டுவிட்டது. இப்போது நான் என் சொந்த கோட்பாட்டை அறிவுறுத்த முற்படுவதில்லை. ஆனால், இந்த ஒருமைப்பாடானது ஏதோ ஒரேயொரு மதம் மட்டும் வெற்றிப்பெற்று மற்றெல்லா மதமும் அழிக்கப்படுவதாலேயே உருவாகும் என்று இங்கு யாராவது ஒருவர் எதிர்பார்த்து நம்புவார்களாகில், அவருக்கு நான் கூறிக்கொள்வது, சகோதரரே, உங்களுடைய நம்பிக்கை நடக்கமுடியாத ஒன்றாகும். கிறிஸ்தவர்கள் இந்துக்களாகிவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேனா? தேவன் அதை தடைசெய்கிறார். இந்துக்கள் அல்லது புத்த மதத்தவர் இந்துக்களாக வேண்டும் என்று நான் விரும்புகிறேனா? தேவன் அதை தடை செய்கிறார். எந்த கிறிஸ்தவனும் இந்துவாக மாறுவதற்கானவன் அல்ல. அல்லது ஒரு புத்த மதத்தவனும் கிறிஸ்தவனாக மாறுவதற்கானவன் அல்ல. ஒருதலைபட்சமான கருத்தில்லாமல் சிந்திக்கக் கற்றுக்கொள்ளுங்கள்... ஒருவேளை இறையியலோ மற்றும் பிடிவாதமான கொள்கைகளோ சத்தியத்தை தேடும் உங்கள் வழியில் குறுக்கிடுமேயாகில், அவைகளை புறம்பே தள்ளிவிடுங்கள். உறுதியோடு உங்கள் சொந்த இரட்சிப்புக்காக கடுமையாக உழையுங்கள். அப்போது பரிசுத்தத்தின் பலன்கள் (கனிகள்) உங்களுக்கு கிடைக்கும்."

விச்சென்ட் காந்தி (இந்தியாவின் ஜைனர்) கூறினார் :

"ஒரு புறஜாதியானை அன்பு மற்றும் சமாதான செய்தியை கூறும்படி நீங்கள் அனுமதிப்பீர்களேயாகில், சுதந்திரமான உணர்வில் பலதரப்பட்ட கருத்துக்கள் உங்கள் முன் சமர்ப்பிக்கப்படுவதையும், மேலும் அது மூடநம்பிக்கையும், மதவெறியும் அற்றதாக இருக்கிறதா என்பதை பார்க்கும்படி நான் உங்களை கேட்டுக்கொள்வேன். எல்லா



கோணத்தி-ருந்தும் பல்வேறு மத முறைமைகளை பரிசோதிக்கும்படி நான் உங்களை மன்றாடி கேட்டுக்கொள்கிறேன்."

பேராயர் ஷபித்தா, ஜப்பானின் ஷின்டோ மதத்தின் தலைமை குரு கூறினார்:

"சத்தியம் என்ற ஒரே கூரையின் கீழ் உலகளாவிய சகோதரத்துவத்தை உருவாக்க வேண்டும் என்ற திட்டத்தை செயல்படுத்தும் உங்களுக்கு நான் உதவ விரும்புகிறேன். ஒற்றுமையே வ-மை என்று உங்களுக்கு தெரியும். எனவே அழகிய செர்ரி மர நாடாகிய ஜப்பானை பாதுகாத்து வரும் 8 மில்-யன் தேவர்களும், உங்களையும், உங்கள் அரசாங்கத்தையும் என்றென்றும் காப்பதாக என்று ஜெபித்து உங்களுக்கு விடையளிக்கிறேன்."

சிலோனின் எச். தர்மபாலா கூறினார்:

"475 மில்-யன் சக மதத்தவரும், சாந்தமான கடவுளாகிய கௌதம புத்தரின் சீடர்கள் ஆகியோரின் சார்பாக எனது அன்பார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.... தாங்கள் பின்பற்றுகின்ற ஒவ்வொரு மதத்தையும் குறித்து உங்கள் கிழக்கத்திய சகோதரர் மூலமாக அவர்களது உரையி-ருந்து அறிந்து கொண்டீர்கள்... குறிப்பிடத்தக்க அளவு பொறுமையோடு கூட எல்லாம் இரக்கமயமாகிய புத்தரின் போதனைகளையும் கூட அவரது சீடர்களின் மூலம் அறிந்து கொண்டீர்கள். "மேலும்...

பிஷப் கேன் (ரோமன் கத்தோ-க்கர்) கூறினார் :

"இந்த பேரவையின் அழைப்பிதழானது பழைய கத்தோ-க்க சபைக்கு அனுப்பப்பட்டபோது, ஜனங்கள் கூறியது என்னவெனில், "அவள் வருவாளா?" என்பது. மேலும் பழைய கத்தோ-க்க சபை கூறியதாவது, "இந்த உலகளாவிய அனைத்து மத பேரவைக்கு வருவதற்கு பழைய உலகளாவிய கத்தோ-க்க சபையாகிய எங்களைக் காட்டிலும் அதிக உரிமை உள்ளவர் யார்?"... மேடையில் ஒருவேளை அவள் மட்டுமே நிற்க வேண்டி வந்தாலும், அவள் எங்கு நிற்பாள். ஆகவே இந்த பழம்பெரும் சபை வந்தது. இங்குள்ள தன் சக மனிதரையும், தன் சக விசுவாசிகளையும், மனிதாபிமானத்தையும் கொள்கைகளையும் நேசிக்கும் சக மனிதரையும் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி கொண்டாள்... மட்டுமன்றி விரிவுடன் நேர்த்தியானதொரு

ஒருமைப்பாடு வளரும்படி ஒரு விதை இங்கு நாட்டப்படவேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கமாட்டோமா? நாம் பிரிந்திருப்பதைக் காட்டிலும் ஒன்றுபட்டிருப்பது நமக்கு மேலானதல்லவா? ஏனெனில் நமது கர்த்தரும் கூட தாமும் தமது பிதாவும் ஒன்றாயிருப்பது போல நாமெல்லாரும் அவருடனே கூட ஒன்றாயிருக்க வேண்டும் என்று ஜெபிக்கவில்லையா? (ஆனால் பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள ஒருமைப்பாட்டைப் போன்ற ஒன்றுக்காக அவர்கள் ஜெபிக்கவில்லை, இவர்கள் குறிப்பிடும் ஒருமைப்பாடானது மிகுந்த வித்தியாசம் உடையது.)

புரட்டஸ்டன்ட் பிரதிநிதிகளிடமிருந்து பேரவையில் வெளியிடப்பட்ட கருத்துக்களில் அவர்களது முழுமையான ஒப்புக்கொள்ளும் எண்ணம் காணப்பட்டது. ஆயர் டாக்டர் கேன்ட்-ன், சைனாவுக்கான மிஷனிரி கூறியது :

“உலகமனைத்திலும் உள்ள மதங்களை ஒன்று கூட்டி ஒரு பேரவை நடத்த வேண்டும் என்கிற இந்த யோசனை உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கு வந்திருப்பதால், கிறிஸ்தவ மதம் மட்டுமே உண்மையானது ஆகும். மற்ற மதங்கள் பொய்யானவை. கிறிஸ்தவ மதம் மட்டுமே தேவனுடையது, மற்ற மதங்களெல்லாம் சாத்தானுடையது; கிறிஸ்தவ மதம் பரலோகத்தி-ருந்து வெளிப்பட்டது. பிற மதங்களோ மனிதனால் உருவாக்கப்பட்டவைகளாக இருக்கின்றன. பிரகாசமான தெளிவான வெளிச்சமும், உறுதியான நிச்சயமும் சேர்வதினால் மதத்துடன் மதம் விரோதம் பாராட்டுவதற்கு பதில் நட்புறவையே பிரதிப-க்கும் என்று உங்களுக்கே நன்றாக தெரியும். எப்படியெனில் தேவன் நம் யாவருக்கும் பொதுவான தந்தை என்பது எவ்வளவு உண்மையோ, அதே போல் நமது இருதயங்களும் ஒரே விதமான சுபாவத்தை அவருக்காகவே பெற்று நமது ஆத்துமாவில் பக்தி சிந்தையை கொண்டிருப்பதே அவரது சிங்காசனத்தி-ருந்து விழுகிற இரகசியமான கிருபைகளை பெற்றுக் கொள்ள வைக்கிறது. அடுத்தாற்போல் இதுவே பெந்தேகொஸ்தே. அதன் பின்னே உலகத்தை மாற்றுதல் இருக்கிறது.”

உண்மையாகவா? பரத்தி-ருந்து வருகிற வல்லமைக்காக காத்துக் கொண்டிருக்கும் உண்மையும் ஜெபத்துடன் கூடிய எருசலேம் சபையின் சத்தியம் மற்றும் நீதியை, அந்திகிறிஸ்து மற்றும் விக்கிரக ஆராதனையின் ஐக்கியத்திற்காக விட்டுக்கொடுக்கும் முயற்சியில் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறது? இந்த பலதரப்பட்ட ஜனங்களின் மீது அதேபோல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டதற்கு என்ன வெளிப்பாடு அங்கே இருந்தது? உலகத்தை மாற்றுவது இதை தொடர வேண்டுமானால் உலகம் என்னவாக மாற்றப்படவேண்டும் என்பதை விசாரணைக்காக விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். எக்காளங்கள் இவ்வளவு வளர்ச்சியடைந்தும், இப்படிப்பட்ட வாக்குத்தத்தமானது இந்த நியாயத்தீர்ப்பின் சோதனையில் திருப்திபடுத்தவில்லை.



போதகர் டாக்டர் பிரிஸ்டல், மெத்தடிஸ்ட் சபை, கூறினார்:

“எல்லையற்ற நன்மையானது இந்த பேரவையி-ருந்து மட்டுமே வரக்கூடும். வெகுதொலைவில் இருந்து வந்திருக்கும் யாவருக்கும் நாங்கள் அடக்கத்துடன் நீடிய நன்றியை கூறிக்கொள்கிறோம். இவர்களில் சிலர் ரோம் நகரை ரோமுலஸ் கண்டுபிடித்த காலத்துக்குரிய நாகரீக வளர்ச்சியை போன்ற பழமையானதை தெரிவித்தனர்; கிரேக்கருக்கு தன் இ-யாட்ஸ் கீதங்களை ஹோமர் பாடியதைப் போன்றதான செழிப்பான இசைநயமும், ஞானத்தில் தேர்ச்சி பெற்றதுமான பாடல்களையும் தத்துவங்களையும் இவர்கள் கூறினார்கள். மட்டுமன்றி, நமது பொதுவான மனிதாபிமானத்தின் கருத்துக்களை அவர்கள் விரிவுபடுத்திவிட்டார்கள். கிழக்கத்திய நம்பிக்கைகளி-ருந்து நமக்கு வாசமிகு மலர்களையும், மாபெரும் தத்துவங்களாகிய பழமையான சுரங்கத்தி-ருந்து விலையேறப் பெற்ற நவரத்தினங்களையும் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களது சிந்தனைகளை நமக்கு அளித்ததினால், மேலும் அதோடு கூட முக்கியமாய் அவர்களுடன் ஆவியில் நாம் தொடர்பு கொண்டதால் நாம் இன்னும் செழுமை அடைந்துள்ளோம். (என்ன மாதிரியான ஒரு பாவ அறிக்கை!)

“உலகளாவிய சகோதரத்துவம் மற்றும் சகிப்புத்தன்மையின் பாதையினூடே நமது பொதுவான மனித நேயத்துக்கு இப்படிப்பட்டதான பிரகாசமும், நம்பிக்கையும் நிறைந்த ஒருநாள் இருந்ததே இல்லை. இந்த விருந்தினர் நமக்கு கொண்டு வந்திருக்கும்

வார்த்தைகளாலும், அவர்களது செல்வாக்கினாலும் ஒரே விசுவாசம், ஒரே கடவுள், ஒரே பிதா, ஒரே சகோதரத்துவம் ஆகியவற்றின் மீது ஆதாரப்பட்டிருக்கும் இந்த மாபெரும் இயக்கத்துக்கு தங்களது பங்கை ஆற்றியிருப்பதின் நிமித்தம் அதிகமாய் வெகுமானம் பெறுவார்கள் என்பதை நாம் கண்டுகொள்ளலாம்.

“கிழக்கத்திய சகோதரரே, நம் பிதாவாகிய தேவனுடைய ஆசீர்வாதங்கள் உங்களோடு இருப்பதாக ; நம் இரட்சகரும், நம் மூத்த சகோதரனும், மனிதரின் சகோதரத்துவத்தின் போதகருமானவரது ஆசீர்வாதங்களும் உங்களோடும், உங்கள் ஜனங்களோடு என்றென்றும் இருப்பதாக.”

போதகர் அகஸ்டா சேப்பின் கூறியதாவது:

“நாம் வரவேற்ற விருந்தினரை இப்போது பிரிகிறோம். கிழக்கத்திய ஞானிகளே, நீங்கள் வருகை தந்ததால் நாங்கள் மகிழ்வடைகிறோம். உங்களது ஞானமான வார்த்தைகளாலும், பொருத்தமான சகிப்புத்தன்மை மற்றும் உங்களது மென்மையான வழிகள் மூலமாய் உங்கள் பாதங்களில் அமர்ந்து, இப்படிப்பட்ட உங்கள் காரியங்களை கற்றுக்கொள்வதில் மிகுந்த சந்தோஷப்படுகிறோம். உங்களை முகம் முகமாய் பார்ப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைவதோடு இதுமுதல் உங்களை மேலான நண்பர்களாகவும், உடன் ஊழியராகவும், இந்த மாபெரும் மத காரியங்களில் கருதுகிறோம்.

“மேலும் இந்த மாபெரும் சபையின் காரியங்களையும், இங்கு கூறப்பட்டவைகளையும் குறித்து எல்லாவற்றையும் உங்கள் தொலைதூர தேசங்களுக்குச் சென்று கூறப்போகிறீர்கள். அதற்காக மிகவும் மகிழ்கிறோம். இதன் மூலம் மேற்கத்தியரோடு கிழக்கத்தியருக்கு மிகுந்த நெருங்கிய உறவையும் கொண்டு வரப்போகிறீர்கள். அதோடு எல்லா மதங்களிடையேயும் இருக்கின்ற தயாள உணர்வை எளிதாக்கிவிடப் போகிறீர்கள். மேற்கத்திய ஞானிகளாகிய ஆணும், பெண்ணும் பேசிய வார்த்தைகளை கேட்டு நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். இவர்கள் தங்களது தங்கத்துகள்களை கழுவி சுத்திகரித்தப்பின் எங்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். நான் ஆரம்பத்தில் கூறியதையே இந்த



பேரவையின் முடிவிலும் கூட மறுபடியும் சொல்கிறேன். இதுவரை உலகிலேயே நடந்திராத அளவுக்கு மதத்தின் பெயரால் இத்தனை பெரிய கூட்டம் கூடியிருக்கிறது.”

போதகர் ஜென்கின் லாயட் ஜோன்ஸ் கூறினார்:

“பிரியும் விருந்தினரே நான் உங்களை வாழ்த்துகிறேன். தேவ அனுக்கிரகமானது எந்த ஒரு ஆத்துமாவும் தன் உடன் கூட்டாளியை எல்லா தேசங்களிலும், எல்லா மதங்களின் மத்தியிலும் அடையாளம் கண்டுகொண்டு, மகிழ்வுறச் செய்யும். நீங்கள் புறப்பட்டுச் செல்லும் போது, உங்கள் நம்பிக்கைகளின் நல்ல நினைவுகளை எங்கள் இருதயங்களில் விட்டுச்செல்வதோடு, நமது வாழ்வில் என்றென்றும் இருக்கக்கூடியதும் நம்மை ஒருமைப்படுத்தி இணைக்கும் அன்பையும் எங்களுக்காக விட்டுச் செல்கிறீர்கள்.”

டாக்டர் பேரோஸ் (தலைவர்) கூறினார்:

“நமது நம்பிக்கைகள் எதிர்பார்த்ததற்கும் மேலாய் உணரப்பட்டது. இந்த பேரவையில் எழுப்பப்பட்ட நம்பிக்கை, மன உணர்வு நம் யாவரையும் ஒன்றாக கூட்டிவிட்டது. இந்த சரித்திர புகழ்வாய்ந்த கூடுகையுடன் ஒன்றிணைந்து செயல்பட்ட கோட்பாடானது ஒரு சோதனைக்குட்படுத்தப்பட்டது. மட்டுமன்றி சில சமயம் மிகவும் கடுமையாய் உழைக்கவும் செய்தது. ஆனால் அவை போதிய அளவாக இருக்கவில்லை. சகிப்புத்தன்மை, சகோதர அன்பு, பிறருடைய நேர்மையின் மீது நம்பிக்கை, கபடமின்மை மதங்களின் ஒருமைபாட்டை நாடுவது, நட்புறவற்ற விமர்சனமோ அல்லது விட்டுக்கொடுத்தோ போகாமல் தங்களது சொந்த நம்பிக்கையை எழுப்புவது ஆகிய இந்த கொள்கைகள் எதுவுமே இங்கு இல்லை என்று சொல்-விடாதபடி நடந்துகொண்ட உங்களது நேர்மைக்கும், தைரியத்துக்கும் நன்றி கூறுகிறேன்.

“ஆசியா, ஐரோப்பியராகிய உங்கள் வரவால் எங்களை மகிழச்செய்தீர்கள். ஞானமாயும் நடந்து கொண்டீர்கள். எங்கள் விருந்து உபசாரங்களை நீங்கள் அனுபவித்து மகிழ்ந்ததில் எனக்கு மிக்க சந்தோஷம்.”

கூட்டத்தின் தலைவரான போனியின் கருத்தும் ஏறக்குறைய

இதேபோல் இருந்தது. அதற்கு பின் யூத ரபியின் ஜெபம், ரோமன் கத்தோ-க்க பேராயரின் ஆசீர்வாதத்திற்குப்பின் இந்த பேரவை முடிவு பெற்றது. "உலகுக்கு சமாதானமும் மனுஷரிடத்தில் பிரியமும் உண்டாவதாக" என்ற தூதரின் செய்தியை ஐயாயிரம் குரல்கள் ஒன்று சேர்ந்து ஒ-த்தன.

**கண்ணோட்டம்**

ஓ, என்ன தியாகமான கோட்பாடுகள், சத்தியங்கள் மற்றும் தேவனுக்கு விசுவாசமாக இந்த உலகுக்கு முன்னதாக கூறப்பட்ட அறிவிப்புகள்; அதுவும் உலகம் உருவானது முதல் காணப்படாத அளவுக்கு தெய்வீக முன்னறிவிப்பின்படி உபத்திரவ காலத்தின் ஆரம்பத்திலேயே, சிந்தனையுள்ள மனிதர் யாவரும் இந்த உபத்திரவ காலத்தை உணரத் தொடங்கி அதற்கான விமோசனம் என்ன என்றும் பெரியதாய் பயந்தனர். மேலும் இந்த பயமே இந்த மாறுபாடான கூட்டத்தாரை ஒருவருக்கொருவர் பாதுகாத்து, ஒத்துழைப்புக் கொடுக்கும்படி இவர்களை விரட்டுகிறது. சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம்! சமாதானம் ! என்று கூக்குர-டுவதின் மூலம் சபைகளின் பயத்தை நீக்கும் பொருட்டு ஏற்பட்ட ஒரு மனித முயற்சியே இது; (எரே 6:14) இதற்கு முன் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட மாபெரும் கெயில் கொண்டாட்டத்தின் போது தேசங்கள் அனைத்தும் ஒன்று கூடி ஆர்ப்பரித்ததைப் போன்ற நகைப்புக்குரிய மறைமுகமான நேர்மையற்ற ஆரவாரத்தைப் போலவே, சபைகளில் சமாதானம் என்று கூறும் கூக்குரல் இருந்தது. பீரங்கிகளின் பேரிரைச்சலான முழக்கத்துடனே ஆளும் அதிகாரங்கள் சமாதானத்தை தெரிவிக்கின்றன. மத அதிகாரங்களோ அதே சமாதானத்தையும், சத்தியத்தையும், நீதியையும் தைரியத்துடன் விட்டுக்கொடுத்து அறிவித்துக் கொண்டிருக்கின்றன. தேவனே ஜாதிகளுக்கு சமாதானத்தை கூறும் காலம் வந்து கொண்டிருக்கிறது. (சக 9:10). ஆனால் தமது பிரசன்னத்தை புரட்சி என்னும் சுழல் காற்றினாலும் ஆபத்து என்னும் பெருங்காற்றினாலும் அறியப்பண்ணும் வரை இது நடைபெறாது. (நாகூம் 1:3)

தன்னுடைய சொந்த கண்ணோட்டத்தி-ருந்து இந்த பேரவை மாபெரும் வெற்றியை பறைசாற்றுகிறது. கொஞ்சமும்



சிந்தனையற்றவர்கள் எப்போதும் சத்தத்தோடும், பகட்டான தோற்றத்தோடும் ஆமென் என்று பின்பாட்டு பாடிக்கொண்டிருந்தனர். உண்மையான ஒரே ஒளியாகிய "இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியை" எப்போதும் போல் மறுத-த்து அவர்கள் மூடத்தனமாய் மனந்திரும்பும்படி முழு உலகமும் ஒரே மத கட்டுக்குள், ஒருமைப்பாட்டுக்குள் மற்றும் சகோதரத்துவத்துக்குள் கூடிவிடும் என்று கற்பனை செய்கிறார்கள். மேலும் யாவரும் மூடநம்பிக்கை, அறியாமை என்ற இருளிலேயே தட்டுத்தடுமாறி, மேற்கூறிய வஞ்சகமான வழியில் நடக்கின்றனர். (2கொரி 4:6; யோவா 1:9; 3:19) மேலும் கிறிஸ்தவர்கள் இந்தவித வெளித்தோற்றங்களில் மனமகிழ்ந்து, இதுபோன்றதொரு நிகழ்ச்சி சரித்திரத்தில் புகழ்வாய்ந்த நிகழ்ச்சி என்று பறைசாற்றிக் கொள்கின்றனர்.

இந்த பேரவை கூடுகையின் விளைவாக உருவாக்கப்பட்டதொரு பொதுவான எண்ணம் என்னவெனில், இது ஒரு நடவடிக்கையின் தொடக்கம் மட்டுமன்றி, நீண்ட செயல்பாடு கூட, எதற்கெனில், பூமியிலே சமாதானமும் மனுஷரிடத்தில் பிரியமும் உண்டாவதாக என்ற தேவதூதரின் இயேசுவின் பிறப்பைக் குறித்த செய்தியை உணர்ந்ததற்காகவே என்கின்றனர். மற்றொரு கண்ணோட்டத்தில் சரியாக பார்த்தால் இது கிறிஸ்தவ உலகத்தில் விசுவாசமற்ற நிலையின் மற்றுமொரு வெளிப்பாடே. "அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்து போகும்" (ஏசா 29:14) என்று தீர்க்கதரிசி கூறுவதை இவர்களது செயல் ஊர்ஜிதப்படுத்துகின்றது. மேலும் அவர் கூறுகிறார், "ஜனங்களே, நீங்கள் கூட்டங் கூடுங்கள், முறியடிக்கப்படுவீர்கள்; தூர தேசத்தாராகிய நீங்கள் எல்லோரும் செவி கொடுங்கள்; இடைக்கட்டிக் கொள்ளுங்கள், (யாவரும் சேர்ந்து) முறிந்தோடுவீர்கள். ஆலோசனை செய்யுங்கள், அது அபத்தமாகும்; வார்த்தையை வசனியுங்கள், அது நிற்காது."(ஏசா 8:9,10)

சங்கீதக்காரரோடு நாம் மறுபடியும் கேட்போம், "ஜனங்கள் விருதாக்காரியத்தை சிந்திப்பானேன்? (சமாதானம் இல்லாதபோது சமாதானம், சமாதானம் என்று கூச்ச-டுவானேன்) கர்த்தருக்கு

விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் (உலக, சமய) ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனை பண்ணி, அவர்கள் கட்டுக்களை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்து போடுவோம் என்கிறார்கள்."

"பரலோகத்தில் வீற்றிருப்பவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார். அப்போது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப்பண்ணுவார்." (சங் 2:1-5)

தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் தற்போதைய ஆவிக்குரிய இஸ்ரயேலர், பழங்காலத்து மாம்சீக இஸ்ரயேலரைப் போல், அவரது வார்த்தையையும், வழி நடத்துதலையும் உதறித்தள்ளிவிட்டு, தேவனை அறியாத ஜனங்களுடன் தங்களை இணைத்துக் கொள்ள நாட்டம் கொண்டு, தெய்வீக சத்தியத்தை உலக தத்துவங்களோடு கலந்துவிட முயற்சிக்கின்றனர். இவ்விதமான நடவடிக்கைகளை, அதன் பயங்கரத்தை உணராமல் செய்கிறார்கள். இவர்கள் தங்கள் முன்னோர்கள் மீது தேவன் செய்த காரியங்களை கவனித்து, தங்களுக்கான எச்சரிப்பை பெற வேண்டியிருக்கிறது.

இந்த பேரவையின் பல்வேறு, மிகவும் அனுகூலம் அற்ற விளைவுகள் வெகுத்தெளிவாய் உணர்த்துகின்ற காரியங்களாவன :

1. ஏற்கனவே சரிவர ஒழுங்கில் இல்லாத கிறிஸ்தவர்கள் மனதில் அவர்களது விருப்பமான வழியில், பல்வேறு விக்கிரக ஆராதனைக்காரரின் தத்துவங்களை அது அறிமுகப்படுத்தியது. இந்தியாவி-ருந்து வந்திருந்த பிரதிநிதிகளில் ஒருவரான திரு.விர்சாந்தி ஆர்.காந்தி ஜெயின் சமூகத்தினரின் காரியதரிசி, மும்பை, அமெரிக்காவிற்கு திரும்பி வந்து சிக்காகோவை தலைமையிடமாக்கிக் கொண்டு, தன் கருத்துக்களை பிரசாரம் செய்ததாக நாம் பிற்பாடு தெரிந்துகொண்டோம். அவரது நோக்கத்தை அவரது வெளியீட்டின் மூலம் கீழ்கண்டவாறு சுட்டிக்காட்டுகிறோம்:

"திரு.காந்தி அவர்கள் மதம் மாற்றம் செய்ய வரவில்லை. இதனை ஜைன மதம் தடை செய்கிறது. ஆனால், அவர் ஒரு கிழக்கத்திய தத்துவங்களின் பாடசாலையை உருவாக்கவே வந்தார். இதன் தலைமையகம் சிக்காகோவில் செயல்படும். அதன் கிளைகள் கிளிவ்லேண்ட், வாஷிங்டன், நியூயார்க், ரோசெஸ்டர் மற்றும் பிற நகரங்களில் இருக்கும் அமெரிக்கர்களை இந்துத்துவத்தின் எந்த வழிக்கும் மதம் மாறச் செய்யும் சுவிசேஷகராக அவர் வரவில்லை. அவரது சொந்த கருத்துப்படி இந்து மத வழிபாடு என்பது பிரசாரம் செய்வது இல்லை. ஆனால் உணர்வு அதுவும் உலகளாவிய அன்பின் மற்றும் வல்லமையின் உணர்வு, மற்றும் சகோதரத்துவத்தை புரிந்து கொண்டதற்கான உணர்வு, மனுஷீக சகோதரத்துவம் மட்டுமன்றி, எல்லா உயிரினங்கள் மீதும் இருக்கும்படியான உணர்வு, இதை உலக மனுஷரெல்லாரும் உதட்டளவில் கூறிக்கொண்டு இன்னும் செயல்படுத்தாமல் இருக்கிறார்கள். பொதுவாக பார்த்தால் இதுவே அவரது கொள்கையின் கருத்து. இதை ஆதாரமாக வைத்தே அவர் அமெரிக்கர்களை மனமாற்றுவதற்கு பதிலாக அவர்களது ஒத்துழைப்பை கோருகிறார்."



சந்தேகத்துக்கு இடமின்றி, இது ஒரு மத சம்மந்தமான வ-யுறுத்தல் கிடையாது என்ற எண்ணத்தை அநேகரது மனதில் தோன்ற செய்துவிட்டது. இதன் பலன் சிரியாவின் ஒரு பிரதிநிதியின் மூலம் கூட குறிப்பிடப்பட்டது. கிறிஸ்டோபர் ஜிப்பாராவாகிய இவர் கூறினார் :

"தேவனை வணங்குபவர்களாகிய என் சகோதர சகோதரிகளே : இந்த சமய மற்றும் பொதுவான பேரவையில் எல்லா மதங்களுமே தற்போது உலகமனைத்தின் பார்வையிலும் இணையானவைகளாகவே இருக்கின்றன. இந்த ஒவ்வொரு மதத்துக்குமே சுயமாய் பிற மதங்களைக் கூட மதித்து உணர்ந்து, கடைபிடிக்கும் ஆதரவாளர்கள் உண்டு. இவர்கள் தங்கள் சொந்த மதத்தின் உயர்வையும், உண்மைத் தன்மையையும் பிறர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் சில வாதங்களையோ அல்லது காரணங்களையோ கொண்டுவரக்கூடும். இவ்விதமான கலந்தாலோசனைகள் மூலம் ஒரு மாறுதல் வரக்கூடும். ஒருவேளை எல்லா மதங்களையும் குறித்த சந்தேகங்கள் அல்லது ஒருவேளை அவர்கள் யாவருமே ஒரே மாதிரியான விசுவாசத்தில் கூட இருக்கலாம். ஆகையால், ஒவ்வொரு மதத்தின் மதிப்பும் சில சமயம்

குறையலாம். மேலும் இவற்றை தூண்டும் புத்தகங்களுக்கு எதிராக சந்தேகம் எழுப்பப்படலாம், அல்லது பொதுவான ஒரு புறக்கணிப்பு நடக்கலாம். இதனால் ஒருவருமே எந்த மதத்தையும் விடாமல் பிடித்துக் கொள்ள மாட்டார்; மட்டுமன்றி அநேகர் மத சம்பந்த கடமைகளையே கூட முற்றிலும் ஒதுக்கிவிடலாம். ஏனெனில், குறிப்பிட்ட முறையிலாலான ஒரு மதத்தின் மீது மனதிலும், கருத்திலும் ஏற்படும் நிலையற்ற நிலையின் காரணமாய் கூட இருக்கலாம். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருக்கும் பல மில்-யன் மக்களிடையே தற்போது நடப்பதைப் போலவே. ஆகவே மிகப்பெரிய மதங்களி-ருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களால் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டு, அவர்கள் மூலம் தீவிரமான கொள்கைகளை விசாரித்து, முழுமையும் பூரண உண்மையுமான ஒன்றை அங்கீகரித்து, அதை மக்களுக்கு அறிவிக்கவேண்டும்."

2. வேசிகளின் தாயும் மகா பாபிலோனுமாகிய ரோமன் கத்தோ-க்க சபைக்கும், அவளது அநேக குமாரத்திகளாகிய புராட்டஸ்டன்ட் சபையின் பல பிரிவுகளுக்கும் இடையே இந்த பேரவை ஒரு விசேஷித்த நட்புறவை ஏற்படுத்தியது. இவர்கள் தங்கள் வெட்கத்தில் மகிழ்ச்சியடைந்து, இந்த இழிவான உறவுமுறையை பெற்றதில் பெருமை அடைகிறார்கள்.

3. உலகத்துக்கும், சபைக்கும் (பெயரளவிலான சபை) இன்னும்கூட நெருக்கமான ஐக்கியம் ஏற்படும் விதத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி, எல்லா மதங்களுடன் ஏதோ ஒருவிதத்தில் இணைக்கப்பட்டு எல்லோராலும் பின்பற்றப்படும் வகையிலான பெரியதொரு நடவடிக்கையை இந்த பேரவை எடுத்தது. இந்தப் பேரவையின் கடைசி கூட்டத்தின் போது, 1893ல் நடந்த இந்த கூடுகையில் ஏற்கப்பட்ட மாபெரும் வேலையானது உலகத்தின் எல்லா பகுதியிலும் தொடரும்படி நமது சகோதரத்துவத்தை அதிகாரபூர்வமாய் அறிவிக்கிறோம் என்று அதன் தலைவர் பகிரங்கமாய் அறிவித்தார்.

4. இனிமேல் உண்மையில் கிறிஸ்தவ ஊழியத்திற்கே எந்த அவசியமும் இல்லை என்று வெளிப்படையாகவே புற ஜாதியாருக்கு தெரிவிக்கப்பட்டது. அதாவது அவர்களது சொந்த மதங்களை



உண்மையோடு பின்பற்றினால் அதுவே போதுமானது என்றும் கூறப்பட்டது. பெயரளவிலான கிறிஸ்தவர்களை, விக்கிரக ஆராதனைக்கார பிரதிநிதிகள் எப்படி எடை போட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் அதற்கான ஆச்சரியத்துக்குரிய காரணம் இதுவாகத்தான் இருக்கும். கிறிஸ்தவ ராஜ்யங்களின் கிறிஸ்தவத்துக்கும், வேதத்தின் படியான கிறிஸ்தவத்துக்கும் உள்ள வேறுபாட்டை எத்தனை தெளிவாய் இவர்கள் கண்டுகொண்டுவிட்டார்கள்; மேலும் எத்தனை உன்னிப்பாய் இவர்களது கண்டனங்கள் கண்காணிக்கப்பட்டிருக்கின்றன.

5. சமாதானம் இல்லாதபோது, சமாதானம்!, சமாதானம்! என்று கூறுவதினால், கிறிஸ்தவ ராஜ்யத்தையே திசை திருப்பிவிட்டதாக கூறப்படுகிறது. எச்சரிப்பின் சத்தத்திற்கு மாறாக இவர்கள் இப்படி கூறுவது, தீர்க்கதரிசி (யோவே 2:1) கூறுவதைப் போல் இருக்கிறது. "சீயோனில் எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்;... ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது, அது சமீபமாயிருக்கிறது." அப்போது தங்களை தாழ்த்தி அர்ப்பணித்துக் கொண்ட யாவருக்கும் அவரது மேன்மையான கரத்துக்குள் வருவதற்கு அழைப்பு வரும்.

6. தேவனுடைய அந்த உக்கிரநாளின் உபத்திரவம் நெருங்குவதை உணர்ந்து கொண்ட, கிறிஸ்தவ ராஜ்யங்களின் தலைவர்களின் பயத்தின் காரணமாய் வந்தது. இந்த தெளிவற்ற கொள்கை என்பது மிகவும் தெளிவாய் இருக்கிறது. இதன் ஆரம்பமானது, கலங்கிய குழப்பமான பிரிஸ்பிடேரின் சபையில் தொடங்கியது. இந்த சமாதானம்! சமாதானம்! என்ற கூக்குரலானது எழும்பி வரும் புயலுக்கு மத்தியில் கேட்பது கீழ்க்கண்ட தீர்க்கதரிசனத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது. "சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது, அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும்." (1தெச 5:3)

பாபிலோனின் பொய்யான முன்னறிவிப்புகளால் தேவனுடைய பிள்ளைகள் ஏமாற்றப்படாமல் இருப்பார்களாக. தேவனிடத்தில் மட்டுமே நாம் பாதுகாப்பான அடைக்கலத்தை பெற முடியும். (சங் 91) நமது ஒரே நம்பிக்கையான கிறிஸ்துவின்

சிலுவையருகே கூடிச் சேருவோமாக. இந்த உலகளாவிய போ-மதங்களின் சகோதரத்துவமும், உண்மையற்ற கிறிஸ்தவமும் அந்த உறவின் மதிப்பை நிரூபிக்கட்டும். கிறிஸ்துவுக்குள்ளான சகோதரத்துவத்தை மட்டுமே நாம் அங்கீகரிப்போம். அவரது விலையேறப் பெற்ற ரத்தத்தை விசுவாசிப்பதின் மூலமாக, இரட்சிப்புக்காக கிறிஸ்துவை மட்டுமே நம்புகிற அனைவரின் சகோதரத்துவத்தை மட்டுமே நாம் அங்கீகரிப்போம். மற்றெல்லா மனிதரும் தேவனுடைய பிள்ளைகள் அல்ல, கிறிஸ்துவை தங்களது இரட்சகருக்கு ஈடாக ஏற்றுக்கொண்டு விசுவாசத்தினால் அவரிடம் வரும்வரைக்கும் அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் அல்ல. கிறிஸ்துவுக்குள் நாமெல்லாரும் வருவதற்கும் முன் இருந்தது போலவே அவர்கள் "கோபாக்கினையின் பிள்ளைகளாக இருக்கிறார்கள்." *(எபே 2:3)* இன்னும் வேறுசிலர் அவனது ஊழியங்களை செய்கின்ற "பொல்லாங்கனுடைய புத்திரர்." பாவத்தின் நிமித்தம் தேவன் ஆதாமையும், அவனது சந்ததியாரையும் மரணத்துக்குள்ளாக நியாயம் தீர்த்தபோது, அவர் அதற்குப்பிறகு அவர்களை தமது சொந்த குமாரராய் பாவித்து நடத்தவில்லை. ஆனால் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீது விசுவாசம் கொண்டு அவருக்குள் மனிதன் வந்தபிறகே, தேவனுடைய ஆசீர்வாதமான உறவுக்குள் அவன் மீண்டும் வருகிறான். இதன் விளைவாக, நாம் இனி கோபாக்கினையின் பிள்ளைகளாக இல்லாமல், இயேசுவின் மூலமாய் தேவனுடைய சொந்த பிள்ளைகளாக இருக்கிறோம். மற்ற மனிதரெல்லாம், தேவனால் அறியப்பட்டவர்கள் அல்ல. எனவே, எந்தவிதத்திலும் நமக்கு சகோதரரும் அல்ல. ஆகவே, வெளிச்சத்தின் பிள்ளைகளாக விழித்திருந்து, தெளிந்தவர்களாய் இருக்கக்கடவோம்; *(1தெச 5:5,6)* சிலுவை வீரர்கள் சத்தியத்தை குறித்து தைரியமாய் இருக்கக்கடவர். வானத்தி-ருந்து வருகிற தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு பிரசங்கித்தால் நீங்கள் ஏற்கவேண்டாம். *(கலா 1:8)* அதோடு கூட "இந்த உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்த தேவாட்டுக்குட்டியை" உண்மையோடு பின்தொடர்ந்து தங்கள் ஜீவனை காத்துக்கொள்ளும் கூட்டத்தாரை தவிர வேறு யாருடனும் ஐக்கியம் கொள்ளவேண்டாம்.



தங்களுடைய தப்பாறையான போதகங்கள் மற்றும் தீய நடவடிக்கைகளை பாதுகாக்கக் கூடிய மாபெரும் "உலகமதம்" என்கிற புற மதங்களோடு பேர் சபையானது ஐக்கியப்பட விரும்புகின்றது. இவ்விதமான மத ஒருமைப்பாட்டில் அத்தனை விருப்பம் இல்லாதவர்களது கருத்தையும், உலகத்தின் வருந்தத்தக்க நிலைமையையும், தப்பறையான மதங்களின் தீமையான பலன்களையும், தற்கால நிலைமையில் உலகத்தை மாற்ற இயலாத சபையின் நம்பிக்கையின்மையையும் நாம் பார்க்கலாம். பரலோகத்தில் பேரெழுதப்பட்ட பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, உண்மையும் விசுவாசமுள்ள உண்மையான சபை, முழுமையடைந்து ஆயிரவருட இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் உயர்த்தப்பட்ட பின்னரே உலகத்தை தேவனிடத்திற்கும் அவரது நீதியினிடத்திற்கும் திருப்ப முடியும்.

மிஷனரி ரெவ்யூவின் அங்கத்தினர் ஒருவர் சில வருடங்களுக்கு முன், உலகமனைத்தையும் மதமாற்றும் வேலையில் சபை கண்டிருக்கும் தோல்வியைக் குறித்து கீழ்கண்டவாறு கூறுகிறார் :

"ஒரு ஆயிரம் மில்-யன் ஆத்துமாக்கள், மனித சமுதாயத்தின் மூன்றில் இரண்டு பாகம் புறஜாதியார் விக்கிரக ஆராதனைக்காரர் மற்றும் முஸ்லீம்களாகிய இவர்களில், பெரும்பாலோனோர் இதுவரை வேதத்தை பார்த்ததோ அல்லது சுவிசேஷத்தை கேட்டதோ கிடையாது. இந்த ஆயிரம் மில்-யன் மக்களுக்காக ஆணும், பெண்ணுமாய் ஏறக்குறைய 10,000 புரட்டஸ்டன்ட் சுவிசேஷர்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர். ஆனால் திபெத், மத்திய ஆசியாவின் பெரும்பகுதி, ஆப்கானிஸ்தான், பலுஜிஸ்தான், அனைத்து அரபு நாடுகள், சூடானின் பெரும்பகுதி, அபிசீனியா மற்றும் பி-ப்பைன் தீவுகள் ஆகிய இடத்திற்கு ஒரு மிஷினரி கூட அனுப்பப்படவில்லை. மேற்கு சீனாவின் பெரும்பகுதிகள், கிழக்கு மற்றும் மத்திய காங்கோ, தென் அமெரிக்காவின் பெரும்பகுதி மற்றும் அநேக கடற்பகுதியின் தீவுகள் யாவும் முற்றிலுமாய் கவனிக்கப்படாமலேயே இருக்கின்றன."

போதகர் ஜேம்ஸ் ஜான்ஸ்டன் எஃப்.எஸ்.எஸ். என்பவர் புரட்டஸ்டன்ட் மிஷனரிகளின் நூற்றாண்டு என்றதொரு கைப்பிரதி

மூலம் கீழ்கண்ட புள்ளி விபரத்தை தருகிறார். அது கிறிஸ்தவ உலகை திகைப்படையச் செய்ய போதுமான அச்சுறுத்தல் என்று கூறப்படுகிறது. அந்த துண்டு பிரசுரத்தின் சாராம்சம் : (1) கடந்த நூற்றாண்டில் புராட்டஸ்டன்ட்கள் மூன்று மில்-யன் பேரை புறமதத்தி-ருந்து மதம் மாற்றி வெற்றி கண்டிருக்கின்றனர். அதே சமயம், இதே காலகட்டத்தில் குறைந்தது இருநூறு மில்-யன் பேர் புறமதத்தவரின் எண்ணிக்கை பெருகியிருக்கின்றனர். (2) இந்த மக்கள் தொகை ஏற்றமானது புறஜாதிகளின் இயல்பான மக்கள் தொகை பெருக்கத்தால் மட்டும் ஏற்படவில்லை. ஆனால் உண்மையில் பிரம்ம, புத்த, முகமதிய மதத்திற்கு புரட்டஸ்டன்ட் கிறிஸ்தவ சபை மாற்றினதைக் காட்டிலும் எண்ணிலடங்காதவர் இவர்கள் கொள்கைகளுக்கு மாறிவிட்டனர். ஆகவே கிறிஸ்தவ மதத்துக்கு மாறுவதனால், இந்து மதம் இழக்கும் ஒவ்வொருவருக்கும் பதிலாக, ஆயிரம் இந்திய பழங்குடிகளை சம்பாதித்துவிடுகிறது. இது தொடர்ந்து நடக்கிற ஒன்றாகும். புத்தமதமானது சைனாவின் பழங்குடியினரான வடபகுதியில் இருப்பவரிடையே குறிப்பிடத்தகுந்த மதமாற்றத்தை உருவாக்கி வருகிறது. மட்டுமன்றி, அமெரிக்காவிலும், ஆஸ்திரே-யாவிலும் குடியேறும் சீனர்களை பின் தொடர்ந்து போய் அங்கு கூட சீனாவின் வினோதமான ஆலயங்களை நிறுவுகின்றது. ஆனால் இவர்கள் எல்லோரையும் விட முகமதியர்கள் அசாதாரணமானதொரு முன்னேற்றத்தை சாதித்திருக்கின்றனர். ஆப்பிரிக்காவின் குறிப்பிட்ட பகுதிகளில் இது ஆச்சரியப்படும் அளவுக்கு துரிதமாய் பரவி வருகின்றது. அதோடு இந்தியாவிலும், தீவுகள் நிறைந்த கடற்பகுதியிலும் குறைவான அளவில் ஆனால் படுவேகத்தில் பரவுகின்றது. இந்தவித காரணங்களால் தான் அந்த கனவான் தான் கூறியதை உணர்ந்து ஒப்புக் கொள்கிறார். ஆனால், சபையானது சீக்கிரத்தில் உலகத்தை மதம் மாற்றிவிடும் என்று உறுதியுடன் கூறும் விமர்சனத்தை கேட்டு அமைதியை கடைபிடிக்க முயற்சிக்கிறார். மேலும் இந்த முழு உலகத்துக்கும் சுவிசேஷம் சொல்லவும், அனைத்து முறைமைகளையும் மாற்றவும் போதுமான அளவுக்கு பணமும், மனித பலமும் புராட்டஸ்டன்ட் சபைகளிடையே இருக்கிறது என்பதை இவர் உறுதியுடன் கூறுகிறார். இதே காரியத்தை குறித்து



மெத்தடிஸ்ட் டைம்ஸ் மிகவும் பெருமையாய் கூறுகிறதாவது :

"இதுவரை நாம் சுருக்கமாய் கூறிய அச்சம் தரும் உண்மைகளை குறித்து எந்த மனிதனும் ஆச்சரியப்படத் தேவையில்லை.... கடந்த நூறு ஆண்டுகளின் நிகழ்வுகளை தேவன் ஒழுங்குபடுத்தியிருக்கிறார். அதன்படி கர்த்தருடைய நாமத்தினால் இந்த முழுஉலகத்தையும் மிக எளிதாக ஜெயம் கொள்ள இயலும். நாம் ஒருவேளை மனித தேவைகளில் முக்கியமான துணிச்சலான கொள்கை மற்றும் ஏராளமான பணம் இவைகளை கையாண்டிருக்க வேண்டும்."

மற்றொரு சிந்தனையாளர் கூறுகிறார்: "சபையோரின் வருமானத்தில் பத்தில் ஒரு பாகம் நமக்கு கிடைக்குமாயின் அது இந்த சுவிசேஷ ஊழியத்தை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் செய்ய போதுமானதாக இருக்கும் அல்லது வெளிநாட்டின் ஊழியங்களுக்கு, உள்நாட்டு சொந்த செலவுகள் போக இருக்கும் வருடாந்திர சேமிப்பில் பத்தில் ஒரு பாகம் கிடைத்தாலும் கூட 12,000 மிஷினரிகள் ஒரே நேரத்தில் களத்தில் இறக்கிவிடலாம்."

ஆம், பணம் ஒன்றே அத்தியாவசியமானதாக இருக்கிறது. ஒருவேளை இந்த பெயர் சபைகள் தன்னைத்தான் வெறுத்து அதன் விளைவாய் சபையோரின் மாத வருமானத்தில் தசமபாகத்தையோ அல்லது அவர்களது வருடாந்திர சேமிப்பில் தசம பாகத்தையோ கொடுக்கும்படி செய்யப்பட்டால், அப்போது தான் உலகத்தின் ரட்சிப்பு ஆரம்பிக்கும் என்று இவர்கள் இன்னும் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பார்கள். ஆனால், இது தவறுதலான ஒரு நம்பிக்கையாகவே இருக்கும். சபைகளில் இருக்கும் இந்த மோசமான உலக சிந்தையை மேற்கொள்வதைக் காட்டிலும், புறமதத்தவரை கிறிஸ்தவத்துக்கு மாற்றுவது மிகவும் எளிதான காரியமே.

ஒருவேளை இந்த 12,000 மிஷினரிகள் வெளி தேசங்களில் இப்போதே பணியமர்த்தப்பட்டாலும், தங்கள் சொந்த தேசத்தில் சொந்த சகோதரர்களிடத்தில் அனுப்பப்படுவது இன்னும் வெற்றிகரமானதாக இருக்காதா? கிறிஸ்டியன் ஸ்டேன்டர்ட் என்ற பத்திரிகையில் மிகவும் பிரபலமான புரட்டஸ்டன்ட் குருவான போதகர். டி. டிவிட் டால்மேஜ் வெளியிட்ட ஒரு அறிக்கை :

"இந்த தேசத்தில் சபை ஊழியங்கள் மிகவும் சிறப்பாய் இருக்கிறது. நம்மிடம் 60,000 ஊழியர்கள் இருக்கிறார்கள். நம்மிடம் விலையுயர்ந்த இசைக்கருவிகள் உண்டு. நம்மிடம் பிரபலமான ஞாயிறு பாடசாலைகள் உண்டு. இவையாவும் இருந்தும் கூட ஒரு வருடத்தில் சராசரி இரண்டிற்கும் குறைவானவர்களே, கடந்த 25 ஆண்டுகளில் நம் நாட்டு சபைகளில் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள் என்பது நான் உங்களுக்கு கொடுக்கும் குறிப்பிடத்தக்கதொரு புள்ளிவிவரம் ஆகும்.

"சராசரி நான்கு அல்லது ஐந்து இறப்பு நமது சபைகளில் காணப்படுகிறது. இந்த வேகத்தில் போனால், இந்த உலகை எவ்வளவு சீக்கிரத்தில் தேவனிடத்தில் கொண்டு வரமுடியும்? இரண்டு பேரை சம்பாதித்து நான்கு பேரை இழக்கிறோம். நித்தியபிதாவே! இது எப்படி ஆகுமோ? மிகவும் எளிமையாய் உங்களுக்கு சொல்வதானால், இங்குமங்குமாய் கிறிஸ்தவ வீரர்களின் படை முன்னேறி செல்கிறது. சபையோ காளை பந்தயத்தின் படுபயங்கரமான தோல்விக்குள் கிடக்கிறது."

கொஞ்சநாட்களுக்கு முன் ஆங்கில சபையைச் சேர்ந்த கேனன் டெய்லர் என்பவர், கிறிஸ்தவ ஊழியங்கள் தோல்வியடைந்ததா? என்ற கேள்வியை விவாதித்தார். அந்த செய்தியானது ஆங்கில சபை கூட்டத்தின் முன் வாசிக்கப்பட்டது. இதில் அவர் கூறியபடி முகமதிய மதம் ஒன்று மட்டுமே கிறிஸ்தவ மதத்துக்கு இணையானது மட்டும் அல்ல, அது ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் அநேக ஜனங்களுக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. ஆகவே, அது போகும் முன்னேற்ற வேகத்தைப் பார்த்தால் கிறிஸ்தவ மதம் ஒருபோதும் புறமதத்தை மிஞ்சிவிட முடியும் என்று நம்பவே முடியாது. ஒரு வருடத்தில் ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் இறப்பை விட பிறப்பு எண்ணிக்கை பதினொன்று மில்-யன் அதிகமாக உள்ளது. அதில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 60,000மாக கூடுகிறது. புறமத மக்களை மிஞ்ச 183 வருடங்கள் தேவைப்படும். மேலும் அவர் கூறுகிறார்:

"ஞாயிறு பாடசாலை பிள்ளைகளுடைய சேமிப்பு பணத்தை, ஏழை புறமதத்தவரை மதம் மாற்றுகிறதான வெளிவேஷத்துக்கு



பலவந்தமாய் சேகரித்து, அதனை வருடத்தில் 12,000 பவுண்ட் பணத்தை எந்த பலனும் அளிக்காத தேசங்களில் அதுவும் புறமதத்தாரே இல்லாத இடங்களில் செலவு செய்கின்றனர். இது என்னைப் பொறுத்தவரை ஒரு குற்றமே. அதுவும் பாசாங்கு செய்து பணம் பெறுவதென்பது குற்றமே."

ஊழியத்தின் தோல்விக்கான காரணத்தை கூறும்போது, இதில் பிரிவினைகள் ஆரம்பித்துவிட்டதும், மிஷினரிகள் தங்கள் பணியின் மீது முழு அர்ப்பணிப்பு இல்லாமையும் அதோடு இவர்கள் ஐரோப்பிய ஆடம்பர சௌகரியங்களை விட மேலான நிலையில் இளவரசர்களைப் போல் வாழும் குறிக்கோளுடன் இருப்பதுமே ஆகும் என்கிறார் திரு. டெய்லர் என்பவர். அவர் முப்பத்து நான்கு வருடம் மிஷினரி ஊழியம் செய்யும் டாக்டர் லெக்கி என்பவரைக் குறித்து கூறுகிறதாவது :

"கிறிஸ்தவ மதமானது தனக்குள்ளேயே இருக்கும் கசப்பான உள் விரோதங்களால் பாழாக்கப்பட்டிருப்பதையும், அதோடு அங்கிருக்கும் உள்நாட்டு பிரஜைகளோடு இணைந்து மது அருந்துதல், விபச்சாரம் போன்ற ஒழுக்கக்கேடுகளில் ஈடுபடுவதுமே மதம் மாற்றம் செய்வதற்கு நமக்கு இத்தனை தாமதப்படுகிறது என்பதாக அவர் நினைக்கிறார். பிஷப் ஸ்டீரீ என்பவர் மிஷினரிகளிடையே உள்ள சச்சரவு மற்றும் சமுதாயத்தின் போட்டி மனப்பான்மை ஆகிய இரண்டு பெரியத் தடைகளே வெற்றிக்கு இடைஞ்சலாக உள்ளது என்று நினைக்கிறார்."

ஆனால் கேனன் டெய்லர் மற்றும் இன்னும் அநேகரின் நம்பிக்கையானது, மாபெரும் மதபேரவையில் ஒ-க்கப்பட்டபோது மௌனமான விமர்சனம் ஒன்று நமக்கு வந்தது. அது இந்த புறமதங்கள் கிறிஸ்தவ மதத்தைக் காட்டிலும் நல்லதாகவும், தங்கள் சொந்த தேசங்களின் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமானதாகவும் இருக்கிறது என்பதே. காலம் சென்ற பிஷப் ஃபோஸ்டர் என்பவரது கருத்துப்படி வித்தியாசமானதொரு ஆலோசனை நமக்கு வருகிறது. இவர் மெத்தடிஸ்ட் எபிஸ்கோபல் சபையை சேர்ந்தவர். ஒரு வருடத்திற்கு முன் உலக சுற்றுபயணத்தை முடித்து திரும்பியவுடன் கீழ்கண்டதொரு விளக்கமான வர்ணணையை புறமதங்களின்

இருளில் இவ்வுலகத்தின் பரிதாபமான நிலைமையை குறித்து கூறுகிறார்:

"நீங்கள் இதுவரை கண்டிராத அளவுக்கு ஏழ்மை, சீரழிவு இவைகள் ஒதுக்குப்புறமான இடங்களின் துர்பாக்கியமான நிலையை புரிந்து கொள்வது கடினமே. இந்த அவலமான காரியங்கள், அங்கிருந்து நீங்கள் கடந்து போனபிறகும் கூட உங்கள் மனதை படுபயங்கரமாய் சுற்றி சுற்றி வரும். அந்த துயர்மிகு அசிங்கமான இருப்பிடமும், பசி பட்டினியால் மெ-ந்த, அழுக்கான தோற்றமும் ஆகிய மேற்கூறிய யாவையும் ஒன்று திரட்டி ஒரு காட்சியை உருவாக்கிக் கொள்ளுங்கள். இதற்கு மாறாக ஒரு கடுமையான இருளை அல்லது குறைந்த வெளிச்சமிட்டு, இதனை இந்த பூமியின் ஒரு பாதி பகுதி மீது தொங்கவிடவும். அப்படி செய்வது கூட உண்மை நிலையை சரியாக விளக்குவதாகாது. இந்த சூழ்நிலை ஒரு நம்பிக்கையற்ற தொடர்ச்சி என்றே புரிந்துகொள்ள வேண்டும். மேலும் அது எந்த நம்பிக்கையோ அல்லது எந்தவித எதிர்பார்ப்போ கூட இருக்கமுடியாத ஒரு நிலையும் கூட. இதுவே புறமதத்தவரின் ஏழ்மை நிலை. நீங்கள் வறுமை என்ன என்பதையே பார்த்ததே கிடையாது. இது உங்களுக்கு அர்த்தம் புரியாத ஒரு வார்த்தையாகும். நீங்கள் அழைக்கும் வறுமை என்பது ஆஸ்தியும், ஆடம்பரமுமே. இது ஏதோ ஒரு சமயத்தில் வந்து போவதோ, முடியும் தருவாயில் இருக்கும் ஒன்றோ அல்லது ஏதோ அவல நிலை உள்ள பிரத்தியோகமான சில இடங்களில் மட்டும் காணப்படுவது என்றோ நினைக்கவேண்டாம். இது பிரபஞ்சம் முழுவதும் பரவி இருக்கும் ஒரு நிலையே. இது பசி, நிர்வாணம், மிருகத்தனமான செயல் ஆகியவற்றின் ஒட்டுமொத்த உருவம். நாளை இந்த நிலை சற்று குறையும் என்ற எதிர்பார்ப்பும் முற்றிலும் கிடையாது. ஆப்பிரிக்காவையும், ஆசியாவையும் இந்த நிலையில் வைத்து பார்க்கும் போது இந்த காட்சியை ஆண், பெண் குழந்தைகளால் அதுவும் திரளான கூட்டமாய், உங்கள் பெரும் நகரங்கள், பட்டணங்கள், கிராமங்கள், புறநகர் பகுதிகள் யாவற்றின் மக்கள் தொகையைக் காட்டிலும் இருபது மடங்கு அதிகமான எண்ணிக்கையை அதில் சேருங்கள். உங்கள் ஒருவருக்கு அவர்கள் இருபது பேர் என்ற கணக்கில் பார்த்தாலும் கூட அதன் உண்மை நிலையை விளக்க நான் தவறிவிட்டேன் என்றே கூறலாம்.

"இப்போது மேலும் தேவன் அற்றதொரு,



நம்பிக்கையற்றதொரு நிலையுடன் இந்த உலகில் மிருகங்களைப் போலவும், எதிர்கால நம்பிக்கை கொஞ்சமும் இன்றி வாழும் இந்த பரிதாபமான திரளான கூட்டத்தைக் குறித்து சிந்தித்து பாருங்கள். இவர்களும் கூட நாம் பெற்றிருக்கும் அதே மனுஷீகத் தன்மையை பெற்றிருக்கிறார்கள் என்பதை அனுசரித்து இவ்வித காட்சியை ஒப்பிட்டு பாருங்கள். இத்தனை இலட்சக்கணக்கான இதயங்களில் எவற்றிலும் கூட எந்த மனுஷீக எதிர்பார்ப்புகளுமே கிடையாது. மேலும், இவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டு, எந்தவித மேன்மை அடையவும் முடியாது. மேலும் இத்தனை இழிவான அழிவின் பிடியில் இருக்கும் இந்த பகுதியானது நாம் வசிக்கும் பூமிக்கு சரியானதாகவோ அல்லது நம்மைவிட மிஞ்சிவிடவும் கூடும் என்ற அளவுக்கு மாற்றப்பட அவர்களுக்கு நாம் என்னத்தை கொடுக்கக்கூடும். நட்சத்திரமற்ற ஒரு வானத்தை வரைந்து, அதை இருட்டில் மாட்டி வையுங்கள். மலைகளை நீண்ட துணியால் மூடி, நெருங்கமுடியாத மரங்களடர்ந்த நீண்ட இருண்ட பாதையுடன், எல்லா நிலப்பகுதியையும், கடற்கரையையும் நீண்ட திரையால் மூடி, மிகவும் மோசமான தெளிவற்ற நிலையை பசியும் கவலை தோய்ந்த முகத்துடனான ஆணும், துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் பெண்கள் மற்றும் எந்த நம்பிக்கையும் அற்ற பிள்ளைகளால் நிரம்பவும், இது தான் புறமத உலகத்தின் தோற்றம். பழங்கால கவிஞர் இந்த மக்களை ஒரு தரிசனத்தில் கண்டு இப்படியாய் எழுதுகிறார் :'மரணத்தின் நிழ-ல், எல்லையில் அமர்ந்திருக்கும் இப்படிப்பட்டவர்களுக்கு' வெளிச்சம் இன்னும் வரவில்லை. ஆகவே அங்கேயே இன்னும் அமர்ந்திருக்கின்றனர். அந்த நீண்ட, நெடிய இரவின் வழியாய் காத்திருந்து காலைநேர விடியலுக்காய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

"இந்த மரணத்தின் நிழ-ல், எல்லையில் ஓராயிரம் மில்-யன் மக்கள் வாழ்கின்றனர். இதே பகுதியில் அவர்களது மூதாதையர்கள் இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தனர். அங்கேயே இவர்களும் இன்னும் காத்திருந்து, கடுமையான வறுமையிலேயே காலத்தை கடத்திக் கொண்டு இருக்கின்றனர். ஆனால் மிகக்குறைந்த அத்தியாவசியத் தேவைகளைக் கூட சந்திக்க முடியாதபடி உள்ளனர். ஆயிரக்கணக்கானோர் வேர்களையும், சிறு செடிகளையும் மட்டுமே

உண்டு உயிர்வாழ்கின்றனர். இன்னும் அநேக காரியங்களை கூறமுடியும். ஆனால் கொஞ்சம் மட்டுமே கூறியிருக்கிறோம். அரசாங்கம் மற்றும் சமூகத்துறைகளில் தொழில் பார்ப்பவர்கள் இவர்களது உழைப்பின் ஊதியத்தை திருடிக் கொண்டு உழைப்புக்கேற்ற கூ-யைக் கூட அதாவது ஒரு நாளைக்கு 3 செண்ட்டு கூட அவர்களுக்கு தருவதில்லை. ஒரு மிருகத்தின் தேவைகளுக்கும் குறைவானதைக் கூட பெறமுடிவதில்லை. திரளானவர்கள் பாதி பட்டினியும், பாதி நிர்வாணமுமாக வசதியற்ற இடங்களில் வசிக்கின்றனர். இவர்களது சர்வாதிகார முதலாளிகளின் மிருகத்தனமான அதிகாரத்தால் மனுஷீகத்தன்மையின் எந்த சாயலுமே தெரியாத அளவுக்கு இவர்களை அடிமைப்படுத்தி ஊமைத் தன்மையும், குருட்டுத் தனமான ஏக்கப் பெருமூச்சுமே இவர்களுக்கு உரியதாக்கி விடுகின்றன. இவர்களுக்கு எதைக் குறித்தும் விவரம் தெரியாது. இவர்களே நமது சகோதர சகோதரிகளாகிய புறமத ஆண், பெண்கள்.

"இந்த விகாரமான, கொடூரமான காட்சியின் தோற்றம், நம்மை உறையவைத்துவிடும். நமது கவலையற்ற சிரத்தையற்ற கண்ணோட்டத்துடன் பார்த்தோமாகில், அவர்கள் முற்றிலுமாய் புறக்கணிக்கப்பட்டவர்களே. நம்மைவிட்டு அவர்கள் வெகுதூரம் இருக்கின்றார்கள். நாமும்கூட நமது ஆடம்பர கேளிக்கைகளில் அதிகமாய் மூழ்கிவிட்ட படியால் இவர்களை பார்க்கவோ அல்லது இவர்களை குறித்து சிந்திக்கவோ கூட தவறிவிட்டோம். இவையாவும் இந்த காட்சியில் தெளிவாய் தெரியவில்லை. இவர்களைக் குறித்து இனியும் நாம் யோசிக்காமல் இருந்தால், நமக்கு கிடைத்திருக்கும் இந்த வெளிச்சமானது நம்மை நிஜத்துக்கு நேராய் அழைத்துச் செல்லாமல், கற்பனையான மாய உலகுக்கே வழிகாட்டுகிறதாக இருக்கும். நாம் மாபெரும் நகரங்களையும், சக்கரவர்த்திகள் மற்றும் ராஜாக்களின் பிரமாண்டங்களையும், ஆடம்பர ஆரவாரமான ராஜசபைகளையும், அழகுடைய இயற்கை காட்சிகள் ஆகியவைகளையே பார்க்கிறோம். இவையாவும் கற்பனை திறனால் அழகூட்டப்பட்டு, அநேக பிரயாணிகள் அதில் தங்கள் பணத்தை செலவிடும்படி செய்கின்றன. அந்த காட்சியினால் நாம் மிகவும் கவரப்பட்டு மகிழ்கிறோம். ஆனால் இந்த



ஜனங்களுடைய வீடுகளை, அவர்களது மத நிலையினை ஆழ்ந்து பார்ப்போமாகில், கோயில்களும், கற்பனை வளம் நிறைந்த அழகிய வண்ண ஓவியங்களும், கவர்ச்சியான உள்நாட்டு சம்பவங்கள் ஆகியவைகளால் கவரப்பட்டுவிடுகிறோம். நாம் கூறுகிறபடி புற உலகமானது அத்தனை மோசமானதாக ஒன்றும் இல்லை. அவர்களுக்கும் அவர்களது சொந்த மதம் உண்டு. அவர்களுக்கும் சொந்த சந்தோஷங்களும் உண்டு. இந்த சமாதானப்படக்கூடிய ஒரு கருத்தோடு உலகத்தை குறித்த வர்ணனையை நாம் முடித்துக் கொள்வோம். ஓ, என்ன ஒரு நாசமுண்டாக்கக்கூடிய மாயத் தோற்றம். உண்மை காட்சியானது நிழலாக நிற்கிறது. மிகவும் பரிதாபமான, தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கும், பாவம் நிறைந்த கோடிக்கணக்கானோர் தேவன் அற்றவராகவும், எந்த நம்பிக்கை இல்லாதவரும், வீடுகள் இன்றி, கொடுமைக்குள்ளாகி, நண்பர்களின்றி விடிவற்ற இரவின் வாரிசுகளாக வாழ்வுக்கும், சாவுக்கும் இடையிலான நம்பிக்கையற்ற மங்கலான ஒளியில் தண்டிக்கப்பட்டு இருக்கும் இவர்கள் கவனிக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் இந்த மரண நிழ-ல் வழுவிச் சென்று கொண்டு, பட்டினியால் மெ-ந்து, பசியிலும், நிர்வாணத்திலும், நம்பிக்கையின்றி, மிருகங்களைப் போல இருக்கின்றனர். அவர்கள் ஏதோ சிறு எண்ணிக்கையினர் அல்ல. நடைபாதைகளில் சுருண்டு கொண்டு, எதற்கும் உபயோகமற்றவர்களாய் தங்களை எண்ணி தங்கள் சகமனிதர் முன் தங்களை மறைத்துக்கொண்டு துரதிருஷ்டசா-களாய் வாழ்கின்றனர். அப்படிப்பட்டவர் கோடி, கோடியானோர், இந்த அழகான உலகில், தெருக்களையும், பிரம்மாண்டமான நகர குடியிருப்புகளில் அலை மோதிக் கொண்டு, தங்களைப் போன்ற கோடிக்கணக்கானோரை பார்க்கும்படி நமக்கு விண்ணப்பம் விடுத்துக் கொண்டிருக்கின்றனர். அங்கே அவர்களுடைய முன்னோர்கள் எந்தவித நம்பிக்கையும் இன்றி வாழ்ந்து மரித்துவிட்டனர். அங்கேயே அவர்களுடைய பிள்ளைகள் அதே சூழ்நிலையுடன் பிறந்திருக்கின்றனர். அங்கே பிறப்போ, இறப்போ அவர்களுடைய ஆத்துமாவுக்காக எந்த மனிதனும் கவலைப்படுவது இல்லை.

"அதுதான் புறசமயத்தாரின் உலகம். அங்கு மாபெரும்

நகரங்கள், மாபெரும் கோயில்கள், பிரம்மாண்டமான கல்லறை மாடங்கள், தங்களை பொன் ஆபரணங்கள் முழுவதும் அலங்கரித்துக் கொண்டுள்ள அதிக செல்வாக்கும், வசதியும் உள்ள சில பணக்கார கொடுங்கோலர்களும் அவர்களுக்குள் உண்டு. ஆனால் இந்த கோடிக்கணக்கானோர் பயத்திலும், பட்டினியிலும் கூனி போயிருக்கும் துன்ப இரவில் இருக்கிறார்கள். தங்களது கவலை தோய்ந்த வீடுகளிலும், கொடூரமான விடிவற்ற நிலையிலும் அவர்களை நான் பார்த்திருக்கிறேன். அதுவும் போஸ்ஃபோரசி-ருந்து (Bosphorus) கங்கை வரையில் அவர்களது கோயில்களிலும், விழாக்களிலும், விகாரமான விக்கிரகங்கள், கற்சிலைகள் மற்றும் குரங்கு தெய்வம் ஆகியவைகளின் முன்பு தரைமட்டும் வீழ்ந்து வணங்குகின்றனர். அதையும் பார்த்திருக்கிறேன். நெடுஞ்சாலைகளிலும், தெருக்களிலும் ஊர்வலமாய் ஒளியிழந்த முகங்களும், நம்பிக்கையற்ற, பசியால் வாடும் முகங்களும் நினைவை விட்டு என்றுமே நீங்காத உருவங்களாய் நினைவில் பதிந்துவிட்டன.

“இந்த புறசமயத்தாரின் உலகில் மனிதருக்கு எந்த நம்பிக்கையுமே கிடையாது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நமக்கென்று கொடுப்பதற்கு அவர்களிடத்தில் எந்த ஒரு சிறு ஒளியோ, ஒரு சிறு துளியோ இல்லை. இது மனுக்குலத்தின் கழுத்தில் கனத்த ஒரு பாரமாகத் தொங்குவதுடன், இவர்களை இன்னும் ஆழமான இருளுக்குள்ளும் மரணத்துக்குள்ளும் மூழ்கடிக்கிறது. இதன் ஒவ்வொரு மூச்சும், தொற்றிப் பரவுகிறதாய் இருக்கிறது. இதன் ஸ்பரிசம் மரணம். அதன் பேயைப் போன்றதொரு தோற்றம் ஒரு இருண்ட பகுதியில் நின்று நம்மை அச்சுறுத்துவது போல அதன் தோற்றம் நம்மை திகைக்கச் செய்கிறதாய் இருக்கிறது. இதேநிலை உச்சகட்டத்தில் நூற்றாண்டு காலமாய் ஆதிக்கம் செலுத்தி, காலத்தை இருளடையச் செய்கிறது.

“இந்த எண்ணிலடங்கா கோடிக்கணக்கானோர் வரப்போகிற யுகத்திலாவது மீட்கப்பட இயலுமா என்று நான் என் கேள்வியை எழுப்பவில்லை. சுவிசேஷம் கூறப்படுமாயின் இவர்களது நிலைமை



முன்னேற்றத்தைக் காணக்கூடும் என்றோ, அல்லது அதே திசையில் வாய்ப்புக்கள் அதிகம் இருக்கும் என்றோ நான் உறுதியாய் கூறவில்லை. கூடுமானவரை இந்த சுவிசேஷம் இல்லாமலேயே அப்படியே ரட்சிக்கப்படக்கூடும். நான் விவாதிக்க வந்த பிரச்சனையில் இந்த கேள்விக்கே இடமில்லை. நான் கூறுவது இந்த உலகத்தின் கண்ணோட்டம், இப்படி நான் குறிப்பிடுவது காலத்தை குறித்த ஒரு கண்ணோட்டமே அன்றி நித்திய வாழ்வை குறித்து அல்ல. இவர்கள் புறமதத்தவராய் இருந்துவிட்டுப் போகட்டும் என்ற பயங்கரமான ஒரு எண்ணம் என் மனதில் ஏற்பட்டு விடுமாயின், இப்படிப்பட்ட தேவனைக் குறித்து சொல்லப்படும் சுவிசேஷத்தை நான் இவர்களிடத்திற்கு அனுப்பமாட்டேன். இந்த அச்சமூட்டும் எண்ணம் ஒன்று மட்டுமே இந்த உலகத்துக்குண்டான எல்லா நம்பிக்கைகளையும் முடக்கிவிடக்கூடும். மேலும், நித்தியத்தை ஒரு சிறைக்குள் அடைத்துவிடும். யார் தான் ரட்சிக்கப்படக்கூடும் என்ற வித்தியாசமே இல்லாமல் போய்விடும். இப்படிப்பட்ட அவமதிப்பான, வெட்கக்கேடான செயலை அனுமதிக்கக்கூடிய ஆட்சியை செய்யும் தெய்வத்துடன் எந்த சாதாரண மனிதனாலும், பரலோகத்தைக் கூட சந்தோஷமாய் அனுபவிக்க இயலாது. ஆகவே, இந்த பூலோகத்தின் மேல் தேவன் ஒருவர் உண்டு. அவர் நம்மைப் போல் குற்றமும் உடையவர் அல்ல. மரித்தோரையும், உயிருள்ளோரையும், இன்னும் பிறக்கப் போகும் புறமதத்தவராகிய ஆயிரக்கணக்கானோரையும் ஒருவரும் தப்பிக்க முடியாதபடி மீளா தண்டனைக்கு நியாயம் தீர்ப்பார். அதே சமயம் இவர் இந்த உலகத்தை ஒரு மிகப்பெரிய பயங்கரமான இடமாக மாற்றி, அதில் படுபயங்கரமான அச்சத்தை உருவாக்கி அதி-ருந்து விடிவே இல்லாமல் செய்துவிடுவார் என்று தேவனைக் குறித்து அவர்களுக்கு சொல்வதின் மூலம் நீங்கள் அவரை அவர்கள் எப்போதுமே வணங்க இயலாதபடி செய்கிறீர்கள். அவர்கள் தங்களது தலைவராகிய பிசாசுகளை மட்டுமே வணங்குவார்கள்.”

மேலும் பிஷப்பானவர் கூறும்போது கூட உலகத்தின் ஜனத்தொகை 1,450,000,000 ஆக இருப்பதாய் கணக்கிட்டபோது 1,100,000,000 பேர் புறமதத்தை சார்ந்தவர்களாக இருந்தனர். ஆகவே, (ஆம் உண்மையில் யாவருமே) பெயர் கிறிஸ்தவர்கள் யாவருமே,

ஒன்று புறமத்தவராகவோ அல்லது அந்திகிறிஸ்துவைச் சார்ந்தவராகவோ இருந்தனர். ஆகவே சபை பதினெட்டு நூற்றாண்டுகளில் இந்த உலகத்தை மதம் மாறச் செய்வதில் தோல்வியே கண்டிருக்கிறது. மேலும் கிறிஸ்துவின் மீதான விசுவாசம் இல்லாமலேயே இந்த கோடிக்கணக்கான புறமதத்தவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்று, சபையானது இவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபடுவதி-ருந்து விடுபட அவர் ஆலோசனைக் கூறினார். மனிதனுடைய இந்த கேடான தற்கால உபத்திரவத்தின் பொறுப்பி-ருந்து தேவனை விடுவித்துவிடுவதைப் போல அவர் கூறுகிறார். "தேவன் தனக்குண்டான வல்லமையைக் கொண்டு மிகச்சிறந்ததையே செய்து கொண்டிருக்கிறார்."

சர்ச் டைம்ஸ் என்ற பத்திரிக்கையில் சில வருடங்களுக்கு முன் நியூசிலாந்தின் மவுரி என்ற பழங்குடியினர் ஒருவர் கூறியதி-ருந்து சில முக்கியப் பகுதிகளை பிரசுரித்திருக்கிறது. இந்த உலகத்தை முடிந்த அளவுக்காவது மேன்மைபடுத்துவதில் சபையின் தோல்விக்கான காரணத்தை குறித்து இவர் கூறியது. உண்மையில் இது ஒரு நியூசிலாந்து பத்திரிகையில் வெளியானதே :

"கிறிஸ்தவ சபையின் பிஷப்பால் நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தை குறித்த ஒரு அறிக்கையை (நியூசிலாந்து பழங்குடியினரிடையே) சில நாட்களுக்கு முன் அளித்தீர்கள். நான் அந்த கூட்டத்தில் கலந்துகொண்டேன். பிஷப் அவர்களால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்படி எனக்கு ஒரு சந்தர்ப்பம் தரும்படி உங்களை ஆவலுடன் கேட்கிறேன். அவர் கேட்டது, "என் பகுதியில் மவுரி மக்களிடையே கிறிஸ்தவ நம்பிக்கையின் அனல் ஏன் இவ்வளவு தணிந்து காணப்படுகிறது?" நான் நம்பும் காரணத்தை நான் உங்களுக்கு பதிலாக அளிக்கிறேன். ஐரோப்பியராகிய நீங்கள் உங்கள் மதத்தை நடத்தும் அசாதாரணமான முறையைக் கண்டு மவுரியராகிய எங்கள் மனதில் குழப்பமும், தடுமாற்றமும் அடைந்துள்ளோம். உங்களில் ஒருவராகிலும் அதில் ஏதாவது இருக்கிறதா? அல்லது இல்லையா? என்று நிச்சயம் உடையவர்களாய்த் தெரியவில்லை. முற்காலத்தில் மிஷினரிகள் விடுத்த அழைப்புக்கு அதை பொய் என்று எங்கள் முன்னோர் கருதினர். நாங்களோ அதை மெய் என்று ஏற்றுக்கொண்டோம். இது உண்மையில் தேவனுடைய வார்த்தை. இது அவரது சிருஷ்டிகளாகிய நம்மை கட்டுப்படுத்துகிறது. நாங்கள் தினமும் காலையும், மாலையும் நியூசிலாந்தின் கிராமங்களிலும், மூலை முடுக்குகளிலும் சிருஷ்டிகருக்கு ஆராதனை செய்கிறோம். ஏழாம் நாளை பரிசுத்தமாய் அனுசரித்து, தெய்வீக கட்டளைக்கு கீழ்ப்படிந்து அதன் மீதுள்ள மரியாதை நிமித்தமாய் எங்கள் எல்லா வேலைகளையும் தவிர்த்தோம். மேலும் இதன் காரணமாய் அடிமைத்தனத்தையும், பலதர திருமணத்தையும் ஒழித்து, இதன் மூலம் எங்கள் சமூக அமைப்புகளை முற்றிலும் குலைத்து, எங்கள் சீமான்களை ஏழ்மைக்கு இறக்கி, மனித உறவுகளின் மிக மென்மையான இணைப்புகளை பிரிக்க கட்டாயப்படுத்தப்பட்டோம். நாங்கள் எங்களுடைய பிள்ளைகளுக்கு இயேசுவினால் வெளியான தேவனை குறித்து அறியவும், அவருக்கு கீழ்ப்படியவும் கற்றுத்தர தொடங்கும் வேளையில், அதிகமான எண்ணிக்கையில் ஐரோப்பியர்கள் எங்கள் தேசத்திற்கு வந்தனர். அவர்கள் எங்கள் கிராமங்களுக்கு வருகை தந்ததுடன், பார்ப்பதற்கு மிகுந்த நட்புறவோடும் இருந்தார்கள். ஆனால் புதியதாய் பயின்று கொண்டிருந்த நாங்கள் வேதத்துக்கு கொடுக்கும் மரியாதையைக் கூட இவர்கள் கொடுக்கவில்லை என்பதை நாங்கள் கவனித்தோம். ரோமன் கத்தோ-க்கர்கள் வந்து, நாங்கள் எங்களை அவர்களுடன் இணைத்துக் கொள்ளாவிடில் எங்கள் ஆத்துமாக்களை இழக்கநேரிடும் என்றும் இவர்களுக்கு மட்டுமே சரியான விளக்கம் கொடுக்கத்தெரியும் என்றும் கூறினர். அவர்களைத் தொடர்ந்து பேப்டிஸ்டி சபையார் வந்து நாங்கள் எங்கள் பிள்ளைகளை ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதை ஏளனம் செய்தனர். மேலும், நாங்கள் முழுக்கு ஞானஸ்நானம் பெறாத வரையில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவராகவே இருக்க முடியாது என்றும் கூறிவிட்டனர். அதன்பிறகு வந்த பிரிஸ்பிடேரியன்ஸ் ஒரு பிஷப் நிர்வாகமானது வேதத்துக்கு உகந்ததாக இல்லை என்று கூறினர். இது பிஷப் செல்வின் அவர்களைப் பார்த்து, இந்த கூற்று சரியானதே என்று ஒத்துக்கொள்ளும் வகையில் அவரது ஆராதனை அர்த்தமற்றதாக இருந்தது. கடைசியாக ப்ளைமவுத் சகோதரர்கள்

வந்தனர். அவர்கள் கூறியது என்னவெனில், இயேசுவானவர் வெளிப்படையான சபையையோ அல்லது ஊழியத்தையோ நிறுவவே இல்லை. ஆனால், ஒவ்வொருவருமே தங்களுக்குத் தாங்களே ஊழியம் செய்பவராகவும், தங்களுக்கான சொந்த பிராமணங்களை உடைவராகவும் இருக்கவேண்டும் என்று கூறினர்.

“மேலும் பெரும்பாலான ஐரோப்பியர்களின் கடவுளுக்கு உகந்ததல்லாத உதாரணங்களாலும், பல்வேறு ஊழியர்களின் முரண்பாடான போதனைகளாலும் நாங்கள் குழப்படைந்திருக்கும் வேளையில், அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மேலும் குழப்பமடைந்தோம். ஏனெனில், வேதத்தில் அடங்கியுள்ள நெறிமுறை சட்டதிட்டங்களுக்கு கீழ்படியவும் ஒப்புக் கொண்டு நாங்கள் ஐரோப்பியரை விட மிகுதியான எண்ணிக்கையிலும் , அதிக வ-மையிலும் இருந்தோம். நாங்கள் அதிகாரமற்றவர்களாய் மாறிவிட்டபோது அவர்கள் எங்களிடம் செய்த உடன்படிக்கைகளை மீறுவதற்கு நாங்கள் எந்தவித தயக்கமும் காட்டவில்லை. மேலும், பாராளுமன்றமானது, எந்த அறியாமை உள்ளவரையும், கீழ்ப்பிறப்புடையவரையும் அங்கத்தினராக்காமல், ஐரோப்பிய கனவான்களையும் கிறிஸ்தவ ஊழியர்களையும் மட்டுமே கொண்டதாக அமைக்கப்பட்டது. அவர்கள் வேதத்தை பள்ளிகளுக்கு புறம்பே தள்ளியபோதும், பள்ளி ஆசிரியர்களிடம் நியூசிலாந்தின் குழந்தைகளுக்கு தொடர்ந்து எல்லா அறிவையும் புகட்டவும், எக்காரணத்தைக் கொண்டும், கிறிஸ்தவ மதத்தை குறித்தோ, தேவனை குறித்தோ அவரது கட்டளைகளைக் குறித்தோ கற்பிக்க வேண்டாம் என்று கூறியபோதும் நாங்கள் மிகப்பெரிய ஆச்சரியத்துக்குள்ளானோம். எனது புறமத ஆசிரியர் கண்ணுக்கு புலப்படாத வல்லமைக்கு பயந்து, மரியாதை செலுத்த கற்றுக்கொடுத்தார். மேலும் என் பெற்றோர் எங்களது ‘ஆட்டுவாஸ்’ (Atuas) தெய்வத்துக்கு கீழ்படிந்து என் வாழ்வின் ஒவ்வொரு செயலையும் ஒழுங்கு படுத்திக் கொள்ள எனக்கு கற்றுத்தந்தனர். அப்படிச் செய்யத் தவறினால் அவர்கள் என்னை தண்டிப்பார்கள். ஆனால் இந்த கிறிஸ்தவ நாட்டின் பள்ளியில் படிக்கும் எங்கள் பிள்ளைகளுக்கு போலீசாரைக் காட்டிலும் மரியாதைக்கு உரியவராக எவரையுமோ அல்லது நீதிபதிக்கு மேலாக பயப்பட வேண்டியவரையோ கற்பிக்கவில்லை.



“கிறிஸ்தவ பிஷப்பானவர் எங்களைப் பார்த்து அன்றொரு நாள் கேட்ட கேள்விக்கு நான் ஏற்கனவே கூறியபடி, அவரையே நாங்கள் முத-ல் விசுவாச அனலானது அவரது ஜனங்களுக்குள்ளேயே ஏன் மிக மெதுவாக எரிகிறது என்று திருப்பிக் கேட்கவேண்டும் என்று நினைக்கிறேன். ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைக்கு மதிப்பளித்து, ஒவ்வொருவரும் தாங்கள் வாழ்வதற்கான சட்டங்களை கற்றுக் கொள்ள வேண்டும் என்று பிறருக்கு ஆங்கிலேயர் அறிவுரை கூறுகிறார்களே, அந்த புத்தகத்தில் “வைத்தியரே உங்களை முத-ல் குணப்படுத்திக் கொள்ளுங்கள்” என்ற சரியான வார்த்தையை அவர்களுக்கே நாங்கள் கோடிட்டு காட்டவேண்டியிருக்கும்.

“படிப்பறிவில்லாத மவுரிஸ் தேவனுடைய சேவையில் அனலும் இன்றி குளிரும் இன்றி வெதுவெதுப்பாய் இருப்பதாக குறைகூறப்படக்கூடுமோ, ஏனெனில் தேவன் இருக்கிறார் என்பதை கிறிஸ்தவ உலகின் எந்த மனிதரும் நிரூபிக்க முடியாது என்று அவரால் நியமிக்கப்பட்ட ஊழியரே கூறுகின்றனரே? சில நேரங்களில் நான் எங்களது முதலாவது மவுரி மன்னரான பொட்டேட்டு போல் எங்கள் பிள்ளைகள் என்றுமே காணாத உலகில் நுழைந்து, தங்கள் சிருஷ்டிகரை அங்கு காணும் நேரம் வரும்போது, இதைவிட மேலான சந்தோஷமான வாழ்வை பெற்று ஒரு மதிப்பிற்குரிய ஆணாகவோ, பெண்ணாகவோ தங்களை வளர்த்துக்கொள்ள இன்னும் மேலான சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைக்கக்கூடும் என்று நினைக்கிறேன். ‘நீங்கள், உங்கள் மதம் என்ன என்று உணர்ந்து அதனுள் அமைதிப்பட்டுவிட்டீர்கள் என்று கூற இயலும் வரை, நான் உங்கள் மதத்தை குறித்து எந்த பகிரங்கமான அறிக்கையையும் தரமாட்டேன் என்று நான் மறுத்துவிட்டேன்,’ என்று மவுரி மன்னர் கூறுகிறார். கண்ணுக்கு புலப்படாத ஆவிக்குரிய உலகத்தின் மீதிருக்கும் எங்கள் முன்னோர்களின் நம்பிக்கையானது அதற்கு பதிலாய் நாங்கள் பெற்றுக்கொள்ளும்படியாய் கேட்டுக்கொண்ட ஐரோப்பிய மக்களின் வெளிவேஷமான நம்பிக்கையும் விட சந்தேகமின்றி எங்களுக்கு பலன் தருவதாகவே நான் நினைக்கிறேன்.

“தங்கள் டங்காட்டா மவுரி.”

கீழ்கண்ட ஒரு விஷயமானது நார்த் அமெரிக்கன் ரிவ்யூவில்

வாங் சின் ஃபூ என்ற சீன கல்விமானால் எழுதப்பட்டதின் ஒரு பகுதியாகும்ம். இவர் நியூ இங்கிலாந்து கல்லூரியின் பட்டதாரி. கிறிஸ்தவத்தை விட தன் தந்தையின் மதத்தினையே ஆர்வத்துடன் பரிந்துரைப்பதன் காரணத்தைக் கூறுகிறார் :

"புறமதத்தவனாகவே பிறந்து வளர்ந்த நான் அதன் மத கோட்பாடுகளையும், ஒழுங்குகளையுமே கற்றும், செய்தும் வந்தேன். அதன் நிமித்தம் நான் எனக்கும், வேறு அநேகருக்கும் உபயோகமுள்ளவனாயும் இருந்தேன். என் மனசாட்சி தெளிவானதாயும் எனது எதிர்கால நம்பிக்கையும் குழப்பமான சந்தேகங்களால் தெளிவுள்ளதாய் இருந்தன. ஆனால், நான் ஏறக்குறைய பதினேழு வயதானபோது உங்கள் பகட்டான கிறிஸ்தவ நாகரீகத்திற்கு நான் மாற்றப்பட்டேன். மேலும் இந்த வாழ்க்கையின் முக்கியமான பகுதியில் கிறிஸ்தவமானது அதன் கவர்ச்சி மிகுந்த தோற்றத்தின் மூலமே எனக்கு காட்சியளித்தது. நேசமிகு கிறிஸ்தவ நண்பர்கள் முக்கியமாக எனது பொருளாதார மற்றும் மத நலனில் அக்கறையுள்ளவர்களானார்கள். ஆனால் நானோ, சத்தியத்தை அறிந்து கொள்வதிலேயே மிகுந்த ஆர்வம் உள்ளவனாக இருந்தேன். அதன்பிறகு கிறிஸ்தவ ஊழியத்திற்காக என் வாழ்வை அர்ப்பணிக்க நான் தூண்டப்பட்டேன். ஆனால் இந்த மேன்மையான ஊழியத்துக்குள் நுழைவதற்கு முன் நான் போதிக்கப் போகின்ற போதனைகளை நான் முத-ல் கற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. மிகுதியான கிறிஸ்தவ பிரிவுகளும், பரலோகத்துக்குச் செல்லும் இடுக்கமான வழிக்கு தாங்களே ஏகபோக உரிமையாளர் என்று உரிமை கோருவதும் என்னை மிகவும் தடுமாறச் செய்தது.

"நான் பிரிஸ்பிடேரியன் சபையை பார்த்தால், அங்கே நித்திய நரகம் என்ற இடத்தில் மனுகுலத்தில் அநேகர் போடப்படும்படி முன்கூட்டியே தீர்மானித்துவிட்ட இரக்கமற்ற கடவுளின் மீது இருக்கும் பயம் மட்டுமே அங்கு இருக்கிறது. புத்திசா-த்தனமுள்ள புறமத உலகுக்கு இவ்வித போதனையை பிரசங்கிப்பதனால், நான் பொய் சொல்வதாக அவர்கள் நினைக்கவில்லை என்றால் எனது தெளிந்த மனநிலை மீது சந்தேகம் எழும்பும். அதற்கு பின் பேப்டிஸ்ட் சபையின் போதனைகளில் மூழ்கினேன். ஆனால், அங்கேயும் அநேக பிரிவுகள் இருப்பதை உணர்ந்தேன். இவைகளிடையே தண்ணீர் முழுக்கைக் குறித்தும் நேரத்தை குறித்தும் பூசல் இருக்கிறது. நானோ இந்த அற்பமான காரியங்களின் நிமித்தம் வெறுப்படைந்துவிட்டேன். அதுமட்டுமன்றி திருவிருந்தில் சிலர் மிகவும் வெறுக்கத்தக்க கஞ்சத்தனத்துடன் அப்பத்துணிக்கை, திராட்சை ரசத்தின் மீது மிகுந்த விசேஷ கவனத்தை செலுத்துவதும், வேறு சிலர் குறைவான கவனத்தை செலுத்துவதும் என்னை மிகவும் பாதித்தது. மெத்தடிஸ்ட் சபையானது மிகுந்த இரைச்சலுடனும் ஒரு மின்னலும், இடியும் கூடிய மதமாக என்னைத் தாக்கியது. நீங்கள் அதோடு மோதிவிடுங்கள். இல்லாவிடில் அது உங்களுடன் கடுமையாய் மோதிவிடும். அப்போது அந்த மதத்தை குறித்து நீங்கள் அறிந்துகொள்வீர்கள். காங்கிரிகேஷன-ஸ்ட் அவர்களின் விரைப்பு தன்மையும் சுயமனசாட்சியின் உண்மையான நற்குணமும், மேலும் மேன்மையான பண்புடைய உறுப்பினர்களும் என்னை தைரியமிழக்கச் செய்தனர். திருத்துவத்தை மறுப்பவர்களது இயக்கம் எல்லாமே சந்தேகத்துக்குரியதாக அதுவும் தன்னையே சந்தேகப்படும்படியான ஒன்றாக இருந்தது. அநேக புராட்டஸ்டன்ட் பிரிவினர் சில விசித்திரமான நம்பிக்கைகளின் அடிப்படையில் - குவாக்கரிசம் (Qukerism) போல-இருக்கின்றனர். கிறிஸ்தவரல்லாதவர்களால் கற்றுக் கொள்ளக்கூடிய தகுதியான ஆழ்ந்த படிப்பினை ஏதும் இங்கில்லை என்பதை நான் கண்டுகொண்டேன். ஆனால் கிறிஸ்தவத்தின் பழைமையான சபையாகிய கத்தோ-க்க மார்க்கத்தின் மீது காட்டும் வெறுப்பில் மட்டும் இந்த கருத்து வேறுபாடு நிறைந்த புராட்டஸ்டன்ட் சபையில் ஐக்கியப்படுகின்றனர். மேலும் கத்தோ-க்க மார்க்கம் இந்த விரோதத்தை வட்டியும், முதலுமாய் திருப்பிக் கொடுக்கிறது. அதுமட்டும்தான் உண்மையான சபை என்றும் அதற்கு வெளியே இரட்சிப்பு என்பதே இல்லை என்றும் அதிலும் புராட்டஸ்டன்ட்டாருக்கு முக்கியமாய் இல்லை என்றும் பெருமிதத்தோடு அறிவிக்கிறது. மேலும் அதன் தலைமை சமயகுரு (போப்) மட்டுமே இந்த பூமியில் தேவனுடைய பிரதிநிதி, அவர் ஒருவரே தவறே செய்ய முடியாதவராகும் என்று கூறுகிறது. இங்கே மத ஒற்றுமை, அதிகாரம், வல்லமை யாவுமே பழிவாங்கும் விதத்திலேயே இருக்கின்றன. ஆனால், என்மீது அக்கறை மிகுந்த புராட்டஸ்டன்ட் சிநேகிதர்கள் கத்தோ-க்கத்தை மட்டுமே அண்டிவிட வேண்டாம் என்று வேண்டிக்கேட்டுக்கொண்டனர்.

ஏனெனில் இது புறமதங்களை விட மோசமானது என்கின்றனர். இதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இதேவிதத்தில் விவாதித்துப் பார்த்தால் புராட்டஸ்டன்ட் சபைகளும் கூட இதே பிரிவைச் சார்ந்ததாகவே இருக்கிறது. உண்மையில் கிறிஸ்தவத்தினை அதன் பல்வேறு கோணங்களி-ருந்து நான் தெரிந்துக்கொண்டேன். ஒரு பிரிவினர் மீது மற்ற பிரிவினர் குறைகூறி கண்டனம் செய்வதையும் கேட்டிருக்கிறேன். இதை பார்க்கும் போது அது 'சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் காணப்படுகிறது.'

"நீங்கள் புறமதத்தார் என்று அழைக்கும் சீனர்கள் சமூக நிர்வாகத்திலும், சமூக அமைப்பிலும் மேன்மையானவர்களாகவே இருக்கிறார்கள். 400 மில்-யன் சீனர்களிடையே வருடந்தோறும் சில கொள்ளைகளும், கொலைகளுமே நடக்கின்றன. இது நியூயார்க் மாநிலத்தில் மட்டும் நடக்கும் எண்ணிக்கைக்கும் குறைவானதே. ஆம், உண்மையில் சீனாவானது ஆடம்பரமான சக்கரவர்த்திகளை ஆதரிக்கிறது. இவரது ஒவ்வொரு தீவிர சிந்தனையிலும் திருப்திபடவேண்டும். அதோடு கூட இந்த மக்களே உலகிலேயே அதிகமான வரி விதிக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். இதனை விவசாய நிலத்தி-ருந்தும், அரிசி மற்றும் உப்பி-ருந்தே செலுத்த வேண்டும். வேறு எந்த வழிவகையும் கிடையாது. ஆனாலும் தேசிய அளவிலான கடன் என்று ஒரு டாலர் கூட கிடையாது...

"கிறிஸ்தவர்கள் தொடர்ச்சியாய் மதத்தை குறித்து தேவையற்ற ஆரவாரத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பிரம்மாண்டமான ஆலயங்களைக் கட்டி நீண்ட ஜெபங்களை செய்கிறார்கள். ஆனால் ஒரு மில்-யன் ஆலயமற்ற போதிக்கப்படாத புறமதத்தாரிடையே இருக்கும் துஷ்டத்தனத்தைக் காட்டிலும் நியூயார்க்கின் ஒரே சபையைச் சேர்ந்த ஆயிரம் ஜனங்களிடையே துஷ்டத்தனம் அதிகமாகவே இருக்கிறது. கிறிஸ்தவர்களது பேச்சு நீளமாகவும், சப்தமாகவும் எப்படி நல்லவராகவும், இரக்கத்தன்மையுடன் செயல்படுவது என்பதை பற்றியே இருக்கிறது. இது வெறும் தர்ம காரியமே அன்றி சகோதரத்துவம்



இல்லை. 'நாய்களே, உங்கள் ரொட்டித் துண்டை பெற்றுக்கொண்டு, நன்றியோடு இருங்கள் என்பதாகும்.' ஆகவே முழு சீன நாட்டினைக் காட்டிலும் நியூயார்க் நகரில் மட்டும் ஒரு ஆண்டுக்குள் நடக்கும் துயர சம்பவங்களும், தற்கொலைகளும் அதிகமாக இருப்பதில் ஆச்சரியப்பட ஏதாவது உண்டா?

"புறமதத்தவருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், புறமதத்தவர் நன்மை செய்ய வேண்டும் என்ற காரணத்துக்காய் நன்மை செய்கிறார்கள். கிறிஸ்தவர்களை பொறுத்தவரைக்கும், அவர்கள் எந்த ஒரு சிறு நன்மையையும் அதற்குரிய கனத்தை உடனுக்குடனும் எதிர்கால வெகுமதியை எதிர்பார்த்தே செய்கின்றனர். அவன் கடவுளுக்கு கடன் கொடுத்து அதனை கூட்டு வட்டியோடு திரும்ப பெற நினைக்கிறான். உண்மையில் கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தின் மூதாதையரின் தகுதியான வாரிசுகளாவார்கள். புறமதத்தவரோ அதிகமாய் செய்தும், கொஞ்சமாய் அதைக் குறித்து பேசுகிறார்கள். கிறிஸ்தவர்களோ கொஞ்சம் செய்துவிட்டு. அதை செய்யும்போது கூட அதை பத்திரங்களிலும், கல்லறைகள் மீதும் பதித்துக் கொள்கிறார்கள். இயல்பான கிறிஸ்தவ எண்ணத்தோடு செய்யப்படும் நன்மைகளை எண்ணி, மனிதரை நேசியுங்கள், ஏதோ மனித கடமை என்று எண்ணிக் கொண்டு உங்களுக்கு செய்யப்படும் நன்மைகளுக்காக அவர்களை நேசிக்காதீர். ஆகவே புறமதத்தவரின் உடைமைகளுக்காகவே கிறிஸ்தவர்கள் புறமதத்தவர்களை நேசிக்கின்றனர். ஆகவே, இதனுடைய விகிதாச்சாரத்திற்கு தக்கப்படி கிறிஸ்தவர்களின் அன்பும் அதிகரிக்கிறது. சீனர்களுடைய பொன்னும், வியாபாரமும் ஆங்கிலேயருக்குத் தேவைப்பட்டபோது, சீனாவை தங்கள் சுவிசேஷ ஊழியருக்காக திறக்க வேண்டும் என்று கூறியது. ஆனால், துறைமுகங்கள் திறக்கபட்டபோதோ ஒப்பியம் (போதைப்பொருள்) மட்டுமே பிரதானமான வியாபாரமானது; மிஷினரி என்ற பெயரால் செய்யப்பட்டது. மேலும் இந்த இழிவான வகையில் கிறிஸ்தவம் சீனர்களின் மத்தியில் அறிமுகப்படுத்தபட்டபடியால் அது சீனாவில் சமூக மற்றும் நீதிநெறியிலும் அதிகப்படியான பாதகத்தை விளைவித்தது. அதன்பின் இருநூறு ஆண்டுகளாய் செய்யப்பட்ட

கிறிஸ்தவ நிறுவனங்களின் கருணைமிக்க உதவிகள் எதுவுமே அதற்கு பரிகாரத்தை இதுவரை உண்டுபண்ண முடியவில்லை. ஆகவே, அதன் விளைவாய் வந்திருக்கும் குற்றங்களின் பாரத்தை கிறிஸ்தவர்களாகிய உங்கள் மீதும் பொன் மீதான உங்கள் பேராசை மீதும் நாங்கள் சுமத்துகிறோம். அதுமட்டுமன்றி, பல ஆயிரம் நேர்மையான, நல்ல நிலைமையி-ருந்த ஆணும், பெண்ணும் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் துன்பப்படுத்தப்பட்டு, அதன் மூலம் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் உரிமைகள் கூட மறுக்கப்பட்டு மிகவும் பரிதாபகரமான, குறுகிய வாழ்வுடன் அவர்களை குறைந்த ஆயுளுடன் மரிக்கச் செய்தது. இந்த தேசிய அளவிலான சாபம் கிறிஸ்தவம் என்ற துப்பாக்கி முனையில் எங்கள் மீது வலுக்கட்டாயமாய் திணிக்கப்பட்டது. நாங்கள் புறமதத்தவராகவே இருப்பதை குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா? கிறிஸ்தவர்களது ஒரேயொரு முற்போக்கான காரியம் புறமதத்தவரின் மனதில் பதிந்திருக்கிறது என்னவெனில், அது பொன்னுக்காக தங்களது மதம், கௌரவம், கொள்கை மற்றும் உயிரைக் கூட தியாகம் செய்துவிடுகிறார்களே என்பதுதான். மேலும் பரிதாபமான இந்த புறமதத்தவரைப் பார்த்து புனிதரைப் போன்ற பாசாங்குடன், 'நாங்கள் செய்வதைப் போலவே நீங்களும் விசுவாசித்து உங்கள் ஆத்துமாவை ஆதாயப்படுத்திக் கொள்ளுங்கள்!' என்று கூறுகிறார்கள்....

"உனக்கு பிறர் செய்யவேண்டும் என்று விரும்புவதை நீ பிறருக்கு செய்."அல்லது "உன்னைப் போல் உன் அயலானையும் நேசி" என்பதே கிறிஸ்தவத்தின் மாபெரும் தெய்வீக சட்டம். இதை புறமதத்தவரும் கடைபிடிக்கின்றனர். ஆனால் கிறிஸ்தவரோ அசட்டை செய்கின்றனர். நான் புறமதத்தவனாய் இருப்பதற்கு இதுவே காரணம். மேலும் அமெரிக்க கிறிஸ்தவர்களை கன்பியூஷியசுக்கு வரும்படி நான் பேராவலுடன் அழைக்கிறேன்."

இதைப்போன்ற வேறு சம்பவங்கள் பண்டிதர் ராமாபாய் என்ற இந்தியப் பெண் மூலம் பத்திரிக்கை வெளியிட்டிருந்தது. இவர் சில வருடங்களுக்கு முன் போஸ்டன் நகருக்கு வந்திருந்தார். இந்தியாவுக்கு திரும்பிச் சென்று அங்குள்ள உயர்குடி பெண்களுக்கு



கற்பிக்கும்படி தன்னை ஈடுபடுத்திக் கொள்ள தயாராகிக் கொண்டிருந்தார். தான் கிறிஸ்தவத்தில் எந்த பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறுவது அத்தனை எளிதானதாக அவருக்கு புலப்படவில்லை. பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அவர் இவ்வாறாக பதில் கூறுகிறார்:

"நான் கிறிஸ்துவின் பொதுவான சபையைச் சார்ந்தவள். நான் நல்ல பேப்டிஸ்ட், மெத்தடிஸ்ட், எப்பிஸ்கோபல் மற்றும் பிரிஸ்பிடேரியனை சந்திக்கிறேன். ஒவ்வொருவரும் வேதத்தை குறித்து ஏதாவது சொல்கிறார்கள். ஆகவே நானே அங்கு சென்று எது எனக்கு சிறந்தது என்று கண்டுகொள்வதே மேலானது என்று எனக்குத் தோன்றுகிறது. (புத்திசா-த்தனமானதொரு முடிவு) அப்படிச் சென்ற நான் அங்கு இவ்வுலகின் இரட்சகரான கிறிஸ்துவைக் கண்டேன். என் இருதயத்தை அவருக்கு கொடுத்தேன். இங்கிலாந்தில் இருந்தபோது நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு எனக்கு அனுமதியளித்து, என்னை சேர்த்துக்கொண்ட எல்லா கிறிஸ்தவரோடும், திருவிருந்தில் பங்கு கொண்டேன். நான் எந்த குறிப்பிட்ட பிரிவினைச் சேர்ந்தவள் என்றும் கூறிக்கொள்ள மாட்டேன். ஏனெனில் ஒரு கிறிஸ்தவனாக மட்டும் நான் இந்தியாவுக்கு திரும்பிச் செல்வேன். என்னைப் பொறுத்தமட்டிலும் புதிய ஏற்பாடு, அதிலும் முக்கியமாக நமது ரட்சகரின் வார்த்தைகளே போதுமான அளவுக்கு விளக்கமான கொள்கைகளாக என் மனதிற்கு தோன்றுகிறது. ரட்சகர் நமக்கு கூறியதையும், அவரது செய்தி நமக்கு யோவான் மூலமாய் நமக்கு கிடைத்ததையும் நம்புகிறேன். தேவன் ஆவியாய் இருக்கிறார்; ஒளியாயும், அன்பாயும் இருக்கிறார்; அவரே இந்த பூமியை படைத்து, ஒளியூட்டி எங்கும் நிறைந்தும் இருக்கிறார்; மேலும் இயேசுவே அவரது மகனும் ஊழியருமாவார்; அவரே நம் விசுவாசத்துக்கும் அப்போஸ்தலர்; தமது பிள்ளைகளுக்கு ரட்சகராகவும், தலைவராகவும் இருக்க தேவனால் அனுப்பப்பட்டார்; அவரில் விசுவாசம் வைக்கும் அத்தனை பேரும் தேவனுடைய பிள்ளைகளாகும் உரிமையைப் பெறுகிறார்கள்; பரிசுத்த ஆவியே நமது வழிகாட்டியும், தேற்றரவாளரும் ஆகும்; இது கிறிஸ்துவினால் தேவன் அருளும் மாபெரும் வரம்; மேலும் சபை என்பது ஒன்றே ஒன்று தான்; தங்களது ரட்சகராய் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்

யாவருமே அந்த சபையின் அங்கத்தினர் ஆவர். நான் ரட்சிக்கப்படும் பொருட்டு தேவைப்படும் அனைத்தும் எனக்கு கொடுக்கப்படும் என்று விசுவாசித்து அவரது சித்தத்தை செய்பவளாகவும், சத்தியத்தை நாடி அதை பின் தொடருபவளாகவும் இருக்க தேவன் கிருபை புரியும்படியாக நான் ஊக்கமாய் ஜெபிக்கிறேன். போஸ்டனில் என்னை யூனிட்டேரியன் (ஒரே தேவன் என்ற நம்பிக்கை உடையவள்) என்று அழைத்தனர். அப்படியல்ல என்று நான் கூறினேன். திருத்துவத்தை நம்புகிறவளும் அல்ல என்றும் கூறினேன். இந்த நவீன கண்டுபிடிப்புகளை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. நான் வெறும் கிறிஸ்தவள் மட்டுமே, மேலும் புதிய ஏற்பாடானது எனது மதத்தை குறித்து எனக்கு கற்றுத்தருகிறது."

ஜப்பானியரில் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறியவர்களிடையே இதேவிதமானதொரு கருத்து வெளிப்படையாய் தெரிகிறது. பெயர் கிறிஸ்தவ சபைகளையும் அதன் கொள்கைகளையும் கண்டிக்கிறார்கள். தேவ வார்த்தையின் வல்லமையை அழகானதொரு விமர்சனம் செய்கிறார்கள். கிறிஸ்தவ கொள்கைகள் மீதான தங்கள் கருத்தினாலும், வேதத்தின் மீது மட்டுமே நிற்கவேண்டும் என்ற அவர்களது திடமான தீர்மானத்தினாலும், கீழ்கண்ட கருத்தை நாம் தெரிவிக்கின்றோம்:

"அமெரிக்காவுடன் ஜப்பானிய சாம்ராஜ்யம் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்டபோது அமெரிக்க சபைகள் தங்கள் அநேக விசுவாச அறிக்கைகளை அந்த நாட்டின் மதம் மாறியவர் மீது திணிக்க மிகவும் தீவிரமாய் இருந்தன. இவ்விதம் வெளியே அனுப்பப்பட்ட மிஷினரிகள், தங்களுக்குள் இருக்கும் ஏராளமான பிரிவுகளானது தங்களுடைய வெற்றிக்கு மிகுந்த பாதிப்பை உண்டாக்கும் என்பதை புரிந்துகொண்டு, தாங்கள் கால் ஊன்றி நிற்க இடம் கிடைக்கும் வரை ஒரே தேவனையும், பாவிகளுக்காக சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையும் குறித்து அறிவித்து, தங்கள் வேறுபாடுகளை மறைத்து கொண்டு, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி மட்டுமே ஒன்றுபட்டு செயல்பட ஒப்புக்கொண்டனர். 1873ல் உள்நாட்டு சபைகள் இந்த பிரிவினரை அறுவடை செய்யும் ஆரவாரத்தின் நிமித்தம், மதம் மாறி இருப்பவர்களின் எண்ணிக்கையானது போதுமான அளவுக்கு பெருகிவிட்டபடியால் அவர்களை சபை



பிரிவுகளுக்கு பிரித்துக் கொடுக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த சூழ்நிலை வரும்வரைக்கும் இவர்களது (கிறிஸ்தவர்களது) வெளிவேஷமானது மிகவும் வெற்றிகரமானதாகவே செயல்பட்டது.

"ஆனால் புறமதத்தி-ருந்து மதம் மாறியவர்களிடம் இந்த வஞ்சகத்தை மிகுந்த கவனத்துடன் தெளிவுப்படுத்தியபோது, எதிர்பாராததொரு சிக்கல் எழுந்தது. அதாவது இந்த ஜப்பானிய கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி, கிறிஸ்து இயேசுவில் கண்ட சந்தோஷ, சமாதானத்தை முன்வைத்து, தேவ ஆவிக்கும், வார்த்தைக்கும் முரண்பாடாக இருக்கும் இந்த பிரிவுகளை எதிர்த்தனர். இதன் விளைவாக தங்கள் சொந்த தேசத்தில் இவ்விதமான வருந்தத்தக்க சூழ்நிலையை கொண்டுவர முயற்சி செய்வதின் நிமித்தம், மிஷினரிமார்களை அமெரிக்காவுக்கு திரும்பிச் சென்றுவிடும்படியும், ஜப்பானின் சுவிசேஷ ஊழியத்தை தங்களிடம் விட்டுவிடும்படியும் வற்புறுத்தினர்.

"மிஷினரிகள் ஆதரித்த பல்வேறு குழுக்களுக்கும் இந்த கோரிக்கை நகல்கள் அனுப்பி வைக்கப்பட்டன. மேலும் பல இடங்களில் சென்று விசாரணை செய்து அறிக்கைகளை சமர்ப்பிக்கும்படி பிரதிநிதிகள் பலர் அனுப்பப்பட்டனர். இப்படிப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவரது கடிதமானது 'தி இன்டிபென்டன்ட்' என்ற நியூயார்க் பத்திரிகையில் வெளியானது. அதில் புறமத இருளி-ருந்து வெளிக் கொணரப்பட்டுள்ளவர்களது மனதுக்கு கூறுகிறதாவது : 'ரட்சிப்பின் சந்தோஷமானது மற்ற எந்த யோசனையை ஒன்றுமில்லாமல் செய்துவிடுகிறது.' மேலும், 'கிறிஸ்தவ ராஜ்யத்தை பிரிக்கும் நல்லதொரு மேன்மைக்கும் அவர்களை அநேக வருடங்களுக்கு முன் போதித்து வைப்பதாகவும் இருக்கிறது.' ஆயினும் இந்த 'பிற காரியங்கள்' இரட்சிப்பின் சந்தோஷத்தை ஒன்றுமில்லாமல் செய்து, தேவ அன்பை தள்ளி பிரிவினை வேலையை மட்டும் பார்க்கின்றன. தேவஆவியானது எப்பொழுதும் செய்வதுபோல இயேசுவின் நாமத்தில் மட்டும் உண்மையுள்ள ஆத்துமாக்களை கூடும்படி தூண்டுகிறது. ஒரு சபை பிரிவை சேர்ந்த சுவிசேஷ ஊழியருக்கு மிகவும் கடினமான வேலை என்னவெனில், கிறிஸ்தவ ராஜ்யத்தை பிரிக்கும் நல்லதொரு மேன்மையான காரியத்தினுள் புதியதாய் மதம் மாறுகிறவர்களுக்கு

போதனையை கொடுப்பது தான். அமெரிக்காவில் ஒரு பிரிவின் ஆதரவாளர்களில் வெகுசிலரே இப்படிப்பட்ட கோட்பாட்டை உடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் உண்மையான குற்ற உணர்வுக்குள் வருவதைக் காட்டிலும், பிற காரியங்களிலும் தப்பான அபிப்பிராயங்களினாலும் மேற்கொள்ளப்பட்டவர்களாய் இருக்கின்றனர். மிகச் சிறிய சதவிகிதத்தாரே விசுவாச ஊழியத்தைக் குறித்த அறிவுள்ள மனதை உடையவர்களாகவும், பிற பிரிவுகளி-ருந்து தாங்கள் வேறுபட்டிருப்பதன் மேன்மையையும் அறிந்துகொண்டவர்களாகவும் இருக்கின்றனர்."

தெய்வீக குணாதிசயம் மற்றும் போதனைகளைப் பற்றிய தவறான அறிவிப்புகளினால் குழப்பமடைந்து, தடுமாறுவதே புத்தி கூர்மையுள்ள புறமதத்தவரின் உணர்வாக இருக்கிறது. ஆனால் முரண்பாடான கொள்கைகளையும் கிறிஸ்தவத்திற்கு விரோதமான குணமுடைய திரளான கிறிஸ்தவர்களும் பேர் கிறிஸ்தவ தேசம் என்று அழைத்துக் கொள்ளுகிறவர்களும், இருந்தாலும் எந்த கிறிஸ்தவ ஊழியரும் புறமதத்தவரிடம் செய்த முயற்சிகளும் வீணாகப் போகவில்லை. ஆனால், தெய்வீக சத்தியத்தின் விதையானது இங்கும் அங்கும் உண்மையும், நேர்மையுமான இருதயங்களில் விழுந்து, நீதி மற்றும் உண்மையான கிறிஸ்தவ குணாதிசயத்தின் கனிகளையும் கொடுக்கிறது என்பதை காணும்போது நாம் மகிழ்வடைகிறோம். ஆனாலும் இவ்விதமான கனிகள் கொள்கைகளின் மூலம் வந்ததாக பெருமைப்படாமல் மனித கோட்பாடுகளின் குழப்பத்துக்கு அப்பால் அவைகள் தேவ ஆவியினாலும், வார்த்தையினாலும் வந்தவைகளே என்று கூறவேண்டும். புதிய மற்றும் பழைய ஏற்பாடுகளை தேவன் "என்னுடைய இரண்டு சாட்சிகள்" என்று *(வெளி 11:3)* குறிப்பிடுகிறார். மேலும் உண்மையாகவே எல்லா தேசங்களின் சாட்சிகளையும் அவை சுமந்துக் கொண்டிருக்கின்றன.

புற மதத்தவர்கள் பெயர்க்கிறிஸ்தவர்களோடு கூட உடன்பாடு செய்துகொள்ள விருப்பம் உடையவர்களா என்பதை குறித்து, நமக்கு எவ்வித உறுதியான அறிகுறியும் இல்லை. ஆனால், அதற்கு மாறாக உலக மதப் பேரவையில் கிறிஸ்தவ மதம் தனது சுய மதிப்பீட்டின் கீழான நிலையை அதனுடைய பிரதிநிதிகள் பெரிதும் உணர்ந்தனர். ஆனால் "உறுதியான தீர்க்கதரிசன வசனம்" மிகத் தெளிவாக



குறிப்பிடுவது என்னவெனில், பல்வேறு புராட்டஸ்டன்ட் பிரிவுகளும், ஒருங்கிணைந்த ஸ்தாபனத்தை உருவாக்கி அதன் மூலம் கத்தோ-க்கமும், புரட்டஸ்டன்ட்டிசமும் இணைந்து தங்கள் அடையாளத்தை இழந்து போகாமலேயே ஒருமைப்படும். கிறிஸ்தவ வானங்களில் இரண்டு முனைகள் உண்டு. அவைகளின் குழப்பங்கள் அதிகரிக்க, அதிகரிக்க ஒரு புத்தக சுருளைப் போல் *(ஏசா 34:4; வெளி 6:14)* தங்களை காத்துக்கொள்ளும் விதத்தில் இரண்டு பக்கங்களி-ருந்தும் தனித்தனியான சுருள்களாய் சுருட்டிக் கொண்டு ஒன்றுக்கொன்று ஐக்கியமாய் நெருங்கிய நிலைக்கு வந்துவிடும்.

ஆகவே, இந்த விரும்பப்பட்ட முடிவுக்காக, புரட்டஸ்டன்டட் சபையார் ஏறக்குறைய எந்த சமரசத்துக்கும் தங்களை தயார்படுத்திக் கொண்டுள்ளதாக காண்பிக்கின்றனர். அதேசமயம் போப்பு சபையும் மிகுந்த இணக்கமான போக்கையே மேற்கொள்கிறது. இந்த உண்மை நிலையை ஒவ்வொரு மதிநுட்பமான உணர்வுள்ளவரும் அறிந்தே இருக்கின்றனர். மேலும் தற்போது காணப்படும் அழிவுக்கேதுவான குணமுடைய அந்த மாபெரும் அந்திகிறிஸ்தவ இயக்கமானது, புரட்டஸ்டன்ட் சபையின் பெருத்த குழப்பத்தினிடையே, மறுபடியும் அதிகாரத்திற்கு முன்னேறுகிறது. மேலும் பிரிவுபட்டுவிட்ட புரட்டஸ்டன்டிசத்தை விடவும் தனக்குள் இருக்கும் மேலான பெலத்தை உணர்ந்தும் கூட, வரப்போகும் பேராபத்தைக் குறித்து போப்பு சபை பயப்படவும் செய்கிறது. ஆகவே, கிறிஸ்தவ தேசங்கள் போப்பு சபை மற்றும் புரட்டஸ்டன்டுடனும், சமூக மற்றும் மத ஐக்கியத்தை மிகவும் ஆர்வத்தோடு வாஞ்சிக்கிறது.

*1893*ல் கொலம்பியன் கத்தோ-க்க காங்கிரசில், நியூயார்க்கை சேர்ந்த வால்ட்டர் எலைட்டோ என்ற பிரபலமான பா-ஸ்ட் பாதிரியாரால் வாசிக்கப்பட்ட செய்தியின் சாராம்சம் கீழ்கண்டவாறு இருக்கிறது. இதில் புரட்டஸ்டன்டிஸத்தின் தற்போதுள்ள குழப்பத்தினை ரோம சபை சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டியதின் காரணத்தை சுட்டிக்காட்டி கூறுகிறார். அவர் கூறியதாவது :

"புரட்டஸ்டன்டிசத்தின் உறுதியான கொள்கையின் திடீர் வீழ்ச்சியானது நமக்கு கிடைத்துள்ள ஒரு நல்ல வாய்ப்பாகும். சபை

பிரிவுகள், கோட்பாடுகள், பாடசாலைகள் மற்றும் பாவ அறிக்கைகள் யாவும் நம் கண்கள் முன்பாக சுக்குநூறாகிப் போய்க்கொண்டிருக்கின்றன. மாபெரும் மனிதர்கள் அதை உருவாக்கினர். அற்பமானவர்கள் அதை தகர்க்கின்றனர். தன் குறுகிய வாழ்நாளின் அதிகபட்சம் இருமடங்குக்கு சிதைந்து போன இந்த புரட்டஸ்டன்ட் சபையுடன் இந்த புதிய தேசமானது எந்த தொடர்பும் வைத்துக்கொள்ள இயலாது. ஆனால், குறிப்பிட்ட காலவரையில் மாபெரும் குடியரசுகள் சோதித்து தகுதிபடைத்த நிறுவனத்துடன் (ரோம சபை) மரியாதையுடன் தொடர்பு கொள்ளும். நான் கூறுவது என்னவெனில், தேசிய இளைஞரின் ஆற்றலானது (ரோமன் கத்தோ-க்க) நிலையான மதத்தின் நீடிய புதுப்பொ-வைக் கண்டு வியப்படைய வேண்டும். மட்டுமன்றி அதனை தெய்வீகமானது என்று கூட வணங்க வேண்டும். புரட்டஸ்டன்டாரின் பழைமையான கொள்கைகள் யாவும் நம் மக்களது மனதி-ருந்து மறைந்து வருகிறது அல்லது புறம்பே தள்ளப்படுகிறது."

போப் 13ம் -யோ தனது சுற்றறிக்கை மூலம் ரோமன் கத்தோ-க்கருக்கு கூடுதலான ஒரு சலுகையை தந்தார். புரட்டஸ்டன்ட் சபையினை ரோம சபைக்கு மாறும்படி ஜெபிப்பதற்கு, உத்திரிக்கும் ஸ்தலத்தில் இவர்களது வேதனையை ஒரு குறிப்பிட்ட காலம் மட்டும் நீக்கும்படியாய் இந்த சலுகை இருக்கும். அவரது இந்த அறிக்கையில் புரட்டஸ்டன்ட்டாருக்கென கொடுக்கப்பட்ட ஒரு பகுதியி-ருந்து கீழ்கண்ட வார்த்தைகளை நாம் குறிப்பிடுகிறோம்:

"ரோமன் கத்தோ-க்க சபையின் அரவணைப்பை விட்டு பிரிந்து சமீப காலத்தில், ஆன்மீகமற்ற, அமைதியற்றதுமான சூழ்நிலையில் இருக்கும் அந்த மக்களின் பக்கம் நாம் இப்போது கொழுந்துவிட்டெறியும் தயாள குணத்துடன் திரும்பியிருக்கிறோம். கடந்த கால ஏற்றத் தாழ்வுகளை முற்றிலும் மறந்தவர்களாய், மனுஷீக காரியங்களுக்கு மேலாய் தங்கள் உணர்வுகளை உயர்த்திக் கொண்டு சத்தியத்திலும் இரட்சிப்பிலும் தாகம் உள்ளவர்களாய் கிறிஸ்து இயேசு உருவாக்கிய சபையை கவனிப்பார்களாக. தற்போது தங்களுடைய சொந்த சபையை இந்த சபையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், எவ்வளவு பின்தங்கிவிட்ட மதம் தங்களோடு



வந்துகொண்டு இருக்கிறது என்பதைக் கண்டு கொள்வதுடன் அநேக காரியங்களில் ஆதிமுறைமைகளை மறந்துவிட்டதனால், பல்வேறு வேறுபாடுகளின் வீழ்ச்சியும், தடையற்ற ஓட்டமும் புதுப்புது காரியங்களுக்குள் தங்களை வழுவிச் சென்றுவிட செய்திருப்பதை உண்மையாகவே ஒப்புக்கொள்வர். மேலும் இந்த காரியங்களின் புதிய நிலைமையின் காரணகர்த்தாக்கள் பிரிந்து சென்றபோது எடுத்துச்சென்ற சத்தியமானது எந்த குறிப்பிட்ட, அதிகாரப்பூர்வமான கோட்பாட்டையும் தன்னுள் தக்கவைத்துக் கொள்ளாமல் போய்விட்டது என்பதை அவர்களால் மறுக்க இயலாது....

"திரும்பவும் பழைய நிலைமைக்கு வருவதற்கு எந்த அளவு நீடிய, கடின உழைப்பு அவசியம் என்பதை நாம் முழுவதும் நன்கு அறிந்திருக்கிறோம். ஆனால், வெறுமையான காரியத்துக்காக எதிர்ப்பார்ப்பிற்கும் மேலாய் நாம் ஆசைப்பட்டு போராடுகிறோம்; அதற்காக மிகுந்த நம்பிக்கையும் வைத்திருக்கிறோம் என்றுகூட சிலர் நினைக்கக்கூடும். ஆனால், மனுக்குலத்தின் இரட்சகரான இயேசு கிறிஸ்து மீதும், முன்னொரு காலத்தில் உலகுக்கு பிரசங்கிக்கப்பட்டபோது மூடத்தனமும், ஆச்சரியமுமாக காணப்பட்டதும், பைத்தியமாக எண்ணப்பட்டதுமான சிலுவையைக் குறித்த உபதேசத்தின் மீதும் நமது எல்லா நம்பிக்கையையும், விசுவாசத்தையும் வைத்திருக்கிறோம். குறிப்பாக மன்னர்களையும், ஆள்பவர்களையும், தங்களது மக்களின் நலனைக் கருதி அவர்கள் வைத்திருந்த அரசியல் எச்சரிக்கைகளையும், வேண்டுகோள்களையும் அவர்களது செல்வாக்கையும் அதிகாரத்தையும் கொண்டு பாரபட்சமின்றி எடைபோட அவர்களை பணிந்து கேட்டுக்கொண்டோம். தற்கால காரியங்களின் சடுதியான வீழ்ச்சியினையும் எதிர்காலத்தின் பயத்தோடு கூட தற்போது நிலவும் அமைதியின்மையும் சேர்த்து பார்க்கும் போது பலனானது சிறியதாக இருக்காது என தெரிகிறது. நாம் எதிர்பார்ப்பதெல்லாம் கனிகளின் ஒரு பகுதியாவது பலன் தரட்டுமே என்பது தான்.

"கடந்த நூற்றாண்டானது ஐரோப்பாவை பெரும் அழிவுக்குள்ளாக்கி பெலனற்றதாகிவிட்டது. அது தன்னை தாக்கிய தாக்குத-ன் அதிர்வி-ருந்து விடுபடாமல் இன்னும்கூட நடுங்கிக்

கொண்டிருக்கிறது. கிறிஸ்தவ விசுவாசத்தின் ஐக்கியத்தின் பலனாய் கிடைத்த மாபெரும் நன்மையாகிய நம்பிக்கையும் மற்றும் வெகுசில இசைவான வாக்குறுதிகளும் மனுக்குலத்துக்குரிய பாரம்பரியமான ஒன்றாய் கருதி இந்த நூற்றாண்டு தனது முடிவை திசை திருப்பாதா?"

புரட்டஸ்டன்ட் சபையின் போக்கானது ரோம சாயலைப் போல இருப்பதை மறுக்க இயலாது. இந்த பேரவையில் ரோமன் கத்தோ-க்கருக்கு அளிக்கப்பட்ட பிரத்தியோகமான பங்கிற்கு அதுவே உண்மையான அடையாளமாகும். மேலும் கூட்டணியை தக்க வைத்துக் கொள்வதற்கு புரட்டஸ்டன்ட் இயக்கம் விரும்பியது. ஒருவேளை கூட்டணி இல்லாவிட்டால் ரோம சபையோடு ஐக்கியப்படவும் ஆர்வம் காட்டினது. பிரிஸ்பிடேரியன் விசுவாச பிராமணத்தில் ஒன்று தற்போது அருவருப்புடையதாய் கருதப்படுகிறது. மேலும் அதனை மாற்றிவிடவும் ஒரு ஆலோசனை உண்டு. அது என்னவெனில் போப் மார்க்கத்தை அந்திகிறிஸ்துவுக்கு ஒப்பிடும் கருத்தே.

மெத்தடிஸ்ட் மதகுருவானவர் சபை ஐக்கியத்தின் போது கார்டினல் கிப்பன்ஸ் அவர்களுக்கு எழுதிய இந்த கீழ்க்கண்ட கடிதம், புரட்டஸ்டன்டாரிடையே இருக்கும் இந்த நோக்கத்தை உறுதிப்படுத்துகிறது.

டான்டன், மாஸ்.

"அன்புள்ள கார்டினல் அவர்களுக்கு : புரட்டஸ்டன்ட் சபையார் திரும்பவும் இணைவதற்காக தங்களுக்குள் ஒரு இயக்கத்தை கொண்டிருப்பதன் காரியத்தைக் குறித்து நீங்கள் நன்கு அறிந்தவருமாய் இருக்கிறீர்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இவ்வகையான ஒரு இணைப்பு சம்பவிப்பது சாத்தியமாகில், ரோமன் கத்தோ-க்கச் சபையை அதனுடன் ஏன் இணைத்துக் கொள்ளக்கூடாது? நாம் எல்லோரும் நிற்கத்தக்கதானதொரு அஸ்திபாரத்தை ரோமன் கத்தோ-க்க சபை பெற்று இருக்கவில்லையா? நாம் கிறிஸ்துவை அறிந்து, அவரது திட்டத்தை இன்னும்கூட நேர்த்தியாக கற்கும்வரை, நாம் தவறானவர்களாய் அந்த சபை நம்பிக் கொண்டிருக்குமாயின், தற்கா-கமான சலுகைகளுடன் அந்த சபை நம்முடன் சேரக்கூடாதா?



"ஒரு காரியத்தை மட்டும் மிக உறுதியாய் நான் நம்புகிறேன். அதென்னவெனில் தனிப்பட்ட முறையில், கிறிஸ்தவ சபையின் எல்லா கிளைகளிலும் நன்மை இருக்கும் பொருட்டு நான் மிகுந்த கவனத்துடன் (இன்னும்) மேலும் மேலும் ஜாக்கிரதை உடையவனாக இருக்கிறேன். மேலும், இப்படி எண்ணுகிறது நான் மட்டும் அல்ல என்றும் உணர்கிறேன். உங்கள் உண்மையுள்ள,

ஜியோ.டபுள்யூ. கிங், பாஸ்டர் முதல் எம்.இ.சபை."

இதற்கு கார்டினல் கீழ்கண்டவாறு பதிலளிக்கிறார் :

கார்டின-ன் இருப்பிடம், பால்டிமோர்.

"ரெவரன்ட் ஜியோ.டபுள்யூ. கிங். அன்புள்ள ஐயா, கிறிஸ்தவ ராஜ்யங்களின் ஐக்கியத்தினை குறித்த உங்களது பேரார்வமானது மிகவும் போற்றப்படத்தக்கது.

"கத்தோ-க்க சபை நீங்கலாக இருக்குமாயின் இந்த ஒருமைப்பாடு என்பது ஒரு பகுதியாகவே இருக்கும். அது சாத்தியமற்ற ஒன்றாகவும் இருக்கும். ஏனெனில், முழுமையான ஆவிக்குரிய ஆதாரம் இல்லாமல் இவ்வித ஐக்கியம் என்பது சாத்தியமானதல்ல. பேதுரு மற்றும் அவரது சீடர்களாகிய காணக்கூடிய சபையின் தலைவரின் அங்கீகாரத்தில் இது தெளிவாய் காணப்படுகிறது.

"சபையிலோ, ராணுவத்திலோ, மக்களிடையேயோ ஒரு தலைமை இல்லாமல் நிலையானதொரு ஆட்சி இருக்கமுடியாது. ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஆளுநரும், ஒவ்வொரு நகரத்துக்கும் மேயரும் (அ) முனிசிபல் அதிகாரியும் ஏதாவது ஒரு பெயருடன் கட்டாயம் இருக்கவேண்டியது அவசியம். உலக சபைகள் அனைத்துமே தங்களுக்கு ஒரு தலைவன் வேண்டும் என்றும், அதில் தரமான அதிகாரமும், உரிமையும் உள்ள ஒருவர் வேண்டுமாயின் ரோம பிஷப்பைத் தவிர அது வேறு யாராக இருக்கக்கூடும்? கான்டர்பரியிலோ, அல்லது கான்ஸ்டான்டினோபிளிலோ இருக்க முடியாது.

"மீண்டும் இணையும் போது வைக்கப்படும் நிபந்தனைகளை பொறுத்தமட்டில், பொதுவாய் நினைப்பதை காட்டிலும், அது சுலபமானதாக இருக்கும். புரட்டஸ்டன்ட் சபையாரின் எல்லா

முற்போக்கான போதனைகளிலும் ரோமன் கத்தோ-க்க சபையும் கூட பற்றுடையதாகவே இருக்கிறது. அவர்களது பிற போதனைகளையும் கூட ஏற்றுக்கொள்வதற்கு போப்பை தலைவராக அங்கீகரிப்பது எளிதான வழியை அமைத்துக் கொடுக்கும். நீங்கள் நினைப்பதற்கும் அதிகமாகவே எங்களை நீங்கள் நெருங்கிவிட்டீர்கள். அநேக போதனைகளானது ரோம சபையால் வெறுத்து விலக்கப்பட்டிருந்தவைகள் தற்போது அதன் மீது சுமத்தப்பட்டுள்ளன.

கிறிஸ்துவுக்குள் உண்மையுள்ள உங்கள் ஜே.கார்டு கிப்பன்ஸ்."

இந்த கடிதத்துக்கு கீழ்கண்ட பதில் தரப்பட்டது. இவ்விரு மனிதரின் ஒப்புதலோடு விரும்பப்பட்ட ஐக்கியத்தின் நலன் கருதி இந்த கடிதங்கள் பகிரங்கமாய் வெளியிடப்பட்டது.

“அன்புடைய திரு. கார்டினல் அவர்களுக்கு: உங்கள் பதிலானது மிகவும் ஆர்வத்துடன் வாசிக்கப்பட்டது. எபிகோபல் சபையின் சிக்காகோ-லேம்பத் பிரச்சனைகளுக்குப்பிறகு கத்தோ-க்க சபை புரட்டஸ்டன்ட் சபைகளுடன் ஐக்கியமாவதற்கு சாத்திய கூறுகளை வைப்பது ஏராளமான தகுதியான காரியமாக இருக்காதா என உங்களைக் கேட்கலாமா? மெத்தடிஸ்ட் சபை மட்டுமன்றி உண்மையில் கிறிஸ்தவ சபைகள் அனைத்துமே அநேகரால் எவ்வளவு தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். அதேவிதமாகவே கத்தோ-க்க சபையும் கூட தவறாகவே புரிந்துக்கொள்ளப்பட்டு இருக்கவேண்டும் என்று நான் புரிந்துகொண்டேன். புரட்டஸ்டன்ட் சபை கொண்டிருக்கும் தவறான அபிப்பிராயத்தை கத்தோ-க்க சபையால் சரி செய்ய இயலாதா? குறைந்தபட்சம், ஐக்கியத்தை விரும்பக்கூடிய அளவுக்காவது அந்த தவறான புரிந்துகொள்ளுதலை சரி செய்ய இயலாதா?

“கிறிஸ்தவ ராஜ்யங்களுக்குள் இருக்கும் தற்போதைய பிரிவினையானது அறிவீனமும், வெட்கமும், துர்கீர்த்திக்கும் உரியது என்றும், இவ்விதமான சூழ்நிலையின் காரணமாய் ஒரு மைய அதிகாரம் வேண்டும் என்பதில் எந்தவித ஆட்சபேனையும் இல்லை என்றும் நான் நம்புகிறேன்.

உங்கள் உண்மையுள்ள ஜியோ.டபுள்யூ.கிங்."



*1893*ல் மான்ட்ரீ-ல் நடந்த வருடாந்திர கூட்டத்தில் பிரபலமான கிறிஸ்தவ குறிக்கோள் வா-ப சங்கமானது, ரோமன் கத்தோ-க்க சபையை குறித்த தங்களது கருத்தை மிகத்தெளிவாய் குறிப்பிட்டுக் காட்டியது. அதன் பிரதிநிதிகளில் புரட்டஸ்டன்ட் கிறிஸ்தவராக மதம் மாறியிருந்த போதகர் திரு. கர்மார்கர் என்ற பம்பாயைச் சேர்ந்த இந்தியர் ஒருவர் குறிப்பிடத்தக்கவர். அவரது கருத்தினை சங்கத்தின் முன் கூறும்போது, இந்தியாவில் நடக்கும் மிஷினரி ஊழியங்களுக்கு ரோம சபை ஒரு தடையாக இருந்தது என்றார். இந்த கருத்தை அந்த கூட்டத்தில் மிகவும் வெளிப்படையாய் அங்கீகரிக்கவில்லை. ஆனால், பிரெஞ்ச் ரோம சபை தினசரியானது அந்த மதம் மாறிய இந்து கூறியதை கோபமாய் கண்டித்து பிரசுரித்தது. அதன் விளைவாக அந்த பேரவையின் கூட்டங்கள் ரோம கத்தோ-க்கச் சபையின் கூட்டத்தினரால் பெரிதும் இடையூறுக்குள்ளானது. அதன் தலைமை அதிகாரியானவர் பேரவையின் மத்தியில் எழுந்து தானும், தன்னுடன் இருக்கும் பிரதிநிதிகளும் திரு.கர்மார்கரின் பேச்சுக்கு எந்த பொறுப்பும் கிடையாது என்று கூறி அவர்களை ஆறுதல் படுத்த முயற்சி செய்தார். உண்மையை தைரியத்துடன் சாட்சி பகர்ந்ததற்குரிய ஆக்கினையை தாங்கிக்கொள்ளும்படி விருந்தினரை அங்கேயே விட்டுவிட்டு சென்றுவிட்டனர். உண்மையில் திரு.கர்மார்கர் மட்டுமே அங்கிருந்த ஒரே புரட்டஸ்டன்ட்டார், இவர் மட்டுமே அந்த மிருகத்துக்கு பயப்படாமலும், உடன்படாமலும், அதனை வணங்காமலும் நின்றார். (வெளி 20:4) அவரது வார்த்தைகளை *1893*, ஆகஸ்டில் “தி அமெரிக்கன் சென்டினல்” வெளியிட்டது. அவர் கூறியதாவது :

“ரோம சபை ஆராதனைக்கும் இந்து மத ஆராதனைக்கும் மிகவும் குறிப்பிடத்தக்க ஒற்றுமை இருக்கிறது. ரோம சபை என்பதே மிகுந்த விஷத்தன்மையுடைய விக்கிரக ஆராதனை என்ற புறமத நம்பிக்கையை கொண்ட புதிய பெயரிடப்பட்ட பழைய குப்பியாகும். ரோம சபை ஆராதனையை பார்க்கும் அநேக இந்துக்கள் அடிக்கடி எங்களை கேட்பது, கிறிஸ்தவ மதத்துக்கும், இந்து மதத்துக்கும் இடையிலான வித்தியாசம் என்ன? இந்தியாவில் அநேக தலைகளுடைய ராட்சத பாம்பின் சொரூபத்தோடு மட்டுமன்றி

ரோமன் கத்தோ-க்கத்தின் ஆக்டோபஸ் சொரூபங்களையும் எதிர்த்து போராடவேண்டியிருக்கிறது."

இந்த கிறிஸ்தவ குறிக்கோள் வா-ப சங்கத்தின் செயலுக்கு ஆட்சேபனை தெரிவித்த சில குரல்களுக்கிடையே, போஸ்டன் நகரவாசிகளின் தேசபக்தி கூடுகையின் போது, கீழ்க்கண்ட தீர்மானமும் ஒருமனதாய் இரண்டாயிரம்பேரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது:

"மான்ட்ரீ-ல் நடந்த கிறிஸ்தவ குறிக்கோள் சங்க கருத்தரங்கின் போது போதகர் எஸ்.வி. கர்மார்கர் அவர்கள் இந்தியாவில் கிறிஸ்தவ மதம் முன்னேறி வளர தடைகளாக இருப்பவைகளை குறித்து தெளிவாகவும், உண்மையாகவும் எடுத்துக்கூறினார். குறிப்பாக ரோமன் கத்தோ-க்கரின் நெறிதவறிய செல்வாக்கும், அதன் காரணமாய் எழுந்த ஆழ்ந்த வெறுப்பின் நிமித்தம் பிரெஞ்ச் ரோமன் கத்தோ-க்கர் தோன்றினர். இவர்கள் தொடர்ச்சியாய் முயன்று புரட்டஸ்டன்ட் கூடுகைகளில் சுதந்திரமாய் பேசுவதை குழப்பங்களை விளைவிப்பதன் மூலம் தடுக்கலாயினர்." எனவே,

"போஸ்டன் நகர புரட்டஸ்டன்ட் சபையாராகிய நாம் தீர்மானிப்பது என்னவெனில், போதகர் எஸ்.வி.கர்மார்கர் தைரியமாய் கூறும் உண்மைகளை முழுமையாய் ஏற்கிறோம். மேலும், கிறிஸ்தவர்களில் ஒரு பிரிவினர் ரோமன் கத்தோ-க்கருக்கு ஆதரவு அளிப்பதையும் (பலத்த கரகோஷத்துடன் இந்த கருத்து வரவேற்பை பெற்றது) சத்தியத்தை சொல்வதின் பொருட்டு ஒரு தேவமனுஷன் கண்டிக்கப்படுவதையும் குறித்தும் நாம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கிறோம்.

"இந்த தீர்மானத்தின் நகலானது தினசரி நாளேடுகள் மற்றும் நாட்டுப்பற்றுடைய பத்திரிகைகளுக்கும், போதகர் எஸ்.வி.கர்மார்கருக்கும் அனுப்பிவைக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது."

"சட்டாகுவா இலக்கிய குழு" என்ற வேறொரு பிரபலமான புரட்டஸ்டன்ட் நிறுவனம், தனது மிகப்பெரிய ஆண்டு விழா ஒன்றில் இதேப் போன்றதொரு ரோமன் கத்தோ-க்க சபைக்கு கீழ்கண்ட செய்தியை அனுப்பியது. இது சமீபகாலத்தில் லேக் கேம்ப்ளெயினில் நிறுவப்பட்ட ஒன்றாகும். இந்த செய்தியானது ஏகமனதாக மிகுந்த உற்சாகத்தோடு ஏற்கப்பட்டது. அது கூறுகிறதாவது :



"சட்டாகுவா தனது வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் கத்தோ-க்க கோடைகால பள்ளிக்கு அனுப்புகிறது." இதற்குண்டான பதிலை பிளாட்ஸ்பர்க் லேக் கேம்ப்ளெயினில் இருக்கும் கத்தோ-க்க கோடைக்கால பள்ளியின் தலைவர் டாக்டர். தாமஸ் ஜெ. கேனரியின் இடமிருந்து சான்ஸ்லர் வின்சென்ட்பெற்றார். "அமெரிக்காவின் கத்தோ-க்க கோடைகால பள்ளி மாணவர்கள், சட்டாகுவாவின் மனமார்ந்த வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் மிகுந்த நன்றியுடன் பெற்றுக்கொண்டு, அதற்கு பதிலாக சட்டாகுவாவுக்கும் தங்கள் நல்வாழ்த்துக்களை அனுப்புகின்றனர்."

புரட்டஸ்டன்ட் சபையாரின் வேறு ஒரு பிரிவினரான அதிலும் முக்கியமாய் கவனென்டர் எனப்படுகின்றவர்கள், இந்த தேசமானது கிறிஸ்தவ ஊழியத்தை இறுக்கமாய் பற்றிக்கொண்டிருப்பதை குறித்து நாங்கள் மிகுந்த அக்கறைக் கொண்டிருக்கிறோம். (இது தொடக்கம் முதலே மன்னரின் தெய்வீக உரிமைகளை பற்றிய போதனையை ஏற்க மறுத்த ஒன்றாகும். மட்டுமன்றி, தேவ கிருபையால் மட்டுமே மன்னராக ஆளும்படி எந்த மனிதனும் அதிகாரம் பெறுகிறான் என்பதை என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை.) ஏனெனில், பெரும்பாலும் இந்த ஊழியத்தை இந்த தேசமானது அவமதிப்புக்குள்ளாக்கக்கூடும். தங்களை தேசிய சீர்திருத்த இயக்கம் என்று அழைத்துக் கொள்ளும் இதனுடைய நோக்கங்களில் முக்கியமான ஒன்று என்னவெனில், ஞாயிற்றுக்கிழமை ஆராதனையை மிகுந்த கண்டிப்புடன் கட்டாயப்படுத்துவதே. மேலும் தங்களது தீர்மானங்களை பாதுகாத்துக்கொள்ளும்படி மக்களின் பெருவாரியான ஓட்டுகளை எதிர்பார்க்கிறது. ரோமன் கத்தோ-க்க ஓட்டுகளின் மூலம் தங்களுடைய செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்வதில் அவர்கள் மிகுந்த கவனமுடையவர்களாயும் இருக்கின்றனர். ஆகவே இரத்த சாட்சிகளின் ரத்தத்தால் வாங்கப்பட்ட மத உரிமைகளைக் கூட விற்று,

வேறு எந்த சலுகையையும் விட்டுக்கொடுத்து, அதன் மூலம் ரோமன் கத்தோ-க்க சபையின் ஒத்துழைப்பைக் பெற தங்கள் விருப்பத்தை தெரிவிக்கின்றனர். இவர்களது பிரிவின் தலைமை பொறுப்பாளர் தங்களது பங்கை விவரிப்பதை கேளுங்கள். தி.கிறிஸ்டியன் ஸ்டேட்மென்ட் கூறியதாவது :

"அரசியல் நாஸ்திகத்தின் வளர்ச்சியை எதிர்ப்பதில் எங்களோடு ஒத்துழைக்க ரோமன் கத்தோ-க்க சபை எப்போது விரும்பினாலும், நாங்கள் மிக்க மகிழ்ச்சியுடன் அவர்களோடு கரம் சேர்ப்போம்." மேலும் "நமது முதல் ஒப்பந்தத்தில் சில தடைகளை நாம் சந்திக்க நேரலாம். இப்படியாக ரோமன் கத்தோ-க்க சபை பிற சபைகளோடு உடன்பட்டு, தன் கரத்தை கோர்த்துக் கொள்வதற்கு இன்னும் நேரம் வரவில்லை. ஆனால் எவ்விதத்திலும் வெளிப்படுத்த அவர்கள் விரும்பி, தொடர்ச்சியான முன்னேற்றத்தை உண்டாக்கவும், மன விருப்பத்தோடு ஒத்துழைக்க ஒப்புக்கொள்வதற்குண்டான காலம் வந்துவிட்டது. இது தற்கால சூழ்நிலையின் அத்தியாவசியங்களுள் ஒன்றாகும்." போதகர் எஸ்.எஃப். ஸ்கோவெல் (பிரிஸ்பிடேரியன்)

மேலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கத்தினுடைய கடமையென்று கீழ்கண்டவற்றையும் இதே சஞ்சிகை குறிப்பிட்டிருக்கிறது : "அரசாங்கமானது நெறிமுறைகளுடைய சட்டத்தை வெறுமனே உருவாக்கி, அதற்கு பின்னால் இருக்கும் தேவ அதிகாரத்தை அறிந்துகொண்டு அதோடு கூட அனுசரித்துக் போகாத எந்த மதத்தின் மீதும் அதிகாரம் செலுத்துவதே நமது பரிகாரம் உண்டு." ஆம், "சூழ்நிலையின் அவசியமானது" உண்மையில், கிறிஸ்தவ ராஜ்யத்தின் மத அதிகாரத்தை ஒரு வினோதமான நிலைக்கு கட்டாயப்படுத்துகிறது. மேலும், மத வளர்ச்சியின் சக்கரமானது பின்னிட்டு சுழல்வதையோ அல்லது எங்கே மத சுதந்திரமானது ஒரு திடீர் முடிவுக்கு வந்துவிடுமோ என்று யூகித்து பார்க்கவும் கூட ரொம்பவும் கூர்ந்து கவனிக்கவேண்டிய அவசியமே இல்லை.

எபிஸ்கோப்பல் குருவான போதகர் எஃப்.எச். ஹாப்கின்ஸ் கூறியவை. தி செஞ்சுரி பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டன:

"ஒரே ஒரு காரியத்தை குறித்து நான் மிகவும் திட்டமாய்



இருக்கிறேன். தற்போது இருக்கின்ற நிலைமையைப் போல, கடந்த காலத்தில் கிறிஸ்தவரிடையே மாபெரும் பிளவின் எந்த நிலையிலும் இருப்பினும், மேலும் ஒருவேளை அப்போதிருந்த பிரிவினையாளர்களின் மனநிலையும், ஆவேசமும் இப்போதிருக்கிற அவர்களது பிரதிநிதிகளைப் போல இருந்திருந்தால் பிரிவினை என்ற ஒன்று இடம்பெற்றிருக்காது. (முற்றிலும் உண்மை!) என்னைப் பொறுத்தமட்டில் ஐக்கியத்தின் அன்பின் தேவனானவர், அவரது வேளையில், அவரது வழியில், அவருக்குள் நம் எல்லோரையும் மறுபடியும் கூட்டிச் சேர்க்கிறார். இருபுறத்தாரிடமும் இருக்கும் இந்த மாறுதலே இதற்கு அத்தாட்சியாக இருக்கிறது. (ஆனால் வேசித்தனமாகிய மகா பாபிலோனின் (வெளி 17:2) மதுவால் வெறிகொள்ளாதவர்களுக்கோ, சத்தியத்தின் மீதுள்ள வாஞ்சை மற்றும் தெய்வபக்தியின் வீழ்ச்சிக்கு இது ஆதாரமாகவும், மகா பெரிய சீர்திருத்தம் என்றழைக்கப்பட்ட மேன்மையான இயக்கம் அழிந்துவிட்டது என்பதற்கான சாட்சியாகவும் இருக்கிறது.)

ஆர்க்கிடெகன் ஃபாராரின் மிகுந்த அடக்கமான கூற்றையும் கூட கேளுங்கள். "சபைகளின் ரெவ்யூ" என்ற பத்திரிகையின் பதிப்பாசிரியர் பொறுப்பி-ருந்து ராஜினாமா செய்யும் வேளையில், இந்த குறிப்பிடத்தக்க செய்தியை அவர் வெளியிட்டார் :

"சீர்திருத்தத்தின் நோக்கம் யாவும் தவறான வழியில் போய்க்கொண்டிருக்கிறது. பிரிந்த ஜனங்கள் சரியான சமயத்தில் விழித்துக்கொண்டு, கிறிஸ்தவர்களுடைய ஆசாரியத்துவத்தில் உரிமையை உறுதி செய்யாவிட்டால் பெயரைத் தவிர மற்றெல்லா விதத்திலும் பெருவாரியாய் போப்பினுடையதாகிவிட்டதொரு சபையில் தாங்கள் ஒரு அங்கத்தினராக இருப்பதை கண்டுகொள்ள அவர்கள் தாமதமாய் கண் விழித்தவர்களாகிவிடுவார்கள்."

இந்த தேசத்தில் நாம் பார்க்கும் போது, போப்பு சபையும் மற்றும் புரட்டஸ்டன்ட் சபையும் அரசாங்கத்தின் பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் தேடுகின்றன. ஏனெனில் தங்களது போதனைகளின் வேறுபாட்டையும் அலட்சியப்படுத்திவிட்டு,

தங்களுடைய ஒப்பந்தத்தையே வற்புறுத்திக் கொண்டு, அநேக வேறுபட்ட பிரிவினர் தங்களை ஒருங்கிணைத்து, அதனால் பரஸ்பர ஒத்துழைப்பையும், தற்காப்பையும் பெறும்விதத்தில், யாவருமே தங்களுடைய செயல்திட்டங்களை கொடுத்தாகிலும், பெறுவதில் மிகுந்த ஆர்வமுடையவர்களாய் இருக்கின்றனர். அங்கே ஐரோப்பாவில் காரியங்கள் அதற்கு நேர்மாறாய் இருக்கின்றன. மேலும் மக்களை ஆளுபவர்களும் கூட தங்களுக்குள் பெரியதொரு ஆபத்தையும் பாதுகாப்பின்மையையும் உணர்கிறார்கள். அதன் நிமித்தமாய் தங்களால் இயன்ற உதவிகளை செய்து, அதன் மூலம் சமய அதிகாரங்கள் தங்களை ஆதரிக்கும்படி எதிர்பார்க்கின்றனர். இங்கே ஏக்கத்துடன் இருக்கும் சபையின் கண்கள் அரசாங்கத்தை நோக்கி கெஞ்சுகின்றன. அங்கே சபையி-ருந்து ஆதாரம் கிடைக்காதா என்று விழுந்துவிடும் நிலையி-ருக்கும் அரசாங்கங்கள் தேடுகின்றன.

கிறிஸ்தவ ராஜ்யம் (கிறிஸ்துவின் ராஜ்யம்) என்று தன்னை பெருமையுடன் வெளிப்படுத்திக் கொள்கின்ற அமைப்பு மகிழ்ச்சியற்ற இவ்விதமான நிலைமையில் தற்போது நியாயத்தீர்ப்புக்காக உலகுக்கு முன் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்துவோ இதனை “பாபிலோன்” என்று மிகச்சரியாகவும், ஆணித்தரமாகவும், மிகவும் பொருத்தமான பெயரிட்டு, இதனை புறக்கணிக்கின்றார். இந்த உலக ராஜ்யங்களுக்கு கிறிஸ்தவ ராஜ்யம் என்ற பெயரை உபயோகப்படுத்துவது எவ்வளவு அபத்தமாய் இருக்கிறது! தேவனுடைய மகிமையான ராஜ்யத்தில் இவ்விதமான நிலைமையை தீர்க்கதரிசிகள் விளக்கமாய் விவரித்து கூறுகிறார்களா? “மகாபெரிய சமாதான கர்த்தர்” தமது அதிகாரத்தை அங்கீகரித்து, உரிமைகள் அல்லது செல்வம் ஆகியவற்றை அருளும்படி அவர்கள் பின்னே சென்று வேண்டுவாரா? ஏழை குடிகளிடத்தில் சன்மானத்துக்கும் அல்லது செல்வந்தரிடம் சலுகைகளுக்கும் அவர் வேண்டி நிற்பாரா? அல்லது தனது மக்களிடம் அவர்களது கடைசித்துளி சக்தியைக் கொண்டு ஆட்டம் கண்டுவிட்ட தனது சிங்காசனத்தை தாங்கும்படி அவர் கேட்டுக்கொள்வாரா? ஓ, இல்லை; முன் குறித்த காலம் வரும்போது, உயர்ந்த கௌரவத்தோடும், அதிகாரத்தோடும் தானே வல்லமையை கையிலெடுத்துக் கொண்டு, மகிமையான ஆட்சியை தொடங்குவார். அவரது வழியை தடை செய்யவோ, இடையூறு செய்யவோ யாரால் கூடும்?



ஆகவே, சபை மற்றும் அரசாங்கம் ஒன்றுக்கொன்று இணைந்து, ஒருவரையொருவர் சார்ந்து பரஸ்பரத்தில் இருக்கின்றனர். ஆகவே, பணக்காரர் வல்லமையுள்ளோர், மன்னர், பேரரசர், அரசாங்க நிர்வாகிகள், பிரபுக்கள், சீமாட்டிகள், மேல்மட்ட அதிகாரிகள், மதகுருக்கள், பேராயர், எல்லா பிரிவின் குருமார்கள், பெரும் முதலாளிகள், நிதிநிறுவனங்கள், ஏகபோக கூட்டுறவு உரிமையாளர்கள் எல்லாம் இவர்களது அக்கறையினிமித்தம் இணைந்திருக்கிறார்கள். ஆனால், தற்போதுள்ள முரண்பாடான நிலையும், கருத்து வேறுபாடும் வெகுசீக்கிரத்தில் வரப்போகிற உச்சக்கட்ட ஆபத்திற்கான ஆயத்தமாகவுமே இருக்கிறது. வேதத்தில் பேர் சபை அதிகாரங்கள் வானமண்டல அதிகாரங்களோடு ஒப்பிடப்பட்டுள்ளன. இவை ஒன்றோடொன்று நெருங்கிக் கொண்டிருக்கின்றன. உண்மையில் இந்த “வானமும் சுருட்டப்பட்ட புத்தகம் போலாகும்.” “ஆனால் முட்செடிகளைப் போல சுருட்டப்படும் போதும் (சுதந்திர விரும்பிகளான புரட்டஸ்டன்ட் சபைக்கும், சர்வாதிகாரப் போக்குள்ள போப்பு சபைக்கும் இடையே சுமூகமான உறவும் சமாதானமும் இல்லாததால்) மதுபானத்தால் வெறிக் கொண்டிருக்கும்போதும் (பாபிலோனின் மதுவாகிய இவ்வுலக ஆவியினால் வெறிகொண்டிருக்கும் போது) அவர்கள் முழுவதும் காய்ந்த போன செத்தையைப் போல எரிந்து போவார்கள்.” (நாகூம் 1:10) வரப்போகும் பெரிய ஆபத்தின் உபத்திரவமும், அரசியல் குழப்பமும் தேவ வார்த்தையில் ஆயிர வருட அரசாட்சிக்கான ஆரம்பக் கட்டம் என்று முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

□ □ □

எல்லா கிறிஸ்தவர்களையுமே ஒட்டுமொத்தமாக “பாபிலோனியர்” என்று நாம் அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாது. அதற்கு மாறாக தேவனுக்கு உண்மையுள்ள சிலர் பாபிலோனிலும் கூட இருப்பதை அடையாளம் கண்டுகொண்டு கர்த்தர் இப்போது அவர்களைப் பார்த்து, “என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே

வாருங்கள்" *(வெளி18:4)* என்று அழைக்கிறார். நாமும் அதைப் போலவே அழைக்கிறோம். நமது காலத்தின் பாகால்களாகிய செல்வம், பெருமை, குறிக்கோள் ஆகியவைகளுக்கு முழங்கால்களை முடக்காதவர்கள் ஆயிரக்கணக்கானோர் இன்னும் இருக்கிறார்கள் என்பதைக் காண்பதில் நாம் சந்தோஷமடைகிறோம். பாபிலோனின் மீது வாதைகள் பொழிய ஆரம்பிப்பதற்கு முன்னரே, சிலர் ஏற்கெனவே கீழ்ப்படிந்து, அவளை விட்டு வெளியே வந்துவிட்டனர். இன்னும் மீதமிருப்பவர்கள் இதனிமித்தம் சோதிக்கப்பட்டு வருகின்றனர். சுயநலம், புகழ், உலக சம்பத்துக்கள், மனுஷர் கொடுக்கும் கனம் ஆகியவைகளை தேவனை விரும்புகிறதை விட அதிகமாய் விரும்புகிறவர்களும் தேவ வார்த்தையை விட மனுஷருடைய கோட்பாடுகளையும், அமைப்புகளையும் பெருமதிப்புடன் போற்றுகிறவர்களும் பாபிலோன் விழுகின்றவரைக்கும் அதி-ருந்து வெளியே வரமாட்டார்கள். அதன் பிறகு "மிகுந்த உபத்திரவத்தி-ருந்து" வருவார்கள். *(வெளி 7:9,14)* ஆனால், இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள தகுதி உள்ளவர்களாக எண்ணப்படமாட்டார்கள். *(வெளி 2:26; 3:21; மத் 10:37; மாற் 8:34, 35; லூக் 14:26,27)*

  

*"உபத்திரவத்தின் காலம் நெருங்குகிறது, 'அது அதிகமாய்*
*துரிதப்படுகிறது;'*
*இப்போதும் கூட உலகமனைத்திலுமுள்ள சமுத்திரத்தை*
*சிற்றலைகளால் சுழற்றுகின்றது;*
*ஓ, அதன் அலைகள் மலைகளின் பெரிய சிகரங்களை விழுங்கும் போது,*
*தாங்கக்கூடாத மாபெரும் அலைகளை என் மீது அடித்துச் செல்லுமா?*

> *"அல்லது, பலமான தாக்குதலை, நான் பிறகு கண்டுபிடிப்பேனா*
> *மகிமையில் ஒரு அற்புதமான பிரசன்னம் நிற்கிறது,*
> *தண்ணீரின் மீது நடக்கின்ற, ஜீவனை அளிக்கின்ற*
> *இம்மானுவேல்தான்*
> *'பயப்படாதேயுங்கள், அது நான் தான்' என்கின்ற*
> *உற்சாகமான வார்த்தையுடன்.*



*"பலமானதொரு கரம், ஆனால் தாயினும் மேலான அன்புடன்,*
*எழுந்து வரும் பேரலையி-ருந்து என்னை தூக்கி எடுக்குமோ.*
*சகோதரனுடையதைக் காட்டிலும், மேலான அன்புடன் மென்மையாக*
*கண்டிக்குமோ,*
*'அற்பவிசுவாசியே!, ஓ, எதற்காய் இன்னும் சந்தேகிக்கிறாய் என்று?'"*

***அ அ***

## அத்தியாயம் 7

# ஜாதிகள் ஒன்று கூடுதலும் தேவனுடைய கோபாக்கினையின் மாபெரும் அக்கினிக்காக பூதங்கள் தயாராகுதலும்

*ஜாதிகள் ஏன்? எப்படி? ஒன்று கூடின - சமுதாய சக்திகள் அக்கினிக்கு ஆயத்தமாகின்றன - செல்வம் குவிக்கப்படுதல் - ஏழ்மை அதிகரித்தல் - சமுதாய சச்சரவுகள் எரியும் நிலைக்கு நெருங்குதல் - அமெரிக்க தொழிலாளர் அமைப்பின் தலைவரிடமிருந்து ஒரு வார்த்தை - செல்வந்தர்கள் சில நேரம் கடுமையாய் கண்டித்து ஒதுக்கப்படுதல் - சுயநலமும், சுதந்திரமும் இணைந்திருத்தல் - பணக்காரர் மற்றும் ஏழைகள் நோக்கில் சுதந்திரம் - ஏன் தற்போதையை சூழ்நிலை தொடர முடியாது - மாபெரும் அக்கினிக்கு தயாராவதற்கு இயந்திரங்கள் ஒரு முக்கிய காரணி - பெண்களின் போட்டி - தொழிலாளியின் நியாயமான மற்றும் நியாயமில்லாத சூழ்நிலையை குறித்த கண்ணோட்டம் - தேவை மற்றும் வினியோகத்தின் சட்டம் யாவர் மேலும் இரக்கமற்று இருத்தல் - திடுக்கிடச் செய்யும் வெளிநாட்டு போட்டி குறித்த கண்ணோட்டம் - இங்கிலாந்தை பற்றிய திரு. ஜஸ்டின் மெக் கார்தியின் அச்சம் - இங்கிலாந்து தொழிலாளரின் மனோநிலை குறித்து கையர் ஹார்டி, எம்.பி. - பிரிட்டிஷ் தொழிலாளர்களைக் குறித்த மதிப்பிற்குரிய ஜாஸ் சாம்பர்-னுடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் - தொழில் ஆர்வத்துக்கு சம்மந்தம் உடைய தேசிய ஆக்கிரமிப்பு - ஜெர்மனியின் சமூக மற்றும் தொழில் போர் மீதான ஹெர் லீப்நெட்டின் கருத்து - சர்வதேச தொழிற்சங்க ஸ்தாபனத்தின் தீர்மானங்கள் - இந்நாட்களின்*

ஜாம்பாவான்கள் - டிரஸ்ட் மற்றும் கூட்டுறவுகளின் பட்டியல் - மூர்க்கத்தனமான அடிமைத்தனத்துக்கு எதிராக நாகரீகமான அடிமைத்தனம் - இயந்திரக்கல்-ன் மேல் தட்டுக்கும் கீழ்தட்டுக்கும் இடையே உள்ள மக்கள் கூட்டம் - சரிபடுத்தமுடியாத உலகளாவிய, மனுஷீக சக்திக்கும் மிஞ்சிய சூழ்நிலைகள்...

"ஆகையால் நான் கொள்ளையிட எழும்பும் நாள் மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள் மேல் சொரியும்படி ஜாதிகளை சேர்க்கவும் ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன். பூமியெல்லாம் என் எரிச்ச-ன் அக்கினியினால் அழியும். அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்." *(செப் 3:8,9)*

மேற்கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறும் வண்ணமாய், இந்த கடைசி நாட்களில் ஜாதிகள் ஒன்று சேர்வது என்பது மிகவும் கவனிக்கத்தக்கதாய் இருக்கிறது. நவீன கண்டுபிடிப்புகளும், கருவிகளும் உண்மையிலேயே பூமியின் மிகவும் தொலைதூர எல்லைகளைக் கூட அருகாமைக்கு கொண்டுவந்துவிட்டது. பிரயாணம், தபால்தந்தி, தொலைப்பேசி வசதிகள், வர்த்தகம், புத்தகம் மற்றும் செய்தித்தாள்களின் பெருக்கம் போன்றவைகள் உலகம் முழுவதையுமே ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இதுவரையிலும் கண்டிராத அளவிற்கு சிந்திக்கவும், செயல்படவும் மாற்றிவிட்டது. இப்படிப்பட்ட நிலைமையை ஒவ்வொரு தேசமும் மதிக்கும் விதத்தில் தேவையான சர்வதேச சட்டம் மற்றும் ஒழுங்குகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுவிட்டன. அதன் பிரதிநிதிகள் ஆலோசனை குழுக்களில் சந்தித்துக் கொள்கின்றனர். மேலும் ஒவ்வொரு நாட்டின் அரசாங்க பிரதிநிதிகளும் பிறநாடுகளில் இருக்கின்றனர். இவ்விதம் தேசங்களை அருகாமைப்படுத்துவதனால் சர்வதேச கண்காட்சிகளும் கூட நடத்தப்படுகின்றன. ஆகவே தனது எல்லைகளுக்கப்பால் பிறநாடுகளை தடுத்தி நிறுத்திவிடும் அளவிற்கு எந்த தேசமும்



தனித்தன்யையுடையதாக இனிமேல் இருக்கவே முடியாது. ஆகவே யாவருடைய வாசற்கதவுகளும் கட்டாயமாக திறக்கப்படவும் அது அப்படியே தொடரப்படவும் வேண்டும். மேலும் பலதரப்பட்ட பாஷைகளின் தடைகளும் கூட மிகவும் எளிதாக அகற்றப்பட்டு விடும்.

உலகின் எந்த பகுதியின் நாகரீக வளர்ச்சி பெற்ற மனிதரும் இனிமேலும் அந்நியரைப் போல கருதப்படமாட்டார்கள். இவர்களது மிகச்சிறந்த கப்பல்கள் தங்களுடைய வியாபார பிரதிநிதிகளையும், அரசாங்க தூதுவர்களையும் மேலும் தங்களுடைய அதிக ஆர்வமுடைய உல்லாசப் பிரியர்களையும் எத்தனை எட்ட முடியாத தூரத்திற்கும் எளிதாய் சௌகரியமாய் கொண்டு சென்றுவிடுகிறது. மிகச்சிறந்த ரயில் வண்டிகள் இவர்கள் நாட்டின் உட்பகுதிகளுக்குக் கொண்டுச்செல்லும்; அவர்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்பும் போது அநேக தகவல்களோடும் புதிய கருத்துக்களோடும், புதிய செயல்திட்டங்கள் மற்றும் தொழில் முயற்சிகளோடும் செல்கின்றனர். மிகவும் மந்தமான புறஜாதி ஜனங்களும் கூட நூற்றுக்கணக்கான ஆண்டுகளாய் கண்டு கொண்டிருந்த கனவுகளி-ருந்து விழித்தெழுந்து, வெளிநாடுகளி-ருந்து வரும் தங்களுடைய பார்வையாளர்களை ஆச்சரியத்தோடும், வியப்போடும் பார்த்து, அவர்களுடைய அற்புதமான சாதனைகளைத் தெரிந்து கொள்கின்றனர். மேலும் தற்போது தங்களது புதிய அறிமுகங்களினால் பயன்பெறும் பொருட்டு இவர்கள் தங்களுடைய பிரதிநிதிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

சாலொமோன் ராஜாவுடைய காலத்தில் ஷேபா நாட்டு இளவரசி ஐந்நூறு மைல் தூரமிருந்து சாலொமோனின் ஞானத்தைக் குறித்து கேட்கவும், அவனுடைய புகழைக் காணவும் வந்தது, அந்நாட்களில் மிகவும் வியப்புக்குரிய காரியமாய் எண்ணப்பட்டது. ஆனால் அப்போது அறியப்படாமல் இருந்த உலகின் பெரும்பகுதிகளுக்குச் சென்று அந்த இடத்தில் குவிந்துள்ள பொக்கிஷங்களைப் பார்த்து அவைகளின் முன்னேற்றத்தை குறித்து அறிந்து கொள்ள தற்போது எந்த அந்தஸ்தும் இல்லாத அநேகரும் கூட உலகமனைத்திற்கும் பிரயாணிக்கின்றனர்; தற்போது உலகை சுற்றி சௌகாரியத்துடனும், ஆடம்பரத்துடனும் பிரயாணிக்க 80 நாடகளுக்கும் குறைவாகவே ஆகிறது.

உண்மையில் பொதுவான ஆர்வத்துடனும், செயல்களுடனும் எதிர்ப்பார்க்காத வண்ணம் ஜாதிகள் "கூடுகின்றன;" ஆனால் ஐயோ! சகோதர அன்பின் நிமித்தமாய் அல்ல, இந்த முன்னேற்றத்தின் ஒவ்வொரு அடியிலும் சுயநலத்தின் அடையாளம் தெரிகிறது. சுயநலம் ஒன்றே குறிக்கோளாய் கொண்ட வியாபார எண்ணமானது, ரயில், நீராவிக்கப்பல், தந்தி, தொலைபேசி ஆகியவற்றை நிர்மாணிக்கத் தீவிரப்படுத்தியிருக்கிறது. சுயநலமானது சுவிசேஷத்தை பிரசங்கிப்பது மற்றும் உதவிசெய்யும் தொண்டு நிறுவனங்களைத் தவிர வர்த்தகத்தையும், சர்வதேச பரஸ்பர நல்லுறவையும் ஒழுங்குபடுத்துகிறது. இவைகள் எல்லாமும் கூட உண்மையான தேவ அன்பின் மற்றும் மனிதாபிமான நோக்கத்தை தவிர மற்ற நோக்கத்தின் உந்துத-னாலேயே செய்யப்பட்டவைகளாக அஞ்சப்படுகின்றன. "சுயநலமே" தேசங்களை கூட்டி சேர்த்து வெகு சமீபத்தில் வரவிருக்கிற முன்னறிவிக்கப்பட்ட தேவதண்டனையை - அராஜகத்தை நோக்கி அவர்களை வெகு விரைவாக தயார்படுத்துகிறது. இதை "தேவனுடைய எரிச்ச-ன் அக்கினி" அல்லது கோபம் என்று மிகவும் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இருக்கின்ற பூமியாகிய சமூக ஒழுங்குகள் அந்த கோபத்தினால் முற்றிலுமாக அழியும்.(2பேது 3:7) ஆகிலும் இது மனிதனுடைய நிலையி-ருந்தே பேசப்படுகிறது. தீர்க்கத்தரிசியோ தேசங்கள் ஒன்றுபடுகிறது தேவனுக்காகவே என்று கூறுகின்றார். ஆனால் இரண்டும் உண்மையே; மனிதனானவன் சுயாதீனமாய் செயல்பட அனுமதிக்கப்பட்டிருக்கும் அதேவேளையில், தேவன் தனது தெய்வீக அதிகாரத்தால் மனிதனுடைய செயல்பாடுகளை தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்றவாறு உருவாக்குகிறார். ஆகவே மனிதனும் அவனது கிரியைகளும், வழிகளும் தேவபிரதிநிதியாகவும் செயலாற்றுபவைகளாகவும் இருக்கின்றன; தேவனானவர் மாபெரும் படைத்தலைவராய் இருந்து தற்போது ஜாதிகளை ஒன்று சேர்த்து பூமியின் ஒருமுனை தொடங்கி அதின் மறுமுனைவரைக்கும் உள்ள ராஜ்யங்களைக் கூட்டி, இம்மானுவே-டம் "உரிமையானவரிடம்" இந்த உலக ஆளுகையை ஒப்படைக்கும் ஆயத்தப்பணிகளைச் செய்கிறவராகவும் இருக்கிறார்.



கர்த்தர் ஜாதிகளை ஏன் ஒன்று கூட்டுகிறார் என்று தீர்க்கத்தரிசி நமக்கு கூறுகின்றார். "அவர்கள் மீது என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் ஊற்றுவேன்; பூமியெல்லாம் (எல்லா சமூக அமைப்புகளுமே) என் எரிச்ச-ன் அக்கினியினால் அழியும்." இந்த செய்தியானது நமக்கு துக்கத்தையும், மனவேதனையையும் தரும். முடிவானது இவ்வுலகத்தின் நன்மைக்காகவே கிரியை செய்யும் என்ற உத்திரவாதத்தைக் கொடுப்பதாக இல்லையா! சுயநலத்தின் ஆட்சியானது கவிழ்க்கப்பட்டு கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியை நிறுவுவதன் மூலம், நீதியின் ஆட்சி நிறுவப்படும் என்று தீர்க்கத்தரிசியின் இந்த கீழ்கண்ட வார்த்தைகள் கோடிட்டு காட்டுகின்றன. "அப்பொழுது ஜனங்களெல்லாம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப் பண்ணுவேன்."

"ஜாதிகளை சேர்த்தல்" நியாயத்தீர்ப்பின் உக்கிரத்திற்காக மட்டுமன்றி, அதி-ருந்து ஒருவரும் தப்பிப்போக இயலாமல் இருக்கவுமேயாகும். அதன்மூலம் இந்த மகா உபத்திரவமானது எழுதப்பட்டிருப்பது போலவே வெகு சுருக்கமானதாக மாறிவிடும். அதோடு அது வெகு சடுதியான ஒரு போராட்டமாகவும் இருக்கும். "கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்" என்று எழுதப்பட்டுள்ளது. (ரோம 9:28; ஏசா 28:22)

## சமூக சக்திகள் அக்கினிக்கு தயாராகின்றன

நம்மை சுற்றிலும் பார்க்கும் போது "சக்திகள்" இந்த நாளின் அக்கினிக்கு, தேவ கோபாக்கினை என்ற அக்கினிக்கு தயாராகிக்கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். சுயநலம், அறிவு, செல்வம், லட்சியம், நம்பிக்கை, அதிருப்தி, பயம் மற்றும் அவநம்பிக்கைகள் ஆகியவை மூலக்கூறுகளாக செயல்பட்டு இவைகளின் முரண்பாட்டினால் இந்த உலகத்தின் கோபமான உணர்ச்சிகளுக்கு தீ மூட்டிவிடும். அதன் விளைவாக இந்த கொடிய அன-ல் அதன் பல்வேறு "சமூக சக்திகள்" யாவையும் உருகச் செய்துவிடும். கடந்த நூற்றாண்டில் அதிலும் முக்கியமாக கடந்த 40 வருட காலத்தில் இந்த உணர்ச்சிகளினால் என்னென்ன மாறுதல்கள்

நடைபெற்றிருக்கின்றன என்று உலகத்தை கூர்ந்து கவனியுங்கள். கடந்த காலங்களில் இருந்த மனதிருப்தி என்பது, ஏழை, பணக்காரர், ஆண், பெண் மற்றும் கற்றவர், கல்லாதவர் ஆகிய எல்லா வகுப்பினரிடையேயிருந்தும் போய்விட்டது. யாவருமே மிகவும் அதிருப்தி அடைந்தவர்களாகிவிட்டனர். அனைவருமே சுயநலமாய் அதிகப்படியான "உரிமைகளை" பற்றிக் கொள்வதிலும் அல்லது "தவறுகளை" குறித்து புலம்புவதிலுமே தீவிரமாக இருக்கின்றனர். உண்மைதான் தவறுகள் அதிலும் வருந்தத்தக்க தவறுகள் இருக்கின்றன. இவைகள் சரிசெய்யப்பட வேண்டும். மேலும் உரிமைகள் மதிக்கப்பட்டு அனுபவிக்கப்படவேண்டும். ஆனால் நமது காலத்தில் இருக்கின்ற மனோபாவத்தின்படி அதன் அறிவு பெருக்கத்தாலும் அதற்குரிய சுதந்திரத்தினாலும், சுயலாபகரமானவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் மறுபக்கத்தில் உள்ளவைகளை கண்டு பாராட்டத் தவறிவிடுகின்றனர். இதனுடைய பலன் என்ன என்பது தீர்க்கத்தரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. இது நிச்சயமாய் ஒவ்வொரு மனிதனுடைய கரமும் அவனது அயலானுக்கு விரோதமாகவே இருக்கும். இது மாபெரும் கடைசி பேராபத்துக்கான உடனடிக் காரணமாய் அமைந்துவிடும். தேவவார்த்தையும் அவரது கிருபையும் கடந்த காலத்தின் அனுபவபாடங்களும், சுய உரிமைகள் போன்றவைகளின் பலமான திடநம்பிக்கைகளின் கீழ் மறக்கப்பட்டுவிட்டன. இது எல்லா வகுப்பு மக்களையுமே ஞானமான மற்றும் மிதமான ஒரு பாதையை தெரிந்தெடுப்பதற்கு தடுக்கிறதாகவும், தங்களுடைய ஒருதலைபட்சமான முடிவுகளுக்கே இசைவாக நல்ல பாதையை பார்க்கக்கூட முடியாத அளவுக்கு சுயநலம் என்பது குருட்டாட்டத்தை கொண்டுவருகிறதாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வகுப்பினருமே பிறருடைய உரிமைகளையும் நலன்களையும் பாரபட்சமற்ற முறையில் சிந்திக்கத் தவறிவிடுகின்றனர். பொன்னான கட்டளை பொதுவாக அலட்சியப் படுத்தப்படுகின்றது; ஞானக் குறைவும், அநீதியும் எல்லா வகுப்பினரிடையேயும் தெளிவாய் வெளிப்படுத்தப்படும். இதனால் எல்லா வகுப்பினருமே இந்த உபத்திரவத்தில் பயங்கரமாய்



கஷ்டப்படுவார்கள். ஆனால் வேதம் கூறுகிறபடி ஐசுவரியவான்கள் மிகஅதிகமாய் கஷ்டப்படுவார்கள்.

ஐசுவரியவான்கள் இந்தக் கடைசிகாலத்திற்காக கற்பனைக் கெட்டாத செல்வத்தை குவிப்பதில் அதிக ஊக்கமாய் இருப்பதோடு தங்கள் கிடங்குகளை இடித்து இன்னும் பெரிதாக கட்டி தங்களுக்கும் தங்களது பின் சந்ததிக்கும் சொல்லுகிறதாவது: "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு." தேவனோ தீர்க்கத்தரிசிகளின் மூலம் இவர்களைப் பார்த்து கூறுகிறதாவது: "மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்தி-ருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்."*(லூக் 12:15-20)*

ஆம், முன்னறிவிக்கப்பட்ட அந்த இராக்காலமானது *(ஏசா 21:12; 28:12, 13, 21, 22; யோ :9:4)* அதிவிரைவாய் எதிர்கொண்டு வருகிறது. மேலும் அது ஒரு கண்ணியைப் போல் இந்த உலகம் முழுவதையும் மேற்கொள்ளும். அப்போது உண்மையில் அந்த துன்பமான வேளையில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் பொக்கிஷம் யாருடையதாய் இருக்கும்? "தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்துவிடுவார்கள்; அவர்களுடைய பொன் வேண்டா வெறுப்பாயிருக்கும்; கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள பொன்னும் வெள்ளியும் அவர்களை விடுவிக்கமாட்டாது..... ஏனெனில் அவர்கள் அக்கிரமே அவர்களுக்கு இடறலாயிருக்கும்." *(எசே 7:19)*

## பொக்கிஷத்தை குவித்தல்

செல்வத்தை குவிப்பதிலும் சுகபோகமாக அல்லது ஊதாரித்தனமாக வாழ்வதிலும், பணக்காரர்களுடைய பங்கு எல்லாவற்றிற்கும் மேலாக மிகத் தெளிவாய் தெரிகின்ற ஒரு சிரேஷ்டமான நேரத்தில் நாம் இருக்கிறோம். *(யாக் 5:3,5)* தற்கால இலக்கியங்களி-ருந்து சில எடுத்துக்காட்டுகளை நாம் பார்க்கலாம். ஒருவேளை இந்த கருத்து முடிவில் நிரூபிக்கப்படுமாயின் இந்த யுகத்தின் கடைசி நாட்களில் அதாவது இந்த யுகத்தின் ஒழுங்குகளை

உடைத்தெறிந்து தேவனுடைய இராஜ்யத்தின் புதிய ஒழுங்குமுறைகளை கட்டியங்கூறும் மகா உபத்திரவத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு மற்றுமொரு ஆதாரமாய் இருக்கும்.

மதிப்பிற்குரிய டபுள்யூ.எம்.ஈ.கிளாட்ஸ் டோன் என்பவர் தனது உரையில் தற்காலத்தை "செல்வத்தை உண்டாக்கும் காலம்" என்று விரிவாய் விளக்கினார். அவர் கூறியதாவது:

"ஜூ-யஸ் சீசருடைய காலம் தொட்டு இந்நாள் வரைக்கும் தங்களுடைய காலகட்டத்தில் திரளான செல்வம் பெருவாரியாய் குவிக்கப்பட்டிருக்கிறது என்பதனை எனக்கு முன் பேசிய கனவான்கள் தெளிவாய் எடுத்துக் கூறினார்."

உலகறிந்த ஒருவரது வார்த்தையை நீங்கள் கவனித்துக் கேளுங்கள். கடந்த 50 ஆண்டுகாலத்தில் 19 நூற்றாண்டுகளாக இல்லாத அளவுக்கு செல்வமானது பெருக்கி சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது என்பது நம்மால் கிரக்கிக்க முடியாத ஒரு உண்மையாகும். இது பழமையான மதிப்பீட்டின்படி புள்ளி விவரமாயும் காட்டப்பட்டிருக்கிறது. மேலும் தற்கால புதிய சூழ்நிலையானது வெகுசீக்கிரத்தில் வரப்போகின்ற உலகின் சமூக அமைப்பை சரி செய்வதில் மிக முக்கியமான பங்கு வகித்து முன்நின்று வழிகாட்டுகின்றது.

போஸ்டன் குளோப் என்கின்ற பத்திரிக்கை சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்க ஐக்கிய நாட்டின் பணக்காரர்களில் சிலரைக் குறித்து கீழ்க்கண்ட விவரத்தைக் கூறியது.

"திங்களன்று இருபத்தியோரு ரயில்வே தொழிலாதிபர்கள் கூடி 3,000,000,000 டாலர் முதலீடுடைய ரயில்வே தொழில் போட்டியினைக் குறித்து விவாதித்தனர். அரை டஜன் கோடீஸ்வரர்கள் கூட அந்நாட்டில் இல்லாதிருந்த காலம் என்று இப்போது வாழ்கின்றவர்கள் சிந்திக்க வேண்டும். தற்போது 4,600 கோடீஸ்வரர் இருக்கிறார்கள். சிலரது ஆண்டு வருமானம் ஒரு மில்-யன் டாலருக்கும் கூடுதலாகும்.

நியூயார்க் பட்டணத்தில் ஒரு தோராயமான கணக்கீட்டின்படி ஆச்சரியப்படும்படியாய், 1,157 தனிநபர் மற்றும் எஸ்டேட்டின் தனிப்பட்ட மதிப்பானது முறையே 1,000,000 டாலர். புரூக்ளினில் 162.



இதேவிதமாய் அவர்களது மதிப்பு 1,000,000 டாலர். ஆகவே இரண்டு பட்டணங்களிலும் மொத்தம் 1,319 கோடீஸ்வரர் உண்டு. ஆனால் அவர்களில் பெரும்பாலோனோரின் சொத்து மதிப்பு 1,000,000 டாலருக்கு மேல் - இவர்கள் பெரும் கோடீஸ்வரர்கள். இவர்களது சொத்து மதிப்பானது மிகவும் வித்தியாசமானது. ஆகவே வருமானத்யையும் அவர்கள் அவ்விதமாகவே ஈட்டுகின்றனர். மிகமுக்கியமான சிலரது வட்டி விகிதமானது ஒரு முழு எண்ணாக மதிப்பிடப்பட்டு கூறப்படுவதாவது: ஜான் D. ராக்பெல்லருடையது 6%; வில்-யம் வேல்டினாஃப் ஆஸ்டருடையது 7%; ஜெ.கால்டின் எஸ்டேட், கூட்டாக இருந்து செயல்படுவது இன்னும் கூட பிரிக்கப்படாமல் இருப்பது 4%; கொர்நெ-யு வான்டர்பில்ட்டுடையது 5%; மேலும் வில்-யம் கே. வேன்டர்பில்ட்டுடையது 5%.

மேலும் வளர்ந்துகொண்டே வரும் அரை ஆண்டு கூட்டுவட்டியின் மதிப்பினை மறுபடியும் முதலீடு செய்ய அனுமதிக்க ஐந்து பேரின் வருடாந்திர மற்றும் தினசரி வருமானமானது கீழே கூறப்பட்டுள்ளது:

| | | டாலர் | |
|---|---|---|---|
| | | வருடத்துக்கு | தினசரி |
| வில்-யம் வேல்டார்ஃப் ஆஸ்டர் | - | 8,900,000 | 23,277 |
| ஜான் டி.ராக்பெல்லர் | - | 7,611,250 | 20,853 |
| ஜெ. க்ளெவுட் எஸ்டேட் | - | 4,040,000 | 11,068 |
| கொர்னெ-யு வான்டர்பில்ட் | - | 4,048,000 | 11,090 |
| வில்-யம் கே.வான்ட்ர்பில்ட் | - | 3,795,000 | 10,397 |

மேலே கூறப்பட்டுள்ளது ஒரு தோராயமான கணக்கீடு : 17 வருடங்களுக்கு முன்பு திரு.ராக்பெல்லர் அவர்களுக்கு எண்ணெய் ஆலைகளில் கிடைத்த காலாண்டு லாப பங்கு 4 மில்-யன் டாலராகும். அதே முதலீடு தற்போது அவருக்கு இன்னும் பெரியத் தொகையை ஈட்டித் தருகிறது.

நயாகரா பால்ஸ் ரெவ்யூ பத்திரிக்கை தற்போதைய நூற்றாண்டின் தொடக்கத்தில் கீழ்கண்டதொரு எச்சரிக்கையை வெளியிட்டது :

"தற்போது அமெரிக்க நிறுவனங்களை அச்சுறுத்தும் மிகப்பெரியதொரு ஆபத்து என்னவெனில் கோடீஸ்வரர்கள் தனிமனிதனாய் பெருகிவருகின்றதொரு சூழ்நிலையே; ஏனெனில் இதன் பலனாக பெருத்த செல்வமும் பணமும் தனிப்பட்டவருடைய கரங்களையே சென்றடைந்து விடுகின்றன. சமீபத்தில் நியூயார்க் நகரின் பிரபலமானதொரு பத்திரிக்கை ஒரு புள்ளிவிவரத்தை கொடுத்தது. இது தற்போதைய இக்கட்டான நிலைமையை இன்னும் வெளிப்படுத்திக் காட்டி அனைவரது கவனத்தையும் திருப்புகிறதாய் இருக்கிறது. கீழ்க்கண்ட பட்டியல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒன்பது பெரும் செல்வந்தர்களுடைய விவரங்களை கூறுகிறது.

| | | |
|---|---|---|
| வில்-யம் வால்ட்ராஃப் ஆஸ்டர் | - $ | *150,000,000* |
| ஜே.கவுல்ட் | - | *100,000,000* |
| ஜான் டி.ராக்ஃபெல்லர் | - | *90,000,000* |
| கொர்ந-யு வான்டர் பில்ட் | - | *90,000,000* |
| வில்-யம் கே. வான்டர் பில்ட் | - | *80,000,000* |
| ஹென்றி எம்.பிளேக்லர் | - | *60,000,000* |
| ஜான் எல்.பிளேர் | - | *50,000,000* |
| ரசல் சேக் | - | *50,000,000* |
| கா-ங் பி.ஹன்டிங்டன் | - | *50,000,000* |
| மொத்தம் | - $ | *720,000,000* |

"இந்த முதலீடுகள் மூலம் கிடைக்கும் சராசரி வட்டியை கணக்கிட்டால் கீழ்கண்டபடி இருக்கும்:

| | | வருடம் | தினசரி |
|---|---|---|---|
| ஆஸ்டர் | - $ | *9,135,000* | *25,027* |
| ராக்பெல்லர் | - | *5,481,000* | *16,003* |
| கவுல்ட் | - | *4,040,000* | *11,068* |
| வான்டர்பில்ட் சி. | - | *4,554,000* | *12,477* |
| வான்ட்ர்பில்ட் டபுள்யூ.கே. | - | *4,048,000* | *11,090* |
| பிளாக்லெர் | - | *3,036,000* | *8,318* |
| ப்ளேர் | - | *3,045,000* | *8,342* |
| சேக் | - | *3,045,000* | *8,342* |
| ஹன்டிங்டன் | - | *1,510,000* | *4,137* |



"இந்த மனிதர் யாவருமே எளிமையாகவே வாழ்கின்றனர். ஆகவே தங்களது தினசரி, வருடாந்திர வருமானத்தின் ஒரு பகுதியைக் கூட அவர்களால் செலவு செய்துவிட முடியாது என்பது மிகத் தெளிவாய் தெரிகிறது. ஆகவே தேவைக்கும் அதிகமான மீதமுள்ள திரளான பணம் மறுபடியும் வேறு முதலீடுகளாக மாறி இந்த தனி நபர்களின் வருமானம் இன்னும் கூடிக்கொண்டே போகிறது. வான்டர்பில்ட் அவர்களது குடும்பத்தினர் தற்போது இத்தனை திரளான பணத்தை உடையவர்களாக இருக்கின்றனர்: (இந்த புள்ளிவிவரத்தை காட்டிலும் சில வருடங்களில் வருமானம் கணிசமாக உயர்ந்து இருக்கிறது)

| | | |
|---|---|---|
| கொர்நே-யு வான்டர் பில்ட் | - $ | *90,000,000* |
| வில்-யம் கே. வான்டர் பில்ட் | - | *80,000,000* |
| பிரெட்ரிக் W. " | - | *17,000,000* |
| ஜார்ஜ் டபுள்யூ " | - | *15,000,000* |
| திருமதி. எ-யட் எஃப் ஷெப்பர்ட் | - | *13,000,000* |
| திருமதி. வில்-யம் டி.சோலேனி | - | *13,000,000* |
| திருமதி. ஹேமில்டன் மெக் டூம்பி- | - | *13,000,000* |
| திருமதி. டபுள்யூ.சேவார்ட் வெப் | - | *13,000,000* |
| மொத்தம் | - $ | *254,000,000* |

"ஸ்டான்டர்டு ஆயில் கம்பெனியின் மூலம் பெருகிவிட்ட மிக பிரம்மண்டமான சொத்துக்கள் இன்னும் உண்டு. இவை ஸ்டான்ட்ர்டு ஆயில் கம்பெனியாரால் மேற்கொள்ளப்பட்டு செலவிடப்பட்டும் விட்டன. அதன்மூலம் பெறப்பட்ட மதிப்பின் விவரம்:

| | | |
|---|---|---|
| ஜான் டி.ராக்பெல்லர் | - $ | *90,000,000* |
| ஹென்றி எம்.பிளேக்லர் | - | *60,000,000* |

| | | |
|---|---|---|
| வில்-யம் ராக்பெல்லர் | -$ | 40,000,000 |
| பெஞ்சமின் ப்ரூஸ்டர் | - | 25,000,000 |
| ஹென்றி ஹெச்.ரோகர்ஸ் | - | 25,000,000 |
| ஆ-வர் ஹெச்.பேனி (க்ளீவ் லான்ட்) | - | 25,000,000 |
| டபிள்யூ.எம்.ஜி.வார்டன் (பிலடெல்பியா) | - | 25,000,000 |
| ஜாஸ்.பிராட் எஸ்டேட் (புரூக்-ன்) | - | 25,000,000 |
| ஜான்.டி.ஆர்ச் போல்ட் | - | 10,000,000 |
| மொத்தம் | - $ | 325,000,000 |

"இந்த சொத்துக்களை எட்டு அல்லது ஒன்பது பேரின் கரங்களில் சேர்க்க வெறும் இருபது வருடங்களே பிடித்தது. இங்கே அதன்பின் ஒரு ஆபத்தும் இருக்கிறது. கவுல்ட், வான்டர்பில்ட்ஸ் மற்றும் ஹன்டிங்டன் ஆகியோரின் பிடியிலேயே அமெரிக்க நாட்டில் மிகப்பெரிய ரயில்வே இருந்தது. அதுமட்டுமன்றி சேக், ஆஸ்டர்ஸ் மற்றும் பிறரது கட்டுப்பாட்டில் நியூயார்க்கின் மீதமுள்ள நிலப்பரப்பு இருக்கிறது. இவற்றின் மதிப்பு தொடர்ந்து பெருகிக் கொண்டே இருக்கிறது. கூட்டு வியாபாரத்தினாலும், இயற்கையாகவே அவை ஓரிடத்தில் ஒன்று சேருவதாலும் இந்த ஒன்பது குடும்பங்களுடைய சொத்தானது இருபத்தைந்து வருடத்தில் $. 2,754,000,000 ஆகும். வில்-யம் வால்ட்ராஃ ஆஸ்டர் மட்டும் வெறும் கூட்டு லாபத்தின் மூலமாகவே அவர் இறப்பதற்குமுன் 1000 மில்-யன் டாலர் மதிப்புள்ள சொத்துக்களைப் பெறுவார். இந்தத் தொகையானது வான்டர்பில்ட்ஸ் அவர்களுடையதைப் போல் அவரது குடும்ப வாரிசுகளைப் போய் சேரும். இதன் மூலமாக ஒரு பிரபு வம்சத்துக்குரிய சொத்துக்கள் உருவாகி பொதுநலத்துக்கு பெரிதும் தீமையை விளைவிக்கும். மேலும் பிறப்பினாலோ அல்லது திறமையினாலோ செல்வந்தராதல் கிரேட் பிரிட்டனுக்கு பெரிதும் தீங்கானதாக அமெரிக்கர்கள் கருதுகிறபடி ஒரு அசாதாரண அபிப்பிராயமும் உருவாகும்.

"இன்னும் மாபெரும் சொத்துக்கள் வெகு சிலரிடமே இருக்கின்றபடியால் பட்டியல் கீழ்க்கண்டபடி இருக்கும் :

| | | |
|---|---|---|
| வில்-யம் ஆஸ்டர் | -$ | 40,000,000 |



| | | |
|---|---|---|
| -லேன்ட் ஸ்டான்ஃபோர்ட் | - $ | 30,000,000 |
| திருமதி.ஹெட்டி கிரீன் | - | 30,000,000 |
| பி-ப் டி.ஆர்மர் | - | 30,000,000 |
| எட்வர்ட் எஃப் சியர்லஸ் | - | 25,000,000 |
| ஜெ.பியர்பன்ட் மார்கன் | - | 25,000,000 |
| சார்லஸ் கிராக்கர் எஸ்டேட் | - | 25,000,000 |
| டேரியஸ் ஓ.மில்ஸ் | - | 25,000,000 |
| ஆன்ரூ கார்னிக் | - | 25,000,000 |
| இ.எஸ்.இக்கின்ஸ் எஸ்டேட் | - | 20,000,000 |
| ஜியார்க் எம்.புல்மேன் | - | 20,000,000 |
| மொத்தம் | - $ | 295,000,000 |

"இதன் மூலம் ஏறக்குறைய கற்பனைக்கு எட்டாத அளவிற்கு முதலீடுகள் அநேகரிடமிருந்து எடுக்கப்பட்டு வெகுசிலரிடமே சேர்க்கப்படுகிறதை நாம் காண்கிறோம். இந்த விரக்தியான கேள்விக்கு சமாதானமானதொரு பதிலை அளிக்க மனிதனிடத்தில் சக்தி இல்லை. இது மோசமான நிலையி-ருந்து படுமோசமான நிலைமைக்கே சென்றடையும்."

## சில அமெரிக்க கோடீஸ்வரர்களும் அவர்கள் அந்த கோடிகளை பெற்ற விதமும்

ரெவ்யூஸ் ஆஃப் ரெவ்யூஸ் என்ற பத்திரிக்கையில் "மிகவும் படிப்பினைக்குரியதும், செல்வந்தர்களின் ஆதிக்கத்தின் பலவகை செல்வாக்குகளைக் குறித்த அதன் மிகவும் முற்போக்கான கண்ணோட்டத்தின் ஒரேயொரு குறையோடு" கீழ்கண்ட வார்த்தைகளைக் கூறுகிறார்:

"கார்ன் ஹில் பத்திரிக்கையில் ஒரு அமெரிக்கர் தன்னுடைய சுய அனுபவத்தின் அறிவில், மாபெரும் குடியரசு நாட்டின் அநேக கோடீஸ்வரர்களின் கதையை மிகுந்த கரிசனையுடன் கூறுகிறார்; ஆனால் அவர் தன்னைக் குறித்து வெளியிட விரும்பவில்லை. அவரது கூற்றுப்படி தலா நாற்பது மில்-யன் டாலர்களை உடைய 4000

கோடீஸ்வரர்கள் தங்களிடம் உள்ளதில் எழுபத்தாறு பில்-யன் கொடுத்தால் நாட்டின் மொத்த சொத்து மதிப்பாகிவிடும். அதோடு மீதி உள்ள பணத்தை ஒவ்வொரு குடிமகனுக்கும் தலைக்கு 500 டாலர் வீதம் 45 வருடம் கொடுத்தாலும், இன்னும் அவர்களுக்கு மீதத்தை வைக்கும். கோடீஸ்வரர்கள் பிற வகுப்பினரை ஏழைகளாக்காமல் இன்னும் பணக்காரர்களாக ஆக்கியதின் மூலமே இவ்வளவுக்கு வளர்ந்து விட்டார்கள் என்று இவர் வாதிடுகிறார்.

“முதல் வான்டர் பில்ட் கோடீஸ்வரராகிய படகு சங்கத் தலைவர் வான்டர்பில்ட் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு பிறந்தவரே. இவரது முதலீடானது வெறும் காலும், கா- பாக்கெட்டும், தனது அதிர்ஷ்டத்தின் மீதான நம்பிக்கையுமே ஆகும். அநேக அமெரிக்க செல்வந்தர்களின் மூலதனமும் இதுவாகவே இருந்தது. ஆறு வயது முதல் பதினாறு வயது வரையிலான இவரது கடின உழைப்பானது இவருக்கு 2வது இடத்தையும் மிகுந்த தெளிவான முதலீட்டையும் அதாவது 100 டாலரையும் கொடுத்தது. இந்தப் பணமானது ஒரு சிறு படகின் மீது முதலீடு செய்யப்பட்டது. பிறகு அந்த படகை உபயோகித்து நியூயார்க்கிற்கு காய்கறிகள் ஏற்றிச் செல்லும் ஒரு வியாபாரத்தைத் தானே துவங்கினார். தனது 20வது வயதில் அவர் திருமணம் செய்து கொண்டார். பின் கணவன்-மனைவி இருவருமே பணம் புரட்டுகிறவர்களாகிவிட்டனர். அந்தப் பெண்மணி ஒரு ஓட்டலை நிறுவினார். 3 வருடங்களுக்குப் பிறகு 10,000 டாலரை ஈட்டினார். அதன்பிறகு பணமானது படுவேகத்தில் சேரத்துவங்கினது. அதுவும் கட்டுக்கடங்காமல் போனது. உள்நாட்டுக் கலவரத்தின் போது, ஒரேயொரு படகில் 100 டாலருடன் தன் வியாபாரத்தை துவக்கிய வா-பன், 800,000 டாலர் மதிப்புள்ளதொரு படகினை நாட்டுக்கு இனாமாக கொடுக்க முடிந்தது. அதன் பிறகும் கூட தனது பொருளாதாரத்திலும், தன் படகுத் துறையிலும் மிகவும் சௌகரியமாய் எந்த நெருக்கடியும் இல்லாமலேயே இருந்தார். 70வது வயதில் 70 மில்-யன் சொத்துக்களுக்கு உரியவரானார்.

“ஆஸ்டர் கம்பெனியின் சொத்துக்கள் யாவும் ஒரேயொரு மனிதனின் மூளையைக் கொண்டு வளர்ந்து, மாபெரும் தேசத்தின் இயல்பான வளர்ச்சியிலும் ஆதாரப்பட்டிருந்தது. ஜான் ஜேக்கப் ஆஸ்டர் என்ற ஒருவர் மட்டுமே அவரது நான்கு தலைமுறைகளில் செல்வம் திரட்டுபவராக இருந்தார். நியூயார்க் நகர சொத்துக்களில் தனது பணத்தை முதலீடு செய்து அவர் செல்வம் திரட்டினார். இவ்வகையிலான தொகையானது ஒரு குறிப்பிட்ட அளவுடையதே. ஏனெனில் இந்த நகரம் ஒரு தீவில் இருந்தது. இதனைத் தொடர்ந்து ஜனநாயகம் வளர்ந்ததன் விளைவாக இந்த நகரமும் வளர்ந்து பதினெட்டாம் நூற்றாண்டில் இந்த சிறிய முதலீடானது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய அமெரிக்க செல்வ செழிப்புக்கு வழி வகுத்தது. ஆகவே கோடீஸ்வரர் என்று சொல்லக்கூடிய தகுதியினை முதலும் கடைசியுமான ஆஸ்டர் அவர்களுக்கு பெற்றுத்தந்தது. நூற்றுப்பத்து ஆண்டுகளுக்கு முன் ஜான் ஜேக்கப் ஆஸ்டர் என்ற இவர் தனது தகப்பனின் இறைச்சிக் கடையில் உதவியாளராக பணிசெய்து அலுத்துப்போய் புதிய உலகில் தனது அதிர்ஷ்டத்தை முயன்று பார்த்தார். சொல்லப்போனால் கப்ப-ல்தான் தனது செல்வம் முழுவதையும் ஈட்டினார். கப்ப-ல் ஒரு சமயம் இவர் வயதான ஒரு தோல் -வியாபாரியை சந்தித்தார். அவர் இவருக்கு இந்திய-தோல் வியாபார நுணுக்கங்களை கற்றுக்கொடுத்தார். இதை அவர் தனது வியாபாரமாக்கிக் கொண்டு பணம் சம்பாதிக்க ஆரம்பித்தார். பிறகு ‘சாரா டாட்’ என்ற சுறுசுறுப்பான இளம் பெண்ணை மணந்தார். சாராவும் ஜானும் சேர்ந்து தங்களது கடையில் தோல்பெல்ட்டுகளை ஒழுங்குபடுத்துவதிலேயே தங்களின் மாலை நேரம் முழுவதையும் செலவிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.... 15 வருடங்களில் கணவன் மனைவியாகிய இவர்கள் 2,500,000 டாலர்களை ஈட்டிவிட்டனர்... அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு அதிர்ஷ்டகரமான பத்திர முதலீடு வந்தது. அப்போது மிகவும் குறைவான விலையில் இருந்த அது ஜான் ஜேக்கப்பினுடைய சொத்துக்களை இரட்டிப்பாய் பெருக்கியது. அதன் பிறகு அவரது செல்வம் யாவும் வீட்டுமனை தரகர் தொழி-ல் முதலீடு செய்யப்பட்டு இந்த நாள் வரைக்கும் இருக்கிறது.

“லீலேன்ட் ஸ்டான்போர்டு, சார்ல்ஸ் க்ரூக்கர், மார்க் ஹப்கின்ஸ் மற்றும் கா-ஸ் பி.ஹன்டிங்டன் யாவரும் 1849ல் பண ஆசைக் கொண்டு க-போர்னியாவுக்குச் சென்றனர். அப்போது

கண்டம் விட்டு கண்டம் செல்லும் ரயில்வே ஆரம்பிக்கப்பட்டபோது இந்த நான்கு பேரும் அந்தத்துறையில் "மில் - யன்"கள் அடங்கியிருப்பதை கண்டனர். உடனே யூனியன் பசிபிக் என்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். 1850ல் ஒரு பைசாக்கூட இல்லாதவர்களாயிருந்த நால்வரும் இன்று 200,000,000 டாலர்களை மொத்தமாக சேர்த்துவிட்டனர்.

"லீலேன்ட் ஸ்டான்போர்டு என்கிற இந்த நால்வரில் ஒருவர் குடும்பத்தை ஏற்படுத்த முற்பட்டார்; ஆனால் 10 வருடங்களுக்கு முன் அவரது ஒரேமகன் இறந்துபோனான்; பிறகு அந்த மகனின் நினைவாக ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவ முடிவு செய்தார். அதை அவர் ராஜரீக அளவில் செய்தார். அவர் உயிருடன் இருக்கும் போதே 86,000 ஏக்கர் மதிப்புடைய மூன்று பண்ணை நிலத்தை டிரஸ்டுகளுக்கு சட்டப்படி ஒழுங்கு செய்தார். அதற்கென தங்களுடைய $.6,000,000 மதிப்புடைய திராட்சைத் தோட்டத்தினை அளித்தார். இதனோடு கூட இவர் $.14,000,000 மதிப்புடைய பங்கு முதலீட்டையும் சேர்த்தார்; அதுமட்டுமன்றி இவரது மரணத்துக்குப்பின் $.2,500,000 மதிப்புடைய பரம்பரை சொத்தும் இந்த பல்கலைகழகத்தை வந்து சேர்ந்தது. மொத்தம் $.22,500,000 மதிப்புடைய சன்மானம் தனி ஒரு மனிதனால் ஒரு கல்வி நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டதென்பது 'உலக சாதனையாகும்.' அவரது மனைவியும் தனது சொத்துக்களை $.10,000,000ஐ இந்த பல்கலைக்கழகத்துக்கு அளிக்க உத்தேசிப்பதாகவும் அறிவித்தார்.

"அமெரிக்க கோடீஸ்வரர்களின் சரித்திரத்திலேயே மிகவும் குறிப்பிடும்படியான பணம் சம்பாதிக்கும் செயலானது "ஸ்டேன்டர்டு ஆயில் கம்பெனி டிரஸ்ட்" டால் சாதிக்கப்பட்டது:

"30 வருடங்களுக்கு முன்பு க்ளீவ்லேண்ட் (ஒஹியோ மாகாணம்) டில் வசித்த 5 இளைஞர்கள், பார்க்கப்போனால் யாவருமே ஏழைகள் (எல்லாம் சேர்ந்து தங்களுடைய சொத்து என்று $.50,000 ஐ கூட சொல்ல முடியாது). இவர்கள் பெட்ரோ-யத்தில் நல்ல பணப்புழக்கத்தின் சாத்தியத்தை கண்டனர். உண்மையிலேயே இதைக் குறித்து சொல்லவேண்டுமாயின் முத-ல் பிழைப்புக்காகவே அங்கு சென்றனர். அதை பெறவும் செய்தனர். இன்று இந்த 5 பேர் அடங்கிய குழுவின் சொத்து $. 600,000,000... ஜான் டி. ராக்பெல்லர் என்பவர் இந்த டிரஸ்ட்டின் மூளையும் நரம்பும் (அத்தனை முக்கிய பங்கு) என்று கூறப்பட்டார். இவர் மிகவும் சிடுசிடுத்த முக பாவனையும் சிறிய கண்களும் உற்சாக சுபாவமும் உடையவராகையால் 'பேராசைபிடித்த ஏகாதிபதி' என்று அவரை அழைப்பது வழக்கம். இவரது தற்போதைய பொழுதுபோக்கு கல்வி, இந்த பொழுதுபோக்கை மிகவும் திடமாய், தைரியமாய் மேற்கொண்டார். 'சிக்காகோ பல்கலைக்கழகத்தை' இவர் தன்வசம் எடுத்துக்கொண்டு ஏழு மில்-யன் டாலரை இரண்டாவது பெரிய ஜனநாயக நகரத்தின் கருவூலத்தில் செலுத்தினார்."



திரு.தாமஸ் ஜி.ஷீர்மென் என்ற நியூயார்க் புள்ளிவிவர வல்லுனர் "போரம்" (Forum) என்ற பத்திரிக்கையில் எழுபது அமெரிக்கர்களின் பெயர்களை வெளியிட்டார். இவர்களது சொத்து மதிப்பு $.2,700,000,000, ஒவ்வொருவரும சராசரி $.38,500,000 உடையவர்கள்; பத்து பேருடைய சராசரி சொத்துமதிப்பு $.100,000,000 என்ற ஒரு பட்டியலை வெளியிட்டார். வேறு ஒரு பட்டிய-ல் சராசரி $.25,000,000 சொத்து மதிப்புடைய நூறு பேரை வெளியிட்டார். "இந்த நூறு பேரும் அமெரிக்க பணக்காரரின் வருடாந்திர சராசரி வருமானம் (ஒவ்வொருவரும்) $.1,200,000க்கு குறையாது. $.1,500,000க்கு மேலாகவே இருக்கக்கூடும்."

இந்த விவரங்களைக் குறித்து ஒரு பிரபலமான எழுத்தாளர் (போதகர்.ஜோசியா ஸ்ட்ராங்) கூறுகிறார்:

"வருடத்திற்கு 1,000 டாலரை நூறு பேர் தலைக்கு சம்பாதிக்க கூடுமாயின், இந்த 1000 அமெரிக்க பெரும்பணக்காரரின் வருட வருமானம் அளவிற்கு சம்பாதிக்க அவர்கள் ஒவ்வொருவரும் 1200 (அ) 1500 வருடம் வேலை செய்யவேண்டும். ஒருவேளை ஒரு வேலையாள் ஒரு நாளைக்கு $. 100 சம்பதிக்க முடியுமாயின் அவன் ஒரேயொரு நாள் கூட ஒய்வு எடுக்காமல் தொடர்ந்து 547 வருடம் வரைக்கும் உழைத்தால் கூட இந்த சில அமெரிக்கர்களின் சொத்துமதிப்பளவுக்கு சம்பாதிக்க இயலாது."

கீழ்க்கண்ட பட்டியலானது 1830 மற்றும் 1893ம் வருடத்தில் மிகப்பெரிய பணக்கார நாடுகளின் செல்வத்தை ஒப்பிட்டுக்

காட்டுகிறது. இதைப் பார்க்கும் போது இந்த யுகத்தின் கடைசி நாட்களில் எப்படி பணக்காரர் யாவரும் தேசிய அளவில் "ஒரே கூட்டாக" சேருகின்றனர் என்பதைக் காட்டுகின்றது.

| | | | டாலர் | |
|---|---|---|---|---|
| மொத்த சொத்தின் மதிப்பு | | | 1830 | 1893 |
| கிரேட் பிரிட்டனின் | " | - $ | 16,890,000,000 | $ 50,000,000,000 |
| பிரான்சின் | " | - | 10,645,000,000 | 40,000,000,000 |
| ஜெர்மெனியின் | " | - | 10,700,000,000 | 35,000,000,000 |
| அமெரிக்கஐக்கிய நாட்டின் | " | - | 5,000,000,000 | 72,000,000,000 |

அமெரிக்க ஐக்கிய நாட்டின் தோராயமான சொத்துமதிப்பின் பிரிவுகளை உங்களுக்குக் கீழ்க்கண்டபடி தருகிறோம். வாசிப்பவர் இதைக் கண்டு புள்ளி விவர நிபுணர்கள் இந்த பெரிய காரியத்தை பற்றி எவ்விதமானதொரு முடிவுக்கு வந்திருக்கின்றனர் என்றதொரு எண்ணம் நமக்கு வரும்:

| | | |
|---|---|---|
| மனைவிற்பனை (நகரம், பட்டணத்தில்) | - $ | 15,500,000,000 |
| மனைவிற்பனை (நகரம், பட்டணம் தவிர) | - | 12,500,000,000 |
| தனிநபர் சொத்துக்கள் (விவரம் தரவில்லை) | - | 8,200,000,000 |
| ரயில்ரோடு மற்றும் அதன் கருவிகள் | - | 8,000,000,000 |
| தொழில் உற்பத்தியில் முதலீடு | - | 5,300,000,000 |
| உற்பத்தியான பொருட்கள் | - | 5,000,000,000 |
| தயாரிப்புகள் (கம்பளி உட்பட) | - | 3,500,000,000 |
| வெளிநாடுகளில் உள்ள சொத்து மற்றும் முதலீடு | - | 3,100,000,000 |
| பொதுகட்டிடங்கள், ஆயுதகிடங்கு, போர்க்கப்பல் | - | 3,000,000,000 |
| பண்ணைகளில் உள்ள கால்நடைகள் | - | 2,480,000,000 |
| பட்டணம், நகரத்தில் உள்ள கால்நடைகள் | - | 1,700,000,000 |
| பணம், வெளிநாட்டு, உள்நாட்டு நாணயம், வங்கி நோட்டுகள் ஆகியவை | - | 2.130,000,000 |
| பொதுநிலம் (1.25 டாலர் ஒரு ஏக்கருக்கு) | - | 1,000,000,000 |
| தாது பொருட்கள் (எல்லாமும் சேர்த்து) | - | 590,000,000 |
| மொத்தம் | - $ | 72,000,000,000 |



மேலும் அமெரிக்க நாட்டின் சொத்துக்களானது வாரத்துக்கு 40 மில்-யன் அல்லது வருடத்துக்கு 2 பில்-யன் டாலரளவுக்கு பெருகி வருவதாக சில வருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது.

(அமெரிக்க நாட்டின் மக்களது தனிப்பட்ட பொதுவான கடன்தொகை மொத்தம் 20 மில்-யன் டாலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.)

கடைசி நாட்களின் இந்த செல்வ குவிப்பானது முக்கியமாய் அமெரிக்க நாட்டினுடையது, இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உலகமெங்கும் உள்ள நாகரீக வளர்ச்சியடைந்த நாடுகளும் உண்மையில் இவ்விதமே இருக்கின்றன. கிரேட்பிரிட்டனின் "சராசரி வருமானம்" உலகின் மிகப் பணக்கார நாடாகிய அமெரிக்காவைக் காட்டிலும் அதிகமாகவே உள்ளது. மேலும் ஜப்பானிலும், சைனாவிலும் கூட சமீபத்தில் அநேக கோடீஸ்வரர்கள் பெருகிவருகின்றனர். 1894ல் ஜப்பானியரால் சீனா தோற்கடிக்கப்பட்டதற்கு, அரசாங்க அதிகாரிகளின் பேராசையே காரணம் என குற்றம் சாட்டப்படுகிறது. அசலான இராணுவ தளவாடங்களுக்கு பெரும்விலை கொடுக்கப்பட்ட போதிலும் அதனைத் தவறாக உபயோகித்து தரக்குறைவான போ-யான பீரங்கி மற்றும் பீரங்கி குண்டுகளை போர் சமயத்தில் விநியோகித்து விட்டனர்.

உண்மையில் செல்வத்தைக் தேடுகிறவர்களில் வெகுசிலரே அதனை கண்டடைகின்றனர். அதற்காக காட்டப்படும் வேகமும், போட்டியும் எப்போதுமே சரிவர பலனை அளிப்பதில்லை. சுயநலத்தின் அழிவானது வெற்றிக்கும் அப்பால் வெகுதொலைவுவரை விரிந்து கிடக்கிறது. இதுகுறித்து அப்-பவுல் கூறுகிறதாவது: "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் (எந்த ஆபத்து வந்தாலும் பணக்காரராக வேண்டும் என்ற திடமான முடிவுடன் இருப்போர்) சோதனைகளிலும், கண்ணியிலும்,

மனுஷரைக் கேட்டிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண (செல்வம்) ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது." *(1தீமோ.6:9,10)* பெரும்பாலானோர் அனுபவ குறைவினால் அதிக சிரத்தை எடுத்தும் நஷ்டத்தையும், ஏமாற்றத்தையும் அடைகின்றனர். வெகுசிலரோ உலகஞானமும் புத்திகூர்மையும் கொண்டு குறைந்த சிரமங்களை எதிர்கொண்டு பெரும்பாலான லாபத்தை அடைகின்றனர். உதாரணத்துக்கு "தென்-ஆப்பிரிக்காவின் தங்கவேட்டை" ஒரு சமயம் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மெனியில் பரவியபோது, உண்மையில் பெரும்பணக்கார முதலீட்டாளர்களிடமும், வங்கிகளிடத்திலும் பரிமாற்றம் செய்யப்பட்டது. இவர்கள் மிகக் குறைந்த சிரமத்துடன் நூற்றுக்கணக்கான மில்-யன் டாலரை சம்பாதித்துவிட்டனர். திடீர் பணக்காரராக வேண்டும் என்ற நடுத்தர வர்க்கத்தின் பேராசையால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. அவர்களது எல்லா சிரமங்களும் பலனற்றுப் போனது. இதன் காரணமாக தங்களுக்கு சாதகமாக இருக்கக்கூடிய எந்த சமூக அமைப்பையுமே ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்திற்கு இந்த நடுத்தரவர்க்கமானது அதிருப்தி மனநிலையுடன் பெரும்பாலும் தயாராகிவிட்டனர்.

## ஏழ்மையின் பெருக்கம்

மேலும் இந்த திரளான வளங்களுடைய உலகில் ஏழைகளும், தேவை உடையவர்களும் உண்மையில் இன்னும் இருக்கின்றனர். இங்கே அநேகரோ கற்பனைக்கெட்டாத அளவு செல்வத்தை குவிக்கவும் செய்கின்றனர். ஆரோக்கியமான எந்த ஆணோ, பெண்ணோ சௌகரியமாய் வாழ இயலவில்லையெனில் அது அவர்களது சொந்த தவறில்லையா? ஏழை வகுப்பினரது வாழ்க்கை படகையும், அதன் துடுப்பையும், பணம்படைத்தவர் உதவியுடன் பராமரிக்கவேண்டும் என்பது அவர்களது ஏழ்மையையும் பிறர்மீது சார்ந்து வாழும் நிலையையும் இன்னும் வளரச்செய்யாதா? ஆதலால், அநேக சந்தர்ப்பங்களில் இருபத்தைந்து வருடங்களுக்குமுன் தாங்களே ஏழைகளாய் இருந்ததும், பின் அவர்களே கடினமாய் வேலைசெய்ய மனதுடையவர்களாய் வேலை செய்ய முடிந்தபடியால் இத்தனை திரளாய் பணம் ஈட்டியதையும் நினைவு கூர்ந்து இந்த விஷயத்தை குறித்து அதிக கரிசனை காட்டுகின்றனர்.



அப்பொழுதி-ருந்து என்ன ஒரு பெரிய மாற்றம் நிகழ ஆரம்பித்தது என்பதையும் அந்த சமயத்தில் அவர்களது சொத்துக்கள் மிகவும் ஆச்சரியமான முறையில் முன்னேறின என்பதையும், திரளான ஜனங்களுடைய நிலைமையோ முக்கியமாய் கடந்த ஏழு வருடங்களில் இன்னும் இழிவானதாகிவிட்டது என்பதையும் அவர்கள் உணரவில்லை. ஆம், யூனியன்களின் பராமரிப்பினால் தற்போதைய காலத்தில் சம்பளங்கள் சற்று சுமாரான அளவில் உயர்ந்திருக்கிறது; ஆனாலும் அநேகருக்கு வேலை கிடைக்காத சூழ்நிலை, இன்னும் அநேககருக்கு பகுதிநேரமும், சிலசமயம் அதற்கும் குறைவான நேரத்திற்குமே வேலை கிடைக்கிறது; அதுமட்டுமன்றி மிகவும் கடினமான பொருளாதாரத்தினால் கௌரவமாயும், நேர்மையாயும் வாழத்தகுந்த நிலை இல்லாமல் இருக்கிறது.

*1893-96*க்கு இடையில் ஒரு குறிப்பிட்ட மந்த நிலை வந்தபோது, வேலையில்லாத இந்த அநேகர் தங்களது நண்பர்களது உதவிகளின் மீது மிகவும் சார்ந்துவிட்டனர். சில நண்பர்களுக்கு உண்மையில் இந்த கூடுதல் பளுவைத் தாங்க இயலாததாகவே இருந்தது. அவ்விதமாய் நண்பர்கள் கிடைக்காதவர்கள் பொது தர்மஸ்தாபனங்கள் மீது வலுக்கட்டாயமாய் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அப்படிப்பட்ட ஸ்தாபனங்களும் அந்த சமயத்தில் போதுமான அளவிற்கு இல்லை.

இந்த *1893*ன் மந்தநிலை ஒரு அலையைப்போல் உலகமெங்கும் பரவியது. அதன் அதிகப்படியான அழுத்தம் இன்னும் கூட பரவலாக உணரப்படுகிறது. வெகுசிலருக்கு மூச்சுவிடும் அளவுக்குச் சற்று இளைப்பாறுதல் கிடைத்தது. ஆனால் வேதம் சொல்லுகிறபடி இந்த வேதனை அலையைப்போலும், காற்றைப் போலும் வரும். "கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருவதுபோல" வரும். *(1தெச:5:3)* ஆகவே வருகின்ற ஒவ்வொரு புயலும் கடைசியான ஒன்று வரும்வரைக்கும் வேகத்தை அதிகரித்துக்கொண்டே இருக்கும். பணவசதியும், சௌகரியமும் உள்ளவர்களுக்கு இந்த ஏழைவகுப்பினரின் ஆதரவற்ற நிலைமையைப் புரிந்துகொள்ள அநேக சமயங்களில் முடியாததாய் இருக்கிறது. இந்த ஏழைக் கூட்டம் பெருகிக்கொண்டே வந்து

எண்ணிக்கையற்றதாகவும் மாறி உள்ளது. நடுத்தர மற்றும் மேல்மட்டத்தவரிடையே உண்மையில் இந்த ஏழைகளின் பரிதாபத்தை யோசித்து அதைக் குறித்து வருந்தினாலும் கூட, இவர்களுக்கென்று ஒரு நிரந்தரமான விமோசனத்தைக் கொடுக்கும் விதத்தில் தற்போதுள்ள சமூக அமைப்பினை மாற்றுவது முற்றிலும் கூடாத காரியம் என்பதை உணர்ந்திருக்கின்றார்கள். எனவே தனது சக்திக்கு ஏற்றவாறு தன் கடமை என்று எண்ணி தன் அருகில் இருக்கும் உதவியற்றோர்க்கு ஏதோ செய்கின்றனர். அதோடு தன் கண்ணில் காணும், காதில் கேட்கும் இந்த பரிதாபநிலையைக் குறித்த விவரங்களைக் கண்டுகொள்ளாமல் அல்லது மறக்க முயற்சி செய்கின்றனர்.

1893ல் வெளியான இந்த பத்திரிக்கை செய்தி அப்போதிருந்த உண்மை நிலையை நமக்கு விளக்குகிறது. இதை "க-போர்னியா அட்வகேட்"டி-ருந்து எடுத்து வெளியிடுகிறோம்:

"நமது பெரும் நகரங்களில் கூடியிருக்கும் பல்லாயிரக்கணக்கான வேலையற்றோரின் கூட்டம் கொடிய காட்சியாய் இருக்கிறது. வேலையோ அல்லது சாப்பாடோ தேவையென்று கதரும் பரிதாபமான குரல் தேசமெங்கும் கேட்கிறது. இந்த வறுமை மிகப்பழமையான தீர்வுகாணாததொரு பிரச்சனையாகும். அது மேலும் இதுவரை சம்பவித்திராததொரு வியாபார நெருக்கடியால் இன்னும் தீவிரமாகிவிட்டது. வேலையில்லா திண்டாட்டம் என்பது நாகரீக வளர்ச்சியோடு கூட தன்னிச்சையாகவே தொடர்ந்து வளர்ந்து கொண்டே வருகிறது. நாகரீக வளர்ச்சியினை விடாமல் பிடித்துக்கொண்டு படர்ந்துவரும் ஒரு கரிய நிழலாக இது இருக்கிறது. நாகரீகம் பெருகப்பெருக இதுவும் தன் அளவிலும், தீவிரத்திலும் கூடவே பெருகிவருகிறது. மனிதன் வாழ்வாதாரத்திற்கு வேலை செய்ய ஆர்வமுடையவனாக இருந்தும் வேலை கிடைக்கவில்லை என்றால் உண்மையில் அப்போது காரியங்கள் மிகவும் அசாதாரணமாக இருக்கிறது. இப்படி இருக்கையில், 'இந்த உலகம் ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வளிப்பதில் கடமைப்பட்டு இருக்கிறது' என்ற பழஞ்சொல்-ல் உண்மை சற்றும் இல்லை. ஆனால் உண்மையில் இந்த உலகம் ஒவ்வொரு மனிதனுக்கும் தன்வாழ்வுக்குரியதை சம்பாதிக்கக்கூடிய சந்தர்ப்பத்தைக் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறது. வேலை செய்ய விரும்பும் ஒவ்வொருவருடைய "வேலை செய்யும் உரிமை" பறிக்கப்படாதபடிக்கு அநேக கோட்பாடுகள் மிகவும் முன்னேறிவிட்டதோடு அநேக முயற்சிகளும் இதற்காக செய்யப்படுகிறது. ஆனால் இவ்வகையான எல்லா முயற்சிகளும் இதுவரையில் தோல்வியையே கண்டிருக்கின்றன. ஒவ்வொரு உழைக்க விரும்பும் நபருக்கும் ஏதாவது ஒரு வேலை கொடுக்கும் விதத்தில் வெற்றிகரமாக இந்த பிரச்சனையை யாராவது தீர்த்துவைப்பாராகில் உண்மையில் அவரே மனித குலத்திற்கே நன்மை புரிந்தவராக இருப்பார். இதன்மூலம் 'அநிச்சையாய் வெறுமையாய்' இருக்கவேண்டிய சாபத்தி-ருந்து மனுக்குலத்தை விடுவிக்கிறவராகவே இருப்பார்."



மற்றுமொரு குறிப்பு சிக்காகோவில் வேலையற்ற நானூறு பேர் எப்படி தெருவீதியில் தங்களை நடத்திச் செல்பவரின் கையில் "எங்களுக்கு வேலை வேண்டும்" என்ற பலகையை பிடித்துக் கொண்டு அணிவகுத்துச் சென்றனர் என்று விவரிக்கிறது. அதற்கடுத்த நாள் பலவிதமான பலகைகளில் "வாழுங்கள் வாழவிடுங்கள்," "எங்கள் குடும்பங்களை ஆதரிக்க எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டும்." "வேலை (அ) உணவு தேவை" என்பது போன்ற வாசகங்களுடன் அணிவகுத்துச் சென்றனர். மேலும் சான்பிரான்சிஸ்கோ நகரில் வேலையில்லாத ஒரு கூட்டமானது தங்கள் கைகளில் "ஆயிரக்கணக்கான வீடுகள் வாடகைக்கு உண்டு, ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகள் இன்றி இருக்கின்றனர்," "பசியும் ஆதரவின்மையும்," "பசிக் கொடுமையால் பிச்சை எடுக்க விரட்டப்பட்டனர்," "எங்கள் விலங்குகளை விலக்கி விடுங்கள் எங்களுக்கு நாங்களே உதவிக் கொள்கிறோம்" என்பது போன்ற பலகைகளை பிடித்துக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

மற்றுமொரு செய்திக் குறிப்பு கூறுகிறது :

"நியூயார்க். என்.ஜெ., ஆகஸ்ட் 21ல் வேலையில்லாதவர்கள் மாபெரும் பேரணியை இன்று நடத்தினர். அவர்களுக்கு முன் சென்ற ஒரு மனிதன் கருப்பு துணியில் வெள்ளைநிற எழுத்துக்களில் 'காலத்தின் கோலம் நான் பட்டினியாய் கிடக்கிறேன் - ஏனெனில் அவர் கொழுத்திருக்கிறார்' என்ற கொடியைப் பிடித்துச் செல்கிறான்.

அந்த வாசகத்தின் கீழுள்ள ஒரு படத்தில் மிகவும் தின்று கொழுத்த பருமனானதொரு, நீண்ட தொப்பியுடன்கூடிய மனிதனின் உருவமும் அவனது அருகில் பட்டினியுடன் உள்ள ஒரு தொழிலாளியின் உருவமும் வரையப்பட்டிருக்கிறது."

மற்றொரு பத்திரிக்கை ஆங்கில நிலக்கரி சுரங்கத்தின் வேலை நிறுத்தத்தை விவரிக்கிறது:

"மெய்யான விரக்தியும், பட்டினியும் மிகவும் வேதனையுடன் இங்கிலாந்து முழுவதும் பரவி வருகிறது. மேலும் தொழிற்சாலைகள் மூடப்படுதலும், ரயில்வேயின் ஒழுங்கற்ற நிலைமையும் கொடூரமான தேசியமயமான துயருக்குள் கொண்டுச் செல்ல முக்கிய பங்கு வகிக்கின்றன... மேலும் உண்மையான காரணம் என்னவெனில் சுரங்கங்களைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் அதன் நில உரிமையாளர்களுக்குத் தரவேண்டிய உரிமைபங்கானது மிகவும் அதிகமாகும். இந்தச் சுரங்கத் தொழில்களின் கழுத்தில் பெரிய இயந்திரக் கல்லை கட்டியது போலவே இந்த சில கோடீஸ்வரர்களின் நிலக்கரி உரிமைப் பங்கு மிக அதிகமாக உள்ளது. மேலும் இந்த பிரபலமான சீமான்கள் மீது கோபமுடைய பொதுமக்களின் மனசாட்சியானது இந்த இரண்டு காரியங்கள் மீதும் திடீரெனப் பாய்கின்றது.... தீவிரவாத பத்திரிக்கைகள் அமெரிக்காவின் டிரஸ்டுகளின் பட்டியலைப் போல பிரபுக்களின் பெயரை தொகுத்து ஒரு வினோதமான பட்டியலை வைத்திருக்கின்றன. இதில் அவர்கள் தேசத்தின் சொத்தி-ருந்து சம்பாதிக்கும் மிகப்பெரிய வரித்தொகையைக் காட்டுகின்றன.

"உணவுக்கான ஓலம் நகரத்தி-ருந்து எழும்புகிறது. இது என்றுமில்லாத அளவுக்கு ஆழமும், அகலமும், நாரசமுமாய் இருக்கிறது. அது கொஞ்சம் கொஞ்சமாய் பசியால் அரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அடிவயிற்றி-ருந்தும், பலவீனமான உட--ருந்தும் வருகிறது. வேலைக்காக நாடோடியைப் போல் தெருக்களில் அலைந்து திரியும் மனிதரிடமிருந்து இது வருகிறது. வெறுமையான அறைக்குள் உதவியற்ற நிலையில் அமர்ந்திருக்கும் பெண்களிடமிருந்து இது வருகிறது. இது குழந்தைகளிடமிருந்து வருகிறது.



"நியூயார்க் நகரில் அதுவரைக்கும் அறிந்திராததொரு சங்கடமான உதவியற்ற நிலையை ஏழைகள் சந்தித்து விட்டனர். உண்மையில் இந்த வேதனை எத்தனை கொடூரமானது. இந்த வறுமை எத்தனை பயங்கரமானது என்று உயிருடன் வாழும் எந்த மனிதனுமே புரிந்துகொள்ள முடியாது. எந்த ஒரு மனிதனும் இதை காணவே முடியாது. எவருடைய கற்பனைக்கும் கூட இது எட்டாதாகும்.

"இதை வாசிக்கின்ற சிலர் உணவு இல்லாமல் இருப்பது என்றால் என்ன என்று புரிந்துக் கொள்ள முடியும். மிகவும் அச்சப்படவேண்டியதாகிய இது இவர்களுக்கு புக-டமும் அளிக்க இயலாது. அவர்கள் கூறலாம், 'உண்மையில் எங்காவது ஏதாவது சாப்பிட இந்த ஜனங்களுக்கு கிடைக்கலாம், இவர்கள் வாழ்விற்கு ஆதரவளிக்க தங்கள் நண்பர்கள் யாரிடமாவது செல்லலாம்.' இவ்விதம் அடிப்பட்டவர்களுக்கு 'எங்காவது' என்ற ஒன்று அங்கு கிடையவே கிடையாது. அவர்களது நண்பர்களோ இவர்களைப் போலவே ஆதரவற்றவர்களாகவே இருக்கிறார்கள். பட்டினியால் மிகமிக ந-வடைந்துவிட்ட மனிதர் பலர் உண்டு. இவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டாலும் அதைச் செய்ய இவர்களுக்கு பெலனில்லை."

சான்பிரான்சிஸ்கோவின் "எக்ஸாமினர்" பத்திரிக்கையின் ஆசிரியர் கூறுகிறதாவது:

"இது எப்படி இருக்கிறது? உண்பதற்கு நமக்கு ஏராளம் இருக்கின்றது. ஆனால் விவசாயிகளோ அதி-ருந்து பலன் எதுவும் தங்களுக்கு வரவில்லை என்று புகார் கூறுகின்றனர். நமக்கு அணிந்து கொள்ள எவ்வளவோ இருக்கும் போது தங்களுடைய உற்பத்தியில் பொருட்களை வாங்க ஆள் இல்லாததால் பருத்தி மற்றும் கம்பளி ஆலைகள் மூடப்படுகின்றன. ரயில்வேக்கள் மூலம் சுமந்து செல்லப்படும் நிலக்கரி எவ்வளவாய் இருக்கிறது. அதை வாங்குகிறவர்களிடம் அது சென்றடைகின்றன. கட்டிட வேலையாட்களுக்கு வேலையே இல்லாத அளவுக்கு அதிகமான வீடுகள் நம்மிடையே உண்டு. நமது சரித்திரத்திலேயே மிகவும் செழிப்பானதாகக் கூறப்படும் காலகட்டத்தை விட தற்போது

வாழ்வதற்கு தேவையான எல்லா வசதிகளும், சௌகரியங்களும் அத்தனை அதிகமாகவே இருக்கின்றன. தேசத்தில் போதுமான அளவுக்கு உணவும், உடையும், உறைவிடமும், எரிபொருட்களும் யாவருக்குமே இருக்கும் போது, ஏன் நாட்கள் இத்தனை கொடியதாக இருக்கிறது? இயற்கையானது குற்றம் சுமத்தப்பட வேண்டியதில்லை என்று தெளிவாய் தெரிகிறது. அப்படியானால் யார் தான் காரணம்? எது தான் காரணம்?

“அமெரிக்க ஐக்கியநாடு எதிர்கொண்டிருக்கும் மிகப்பெரிய பிரச்சனை வேலையில்லா திண்டாட்டம். “பராட் ஸ்ட்ரீட்” டால் சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரம் கூறுகிறபடி முத-ல் அமெரிக்க நாட்டின் 119 நகரங்களில் 801,000 தினக்கூ-கள் வேலையில்லாமல் வருட துவக்கத்தில் இருந்தனர். இவர்கள் ஆதரிக்கவேண்டிய இவர்களது குடும்பத்தினரது எண்ணிக்கை சுமார் 2,000,000 பேர். இந்த 119 நகரங்களும் வருட துவக்கத்தில் வேலையற்ற கூ-த் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் சராசரியை நாடு முழுவதற்கும் கணக்குப்பார்த்தால் அது ஏறக்குறைய 4,000,000 பேராகவும் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களின் எண்ணிக்கை சுமார் 10,000,000 பேராகவும் இருக்கும். வேலையில்லாதவர்கள் எப்போதும் நகரத்தை நாடி வந்துவிடுவதால் இதில் 1/4 பாகத்தை குறைத்துக் கணக்கிடலாம். இவ்விதம் கழித்தப்பின் கணக்கிடப்பட்டாலும் வேலையற்ற கூ-யாட்களின் எண்ணிக்கையானது இதயத்தை உருக்குமளவுக்கு எண்ணிலடங்காததாய் இருக்கும்.

“வறுமை என்கிறதான இந்த கொடுமையான பாதை ‘ஒன்றுமில்லாத ஏழ்மை நிலை’ க்கே கொண்டு செல்கிறது. இது நீண்ட தூரம் பிரயாணித்து ஐரோப்பாவிலும் நிலவுகிறது. கடலுக்கு இப்பக்கமுள்ள செழுமையான சமூகத்தாரைக் காட்டிலும், பழமை உலகின் ஆட்சியாளர்களுக்கே இந்த பிரச்சனையை நன்றாக கையாளத் தெரிந்திருக்கிறது. ஏழையின் வீடுதான் வாழ்வின் முடிவு என்று சொல்லத்தக்கதாய் அநேக நகரங்களில் ஐரோப்பாவின் சம்பளவிகிதமானது அத்தனை குறைவாகவே இருக்கிறது. முற்காலத்திற்கு சமமாய் தொழிலாளிகளை நிறுத்த எத்தனை தொழிற்சாலைகள் வந்தும், சிக்கனமாய் இருந்தும் முடியாமல்



போகிறது. வருமானத்துக்கும் செலவுக்கும் இடையே மிகமிகச்சிறிய இடைவெளியே இருக்கிறது. இதனால் சில நாட்கள் நோய்வாய்ப்பட்டாலோ அல்லது வேலை இல்லாமல் போனாலோ அந்தத் தொழிலாளியின் நிலைமை மிகவும் மோசமாகிறது. ஆகவே, அரசாங்கம் அதை மிகவும் விஞ்ஞான ரீதியில் கையாளவேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறது. அமெரிக்காவுக்கு மிகவும் பரிச்சயமான ‘சந்தோஷமாய் அதிர்ஷ்டப்படி செல்’ என்கின்ற வார்த்தையை வழக்கத்தில் சொல்ல முடியவில்லை. தற்போது வேலையற்ற நாடோடிகள் பெருகிவிட்டனர். மேலும் ‘சுயகௌரவம்’ உள்ளவர்கள் பட்டினியில் துன்பப்படுகிறார்கள்.”

சிவிலைசேஷன் இன் பெர்னோ வில் “தி அரினா”வின் ஆசிரியர் கூறுகிறார் :

“தேவை என்கின்ற சவக்கடல் ஒவ்வொரு மக்கள் நெருக்கம் உள்ள நகரத்திலும் தனது எல்லையை விஸ்தாரப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் கடுமையான அதிருப்தியின் முறுமுறுப்பு என்பது துரதிஷ்டவசமாய் பெருகிவருகிறது. எளியவருக்கு பேராசையின் சக்தியால் நீதி மறுக்கப்பட்டது. இதனால் ஒரு அச்சுறுத்தும் இக்கட்டை நாம் முகமுகமாய் சந்திக்க நேர்ந்துவிட்டது. நாம் நியாயமும் இரக்கமும் உடையவர்களாக இருந்திருந்தால் இந்த சூழ்நிலை தவிர்க்கப்பட்டிருக்கலாம்; ஆனால் இனியும் இந்த பிரச்சனையை முக்கியமற்றதாக அலட்சியப்படுத்த இயலாது. இது இனிமேல் உள்நாட்டு பிரச்சனையாக மட்டும் இருப்பதில்லை. இது முழு அரசியல் உலகத்தையே பாதித்து அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. சில வருடங்களுக்கு முன் அமெரிக்காவின் மிகவும் பிரபலமான தேவஊழியர் ஒருவர் இந்த குடியரசு நாட்டில் பேசுவதற்கு ஏழ்மை என்பதே இல்லை என்று அறிவித்தார். தற்போது இந்த பிரச்சனை எத்தனை முக்கியத்துவம் கொண்டது என்பதை எந்த சிந்தனையாளரும் மறுக்க இயலாது. கடந்த ஒரு வருட காலத்தில் எத்தனை குற்றப்பத்திரிக்கைகள் குற்றங்களுக்காய் கொடுக்கப்பட்டுள்ளன என்ற சரியான கணக்கைக் கண்டுபிடித்துத் தரும்படி இந்த நகரத்தில் நீதிமன்றத்தில் நான் ஒரு ஆளை நியமித்து

சற்று காலம்தான் ஆகிறது. அதன் புள்ளிவிவரம் என்ன தெரியுமா? 1892 செப்டம்பர் 1ம் தேதியை கடைசியாய் கணக்கிட்டுக் கடந்த ஒரு வருடத்தில் 29,720 வழக்குகள் நியூயார்க் நீதிமன்றத்தில் நடந்துள்ளன.

"1892 டிசம்பர் பதிப்பில் ஒரு பத்திரிக்கையில் திரு.ஜேக்கப் ரிஸ் என்பவர் நியூயார்க்கின் ஏழை மக்களுடைய விசேஷத் தேவைகள் பற்றி குறிப்பிடும் போது அவர் கூறுகிறதாவது : 'இந்த செல்வச் செழிப்பான மாபெரும் பட்டணமாகிய நியூயார்க்கில் மரிப்பவர்களில் பத்தில் ஒரு பங்கினர் அநாதையாக அடக்கம் செய்யப்படுகின்றனர். கடந்த 10 வருடத்தில் 382,530 சவஅடக்கத்தில் 37,966 பேர் அநாதையாக அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் சமூகத்தின் நிலைமையை அறிந்து யாவருக்குமே இந்த மாநகரின் வறுமை தெரிந்திருக்கும். இந்த பெரிய நகரின் வறுமை பிரச்சனையை கணக்கீடு செய்ய இந்த அநாதை பிணம் அளவுமுறையே பெரிய அடையாளமாகும். இதைக் குறித்து மேலும் அவர் கூறுவதாவது:

" 'வறுமையுடன் சுய அனுபவமுடையவர்களும், இந்த மிகவும் தலையாய கொடுமையுடன் எப்படி பயத்துடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என அறிந்தவர்களும், வாழும் போது சொந்தமாக ஒரு குடிசை கூட இல்லையென்றாலும், மரித்தபிறகாவது அடக்கம் செய்யப்படவாவது ஒரு கல்லறை வேண்டும் என்ற கடைசிமட்ட உரிமைக்காகக் கூட அவர்கள் எப்படி போராடி, திட்டமிட வேண்டியிருக்கிறது என்று உணர்ந்தவர்களும் - இது எவ்வளவு அவலமான நிலை என்பதை என்னுடன் ஒப்புக் கொள்வார்கள். அதுமட்டுமன்றி இந்த பயங்கரமான வறுமைக் குழியில் ஒருவர் விழுந்துவிட்டார் என்று எடுத்துக் கொண்டால், அதனருகே இரண்டு அல்லது மூன்று பேராவது சுற்றி அலைந்து கொண்டிருப்பார்கள். இந்த கணக்குப்படி பார்த்தால் நமது ஜனத்தொகையில் 20-30% பகுதியினர் தங்கள் வாச-ல் வறுமை என்னும் கொடிய மிருகங்கள் நுழையாவண்ணம் தடுக்கவே போராடுகின்றனர். இந்த அச்சம்தரும் வருத்தமான காரியத்தை நன்கு அறிந்த யாவருமே ஒப்புக் கொள்வார்கள்.'

"1890ல் 239 தற்கொலைகள் நடந்ததாக நியூயார்க்கில் அதிகாரப்பூர்வமாக கூறப்படுகிறது. இதுவரை எப்போதும் இல்லாத



அளவுக்கு தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்ளும் குற்றங்கள் நீதிமன்றங்களில் மிகவும் அதிக அளவில் பதிவாகின்றன. 'ஸ்மித்' என்ற பதிவாளர் கிழக்கு நதியில் தற்கொலை முயற்சி செய்த ஒருவரைப் பார்த்து, 'இன்று காலையிலேயே இந்த நீதிமன்றத்தில் நீ இரண்டாவது தற்கொலை முயற்சி குற்றவாளி' என்றார். மேலும் அவர் அதோடு, 'கடந்த சில மாதங்களுக்குள் இத்தனை அதிகமான தற்கொலை முயற்சி குற்றங்கள் நடப்பது நான் இதுவரை அறியாத ஒன்று' என்கிறார்.

"வறுமை மற்றும் விரக்தி என்ற இருளானது மிகவும் மெதுவாக ஆனால் நிச்சயமாக நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான நம் ஜனங்கள் மீது படிந்து வருகிறது. இது வருகின்றது என்று இவர்கள் மிகவும் நன்கு அறிந்திருந்தும் அது மேலும் பரவாதபடி தடுக்க பெலனற்றவர்களாய் உணர்கிறார்கள். வருடாவருடம் வருமானம் குறைந்தும் விலைவாசி அதிகரித்துக் கொண்டும் வருகிறது. இதை எப்படிச் சமாளிக்க இயலும்? இன்றைய நிலைமை குறித்துத் தொழிலாளி ஒருவருடன் பேசியபோது அவர் இப்படி வேதனையோடு கூறுகிறார். 'எனக்கு எந்த விடிவுமே கண்களுக்குப் புலப்படவில்லை.' எதாவது ஒரு புரட்சிகரமான பொருளாதார மாற்றம் இல்லையெனில் இந்த நிலைமை இப்படியே இருளடைந்து தான் காணப்படும். தொழிலாளியின் தேவையைக் காட்டிலும் வருடாவருடம் உற்பத்தி மட்டும் மிகவும் வேகமாக பெருகிக் கொண்டே போகிறது. பெண் ஊழியரைக் குறித்து ஒரு ஆய்வு நடத்திய அதிகாரி ஒருவர் கூறுகிறார். 'மிகவும் மோசமான ஒரு வேலைக்குக் கூட 10 பெண்கள் விண்ணப்பிக்கின்றனர். நூற்றுக்கணக்கான பெண்கள் மிகவும் மோசமான, காற்றோட்டமற்ற, நல்ல வெளிச்சம் கூட இல்லாத கிடங்குகளிலும் கடைகளிலும் வேலை செய்து நாளுக்கு நாள் தங்கள் உடல் நலத்தை கெடுத்து நாசப்படுத்திக் கொள்கின்றனர்; ஆனாலும் கா-யான இடங்களை நிரப்ப கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் இருந்து கூட்டங்கூட்டமாய் பெண்கள் வந்து குவிகின்றனர்.' நியூயார்க் நகரில் இந்த நிலைமை மிகவும் வித்தியாசமானது என்று நாம் கருதிவிட முடியாது. அமெரிக்காவின் மற்ற மாநகரத்தின் நிலைமையும்

இதைப் போலவே ஒரு குறிப்பிட்ட அளவு இருக்கிறது. பிகான் ஹில், போஸ்டன் நகரின் மீதான குண்டு வீச்சுகளின் பலனாய் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பொதுவாக பட்டினியிலும், சமாளிக்க முடியாத நிலையில் திணறிக் கொண்டிருக்கின்றன. அதிலும் இன்னும் சில குடும்பங்கள் குறைந்தபட்ச அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட போராடுகின்றன. வருடத்துக்கு வருடம் இந்த நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கிறது. உணவுக்கான போராட்டம் பயங்கரமாகவும், இந்த விஷயத்தை குறித்த காட்சி மிகவும் துக்ககரமானதாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட கஷ்டங்களை அனுபவிக்கும் ஒருவர் மிகவும் துக்கத்துடனும், விரக்தியுடனும் தனது உதவியற்ற நிலைமையில் பேசினார். அவரது வார்த்தைகளின் விகாரமான உட்கருத்தை முழுவதுமாய் உணரக்கூட முடியாத அளவுக்கு நம்பிக்கையற்ற அல்லது கடைசி கட்ட உணர்வுடன் இருந்தது. அவர் கூறியதாவது : ‘கொடுங்கோலன் ஒருவன் ஒரு மனிதனை ஒரு இரும்பு கூண்டுக்குள் போட்டானாம். ஒவ்வொரு நாளும் அந்த கூண்டின் சுவர்கள் நெருங்கி வந்துக் கொண்டே இருந்தது. கடைசியில் மிகவும் நெருங்கி வந்து அவனது அங்கங்கள் ஒவ்வொன்றையும் நொறுக்கி கடைசியில் உயிரையே பறித்துவிட்டது. நாங்களும் அந்த மனிதனின் நிலையில்தான் இருக்கிறோம். ஒவ்வொரு சவப்பெட்டியும் எங்களைக் கடந்து போகும் போது என் மனைவியிடம் கூறுவேன். ஏதோ ஒரு உயிர் இன்று நொறுக்கப்பட்டது. ஒரு நாள் நாமும் கூட இதேபோலவே ஆகிவிடுவோம் என்று கூறுவேன்.’

“உயிருக்குப் போராடும் பெரும் கூட்டத்தினர் வசிக்கும் குடியிருப்புக்குச் சமீபத்தில் நான் சென்றேன்; அங்கு போர்க்களத்தில் வீரர்களின் வெற்றியின் ஆனந்த சத்தத்தை கேட்கக் காத்திருக்கும் பொறுமையைக் காட்டிலும் அதிக பொறுமையோடு தாயும் மகள்களும் இடைவிடாமல் தையல் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். இன்னும் அநேக வீடுகளில் நான் பார்த்த போது குழிவிழுந்த கண்களோடும், உணர்ச்சியிழந்த முகங்களோடும் படுத்த படுக்கையில் இருந்த நோயாளிகள் மாதக் கணக்கில், சில நேரம், வருட கணக்கில் கூட அரைப்பட்டினியாய், வியாதியின்



துர்வாடையில் ஒட்டுமொத்த அசுத்தம் என்னும் படுபாதாளத்தில் இருப்பதைக் காணமுடிந்தது. இங்கிருக்கும் ஒவ்வொருவரும் பசி மற்றும் பயம் என்ற பேய் நிரந்தரமாய் தங்கியிருப்பதை வேதனையுடன் உணர்கின்றனர். ‘ஆயுசுபூராவும்’ இந்த நாடோடிகளின் இதயத்தை ஒரு அச்சம் பாரத்துடன் நொறுக்குகிறது. முதலாளிகள் தங்களை கட்டாயமாய் வெளியேற்றும் ஆணையைக் கையில் வைத்திருப்பதாகவே அவர்களது மனக்கண் முன் எப்போதும் தோன்றுகிறது. வாழ்வில் ஒவ்வொரு கணமும் வியாதியின் அச்சுறுத்தல் அவர்களுக்கே உண்டு; சுகவீனம் என்பது அவர்களைப் பொருத்தமட்டில் வாழ்வுக்கு அவசியமான சத்துணவை பெறமுடியாத ஒரு இயலாமையே. நிச்சயமற்ற எதிர்காலத்தின் அவநம்பிக்கை அவர்களது நிம்மதியைத் தொடர்ந்து சித்திரவதை செய்தது. இது நமது மாநகரங்களின் சேரியில் உள்ள பொறுமையான உழைப்பாளிகளிடையே காணப்படும் சாதாரண நிலைமையாக இருக்கிறது. அநேகமாய் அவர்கள் யாவருடைய முகத்திலும் ஆழ்ந்த துக்கமும், ஓசையற்ற விரக்தியும் இருப்பதை எவரும் அறிந்து கொள்ளலாம்.

“சில சமயங்களில் பூமியின் ஆழங்களி-ருந்து உணர்ச்சி ஒளி வெள்ளங்கள் வெளிவரும். அந்த ஆபத்தை விளைவிக்கும் வெளிச்சம் தீமையை சகித்துக் கொண்டு என்றுமே விழிப்புடன் இருப்பதால் குமிறிக் கொண்டிருக்கும் எரிமலை என்று எச்சரிக்கிறது. தங்கள் இழிவான நிலையைக் காட்டிலும் இந்த தேசத்தின் மிருகங்கள் கூட சந்தோஷமாகவே இருக்கக்கூடும் என்று ஊமையாய் இருக்கிறார்கள். உணவுக்காகவும், கேவலமான இருப்பிடத்துக்காகவும் காலை முதல் இரவு வரை போராடினாலும் கிறிஸ்தவ ராஜ்யத்தின் மாபெரும் தொழில் மையங்களின் நம்பிக்கைக் கதவுகள் கூட அவர்களுக்கு அடைக்கப்பட்டு வருவதை உணர்ந்தனர். உண்மையில் பரிதாபகரமான தற்போதைய எண்ணம் என்னவெனில் ஏழைகள், அவலநிலையில் உள்ளவர்கள் மற்றும் ஒதுக்கித் தள்ளப்பட்டவர்களுக்காக தன் வாழ்வையே தியாகம் செய்த மாபெரும் நசரேயனுக்காக (இயேசு) பிரம்மாண்டமான ஆலயங்கள் பிரத்தியோகமாய் இருக்கும் போது துக்கத்தின் பேரலைகள்

எழும்புவதை நாம் காண்கிறோம். மேலும் வருடந்தோறும் விரும்பத்தகாத வறுமையானது ஆயிரக்காணக்கானவர்களின் தவிர்க்க முடியாத விபதியாகி வருகிறது. மனித உதடுகளில் பிறரது நலன் கருதும் உணர்ச்சிப்பூர்வமான வார்த்தைகள் இவ்வளவு சகஜமாய் இருந்ததில்லை. மனிதனின் சகோதர நேயத்தை உண்மையுடன் வெளிப்படுத்தும்படி இதுவரைக்கும் மனித உள்ளங்கள் ஏங்கியதில்லை. காலாகாலங்களாக இருந்து வரும் கனவாகிய தேவனே-தந்தை, மனிதன்-சகோதரன் என்பதில் நாகரீக முன்னேற்றம் அடைந்த உலகம் முழுவதும் இதுவரையில்லாத அளவுக்கு ஆழமாய் (பலமாய்) அசைக்கப்படுகிறது. ஆனால் இன்னும் கூட ஒரு அசாதாரண முரண்பாடே நிலவுகிறது. அப்பாவிகளின் அழுகையும், அநீதியின் கொடுமையும், வாழ்க்கை சக்கரத்தில் சிக்கித்தவிக்கும் ஆயிரக்கணக்கானோரின் கூக்குரலும் எல்லா முன்னேற்றமடைந்த நாடுகளிலும் என்றும் இல்லாத அளவுக்கு கேட்கப்படுகிறது. ராஷ்யாவின் அவலக்குரல் அயர்லாந்தினரின் அழுகுரலோடு சேர்த்துக் கொள்கிறது. லண்டனில் ஒதுக்கித் தள்ளப்பட்டவர்கள் மற்ற பெரும் தேசங்களின் மற்றும் அமெரிக்க நகரங்களின் நாடோடிகளோடு இணைகின்றனர். நீதிக்காக உலகமே ஆவலோடு காத்து நிற்கிறது.

"லண்டனில் மட்டுமே மூன்று இலட்சத்திற்கும் மேலானவர்கள் படுகுழியின் விளிம்பில் நிற்கின்றனர். இவர்களது ஒவ்வொரு இதயத்துடிப்புமே அச்சத்தோடு அடிக்கிறது. வீடு என்று அவர்கள் அழைக்கும் அந்த சிறிய குகை கூட பறிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் வாழ்நாள் முழுவதும் அவர்களது பயங்கரக் கனவாக இருக்கிறது. அவர்களை விட கேவலமாய் பட்டினியின் விளிம்பில் இரண்டு இலட்சத்திற்கும் மேலானவர்கள் வாழுகின்றனர். அதற்கும் கீழான சமூக அந்தஸ்தில் மூன்று இலட்சம் பேர் பட்டினியால் வாடுகின்றனர். இரவும் பகலும் பசியின் கொடுமையால் பற்களை கடித்தவண்ணம் இருக்கும் நிலைமை இவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. இவர்களது ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு மணியின் ஒவ்வொரு நிமிடமும் கடும் வேதனையால் நிறைந்திருக்கிறது. பட்டியினால் வாடுபவர்களுக்கும் கீழ்மட்டத்தில் வீடற்றவர்கள் இருக்கிறார்கள். மிகவும் இழிவான நிலையுள்ள ஒரு



தங்கும் இடத்தைக் கூட உருவாக்கிக் கொள்ள இவர்களால் இயலவில்லை. தேம்ஸ் அணையின் அருகில் உறையும் குளிரில் வெறும் கற்பலகையின் மீது எல்லா இரவுகளையும் கழிக்கும் நூற்றுக்கணக்கானோர் அங்கு காணப்படுகின்றனர். சிலர் வெறும் செய்தித்தாள்களை போர்த்திக் கொண்டு வெறும் கல்-ன் மீது படுத்திருப்பார்கள். பெரும்பாலானோர் இந்த ஒரு சௌகரியத்தைக் கூட அனுபவிப்பது கிடையாது. வீடுகளின்றி தவிக்கும் இந்த பெரும் கூட்டத்தினரின் எண்ணிக்கை லண்டனில் 33,000 பேர்."

சிலர் கூறலாம், இது மிகவும் மிகைப்படுத்தப்பட்ட ஒரு காட்சி என்று. அப்படியானால் அவரே இதைக் குறித்து விசாரித்துக் கொள்ளட்டும். ஆனால் இதில் ஒரு பகுதி நிச்சயம் உண்மையே - அது வருந்தத்தக்கது.

## அதிருப்தி, வெறுப்பு, எதிர்ப்பு இவை யாவும் சமூகக் குமுறலுக்குத் தீவிரமாய் தயாராகின்றன

செல்வந்தர்கள் இப்போதிருப்பதைப் போல் தயாள குணமுடன் எந்தக் காலத்திலுமே இருந்தது கிடையாது. ஏழைகளுக்கு, பார்வை அற்றோருக்கு, நோயாளி மற்றும் உதவியற்றோருக்கு சமூகத்திலும் விசாலமான சலுகைகள் இதுவரை இல்லாத அளவுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதை ஏழைகளுக்கு எப்படியாகிலும் புரிய வைக்க வேண்டும். இதற்கான வருமானமும் வருடாவருடம் வரி மூலம் உயர்த்தப்பட்டுக் கொண்டே வருகிறது. இதன் மூலம் இவர்களது சலுகைகள் சந்திக்கப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையானது நிச்சயம் உழைப்பாளர் வர்க்கத்தை திருப்திப்படுத்தாது. ஒரு சுயமரியாதையுடைய, புத்திசா-யான குடிமகன் ஒருவன் எதிர்ப்பார்ப்பது "பிச்சை"யை அல்ல, மிகவும் ஏழைகளுக்கென ஒதுக்கப்பட்ட சலுகைகளை பெறுவதில் விருப்பமோ அல்லது நோய் வரும்போது இலவச சிகிச்சைக்காக மருத்துவமனையை நாடுவதையோ விரும்பவில்லை. ஆனால் தன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்டுத் தன் தேவைகளை தானே சம்பாதிப்பதற்கான நேர்மையான, கௌரவமான சந்தர்ப்பத்தையும், தன் குடும்பத்தினைத் தானே நிர்வாகிக்கக் கூடிய நேர்மையான உழைப்பாளி என்ற ஸ்தானத்தையுமே எதிர்பார்க்கிறான். ஆனால் ஒரு

வேலையைத் தக்கவைத்துக்கொள்ள தானும் தன் சகதொழிலாளியும் பிறருடைய சகாயத்தையும், செல்வாக்கினையும் அதிகபட்சம் சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை, என்றும் இல்லாத அளவிற்கு அதிகரித்துக் கொண்டிருக்கிறதைப் பார்க்கிறான். சிறு கடை முதலாளிகள், சிறு கட்டிட வேலையாட்கள், சிறு உற்பத்தியாளர்கள், நேர்மையாக வாழ எப்போதும் இல்லாத அளவிற்குப் போராட வேண்டியிருக்கிறது. செல்வந்தர்களின் சொத்துக்களும், கோடீஸ்வரரின் எண்ணிக்கைகளும் கூடிக்கொண்டே வருவதையும், முதலாளிகள் ஒருங்கிணைந்து பல்வேறு தொழில்களை கட்டுக்குள் வைப்பதையும் அவன் நன்கு உணர்கிறான். அதில் செம்பு வியாபாரம், ஸ்டீல் வியாபாரம், கண்ணாடி வியாபாரம், எண்ணெய் வியாபாரம், தீப்பெட்டி வியாபாரம், காகித வியாபாரம், நிலக்கரி வியாபாரம், பெயின்ட் வியாபாரம், வெட்டுக்கருவி வியாபாரம், தந்தித்தொழில், இன்னும் மற்ற தொழில்கள் இதில் அடங்கும். மேலும் இந்த கூட்டானது உலகின் இயந்திரங்கள் அனைத்தையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. ஆகவே தனது உழைப்பு, போட்டியின் நிமித்தம் சிறுமைப்படுத்தப்படுகிறதையும், இதனால் பொருட்களின் தேவையும், அதன் அவசியமும் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே போகிறதையும் பார்க்கிறான். இதனால் குறைந்தபட்சம் மனித உழைப்பு குறைக்கப்பட்டு மனித மூளைக்கும் சக்திக்கும் பதிலாக அதிக முன்னேற்றமான இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதையும் பார்க்கிறான்.

இவ்விதமான சூழ்நிலைகளுக்கிடையில் நாம் தொழிலாளர் ஐக்கிய ஸ்தாபனத்தின் 13வது வருடாந்திர கூடுகையில் அதன் தொழிற்சங்கத்தின் துணைத்தலைவர் வந்திருந்த விருந்தினரை வரவேற்று பேசிய கே-க்குரிய தோரணையின் பேச்சை நாம் அதிசயிக்க முடியுமா? அவர் கூறியதாவது:

“உங்களை செழிப்பான நகருக்குள் வரவேற்க விரும்புகிறோம். ஆனால் உண்மையில் இந்த அழைப்பை நியாயப்படுத்த இயலாது. இங்குள்ள காரியங்கள் இருக்க வேண்டிய முறைப்படி இல்லாமால், தன்னிஷ்டத்திற்கு இருக்கின்றன. நூற்றுக்கணக்கான ஏகாதிபத்தியர்கள் ஐம்பது ஆயிரம் நாடோடிகள் சார்பாக உங்களை வரவேற்கிறோம். இங்கு ஐசுவரிய தேவதைக்கு அரண்மனைகளில் விழா கொண்டாடப்படுகிறது. ஆனால் இங்குள்ள தாய்மார்கள் இதயம் நொறுங்கியும், குழந்தைகள் பட்டினியால் வாடியும், ஆண்களோ வேலை தேடி வெறுமையாய் அலைகிறவர்களாகவும் இருக்கின்றனர். நூற்றுக்கணக்கான வேலையற்ற ஆண்களின் சார்பாய் உங்களை வரவேற்கிறேன். தேவனுடைய மகிமைக்காக அர்ப்பணிக்கப்பட்ட மாளிகைகள் பேரில் உங்களை வரவேற்கிறேன். ஆனால் இதன் வாசல்களோ பட்டினியாயிருக்கும் ஏழைகளுக்கு இரவில் அடைக்கப்படுகிறது. தேவனுடைய பிள்ளைகள் பசியாயிருந்து தலைசாய்க்கவும் இடமில்லாதிருக்கிறார்கள் என்பதை மறந்து, தேவனுடைய திராட்சை தோட்டத்தின் செழுமையால் கொழுத்து பெருத்திருக்கும் மத குருக்களின் சார்பாகவும் உங்களை வரவேற்கிறேன். வியர்வை சிந்தும் சமுதாயத்தின் தூண்கள் சார்பாகவும், பொன்னின் மீது மாறாத பசிதாகத்தின் நிமித்தம் தங்கள் ஆத்துமாவை ஆபத்திற்குள்ளாக்கும் கோடீஸ்வரர் மற்றும் சபை மூப்பர்களின் சார்பாகவும் உங்களை வரவேற்கிறேன். தங்க நாணயங்களைச் செய்ய தங்கள் ரத்தத்தை வியர்வையாகச் சிந்தும் கூ-ப்பணியாளர்களின் சார்பாகவும், பைத்தியக்கார விடுதிகளிலும் மோசமான வீடுகளிலும் அடைக்கப்பட்டிருக்கும் செழுமையான தேசத்தில் ஆதரவுக்காக ஏங்கும் மக்களின் சார்பாகவும் உங்களை வரவேற்கிறேன்.

“இதுவரையில் தனது பெரும் மேடைகளில் காட்டப்படாத சிக்காகோவின் பெருமைகளையும், பெலவீனங்களையும் நாங்கள் உங்களுக்கு காட்டுகிறோம். இதே கட்டிடத்தில் வெறும் கற்களின்மேல் படுத்திருக்கும் நூற்றுக்கணக்கானோரை இதே கட்டிடத்தின் முற்றங்களில் இன்று இரவே உங்களுக்குக் காட்டுகிறோம். இவர்களுக்கு உணவும் இல்லை, இருப்பிடமும் இல்லை. இந்த மனிதருக்கு வேலை செய்ய மனமிருந்தும், திறமையிருந்தும் வேலையற்றவர்களாக இருக்கிறார்கள். ரயில்வே தொழில் அதிபர்களுக்கும், நிலக்கரி வர்த்தக பிரபுக்களுக்கும், லாபம் ஈட்டும் வாணிபர்களுக்கும் தனது ஆளுகையின் அதிகாரத்தைக் கொடுக்கும் அரசாங்கத்தினை நோக்கி தொடர்ந்து அபாய ஒ-எழுப்பவேண்டிய நேரம் வந்துவிட்டது. ஐரோப்பாவின் பண

முதலைகளின் ஆணைப்படி தங்கள் பொருளாதாரக் கொள்கைகளை வால்ஸ் தெருவில் தொடர்ந்து உருவாக்கும் அரசாங்கக் கூட்டணிகளுக்கு எதிராய் சங்கொ- எழுப்பப்படவேண்டும். இந்தவிதமான நிலைமை நிலவுவதற்குக் காரணமான மக்களுக்காகச் சேவை செய்யவேண்டிய விசுவாசமற்றவர்களை நீங்கள் ஓட்டுரிமையை உபயோகித்து அதிகாரத்தி-ருந்து தூக்கியெறியும்படி நாங்கள் உங்களிடம் எதிர்பார்க்கிறோம்."

தற்போது நிலவும் தீமைகளை அதிகாரிகளோ அல்லது அரசியல் கட்சிகளோ மாற்றிவிடும் என்று தற்போது பேசியவர் மிகவும் தவறாக எதிர்பார்த்து விட்டார். இத்தனை பெரிதான இரு துருவங்களாகிய செல்வத்தையும், வறுமையையும் வைத்துக் கொண்டு எந்த ஒரு சமுதாய மாற்றத்தையும் ஏற்படுத்தும் சாத்தியம் இருப்பதாக எண்ணி இவரிடமோ அல்லது வேறு எந்த பகுத்தறிவாளரிடமோ பேசுவது நிச்சயமாய் பயனற்றதாகும். ஒரு தீராத சமூக துரோகம் ஒன்றிருக்கிறது என்று யாவருமே ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் அதற்கான காரணமும் நிவாரணமும் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. எந்த பலனும் கிடைக்காத தவறான திசைகளில் சிலர் பரிகாரம் தேடுகின்றனர். ஆனால் ஐயகோ! அநேகர் தற்போதுள்ள சூழ்நிலையை சாதகமாக்கிக்கொண்டு பலன் அடைந்து தீருமட்டும் இந்த நிலைமைக்கு ஒரு விமோசனம் பிறக்கக்கூடாது என்றும் நினைக்கின்றனர்.

ஜார்ஜ் இ.மெக்நெல் என்பவர் உலக தொழிலாளர் கூடுகையில் பேசும் போது இந்த காரியம் தொடர்பாக கூறியதாவது :

"இந்த தொழிலாளர் இயக்கம் என்பது பசியின் நிமித்தமாய் பிறந்ததே. அந்தப்பசி உணவுக்கானது, இருப்பிடத்துக்கானது, குளிருக்கான சூட்டிற்கானது, உடைக்கானது, சுகத்துக்கானது. இந்த மனித இயக்கத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் தனது இலட்சியத்தைத் தேடுகிறான். அநேக சமயங்களில் பிறரை சரிசமமாய் எண்ணுவதில் அலட்சியம் காட்டுகிறான். தொழிற்சாலையின் செயல்பாடுகள் அரக்கத்தனமான சட்டமாக ஒவ்வொரு மனிதன் மீது இறங்கி அவனையே அமிழ்த்திவிடுகிறது. இந்த சுயநலம் மற்றும் பேராசை என்னும் சட்டத்தின் கீழ் அவதிபடுகிறவர்கள் இவ்விதமானதொரு பேய்த்தனமான அரசாங்கத்தின் வீழ்ச்சிக்காக ஏற்பாடு செய்வது எதிர்ப்பார்க்காத காரியமாக இருக்கிறதா?"



சமூகத்தின் மேல்மட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் மக்கள் விலைஉயர்ந்த ஆடை, அணிகலன்களோடு ஆடம்பரமாகத் திருமணம், நடன நிகழ்ச்சிகள், உல்லாச விருந்து உபசாரங்களுக்கு வருவதைப் பத்திரிக்கைகள் மிகுதியாக விவரிக்கின்றன. பாரிசில் சமீபத்தில் நடன நிகழ்ச்சி ஒன்றுக்கு வந்த பெண்மனி ஒருவர் 1,600,000 டாலர் மதிப்புள்ள வைரநகைகளை அணிந்து வந்ததாகக் கூறப்படுகிறது. 1896 ஆகஸ்டில் நியூயார்க் வோல்ட் என்ற பத்திரிக்கை 1,000,000 டாலர் மதிப்புள்ள வைர, வைடூரிய ஆபரணங்களை அணிந்த அமெரிக்க பெண்மணி ஒருத்தியின் படத்தை வெளியிட்டது. இவள் மிக உயர்மட்ட வகுப்பைச் சார்ந்தவர் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வித பெரிய விருந்து விழாக்களில் - மதுபான வகைகளுக்கும், மலர் அலங்காரங்களுக்கும் ஆயிரக்கணக்கான டாலர்களைச் செலவழிப்பதைத் தினசரி பத்திரிக்கைகள் கூறுகின்றன. பணக்காரர்களுக்கே உரியதான மாளிகைகளின் மதிப்பு 50,000 டாலர். சில 1,500,000 டாருக்கும் மேலும் கூட இருக்கும் என அவை கூறுகின்றன. "Dog Socials" என்கிற விருந்துகளில் இந்த மிருகத்தனமானவர்களுக்கு மிகுந்த பொருட்செலவில் அருசுவை உணவை அவர்களை உபசரிப்பவர்கள் அளிப்பதையும் அவை கூறுகின்றன. விருந்தின் முடிவில் பரிமாறப்படும் பழவகைகளுக்கு 10,000 டாலரும், பூவேலைப்பாடுள்ள இரண்டு பூஜாடிக்களுக்கு 6,000 டாலரும் ரோஜாவண்ண பூஜாடிகள் இரண்டுக்கு 50,000 டாலரும் செலவிடப்பட்டதாக அவை கூறுகின்றன. ஆங்கில பிரபு ஒருவர் ஒரு குதிரையை 350,000 டாலருக்கு வாங்கியதாக அவை கூறுகின்றன. போஸ்டன் நகரப் பெண்மணி ஒருவர் தன் கணவரின் சவப்பெட்டிக்காக 50,000 டாலர் செலவு செய்ததாகவும், மற்றொரு சீமாட்டி தனது செல்ல நாய்க்குட்டியை அடக்கம் செய்வதற்காக 5,000 டாலர் செலவிட்டதாகவும், நியூயார்க் கோடீஸ்வரர்கள் அதிகபட்சம் 800,000 டாலர் அளவிற்குக் கூட ஒரு படகிற்காய் செலவிடுகின்றதாகவும் அவை கூறுகின்றன.

இவற்றைப் பார்க்கும் போது ஏன் சிலர் கோபப்படுகின்றனர்,

பலர் பொறாமைப்படுகின்றனர், சிலர் மனத்தாங்கல் கொள்கின்றனர் என்று ஆச்சரியப்பட முடியுமா? ஏன் என்றால் தங்கள் சொந்த குடும்பங்களின் வறிய நிலைமைக்கும் பணப்பற்றாக்குறைக்கும் சற்றும் ஒத்துப்போகாத அளவிற்கு சிலர் வீண் செலவுகள் செய்கின்றனர். அநேகர் இந்த பூமியின் காரியங்கள் மீது ஆசைகொள்ளாமல் பரலோகத்தின் மேலான காரியங்கள் மீதே விருப்பம் கொள்கின்ற "புதுசிருஷ்டிகள்" அல்ல, "போதுமென்ற மனதுடன் கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" என்று கற்றுக்கொண்டு அதனுடைய காரணத்தை தேவன் வெளிப்படுத்தும் வரை காத்திருக்கின்றவர்களும் அல்ல. இவ்விதமான காரியங்கள் மக்கள் மனதில் பொறாமை, விரோதம், வெறுப்பு, போட்டிகள் ஆகியவைகளைத் தூண்டிவிடுவதைக் குறித்து ஆச்சரியப்படத் தேவையில்லை. மேலும் இந்த உணர்வுகள் நாளுக்கு நாள் வளர்ந்து முடிவில் ஒரு புரட்சியாக முடியும். இது சரீரத்தின், பிசாசின் கிரியைகளையே வரப்போகின்ற மகா உபத்திரவ காலத்தில் நடைமுறையில் செயல்படுத்தும்.

"இதோ, கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுகமாகிய இவைகளே... சோதோமின் அக்கிரமம்... சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை." *(எசே 16:49, 50)*

நியூயார்க்கின் ஆடம்பரமான நடன அரங்குகளைக் குறித்து க-போர்னியாவின் "கிறிஸ்டியன் அட்வகேட்" விமர்சிப்பதாவது:

"மிகவும் ஆடம்பரமான சுகபோகங்களும் கண்ணைப்பறிக்கும் வீண்பகட்டும் பழங்காலத்தின் கிரேக்கர், ரோமருடைய சரித்திரமாக இருக்கிறது. இந்நாட்டின் நவநாகரீக சமூகம் என்று அழைக்கப்படும் இந்த இடத்தில் கொஞ்சமும் ஒவ்வாத காட்சிகளெல்லாம் நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பமாகிவிட்டது. ஒரு குறிப்பிட்ட சமயத்தில் கேளிக்கைகளுக்கு மட்டுமே 125,000 டாலர் செலவு செய்ததாக நியூயார்க் பெண்மணி ஒருவரைக் குறித்து நமது செய்தி ஒன்று கூறுகிறது. அந்த பொழுதுபோக்கு விழாவின் தன்மையையும், தரத்தையும் பார்த்து, சமுதாயத்துக்கு இதனால் அந்தப் பெண்மணி கற்றுத்தந்தது என்னவெனில்.... ரோம மதுபானத்தை மஞ்சளும் சிவப்பும் கலந்த குவளை மலர்களின் (டூ-ப்) மத்தியில் ஊற்றுவது எப்படி என்றும் மற்றும் ஆமை இறைச்சியை வெள்ளிப்பிடியுடைய பொன் கரண்டியால் எப்படிச் சாப்பிடுவது என்பதையுமே. பிற விருந்தினரது மேஜைகளை விலையுயர்ந்த ரோஜாக்களால் அலங்கரித்திருந்தனர். அந்த 400 பேரில் ஒருவர் 50,000 டாலரை ஒரே ஒரு பொழுதுபோக்கு விளையாட்டுக்காக செலவு செய்திருக்கிறார். இவ்விதமான அற்பக்காரியங்களுக்கு இவ்வித ஆடம்பர செலவு செய்வதென்பது, அவர் எவ்வளவு திரளான செல்வம் படைத்தவராயினும், பாவமும், கேவலமுமானதே."



மேசியாவின் ஹெரால்ட் இப்படியாய் விமர்சிக்கிறது:

"நூற்று நாற்பத்தி நான்கு சமுதாய எதேச்சாரிகள் ஒரு உயர்குடி மகனின் தலைமையில் ஒரு பெரிய நடன விருந்தில் பங்கு கொண்டனர். எந்தவித ஆடம்பர குறைச்சலும் இன்றி இது நடந்தேறியது. அதன் ஆடம்பரம் அளவிடமுடியாத அளவிற்கு இருந்தது. மதுபானவகைகள் தண்ணீரைப் போல ஓடியது. எல்லாம் அழகு மயமாய் அமைந்திருந்தது. மார்க் அந்தோணியோ அல்லது கிளியோ பாட்ராவோ இவ்விதமான மிதமிஞ்சிய பலகோடி ஆடம்பரத்தில் புரண்டிருக்கமுடியாது. அது கோடீஸ்வரர்களின் கூடுகையாய் இருந்தது. வைரம், முத்து இவைகளுக்காக உலகத்தின் செல்வம் முழுவதும் பயன்படுத்தப்பட்டது. 200,000 டாலர் மதிப்புடைய நவரத்தினமாலைகள் அநேகரது கழுத்துகளை அலங்கரித்து ஜொ-த்தது. அலாவுதீன் ஆடம்பரத்தைப் போன்ற பிரகாசத்திடையே நடனங்கள் நடைபெற்றன. சந்தோஷம் கட்டுக்கடங்காததாக இருந்தது. இவ்விதமான விழா நடந்துகொண்டிருக்கும் இதே சமயத்தில் தீவனத்துக்காக கால்நடைகள் அலைவதைப் போல் பென்சில்வேனியாவின் சாலைகளில் 100,000 சுரங்கத் தொழிலாளிகள் பட்டினியுடன் அலைந்து கொண்டிருந்தனர் என்று ஒரு பத்திரிக்கை கூறுகிறது. அவர்களில் சிலர் பூனைகளை உண்டு வாழ்கின்றனர். வேறு சிலரோ தங்கள் பிள்ளைகள் பட்டினியால் வாடுவதை பார்க்க சகிக்காமல் தற்கொலை செய்துகொள்கின்றனர். அந்த ஆடம்பர கேளிக்கை நடன அரங்கிலுள்ள ஒரேயொரு கழுத்துமாலை இவர்கள் யாவரையுமே பட்டினியில் இருந்து காப்பாற்றிவிடக் கூடும். இந்த விழா தன்னை

கிறிஸ்தவ நாடு என்று அழைத்துக் கொள்ளும் ஒரு நாட்டின் மாபெரும் சமூக விழாவாகும். என்ன முரண்பாடு! இதற்கு விமோசனமே கிடையாது. இது 'அவர் வரும் வரை' இப்படித்தான் இருக்கும்."

"அவர் வரும்வரை" மட்டுமன்றி "மனுஷகுமாரனின் நாட்களில் இப்படியாகவே நடக்கும்." அவர் வரும்போது அவருக்காகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்த்து அவரது ராஜ்யத்தை அவர் ஸ்தாபிக்கும் ஆரம்பத்தில் தற்போதுள்ள சமூக அமைப்புகளையும் அரசியல் குழப்பங்களையும் உபத்திரவத்தின் காலத்தில் உடைத்து நொருக்கி நீதியின் ராஜ்யத்தை ஸ்தாபிக்க இவ்விதமான ஆயத்தம் நடக்கும். (வெளி 2:26,27; 19:15) "நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷக்குமாரனுடைய நாட்களிலும் நடக்கும்." "லோத்தின் நாட்களில் நடந்தது போல மனுஷக் குமாரனுடைய நாட்களிலும் நடக்கும்." (மத் : 24:37; லூக் 17:26,28)

## செல்வந்தர்கள் கூட கடுமையாகக் கண்டனம் செய்யப்படுகிறார்களா?

சான்பிரான்சிஸ்கோவின் "எஃக்சாமினர்" என்ற பத்திரிகையின் தலையங்கத்தி-ருந்து நாங்கள் சிலவற்றை கோடிட்டுக் காட்டுகிறோம்:

"திரு. டபிள்யூ.கே.வான்டர்பில்ட் அவர்களின் மாபெரும் வ-மையான பிரிட்டிஷ் நீராவிப்படகு, திரு. எஃப். டபிள்யூ. வான்டர் பில்டின் பிரிட்டிஷ் நீராவிப்படகுடன் நியூயார்க்கில் சேர்ந்து கொண்டது. அந்த படகின் மதிப்பு 800,000 டாலர். இது 60 செண்ட்டில் விளையும் 15,000,000 மரக்கால் கோதுமை அல்லது 8,000,160 ஏக்கர் பண்ணையின் விளைச்ச-ன் முழு பலனுக்கும் இணையானது. அல்லது இந்த 8,000 விவசாயிகள் 40,000 ஆட்களுக்கும் ஒப்பிடலாம். இந்த 40,000 ஆணும் பெண்ணும் பிள்ளைகளும் வெயில், மழை பாராமல் உழைத்ததால் திரு. வான்டர்பில்ட் ஒரு சொகுசான உல்லாச படகினை வேற்று நாட்டு கப்பற்துறையில் கட்டியிருக்கின்றார். இதைப் போன்று ஐரோப்பாவில் எந்த சீமானும் பெற்றிருக்கவில்லை. இந்த கப்பலை கட்டி முடிக்க ஏறக்குறைய 1000 மெக்கானிக்குகளின் உழைப்பு 1 வருடத்துக்கு தேவைப்பட்டது. இதற்கு செலவான தொகையை நமது தொழிலாளர்களிடையே புழக்கத்தில் விட்டிருந்தால் காலாண்டுக்குள் (குறிப்பிட்ட அளவு) அந்த பிரதேசத்தில் செல்வம் கண்கூடாய் காணக்கூடிய அளவுக்கு பெருகியிருக்கும்."



அரினாவைச் சேர்ந்த ஜெ.ஆர். புச்சன்னன் கொஞ்சமும் இதயமே இல்லாத பணக்காரர்களைக் குறித்து கூறுவதாவது:

"ஒரு சுயநலமான நோக்கத்தை அடைவதற்கான இதயமற்றவர்களின் உத்வேகமானது அநேகரது சந்தோஷத்தையும் வாழ்வையும் அழிப்பதில் மிகவும் கொடியதாக, அவ்வளவு தீவிரமாக இல்லை. ஆனால் இத்தனை திரளான செல்வம் உபயோகமற்ற, ஆடம்பர, வீண் செலவில் அழிக்கப்படுவது என்பது மிகவும் குற்றமான செயலாகும் என்பது மறுக்கமுடியாதது. ஒவ்வொரு டாலரும் ஒரு தொழிலாளியின் சராசரி ஒரு நாள் ஊதியம் என்கின்ற விகிதத்தில் இருக்கிறது.ஒருவேளை பணம், தண்ணீரைப் போலவும், காற்றைப் போலவும் இலவசமாய் கிடைக்கக்கூடிய ஒன்றானால் சிராக்கூஸ் கோடீஸ்வரர் தனது குதிரை லாயத்துக்கு 700,000 டாலர் செலவிடுவதோ அல்லது நியூயார்க் ஆஸ்டர் அவர்கள் ஒரு விருந்து மேசைக்கு 50,000 டாலர் செலவிடுவதோ யாருக்கும் எந்தத் தீமையையும் விளைவிக்காது. அப்படி பார்க்கும் போது 700,000 டாலர் மதிப்புள்ள குதிரைலாயம் 1,000 ஆட்களின் 2 வருடம் 4 மாத உழைப்பிற்குச்சமமாய் இருக்கிறது. இது மட்டுமன்றி இது 700 பேரின் வாழ்விற்குச் சமமாகவும், 1,000 டாலர் என்பது ஒரு குழந்தையின் முதல் 10 வருட காலத்தின் செலவுக்கு போதுமானதாக இருக்கிறது. அடுத்த 10 வருடத்தில் அந்த தொகை அந்த குழந்தையின் சொந்த உழைப்பாலேயே முழுவதும் திருப்பிக் கொடுக்கப்படக்கூடும். ஆகவே இந்த ஆடம்பர குதிரை லாயமானது 700 பேரின் சரீர உழைப்பை ஆதாரமாகக் கொண்டது. அதன் சொந்தக்காரர் இந்த மதிப்பீடு மிகவும் அதிகம் என்று நிச்சயம் உணர்வார். அல்லது தனது வீண் டம்பம் திருப்தியாகட்டும் 700பேர் மரித்தாலும் கவலையில்லை என்று விருப்பம் கொள்வதாக இருக்கும்."

"தி -ட்ரரி டைஜஸ்ட்" என்ற பத்திரிக்கையின் தலையங்கத்தில் கூறப்படுவதாவது:

"நல்ல அறிவுள்ள தொழிலாளர்கள் பலர் ஏன் ஆலயவழிபாட்டில் கலந்து கொள்வது இல்லை? என்பதை குறித்து தனது கருத்தைக் கூறும்படி அமெரிக்க தொழிலாளர் சங்கத்தின் தலைவரான திரு.சாமுயேல் காம்பர்ஸ் என்பவருக்கு புதிய இங்கிலாந்தின் குருமார்கள் கடிதம் ஒன்றினை சமீபத்தில் அனுப்பினர். இதற்கான பதி-ல் திரு.காம்பர்ஸ் கூறும்போது ஒரு காரணம் என்னவெனில் சபைகள் தற்போது தொழிலாளர்களின் நம்பிக்கைக்கும், விருப்பத்துக்கும் ஒத்துப்போவதாக இல்லை. மட்டுமன்றி அவர்களது துன்பங்கள், பாரங்கள் குறித்த அக்கறையும் இல்லை. மிகவும் அவதியுறும் ஆயிரக்கணக்கானோரின் நியாயம் அல்லது அநியாயம் என்ன என்பதை பிரசங்க மேடை மீது நின்று கூற சபை போதகர்களுக்குத் தைரியம் இல்லை. அல்லது அதைக் குறித்து அறிந்திருக்கவும் இல்லை. மேலும் சற்று மேன்மையான நிலைமைக்குத் தங்களை முன்னேற்றிக் கொள்ளும் நிறுவனங்களை பார்த்து சபையும் முகம் சுழிக்கிறது. தொழிலாளர்களது நிலைமை மிகவும் நிராகரிக்கப்பட்ட திசையை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்களது வாழ்வின் நிலைமை இனிமை என்பது அறவே அகன்று கசப்பானதாய் மாறிவிட்டது. முதலாளிகளே செல்வத்திரட்சிக்கு முழு உரிமையாளர்களாய் மாறிவிட்டதால் மக்களுக்குச் செய்யப்படும் அநியாயங்களுக்கு பரிந்து பேசுகிறவர்களாகவும், வாதிடுகிறவர்களாகவும், சபையும், ஊழியமும் இருக்கிறது. சபையும் அதன் மக்களும் ஒப்புரவாக வேண்டுமாயின் அதற்கு ஒரு ஆலோசனையாக திரு. காம்பர்ஸ் அவர்கள் கூறுவது என்னவெனில். 'தற்போதுள்ள நிலைமை முற்றிலும் மாற்றப்படவேண்டும்.' மேலும், 'தொழிலாளர் இயக்கத்தின் மீது இரக்கம் காட்ட மறுப்பவனும், தற்போதுள்ள சமுதாய, பொருளாதார நிலைமையைக் குறித்து பதட்டமில்லாமல் வித்தியாசமான கண்ணோட்டத்துடன் ஆழ்ந்து சிந்திக்காத எவனுமே- மனித சமுதாய நலனுக்கு எதிராளியாக இருப்பது மட்டுமன்றி, ஆண், பெண் மற்றும் பிள்ளைகளாகிய தற்கால மனித சமுதாயம் மற்றும் எதிர்கால மனித சமுதாயத்தின் மீது சுமத்தப்படும் எல்லா தீமைகளிலும் பங்குடைய குற்றவாளியாக இருக்கிறான் என்றும் கூறுகிறார்.'"



எனவே பணக்காரர் என்றதொரு வகுப்பினரை எப்போதும் கண்டனம் செய்யும் ஒரு பொதுவான எண்ணம் இருப்பதை நாம் குறிப்பாக பார்க்கலாம். மேலும் இந்த வகுப்பார் யாவருக்குமே தேவனுடைய கண்டனத்தையும் முன்னறிவிக்கப்பட்ட தண்டனையையும் பார்க்கும் போது, செல்வந்தரான தனி நபர் மீதான எண்ணத்தையும் அல்லது தீர்மானத்தை தேவனுடைய பிள்ளைகளை மிகவும் நிதானத்தோடு கையாள வேண்டும். இது மிகவும் நியாயமான ஒன்றாகும். இப்படிப்பட்ட வகுப்பாரின் மீது தேவனுடைய தீர்ப்பு அத்தனை கண்டிப்பான ஒன்றாக இருக்கிறது. அப்படி இருப்பினும் தனிப்பட்டவராகக் காணப்படும் போது அவர் அவர்களுக்கு இரங்குகிறவராகவே இருப்பார்; அவர்கள் தங்களது பொன், வெள்ளி விக்ரகங்களை அழித்து, தங்களது மேட்டிமையையும் பெருமையையும் தாழ்மைப்படுத்தி அதன் பிறகு தங்களது சுயநலத்தையும், பெருமையையும், கைவிட்டால் அவர் அவர்களைக் குணப்படுத்தித் தேற்றுவதற்குக் கிருபை உள்ளவராய் இருக்கிறார். மேலும் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், நாம் குறிப்பிட்டிருப்பது நேர்மையான எழுத்தாளர்களின் நியாயமான, மிதமான கருத்தே அன்றி ஏகாத்திபத்திய கற்பனையாளரின் நியாயமற்ற, எல்லைமீறிய, தீவிரமான குற்றச்சாட்டு அல்ல.

நியாயத்தீர்ப்பினைக் குறித்து ஒரு மிதமான கருத்தைப் பெறுவதற்கு உதவியாக சில காரியங்களை நாம் நினைவில் கொள்ளவேண்டும். (1) "செல்வந்தர்" என்ற பதமானது மிகவும் விசாலமான ஒன்று. மட்டுமன்றி செல்வத்தில் மிகவும் செழிப்புள்ளவர்கள் மட்டும் இதில் அடங்கவில்லை. அப்படிப்பார்த்தால் இந்த பட்டிய-ல் இவர்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது அநேகரை ஏழை என்றே கூறவேண்டியிருக்கும்; (2) இந்த ஏழைகளில் பணக்காரர் என அழைக்கப்படுகிறவர்களில் அநேகர் மிகவும் சிறந்த தயாளகுணமுடைவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் தர்ம ஸ்தாபனங்களிலும், இரக்கமான காரியங்களிலும் ஈடுபடுகிறார்கள். பிறருடைய நன்மைகளுக்காய் தன்னை தியாகம் செய்யாதவர்கள், இவ்விதம் அவர்கள் செய்யாததின் நிமித்தம் நிச்சயமாய் இரக்கமின்றி கண்டனத்துக்குரியவர்களாவர். அப்படியே தங்களை ஜீவப-யாய்

ஒப்புக் கொடுத்தவர்களுக்கு அப்படிப்பட்ட எண்ணத்தை வெளிப்படுத்துபவர் ஏழையோ, பணக்காரரோ யாராக இருந்தாலும் அவர்களது ஒவ்வொரு அணுகுமுறையையும் பெரிதாக கருதி பாராட்டைப் பெறும்.

அநேக பணக்காரர்கள் செலுத்தும் மிக அதிகமான வரிப்பணமானது இலவச பள்ளிக்கூடங்களுக்கும், அரசாங்கத்தை ஆதரிக்கும் பணிகளுக்கும், பொது தர்ம காரியங்களுக்கும் இன்னும் பிற காரியங்களுக்கும் செலவு செய்யப்படுவதோடு கூட ஏழைகளுக்கு உதவி அளிக்கவும், விடுதிகள், கல்லூரிகள், மருத்துவமனைகளுக்கும் கூட உதாரத்துவமாய் மனமுவந்து அளிக்கப்படுகின்றன. மேலும் இவைகளை நல்ல நேர்மையான உள்ளத்துடன் செய்பவர்கள் மனுஷனுடைய புகழ்ச்சிக்கும், வெளிப்படையாய் பிரபலப்படுத்திக் கொள்ளவும் செய்வார்களாகில், நிச்சயம் அதற்குரிய சன்மானத்தை இழக்கமாட்டார்கள். (சில சமயங்களில் சிலர் அவ்விதம் இருக்கிறார்கள் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்) இப்படிப்பட்டவர்கள் யாவரும் உண்மையில் பெரிதாக மதிக்கப்படவேண்டியவர்கள்.

கோடீஸ்வரர்களை விமர்சிக்க எல்லோருமே விருப்பமுடையவர்களாக இருக்கின்றனர். ஆனால் சில விஷயங்களில் இந்த விமர்சனம் மிகவும் கடுமையாய் இருக்கும் என்று நாம் அஞ்சவேண்டியிருக்கிறது. எனவே அவர்களைக் குறித்து நமது வாசகர்கள் மிகவும் இரக்கமற்ற சிந்தையைக் கொள்ளக்கூடாது என்பதை வ-யுறுத்துகிறோம். தற்போதுள்ள சமூக முறைமைகளுக்கு ஏழைகளைப்போலவே அவர்களும் கூட கட்டுப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். சமுதாய மரபுகள் அவர்களது இதயங்களையும், கரங்களையும் சுற்றி சட்டத்திட்டங்களையும், தடைகளையும் வே-யாக அமைத்துவிட்டிருக்கின்றன. உலகமனைத்தும் உள்ள கிறிஸ்வ தேசங்களின் தவறான கருத்தானது - பல நூற்றாண்டுகளாய் ஏழை, பணக்காரர்களிடம் ஆழமாக பதிந்துவிட்டதால் அவர்களது மனது வெளியே வர இயலாமல் அதிலேயே முன்னும் பின்னும் அசைந்துக் கொண்டிருக்கிறது. பிறர் செய்வதைப் போலவே தாங்களும் கூட தங்களது நேரத்தையும், திறமைகளையும் தங்களால் முடிந்த



அளவிற்கு வியாபார ரீதியான முறைகளில் செலவிடவேண்டும் என்று நினைக்கின்றனர். இப்படிச் செய்வதின் நிமித்தம் பணமானது அவர்கள் மேலே புரண்டு ஓடுகிறது. ஏனெனில் பணமும் இயந்திரங்களுமே செல்வத்தை உருவாக்கும் படைப்பாளிகளாய் இருக்கின்றன. உழைப்போ மிகவும் ம-வாகிப் போனது.

இப்படியிருக்கும் விதத்தில் சந்தேகமின்றி செல்வந்தர்கள் அதைக் குவிப்பதில் மட்டுமே குறியாக இல்லாமல் அதில் கொஞ்சமாவது செலவிடுவதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். ஒருவேளை தர்ம காரியங்களில் செலவிடுவதோ அல்லது தொழிலாளிகளுக்கு கூ-யாக அளிப்பதோ என்பது குறித்து அவர்கள் கேள்வி எழுப்பலாம். அப்படியிருக்குமானால் இரண்டாவது எண்ணமே உயர்வான திட்டமாய் இருக்கும். விருந்துகளும், நடன விழாக்களும், திருமணங்களும், உல்லாசபடகுகளும் அவர்களுக்கும் அவர்களுடைய நண்பர்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கலாம். குறைவான செல்வமுடைய அவர்களது அண்டை அயலாருக்கும் வேண்டுமாயின் உபகாரமாக இருக்கலாம். அந்தக் கருத்தில் பார்த்தால் ஒரு உண்மை விளங்கவில்லையா? உதாரணத்திற்கு ஒரு 10,000 டாலர் செலவுபிடிக்கும் ஒரு நடன நிகழ்ச்சி நடத்துவதைக் காட்டிலும் அதைக் கொண்டு தொழில் தொடங்கினால் இறைச்சிக் கடைக்காரர், பேக்கரியாளர், பூ வியாபாரி, தையல் தொழிலாளர், ஆடைகள் தயாரிப்பவர்கள், நகை வியாபாரிகள் ஆகியோர் மூலம் அதை 15,000 டாலராக உயர்த்தலாம். 800,000 டாலர் மதிப்புள்ள உல்லாச படகுக்கு செலவிடப்படும் பணம் இருக்குமானால் அதை தொழி-ல் முதலீடு செய்தால் அது அநேக தொழிலாளிகளின் வாழ்வுக்கு எவ்வளவு உதவிகரமாக இருக்கும்; இன்னும் பார்க்கப்போனால் குறைந்தது 20 பேருடைய வருடாந்திர செலவுக்கும், அதில் 100,000 டாலரானது அதிகாரிகள், பொறியாளர்கள், மாலுமிகள், உணவகத்தார் போன்றவர்களின் ஊதியத்திற்கும் இதர செலவுக்குமே உபயோகிக்கப்படலாம்.

ஆகவே தற்போதிருக்கும் மோசமான சூழ்நிலையில் பணக்காரர்கள் கருமிகளாய் இருப்பதற்குப் பதில், மூடத்தனமாய், வீண் செலவு செய்பவர்களாக இருப்பது நடுத்தர மற்றும் ஏழை மக்களுக்கு அதிகமான ஆதாயமானதாக இருக்கிறது. ஆடம்பரமாய்

செலவு செய்ய வெள்ளம் போல் புரளும் அவர்களது செல்வத்தில் ஒரு பகுதி அவர்களது கஜானாக்களில் உழன்றுக் கொண்டிருக்கிறது. உதாரணத்துக்கு இவர்கள் உபயோகப்படுத்தும் வைரங்களுக்காக - சுரங்கத்தைத் தோண்டவும், அதை பட்டைதீட்டவும், நகைகளில் பதிக்கவும் வேண்டியிருக்கிறது. இதன் மூலம் ஆயிரக்கணக்கானோர் தொழிலாளி என்ற பட்டிய-லாவது இடம் பெற வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. ஆகவே செல்வந்தர்கள் வீண் செலவும் ஆடம்பர செலவும் செய்யும் குறைபாடு உடையவர்களாக இருக்கவில்லையென்றால் இவர்களுக்கு இந்த தொழிலாளி என்கிற ஸ்தானம் கூட கிடைக்காது. இந்தக் காரணத்திற்காக பணக்காரரின் ஆடம்பரங்கள் அனைத்தையும் “தர்மகாரியமாகவே” உண்மையில் கருத வேண்டி இருக்கிறது. அப்படி அவர்கள் செய்வார்களாகில், அதேவித தவறான அபிப்பிரயத்தை சில நடுத்தர வர்க்கத்தினரும் பின்பற்ற ஆரம்பித்து, “தர்மகாரியங்களுக்காகவே” என்று சொல்-க் கொண்டு “சபை கூடுகைகளில்” விற்பனைகளையும் திருவிழாக்களையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

அவர்களது செயல்களை நாம் நியாயப்படுத்தவில்லை. பொருளாதார நெருக்கடி இருக்கும் நேரத்தில் பணக்காரர்கள் செய்யும் வீண் ஆடம்பர செலவுகளானது ஏழைகளுக்காக அவர்கள் கொஞ்சம் கூட வருந்துகிறவர்களாக இல்லை என்பதை மறைமுகமாய் சொல்லவேண்டிய அவசியமே இல்லை. “வியாபார முதலீட்டை” தவிர வேறு எந்த வகையிலாவது அவர்கள் தர்மகாரியங்களை செய்ய நினைக்கும் போது தங்களது தினசரி வருமானத்தை விநியோகம் செய்வதற்கு ஒரு சிறு கூட்டமான ஆணும் பெண்ணும் நிச்சயம் வேண்டும் என்று நினைக்கிறார்கள். மிகவும் தேவைப்பட்டவருக்கு அது போய்ச் சேரும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. ஏனெனில் சுயநலம் என்பது அவ்வளவு சர்வ சாதாரணமாய் இருக்கிறது. ஆகவே அத்தனை அதிகமான பொருட்களை நேர்மையுடன் பகிர்ந்தளிக்க இவர்கள் சிலரை நம்பவேண்டியிருக்கிறது. ஒரு கோடீஸ்வரி கூறுகிறார் : ஏழைகளின் இருப்பிடத்தை கடந்து பிரயாணிக்கும் போது தன் வாகனத்தின் ஜன்னல்களில் கூட அவர்களை பார்ப்பதில்லையாம். ஏனெனில் அது



தனது கண்களுக்கு அதிர்ச்சியூட்டுபவையாக இருக்கின்றனவாம். தனது நிலைமைக்கும் அந்த ஏழைகளின் நிலைமைக்கும் இருக்கும் ஏற்றத் தாழ்வு அவளது மனசாட்சியை உருத்தாமல் இருப்பது நமக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. தர்மகாரியங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக்கூட நேரம் இல்லாத அளவிற்கு ஆண்கள் தங்கள் தொழில் முதலீடுகளில் அத்தனை ஈடுபாட்டுடனும், பெண்கள் இதுபோன்ற காரியங்கள் தங்களுக்கு சற்றும் தகுதிவாய்ந்தது அல்ல என்று கருதும் நிலையிலும் இருக்கின்றனர். ஏனெனில் அருவருப்பான காட்சிகளையும், அருவருப்பான வாசனையையும், அருவருப்பான அவல ஓலங்களையும் சந்திக்க வேண்டியிருக்குமே. தற்போதிருக்கும் தங்கள் நிலைமையைக் காட்டிலும் சற்று நல்ல நிலைமையை ஏழைகள் வாஞ்சிக்கும் போது, சுயநலமும், பெருமையும், சமூக வேலைகளும், சில கோட்பாடுகளும், அநேக பலன்களைத் தடுத்து விடுகிறது. யாரோ ஒருவர் சொன்னது போல், “மனிதனுடைய பெலவீனத்தினால் தொடப்பட்டதனாலேயே நமது கர்த்தர் நன்மைகளைச் செய்தவராய் சுற்றித்திரிந்தாராம்.”

இவ்வித ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் வறுமைக் கோட்டில் இருப்பவர்களுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருக்கும். பணக்காரருடைய சுயநலமான, ஆடம்பர வீண் செலவினங்களை எந்த விதத்திலும் நம்மால் நியாயப்படுத்த இயலாது. அது தவறு. தேவன் அதைத் தவறு என்று கண்டிக்கிறார். (யாக் 5:5) ஆனால் விரக்திநிறைந்த இவ்வித கேள்விகளின் பிற பக்கங்களைப் பார்க்கும் போது நமது மனம் ஒரு சமநிலைக்கு வருகிறது. “இவ்வுலகத்தின் அதிபதியானவன்” தன் முழுதிறமையாலும் குருடாக்கிவிட்டவர்கள் மீதும், தேவனிடத்தி-ருந்து கடுமையான தண்டைனையையும், நிந்தனையையும் பெறப்போகிறவர்கள் மீதும் தீர்ப்பானது மிகவும் தீர்க்கமாகவும், மனதுருக்கமாகவும் மிகவும் மென்மையானதாகவும் இருக்கும். அதே விதத்தில் தவறான வழியில் சில காரியங்களை நியாயப்படுத்தவதில் “இவ்வுலகத்தின் அதிபதி(பிசாசு)” ஏழைகளையும் ஒருவிதத்தில் குருடாக்கி வைத்திருக்கிறான். ஆகவே பிசாசானவன் இரு பக்கத்தாரையும் ஒரு மாபெரும் யுத்தத்திற்கு வழிநடத்திக் கொண்டிருக்கிறான்.

ஆனால் வெகுசிலரது கரத்தில் மட்டும் தற்காலத்தில் செல்வம் குவிவதை குறித்து சிலர் மனம் வருந்துவதைக் கூட நாம் கண்டபோதிலும் சில பணக்கார்கள் அதிலும் சுமாரான பணக்காரர்கள் மிகவும் தர்மசிந்தையுடன் இருப்பதை நாம் பார்க்க முடிகிறது. மேலும் அவர்கள் எல்லோரையும் கட்டுப்படுத்தும் அதே சட்டத்திற்கு உட்பட்டே செல்வத்தை சம்பாதிக்கிறதாக கூறுகின்றனர். அதேசமயம் ஏழைகளுக்கு பெருந்தன்மை மிகவும் குறைவு என்கிற வாதம் உண்மையாக இருக்கின்றது. மேலும் சில பணக்காரர்களைக் காட்டிலும் ஏழைகள் நியாயத்தை செயல்படுத்துவதில் தாழ்ந்தவராகவும் இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் இடம்மாற்றம் செய்யப்பட்டால் பணக்காரரை விட ஏழைகள் மிகவும் பிடிவாதமும், கடுமையானவர்களுமாய் இருப்பார்கள். ஆனாலும்கூட "சோஷ-சம்" என்ற நோக்கத்தில் பார்க்கும்போது செல்வந்தர்களை இந்த விஷயத்தில் கர்த்தர் நியாயத்தீர்ப்புக்கு அழைக்கிறார். ஏனெனில், இந்த நாட்களில் நடைமுறைப்படுத்தும் மிகவும் பாரபட்சமற்ற மிகவும் பெருந்தன்மையானதொரு திட்டத்தை அவர்களாகவே நாடவில்லை.

சமுதாயத்தின் கடமை என்று பார்க்கும்போது இயற்கை வளங்களையும் (நிலம், நீர், காற்று) வாய்ப்புகளையும் எந்தத் தடையும் இன்றி ஆண்டுக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற விஷயத்தைக் குறித்த அநேக ஜனங்களின் கண்ணோட்டத்தைப் பார்க்கும் போதும் அல்லது இவைகளின் ஏகபோக உரிமை தனிப்பட்ட ஒருவரின் உரிமையாகிப் போய், இந்த உரிமையில் பங்கில்லாதவர்களுக்கு தினசரி உழைப்பதற்கும் கூட வாய்ப்புகள் கிடைக்க எதிர்பார்க்கவேண்டியிருக்கும் போது யாரோ ஒருவர் கூறியதி-ருந்து ஒரு பகுதியைத் தருகிறோம்.

"உண்மை வாழ்க்கையில் மிகவும் பரிதாபகரமான நிகழ்ச்சி என்று சில சமயங்களில் பத்திரிக்கைகளில் கூறப்படுவதைக் காட்டிலும் நியூயார்க் புரூக்ளினில் வசிக்கும் எந்த பள்ளி ஆசிரியரும் ஒப்புக்கொள்ளும் ஒரு பகுதியை கீழே காணலாம் :

"நியூயார்க் நகரத்தின் மிகவும் வறுமை நிறைந்த கிழக்குப் பகுதியி-ருந்து சிறார் பள்ளியில் சிறுமி ஒருத்தி படித்து வந்தாள். சமீபத்தில் ஒரு நாள் அவள் மிகவும் மெல்-ய உடை அணிந்திருந்தபடியால் அந்தக் கடும் குளிரால் பாதிக்கப்பட்டவளாய் சில்-ட்டுப்போய் வந்திருந்தாள். அந்தப்பள்ளியின் கதகதப்பான அறைக்குள் சிறிது நேரம் தங்கி சற்று குளிர் அடங்கியபின் மிகவும் ஆர்வத்தோடு தன் ஆசிரியையின் முகத்தைப் பார்த்து :

"மிஸ் (பெயரைக் கூறி) அவர்களே - நீங்கள் தேவனை நேசிக்கிறீர்களா?"

"ஏன் அப்படிக் கேட்கிறாய்? ஆம் நான் நேசிக்கிறேன்" என்றார் ஆசிரியை.

"அப்படியா, ஆனால் நான் நேசிக்கவில்லை என்று மிகவும் நிதானமாய் கூறிவிட்டு சட்டென்று தீர்க்கமாயும் கடுமையாயும் "நான் தேவனை வெறுக்கிறேன்" என்றாள்.

"தேவனை நேசிப்பதுதான் மிகவும் சரி என்று எவ்வளவோ கஷ்டப்பட்டு பிள்ளைகளுக்கு கற்றுத்தரும் அந்த ஆசிரியைக்குத் தன்னுடைய மாணவி அதுவும் இத்தனை சிறிய பெண்ணிடமிருந்து வித்தியாசமான இந்த பதிலை எதிர்பார்க்காததினால் ஏன் இப்படிக் கூறினாள்?" என்று விளக்கம் கேட்டபோது சிறுமி கூறுகிறாள்:

"தேவன் குளிர்காற்றை வீசச் செய்கிறார். ஆனால் எனக்கு அதி-ருந்து பாதுகாக்க சரியான உடையில்லை; பனியை அவரே உண்டாக்குகிறார், என்னுடைய காலணிகளில் கிழிந்த ஓட்டைகள் இருக்கிறது, அது என்னை உறையச் செய்கிறது. எங்கள் வீட்டிலோ அனல்மூட்ட தனல் இல்லை. நம்மை பசியடையச் செய்கிறார், என் தாயிடம் எங்களுக்கு உணவளிக்க ரொட்டியும் இல்லை."

இதற்கு விமர்சனம் எழுதுகின்றனர் : "இந்த பூமியில் உள்ள தன் பிள்ளைகளுக்கென தேவன் கொடுத்திருக்கும் இயற்கை வளங்கள் மிகமிக ஏராளம் என்று நாம் எண்ணுவோமாகில் இந்தக் கதையை படித்தபின் இந்த கள்ளங்கபடமற்ற சிறுமியினைப் போலவே தேவனிடத்தில் ஏழ்மையின் அவலங்களைக் குறித்து முறையிட நாமும் கூட பணக்காரருடைய திருப்திகரமான வாழ்வைக் குறித்து பக்தியற்றவர்களாய் பொறுமையின்றி பேசிவிடுவோம்."

சுயநலம் என்பது இவ்வுலகத்தின் குணமாக

இருக்கிறபடியால் எப்படியிருப்பினும் கூட இவ்வுலகத்திடமிருந்து அதிகமாய் எதையும் எதிர்பார்க்க இயலாது. கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் அநேக செல்வந்தர்களை நாம் கேள்வியுடன் பார்க்கும்படி ஏராளமான காரணங்கள் உண்டு. இப்படிப்பட்ட கிறிஸ்தவ செல்வந்தர்கள் தங்கள் வாழ்வையோ அல்லது அவர்களது செல்வத்தையோ நற்செய்தியின் ஊழியத்திற்கு என்று அர்ப்பணிக்கவில்லை அல்லது குறைந்தபட்சம் நிலையற்ற இந்த மனுக்குல நலனுக்காக்கூட அதனை அவர்கள் அர்ப்பணிக்கவில்லை. உண்மையில் சுவிசேஷப் பணிகளுக்கே முத-டம் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் சந்தேகமே இல்லை. அதற்காகவே நமது எல்லா நேரத்தையும், திறமையையும், செல்வாக்கையும், இன்னும் உடைமைகள் யாவையுமே கொடுக்கவேண்டும். ஆனால், இவையாவும் பார்வைக்கு மறைக்கப்பட்டுத் தவறான கருத்துக்களினாலும், தவறான போதனைகளாலும் இருதயங்கள் முடக்கப்பட்டுவிட்டன. வீழ்ந்து போன தன் சக சிருஷ்டிகளின் சமுதாய மேம்பாடு, நகர ஒழுங்கமைப்பு என்று ஒழுங்கான அநேக நல்ல காரியங்களைச் செய்ய ஜீவப-யாய் அர்ப்பணித்தவர்களது இதயம் நிச்சயம் இடங்கொடுத்திருக்கும். ஆனால் வெகுசிலரே இவ்விதமான காரியங்களில் தங்களை உண்மையிலேயே ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அப்படிச் செய்கிறவர்கள் பெரும்பாலும் ஏழைகளும், நடுத்தர வர்க்கத்தாருமே; செல்வந்தர்கள் இந்தப் பட்டிய-ல் சிலரும், கோடீஸ்வரரில் வெகுசிலருமே இருக்கின்றனர். ஒருவேளை கிறிஸ்துவுக்கு இருந்த அதேவிதமான எண்ணத்தினை இவ்வுலகத்தின் கோடீஸ்வரரில் சிலர் பெற்றிருப்பார்களேயாகில், தங்களது சொந்தப் பணம், பொருளாதார திறமைகள் ஆகியவற்றின் மூலம் தக்க நேரத்தில் தகுதியான உதவி செய்வதில் சந்தோஷப்படுவார்கள். இப்படி இருப்பார்களேயாகில் சமுதாய சீர்திருத்தத்தில் ஒரு வருடகாலத்தில் எவ்வளவோ முன்னேற்றத்தைக் காட்டமுடியும்! கூட்டுறவுச் சங்கங்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட பொது ஓட்டுரிமைகள் பொதுமக்களின் நலனுக்கு என்று கூறிக்கொண்டு எப்படி தடைசெய்யப்படவோ அல்லது மீட்கப்படவோ முடியும்; வன்மையான சட்டங்கள் சீர்திருத்தப்பட்டு, பொதுமக்களின் நலனைக் கருதும் பொதுவான திட்டங்கள் வரையப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, பொருளாதார , அரசியல் அமைப்புகளுக்கு (Ringsters) சற்றுக் குறைவான அதிகாரங்கள் அளிக்கப்பட்டு பொதுமக்களின் நலனுக்கு எதிராய் எப்படி செயல்பட முடியும்.



ஆனால் செல்வத்தின் உபயோகம் இத்தனை நன்மையானதாக இருக்கும்படி எதிர்பார்ப்பது அவ்வளவு நியாயமானதல்ல, ஏனெனில் கிறிஸ்தவத்தைக் குறித்து எத்தனையோ செல்வந்தர்கள் பறைசாற்றினாலும் கூட, உலகத்தில் மீதமுள்ளவர்களைப் போலவே - இவர்களுக்கும் கூட உண்மையான கிறிஸ்துவத்தைக் குறித்தோ, இயேசுவை தன்சொந்த மீட்பராக விசுவாசிக்கவோ அல்லது கிறிஸ்துவின் சேவைக்காய் தனக்குண்டான திறமைகள் யாவையும் முழுமையாய் தியாகம் செய்யவோ தெரியாது. “கிறிஸ்தவர்” என்ற கூட்டத்தாராய் இருக்க அவர்கள் விரும்புகிறார்கள். ஏனெனில் இதைவிட “விக்கிரக ஆராதனைக்காரராகவோ அல்லது யூதராகவோ” குறிப்பிடப்படுவதை விரும்பவில்லை. ஏனெனில், இயேசு சிலுவையில் அறையப்பட்ட காலத்தில் அவரது போதனைகள் மிகவும் பிரபலமாக இருந்தது போல தற்போது இல்லாத போதிலும் கூட “கிறிஸ்து” என்ற பெயர் தற்காலத்தில் மிகவும் பிரபலமாய் இருக்கின்றது.

மெய்யாகவே தேவவசனம் உறுதியாய் கூறுகிறபடி மாபெரும் மனிதரோ, செல்வந்தரோ அல்லது ஞானிகளோ தமது ராஜ்யத்தில் உடன்பங்காளிகளாய் இருக்கும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்படவில்லை. ஆனால் அதற்கு மாறாய் ஏழைகளும், இவ்வுலகத்தின் பார்வைக்கும், ஞானத்துக்கும் தகுதியில்லை என்று நிராகரிக்கப்பட்டவர்களையே முதலாவதாக தேவன் தெரிந்தெடுக்கிறார். *(எத்தனை கஷ்டப்பட்டாலும்) செல்வந்தர்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதாகும். ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஊசியின் காதில் ஒட்டகமானது நுழைவது எளிதாயிருக்கும். (மத் 19:23,24)*

(“*ஊசியின் காது*” என்ற சொல் பண்டைய நகரத்தின் கோட்டையின் வாயி-ல் இருக்கக்கூடிய ஒரு சிறிய நுழைவு வாயி-ன் பெயராகும். இது

சூரிய அஸ்தமானதுக்குப்பின் பெரிய வாயில் அடைக்கப்படும்போது (எதிரிகளின் தாக்குதலுக்கு அஞ்சி) வெளியே சென்றவர்கள் பட்டணத்துக்குள் வருவதற்கென திறந்துவிடப்படும், ஒரு சிறிய வாயி-ன் பெயராகும். வியாபாரிகள் ஒட்டகங்களின் மீது சரக்குகளை ஏற்றி வரும்போது அதில் நுழைவது மிகவும் கடினமாகும். தனது சரக்குகளையெல்லாம் இறக்கி வைத்துவிட்டு, கால்களை தரைமட்டும் தாழ்த்தி கஷ்டப்பட்டு குனிந்து நடந்தாலொழிய இந்த வாயி-ல் ஒட்டகம் நுழைவது கடினம். அப்படி ஒருவேளை நுழைந்தாலும் அந்த ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிதானதல்ல. ஆகவே செல்வந்தர்கள் தங்கள் மேட்டிமைகளை இறக்கி வைத்துவிட்டு, தங்களுக்காக தேவன் கொடுக்கும் அழைப்பைப் பணிவுடன் ஏற்று அப்படி வரும்போது பரலோக ராஜ்யத்தில் தங்களுக்கு ஒரு இடம் உண்டு என்ற நிச்சயத்துடன் வரவேண்டும் என்பதை விளக்கவே இப்படி கூறப்பட்டுள்ளது.)

ஆனால் ஐயோ! இந்த "பரிதாபமான செல்வந்தர்கள்" மிகவும் பயங்கரமான அனுபவத்துக்குள் கடந்து செல்ல வேண்டியிருக்கும். வரப்போகும் ராஜ்யத்தின் மகிமை மற்றும் மேன்மைக்கும் செல்வமானது ஒரு தடையாக இருப்பதோடு இந்த உலகத்திலும் கூட செல்வத்தின் அனுகூலங்கள் மிகவும் நிலையற்ற குறுகிய காலத்திற்கே உரியதாகவும் இருக்கும். "ஐசுவரியவான்களே, கேளுங்கள். உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களின் நிமித்தம் அலறி அழுங்கள்.... கடைசி நாட்களில் பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்." அப்படிப்பட்ட செல்வந்தரின் அழுகையும் கூக்குரலும் வெகுசீக்கிரத்தில் கேட்கப் போகிறது. மேலும் இந்த காரியத்தை அறிந்ததின் நிமித்தம் பொறாமை, பேராசை யாவும் எல்லா இருதயங்களி-ருந்தும் அகற்றப்படவேண்டும். இப்படிப்பட்ட பரிதாபகரமான செல்வந்தர்கள் மீது மன இரக்கம் பொங்கவேண்டும். இப்படிப்பட்ட மன இரக்கம் தேவனுடைய தீர்ப்பிற்கு போட்டியாகவோ அல்லது தீர்ப்பினைத் திருத்தி அமைக்கும் எண்ணமுடையதாகவோ இருக்காமல் அவரது ஞானத்தையும், நன்மைகளையும் உணர்ந்து கொண்டு அழுகை மற்றும் கூக்குர-ன் மூலம் அன்பையும், நீதியையும் காணக் கண்களைத் திறந்து இருதயங்களைத் திருத்துவதாய் இருக்க வேண்டும். இது ஏழை பணக்காரர் யாவருக்கும் ஒரே மாதிரி இருக்க வேண்டும். ஆனால் செல்வந்தர் மீது சற்றுக் கடுமையாக இருக்கும். ஏனெனில் அவர்களது



மனமாற்ற நிலைமையானது மிகவும் அதிகப்படியாகவும், அதிக தீவிரமானதாகவும் இருக்கும்.

ஆனால் இந்தச் செல்வச் செழிப்பையும் காரியங்களையும் மாற்றி அமைப்பதற்கான நிலைமை ஏன் மிகவும் சாதகமான ஒன்றாய் இல்லை? ஏனெனில் இந்த உலகமானது அன்பு என்னும் ராஜரீக சட்டத்தின் கீழ் ஆளப்படாமல், சுயநலம், துன்மார்க்கம் என்கின்ற சட்டத்தால் ஆளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

### சுயாதீனத்தோடு இணைந்த சுயநலம்

கிறிஸ்தவ போதனைகள் உரிமையை வளர்க்கிறது. இந்த உரிமை கல்வியையும், ஞானத்தையும் கிரகிக்க வழிகாட்டுகிறது. ஆனால் இந்த உரிமையும், ஞானமும் அன்பு என்னும் ராஜரீக பிரமாணத்தின் ஒழுங்குக்கும், வரைமுறைக்கும் கட்டுப்பட்டு இல்லாதபோது அந்த உரிமையும், அறிவும் மனித நலனுக்கே ஊறுவிளைவிப்பதாகவே இருக்கிறது. ஆகவே "கிறிஸ்தவ ராஜ்யங்கள்" கிறிஸ்தவ உரிமையையும், பெற்றிருக்கும் அறிவையும், தேவனுடைய பிரமாணங்களைத் தனக்குள் ஏற்று செயல்படுத்த பயன்படுத்துவதற்கு பதிலாய் வீழ்ந்து போன சுய நலமான தவறான காரியங்களுக்கே பயன்படுத்துகிறது. இதனிமித்தம் தனது சுயநலத்தை எப்படி செயல்படுத்திக் கொள்வது என்பதற்கான அறிவை பெறவே முழுவதிலும் தேர்ந்தவராகின்றனர். இதன் பலனாய், கிறிஸ்தவ தேசங்கள் தான் இன்றைய உலகில் மிகவும் அதிருப்தியான பகுதியாக காணப்படுகிறது; அதே சமயம் பிற நாடுகளோ அன்பின் ஆவியாகிய, கிறிஸ்துவின் ஆவியை ஏற்றுக் கொள்ளாமலேயே - கிறிஸ்தவத்தின் அறிவையும், உரிமையும் மட்டும் தங்களுக்குள் ஏற்றுக் கொண்டு அதிருப்தியையும் காயங்களையும் பகிர்ந்து கொள்கின்றன.

வேதத்தின் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் மறைமுகமாய் சுயாதீனத்தின் ஆவியை ஊக்கப்படுத்துகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் வேலைக்காரர் யாவரும் தங்கள் எஜமானருக்குக் கட்டுப்பட்டவர்களானவர்கள். அதே சமயம் எஜமானரும் கூட தன் வேலைக்காரரின் நலனில் அக்கறை உள்ளவராக இருப்பதற்குக்

கடமைப்பட்டவர்களாக இருக்கின்றனர். தன் ஊழியக்காரருக்கு இழைக்கப்படும் அநீதி யாவற்றுக்கும் தக்க பலனைத் தேவனாகிய யோகோவா (நம் யாவருக்கும் எஜமானராகிய மகா தேவன்) நிச்சயமாகவே தருவார் என்பதையும் தெளிவாய்க் கூறுகிறது. புதிய ஏற்பாடாகிய நற்செய்தியும் கூட இதையே கூறுகிறது. (கொலோ *3:22-25; 4:1*) ஆனால் வேதம் மிகவும் திட்டமாய் கூறுவது என்னவெனில்: மனிதன் உடல் வ-மையிலும், நெறியிலும், அறிவிலும் வேறுபட்டிருந்தாலும், எல்லாரும் பூரணராக்கப்படும்படி தேவன் முழுமையான முன்னேற்பாட்டை வைத்திருக்கிறார். அதாவது கிறிஸ்துவின் மேல் கொண்ட விசுவாசத்தினால் ஏழையும் பணக்காரரும், அடிமையும் சுயாதீனனும், ஆண், பெண் மற்றும் ஞானியும் அஞ்ஞானியும் - யாவருமே ஒரு பொதுவான நிலையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு - பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் தேவ கிருபைக்கு மறுபடியும் திரும்புவார்கள்.

ஆகவே பழங்காலத்து யூதர்கள் சுதந்திரத்தை விரும்புகிற மக்களாய் இருந்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை; மட்டுமன்றி மேற்கொள்ளப்படாதவர்களாய் மிகவும் முரட்டாட்டம் உடையவர்கள் என்ற பெயர் பெற்றவர்களாக இருந்தபடியால் அவர்களை தோற்கடித்தவர்கள் வேறு வழியின்றி அந்த தேசம் முழுவதையுமே நாசப்படுத்தினாலொழிய இவர்களைப் பணியச் செய்ய முடியாது என்ற முடிவுக்கு வந்தனர். அதுமட்டுமன்றி (கிறிஸ்தவரல்லாதவரும் கூட) பிரபலமான அரசியல் மேதைகளும் கூட "வேதமே நமது சுதந்திரத்துக்கு மூலைக்கல்" என்று ஒப்புக் கொண்டனர்; அதோடுகூட அதற்கான அனுபவ பூர்வமான ஆதாரமும் அதை நிரூபித்தது; எங்கெல்லாம் வேதம் செல்கிறதோ, அங்கெல்லாம் விடுதலை சென்றது; ஏனெனில் அது போகும் இடமெல்லாம் அறிவையும், பொதுவான மேன்மையான கருத்தினையும் தன்னுடனே எடுத்துச்சென்றது. கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் இரண்டு நூற்றாண்டுகளிலும் இந்த நிலை இருந்தது; அதன்பின் (குருகுல ஆட்சி மற்றும் மூடநம்பிக்கை நிறைந்த) தப்பறைகள் அதிகாரத்துக்கு வந்தது; வேதம்



புறக்கணிக்கப்பட்டது. மேலும் முன்னேற்றம் இல்லை. இருண்ட காலத்தில் போப்பு சபையின் கொள்கைகள் வந்தன. வேதாகமம் மறுமலர்ச்சி அடைந்து பிரிட்டன் மற்றும் ஜெர்மன் சீர்திருத்தத்தினால் சுதந்திரமும், அறிவும், முன்னேற்றமும் மறுபடியும் மக்களிடையே வளர ஆரம்பித்தது. வேதத்தை பெற்றிருக்கும் தேசங்கள் சுதந்திரத்தையும் அறிவுத் தெளிவையும் பெற்றிருந்தன. மேலும் வேதம் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் மக்களும் சுதந்திரம் மற்றும் அறிவு பெற்றவர்களாய், பொதுவாய் நல்ல கல்வி உடையவர்களாய் இருப்பதோடு எல்லாத் துறைகளிலும் மிகவும் முன்னேற்றத்தின் பாதையில் செல்பவர்களாயும் இருக்கிறார்கள் என்பது யாராலும் ஆட்சேபிக்க இயலாத ஒரு உண்மையாகும்.

ஆனால் மேலே கூறப்பட்டதை நாம் கூர்ந்து கவனிப்போமேயானால் வேதத்தின் பலனான அறிவும் தெளிவும் சுதந்திரமும் கிறிஸ்தவ உலகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டாலும் அதன் (பூரணமான சுயாதீன பிரமாணம், யாக் *1:25*)) அன்பின் பிரமாணமானது பொதுவாகவே புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அறிவும், சுதந்திரமும் சேர்ந்து ஒரு மாபெரும் சக்தியை நிலைநிறுத்துகிறது என்ற உண்மையை அறிந்து கொள்ள ஜனங்கள் இப்போதுதான் விழிப்பைப் பெறுகிறார்கள். இந்த சக்தியானது நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ செயல்படுத்தப்படலாம். அப்படி இருக்குமேயானால் அன்பு என்னும் ஆதாரத்தின் மீது உபயோகித்தால் அதன் விளைவானது நன்மைக்கேதுவாய் இருக்கும். ஆனால் சுய நலத்தின் மீது செயல்படும் போது விளைவானது தீமையாய் இருக்கும். அப்படிப்பட்ட தீமை மிகவும் வ-யதாய் இருக்கும். இந்த நிலைமையே தற்போது கிறிஸ்தவ ராஜ்யத்தைத் தாக்குகின்ற ஒன்றாய் இருக்கிறது. மேலும் இந்த நிலைமையே சமூக அமைப்புகளைப் "பழி வாங்கும் நாளு"க்கான அக்கினிக்கும் பாவத்தின் பரிகாரத்துக்கும் நேராக மிகவேகமாக தயார்படுத்தி வருகிறது.

மிகவும் உபயோகமான, லாபகரமான இரசாயனங்களின் மூலக்கூறுகளில் ஏற்படும் மாறுதல்களினால் திடீரென்று அது மிகவும் வீரியமுடைய விஷமாக மாறிவிடுவதை வேதியிய-ல் அடிக்கடி காணலாம். அதே விதத்தில் அறிவு, சுதந்திரம் என்ற ஆசீர்வாதங்கள்

சுயநலம் என்ற தீமையோடு சேரும் போது மிகவும் பயங்கரமான சக்தியாய் மாறிவிடுகிறது. இந்தக் கூட்டானது குறிப்பிட்ட அளவில் சேரும் போது மனுகுலத்திற்கு சில விலைமதிப்புள்ள சேவையினை அளித்துள்ளது. ஆனால் தற்போது பெருகிவரும் அறிவானது ஒரு வ-மையான ஸ்தானத்தை அடைய உயருவதற்குப் பதிலாக சுயநலம் என்னும் சிம்மாசனத்தில் அமர்ந்துவிட்டது. சுயநலமானது அதிகம் ஆதிக்கம் செலுத்தி அறிவையும், சுதந்திரத்தையும் தனது ஊழியர்களாய் உபயோகித்து வருகிறது. இந்தக் கூட்டாட்சியே தற்போது உலகை ஆளுகிறது. மேலும் அதன் விலையேறப் பெற்ற மூலகங்கள் கூட நீதிக்கும், சமாதானத்துக்கும் எதிரிகளாய் செயல்படுகின்றன. ஏனெனில், சுயநலத்தின் கட்டுப்பாட்டில் இவை தற்போது இருக்கின்றன. அறிவானது சுயநலத்தின் சேவகனாய் இருக்கின்ற இந்த நிலையில் சுயநலத்தின் ஆதாயத்திற்காகவே மிகவும் சுறுசுறுப்பாய் உழைக்கிறது. சுயநலத்தால் கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரமானது சுய-அதிகாரமாய் மாறி பிறருடைய உரிமைகளையும், சுதந்திரத்தையும் அசட்டை செய்யக்கூடிய அளவுக்குப் போய்விடுகிறது. ஆகவே தற்போதிருக்கும் நிலையில் சுயநலமானது (கட்டுப்படுத்துகின்ற) அறிவு, மற்றும் சுதந்திரத்தோடு கூட சேர்ந்து மூவராட்சி என்கின்ற தீய சக்தியாக அமைந்து, அதுவே தற்போது கிறிஸ்தவ ராஜ்யத்தை ஆண்டு நொறுக்கி வருகிறது. இதற்கு பணமும் செல்வாக்கும் படைத்த உயர்குடிமக்கள் என்ற பிரதிநிதிகளையும், பயன்படுத்திக் கொள்கிறது. வெகுவிரைவில் இதே மூவராட்சியானது தனது பிரதிநிதிகளையும் தனது வேலையாட்களையும் மாற்றிவிட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்திற்கு மாறிவிடும்.

நாகரீக வளர்ச்சியடைந்து விட்ட எல்லா நாடுகளிலும் - ஏழையும் பணக்காரரும், ஆணும் பெண்ணும் (வெகு குறைவான விதிவிலக்கோடு) படித்தவரும் படிக்காதவரும் ஆகிய யாவருமே இந்த வ-மையான கூட்டணியாலேயே பெரும்பாலும் வாழ்வின் செயல்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றனர். இவைகளினால் எல்லா ஜனங்களின் மத்தியிலும் பதவிக்காகவும், அதிகாரத்துக்காகவும் அனுகூலமான நலன்களுக்காகவும், சுய-



செல்வச் செழிப்புக்காகவும் ஒரு வெறித்தனம் உண்டாகக் காரணமாகிவிட்டது. தற்காலம் மற்றும் பிற்காலத்தில் பிறருக்கு நன்மை விளைய வேண்டும் என்ற நோக்கமுடைய சில பரிசுத்தவான்கள், எண்ணிக்கையில் மிகமிகக் குறைவாக இருக்கின்றபடியால், இந்தக் காலத்தின் நடவடிக்கைகளின் இடையில் இவர்களது கருத்து பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியைக்கூட இழந்து விடுகிறது. தங்கள் ஆண்டவரும் கர்த்தருமானவருடன் தாங்கள் மகிமைப்படுத்தப்பட்டு தேவனுடைய ராஜ்யத்தைப் போல இந்த உலகத்தை ஆசீர்வதிக்க அவர்கள் உயர்த்தப்பட்டு தகுதிபெறும் வரை, தாங்கள் வாஞ்சிக்கும் நன்மையைச் செய்வதற்கு இவர்கள் அதிகாரம் அற்றவர்களாகவே இருப்பார்கள். மேலும் இவர்கள் மாம்ச சரீரத்தில் இருக்கும் வரை - சுயநலத்தின் ஆதிக்கத்தின் கீழ் தங்களது மேலான அறிவும், மேலான சுதந்திரமும் தீமையாக மாறிவிடாதபடி விழிந்திருந்து ஜெபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

### சுதந்திரத்தைப் பற்றிய ஏழை மற்றும் பணக்காரரின் கருத்து

உலகத்தின் பெருவாரியான ஜனங்கள் தற்போதுதான் அடிமைத்தனத்தி-ருந்தும், கொத்தடிமைத்தனத்தி-ருந்தும் விடுதலையாகி சுதந்திரத்துக்குள் காலடி வைத்திருக்கின்றனர். தனிமனித அரசியல் விலங்குகளை அறிவானது வலுக்கட்டாமாய் உடைத்தெறிந்திருக்கிறது. அரசியல் சமநிலை மிகுந்த விருப்பத்தோடு அளிக்கப்படவில்லை. படிப்படியாய் கட்டாயப்படுத்தி பெறப்பட்டதே. பாரபட்சமற்ற அரசியல் உலகமானது தற்போது பெருமை மற்றும் சுயநலம் என்ற கோடுகளால் பிரிக்கப்படுகிறது. தங்களது செல்வத்தையும், அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்ளவும் மேம்படுத்திக் கொள்ளவும் பணக்காரரிடையேயும் மிகவும் செல்வம் படைத்தவரிடையேயும் ஒரு புதுவிதமான போர் மூள ஆரம்பித்திருக்கிறது. கீழ்மட்ட மக்களிடையே உழைப்புக்கான உரிமையை காத்துக் கொள்ளவும், வாழ்வின் மிக அத்தியாவசியத் தேவைகளை அனுபவிக்கவும் இந்தப் போர் நடக்கிறது. (ஆமோ 8:4-8) பணக்காரரில் அநேகர் ஏழை வகுப்பினரைக் குறித்துச் சிந்திக்கவும்,

வருத்தப்படவும் ஆரம்பித்ததினால், முடிவில் வாக்குரிமையும், சுதந்திரமும் மக்களுக்குக் கிடைத்தது. இது அவர்களுக்கு அநேக நன்மைகளை பெற்றுத் தருவதாக இருக்கும்! அப்போது சிந்தனை என்பது வாழ்வின் எல்லா செயல்பாடுகளுக்கும் மிகவும் முக்கியமானது என்று கண்டு கொள்வர். இவ்வித சிந்தனை முக்கியமாய் மேல்மட்டக் குடிமக்களிடையே இருந்தது. இவர்கள் தங்கள் சுதந்திரத்தை நியாயமாயும் சட்டப்படியுமே உபயோகிக்கிறார்கள் என்பதே நாம் கொண்டிருக்கும் ஒரே அக்கறையாகும். அதனால் நாமும் அதிகப்படியான பொறுப்புகளி-ருந்து விடுவிக்கப்படுகிறோம். முன்பெல்லாம், ஜனங்கள் அடிமைகளாக இருந்த போது ஒவ்வொரு எஜமானனும், பிரபுவும், அதிகாரியும், தங்களுக்குக் கீழிருந்தவர்களைக் குறித்து அக்கறை கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் இப்போதோ நாம் நமது அனுகூலங்களையும், சௌகரியங்களையும் குறித்து மட்டும் அக்கறை கொண்டால் போதும் என்ற அளவிற்குச் சுதந்திரத்தோடு இருக்கிறோம். அவர்களது விடுதலை நமக்கும் நன்மையாகவே இருக்கிறது. ஒவ்வொரு கனவானும் இந்த மாறுத-னால் பயனடைந்ததோடு, மக்களும் அதே விதத்தில் பயனடைவர் என்று நம்புகிறோம். உண்மையில் தங்களது நலனுக்காய் நல்லதையே செய்வர். ஏனெனில் நாமும் கூட நமக்கு நலமானதையே செய்கிறோம். இவர்கள் அரசிய-ல் சமஉரிமையும் சுதந்திரமும் உடையவர்களாய் உருவாகிவிடுவதனால் அவர்கள் நமது உறவுமுறையை மாற்றி விட்டனர். இப்போது சட்டப்படி அவர்கள் நமக்குச் சமமானவர்கள், மட்டுமன்றி நமது பாதுகாப்பில் இருந்தவர்கள் என்ற நிலைமாறி தற்போது நமக்குப் போட்டியாளர்களாகி விட்டனர். ஆனால் இந்த அரசியல் சம உரிமையானது ஒரு மனிதனை சரீர ரீதியாயும், அறிவுபூர்வமாயும் சமஉரிமை உடையவர்களாக மாற்றிவிட முடியாது என்பதைப் போகப்போக புரிந்துக் கொள்வார்கள். இதன் பலனாக பழைய பிரபுக்களின் ஆட்சிக்கு பதிலாக பணமும், அறிவும் படைத்தவர்களே ஆட்சி செய்வர்.

சமூகத்தின் “அடிமட்டத்தவர்” என்று அழைக்கப்பட்டவரில் யாரோ ஒருவர் யோசனையின்றி கூறியதாவது : சூழ்நிலையை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் சுதந்திரரும், எங்களைக் காத்துக் கொள்ள எல்லா சாத்தியங்களும் உடையவர்கள். கொஞ்சம் கவனமாகவே இருங்கள். இல்லாவிடில் நாங்கள் உங்களை சாதுர்யமாய் (தாண்டி) மீறிவிடுவோம். வாழ்க்கை என்பதே பணத்துக்காக போராடுவதுதான். எங்களிடம் ஆள்பலம் உண்டு, வேலைநிறுத்தங்களையும், எதிர்ப்புகளையும் செயல்படுத்தி எங்களது சொந்த வழிகளை நாங்கள் உண்டாக்கிக் கொள்வோம்.



இந்த முன்னுரை ஏற்றுக் கொள்ளப்படுமாயின் ஒவ்வொருவரும் தனித்தனியே சுதந்திரம் உடையவராவர். அவனவன் தன்தன் சுய விருப்பங்களுக்காகப் பிறருடைய நலனையோ, மேம்பாட்டையோ கொஞ்சமும் அனுசரிக்காமல் - சுயநலமாய் தன்னால் முடிந்த அளவிற்குச் செயல்படுவானாகில், பிறகு பணத்திற்கான போராட்டம் என்ற கண்ணோட்டத்தில் மேலே கூறப்பட்டவை எந்த வகையிலும் ஆட்சேபிக்க முடியததாகிவிடும். மேலும் சுயநலம் மற்றும் சுதந்திரம் என்ற அடிப்படையின் மேலேயே, மேலும் மேலும் எல்லா வகுப்பினரும் செயல்படுகிறவர்களாகக் காணப்படுகிறார்கள். பண முதலீட்டாளர்கள் தங்கள் சொந்த லாபத்தையே நோக்கமாகக் கொண்டிருப்பர். வழக்கமாக (சில சமயங்களில் சில விதிவிலக்குகள் இருக்கக்கூடும்) கூடுமானவரை தொழிலாளிகளுக்கு குறைந்த ஊதியமே வழங்குவர். அதே போல் இயந்திர வேலையாட்களும், தொழிலாளிகளும் கூட (சில வேளை விதிவிலக்கு இருக்கலாம்) தாங்கள் வேலைக்கு அதிகப்படியான ஊதியம் பெறப்பார்க்கின்றனர். இருவகுப்பினரும் சுதந்திரம், சுயநலமின்மை, அதிகாரம் ஆகிய இவைகளின் அதே கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டிருக்கும் போது இரு வகுப்பினரும் தொடர்ந்து எப்படி ஒருவர் மீது ஒருவர் குறை கண்டுபிடிக்க முடிகிறது?

கல்வியில், திறமையில் மற்றும் பிற நன்மைகளில் மேலான நிலையில் இருப்பவர்கள் ஏழைகளைச் சென்று சந்தித்து அவர்களுக்கு ஆலோசனை கூறுவது அல்லது பொருளுதவி செய்வது என்ற பழமையான பழக்கவழக்கம் முற்றிலும் ஒழிந்து போய்விட்டது என்பதே பொதுவாக பெருவாரியானவர்களின் கருத்தாகி விட்டது. மேலும் தற்போது ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்தக்

காரியங்களையே கவனிப்பதோடு, பிறரை கவனிக்காமல் முற்றிலுமாய் விட்டுவிட்டு, சுதந்திரமாய் அவர்களே தங்களை கவனித்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடுவதோடு, அடிக்கடி பாதுகாப்பு இல்லங்களுக்கும், விடுதிகள், மருத்துவமனைகளுக்கும் தாராளமாகக் கொடுக்கப்படும் பொதுவிநியோகங்களைக் கூட விட்டுவிடுகின்றனர். இது ஒரு வேளை சிலருக்கு சிலவற்றில் அனுகூலமாக இருக்கலாம். ஆனால் அனுபவமின்மை, முன்னெச்சரிக்கை அற்ற, சோம்பல் நிறைந்த சபலபுத்தியுள்ள காரணங்களால் பிற்காரியங்களில் பிறருக்கு நிச்சயமாய் கஷ்டங்களைக் கொண்டுவரும் என்பதில் சந்தேகமில்லை.

உண்மையில் ஏழையோ பணக்காரரோ யாராயினும் சுயநலமான சுதந்திரத்துடன் ஒருவருக்கொருவர் இருக்க அனுமதிக்க இயலாது; இப்படி இருக்கவேண்டும் என்று கூட அவர்கள் நினைக்கவோ, செயல்படவோ கூடாது. மனிதகுலம் என்பது ஒரே குடும்பம்; "மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் (தேவன்) அவர் ஒரே இரத்தத்தினால் தோன்றப் பண்ணினார்." (அப் 17:26) மனுகுலத்தின் ஒவ்வொரு நபரும் மற்றவருக்கு சகோதரனாய் இருக்கிறான். யாவரும் தேவனால் உண்டான ஆதாம் என்ற ஒரே தகப்பனின் பிள்ளைகள். (லூக் 3:38) தேவனால் ஆண்டுகொள்ளும்படி இந்த உலகமும் அதிலுள்ளவைகள் அனைத்துக்கும் உரிமை பெற்றவருடைய வாரிசுகள்; ஆகவே தெய்வீக ஈவுகளை அனுபவிக்க யாவருக்கும் உரிமை உண்டு. ஆகிலும் "பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது." பாவத்தில் வீழ்ந்ததால் - அதன் சம்பளமாகிய மரணமும் சேர்ந்து கொண்டதினால் - சரீர, மன, நெறி ரீதியான வீழ்ச்சி படிப்படியாக ஏற்பட்டு - ஏறக்குறைய மனுக்குலம் முழுவதுமே பழுதடைந்துவிட்டது; ஆகவே ஒவ்வொருவருக்கும் அவனவனது குறைபாட்டுக்கும், தனிமையாய் செயல்பட இயலாத தன்மையின் அளவுக்கும் தக்கபடி சரீர, மன, நெறி ரீதியாக மற்றவரது உதவியும் இரக்கமும் தேவைப்படுகிறது.

எல்லாருடைய இருதயத்திலும் அன்பு என்பதே கட்டுப்படுத்தும் பண்பாக இருக்குமேயானால், ஒவ்வொருவரும் பொதுநலனுக்காகத் தன் பங்கைச் செய்வதில் மிகவும் மகிழ்வுறுவர். மேலும் வாழ்வின் சில பொதுவான சௌகரியங்களையும், தேவைகளையும் பெறுவதில் சமமாக பாவிக்கப்படுவர். மேலும் இது சோஷ-சத்திற்கு அடிகோலுகிறதாகவும் இருக்கும். ஆனால் மனிதனுடைய மையக்கருவாக அன்பு இல்லை. ஆகவே இதன் பலனாக இப்படிப்பட்டதொரு திட்டமானது தற்போது செயல்படுத்தப்பட இயலாது. சுயநலம் என்பதே மைய கோட்பாடாக இருக்கிறது; மற்ற பெருவாரியான பகுதிகளில் மட்டுமன்றி ஏறக்குறைய முழு கிறிஸ்தவ ராஜ்யத்திலும் இதேநிலை தான். மேலும் அது வெகு வேகமாக தனது கசப்பான கனியை கொடுத்து பழுத்து மாபெரும் அறுவடைக்காக தயாராகி வருகிறது. (வெளி 14:19,20)



1. இந்த உலக மக்களை மாற்றுவதோ அல்லது 2. மனிதனுக்கு மேலான ஒரு சக்தி குறுக்கிட்டு - சுயநலம் என்ற பாதையி-ருந்து அன்பு என்னும் பாதையில் இந்த உலகத்தினை மாற்றிவிடவோ முடியாது. இப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை மிகவும் எதிர்மறையான நோக்கமுடையவரும் கூட கனவிலும் பார்க்க இயலாது. ஏனெனில் வெளித் தோற்றமாய் மட்டுமே கிறிஸ்தவ உலகமானது இவ்வுலகின் மிக சில லட்சக்கணக்கானவர்களை மட்டுமே மாற்றியிருக்கிறது. உண்மையில் மாற்றம் என்பது உலகின் சுயநல எண்ணமானது மாறி கிறிஸ்துவின் ஆவிக்குரிய அன்பிற்கு முழு உலகமும் மாறவேண்டும். இதுவும் மிகச் சிறிய எண்ணிக்கையாகவே இருக்க முடியும். ஆகவே, இந்தச் சிறிய கூட்டத்தில் நாம் நம்பிக்கை கொள்ள முடியாது. தெய்வீக அதிகாரத்தின் மேல் மட்டுமே ஒரேயொரு நம்பிக்கை இருக்கிறது. இது கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்யின் போது இயேசுவின் மூலமாய் தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கும் மாற்றத்தினால் மட்டுமே சாத்தியமாகும். சுயநலத்தை முற்றிலும் ஒழிக்க 1000 வருடம் தேவை என்பதை தேவன் முன்னறிந்தார். மட்டுமன்றி மனப்பூர்வமாய் அன்பானது முழுவதையும் கட்டுப்படுத்தும்படி சீர்திருத்தப்படும். ஆகவே 1000 வருட ஆட்சியே அந்த இழந்ததைத் திரும்பப் பெறுவதற்கு உரிய சரியான காலமாகும் (அப் 3:21) அதுவரைக்கும் எப்படியாகிலும் அன்பின் ஆதிக்கத்தை விரும்பி வாஞ்சிக்கின்ற வெகுசிலர், அந்த சூழ்நிலையினை உலக மாற்றங்களால் கொண்டுவர இயலாததை காண்பர். ஏனெனில் பணக்காரர் அவ்வளவு எளிதாக மனமுவந்து தங்கள் ஆதாயங்களை

விட்டுக் கொடுக்க மாட்டார்கள். மட்டுமன்றி ஜனங்களும் கூட தேவையின் நிமித்தமோ அல்லது பேராசையின் நிமித்தமோ தூண்டப்பட்டு தங்களுக்கு போதுமான அளவிற்கு மட்டும் உற்பத்தி செய்து கொள்ளவும் மாட்டார்கள். ஆகவே இயல்பாகவே சுயநலம் என்பது சிலரிடம் தேவைகளுக்கும், வேறுசிலரிடம் ஆடம்பரமான வீண் செலவுக்கும், பகட்டு வாழ்வுக்கும் காரணமாய் இருக்கிறது.

## மிகவும் சாதகமான தற்கால நிலைமை ஏன் தொடர முடியாது

ஆறாயிரம் வருடங்களாக ஏழையும் பணக்காரரும் சேர்ந்து வாழ்ந்து வந்ததாகவும், இனி முற்காலத்தைப் போன்ற பேரழிவுகள் தற்காலத்தில் வராது என்றும், இனி ஏழைகளை நசித்து அவர்களை பட்டினியால் வாட வைக்கும் ஆபத்தும் பணக்காரரால் வராது என்றும், இனி அராஜகத்தால் ஏழைகளும் பணக்காரரை அழித்துவிட முடியாது என்றும் கூறலாம். ஆனால் இது தவறு. ஏனெனில் இருபக்கங்களி-ருந்தும் எப்போதும் இல்லாத அளவிற்கான பயங்கரம் வரப்போகிறது.

அடிமைத்தன நாட்களி-ருந்து ஜனங்களின் நிலைமையில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. இது உடலளவில் மட்டுமன்றி மனரீதியாகவும் கூட காணப்படலாம். மேலும் நாகரீக வளர்ச்சியையும், கல்வியையும் அனுபவிக்க ஆரம்பித்தப்பின் இவர்களை பழைய நிலைமைக்கு அடிமட்டம் தாழ்த்தி நிலச்சுவான்தாரர்களிடம் அடிமைகளாகப் பணிசெய்யும்படி அடக்கி ஆளவேண்டுமாயின் அதற்கு பல நூற்றாண்டுகள் பிடிக்கும். இதை ஒரே நூற்றாண்டில் செய்துவிட முடியாது. அப்படிச் செய்தால் அநேகர் மாண்டுபோவர்! தங்களுடைய வருங்காலச் சந்ததிகளுக்கு அப்படிப்பட்ட ஒரு நிலை வரக்கூடும் என்ற சந்தேகமான சூழ்நிலை ஏற்பட்டாலே அது பெரிய புரட்சிக்கு வழிகாட்டிவிடும். இப்படிப்பட்ட ஒரு பயமே ஏழைகளுக்கு என்றுமில்லாமல் எதிர்த்துப் போராடக்கூடிய தைரியத்தைத் தூண்டிவிடுகிறது.

ஆனால் இப்படிப்பட்டதொரு தீவிர சிந்தனைக்கு நாம் ஏன் வழிகாட்டவேண்டும்? என்ற ஒரு கேள்வி எழும்பக்கூடும். கடந்த நூற்றாண்டில் பொதுவாகவே இருந்த ஒரு செல்வச் செழிப்பு, அதிலும் முக்கியமாக கடந்த 50 ஆண்டுகளில் இருப்பதைப் போன்றதொரு வளர்ச்சி ஏன் தொடரக்கூடாது?



நாம் இப்படியாக சிந்திக்க இயலாது. ஏனெனில் இப்படிப்பட்டதொரு எதிர்பார்ப்பு காரணமற்றது. மட்டுமன்றி பல்வேறு காரணங்களால் உண்மையில் முடியாதது என்று இதைக் கூர்ந்து கவனிப்பதாலும் சில ஆழ்ந்த சிந்தையினாலும் தெளிவாய் தெரிகிறது. தற்போதைய நூற்றாண்டின் செல்வச் செழிப்பானது தெய்வீக மேற்பார்வையினால் உண்டானதே. தானியேல் 12:4 ன்படி உலக ஞானம் பெருகிப் போனதின் விளைவாக அச்சு இயந்திரம், நீராவி எஞ்சின், மின்சாரம் போன்றவைகள் உருவாகிவிட்டன. இந்த விழிப்புணர்வு, தேவைகளையும் ஆடம்பரத்தையும் அதிக எண்ணிக்கையில் உருவாக்கிவிட்டது. திடீரென தேவைகள் அதிகமானதுடன், உற்பத்தியும் பெருகிவிட்டது. ஆகவே பொதுவாகவே கூ-யும் பெருகிவிட்டது. மேலும் உள்நாட்டு உற்பத்தியானது தேவைக்குப் போதுமானதாகவும், தேவைக்கு அதிகமானதாகவும் மாறியவுடன், நீண்ட நாட்களாய் உறக்கத்தி-ருந்த அண்டை நாடுகளும் விழித்தெழுந்து தங்களுக்கும் விநியோகிக்கும்படி கேட்க ஆரம்பித்துவிட்டன. ஒரு காலகட்டம் வரை எல்லா வகுப்பினரும் இதனால் பயனடைந்தனர். மட்டுமன்றி நாகரீக வளர்ச்சி பெற்ற எல்லா நாடுகளும் திடீரென இன்னும் செல்வம் பெருகி இதுவரை இல்லாத சௌகரியங்களை பெற ஆரம்பித்து விட்டன. இயந்திரங்களை தயாரிக்க வேண்டியதாகிவிட்டதால் இரும்பு வார்ப்பவர்களுக்கும், இயந்திரத் தொழிலாளிகளுக்கும், தச்சர்களுக்கும் தேவை அதிகமாக ஏற்பட்டது. இந்த தேவையின் நிமித்தம் அதற்கு உதவியாக மரவேலை செய்பவர், செங்கல் செய்பவர், உலைக்களங்களை கட்டுபவர், உலைக்களங்களை இயக்குபவர் என் தேவை அதிகப்பட்டது. இவை யாவும் தயாரானதும் இவைகளை இயக்க நிலக்கரி தேவைப்படவே, சுரங்கத் தொழிலாளிகள், பொறியாளர்கள் மற்றும் உலைக்கள தொழிலாளி போன்றோர் தேவைப்பட்டனர்; நீராவிக் கப்பல்களும், ரயில் பாதைகளும் உலகெங்கும் தேவைப்பட ஆரம்பித்துவிட்டன. எனவே இந்தக் குறிப்பிட்ட வேலைகளிலும் கட்டிட வேலையிலும்,

இயந்திரம் பொருத்துதல், அவைகளை இயக்குதல் ஆகியவைகளிலும் ஆயிரக்கணக்கானோர் அமர்த்தப்பட்டனர். இதன் நிமித்தம் பல்வேறுவிதமான தொழில்கள் திடீரென எழும்பின. அதனால் தகுதியானவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப ஊதியமும் உயர்ந்தது. நேரடியாய் வேலையில் அமர்ந்தவர்கள் மட்டுமன்றி மறைமுகமாயும் அநேகர் இதனால் பயனடைந்தனர். மக்கள் சற்று மேலான வருமானம் பெறவே, சற்று மேலான உணவை உண்டு, நல்ல உடை உடுத்தி, இன்னும் அதிகமான வசதியுள்ள வீடுகளில் வசித்தனர். விவசாயிகள் தாங்கள் கூ-க்கு அமர்த்திக் கொள்கிறவர்களுக்கு நல்ல ஊதியம் கொடுக்கவேண்டி இருந்தது. மட்டுமன்றி அவன் விற்று பணமாக்கும் பண்டங்களிலும் அவனுக்கு நல்ல லாபம் இருந்தது. இதே விதம் எல்லாத் துறைகளிலும் பெருக்கம் இருந்தது. ஆகவே தோல்பதனிடுபவர், செருப்புத் தொழிலாளர், ஆடைத் தயாரிப்பாளர், கடிகார உற்பத்தியாளர், ஆபரண உற்பத்தியாளர் என அநேகர் பயன்பெற்றனர். ஏனெனில் மக்களுக்கு வருமானம் சற்று அதிகமானவுடன் தேவைகளுக்கு மட்டுமன்றி ஆடம்பர வசதிகளுக்கும் செலவிட அவர்களால் முடிந்தது. முன்பெல்லாம் வெறும் காலுடன் நடந்தவர் தற்போது காலணி அணிகின்றனர். காலுறையே இல்லாமல் நடந்தவர்களுக்கு இப்போது காலுறை மிகவும் அவசியமாகிவிட்டது. இப்படியாக வியாபாரத்தின் எல்லாத் துறைகளுமே வளர்ந்துவிட்டன. இந்த எல்லா தேவைகளுமே திடீரென தோன்றின; இந்த பொதுப்படையான, விரைவான செழுமை தவிர்க்க முடியாததாகிவிட்டது.

தேவைகள் அதிகமானபடியால் அது கண்டுபிடிப்புகளை தூண்டியது. அது தொழிற்சாலைகளுக்குள் ஒரு தொழி-ன் மீது மற்றொரு தொழில் ஆதாரப்படும்படியாய் கட்டாயமாய் உந்தப்பட்டது. வீட்டி-ருந்து பண்ணை வரை எல்லா இடத்திலுமே இயந்திரத்தின் உதவியின்றி இயங்குவது என்பது கடினமாகிவிட்டது. மற்ற நாட்டோடு வர்த்தகம் பெருகியதால் நாளுக்கு நாள் தொழிலாளர் வர்த்தகத்தைச் செழிப்பானதாக்கியதோடு கிறிஸ்தவ தேசங்களின் உற்பத்தியாளர், வியாபாரிகள் ஆகியோரை கற்பனைக் கெட்டாத செல்வச் செழிப்பு அடையச் செய்துவிட்டது.



ஆனால் தற்போது நாம் செழுமையின் எல்லையை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே உலகின் விநியோகம் அநேக திசைகளில் தேவைக்கும் அதிகமாகி வருகிறது அல்லது தன் தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு அதன் பொருளாதார நிலைமையும் சாதகமாக இருக்கிறது. சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து தேசங்களுக்கு வாடிக்கையாளர்களாய் மாறியப்பிறகு இப்போது தங்களுடைய தொழிலாளிகளையே பயன்படுத்தி அந்த பொருட்களை இங்கேயே தயாரிக்க ஆரம்பித்தனர். ஆகவே இனிமேல் குறைந்த அளவு பொருளையே வாங்குவர். தென்அமெரிக்க நாடுகள் தங்களது புத்திக் கூர்மைக்கு எதிர்பார்க்கக் கூடிய அளவைவிட வேகமாய் தள்ளப்படுகின்றனர். வேறு சிலரோ ஏற்கெனவே திவாலான நிலையி-ருந்து சற்று மேலான பொருளாதார நிலைமைக்கு வரும்வரை சிக்கன நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது.

எனவே நெருக்கடி எதிர்கொண்டுவருகிறது என்று தெளிவாகத் தெரிகிறது. ஐரோப்பாவில் இதற்கும் முன்னதாகவே முடிவுக்கு வரவேண்டிய உச்சகட்ட நிலையானது இந்த மாபெரும் ஜனநாயக நாட்டின் இதற்கு முன் இல்லாத செழுமையை நோக்கி வரக்கூடுமல்லவா. பாதுகாப்பான விலைவாசியின்கீழ் கோடிக்கணக்கான ஐரோப்பிய முதலீட்டினை இங்கு கொண்டுவந்தது. அதோடு கூட கோடிக்கணக்கான ஐரோப்பிய மக்களும் இந்த லாபத்தில் பங்குகொள்ளும்படி கவர்ந்து இழுத்தது. ஆகவே இதனிமித்தம் திடீரென்று மாபெரும் மாநகராட்சிகளும், தர்ம ஸ்தாபனங்களும் உருவாகி, பொதுமக்களின் நலனுக்கே அச்சுறுத்தலை உண்டாக்குகிறது.

ஒரு பொதுவான செழுமையும், வருமான உயர்வும் ஐரோப்பாவிற்கு வந்தது. பத்து இலட்சம் பேர்களை போரில் கொன்றதன் மூலமும், பொருட்களை அழித்தல் மற்றும் தொழிலாளர்களின் ஒரு பொதுத் தடை மூலமும், ஐரோப்பாவின் தொழிலாளர் நிலைமை இலகுவானது மட்டுமல்ல, தொழிலாளர்களின் போட்டியினிமித்தம் உள்ள பிரச்னைகளும்

இலகுவானது. கடந்த இருபத்தைந்து வருடங்களாகவே தொடர்ந்து பெருகிவரும் இராணுவத்தின் நிமித்தம் ஐரோப்பாவின் இலட்சக்கணக்கானோர் இராணுவ பதவிகளைப் பெறும்படி அனுமதிக்கின்றனர். இல்லாவிடில் இவர்களும் போட்டியாக இருப்பர்; அதோடு கூட போரின் நிமித்தம் இன்னொரு பக்கம் பார்த்தால் ராணுவ தளவாடங்களும், துப்பாக்கிகளும், போர்க்கப்பல்களும் தயாரிப்பதில் ஏராளமானோர் ஈடுபட்டிருக்கின்றனர்.

செல்வச் செழிப்பு, நல்ல கூ-, தொழிலாளர்களின் தேவை, இப்படி எல்லாச் சாதகமான நிலை இருப்பினும், உச்சகட்ட நிலைமை வந்துவிட்டது என்றும் தொழிலாளர்களின் கூ- தற்போது இறங்கும் நிலைக்கு வந்துவிட்டது என்றும் நாம் இப்போது காண்கிறோம். ஒரு சாதாரண மனிதனுடைய ஸ்தானத்திலும், தேவனுடைய வெளிப்படுத்த-ன் நிலைமையிலும், உலக சரித்திரத்தின் உச்சகட்டம் என்கிற உபத்திரவம் நெருங்கி வருகிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

சமீப காலங்களில் ஊதியமானது என்றுமில்லாத அளவிற்கு உயர்ந்து வாழ்வின் அத்தியாவசிய பொருட்களின் விலையும் கட்டுகடங்காமல் உயர்ந்து விட்டதால், இரண்டையும் சமப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதன் முடிவு என்னவாக இருக்கும்? இதன் முடிவுக்கு நாம் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்?

அழிவு சடுதியாய் வரும். மிகவும் கஷ்டப்பட்டு பாய்மரத்தை மாலுமி நிமிர்த்துவதற்குள் திடீரென சாய்ந்துவிடும். கனமான ஒரு இயந்திரம், பல்சக்கர உருளை மீது வைத்து மிகவும் ஜாக்கிரதையுடன் மேலே தூக்கப்படும் போது தவறி விழும் போது மிகவும் பாதிப்பை விளைவிக்கக்கூடிய வேகத்தோடு கீழே விழுந்து நொறுங்கும், அதைவிட தூக்காமலேயே இருந்திருக்கலாம் என்று கூட நினைக்கும் அளவிற்கு அதன் பாதிப்பு இருக்கும். அதே போலவே மனுகுலமும் கூட, என்றும் இல்லாத உயரத்துக்கு, அதன் கண்டுபிடிப்புகள், வளர்ச்சி என்ற உருளைகளின் உதவியால் உயர்த்தப்பட்டு, கல்வி அறிவு மற்றும் விழிப்புணர்வு என்ற படிகட்டு மற்றும் தூண்டு கோ-ன் உதவியால் (சுயநலத்தின் காரணமாய்) வேறு எதையும் பிடித்துக் கொண்டும் இதற்கும் மேல் உயரமுடியாது என்ற அளவை மனுக்குலம் எட்டிவிட்டது. (கொஞ்ச காலத்திற்கு) இது நல்ல உறுதியுடன் நல்ல பிடிப்புடன் கீழ்மட்டத்தை பிடித்துக் கொண்டு, இனிமேலும் உயர்த்த முடியாது என்ற உயரத்துக்கு - உருளையும், நெம்புகோலும் உயரும் போது ஒரு மாபெரும் அழுத்தத்தினால் உடைந்து மிகமிக மோசமான நாசத்தை விளைவிக்கும்.



முதன்முத-ல் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது மனித உழைப்புக்கும், திறமைக்கும் போட்டி வந்துவிட்டதான ஒரு பயம் எழுந்தது; ஆனால் அதற்கு எதிர்மாறாக தொழில்நிறுவனங்கள் ஏற்கெனவே ஒப்பிட்டுப் பார்க்கப்பட்ட கிறிஸ்தவத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இயந்திரங்களின் தயாரிப்பாளர்கள், போர், படைகள், முத-யவைகளில் பொதுவான விழிப்புணர்வு யாவுமே தற்போதுவரை இயற்கையான மனநிலைக்கும் மேலாக எதிர்மாறாகவே செயல்படுகின்றன. ஆகவே இந்தக் காரணத்துக்காக எதிர்மாறாகவே காரியங்கள் நிகழ்கின்றன என்று பலரும் ஒரு முடிவிற்கு வந்தனர். அப்போது உழைப்பைக் குறைக்கும் இயந்திரங்களின் கண்டுபிடிப்பு மனித உழைப்புக்கு எதிரான போட்டி அல்ல என்று புரிந்து கொண்டனர். ஆனால் காரியம் அப்படியல்ல. உலகம் இன்னமும் தேவையும் - விநியோகமும் என்ற அடிப்படையில் தான் இயங்குகிறது. இந்த அடிப்படை இயக்கம் உண்மையானது என்பதை விஷயம் தெரிந்த எந்த சாதாரணமானவரையும் புரிந்து கொள்ளச் செய்யமுடியும். மனித உழைப்புக்கும் திறமைக்கும் உள்ள தேவை தற்கா-கமாக உயர்ந்திருக்கிறது. மனித உழைப்பினுடைய இடத்தை பிடிக்கும் விதத்தில் அதிகமான இயந்திரங்களின் பெருக்கம் உச்சகட்டத்தை அடையும் போது அதன் விளைவானது திடீரென்று தவறிவிழுகின்ற பாரமானது அதனடியில் சிக்கிக் கொள்கிறவர்களை நசுக்கி விடுவதைப் போல இருக்குமே தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது.

ஒருவேளை இந்த நாகரீக வளர்ச்சியின் பெருக்கத்தால் ஐம்பது வருடங்களுக்கு முன்னதாக இருந்ததைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகப்படியான உலகத் தேவைகள் பெருகிவிடுமேயாகில் (மிகவும்

தாராளமானதொரு கணக்கீடு) அதற்கான விநியோகத்தின் நிலைமை எப்படி இருக்கும்? ஐம்பது வருடங்களுக்கு முன் இருந்ததை விட விநியோகத்தை பத்து மடங்கு அளவிற்கு இயந்திரங்களும், புதிய கண்டுபிடிப்புகளும் அதிகரித்துவிட்டன என்பதை யாவருமே ஒப்புக் கொள்வர். போதுமான அளவிற்கு தேவைகளுக்கேற்ப விநியோகிப்பதற்கு இயந்திரங்கள் நிறுவப்பட்டபிறகு மனிதனுக்கும் இயந்திரத்திற்கும் இடையே ஒரு போட்டி இருக்கவேண்டியதாகிவிட்டது. ஏனெனில் யாவருக்கும் போதுமான வேலை வாய்ப்பு இருக்காது. மட்டுமன்றி இன்னும் கூடுதலாக ஆட்களை அமர்த்தவோ அல்லது இயந்திரங்களைப் பொருத்தவோ கூட இயலாத அளவிற்கு ஆகிவிட்டது. ஆனால் போட்டி மட்டும் இன்னும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. மனித ஜனத்தொகையானது மிகவும் வேகமாக பெருகிக் கொண்டே வருகிறது. இன்னும் பெருகிவிட்ட திறமைகளின் உதவியால் இன்னும் அதற்கு மேலான இயந்திரங்கள் தினமும் உருவாக்கிக் கொண்டு வருகின்றன. இப்போதிருக்கும் சுயநலமிக்க முறைமைகளின்கீழ் விநியோகமானது தேவையை விட அதிகமாகிவிட்ட உடன் (அளவிற்கு மிஞ்சிய உற்பத்தி நம்மிடம் இருக்கும் நிலையில்) மனிதனுக்கும் இயந்திரத்துக்கும் இடையிலான ஒரு போட்டியானது குறைக்கப்பட வேண்டும். இதைப் புரிந்து கொள்ள யார் தவறக்கூடும். இயந்திரம் என்பது பொதுவாக இரும்பு, நிக்கல், மரத்திற்கு அடிமையானதும் நீராவி, மின்சாரம் போன்றவற்றால் இயக்கப்படுகிறதுமான ஒன்றாகும். இவை மனிதனைவிட அதிகமான நுணுக்கமான வேலைகளைக்கூடச் செய்யக்கூடியவை. இவைகளுக்கு சுயமாய் அபிவிருத்தி செய்யக்கூடிய புத்திக் கூர்மையோ கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்படவேண்டிய மூர்க்கமான விருப்பு வெறுப்புகளோ, பொறுப்புடன் கவனிக்கப்படவேண்டும் என்கிற உறவு முறைகளான மனைவி, குடும்பம் போன்றவையோ தனக்கென்ற ஒரு குறிக்கோளோ எதுவுமே கிடையாது; தங்களுக்கென்று சங்கங்களை உருவாக்கிக் கொண்டு வியாபார நிர்வாகத்தில் தனது பிரதிநிதிகளை புகுத்தி இடையூறு செய்வதோ கிடையாது. மட்டுமன்றி வேலை நிறுத்தம் செய்யாது; மேலும் அதிகப்படியான நேரம் வேலை செய்ய



எந்தவித தயக்கமும் இல்லாமல் அதிகப்படி கூ- கேட்காமல் வேலை செய்ய தயாராயிருக்கிறது. எனவே அடிமைகளான இவைகள் கருப்போ, வெள்ளையோ மனித அடிமைகளைக் காட்டிலும் மிகவும் விரும்பத்தக்கவைகளாகிவிட்டன. எனவே மனித உழைப்பும் திறமையும் கூடுமானவரை இயந்திரங்களிடையே பகிர்ந்து அளிக்கப்படுகின்றன; ஆகவே இவ்விதமான இயந்திர அடிமைகளை வைத்திருப்பவர்கள் தற்கால சட்ட ஒழுங்குகளிடையே, மனித உழைப்பை உபயோகிப்போரைக் காட்டிலும் மிகவும் சந்தோஷமாய் இருக்கின்றனர். ஏனெனில் தங்களிடம் உள்ள அடிமைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பி-ருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

இவ்வுலக தொழிலாளர் ஒன்றும் குருடரல்ல. குறைந்தபட்சம் சிறிதளவாவது தற்போதைய சுயநலத்தின் அமைப்பையும் - தாங்களே ஒருவிதத்தில் இதனை ஆதரித்து வளர்த்து - தாங்கள் மட்டுமன்றி பிறரும் கூட அதன்கீழ் செயல்பட்டு வருவதையும் இந்த சுயநலமே யாவுக்கும் வழிகாட்டியாய் இருப்பதையும் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் அதனுடைய இழிவான குணத்தை அல்லது தவிர்க்க முடியாத அடிமைச் சங்கி-யையோ விட்டு கொஞ்சம் விலகி இருந்தாலொழிய நிச்சயமாய் இது மிக வேகமாய் தங்களை அழித்து விடும் என்பதை தெளிவாக இன்னும் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் இயந்திர அடிமைகளுக்கு வேலைக்காரராக தாங்கள் மாறுவதற்கு அவர்களுக்குள்ளேயே போட்டி இருப்பதை அவர்களால் உணர முடிகிறது. (பொறியாளராகவோ, இயந்திரத்தை இயக்குகிறவர்களாகவோ அல்லது சூளையில் வேலை செய்பவராகவோ) இந்த நிலை ஆண்டுக்கு ஆண்டு கூடிக்கொண்டே வருகிறது.

**வரப்போகும் "அக்கினிக்கு" தயாராவதற்கு இயந்திரம் ஒரு காரணம். வரப்போவது என்ன என்பதைக் குறித்துக் கடந்த சில வருடங்களாகக் கிடைத்திருக்கும் முன் அனுபவம்**

விழித்துக்கொள்ள ஆரம்பித்திருக்கும் மனுஷரைக் குறித்தும், வருங்காலத்தின் சாதகமான நிலையை குறித்து உணரத்தொடங்கிய மனுஷரைக் குறித்தும் நாம் இங்கு குறிப்பிடுகிறோம். அறிமுகம் இல்லாத யாரோ ஒரு எழுத்தாளர் கூறுவதாவது :

"காட்டுமிராண்டித்தனமான இருளான பின்னணியின் சூழ-ல், பழங்கால கிரேக்க நகரத்தின் ஒளியைப் போல் பளிச்சிடும் ஜனநாயக முறைமையானது, பலவகையான அரசாங்க முறைமைகளின் நவீன ஆலோசகர்களுக்கிடையே சச்சரவுக்கு உரியதாகிவிட்டது. மிகவும் பிரபலமான சட்டமுறைமையின் எதிராளிகள், பழங்கால நகரங்களில் இருந்தது உண்மையில் ஜனநாயக முறைமையே கிடையாது, அது வெறும் உயர் மக்களின் குடியாட்சியே என்று வாதிட்டு நிரூபிப்பதிலேயே இருந்தனர். ஏனெனில், அடிமைகளின் உழைப்பின் மீதே இவர்கள் ஆதாரப்பட்டதினாலேயே இவர்கள் தங்களை அரசிய-ல் ஈடுபடுத்திக் கொள்ளும் படியானதொரு ஓய்வு நேரம் கிடைத்தது. இந்தவிதமான சிந்தனையாளர்களை பொறுத்தமட்டில், சமூகத்தில் மிகவும் இழிவான வேலைகளை செய்வதற்கென்று ஒரு கீழ்மட்ட வகுப்பினர் இருக்கவேண்டும். மேலும் அரசாங்கத்தில் சாதாரண தொழிலாளிக்கும் ஒரு பங்குண்டு என்று சொல்லப்படும் அரசியல் அமைப்பானது நீடிக்ககூடியது அல்ல.

"இந்த நியாயமான வாதமானது திரு.சார்லஸ் H.லாரிஸ் என்பவரால் மிகவும் சாதுரியமாய் கையாளப்பட்டது. 1892ல் இயந்திரப் பொறியாளர்களின் அமெரிக்கன் சொசைட்டியில் பேசும் போது இதை வெளிப்படுத்தினார். கொடூரத்தன்மையல்லாத பழைமையான அடிமைத்தனத்தின் அநுகூலம் அனைத்தையும் நவீன நாகரீகம் பெற்றிருந்தது என்று கூறினார். 'மனித குலத்துக்கு மிகவும் தேவைபட்ட ஒன்று என்று பழமைவாய்ந்த நாகரீகத்தை ஒப்புக்கொள்ளவில்லை. நீதி, இரக்கம், தயாளகுணம் ஆகியவை கொஞ்சகாலமே ஆட்சிபுரிந்தன. அராஜகம், அநீதி, கொடூரம் இவையாவும் அவைகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஆளுகை செய்கின்றன. மனுக்குலத்தின் உணர்வுகளை இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு அடிமைத்தனத்தின் மீது கட்டப்பட்ட ஒரு அமைப்பைத் தவிர வேறு ஏதாகிலும் பாதிக்க இயலுமா? நாகரீக வளர்ச்சிக்கு ஆதாரமும், ஆடம்பரமுமாக, மனித அடிமைத்தனமே இருக்கும் வரைக்கும், அந்த ஆதரவு சற்று கடுமையாக இருக்கும். அப்போது தான் பிற காரியங்கள் இதை மிஞ்சமுடியாமல் இருக்கும். இப்படிப்பட்ட ஒரு நாகரீக வளர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்து பிறகு



அழிந்து போக வேண்டும். சரித்திரமும் கூட மிகவும் நிச்சயமற்ற நிலையில், தன் கடமையி-ருந்து தவறி கூடுமான அளவிற்கு அந்தகாரத்தில் தற்போது நிரந்தரமாய் தங்கிவிட்ட மிகவும் காட்டுமிராண்டித்தனத்தை காண்பிக்கிறது.

"'நவநாகரீகமும் கூட அதன் அடித்தளத்தில் ஒரு வேதனைப்படும் அடிமையை கொண்டிருக்கிறது. ஆனால் ஒரேயொரு காரியத்தில் மட்டும் தன் முன்னோர்களை விட்டு வெகுவாய் விலகியிருக்கிறது. அவனுக்கு எந்த உணர்ச்சியும் கிடையாது. சோர்வு என்பதும் தெரியாது. அவனது வேலையில் குறுக்கீடுகள் கிடையாது. மனித அடிமையின் உலகளாவிய உழைப்புக்கும் மேலாக இவன் ஒரு சிறிய வட்டத்துக்குள் வேலை செய்கிறான். அவன் மிகுந்த பலசா- மாத்திரம் அல்ல, மிகவும் ம-வானவனும் கூட ; அவன் ஓய்வில்லாமல் உழைப்பான், எந்த வேலையும் செய்வான், மிகவும் நுட்பமானது முதல் கரடுமுரடானவைகளோடும் மிகவும் சகஜமாய் உழைக்கக்கூடியவன். மனிதன் அடிமைத்தன வேதனையி-ருந்து பெரும்பாலும் விடுவிக்கப்படும் அளவிற்கு மிகுதியான அளவில் இந்த அடிமை, பொருட்களை உற்பத்தி செய்கிறான். இன்னும் நாகரீக வளர்ச்சியின் மாபெரும் கலை இந்த அடிமைப் பொருட்கள் அனைத்தையும் தண்ணீர், தரை மீதான ம-வான விரைவான போக்குவரத்துக்களையும், சமாதானம், போர் இரண்டுக்குமே காரணமான அச்சு இயந்திரம், எல்லாவிதமான அறிவின் பொக்கிஷங்கள் சம்பாதித்தலையும் சாதிக்கக்கூடிய அடிமை ஒன்று உண்டு. அதைத்தான் நாம் நீராவி இயந்திரம் என்கிறோம்.'

"உண்மையில் பண்டைக்கால மனித அடிமைகளைக் காட்டிலும் மெய்யாகவே நூற்றுக்கணக்கான மடங்கு உற்பத்தித் திறனைக் கொண்ட அடிமைகளாய் நவீன இயந்திரங்கள் இருக்கின்றன. ஆகவே பொருளாதாரத்தை ஆதாரமாகக் கொண்ட நாகரீக வளர்ச்சியில் மொத்த ஜனத்தொகையே மிகவும் சோம்பேறி கூட்டமாக மாறி வருகிறது. ஏதேன்ஸ் நகரத்தின் சுதந்திரமான கூட்டத்தாரோடு கூட பார்க்கும் போது அவர்களை விட சுறுசுறுப்பில்லாத நேரத்தை வீணடிக்கின்றதான ஒரு கூட்டம், ஆனால் மிகவும் கடினமான உழைப்பி-ருந்து நிச்சயம்

விடுவிக்கப்பட்டவர்களாய், தன்னைத்தானே போஷித்துக் கொள்ளக்கூடியவராய், இனியும் அதிகமாய் உடல் உழைப்புக்கு அவசியமற்ற நிலையில், மனவளர்ச்சி பெற்ற ஆரோக்கியமான மிகவும் நியாயமான மனமகிழ்ச்சியுடன் இருக்கின்றனர். பிரிட்டனில் மட்டும் நீராவி இயந்திரமானது 150,000,000 பேர் செய்யக்கூடிய வேலையைச் செய்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையானது பழங்காலத்தில் இருந்த அடிமை மற்றும் அடிமை அல்லாத ஜனத்தொகையைப் போல் 5 மடங்கு அதிகமானது. அமெரிக்க நாட்டில் இதே இயந்திரம் 230,000,000 பேருடைய வேலையைச் செய்கிறது. தற்கால உலகின் மொத்த ஜனத்தொகைக்கு இது ஏறக்குறைய சமம். மேலும், நீர்வீழ்ச்சிகளை அணைமூலம் அடக்கி மின்சார இயந்திரங்களை இயக்க உபயோகப்படுத்துவதன் மூலம் மேலே கூறப்பட்ட புள்ளி விவரங்களையெல்லாம் கடந்து போய்விடக்கூடிய வேகத்தில் இருக்கிறோம்.

"ஆனால் துரதிர்ஷ்டவசமாக உலகம் முழுவதற்குமே அவசரமற்ற புத்திக்கூர்மையான சௌகரியங்களோடு கூடிய நாகரீக வளர்ச்சியானது ஒரு பொருளை ஆதாரமாக கொண்டிருக்கும் இவ்வேலையில் இந்த சௌகரியங்களை எப்படி லாபகரமாக எடுத்துக் கொள்வது என்று இன்னும் கற்றுக்கொள்ளாமல் இருக்கிறோம். நாம் முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் விழித்துக்கொண்டிருக்கும் நேரமெல்லாம் வேலை செய்வதற்கான வாய்ப்பு இருக்குமானால் அது இன்னும் தங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும் என்று கருதும் ஜனங்களும் நம் மத்தியில் இன்னும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் நமது அரசியல் கொள்கைகளின் பிரகாரம் அரசாங்கத்தின் வரைமுறைகளை முடிவு செய்கின்ற வேறு சில மனிதர்களுக்குச் சமமான வாக்குரிமை உள்ளவர்கள். ஆனால் இவர்களுக்கோ தங்களது அடுத்த வேளை உணவுக்காக சிந்திக்கின்றதைத் தவிர அரசியல் யுக்திகளைச் சிந்திக்கும் அளவிற்கு வாய்ப்புகள் கிடையாது.

"இயற்பியல் விஞ்ஞானமானது, சரித்திரம் இதுவரை காணாத அளவிற்கு மிகவும் சிறந்த, அறிவுபூர்வமான, சந்தோஷமான மிகவும் சக்திவாய்ந்ததொரு நாகரீகத்தை நிறுவுவதற்கு நமக்குப் பேருதவி செய்திருக்கிறது. அதோடு மட்டுமன்றி இந்தக் காரியங்களை எப்படி



உபயோகப்படுத்துவது என்று சமூக அறிவியலும் நமக்குக் கற்றுத்தருகிறது. அவ்விதத்தில் பார்க்கப்போனால் ஒவ்வொரு ஆய்வும் அது வெற்றியோ, தோல்வியோ முக்கியத்துவம் பெறுகிறது. இரசாயனத்துறையைப் பொருத்தமட்டில் அதன் ஒவ்வொரு கண்டுபிடிப்புக்கும் பின்னால் ஆயிரக்கணக்கான பலன் தராத ஆராய்ச்சிகள் மறைந்திருக்கின்றன. ஒருவேளை கேவாவும் (Kaveah) அல்ட்ரூடியாவும் (Altruuia) தோல்வி அடைந்திருந்தாலும் கூட ஆழ்கட-ன் படிவப்பாறைகளின் மீதான ஆராய்ச்சியில் முன்னேறுவதற்கு உதவியாயிருந்த அவர்களுக்கு நன்றி கூறுவதற்கு நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்."

"கருப்பு வைரம்" எனப்படும் நிலக்கரிச் சுரங்கத் தொழில் பத்திரிக்கை கூறுவதாவது:

"நாம் மிகவும் முக்கியமாய் கவனிக்கவேண்டியது போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புத் துறையின் அதிவேகமான முன்னேற்றம். ஏனெனில் அதுதான் நவீன வியாபாரம். அதற்கென்று ஒரு இடத்தைப் பெறுவதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் ஒரு முக்கிய காரணியாகும். சுரங்கத் தொழி-ல் இயந்திரங்களின் மிக முக்கிய பங்கு குறித்துப் பார்க்கும் போது அந்த பணியாளர்களுக்கு இந்த தொழில் நிரந்தரமான வேலை வாய்ப்பைக் கொடுக்கக் கூடுமா என்பது தான். ஆகவே தான் இந்த இயந்திர இயக்குனர்களின் வேலை நிறுத்தங்கள் தற்போது மிகவும் குறைந்து வருகிறது. அதுமட்டுமன்றி எப்போதெல்லாம் வேலை நிறுத்தம் நடக்கிறதோ அதைத் தொடர்ந்து வேறொரு புதிய பகுதியில் புதிய இயந்திரத்தின் அறிமுகம் ஆரம்பித்துவிடுகிறது. புதுப்புது இயந்திரங்கள் எல்லாத் துறைகளிலும் புகுத்த ஆரம்பிக்க அதன் எல்லாதுறைகளும் மிக மெதுவாக முக்கியமான வியாபாரங்களுடன் தொடர்புகொண்டு ஆதிக்கம் செலுத்தி அதன் மூலம் அதிக ஆட்களே இல்லாமல் வேலை நடக்கக் கூடிய அளவிற்கு வளர்ந்து விட்டதால் போகப்போக வேலை நிறுத்தம் என்பதே இல்லாத ஒன்றாகிவிடும்.

"தற்போது மின்சாரம் என்பது இன்னும் தன் ஆரம்பநிலையிலேயே இருக்கிறது. ஆனால் ஒரு காலத்தில் அது முன்னேற்றத்தைப் பெற்றுவிடும். மேலும் மங்கலான வைரத்தினை

வெட்டியெடுக்கும் சுரங்கத்தொழிலாளிகள் வெகு சீக்கிரத்திலேயே ஆயிரக்காணக்கானோர் செய்துவரும் அதே வேலையினை வெறும் சில 100 ஆட்களே மின்சார இயந்திரங்களின் உதவிகொண்டு செய்துமுடிக்கக்கூடிய மிகவும் கடுமையானதொரு சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டிவரும்."

தி ஒ-ஃபெண்ட் கெசட் (Oluphant Gazette) கூறுகிறது:

"விஞ்ஞானத்தின் வளர்ச்சியும், இந்த கண்டுபிடிப்பு யுகத்தின் எண்ணற்ற இயந்திரங்களும், அநேக தொழிற்சாலையி-ருந்து மனித உழைப்பை விரட்டி அடிக்கின்றன. சில வருடங்களுக்குமுன் நல்ல வருமானம் வரக்கூடிய வேலைவாய்ப்புகள் பெற்றிருந்த ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் தற்போது வேலை தேடிக்கொண்டிருக்கின்றனர். ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் நூற்றுக்கணக்கானோர் முன்பு வேலையில் இருந்தனர். தற்போது அவர்கள் செய்ததை விட அதிக அளவு வேலையானது இயந்திர சக்தியால் செய்யப்படுகிறது. அச்சு இயந்திரங்கள் ஆயிரக்கணக்கான அச்சுத் தொழிலாளர்களை வேலையற்றவர்களாக்கிவிட்டது. அநேக வியாபாரங்களிலும் இயந்திரங்கள், கையினால் செய்வதைவிட மிகவும் துரிதமாக, குறைந்த செலவில் இன்னும் திருப்திகரமான வேலையைச் செய்து முடிக்கிறது.

"கனிம பொருட்களைப் பொறுத்தவரை நிலக்கரிச் சுரங்கத்தில் கூட அதை வெட்டியெடுக்கும் பணியை இன்னும் சில வருடங்களில் மின்சார இயந்திரங்களின் உதவியைக் கொண்டே பெரும்பாலும் செய்துவிடுவர். அப்போது மனிதனும், கால்நடைகளும் சரீர உழைப்பை முற்றிலும் ஒழித்து விட்டு இயந்திரங்களுக்கு உடன் வேலைக்காரராக மட்டுமே மாறிப்போவார்கள்."

மற்றொரு எழுத்தாளர் கீழ்கண்டவாறு சில உண்மைகளைக் கூறுகிறார் :

"சில வருடங்களுக்கு முன் 1,100 பேர் செய்யக்கூடிய நூற்பு வேலையை தற்போது செய்து முடிக்க ஒரு ஆணும் இரண்டு சிறுவர்களும் போதும்.



"தன் பாட்டனார் காலத்தில் 50 நெசவாளர்கள் செய்த வேலையை தற்போது ஒரே மனிதர் செய்கிறார்."

"1500 தொழிலாளிகள் செய்யும் வேலையை பருத்தி துணியில் அச்சிடும் ஒரே இயந்திரம் செய்து முடிக்கிறது.

"500 ஆட்கள் ஒரு நாளில் தயாரிக்கும் குதிரை லாடங்களை ஒரே இயந்திரம் ஒரு மனித உதவியுடன் தயாரித்து விடுகிறது.

"மரம் அறுக்கும் தொழி-ல் 500 பேர் உள்ள இடத்தில் 499 பேருக்கு வேலையில்லாமல் போய்விட்டது. ஏனெனில் அதை முழுவதும் செய்துவிட ஒரு நவீன இயந்திரம் போதுமென்றாகிவிட்டது.

"இரும்பு ஆணி செய்யும் ஒரு இயந்திரமானது 1,100 பேருடைய இடத்தை பிடித்துவிட்டது.

"காகிதத் தொழிற்சாலையிலும் கூட 95 சதவிகித வேலையானது இயந்திரங்களால் செய்யப்படுகின்றன.

"முன்காலத்தில் இயந்திரங்களின் கண்டுபிடிப்புக்கு முன் 1000 பேர் செய்யக்கூடிய மண்பாண்ட வேலையை தற்போது ஒரு ஆள் செய்துவிடக்கூடும்.

"கப்பல்களில் சரக்குகளை ஏற்றி இறக்கும் வேலையில் 2000 பேருடைய வேலையை ஒரு இயந்திரம் செய்துவிடுகிறது.

"நல்ல கைதேர்ந்த கடிகாரத் தொழிலாளி ஒரு இயந்திரத்தின் உதவியோடு வருடத்துக்கு 250 முதல் 300 வரை கடிகாரம் தயாரித்து விடலாம். இதனால் 85% வேலையானது இயந்திரத்தால் ஈடுசெய்யப்படுகிறது."

பிட்ஸ்பர்க் போஸ்ட் குறிப்பிடுகிறபடி 20 ஆண்டுகளுக்குமுன் இருந்ததைக் காட்டிலும் இரும்பு வெட்டியெடுக்கும் தொழில் இப்போது புதிய உருக்கு உலைகளினால் நல்ல முன்னேற்றம் காண்கிறது. அது கூறுகிறதாவது:

"1876ல் 20 வருடங்களுக்கு முன் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இரும்பு உற்பத்தி 2,093,236 டன் ஆகும். 1895ல் கண்ரி ஆஃப் அ-கெனியின் (Country of Allegheny) இரும்பு உற்பத்தி 2,054,585 டன் ஆகும். 1885ல் நாட்டின் மொத்த உற்பத்தி 4,144,000 டன் ஆகும். ஆனால்

1895ல் உற்பத்தி உலகிலேயே முன்னணியாக 9,446,000 டன் ஆக இருக்கிறது."

"மான்ட்ரீல் டைம்ஸ்" (Montreal Times) கூறுகிறபடி இதேவிதமானதொரு பாதிப்பை கனடா நாட்டினரும் கவனித்திருக்கின்றனர்.

"தற்காலத்தின் மிகச்சிறந்ததொரு இயந்திரத்தின் உதவியுடன் ஒரே மனிதன் 250 பேருக்குத் தேவையான பருத்தி ஆடைகளைத் தயாரிக்கலாம்; 300 பேருக்கான கம்பளி ஆடைகளைத் தயாரிக்கலாம்; 1000 பேருக்கான காலணிகளைத் தயாரிக்கலாம். ஒரே மனிதன் 200 பேருக்கான ரொட்டியைத் தயாரிக்கலாம். இப்படியிருந்தும் ஆயிரக்கணக்கானோருக்கு ஆடையும், கம்பளியும், காலணியும், உணவும் கிடைப்பதற்கு வழியில்லை. இவ்விதமான நிலைமைக்கு ஏதோ ஒரு காரணம் இருக்கவேண்டும். அதே போல் நாம் இருக்கும் இந்தக் காலத்தின் இந்த அராஜகத்துக்கும் கூட ஏதோ ஒரு விமோசனம் இருக்கவேண்டும். அப்படியெனில் அந்த விமோசனம் தான் என்ன?"

"தி டோபிக்கா" மாநில சஞ்சிகை (Topeka State Journal) கூறுகிறதாவது: "ஆஸ்டிரியன் பொருளாதார நிபுணர் மற்றும் அரசியல்வாதியான பேராசிரியர் ஹெர்ஸ்கா அவர்களின் கூற்றுப்படி 22,000,000 பேர் கொண்ட ஆஸ்திரியர்களின் வாழ்நாள் முழுவதுமான தேவைகளை நவீன இயந்திரங்களின் உதவியால் 615,000 பேரை மட்டும் உதவியாகக் கொண்டு, சாதாரண வேலை நேரத்திலேயே தயாரித்துவிடலாம். மேலும் அவரது கணக்கீட்டின்படி ஆணும் பெண்ணும் 16 முதல் 50 வயது வரை உள்ள ஆஸ்திரிய தொழிலாளிகளின் மொத்த எண்ணிக்கை 5,000,000 ஆகும். மேலும் அவரது கணக்குப்படி தற்போதைய வேலை நேரப்படி எல்லா பணியாளர்களுக்கும் நவீன இயந்திரங்களும், நவீன முறைகளும் கொடுக்கப்பட்டால் வருடத்தில் 37 நாட்கள் மட்டுமே வேலை செய்து நாட்டின் மொத்த ஜனத்தொகைக்கும் தேவையான அத்தியாவசிய மற்றும் ஆடம்பர பொருட்களை தயாரித்துவிட முடியும் என்றும் கூறுகிறார்.

"புரொபசர் ஹெர்ஸ்காவின் ஆஸ்திரியாவைக் குறித்த கணிப்பு சரியாக இருக்குமேயாகில் பிற நாடுகளுக்கும் கூட அமெரிக்க ஐக்கிய



நாடுகளையும் உள்ளடக்கிய எல்லா நாடுகளுக்கும் இது பொருந்தும். க-போர்னியாவில் ஒரு நீராவி அறுவடை இயந்திரம் இருக்கிறது. அது ஒரு நாளைக்கு 90 ஏக்கருக்கு அறுத்து, கட்டுக்கட்டும் பணியைச் செய்யும். வெறும் 3 ஆட்களின் மேற்பார்வையில் அதேவிதமாக பல ஏர்முனைகள் பூட்டப்பட்ட நீராவி இயந்திரமானது 88 ஏக்கர் நிலத்தை ஒரே நாளில் உழுதுவிடும். புரூக்ளினில் ஒரு பேக்கிரி கடைக்காரர் 350 ஆட்களை அமர்த்தி 70,000 ரொட்டிகளை ஒரு நாளில் தயாரிக்கிறார். அதாவது ஒரு ஆள் 200 ரொட்டி என்ற கணக்கில் 'மெக்கே' (Mckay) இயந்திரத்தின் உதவியால் காலணி தயாரிக்கும் போது ஒரேயொரு மனிதனின் உதவியுடன் 300 ஜோடிகள் செய்யலாம். அதே நேரத்தில் கையால் செய்யும் போது 5 ஜோடிகளே தயாரிக்க முடியும். விவசாய சம்பந்தப்பட்ட தொழிற்சாலையிலும் 2,500 ஆட்கள் செய்யும் பணியை தற்போது 500 ஆட்களே செய்துவிடுகின்றனர்.

"1879க்கு முன் வேலைத்திறமை படைத்த 17 பேர் 500 டஜன் துடைப்பத்தை செய்ய 1 வாரம் பிடிக்கும். தற்போது அதே நேரத்தில் 9 பேர் இயந்திரத்தின் உதவியால் 1,200 டஜன் தயாரித்து விடுகின்றனர். ஒரேயொரு மனிதன் 2 பவுண்டு எடையுள்ள 2500 தகர டின்களை ஒரு நாளில் செய்து முடிப்பான். 'நியூயார்க் கடிகார' தொழிற்சாலையில் 1,400 வாட்சுகள் ஒரு நாளிலும், 511,000 வருடத்திலும், நிமிடத்துக்கு 2,3 என்ற கணக்கிலும் தயாரிக்கப்படுகின்றன. தையல் தொழி-லும் மின்சார கத்திரியினால் ஒரே நாளில் 500 உடைகளை ஒரு மனிதன் வெட்டலாம். கார்னிகிஸ் எஃகு ஆலையில் மின்சார உதவியால் 300 மனிதரின் வேலையை 8 பேர் செய்து முடிக்கின்றனர். தீப்பெட்டி தொழிற்சாலையில் ஒரு சிறுவனின் உதவியுடன் 10,000,000 தீக்குச்சிகள் ஒரே நாளில் வெட்டப்படும். புதிய நூற்பு இயந்திரமானது யாருடைய உதவியும் இல்லாமல் சாப்பாட்டு நேரம் இல்லாமல் தொழிற்சாலை மூடும் சராசரி நேரத்தைவிட 1 1/2 மணி நேரம் கூடுதலாகக் கூட பணிபுரியும்.

"இங்கு வயது என்ற பிரச்சனையானது ஒரு விமோசனத்தை எதிர்பார்த்து நிற்கிறது. அதாவது எப்படி நமது திறமைகளையும், தேவைகளையும் ஒருசேர இணைத்து, தேவைகளையும் சக்தியையும் வீணடிக்காமல் இயக்குவது. இந்த பிரச்சனையானது மிகவும் சரியாக

தீர்க்கப்பட்டால் இங்கு சோர்வும் இல்லை, அதிகம் உழைக்கும் மனிதரும் இல்லை, ஏழ்மை இல்லை, பசியில்லை, நஷ்டமில்லை, எந்தக் கீழ்த்தரமான நடக்கையும் இல்லை, அநேக மாற்று வழிகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இதுவரை அநீதி இல்லாமல் எளிமை, சரியானது என்று ஒப்புக் கொள்ளும் வகையில் எந்த வழியும் இல்லை. இந்த விஷயத்தை பொறுத்தவரை மக்களை வெளிச்சத்தை நோக்கி வழிநடத்துபவன், மாபெரும் வீரனாகவும், இதுவரை உலகில் மனித இனம் காணாத நன்மையைக் கொண்டு வந்த நாயகனாகவும் இருப்பான்."

## பெண்களே போட்டியாளராகிப் போன காரணம்

பெண்களின் போட்டி என்பது கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு காரியம். 1880ல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் புள்ளிவிவர கணக்கின்படி 2,477,157 பெண்கள் லாபகரமான தொழி-ல் ஈடுபட்டிருந்தனர். பின் 1890ல் 3,914,711 என்று 50% கூடுதலான கணக்கு காட்டப்படுகிறது. இப்படிப்பட்ட ஊழியர்கள் முக்கியமாய் புத்தக்கடை, நகல் எடுத்தல், குறுக்கெழுத்தாளர் ஆகிய துறையில் அதிகம் இருந்தனர். 1880ல் 11,756 பெண்கள் பணியாளராகவும் 1890ல் 168,374 பணியாளரும் இருந்தனர் என்ற புள்ளி விவரத்தைக் காட்டுகின்றது. (1912) தற்போது பெண்கள் பத்து மில்-யன் பேர் நல்ல வருமானம் ஈட்டும் வேலைகளில் இருக்கின்றனர். ஆனால் இயந்திரங்களின் வரவால் இவர்களும் கூட வெளியே விரட்டப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாய் பிட்ஸ்பர்கின் காப்பி கொட்டையை வறுக்கும் கம்பெனியில் புதிய இரண்டு இயந்திரங்களை அறிமுகப்படுத்தி நான்கு பெண்களை வேலைக்கு வைத்துக் கொண்டு ஐம்பத்தாறு பேரை வெளியே அனுப்பிவிட்டது.

இந்தப் போட்டியானது நாளுக்கு நாள் மிகத்தீவிரமாக பெருகிவருகிறது. ஒவ்வொரு விலையேறப்பெற்ற கண்டுபிடிப்பும் இந்த இக்கட்டை இன்னும் அதிகப்படுத்துகிறது. கடின உழைப்பி-ருந்து ஆணும் பெண்ணும் உண்மையில் விடுவிக்கப்பட்டாலும் அவர்களையும், அவர்களது குடும்பங்களையும் வேலையில்லாத சூழ்நிலையில் யார் காப்பாற்றுவது?



## தொழிலாளரின் கருத்துக்களும், முறைகளும், நியாயமானதும், நியாயமற்றதும்

மிகப்பெரிய கூட்டமான வேலையற்றவர்களின் எண்ணிக்கையும் அதோடு கூட குறைவான மற்றும் மிகக் குறைவான வருமானமும் உழைப்பின் மீது மேலும் மேலும் கூடுதலான அழுத்தத்தை கொடுக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இதி-ருந்து விடுதலை அளிக்கவே "தொழிலாளர் சங்கங்கள்" அமைக்கப்பட்டன. இது ஒரளவிற்கு மனிதனின் ஊதியத்தையும் அவனது தன்மானத்தையும் உண்மையாக காப்பாற்றி ஏகாதிபத்தியத்தின் நசுக்கிப்பிழியும் பிடியி-ருந்து அநேகரை காத்திருக்கிறது. ஆனால் இதிலும் கூட நன்மையும் கெடுதலும் இரண்டும் கலந்தே இருக்கின்றது. இந்த சங்கங்கள் இந்த தொழிலாளர்களுக்கு தங்கள் மீதே ஒரு நம்பிக்கை வரும் விதத்தில் குழப்பமான சமயங்களில் ஆலோசனைகளையும், தீர்வையும் கொடுத்து வழி நடத்தின. ஆனால் தேவனையும் அவரது வார்த்தை கூறும் வழியையும் பார்த்து கற்றுக் கொண்டு தடுமாறாமல் நடக்க வழிகாட்டவில்லை. ஒருவேளை அவர்கள் அப்படி தேவனை தேடியிருப்பார்களேயாகில் தேவன் தன் பிள்ளைகளாகிய அவர்களுக்குத் "தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொடுத்து" தனது ஆலோசனையால் அவர்களை வழி நடத்தியிருப்பார். ஆனால் இவ்விதம் நடக்காமல் அதற்கு மாறாக, தேவ நம்பிக்கையில்லாமல், மனித நம்பிக்கையில்லாமல், பொதுவாகவே அதிருப்தியான, நிம்மதியற்றவர்களாய், அநேகரைப் புண்படுத்தக்கூடிய சுயநலத்தில் மட்டுமே வளர்ந்திருக்கிறார்கள். "சங்கங்கள்" வந்தபிறகு அவை சுயநலமானதொரு சுதந்திரத்தையும், வீண் பெருமையையும் வளரச் செய்து, தொழிலாளர்களை இன்னும் தனிச்சையாய் செயல்பட தூண்டி, முதலாளிகளில் சிலரது தர்ம சிந்தையையும், நல்ல இதயத்தையும் திசை திருப்பிவிடுகின்றன. முதலாளிகளும் தொழிற்சங்கங்களுடன் சமாதானமான முறையில் ஒரு முடிவுக்கு வருவதென்பது ஒரு வீணாண முயற்சி என்கிற ஒரு எண்ணத்திற்கு வந்து, தொழிலாளிகள் மிகவும் நியாயமான முறையில் நடந்து கொள்ள கடுமையான அனுபவத்தால் கற்பிக்கப்பட்டனர்.

கண்டுபிடிப்புகளும் ஆசீர்வாதங்களும் அனைவரின்

நலனுக்கான ஆயிரவருட விடியலுக்கு அறிகுறிகளே என்ற அனுபவம் பெறப்பட்டு, பேராசையினால் பணத்தை குவிப்பதற்காக மட்டும் அல்ல என்றும், நிலமும் இயந்திரங்களும் அனுதினம் புரளும் செல்வமும் தங்களது பிள்ளைகளின் உடைமைகளாக மாறும் என்ற தீர்க்கமான முடிவுக்கு வந்து சேரும் போது தான் தொழிலாளியின் கோட்பாடு சரியாக இருக்கும். மிகவும் செல்வம் உடையவர்கள் அது முழுவதையும் சுயநலத்துடன் தங்களுக்காகவே வைத்துக் கொள்ளாமல், உதாரத்துவமாய் யாவருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கருதுகிறார்கள்; இதை இலவசமாய் அல்ல, உரிமையுடன்; சுயநலத்தின் சட்டத்தினால் அல்ல, ஆனால் அயலாரை நேசிக்கும் தெய்வீக சட்டத்தினால். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் போதனைகளையும் அவரது எண்ணங்களையும் கோடிட்டு காட்டி இந்த கோரிக்கைகளை ஆதரிக்கின்றனர்.

ஆனால் இன்னும் சுயநல கோட்பாட்டிலேயே வாழ விரும்புகிற ஏழைகளுக்காக, செல்வந்தர்களை "அன்பின் சட்டத்தின்" படி நடக்கும்படி தாங்கள் கேட்கிறோம் என்பதை மறந்து விடுகிறார்கள். பிறருக்கே கொடுக்க விரும்பாதவர்களிடத்தில் அதை கேட்பது நியாயமற்றது என்று தெரியவில்லையா? இது எவ்வளவு விரும்பத்தக்கதும், அதிகாரத்துக்குரியதுமாக இருந்தாலும் அப்படி எதிர்பார்த்து கேட்பது விவேகமானதா? நிச்சயமாய் இல்லை. வசதிகுறைவானவர்கள், மேலானவர்களை பார்த்து அவர்களது செல்வத்தை கொஞ்சமாவது தங்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி எத்தனை கூச்ச-ட்டுக் கேட்டாலும் செவிகொடுக்க அவர்கள் தயாராக இல்லை.

மனித முறைமைகளில் சுயநலத்தின் சட்டத்தின் மற்றொரு பலன் என்னவெனில், இந்நாட்களில் நல்ல தீர்மானம் எடுக்கிற வெகுசிலரில் பெரும்பாலோர் மிகப்பெரிய வியாபார ஸ்தாபனங்களிலும், நிறுவனங்களிலும் இருக்கின்றனர். ஆனால் தொழிற்சங்கங்களுக்கு ஆலோசனைகளை வழங்குகிறவர்கள் பெரும்பாலும் சுமாரான அல்லது மோசமான முடிவுகளை எடுக்கிறவர்களாகவே இருக்கின்றனர். அப்படியே நல்ல ஆலோசனைகள் வழங்கப்பட்டாலும் அவை பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. தொழிலாளிகள் பெரும்பாலும் சந்தேக மனப்போக்குடைவர்களாக இருக்கின்றனர். ஆகவே நல்ல



ஆலோசனைகளைக் கொடுப்பவர்களை ஏதோ ஒற்றரும், வேவுக்காரருமாய், முதலாளிகளின் சார்புடையவர்களாக இருக்கிறார்கள் என்று எண்ணிக் கொள்கின்றனர். பெரும்பாலானவர்கள் நியாயமற்றவர்களாக இருக்கின்றனர். மிகவும் அறியாமையி-ருப்பவர்களின் தீய எண்ணங்களை நிறைவேற்றுகிற மதிநுட்பமானவர்கள், சம்பளம் பெறும் தலைவர்களாக இருக்கிறார்கள்.

மிக மோசமான முடிவினாலோ அல்லது அறியாமையினாலோ, பலன் கிடைக்க வேண்டியவர்களுக்கு சாதகமற்றதும், தவறான, ஞானமற்றதுமான ஆலோசனைகளே பாதிக்கும் மேல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பெரும்பாலான துன்பமானது சந்தேகமில்லாமல் மனித பலம் மற்றும் தைரியத்தின் மூலமே வருகிறது. இவர்கள் மே-ருந்து வருகிறதான ஞானத்தை தள்ளிவிடுகின்றனர். இது "முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது." அதோடு கூட அவர்களுக்கு வழிகாட்ட "தெளிந்த புத்தியுள்ள ஆவியை" அவர்கள் பெற்றிருக்கவில்லை. *(2தீமோ 1:7)*

மேலும் சங்கம், வேலைநிறுத்தம் முத-யவைகளை கையாண்டு சில பிரிவுகளில் கொடுக்கப்படும் ஊதியத்தை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாய் பெற்றுவிடலாம் என்று கனவு காணுகின்றனர். ஆனால் தற்கால இயந்திர உலகில் எந்த ஒரு தொழிலை கற்றுக் கொள்ளவும் முற்காலத்தைப் போல் நீண்ட நாள் படிக்கவேண்டிய அவசியம் இல்லையென்பதை கவனிக்க அவர்கள் தவறிவிட்டனர். மிகவும் சிலர் முற்காலத்தில் அதிக சிரத்தையோடு கற்றுக் கொண்ட ஒரு தொழிலை சாதாரண பள்ளி, செய்தித்தாள் முத-வற்றின் மூலம் ஆயிரக்கணக்கானோர் மிகவிரைவாய் கற்றுக்கொள்ளக்கூடும் என்பதையும், குறிப்பிட்ட ஒரு தொழில் நிறுவனத்தின் ஊதியக் குறைப்பினாலும், அதிகப்படியான பணியாளர்களின் இருப்பினாலும், அதிகப்படியான ஆட்களை

மிகவும் எளிதாய் அதிகமாய் சம்பாதிக்கக்கூடிய வேலைகளுக்குப் போட்டியாகப் பல திசைகளில் இருந்தும் திசை திருப்பக்கூடும் என்பதையும், அதேசமயம் இப்படி ஒரேடியாய் மிக அதிகமான ஆட்கள் வந்து குவிவதும் தடுக்கக்கூடாததாயும் இருக்கும் என்பதையும் கவனிக்க தவறிவிட்டனர். தானும் தன் குடும்பமும் பட்டினியாய் இருப்பதை விட பிறருக்கு ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு டாலர் தரக்கூடிய அதே வேலையை ஒருவர் ஒன்று அல்லது இரண்டு டாலர் கொடுத்தாலே ஏற்றுக் கொண்டு பணி செய்யும் படி ஆகிவிட்டது.

பொருளுக்கும், தொழிலாளிக்கும் கிராக்கி அதிகமாக இருக்கும் சாதகமான சூழ்நிலை நிலவுகின்ற வரை தொழிற்சங்கள் தனது அங்கத்தினருக்கு சாதகமான நன்மைகளைச் செய்து நல்ல கூ-யையும்குறிப்பிட்ட வேலை நேரத்தையும் ஆரோக்கியமான சூழ்நிலையையும் தர முடியும். ஆனால் இந்த விஷயத்தில் கடந்த காலத்தைக் கருத்தில் கொண்டு வருங்காலத்தையும் முடிவு செய்தால் தொழிற்சங்கங்கள் தவறு செய்துவிடுகின்றனவாக இருக்கும். ஆகவே தொழிலாளர்கள் தங்கள் மாம்ச பெலத்தின் மீது சாராமல் தனது ஒரே நம்பிக்கையான "கர்த்தரின் மீது" பார்வையை திருப்புவார்களாக.

### யாவர் மீதும் தேவை-விநியோக சட்டத்தின் பிடிவாதமான நிலை

தற்கால வியாபாரத்தின் அடித்தளமானது சிறியதோ, பெரியதோ, பணமுடையதோ அற்றதோ எதுவானாலும் அது நாம் பார்த்தது போல "அன்பற்ற" நொறுக்குகின்ற, சுயநலமான ஒன்றாகவே காணப்படுகிறது. உற்பத்தி செய்யப்பட்ட பொருளானது அதைத் தயாரிப்பவருக்கும், வியாபாரிகளுக்கும் லாபம் போய் சேரும் வகையில் மிக அதிகமான விலையில் விற்கப்படுகிறது. அதை அடையும் விதத்தில் பொதுமக்கள் மிக ம-வான விலையில் அதை வாங்குவர். சுயநலம் என்ற நோக்கத்தைத் தவிர உண்மையான மதிப்பானது குறைந்தபட்சம் சில சமயங்களிலாவது



சிந்திக்கப்படுகிறதா என்பதே கேள்வி. தானியங்களும் பிற விளை பொருட்களும் விவசாயிகள் வாங்கக்கூடிய அளவில் அதிகமான விலையில் விற்கப்படுகின்றன. மேலும் நுகர்வோர் பெறக்கூடிய குறைந்த விலைக்கு அது வாங்கப்படுகிறது. அதே விதத்தில் உழைப்பும், திறமையும் அதன் உரிமையாளர்களின் ஆணைப்படி மிக உயர்ந்த விலையில் விற்கப்பட்டு விவசாயிகளும், வியாபாரிகளும், தயாரிப்பளார்களும் பெறும்விதத்தில் குறைவான விலையில் வாங்கப்படுகிறது.

"தேவை மற்றும் விநியோகத்தின் கொள்கையானது" செயல்முறையில் மிகவும் நேர்த்தியாக இருக்கிறது. ஒருவரும் அதை மாற்றி அமைக்கமுடியாது; முற்றிலுமாய் அதை புறக்கணித்துவிட்டு தற்போதைய சமூக ஒழுங்கில் வாழவும் இயலாது. உதாரணத்திற்கு ஒரு வேளை விவசாயி இப்படி சொல்லலாம்: "தற்போதைய உலகை ஆண்டுவரும் இந்தக் கோட்பாட்டை நான் எதிர்க்கிறேன். ஒரு மரக்கால் கோதுமை விலை இப்போது 60 சென்ட், ஆனால் நான் அமர்த்தும் கூ-யாட்களுக்கும் எனது ஊதியத்துக்கும் சேர்த்து உண்மையில் அது ஒரு டாலருக்கு விற்கப்படவேண்டும். ஆகவே எனது கோதுமையை நான் மரக்கால் ஒன்றுக்கு ஒரு டாலருக்கு கீழே விற்கமாட்டேன் என்று கூறலாம்." முடிவு அவரது கோதுமை யாராலும் வாங்கப்படாமல் அழுகி, அவரது குடும்பத்தேவை கூட நிறைவடையாமல் இவர் பணிக்கு அமர்த்தியவருக்கு கூ-யும் தர இயலாது போகும். இவர் கொடுத்து விடுவதாக கூறி கடன் வாங்கிய இடத்தில் திருப்பிதர முடியாமையால் தனது தானியத்தையும், நிலத்தையும் கூட விற்று கடனை அடைக்க வேண்டி வரும்.

அப்படியில்லாமல் ஒரு வேளை அந்த விவசாயி இப்படிச் சொல்லலாம்: "நான் என் வய-ன் கூ-யாளுக்கு மாதம் முப்பது டாலர் கொடுக்கிறேன். ஆனால் பக்கத்து ஊரில் உள்ள வியாபாரி ஒருவர் குறைந்த வேலைக்கு, குறைந்த பணி நேரத்திற்கு மாதம் ஐம்பது முதல் நூறு டாலர் வரை கொடுக்கிறார் என்று அறிந்தேன்; எனவே நானும் எனது கூ-யாட்களுக்கும் கூட 8 மணி நேர வேலைக்கு மாதம் 60 டாலர் வீதம் வருடம் முழுவதும் கொடுப்பேன்." தேவை-விநியோகம் கொள்கை மீது சவால்

விடுகிறவரது நிலைமை என்னவாகும்? நிச்சயம் கூடிய விரைவில் அவர் கடனாளியாய் நிற்கவேண்டியதுதான். மெய்தான், அமெரிக்க நாட்டின் விவசாயிகள் யாவரும் ஒரே விதமான கூ-கொடுத்து, சுமாரான நல்ல விலையில் தானியங்களை விற்றால் நலமே; ஆனால் அறுவடைகாலத்தில் களங்கள் நிரம்பியிருக்கும், இதைவிட்டால் ஐரோப்பாவிற்கு வேறு இடத்திலும் வாங்க வழியில்லையென்று இருந்தால் நிலைமை எப்படி இருக்கும்? இந்தச் செய்தியானது இந்தியா, ராஷ்யா, தென் அமெரிக்காவுக்கு தந்திமூலம் சொல்லப்படும். அப்போது அங்கு விளையும் தானியங்கள் கப்பல்மூலம் இங்கு கொண்டுவரப்பட்டு "விவசாயிகளின் ஒற்றுமை" என்பது உடைக்கப்பட்டு ஏழைகளுக்கும் கூட ம-வு விலையில் உணவு வழங்கப்படும். இவ்விதமானதொரு ஒழுங்கு நடைமுறைப் படுத்தப்படுமானால் நிச்சயம் அது ஒரு வருடத்துக்கு மேல் நிலைக்காது.

மேலும் இது தற்கால சமூக அமைப்பின் கொள்கையான விநியோகமும், தேவையும் என்பது சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்ற விதத்தில் மனித உழைப்பின் பிற பொருட்களையும் சரிசமமாய் கட்டுப்படுத்தும்.

இந்த மாபெரும் ஜனநாயக நாட்டில், அதிகப்படியான தேவை, அதிக ஊதியம், நல்ல லாபம் போன்றவை மிகவும் சாத்தியமான நிலைமையில் இருக்கின்றன. ஐரோப்பாவிற்குப் போட்டியாக, விலையும் பாதுகாப்பான அளவிலேயே இருக்கின்றது. நல்ல லாபத்திற்காக ஐரோப்பாவின் பணம் முழுவதும் இங்கு முதலீடு செய்யப்படும் நிலை இருக்கிறது. சொந்த நாட்டில் கிடைப்பதைவிட வெளிநாட்டினர் இங்கு வந்து மேலான ஊதியத்தைப் பெற இயலும். இவை யாவும் இந்த தேவை - விநியோகம் கொள்கையின் செயல்களாக இருந்தன. ரயில் பாதைக்காகவும், இயந்திரங்களுக்காகவும், கோடிக்கணக்கான பணம் முதலீடு செய்யப்பட்டு மக்களுக்கு வாழ அவசியமான வீடும் வசதியும் செய்து தரப்படவும் பல ஆண்டுகளாய் ஆயத்தங்கள் நடக்கிறபடியால் உலகிலேயே செல்வசெழிப்புடைய நாடாய் அமெரிக்கா இருக்கிறது. ஆனால் இந்த செழிப்பின் உச்சகட்டம் கடந்து, தற்போது கீழே இறங்கும் நிலையில் இருக்கிறோம். ஒருவேளை போர் அல்லது வேறு இயற்கை சீற்றத்தினால் உலக வியாபாரமானது தற்கா-கமாக நம் நாட்டின் மீது வந்தாலொழிய வேறு எதுவும் இந்தச் சரிவை தடுக்க இயலாது. சீனா, ஜப்பானுக்கு இடையேயான போர் இந்த அழுத்தத்தைச் சற்று குறைத்திருக்கிறது. இவர்கள் போர் தளவாடங்களும், கருவிகளும் வாங்குவதினால் மாத்திரம் அல்ல. ஜப்பானுக்கு சீனா நஷ்டஈடு கொடுத்ததினால் மட்டும் அல்ல, அதற்கு பதிலாய் ஜப்பானியரும் தனக்காக போர் கப்பல்களை கட்டிய நாடுகளுக்கு, முக்கியமாய் பிரிட்டனுக்கு பெரும் தொகையை கட்டியது. அதோடு கூட ஜப்பான் தற்போது "பலமான கடற்படை" உடையதாக இருக்கிறது. ஏனெனில் ஐரோப்பிய, அமெரிக்க அரசாங்கங்களின் கடற்படை கருவிகளும் அதோடுகூட சேர்ந்துவிட்டன. அமெரிக்க ஐக்கியநாட்டின் கப்பல் மற்றும் கடலோர காவல்படையின் விஸ்தரிப்புக்காக இன்னும் பணம் செலவழிக்கப்படுவதை தடுக்க நியூயார்க்கில் தொழிலாளிகளின் மாபெரும் கூட்டம் ஒன்று சமீபத்தில் கூடியதை விட இதற்கு வேறு விளக்கம் அவசியமில்லை. இந்த பணத்தை பணியாளர்களுக்கு வேலை கொடுப்பதற்கு பயன்படுத்தலாம் என்பதையும் இவர்கள் கவனிக்க வேண்டும். போரை எப்படி எதிர்க்கிறோமோ, அதே அளவிற்கு வேலையில்லா திண்டாட்டத்தையும் அதற்குச் சமமாகவே எதிர்க்கிறோம். ஏனெனில் இந்த பேராபத்து போரைத் தூண்டிவிடும் ஆபத்துடையது. இந்த உலகின் கடன் யாவும் கடன் கொடுத்த பத்திரங்களாக மாறட்டும். இந்த கடன் பத்திரங்கள் வரப்போகும் மாபெரும் உபத்திரவ காலத்தில் பொன்னுக்கும் வெள்ளிக்கும் சமமாக இருக்கும். எசே 7:19; செப் 1:18

அநேகர் காணுகின்றபடி போட்டியானது மிகவும் ஆபத்தானது: "சீனாவின் தடை சட்டம்" அமலுக்கு வந்தபோது, அது சீனாவின் கோடீஸ்வரர்கள் பிற நாட்டிற்கு செல்வதை தடைசெய்தது. மேலும் இந்த நாட்டின் குடிமகனாய் மாறாத எவரையும் வெளியேற்றுவதிலும் கடுமையாக இருந்தது. மேலும் ஐரோப்பாவி-ருந்து குடிபெயருவதை தடுக்கும் விதத்தில் வந்து

இறங்குபவர்கள் சில மொழிகளை புரிந்து கொள்ள இயலாவிடில் தடை செய்வது போன்ற சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இந்த விநியோகம் - தேவை கொள்கையின் நிமித்தம் உலகம் முழுவதும் தொழிலாளிகளின் நிலைமை சமன்படுத்தப்படும் என்று அறிந்தனர். மட்டுமன்றி ஆசியா மற்றும் ஐரோப்பாவின் அளவிற்கு அமெரிக்க நாட்டின் தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்டு விடக்கூடாது என்பதில் கூடுமானவரை, விருப்பத்துடன் இருந்தனர்.

வேறு சிலர் சட்ட முறைமையில் விடுதலை தேடுகின்றனர். இதனால் உற்பத்தியாளர் அதிக கூ-யை கொடுத்து தங்கள் பொருட்களை குறைந்த லாபவிகிதத்தில் விற்கும் விதத்தை ஆதரித்தனர். ஆனால் இந்த முதலீடானது இங்கு லாபத்தைக் காணவில்லையெனில், வேறு எங்காவது ஒரு இடத்தில் உற்பத்திக்கோ, பணியாளருக்கோ, கட்டுமான பணிக்கோ - நல்ல சாதகமான சூழ்நிலை உள்ள இடத்தில் கூ- குறைவாகவும் லாபம் அதிகமும் உள்ள இடத்தில் போய் சேரும் என்பதை மறந்துவிட்டனர்.

ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையின் அடிப்படையில் இந்த விஷயத்தை சற்று விரிவாய் பார்த்து ஏதாவது ஒரு வழி கிடைக்குமா என்றால் அது இப்போதைக்கு இல்லை. தேவை-வினியோகம் கொள்கையானது முதலீட்டை மட்டுமன்றி தொழிலாளியைக் கூட கட்டுக்குள் வைத்திருக்கிறது. தொழிலாளிக்கு சமமாக முதலீடும் கூட கூடுமானவரை லாபகரமான தொழிலையே தெரிந்தெடுப்பதில் அத்தனை கவனமாக இருக்கிறது. இது உலகம் முழுவதிலும் இங்கும் அங்குமாய் நடக்கிறது. ஆனால் முதலீடும் தொழிலாளியும் எதிரான வழியில் சென்று எதிர்மாறான நிலைமையினால் கட்டுப்படுத்தப்படுகின்றனர். நல்ல திறமையுள்ள தொழிலாளி உயர்வான ஊதியம் கிடைக்கக்கூடிய வேலை ஸ்தலத்தை தேடுகிறான். முதலீடோ மிகவும் ம-வாய் தொழிலாளி கிடைக்கும் இடத்தை தேடுகிறது. ஏனெனில் அப்போது தான் லாபத்தின் பங்கு அதிகமாக இருக்கும்.

இயந்திரங்களும், முதலீடுகளுக்குச் சாதகமாய் மிகவும் உழைத்தன. இன்னும் கூட மிகவும் உண்மையுடன் உழைத்தும் வருகின்றன. ஆனால் முதலீடு பெருகப் பெருக இயந்திரங்களும்



அதிகரிப்பதால் "தேவைக்கு மிஞ்சிய உற்பத்தி" என்ற நிலை ஏற்படுகிறது. ஆகவே லாபத்திற்கு விற்கப்பட அதிகப்படியான சரக்குகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் போட்டியின் நிமித்தமாய் விலை குறைக்கப்பட்டு லாபத்தின் விகிதமும் குறையத் தொடங்கியது. லாபத்தையும் விலையையும் சீராக வைப்பதற்கு ஒரு அமைப்பை உண்டாக்கும் விதத்தில் இந்த போட்டியானது நிச்சயம் வழிவகுக்கிறது. இதைத்தான் நிறுவனம் (ஸ்தாபனம்) என்கிறோம். ஆனால் சரியான முறையில் குறைந்த தேவையுள்ள உற்பத்தி சாமான்கள் கவனிக்கப்பட்டு, அல்லது சட்ட ரீதியாய் இப்போது இல்லாவிட்டாலும் பிறகு சரிசெய்யப்பட்டு அதனால் பாதுகாக்கப்பட்டாலொழிய இந்த வழிமுறையும் கூட நீண்ட நாள் நீடிப்பது சந்தேகமே.

## அச்சுறுத்துகின்ற வெளிநாட்டு தொழிற்போட்டி குறித்த ஒரு கண்ணோட்டம்

இந்த விதமான சூழ்நிலையானது வியாபாரத்துக்கும், முதலுக்கும் ஒரு புதிய பாதையை திறந்திருக்கிறதே ஒழிய தொழிலாளிகளுக்கு அல்ல. பல நூற்றாண்டுகளாய் உறக்கத்தில் இருந்த சீனாவும், ஜப்பானும் மேற்கத்திய கலாச்சாரத்தைப் பார்த்து விழித்துக் கொண்டன. நீராவி, மின்சாரம், இயந்திரங்கள் மற்றும் நவீன கண்டுபிடிப்புகளை பொதுவாய் உபயோகிக்க ஆரம்பித்துவிட்டன. ஜப்பானின் ஜனத்தொகையானது பிரிட்டனுக்கு சமமாகிவிட்டது. மேலும் சீனாவின் ஜனத்தொகை அமெரிக்க நாட்டைக் காட்டிலும் 5 மடங்கு அதிகமாகிவிட்டது. இந்த பல்லாயிரக்கணக்கான ஜனம் அநாகரீகமான ஜனம் அல்ல, பொதுவாகவே இவர்கள் யாவரும் தங்கள் நாட்டு பாஷையை எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். வித்தியாசமானதொரு நாகரீக மேம்பாட்டை உடையவர்களாயினும் அது மிகவும் பழைமை வாய்ந்தது. பிரிட்டனின் மக்கள் பண்படாதவர்களாய் இருந்த காலத்திலேயே சீனா களி மண்பாண்டங்களையும், பட்டு உற்பத்தியையும் செய்யும் அளவிற்கு மேம்பட்டவர்களாய் இருந்தனர். ஆகவே ஜப்பானிலும் சீனாவிலும் முதலீடுகள் குவிய ஆரம்பித்தன. அங்கு ரயில்கள்

கட்டப்பட்டு, அதன்மூலம் புதிய இயந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டு, மிகப்பெரிய தொழில் நிறுவனங்கள் நிறுவப்பட்டு அதன் மூலமாய் திறமை, ஆற்றல், சிக்கனம், பொறுமை ஆகியவற்றை உபயோகித்து, அந்த கோடிக்கணக்கானவர்கள் கடின உழைப்புக்கும் சிக்கனத்திற்கும் தங்களை பழக்கப்படுத்திக் கொள்ளும்படி தாழ்த்திக் கொண்டதை குறித்து ஆச்சரியப்பட அவசியமில்லை.

ஒரு நாளைக்கு ஆறு முதல் பதினைந்து சென்ட்டுகள் வரை ஊதியம் கிடைத்தாலும், முறுமுறுக்காமல், நன்றியோடுகூட அந்த வேலையை ஏற்றுக் கொள்ளக்கூடிய நாட்டில் முதலீடு செய்வதால் அதிகப்படியான பிரதிபலன் இருப்பது கண்டு கொள்ளப்பட்டது. ஒரு பெரிய முதலீட்டுத் தொகை ஏற்கெனவே ஜப்பானை சென்று அடைந்துவிட்டது. சீனாவி-ருந்தும் இன்னும் கொஞ்சம் சலுகை எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திறமைவாய்ந்த, கற்றுக்கொள்வதற்கு மிகவும் சரியான ஜனங்களாகிய இந்த கோடிக்கணக்கானவர்களோடு, உற்பத்தியின் உலகம் முழுவதுமே மிக விரைவிலேயே போட்டியாக நிற்கப் போவதை அனைவரும் பார்க்கப்போகின்றனர். ஐரோப்பாவின் தற்போதைய ஊதிய விகிதம் குறைவாக இருக்கிறது. அமெரிக்க நாட்டில் அதிகமான ஊதியத்தை வாரி வழங்கியதாலும் (ஆசியாவையும், ஐரோப்பாவையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது) இங்கு வளர்ந்துவிட்டிருக்கும் ஆடம்பர, பழக்கவழக்கங்களினாலும் "பட்டினி கிடக்க வைக்கும் ஊதியம்" என்று சொல்லக்கூடியதாகவே தற்கால ஊதியம் இருக்கிறது. (ஐரோப்பாவைக் காட்டிலும் 2 மடங்கு, ஆசியாவைப் போல் 8 மடங்கு அதிகமானாலும் கூட). இன்னும் 30 வருடங்களுக்கப் பிறகு, புதிய கண்டுபிடிப்புகள் தொழிலாளிகளை குறைக்கும் இயந்திரங்கள் இவைகளினால் நாகரீக வளர்ச்சி பெற்றுவிட்ட நாடுகளின் தொழிலாளிகளின் நிலைமை எந்த அளவுக்கு பரிதாபகரமாக இருக்கும்? கிழக்கத்திய நாடுகளின் மிக குறைந்த ஊதிய விகிதத்தினால் உலகம் முழுவதிலும் தொழிலாளிகளுக்கான போட்டி வந்துவிட்டால் பிறகு இவர்களது நிலைமை என்னவாகும்? மேலும் ஒரு நாளைய ஊதியம் 15 சென்டாக மட்டுமன்றி எந்த சிறிய வேலையானாலும் அதற்கு கூடுதலாக 6 பேர்



காத்திருக்கின்ற சூழ்நிலையும் கூட இருக்கிறது. சிறிது காலத்திற்கு முன்னதாகவே பருத்தி ஆலையானது "கனக்டிகட்"டி - ருந்து (Connecticut) ஜப்பானுக்கு மாறிவிட்டதை பத்திரிக்கைகள் குறிப்பிட்டிருந்தன, ஆகவே அதனோடு கூட உற்பத்தியாளர்களும் அங்கே சென்றுவிட்டனர். இதனால் குறைந்த செலவில் வேலையாட்கள் கிடைத்து, லாபத்தின் பங்கு அதிகமானது.

"தொழில் போர்" ஒன்று எதிர்கொண்டு வருவதை ஜெர்மானிய பேரரசர் மிகத்தெளிவாய் கண்டு கொண்டார். ரஷ்ய மன்னருக்கு அளித்த ஒரு பரிசில் இவரே முன்னின்று இதனை உணர்த்தும் வகையில் ஒரு சித்திரம் வரையச் செய்து அதில் சூட்சமமாக இந்த கருத்தை தெரியப்படுத்தினார். இந்த சித்திரத்தில் ஐரோப்பிய பெண்களை ராணுவ உடையில் வானத்தில் ஒளிவீசும் சிலுவையின் வெளிச்சத்தின் கீழ் நிற்பதைப் போலவும், மிகாயேல் தூதனைப் போலொருவன் சீனாவி-ருந்து எழும்பும் கருத்த மேகத்தை நோக்கிப் பார்ப்பதைப் போலவும் இருந்தது. அந்த மேகத்தி-ருந்து கொடூரமான உருவங்களும் முகங்களும் பளிச்சிடும் மின்ன--ருந்து கிளம்பி மேலே ஏறிவருவதைப் போலவும் வரையப்பட்டிருந்தது. இந்த சித்திரத்தின் கீழே, "ஐரோப்பிய நாடுகளே! உங்கள் தேசத்தினையும், உங்கள் விசுவாசத்தையும் காத்துக்கொள்ளும் பொருட்டு ஒன்று கூடுங்கள்" என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது.

## வெள்ளை நிற பணத்துடன் மஞ்சள் நிற மனிதன்

"இம்பீரியல் காலனியல் இன்ஸ்டியூட் பத்திரிக்கை" என்ற ஆங்கில நாளேட்டி-ருந்து திரு. ஒயிட் ஹெட் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியதாவது : இவர் சீனாவின் - ஹங்காங் நகரத்தவர்:

"நூற்பு தொழிற்சாலையை சீனர்கள் கட்ட ஆரம்பித்திருந்தனர். யாங்ட்டெட்ஸ் ஆற்றின் பகுதியிலும், ஷாங்காய் என்ற அதற்கடுத்த இடத்திலும் 5 மைல் சுற்றளவில் இது ஏற்கெனவே நடந்து வருகிறது. பிற இடங்களிலோ தற்போது கட்டுமானப்பணி நடக்கிறது. இதில் ஏறக்குறைய 200,000 நூற்பு தண்டுகள் தேவைப்படும் என

கணக்கிடப்படுகிறது. இதில் சில வேலையை தொடங்கியும் விட்டனர். இதற்காக செலவிடப்படும் முதலீடு முற்றிலும் அந்த நாட்டுடையதே ; சமாதானமான ஒரு சூழ்நிலையும் அங்கே நிலவுகிறது. அந்தச் சூழ-ல் உண்மையான திறமை வாய்ந்த நிர்வாகமும் உடைய இந்த இடத்தில் நமது தற்கால பொருளாதார நிலைமை நீடிக்குமேயாகில், உண்மையில் கிழக்கத்திய நாடுகளின் முன்னேற்றமும், வளர்ச்சியும் அளவற்றதாக இருக்கும் என்பது நிச்சயமே."

வாஷிங்டன் டி.சி.யி-ருந்து 1896ம் வருடத்தின் துவக்கத்தில் சீனாவின் ஷாங்காய் பகுதியி-ருந்த "ஜெர்னிகன் கவுன்சின் ஜெனரல்" மூலமாக அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கை அனுப்பப்பட்டது. இதில் பருத்தி தொழிலானது பெற்றுவரும் மாபெரும் வரவேற்பை பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. 1890-ருந்து பருத்தி ஆலைகள் அறிமுகப்படுத்தப்பட்டு மிகவும் பிரபலமாகத் தொடங்கியது. பருத்திக் கொட்டை எண்ணெய் ஆலையும் தொடங்கப்பட்டது. மேலும் பருத்தி விளைச்சலுக்கு மிகவும் சாதகமான சீதோஷ்ணத்தை கொண்ட சீனாவில் தொழிலாளியும் மிகவும் ம-வாய் கிடைத்துவிட்டதால் "மிக விரைவிலேயே உலகிலேயே பருத்தி உற்பத்தியில் சீனாவும் பெரும் பங்கு வகிக்கும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை."

திரு.ஒயிட்ஹெட் என்பவர் 1894ல் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே நடந்த போரைப் பற்றி நடந்த விவாதத்தில் இந்த போரின் முடிவு சீனாவின் தொழில் மீதுள்ள நம்பிக்கைக்கு ஒரு ஆதாரமாக இருக்கும் என்று கூறினார். மேலும் அவர் கூறியதாவது:

"இந்த போரின் நிமித்தமாய் சீனாவின் உயர்மட்ட மக்களுக்கு இருந்த இடைஞ்சல்களில் இருந்து ஒரு விடுதலை கிடைக்கக்கூடும். சீனாவில் கனிமப் பொருட்கள் மற்றும் (இயற்கை) வளங்கள் மிகவும் அதிகப்படியாகவே இருக்கிறது. பருத்தி விளைச்சலுக்கான நிலப்பரப்பு அவர்களிடத்தில் அதிகமாக இருக்கிறது. ஒருவேளை அது எளிய மூலப்பொருளானாலும், பிற தரத்துடன் கலந்து உற்பத்தி செய்ய மிகவும் ஏற்றது. 1893ல் ஷாங்காய் ஆற்றில் ஐந்து நீராவி கப்பல்களில் சீனாவில் விளைந்த பருத்தியானது ஜப்பானுக்கு



ஏற்றுமதியானது; இது ஜப்பானின் ஆலைகளில் பதப்படுத்தப்பட்டு நூலாகவும், பின் ஆடையாகவும் மாறிவிடும். தற்போது ஜப்பானியர் தங்களது ஆலைகளுக்குத் தேவையான பருத்தியை அமெரிக்காவி-ருந்தும், பிற நாடுகளில் இருந்தும் நேரடியாய் இறக்குமதி செய்கின்றனர். இந்த மிகப்பெரிய விழிப்புக்குப்பின் சீனா தனது 300 மில்-யன் தொழிற்திறமை படைத்த மக்களுடன் சேர்ந்து தங்கள் நாட்டின் நிலப்பகுதியில் ரயில் போக்குவரத்தினையும், நீர்வழிகளில் நீராவி கப்பல் போக்குவரத்தினையும் அறிமுகப்படுத்தி, தனது எல்லையற்ற வளங்களைப் பெருக்க ஆரம்பிக்கிறது. இதன் விளைவு எப்படி இருக்கும் என்று கணக்கீடுவது சற்றுக் கடினமே. பூமியின் புதியதொரு பகுதியானது இப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டது போலவும் நல்ல தொழில் திறமை படைத்த மிகுதியான ஜனத்தொகையும், விவசாயம், கனிமவளம் மற்றும் அநேக மூலபொருட்களையும் உடையதாகவும் இது இருக்கிறது. ஆனால் தற்போதைய போரின் விளைவினால் சீனாவின் வாசல்கள் திறக்கப்பட்டதில் இருந்து, ஆங்கிலேய உற்பத்தியாளர்களுக்கு நல்ல லாபம். நமது பொருளாதாரத்தில் கூடிய சீக்கிரம் ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டுவராத வரையில் நம் யாவருடைய தொழில் வெற்றியெனப்படுகிறதான (செலஸ்டியல் எம்பயரானது) சொர்க்க ராஜ்யமானது மாபெரும் தோல்வியின் ஸ்தலமாகிவிடும்."

திரு.ஒயிட் ஹெட் அவர்களது கருத்தானது முற்றிலும் மூலதனத்தை குறித்தது. அவரது வார்த்தையில் "தோல்வி" என்று குறிப்பிடுவது ஆங்கிலேய தொழிலாளர் மீது இன்னும் அதிகமாகவே இருக்கும். ஜப்பானைக் குறித்த அவரது ஒரு கண்ணோட்டம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

"ஒசாகோ மற்றும் கியோடோ என்ற நமது அண்டை நாட்டின் தொழில் நடவடிக்கைகள் மீது தற்போது ஆச்சரியமானதொரு பார்வை விழுகிறது. மிக மிகக் குறுகிய காலத்திற்குள் ஐம்பத்தொன்பதுக்கும் குறையாத பருத்தி ஆலைகளும், நெசவு ஆலைகளும் நிறுவப்பட்டுவிட்டன. இருபது மில்-யன் டாலர் முதலீட்டில் இது தொடங்கப்பட்டது . இந்தப் பணம் முழுவதும் அந்த நாட்டின் சொந்த முதலீடே. தற்போது அங்கு இருக்கும் 770, 874 நூற்பாலைகள் மூலம் "மே" மாதத்திற்குள் இவர்களது உற்பத்தி 500,000

(bale) பேல் நூலாக இருக்கும். சுமாராக இதன் மதிப்பு 40 மில்-யன் டாலர் அல்லது தற்போதைய கணக்கில் 4 மில்-யன் பவுண்ட் ஸ்டர்-ங். வெகுவிரைவிலேயே ஜப்பானியரின் தொழிற்சாலைகள் நூற்பு ஆலைகளில் மட்டுமன்றி, எல்லா துறைகளிலும் இது பரவிவிடும். பிரிட்டிஷ் தொழில் போட்டியினை குறித்து எந்த பாதிப்பும் ஏற்படாத தூரத்திற்கு அவர்கள் ஏற்கெனவே தங்களது வெற்றியின் இலக்கை வெகுவாய் கொண்டு சென்றுவிட்டனர்."

திரு.ஒயிட் ஹெட் மேலும் தொடர்ந்து, ஐரோப்பா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தொழிலதிபர்களை வெள்ளியை மதிப்பற்றதாகவும் தங்கத்தின் மதிப்பை இரண்டத்தனையாகவும் மாற்றியவர்கள் என்றார். இதனாலேயே ஜப்பான், சீனாவின் மதிப்பு இன்னும் அதிகமாகிவிட்டது. மேலும் அவர் கூறுவதாவது:

"இருபது அல்லது முப்பது வருடங்களுக்கு முன் கிழக்கத்திய பணியாளர்களை அமர்த்துவதற்கு செலவிடப்பட்ட அதே அளவு வெள்ளியின் மதிப்பு இன்னும் கூட அப்படியே இருக்கிறது. நமது பொருளாதார நிலைமை செழுமையாக இல்லாத காரணத்தால் கிழக்கத்திய நாடுகள் குறைந்தபட்சம் 100% கூடுதலாக பணியாளரை 25 வருடங்களுக்கு முன் இருந்த தங்கத்தின் மதிப்பீட்டின்படி அமர்த்த வழிவகுத்துவிட்டன. இதையே இன்னும் தெளிவாக கூறவேண்டுமாயின் கீழ்கண்ட உதாரணத்தை கூறுகிறேன். 1870ல் பத்து ரூபாய் ஒரு சவரனுக்கு சமம். இது தங்கம், வெள்ளியின் மதிப்பு நிர்ணயம். இதைக் கொண்டு இருபது பேருக்கு ஒரு நாள் ஊதியம் கொடுக்கமுடியும். இன்று இருபது ரூபாய் ஒரு சவரனுக்கு சமம். எனவே இருபது ரூபாய்க்கு நாற்பது பேரை வேலைக்கு அமர்த்தலாம். 1870ல் இருபது பேரை அமர்த்தக்கூடிய அதே பணத்தில் தற்போது அதே தங்கத்தின் மதிப்பை கொண்டு பார்க்கும்போது நாற்பது பேரை அமர்த்தலாம்." இந்த கணக்கின் விகிதப்படி பார்க்கப்போனால் பிரிட்டிஷ் ஊழியர்கள் போட்டிபோட முடியாது.

"கிழக்கத்திய நாடுகளில் முன் இருந்ததைப் போலவே வெள்ளியின் மதிப்பின் படி இன்னும் அதே அளவிற்கு கூ- கொடுக்க முடிகிறது. ஆகவே பொன்னோடு கூட வெள்ளியைப் பார்க்கும்போது, முன்பு சமமாய் இருந்த வெள்ளியானது தங்கத்தைப் பார்க்கிலும் தற்போது மதிப்பற்றதாகிவிட்டது. உதாரணமாய், முன்பு 8 ஷில்-ங் கொடுத்து ஒருவரை பணிக்கு அமர்த்தக்கூடிய நிலைமை இங்கிலாந்தில் இருந்தது. கூ- அதே அளவு கொடுத்து, தற்போது கூட அதே அளவிற்கு ஆட்களை அமர்த்தலாம். இன்னும் கூட சட்டப்படி நாணய மதிப்பு முன்பிருந்ததைப் போலவே இருக்கிறது. தங்கத்தோடு ஒப்பிட்டு பார்க்கும்போது வெள்ளியின் மதிப்பு 6 பென்சுக்கும் குறைந்து போனாலும் கூட நாணய மதிப்பானது குறையவில்லை. 2 டாலரின் மதிப்பென்பது பழைய மாதிரியே இருக்கிறது. அதைக் கொண்டு அதே அளவிற்கு பணியாளர்களை அமர்த்தலாம். 20 வருடங்களுக்கு முன் 4 ஷில்-ங் கொடுத்து அமர்த்திய அதே அளவு பணியாளர்களை (வெள்ளி கொடுத்தாலும்) இப்போதும் அமர்த்தலாம். கிழக்கத்திய தொழிலாளர்களின் மதிப்பு தங்கத்தின் மதிப்போடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 55% முன்பிருந்ததைக் காட்டிலும் மிகவும் குறைந்துவிட்டது. தொழிலாளர்களின் மதிப்பை தங்கத்தின் மதிப்போடு கணக்கிடும் நாடுகளின் தொழில் முதலீட்டாளர்கள் உற்பத்திப் பொருட்களையும் இன்னும் ம-வாக உற்பத்தி செய்யக்கூடும். ஆகவே பொருளாதார சட்டம் சீர்திருத்தப்படவேண்டும். அல்லது பிரிட்டிஷ் தொழிலாளர் மிகப்பெரிய ஊதியக் குறைப்பை ஏற்றுக் கொள்ள சம்மதிக்க வேண்டும். அல்லது வெள்ளியை மதிப்பிடும் நாடுகளில் தொழில் நிறுவப்படுவதினால் தங்களது உற்பத்தி பொருட்கள் குறைக்கப்படும் என்பதால் பிரிட்டிஷ் தொழில் நிறுவனங்கள் பிரிட்டிஷ் கடலோரங்களை விட்டு விலக வேண்டும் இல்லையென்றால் எந்த மாறுதலும் ஏற்படப் போவதில்லை."

திரு.ஒயிட் ஹெட் உண்மையில் கூறும் மற்றொரு காரியம் என்னவெனில் வெள்ளியை மதிப்பிடும் நாடுகள் தங்கள் நாட்டின் தேவைகளை உற்பத்தி செய்து கொள்வதுடன் வெகுவிரைவில் தங்கத்தை மதிப்பிடும் நாடுகளை ஆக்கிரமிக்கவும் செய்யும். உதாரணத்திற்கு ஜப்பான் தன் நாட்டில் விற்கப்படும் விலையை காட்டிலும் 1/3 பாகம் குறைந்த விலையில் தங்கள் பொருட்களை இங்கிலாந்தில் விற்கக்கூடும். இதற்கான விலையை அவர்கள் தங்கத்தின் மதிப்பில் வாங்கி, அதை வெள்ளியின் மதிப்பிற்கு மாற்றி

மிகப்பெரிய லாபத்தை பெற முடியும். ஆகவே அமெரிக்க மற்றும் ஐரோப்பிய இயந்திர பணியாளர்கள் ஆசிய நாடுகளின் ம-வான உழைப்புக்கும் திறமைக்கும் போட்டியிட கட்டாயப்படுத்தப்படுகிறர்கள். அதோடு கூட தங்கம்-வெள்ளி இவை இரண்டுக்கும் இடையே உள்ள மதிப்பின் பின்னடைவுகளோடு கூட போட்டியிட வேண்டியிருக்கும்.

திரு.ஒயிட் ஹெட்டின் இந்த உரையின் மீது டெய்-க்ரானிக்கல் (Daily Chronical) (லண்டன்) என்ற பத்திரிக்கையின் விமர்சனம் கவனத்தை திருப்பி, இங்கிலாந்தின் பருத்தி உற்பத்தியின் ஸ்தானத்தை அநேகமாக இந்தியா பிடித்துவிட்ட உண்மையை பற்றிக் கூறுகிறது. அது கூறுகிறதாவது:

"திரு.டி.ஹெச். ஒயிட் ஹெட்டின் நேற்றைய இரவு சொற்பொழிவு நமது கிழக்கத்திய வியாபாரத்தோடு சம்பந்தப்பட்ட ஆச்சரியப்படக்கூடிய புள்ளி விவரங்களோடு கூட யாவருடைய கவனத்தையும் கவர்ந்து விட்டது. உண்மையில் எந்தவிதத்திலும் சர்ச்சைக்குரியது என்று கூறிவிட முடியாத விதத்தில் கடந்த நான்கு வருடங்களில் நமது ஏற்றுமதியானது 54,000,000 பவுண்ட் குறைந்து விட்டது. லேன்கேஷீரில் 1894ல் 67 நூற்பு ஆலைகளின் வருமானமானது 411,000 பவுண்ட் அளவிற்குப் பின்னடைவானது. இதற்கு நேர்மாறாக 1891ல் இந்திய ஆலைகளின் ஏற்றுமதியும், ஜப்பானுக்கு அனுப்பிவைக்கப்பட்ட உதிரி பாகங்களின் எண்ணிக்கையும் பிரம்மாண்டமாக உயர்ந்துவிட்டது. ஜப்பானின் ஹிகோவி-ருந்த பருத்தி ஆலையின் லாபமும் 17% உயர்ந்துவிட்டது. திரு.தாமஸ் சதர்ன்லேன்ட் என்பவர் வெகுகாலத்திற்கு முன்பே தீபகற்ப மற்றும் கிழக்கத்திய கம்பெனிகள் யான்ட்சில் (Yangtzo) தங்களது கப்பல்களைக் கட்டும் என்று கூறினார். திரு.ஒயிட்ஹெட்டின் எதிர்ப்பார்ப்பின்படி கூடிய விரைவில் கிழக்கத்திய கம்பெனிகள் ஐரோப்பிய சந்தையில் போட்டிக்கு நிற்கும் என்றார். இப்படிப்பட்ட வல்லுநர்கள் மூலம் எவ்வளவு மாற்று வழிகளையும், கருத்துக்களையும் குறித்து நாம் வேறுபட்ட எண்ணமுடையவர்களாய் இருந்தாலும், இவையாவும் வரப்போகும் தீவிரமான விளைவுகளைப் பற்றியே கூறுகின்றன."



பெர்-ன் நகரின் டாங்ப்டேட் என்ற ஜெர்மானிய செய்தித்தாளானது சைனாவை ஜப்பான் தேசமானது மேற்கொண்டு வரும் வெற்றியைக் குறித்து கவனமாய்ப் பார்க்கும் போது, தான் கண்டுகொண்ட விவரத்தை குறித்து அது மிகவும் ஆச்சரியப்படுகிறது. ஜப்பானிய பிரதமர் "இட்டோ" வை மற்றொரு "பிஸ்மார்க்" என்று வர்ணிப்பதோடு, ஜப்பானியரும் பொதுவாகவே நாகரீக வளர்ச்சி அடைந்துவிட்டதாகவும் கூறுகிறது. மேலும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிற தொழில் போட்டியை குறித்து மிகவும் முக்கியமானதொரு குறிப்பை முடிவாக கூறுவதாவது :

"பிரதமர் 'இட்டோ' தன் சொந்த நாட்டின் தொழில் வளர்ச்சியில் மிகவும் ஆர்வம் உள்ளவராக இருந்தார். சர்வதேச அளவில் தொழி-ல் மேன்மையான இடத்தைப் பெறுவதற்கு வேண்டிய போராட்டத்தில் ஜப்பானுக்கு இருக்கும் வாய்ப்பை பெரும்பாலான வெளிநாட்டவர்கள் மிகவும் குறைத்து மதிப்பிடுவதாக இவர் நம்புகின்றார். மேலும் ஆண் தொழிலாளிகளுக்கு ஜப்பானிய பெண் தொழிலாளிகள் சமமானவர்கள் என்றும் இவர்கள் 2 மடங்கு உழைப்பின் திறன் உடையவர்கள் என்றும் இவர் கருதுகிறார்."

பாரிசின் "எக்கனாமிக் ப்ராங்கேஸ் (Economistics Francais)" என்ற பத்திரிக்கையின் ஆசிரியர், ஜப்பானையும் அதன் செயல்பாடுகளையும் குறித்துக் கீழ்கண்டவாறு கூறுகிறார்:

"இவ்வுலகமானது புதியதொரு ஸ்தானத்திற்குள் நுழைந்திருக்கிறது. புதுவிதமான நாகரீக வளர்ச்சியைக் கொண்டே ஐரோப்பியர்கள் மதிப்பிடவேண்டும். அதிகாரமுடைய அரசுகள் தங்களுக்குள் சண்டையிட்டு கொள்வதை நிறுத்த வேண்டும். மேலும் ஒருங்கிணைந்த கூட்டமாய் நிற்கவேண்டும். அவர்கள் மனதில் கொள்ள வேண்டியது - கிழக்கில் இருக்கும் நூற்றுக்கணக்கான ஆயிரமாயிரம் மக்கள், அமைதியான சுறுசுறுப்பான கடின உழைப்பாளிகளான இவர்கள் நமது போட்டியாளர்களாக இருப்பார்கள் என்பதே."

கிழக்கத்திய போட்டிகளை குறித்து பிரிட்டிஷ் கவுன்சில் ஜெனரலான திரு. ஜார்ஜ் ஜமெய்சன் சீனாவின் ஷாங்காயி-ருந்து எழுதும் போது, வெள்ளியானது புழக்கத்தி-ருந்து

விலக்கப்பட்டதினாலும், அதன் மதிப்பு குறைந்து போனதாலும் அதற்குப் பதிலாக நாகரீக வளர்ச்சி பெற்ற நாடுகளில் தங்கமானது நாணய மதிப்பிற்கு உபயோகப்படுவதாலும், இதுவும் கூட ஊதியத்தையும், முதலீட்டையும் கட்டுப்படுத்தும் மற்றொரு காரணியாக இருக்கிறது என்கிறார். மேலும் அவர் கூறுவதாவது :

"வெள்ளியின் மதிப்போடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தொடர்ந்து தங்கத்தின் மதிப்பானது உயர்ந்துகொண்டே போகிறது. இதனால் எல்லாவற்றிலுமே மாற்றம் வருகிறது. பிரிட்டிஷ் பொருட்களினால் கிழக்கத்திய நாடுகள் வெள்ளியின் உதவியைக் கொண்டு தங்களுக்கு நல்ல இலாபத்தை ஈட்டிக் கொள்ளும்படி தள்ளப்பட்டிருப்பதோடு, வெள்ளியின் மதிப்பீடு குறைந்து போனதால் தங்களுக்குத் தேவையானதை மட்டும் உற்பத்தி செய்யாமல், லாபத்தை முன்னிட்டு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு உற்பத்தி பெருகிவிட்டது. தங்கத்தின் விலையேற்றத்தினால் பிரிட்டிஷ் பொருட்களின் மதிப்பு வெள்ளியின் மதிப்பில் கிழக்கே இரண்டு மடங்காக பெருகி விட்டது. மேலும் அதன் உபயோகமும் பெரும்பாலும் தடை செய்யப்பட்டது. வெள்ளியின் மதிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டதால் கிழக்கத்திய சரக்குகளின் விலை தங்கத்தை உபயோகிக்கும் நாடுகளில் தங்கத்தின் விலைக்கு பாதிக்கும் மேலாக உயர்ந்துவிட்ட சூழ்நிலையில் அவர்களது பொருட்களுக்கு தொடர்ந்து மேலும் மேலும் அதிகமான தேவை வளர்ந்து வரவும் செய்தது. அதுமட்டுமன்றி இந்த போராட்டத்தை மேலும் தொடர்ந்து தாக்குபிடிக்க இயலாத அளவிற்கு மிகவும் சரிசமமற்றதொரு நிலைமை இருந்து வருகிறது. தன்னோடு போட்டியிடுபவனுக்கு பாதிதூர ஓட்டத்தை விட்டுக் கொடுத்து விடுவதைப் போன்றதொரு கையாலாகதத்தனம் போல் தோன்றுகிறது.

"இந்தக் கிழக்கத்தியரோடு கூட ஐரோப்பியர்கள் வெளியரங்கமான போட்டியில் நிற்க முடியாமல் போவது அமெரிக்காவில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. சீனர்கள் தங்களது மிகவும் குறைவான வருமானத்தில், மிகவும் கடின உழைப்பில் எந்தவொரு நாட்டுடனும் ஒப்பிட முடியாத சிறப்புடன் இருப்பதைப் பார்த்தால், ஐரோப்பாவின் தொழிலாளிகள் இந்த நிலைமையில் வைக்கப்பட்டால் பட்டினி கிடப்பார்கள் அல்லது துரத்தப்பட்டு விடுவார்கள். ஆனால் அமெரிக்காவைப் போல் தொழிலாளிகளால் ஐரோப்பாவில் நெருக்கடி இல்லை. (அவர்களுக்கு ஐரோப்பிய தொழிலாளிகளின் விலையும், தங்களுக்கு எவ்வளவு கொடுக்கப்படும் என்றும் புரிந்து கொள்ளவும் முடியும்) ஆனால் அவர்களுக்கு இருந்த அச்சம் எல்லாம் கிழக்கத்திய ஊதியத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளே. இந்த கிழக்கத்திய தொழிலாளியை பணிக்கு அமர்த்திக் கொள்ள மறுப்பது சுலபம். ஆனால் அவர்களது பொருளை வாங்க மறுப்பது கடினம். ஏனெனில் முக்கியமாக அவர்கள் தங்கள் தரத்தை உயர்த்தி, விலையை குறைத்திருக்கிறார்கள். அந்த பொருளை வாங்க வேண்டும் என்ற ஒரு தூண்டுதல் அதிகரிக்கிறது. ஏனெனில் பிரிட்டிஷ் தொழிலாளியின் வருமானம் குறைந்து வருகிறது. இப்படிச் செய்ய இவன் இயல்பாகவே இசைகிறான். மேலும் நல்ல மதிப்புள்ள தன் சொந்தத் தயாரிப்புகளையே வாங்குவது குறைந்து போகிறது. நல்ல நிலையில் உள்ள நாடுகளின் நிலைமை சற்று மேலானதாய் இருக்கிறது. கிழக்கத்திய சரக்குகளின் மேல் வரியை சுமத்தி அதன் நிமித்தம் சந்தையில் இவர்களது பொருட்கள் குவிவதை தடுக்க இயலும். ஆனால் தனது திறந்த வியாபாரத்தில் இங்கிலாந்திற்கு தற்காப்பு இல்லாமல் போனது மட்டுமன்றி தீவிரமான பாரமும் அதன் தொழிலாளிகள் மீது விழும். தீமையானது மிகவும் பெருகும். தங்கத்தின் விலை வெள்ளியோடு ஒப்பிடும் போது அதன் மதிப்பு கூடக்கூட ஆங்கிலேயரது பொருட்களும் ஒரு சதவிகிதம் கிழக்கே கூடிக்கொண்டே போனது. தங்கத்தை உபயோகிக்கும் நாடுகளில் கிழக்கத்திய சரக்குகளின் விலை வெள்ளியின் விலை குறையக்குறைய ஒரு சதவிகிதம் குறைந்து கொண்டே வந்தது. இந்த புதிய தொழில்கள் ஜப்பானில் மிகவேகமாய் வளர்ந்து வருகின்றது. அங்கு செய்யக்கூடியவை யாவும் சீனாவிலும் இந்தியாவிலும், பிற இடங்களிலும் செய்யப்படக்கூடும். உலகத்தின் பணமதிப்பின் முறைமையில் ஒரு மாற்றத்தை சீக்கிரமே கொண்டு வரவில்லையெனில் கிழக்கத்திய நாடுகள் ஒரு நிலையை எட்டிப்பிடித்தபின் நிரந்தரமாய் உயர்ந்த நிலையிலேயே தங்கிவிட வாய்ப்புண்டு. அப்போது உலகெங்கும் அவர்களது உற்பத்தி பொருட்கள் வியாபித்து பிரிட்டிஷ் தொழிலை

நாசப்படுத்துவதுடன், ஆயிரமாயிரம் தொழிலாளர்களுக்கு சொல்லமுடியாத பேரழிவை ஏற்படுத்திவிடும்."

திரு.லேஃகார்டிலோ ஹேர்ன் என்பவர் ஜப்பானில் பல வருடங்களாக ஆசிரியராக இருந்தவர், (அக்டோபர் 1895) அட்லாண்டிக் மந்தி- (Atlantic Monthly) என்ற பத்திரிக்கையில் ஒரு குறிப்பை எழுதியிருந்தார். அதில் ஜப்பானியரின் போட்டியில் ஏன் இத்தனை கடுமை என்றும், ஏழைகள் தங்களது வசதிக்கேற்ப பிற இடங்களுக்கு சென்று வாழலாம், இதற்கு ஒன்றும் அதிக செலவு இருக்காது என்றும் குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறுவது : ஜப்பானில் பெரும்பாலான வீடுகள் மண், மூங்கில், பேப்பரால் செய்யப்பட்டவை. இவைகளை 5 நாட்களில் கட்டிவிடலாம். தேவைப்படும் போதெல்லாம் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டே அதன் உரிமையாளர் வேறு இடத்திற்கு மாற்றலாகிப் போக விரும்பும்வரை இருக்கலாம். பிரபுக்களின் காலத்தில் கட்டப்பட்ட சில பெரியபெரிய கோட்டைகளைத் தவிர ஜப்பானில் உண்மையில் பெரிய கட்டடங்கள் ஏதுமில்லை. ஜப்பானிய நவீன தொழிற்சாலைகள் தங்கள் வியாபாரத்தை எவ்வளவு விரிவு படுத்தினாலும், அவர்களது தயாரிப்புகள் எவ்வளவு நேர்த்தியும் விலை உயர்ந்ததுமாய் இருந்தாலும், தங்களது சிறுசிறு குடில்களையும், கோயில்களையும், தங்களது மறக்கப்படாத பண்பாட்டின் சின்னமாக போற்றுகிறார்கள். ஒவ்வொரு 20 வருட இடைவெளியிலும் யாத்திரீகர்களுக்கு அதை பகிர்ந்தளித்து விடுகிறார்கள். எந்த ஒரு ஜப்பானிய தொழிலாளியும் ஒரே இடத்தில் நிலைத்திருப்பதில்லை அல்லது நிலைத்திருப்பதை விரும்புவதும் இல்லை. ஒருவேளை தன் குடியிருப்பை வேறொரு இடத்திற்கு மாற்றும்படியான காரணம் ஏற்படுமேயாகில் - பேப்பரும் மண்ணும் கலந்த தனது கற்பனை வளம் பொருந்திய குடிசையை கலைத்துவிட்டு தனது உடைமைகளை கட்டி தனது தோள்மீது வைத்துக் கொண்டு தன் மனைவியையும் குடும்பத்தையும் தன்னை தொடர்ந்து வரும்படி கூறி, தனது தளர்ந்த மெதுவான காலடியை வைத்து, வெகுதூரம் சென்று விடுவதைக் குறித்து மனதில் பாரம் கொள்ளாமல் ஏறக்குறைய 500 மைல்களை கடந்து வெறும் 1.22 டாலர் செலவில் புதிய இடத்தை அடைந்து மீண்டும் வெகுசில ஷில்-ங் செலவில்



உடனடியாய் ஒரு குடிசையைக் கட்டிக்கொண்டு அந்த இடத்தில் சடுதியாய் ஒரு மதிப்பிற்குரிய பொறுப்புமிக்க குடிமகனாய் மறுபடியும் வாழத் தொடங்கிவிடுவான். மேலும் திரு. ஹெர்ன் கூறுகிறார்:

"இப்படியாய் ஜப்பானியர் யாவருமே இதே விதத்தில் இடம்விட்டு இடம் நகருவதிலேயேயும், மாற்றத்திலேயும் ஜப்பானியருடைய நாகரீக வளர்ச்சியின் அசாதாரண புத்திகூர்மை இருக்கிறது. உலகின் மாபெரும் தொழில் போராட்டத்தினிடையே ஜப்பானியரின் இந்த இடமாற்றம் செய்யக்கூடிய மனநிலை ஒரு வெற்றியின் இரகசியமாக இருக்கிறது. எந்த ஒரு தொழிலாளியும் தனது உழைப்பு தேவைப்படும் இடத்திற்கு எந்தவித மனவருத்தமும் இன்றி உடனே தன் இருப்பிடத்தை மாற்றிக் கொள்ள தயாராக இருக்கிறான். ஒரு தொழிற்சாலையையே ஒரு வார அறிவிப்பில் மாற்றிவிடலாம். அரை நாளில் தொழில் நிபுணர்களும் இடம் மாறிவிடுவர். பொருட்களை இடம்மாற்றி சுமந்து செல்ல எந்த இடையூறும் கிடையாது. கட்டிடவேலை என்பதும் அந்த அளவிற்குக் கடினமானதும் இல்லை. மிகச்சிறிய பணச்செலவே ஏற்படும். ஆகையால் பிரயாணத்திற்கு எந்தத் தடையும் இல்லை.

"ஜப்பானிய மக்கள் கைதேர்ந்த தொழிலாளர்கள். மேற்கத்திய நிபுணர்களைக் காட்டிலும் குறைந்த விலையில் எந்த விசேஷ முயற்சியும் இன்றி அதே துறையில் சந்தோஷமாய், சுதந்திரமாய் வேலை செய்கின்றனர். தைப்பவர்களும் செருப்புத் தொழிலாளிகளும் இதில் அடக்கம். அவர்களது உடல்நலம் நன்றாக இருக்கிறது. வேலைசெய்ய அவர்களது கைகால்களும் நன்றாக இருக்கின்றன. மனதிலும் எந்த பாரமும் இன்றி இருக்கிறான். ஆயிரம் மைல் தூரமாய் பிரயாணித்து வாழ நினைத்தாலும் ஐந்து நிமிடத்தில் தேவையான ஏற்பாடுகளுடனும் உடனே புறப்பட்டுவிட முடியும். அவரது மொத்த உடமைகளின் மதிப்பு எழுபத்தைந்து சென்ட்டுக்கும் அதிகம் இருக்காது. அவரது மூட்டைமுடிச்சுகள் ஒரு கைகுட்டைக்குள்ளேயே அடங்கிவிடும். பத்து டாலர் இருந்து விட்டால், வேலையே இல்லாவிட்டாலும் ஒரு வருடம் அவனால் பிரயாணிக்க இயலும். தன்னால் முடிந்த வேலையை செய்தும் சமாளிக்கலாம்.

இல்லாவிட்டால் புனித பயணமும் மேற்கொள்ளலாம். எந்த நாடோடியும் இப்படி செய்யக்கூடும் என்று நீங்கள் கூறலாம். ஆம், ஆனால் நாகரீகம் அடைந்த யாரும் இதை செய்ய இயலாது. ஆனால் குறைந்தது ஆயிரம் வருட நாகரீக மேம்பாட்டை உடையவர்கள் இந்த ஜப்பானியர். ஆகவே தற்போது மேற்கத்திய உற்பத்தியாளர்களை மிரட்டும் அளவிற்கு இவர்கள் இருக்கின்றனர்."

மேற்கூறியவற்றை குறித்து லண்டன் ஸ்பெக்டேட்டர் கூறுவதாவது:

"இது மிகவும் குறிப்பிடத் தகுந்த ஒரு காரியமே, எப்போதும் போல இந்த கருத்திலும் நாங்கள் மறுப்பு கூறமுடியாமல் இருக்கிறோம். ஏனெனில் ஜப்பானியரின் போட்டியானது மிகவும் எதிர்க்க முடியாததாக இருக்கிறது. இது இப்படியே தொடருமானால் ஐரோப்பிய தொழில் வளர்ச்சியை ஆழமாய் இது பாதித்துவிடக்கூடும்."

-ட்ரரி டைஜஸ்டின் (Litrary Digest) படி போட்டியின் தன்மையானது கூடிய விரைவிலேயே கீழ்க்கண்ட விதத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. கீழ்க்கண்ட தலைப்பில் வெளி வந்தவை :

**"ஜப்பானில் தொழிலாளியின் நிலைமை"**

"ஜப்பான் தனது தொழில் வளர்ச்சியில் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. அநேக சமயம் பதினான்கு மணி நேரம் கூட எந்த முறுமுறுப்பும் இன்றி கடுமையாக உழைக்கக்கூடிய திறமையான தொழிலாளிகள் இந்த முன்னேற்றத்தில் பெரிய பங்கை வகிக்கின்றனர். துரதிருஷ்டவசமாய் அவர்களது முதலாளிகள் அதற்குரிய மதிப்பை அளிக்காமல் வெளிநாட்டு தொழில் போட்டியை மட்டுமே கண்முன் வைத்திருக்கின்றனர். முக்கியமாய் பருத்தி உற்பத்தியில் இது மிகவும் அதிகமாய் காணப்படுகிறது. இதில் ஏராளமானோர் அமர்த்தப்படுகின்றனர். 'எக்கோ' என்ற பெர்-ன் பத்திரிக்கையில் ஜப்பானிய தொழிற்சாலைகள் எப்படி இயங்குகின்றன என்பதை பற்றி ஒரு செய்தி கீழ்கண்டவாறு கூறுகிறது:

"காலையில் வேலை தொடங்கும் நேரம் 6 மணி. ஆனால்



தொழிலாளிகள் எந்த நேரமும் வேலை செய்யத் தயாராய் இருப்பதால் காலை 4 மணிக்கே கூட அவர்கள் தயாராக இருக்கின்றனர். கூ-யோ அதிசயிக்கத்தக்க விதத்தில் மிகமிகக் குறைவே; மிகப்பெரிய நூற்பு ஆலைகளில் கூட நூற்பவருக்கும் தறிபோடுபவருக்கும் ஒரு நாளைக்கு பதினைந்து சென்ட்டுகளே கூ-; பெண்களுக்கோ ஆறு சென்ட்தான் கொடுக்கப்படும். முதன்முத-ல் தொழிற்சாலைகளை அரசாங்கமே கட்டியது. பிற்பாடு பங்கு நிறுவனங்களால் இவை நிர்மாணிக்கப்பட்டன. பருத்தி பொருட்கள் உற்பத்தியே மிகவும் இலாபகரமானதொரு தொழிலாகும். கானேகாபுச்சி என்ற ஒரேயொரு ஸ்தாபனம் 2100 ஆண்களையும் 3700 பெண்களையும் வேலைக்கு அமர்த்தி உள்ளது. இவர்கள் பகல் பணி, இரவு பணி என இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு பன்னிரெண்டு மணி நேரம் உழைப்பார்கள். இதில் நாற்பது நிமிட இடைவேளை மட்டுமே கிடைக்கும். அதுவும் சாப்பிடுவதற்காக மட்டுமே. இந்த தொழிற்சாலைகளின் அருகிலேயே உணவு விடுதிகளில் ஒன்றரை சென்ட் விலையில் உணவு கிடைக்கும். ஓசாகா நூற்பாலையை சேர்ந்தவர்களும் இப்படித்தான். இந்நிறுவனங்களிளெல்லாம் மிகவும் சிறந்த பிரிட்டிஷ் இயந்திரங்கள் பொறுத்தப் பட்டிருக்கின்றன. இரவும் பகலும் ஒய்வில்லாமல் வேலை செய்யும், மிகப்பெரிய அளவிற்கு இலாபம் பெறப்படுகிறது. அநேக தொழிற்சாலைகள் தங்களுக்கு வேண்டிய உதிரிபாகங்களுக்கென கிளைகளை ஆரம்பிக்கின்றன. அல்லது இருக்கின்ற முதன்மை தொழிலகத்தை விரிவுபடுத்தி வருகின்றன. அப்படியும் கூட நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை.

"மேலும் ம-வான கூ-யைக் கொடுத்து, அதிகப்படியான பெண் ஊழியரை, ஆண்களுக்கு போட்டியாக இந்த உற்பத்தியாளர்கள் அமர்த்திக் கொள்ள விரைவிலேயே கற்றுக்கொண்டனர். ஆகவே புள்ளி விவரப்படி 35 நூற்பாலைகளில் 16,879 பெண்களும், 5,730 ஆண்களும் இருக்கின்றனர். தொழில் முதலீட்டாளர்கள் மிகவும் வ-மையான சங்கங்களை நிறுவி, அடிக்கடி அதன் அதிகாரிகளுடைய தாராளத்தன்மையைத் தவறாக பயன்படுத்துகின்றனர். அதிகாரிகளுக்கு இந்த தொழி-ல் முடக்கம்

வருவதில் விருப்பமில்லை. எட்டு அல்லது ஒன்பது வயதுள்ள பெண்குழந்தைகள் கூட ஒன்பதி-ருந்து பன்னிரெண்டு மணிநேரம் வேலை செய்யும்படி கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். சட்டப்படி இந்த பிள்ளைகள் பள்ளியில் இருக்க வேண்டியவர்கள். இதை ஆசிரியர்கள் மிகவும் கண்டிக்கின்றனர்; ஆனால் இந்த கண்டனத்துக்கெல்லாம் உயர் அதிகாரிகள் தங்கள் கண்களை மூடிக்கொள்கின்றனர். மிகவும் கீழ்ப்படிதலான, தாழ்மையான தொழிலாளரது பண்பானது மற்றுமொரு வழக்கத்துக்கும் வழிகாட்டியது. அதாவது இவர்களை முதலாளிகள் முற்றிலும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டனர். எந்த ஒரு புதிய நிறுவனமும் ஒரு தொழிலாளியை அவன் வேலை செய்து வந்த நிறுவனத்தின் விடுதலை கடிதம் இன்றி சேர்த்துக் கொள்ளாது. இந்த சட்டமானது மிகவும் கடுமையாய் நடைமுறைப்படுத்தப்பட்டது. புதியவர் ஒருவர் வேலைக்கு சேர்ந்தால் அவரை மிகவும் உன்னிப்பாய் கவனித்து, அவருக்கு ஏற்கெனவே அனுபவம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவரிடம் விடுதலை கடிதம் இல்லையென்றால் உடனடியாய் அவரை வேலையி-ருந்து நீக்கி விடுவார்."

அடிலெய்ட் (ஆஸ்திரே-யா) அப்சர்வர் என்ற பத்திரிக்கையின் நிரூபரின் கடிதத்தி-ருந்து பிரிட்டிஷ் டிரேட் ஜோர்னலானது ஒசாகா தொழிற்சாலைகளைக் குறித்து ஒரு அறிக்கை வெளியிட்டது. ஒசாகாவில் இருந்து நேரடியாய் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. இங்குள்ள நகரின் பல்வேறு முக்கியமான தொழில்களைக் கண்டு மிகவும் உந்தப்பட்டு அதைக் "கிழக்கத்திய மான்செஸ்டர்" என்று குறிப்பிட்டு எழுதுகிறார்.

"ஒசாகாவின் தொழிற்சாலைகளை குறித்து நாம் அறிந்தது கணக்கற்ற தொழிற்சாலைகள் இங்கு உண்டு என்பது, இவைகளின் முதலீடு 50,000 யென்னுக்கும் குறைவே; 30க்கும் அதிகமானவைகளின் முதலீடு 100,000 யென்னும், 4 தொழிற்சாலைகளின் முதலீடு 1,000,000 யென்னும், ஒன்று மட்டும் 2,000,000 யென் முதலீடு உடையவனவாக இருக்கின்றன. இவைகளில் பட்டு, கம்பளி, பருத்தி, சணல், நார் நூற்பாலைகளும், தறிகளும், தரைவிரிப்பு தறிகளும், தீப்பெட்டி, காகிதம், தோல், கண்ணாடி, செங்கல், சிமெண்ட், கத்தி, தட்டுமுட்டு சாமான்களும், குடைகள், தேநீர், சர்க்கரை, இரும்பு, செம்பு, வெண்கலம், அரிசியி-ருந்து தயாரிக்கப்படும் ஒருவகை போதை பானம், சோப்பு, தூரிகைகள், சீப்பு, நாகரீக அணிகலன்கள் போன்றவை அடங்கும். உண்மையில் இது ஒரு உற்பத்தி, செயல்பாடுகளின் சுறுசுறுப்பான கூட்டமே, இங்கு பிறரிடமிருந்து கற்றுத் தேர்ந்த நிபுணர்களும், ஜப்பானின் தலைசிறந்த நபர்களும் தங்களை மேற்கத்திய பழங்கால நாகரீக வளர்ச்சியின் நிபுணர்களுக்கும் பணியாளர்களுக்கும் இணையாக, அதற்கும் மேலாக உயர்த்திக் கொண்டிருக்கின்றனர்.



"ஒசாகாவில் பத்து பருத்தி தொழிற்சாலைகள் உண்டு.இதன் மதிப்பு தங்கத்தின் மதிப்பில் 9,000,000 டாலர். இவைகளில் அதிநவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டு முற்றிலும் மின்சாரத்தால் இயங்குபவை. முதலீடு செய்யப்பட்ட தொகைக்கு பதினெட்டு சதவிகிதத்திற்கும் அதிகமாய் லாபம் ஈட்டும் விதத்தில் இயங்குகின்றன. ஒரு வருடத்தில் ஜப்பானுக்குள் இறக்குமதி செய்யப்படும் 19,000,000 டாலர் மதிப்புள்ள பருத்தியில் 79% கோபே மற்றும் ஒசாகா ஆலைகளில் உபயோகிக்கப்படுகின்றன."

தற்போது ஒரு வெள்ளி யென் என்பதின் மதிப்பு தங்கத்தில் 50 சென்ட்டுகள் ஆகும்.

கீழ்க்கண்டதொரு தந்தி பொது அச்சுக்கு கொடுக்கப்பட்டது. அதை காணவும்.

"சன்பிரான்சிஸ்கோ, க-போர்னியா, ஜீன் 6 கனம் ராபர்ட் P. போர்ட்டர் என்ற கிளவ் லேண்ட் வோல்ட் (Cleveland world) ஆசிரியரும், 1890ல் அமெரிக்க கணக்கெடுப்பின் மேலதிகாரியுமானவர் நேற்று "பெரு" என்ற கப்ப-ல் ஜப்பானி-ருந்து வந்திறங்கினார். திரு. போர்ட்டர் அவர்கள் மிக்காடோவின் பேரரசரைச் சந்தித்து அமெரிக்க வளர்ச்சியோடு ஜப்பானின் போட்டியைக் குறித்து விசாரிக்கும் நோக்குடன் அங்கு சென்றிருந்தார். ஜப்பானின் உண்மை நிலையை மிகவும் கவனமாய் ஆராய்ந்ததில், அமெரிக்கா மிகவும் கவனத்துடன் தீர்க்கவேண்டியதொரு அவசியமான பிரச்சனை இது என்று தனது

கருத்தைத் தெரிவிக்கிறார். இந்த பேராபத்து மிகவும் நெருங்கிவிட்டது. இது கடந்த ஐந்து வருட காலத்தில் பயங்கரமாக பெருகிவிட்டிருக்கும் ஜப்பானின் உற்பத்திப் பொருட்களும் அவர்களது ம-வான திறமையான உழைப்புமே ஆகும். ஆடை ஏற்றுமதி ஜப்பானில் கடந்த பத்து வருடத்தில் 511, 000 டாலரி-ருந்து 23,000,000 டாலருக்கு உயர்ந்துவிட்டது. அதே இடைவெளியில் ஜப்பானின் மொத்த உற்பத்தியானது 78,000,000 டாலரி-ருந்து 300,000,000 டாலருக்கு உயர்ந்துவிட்டது என்கிறார். ஜப்பான் கடந்த வருடம் 2,500,000 டாலர் மதிப்புள்ள பருத்தியை இறக்குமதி செய்தது. ஆனால் நாமோ ஜப்பானின் பல்வேறு உற்பத்தி பொருட்களை 54,000,000 டாலர் அளவிற்கு வாங்கியிருக்கிறோம்.

"படுவேகமான அபிவிருத்தியைக் குறித்து விளக்கும் விதத்தில் அவர் தீப்பெட்டித் தொழிலைப் பற்றி கூறுகிறார். ஜப்பானில் பத்து வருடங்களுக்கு முன் 60,000 டாலர் பெருமானமுள்ள தீக்குச்சியான முக்கியமாய் வீட்டு உபயோகத்துக்கு உற்பத்தி செய்யப்பட்டது. சென்ற வருடம் அதன் மொத்த உற்பத்தி 4,700,000 டாலர், பெரும்பாலும் இவை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அதே போல் பத்து வருடங்களுக்கு முன் கம்பளி விரிப்புகள், பாய் போன்ற ஜமுக்காளம் 885 டாலர் மதிப்பிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்த வருடம் இதே பொருட்கள் 7,000,000 டாலர் அளவிற்கு பெருகிவிட்டன. உலகிலேயே மிகவும் சாந்தமான தொழிலாளிகளும் நவீன இயந்திரங்களும் ஒருங்கிணைந்தே இந்த வளர்ச்சி ஜப்பானில் சாத்தியமானது. இவர்களுக்கு "தொழிற்சட்டம்" என்று எதுவும் கிடையாது. எந்த வயதிலும் குழந்தைகளை வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம். அமெரிக்க சென்ட் ஒன்றோ (அ) இரண்டோ மதிப்புள்ள மிகக் குறைந்த வருமானத்திற்கு ஏழு, எட்டு மற்றும் ஒன்பது வயதுடைய குழந்தைகள் ஒரு நாள் முழுவதும் வேலை செய்வார்கள்.

"மேலும் நமது பருத்திக்கு அங்கிருக்கும் கிராக்கியைப் பார்த்து நமக்கு அவர்கள் ஏற்றுமதி செய்யும் அளவையும் கணக்கிட்டு, நான் அங்கு இருக்கும் போது 5,000,000 டாலர் முதலீட்டில் ஒரு



ஸ்தாபனத்தை அமைத்தனர். இதன்மூலம் 3 புதிய நீராவி கப்பல்களை கட்டி நமது நாட்டிற்கும் அவர்களது நாட்டிற்கும் இடையே வியாபாரத்தை நடத்த திட்டமிட்டனர். இதற்கென போர்ட்லேண்ட், ஒரிகான், பிலடெல்பியா மற்றும் நியூயார்க் துறைமுகங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன."

இந்த நீராவி கப்பல்களை கட்டும் பணிக்காக திரு. போர்ட்டர் அவர்களுடனேயே பிரயாணித்து வந்திருக்கும் திரு.எஸ்.ஆஸம் என்ற பிரதிநிதியை ஒரு நிருபர் பேட்டி கண்டார். இந்த பிரதிநிதியின் பேட்டியைக் குறித்துக் கூறும்போது ஜப்பானிய அரசாங்கம் சமீபத்தில் 6,000 டன் திறனுள்ள அமெரிக்க-ஜப்பான் நாடுகளிடையே சரக்கு கப்பல் போக்குவரத்தில் மிகப்பெரிய மானியத்தை அறிவித்திருக்கிறது. ஆகவே அவர்களது சின்டிகேட்டானது இந்த சலுகையை உபயோகித்துக் கொள்ளும் நோக்குடன் 9000 டன்னுக்கும் அதிகமான திறனுள்ள கப்பல்களைக் கட்டத் திட்டமிட்டிருப்பதாகக் கூறினார். இந்த சின்டிகேட் மிகவும் பெரிய அளவில் வியாபாரத்தை செய்யத் திட்டமிட்டிருப்பதுடன் இதன் விளைவாக சரக்கு மற்றும் பிரயாணிகளின் கட்டணத்தையும் வெகுவாக குறைக்கவும் கூடத் திட்டமிட்டிருக்கின்றனர். ஜப்பானுக்கும் பசிபிக் கடற்கரைக்கும் இடையே பிரயாணிக்க ஒருவருக்கு வெறும் 9 டாலர்களே வசூ-க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## அமெரிக்க ஐக்கிய நாடு ஜப்பானின் போட்டியை ஆராய்கிறது

கீழ்க்கண்ட பகுதியானது அமெரிக்க நாட்டின் காங்கிரஸ் கமிட்டியின் அறிக்கையி-ருந்து எடுக்கப்பட்டது. ஆகவே இது கேள்விகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட நம்பகமான ஒரு அறிக்கையாகவும் கவனிக்க வேண்டிய ஒன்றாகவும் இருக்கிறது:

"1896 ஜூன் 9 வாஷிங்டன் - சேர்மன் டிங்கிளி என்பவர் இந்த குழுவின் சார்பில் அமெரிக்க உற்பத்திக்கு எதிர்வரும் பயங்கரமானதொரு அச்சுறுத்தலைக் குறித்து ஒரு அறிக்கை வெளியிட்டார். கிழக்கத்திய நாடுகளின் ம-வான உற்பத்தி பொருட்களினாலும், உழைப்பினாலும் மட்டுமன்றி தங்கத்தையும் வெள்ளியையும் மதிப்பிட்டு மாற்றப்படும் நாடுகளினால் அமெரிக்க

ஐக்கிய நாட்டின் உற்பத்தி மற்றும் விளைபொருட்கள் பாதிக்கப்படுகிறது. அதை குறித்த பிரச்சனைகளை கமிட்டி ஆராய ஆரம்பித்தது.

"அந்த அறிக்கை ஜப்பானின் திடீர் விழிப்புணர்ச்சியைத் தொடர்ந்து, அதற்கு சமமாய் தீவிரமான அதனுடைய தொழில் முறைமைகளில் மேற்கத்திய முறைமைகளையும் அறிமுகப்படுத்தியிருக்கிறது என்று கூறுகிறது; மட்டுமன்றி இவர்கள் அமெரிக்க பேராசிரியர்களைப் போல் புதிய கண்டுபிடிப்புகளில் வல்லுனர்களாக இல்லாதபோதும் அந்த கண்டுபிடிப்புகளைப் போலவே காப்பியடித்துத் தயாரிப்பதில் மிகவும் திறமைசா-களாக இருக்கின்றனர். அவர்களது சராசரி வேலை நேரம் ஒரு நாளைக்கு 12 மணி நேரம். மேலும் மிகவும் தொழில் திறமைபடைத்த கருமான், தச்சர், கட்டடபணியாளர், ஒருங்கிணைப்பாளர், தையல் தொழிலாளர், பூச்சுவேலை செய்பவர் ஆகியவர் ஜப்பானில் வெறும் 26-33 சென்ட் ஊதியமும், இயந்திர பணியாளர்கள் தொழிற்சாலைகளில் ஒரு நாளைக்கு 5-20 செண்டுகளும் நமது பண விகிதத்தில் பெருகின்றனர். இது ஜப்பானின் வெள்ளி மதிப்பில் 2 மடங்காகிறது; பண்ணை தொழிலாளருக்கு மாதம் 1.44 டாலர் கிடைக்கிறது.

"மேலும் அமெரிக்கரும், ஐரோப்பியரும் முதலீட்டுக்கும் தொழிற்சாலைகளுக்கும் வழிகாட்டும் லாபகரமான வழியையே கண்டிருந்தனர். 61 பருத்தி ஆலைகள் ஜப்பானிய கம்பெனிகளால் கட்டுப்படுத்தப்படுவது போல் ஒரு போ-யான தோற்றம் இருக்கின்றது; ஆனால் இவை யாவும் ஐரோப்பியரால் விருத்தி செய்யப்பட்டவையே; மேலும் அநேக சிறுசிறு பட்டு தொழிற்சாலைகள் இயக்கத்தில் இருக்கின்றன; அரை மில்-யனுக்கும் அதிகமான நூற்பு தண்டுகளும் இருக்கின்றன. ஜப்பானானது பெரும்பாலும் தன்னுடைய சொந்த ஜனங்களுடைய அவசியத்துக்கே பெரும்பாலான பருத்திப் பொருட்களை தயாரிக்கின்றது. ம-வான பட்டுத் துணிகளையும், கைக்குட்டைகளையும் ஏற்றுமதி செய்யத் தொடங்குகிறது.

"சமீபத்தில் அமெரிக்க இயந்திரங்களுடன் அமெரிக்கரால் நிறுவப்பட்ட வாட்ச் கம்பெனி ஒன்று திறக்கப்பட்டது. ஆனால் சரக்குகளின் கையிருப்பானது என்னவோ ஜப்பானியரின் பேரில் இருந்தது. ஏனெனில் 1899 வரை தங்களது சொந்தப் பெயரில் வெளிநாட்டவர் எவரும் தயாரிப்புகளை தொடங்குவதற்கு சட்டம் அனுமதிக்கவில்லை. அதனுடைய முன்னேற்றத்தைப் பார்க்கும் போது அந்த தொழில் வெற்றிபெறும் என்பதில் சந்தேகமில்லை.



"வெகுசில வருடங்களுக்குள்ளாகவே ஜப்பானில் அதிவேகமாகப் புதிய இயந்திரங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் அவர்களால் மெல்-ய பருத்தி, பட்டு பொருட்களையும் பிற பொருட்களையும் தயாரிக்க முடியும். இவைகளுக்கெல்லாம் நம் நாட்டில் செய்கூ-யின் செலவே அதிகமாகப் பிடிக்கும். இந்தப் பொருட்களுக்கு நம் நாட்டில் கிரேட் பிரிட்டன், பிரான்சு, ஜெர்மெனி போன்ற நாடுகளின் பொருட்களைக் காட்டிலும் அதிக போட்டியிருக்கிறது.

"மேலும் திரு. டிங்கிளியை பொருத்தவரை ஐரோப்பியரின் போட்டியைப் பார்க்கிலும் இங்கு அதன் தரத்திற்கு போட்டி அதிகமாக இருக்கும். இதற்கு எந்த மாற்றுவழியும் கிடையாது என்று இந்த குழுவிற்கு நன்றாகவே தெரியும். மிகவும் அத்தியாவசிய பொருட்களின் மீது திணிக்கப்பட்ட கடுமையான தடையை மிஞ்சுவதற்கு மிகவும் போட்டியுள்ள பொருட்களை அதற்குச் சமமான விலையில் விநியோகிக்கும் அளவிற்கு கூடுதலாய் உழைத்து சமன் செய்யவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. இந்தக் கொள்கைக்கு ஒரு நியாயவாதம் வைக்கப்பட்டது. இதன்படி அரசாங்கத்தை ஆதரிக்கும் பொருட்டு வரி வசூ-க்கப்பட வேண்டும் என்றும் நமது அதிக கூ-யை ஆதாரமாக வைத்து நமது சந்தையில் போட்டியை வைப்பது என்றும் சொல்லப்பட்டது. இந்த முறையானது வெளிநாட்டு உற்பத்திகளை காட்டிலும் உள்நாட்டு உற்பத்தியினால் கிடைக்கும் பலனானது நாட்டு மக்கள் யாவருக்கும் போய்ச் சேரவேண்டும் என்ற நோக்கத்திலேயே செயல்படுமே தவிர, இந்த நாட்டின் உற்பத்தியாளர்களின் லாபத்துக்காக அல்ல; அவர்கள் இங்கும் அங்கும் மாறுபட்ட ஊதியத்தை சமன் செய்யும்படி அதிக அவசியப்படும் போட்டியான இறக்குமதிகளின் மீது விதிக்கப்படும் வரிகளோடு கூட இங்கு அவர்கள் தங்களுக்கு வைக்கப்பட்டிருக்கும்

அதே அடிப்படையில் ஜப்பான் அல்லது இங்கிலாந்தில் செயல்பட்டு லாபம் ஈட்டிக் கொள்ள வேண்டியதுதான்."

ஜப்பான் அரசாங்கமானது வெளிநாட்டு உற்பத்தியாளர்களுக்கு எந்த பாதுகாப்பையும் அளிக்கவில்லை. நாகரீக மேம்பாடடைந்த உலகிலேயே மிகவும் மதிப்புள்ளதாகிய தொழிலாளியை குறைக்கும் இயந்திரங்களை வாங்கி, அதை ம-வான தொழிலாளிகளின் மூலம் காப்பி அடித்து பெருக்கிக் கொள்கின்றனர். இந்தத் தொழிலாளிகள் சீனர்களைப் போல காப்பியடித்து இயந்திரங்களை செய்வதில் மிகவும் கைதேர்ந்தவர்கள். ஆகவே இந்த நாட்டின் இயந்திரங்களுக்கு ஆகும் செலவு, வேறு எந்த நாட்டைக் காட்டிலும் பாதிக்கும் கீழாகவே இருக்கிறது. ஆகவே கூடிய சீக்கிரத்தில் ஜப்பான் தனது சொந்த இயந்திரங்களையோ அல்லது தனது சொந்தத் தயாரிப்பான பொருட்களையோ கிறிஸ்தவ உலகத்துக்கு விற்கும்.

சான்பிரான்சிஸ்கோ க்ரானிக்கில்ஸில் ஜப்பானியரின் போட்டி என்ற தலைப்பில் எழுதப்பட்டதாவது :

"ஜப்பானின் எதிர்காலத்தைக் குறித்துக் காட்டும் மாற்றொரு அறிகுறி மில்போர்டியி-ருந்து (Milford. Ct) ஜப்பானின் தொழில்மயமான கோபே (Kobe) என்ற இடத்திற்கு ஒரு பெரிய ஸ்ட்ரா மேட்டிங் (Straw matting) கம்பெனி மாற்றப்பட்டதாகும். ஜப்பானின் போட்டியை அலட்சியப்படுத்தி, மேற்கத்திய புத்திக்கூர்மையை சந்தோஷமாக பேசியவர்கள், ம-வான தொழிலாளர்கள் கிடைக்கக்கூடிய நாடுகளுக்கு முதலீடுகள் எளிதாய் போய் சேர்ந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையை கவனிக்க தவறி விட்டார்கள். ஆகையால் அறிவுத்திறன் மிகுந்த அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் புதிய இயந்திரங்களை முதலீடு செய்யும் முதலாளிகள் வாங்கி, அதனை மிகவும் ம-வான கூ-யில் இயக்கி, உற்பத்தி செய்யும் தொழிலாளிகள் உள்ள நாடுகளுக்கு கொண்டு செல்லவேண்டியதே தேவையான காரியமாகும்."

மேன்மைமிகு ராபர்ட் பி.போர்டர் என்பவர் இதைக் குறித்து "நார்த் அமெரிக்கன் ரெவ்யூ" வில் (North American Review) சில காலங்களுக்கு முன்பு தனது கருத்தை குறித்து எழுதும் போது,



வெளிநாட்டு பொருட்களின் மீது அமெரிக்க வரி விதிப்பினை தாங்க முடியாமல் அமெரிக்க நாட்டின் உற்பத்திகளின் மீது ஜப்பானியர் ஒரு திடீர் தாக்குதல் நடத்துகின்றனர். இதை கீழ்கண்ட காரணங்களினால் அவர்கள் செய்யவேண்டி இருக்கிறது.

(1) அவர்களது ம-வான பொறுமையான உழைப்பு.

(2) நாகரீகமடைந்த தங்க நிர்ணய நாடுகளோடு ஒப்பிடும்போது தங்களுக்குள்ள வெள்ளி நிர்ணயத்தினால் 100% லாபம் ஈட்டும் சாதகமான சூழ்நிலை, அதோடு கூட இந்த வரிச் சுமையை தாங்குவதற்கு ஏற்ற தொகையை கொடுக்கக் கூட அவர்களுக்கு சாத்தியமாக இருந்தது.

இதி-ருந்து சில முக்கிய கருத்துக்களைக் கீழே கொடுத்திருக்கிறோம் :

"ஜப்பானியரோ மறைமுகமாய் பேசி அமெரிக்கச் சந்தையில் அவர்களது பொருட்களை விரித்து வைத்து, அவர்களது திறமையையும், ம-வு விலைகளையும் காட்டி நமது உழைப்புக்கும் முதலீட்டுக்கும் சவால் விடுவதுடன் தனது கையில் நவீன சாதனங்களை வைத்துக் கொண்டு செய்கூ-யை மிச்சப்படுத்தும் யுக்தியை வைத்துக் கொண்டு தற்போதைய சூழ்நிலைக்கு எதிராக சவால் விடுகிறார்கள்."

அமெரிக்க நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பல்வேறு ஜப்பானிய பொருட்களின் பட்டியலை காண்பித்து அவர் கூறுகிறார் :

"மேற்கூறிய பட்டிய-ல் உள்ள காரியங்களைக் குறித்து ஜப்பானில் கடந்த சில மாதங்களாக அங்குள்ள தொழிற்சாலைகளையும் தொழில் நகரங்களையும் பார்வையிட்டேன். கடந்த 10 வருடங்களில் ஜப்பானின் ஆடை ஏற்றுமதி 40 மடங்கு அதிகரித்து விட்டது. ஏனெனில் அது ஒரு நெசவாளர்களின் நாடாகும்."

அமெரிக்காவிற்குள் ஜப்பானியர் ஏராளமான ம-வான பட்டுத் துணி இன்னும் ம-வான சாதனங்களையும் ஏற்றுமதி செய்கின்றனர். எப்படியெனில் அவர்களால் அதிகபட்சம் என்ன முடியுமோ அதை அவர்கள் செய்து வருகிறார்கள்.

"ஜப்பானியர் தங்களது ஒவ்வொரு ஏற்பாட்டையும்

பொதுவான நன்மையைக் கருதி கூட்டாக சேர்ந்து, தரத்தை உயர்த்துவதிலும் அவர்களது பொருட்களை ஒரேவித வடிவமைப்பு உடையதாக உற்பத்தி செய்வதிலும் கவனம் செலுத்துகின்றனர்."

மட்டுமன்றி திரு. போர்ட்டர் கூறும்போது இங்கிலாந்தின் லேன்கேஷிரின் பருத்தி ஆலைகளுக்கு தற்போது பாதுகாப்பு இல்லை. அவைகள் அழிவை நெருங்கிவிட்டது. அவர் கூறுகிறதாவது:

"மேலும் ஜப்பானில் 1889 ல் பருத்தி ஆலைகளில் வெறும் 5394 பெண்களும் 2539 ஆண்களும் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்பட்டனர். 1895ல் எந்த நாட்டிலும் இல்லாத அளவு உற்பத்தியும், இயந்திரங்களும் கொண்ட ஆலையில் 30,000 பெண்களும், 10,000 ஆண்களும் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். பருத்தி தொழி-ன் எதிர்காலம் அதாவது குறைந்தபட்சம் ஆசியாவுக்கு தேவையானதை விநியோகிக்கும்படியான நிலையில் சீனாவும், ஜப்பானும் இருக்கின்றன. இங்கிலாந்து இந்த வியாபாரத்தை பொருத்த மட்டில் அழிந்துபோனது. சிலர் நினைக்கின்ற வண்ணம் பொன் மற்றும் வெள்ளி பரிமாற்றம் எதையும் செய்து இங்கிலாந்தை காக்க முடியாது. ஷாங்காயிலும், ஒசாகாவிலும் இன்னும் அதிவேகமாய் பருத்தி ஆலைகள் உருவாகி வருகின்றன. வரப்போகும் நாட்களின் உண்மை அனுபவமே இவை இரண்டில் எது சிறந்த இடம் என்று நடைமுறையில் வெளிப்படும். நான் மிகவும் நுணுக்கமாய் உற்பத்தி செலவை ஆராய்ந்து பார்த்ததில் ஜப்பான் தான் சிறந்ததாக இருக்கும் என்பது எனது முடிவு.

"ஜப்பானியரின் போட்டியினால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று சொல்-க் கொண்டிருக்கும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு கொஞ்சம் ஆச்சரியத்தையும் வாயடைத்துப் போகும் விதத்தில் வியப்பையும் கொடுக்கும் விதத்தில் ஜப்பானியர் பருத்தி ஆலையில் செய்தது போலவே கம்பளி ஆடை உற்பத்தியிலும் இறங்கவேண்டுமா? ஆஸ்திரே-யாவி-ருந்து ம-வான விலையில் கம்பளி ரோமத்தை தொடர்ந்து பெற்று இதை சாத்தியமாக்க முடியும். மாதிரிக்காக தயாரித்திருக்கும் இந்த கம்பளி துணிகளையும் ஆடைகளையும் பார்த்த போது எனது பார்வைக்கு - பருத்தி, பட்டு ஆடைகள் துறையில் ஜப்பான் காட்டியிருக்கும் அதே நேர்த்தியான



உழைப்பு இதிலும் காண முடிந்தது. -னன் உற்பத்தி மிகவும் குறைந்த அளவே இருப்பினும் கூட இந்தத் துறையிலும் இவர்களது நேர்த்தியான வேலைப்பாடு தெரிகிறது.

"வருடத்திற்கு 2,000,000 ஜப்பானிய குடைகள் திடீரென பிரவாகம் எடுத்து அமெரிக்காவுக்கு எற்றுமதி செய்யப்படுவதை கண்டபோது அமெரிக்க நாட்டு குடை தயாரிப்பாளர்களுக்கு மிகுந்த கவலை உண்டாகிவிட்டது."

இந்த "தொழில் போரில்" ஜப்பானியர் தங்களது வெற்றி இலக்கை நெருங்கிவிட்டோம் என்று புகழ்பாடிக் கொள்வதற்கு கொஞ்சமும் தயங்கவில்லை. இதை குறித்து திரு.போர்டர் மேலும் கூறுவதாவது:

"நான் ஜப்பானில் இருக்கும்போது திரு.காணிக்கோ என்ற விவசாயம் மற்றும் வர்த்தகத் துறையின் துணை மந்திரி மற்றும் உயர் அதிகாரிகளை சந்தித்து பேசும் நல்ல சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அந்த மந்திரியானவர் புத்தி கூர்மையும், முன்னறியும் திறமையும், வர்த்தகம் மற்றும் புள்ளிவிவரங்களில் நல்ல அனுபவமும் நிறைந்தவராக இருக்கக் கண்டேன். அவர் பிரபலமான ஐரோப்பிய பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றவராக இருந்ததுடன் ஜப்பான் நாட்டின் தொழில் மற்றும் வர்த்தகத்தின் எதிர்காலத்தை குறித்த இந்த காலத்திற்கு ஏற்ற உணர்வுடையவராகவும் இருப்பதை நான் நன்கு கண்டுகொண்டேன்."

அந்த மனிதர் திரு.கானிக்கோ வர்த்தக குழுமம் ஒன்றின் கூட்டத்தில் ஒரு சொற்பொழிவை ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

"இங்கிலாந்தின் மான்செஸ்டரின் பருத்தி ஆலைப்பணியாளர்களின் கூற்றுப்படி ஆங்கிலோ-சாக்சன்ஸ் இந்த பருத்தி ஆலைத் தொழி-ல் தேர்ந்தவர்களாகவும், புத்திசா-களாகவும் மாறுவதற்கு மூன்று தலைமுறைகள் ஆயின. ஆனால் அதே திறமையும், தொழில் நேர்த்தியும் பெறுவதற்கு ஜப்பானியருக்கு வெறும் 10 ஆண்டு காலமே போதுமானதாக இருந்தது. இப்போது அதைவிட ஒருபடி மேலே போய் மான்செஸ்டர் தொழிலாளிகளின் திறமையை மிஞ்சிவிட்டார்கள்."

சான் பிரான்சிஸ்கோவின் ஒரு செய்தியில்: "ஜப்பானின் வரவிருக்கும் ஸ்டீல் கம்பெனியின் தொழில்துறை மேலாளர் திரு. எம்.ஒசிமாவும் நான்கு ஜப்பானிய பொறியியல் வல்லுனர்களும் யோகோஹாமாவி-ருந்து ரியோ-டி-ஜெனிரோவுக்கு கப்பல் மூலம் வந்தனர். அவர்கள் அமெரிக்கா, ஐரோப்பாவின் மாபெரும் உருக்கு ஆலைகளின் பணியை குறித்து ஆய்வு நடத்தி, தங்கள் நாட்டிற்கு 2,000,000 டாலர் மதிப்புள்ள ஒரு தொழிற்சாலையை நிறுவ தேவையான சாதனங்களை வாங்கும் திட்டத்துடன் வந்திருந்தனர். எங்கே சிறந்ததும் ம-வானதுமாய் கிடைக்குமோ அங்கே எங்களுக்கு தேவையான சாதனங்களை வாங்குவோம் என்கிறார்கள். 100,000 டன் அளவிற்கு அந்த தொழிற்சாலை திறன் உடையதாக இருக்கும். ஜப்பானின் தென்பகுதியில் நிலக்கரி நிலத்தில் இது கட்டப்படும்; மார்டின், பெசிமர் வகை எஃகு இங்கு தயாரிக்கப்படும்."

"திரு.ஒசிமா கூறுகிறார்: 'தயாரிப்புகளின் தேசமாக மாற்றுவதற்கு அதற்குரிய ஸ்தானத்தில் அதை சகல உபகரணங்களோடும் நிறுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்களுக்கே ஏராளமான எஃகு பொருட்கள் தேவைப்படுகிறது. ஆகையால் வேறு நாட்டை சார்ந்து வாழ நாங்கள் தயாராக இல்லை.'"

ஜப்பானைத் தொடர்ந்து இந்தியாவும் வெகு நெருக்கமாய் அதே பாதையில் வருகிறது; தனது 250,000,000 ஜனத்தொகையோடும் படுவேகமாய் வளர்ந்துவரும் தொழிற்துறையோடும் இருக்கிறது. அதற்கடுத்து 400,000,000 ஜனத்தொகை உடைய புதிய "சீன குடியரசு" மேற்கத்திய நாகரீக வளர்ச்சியை குறித்து சமீபத்தில் எழுந்த விழிப்புணர்வின் உத்வேகத்தால் வளர தொடங்கிவிட்டது. வெறும் 40,000,000 ஜனங்களை மட்டுமே உடைய ஜப்பானை மேற்கொள்ள தயாராகி வருகிறது. தனது மக்களுக்கு அமெரிக்க, ஐரோப்பிய நாட்டு பயிற்சி கொடுப்பவர்களை அமர்த்திக் கொள்ளும் எண்ணத்தில் காலம் சென்ற பிரதமர் --ஹங்-சங் ஒவ்வொரு துறையிலும் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் எண்ணத்தை மிகவும் வெளிப்படையாக கூறினார். இவர்தான் அமெரிக்காவின் ஜெனரல் கிரேன்ட்டை தனது உலக சுற்று பயணத்தில் கவர்ந்தவர். உலகின் மிகவும் சிறந்த அரசியல்வாதி என்று இவரால் அழைப்பட்டார்.

சமீப காலம் வரைக்கும் மிகச்சிறந்த வாடிக்கையாளர்களாக



இருந்தவர்கள் வெகு விரைவிலேயே ஒருவருக்கொருவர் போட்டியாளர்களாகிவிட்ட பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் பிரான்சு நாடுகள் யாவும் மேற்கூறிய காரணத்தினால் உலகின் எல்லா மூலைகளையும் சந்திக்க வேண்டிவந்தது; மேலான வசதிகளை பெருக்கிக் கொண்ட நாடுகளின் முன்னேற்றத்தினால் கூடிய சீக்கிரம் வெளிநாட்டு சந்தையி-ருந்தே விரட்டப்படும் சூழ்நிலைக்கு தள்ளப்படுவதுடன் கூட தங்களது உள்நாட்டு உற்பத்திகளி-லும் கூட ஆக்கிரமிக்கப்படும் நிலைமை உள்ளது; இப்படிப்பட்ட போட்டியாளர்களால் தொழிலாளிகளின் கையி-ருக்கும் வேலை வாய்ப்பை பறிப்பதுடன் அவர்களது சௌகரியங்களும் மறுக்கப்பட்டு ஊதியத்தின் மேலுள்ள போட்டியினால் தொழிலாளிகளின் வாயி-ருக்கும் ரொட்டியைக் கூட பிடுங்கிவிடுவர். இதை பார்க்கும் போது ஜெர்மனி மன்னர், ஐரோப்பிய நாடுகளுக்கு, கிழக்கத்திய நாடுகளை குறித்து எழுந்துள்ள அச்சமும், நாகரீக வளர்ச்சியில் அழித்துவிடும் பயமும் குறித்து தெளிவான ஒரு கண்ணோட்டத்தை தெரியப்படுத்தி இருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

இதை தடுக்க இயலாது. ஏனெனில், "தொழிலாளிகளையும் பொருட்களையும் கூடுமானவரை ம-வான விலையில் வாங்கி அதன் மூலம் மிகச்சிறந்ததை அடைவது" என்று சொல்லுகின்ற தேவை விநியோகம் என்ற கோட்பாட்டின் கீழ் செயல்படுகின்றபடியால், இது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. தற்போது துவங்கியிருக்கும் அழுத்தத்தை குறைக்கவும் தடுக்கவும் முடியாது. சுயநலக் கொள்கையானது இருக்கும் வரை இது மிகவும் வீரியமாக வளரத்தான் செய்யும். இதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. இது தேவன் கொடுத்த விமோசனம் - அதாவது அன்பையும் சமநிலையையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தை அமைக்க திட்டமிடப்பட்டுள்ள தேவனுடைய இராஜ்யமே அது.

அமெரிக்க, ஐரோப்பிய ஆடைகளுக்கும் இயந்திரங்களுக்கும் உலகெங்கும் வாடிக்கையாளர் இருந்தும் கூட ஆயிரக்கணக்கான அதனுடைய ஜனங்கள் மிககுறைந்த ஊதியத்துக்கும் கூட வீணாக வேலைவாய்ப்பை தேடுகிறார்கள். தேவைக்கு அதிகமான விநியோகமும் போட்டியாளர்கள் தற்போதையதைக் காட்டிலும் இரண்டு மடங்காகிப் போகும் நிலையும் இருக்கும் போது அவர்களது

சமீபத்திய எதிர்காலம் எப்படி இருக்கும்? உண்மையில் இயற்கையாகவே இருக்கும் ஜனத்தொகை வளர்ச்சியும் கூட உறுதியற்ற தன்மையையே உறுதி செய்கின்றது. அவ்வாறு இல்லையென்று சொன்னால் இப்படிப்பட்ட சூழ்நிலை ஒரு சாதகமற்றது. ஒரு முன்னேற்றமும் காணாத இருளானது 700 மில்-யன் புதிய போட்டியாளர்களை இந்த உலகிலேயே மிகவும் எளிதாய் பணியவைக்கக் கூடியதாய், பொறுமையான, மிகவும் ஆடம்பரமற்றவர்களாய் மாற்றியிருக்கிறது. ஒருவேளை ஐரோப்பிய, அமெரிக்க தொழிலாளர்கள் முதலீட்டினால் கட்டுப்படுத்தக் கூடுமானால் கீழ்ப்படிதலைத் தவிர வேறு எதையுமே அறியாதவர்களை அடக்கி ஆள்வது ஒன்றும் பெரிய காரியமே இல்லை.

## இங்கிலாந்தின் தொழிலாளர்களைப் பற்றி ஒரு கண்ணோட்டம்

காஸ்மாபா-ஸ் (Cosmopolis) என்ற பத்திரிக்கையில் இங்கிலாந்தின் பிரபலமான எழுத்தாளரான திரு.ஜஸ்டின் மெக்கர்த்தி எழுதிய கட்டுரையில் ஒரு முறை கூறியதாவது:

"ஏழ்மை மற்றும் வேலையில்லா திண்டாட்டம் என்ற தீமையானது வெளிநாட்டின் ஆக்கிரமிப்பை குறித்து எச்சரிப்பதைப் போல் வேறு எந்த பயங்கரமும், இங்கிலாந்தின் இதயத்தை பாதிக்கவில்லை. இங்கிலாந்து அரசியல் அமைப்புகள் இந்த பயங்கரத்தை அவ்வளவு தீவிரமானதாய் எடுத்துக் கொள்ளவில்லை. அல்லது இதை குறித்து மிகுந்த வருத்தப்பட்டதாகக் கூட தெரியவில்லை. ஒருபுறம் வேலைநிறுத்தமும் மறுபக்கம் கதவடைப்பும் என்ற முதலாளிகள் - தொழிலாளிகளுக்கு இடையேயான ஒரு பிரச்சனைக்குக் கூட சட்டரீதியான வழியேதும் காண உண்மையில் முயற்சி செய்யாமல் நீண்ட நாட்களாய் அதை நடக்கும்படி அனுமதித்து விட்டனர். நமது நாட்டு பிரஜைகளின் பிரச்சனைகளைக் காட்டிலும் பிற காரியங்களில் நமது முழுகவனமும் செலுத்தப்பட நாம் அனுமதித்துவிட்டதே இதற்கு காரணம்."

பாராளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர்களின் தலைவருமான திரு."கீர் ஹார்டி" (Keir Hardie) ஒரு பேட்டியில் சில வருடங்களுக்கு முன் கூறியதாவது:



"தொழிற்சங்கங்களின் போக்கு இங்கிலாந்தில் மிகவும் மோசமான பாதையில் போய்க்கொண்டிருக்கிறது. முதலீடுகளை நிறுவனங்களில் உபயோகப்படுத்தக் கூடும். பின் அவைகளை அப்படி பயன்படுத்துவதன் பலன் நம்மையே பாதிக்கவும் கூடும் என்பதை தொழிலாளர்களாகிய நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். உற்பத்தியாளர்களோ மனிதனை துன்புறுத்துகின்ற வழியை கற்றிருக்கின்றனர். மனிதனோ உதவியற்ற பரிதாபமான நிலையில் நிற்கிறான். நீண்ட நாட்களாகவே லண்டனில் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்வதனால் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. மிகப்பெரிய சங்கங்கள் என்று சொல்-க் கொள்பவை கூட எந்த அதிகாரமும் இன்றி நிற்கின்றன. முக்கியமாய் துறைமுகத் தொழிலாளிகளிடையே இது உண்மையாக இருக்கிறது. மாபெரும் துறைமுக வேலைநிறுத்தத்தை கொஞ்சம் நீங்கள் நினைவுபடுத்திப் பார்க்கமுடியுமா? அதை ஆரம்பித்து வைத்த தொழிற்சங்கத்தை அது நாசப்படுத்திவிட்டது. மட்டுமன்றி அந்த தொழிலாளர்களுக்கும் அது எந்த நன்மையும் செய்யவில்லை. லண்டனில் இருக்கும் தொழிற்சங்கங்களின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்குரியதாய் இருக்கிறது.

"சுதந்திர தொழிலாளர் கட்சியானது சமத்துவம் நிறைந்தது. சோஷ-சம் என்ற காரியத்தை தவிர வேறு எதையுமே குறித்து திருப்திப்படுவதற்கு இல்லை. அதுவும் முனிசிபல் சோஷ-சம், தேசிய சோஷ-சம், தொழிலக சோஷ-சம். மேலும் நமக்கு என்ன தேவை என்று நாம் அறிந்திருக்கிறோம். அது மட்டுமே நமக்கு போதுமானதும் கூட. அதற்காக போராட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆனால் அது நமக்கு வேறு எந்த வழியிலும் கிடைக்க வழியில்லை என்கிற போது போராடியே தீருவோம். அப்படி போராடும் போது திட்டவட்டமாய் அதை பெற்றுவிடும் தீர்மானத்தோடு தான் போராடுவோம். "சுதந்திர தொழிலாளர் கட்சியின்" மிக உறுதியான குறிக்கோளானது தொழிற்சாலையில் பொது நலத்தை கொண்டுவருவதாகும். இது நாட்டின் சோஷ-சம் மற்றும் தொழிற்சாலை முதலீட்டின் மேல் ஆதாரப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் இயற்கையாகவே அரசியல் பிரிவுகள் பொருளாதார வரிசையில் இருக்கவேண்டும் என்று நாம் நம்புகின்றோம்.

"தற்போதுள்ள அமைப்பின் தவறுகளினால் பிரிட்டிஷ் தொழிலாளர்களின் மீதிருக்கும் ஒரேயொரு அழுத்தம் அல்லது அநீதி என்னவெனில் வேலைவாய்ப்பில் இருக்கும் ஒழுங்கின்மையும், நிச்சயமற்ற தன்மையுமே. இந்த கேள்வியினை நான் மிகவும் அழுத்தத்துடன் பேசிவருவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். பிரிட்டிஷ் தீவுகளில் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும் ஆண் பணியாளர்கள் 1,000,000 பேர் உண்டு. இவர்கள் குடிகாரரோ அல்லது போக்கிரிகளோ அல்லது குறைவான அறிவு உடையவர்களோ கிடையாது. தங்களது சொந்தத் தவறுகளினால் வேலையற்றவர்களாய் இருக்கவில்லை. வேலை கிடைக்காத சூழ்நிலையினால் அவர்கள் வேலையில்லாதவர்களாய் இருக்கின்றனர். இந்த உண்மையை நான் பலமுறை கூறியிருக்கிறேன். அரை நூற்றாண்டுக்கு முன் இருந்ததை விட தற்போது கூ-யானது உயர்ந்திருப்பதாகவே தோன்றுகிறது. ஆனால் வேலையில்லாத காரணத்தினால் இந்த தொழிலாளர்களது நிலைமை உண்மையில் இழிவான நிலைக்கே போய் கொண்டிருக்கிறது. விட்டுவிட்டு அதிகமாக சம்பாதிப்பதைக் காட்டிலும் குறைவான ஊதியமானாலும் தொடர்ந்து சம்பாதிப்பது என்ற நிலைமை உண்மையில் மிகப்பெரிய ஆறுதலான காரியமாகும். வாழத்தேவையான வருமானத்தை ஈட்ட ஒவ்வொரு தொழிலாளருக்கும் உரிமை கொடுக்கப்படுமாயின், நம்மை மிகவும் சோர்வடையச் செய்யும் அநேக கேள்விகள் இயற்கையிலேயே தானாகவே தீர்க்கப்பட்டுவிடும். தற்போதிருக்கும் சூழ்நிலையானது மிகவும் துயரமானதே. சமீபத்திய கடும் குளிரின் போது சாலையை பெருக்குவதற்கு ஒரு மணிக்கு 6 பென்ஸ் கூ-க்கு 4 மணி நேரம் பணிபுரியும் வேலை கிடைத்தது. ஆயிரக்கணக்கான கூ-யாட்கள் வெளியே தெருக்களில் விடியற்காலை 4 மணி முதல் தாங்கள் வரிசையில் முன்னே நிற்கவேண்டி கடும் குளிரில் நடுநடுங்கி, உதறிக்கொண்டு, பாதி பட்டினியுடன், மனதில் நம்பிக்கையற்று காலை 8 மணிவரை வேலைகிடைக்க நின்று கொண்டிருந்தனர். வேலை கொடுக்கும் கட்டிட வாசல் திறக்கப்பட்டபோது ஒருவரை ஒருவர் முந்திக் கொள்ள பெரிய கலவரமே நடந்தது. கேவலம் (48 சென்ட்ஸ்) 2 ஷில்-ங்ஸ்ஸை சம்பாதிக்க அவர்கள் படுபயங்கரமாக



மடிந்து போகும்படி மிதிபட்டு வேலைக்கான வாய்ப்பை பெற உண்மையில் போராடினர். அந்த இடமே அல்லோகலப்பட்டது. பட்டினியாய் இருந்த பெரும் கூட்டம் பின்னா-ருந்து ஆயிரக்கணக்கானோர் மோதித் தள்ளவே, அவர்கள் வாயில்களில் வேலை கிடைக்கவேண்டுமே என்ற வெறியில் நசுக்கப்பட்டனர். இந்த மனிதர்கள் எல்லாம் ஒன்றும் சோம்பேரிகள் அல்ல.

"தொழிற்சங்கள் நல்ல நிலையில் இருந்தும் கூட, லண்டனில் எந்த திறமையும் இல்லாத சாதாரண கூ-யாளின் வருமானம் ஒரு மணிக்கு வெறும் 6 பென்ஸ் மட்டுமே. கிராமப்பகுதிகளில் இது இன்னும் குறைவாகவே இருந்தது. மிகவும் கூர்ந்து கணக்கிட்டு பார்த்ததில் (2 பெரியோர் 3 குழந்தைகள்) ஒரு சராசரி குடும்பமானது எந்த ஆடம்பர செலவும் இன்றி சாதாரண வசதிகளுடன் வாழ வாரத்திற்கு 3 கினியசுக்கும் (ஆங்கில நாணயம்) குறைவாய் ஏதும் செய்ய இயலாது என்று கூறலாம். இதற்கு சமமான கூ-யை இங்கிலாந்தில் வெகுசில தொழிலாளிகளே சம்பாதிக்கின்றனர். 24 ஷில்-ங்கை (5.84 டாலர்) 7 நாளைக்கு ஒருமுறை ஈட்டும் தொழிலாளி அதில் மூன்றில் ஒரு பாகத்தை வாடகைக்கு செலவிடவேண்டும். வருடம் முழுதும் வாரம் 2 கினியஸ் சம்பாதிக்கும் வாய்ப்புடைய தொழில் திறமையுடைய ஊழியர் மிகவும் அதிர்ஷ்டவசமானவர் என்று கருதப்பட்டது. எனவே ஊழியர்களில் நல்ல வருமானம் உள்ள வகுப்பினர் என்று கூறப்படுகிறவர்களின் குடும்பங்களும் கூட வறுமை கோட்டிற்கு கீழேயே நிற்கவேண்டி இருக்கிறது. ஆகவே மிகவும் குறைந்த நாட்களே கூட அவர்கள் வேலையற்றவர்களாய் நிற்பார்களேயாகில் சந்தேகமின்றி மிகவும் கீழான நிலைக்கு அவர்கள் இழுத்துச் செல்லப்படுவார்கள். ஆகவே தான் நமது நாட்டில் ஏழைகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது.

"லண்டனில் தற்போது ஏறக்குறைய 4,300,000 பேர் வசிக்கின்றனர். 60,000 குடும்பங்கள் (300,000 நபர்கள்) வாரத்திற்கு 18 ஷில்-ங்கிற்கும் குறைவாக சம்பளம் பெற்று வறுமையில் வாழ்ந்து வருகின்றனர். லண்டனின் மொத்த ஜனத்தொகையில் 8 ல் ஒருவர் தொழிலாளர்களின் விடுதிகளிலோ அல்லது மருத்துவமனைகளிலோ

இறந்து வருகின்றார்கள். லண்டனின் தற்போதைய ஜனத்தொகையில் 16 பேருக்கு ஒருவர் மிகவும் பரம ஏழையாக இருக்கின்றனர். ஒவ்வொரு நாளும் 43,000 குழந்தைகள் காலை உணவின்றி பள்ளிகளுக்கு சென்று கொண்டிருக்கின்றனர். 30,000 பேர் வீடுகளின்றியும் 4 பென்னி வாடகைக்கு கூட வீடின்றி தங்க இடமின்றி இருக்கின்றனர்."

இந்த போட்டி இன்னும் சில வருடங்களில் மிகப்பெரிய அளவில் வரப்போவதை தற்போதுள்ள புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. ஆகவே வல்லமையுள்ளவர் எல்லா தேசங்களின் மக்களையும், மிகவும் படிப்படியாக விரைவிலோ அல்லது சற்றுகாலம் கழித்தோ ஒருவரது விருப்பமானது பிறருடைய விருப்பத்தை பொருத்திருக்க வேண்டும் என்றும், தன் சொந்த சொத்துக்களை பாதுகாப்பது போல தன் சகோதரனுடையவைகளை காக்க வேண்டும் என்றும் புரிந்து கொள்ள வைக்கிறார்.

தனது சொந்த லாபத்தை மட்டுமே பார்க்கும் தொழிலாளியைப் போலவே முதலாளியும் செய்வதாக குற்றம் சாட்டுவது மிகவும் நேர்மையானதோ ஞானமானதோ கிடையாது. உண்மையில் செல்வந்தர்களைப் போலவே ஏழைகளும் கூட அதேவிதமான சுயநல போக்குடனேயே இருப்பதை நாம் காணலாம். ஒருவேளை தற்போது ஏழைகளாய் இருப்பவர்களிடத்தில் அவர்களது முதலாளிகளின் செல்வத்தை (அ) ஸ்தானத்தை கொடுத்தால் இவர்கள் உண்மையில் தற்போதைய முதலாளியைக் காட்டிலும் கடுமையானவராயும், தயாள குணம் அற்றவராகவுமே இருப்பார்கள். ஆகவே பணக்காரரை நாம் வெறுக்கவோ, குற்றம் சாட்டவோ செய்யாமல், அதற்கு பதிலாய் தற்போதைய நிலைமைக்கும், தீமைகளுக்கும் காரணமாக காணப்படும் "சுயநலத்தை" வெறுத்து கண்டிப்போமாக. மேலும் முற்றிலுமாய் சுயநலத்தை வெறுத்து தேவனுடைய கிருபையினால் அவர் மாறுதலைக் கொண்டுவந்து, அவர்களது இயல்பான சுயநலத்தை அழித்து அதன் எதிர்மாறான அன்பின் குணங்களை வளரச்செய்து அதன் மூலமாய் ரட்சகரும், மீட்பருமான தேவனுடைய நேசக்குமாரனின் சாயலுக்கு ஒப்பாய் மாற்றப்படுவோம் என்று ஒவ்வொருவரும் நிச்சயமாய் நம்பக்கடவோம்.



## பிரிட்டிஷ் தொழிலாளரைக் குறித்து உயர்திரு. ஜோசப் சேம்பர்-ன் அவர்களின் தீர்க்கத்தரிசனமான வார்த்தைகள்

நமது நாட்களின் புத்திகூர்மையான அரசியல் புள்ளிகளில் ஒருவரான கிரேட் பிரிட்டனின் குடியேற்ற காரியதரிசியான திரு.சேம்பர்-ன் அவர்களின் கண்ணோட்டத்தை பார்ப்போம் :

நகர செருப்புத் தொழிலகத்திற்கு வேலை செய்வதற்காக வந்த வேலையற்ற காலணி தயாரிக்கும் தொழிலாளிகளுக்கான தூதுப்பணியை ஏற்றுக் கொண்டபோது, அவர்கள் எதிர்பார்க்கின்ற எதுவும் தற்கால நிவாரணமாக இருக்குமே தவிர நிரந்தரமாக இருக்காது என்று தெளிவாக விவரித்தார். அதாவது இவ்விதமான கடைகள் வெறுமனே தேவைக்கு அதிகமான சரக்குகளை விநியோகம் செய்துவிட்டு, மற்ற உற்பத்தியாளர்களை எறிந்துவிடும். தற்போது பார்ப்பதற்கு வேண்டுமானால் இந்த தொழில் மிகவும் நலமானதைப் போல் தோன்றலாம். வேலை குறைந்துவிட்டதைப் போல் தோன்றலாம்; உண்மையான திட்டங்கள் வெளி உலகத்துடன் வர்த்தகத்தை உருவாக்கி வாடிக்கையாளர்களை கண்டுபிடித்து அதன் மூலம் அதிவேகமாய் அவர்களது சேவைக்கு அவசியத்தையே கொண்டுவரும். மேலும் அவர் கூறுவதாவது :

"நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் காலணி செய்யப்படும் கடைகளை விட்டு வேறு கடைக்கு மாறிப்போவது இல்லை. ஆனால் அதற்கு பதில் காலணியின் தேவையை அதிகப்படுத்துவதேயாகும். அதுவும் இப்போதிருக்கும் தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்படி இருப்பதாக மட்டுமன்றி வேலையில்லாமல் தவிக்கும் அநேகருக்கும் கூட வேலைவாய்ப்பு அளிக்கும் விதத்தில் தேவைகள் அதிகரிக்கப்படவேண்டும். இதுவே நமக்கு ஒரு பெரும் திட்டமாக இருக்கவேண்டும். அதோடுகூட மற்றுமொரு முக்கியமான குறிப்பும் கூட எங்கள் முன் வைத்தார். அதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக கூறப்போனால் 'இந்த வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு சரியான நிவாரணம், தயாரிப்புகளுக்கு புதிய சந்தைகளை பிடிப்பதுதான்.' நாம் தற்போது பழைய சந்தையி-ருந்து வெளிநாட்டு போட்டியினால் வெளியே வீசப்பட்டிருக்கிறோம். அதே சமயத்தில் வெளிநாட்டு

அரசாங்கங்களோ தங்களது சந்தையி-ருந்து நமது தயாரிப்புகளை ஒதுக்கிவிட்டன. ஆகவே நமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் சந்தைகளை நாம் அதிகப்படுத்தவில்லையெனில், ஏற்கெனவே மிகவும் மோசமான நிலையி-ருக்கும் நமது சூழ்நிலை, கூடிய விரைவில் இன்னும் மோசமான நிலைக்கு தள்ளப்படும். மேலும் வரப்போகும் குழப்பங்களுக்கு மிகவும் முக்கியமான காரணமான ஆர்வமானது ஒருவேளை விளைவுகளை கொண்டுவரலாம் என நான் காண்கிறேன். பொதுவான ஒரு முறையில் இந்த விஷயத்தை நான் உங்கள் முன் வைக்கிறேன். ஆனால் அவ்விதமான அரசாங்கத்தை குறித்தோ, அல்லது ஏதாவது ஒரு கமாண்டரை குறித்தோ அவர்களது செயல்களை குறித்து விமர்சனத்தை கேள்விப்படுவீர்களாகில், பிரிட்டிஷ் பேரரசருக்கும் சேர்த்தே கூறுவது என்னவெனில், இது ஏதோ சண்டைபோட ஆவலுள்ள ஒரு கேள்வி என்று விட்டுவிடவேண்டாம் என்று மன்றாடி கேட்டுக் கொள்கிறேன். சிலவேளைகளில் இதை நம்பியே தீரவேண்டும் என்று கட்டயமாய் தூண்டப்படுவீர்கள். இது ஏதோ ஒரு காரணமற்ற சண்டை என்று நினைக்கவேண்டாம். ஆனால் உண்மையில் ஆங்கிலேயர் எப்போதும் தொடர்ந்து செய்துவரும் ஒரு காரியத்தை குறித்ததொரு கருத்தாகும். இவர்கள் உலகின் பல இடங்களில் தொடர்பு கொண்டு வியாபார ஸ்தலங்களை விஸ்தாரப்படுத்தி விட்டிருக்கின்றனர். ஆகவே சரியான உபாயம் செய்யப்படாவிடில், அதுவும் தொடர்ந்து செய்யப்படாவிடில் இதையும்விட படுபயங்கரமான பின் விளைவுகளை சந்திக்க வேண்டிய தூரம் அதிக தொலைவில் இருக்காது."

## தொழில் ஆர்வத்திற்குச் சம்பந்தப்பட்ட தேசிய தாக்குதல்

இங்கு பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு மற்றும் பேரரசின் விரிவாக்கத்தை குறித்த சில இரகசியங்களை நாம் கூறுகிறோம். பிறதேசங்களுக்கு அறிவுப்பூர்வமான ஆளுகையையும் நல்ல ஒரு அரசாங்கத்தையும் கொடுப்பதற்கோ அல்லது வெறும் மண்ணாசை அல்லது அதிகார ஆசையினால் மட்டுமோ பிற நாடுகளை ஆக்கிரமிக்கவில்லை. ஆனால் இது "தொழில் போட்டி" என்கின்ற வியாபார போட்டியின் நிமித்தமே இப்படி செய்யப்பட்டது. பல நாடுகள் வென்று கைப்பற்றப்பட்டன. ஆனால் பழங்காலத்தைப் போல வெறும் கொள்ளையடிக்கவோ (அ) சூறையாடுவதற்கோ அல்ல. ஆனால் அங்குள்ளவர்களுக்கு ஊழியம் செய்வதற்கோ அல்ல, தங்களது வர்த்தகத்தை பாதுகாத்துக் கொள்ளவேயாகும். இந்தவகைப் போரில் கிரேட் பிரிட்டன் மிகவும் வெற்றி நடைபோடுகிறது. இதன் பலனாக அதனுடைய செல்வம் ஏராளமாகப் பெருகி அதனை அருகிலும் வெளிநாடுகளிலும் முதலீடு செய்கிறது. தேவைக்கு மிஞ்சிய சரக்குகள் விநியோகத்தில் இதுவே முத-டம் வகிக்கிறது. முத-ல் வெளிநாட்டு சந்தையை தேடியது. பருத்தி மற்றும் இரும்பு ஆலைகளில் ஐரோப்பாவுக்கு வெளியே உள்ள நாடுகளில் நீண்ட நாட்களாகவே இந்த நிலை நீடிக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் 1865ம் ஆண்டின் உள்நாட்டுப் போரைத் தொடர்ந்த இயந்திரங்களை குறித்த விழிப்புணர்வானது, ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரைக்கும் வியாபாரத்தின் மையப்பகுதியாய் அனைவரது கவனத்தை கவர்ந்த இடமாக இந்த தேசத்தை மாற்றி விட்டது. இயந்திரங்களை குறித்த விழிப்புணர்வானது எல்லா நாகரீக வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் பரவி, அதன் மூலம் வெளிநாடுகளின் தேவைகளையும் கூட பார்க்கும்படி இவர்களது கவனம் திருப்பப்பட்டது. இதைத்தான் திரு.சாம்பர்-ன் வெளிநாட்டு போட்டி என்று குறிப்பிடுகிறார். எல்லா வெளிநாட்டு அரசியல்வாதிகளும் இவர் குறிப்பிட்டு கூறுவதை கூர்ந்து கவனிக்கின்றனர். அதாவது உலக சந்தைகளானது விரைவில் பொருட்களால் நிரப்பப்படுகின்றன. இயந்திரங்களும், நாகரீக வளர்ச்சியும் படுவேகமாய் முன்னேறி, வெளிநாட்டு சந்தைகளுக்கு இனிமேல் இடமில்லை என்று கூறும் காலம் வரப்போகிறது. அதுமட்டுமன்றி அறிவுப்பூர்வமாய் அவர் கூறுவதென்னவெனில் "தீமைகள் பாதாளத்தைப் போல் தற்போது பயங்கரமாய் இருக்கின்றன. இதைவிட படுமோசமான பின்விளைவுகளைச் சந்திக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை" என்கிறார்.

1896ல் பிரிட்டிஷ் பேரரசரின் தேசப்பிரதிநிதியாக திரு.சாம்பர்-ன் அவர்கள் பிரிட்டிஷின் குடியேற்ற நாடுகளின் பிரதிநிதி கூட்டத்தைக் கூட்டினர். தொழிற்போட்டியை குறித்து கூடிப் பேச ஒருவருக்கொருவர் பிறரது கருத்துக்களை பெரிதும் மதித்து கலந்துரையாட ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணித்து

பிரதிநிதிகள் வந்திருந்தனர். இதுவரை இல்லாத அளவிற்கு பிரிட்டன் நாடானது தனது நாட்டு ஜனங்களின் தேவைக்கும் மேலான சரக்குகளை தொழிற்சாலைகளில் உருவாக்கி வருவதையும், இதினிமித்தம் இந்த அதிகப்படியான உற்பத்தியை விற்க வெளிநாடுகளின் சந்தைகளை தேடிப் போகவேண்டி இருப்பதையும், தானே தடையற்ற வர்த்தகத்துக்காக வாதிட்டு கொண்டிருப்பதனால், அதற்கு ஏற்ற வகையில் எந்தவித கட்டாயமும் இன்றி தனது வர்த்தகக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தனது குடியேற்ற நாடுகளை வைத்திருக்கிறது. மேலும் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்சு, ஜப்பான் ஆகிய நாடுகளின் போட்டியி-ருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளும் வகையிலான ஒரு விலை நிர்ணய பட்டியலை ஏற்படுத்தி தன்னையும் குடியேற்ற நாடுகளையும் சுற்றி ஒரு வே-யை எழுப்பிக் கொள்ளும் எண்ணத்தோடு கிரேட் பிரிட்டனில் இந்தப் பேரவை கூடியது.

ஆப்பிரிக்காவில் வெற்றிகண்டபோது பிரான்சு, இத்தா-, கிரேட் பிரிட்டனும் இதைத்தான் கருதின. அதாவது வர்த்தக போட்டியானது மிகவும் கடுமையாக இருப்பதையும் இது இன்னும் அதிகமாவதும், மட்டுமன்றி தவிர்க்கமுடியாத நிலைக்கு மாறக்கூடும் என்றும், ஆகவே அவர்கள் சில சந்தைகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டிய கட்டாயத்தை உணர்ந்தனர். கீழ்க்கண்ட பத்திரிக்கை செய்தி இதற்கு ஆதாரமாக இருக்கிறது:

"*1896* ஜூன் *9*ல் வாஷிங்டன்னில் பென்சில்வேனியா மாநிலத்தை விட பெரியதும், மிகவும் மண்வளம் நிறைந்ததுமான (Djallon) ஜாலான் நாட்டின் முக்கிய நகரமான "டிம்புக்டோ" (Timbuctoo) என்ற இடத்தை பிரான்சு கைப்பற்றியதை குறித்த அரசாங்க அறிக்கை வெளிவந்தது. அந்த அறிக்கையின் தொடக்கத்தில் ஐரோப்பிய நாடுகள் தங்கள் குடியேற்ற பகுதிகளை தீவிரமாய் பெருக்குவதினால் ஆப்பிரிக்காவுடன் அமெரிக்கா கொண்டுள்ள வர்த்தகத்தின் ஆபத்தைக் குறித்து உள்நாட்டுத் துறைக்கு மிகவும் சுவாரஸ்யமான ஒரு அறிக்கையை (Goree-Dakar) கோரிடாக்கரில் அமெரிக்க நாட்டின் அரசாங்க பிரதிநிதி ஸ்ரைக்லேண்ட் (Strick Land) என்பவர் கூறினார். பிரெஞ்சு குடியேற்ற பிரதேசங்களின் சந்தைகளில் மேலும் மேலும் பாதகத்தை விளைவிக்கக் கூடிய விதத்தில் வெளிநாட்டு



சரக்குகளுக்கெதிரான 7% வரியை பிரான்சு எப்படி சர்வாதிகாரத்துடன் விதிக்கிறது என்பதை சுட்டிக் காட்டினார். இதனிமித்தமாக அந்தப் பகுதிகளில் ஏற்கெனவே நல்ல வியாபார லாபத்தை அனுபவித்துவந்த அமெரிக்க நாட்டின் வர்த்தகம் நசுக்கப்படுவதை விவரித்தார். பாதுகாப்பான விலை பட்டியலை நிர்ணயித்துக் கொள்வதன் மூலம் நம்மிடமிருந்து ஆப்பிரிக்க கண்டம் முழுவதுமே உண்மையில் ஒரு பாதுகாப்பு அரணை நிர்மாணித்துக் கொள்ளும் முயற்சி தற்போது துவங்கிவிட்டது. இப்படியாய் ஒரு தேசம் நல்ல முயற்சியுடன் இதை தற்போது செயல்படுத்துமாயின் மற்ற நாடுகளில் தங்களுக்குண்டானவைகளை சமன்படுத்திக் கொள்ளும் வகையில் குறித்த காலத்தில் காரியங்களை நடப்பிக்க வேண்டும் என்று கூறுகிறார்."

உண்மையில் (சமூகத்தின்) பூமியின் மீது வரப்போகும் காரியங்களை குறித்து எதிர்பார்த்து ஜனங்களின் இருதயமானது பயத்தினால் சோர்ந்து போகிறது; வரப்போகிறதாய் அவர்கள் காணுகிறதை எதிர்நோக்க அவர்கள் இன்னும் மேலான வழிகளில் தங்களை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் பிரிட்டிஷ், இத்தா- மற்றும் பிரெஞ்சு தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காகவே ஏற்கெனவே முன்கூறிய பொதுவானதொரு தொழில் போர் நடப்பதாகவோ, உலகத்தின் பிற பேரரசுகளும், பிரிட்டிஷ் அரசும் விரிவாக்கம் செய்வதாகவோ யாரும் நினைத்துவிடக்கூடாது. நிச்சயமாய் அப்படி அல்ல. தொழிலாளிகளின் காரியம் ஒரு தற்செயலானது. அது முக்கியமாய் பிரிட்டிஷ் முதலாளிகள் தங்கள் லாபங்களை குவிக்கவும் "கடைசி நாட்களில் பொக்கிஷத்தைச் சேர்க்கவும்" (யாக் 5:3) புது இடங்களை தேடுகின்றனர்.

## ஜெர்மனியின் சமுதாய மற்றும் தொழிற்போர்

ஜெர்மனி ரெய்ச் ஸ்டேக்கின் சமுதாய ஜனநாயக கட்சியின் தலைவரான "ஹெர் லெப் நெச்ட்" (Harr Liebknecht) *1896* ஜூலையில் பிரிட்டனுக்கு சென்றிருந்தார். அவர் லண்டனின் "டெய்-க்ரானிக்கள்" என்ற பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியி-ருந்து சில குறிப்புகளை கீழே கூறுகிறோம்:

“ஜெர்மனி பாராளுமன்றத்தில் எங்களது சமுதாய ஜனநாயக கட்சியானது மட்டுமே பலமான தனி கட்சியாகும். சென்ற தேர்த-ன் போது நாங்கள் 1,880,000 ஓட்டுகள் பெற்று வென்றிருக்கிறோம். ஜெர்மென் ரெய்ச்ஸ்டேக் ஒப்புதல் அளிக்கப்போவதில்லை என்றாலும், நாங்கள் மாபெரும் போர் படைகளின் செலவுகளை குறித்த பிரச்னையினால் பாராளுமன்றம் கலைக்கப்படுவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதை குறித்து எடுக்கப்படும் ஓட்டெடுப்பில் நாங்கள் மற்றுமொரு மில்-யன் ஓட்டுகள் எங்களுக்கு கிடைக்கும் என எதிர் நோக்குகின்றோம்.

“அப்படியானால் ஜெர்மெனியில் சண்டையிடும் குணம் வலுவாக இல்லையா?

“சண்டையிடும் குணம் ஜெர்மெனியில் இல்லாதிருந்தது. ஐரோப்பிய மக்களிலேயே ஜெர்மெனியில் மட்டும் தான் இராணுவ முறைமைகளினால் மிகவும் பாதிக்கப்பட்டு சோர்வுற்று இருந்தனர். சோஷ-ஸ்டுகளாகிய நாங்கள் அந்த முறைமையை எதிர்ப்பதில் தலைமை ஏற்று நின்றோம்.

“மேலும் இராணுவ ஆட்சியை எதிர்க்கும் இந்த இயக்கமானது ஐரோப்பா முழுவதுமே வியாபித்து இருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

“நான் மிகவும் நிச்சயத்துடன் கூறுவது: பிரான்சு, ஜெர்மனி, பெல்ஜியம், இத்தா- மற்றும் டென்மார்க் பாராளுமன்றங்களில் சோஷ-சப் பிரதிநிதிகள் (உண்மையில் அதிகமான எண்ணிக்கையில்) மரணம் வரை இதற்காய் போராடுகின்றனர். இந்த முறை லண்டனில் “சர்வதேச கூடுகை” இடம் பெறும் போது வந்திருக்கும் சோஷ-ச பிரதிநிதிகள் யாவரும் பொதுவான நடவடிக்கை ஒன்றினை ஒழுங்கு செய்வதற்காக ஒரு கூட்டத்தை கூட்டுவார்கள். ஜெர்மனியை பொருத்தமட்டில் அதனுடைய ராணுவ முறைமைகளினால் தேசம் முழுவதுமே நாசப்படுத்தப்பட்டுவிட்டது. நாம் புதிய தேசத்தவர் நமது உற்பத்தியாளர்கள் யாவருமே மிகவும் இளமையானவர்கள் அதனால் இங்கிலாந்துடன் நாம் போட்டி போடலாம்.



“பிறகு வெளிநாட்டு போட்டியாளர்களை குறித்து நீங்களும் கதறுகிறீர்களா?”

“ஆம், எங்களை பொறுத்தமட்டில் இது மிகவும் நிஜமான ஒன்று. எங்களுக்கு பத்திரிக்கை சுதந்திரமோ அல்லது பொதுகூட்ட சுதந்திரமோ இல்லை என்பதை உங்களுக்கு காட்டுவோம். ஆனால் அதற்கு மாறாக நீங்களோ இவை இரண்டையுமே பெற்று இருக்கிறீர்கள். ஆகவே தான் எந்த இடத்திலும் இல்லாத அளவிற்கு இங்கிலாந்தில் மட்டும் தற்போதைய பொருளாதார முறையானது மற்ற இடத்தைக் காட்டிலும் அத்தனை ஆழமாக, உறுதியாக வேரூன்றி விட்டது என்ற உண்மையை நான் கண்டுகொண்டேன். எல்லாவற்றிற்கும் மேலாக போராடுவதற்கென்றே நமக்கு ராஜாக்களின் தெய்வீக உரிமை பற்றிய போதனை உண்டு; மேலும் இராஜாக்களின் தெய்வீக உரிமைகளும், அரசியல் உரிமைகளும் சேர்ந்து இருக்க முடியாது என்பதை ஆங்கிலேயராகிய நீங்கள் 200 வருடங்களுக்கு முன்னமே கண்டு கொண்டீர்கள்.

“பின்னர் வெகுகாலத்துக்கு முன்னே ஒரு மாபெரும் மாறுதலை எதிர்பார்த்தீர்களா?

“நான் எதிர்பார்க்கிறேன். ஜெர்மனியின் தற்போதைய முறைமையானது அவர்கள் எதிர்கொண்டிருக்கும் மிகப்பெரிய அதிருப்திகரமான சூழ்நிலைக்கு காரணமாகிவிட்டது.

“மேலும் ஜெர்மனியின் தற்போதைய பொருளாதார நிலைமையை குறித்து உங்களால் ஏதாவது கூறமுடியுமா? எங்களுக்கு இங்கு இருப்பதைப் போலவே உங்களுக்கும் அங்கே நில சம்மந்தமான பிரச்னை ஒன்று உண்டு.

“ஜெர்மனியில் 5 மில்-யன் சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் கூடிய விரைவிலேயே நாசமடையப் போகிறார்கள். அவர்களது நிலைமையை கூறவேண்டுமாயின் அவர்களில் ஒவ்வொருவரும் தங்களது சொத்துக்களின் மொத்த மதிப்பிற்கும் மேலான தொகைக்கு அதனை அடகு வைத்திருக்கின்றனர். விளைகின்ற “ரை” மற்றும் “ஓட்ஸின்” கலவையால் தயாரிக்கப்பட்ட ரொட்டிகளே எங்கள் குடியானவர்களின் ஆகாரம். உண்மையில் இங்கிலாந்தில்

ஜெர்மெனியைக் காட்டிலும் எல்லா வகை உணவுகளுமே ம-வான விலையாக இருக்கின்றன.

"ஆனால் உங்கள் உற்பத்தியாளர்கள்?

"உற்பத்தியை நாங்கள் இப்போது தான் ஆரம்பிக்கின்றோம். எங்களது தொழிற்சாலைகளின் முறைமைகள் 1850-ருந்தே ஆரம்பிக்கப்பட்டவைகள், ஆனால் அதன் பலன்கள் உங்கள் தேசத்தைக் காட்டிலும் மிகவும் அதிகமானதாகவே இருக்கிறது. நாங்கள் மிகவேகமாக இரு பிரிவினராய் பிரிந்து வருகிறோம். ஒரு பக்கம் உழைக்கும் வர்க்கம் மறுபக்கம் முதலீட்டாளர்கள் அல்லது நிலஉரிமையாளர்கள். தற்போதிருக்கும் பொருளாதார நிலைமையினால் எங்களது நடுத்தரவர்க்கம் முற்றிலுமாய் அழிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் இன்னும் தாழ்ந்த நிலைமைக்குச் சென்று உழைக்கும் வர்க்கமாக மாறும்படி விரட்டப்படுகின்றனர். இதைவிட மேலாக சொல்ல வேண்டுமாயின் எங்களது கட்சியின் அசாதாரணமான வெற்றியானது இதற்கு மிக முக்கிய காரணம் என்று நான் கூறுவேன்.

"நீங்கள் இங்கிலாந்தில் செய்வதைப் போல் நாங்கள் இரண்டு கட்சியினரையும் மிகவும் துல்-யமாக பிரிக்கவில்லை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். சமுதாய ஜனநாயக கட்சியான நாங்கள் எங்களுக்கு ஆதாயம் கிடைக்குமேயாகில் யாருடனும் சேர்ந்து உழைப்போம். எங்களிடையே 3 பெரிய கட்சிகள் மட்டுமே இருக்கின்றன. எங்களோடுகூட மிதவாதிகளும், கத்தோ-க்க மத்திய கட்சியும் இருக்கின்றனர். எங்களிடையே இருக்கும் "மிதவாதிகள்" உங்கள் நாட்டவரிடமிருந்து மிகவும் வித்தியாசமானவர்கள். அவர்களுக்கு பழையபடி "பிரபுக்களாட்சி"க்கே போய் விடவேண்டும் என்ற எண்ணம் உருவாக தற்போதைய மிக மோசமான நிலைமையே காரணமாகும். கத்தோ-க்க மத்திய கட்சியையோ பொருளாதார நிலைமை இரண்டாக பிரித்துக் கொண்டிருக்கிறது. எனவே இதில் ஒரு பகுதி எங்களுக்கும் மறுபகுதி மிதவாதிகளுக்கும் போய் சேரும். அப்போது என்ன நடக்கும் என்று பார்ப்போம்.

"ஹெர் -ப் நெட் சமுதாய இயக்கத்தை குறித்த பாரம்பரியத்தை மிகத்தெளிவாக கூறியிருக்கிறார். ஜெர்மனியில்



சமுதாய ஜனநாயக கட்சியின் மிகவேகமான வளர்ச்சியானது நாட்டில் நிலவிவரும் தொழிற்பொருளாதாரத்தின் புதிய வழிமுறையினால் ஏற்பட்டதே. மேலும் இங்கிலாந்து மற்றும் பிரான்சு நாடுகளுடன் பொருளாதார முன்னேற்றத்தோடு போட்டியிட ஜெர்மனியானது மிகத்தீவிரமாய் போராடவேண்டியிருக்கிறது."

ஏழை-பணக்காரர் என்ற இரு பிரிவு மக்களிடையே ஏற்படுத்துகிறதான வருத்தம் மற்றும் பிரிவினை குறித்து இந்த ஞானமுள்ள மனிதர் மிகவும் தெளிவாய் புரிந்து கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடும்படியாய் தெரிகிறது. (1) விவசாயிகளை பாதிக்கின்ற நிலத்தைப் பற்றிய பிரச்னை. (2) முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே இருக்கும் உறவை உள்ளடக்கிய பொருளாதாரம் அல்லது பணத்தைப் பற்றிய பிரச்னை. (3) உள்நாட்டுக்கும், வெளிநாட்டுக்கும் இருக்கும் போட்டியோடும், விநியோகம் மற்றும் தேவை ஆகியவற்றுடன் சம்பந்தபட்டதாகிய பொறியாளர்களுக்கு லாபகரமான வேலைவாய்ப்பை தேடுவதைப் பற்றிய தொழில் ரீதியான பிரச்னை. இவ்வித பிரச்னைகளினால் உலகளாவிய, வரப்போகின்ற புரட்சி, சர்வதிகாரம் ஆகியவற்றை எதிர்கொள்ள தயாராகிவரும் ஒவ்வொரு நாகரீகமடைந்த நாடுகளும் குழப்பமடைந்துள்ளன. இதுவே ஆயிரவருட ஆட்சிக்கான ஆயத்தமாகவும் காணப்படுகிறது.

ஹெர் -ப்நெட் லண்டனின் தொழிற்சங்கப் பேரவைக்கு பிரதிநிதியாக (ஜூலை 1896) இருந்தார். அந்தப் பேரவையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"சர்வதேச தொழிலாளிகளின் இந்த கூட்டமானது (சர்வதேச சகோதரத்துவத்துக்கும், மனித முன்னேற்றத்துக்கும், உலக நாடுகளிடையேயான சமாதானமே மிகவும் அவசியம் என்று புரிந்துகொண்ட படியாலும், உலக மனிதருக்கு போரில் விருப்பம் இல்லையென்பதாலும், ஆனால் தொழிலாளிகளின் உண்மையான எல்லா நன்மைக்கும் எதிராக, உலக சந்தையையே தங்களது நன்மையை கருதி தங்களுடைய கட்டுப்பாட்டிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற பேராசையும் சுயநலமும் கொண்ட தற்போதிருக்கும் ஆளும் கூட்டத்தாராலே போர் வருகின்றது.) பல்வேறு தேசத்தாராகிய தொழிலாளிகளுக்கு இடையே உண்மையில்

எந்த சச்சரவும் இல்லை. ஆனால் அவர்கள் யாவருக்கும் பொதுவான எதிரி யார் என்றால் அது முதலாளிகளும், நிலச் சொந்தக்காரராகிய வகுப்பினருமே. ஆகவே போரின் ஆணிவேராகக் காணப்படும் இந்த முதலாளித்துவத்தையும், நில உரிமையாளர் என்ற சமுதாய முறைமையை ஒழிப்பதே, போரை தடுத்து சமாதானத்தை நிலைநிறுத்த ஒரே வழியாகும். ஆதலால் தயாரிப்பு, விநியோகம் மற்றும் கொடுக்கல் வாங்க-ல் சோஷ-சத்தை பரப்பிவிடுவதால் மட்டுமே இந்த முறைமைகளை வீசி எறிய முடியும் என்பதால் இதை செய்யவேண்டிய கட்டாயம் இருக்கிறது; மேலும் கூறுவது என்னவெனில் தேசங்களுக்கிடையே இருக்கும் ஒவ்வொரு கருத்து வேறுபாடுகள் போர் இல்லாமல், பேசி தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும்; மேலும் இந்த கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட மற்றொரு விஷயம் என்னவெனில், தொழிலாளர் யாவருக்கும் சர்வதேச அளவில் ஒரு நாளைக்கு 8 மணி நேரமே, வேலை நேரம் என்று தீர்மானிக்கப்படுவதே ஆகும். ஒரு நாளைக்கு 8 மணி நேரமே வேலை நேரம் என்பதை அரசாங்கங்களும் கூட உடனடியாய் சட்டப்படி கடைபிடிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது. மேலும் முதலாளி வர்க்கத்தின் கையி-ருக்கும் இன்றைய அரசியல் அமைப்பை உழைக்கும் வர்க்கம் மேற்கொண்டால் தான் அவர்கள் பொருளாதார மற்றும் சமுதாய அடிமைத்தனத்தி-ருந்து விடுபடமுடியும்; மேலும் எல்லா நாடுகளிலுமே உழைப்பாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதும், எல்லா பெண் தொழிலாளிகளும் ஓட்டுரிமையை பெற்றிருக்கவில்லை. ஆகையால் அவர்களால் அரசிய-ல் தீவிர பங்கெடுக்க முடியவில்லை. இந்த தொழிலாளர்களது கூட்டமானது உலகெங்கிலும் ஓட்டுரிமையை அளிக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்து அதற்காக தொடர்ந்து முயற்சி செய்வதாக உறுதியும் எடுத்துக்கொண்டது."

## இந்த நாட்களில் மனுக்குலமானது மற்றுமொரு பக்கம் வேறொரு அரக்கனாலும் கூடத் தாக்கப்படுகிறது

வர்த்தகம் மற்றும் உற்பத்திக்கான மாபெரும் கூட்டுறவுகளின் நிறுவனங்கள், போட்டியின் மற்றுமொரு விளைவாக இருக்கின்றது. வரப்போகும் "அக்கினிக்கு" இவைகள் மிக முக்கியமான காரணிகளாய் இருக்கின்றன. இந்த மாபெரும் கூட்டுறவுகளினால்



சிறிய கடைகளும், பண்டக சாலைகளும் கூட்டமின்றி காணப்படுகின்றன. ஏனெனில் இவ்வகை பெரிய நிறுவனங்களைப் போல லாபமான முறையில் சரக்குகளை வாங்கவோ அல்லது விற்கவோ இயலாது. இந்த பெரிய நிறுவனங்கள் அதற்கு மாறாக "டிரஸ்ட்" என்று அழைக்கப்படும் ஒரு கூட்டமைப்புகளை உருவாக்கிக் கொண்டுள்ளதால், பெரியளவில் வியாபாரத்தை செய்ய இயலுகிறது. இவைகள் உண்மையில் தன்னைப் போ-ருக்கும் பெரிய நிறுவனங்களைத்தவிர வேறு சிறுசிறு போட்டியாளர்களை அழிக்கவே ஒருங்கிணைக்கப்படுகின்றன. மேலும் தங்களது முதலீடு மற்றும் நிர்வாகத்தின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு உழைக்கவே இவை உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திசையில் உலகத்தை மாபெரும் மக்களாட்சி வழிநடத்திக் கொண்டிருக்கிறது. ஏனெனில் இந்த திட்டமானது பரவி வருகிறது. "டிரஸ்ட்டுகளின் வளர்ச்சி" என்ற தலைப்பில் 1896 செப்.2ல் "தி நியூயார்க் வோல்டு" என்ற பத்திரிக்கையில் கீழ்க்கண்ட பட்டியல் வெளியானது. இதை கவனிக்கவும் :

விலையை நிர்ணயிக்கவும், உற்பத்தியை ஒழுங்குபடுத்தவும் வியாபாரத்தில் தனி உரிமை பெறவும் அபாயகரமான சட்டத்தால் மக்களை சூறையாடவும் கூட்டு சேர்ந்திருக்கும் 139 நிறுவனங்களின் பட்டியல் :

| **பெயர்** | | **முதலீடு** |
|---|---|---|
| இறைச்சி மற்றும் மளிகை டிரஸ்ட் | -$ | 100,000,000 |
| சர்க்கரை டிரஸ்ட், நியூயார்க் | - | 75,000,000 |
| ஈயம் டிரஸ்ட் | - | 30,000,000 |
| ரப்பர் டிரஸ்ட், நியூஜெர்சி | - | 50,000,000 |
| கொசாமர் ரப்பர் டிரஸ்ட் | - | 12,000,000 |
| நிலக்கரி கூட்டு, பென்சில்வேனியா | - | 85,000,000 |
| கோடாரி (Axe) டிரஸ்ட் | - | 15,000,000 |
| தூண்டில் கப்பி டிரஸ்ட், சிக்காகோ | - | 10,000,000 |
| பிஸ்கெட் மற்றும் கெட்டி பிஸ்கெட் டிரஸ்ட் | - | 12,000,000 |

| | | |
|---|---|---|
| போல்ட் மற்றும் நட் டிரஸ்ட் | - | $ *10,000,000* |
| கொதிகலன் டிரஸ்ட், பிட்ஸ்பார்க், பா | - | *15,000,000* |
| போரக்ஸ் டிரஸ்ட், பென்சில் வேனியா | - | *2,000,000* |
| துடைப்பம் டிரஸ்ட், சிக்காகோ | - | *2,500,000* |
| ப்ரஷ் டிரஸ்ட், ஒஹியோ | - | *2,000,000* |
| பட்டன் டிரஸ்ட் | - | *3,000,000* |
| கார்பன் மெழுகுவர்த்தி டிரஸ்ட், க்ளீவ் லேண்ட் | - | *3,000,000* |
| தோட்டா டிரஸ்ட் | - | *10,000,000* |
| சவப்பெட்டி மற்றும் அடக்கம் செய்யும் சாதனங்களின் டிரஸ்ட் | - | *1,000,000* |
| விளக்கெண்ணெய் டிரஸ்ட், செயிட். லூயிஸ் | - | *500,000* |
| செயற்கை தந்தம் டிரஸ்ட் | - | *8,000,000* |
| சிகரெட் டிரஸ்ட், நியூயார்க் | - | *25,000,000* |
| இனிப்பூட்டப்பட்ட கெட்டிப்பால் | | |
| டிரஸ்ட், இல்-னாய்ஸ் | - | *15,000,000* |
| செப்பு / தாமிர பாளங்கள் டிரஸ்ட் | - | *20,000,000* |
| செப்பு / தாமிர தகடு டிரஸ்ட் | - | *40,000,000* |
| கார்டேஜ் டிரஸ்ட், நியூ ஜெர்சி | - | *35,000,000* |
| பீங்கான் சாமான்கள் டிரஸ்ட் | - | *15,000,000* |
| பருத்தி கன ஆடை டிரஸ்ட் | - | *10,000,000* |
| பருத்திக் கொட்டை எண்ணெய் டிரஸ்ட் | - | *20,000,000* |
| பருத்தி நூ-ழை, நியூ ஜெர்சி | - | *7,000,000* |
| மின்சார சாதனங்களின் டிரஸ்ட் | - | *10,000,000* |
| கண்ணாடிகல் டிரஸ்ட், பென்சில் வேனியா | - | *8,000,000* |
| பழ ஜாடி டிரஸ்ட் | - | *1,000,000* |
| முலாம்பூசிய இரும்பு எஃகு டிரஸ்ட், பென்சில் வேனியா | - | *2,000,000* |
| கிராம்பு டிரஸ்ட், நியூயார்க் | - | *2,000,000* |
| அறுவடை டிரஸ்ட் | - | *1,500,000* |
| கீல் (கதவு, ஜன்னல்) டிரஸ்ட் | - | *1,000,000* |



| | | |
|---|---|---|
| கடினமான பிளாஸ்டிக் டிரஸ்ட் | - | $ *500,000* |
| தோல் பலகை டிரஸ்ட் | - | *500,000* |
| ஆளிவிதை எண்ணெய் டிரஸ்ட் | - | *18,000,000* |
| சுண்ணாம்பு டிரஸ்ட் | - | *3,000,000* |
| அச்சு டிரப்ஸ், நியூ ஜெர்சி | - | *11,500,000* |
| ரயில் என்ஜின் சக்கர டிரஸ்ட் | - | *2,000,000* |
| பளிங்குக்கல் சேர்க்கை / கூட்டு | - | *20,000,000* |
| தீப்பெட்டி டிரஸ்ட் | - | *8,000,000* |
| மொராகோ தோல் டிரஸ்ட் | - | *2,000,000* |
| ஓட்ஸ் உணவு டிரஸ்ட், ஒஹியோ | - | *3,500,000* |
| மெழுகுத்துணி டிரஸ்ட் | - | *3,500,000* |
| காகிதப்பை டிரஸ்ட் | - | *2,500,000* |
| பிட்ச் (Pitch) டிரஸ்ட் | - | *10,000,000* |
| கண்ணாடி தட்டு டிரஸ்ட், பிட்ஸ் பர்க், பா | - | *8,000,000* |
| சிறிய மேஜை கரண்டி, முள் கரண்டி, கத்தி டிரஸ்ட் | - | *2,000,000* |
| பவுடர் டிரஸ்ட் | - | *1,500,000* |
| பாதுகாப்பான்கள் டிரஸ்ட், மேற்கு வர்ஜீனியா | - | *8,000,000* |
| பழச்சுளை டிரஸ்ட் | - | *5,000,000* |
| அரிசி டிரஸ்ட், சிக்காகோ | - | $ *2,500,000* |
| பாதுகாப்பு பெட்டகம் டிரஸ்ட் | - | *2,500,000* |
| உப்பு டிரஸ்ட் | - | *1,000,000* |
| மணல் கட்டி டிரஸ்ட், நியூயார்க் | - | *1,000,000* |
| சுகாதார/ கழிவறை சாதனங்கள் டிரஸ்ட், டிரண்டன் N.J | - | *3,000,000* |
| உப்புக்காகித தாள் டிரஸ்ட் | - | *250,000* |
| கண்ணாடி கதவு, ஒருபக்க மூடுதிரை, | | |
| டிரஸ்ட் | - | *1,500,000* |
| வாள் டிரஸ்ட், பென்சில் வேனியா | - | *5,000,000* |
| பள்ளி புத்தக டிரஸ்ட், நியூயார்க் | - | *2,000,000* |

| | | |
|---|---|---|
| பள்ளி சாதனங்கள் டிரஸ்ட், சிக்காகோ | - $ | 15,000,000 |
| கழிவு குழாய் டிரஸ்ட் | - | 2,000,000 |
| இறைச்சி குத்திவைக்கும் கம்பி டிரஸ்ட் | - | 60,000 |
| தாதுபொருள் உருக்கும் டிரஸ்ட், சிக்காகோ | - | 25,000,000 |
| கருமான் டிரஸ்ட், மிக்சிகன் | - | 500,000 |
| சோப்பு டிரஸ்ட் | - | 500,000 |
| சோடா தயாரிப்பு சாதனங்கள் டிரஸ்ட், ட்ரென்டன், நியூஜெர்சி | - | 3,750,000 |
| தையல் இயந்திர உபரிபாக டிரஸ்ட் | - | 2,500,000 |
| கடற்பஞ்சு டிரஸ்ட் | - | 500,000 |
| பசை டிரஸ்ட், கென்டக்கி | - | 10,000,000 |
| வியாபார எஃகு டிரஸ்ட் | - | 25,000,000 |
| எஃகு தண்டவாள டிரஸ்ட் | - | 60,000,000 |
| அடுப்பு-வாரியம் டிரஸ்ட், கிரான்ட் ரேப்பிட்ஸ், மிச்சிகன் | - | 200,000 |
| வைக்கோல் வாரியம் டிரஸ்ட், க்ளீவ் லேண்ட், ஒஹியோ | - | 8,000,000 |
| வார்ப்பு எஃகு டிரஸ்ட் | - | 5,000,000 |
| டீசல் (Teazle) டிரஸ்ட் | - | 200,000 |
| எஃகு தகடு டிரஸ்ட் | - | 2,000,000 |
| கல்லறைக்கல் டிரஸ்ட் | - | 100,000 |
| தகரப் பெட்டி டிரஸ்ட் | - | 2,500,000 |
| நீண்ட குழல் டிரஸ்ட் | - | 11,500,000 |
| அச்சு டிரஸ்ட் | - | 6,000,000 |
| குடை டிரஸ்ட் | - | 8,000,000 |
| நீராவி அடுப்பு டிரஸ்ட் | - | 1,000,000 |
| சுவர் அலங்கார காகித டிரஸ்ட், நியூயார்க் | - | 20,000,000 |
| கடிகார டிரஸ்ட் | - | 30,000,000 |
| சக்கர டிரஸ்ட் | - | 1,000,000 |



| | | |
|---|---|---|
| பழவகை உணவு டிரஸ்ட் | - $ | 500,000 |
| கண்ணாடி ஜன்னல் டிரஸ்ட் | - | 20,000,000 |
| கம்பி டிரஸ்ட் | - | 10,000,000 |
| ஸ்குரு டிரஸ்ட் | - | 10,000,000 |
| கம்பளி தொப்பி டிரஸ்ட், நியூஜெர்சி | - | 1,500,000 |
| பரிசு பொருள் சுற்றும் காகிதம் டிரஸ்ட் | - | 1,000,000 |
| மஞ்சள் தேவதாரு (Yellow pine) டிரஸ்ட் | - | 2,000,000 |
| மெருகேற்றிய தோல் டிரஸ்ட் | - | 5,000,000 |
| சாயம் மற்றும் ரசாயண பொருள் டிரஸ்ட் | - | 2,000,000 |
| மரத்துண்டுகள் டிரஸ்ட் | - | 2,000,000 |
| கல் உப்பு குழுமம் | - | 5,000,000 |
| கப்பற்துறை கிடங்கு குழுமம் | - | 1,000,000 |
| பச்சைக் கண்ணாடி டிரஸ்ட் | - | 4,000,000 |
| இரயில் என்ஜின் டிரஸ்ட் | - | 5,000,000 |
| உறைகள் குழுமம் (Envelope) | - | 5,000,000 |
| நாடா டிரஸ்ட் | - | 18,000,000 |
| இரும்பு மற்றும் நிலக்கரி டிரஸ்ட் | - | 10,000,000 |
| பஞ்சு ஆலை (Press) டிரஸ்ட் | - | 6,000,000 |
| சிறு ஆணி (Tack) டிரஸ்ட் | - | 3,000,000 |
| ஆடை துணி-முறுக்கும் டிரஸ்ட் | - | 2,000,000 |
| பனிப்படர்வை அகற்றும் நீண்ட மண்வெட்டி டிரஸ்ட் | - | 200,000 |
| இரும்பு கூட்டுறவு (டிரஸ்ட்) | - | 60,000,000 |
| காகிதப் பெட்டி டிரஸ்ட் | - | 5,000,000 |
| பெட்ரோ-ன் கழிவு கரி டிரஸ்ட் | - | 15,000,000 |
| போதை பொருள் டிரஸ்ட் | - | 5,000,000 |
| இனிப்புப் பண்டங்கள் டிரஸ்ட் | - | 2,000,000 |
| வாயு டிரஸ்ட் | - | 7,000,000 |
| திராவகம் டிரஸ்ட் | - | 2,000,000 |

| | | |
|---|---|---|
| நிலக்கடலைத் தோல் டிரஸ்ட் | - $ | 2,000,000 |
| கார்நிஜிக் (carnegie) டிரஸ்ட் | - | 25,000,000 |
| இல்-னாய்ஸ் ஸ்டீல் டிரஸ்ட் | - | 50,000,000 |
| பித்தளை டிரஸ்ட் | - | 10,000,000 |
| ஹாப் பயிர் குழுமம் | - | 500,000 |
| மாவு டிரஸ்ட், நியூயார்க் | - | 7,500,000 |
| அமெரிக்க சோள அறுவடையாளர் டிரஸ்ட் | - | 50,000,000 |
| பன்றி இறைச்சி குழுமம் மிஸ்ஸவுரி | - | 20,000,000 |
| கொலராடோ நிலக்கரி குழுமம் | - | 20,000,000 |
| சலவைப் பொடி குழுமம் | - | 10,000,000 |
| சாயம் / பெயின்ட் குழுமம், நியூயார்க் | - | 2,000,000 |
| கோதுமை (Buck Wheat) டிரஸ்ட், நியூயார்க் | - | 5,000,000 |
| ரோமம் குழுமம், நியூஜெர்சி | - | 10,000,000 |
| மெல்-ய காகித டிரஸ்ட் | - | 10,000,000 |
| பணவிவர பதிவேடு டிரஸ்ட் | - | 10,000,000 |
| மேற்கத்திய மாவு டிரஸ்ட் | - | 10,000,000 |
| ஸ்டீல் மற்றும் இரும்பு குழுமம் | - | 4,000,000 |
| மின்சார சம்பந்தப்பட்டவை குழுமம் எண்.2 | - | 1,800,000 |
| ரப்பர் டிரஸ்ட் எண்.2 | - | 7,000,000 |
| புகையிலை குழுமம் | - | 2,500,000 |
| மொத்தம் முதலீடு | -$ | 1,507,060,000 |

## மதிப்பீடு

அதே பத்திரிக்கையின் அதே பதிப்பில் இப்படிப்பட்ட ஒரு “டிரஸ்ட்”டின் அதிகாரம் மற்றும் நோக்கத்தை குறித்து கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி “நிலக்கரியின் வளர்ச்சி என்றால் என்ன” என்ற சிறு தலைப்பில் வெளியானது:

“ஒரு டன் ஆந்திரா சைட் நிலக்கரியின் விலை 1.50 டாலர் கூடுகிறது என்றால் 11 நிலக்கரி டிரஸ்ட் அங்கத்தினர்கள்



ஒவ்வொருவரும் 50 அல்லது 60 மில்-யன் டாலருக்கு குறைவில்லாமல் லாபம் பெறுவார்கள். போ-யான போட்டியினை ஆதாரமாகக் கொண்டு கடந்தமுறை நிர்ணயிக்கப்பட்ட விலைப்பட்டிய-னால் இந்த லாபம். இந்தப் பணமானது நியாயப்படி நிலக்கரி உபயோகிப்பாளர்களையேச் சேர வேண்டும்.

“நிலக்கரியின் அளவிட முடியாத அளவுக்கு விலையேற்றம் என்றுச் சொன்னால், மறுபடியும் ஆரம்பிக்கும் அநேக உற்பத்தியாளர்கள் அப்படி செய்ய முடியாமல் போவதற்கு காரணம் என்னவெனில், தங்களுடைய தயாரிப்புகளின் விலையுடன் அப்படிப்பட்ட ஒரு பெரிய அயிட்டத்தை சேர்க்க முடியாது. ஆனாலும் நியாய விலையில் நிலக்கரி பெறுபவர்களுடன் தொடர்ந்து இன்னும் போட்டியிட்டு வருகிறார்கள். அதாவது தங்களுக்கு ஆகும் தயாரிப்பு செலவில் இந்த கூடுதல் விலையை சமாளிக்க சம்பளங்களை குறைத்து விடுவார்கள். இதன் விளைவாக சராசரி வாழ்க்கை நடத்தும் ஒவ்வொருவரும் தங்களது அத்தியாவசிய சௌகரியங்கள் அல்லது ஆடம்பரத்தில் கொஞ்சம் பாதிப்பை நிச்சயம் சந்திப்பார்கள். அந்த மனிதன் கட்டாயம் நிலக்கரி வாங்கியாக வேண்டும். ஆனால் தனது உதவியால் தெரிந்தெடுக்கப்பட்ட அதிகாரியானவர் சட்டத்தை அமல்படுத்தமாட்டார். ஆகவே “டிரஸ்ட்” நிர்ணயிக்கும் விலையையே இவர் செலுத்த வேண்டும். இதன் விளைவால் ஏழைகள் குறைவான அளவே நிலக்கரி வாங்கவேண்டி வரும். ஏற்கெனவே இருந்த பழைய விலையே கொஞ்சம் கஷ்டத்தை கொடுத்தது. புதிய விலை மிகவும் குறைவாக வாங்குவதையே தடை செய்கிறது. அப்படியானால் வரப்போகிற குளிர் காலத்தில் ஏழைகள் குளிரால் நடுங்கவேண்டும்.

“ஒருபக்கத்தில் இந்த சூழ்நிலை மிக சிலருக்கு மிகுந்த சௌகரியம். அடுத்த பக்கத்தில் அநேகருக்கு அசௌகரியமும், ஆயிரக்கணக்கானவருக்கு பரிதாப சூழ்நிலையுமாய் இருக்கிறது. இருவருக்கும் இடையே உடைந்த மதிக்கப்படாத சட்டம் இருக்கிறது.”

இந்த டிரஸ்ட்களின் சக்தியை சுட்டிக்காட்ட மற்றுமொரு

உதாரணம். 1895ம் வருட வசந்த காலத்தில் "பருத்தி டை டிரஸ்ட்" நிறுவப்பட்டது. (பருத்தி டை என்பது பருத்தி மூட்டைகளை கட்ட உதவும் வெறும் ஒரு இரும்பு பட்டையான சாதனமாகும்) அந்த நாட்களில் அதன் விலை 100க்கு 70 சென்ட்டுகள் இருந்தது. வரும் ஆண்டுகளில் இதில் சிறிது கூடுதலான லாபம் காண டிரஸ்ட் ஆர்வம் காட்டியது. எனவே 100 க்கு 1.40 டாலர் என விலையை கூட்டியது. அது வெளிநாட்டி-ருந்து இந்த இரும்பு பட்டைகளை இறக்குமதி செய்யக்கூடாத ஒரு காலகட்டமாக இருந்தது.

இதே போல் எல்லா டிரஸ்ட்டுகளும் அதன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் பண்ணவில்லை. ஆனால் பொதுவாக சாதகமானதொரு சந்தர்ப்பமானது யாவருக்கும் ஒரே விதமாய் கிடைக்கவில்லை எனலாம்; ஆனால் இப்படிப்பட்ட ராட்சத கூட்டுறவுகளின் கையில் சிக்கித் தவிக்கும் மிக மோசமான ஆபத்து முக்கியமாக "பொது ஜனமாகிய" பெரும் கூட்டத்துக்கே என்று சொல்வதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. தனிமனிதனுடைய சுயநலமும் அதிகாரமும் கண்டு ஏன் அஞ்சவேண்டும் என்பதை யாவரும் அறிந்திருந்தனர். மேலும் இந்த ராட்சத டிரஸ்டுகள் தனிமனிதனைக் காட்டிலும் அதிக செல்வாக்கும் அதிகாரமும் நிறைந்ததாகவே இருந்தது. அதோடு மட்டுமன்றி, அவர்களுக்கு மனசாட்சியே இல்லாதிருந்தது. "கார்பரேஷனுக்கு ஆத்துமா இல்லை" என்று கூறும் அளவிற்கு இதன் நிலைமை இருந்தது.

"பிட்ஸ்பர்க் போஸ்ட்"டில் கூறப்பட்டிருந்த கீழ்க்கண்ட பகுதியை உங்களுக்கு அளிக்கிறோம்.

### டிரஸ்ட்டுகளின் இலாபம்

"நியூயார்க், நவம்பர் 5, 1896 ஸ்டேன்டர்டு-ஆயில் டிரஸ்ட்" டின் நிர்வாகத் தலைவர்கள் ஒன்று கூடி பேசி டிசம்பர் 15க்கு கொடுக்க வேண்டிய காலாண்டு டிவிடென்டான 3 டாலர் ஒரு ஷேருக்கும் (பங்கு) 2 டாலர் ஒரு பங்குக்கும் கூடுதலாய் அளிக்க வேண்டும் என்று முடிவுசெய்து அறிவித்துள்ளனர். உண்மையில் "ஸ்டான்டர்டு ஆயில் டிரஸ்டின்" மொத்த பத்திரத்துக்கும் மதிப்பு 97,250,000 டாலராகும். கடந்த நிதியாண்டின் போது 31% டிவிடன்ட் அறிவிக்கப்பட்டு



பங்கிடப்பட்ட மொத்த தொகை 30,149,500 டாலராக இருந்தது. இதே நிதியாண்டில் சர்க்கரை டிரஸ்ட் என்ற அமெரிக்கன் சர்க்கரை சுத்திகரிப்பு கம்பெனி 7,0223,920 டாலர் டிவிடன்ட் கொடுத்தது. பங்குதாரருக்கு கொடுத்த இந்த டிவிடன்ட்டோடு கூட டிரஸ்ட்டானது தன்னிடம் கூடுதலான கையிருப்பாக கச்சா சர்க்கரை இருப்பதாகவும், ரசீது மட்டும் பெறவேண்டிய தொகையானது சுமார் 30,000,000 டாலர் இருக்கும் என்றும் கூறுகிறது."

அதே பத்திரிக்கையில் ஆசிரியர் குறிப்பில் கூறுவதாவது:

"தி ஒயர் நெயில் என்ற டிரஸ்ட்டே கூடுமான வரை அநியாயமானதொரு கூட்டு நிறுவனமாய் மக்களிடையே இந்த நாட்டில் இதுவரையில்லாத அளவிற்கு பணத்தை சூறையாடி பறித்திருக்கிறது. இது சட்டத்தை புறக்கணித்து லஞ்சம் கொடுத்து, விலைகளை உயர்த்தி, போட்டியாளர்களை நாசப்படுத்தி விட்டது. மேலும் வாணிபத்தை தனது "ஏகாதிபத்திய" வ-மையில் ஆளுகிறது. இவ்வளவையும் செய்ததினால் 200% முதல் 300% வரை விலையை கூட்டிவிட்டு, தனது உறுப்பினர்களுக்கு இந்த லாபப் பங்கினை கோடிக்கணக்கில் பிரித்துக் கொடுக்கிறது. இங்கு அராஜகம் இல்லை. ஆம், உண்மையில், சட்டத்தை எதிர்த்து, கொள்ளையிடுவது இந்த அராஜக கூட்டமே. இதை நினைவு கூறி 'நெயில் டிரஸ்ட்' டின் நியூஜெர்சியைச் சேர்ந்த திரு. A.C. ஃபாஸ்ட் என்பவர் 'உலகிற்கு' எழுதும் போது இப்படிப்பட்ட டிரஸ்ட்டுகளின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் போவது 'மிகப்பெரிய அதிருப்திக்கு அனல் ஊட்டுவதாகும்' என்று கூறுகிறார். இது நிலைமையை மிகவும் மோசமான கட்டத்திற்கு அழைத்துச் செல்கிறது. இந்த சட்ட விரோதமான, சூறையாடுகின்ற டிரஸ்ட்டுகளுக்கு மிகவும் சுதந்திரமாய் ஆதிக்கம் செலுத்த அனுமதி அளிப்பதும், ஒரு இக்கட்டான சூழ்நிலையில் வாணிபத்தை பிடித்து வைத்துக் கொள்வதையும் இனியும் தாங்கிக் கொள்ள இயலாது. ஏனெனில் 'அவர்களே பரவிவரும் அதிருப்தி என்ற அனலான நிலைமைக்கு இன்னும் சூடேற்றுகின்றனர்.' ஒருபக்கத்தில் நாட்டு மக்களும் மறுபக்கத்தில் "டிரஸ்ட்" எனப்பட்ட அனுமதி அளிக்கப்பட்ட கொள்ளையர்களும் இருக்கின்றனர். எனவே ஏதாவது வெளிப்பாடும்

அல்லது தடையும் இருக்க வேண்டும், இல்லையெனில் "அதிருப்தியாகிய அனல்" டிரஸ்ட்டுகளின் நிலைமையை மிகவும் மோசமாக்கி விடும். இனியும் கூட இந்த அகம்பாவம், கர்வம் நீடிக்குமா?

"நிலக்கரி டிரஸ்ட்" ஆன்த்ரசைட் உற்பத்தியில் தற்போது ஜனங்களை வருடத்துக்கு 50 மில்-யன் டாலர் என்ற வகையில் டன்னுக்கு 1.50 டாலர் கூடுதலான விலை என்ற நிலைமையில் சூறையாடிக் கொண்டிருக்கிறது. போதகர், டாக்டர். பர்க்ரஸ்ட் பேசும் போது: நிலக்கரி கம்பெனிகள் அல்லது நிலக்கரி கூட்டு நிறுவனங்கள் அல்லது நிலக்கரி டிரஸ்ட்டுகள் தங்களது வ-மை முழுவதையும் உபயோகித்து, ஏழை மக்களின் பணம் யாவற்றையும் பிடுங்கி தனது சொந்த பொக்கிஷ சாலையை நிரப்பிக் கொள்ள மிகவும் துணிச்சலோடு செயல்படுமாயின், ஏழைகளை இன்னும் ஏழ்மையான நிலைக்கு கொண்டுபோகவும், அவர்களது சௌகரியங்களை இன்னும் குறைக்குமாயின், அவர்களது ஆரோக்கியத்தையும் வாழ்வையும் உறிஞ்சுவதாக இருக்கும் அவ்விதமான கம்பெனிகள்

**திருட்டு மற்றும் கொலை வெறிபிடித்த பிசாசுகளே.**

இதை பார்க்கும் போது நிலக்கரிக்கு மட்டுமல்ல மற்றெந்த உபயோகமுள்ள பொருட்களுக்கும் கூட பொருந்தும்.

"திருட்டு மற்றும் கொலைவெறி பிசாசுகள்? என்று போதகர். பார்க்ரஸ்ட் கூறுகின்ற வேளையில் மற்றொரு பிரசங்கி, நியூயார்க்கை சேர்ந்த போதகர் டாக்டர். ஹெப்பர் நியூடன் வெல்வெட் ராஜ இருக்கைகளை போட்டு, இந்த கோடீஸ்வர கூட்டத்தை புகழ்ந்து, இப்படிப்பட்ட டிரஸ்ட்டுகள் முன்னேறிவரும் நாகரீக வளர்ச்சிக்கு தேவையும், லாபகரமுமானது என்று பேசுகிறார்."

திடீரென்று ஸ்டீல் தண்டவாளங்களின் விலை டன்னுக்கு 25 டாலரி-ருந்து 17 டாலருக்கு வீழ்ந்தவுடன் அதை குறித்து இதை குற்றப்படுத்தி (the Allegheny Evening Record) "அலகெனி ஈவினிங் ரெக்கார்ட்" கூறுவதாவது:

"விலைகளை உயர்த்துவதெற்கென்றே அமைக்கப்பட்ட



மாபெரும் "ஸ்டீல் பூல்" (ஸ்டீல் குளம்) என்பது உண்மையில் நசுக்கப்பட்டுவிட்டது. முதலீடும் அதிகாரமும் இணைந்த இந்த ராட்சத கூட்டணியானது - அமெரிக்காவின் மாபெரும் தொழிற்சாலை ஒன்றின் லாபத்தை கட்டுப்படுத்த உண்டாக்கப்பட்டது. இதனுடைய சாதாரண ஒரு உத்தரவில் விலைகள் கூடவும், குறையவும் செய்யும். தன் விருப்பத்துக்கு ஏற்றபடி இதனால் நுகர்வோர் வரியை உயர்த்த முடியும். இது மற்றுமொரு கூட்டணியால் இன்னும் பெரிதாகவும், இன்னும் வ-மையானதாகவும், இன்னும் செழிப்பானதாகவும் மாறிவிட்டது. ஏனெனில் ராக்ஃபெல்லரும் கார்னெகியும் அமெரிக்க ஸ்டீல் தொழிலை கைப்பற்றிவிட்டனர். இந்த சம்பவமானது சாகாப்தத்தை படைக்கக் கூடியது. ஸ்டீ-ன் விலை 25-ருந்து 17 டாலருக்கு இதுவரைக்கும் விற்கப்படாத விலை குறைப்பை எட்டி உள்ளது. நாட்டின் பொருளாதார சரித்திரத்தில் ஒரு அடையாளத்தை உண்டாக்கி விட்டது. இதுவரைக்கும் டிரஸ்ட்டை டிரஸ்ட்டே விழுங்கும் விஷயமாக இருந்தது. இந்த ரயில் பாதைகளே லாபகரமானவைகளாக இருக்கின்றன.

திரு.ராக்ஃபெல்லரோ அல்லது திரு.கார்னெகியோ பொது ஜனத்தின் மீது எந்த கரிசனையும் கொண்டு இந்த வியாபாரத்தை தொடங்கவில்லை என்பதை கட்டாயம் குறிப்பிட வேண்டியது நல்லதே. வியாபார போட்டியினை நசுக்க வேண்டும் என்ற நல்ல சந்தர்ப்பத்துக்காக காத்திருந்த இவர்கள் சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டார்கள். இவர்கள் தற்போது உலகிலேயே மிகவும் குறிப்பிடத்தகுந்த விநியோகத்தின் மூலதனத்தை உடையவர்களாக இருக்கின்றனர். மெசாபா (Mesaba) அளவிற்கு டியூலத்துக்கும் (Duluth) மேலாக, அதுவும் இதை அதிகமான ஆழத்தில் வெட்டி எடுக்கவேண்டிய அவசியம் கூட இல்லாமல் பூமியின் மேல்பரப்பினை மட்டும் சுரண்டி எடுத்தாலே கனிமப் பொருட்கள் கிடைத்துவிடுகிறது. ராக்ஃபெல்லரோ தனக்கு சாதகமாக இருக்கின்ற இந்த இயற்கை வளத்தினை விநியோகிப்பதற்கென்றே சரக்கு கப்பல்களை ஒரு படையைப் போல உருவாக்கிவிட்டு இதன் மூலம் "எரி" (Erie) என்ற ஏரியின் துறைமுகத்துக்கு இந்த கச்சா பொருட்களை கொண்டு செல்லும் வசதிகளை செய்து கொண்டு தனது

நிலைமையை இன்னும் பலப்படுத்திக் கொண்டிருக்கிறார். கார்னெகியுடன் கூட்டாக வைத்திருந்த அந்த வியாபார சுழற்சியை முடித்தவுடன், தன்னிடம் இருக்கும் உலைக்களங்கள் மற்றும் ஆலைகளின் உதவியைக் கொண்டு "ரயில் பெட்டி உற்பத்தியாளர்களின் கழகத்தையே" தன் கட்டுக்குள் வைத்துக் கொண்டார். இந்த மொத்த வேலைகளுமே தற்போதிருக்கும் நவீன முறைமைகளை இணைத்து செய்து முடிக்கப்பட்டன. தற்கால விளைவுகள் அநேக மக்களுக்கு நன்மையானதாகவாவது இருக்கின்றனவே. ராக்ஃபெல்லரும் கார்னெகியோவும் தங்களுடைய கையில் இத்தனை பெரிய அதிகாரத்தை பெற்றுவிட்டதால், நியாயமான லாபத்தை சம்பாதித்துக் கொண்டு, பொதுமக்களும் கூட பயன் பெற விட்டுவிடுவர். அல்லது ஒருவேளை முன்பு தங்கள் போட்டியாளர்களை நசுக்கியது போல, தங்கள் பலத்தை கருணையற்ற முறையில் மக்களை சூறையாடுதற்கு உபயோகித்தால் பிரச்சனை மிகவும் மோசமாகிவிடும். ஆகவே உண்மையில் இவ்வளவு அதிகாரங்களை உடையவராக இவர்கள் இருப்பதே ஒரு அச்சுறுத்தலாக இருக்கிறது."

ஒரு காலத்தில் கீழ்கண்ட பகுதியானது எல்லா இடங்களிலும் பரவலாக வெளியிடப்பட்டது. ஆனால் இப்போது இங்கே இதை சொல்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்:

"கன்சாஸ் சிட்டி, திங்கள், நவம்பர் 26, 1896 முன்னாள் கவர்னரான டேவிட் ஆர்.பிரான்சிஸ், தற்போதைய உள்துறை காரியதரிசியானவர், மிட்லன்ட் ஓட்ட-ல் கடந்த இரவு நடந்த விருந்தில் தங்க நிர்ணய நிறுவனமாகிய ஒரு சிறிய நிறுவனத்துக்கு கீழ்கண்ட கடிதத்தைக் கொடுத்தார்.

உள்துறை அமைச்சகம்,

வாஷிங்டன் டி.சி. நவம்பர் 19, 1896

"கனவான்களே: 25ந் தேதிக்கான அழைப்பை நான் இப்போதுதான் பெற்றுக் கொண்டேன். என்னால் இன்று மாலை நடக்கும் செல்வத்தின் வெற்றியினை உறுதிசெய்யும் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள இயலாது என்று வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்... மேலும் செல்வ செழிப்பில் வளர்ந்துவரும்



ஆதிக்கத்தை தடைசெய்து, டிரஸ்ட், மற்றும் ஏகாதிபத்திய அதிகாரத்தை கட்டுப்படுத்தும் வகையில் சட்டம் ஒழுங்கு, நடைமுறைப்படுத்தப்படாவிடில், இந்த நூற்றாண்டின் முடிவுக்குள் நமது நிறுவனங்களுக்கு எதிராய் ஜனங்கள் எழும்பும் பேராபத்து இருக்கிறது.

டேவிட் ஆர். பிரான்சிஸ்"

லண்டன் ஸ்பெக்டேட்டர் பத்திரிக்கையி-ருந்து கீழ்க்கண்ட ஒரு பகுதி கோடிட்டு காட்டப்பட்டிருக்கிறது:

"நியூயார்க் உச்சநீதி மன்றத்தை சேர்ந்த நீதிபதி ரசல் என்பவரின் தீர்மானம் நமது கைகளில் இருக்கின்றது. இதில் "டிரஸ்ட்" முறைமைகள் அல்லது முதலீட்டால் ஏகாதிபத்தியத்தை உருவாக்கும் முறைமைகளில் எல்லை மீறிய நடவடிக்கைகள் காட்டப்பட்டிருக்கின்றது. இது அமெரிக்க ஐக்கிய நாட்டில் வெளியிடப்பட்டது. யூனியனில் இருக்கும் பெரும்பாலும் எல்லா பெரிய மருந்து வியாபாரிகளுமே சேர்ந்து "சர்வதேச மொத்த மருந்து வியாபாரிகள்" சங்கமானது உருவானது. இதுவே மருந்துகளின் விலையை நிர்ணயம் செய்யும். ஒருவேளை தனியார் வியாபாரிகள் யாரும் இதற்கும் குறைந்த விலையில் மருந்துகளை விற்பனை செய்தால், இந்த சங்கமானது, வியாபார வட்டாரத்தை இவருடன் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளவிடாதபடி எச்சரிக்கை விடுக்கும், கட்டுப்படாத நிறுவனத்தின் வியாபாரத்தினை முழுவதும் நாசப்படுத்தி விடுவதையே கொள்கையாகக் கொண்டு அதில் வெற்றி பெறவும் செய்துவிடும். ஜான் டி. பார்க் அண்டு சன்ஸ் என்ற கம்பெனி இந்த சர்வாதிகாரத்தை ஒழிக்க வேண்டும் என்று எதிர்ப்பு காட்டி, நீதிமன்றத்தில் தடை உத்தரவுக்கு மனுச்செய்தனர். இது ஒரு குறிப்பிட்ட காரணத்தினால் மறுக்கப்பட்டாலும் கூட, பொதுவான கொள்கை என்ற வகையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. வியாபாரத்தின் ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்துவதற்கான சதி செய்யும் முயற்சியினை தவிர்க்கும் பொருட்டு எல்லா மனிதரும் ஒன்றுகூடி கண்டனம் தெரிவித்தனர். இந்த விஷயம் ஒரு எல்லைக்கும் அப்பாற்பட்டதாய் இருந்தது. ஏனெனில் இப்படிப்பட்டதொரு டிரஸ்ட் மனித வாழ்வுடன் விளையாடக் கூடியதாக இருந்தது. ஒருவேளை அனுமதி அளிக்கப்பட்ட மருந்துவகைகளின் விலையைச்

சற்று உயர்த்தினால் கூட பரவாயில்லை. இது ஒரு குறிப்பிட்ட குறைபாடாகவே காணப்படுகிறது. ஏனெனில் நாணய மதிப்பீட்டில் ஒரு வீழ்ச்சி உண்டாகும்; ஆனால் ஒருவேளை குனைன், ஒப்பியம் அல்லது அப்பிரி என்ட்ஸ் போன்ற மருந்துகள் ஏழைகளுக்கு கிடைக்காத அளவுக்கு விலையை உயர்த்தும் ஆபத்தும் இருக்கிறது. திரு.ப்ரேயன்னுடைய ஆதரவாளர்கள் டிரஸ்ட் ஒழுங்குகளை முதலீட்டிற்கு எதிரான குற்ற சாட்டில் முக்கிய விஷயமாய் வைத்திருக்கின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதோடு இதுபோன்ற விஷயங்கள் இவர்களது வாதத்துக்கு நல்ல படிப்பினையை கொடுக்கிறது."

## இங்கிலாந்தில் இருக்கும் டிரஸ்ட்

டிரஸ்ட் என்ற பதமே அமெரிக்க கண்டுபிடிப்பாக இருப்பினும், லண்டனின் "ஸ்பெக்டேட்டர்" ரின் வெளியீட்டில் அந்த பதம் அமெரிக்கர்களுக்கு மட்டுமே பிரத்தியோகமானது இல்லை என்று கூறுகிறது. அதன் ஆசிரியர் கூறுவதாவது :

"டிரஸ்ட்டுகள் நமது பிரிட்டிஷ் வாணிபத்தின் சில இடங்களை பிடிக்க ஆரம்பித்திருக்கின்றன. தற்போது பர்மிங்ஹாமில் தனது தலைமை இடத்தை வைத்துக் கொண்டு, ஒரு கூட்டாகவோ அல்லது டிரஸ்ட்டாகவோ, கிரேட் பிரிட்டன் முழுவதிலும் இரும்பு கட்டில் செய்யும் வியாபாரத்தில் இருக்கிறது. அதோடு இதன் சட்டதிட்டப்படி இந்த டிரஸ்டுடன் சேராத வேறு யாருமே பித்தளை அல்லது இரும்பு கட்டில்களை செய்ய தொடங்க முடியாதபடி மிகவும் சாமர்த்தியமாய் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதோடு கூட ஒரு வேளை சட்டத்தின் உதவியோடு கூட ஏதாவது அனுமதி பெற முயற்சித்தாலும் பெரும்பாலும் அது அவருக்கு மறுக்கப்படும். எப்படியாகிலும் அந்தத் தொழிலை தனியாகவே ஆரம்பித்து விடலாம் என்றாலும், அவருக்கு தேவையான கச்சாப் பொருட்களை வாங்கமுடியாது அல்லது தொழி-ல் வேலைக்கு பணியாட்களும் கிடைக்கமாட்டார்கள். ஏனெனில் இந்த கூட்டுறவுகளுக்கே இரும்பு மற்றும் பித்தளை கட்டில் சட்டங்களை வழங்கும்படி ஒப்புக் கொண்டிருக்கின்றனர். அதோடு கூட தொழிலாளிகளும் கூட தங்கள் தொழிற்சங்கங்களுக்கு கட்டுப்பட்டவர்களாய் அதனோடு தொடர்புடைய



தயாரிப்பாளர்களுக்காக மட்டுமே உழைப்பவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே கொள்முதல் செய்பவர்களும் கூட பொருட்களை விலைக்குறைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதனால் வெளிநாட்டு போட்டியாளர்களையே எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த கட்டில் டிரஸ்டானது தற்போது மிகவும் வெற்றிகரமாக நடக்கிறது. ஆகவே உள்நாட்டில் இருக்கும் இன்னும் பிற வர்த்தகங்களும் இதை உற்சாகத்துடன் பின்பற்றுகின்றன."

ஆயிரம் கோடி டாலர் முதலீட்டை கட்டுக்குள் வைத்திருக்கும் இந்த கூட்டுறவுகளும், டிரஸ்ட்டுகளும் உண்மையில் மிகப்பெரிய சக்திகளாக இருக்கின்றன; ஒரு வேளை இதே நிலைமை கடந்த 20 வருடங்களைப் போல் இன்னும் சில வருடங்களுக்கு தொடருமானால், பொருளாதாரம் என்ற பிடியினால் இவை உலகையே வெகு சீக்கிரத்தில் தங்கள் கட்டுக்குள் வைத்துக் கொள்ளும். வெகு விரைவில் உலக நுகர்வோர் பொருட்களின் விலையை நிர்ணயிப்பது மட்டுமன்றி தொழிலாளிகளின் முதலாளிகளாக மாறி, ஊதியத்தை கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் பெற்றுவிடும்.

ஆம், தனிப்பட்ட தொழில் முதலீட்டாளர்களால் சாதிக்க முடியாதவைகளையெல்லாம்,இந்த "டிரஸ்ட்டுகள்" சமீப காலத்தில் மிக நேர்த்தியாகவும், மிக விரைவாகவும் செய்து முடிக்கின்றன. உண்மையில், அரசாங்கத்தால் நடத்தப்பட்டிருந்தால் பொது மக்களால் கைவிடப்பட்டும், தோற்கடிக்கப்பட்டும் இருக்கக்கூடிய மிக கடினமான காரியங்களைக் கூட தனியார் கூட்டுறவு நிறுவனங்கள் மிகவும் வெற்றிகரமாய் செயல்படுத்தியிருக்கின்றன. மிகப் பெரிய முதலீடுகளை வைத்திருப்பதனால் இதை முழுவதுமாய் குறை கூறவேண்டும் என்று தவறாக புரிந்துக் கொள்ளக் கூடாது; ஆனால் ஒவ்வொரு வருடத்தின் அனுபவமும் இவர்களது பொருளாதார வ-மையை அதிகப்படுத்துவதோடு மட்டுமன்றி, அவர்களது விவேகத்தையும் அதிகப்படுத்துகிறது என்பதை குறிப்பிட்டு சுட்டிக் காட்டுகின்றோம். மேலும் அதோடு கூட மக்களுடைய விருப்பங்களும், சுதந்திரமும் ஒரு அச்சுறுத்தலை பெறும் வேளை இன்னும் வரவில்லை என்றாலும் மிகவேகமாக அதை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். யாவருமே சொல்லுவது என்னவெனில்,

"ஏதாவது செய்யப்படவேண்டும்!" என்பது தான். ஆனால் என்ன செய்வதென்று யாருக்கும் தெரியவில்லை. உண்மையில் மனித குலமே இந்த தற்போதைய சுயநலமான சமுதாய இயக்கத்தின் விளைவாய் உருவாகிவிட்ட இந்த ராட்சத சக்திகளின் இரக்கத்தை எதிர்பார்த்து மனுக்குலமே உதவியற்ற நிலையில் இருக்கிறது. ஆகவே இவர்களுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை தேவனே.

ஆம், இந்த மாபெரும் சக்திகள் பெரும்பாலும், தங்களது எண்ணங்களை நிறைவேற்றும்படி தங்களது அதிகாரத்தை பயன்படுத்துகின்ற மனிதரையே பொதுவாக தலைமையாக கொண்டிருக்கின்றன. அதுமட்டுமன்றி அதன் அதிகாரமானது மிகவும் சக்தி வாய்ந்ததாய் இருக்கின்றது. மேலும் அதன் திறமை, முக்கியமாய் சுயநலத்தோடு வழிநடத்திச் செல்லப்படுகிறது. சந்தர்ப்பங்கள் வாய்க்கும் போதும், சூழ்நிலை சாதகமாக அமையும் போதும், காலத்துக்கு ஏற்ற விதமாய் பொதுமக்களின் மீதும் தன் தொழிலாளிகள் மீதும் பாரத்தை கூட்டிக் கொண்டே வருகிறது.

4000 வருடங்களுக்கு முன் உண்மையில் இருந்த ராட்சதர் மிரட்டியது போல தற்போது இந்த "டிரஸ்ட்டுகள்" மனித குலத்தை அச்சுறுத்தி வருகின்றன. அந்த ராட்சதர்களோ வீழ்ந்து போன ஆதாமின் சந்ததிகளுக்கும் மேலாய் மனிதருள் "புகழ் பெற்றவர்களா"கவும் அபூர்வமான திறமையும், விவேகமும் நிறைந்தவர்களாய் இருந்தார்கள். அவர்கள் "கலப்பினத்தை" சேர்ந்தவர்களாய் இருந்தபடியால், ஆதாமின் சந்ததியாருக்கு இருந்த வ-மையோடு சேர்ந்து புதிய பலத்தோடு இருந்தனர். அதைப் போலவே இந்த கூட்டுறவுகளான ராட்சதர்களும் கூட வ-மையும், சக்தியும், தந்திரமும் நிறைந்தவர்களாய் இருப்பதனால் அவர்களது வளர்ச்சியை பார்க்கும் போது, தெய்வீக குறுக்கீடு இல்லாமல் அவர்களை மேற்கொள்ள முடியாதோ என்று மனம் சோர்ந்து போகும் அளவிற்கு இருக்கின்றார்கள். அவர்களது முழு அதிகாரங்களும் இதுவரைக்கும் முழுமையாய் நடைமுறைக்கு வரவில்லை. இந்த ராட்சதர்களும் கூட "கலப்பினத்தவர்களே"; எப்படியெனில் வீழ்ந்துபோன மனுகுலத்தோடு கிறிஸ்தவ வளர்ச்சியும், விழிப்புணர்வும் சேர்ந்து செயல்படுவதுதான். அவைகள் தற்போது பெற்றிருக்கும் விவேகமே அதற்கு காரணமாய் இருக்கின்றன.



ஆனால் மனிதனுடைய தேவையும், தேவனுடைய சந்தர்ப்பமும் ஒரே சமயத்தில் நெருங்கி வருகின்றன. மேலும் ஜலப்பிரளயத்திற்கு முன்பிருந்த உலகின் ராட்சதர்கள் தண்ணீரின் வெள்ளத்தினால் அழிக்கப்பட்டது போல, இந்த கூட்டுறவு ராட்சதர்களும் வரப்போகின்ற எரிச்ச-ன் அக்கினியால் அழிக்கப்படுகிறவைகளாக இருக்கின்றன. இதை அடையாளமாகக் கூறும் "தேவனுடைய எரிச்ச-ன் அக்கினி," ஏற்கெனவே பற்றியெரிய ஆரம்பித்து விட்டது; "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலமாக" அது இருக்கப்போகிறது. இந்த "அக்கினி" யானது இந்த சுயநலம் மற்றும் துர்க்குணம் என்ற அரக்கர்களை பட்சித்துப் போடும்; அவர்கள் வீழ்ந்து போவார்கள், இனி ஒருக்காலமும் எழும்பமாட்டார்கள். *ஏசா.26:13,14; செப்: 3:8,9.*

## மிருகத்தனமான அடிமைத்தனத்துக்கு எதிராக நாகரீகமான அடிமைத்தனம்

இருக்கின்ற தொழிலாளர் விநியோகமும் அதற்குண்டான தேவையையும் பார்க்கும் போது கடந்த காலத்துக்கும், நிகழ்காலத்துக்கும், எதிர்காலத்துக்கும் முரண்பட்டதாய் இருக்கின்றது. கடந்த நூற்றாண்டிற்குள் தான் அடிமைகளை விற்கும் வியாபாரம் பொதுவாகவே உடைத்தெறியப்பட்டு அடிமைத்தனமே ஒழிக்கப்பட்டது. ஒருகாலத்தில் இது மிகவும் சர்வசாதாரண காரியமாய் இருந்தது. ஆனால் மெதுவாக இது "கொத்தடிமை" முறையோடு கலந்து ஐரோப்பா, ஆசியா நாடுகள் முழுவதும் பரவியது. 1838ல் தான் கிரேட் பிரிட்டனில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. அரசாங்கமானது அடிமைகளை வைத்திருந்த முதலாளிகளுக்கு ஏறக்குறைய 100,000,000 டாலர் (20,000,000 பவுண்ட்) நஷ்ட ஈட்டை வழங்கியது. பிரான்சானது 1848ல் தனது அடிமைகளை விடுவித்தது. இந்த மனித அடிமைத்தனத்துக்கே ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காக கிறிஸ்தவ குரல்களும், கிறிஸ்தவ எழுத்துக்களும் பெரும் பாடுபட்டன என்பதை மறுக்க இயலாது; ஆனால் அதே சமயத்தில் தொழிலாளரின் உலக சந்தையின் நிலைமையை மாற்றுவதற்கு இந்த விஷயமானது புதியதொரு கோணத்தில் உருவெடுத்தது; மேலும் நஷ்ட ஈடு தொகையானது அடிமைகளின்

முதலாளிகள் புதியதொரு செயல் முறைக்கு தங்களை மாற்றிக் கொள்ளும்படி அவர்களை ஒருமைப்படுத்தியது. கிறிஸ்தவராக குரல்களும் எழுத்துக்களும் அடிமைத்தனத்தை ஒழிப்பதை துரிதப்படுத்தின. ஆனால் அது எப்படியும் கொஞ்சகாலத்தில் திரும்ப வந்துவிடும்.

இயந்திர கண்டுபிடிப்பு மற்றும் ஜனத்தொகை அதிகரிப்பு இவைகளின் அழுத்தத்தினால் நவீன சுயநலமான போட்டியின் செயல்பாட்டின் கீழ் இந்த "அடிமைத்தனமானது" இயற்கையான ஒரு அழிவை சந்தித்தது. மேலும் மதம் மற்றும் நெறிமுறைகளின் ஆதரவோடு, நாகரீக மேம்பாடு அடைந்துவிட்ட நாடுகளில் அடிமைத்தனத்தை ஒரு சாதாரண காரியமாக மக்களிடையே கொண்டுவருவது என்பது இயலாத காரியமாகும். அது வருமானத்தைக் கொடுக்கவும் செய்யாது. (1) ஏனெனில் இயந்திரங்கள் தொழிலாளர், புத்திசா-கள் மற்றும் கல்லாதவர் ஆகியோரின் இடத்தை பெருவாரியாக பிடித்துவிட்டது. (2) ஏனெனில் கற்றறிந்த ஒரு தொழிலாளி, கல்லாத ஒரு தொழிலாளியைக் காட்டிலும் அதிகமான மற்றும் மேலான வேலையைச் செய்வான். (3) ஏனெனில் அடிமைகளை நாகரீக வளர்ச்சி பெறவும், சிறிதளவாவது கல்வி அறிவை பெறவும் செய்ய வேண்டுமாயின் அவர்களது உழைப்பின் மதிப்பானது அடிமையில்லாத தொழிலாளியைக் காட்டிலும் அதிகமாகும்; அதோடு கூட கொஞ்சம் அறிவுபடைத்த, திறமையான அடிமையை கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாகிவிடும். இவர்களை சதாரணமாய் அவசியத்துக்கு மட்டுமே கைகால் கட்டப்படும் விடுதலையுடன் இருக்கும் தொழிலாளியைக் காட்டிலும் லாபகரமாய் உபயோகப்படுத்துவதும் கடினமே. ஒரே வார்த்தையில், உலக அளவிலே எதிரிகளை அழிக்கவும், அடிமைகளை விடுவிக்கவும் நடத்தப்படும் போரானது பெரிய அளவில் லாபகரமான வியாபார போட்டியினால் எழும் போரை காட்டிலும் ஆதாயம் குறைவுள்ளதே. மேலும் "தேவைப்பட்ட அடிமைகளை" மட்டும் விடுவித்துக் கொள்வது தகுதியானதும், ம-வானதுமாய் இருக்கும்.

ஏற்கெனவே அடிமையாக இல்லாமல் புத்திகூர்மையாக இருக்கும் தொழிலாளி, ஒன்றும் அறியாத அடிமைத் தொழிலாளியைக் காட்டிலும் ம-வானவன்; ஒரு வேளை உலகமனைத்துமே புத்திசாதுர்யத்தால் விழித்துக் கொள்ளுமேயாகில், அதேசமயம் அதிவேகமாய் எண்ணிக்கையில் பெருகிவிடுவதும், ஒரு என்ஜினானது நீராவியின் முழு பலத்தோடு கூட எந்தத் தடையும் அல்லது மேற்பார்வையாளரும் இன்றி ஓடுவதற்கு சமமாய் தற்கால சமுதாய ஒழுங்குகள் தன்னைத்தானே நாசப்படுத்திக் கொள்ளும் பணியில் ஈடுபடுவது மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

விநியோகம் மற்றும் தேவை என்ற கோட்பாட்டின் மீது தற்போதைய சமுதாயம் அமைக்கப்பட்டிருக்கின்றபடியினால், இவ்வுலக சுயநலத்தின் போட்டிக்கு எதிராக எந்த தடைக்கல்லோ அல்லது மேற்பார்வையாளரோ கிடையாது. மொத்த அமைப்புமே இந்த கோட்பாட்டின் மீதே கட்டப்பட்டிருக்கின்றன. சுயநலத்தின் வேகம் என்பது சமுதாயத்தை கீழ் நோக்கி அழுத்தும் சக்தியாக நாளுக்கு நாள் வல்லமையாக வளர்ந்து வருகிறது. பெரும்பாலும் காரியங்கள் இப்படியாகத்தான் தொடரும், ஆகவே, இன்னும் படிப்படியாக கீழே போய் அரசியல் குழப்பத்தில், சமுதாயமே நிலைகுலைந்த பின்தான் இது உணரப்படும்.

## மேலும் கீழும் இருக்கும் எந்திரக் கல்-ன் இடையே மனுக்குலம்

தற்போதுள்ள காரியங்களின் முறைமைகள் தாங்கள் இயந்திர கற்களின் இடையே இருப்பதை மக்களுக்கு மிகமிகத் தெளிவாய் எடுத்துக்காட்டி வருகின்றன. ஏதாவது ஒரு வழியில் தடுக்கப்பட்டாலொழிய வெகு நாட்கள் தள்ளிப் போகாமல் சீக்கிரத்திலேயே அதன் முடிவானது தங்களை மிகவும் பரிதாபமான, நேர்மையற்ற அடிமைதனத்துக்குள் கொண்டு போவதையும் இவர்கள் உணருகின்றனர். இப்படிப்பட்டவைகளே, உண்மையில் இருக்கின்ற நிலையாகும்; மனித தேவையென்பது இயந்திரக் கற்களுக்கிடையில் மக்களை நசுக்குகின்ற நிலையாகும்; தேவை மற்றும் விநியோகத்தின் சட்டமே கீழே நிலையாக இருக்கும் கல்லாகும். இது ஏகாதிபத்தியம், டிரஸ்ட் மற்றும் பொருளாதார

கூட்டுறவுகளின் தூண்டு கோல், நெம்பு கோல் மற்றும் உருளைகள் ஆகிய ராட்சத வ-மையின் உதவியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட சுயநலம் என்னும் மேல் கல்லுக்கு நெருங்கி வருகிறது. உலகின் ஜனத்தொகை அதிகரிப்பினாலும் அறிவு பெருக்கத்தினாலும் இன்னும் அதிகதிகமாய் நெருங்கி வரச் செய்கிறது. [இது பெர்-னின் புள்ளிவிவரத்துறை கணக்கின்படி 1887ல் நீராவி என்ஜின்கள் (வல்லமையுள்ள அடிமைகள்) ஏறக்குறைய 1000 மில்-யன் மக்களுக்கு பதிலாக பணியில் இவ்வுலகம் முழுவதும் இருந்தது அல்லது உலகின் தொழிலாளிகளின் எண்ணிக்கையை விட 3 மடங்கு அதிகமாக செயல்பட்டது. அப்போதிருந்து மின்சாரம் மற்றும் நீராவி சக்தியைக் காட்டிலும் 2 மடங்குக்கும் மேலாக இப்போது இருக்கிறது. ஆனாலும் இந்த இயந்திரங்கள் பெரும்பாலும் எல்லா நாகரீகமடைந்த நாடுகளிலும் காணப்பட்டது. இவைகளின் ஜனத்தொகை மொத்தத்தில் 1/5 பாகம் இருந்தது] இயந்திரக் கல்-ன் மற்றுமொரு மேல்கல்-ன் உந்துகின்ற சக்தியானது மாபெரும் கனத்த பல் சக்கரமாகும். கற்பனை செய்ய முடியாத அளவு செல்வமும், சுயநலத்தோடு கூட பயிற்சி பெற்ற அறிவின் பலமுமாக இது இருக்கிறது. மக்களை நொருக்கிக் கொண்டிருக்கும் செய-ன் முடிவை குறித்து பார்க்கும் போது இங்கிலாந்தில் லண்டனில் வெளி வந்திருக்கும் ஒரு அறிக்கையை நாம் கவனிப்போம். 938, 293 பேர் ஏழைகள், 316,834 பேர் அதிக ஏழைகள், 77,610 பேர் எந்த ஆதரவும் இல்லாதவர்கள் ஆக மொத்தம் 1,292,737 பேர் உலகின் மிகப் பெரிய நகரத்தின் ஜனத்தொகையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகம் ஏழ்மையில் வாடுகின்றனர். ஸ்காட்லாந்தின் அதிகாரப்பூர்வமான அறிக்கையின்படி மூன்றில் ஒருபாகம் குடும்பத்தினர் ஒரு அறையே உள்ள வீடுகளில் வசிக்கின்றனர். மூன்றில் ஒன்றுக்கும் அதிகமானவர்கள் இரண்டு அறையுள்ள வீடுகளிலே வசிக்கின்றனர். நியூயார்க் பட்டணத்தில் 21,000 ஆணும், பெண்ணும், குழந்தைகளும் கடும் குளிரில், அவர்களால் வாடகை செலுத்த இயலாததால் வெளியேற்றப்பட்டனர். மேலும் ஒரு வருடத்தில் 3,819 குடிமக்கள் அனாதைகளாக கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டனர். ஏனெனில் இவர்களால் மானத்தோடு வாழவோ அல்லது சாகவோ முடியாத நிலை. இதை நினைவில் கொண்டால் ஒவ்வொரு நகரத்திலும் இதே விதமாக அங்குள்ள குடிமக்களில் லட்சக்கணக்கான மக்கள் மடிவதாக புள்ளி விவரங்கள் கூறுவதை பார்க்கலாம்.



“அமெரிக்கன் மேகசின் ஆப் சிவிக்ஸ்” என்ற பத்திரிக்கை ஆசிரியர் திரு.ஜெ.ஏ.கா-ன்ஸ் என்பவர் அமெரிக்காவின் புள்ளி விவரக் கணக்கின்படி அமெரிக்க வீட்டு உரிமையாளர்களின் ந-ந்துவரும் நிலை குறித்து ஒரு முறை விவாதித்தார். அதை குறித்து அவர் கூறும்போது அச்சுறுத்துகின்ற ஆபத்தான அறிகுறிகளுக்கும் திடுக்கிடவைக்கும் உண்மைகளுக்கும் நம்மை ஆயத்தமாகும்படி கூறுகிறார். கீழ்க்கண்டவற்றை குறிப்பிடுகிறோம்:

“சில நூற்றாண்டுகளுக்கு முன்பு பெரும்பாலான குடிமக்கள் சொந்த வீடுகளில் வாழ்ந்தனர்; அவர்களது வீடுகள் உண்மையில் எந்த நிர்ப்பந்தத்திற்கும் அப்பாற்பட்டவைகளாக இருந்தன ; இன்றோ பெரும்பாலானவர்கள் வாடகை வீடுகளில் வசிப்பவர்களாகி விட்டனர்.”

உண்மையில் அடமானத்தில் இருக்கும் ஒரு வீட்டில் இருப்பவரும் வாடகைக்கு இருப்பவரே. இந்நாட்டின் 84% குடிமக்கள் உண்மையில் வாடகைக்கு இருப்பவர்களாகவே இருக்கின்றனர்.

மேலும் அவர் கூறுகிறதாவது : “இந்த திடுக்கிடவைக்கும் விளைவுகள் மிகவும் குறுகிய காலத்திலேயே சம்பவித்து விட்டன. மேற்குபக்கம் இருக்கும் விஸ்தாரமான கா-யிடங்களில் குடியேற அநேகருக்கு இடங்கொடுத்து மிகப்பெரிய தொழில் துறைகளும் வரவேற்கப்படுகின்றன. வேலைவாய்ப்பையும் நல்ல ஊதியத்தையும் அளிக்கவும் செய்கின்றனர். ஆகவே மேற்குப்பகுதி முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டு அதன் நிலங்களெல்லாம் ஏகாதிபத்தியத்துக்குள் இருப்பதின் விளைவு என்ன என்பதை கவனியுங்கள். இதன் ஜனத் தொகை இயற்கை ரீதியாக மட்டுமன்றி குடியேற்றத்தினாலும் ஆயிரமாயிரமாக பெருகுகிறது. அதனுடைய கனிவளங்களும், சுரங்கங்களும் வெளிநாட்டு முதலீட்டு கூட்டுறவுகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. போக்குவரத்து முறைமைகள் சில கோடீஸ்வரரது விருப்பத்துக்கிணங்க

கட்டுப்படுத்தப்படுகிறது. பொது நிலங்களே இல்லை என்ற அளவிற்கு ஆக்கிரமிப்பும், உள்நாட்டு நிலங்கள் ஏகாதிபதிகளிடமும், வாணிபம் செய்பவரிடமும் அகப்பட்டு தொழிலாளர்களின் கைகளுக்கு எட்டாத தூரத்துக்கு போய்விட்டிருக்கிறது."

ஐரோப்பிய புள்ளி விவரத்தோடு இதை ஒப்பிட்டு பார்க்கும் போது திரு. கா-ன்ஸ் இறுதியாய் கூறுவது, உலகின் மாபெரும் ஜனநாயக நாட்டின் நிலைமையானது ஐரோப்பாவைக் காட்டிலும் மிகவும் மோசமாகவே இருக்கிறது, ஆனால் ஆயிரக்கணக்கான அடமான வீடுகள் வா-பர்களின் சொந்த வீடுகளாயிருந்தன. (ஐரோப்பாவாக இருப்பின் தங்களது பெற்றோரோடு வசிப்பர்) மேலும் குடியேறியிருப்பவர்கள் "தவணை முறைகளில்" இதனை வாங்குகிறார்கள் என்பதை கருத்தில் கொள்ளாவிடில் திரு. கா-ன்ஸ் அவர்களது புள்ளிவிவரம் தவறானதாகிவிடும். ஆனால் வெளிப்படையான உண்மையானது மிகவும் மோசமாக இருக்கிறது. இப்போதிருக்கும் கடினமான சூழ்நிலையை பார்க்கும் போது அடமான வீடுகள் எதுவும் கடனை தீர்க்க முடியாது. அது பெரிய செல்வந்தரால் மட்டுமே கூடிய காரியமாக இருக்கும்.

மனித சக்தியும், நேரமும் சில நேரங்களில் எவ்வளவு ம-வாக விற்கப்படுகின்றன என்பதை வெகு சிலரே உண்மையில் புரிந்து கொள்கின்றனர். அப்படி புரிந்து கொண்டவர்களுக்கு இந்த தீமைக்கான விமோச்சனம் என்னவென்று தெரியவில்லை. அதோடு அத்தீமையின் பிடியி-ருந்து தங்களை விடுவித்துக் கொள்வதிலேயே மும்முரமாய் இருந்துவிடுகின்றனர். உலகின் மிகப்பெரிய நகரங்கள் எல்லாவற்றிலுமே ஆயிரக்கணக்கான "வியர்வை சிந்தும் உழைப்பாளிகள்" இருக்கின்றனர். இவர்கள் தென்தேசத்து அடிமைகளை காட்டிலும் தங்கள் வாழ்வின் அடிப்படை தேவைகளுக்காக நீண்ட நேரம் கடுமையாய் உழைப்பவர்களாய் இருக்கின்றனர். பார்ப்பதற்கு சாதாரணமாய் அவர்கள் சுதந்திரமானவர்களைப் போல இருந்தாலும், உண்மையில் அவர்கள் அடிமைகளே, அதுவும் தங்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு அடிமைகள். விருப்பம் கொள்வதற்கு சுதந்திரம் இருக்கிறது. ஆனால் அதை தங்களுக்காகவோ பிறருக்காகவோ செய்து முடிக்க



மிகக்குறைந்த சுதந்திரமே அவர்களுக்கு உண்டு.

இதை குறித்த ஒரு பகுதி "பிரிஸ்பிடேரியன் பேனரில்" வெளிவந்திருப்பதை இங்கு கூறுகிறோம்:

"வியர்வை சிந்த உழைக்கும்" முறையானது அமெரிக்க மண்ணில் வந்து அதனுடைய சாபத்தோடு கூட சேருவதற்கு முன் அது வெளிநாடுகளில் தான் பிறந்து வளர்ந்தது. இது ஆடை தயாரிப்புத் துறையில் மட்டுமே நின்றுவிடவில்லை. ஆனால் இடைத்தரகர் மூலம் செயல்படும் இடங்கள் எல்லாவற்றிலுமே பரவியிருக்கிறது. இடைத்தரகரோ அல்லது கான்டிராக்டரோ ஒரு குறிப்பிட்ட விலையில் வியாபாரிகளுக்கு தேவையான பொருட்களை தயாரித்து கொடுக்கும்படி நியமிக்கப்படுகின்றனர். பேரம் பேசும் பொதுமக்களின் பெரும்கூட்டம் வாங்கும் விதத்தில் விநியோகிக்கவும், அதேசமயத்தில் வியாபாரியும், இடைத்தரகரும் அவர்களது லாபத்தை பெரும் விதத்திலும், பொருட்களின் விலையானது மிகவும் குறைவாய் நிர்ணயிக்கப்பட வேண்டும். இதனால் ஏழை தொழிலாளிகளே அவதியுற வேண்டும்.

"இங்கிலாந்தில் பெரும்பாலும் எல்லா வியாபாரமுமே இந்த விதத்தில் தான் செயல்படுத்தப்படுகின்றன. காலணி வியாபாரம், உரோம வியாபாரம், திரைச்சீலை, மேஜை மற்றும் படுக்கைவிரிப்பு வியாபாரம், பெட்டி வியாபாரம் முத-யன இடைத்தரகரின் கட்டுப்பாட்டுக்கு வந்து விடுகின்றன. ஆனால் மக்களோ பட்டினி கிடக்கும் அளவிற்கு குறைந்த ஊதியத்தினால் மிகவும் தாழ்த்தப்பட்டிருக்கின்றனர். ஆனால் நம் நாட்டின் ஆடை தயாரிப்பு வியாபாரத்தை குறித்தே நாங்கள் பேச முற்படுகிறோம். 1886ல் நியூயார்க்கில் 10 ஸ்வெட்டர் கடைகளே இருந்தன. ஆனால் இப்போதோ நூற்றுக்கணக்கானவைகள் வந்துவிட்டன. சிக்காகோ பட்டணத்திலும், மற்ற பட்டணங்களிலும் கூட இது இப்படியாகவே இருக்கின்றது. இவ்விதக் கடைகள் பெரும்பாலும் யூதருடையவை, நியூயார்க்கிலும் போஸ்டனிலும் தூரத்தில் உள்ள மேற்கத்திய நாட்டு சகோதரர்களைக் காட்டிலும் சாதகமான சூழ்நிலையில் இருக்கின்றபடியால் வெளிநாட்டவர்களின் மீது இவர்களது கை

ஓங்கியிருக்கிறது. புதிதாக நாட்டுக்குள் வருகின்றவர்கள் அந்நாட்டு மொழியை பேச முடியாததால் இவர்கள் மீது திணிப்பது வெகு எளிதாக இருக்கின்றது. இவ்வித தொழிலாளிகள் வேலைக்கு எடுக்கப்பட்டு, சிறுசிறு கூட்டமாய் மிகக் குறைந்த காற்றோட்ட வசதியுடைய அறைகளில் சில சமயங்களில் 8 பேர் தங்கக்கூடிய சிறிய அறையில் 20 அல்லது 30 பேர் அடைக்கப்பட்டு அவர்களது உணவு, சமையல், வாழ்வு யாவையும் பார்த்துக் கொண்டு, 18-20 மணி நேரம் ஒரு நாளில் கடினமாய் உழைத்து சம்பாதித்து தங்கள் ஜீவனத்தை நடத்த வேண்டியிருக்கிறது.

"இவ்விதமான வேலைகளுக்கு கொடுக்கப்படும் கூ-யானது மனுக்குலத்திற்கே அவமானத்தை கொடுக்கும். வாரத்தில் 2 முதல் 4 டாலர் வரை சம்பாதிக்க மனிதன் அத்தனை கடினமாக உழைக்கவேண்டியிருக்கிறது. கீழ்க்கண்ட விவரமானது இந்த விஷயத்தை குறித்து ஆராய்ச்சி செய்யும் ஒருவர் கொடுத்தது. 'பாஸ் ஸ்வெட்டர்' என்கிறவர்கள் தங்களுடைய வியாபாரிகளிடம் பெறும் விலை பட்டியலை இவர்களுக்கு கொடுத்திருக்கின்றனர்."

| | |
|---|---|
| மேல் அங்கி தயாரிக்க..... | $. 0.76 முதல் 2.50 வரை |
| வியாபாரிகள் அணியும் அங்கி தயாரிக்க.... | $. 0.32 முதல் 1.50 வரை |
| கால் சட்டைகள் தயாரிக்க...... | $. 0.25 முதல் 0.75 வரை |
| உள்பனியன் (1டஜன்) தயாரிக்க..... | $. 1.00 முதல் 3.00 வரை |
| அரைகால் சட்டை தயாரிக்க (1 டஜன்).... | $. 0.50 முதல் 0.75 வரை |
| பருத்தி மேல் சட்டை (1 டஜன்) தயாரிக்க... | $. 0.30 முதல் 0.45 வரை |

"இந்த விலையி-ருந்து பெரும்பகுதியானது 'பாஸ் ஸ்வெட்டர்' கம்பெனியால் தனது லாபவிகிதமாய் எடுத்துக் கொள்ளப்படும். அடுத்து போக்குவரத்துக்கான செலவும் கூட எடுக்கப்பட்டு விடும். இவை யாவுக்காகவும் தொழிலாளியின் உழைப்பே செலவிடப்படுகிறது. (ஆனால் ஊதிய விகிதமோ குறைவு) இதை பார்க்கும் போது ஆணும் பெண்ணுமாய் தங்களது வாழ்வின் அத்தியாவசிய தேவைகளை பெற எவ்வளவு கடினமாய் உழைக்க வேண்டியிருக்கிறது என்பதை கற்பனை செய்ய முடிகிறது. அரை கால் சட்டை டஜன் ஒன்றுக்கு தயாரிப்பாளர்களிடமிருந்து



'பாஸ் கம்பெனி' 65 சென்டுகள் பெறுகின்றன. ஸ்வெட்டருக்கு 35 சென்ட்டு மட்டுமே கிடைக்கிறது.

"தயாரிப்பாளர்களுக்கு கோடைக்கால கால் சட்டை தயாரிப்பில் 10 சென்ட் கிடைக்கிறது. இவ்விதம் 6 ஜோடி தயாரிக்க ஏறக்குறைய 18 மணி நேரம் பிடிக்கும். அங்கிகள் தயாரிக்க 15 ஆட்கள் தேவை. ஏனெனில் அதன் ஒவ்வொரு பகுதியையும் தனித்தனி ஆட்கள் தயாரிக்கின்றனர். ஒரு டஜன் ஜோடி தயாரித்தால் 60 சென்ட் கிடைக்கும். இவை வெகுசில எடுத்துக்காட்டுக்களே, தையல் அல்லது ஆடைத் தயாரிப்பு தெரிந்த எந்தப் பெண்ணுமே இதில் செலவிடப்படும் உழைப்பின் அளவையும் அறிந்திருக்கிறாள்.

"ஆனால் எல்லாவற்றிற்கும் தகுந்த தண்டனை உண்டு. சில நேரங்களில் தவறு செய்தவர்களோடு கூட சேர்ந்து அப்பாவிகளும் அவதியுறவேண்டியிருக்கிறது. இவ்வித ஆடைகள் மிகவும் சுகாதாரமற்ற சூழ்நிலையில் தயாரிக்கப்படுகின்றன. சில நேரங்களில் மனித சஞ்சாரத்துக்கே தகுதியற்றதொரு இடங்களில் இவை தயாரிக்கப்படுகின்றன. இவ்விடங்கள் வியாதி நிறைந்த கிருமிகள் நாற்றத்துடன் இருக்கும். இந்த வருடம் சிக்காகோவில் இது போன்றதொரு கடையில் நான்கு பேர் அங்கி தயாரிப்பில் இருந்ததை ஒரு பார்வையாளர் பார்த்தார். இந்த நால்வருமே உட-ல் சிவப்பு தழும்புகளை உண்டாக்கும் கடும் காய்ச்சலுடன் வேலை செய்து கொண்டிருந்தனர். மற்றுமொரு இடத்தில் இதே வியாதியால் ஒரு குழந்தை மரித்துக் கிடந்தது. தொழிலாளிகளோ அதைத் தாண்டியே நடந்து செல்கின்றனர். அந்த தொற்றுவியாதி மிக விரைவாய் பரவிக் கொண்டிருந்தது."

"ஐயோ! பொன் அத்தனை மதிப்புள்ளதாய் இருக்கிறது, ஆனால்
மாம்சமும் ரத்தமும் எவ்வளவு ம-வாகிப் போனது."

பரிதாபத்துக்குரிய ஏழைகளின் எண்ணிக்கை அதிவேகமாகக் கூடிக் கொண்டே வருகிறது; மேலே காண்பிக்கப்பட்டதைப் போல், தொழில் போட்டியானது மனுக்குலத்தினை குழிக்குள் மொத்தமாய் தள்ளுகிறது. இதில் நிலத்தரகரும், இயந்திர உரிமையாளர்களும் விதிவிலக்காகி விடுகின்றனர். இதே நிலைமை நீடிக்குமாயின் இவர்களது சொத்துக்களும் அதிகாரமும் அதிகமாகி,

கோடீஸ்வரர்களும் கூட இவர்களை ஏறிட்டுப் பார்க்கும் அளவிற்கு மாறிவிடும்.

இவ்விதமான நிலைமையானது என்றுமே தொடரும் என்பது சாத்தியமில்லை. இயற்கை நியதியான காரணமும் விளைவும் கூட அதற்குரிய தேவ தண்டனையை கொண்டுவரும். இப்படிப்பட்ட சூழ்நிலையை தேவ நீதியால் உருவாக்கப்பட்ட சட்டம் கூட என்றுமே அனுமதித்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. தேவன் கிறிஸ்துவின் மூலமாக நம்மை மீட்டு நமது மனுக்குலத்தின் தகுதியற்ற நிலைமையில் நம்மை ஆதரிக்கிறார்; மேலும் சுயநலம் மற்றும் தீமையின் பரவலான அதிகாரத்தி-ருந்து மனுக்குலம் விடுவிக்கப்படும் காலம் சமீபமாயிருக்கிறது. ரோ. 8:19-23.

சில வருடங்களுக்கு முன் "வெஸ்டர்ன் ஜர்ன-ல்" அந்த நாட்களின் சூழ்நிலையைக் குறித்து எழுதியிருந்ததைக் கீழே தருகிறோம். இது இக்காலத்திற்கு இன்னும் கூட பொருத்தமாயிருக்கும். அது கூறுகிறதாவது:

"நாட்டில் வேலையற்றவரது எண்ணிக்கை இன்று இரண்டு மில்-யன். இவர்களை சார்ந்து நம்பி வாழ்பவரது எண்ணிக்கை இதைக் காட்டிலும் நான்கு மடங்காக இருக்கக்கூடும்.

"ஒருவேளை இதைக் குறித்து ஏற்கெனவே நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அதன் உட்கருத்தை நீங்கள் புரிந்துகொள்ளும் வரை இதை நீங்கள் சிந்திக்க வேண்டுகிறேன். அதாவது 'உலகின் மிக சிறந்த அரசாங்கத்தின்' கீழ், 'இதுவரை உலகம் கண்டிராத மிகச் சிறந்த வங்கி முறைமைகளோடு,' எல்லாமே மிக மேன்மையான பாதையில் நடந்து, கிடைக்கக்கூடிய ஆடம்பர, சௌகரியம் மற்றும் ஈடு இணையற்ற உணவு உற்பத்தியுடன் இருக்கும்போதே ஏழில் ஒரு பாக ஜனத்தொகையானது நமது நாட்டில் உண்மையிலேயே பிச்சைக்காரராக தாழ்த்தப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கு பட்டினி கிடப்பதை தவிர வேறு வழியே இல்லை. விலைவாசி ஏற்றத்தால் விலை கொடுத்து வாங்க முடியாமல் தவிப்புடன் தானியக் கிடங்குகளையும் அதை சுமந்து செல்லும் இயந்திரங்களையும் பார்த்த வண்ணமாய் ஜனங்கள் பசியுடன் இருக்கின்றனர். ஜனங்கள் குளிரால் நடுநடுங்கிக் கொண்டு சகலவிதமான ஆடைகளும் நிரம்பியிருக்கும் கிடங்குகளின் நிழ-ல் ஏறக்குறைய நிர்வாணமாய் ஒதுங்கி நிற்கின்றனர். மிகவும் எளிதாய் வெட்டியெடுக்கப்படும் நூற்றுக்கணக்கான மில்-யன் டன் நிலக்கரியை வைத்திருந்தும், ஜனங்கள் குளிரால் விரைத்துப் போய் அன-ன்றி இருக்கின்றனர். வேலையின்றி இருக்கும் செருப்புத் தொழிலாளிகள், நிலக்கரியை தோண்டி கொடுக்கும் சுரங்கத் தொழிலாளிகளுக்கு காலணிகளைச் செய்ய மிகவும் ஆர்வமாய் இருக்கின்றனர். ஆகவே காலணியின்றி சுரங்கத்தில் கஷ்டப்படும் சுரங்கத் தொழிலாளி சந்தோஷப்படுவான். அதே விதமாய் பாதி உடலை மட்டும் ஆடையால் மூடியிருக்கும் 'கென்சாசின்' விவசாயிகள் தனது அறுவடை மற்றும் கதிரடிக்கும் கூ-யை கொடுக்கக்கூடிய அளவிற்கும் கூட தனது கோதுமையை விற்கமுடியாமல், கிழக்கத்திய ஆடை நெய்யும் தொழிற்சாலைகளில் தனக்கு வேண்டிய ஆடையை வாங்குவதற்கு தனது தானியத்தை பண்டமாற்று செய்வதற்கு விருப்பமுடன் இருக்கிறான்.

"இயற்கை வளத்தின் குறைவால் இன்று தேசம் கஷ்டப்படவில்லை. தேவையானதையோ அல்லது உபயோகமான பொருளையோ தயாரிப்பதில் விருப்பமோ, திறமையோ இல்லாமல் மில்-யன் ஜனங்கள் வேலையின்றி தவிக்கவில்லை. உற்பத்தியின் உபகரணங்களும், பண பரிமாற்றமோ வெகு சிலரது கைகளிலேயே பெரும் திரளாய் தேங்கி விட்டிருப்பதே இதற்குக் காரணம். நாம் புரிந்து கொள்ள ஆரம்பிப்பதற்கு எத்தனை தகுதியற்ற சூழ்நிலையாக இருக்கிறது; இன்னும் இன்னும் அதிகமாய் புரிந்து கொண்டால் நெருக்கடி இன்னும் தீவிரமாய் வளர்ந்து வருவது தெரியும். ஜனங்கள் வேலையின்றி குளிரில், பட்டினியுடன் இருக்கின்றனர். ஏனெனில் தங்களது உழைப்பை தங்களுக்கு தேவையான பொருட்களால் மாற்றிக் கொள்ள முடியவில்லை. இப்படிப்பட்ட காரியங்களை பார்க்கும் போது, நாம் பெருமை கொள்ளும் தற்கால நாகரீக வளர்ச்சியானது படுதோல்வியை நெருங்கிவிட்டது என்று புரிகிறதல்லவா? இந்நாட்டில் இருக்கும் வேலையற்றவர்களை நான்கு பேருடைய வரிசையாய் ஆறுஅடி தூரத்தில் நிற்க வைத்தால் அந்த வரிசை 600 மைல் நீளம் இருக்கும். இவர்கள் மீது சார்ந்திருப்பவர்களை இதே விதம் நிற்க வைத்தால் அந்த வரிசை 2,400 மைல் தொட்டுவிடும். இப்படிப்பட்ட கூட்டமானது அட்லாண்டிக்

முதல் பசிபிக் வரை - மணற்பாங்கான வளைவு முதல் (Sandy Hook) பொன் வாசல் (golden gate) வரை இருக்கும்.

“இப்படிப்பட்டதொரு தொழில் முறைமைகளுக்கு மாற்று வழியினை உருவாக்கும் திறமையானது மனுகுலத்தின் புத்தி கூர்மைக்கு இல்லாவிடில், இவ்வுலகில் மனுக்குலமே மாபெரும் தோல்வி கண்டுவிட்டதை நன்கு ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. (ஆம், இந்த இடத்தில் தான் தெய்வீக அருளானது வழி நடத்துகிறது; மனிதன் தனது இயலாமையையும் மெய்யான தேவனையும் அறியவேண்டும். இளம் ஆண் குதிரையின் மதிப்பை அறிய அது முத-ல் அடக்கப்படவேண்டும்) இத்தனை காலம் இல்லாததொரு மூர்க்கமான, கொடூரமான காரியம் என்னவெனில் இக்காலத்தில், அதன் அவசியம் இல்லாதிருக்கும் அதன் பராமரிப்புக்கென்று எந்த வசதியும் செய்து கொள்ளாத நமது செல்வச் செழிப்பான ராஜாக்களோடு சண்டையிட தொழிற்படை வீரரை பராமரிக்கும் முயற்சியில் இறங்குவதுதான்.”

மேற்கூறப்பட்ட விஷயமானது “விலை பட்டியலை செப்பனிட” வேண்டிய மிகவும் மோசமான மனச்சோர்வான காலத்தில் எழுதப்பட்டது. சந்தோஷப்படும்படியானதொரு சாதாரண நிலைமையாய் இது இருக்கவில்லை. எப்படியானாலும், அதே வருடத்தில் “ஹேரிஸ்பார்க் பேட்ரியாட்” கீழ்க்கண்ட புள்ளி விவரத்தை “வேலையற்றவர்களின் எண்ணிக்கை” என்ற தலைப்பில் கொடுத்திருக்கிறது:

“போஸ்டனில் 10,000 தொழிலாளிகள் வேலையில்லாது இருக்கின்றனர்; ஒர்செஸ்டரில் 7000 பேர்; நியூ ஹேவனில் 7000 பேர்; புரவிடன்ஸ் 9.6000 பேர்; நியூயார்க்கில் 100,000 பேர். “உட்டிக்கா” என்பது மிகச் சிறிய நகரம். ஆனால் அதில் வேலையற்றவரது எண்ணிக்கை 16,000; நியூஜெர்சியின் பேட்டர்சன்னில் பாதிபேர் வேலையின்றி இருக்கின்றனர். பிலடெல்பியாவில் 15,000; பால்டிமோரில் 10,000 பேர்; வீ-ங்கில் 3000 பேர்; சின்சினாட்டியில் 6000; க்ளைவ்லேண்டில் 8000; கொலம்பசில் 4000 பேர்; இன்டியான போ-ஸ்சில் 5000 பேர்; டெரி ஆட்டில் 2500 பேர்; சிக்காகோவில் 200,000 பேர்; டெட்ராய்டில் 25,000 பேர்; மில்வாக்கியில் 20,000 பேர்; மினா போ-சில் 6,000 பேர்; செயின்ட் லூயிசில் 80,000 பேர்; செயின்ட் ஜோசப்பில் 2,000 பேர்; ஒமாகாவில் 2,000 பேர்; பியூட் சிட்டியின் மோன்ட்டில் 5,000 பேர்; சான் பிரான்சிஸ்கோவில் 15,000 பேர்.”



“தி கம்மிங் நேஷன்” என்ற பத்திரிக்கையில் “நீ தீர்க்கவேண்டிய ஒரு பிரச்சனை” என்ற தலைப்பில் வந்த கட்டுரையின் முக்கிய சாராம்சத்தை மட்டும் கீழே கொடுக்கிறோம். தற்கால சூழ்நிலையை சில மனிதர் எவ்வளவு சாதாரணமாக எடுத்துக் கொள்கின்றனர் என்பதை இந்த பகுதி நமக்கு காட்டுகிறது. இந்த எச்சரிப்பு யாவுமே திரும்பத் திரும்ப தெளிவாக தீர்க்கத்தரிசியினால் சொல்லப்பட்ட படியே இருக்கிறது. “இப்போதும் ராஜாக்களே (எந்த விதத்திலாவது அதிகாரமும் வல்லமையும் நிறைந்த யாவருமே) உணர்வடையுங்கள். பூமியின் நியாயாதிபதிகளே; எச்சரிக்கையாயிருங்கள்.” அது கூறுகிறதாவது:

“தொழிலாளியை புதிய இயந்திரங்கள் படுவேகத்தில் இடமாற்றம் செய்து கொண்டிருக்கிறது என்பதை இப்போது நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். இப்படிப்பட்ட இயந்திரங்களை தயாரிப்பதில் எத்தனை ஆட்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது என்று கூறும் வாதம் நிற்காது. ஏனெனில் அப்படி வேலை கொடுக்கப்படும் எண்ணிக்கை இயந்திரத்தால் வேலையை இழப்பவரின் எண்ணிக்கையை விட மிகவும் குறைவே. ஒருவேளை அப்படியே பார்க்கப்போனால் உண்மையில் இந்த இயந்திரங்களின் உபயோகத்தால் பயன் ஏதும் இருக்காதே. ஆகவே இதனால் உண்மையில் மிகவும் தெளிவாகத் தெரிவது என்னவெனில், முன்பு தாங்கள் செய்துக் கொண்டிருந்த வேலையை தற்போது இயந்திரங்கள் செய்துவிடுவதால் அத்தனை பேரும் ஆயிரக்கணக்கில் வேலையின்றி நிற்கின்றனர். ஆகவே இதை எந்த மனிதரும் ஒரு நிமிடம் ஆழ்ந்து யோசித்தால் புரிந்து கொள்ள முடியும். முன்பு வேலை செய்து கொண்டிருந்தபோது பொருட்களை வாங்கியதைப் போல் வேலையற்ற நிலையில் அவ்வளவுக்கு வாங்க இயலாது. ஆகவே பொருட்களின் அவசியம் இதனால் வெகுவாய் குறைகிறது. இதனால் இன்னும் அநேகருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பும்

தடுக்கப்படுகிறது. இதனால் வேலையற்றவரின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகி, பொருட்களை வாங்கும் நிலை இன்னும் குறைந்து போகிறது.

"இந்த வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? ஒட்டு மொத்தமாய் எல்லா பொருட்களின் விலையும் குறைந்து போனதால், இந்த மனிதருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. இவர்களுக்கு என்று எந்த தொழிலும் இல்லை. ஏனெனில் இதே காரணத்தினால் எல்லா தொழிலுமே மக்களால் தேவைக்கும் மேல் நிரம்பி இருக்கிறது. அவர்களை கொன்றுவிடவும் முடியாது (வேலை நிறுத்தம் செய்தாலொழிய). அவர்களுக்கு போகும் இடமும் வேறு இல்லை. உண்மையிலேயே நான் கேட்கிறேன், அவர்களை என்ன செய்யப்போகிறீர்கள்? திறமையான விவசாயிகள் யாவருமே கடனில் மூழ்கி வருகின்றனர். ஆகவே இந்த மனிதர்கள் நிலத்தை உடையவர்களாய் இருந்தும் அங்கு இவர்களால் என்ன செய்துவிடமுடியும்?

"காட்டில் உள்ள மரங்களைப் (இலைகளைப்) போல் இந்த மனிதர் பெருகிவருகிறார்கள். இவர்களது எண்ணிக்கை மில்-யன் கணக்கில் இருக்கிறது. இவர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய நம்பிக்கை அநேகருக்கு இல்லை. அப்படியே இருந்தாலும், தற்போது வேலையில் இருப்பவர் நீக்கப்பட்டு அந்த இடத்தையே இவர்கள் நிரப்ப முடியும். அதனால் வேலையற்றவரது கணக்கில் வேலை போய்விட்டவர்கள் வந்து சேர்ந்து கொள்வர். இவர்களது இந்த நிலைமைக்கு நீங்கள் எவ்வகையிலும் பொறுப்பு அல்ல என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம். ஆனால் அன்பானவர்களே, இவர்களது இந்த நிலைமைக்கு நீங்களும் பொறுப்பாவீர்கள். இதை அநேக காலக்கட்டத்தில் நீங்கள் உணருவீர்கள். உங்கள் பாதையை (வழியை) மாற்றி இதை கேட்பதற்கு மறுப்பதினால் இந்த விஷயமானது நீக்கப்பட்டுவிட முடியாது. முன்னொரு காலத்தில் பிரெஞ்சு மக்கள் இப்படித்தான் எண்ணினார்கள். ஆனால் மாறுபட்ட விதத்தில் அவர்கள் அதை புரிந்து கொண்டனர். ஒருவேளை தற்போதைய தலைமுறை அதை மறந்து விட்டிருக்கலாம். அமெரிக்க ஐக்கிய நாட்டின் தற்போதைய தலைமுறை இந்தக் கேள்வியை இப்போது தீர்த்து வைக்க வேண்டும். ஏதாவது ஒரு வழியில் இதை



முடிவுக்கு கொண்டு வரவேண்டும். அது ஒரு வேளை சமாதானம், அன்பு, நீதி என்ற ரீதியில் இருக்கலாம். அல்லது யாரோ ஒரு மனிதன் அதிகாரத்தை தன் கையிலெடுத்துக் கொண்டு எல்லா உரிமைகளையும் தள்ளி நசுக்கி விடலாம். மறுபடியும் இதைச் சொல்கிறேன். நீங்கள் இந்தக் கேள்விகளுக்கு வெகுசில வருடங்களிலேயே பதில் சொல்லுவீர்கள்.

"பிரான்ஸ் நாடானது எச்சரிக்கப்பட்டது, ஆனால் அவர்களால் இதைக் கேட்க இயலவில்லை. காரணம் சீரழிந்த ராஜரீக உல்லாசம். நீங்களாவது கேட்பீர்களா? அல்லது ஐந்து அல்லது ஆறு மில்-யன் ஜனங்கள் உணவுக்காக இடும் கூக்குரலைக் கேட்கும் வரைக்கும் தற்கால நிலவரமானது கண்டுகொள்ளப்படாமல் போய்விடுமோ? இப்படிப்பட்ட உபத்திரவம் வரும்போது அது அமெரிக்காவில் 100 மடங்கு அதிகமாக இருக்கும். ஏனெனில் கடந்த நூறுஆண்டுகளாய் இங்கு நிலவும் சமுதாய நிலைமை அப்படிப்பட்டதாக இருக்கிறது. சுதந்திரத்தின் மீது இருக்கும் வாஞ்சையானது மிகவும் உறுதியாய் வளர்ந்துவிட்டது. கொடுங்கோலர் மீதும், தங்களை அடக்கி ஆள்பவர் மீதும் இருக்கும் வெறுப்பில் இந்த வாஞ்சை பராமரிக்கப்பட்டிருக்கிறது. முடிசூட்டப்பட்ட, முடிசூட்டப்படாத எந்த மன்னரின் ஆணைக்கும், சமிக்கைக்கும் செவி கொடுத்து தன் சொந்த சகோதரனையும், தன் தகப்பன்மாரையும் சுட்டுத் தள்ளுவதற்கு எந்த ராணுவ வீரனையோ கப்பற்படை வீரனையோ எதிர்பார்க்க முடியாது. லட்சக்கணக்கானோரின் நீண்ட நாளைய வேலையில்லா திண்டாட்டத்தின் பலனாய் என்ன விளைவு வரப்போகிறது என்று பார்க்கும் போது நல்லுறவு என்ற கட்டுப்பாட்டை வெகுசீக்கிரமே இந்த நிலைமை குழிதோண்டி புதைத்திடப் போகிறது. இப்படி ஒரு நிலைமையை இவர்கள் உருவாக்கிக் கொண்டு வருவதைப் பார்த்து உங்களுக்கு எந்த உணர்வும் தோன்றவில்லையா? இந்த நிலைமையின் கடைசி கட்டத்தினை அடைவதைக் காட்டிலும், இதற்கு ஒரு விமோசனத்தை காணும்படி, இவர்களை வேலையில் அமர்த்துவது குறைந்தபட்சம் பொதுப்பணி இடங்களிலாவது இவர்களை அமர்த்துவது சற்று மேலானதாக இருக்குமல்லவா?

"தொழிலதிபர்கள் என்ன செய்கிறார்கள் என்று நமக்குத்

தெரியும்; மக்களை படைபலத்தால் ஆளுகை செய்ய, போர் தளவாடங்களை அவர்கள் உருவாக்கி வருவதை நாம் காண்கிறோம். ஆனால் அவர்கள் மூடர்கள், தங்களது சொந்த இறுமாப்பில் மட்டுமே அவர்கள் ஞானிகளாய் இருக்கிறார்கள். இவர்கள் ராஜாக்களின் தந்திரங்களை கையாளுகிறார்கள். இவர்கள் விரைவில் காற்றுப் பறக்கடிக்கும் பதரைப் போல் இருப்பார்கள். அவர்களது தந்திரங்களுக்கு எதிராய் எல்லாம் இருக்கின்றன. பெரும் படைகளுடன் இங்குள்ள முதலீடுகளுக்காக சண்டையிடும் ராஜாக்கள், சீரான நாகரீக வளர்ச்சியின் முன்னேற்றத்துக்கு முன்பாக நடுநடுங்கிக் கொண்டு இருக்கின்றனர். கள்வர்களின் சலுகைகளை தடுத்து நிறுத்துமே ஒழிய, நேர்மையானது யாரையும் காயப்படுத்தாது. கட்சிக்காரர்களாக அல்ல, நல்ல குடிமக்களாய், கட்சியை காட்டிலும் நாட்டு நலனையும், ராஜாக்களின் பொன்னைக் காட்டிலும் நீதியையும் நாம் சிந்தித்து, குடிமக்களாய் இந்த பிரச்சினையை சட்ட பூர்வமாக தீர்த்து சரிபடுத்துவோமாக."

உண்மையிலேயே பலவானாக உணரும் ஒவ்வொருவரும் பேசும் உறுதியான வார்த்தைகள் இவை. இப்படிப்பட்டவர் நாட்டில் அநேகருண்டு. இந்த குற்றச்சாட்டில் கொஞ்சமாவது உண்மையே இல்லை என்று யாரும் மறுத்துப் பேச முடியாது.

### மனித சக்தியால் சமாளிக்க இயலாத உலக சூழ்நிலைகள்

இந்த சூழ்நிலையானது அமெரிக்காவுக்கோ அல்லது ஐரோப்பாவுக்கோ விசித்திரமானது அல்ல; ஆசியர்களும் இதை நூற்றாண்டுகளாய் அறிந்திருக்கவில்லை. இந்தியாவில் இருக்கும் ஒரு அமெரிக்க மிஷினரி எழுதும் போது, அமெரிக்காவில் ஒரு நாளைக்கு 3 வேளையும் சாப்பிடத் தேவையான உணவு இருக்கிறதா என்று இந்தியர்கள் கேட்கும் போது தன் இதயமே சோர்ந்து போவதாக எழுதுகிறார். மேலும் இந்தியாவில் பெரும்பாலானவர்களுக்கு இயற்கையான தேவையை பூர்த்தி செய்துக் கொள்ளும் அளவிற்கு கூட போதுமான உணவு கிடைப்பதே அபூர்வமாய் இருக்கிறது என்கிறார்.

இந்தியாவில் வங்காள கவர்னர் ஒருவர் சமீபத்தில் கூறியதாவது: "எங்களது விவசாயிகளில் பாதிப்பேருக்கு மேல் தங்களது பசியை போக்கிக்கொள்ள ஆண்டு முழுவதுக்கும் என்னதான் இருக்கிறது என்பதே தெரியாது." தானியத்தை பயிரிடுகிறவர்களே



இயற்கையான பசிக்கு அதைச்சாப்பிட முடியாது; முத-ல் அதற்குரிய வரியானது கட்டப்பட வேண்டும். இந்திய ஜனத்தொகையில் ஒரு கோடி பேர் பருத்தி ஆடை நெசவாளர்கள். ஆனால் தற்போது இவர்களது தொழிலை இயந்திரங்கள் பாழடித்து விட்டதால், ஏற்கெனவே இருக்கும் கஷ்டமான விவசாய சூழ்நிலையில் இவர்களுக்கும் விவசாயத் தொழிலைத் தவிர வேறு எந்த மாற்று வழியும் இல்லை.

தென் ஆப்பிரிக்காவிலும் கூட "ஆப்பிரிக்காவின் பொன் ஆசை" என்று கூறப்படும் நாட்களில் கோடிக்கணக்கான டாலர்கள் மிகவும் சுலபமாக முதலீடு செய்யப்பட்டன. ஆனால் அநேகருக்கு இப்போது காலம் மிகவும் கடினமானதாய் இருக்கிறது. படித்தவர்கள் கூட கஷ்டப்படுகிறார்கள். தென் ஆப்பிரிக்காவில் நோட்டல் என்ற இடத்தி-ருந்து வரும் பத்திரிக்கை தற்போதிருக்கும் சூழ்நிலையைக் குறித்து கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

"டர்பனில் ஒரு கூட்டத்தினரிடையே நிலவும் ஆதரவற்ற நிலைமையை குறித்து, வேலைக்காக ஐரோப்பாவி-ருந்து குடி புகுந்தவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளாதவர்களுக்கு, சிறிதளவாவது ஒரு கருத்து இருக்கும். இங்கிருக்கும் துரதிஷ்டசா-களுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஏதாவது செய்யும் கடமையானது நகர கவுன்சி-ன் நிவாரண குழுவிற்கு இருப்பதை பார்க்கும் போது ஒரு மனதிருப்தி தோன்றுகிறது. இந்த மனிதாபிமான இயக்கத்தில் முழு ஈடுபாட்டோடு இறங்கி சோர்வில்லாமல் உழைக்க சுறுசுறுப்பான ஒருங்கிணைப்பாளரான திரு.R.ஜேம்சன் இந்த வாரம் பேசும் போது கூறினார். இந்த வகையான நிவாரணப்பணியில் குறைந்தது ஐம்பது ஆட்களுக்காவது தற்கா-க பணி கிடைக்கிறது என்று உறுதியாய் நான் கூறுகிறேன். குமாஸ்தா மற்றும் தொழிற்திறமை உள்ளவர்களும் "அதிர்ஷ்ட மற்றவர்களாக" கார்ப்பரேஷன் அளிக்கும் உதவித் தொகையான 3 ஷில்-ங் ஒரு நாள் கூ-யும், இருப்பிடமும் பெற, கொதிக்கும் வெயி-ல் 8 மணி நேரம் மணல் வாரிகொட்டும் பணியை செய்யவேண்டியதை பார்க்க மனம் சோர்ந்து போகிறது.

"அதே சமயத்தில் வேலை கா-யில்லாததால் வேலைக்காக

வரும் மனுக்களை அடிக்கடி நிராகரிக்க வேண்டியிருக்கிறது. அவ்வப்பொழுது கமிட்டியின் தலைவர் விளம்பரம் மற்றும் பிற வழிகளில் வியாபாரம் மற்றும் கைத் தொழில் தெரிந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறார். ஆகவே இந்த குழுவில் எழும்பும் வேலை வாய்ப்புகள், ஏற்கெனவே மனு செய்தும் வாய்ப்பு கொடுக்கப்படாதவர்களின் வரிசைப்படி நிரப்பப்படுகின்றன. குழுவாக பணிபுரிபவர்கள் மட்டுமன்றி கணிசமான எண்ணிக்கையில் வேலை தேடி அலைபவர்கள் அநேகர் உண்டு. மிகவும் அன்போடு பழகக் கூடிய துணை மேயரிடம் போகும்படி இவர்கள் முற்பட்டனர். தன்னால் முடிந்த நன்மையை இவர் அவர்களுக்கு செய்வார். ஆனால் அடிக்கடி இந்த முயற்சி தோல்வியிலேயே முடிகிறது. வேலை வாய்ப்பு கொடுப்பவர்கள் திரு.ஜேம்சனுக்காய் காத்திருப்பார்களேயாகில் அவரது பட்டிய-ல் இருக்கும் வேலையற்றவர்களுடைய முழுவிவரத்தையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடும். இந்த மனிதர் யாருமே “டார்பன்” நிரந்தர நகரவாசிகள் இல்லையென்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்; ஆனால் வேலைவாய்ப்பைத் தேடி தென் அமெரிக்காவின் மற்ற பகுதியி-ருந்து இப்பகுதிக்கு வந்தவர்களே இவ்வித அனுபவத்தில் “டர்பன்” நகரமே நிகரில்லாததாக ஆகிவிட்டது. இப்படிப்பட்டதொரு வேதனைக்குரிய நிலைமை வேறு எங்கும் காணப்படவில்லை.

“ஏற்கெனவே குறிப்பிட்டது போல நிவாரண வேலை வாய்ப்புக்காக மனுபோட்டிருக்கும் அநேகர் “குமாஸ்தா” பணியில் மட்டுமே பழக்கப்பட்டவர்களாக இருந்தனர். எப்போதும் சரக்குகளால் நிரம்பிவழியும் “நேட்டல்” என்ற இடத்தில் இப்படிப்பட்டவர்களுக்கு வாய்ப்பே கிடையாது என்று உறுதியாய் கூற இயலாது. ஆனால் கார்ப்பரேஷனின் தற்கா-க பணி அமர்த்தும் செயல்பாட்டிற்குப் பின்னும் கூட, ஆதரவற்றவர்களது எண்ணிக்கை கணிசமாக அதிகம் இருக்கவே செய்தது. மொத்தத்தில் நிவாரண பணிகளின் ஊழியரது செயல்பாடு மிகவும் உயர்வானதாக இருந்தது. அதனால் கவுன்சில் ஏற்றுக் கொண்ட கொள்கையை இன்னும் நீடிக்க உத்திரவாதம் அளித்தது. ஆனால் “தயாள குணமுடைய சமுதாயம்” என்ன செய்து கொண்டிருக்கிறது? என்று கேட்க வேண்டியிருக்கிறது. சமுதாயம் என்று சொல்லப்படும் மேன்மையானதொரு



ஒழுங்கமைப்பு தன்னுடைய குடிமக்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் மட்டுமே நிவாரப்பணிகளை செய்கிறது. எப்போதும் போல் பணத்தால் இல்லாவிடினும், இப்படிப்பட்ட தகுதியான காரியங்களால் அதன் கரம் எப்போதும் நிறைந்திருக்கின்றது.”

ஆனால் சந்தர்ப்பக் குறைவும், புத்தி கூர்மையின்றி இருக்கும் தனது உடன் சிருஷ்டிகளானவர்கள் நசுக்கப்படுவதை தடுக்க, அறிவுபூர்வமான மக்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்கமாட்டார்களா? இயந்திரக்கல்-ன் மேல்கல் மிகவும் ஆபத்தோடு கூட கீழிருக்கும் கல்-ன் மீது வெகு அருகில் நெருங்கி வருவதைக் காணவில்லையா? தங்களிடையே இருக்கும் போட்டியின் அதிகப்படியான அழுத்தமாகிய இந்த இரண்டு கற்களிடையே கடந்து வரவேண்டிய ஜனம், இன்னும் கூட அதிகமாய் இதை அனுபவிக்க வேண்டுமா? தயாளகுணமுடைய இதயங்கள் இதற்கொரு நிவாரணத்தை கொடுக்கக் கூடாதா?

இல்லை; சந்தர்ப்பம் கிடைத்தவர்களும் அல்லது திறமை உடையவர்களும் “பணம் திரட்டும்” தங்களது சொந்தப்பணியில் மிகவும் மும்முரமாய் இருக்கின்றனர்; தங்களுக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தினை கூடியமட்டும் தங்களுடைய சொந்த லாபங்களுக்காகவே செலவிடுகின்றனர். இதனால் இவர்களுக்கு உண்மையான சூழ்நிலையை புரிந்து கொள்ள முடியவில்லை. சந்தர்ப்பம் வாய்க்காமல் தவிப்பவர்களது வேதனைப் புலம்பல் இவர்களுக்கு கேட்கவில்லை. ஆனால் அடிக்கடி தாராளமாய் இவர்களுக்கு ஏதோ உதவிகளை செய்கின்றனர். ஆனால் இந்த துரதிஷ்டசா-களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் மிகவும் பெருகிக் கொண்டே வருவதால், இப்படிப்பட்ட பொதுவான நிவாரணங்களால் எந்த பயனும் இல்லை என்று அநேகர் நினைக்கத் தோன்றுகிறது. தற்போதிருக்கும் நிலவரம் அவர்களுக்கு பழக்கமாகிவிடுகிறது. அதினால் தங்களுக்கு இருக்கும் சௌகரியங்களிலும், விசேஷ சலுகைகளிலும் கிடைக்கும் சந்தோஷத்தில் அமைதிபட்டு விடுகிறார்கள். இதனால் தற்போதைக்கு தனது உடன் மனுஷனின் துன்பங்களை மறந்து அல்லது அலட்சியம் செய்து விடுகின்றனர்.

ஆனால், வெகுசிலர், சூழ்நிலையை நன்கு புரிந்து ஏறக்குறைய உண்மை நிலவரத்தை தெளிவாக பார்க்கின்றனர். இப்படிப்பட்டவர்களில் சிலர் சந்தேகமின்றி உற்பத்தியாளரும், சுரங்க உரிமையாளருமாய் இருக்கின்றனர். இவர்கள் கஷ்டங்களை பார்க்கின்றனர். இப்படியான காரியங்களை மாற்ற விரும்புகிறவர்களும், ஏங்குகிறவர்களுமாய் இருக்கின்றனர். ஆனால் இவர்களால் என்னதான் செய்யமுடியும்? தங்களுடைய உறவினரிடையேயும், அருகில் வசிப்பவரிடையேயும் இருக்கும் மோசமான துயரை துடைக்க சிறிய அளவில் ஏதாவது நிவாரண உதவியை மட்டுமே செய்ய முடியும். தற்போதிருக்கும் சமுதாய சட்டமுறைகளை மாற்றவோ அல்லது இப்போதிருக்கும் போட்டி முறைமைகளை ஒழிக்கவோ இயலாது. ஆனால் வேறு ஏதாவது ஒரு அதிகாரம் வந்து, இந்த நிலையை ஒழிக்காவிடில் ஒட்டுமொத்தமாகவே போட்டிகளால் இந்த உலகமே பாதிக்கப்படும் என்று உணர்கின்றனர்.

இப்போதிருக்கும் சமூக அமைப்பினை யாரோ ஒரு தனிமனிதனோ அல்லது குறிப்பிட்ட மனித குழுவோ மாற்றி அமைக்க முடியாது என்பது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது; ஆனால் தேவனுடைய வல்லமையினாலும் தேவனுடைய வழியினாலும், வேதத்தில் கூறப்பட்டிருப்பது போல கொஞ்சம் கொஞ்சமாக ஒரு முழுமையான ஒழுங்கிற்கு மாற முடியும். மாறக் கூடும்; இது சுயநலத்தை அல்ல, அன்பையும் நீதியையும் ஆதாரமாகக் கொண்டிருக்கும். இந்தப் புதிய அமைப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டுமாயின், தற்போதைய நிலைமை முற்றிலுமாய் அகற்றப்பட வேண்டும். புதிய திராட்சை ரசத்தை பழைய துருத்தியில் நிரப்பக் கூடாது, அல்லது பழைய துணியின் மீது புதிய துணியை ஒட்டு போடவும் கூடாது. ஆகவே சமீபமாக இருக்கும் வாக்குத்தத்தத்தினால் ஏழை, பணக்காரர் மீது அனுதாபத்தோடு, “உமது ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல் பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று ஜெபிப்போமாக; தேவனுடைய கோபாக்கினையால் தான் இது செயல்படுத்தப்படும். இதற்கான ஆயத்தக் காரியங்கள் ஏற்கனவே தயாராகி விட்டதையும் நாம் காண்கிறோம்.



## விடியற்காலை வருகிறது

“வெகுகாலத்திற்கு முன்பே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட
ஒரு விடியல், மேலானதொரு நாள் வருகிறது,
சத்தியமும் நேர்மையும், பரிசுத்த வல்லமையோடு வரும்போது,
தவறுகள் தூக்கியெறியப்படும்;
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒவ்வொரு சோகமான
பெரு மூச்சையும் கேட்கும் போது விரைவில் நீதியோடு கூட
தன் கரங்களை விரைவாக கடல்மீதும் தரைமீதும் நீட்டுகிறார்.

“கொடுங்கோலரின் இறுமாப்புடைய பெருமை பேச்சு
இனியும் வானத்தை நிரப்பவேண்டாம்,
ஆனால் வயோதிகரும் வா-பரும் சத்தியத்தை நேசித்து,
எல்லா இடத்திலும் துரிதமாய் சொல்லட்டும்.
இனி ஒருபோதும் தேவையும், துக்கமும்
உடையவரிடமிருந்து நம்பிக்கையற்ற குரல் எழாது,
ஆனால் யுத்தங்கள் அடங்கி மெய்யான சமாதானம்
விரைவில் செழிக்கட்டும்.

“ஜூபி- வருடமாகிய உதவி அலை வந்து கொண்டிருக்கிறது;
கட-ன் அலையைப் போல் பாட்டும், ஆரவாரமும் இப்பக்கம் வீசும்.
தேசங்களின் ஜூபி- வானத்துக்கும் பூமிக்கும் இடையே ஒ-க்கட்டும்
கிருபையின் உதயம் வேகமாய் இழுக்கப்பட்டு, விரைவில் வருகிறது;

“ஓ! அந்த மகிமையின் விடியலுக்காய் நாம் விழித்து,
காத்திருந்து ஜெபிக்கிறோம்;
காலை வெளிச்சமானது உச்சிவரைக்கும் வந்து
துயரத்தை தூர விரட்டட்டும்;
பரலோக மகிமை வானிலும் பூமியிலும்
பெருவெள்ளமாய் ஓடும் போது,
கர்த்தரை ஸ்தோத்தரித்து அவரது
எல்லா கிரியைகளுக்காகவும்
அவரை விரைவில் துதிப்போமாக.”

அ அ

## அத்தியாயம் 8

# அறுவடையாளர்களின் கூக்குரல்

*சமுதாயத்தின் பழமைவாத காரணி - குடியானவர், உழவர் - கிறிஸ்தவ தேசங்களின் புதிய நிலைமை - விவசாய போராட்டம் - அதற்கான காரணங்கள் - பொன் மற்றும் வெள்ளியின் தரமே காரணிகள்-முன்குறித்து சொல்லப்பட்ட வேதவசனம் நிறைவேறுதல் - இந்த மகாநாளின் யுத்தத்துடன் இந்த விஷயங்கள் தொடர்புள்ளவைகள்...*

*"கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும், அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது." செப் 1:18*

**ச**ரித்திரத்தில் மிக ஆழ்ந்த சிந்தனையுள்ள மாணவர் நமது கருத்தைப் புரிந்துகொண்டு, கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் உண்மையானதே என்று அறிந்து, நியாயத்திற்குட்பட்ட முடிவுகளைக் குறித்து இன்னும்கூட நிச்சயமற்ற உணர்வை உள்ளவர்களாய் இருப்பார்கள். அவர் தனக்குள்ளாகவே, "நாகரீகமுடைய மற்றும் கொஞ்சம் நாகரீகம் அடைந்த நாடுகளிலும் கூட, பெரும்பாலும் ஒரு சமுதாய ஆதிக்கம் உடைய, பழைய பழக்க வழக்கங்களில் பிடிவாதமுடைய, சமுதயாத்தின் முதுகெலும்பாக விவசாயி என்ற ஒரு வகுப்பார் இருப்பதையே ஆசிரியர் மறந்துவிட்டார்" என்று கூறக்கூடும். ஆனால், உண்மையில் அப்படி இல்லை. நாம் இந்த உண்மையை மறந்துவிடவில்லை. இதனுடைய முக்கியத்துவத்தையும் நாம் அறிந்திருக்கிறோம். கொஞ்சம் பின்னிட்டு திரும்பிப் பார்த்தால் ஐரோப்பாவானது இந்த குறிப்பிட்ட பழமை வாதத்தினால் மட்டுமே அடிக்கடி புரட்சிகரமான தாக்குதல்களுக்கு உள்ளானது தெரியும். பிரான்சிலும் கூட பெரிய நகரங்களில் உழைக்கும் வர்க்கத்தாரால் புரட்சிகள் துவங்கி பரவியதை நாம் பார்க்கிறோம். மேலும், முடிவிலே அமைதியையும்,

சமாதானத்தையும் கொண்டுவருவது என்னவோ பழமைவாதிகளான குடியான விவசாயிகளே. இதற்குரிய காரணங்களை கண்டுபிடிப்பது ஒன்றும் கடினம் அல்ல. (1) விவசாயிகளது வாழ்க்கை குறைவான குதூகலமும், சமூக சச்சரவுகளுமே கொண்டது. (2) செல்வச் செழிப்பை நோக்கி இவர்களது மனம் அவ்வளவாய் செல்வது இல்லை. மேலும், செல்வம், ஆடம்பரங்களை குறித்து இவர்களது குறிக்கோள்கள் குறைவு. (3) மண்ணோடு அவன் ஒன்றிப் போகிறான். அதனை மட்டுமே சார்ந்து வாழ கற்றுக் கொள்கிறான். தனது உழைப்புக்கான பிரதிபலனை இயற்கையினிடமிருந்தே எதிர்பார்க்கிறான். (4) இவர்களது கல்வி அறிவும், விழிப்புணர்வும் செயல்களும் இதுவரை மிகவும் வரைமுறைக்கு உட்பட்டதே. இதினிமித்தம் நாகரீகமடைந்த நாடுகளின் விவசாய கூட்டத்தினர் செழுமையில் சிக்கனமும், திருப்தியும் உடையவர்கள் என்று உதாரணமாய் கூறப்படுகின்றனர்.

ஆனால், கடந்த 30 வருடங்களில் விவசாயிகளுடைய விஷயத்தில் வியக்கத்தக்கதொரு மாறுதலானது அநேக காரியங்களில் மிகவும் அனுகூலமான மாற்றங்களை அடைந்து வருகிறது. உலகின் பிற பகுதிகளில் இருக்கும் விவசாயிகளைக் காட்டிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, பிரிட்டன் மற்றும் அயர்லாந்து நாட்டு விவசாயிகள் என்றுமே மாறுபட்டதொரு நிலையிலேயே இருந்துவருகின்றனர். அவர்கள் படிப்பறிவு இல்லாவிடினும் அடிமைகளோ, குடியானவரோ, அறிவில்லாதவர்களோ, மந்தமானவர்களோ அல்லாமல் மிகவும் புத்திசா-ளாய் இருந்தனர். அதன்பிறகு நடந்த அமெரிக்க உள்நாட்டுப் போரின் விளைவாக, நாட்டின் எல்லா திசைகளி-ருந்தும், உலகின் எல்லா பகுதியி-ருந்தும் குடியேறிய விவசாய பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து, அவர்களுக்கு சில காரியங்களையும், விஷயங்களையும் குறித்து, ஒரு அறிவை கொடுக்கக்கூடிய கல்வி கொடுக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாய் இருந்துவரும் கருத்துக்களி-ருந்து இந்த அறிவானது இவர்களுக்கு ஒரு மேலான முற்றிலும் வேறுபட்ட வழியை காட்டி, நகர வாழ்க்கைக்கு ஏற்ற உணர்வுகளையும், விருப்பங்களையும் பெறும்படி செய்துவிட்டது. இதன் விளைவாக பழங்கால கல்வி கூடங்கள் கிராமத்தின்



பிள்ளைகளின் குறிக்கோள்களை திருப்திபடுத்த முடியாதவைகளாவிட்டன. மேலும், அதிகப்படியான உயர்நிலைப்பள்ளிகளும், கல்லூரிகளும், கருத்தரங்கங்களும் (விசேஷமாக செய்தித்தாள்கள்) அமெரிக்க நாட்டின் குடிமக்கள் மற்றும் குடியேறிய மக்களின் முன்னேற்றத்திற்கு காரணமாகிவிட்டன. இதன் விளைவாய், நகர வாழ்க்கையின் முறைமைகளும், வழிகளும் விவசாயத்தில் பயன்படுத்தப்பட்டன. அதோடு விவசாயிகளின் உற்சாகத்தை மேம்படுத்தும் வகையில் ஏராளமான புதிய கண்டுபிடிப்புகளும் சேர்க்கப்பட்டு, இந்நாட்டின் உற்பத்தியை பெருமளவில் பெருக்கிவிட்டது. இந்த நிலைமையினால் கிராம மக்கள் தொகை பெருமளவில் பெருகிவிட்டதோடு கூட, நகர ஜனத்தொகையும் பெருகியது. ஆனாலும், வருடத்தில் நமது நாட்டின் 90 மில்-யன் மக்களின் தேவைக்கும் அதிகமான உணவு விநியோகத்தை செய்தது போக, 800 மில்-யன் டாலர் மதிப்புள்ள உணவுப் பொருட்களை உலகின் பிற பகுதிகளுக்கு விநியோகிக்கவும் நம்மால் முடிகிறது. நமது மொத்த ஏற்றுமதியில் இது 80 விழுக்காடாகும். கடந்த 25 வருடங்களாக அமெரிக்க விவசாயிகளுக்கு மிகப்பெரிய செழுமை வந்திருக்கிறது. இதனால் விவசாயிகளது வாழ்வில் வசதிகளும், சொத்துக்களும், ஆடம்பரங்களும் பொதுவானதொரு விருப்பமாய் மாறிப்போனது. உலகத்தின் பிறபகுதிகளில் இருக்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தைக் காட்டிலும் அமெரிக்க விவசாயிகளின் தரம் மிகவும் மேன்மையானதொரு நிலைமைக்கு உயர்ந்தும், மனநிறைவு இல்லாதிருந்தது.

இதனிடையே பிரான்சு மற்றும் ஜெர்மனியில் பிரான்கோ-ப்ரூஷீயன் போரின் விளைவாக இதேவிதமானதொரு நிலைமை வந்தது. ஆனால் மக்களது விழிப்புணர்வானது குறைவாக வேறுவிதத்தில் இருந்தது. போர் மூண்டபோது இருந்த பகைமை உணர்வானது வெற்றிபெற்ற ஜெர்மனி மற்றும் தோற்றுப்போன பிரான்சினிடையே தொடர்ந்து இருந்தது மட்டுமன்றி, மறைமுகமாக இத்தா-, ஆஸ்திரியா மற்றும் ரஷ்யாவை தூண்டிவிட்டு, அங்குள்ள மக்கள் மீது ஒரு கட்டாயமான ராணுவப் பயிற்சி முறையை பலவந்தமாய் திணித்துவிட்டது. இப்படியாக எல்லாவித

சூழ்நிலையும் சேர்ந்து மிகவும் உபயோகமான கல்வியை மக்களுக்கு அளித்தது. போர்ப் பயிற்சியின் போது குறிப்பிட்ட நேரம் புத்தகங்களை படிப்பதற்கென்றே ஒதுக்கப்பட்டது. மேலும், நிலையான இராணுவத்திற்காக சமூகத்தின் ஒவ்வொரு ஆண் மகனையும் குடும்ப வாழ்வி-ருந்து விலக்கி மூன்று வருட கால கட்டாய இராணுவப் பயிற்சி கொடுப்பதை ஒரு பெரிய குற்றமாகவே கருதினர். அத்தோடு மட்டுமன்றி, விழிப்புணர்வின் அடையாளம் நிரூபிக்கப்பட்டது. இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மேல் கூறப்பட்ட தேசங்கள் எழுப்பப்பட்டு, பலப்படுத்தப்பட்ட குறிக்கோள்களை உடையதானது என்று நாம் நம்புகிறோம். மேலும், கல்வியறிவு மூலம் மக்களுக்கு நகர வாழ்வின் ஆடம்பரமும், செல்வ செழிப்பும், வசதிகளும், சௌகரியங்களும் வர ஆரம்பித்ததும், அதற்கு இணையாக அதிருப்தியும் எழும்ப ஆரம்பித்தது. நெறியான ஒழுக்கமான வாழ்வைக்கூட கடைபிடிக்காததொரு தளர்ச்சியும் கூட தோன்றி தன்னைவிட பிறர் மிகவும் மேலான நிலைமையில் இருப்பதாகவும் அவர்களைப் போல தங்களது நிலைமையை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற உணர்வும் அவர்களிடையே நிலவியது.

இதற்குள் மத சார்பான அறியாமை மற்றும் மூடநம்பிக்கையின் விலங்குகளும் கூட உடைந்துவிட்டன. போப்பரசு மற்றும் கிரேக்க சபைகளின் செல்வாக்கும் மிகவும் பெருகியிருந்தாலும் இந்த நிலையே இருந்தது. பிஷப், போப் மற்றும் பாதிரிகளின் அதிகாரமானது ஆத்துமாவை உத்தரிக்கும் ஸ்தலத்திற்கோ, நித்திய நரகத்துக்கோ அல்லது பரலோகத்திற்கோ அனுப்ப முடியும் என்ற நம்பிக்கை முழுமையாக இல்லையென்றாலும் அவர்களது அதிகாரத்துக்கு பெருமளவில் பயந்து, மரியாதை அளிக்கப்பட்டது. எப்படியானாலும் மொத்தத்தில் மதத்தைப் பொருத்தமட்டில் ஒரு மாபெரும் மாறுதல் எல்லா வகுப்பினரிடையேயும் வந்தது. புரட்டஸ்டன்ட்டாரின் நிலைமை கடிகாரத்தின் பென்டுலத்தைப் போல் மறுமுனையின் கடைசி மட்டும் போய்விட்டு, தெய்வீகத்தன்மை, பக்தி முறைமைகள் இன்னும் கூட கடைபிடிக்கப்பட்டாலும், பெரும்பாலும் உண்மையான மரியாதை புரட்டஸ்டன்ட்



கூட்டத்தாரிடமிருந்து விலகி போய்விட்டது. "மேலான விமர்சனம்" என்று அழைக்கப்பட்டவைகளும், பரிணாம வளர்ச்சியின் கோட்பாடுகளும் நடைமுறையில் தேவவார்த்தையின் கனத்தை பாழடித்துவிட்டன. மேலும், தற்போது இப்படிப்பட்ட கோட்பாடுகள், கிழக்கத்திய வேதாந்தத்துடன் இணைந்து, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் ஆயிரக்கணக்கானோரின் உண்மையான கிறிஸ்தவ விசுவாசத்தை நாசப்படுத்துகிறது.

இந்த எல்லா மாறுதல்களும், கடந்த சில வருடங்களாகவே "கிறிஸ்தவ ராஜ்யத்தின் பழமைவாதிகள்" என்று அழைக்கப்பட்டிருந்த வகுப்பினரின் மனோநிலைமையை மாற்ற ஆரம்பித்தது. இப்படிப்பட்ட தற்போதைய இக்கட்டான சூழ்நிலையிலும் இன்னும்கூட விடாப்பிடியாய் செயல்படும் மாபெரும் செல்வாக்கினை நாம் பார்த்து வருகிறோம். இந்த செய-னால் இந்த பழமை வாத வகுப்பாரின் செழுமையானது குறைகிறது. கடந்த 20 வருடமாகவே நாகரீக வளர்ச்சியடைந்த பல்வேறு நாடுகளின் விவசாயிகள் வாழ்வின் சுகம், சௌகரியங்களில் பங்கு பெறுவதற்கும், தகுதியான ஆற்றலை பெறுவதற்கும் மிகவும் கஷ்டப்படுகின்றனர். ஆம், அவர்களது உற்பத்தி பொருட்களின் விலை சமீபத்தில் கொஞ்சம் அதிகரித்து உள்ளது. ஆனால், பெருகிவரும் இயந்திரங்கள் முதலானவைகளுக்கு சமமாய் இருக்கவில்லை. பெருகிவரும் உற்பத்தியும் கூட இதனை சமன்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றனர். மாறாக தொடர்ந்து அவர்களுக்கு சாதகமற்ற முறையில் விலைவாசி ஏற்ற இறக்கத்துடனேயே இருக்கிறது. எனினும் பொருட்களின் விலை ஒரு சமன்பாட்டை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றனர்.

அமெரிக்க நாட்டு விவசாயி இப்படிபட்டதொரு நிலையில் இருக்கும் போது, இவர்களது ஐரோப்பிய சகோதரர் இன்னும் மோசமான நிலைமையில் இருக்கின்றனர். ஏனெனில் அவர்களுக்கு சூழ்நிலையானது மிகவும் சாதகமற்றதாகவே இருக்கிறது. (1) முத-ல அவன் பெரும்பாலும் மிகவும் சிறிய வயலை குத்தகைக்கு பயிரிடுகிறவனாகவே இருக்கிறான். (2) மிகவும் முன்னேற்றமடைந்த இயந்திரங்களை பெறும் அளவிற்கு அவனுக்கு வசதிகள் இல்லை. இப்படிப்பட்ட காரணங்களினால் ஒவ்வொரு

முறையும் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் கோதுமையின் விலையில் வீழ்ச்சி ஏற்படும் போது அதை சமன்படுத்த இந்த ஐரோப்பிய விவசாயிகளால் இயலவில்லை. எனவே, தனது அமெரிக்க சகோதரனை விட அதிக கஷ்டத்தை அனுபவிக்கிறதினால், வேறுவழியின்றி பீட்ரூட் கிழங்கு உற்பத்தியில் கவனத்தை திருப்பவேண்டியதாகிவிட்டது.

தத்துவமேதைகள், அரசியல்வாதிகள் மற்றும் விஞ்ஞானிகள் இந்த விஷயத்தை குறித்து கொஞ்சம் கவனம் செலுத்தி பார்க்கும் போது, ஒவ்வொரு முறையும் கோதுமையின் விலை குறைவதற்கு தேவைக்கு அதிகமான உற்பத்தியே காரணம் என்ற முடிவுக்கு வந்தனர். ஆனால் வெகுசிலரோ மிகவும் கவனத்துடன் இதை குறித்து ஆராய்ந்து, புள்ளிவிவரங்களை சோதித்துப் பார்த்து, அதிகமாக உற்பத்தியாகும் கோதுமை எல்லாம் வரப்போகும் வருஷத்தின் தேவைக்காக உலக களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்படுகிறது என்பது உண்மையல்ல என்று கண்டுபிடித்தனர். மாறாக அவர்கள் கண்டது என்னவெனில், ஒவ்வொரு வருடமும் கொஞ்சம் கோதுமை அடுத்த வருஷத்துக்கான சேமிப்பில் இருக்கிறது. ஆகவே, கொள்முதலுக்கு அதிகமான கோதுமை உற்பத்தி செய்யப்படவில்லை என்பதை கண்டுபிடித்தனர்.

திரு.ராபர்ட் -ப்போம் என்ற சிக்காகோ வர்த்தக சங்கத்தின் அங்கத்தினர், இந்த விஷயத்தைக் குறித்து, ஆராய்ந்து, 1895 டிசம்பர் 26ல் அமெரிக்க அரசங்கத்தின் விவசாயத்துறையிடத்தில் கூறியதாவது:

“கோதுமையை முதன்மை விளைச்சலாக கொண்டிருக்கும் நாடுகளில் கோதுமை கையிருப்பு அதிகரிக்கவில்லை. ஆனால், சில நேரங்களில் கோதுமை உற்பத்தி செய்யும் நாடுகள் உற்பத்தியில் சிறிது ஏற்றத்தை காட்டுவது உண்மைதான். அதே சமயம் பிற நாடுகளில் இந்த சமயத்தில் கோதுமை உற்பத்தியானது குறைந்திருப்பதும் தெரிகிறது. மிகவும் நடுநிலை மாறாமல் கூறவேண்டியிருப்பதால் 1893-ருந்து கோதுமை விளைச்சல் கணக்கை முழுவதையும் பார்க்கவேண்டும்.

“வெளிநாட்டு விளைச்சலை பொறுத்தமட்டில், வர்த்தக சங்கத்தின் விசேஷ வெளிநாட்டு அதிகாரியால் கொடுக்கப்பட்ட



கணக்கை நான் உபயோகிக்கிறேன். இதையே சிக்காகோ வர்த்தக சங்கத்தின் காரியதாரிசியும் தெளிவாக கூறுகிறார். ஆகவே ஏற்றுமதி மற்றும் உற்நாட்டு விளைச்சலை குறித்து உங்களது கணக்கை நான் உபயோகிக்கிறேன். இதில் ஆஸ்திரோ-ஹங்கேரி நாட்டின் ஒப்புமையை தவிர்க்கும்படி நான் வற்புறுத்துப்படுகிறேன். ஏனெனில் 1893ன் கணக்கு என்னிடம் இல்லை. ஆனால், அதைத்தவிர கோதுமை விளைவிக்கும் நாடுகளின் 1893ன் கோதுமை உற்பத்தியின் கணக்கை 1883 உடன் ஒப்பிட்டு உங்களுக்கு நான் தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறேன்.

| நாடு | 1893 | 1883 |
|---|---|---|
| இங்கிலாந்து | 53,000,000 | 76,000,000 |
| பிரான்சு | 277,000,000 | 286,000,000 |
| ரஷ்யா | 252,000,000 | 273,000,000 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 396,000,000 | 421,000,000 |
| ஜெர்மனி | 116,000,000 | 94,000,000 |
| இத்தா- | 119,000,000 | 128,000,000 |
| இந்தியா | 266,000,000 | 287,000,000 |
| மொத்தம் | 1,479,000,000 | 1,565,000,000 |

“கோதுமையை விளைவிக்கும் முக்கிய நாடுகளின் 1893ன் கணக்கை பார்க்கும் போது 86 மில்-யன் டன் உற்பத்தியானது 10 வருடங்களுக்கு முன் இருந்ததை விட குறைவானதாகவே இருக்கிறது. நமது கணக்கின்படி அர்ஜெண்டினாவின் உற்பத்தி மடடும் இந்த காலகட்டத்தில் 60 மில்-யன் டன் அதிகமாகி உள்ளது. 1871ல் கிரேட் பிரிட்டன் 116 மில்-யன் டன் அளவு கோதுமை உற்பத்தி செய்துள்ளது. மேலும் 2 வருடங்கள் முன்னும் பின்னும் விளைச்சலானது 105 மில்-யன் டன்னும், 3 வருடத்தில் சராசரி 109 மில்-யன் டன்னும், இந்த வருடம் மட்டும் சற்று கூடுதலாய் 48 மில்-யன் டன் என்று லண்டனில் இருக்கும் வர்த்தக சபையின் விசேஷ வெளிநாட்டு செய்தித் தொடர்பாளர் கூறுகிறார்.

“ஒருவேளை கோதுமை விளைவிப்பவருக்கு போட்டியாக

அமெரிக்க ஐக்கிய நாடு உண்மையிலேயே இருக்குமேயானால், முறைப்படியாய் தனது நாட்டி-ருந்து ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் அளவு குறைந்துள்ளதாக காட்ட வேண்டும். ஆனால் 1890லும் அதற்கு முன்னும் சராசரி ஏற்றுமதியானது 119 மில்-யன் டன்னும், 1891ல் 225 மில்-யன் டன்னும், 1892ல் 191 மில்-யன் டன்னும், 1893ல் அதுவே 193 மில்-யன் டன்னும், 1894ல் 164 மில்-யன் டன்னுமாக இருந்தது. ஆகவே, பிற நாடுகள் தங்கள் விளைச்சலை ஏற்றுமதி செய்யும்போது நமது நாடு தானியத்தை தேக்கி வைத்திருக்கிறது என்பது போல் தோன்றுவது உண்மையல்ல. அனுமானங்கள் உண்மைக்கு புறம்பானதாக இருக்கின்றன. இதை நிரூபிக்க வேறு தடயங்கள் தேவையானால், சென்ற மார்ச் மாதத்தில் விவசாயிகளின் கையிருப்பு மிகவும் குறைவாக இருந்ததை உங்களது இலாக்காவே கூறுகிறது. ஆஸ்திரே-யாவின் தானிய விளைச்சலை குறித்து என்னிடம் எந்த புள்ளி விவரமும் இல்லை. ஆனால் சென்ற வருடங்களில் இதைக் குறித்து மிக அதிகமாக பேசப்பட்டது. ஆனால் அந்த நாட்டின் ஏற்றுமதியானது 1893ல் 13,500,000 டன், 10 வருடங்களுக்கு முன் இது 23,800,000 டன்னாக இருந்தது. 1894, 1895ல் ஆஸ்திரே-யா அமெரிக்காவிடமிருந்து கோதுமையை இறக்குமதி செய்தது.

"கடந்த 10 ஆண்டுகளில் அதிகரித்திருக்கும் தேவை அளவு பற்றி நான் எதுவும் கூறவில்லை. இங்கிலாந்தில் 18,000,000 டன்னும், இந்த நாட்டில் அதேகால கட்டத்தில் 50,000,000 டன்னுக்கு குறையாமல் அதிகரித்திருப்பதும், பிரான்சில் தவிர உலகின் பிற எல்லா நாடுகளிலுமே கூடுதலான அளவே உற்பத்தியாகியுள்ளது. உலகமனைத்திலும் கொள்முதலுக்கும் அதிகமாய் உற்பத்தி பெருகியிருக்கிறது."

கோதுமையின் விலை வீழ்ச்சிக்கு காரணம் எதுவானாலும் (கடந்த 3 வருடத்தில் ஏற்பட்டுள்ள தற்கா-கமான முன்னேற்றத்துக்கு காரணம் ஒருவேளை பெருமளவில் பயிரிடப்படும் ஓட்ஸ், சோளம், ரை போன்றவற்றின் விலை கோதுமையோடு ஒப்பிடும்போது குறைவாக இருப்பதை விவசாயிகள் உணர்வதால் இருக்கலாம்) எப்படி என்றாலும், ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாட்டு விவசாயிகளின் வாழ்வு இப்படிப்பட்ட சூழ்நிலையால்



நசுக்கப்படுகின்றது. அநேக அமெரிக்க விவசாயிகள் தங்களது விவசாய கருவிகள் வாங்கிய கடனி-ருந்தும்,வீடு நிலம் ஆகியவற்றை அடமானம் வைத்து பெற்ற கடனி-ருந்தும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்ல விளைச்சல் உள்ள காலங்களிலும் கூட அவைகளி-ருந்து மீள்வதற்கு முடியாமல் இருக்கிறார்கள். அடமானம் வைத்தவர்களிடத்தில் இவர்கள் கூக்குரல் இடுகிறார்கள். அது மட்டுமன்றி, தங்களது விளைச்சலை கொண்டு செல்லும் ரயில் போக்குவரத்து கட்டணங்கள் அநியாயமாய் அடிக்கடி உயர்த்தப்படுவதினாலும் அவதிப்படுகின்றார்கள். தங்களது தானியத்தின் விலையை சீராக வைக்கவும் விவசாய செலவுகளை சமாளிக்கக் கூடிய அளவிற்கு விலைகளை ஏற்றவும், ஐரோப்பிய விவசாயிகள், பிற நாடுகளி-ருந்து கோதுமை இறக்குமதி செய்வதற்கு எதிராக தங்கள் அரசாங்கத்தின் முன் அநேகந்தரம் முறையிட்டார்கள். விவசாயத்துக்கான, காலத்திற்கும் உழைப்புக்கும் தகுதியான விலை நிர்ணயிக்கப்படாமல் மரக்காலுக்கு 5 0 சென்ட்ஸ் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டிருப்பதையும் முறையிடுகின்றனர்.

அப்.யாக்கோபு (5:1-9) எழுதியிருக்கும் தீர்க்கதரிசனம் சுவிசேஷ காலத்தின் முடிவு கட்டத்தை தெளிவாக கவனத்திற்கு கொண்டுவருகிறது. இந்நாட்களை குறித்த எச்சரிப்பையும், ஐசுவரியத்தை சேர்ப்பதைக் குறித்தும் கூறுவதோடு, இவையாவும் சேர்ந்து மகா உபத்திரவத்தை கொண்டுவரும் என்கிறார். பழமைவாத விவசாயிகளின் இதுவரையிலான கஷ்டத்திற்கான சரியான காரணத்தையும் அப்போஸ்தலர் கொடுக்கின்றார். இந்த நிலைமையை குறித்து இவர் துல்-யமாக சுட்டிக்காட்டுவது தெரிகிறது. இதை மிகவும் ஜாக்கிரதையோடு கூர்ந்து கவனிக்கிறவர்கள் யாவருக்கும் தெரியும். இன்னும் விரிவாக இது வஞ்சகத்தின் விளைவு என்று கூறுகிறார். அவர் கூறுகிறதாவது:

"இதோ உங்கள் (ஐசுவரியவான்கள்) வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூ- உங்களால் அநியாயமாய் பிடிக்கப்பட்டுக் கூக்குர-டுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது."

இதற்கு முந்திய பாடத்தில் மெக்கானிக்குகளும், தொழிலாளிகளும் நகரங்களில் ஏற்கெனவே ஒரு கணிசமான

அளவிற்கு அவதியுறுகிறார்கள் என்று பார்த்தோம். ஆனால் அவர்களது பாடுகள், அனுதினமும் முன்னேறிவரும் அறிவு, இயந்திரங்கள், ஜனத்தொகை மற்றும் தற்போதிருக்கும் சமூக நிலை இவற்றால் மிகவும் மோசமாகி வருகிறது என்று அவர்கள் அஞ்சுகின்றனர். இப்படிப்பட்டவைகளுக்கு எதிராக போராடுவது மட்டுமன்றி, தனது மெக்கானிக் சகோதரர்கள் அடைகிற "அநியாயம்" என்கிற துன்பத்திற்காகவும் நாகரீகமடைந்த விவசாயிகள் போராட வேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்களின் உண்மை விவரங்களை பார்க்கும்போது, தொழிலாளிகள் அதிலும் விவசாயக் கூ-கள், இந்த யுகத்தின் கடைசி நாட்களில் முதலாளிகளிடமிருந்து தங்களுக்குரிய கூ-களைப் பெறமுடியாமல் அவதிப்படுகிறதை நம்மால் காணமுடிகிறது. அதற்கு மாறாக உண்மையில் தொழிலாளிகளை பாதுகாப்பதற்கென்று முன்பிருந்ததைக் காட்டிலும் சட்டங்கள் தற்போது மிகவும் கடினமானதாகவே இருக்கிறது. தனது முதலாளிகளின் உடமைகளை சட்டப்படி விற்கவும் முடியும். அநேக சர்ந்தர்ப்பங்களில் பணம் கொடுக்கப்பட வேண்டியவர்களுக்கே சட்டப்படி முத-டம் கொடுக்கப்படுகிறது. இவ்வுலகின் உணவு உற்பத்தியாளர்கள், அறுவடையாளர்கள் ஆகிய விவசாயிகளுக்கே பொதுவாக இந்த தீர்க்கதரிசனம் பொருந்துவதாக நாம் நம்புகிறோம். அதோடு கூட சில உலகத்துக்குரிய பொதுவான சட்ட ஒழுங்குகளைக் கூட நாம் சற்று கூர்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. ஏனெனில், இது அறுவடையாளர்கள் யாவரையும் எல்லா இடத்திலும் ஒரே விதமாய் பாதிக்ககூடும். வஞ்சனை மற்றும் தந்திரங்களி-ருந்து இப்படிப்பட்டவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். மேலும், இந்த தந்திரமான சட்டங்கள் அல்லது அநியாயமாய் அமுல்படுத்தப்படும் சட்டமானது உலகின் செல்வந்தர்களால் பாதுகாக்கப்பட்டு பயன்பெறப்படுகிறது. இப்படிப்பட்ட கண்டுபிடிப்புகளே இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலுக்கு தேவையான காரியங்களை சந்திக்கும். வெள்ளியின் மதிப்பீடு குறைவதாலேயே இந்த தீர்க்கதரிசன நிறைவேறுதலுக்கான எல்லாத் தேவைகளும் சந்திக்கப்படுகின்றன என்பதை நாம் நம்புவதோடு அதை நிரூபிக்கவும் முயற்சி செய்வோம்.



ஆனால் முன்பிருந்த ஸ்தானத்திற்கு, வெள்ளியானது மறுபடியும் பிரதான பண மதிப்பீடாக திரும்பவும் வரும் என்று இப்போதைக்கு நாம் யாரும் எதிர்பார்க்கக் கூடாது. இதுவே தற்போதைய மற்றும் வரப்போகிற உபத்திரவத்துக்கு ஒரு சர்வலோக நிவாரணி என்பதை நாம் வ-யுறுத்துகிறோம். இதற்கு நேர்மாறாக யாக்கோபின் தீர்க்கதரிசனத்தின் படி வெள்ளியானது மறுபடியும் நாணய மதிப்பீட்டின் அதிகாரத்துக்கு திரும்பாது என்பதை திட்டவட்டமாய் தெளிவுப்படுத்திக் கொள்கிறோம். ஆனால், இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை காண்பிக்க நாம் மிகவும் விரும்புகிறோம். மேலும், வரப்போகும் மற்றும் தற்போதைய உலகத்தின் உபத்திரவங்களின் மீது வீசப்போகும் வெளிச்சத்தினால் நன்மை அடையப் போகும் யாவரையும் குறித்தும் நாம் வாஞ்சையுடன் இருக்கிறோம்.

கிறிஸ்தவ ராஜ்யத்தினால் வெள்ளியின் மதிப்பு குறைக்கப்பட்டது, கிறிஸ்தவ ராஜ்யத்தின் சில வகுப்பினருக்கு சாதகமாகவும் சில வகுப்பினருக்கு பாதகமாகவும் இருக்கிறது.

கோதுமை, அரிசி, பருத்தி இவைகளை விளைவிக்கும் நாடுகளுக்கு இது பாதகமாய் இருக்கிறது. ஏனெனில் தங்களது உற்பத்தி பொருட்களை வெள்ளி நாணய மதிப்புடைய நாடுகளின் வியாபாரத்தோடு போட்டி போட்டு விற்கவேண்டியிருக்கிறது. ஆகவே நடைமுறையில் பணமதிப்பை குறைக்கும் இடத்தில் விற்கவேண்டியிருக்கிறது. அதே சமயத்தில் தங்களது நிலம், முதலீடு, உடை, உழைப்பு, தனது சொத்தின் அடமான வட்டி ஆகியவற்றை தங்க விலை நிர்ணய மதிப்பின்படி செலுத்த வேண்டி உள்ளது. தாங்கள் பெறுவது வெள்ளி மதிப்பிலும், தாங்கள் அதே தொகையை தங்க மதிப்பிலும் செலுத்தும் போது சரிபாதியை அவர்கள் இழக்கிறார்கள். ஏனெனில், வெள்ளியின் மதிப்பில் தங்கம் இரண்டு மடங்கு அதிகமாகும். 1873ல் கிறிஸ்தவ தேசங்களினால் மதிப்பு குறைக்கப்படுவதற்கு முன் ஒரு வெள்ளி டாலரானது ஒரு தங்க டாலரைக் காட்டிலும் இரண்டு செண்ட் அதிகமானதாக இருந்தது. ஆனால், இன்றோ அந்த சட்டத்தின் பலனாக ஒரு தங்க டாலரை சமன் செய்ய இரண்டு வெள்ளி டாலர் தேவைப்படுகிறது. (உண்மை மதிப்பில், நாட்டிற்கு வெளியே இதை வாங்கி அச்சிட்ட பணத்தின்

நிர்ணய மதிப்பிற்கு இணங்க உபயோகிக்கின்றனர்) இந்த மாற்றம் தங்க நாணய மதிப்பை இரட்டிப்பாக்கிவிட்டது என்றே கூறலாம். அல்லது வெள்ளி நாணய மதிப்பானது குறைக்கப்படுவதாக கூறலாம். இது எழுதுகிற, பேசுகிறவரை பொறுத்தது. எது எப்படியானாலும் உண்மை என்னவோ ஒன்று தான். ஒரு கலம் கோதுமையின் மதிப்பு :

| | | | | |
|---|---|---|---|---|
| *1872ல்* | வெள்ளியில் | $ *1.51* | தங்கத்தில் | $ *1.54* |
| *1878ல்* | வெள்ளியில் | $ *1.34* | தங்கத்தில் | $ *1.19* |
| *1894ல்* | வெள்ளியில் | $ *1.24* | தங்கத்தில் | $ *0.61* |

இதை பார்க்கும் போது இந்த வருடங்களில் கோதுமை விலை வீழ்ந்தாலும், வெள்ளி மதிப்புடைய நாடுகளில் அது மிகக் குறைந்த அளவிலும் தங்க நிர்ணய நாடுகளாகிய கிறிஸ்தவ தேசங்களில் அதிக அளவிலும் காணப்படுகிறது. கோதுமையை பெருமளவில் வாங்கும் இங்கிலாந்து, தனது பணத்திற்கு எங்கு அதிக கோதுமை கிடைக்குமோ அங்கு தான் வாங்குகிறது. வெள்ளி மதிப்பீடு மாறுவதற்கு முன் ஒரு தங்க டாலரின் மதிப்பிற்கு இரண்டு வெள்ளி டாலர் பெற்று, அதன் மூலம் இந்தியாவி-ருந்து இரண்டு மடங்கு கோதுமை வாங்கப்பட்டது. இப்படியாக கோதுமையின் தங்க விலை இறங்கிவிட்டது. இதே காரணத்தினால் அமெரிக்க நாட்டின் நெல், பருத்தி உற்பத்தியாளர்களும் கூட கஷ்டப்படுகின்றனர். நெல்லும், பருத்தியும் வெள்ளி நிர்ணய நாடுகளினால் விளைவிக்கப்படுகின்றன. முன்பிருந்ததைக் காட்டிலும் ஒன்றரை மடங்கு விலையில் தங்க நிர்ணய நாடுகளில் வாங்கப்படுகிறது.

தற்செயலாக பிற தானியங்களை உற்பத்தி செய்கிறவர்களும் கூட இந்த உபத்திரவத்தில் பங்கு பெறுகின்றனர். ஏனெனில் அதிக தானிய உற்பத்தியினிமித்தம் விலை சரிவை சரி செய்ய இவர்கள் எடுக்கும் முயற்சி வீணாகிப் போனது. முடிவில் நம்பிக்கையிழந்து அவ்வளவிற்கு விலை சரியாத பிற தானியங்களிடம் திரும்பினர். மட்டுமன்றி, அளவிற்கு அதிகமான உற்பத்தியால் விரக்தியும் அடைந்தனர். இதன் விளைவாய் சின்ன சின்ன வியாபாரிகள் பாதிக்கப்படுகின்றனர். அதே சமயத்தில் விவசாயிகளின் இந்த பாரத்தை எல்லா வகுப்பினரும் ஓரளவிற்கு உணரவேண்டியிருக்கிறது.



ஆனால் வெள்ளி விலை நிர்ணயத்தினால் எந்தெந்த பிரிவினர் நன்மையடைகின்றனர்? (1) விசேஷமாய் வங்கிகள், பணம் கடன் கொடுப்பவர்கள், அடகு வியாபாரிகளே. எப்படியெனில், இவர்களது சொத்துக்களின் மதிப்பு டாலரினால் இரட்டிப்பாக்கப்படுகிறது. ஒவ்வொரு டாலர் வட்டியும் முன்பு கொடுத்ததை விட இரண்டு மடங்கு மதிப்பை கொடுக்கிறது. இரண்டு மடங்கு மதிப்பு என்பதால் தேவையைக் காட்டிலும் ஆடம்பரத்திற்குரியவைகளையும் வாங்க முடியும். (2) ஒரே வருமானம் உள்ள பாராளுமன்ற அங்கத்தினர், நீதித்துறையாளர்கள், சட்டத்துறையினர், குமாஸ்தாக்கள் மற்றும் பணியாளர்கள் யாவரும் பெறுகின்ற ஊதியத்தின் மூலமும் கூட இதே காரணத்தினால் பயனடைகின்றனர். ஒரு வாரத்துக்கோ, ஒரு நாளைக்கோ ஒரு மணி நேரத்திற்கோ பத்து டாலர் பெறுவார்களேயாகில், இந்த பத்து டாலரினால் இரண்டு மடங்கு பருத்தி, கம்பளி, கோதுமையையும் இதனால் தயாரிக்கப்படும் பொருட்களையும் வாங்க இயலும்.

அமெக்க நாட்டின் விவசாயிகளிடையே வெள்ளி விலை குறித்த விஷயம் எழுந்தபோது தங்களது கஷ்டத்திற்கான காரணத்தை கண்டறிந்தபோது 1896 தேர்த-ல் இந்த பிரச்சனையை நாடு முழுவதும் பரப்புவதற்கு சமயத்தை எதிர்பார்த்து இருந்தனர். ஆனால், இதன் மூலம் ஒவ்வொரு தனிமனிதனும் தன் சொந்த ஆதாயத்தை தேடினபடியால் செல்வந்தர் கூட்டமும், முக்கிய பதவிகளை வகித்தவர்கள் கூட்டமும், பணியாளர் கூட்டமும், தங்க நிர்ணய முறை தங்களுக்கு மிகவும் சாதகமாத இருப்பதை உணர ஆரம்பித்தார்கள். சில்லரை வியாபாரிகளும் வசதி படைத்த விவசாயிகளும் தங்களுடைய சொந்த தீர்மானத்தின் மீதே சந்தேகிக்க ஆரம்பித்து தங்களுடைய வங்கிகளின் வழியைப் பின்பற்றினர். இது அவர்களது சொந்த விருப்பத்துக்கு நேர்மாறானதாகவே இருந்தது. வெள்ளி மிகவும் அத்தியாவசிய தேவை உள்ள நாடுகளில் மட்டும் வெள்ளி விலை தோற்கடிக்கப்பட்டது. ஆனால் இப்படியல்லாத நாடுகள் தனது இறக்குமதி, ஏற்றுமதி அளவின் தன்மையைப் பொறுத்துத் தனது அளவுகோலை மாற்றி, வெள்ளியை தனது விலை நிர்ணய மதிப்பீடாய் தக்கவைத்துக் கொண்டன.

ஆனால், இவ்விஷயம் தற்போது மித மிஞ்சிப்

போய்விட்டது. 1873ல் இழந்த தனது இடத்தை வெள்ளியானது மறுபடியும் திரும்ப பெறாது. இது மிகவும் சுயநலமான காரியம். வேறு எந்த பிரிவை விடவும் விவசாயிகள் வர்க்கமே எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும், பெரும்பான்மையான அரசியல் பங்கை அவர்கள் பெறவில்லை. ஏறக்குறைய மற்றெல்லாருமே சுயநலத்தோடு இதன் மறுபக்கத்திலேயே இருக்கின்றனர். பரிதாபத்துக்குரிய விவசாயிகளே! பரிதாபத்துக்குரிய வய-ல் அறுப்பவர்களே! கடந்த காலத்தின் உங்களது அழுகுரலானது தற்சமயம் சிறிது காலத்திற்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. இது செயற்கையாய் விலைகளை உயர்த்தி இருப்பதனாலேயே, கிறிஸ்தவ ராஜ்யத்தின் அறுவடையாளர்களுடைய கூக்குரல் மேலும் மேலும் கூடிப் போவதாலும், எப்போதையும் விட அதிகமான அழுத்தத்தினால் தொடரப்படுவதற்கு முன்னால் ஒரு சிறு இடைவெளி. நீதியைச் சரிக்கட்டும் மகா பெரிய நாளாகிய, உபத்திரவத்தின் காலத்திற்கு தயாராகும் பொருட்டு, சமுதாயத்தின் பாரம்பரிய வகுப்பினர் மற்றும் மிகவும் பொறுமைசா-களின் பொறுமையும், பாரம்பரியமும் பாழடிக்கப்பட்டு, நாசப்படுத்தப்படுகிறது.

ஆனால், இதில் வெள்ளியின் தரம் குறைவாய் நிர்ணயிக்கப்படுவதன் பங்கு என்ன? இவ்வுலகின் வீழ்ச்சியை வெளிப்படுத்தும் ஆர்வம் யாருக்கு இருக்கிறது? நாம் பதில் அளிக்கிறோம். நிதி நிறுவனத்தினரே முன்னோடிகளாய் இருக்கின்றனர். இவர்கள் தங்களுக்கும், தங்கள் கூட்டணிக்கும் நிறுவனத்திற்கும் கூடுமான அளவுக்குப் பெருத்த தொகை அதிகப்படியாய் வந்து சேருவதற்காக இந்த பண முதலீட்டளார்களே பணத்தை நிர்வகித்து, அதனுடன் விவசாயி தன் நிலத்தில் உழைப்பது போல் உழைத்து, அதை தங்களுடைய தொழிலாகவே கொண்டிருக்கின்றனர். ஆங்கிலேய நிதி நிறுவனங்கள் உலகுக்கு வழிகாட்டிகள். அவர்கள் நெடுங்காலமாய் இதை தொழிலாக செய்து, அதன் மீது அதின கவனம் செலுத்தியவர்கள்.

“போரில் யாவும் நலமாக நடக்கிறது” என்பது ஒரு முதுமொழி. இங்கிலாந்தின் முதலீட்டாளரும், அரசியல்வாதிகளும், இப்படிப்பட்ட காரியங்களை உலகுக்கு நினைப்பூட்டும் வகையில்



ஐம்பது வருடங்களுக்கு முன்னே விழித்துக் கொண்டார்கள். பொருளாதார யுத்தமானது இந்நாட்களுக்கு மிகவும் பொருத்தமானது. அடிமை வியாபாரத்தையும், கொள்ளையடிக்க போரிடுவதையும் காட்டிலும் இந்த பொருளாதார யுத்த மழை மிகவும் லாபகரமானது. பிறநாடுகளோடு ஒப்பிடும் போது சிறிய நாடான பிரிட்டன் வெகு சீக்கிரத்திலேயே தங்களது மாபெரும் செழுமையானது உற்பத்தியிலும், முதலீட்டிலுமே இருக்கிறது என்பதை புரிந்துகொண்டது. இது அவர்களுக்கு மட்டுமன்றி, உலகமனைத்துக்கும் கூட ஒரு எச்சரிப்பாகவே இருக்கிறது. இந்த திட்டத்தை ஆங்கிலேயர் மிக ஜாக்கிரதையுடன் தொடர்ந்தனர். மீதமுள்ள உலகமனைத்திலும் தங்களுக்கு மிகவும் சாதகமான தடையற்ற தாராள வர்த்தகம் என்னும் கொள்கையை பின்பற்றி, முன்பிருந்ததையும் விட இக்காலத்தின் தயாரிப்புகளை மிகவும் ம-வாக்க முடிந்தது. எப்போதும் இல்லாத அளவிற்கு நாகரீக மேம்பாடடைந்த உலகத்தின் மீது இந்த வர்த்தக கொள்கை திணிக்கப்பட்டது. இந்த சூழ்நிலையானது கிரேட் பிரிட்டனை வெகு குறுகிய காலத்துக்குள்ளேயே உலகத்தின் தொழில் மையமாக மட்டுமன்றி, வர்த்தக, பொருளாதார மற்றும் முதலீட்டாளரின் மையமாக மாற்றிவிட்டது.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்பு மிகவும் சாதுர்யமான பிரிட்டிஷ் முதலீட்டாளர்கள், தாங்கள் விவசாயிகளாக இல்லாததினால் விவசாய பொருட்களின் மீது விலையைக் குறைப்பதன் மூலம் தங்களது வட்டிகள் மிகவும் சாதகமான முறையில் இருக்கும் என்பதை கண்டுகொண்டனர். இதனால் இந்தவித பொருட்களை அவர்கள் வெளிநாடுகளி-ருந்து இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்டனர். சரித்திர ஆரம்பமுதல் வெள்ளியே விலை நிர்ணயம் செய்ய உபயோகிக்கப்பட்டது என்பதை அவர்கள் கண்டனர். ஆகவே, தற்போது தனது நிர்ணயத்தை மாற்றி அமைத்துக் கொண்டால், தங்கத்தை ஆதாரமாகக் கொண்டு வியாபாரம் செய்யலாம். ஆனால், உலகின் பிற பகுதிகளோ வெள்ளியையே நிர்ணயிக்கக்கூடும். இதனால் இந்த இரண்டு உலோகங்களின் மதிப்பை தொடர்ந்து தங்களுக்கு சாதகமாகவே உபயோகிக்க முடியும். இதன் விளைவாக 1816ன் தொடக்கத்திலேயே கிரேட்

பிரிட்டன் வெள்ளியை தன் நாட்டில் செல்லாததாக்கிவிட்டது. தான் எதிர்பார்த்த வண்ணம் பிற நாட்டு உற்பத்தியை தடைசெய்து வெற்றி காண முடிந்தது. மேலும் அதனால் (அதிக நிறுவனங்களும், வசதிகளும், அனுபவம் வாய்ந்தவர்களையும் பெற்றிருந்த காரணத்தினால்) பருத்தி, கம்பளி ஆடை மற்றும் இயந்திரங்களை பிறநாடுகளை விட ம-வான விலையில் உற்பத்தி செய்ய முடிந்தது. பிறநாடுகளிடம் போதிய உபகரணங்கள் இல்லாமையால் வெளிநாடுகளால் இந்த அளவிற்கு உற்பத்தி செய்ய முடியாதபோது, உலகின் பிற பகுதிகளிடமிருந்து தனது பணத்தைப் பிரித்து வைத்துக் கொள்வதில் வெற்றி காணமுடிந்தது. அதுமட்டுமன்றி, தனக்கு பெருத்த சாதகமாகவே காரியங்களையும் நடத்த முடிந்தது. ஆனால் மேற்கூறிய காரணங்களால் மட்டுமே பிரிட்டன் வெற்றி கண்டுவிட்டதா? விசேஷமாய் பிரான்சும், அமெரிக்காவும், அதன் பின் ஜெர்மனியும் தங்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கையை நிறுவிக் கொண்டன. ஆகவே, தனது எல்லைக்குள் இயந்திர தொழிற்சாலைகளை கட்டி, பராமரித்து, தன் நாட்டுத் தேவைகளை மட்டும் பெருமளவிற்கு சந்திக்காமல், உலக சந்தையில் கிரேட் பிரிட்டனோடும் கூட போட்டிக்கு நிற்க முடிந்தது. இந்தியா, சைனா, ஸ்பெயின், போர்ச்சுக்கல், தென் அமெரிக்கா மற்றும் ரஷ்ய நாடுகள் யாவும் நாம் பார்க்கின்றபடி இதையே பின்பற்றி தங்கள் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கின்றன. எனினும் கிரேட் பிரிட்டன் இன்னும் கூட உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் முன்னே நிற்கிறது. உலகுக்கு பொதுவான நாணயமாகிய பொன், வெள்ளியை பிரிப்பதில் வெற்றி காணவும் இல்லை. உண்மையில் பதினாறு பங்கு வெள்ளி, ஒரு பங்கு தங்கத்திற்கு சமம் என்ற விதத்தில் இரு உலோகங்களுக்கும் தொடர்பு இருக்கும்போது, வெள்ளியானது மேன்மையாகவும், தங்கம் முக்கியமல்லாததைப் போலவும் கருதப்பட்டது. ஏனெனில், பிரிட்டன் தவிர உலகத்தின் பணமானது வெள்ளியாக இருந்தது. தங்கத்தைக் காட்டிலும் விரும்பப்பட்டது. ஆகவே, புள்ளிவிவரத்தின் படி 1872ல் ஒரு வெள்ளி டாலரின் பிரீமியமானது தங்க டாலரை விட இரண்டு சென்ட் அதிகமாகவே கருதப்பட்டது.

தங்களுக்குள்ளாகவே இதை உணர்ந்தபடியால்,



தங்கத்தையோ அல்லது உற்பத்தியாளர்களையோ இவர்களால் கட்டுப்படுத்த இயலவில்லை. தாங்கள் இணைந்து முயன்றால் தங்கம், வெள்ளி இரண்டும் அதன் மதிப்பில் வேறுபடுத்தப்படும் என்ற நம்பிக்கையில் பிரிட்டன் முதலீட்டாளர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பியருடன் கூட்டணி வைக்க முனைந்தனர். இதனால் தங்கத்தின் மதிப்பு கூடிப்போனது. வெள்ளியை நாகரீக வளர்ச்சியடைந்த நாடுகள் செல்லாததாக்கினால் அதன் விளைவு இப்படியாக இருக்கும்.

(1) வெள்ளியானது நாகரீகமடைந்த நாடுகளில் வெறும் வியாபார பொருளாக மட்டுமே மாறிவிடும். இதனால் தங்கத்தை விடவும் வெள்ளி மதிப்பு குறைந்து போகும். இதனால் (நிரந்தரமாய்) தங்கத்தின் தரம் உயர்ந்து, வெள்ளியோ தன் மதிப்பில் குறையும். இதன் மூலமாய் வளர்ந்த நாடுகள் தங்களுக்கு விருப்பமான பருத்தி, கோதுமை, ரப்பர் மற்றும் பிற கச்சாப் பொருட்களை வெள்ளி என்ற தரம் குறைக்கப்பட்ட பணத்தைக் கொண்டு வளர்ந்து வரும் நாடுகளிடமிருந்து பாதி விலைக்கு வாங்க முடியும். ஆனால், சுகபோகப் பொருட்கள், ஆடம்பரங்கள், இயந்திரங்கள் போன்றவற்றிற்கு இரண்டு மடங்கு விலை கொடுத்து மேலை நாடுகளிடமிருந்து வாங்க ஏழை, புறஜாதி நாடுகள் வற்புறுத்தப்படுகின்றன. ஏனெனில் முதலீட்டாளர்களின் வழி நடத்துதலால், கிறிஸ்தவ ராஜ்யங்களின் முன்னேறிய சகோதரர்களின் சட்ட முறைமைகளால் புறஜாதி மக்களின் வெள்ளி டாலர் தரம் குறைக்கப்பட்டு, பாதியாக விலை மதிப்பை இழந்துவிட்டது. மேல்நாட்டவரின் இப்படிப்பட்ட மூளையால் பாமரரின் லாபங்களையெல்லாம் பெறுவதற்கு “நேர்மையான வியாபாரம்” என்று பெயர். ஆனால் இது தெய்வீக பார்வையில் நீதியா? அல்லது மோசடியா? நிச்சயமாய் புற ஜாதியார் இவர்களுக்கு செய்கிறது போல இவர்கள் புறஜாதியாருக்கு செய்யவில்லை.

(2) வெளிநாட்டு வியாபாரம் எல்லாவற்றிலுமே கிரேட் பிரிட்டனின் இப்படிப்பட்ட அடிச்சுவட்டையே எல்லா மேல்நாடுகளும் பின்பற்றிய போதும், வெளிநாட்டு வர்த்தகத்தில் பெருத்த பங்கை தான் எப்போதும் பெறமுடியும் என்று பிரிட்டன் எதிர்பார்த்தது.

கோதுமையை பொறுத்தமட்டில், தேவை விநியோக

கொள்கையை நாம் அசட்டை செய்ய முடியாது. அது நடைமுறையில் இருப்பதாகவே நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால், உலகத்தின் உற்பத்தியில் அளவுக்கு அதிகமான விநியோகம் இல்லாததாகவே காட்டப்படுகிறது. திரு.-ன்ட் போம் அவர்களின் புள்ளி விவரத்தை உண்மையில் நாம் பார்த்தோம். அதன்படி உலக ஜனத்தொகை பெருக்கத்தின் அளவிற்கு நிகராகக்கூட கோதுமை விநியோகம் இருக்கவில்லை. மேலும் பார்க்கப்போனால், 1892ல் தான் உலக சரித்திரத்திலேயே கோதுமை விளைச்சலானது மிக அதிகமாய் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த வருடம் நியூயார்க் நகரில் ஒரு கலம் கோதுமையின் விலை 90 சென்ட், பிற தானியங்களின் விலை ஒரே சீராக சரிந்து, கடைசியில் கடந்த சில வருடங்களாக இருக்கும் செயற்கையான விலையேற்றத்தை அடைந்தது.

உலகெங்கும் நிலவிவரும் குறிப்பிட்டதொரு விசேஷமான சூழ்நிலையினால் தான் விலைவாசி இவ்வளவிற்கு ஏறுகிறது. ரஷ்யா, அர்ஜென்டீனா குடியரசு, ஆஸ்திரியா, ஹங்கேரி மற்றும் பிற நாடுகளின் கோதுமை விளைச்சல் சராசரிக்கும் குறைவானதே. ஆனால் இந்தியாவில் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு எப்போதுமே தேவைக்கு அதிகமான விளைச்சலே இருக்கிறது. அதேசமயம் 35,000,000 ஜனத்தொகை திடீரென பஞ்சத்தால் பாதிக்கப்படும் போது, பற்றாக்குறையை சமாளிக்க அமெரிக்காவின் கோதுமை உதவி செய்யும்படி ஆகிறது. இப்படிப்பட்ட தொரு நிலைமை 1892லும் கூட உலகம் காணாத அதிகப்படி விளைச்ச-ன் போது ஒரு மரக்கால் 1.30 டலராக கோதுமை விற்கும் நிலையில் (1892ல் 1 அவுன்ஸ் வெள்ளியானது 87 சென்ட் தங்கத்திற்கு இணையாக இருந்தது) 1873ல் நிலவிய கோதுமையின் விலையானது பொருளாதார நிலவரப்படி ஒரு மரக்கால் ஏறக்குறைய 1.90 டாலருக்கு (வெள்ளி) 1896ல் இந்தியாவிற்கு விற்கும் அளவிற்கு முன்னேறி விட்டது. இதற்கும் மேல் இந்த விஷயத்தை பொருத்தமட்டில் சில உண்மை நிலவரங்களை நாம் கவனிக்க வேண்டும். இதே காரணத்தினால் தான் (மிதமிஞ்சிய உற்பத்தியினால் அல்ல என்று நாம் பார்த்திருக்கிறோம்) கடந்த 30 ஆண்டுகளில் கோதுமையின் விலை வீழ்ந்துவிட்டது. பிற பொருட்களுடைய விலையும் கூட இதனோடு ஒப்பிடும் போது சிறிது இறங்கிவிட்டது. உதாரணமாய் 1878ம் ஆண்டை 1894ம் ஆண்டோடு



ஒப்பிட்டு பார்க்கும் போது நியூயார்க் நகரில் அந்த காலகட்டத்தில் நிலவிய விலை விவரம் கீழே உள்ளது:

| | 1878 | 1894 |
|---|---|---|
| ரை ஒரு மரக்கால் | $ 0.65 | $ 0.68 |
| ஓட்ஸ் ஒரு மரக்கால் | $ 0.33 | $ 0.37 |
| சோளம் ஒரு மரக்கால் | $ 0.52 | $ 0.51 |
| கென்டக்கி புகையிலை ஒரு பவுண்ட் | $ 0.07 | $ 0.095 |
| மாட்டிறைச்சி மொத்த வியாபாரம் | $ 0.0525 | $ 0.055 |
| பன்றியிறைச்சி மொத்த வியாபாரம் | $ 0.0425 | $ 0.055 |
| வைக்கோல் ஒரு டன் | $ 7.25 | $ 8.50 |

கீழே கோதுமை, பருத்தி, வெள்ளி கொடுக்கப்பட்டுள்ளதை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரேவித பாதிப்பை காணலாம். காரணம் கிறிஸ்தவ தேசங்களின் வெள்ளி விலை நிர்ணய மாற்றத்தால் என்று தெரியும்.

| | 1878 | 1894 |
|---|---|---|
| பருத்தி ஒரு பவுண்ட் | $ 0.11 | $ 0.07 |
| கோதுமை ஒரு பவுண்ட் | $ 1.20 | $ 0.61 |
| வெள்ளி ஒரு அவுன்ஸ் | $ 1.15 | $ 0.635 |

ஆனால் கிறிஸ்தவ ராஜ்யங்களின் மீது உற்பத்தி விநியோக சட்டமானது வெள்ளியின் தரக்குறைவை திணித்திருக்கக்கூடாதா? என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அதிகமான அளவில் பெருகி வருவதாலேயே வெள்ளியின் விலை இறங்கியிருக்கக்கூடாதா? ஏனெனில், எந்த திட்டத்தினாலும் தங்கத்தின் மதிப்பை கூட்ட முடியவில்லையே?

இல்லை என்று நாம் பதில் அளிக்கிறோம். பின் நாட்களில் வெள்ளி மற்றும் தங்கத்தின் உற்பத்தி அதிக அளவே இருந்தபோதும், பொதுவான வியாபாரம் மற்றும் ஜனத்தொகையின் வளர்ச்சியானது விகிதாச்சாரத்தில் மிகமிக அதிகமாகவே இருந்தது. உலகின் மொத்த தங்கம் மற்றும் வெள்ளியின் கையிருப்பு யாவுமே நாணயமாக

அச்சிடப்படுமாயின் உலக வியாபாரத்துக்கு அது முற்றிலும் போதுமானதே அல்ல. அதை சமன்படுத்த அரசாங்க, வங்கி மற்றும் வர்த்தக நோட்டுக்கள், பத்திரங்கள் யாவும் தேவைப்படும். 1896ல் நாணயமாக்கப்பட்ட, நாணயமாக்கப்படாத உலகத்தின் தங்கம் யாவும் கணக்கிடப்பட்டது. அது (டாலர் 6,000,000,000) ஆறாயிரம் மில்-யனுக்கு குறைவில்லால் இருந்தது. அதேசமயம் அமெரிக்க நாட்டில் பொதுவான மற்றும் தனிப்பட்ட கடன் தொகை இதைவிட மூன்று மடங்கு அதிகமாக இருந்தது. ரஷ்யா 1873க்கு முன் சிலகாலம் அச்சிடப்பட்ட பணத்திற்கு பதிலாக வெள்ளி நிர்ணயத்தை கொண்டுவர முயற்சி செய்தது. ஆனால் அதற்குரிய வெள்ளி போதுமான அளவு கையில் இல்லாமையால் இன்னும் காகிதத்தாளிலேயே ரஷ்யா நிற்கிறது. இந்த வெள்ளி விலை சரிவு, ஏற்கெனவே ஆராயப்பட்டது என்ற விஷயத்தை காண்பிக்கவே இவைகளை குறிப்பிடுகிறோம். இந்த சரிவு, விநியோகம் தேவை என்பதின் கொள்கையினால் அல்ல. ஆனால், அரசியல் சட்டங்களினாலேயே (1872ல் தங்கத்திற்கும் மேலான நிலையில் வெள்ளி இருந்தது. தங்கத்தின் மீது பிரிமியமும் கூட கொண்டு வந்தது) வந்தது.

கிறிஸ்தவ ராஜ்யங்களின் பிரதிநிதிகள் யாவருமே தங்களது சொந்த விவசாயிகளுக்கும், புறஜாதிகளுக்கும் எதிரானதொரு சதி ஆலோசனையில் இறங்கியிருக்கிறார்கள் என்பது அவ்வளவு எளிதாக ஒப்புக் கொள்ளக்கூடியதா? இல்லை. இப்படிப்பட்டதொரு முடிவுக்கு வருவதற்கு இந்த உண்மைகள் போதுமானதில்லை. ஆனால், (மூதலீட்டாளர்கள் என நாம் அழைக்கக்கூடிய) பணபலம் பொருந்தியவர்கள் அரசியல் சட்டங்களை ஏமாற்றும் வகையில் திட்டங்களை வகுத்து இப்படிப்பட்டதொரு முடிவை எதிர்பார்த்து செயல்பட்டனர் என்று சொல்லாமல் இருக்க முடியுமா? இளவரசர் பிஸ்மார்க்கின் சாட்சியம் நம்மிடத்தில் உண்டு. மேலும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் கட்சிக்காரரும் கூட இந்த பாதிப்புக்கு சாட்சிகளாய் இருக்கின்றனர். ஆகவே, மோசடி மூலம் சிறிய அரசியல் சாசனம் என்னும் உளி, உலக பண மதிப்பீடுகளாகிய இரண்டு உலோகங்களின் இடையே செருகப்பட்டது. இதன் மூலம் வெள்ளியின் மதிப்பு இறக்கப்பட்டு, தங்கத்தின் மதிப்பு



இரட்டிப்பாக்கப்பட்டது. மேலும், இப்போது இந்த தீமையை உற்றுப் பார்த்து அரசியல் வாதிகள் பிரம்மித்து நிற்கின்றனர். மட்டுமன்றி, வெள்ளியை மறுபடியும் பழைய நிலைமைக்கே கொண்டுவருவதினால் நிலைமை இன்னும் மோசமாக மாறிப்போவதோடு கடன் கொடுத்தவர்களை நஷ்டத்தில் விட்டுவிடுவதோடு, ஏற்கெனவே கடன் வாங்கியிருக்கும் பிரிவினருக்கு பாதிப்பையும், நஷ்டத்தினையும் ஏற்படுத்தும் என்று உணர்கின்றனர். முதலீட்டாளர்கள் மிகவும் கூடுதலான லாபத்தை பெற்றதோடு மட்டுமன்றி, (தங்களது எல்லா சொத்து மற்றும் வருமானங்களிலும் அதன் மதிப்பை இரட்டிப்பாக்குகிறார்கள்.) மனித சமுதாயத்தின் உயிரோட்டமான பொருளாதாரத்தின் மீது தனது பிடிப்பை இழந்து போவதை விட, புரட்சி அல்லது குழப்பமானதொரு கலவரத்துக்குள் சமுதாயத்தை இவர்கள் தள்ளி விடுவார்கள். தனது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முதலீட்டாளர்கள் தங்கள் பலத்தை உபயோகப்படுத்துவர். வங்கியில் தாழ்மையுடன் கடனுக்காக காத்து நிற்கும் ஏராளமான வகுப்பினரை இவர்கள் கட்டுப்படுத்துகின்றனர். கடன் வாங்கும் சர்வதேச அரசாங்கங்களையும், பத்திரிக்கைத் துறையையும் கூட கட்டுப்படுத்துகின்றனர். இந்த மோசக்காரருடைய கனத்தையும் தாராள குணத்தையும் நம்பும்படியும் அவர்களுடைய அதிகாரத்துக்கும் கோபத்துக்கும் அஞ்சவும் பொதுமக்கள் தூண்டப்படுகின்றனர். இதனோடு கூட மிகப்பெரிய செல்வாக்கு நிறைந்த சம்பளக்காரர்களாகிய அதிகாரிகளும் குமாஸ்தாக்களும், திறமை வாய்ந்த வேலையாட்களும் தங்களது நன்மைகள், இவர்களுடைய கொள்கைகளுக்கு உட்பட்டு இருப்பதையே காண்கின்றனர். அவர்களது ஆதரவு இல்லாவிடில் மிதவாதிகளும் அனலற்றவர்களாக இருப்பார்கள். அவர்களது கொள்கையை பொருத்தமட்டில் இவர்கள் நடுநிலை வகுத்து, இந்த மோசக்காரருக்கும் எதிராக எதையும் ஒருமனப்பட்டு பேசமாட்டார்கள்.

இந்த மோசடி மற்றும் வஞ்சகமான நடவடிக்கைகளுக்கு சாட்சியாக அநேகம் இருக்கின்றன. பின்வரும் சில போதுமானவைகள்:

சென்ட்டர் தர்மென் கூறுகிறார்:

"சட்டசபை மேலவையில் ஒரு மசோதாவானது நிலுவையில் இருந்தபோது, இது வெறும் பண அச்சடிப்பில் மாறுதலை கொண்டுவரவும், நாணயத்தினை ஒழுங்கு படுத்தவும், ஒருசில காரியங்களை நிர்ணயிக்கவும் கொண்டுவரப்பட்ட மசோதா என்று மிகவும் சாதாரணமாய் நினைத்தோம். ஆனால் இந்த மசோதாவை கொண்டு வந்த குழுவின் அங்கத்தினரை தவிர, எனக்கு தெரிந்து வேறு ஒருவருக்குமே நாணய மதிப்பு குறைப்புக்கு குருட்டாட்டமாய் கொண்டுவரப்பட்ட மசோதா என்ற எண்ணமே வரவில்லை." காங்ரசினல் ரெக்கார்ட் தொகுதி 7, பகுதி 2, 45வது சட்டம், 2 வது பிரிவு, பக்கம் 1064."

சென்ட்டர் காங்க்-ங் 1876, மார்ச் 30ல் சென்ட்டர் போகேவின் மசோதா (எஸ் 263)வின் மீது கருத்து தெரிவிக்கும் போது, வெள்ளி நாணயங்களை சட்டப்படி ஏலத்தில் விடும் சம்மந்தப்பட்ட சட்டத்தை அமுல்படுத்தும் நேரத்தில், ஆச்சரியத்தோடு தெளிவாய் கூறுகிறது:

"சென்ட்டரையோ அல்லது சென்ட்டின் உறுப்பினர் ஒரு கேள்வியை கேட்க சென்ட் தலைவர் அனுமதிப்பாரா? அமெரிக்க டாலர் என்பதே இனி சட்டப்படி இருக்கப்போவதில்லை என்பது உண்மையா? அப்படியானால் இந்த மசோதாவின் மூலம் அரை டாலர், கால் டாலர்கள் வெறும் வெள்ளி நாணயத்தினால் மட்டுமே செய்யப்பட்டு அது நாணயமாக உபயோகிக்கப்படும் என்பது உண்மையா ?"

1878, பிப்ரவரி, 15ல் சென்டர் அ-சன் கூறுகிறார் :

"1873 மசோதாவில் ரகசியமான சரித்திரம் கூறப்பட்டபோது. பிரதிநிதிகளின் அவையானது தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை தயாரிக்க முற்படுவதும், இரண்டு நாணயங்களையுமே நமது சொந்த நாணயத்துக்கு பதிலாக பிரான்சு நாட்டுடன் தொடர்பு கொள்ளும் நோக்கத்துடன் கொண்டு வரப்படுவது தான் உண்மையா ? 1873ல் இந்த விஷயமானது உண்மையாக ஆராய்ந்து பார்க்கும் நிலையில் இருந்தது. அதன் பிறகு இதே மசோதாவானது மாற்றப்பட்டது."

மதிப்பிற்குரிய வில்-யம் டி.கெல்-, மசோதாவுக்கு பொறுப்பானவர், 1878 மார்ச் 9ல் பிரதிநிதி அவையின் முன் பேசும் போது கூறியவை:



"வெள்ளி டாலர் நிர்ணயத்தை செல்லாததாக்கும் மசோதாவை கொண்டு வருவது குறித்து நான் கூறுவது என்னவெனில், நாணய குழுவின் தலைவராக இருந்தும் கூட, நமது நாணய முறைமையி-ருந்து வெள்ளி டாலரானது செல்லாது போகும் என்ற உண்மையை குறித்து நான் அறியாமல் இருந்துவிட்டேன். மதிப்பிற்குரிய சென்ட்டர் திரு.ப்ளெய்ன் மற்றும் ஊரீஸ் அப்போதைய சபை உறுப்பினர்கள் இருவருமே ஒருவருக்கொருவர் சில நாட்களாய் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கின்றனர். 'மசோதா வெளியான போது அது பண மதிப்பை வீழ்த்திவிட்டது என்று உனக்கு தெரியுமா?' எனக்குத் தெரியாது. உனக்காவது தெரியுமா? என்றார், திரு.ப்ளெய்ன். 'இல்லை' "அதை அறிந்த மூன்று அங்கத்தினர் சபையில் இருக்கிறார்கள் என்பதை நான் நினைத்து பார்க்கவே இல்லை' என்று திரு. ஊரிஸ் கூறினார்."

மறுபடியும் 1879, மே 10ம் தேதி திரு. கெல்- கூறுகிறார்:

"என்னைப் பொருத்தமட்டில் நாணயக் குழுவினர் எடை பார்த்து அளந்து அதை அசல் மசோதாவாக சமர்ப்பித்தவர்கள், தகுதியானவர்களும், உண்மையுள்ளவர்களுமாய், மிகவும் கவனத்தோடு அதன் விதிகளை ஆராய்ந்தனர். அதன் செய்தியாளராகிய நான் இதை அறிவிக்கிறேன். இந்த மசோதாவில் தரமான வெள்ளி டாலருக்கும், வியாபார டாலருக்கும் சேர்த்தே வழிமுறைகள் இருக்கின்றன. தரமான டாலரானது செல்லாததாகும்படி சென்ட் பிரிவு சட்டப்பூர்வமாய் அமலாக்கிய பிறகு இதைக் குறித்து வெகுகாலமாய் எதையும் கேட்க இயலவில்லை. அதன் சரித்திரத்தைக் குறித்து நான் வெளிப்படையாய் தெரிவிப்பதற்கு எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் அமெரிக்க நாட்டின் வெள்ளி டாலர் நிர்ணயமானது செல்லாததாக்கப்பட்டதைப் போன்றதொரு இரகசியம் இந்நாட்டின் அரசியல் சரித்திரத்திலேயே கிடையாது என்று கூறுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். இது ஏன், எப்படி வந்தது என்று சொல்வதற்கு ஒரு மனிதனையும் நான் இதுவரை காணவில்லை."

சென‌ட்டர் பீக் 1878 ஜனவரி 10ல் செனட் கூட்டத்தின் முன் பேசியதி-ருந்து:

“இது (வெள்ளியை மதிப்பிழக்கச் செய்த மசோதா) அவுஸ் ஆஃப் காங்கிரஸாலேயே கூட புரிந்துக் கொள்ள முடியாததாய் இருந்தது. மிகவும் துப்பறியும் அறிவுடைய பத்திரிக்கை நிருபர்களும் கூட இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்துவிட்டது என்று கண்டுபிடிக்கவோ, தெரியப்படுத்தவோ முடியாமல் போய்விட்டதை நான் கண்டேன்.”

எழுத இடம் இருந்தால் இதைப் போன்ற மிகவும் வலுவான வார்த்தையை அநேகரிடத்தி-ருந்து நம்மால் பெறமுடியும். மசோதாவின் தலைப்பே தவறாய் வழி காட்டுவதாக இருக்கிறது. “பணம் அச்சிடப்படுவதற்கு சம்மந்தப்பட்ட சட்டமானது திருத்தி அமைக்கவும், அமெரிக்க நாட்டின் நாணயத்தையும், அதிகாரிகளையும் ஆராய்ந்து தேர்வு செய்யவும் கொண்டு வரப்படும் சட்டம்.” இதில் வெள்ளியின் மதிப்பு செல்லாததாக்கப்படுவது பின் கூறப்பட்டபடி மறைக்கப்பட்டது. (1) இது முதல் தங்க நாணயமானது மதிப்பீடு செய்ய பயன்படுத்தப்படும் ஒரு அளவு என்று கூறும் சட்டப்பிரிவு 14; மேலும் (2) பிரிவு 15, வெள்ளி நாணயத்தை பற்றி விவரித்து, குறிப்பிட்டிருந்தாலும், வெள்ளி டாலர் மதிப்பு குறித்து ஒட்டுமொத்தமாய் ஏதும் கூறப்படாமல் விடப்பட்டது. 1874 ஜூன் 22ன் சட்டம் அதன் பெயரே இல்லாத அளவிற்கு வெள்ளியின் மதிப்பு பாழடிக்கபட்டு விட்ட பிறகு பெயரளவிற்கு 1873 சட்டத்தில் கூறப்பட்டதை தவிர வேறு உலோக நாணயம் அச்சிடப்படக்கூடாது என்று மட்டும் கூறப்பட்டது. இந்த சட்டத்தை அமுல்படுத்த கையெழுத்திட்ட தலைவர் யு.எஸ். கிரான்ட்டுக்குக் கூட இந்த சட்டத்தின் உண்மை ரூபம் தெரியாமல் போய்விட்டது. நான்கு வருடங்களுக்கு பிறகே, அதன் பின் விளைவு மிகத் தெளிவாய் தெரிந்தது. உண்மையில் தேசம் இன்னும் நாணய பட்டுவாடாவுக்கு திரும்பவில்லையாதலால், சில பண முதலீட்டாளர்கள், நாணயத்தை கவனித்தபோது, அந்த திசையில் செல்வதற்கான உபயோகமானதொரு ஆயத்த நடவடிக்கையாக எடுத்துக்கொள்ளப்பட்டது.



திரு. முராட் ஹல்ஸ்டட், கமர்ஷியல் கெசட்டின் (சின்சினாட்டி) ஆசிரியர், அந்நாட்களில் செல்வாக்குடைய மனிதனாக இருந்தார். 1877 அக் 24ல் அவர் நியூயார்க் பத்திரிக்கையில் எழுதியதாவது :

“இது பிரிட்டனின் தங்க கொள்கை. இது நிபுணர்களின் வேலையே. மழுப்பலாக இருப்பதே இதை ஜெயிக்க தேவையானது. நாணயம் இன்னும் பொது புழக்கத்துக்கு வராத காரணத்தினால், அநேகருடைய கவனத்தை ஈர்க்காமல், இது ஒரு பதட்டத்தோடு காணப்படுகிறது. கடன் வழங்கும் மாபெரும் நாட்டின் ஒரே நாணய முறைமை கடன் பெறும் நாடுகளின் மீது எந்த வாதத்துக்கும் இடமின்றி திணிக்கப்பட்டது.”

காலம் சென்ற கர்னல் ஆர்.ஜி. இங்கர்சோலுக்கு இந்த வார்த்தைகள் (வெளிப்படையாக) மக்களிடையே பெருமையைத் தேடித்தந்தது:

“வெள்ளியைச் செல்லாததாக்கவேண்டும் என்று உண்மையாகவே நான் கேட்டேன். ஆனால், வெள்ளியானது மோசடியானதொரு வழியில் செல்லாததாக்கப்பட்டுவிட்டது. கடன் பட்டிருக்கும் ஒவ்வொரு மனிதன் மீதும், அமெரிக்க நாட்டின் மிக நேர்மையான கடனாளி மீதும் ஒரு மோசடி திணிக்கப்பட்டது. இது உழைப்பாளிகளையே ஒட்டுமொத்தமாய் கொன்றுவிடுகிறது. இது பேராசை மற்றும் பொருளாசையின் ஆர்வத்தினால் செய்யப்பட்டுவிட்டது. நேர்மையான மனிதனால் இது அழிக்கப்படவேண்டும்.”

1877-1880 இடையே இதனுடைய உண்மை நிலவரம் உணரப்பட்டவுடன், இதன் பின்விளைவு எப்படி இருக்கப்போகிறது என்று அநேக காங்கிரசின் அரசியல்வாதிகளால் முன்னறிவிக்கப்பட்டது. சிலரோ இந்த காரியத்தைக் குறித்து ஏதும் அறியாமல் இருக்கிறார்கள். வேறு சிலர் சுயநலத்தினால் இதைப் பற்றி ஏதும் கூறாமல் மௌனம் சாதிக்கின்றனர். மேலும் வேறுசிலர் பண முதலீட்டாளர்களின் ஆலோசனை மீது சார்ந்திருக்கிறார்கள். ஆனால், சிலரோ இந்த தவறுக்கு எதிராக வீராப்புடன் பேசுகின்றனர்.

*1880ல் அமெரிக்க நாட்டு மேல் சபையில் காலம் சென்ற உயர்திரு. ஜேம்ஸ் ஜி. ப்ளெய்ன் கூறியவை:*

*"ஒரே ஒரு தங்க நிர்ணய காரியத்தினால் இந்த நாடு மட்டுமன்றி, உலக நாடுகளே ஒரு போராட்டத்தில் கஷ்டப்படுகின்றன. ஒருவேளை இந்த பிரச்னையே வெற்றி பெறுமாயின், உலக வர்த்தகம் முழுவதிலும் ஒரு பெரிய நாசம் உருவாகி பரவிவிடும். வெள்ளியை பணம் அல்ல என்று அழித்து விட்டதாலும் தங்கம் ஒன்றே மதிப்பீட்டு அளவு என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டதாலும், பணமாகவே வருமானம் ஈட்டுத்தருகின்ற முதலீடுகளைத் தவிர வேறு எந்த ரூபத்திலும் இருக்கும் சொத்துக்களும் நாசப்படும் பாதிப்பை பெற்றிருக்கின்றன. இவைகள் யாவும் பெருமளவில் கூடுதலான மதிப்பீட்டை பெறக்கூடும். மிகவும் துல்-யமான, நம்பகமான புள்ளிவிவரத்தின்படி 7,000,000,000 டாலர் அளவிற்கு நாணயங்கள் அல்லது வெள்ளி / தங்கக்கட்டிகள் இவ்வுலகில் இருக்கின்றன. வெள்ளியையும் தங்கத்தையும் மிகச்சரியாக பிரிப்பதனால், கோடிக்கணக்கானவருக்கு பெருந்துயரையும், ஆயிரக்கணக்கானோருக்கு படுமோசமான நாசத்தையும் ஏற்படுத்தமால், வெள்ளியை புழக்கத்தில் இருக்கும் பணம் என்ற ஸ்தானத்தை விட்டே அழித்துவிடுவது என்பது இயலாத ஒன்றாகும். வெள்ளியும் தங்கமும் நாட்டின் பணமாக இருக்கலாம் என்று நான் எண்ணுகிறேன். அதுமட்டுமன்றி, அரசியல் சாசனத்திற்கு முன்னேறியிருந்த அமெரிக்க மக்களின் நாணயம் மிகவும் சுதந்திரத்துடனேயே இருக்கிறது. இந்த இரண்டு உலோகங்களுமே பணமாக இருக்கக்கூடாது என்று கூற காங்கிரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட மதிப்பு குறைக்கப்படுத-ல் கங்கிரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதே என் முடிவு. ஆகவே, ஒருவேளை வெள்ளி செல்லாததாக்கப்படுமானால் அதை மறுபடியும் மதிப்புடையதாக்க நான் விரும்புகிறேன். அது நாணயமாக்கப்படுவது தடை செய்யப்படுமேயாகில் அது மறுபடியும் பழைய நிலைக்கு திரும்பவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட விருப்பப்படுகிறேன். இது மறுபடியும் பெருகுவதையே நான் விரும்புகிறேன்."*



*மறைந்த செனட்டர் வேன்ஸ் கூறியவை:*

*"பணமும் அதன் உடன் இருப்பவைகளும் உலகமெங்கிலும் இப்படிப்பட்டதொரு சதியாலோசனையில் இறங்கி எக்காலத்திலும் இல்லாததொரு பாவத்தை செய்ய முற்பட்டிருக்கின்றன. அரை பாகம் உலக பணத்தை தூக்கி எறிந்துவிட்டு, அடுத்த பாதியின் மதிப்பை கூட்டி தங்களுடைய சொந்த சொத்துக்களின் மதிப்பை தங்கள் அதிகாரத்தினால் கூட்டிக் கொள்கின்றனர். நமது சுதந்திரம் என்ற புனிதமான ஆலயத்தை இந்த பணமாற்றம் மாசுபடுத்துகின்றது."*

*வெளிநாடுகளில் இருக்கும் தனது பிரதிநிதிகளுக்கு பொருளாதார நிலவரத்தை அறிவிக்கும்படி அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கம் அதிகாரபூர்வமான கடிதங்களை அனுப்பியது. பெல்ஜியத்தில் அதிகாரியாக இருக்கும் திரு.குர்ரி கூறியது. குறிப்பிடத்தகுந்ததும் அமெரிக்க நாட்டு மக்களின் அனுபவத்தோடு தொடர்புடையதுமாக இருந்தது. பெல்ஜியத்தின் நிதி அதிகாரியான மதிப்பிற்குரிய அல்போன்ஸ் அல்லார்ட் என்பவரது கேள்விகளுக்கு கீழ்கண்ட பதிலைத் தருகிறார்:*

*"1873-ருந்து, பொருட்களின் வீழ்ச்சியால் ஒரு தொடர்ச்சியான இக்கட்டு இருக்கிறது. இது மேலும் வளராதபடி தடுக்க முடியாததைப் போல் தோன்றுகிறது. விலையில் வீழ்ச்சி, ஊதியத்தின் மீது பாதிப்பு ஆகியவை சமுதாய மற்றும் தொழில்முறைமைகளில் ஒரு நெருக்கடியை உருவாக்குகிறது.*

*"நொண்டினாலும் கூட மறுபடியும் 1873ல் ஏன் மறுபடியும் ஒரே நாணய முறைக்கு திரும்பிவந்தோம் என்று என்னைக் கேளுங்கள். முதலீட்டாளர்களாகிய ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாரை திருப்திப்படுத்த இந்த வகுப்பார் புதிய கொள்கைகளை கண்டுபிடித்தனர். அரசியல் பொருளாதார நிபுணர் சிலரால் குறிப்பாக பிரான்ஸ் நிறுவனத்தின் அங்கத்தினரால் ஆதரிக்கப்பட்டனர்.*

*"தொழில் மற்றும் சம்பளம் இவைகளின் மீது இந்த பொருளாதார காரியங்களுக்கு பெல்ஜியத்தில் என்ன செல்வாக்கு என்று கேட்கிறீர்களா? 1873ல் ஏற்கெனவே பண பற்றாக்குறை. இது இன்னும் மோசமானது. ஏற்கெனவே எதிர்பார்த்த விலை வீழ்ச்சியும் ஏற்பட்டது. 1873-ருந்து எல்லா உற்பத்தி பொருட்களின் விலையும்*

*50% சராசரி வீழ்ந்தது. தானியங்களின் விலை 65% வீழ்ந்தது. தொழி-ல் நல்ல வருமானம் இனி இல்லை. விவசாயத் தொழிலே நாசப்படுத்தப்பட்டுவிட்டது. வரியி-ருந்து பாதுகாப்பு கேட்டு யாவருமே அலறுகின்றனர். இந்த சமயத்தில் பாழாய்ப்போன நமது குடிமக்கள் போரைப் பற்றி சிந்திக்கின்றனர். இதுவே நமது ஐரோப்பிய நாட்டின் பரிதாபத்துக்குரிய நிலைமை."*

தேசிய குடியரசு லீக்கிற்கு எழுதிய கடிதத்தில் *(ஜூன் 11, 1891)* செனட்டர் ஜெ.டி. கேமிரான் கூறியதாவது:

*"எதுவுமே எதிர்த்து நிற்கமுடியாத கொடூரமானதொரு அழிவாகிய தங்க நிர்ணயம் என்ற ஒன்று நம்மிடையே கிரியை செய்து கொண்டிருக்கிறது. உலகத்தையே தன் கையில் எடுத்துக் கொண்டது போன்றதொரு நடவடிக்கை கடந்த 20 வருடங்களாக இருப்பதைப் போல் தங்கத்தின் மதிப்பு எதிர்காலத்திலும் கூட தொடருமேயானால், சில தலைமுறைகள், வெகு விரைவிலேயே தனது முடிக்கப்படாத கைவினைப் பொருட்களையும், பயிரிடும் விளைச்சலையும் அடமானம் வைக்கக்கூடிய தொழிலாளர் கூட்டத்திற்கு, கடன் கொடுக்கும் அளவிற்கு அதிகமான முதலீட்டை கவனத்துடன் பாதுகாக்கும் கொழுத்துவிட்ட அரை டன் நகரங்களை மட்டுமே இத்தனை பரந்த அமெரிக்கக் கண்டத்தில் காணமுடியும். இப்படிப்பட்ட சம்பவங்கள் உலக சரித்திரத்தில் மிகவும் சாதாரணமாகிவிட்டது. ஆனால் இதை நாம் யாவரும் எதிர்ப்போம். ஏழை, பணக்காரன், குடியரசுவாதிகள், ஜனநாயகவாதிகள், பொதுமக்கள், முதலாளிகள், தொழிலாளிகள், ஆலயம், கல்லூரி, எல்லாம் ஒரேவிதமாய், நல்லதொரு எண்ணத்தில் யாவருமே எதிர்ப்போம்."*

வெளிநாட்டுக்கு கோதுமை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் விவசாயிகள் முக்கியமாய் அமெரிக்கா, கனடாவின் விவசாயிகள் ஏன் அவதியுறுகிறார்கள் என்று ஆங்கிலேய முதலீட்டாளர்களுக்கு நன்றாகவே தெரியும். இது அவர்களுடைய சுயநலத்தின் காரணத்தினாலேயே என்று அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். உதாரணத்திற்கு (லண்டன்) ஏப்ரல் 30, 1814 பொருளாதார செய்தி என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் பகுதியில் கூறப்பட்டதை கீழே கொடுக்கிறோம்.



*"அமெரிக்க நாட்டுடன் அடிக்கடி நமக்கு அரசியல் வேறுபாடுகள் தோன்றுகின்றன. ஆனால் சட்டப்படி இரண்டு நாட்டு மக்களின் பகை உணர்ச்சியானது இதற்கு காரணமாயிருக்கிறது என்பது உண்மை. மட்டுமன்றி, தகராறு கடந்து சென்று மறக்கப்பட்டுவிட்டது. ஆனால், லட்சக்கணக்கான அமெரிக்க பிரஜைகளின் செழுமையை பாதிக்கின்ற கேள்வி கேட்கும் ஒரு போக்கை ஊக்கப்படுத்தி வருகிறோம். நாட்டிற்கு விரோதமான சில குறிப்பிட்ட காரியங்களின் மீது தற்போது இந்நாட்டின் கவனம் திரும்பி உள்ளது. உண்மையில் நமக்கு தெரியும். இந்த விரோதமான சில காரியம் தற்செயலானது. மட்டுமன்றி நமது பொருளாதார கொள்கைகள் சுயநலத்தைக் கருதியே கட்டுப்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவைப் போல் இந்தியாவும் கூட எந்தளவிற்கு நமது செய்கையினால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கக் கூட கவலைப்படாத அளவிற்கான முழுமையானதொரு சுயநலம்....*

*"அமெரிக்க நாடானது ஐரோப்பாவின் பிடியி-ருந்து தன்னை விலக்கிக் கொள்ளும்படி முயற்சி செய்யுமேயாகில், முழுமையாய் வெள்ளியையே பற்றிக் கொள்ளுமேயாகில், அமெரிக்கா மட்டுமன்றி, ஆசியாவும் கூட அதன் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும். பிறகு இரு கண்டத்தின் வியாபாரத்தை ஆளலாம் என்ற மிகவும் சாதாரணமானதொரு நெறியை செனட்டார் காமிரான் குறிப்பிடுகிறார். 'தங்கத்திற்கு தடையாயிருப்பவர்களுக்கே சுங்கவரியில் வேறு யாரையும் விட அதிக மோசமான பாதிப்பு இருக்கும். வெள்ளியுடனான ஒப்பந்தத்தை விட வேறு எந்த வரியற்ற வியாபார ஒப்பந்தமும் அத்தனை உறுதியானதாய் இருக்காது.' ஒருவேளை அமெரிக்க நாடானது வெள்ளியை தர நிர்ணய ஆதாரமாக நாளை (வரும் காலத்தில்) ஏற்றுக் கொள்ளுமேயாகில், சந்தேகமின்றி ஒரேயொரு வருடத்துக்குள்ளாக பிரிட்டனின் வியாபாரமே நாசமாகிவிடும். இந்த நிலை வருமாகில் உள்நாட்டில் மட்டுமன்றி, வெளிநாட்டு சந்தையிலும் அமெரிக்க வியாபாரமே மிகவும் பாதுகாப்பான ஒன்றாக இருக்கும். உண்மையில், வெளிநாடுகளின் ஒப்பந்தப்படி சில நேரங்களில் தங்க நிர்ணயத்தில் அமெரிக்க நாடு ஓரளவு பணம் செலுத்த கஷ்டப்பட வேண்டியிருக்கும். ஆனால், தென் அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பாவிடமிருந்து பெறும் லாபத்தில்*

இந்த நஷ்டமானது மிகச்சிறிய அளவே. இந்த வாய்ப்பினை அமெரிக்க நாடு வெகுகாலத்துக்கு முன்னமே இழந்துவிடவில்லை. ஆனால், இங்கிலாந்தே வியாபார வெற்றிக்கும், செழுமைக்கும் ஒரு வாசலாக இருப்பதாக ஒரு நம்பிக்கை இருக்கிறது. இல்லாவிடில் இதை வெகுகாலத்துக்கு முன்னமே அமெரிக்கா செய்திருக்கும். ‘பெரிய இங்கிலாந்தாக மாற்றவேண்டும் என்ற வாஞ்சை இருக்கும் வரைக்கும் நம்மை இவர்கள் மிஞ்ச முடியாது’ என்ற நிஜத்தை அமெரிக்கர்கள் புரிந்துகொண்டனர். வெள்ளியை ஆதாரப்படுத்தி உலகநாடுகளின் வியாபார சந்தையையே சுரண்டி விடும்படியான காரியம் முன்னமே இவ்விதம் நடவாதது நமக்கு சற்று நன்மையே. வெள்ளியினுடைய பிரச்னையால் ஈர்க்கப்பட்ட நமது அரசாங்கத்தின் அடக்குமுறையால் எரிச்சலடைந்திருக்கும் நமக்கு, தங்கத்தை தடை செய்து அமெரிக்கா பழிவாங்கிவிட்டதாகவே தோன்றுகிறது. இரண்டு கண்டங்களுக்கும் இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி ஐரோப்பாவின் மிகவும் பரிதாபமான நாடுகளின் எதிர்காலத்தையே அடியோடு நாசப்படுத்திவிடக் கூடிய (வெள்ளி பிரச்சனை) ஒரு பிரச்சனைக்கு எதிராய் நடைபெற்ற, யாரையும் அனுபவிக்க விடாததொரு போக்கினை கண்டு இந்நாட்டின் மீது வளர்ந்து வரும் அதிருப்தி இனிமேலும் காணப்படாதபடி இது மிகவும் எளிதாய் செய்து முடிக்கப்படலாம்.”

விவசாயிகளது கூக்குரலானது, மோசடியின் பின்னணியில், பொதுவாகவே எல்லா கிறிஸ்தவ நாடுகளிலும் தங்க நிர்ணய நாடுகளிலும் இருக்கிறது. இதை கீழ்க்கண்டபடி குறிப்பிடுகிறோம்:

அப்போதைய ஜனாதிபதி வேட்பாளரான டபுள்யூ.ஜே.ப்ரேயனுக்கு ஐரோப்பாவின் முன்னணி வேளாண்மை பிரதிநிதிகள், புடாபெஸ்ட், ஹங்கேரியில் நடந்த சர்வதேச வேளாண்மை கூட்டத்தில் கையெழுத்துப் போட்டு அனுப்பிய நீண்ட தந்தி செய்தியை கொடுத்திருந்தனர். நியூயார்க் வேர்ல்ட் (New yark world) என்ற பத்திரிக்கையில் செப்டம்பர் 22, 1896ல் இது வெளியானது:

“அமெரிக்கா மற்றும் ஐரோப்பா இரண்டும் கடந்த 23 வருடங்களாக கடன் கொடுப்பவரது செல்வாக்குக்கு எதிரான உங்கள் போராட்டத்தில் நீங்கள் வெற்றிபெற நான் வாழ்த்துகிறேன்..... உங்களது விவசாயிகள் மற்றும் பிறரது செழுமையை பாழ்படுத்தும் பொருளாதார சட்ட முறைமைகளானது (வெள்ளியானது பணமதிப்பை பெறும் வாய்ப்பை) தக்கவைத்துக் கொள்ள தவறவிட்டுவிடுகிறது என்று நம்புகிறோம். ஆசியா மற்றும் தென்அமெரிக்கா முழுவதும் தங்கக் காப்பீட்டுக் கட்டணம் விவசாயிகளை, அவர்களது கடும் உழைப்பின் பலனை பெறவிடாமல் தொடர்ந்து கொள்ளையடிக்கும். உங்கள் தேர்தல் இன்னும் நிறைவடையாத ஐரோப்பாவின் விவசாய மற்றும் சமூக பிரச்சனைகளையும் கூட தவிர்த்துவிடலாம்.”



இளவரசர் பிஸ்மார்க், ஜெர்மன் ரியிஸ்டேக்கின் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் அவர்களின் அறிக்கையை 1896 செப். 24ல் நியூயார்க் வேர்ல்டு வெளியிட்டிருந்தது. அதை கீழே கொடுக்கிறோம்:

“நாணய மதிப்பீட்டைக் குறித்த விவாதத்தில் இறங்குவதற்கு நான் மிகவும் வயோதிகனாகிவிட்டேன். 1873ல் நான் மிகவும் மதிக்கக்கூடிய அறிவுரையின் மீது செயல்பட்டேன். அதன் விளைவுகளை பார்க்கும் போது எனது செயல்பாடுகள் மிகவும் கண்மூடித்தனமாக இருந்தது.

“பிரிவினையை உண்டாக்க முடியாததொரு வகுப்பினர் விவசாயிகளே. ஒருவேளை அவர்கள் சமாதானப்படுத்தப்பட்டு, இந்த பொருளாதார மாறுதல்களுக்கு வேளாண்மையின் பின்னடைவு விசித்திரமாக இருக்கின்றது என்பதை புரிந்து கொண்டதாக உறுதி கூறுவார்களாகில், நமது அரசாங்கம் இந்த நிலைமையை சற்று ஆலோசிக்க வேண்டும்.”

தற்போது இருக்கும் மிதமிஞ்சிய வீழ்ச்சி வெள்ளிக்கும், வெள்ளி மதிப்பை ஆதாரமாகக் கொண்டு இருக்கும் அநேக நுகர் பொருள்களுக்கும் இரண்டு காரணங்களினால் வந்திருக்கிறது. (1) உலகில் பாதிக்கும் மேலான ஜனத்தொகையின் அத்தியாவசிய பொருட்களின் தேவையில், வெள்ளி இருப்பதால் அதை வீழ்த்த காலமும், திறமையான செயல்பாடும் தேவை. (2) வரப்போகும் தீமையை முன்னறிந்த அரசியல்வாதிகளும், வெள்ளி சுரங்க

உரிமையாளர்களும், இதில் நேரடியாய் தொடர்பு கொண்டவர்களும் சேர்ந்து, 1890 ன் வெள்ளி கொள்முதல் சட்டத்தையும், 1878ல் மறுமதிப்பீட்டு சட்டத்தையும் புதுப்பிக்க அமெரிக்க நாட்டின் காங்கிரசில் வற்புறுத்தினார்கள். ஆனால் இந்த நலத்திட்டம் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது. வெள்ளியானது சட்டப்படி தங்கத்தின் மதிப்பிற்கு முழுச்சமமானதொரு பணமாக அங்கீகரிக்கப்படவேண்டும். அல்லது கோதுமை, வைரம் போன்ற வியாபார பொருளாகவாவது வைக்கப்படவேண்டும். இது தேவை மற்றும் விநியோகத்தைப் பொறுத்து விலை ஏறி இறங்கலாம். இந்த நலத்திட்டம் கடைசியில் 1893ல் ரத்து செய்யபட்டபோது வெள்ளியானது ஒரேயடியாய் தங்கத்தின் விலைக்கு அரை பாதியாக வீழ்ந்துவிட்டது. 1895ல் இதன் தீமைகள் யாவும் முழுமையாய் உணரப்பட்டது. அதன் விளைவாக மாபெரும் பயங்கரம் மட்டும் இன்னும் நீடிய பொறுமையுடன், முன்னேற்றத்துடன், கைக்கெட்டா தூரத்தில் இருக்கிறது. இதோ உண்மைகள் சில :

(1) மிகவும் நவீனமயமாகிவிட்ட இயந்திரங்களை எதிர்கொள்ள முடியாமல் உலக விவசாயிகளும், கிறிஸ்தவ தேசங்களின் விவசாயிகளும் மிகுந்த வருத்தத்தில் இருக்கின்றனர். தங்கள் சக குடிமக்களிடமும் அரசியல் பிரமுகர்களிடமும் உதவிக்காக மிகுந்த சத்தத்தோடு கூக்குர-டுகின்றனர். (இந்த கூக்குரல் தற்கா-கமாய் கோதுமை விலையேற்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இது ஒருவேளை ரஷ்யா, ஆஸ்திரே-யா, தென் ஐரோப்பா மற்றும் அர்ஜென்டினாவில் ஏற்பட்ட சில குறைவினால் இருக்கலாம். ஆனால் இந்த நிலைமை மாறியவுடன், இந்த உலகின் மொத்த சராசரி விளைச்சலும் கூடும்போது, கோதுமையின் விலை வெள்ளியின் விலையை பொறுத்து 43 செண்ட் வரைக்கும் குறையலாம். இந்த நிலைமையை சரிபடுத்த ஏதாவது ஒன்று நடந்தால் ஒழிய என்றுமில்லாத அளவுக்கு விவசாயிகளது கூக்குரல் மிகவும் கோரமாக இருக்கும்.

(2) இது எப்படி வந்தது என்பதையும் இதன் கஷ்டத்தையும் அரசியல் வல்லுனர்கள் புரிந்துகொண்டனர். முதலீட்டாளர்களின் வஞ்சகத்தால், மோசடியின் மூலமாய் வந்தது என்று அறிவிக்கப்பட்டது.



(3) இது ஒரு குழப்பமான சூழ்நிலைக்கு காரணமாகவும் ஒருவேளை புரட்சியாகவும் கூட இருக்கலாம் என்று கண்ட சட்ட வல்லுனர்கள், இதை சரிபடுத்தி எடுக்கும் நடவடிக்கைகள் குழப்பத்தையும் ஒரு வேளை புரட்சியைக் கூட ஏற்படுத்தலாம் என்று கண்டு தீவிரமாக எதையும் செய்யாம-ருப்பதே நல்லது என்று தீர்மானித்தனர். எனினும் வெள்ளியானது தனது பழைய நிலைக்கு திரும்பாது, அதன் மதிப்பு 16-ருந்து 1க்குதிரும்பாது.

(4) இந்த மோசடியானது விவசாயிகளை மட்டும் நசுக்கி, நம்பிக்கையிழக்க செய்யாமல், சமுதாயத்தில் இந்நாள்வரை மிகப்பெரிய பழமைவாதிகளாயிருக்கிறவர்களையும் கோபமூட்டி, கசப்பான உணர்வுகளை ஏற்படுத்துகிறது என்று யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

(5) உலகின் சிந்திக்கக்கூடிய மக்கள் யாவரும் கிறிஸ்தவ ராஜ்யத்தின் உழைப்பாளிகள் மற்றும் இயந்திர இயக்குனர்கள் யாவரும் ஒரு புரட்சிகரமாக தயாராக இருக்கின்றனர். இது தற்போதுள்ள சமுதாய அமைப்புகளை முற்றிலுமாய் அழித்துவிடும் என்று நினைக்கின்றனர். மேலும் இவர்களோடு பழமைவாத விவசாயிகளும், இந்த அதிருப்தியாளர்களோடும் புரட்சிகாரரோடும் சேர்ந்தால் இந்த கூட்டணியை எதிர்க்கமுடியாது.

(6) இப்படிப்பட்டதொரு எழுச்சியைக் கொண்டுவர சில வருடங்களே போதுமானது என்று அனைத்து பக்க சாட்சியங்களும் கூறுகின்றன.

இந்த உண்மைகளை யாக்கோபின் தீர்க்கதரிசனத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஒவ்வொரு காரியமும் ஒன்றுவிடாமல் அத்தனை முழுமையாய் நிறைவேறிவருவதைக் கண்டு, மிகவும் உணர்ச்சி வசப்படுவர். மேலும் நமது நாட்களை குறித்த தெய்வீக முன்னறிவிற்கு இது மற்றுமொரு சாட்சி என்று எடுத்துக் கொள்ள வேண்டும். அதோடு அதன் காரியங்கள் யாவும் இம்மானுயேலருக்கும் பூமியில் சாமாதானமும் மனுஷருக்கு நன்மையும் உண்டாகும் அவரது ராஜ்யத்திற்கு முன் வரவேண்டிய மாபெரும் துன்ப நாட்களுக்கான ஆயத்தம் என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

மறுபடியும் நாம் யாக்கோபு தீர்க்கதரிசனத்தை (5:1-9) வாசிப்போமாக:

"ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டெரித்துப் போயின. உங்கள் பொன்னும், வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாக சாட்சியாயிருந்து, அக்கினியைப் போல் உங்கள் மாமிசத்தைத் தின்னும். கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூ- உங்களால் அநியாயமாய் பிடிக்கப்பட்டுக் கூக்குர-டுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது. பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளிலே நடக்கிறது போல உங்கள் இதயங்களைப் போஷித்தீர்கள். நீதிமானை (கிறிஸ்து) நீங்கள் (உங்கள் வகுப்பினர்) ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலை செய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை." (அறுவடையாளர்களின் கூ-யை மோசடியான முறையில் அவர்களுக்கு கிடைக்காமல் செய்ததில், பிறரை விட யூத முதலீட்டாளர்களும், வங்கிகளுமே முத-டம் வகிப்பதை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும் என்று தேவன் விரும்புவாரோ? ஆகவே தான் "நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலை செய்தீர்கள்" என்று இந்த வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா?)

"இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள் (இவர் காரியங்களை நீதியாய் சரிப்படுத்தி, ஏழையை, உதவியற்றவனைக் கைதூக்கி, எழுப்பி, தீமை செய்பவர் யாவர் மீது நியாயம் தீர்ப்பார்). இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும், பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடு காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே. சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாத படிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி



வாசற்படியில் நிற்கிறார்."

## நியாய விதிகள்

"வாழ்த்துங்கள், தேவனால் அபிஷேகிக்கப்பட்டவரை,
யேகோவாவின் ஆசீர்வதிக்கப்பட்ட குமாரனை!
அவரை வாழ்த்துங்கள், குறிக்கப்பட்ட காலத்திலே,
பூமியிலே அவரது ஆட்சி ஆரம்பித்தாயிற்று!
கொடுமையை விலக்க அவர் வருகிறார்,
அடிமையை விடுவிக்க வருகிறார்,
பாவப்பழியை எடுத்துப் போடவும்,
நியாயத்தோடு ஆளவும் வருகிறார்.

"உதவி செய்ய அவர் வேகமாய் வருகிறார்
தவறான விதத்தில் பாடுபடுவர்களுக்காக ;
ஏழைகளுக்கும் அவசியமானவர்களுக்கும் உதவ,
எளிமையானவர் வ-யோராக உத்தரவிடுவார்;
பெருமூச்சுக்குப் பதில் ஆனந்த கீதத்தை அவர்களுக்கு
கொடுக்க, அவர்களது இருள் வெளிச்சமாக மாற,
சபிக்கப்பட்டு, மரித்துக் கொண்டிருக்கிறவர்களது ஆத்துமா,
அவரது பார்வையில் விசேஷமானவைகள்.

"முடிவில்லா துதிகள் அவருக்கே
அனுதின பிரார்த்தனைகள் மேலேறட்டும்;
அவரது இராஜ்யம் இன்னும் விரிவடைகிறது,
அதற்கு எல்லையே இருக்காது,
காலத்தின் போக்கினை ஒருபோதும்
அவரது உடன்படிக்கை நீக்கிவிடாது;
இல்லை, அது நித்தியமாய் என்றும் நிற்கும்
தேவன் அன்பானவர் என்ற உறுதிமொழி."

அ அ

## அத்தியாயம் 9

# கட்டுப்படுத்த முடியாத போராட்டம் உலக - ஞானிகளின் சாட்சியங்கள்

*எல்லாக் கணிப்பிலும் பொதுவான புத்திகூர்மை ஒரு புதிய காரணி - செனட்டர் இன்கல்ஸ் அவர்களின் கருத்துக்கள் - போதகர் லேமன் அபாட்டின் கருத்துக்கள் - பிஷப் நியூமேனின் (M.E.) கருத்துக்கள் - ஒரு பிரபலமான நீதிபதியின் கருத்துக்கள் - கர்னல் ராபர்ட் இங்கர்சா-ன் கருத்துக்கள் - தொழிலாளர் சட்டம் பற்றி மேதகு ஜே.எல். தாமஸ்-வென்டல் பி-ப்சின் கருத்து - சரித்திர ஆசிரியர் மேக்குலேயின் முன்னுரைத்தல் - மேதகு. சாவுன்சி டீப்யூவின் நம்பிக்கைகள் - பிஷப் ஒர்திங் டன் (பி.இ)யிடம் நேர்காணல் - டபள்யூ.ஜெ. பரேயனின் பதில் - ஆங்கிலேயர் ஒருவரின் கருத்து - சூழ்நிலையை குறித்ததான எட்வர்ட் பெல்லாமியின் கூற்று - போதகர் ஜெ.டி. மேக்லைனின் கருத்து - பேராசிரியர் கிரஹாமின் கண்ணோட்டம் - சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவரின் கருத்துக்கள் - பிரஞ்சுக்காரரின் கருத்து சமுதாய பூசல்*

*"வானத்தின் சத்துவங்கள் (சபை மற்றும் சமூக அரசாங்கம்) அசைக்கப்படும்; அதலால் பூமியின் (சமுதாயத்தின்) மேல் வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர் பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்." (லூக். 21:26)*

எல்லா இடங்களிலும் உள்ள உலக ஞானிகள், ஒரு மிகப்பெரிய சமூக போராட்டம் வருகிறது என்பதை ஒப்புக்கொள்கின்றனர். அந்த போராட்டம் கட்டுப்படுத்த முடியாத ஒன்றாயிருக்கும் - அதை தவிர்ப்பதற்கு ஒன்றுமே செய்ய இயலாது. அவர்கள் அநேக பரிகாரங்களை கண்டுபிடித்தனர், ஆனால் இந்த பிணிக்கு தகுந்த மருந்தை கண்டுபிடிக்கவில்லை. எனவே

நம்பிக்கையை கைவிட்டு, பரிணாம ஆலோசனைகள் தான் சரியானதாக இருக்கும் என்று முடிவு செய்தனர்; அதாவது "வ-மையானவைகளே பொருத்தமானவைகளானபடியால் அவைகள் தொடர்ந்து வாழும்படியான ஒரு சட்டதிட்டத்திற்குள் தான் எல்லா இயற்கை படைப்புகளும் இயங்குகின்றன, அதோடு வாழத் தகுதியில்லாத படியினால் வ-மையற்றவைகள் அழிக்கப்படுகின்றன." மேலும் தத்துவ ஞானிகளால் கூறப்படுவது: இப்பொழுது இருப்பவைகள் எல்லாம் இதற்கு முன் இருந்தவைகளே." அதாவது நமது நாகரீகம் என்பது கிரேக்க மற்றும் ரோம நாகரீக வளர்ச்சியின் மறு சுழற்சியே அன்றி வேறில்லை, ஆகவே அதேவிதமாக பாமர மக்கள் என்பதை பொருத்தவரை அவர்களும் விழுந்து நொறுங்குவார்கள். மேலும் செல்வமும் அரசாங்கமும் மறுபடியும் சிறுபான்மையானவரிடம் செல்லும், முந்தைய கிழக்கத்திய நாகரீகத்தைப் போல் பாமர மக்கள் சும்மா இருப்பார்கள்.

இதுவரை எதிர்ப்படாத ஒரு புது காரணியொன்று இந்த போராட்டத்தில் இருப்பதை பொதுவாகவே இவர்கள் கண்டுகொள்ள தவறிவிட்டனர். அதாவது உலகெங்கும் அதிலும் விசேஷமாக கிறிஸ்தவ தேசமெங்கும் பரவியிருக்கும் அறிவாகும். அநேக மக்கள் மறந்து போன ஒன்றாகிய இது - தேவ வார்த்தையி-ருந்து மெய்யான ஞானத்தை தேடுவதற்கு போதுமான அறிவுடையவர்களது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும் (தானி 12:1-4) என்று எழுதப்பட்டிருப்பது இவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள் என்பது ஆச்சரியப்படும்படி நிறைவேறுவதைக் காண்பார்கள். மேலும் அறிவு பெருகியிருப்பதையும் அறிந்து கொள்வார்கள். மேலும் இவைகளோடு கூட தொடர்புடைய முன்கூறப்பட்ட மகா உபத்திரவம் என்பது சரித்திர சுழற்சியினுடைய ஒரு செயல் அல்ல, அல்லது செல்வாக்கு பெற்ற சிறுபான்மையினரிடம் பெரும்பான்மையானவர்கள் அடங்கி போதலும் அல்ல, ஆனால் புதிய சூழ்நிலையினால் சரித்திரத்தில் கொண்டுவரப்பட்டதொரு ஆச்சரியப்படும் விதமான தலைகீழ்மாற்றம். அதே தீர்க்கதரிசி



இதோடு கூட சம்பந்தப்பட்ட இன்னொரு கூற்றில், "மிகாயேல் (கிறிஸ்து) அக்காலத்திலே எழும்புவார்," அவர் தமது மகிமையான வல்லமையையும் ஆளுகையையும் எடுத்துக்கொள்வார் என்று கூறுகிறார். இதனோடு கூட இசைந்து போகக்கூடிய கருத்தின்படி வரப்போகிற மகாபெரிய உபத்திரவம் "இவ்வுலகத்தின் பிரபு" வாகிய சாத்தானின் கீழிருக்கும் சுயநலத்தின் ஆட்சியை ஒரு முடிவுக்கு கொண்டுவரும், அதோடு இம்மானுயேலரின் ஆசீர்வாதமான அரசாட்சியையும் ஏற்படுத்தும். ஆனால் தாங்கள் கண்டவைகளைக் குறித்து உலக ஞானிகள் சிலர் கூறுவதையும் நாம் கேட்கலாம்!

அமெரிக்க ஐக்கிய நாட்டின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், பெரும் பணக்காரரரும், சம்பிரதாய உணர்வுகள் அதிகம் கொண்டவருமான மேதகு ஜெ.ஜெ.இன்கல்ஸ் என்பவர், செல்வத்துக்கான போராட்டமும் அதன் நிமித்தம் கீழ்மட்ட வகுப்பினர் நசுக்கப்படுதலையும் குறித்து ஒரு பாரபட்சமற்ற விரிவான கருத்தை, பத்திரிக்கைக்கு அனுப்பினர். அதில் உள்ளவைகளின் சாராம்சத்தை நாம் இங்கே கொடுக்கிறோம். விழிப்புணர்வுள்ள அரசியல்வாதிகளும் கூட இந்த ஒரு பயங்கரப் பிணியை சுகமாக்கி, பாதிக்கப்பட்டவர்களை மீட்க எந்த ஒரு மாற்று வழியையும் காணமுடியாததொரு கஷ்டத்தை பார்த்தார்கள் என்பதை இது காண்பிக்கிறது.

செனட்டர் இன்கல்ஸ் எழுதியதாவது: "சுதந்திரம் என்பது அதன் பெயரைக் காட்டிலும் மிகவும் அதிகமான ஒன்று. தனது உணவு, உடை, உறைவிடத்துக்கு பிறருடைய தயவை சார்ந்துவாழும் எந்த ஒரு மனிதனும் இவ்வுலகில் சுதந்திரமானவன் அல்ல என்பதே அந்த வார்த்தைக்கான முழுஅர்த்தம். தன்னுடைய மற்றும் தன் குடும்பத்தாருடைய அன்றாட உணவிற்கு தனது எஜமானர் அளிக்கும் கூ-யின் மேல் ஆதாரப்பட்டிருக்கும் எந்த மனிதனும் அல்லது தனது விருப்பங்களை கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் எந்த மனிதனும் சுதந்திரமானவன் அல்ல. ஒரு வேலைத்திட்டத்திற்கு அடங்கிப்போவதற்கும் பட்டினி

கிடப்பதற்கும் இடையிலானதொரு மாற்றுவழியே அடிமைத்தனம்.

“சுதந்திரம் என்பதை எந்த ஒரு விளக்கத்திற்கும் உட்படுத்தமுடியாது. வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் சந்தோஷத்தை அடைதல் என்பவை ஒவ்வொரு மனிதனுடைய விட்டுக்கொடுக்க முடியாத உரிமை. இதை கொடுப்பதாக அறிவிப்பதினால் எந்த மனிதனையும் சுதந்திரவாளியாக்கிவிட முடியாது. அதிகாரம் என்பது இலகுவான ஒன்றாக, மாறாத வரையில், சுதந்திரத்திற்கான உரிமை என்பதே வெறும் ஒரு கே-க்கூத்தும் மாயத்தோற்றமுமாய் இருக்கிறது. சட்டத்தின் கட்டுப்பாடுகளை அகற்றி, வருவதற்கும் போவதற்கும் அனுமதியளிப்பது மட்டுமே சுதந்திரமாகிவிடாது. இதோடு கூட, இடைவிடாத அனுதின உழைப்பின் அவசியத்தி-ருந்து விலக்கு அளிக்கப்படுவதற்கான தகுதியும் சந்தர்ப்பமும் மட்டுமே கொண்டு வரமுடியும். ஷேக்ஸ்பியரை பொருத்தமட்டில் வறுமையும் சுதந்திரமும் ஒன்றோடு ஒன்று பொருந்தாத ஜோடி. சுதந்திரமும் சார்ந்திருத்தலும் முரண்பாடானவைகள். காலங்களின் தோற்றமுதலே வறுமையை ஒழிப்பதென்பது கற்பனையாளர்களின் கனவும், மனித நேயமுடையவர்களின் நம்பிக்கையுமாய் இருந்து வருகிறது.

“அதிர்ஷ்டமான சந்தர்ப்பங்களின் சமமற்றதன்மையும், மனிதரிடையே செல்வமானது ஏற்றத்தாழ்வுடன் பகிர்ந்தளிக்கப் பட்டிருப்பதும் வெளிப்படையான அநீதியும் தத்துவ ஞானிகளின் கலக்கமுமாய் இருந்து வருகிறது. அரசியல் பொருளாதாரத்தினால் தீர்க்கமுடியாததொரு புரியாத புதிராக இது இருக்கிறது. அபரிமிதமாய் இருக்கும் பட்சத்தில் தேவையென்பது இருப்பதும், அளவுக்கு அதிகமான உணவு இருக்கும்போது பசி என்ற ஒன்று இருப்பதும் நாகரீக வளர்ச்சியின் முரண்பாடான ஒரு புதிராக இருக்கிறது. எப்படியெனில் ஆடம்பரமான முறையில் வீணாக்கும் அளவிற்கு மிதமிஞ்சிய நிலையில் ஒரு மனிதன் செல்வம் பெற்றிருப்பதும், அதே சமயம் உழைப்பதற்கு விருப்பமும் தகுதியும் பெற்றிருந்தும், தேவைகளின் நிமித்தம் மனம்புழுங்கி அழிந்து, கந்தையிலும், ரொட்டித் துணிக்கைகளிலும் மற்றொருவர்



இருப்பதும் அறிவுக்குப் புலப்படாத ஒரு சமுதாயத்தையே காட்டுகிறது. இது மனித உரிமையின் சாசனத்தை ஏற்படுத்துகிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை தொடர்கிறவரையில் ‘பூஜ்ஜியத்துக்குள்’ எழுதிவைக்கப்பட்டிருக்கும் விதியானது வெளிப்படாது, மனிதனின் சகோதரத்துவம் என்பது வெறும் ஒரு சொல், நீதி என்பது ஒரு சூத்திரம், மற்றும் தெய்வீகச் சட்டம் என்பது புரியாத ஒன்றாகவும் இருக்கிறது.

“செல்வந்தர்களின் அகந்தையாக பகட்டின் நிமித்தம், ஏழைகளின் எரிச்சலான கோபமானது பேரரசுகளையே தூக்கியெறிந்திருக்கிறது. வறுமையில் இருப்போரின் துயர்போக்குவது என்பதே மனித மற்றும் தெய்வீக நிலையின் மையப்பொருளாக இருந்து வந்தது. இழிவான நிலையி-ருந்தவர்களது முறையீடுகள் சரித்திரத்தின் சுமையாக இருக்கிறது. யோபு ஒரு கோடீஸ்வரராக இருந்தார். அவரது பெயரால் ஏற்பட்ட நிகரற்ற உற்பத்தியானது ஒரு உவமையோ! அல்லது வாழ்க்கை வரலாறோ! அது ஒரு அறிவுபூர்வமான ஆர்வத்தை கொண்டிருக்கிறது, ஏனெனில் தற்போது நமக்கு இடைஞ்சலாக இருக்கின்ற அதே பிரச்சினைகளே முற்பிதாவையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. திக்கற்றவனது கழுதையை எடுத்துக் கொள்பவரையும், விதவையின் காளையை எடுத்துக் கொள்பவரையும், வயல் வரப்புகளை அகற்றி, எளியவரின் வயல்களில் அறுத்து, திராட்சை தோட்டத்தில் பழங்களை சேகரிப்பவர்களையும், மலைகளின் சாரலுக்கும், குகைளின் தாபரத்துக்கும் நிர்வாணமாய் விடப்படும்படி எளியவரின் வஸ்திரங்களை அபகரிப்பவரையும் குறித்து இவர் ஒரு ஏழை பங்காளனைப் (பாப்பு-ஸ்ட்) (Populist) போன்று விவரிக்கின்றார்.

“எபிரேய தீர்க்கதரிசிகள் செல்வந்தருடைய ஆடம்பரம் மற்றும் கொள்ளையினால் கிடைக்கும் சாபத்தை அறிவித்தனர். மோசேயும் கூட கடனில் இருந்து தள்ளுபடி செய்தல், நிலங்களை மறுபடியும் பகிர்ந்தளித்தல் மற்றும் தனிப்பட்டவரின் சொத்துகளின் வரைமுறை ஆகியவற்றை குறித்த திட்டங்களை கூறியுள்ளார். பல

நூற்றாண்டுகளாக ரோம ராஜ்யத்தில் ஒவ்வொரு தனிநபருக்கும் 300 ஏக்கர் நிலம் சொந்தம் என்ற வரைமுறையும், நிலங்களை வாங்கும் விஷயத்திலும் அவர்களது விவசாய நிலத்தின் அளவைப் பொறுத்து வைத்துக்கொள்ளக்கூடிய கால்நடைகள் மற்றும் அடிமைகளின் எண்ணிக்கையும் வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால் யூதர்களுக்கு மோசேயின் மூலம் வல்லமையுள்ள தேவனால் கொடுக்கப்பட்ட சட்டங்களோ மனிதனுடைய மாம்சீக பலவீனத்தினால் கடைப்பிடிக்க முடியாதவைகளாக -கர்கஸ், -ஸினியஸ் போன்றோரின் சட்டங்களைப் போல் செயலற்றதாய் இருந்தன.

“சீசருடைய காலத்தில் 2,000 அதிகாரமுடைய செல்வந்தர்கள் மெய்யாகவே ரோம போரரசை சொந்தமாக கொண்டிருந்தனர். அதோடு 100,000க்கும் அதிகமான குடும்பத்தலைவர்கள் பொது கருவூலத்தி-ருந்து தானமாய் பெற்று தாங்கப்பட்ட யாசகர்களாய் இருந்தனர். இந்த போராட்டம் அப்படியே 19ம் நூற்றாண்டு வரையிலும் கூட நீடித்தது. இன்றும் கூட எண்ணிலடங்காத பிணியாளிகளுக்கு பயனுள்ளவகையில் செயல்படுத்தக் கூடிய ஒரு மாற்றுவழி ஒன்றை கூறமுடியவில்லை: மீண்டும் மீண்டும் முயற்சி செய்தும் கூட நிதி மற்றும் அரசியல் பொருளாதாரத்தில் எந்த ஒரு ஆய்வும் நல்ல முடிவைக் கொண்டுவரவில்லை, மாறாக தனிப்பட்டவர் நாசத்தையும் தேசங்கள் பாழாகின்றதையுமே கொண்டு வந்தன.

“முடிவில் வெகுவான தேடலோடும், ராஜாக்களோடும், பேரரசுகளோடும், வாய்ப்புகளோடும் ஜாதி மற்றும் ஆட்சியாளரின் உரிமைகளோடும், பழங்கால அறியாமைகளோடும், மிகுந்த வ-மையோடு படுகுழியில் புதைக்கப்பட்ட சட்டங்களோடும், பட்டங்கள் மற்றும் பிரிவினரோடும், அநேக போராளிகள் ரத்தம் சிந்தி, முடிவில் அரசாங்கத்தின் குறிக்கோளான கொள்கையையும், அதோடு மக்களே மேலான சக்திகள் என்பதையும் உணர்ந்து கொண்டனர். ஏழை, கஷ்டப்படுவோர் மற்றும் உழைப்பாளிகளே ஆட்சியாளர்கள். அவர்களே சட்டங்களை உருவாக்கி நிறுவனங்களை



ஸ்தாபிக்கின்றனர். 14ம் லூயிஸ் சொல்கிறார்: ‘நானே அரசாங்கம்’ இங்கே கூ-ப்பணியாளர்கள், விவசாயிகள், கருமான், மீனவர் மற்று கைவினையாளர்கள் கூறுகின்றனர்: ‘நாங்களே அரசாங்கம்’ என்று. ஒவ்வொரு மனிதனும் அவனது தேசம், கல்வி, திறமை அல்லது ஒழுக்கம் எதுவாக இருப்பினும், வாழ்வின் பந்தயத்தில் ஓடும் எவருக்கும் சமபங்கு சந்தர்ப்பம் உண்டு. சட்டமானது நல்லதோ கெட்டதோ அது பெரும்பான்மையோரால் செயல்முறை படுத்தப்படும்.

“ஒரு நூற்றாண்டுக்கும் குறைவான காலத்துக்கும் முன்பு அமெரிக்க ஐக்கிய நாட்டின் சமூக நிலையானது சாதாரணமாக சமஉரிமை உடையதாய் இருந்தது. நமது முதலாவது புள்ளிவிவர கணக்கெடுப்பின் போது ஒரேஒரு கோடீஸ்வரனோ அல்லது பரம ஏழையோ அல்லது நாடோடியோ இருக்கவில்லை. முதல் முத-ல் ஒருகோடி டாலர் என்ற இலக்கைத் தாண்டிய முதல் அமெரிக்கன் ஆஸ்டர் 180 6 ஆண்டில் - இவர் சமீப காலத்தில் ஜெர்மனியி-ருந்து குடிபெயர்ந்த, இறைச்சி கடைக்காரர் ஒருவரின் மகன், இவரது செல்வச் செழிப்புக்கு மிருக தோல்களே ஆதாரமாக இருந்தது. இதற்கும் முன் 1799ல் தனது மறைவின்போது ஜார்ஜ் வாஷிங்டன் வைத்திருந்ததே மிகப்பெரிய பண்ணை நிலமாகும்; இது சுமார் 650,000 டாலர் மதிப்பிடப்பட்டது.

“பெரும்பாலான மக்கள் விவசாயிகளும் மீனவர்களுமாய் இருந்தனர், தங்களது உழைப்பில் திருப்தியுடன் வாழ்ந்திருந்தனர். ரயில்பாதை, விவசாய இயந்திரங்கள் மற்றும் நவீன விஞ்ஞான சாதனங்கள் போன்றவற்றின் அறிமுகத்தினால் நாடு முன்னேற்றம் அடைந்து உலகின் செல்வச்செழிப்பு மிக்க நாடாக ஆகிவிட்டது. நாட்டின் சாராசரி சொத்து மதிப்பீடு ஏறக்குறைய நூறு மில்-யன் டாலர்களுக்கு மேலாக இருக்கும், இதில் பாதிபாகம் 30,000 தனிமனிதன் மற்றும் நிறுவனங்களின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது. உலகின் தனிப்பட்ட ஒருவரின் மிக அதிகபட்சமான செல்வம், அமெரிக்க ஐக்கியநாட்டில் கடந்த அரை நூற்றாண்டில்

சேர்ந்துவிட்டது.

"அதிலும் எங்களது பொருட்களின் வளம் பெரும்பாலும் யாராலும் நெருங்கி வரமுடியவில்லை; எங்களது நிலப்பரப்பில் 4ல் 1 பகுதிக்கும் குறைவாகவே பயிரிடப்படுகிறது. எங்களது சுரங்கங்கள் ஓபீர் மற்றும் பொட்டோசிக்கும் மேலான பொக்கிஷங்களை மறைத்து வைத்துள்ளன. நமது உற்பத்தியும் வர்த்தகமும் வளரும் நிலையில் தான் இருக்கின்றன. ஆனால் அதற்குள்ளாக செல்வச் செழிப்பு வந்துவிட்டது. இவை அரசர்களின் சபைகளிலும் ராஜாக்களின் அரண்மனைகளிலும் வரவேற்கப்படுகின்றன.

"சமுதாயத்தின் சுமைகளும், பலன்களும் சமமற்றநிலையில் பகிர்ந்தளிக்கப்படுதல் போன்றவை சட்டம், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தையே சார்ந்திருக்குமேயாகில், நமது முறைமைகள் போன்றவைகளை கடைப்பிடித்து சமநிலைப்படுத்துதலை கொண்டுவரவேண்டும். ஒருவேளை செல்வமானது நீதியற்ற சட்டத்தினாலும், ஏழ்மை என்பது சட்டங்களின் சுமையினால் வருமானால், அதற்குரிய பரிகாரம் பாதிக்கப்பட்டவர்களின் கையில்தான் இருக்கிறது. அவர்கள் துன்பப்படுகிறார்கள் என்றால் அது சுய - தண்டனையின் காயங்களாகும். நம்மிடையே பிரபுத்துவ முறையில்லை. அல்லது வாரிசு முறையோ அல்லது சாசனம் எழுதும் முறையோ இல்லை. அதோடு அனைவருக்கும் வெளிப்படையாக்கப்படாத வாய்ப்புகளும் இல்லை. நீதி, சமத்துவம், சுதந்திரம் மற்றும் பொது நலநோக்கு இவையே தேசத்தின் அஸ்திபாரம். ஒவ்வொரு மனிதனின் கரத்திலும் ஓட்டுச்சீட்டு இருக்கிறது. பள்ளிகள் யாவருக்கும் கல்வியை அளிக்கிறது. பத்திரிக்கைகள் சுதந்திரமுடன் இருக்கின்றன. பேச்சும், சிந்தனையும், மனசாட்சியும் சங்கி-யிடப்படாமல் சுதந்திரமாய் இருக்கின்றன.

"ஆனால் சமுதாயக் கேடுகளுக்கு உலகளாவிய வாக்குரிமை உகந்த ஒரு மருந்தாக இல்லை. ஏழ்மை ஒழிக்கப்படவில்லை. செல்வமானது பேராசைக்காரின் கனவுகளுக்கும் மேலாக சேர்க்கப்பட்டு விட்டாலும், யோபு, சாலமோன் மற்றும் அகிஸின் காலத்தில் இருந்த அளவிற்கு அதிகமாகவே பகிர்ந்தளித்தல் என்பது சமமற்று இருக்கிறது. பழைய பிரச்னை தீர்க்கப்படாமல் இருப்பதோடு அதன் நிலைமையும் கூட இன்னும் சிக்கலாகவும் கடுமையானதாகவும் மாறிவருகிறது. பெரும்பாலான அரசியல் அதிகாரங்கள் வெகு சிலரின் கரங்களில் குவிகிறது, தனிப்பட்ட ஒருவன் ஆச்சரியப்படும் அளவிற்கு செல்வத்தை அடைவதென்பது இராஜாக்களின் ஆட்சிகாலத்தை காட்டிலும் ஜனநாயகக் காலத்திலேயே அதிகம்.



"செல்வத்துக்கும் ஏழ்மைக்கும் இடையே உள்ள மாபெரும் பிளவானது நாளுக்கு நாள் இன்னும் விரிவாகிக்கொண்டே போகிறது. கூட்டணியான ஒன்றுக்கொன்று உதவுவதாய் நட்புடன் இருக்கவேண்டிய உழைப்பின் சக்தியும், முதலீடும் ஒன்றுக்கொன்று எதிராக நன்கு பலப்படுத்தப்பட்ட படைகளைப் போல முற்றுகைக்கோ அல்லது போருக்கோ தயராகிறவர்களைப் போல் தோற்றமளிக்கின்றன. தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான போரினால் கதவடைப்புகளும், வேலைநிறுத்தங்களும் சர்வசாதாரணமாகிவிட்டபடியினால் கோடிக்கணக்கான பணம் வருடந்தோறும் கூ-யிலும், பொருட்களின் நாசத்திலும், பயிர்களின் அழிவிலும் மற்றும் லாபத்தின் வீழ்ச்சியிலும் இழக்கப்படுகிறது.

"பரிபூரண சமுதாயம்" என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படாத ஒன்றாக இருக்கிறது. பாலைவனத்து கானல் நீரைப்போல பரிபூரண சமுதாயம் என்பது கண்ணுக்கு தென்பட்டு மறைந்து விடுகிறது. மனித சுபாவம் மட்டும் எந்த ஒரு சூழ-லும் மாறாமல் இருக்கிறது.

"நாகரீக வளர்ச்சியின் நிமித்தம் பெரும்பான்மையோரின் நிலைமை அளவிடமுடியாத அளவிற்கு மேம்பட்டுவிட்டது. மிகவும் பரம ஏழையான குடிமகன் இன்று சௌகரியம் மற்றும் வசதிகளின் சந்தோஷத்தை பெற்றிருக்கிறான். இதை ஐந்து நூற்றாண்டுகளுக்கு

முன் மன்னர்களால் கூட தங்களது செல்வத்தினால் பெறமுடியாமல் இருந்தது. பெரும்பான்மையோரின் நிலைமை முன்னேறுவதால், அவர்கள் அதிருப்தியும் சகிக்க முடியாத குணமும் பெருகுவதை காண்கின்றனர் என்பதை டி-ட்டோகு- (De Togueville) கூர்ந்து கவனித்தார். மனநிறைவு கொள்ளுவதையும் விட அதிவேகமாய் தேவைகளும், விருப்பங்களும் பெருகிவிட்டன. கல்வி, தினசரி செய்தித்தாள்கள், பிரயாணம், நூலகங்கள், பூங்காக்கள், காட்சிக் கூடங்கள், கடைகள் யாவும் பணிபுரியும் ஆண், பெண் இருவரின் வேலை வாய்ப்பை விரிவு படுத்திவிட்டன. அவர்களது மகிழ்ச்சியை அதிகப்படுத்திவிட்டன. ஆடம்பரங்களும் செல்வத்தின் அனுகூலங்களும் அவர்களுக்கு பழக்கமாகி விட்டன. அரசியல் புத்திமதிகள் மனித சமத்துவத்தை அவர்களுக்கு கற்றுகொடுத்திருக்கிறது. அந்த வாக்குச்சீட்டின் சக்தியை பழக்கப்படுத்திக் கொள்ளும்படி செய்திருக்கிறது. பொய் போதனையாளர்களோ, எல்லா செல்வமும் உழைப்பினால் உருவாக்கப்பட்டது என்றும், தன்னால் தினசரி கூ-யாக கை உழைப்பினால் ஒருவன் சம்பாதிக்கக் கூடியதை காட்டிலும் அதிகம் பெற்றிருந்தால் அவன் ஒரு திருடன் என்றும், முதலீடு செய்பவன் ஒரு பகைவன் என்றும், கோடீஸ்வரன் என்பவன் மக்களின் எதிரி - இவன் நாடுகடத்தப்பட்டு, பார்த்த மாத்திரத்திலே சுடப்படவேண்டும் என்றும் மக்களை நம்பச்செய்து கொண்டிருந்தனர்.

“தனிப்பட்டவரின் பெரும் செல்வம் என்பது மேம்பட்ட நாகரீக வளர்ச்சியி-ருந்து பிரிக்கமுடியாத ஒன்று, உலகிலேயே மிகவும் செல்வச் செழிப்பான சமுதாயம், தனிமனிதனின் வருவாய் அதிகமாக இந்த காலத்தில் பெறுபவர்கள் இந்தியாவின் பழங்குடியினரே. இந்த சமுதாயத்தின் மொத்த சொத்துக்களின் மதிப்பு அமெரிக்க ஐக்கிய நாட்டைக் காட்டிலும் 10 மடங்கு அதிகமாகும். இந்த சொத்துக்கள் பொதுவில் உள்ளன. சொத்துள்ள சமுதாயமாய் இருப்பது காட்டுமிராண்டித்தனத்தினால் இருக்கமுடியாது. ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் சமுதாய மற்றும்



பொருளாதார சமத்துவம் நெருங்குவதாலும், மூலதனத்தின் தலீயீடு இல்லாமல் உழைப்பினால் உருவாக்கப்பட்ட சொத்துக்களினாலும், (இந்தியா மற்றும் சீனாவில் கூ- மிகவும் குறைவு) கூ-யாட்கள் பங்கப்படுத்தப் படுவதாலும் முன்னேற்றம் என்பது கூடாத காரியமாகிறது. ஆனால் இக்காலங்களில் அமெரிக்க நாட்டின் சொத்து அங்கு வாழ்பவரிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டு, கணக்கெடுப்பின்படி ஒவ்வொருவரும் தலா 1000 டாலர்கள் உடையவர்களாக இருக்கிறார்கள்.

“இந்த நிலை தொடருமானால் முன்னேற்றம் தடைபடுவது நிச்சயம். ஆரம்பத்தி-ருந்தே சாதாரணமாக காணப்படும் இந்த நிலையே இருக்குமேயானால், நாம் ஒரு நிலையிலேயே இருந்து விட்டிருப்போம். அதிகப்படியான செல்வம் குவியும் போது இயற்கையில் ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும், அதோடு அதன் ஆற்றலும் கூட நாகரீக வளர்ச்சிக்கு சாதகமாய் மாறிவிடும். இயந்திரங்கள், நீராவியின் சக்தி, மின்சாரம் மற்றும் புவியீர்ப்பு சக்தி, ஆகியவை மனிதன் வாழ்வின் தேவைகளுக்காக கஷ்டப்பட்டு பாடுபடுவதி-ருந்து மனிதனுக்கு விலக்கு அளித்தன. இதனால் மனுக்குலம் நிலையாக நிற்கிறது அல்லது பின்நோக்கி போகிறது. இரயில்பாதை, தந்தி, படைகள், நகரங்கள், நூலகங்கள், தொல்பொருட் காட்சியகங்கள், பல்கலைக் கழகங்கள், ஆலயங்கள், மருத்துவமனைகள் ஆகிய எல்லா தொழிலகங்களும் மனித வாழ்வின் நிலையை உயர்த்தி அழகுடன் நிலைநிறுத்தி சீர்படுத்திவருகிறது என்பது - வெகுசிலரது கரத்தில் இருக்கும் செல்வத்திரட்சியினால் வந்ததே.

“செல்வம் ஓரிடத்தில் திரண்டு நிற்பதை நாம் கட்டுப்படுத்த விரும்பினாலும், இதை செய்யக்கூடிய அதிகாரம் எதையும் சமூகம் கொண்டிருக்கவில்லை. சிந்தனையை வெல்லமுடியாது. மனிதரிடையே காணப்படும் பேதங்கள் என்பது மாம்சத்திற்குரியவைகளாயும் அடிப்படையானதாகவும் இருக்கிறது. அவைகள் மாபெரும் அதிகாரங்களினால் ஸ்தாபிக்கப்பட்டவை, மகா சபைகளால் அவைகளை ரத்து செய்ய முடியாது. பெரும்பான்மைக்கும்

மூளைக்கும் இடையேயான போட்டியில் எப்பொழுதும் மூளையே வெல்லும்.

“சமுதாய சீர்கேடு அபாயகரமானதும் சவக்குழியுமாய் இருக்கிறது, ஆனால் அந்தநோய் மருத்துவர்களையும் மருந்துகளையும் காட்டிலும் அவ்வளவு பயங்கரமானதாக இல்லை. அரசியல் மருத்துவம் தங்களுடைய மூ-கைகளாலும், பிளாஸ்திரியினாலும், மருந்துகளினாலும் அதன் அறிகுறிகளுக்கே வைத்தியம் செய்கின்றன. சுலபமான வெள்ளி நாணய உற்பத்தி, தனிமனித வருமானத்தில் முன்னேற்றம், குடிபெயற்சியில் கட்டுப்பாடுகள், ஆஸ்திரே-ய வாக்குச்சீட்டு, அதோடு முறையான வாக்கெடுப்பு ஆகியவை முக்கிய பிரச்சினைகளாகும். ஆனால் அவை யாவுமே அமெரிக்க நாட்டின் பெருவாரியான கூ-த் தொழிலாளர்களின் சீரான நிலைமையை கொஞ்சமும் பாதிக்காமல் நிறைவேற்றப்பட்டன. அறியாமையில் இருக்கும் ஏழைகளை தவறாக ஓட்டளிப்பதற்கு ஆளாக்குவதை விட, அவர்களது பொருளாதாரத்தையும் புத்திகூர்மையையும் மேம்படுத்தி அதற்குப்பின் அவர்களை ஓட்டளிக்க தகுதிபடுத்துவது நலமாக இருக்கும். ஒரு வகுப்பினர் தவிர்க்கமுடியாத வகையில் சதிகாரர்களாவிடுகின்றனர். அதோடு கல்வி, செல்வம் மற்றும் தங்களை சார்ந்துள்ளவர்களின் மீதான மன திருப்தி ஆகியவைகளினாலேயே இலவச நிறுவனங்கள் பாதுகாக்கப்பட முடியும்.”

“உண்மைகளைப்பற்றிய ஒரு அறிக்கை இங்கிருக்கிறது. ஆனால் அதற்கான பரிகாரத்தின் அறிக்கை எங்கே? அப்படிப்பட்ட எதுவுமே இல்லை. ஆனாலும் கூட கவனத்தை ஈர்க்கும்படியாய் அவர் கூறும் காரணங்களினால் ஆசிரியர் மனதிரக்கம் கொள்ளவில்லை; அதைக்காட்டிலும் தவிர்க்க முடியாததாய் அவருக்கு தோன்றுகிறவைகளுக்கு தப்பிக்கும் மார்க்கத்தை நோக்கி, பிறர் கவனத்தை கவர்வதையே அவர் விரும்புகிறார். எனவே அதன் மூலம் எல்லா மனிதரும் மனித தன்மைக்கு தகுதியடைவார்கள். திரு. இன்கல்சை பொருத்தமட்டில் அமெரிக்க நாட்டின் பாராளுமன்றத்தில்



இவர் ஆற்றிய உரைகளில் ஒன்றின் சாராம்சம் இதற்கு சாட்சியாக இருக்கிறது. அவர் கூறியதாவது :

“அச்சுறுத்தக்கூடிய புரட்சியின் விளிம்பில் நாம் நிற்கிறோம் என்ற உண்மையை நாம் மறுக்க இயலாது. பழைய காரியங்கள் யாவும் கடந்து போய்விட்டன. அச்சத்துக்குரிய போட்டியின் ஏதோ ஒரு பக்கத்தில் மக்கள் தங்களை ஈடுப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஒரு புறத்தில் முதலீடானது, அச்சுறுத்தும் தோற்றத்தோடு விசேஷித்த சலுகையின் பாதாளத்துக்குள் போகிறது. தொடர்ச்சியான வெற்றியினால் கர்வப்படுகிறது. பிற்போக்கான விட்டுக்கொடுக்க முடியாத பழமை கோட்பாடுகள், புதிய சலுகைகளைக் கேட்டு உள்நாட்டு வரி மற்றும் வெளி நாட்டு வர்த்தகத்தினால் வளம் பெற்று தனது தங்க நாணய முறையை சரிசெய்யப் போராடுகிறது. மறுபக்கத்தில் வேலை கேட்கும் உழைப்பாளிகள், உள்நாட்டு தொழில்களை மேம்படுத்த போராடுதல், இயற்கையின் சக்திகளுடன் போராட்டம் மற்றும் வனாந்திரத்தை மேற்கொள்ளுதல் ஆகியவை. உழைப்பாளி பட்டினியுடன் துக்கமாய் பட்டணத்தில் இருக்கிறான். செல்வந்தர் இன்னும் செல்வம் பெறுவதும், வறியவர் இன்னும் வறியவராவதுமான இந்த முறைமையை எடுத்தெறிய மிகவும் மன உறுதியுடன் தீர்மானிக்கிறான். பேராசைக்காரரின் கனவுகளுக்கும் அதிகமான சொத்துக்களை ஒரு வான்டர்பில்ட் (Vanderbilt) மற்றும் ஒரு கவுல்டுக்கும் (Gould) கொடுக்கும் ஒரு முறைமையானது, ஏழைகளை பாதாளத்தைத் தவிர வேறு ஒரு அடைக்கலமோ தப்பிக்கும் வழியோ இராமல் வறுமையில் தள்ளுகிறது. நீதிகேட்டு வருவோர் பாரபட்சத்தையும், வெறுத்து ஒதுக்குதலையும் சந்திக்கவேண்டி வருகிறது. வேலை கேட்டு அலையும் கூ-க்காரர் பிச்சைக்காரர்களைப் போல நடத்தப்படுகிறார்கள்.”

ஆகவே தான் எந்த ஒரு நம்பிக்கையையும் காண இயலவில்லை என்று திட்டவட்டமாய் கூறுகிறார். ‘சுயநலம்’ என்ற பயங்கரமான பிணிக்கு மருந்து எதுவும் தனக்கு தெரியவில்லை என்கிறார்.

**இந்நிலையைப் பற்றி போதகர். டாக்டர். லேமேன் அபாட்**

-ட்ரரி டைஜட் என்ற பத்திரிக்கையின் பழைய பதிப்பு ஒன்றில் டாக்டர். அபாட் அவர்களின் மூலதனத்திற்கும் உழைப்புக்கும் உள்ள உறவு முறை என்பது குறித்த கருத்தின் சுருக்கத்தை கீழ்க்கண்டவாறு காணலாம். இவர் மிகவும் புகழ்பெற்ற பேச்சாளர், எழுத்தாளர் மற்றும் தியோடர் ரூஸ்வெல்ட் அவர்களுடன் உடன் - பணியாளருமாய் இருந்தவர்.

"கூ- முறை என்பது அடிமைத்தனம் அல்லது பிரபுத்துவ முறையை காட்டிலும் மேலானதா என்ற கேள்விக்கு உறுதியானதொரு பதிலை கூறி ஒரு முடிவுக்கு கொண்டுவருகிறார். மேலும் தற்போதைய தொழில் முறைமைகளுக்கு எதிராக முடிவான அல்லது உண்மையான காரியங்களை தெளிவாக்குகிறார். (1) இது உழைப்பதற்கு தயாராக இருக்கும் யாவருக்கும் நிலையான மற்றும் நிரந்தரமான வேலைவாய்ப்பை அளிக்கவில்லை. (2) மேலும் அதன் கீழாக பணிபுரியும் யாவருக்கும் அவர்களது வாழ்க்கைக்கு போதுமான கூ-யை கொடுக்க தவறுகிறது. (3) அது தனக்குத்தானே போதுமான கல்வித்தரத்தை கொண்டிராதபடியால் கல்வி மேம்பாட்டுக்கான காரியங்களுக்கு போதுமான நேரத்தை ஒதுக்கத் தவறுகிறது. (4) தற்போதைய நிலைமையின் கீழ் அநேக சந்தர்ப்பங்களில் தூய, நல்ல குடும்பங்கள் இருப்பதே இயலாத காரியமாக இருக்கிறது. டாக்டர். அபாட், இயேசு கிறிஸ்துவின் கற்பனைகளும் மிகச்சிறந்த அரசியல் பொருளாதாரக் கொள்கைகளும் ஒத்துப்போகின்றன என்று நம்புகிறார். ஆண், பெண் மற்றும் குழந்தைகளை கசக்கி பிழிந்து ம-வான பொருட்களை தயாரிப்பது என்பது அழிவுக்கான காரியம் என்று அறிவுறுத்துகின்றார். உழைப்பு என்பது ஒரு 'வியாபாரப் பொருள்' அல்ல என்று உரைக்கிறார். அதை கூறுகையில்:

"சமுதாயத்தை முதலாளி, தொழிலாளி என்ற இரு வகுப்பாக பிரிக்கின்ற முறைமையானது தற்கா-கமான ஒன்று என்று நான் நம்புகிறேன். மேலும், 'பொருளாதார சுதந்திரத்தை' நோக்கி குருட்டுத்தனமாய் போராடுவது என்பது நமது காலத்தினுடைய ஓய்வற்ற தொழில் முறையின் விளைவாகும். இதில் உபகரணங்களை



பயன்படுத்துகிறவர் உபகரணங்களின், சொந்தக்காரராகலாம், அப்போது மூலதனம் தொழிலாளியை உபயோகிக்காமல் தொழிலாளி மூலதனத்தை தற்கா-கமாய் உபயோகிக்கலாம். இப்போது அரசாங்கம் கட்டுப்படுத்துகிற விதமாய் தொழில்களில் பணத்திற்கு மாறாக மனிதனே எல்லாவற்றையும் தன் கட்டுக்குள் வைத்திருக்கலாம். ஆனால் உழைப்பு என்பது ஒரு சந்தைப்பொருள், மூலதனம் அதை ம-வான சந்தையில் வாங்கவேண்டும் என்பதே போதனை. அது தற்கா-கமாகக்கூட ஆரோக்கியமானதில்லை. அது பொருளாளதார ரீதியில் தவறானதாகவும் நீதிநெயிறின்படி அநீதியாகவும் இருக்கிறது.

"உழைப்பு என்றதொரு வியாபாரப் பொருளே கிடையாது; அப்படிப்பட்ட ஒன்று இல்லவேயில்லை. உழைப்பாளி ஒருவன் திங்கட்கிழமை காலையில் தொழிற்சாலைக்கு வரும்போது விற்பதற்கு அவனிடம் ஒன்றுமில்லை, அவன் வெறும் கையுடன் வருகிறான். அவன் தனது உழைப்பின் முயற்சியால் எதையோ ஒன்றை உற்பத்தி செய்யும் பொருட்டு வந்திருக்கிறான், அது உற்பத்தி செய்யப்பட்ட பின்பு, விற்கப்படவேண்டும், அந்த விற்பனையில் அவனுக்கும் ஒரு பங்குண்டு, ஏனெனில் அதை உற்பத்தி செய்ய அவன் உதவியிருக்கிறான். ஆகவே உழைப்பு என்ற பொருள் விற்பதற்காக இல்லை. எனவே அது விற்கப்படுவதற்கு உழைப்பின் சந்தை என்ற ஒன்று இல்லை. திறந்தவெளியான சந்தை, பல்வேறு பட்ட பொருட்களோடு வியாபாரிகள் வருவதையும், பல்வேறுப்பட்ட கொள்முதலாளர்கள் வெவ்வேறு தேவைகளுடன் வருவதையும் எதிர்பார்க்கிறது. வாங்கவோ அல்லது வாங்காமல் போகவோ கொள்முதல் செய்பவர் பூரண சுதந்திரமுடையவர். அதே போல் விற்கவோ அல்லது விற்காமல் போகவோ வியாபாரியும் அங்கு பூரண சுதந்திரம் உடையவராக இருக்கிறார். உழைப்புக்கு என்று எந்த சந்தையும் இல்லை. உழைப்பாளிகள் தவறான எண்ணத்தினால் தங்களுடைய பட்டணங்களோடு மிகவும் உறுதியாய் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். வெளி உலகத்தை குறித்த அறிவு இல்லாமல், அதன் தேவைகளை அறியாமல், உள் நாட்டினை முக்கியமாக கருதி, தங்களுடைய சொற்பமான உடைமைகளுடன், தங்களுடைய வீடு மற்றும் இடம் மற்றும் மத கட்டுப்பாடுகளினால்

அதே மண்ணுக்குள் வேரூன்றி விட்டவர்களை போலாகி விடுகின்றனர். அவர்களிடத்தில் பலதரப்பட்ட வேலைத்திறன் இல்லை; இதன் நிமித்தம் தொழிலாளி ஒரு குறிப்பிட்ட பொருளை மட்டுமே நன்கு செய்ய கற்றிருப்பார்கள், ஒரு குறிப்பிட்ட கருவியையே நன்கு உபயோகப்படுத்துவார்கள். எனவே அந்த குறிப்பிட்டக் கருவியை உபயோகிக்கும் தொழிலாளி தேவைப்படுகிற சொந்தக்காரரை கண்டுபிடிக்கவேண்டும், அப்படி இல்லாவிடில் அவன் வேலையில்லாமல் இருக்கவேண்டும். "பிரட்ரிக் ஹேரிசன்" என்பவர் கூறுகிறதாவது: 'ஒரு வணிகர் தனது பணம் எண்ணும் அறையில் அமர்ந்து கொண்டு, சில கடிதங்கள் மூலம், ஒரு நகரத்தின் பொருட்கள் அனைத்தையுமே கண்டம் விட்டு கண்டம் கொண்டு சென்று விநியோகித்து விடுகிறாராம். ஒரு கடைக்காரர் ஏற்ற, இறக்கத்துடன் அலைபாயும் திரளானவர்களின் தேவைக்கு ஏற்ப, தனது பண்டகசாலையின் பொருட்களை விற்கிறார். அவரது வாடிக்கையாளர்கள் பொருட்களை இவருக்கு கொண்டு வருகிறார்கள். இதுதான் உண்மையான சந்தை, இங்கு போட்டியென்பது தீவிரமாய், முழுமையாய், சாதாரணமாய், நல்லமுறையில் செயல்படுகிறது. இல்லாவிட்டால் விற்பதற்கு ஒன்றுமில்லாத தினக்கூ-யைப் போல் இருக்கும் இவரே ஒவ்வொரு சந்தை சமயத்திலும் இருந்தாகவேண்டும் என்பது கொஞ்சம் விலை மதிப்புடையது, தனிப்பட்ட சொந்த இயக்கம். அப்படியானால் இவரால் தனது முதலாளியுடன் தொடர்புகொள்ள இயலாது, தனது திறமையின் மாதிரிகளை வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்க இயலாது; அல்லது எந்த முதலாளியும் இவரது வீட்டுகதவை தட்டவும் மாட்டார்கள். உழைப்பு என்ற ஒரு பொருள் வியாபாரத்துக்கும் இல்லை, உழைப்பின் சந்ததை என்ற ஒன்றில் அது விற்கப்படவும் முடியாது. இரண்டுமே அரசியல் பொருளாதாரத்தின் கட்டுக்கதை, ஆனால் உண்மை என்பது கீழ்கண்டவாறு இருக்கிறது:

"நமது காலத்தில் பெரும்பாலான உற்பத்தி பொருட்கள் மற்றும் விவசாய பொருட்களும் கூட - ஒரு குறிப்பிட்ட உழைப்பாளிகள் மூலமாய், தொழில் வல்லுனர்களின் மேற்பார்வையின் கீழ், மிகவும் விலைமதிப்புடைய கருவிகளைக் கொண்டு உற்பத்தி செய்யும் முறைமையாக மாறிவருகிறது. இந்த



முறைமைக்கு மூன்று வகுப்பினரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது - கருவிக்குச் சொந்தக்காரர் அல்லது முதலீட்டளார் - மேற்பார்வையாளர் அல்லது மேலாளர் - அடுத்து கருவிகளை இயக்குபவர் அல்லது உழைப்பாளி. இப்படி அவர்களது ஒரு கூட்டு முயற்சியால் பொருள் உற்பத்தியாகிறது. எனவே கருவி என்பது தொழிலகத்தில் சேமித்து வைக்கப்பட்ட பொருளாகும். எனவே அது யாவருக்கும் சேர்ந்து சொந்தமாகிறது. பொதுப்படையான இப்படிப்பட்ட ஒரு கூட்டு முயற்சியில் இருக்கும் இந்த பங்குதார்களிடையே லாபங்களை எப்படி நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பது என்று திட்டவட்டமாய் முடிவு செய்வதென்பது அரசியல் பொருளாதாரத்தின் வேலையாகும். இது உழைப்பாளியின் நியாயமானதொரு பிரச்னை. உழைப்பாளியே மொத்தத்துக்கும் உரிமையானவர் என்பது சரியல்ல அப்படி அவர்கள் கேட்கவும் இல்லை, இவர்கள் அமர்த்திய வழக்குரைஞ்ஞர் அப்படி கோரியிருக்கலாம். மேற்பார்வையாளர் ஒரு பகுதிக்கு பொறுப்புள்ளவர், அதுவும் சற்று பெரிய பங்கிற்கு. இப்படிப்பட்டதொரு தொழிலை நடத்துவதற்கும், உலகச்சந்தையில் எப்படிப்பட்ட பொருட்கள் தேவைப்படுகிறது என்பதை தெரிந்து கொள்ளவும் அப்படிப்பட்ட பொருட்களை தயாரிக்கும் தொழிலாளிக்கு நியாயமான வருவாயை கொடுக்கும் வகையில் அதை விலைகொடுத்து வாங்குவதற்கான கொள்முதல் செய்பவரை கண்டு பிடிப்பதற்கும், திறமை வாய்ந்த மேலாளர் வேண்டும். அவர் நல்ல ஊதியத்துக்கு தகுதி உள்ளவர். கருவிகளின் உடைமையாளர் கூட ஊதியத்துக்கு தகுதியாகிறார். தொழிலாளி ஒரு குறிப்பிட்ட ஈட்டுத்தொகைக்கு தகுதியானவர். அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டிருப்பதனால் இந்த உரிமையை யாரும் மறுப்பதில்லை. இப்படிப்பட்ட ஒருங்கிணைந்த தொழில் முறையில் தயாரிக்கப்படும் பொருட்களை எப்படி பிரிப்பது என்று ஒரு முடிவுக்கு வருதே கடினமான காரியம். ஆனால், நிச்சயமாக முதலாளி, தனக்கு உழைத்த தொழிலாளிக்கு மிகக்குறைவான ஊதியத்தை உத்தரவிடுகின்ற முறைமைகளினால் இது தீர்மானிக்கப்படக்கூடாது. அதோடு தொழிலாளியும் கூடுமானவரை தனக்கு அளிக்கப்படும் குறைவான கூ-க்கு ஏற்றவிதமாய் குறைவாகவே உழைப்பையும்

அளிக்கிறார். சரியான முறை எதுவாக இருப்பினும், இது தவறான முறை என்பது நிச்சயம்."

டாக்டர். அபாட் இவர்களது சூழ்நிலையை தெளிவாக உணர்ந்து கொண்டபடியால் இப்படிப்பட்ட பெரும்பான்மையானவர்களுக்காக மனதில் மிகவும் இரக்கமும், கருணையும் கொண்டிருந்தார். அரசியல், சமூக, பொருளாதாரப் பிணிகளை இவர் கண்டுகொண்டார், ஆனால் அதற்கான பரிகாரத்தை கண்டுபிடிக்கத் தவறிவிட்டார். ஒரு பரிகாரத்தை அவர் குறிப்பிடுகிறார். அதை உறுதிப்படுத்தும் வழியை அவர் கூறவில்லை. இதன் வளர்ச்சியை அவர் காண்பதாக நினைக்கிறார்.

"கருவிகளை உபயோகிப்பவர் அதன் உரிமையாளராகவும், உழைப்பாளி முதலீட்டை கூ-க்கு அமர்த்திக்கொள்ள கூடியதொரு பொருளாதார சுதந்திரத்தை நோக்கி நடத்தப்படும் குருட்டுத்தனமான போராட்டம்."

அரேபியன் நைட்ஸ் என்ற கதைகளில் வரும் அலாவுதீன் அற்புத விளக்கை குறித்து சமீபத்தில் படித்தவர் தான் மேற்கண்ட வரிகளை எழுதியிருக்கக்கூடும் போல தோன்றுகிறது. மேலும் இவர் ஒரு மந்திரக்கோலை கண்டுடித்து பயன்படுத்த எதிர்பார்க்கிறார் போலும், இதை எழுதியவருக்கு பொருளாரதாரத்தைக் குறித்த அறிவு மிகவும் குறைவானதாக இருக்கவேண்டும் அல்லது முதலீட்டாளரிடம் இருந்தும் (தற்போது நடைமுறையில் இருக்கும் எல்லா சமூக சட்டங்களை மீறி) கருவிகளை உபயோகிப்பவர் இந்த கருவிகள் வலுக்கட்டாயமாய் எடுத்துக்கொள்ளும்படியானதொரு புரட்சியை எதிர்பார்க்கலாம். ஒருவேளை தற்போதைய இயந்திர உரிமையாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் கருவிகள், அதை உபயோகிப்பவருக்கு சொந்தமாகி விடக்கூடியதொரு மாற்றம் எவ்விதத்திலாவது நடக்குமாயின், அந்தப் புதிய இயந்திர உரிமையாளர்கள் தாங்கள் கொண்டிருக்கும் கருவிகளின் நிமித்தம் முதலாளிகள் ஆகிவிடுவார்கள் என்பதை அனைவராலும் புரிந்து கொள்ள முடியாதா? கருவிகளை இயக்குகிறவர்களாய் இருந்தவர்கள் அதன் முதலாளிகளாகி விட்டபிறகு அவர்களது சுபாவ சிந்தை மாறிவிடும் என்று கூற நமக்கு சரியான காரணம் ஏதாவது



இருக்கிறதா? அல்லது இயந்திரங்களினால் வரும் லாபத்தை சமமாய் பங்கிட்டுக்கொள்ளும்படி எல்லா தொழிலாளிகளையும் அந்த புதிய இயந்திர முதலாளிகள் அழைப்பார்கள் என்று கூறமுடியுமா? மனித சுபாவத்தில் நமக்கு இருக்கும் அனுபவத்தில் இல்லை என்றே சொல்லலாம். பிணி என்ன என்பது கண்டுகொள்ளப்பட்டது, சரியான சுகம் பெறுதலுக்கான அவசியமும் கண்டு கொள்ளப்பட்டது, ஆனால் எந்தப் பரிகாரமும் தவித்து பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிகளை குணப்படுத்தாது. அதனுடைய தவிப்பும் வேதனையும் தொடரவேண்டும், அதிகமாக வேண்டும். அப்போஸ்தலர் ரோமர் 8:22, 19ல் குறிப்பிட்டிருப்பது போல் 'தேவனுடைய புத்திரர்,' தேவனுடைய ராஜ்யம் வெளிப்படும் வரை துன்பப்படவேண்டும்.

இப்படிப்பட்ட துன்பம் ஒன்று இல்லை என்று மறுப்பதன் மூலம் அது சுகமாக்கப்படாது. "தொழிலாளி என்ற ஒரு பொருள் சந்தையில் இல்லை" என்கிறதான ஒரு உறுதிமொழியினால் தொழிலாளி என்ற ஒரு பொருள் சந்தையில் இருக்கிறது என்ற துக்ககரமான உண்மையை மாற்றவோ சரிசெய்யவோ மாட்டாது. நமது தற்கால சமுதாயச் சட்டம் மற்றும் நிலைமையின் கீழ் இதைத்தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. அடிமைத்தனம் என்பது ஒரு காலத்தில், சில மனிதரை மதிக்கும் பொருட்டு, அன்பும் கரிசனையும் கொண்ட எஜமானரின் கீழ் இருந்த ஒரு பயனுள்ள அமைப்பாக இருந்தது. பிரபுக்களின் முறைமையின் கீழ் பண்ணையாட்கள் என்பவர்கள் கொஞ்சம் முன்னேறிய நாகரீக வளர்ச்சியில் அதனுடைய கால கட்டத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவிதமாய் கையாளப்பட்டது; அதே போல் தான் இந்த 'கூ -' முறைமையும் கூட தொழிலாளி ஒரு வியாபாரப் பொருள் என்பது வாங்கி விற்பதற்கு உட்பட்டது போல முக்கிய அம்சங்களைக் கொண்டிருக்கிறது. இதன் நிமித்தம் உடலளவிலான, மனதளவிலான திறமையை வளர்த்துக்கொள்ள பெரிதும் உதவியிருக்கிறது. அதோடு உண்மையில் கடந்த காலத்தில் தொழிலாளிக்கு இது ஒரு விசேஷித்த வரமாகக் கூட இருந்திருக்கிறது. இப்போதும் கூட வியாபாரப் பொருள் என்கிற அம்சத்தை அழிப்பதென்பது அறிவுபூர்வமானதொரு காரியமாக இருக்காது. தங்களுடைய

மூளையை, திறமையை மற்றும் ஆற்றலைக்கொண்டு அதை செயல்படுத்துகின்ற உழைப்பாளிகளுக்கு, தங்களுடைய உழைப்பை வேலைதிறன் அற்ற, மூளையற்ற தொழிலாளிகளைக் காட்டிலும் நல்ல விலைக்கு விற்கக் கூடும். மதியற்ற மற்றும் சோம்பலானவர்களை தூண்டுகிற ஒரு கோலாகவும் கூட இது இருக்கும். தற்போதைய தேவை என்னவென்றால் நீதியான, ஞானமான, முன்மாதிரியானதொரு அரசாங்கம் - இப்படிப்பட்ட ஆட்சியானது தொடர்ந்து கட்டுப்பாடுகள், தூண்டுதல்கள் யாவற்றையும் முழுமையாய் சேர்த்து அதன் இலக்கை நோக்கி வழி நடத்தக் கூடியதாக இருக்கும், அதே சமயத்தில் ஒவ்வொரு உழைப்பாளி வகுப்பினரையும் அவர்களுக்கு அடுத்து மே-ருப்பவரின் முரட்டுத்தனத்தி-ருந்து பாதுகாப்பதாக இருக்கும், அதோடு மிகப்பெரிய அளவில் அதிகமாகிவரும் இயந்திர அடிமைகளின் படையுடன் கூடிய இக்கால வ-மைமிக்க சக்தியான மூலதனம் என்பதி-ருந்து யாவரையும் பாதுகாப்பதாகவும் இருக்கும்; அதேசமயம் அன்பின் சட்டத்தின் கீழ், நீதியின் வழியில் சுயநலம் மற்றும் பாவம் ஆகியவற்றையும் அழிக்கக்கூடும். இப்படிப்பட்டதானதொரு அரசாட்சி சத்திய வேதத்தைத் தவிர வேறு எங்கும் கூறப்படவில்லை, அங்குதான் இது மிகத்துல்-யமாய், விவரிக்கப்பட்டு வெகுநிச்சயமாய் உறுதிசெய்யப்பட்டு, இம்மானுயேலுடன் உடன் சுதந்திரவாளிகளாகும்படி அதன் ராஜாக்களும் ஆசாரியருமான தேவனுடைய சபையின் தெரிந்தெடுத்தலுக்காக மட்டுமே காத்திருக்கிறது. வெளி *5:10; 20:6*

### காலஞ்சென்ற பிஷப் ஜெ.பி.நியூமேன் அவர்களின் கருத்து

மெத்தடிஸ்ட் எபிஸ்கோபல் சபையின் பிஷப்பாகிய நியூமேன் அவர்கள் முதலீட்டுக்கும் உழைப்பிற்கும் இடையிலான தவிர்க்க முடியாத போராட்டத்தை கண்டார். இந்த பிரச்சனையின் சரி - தவறு என்ற இருபக்கங்களையும் இவர் பார்த்தார். தனது சபை பத்திரிக்கை ஒன்றின் செய்தியில் கீழ்கண்ட ஆலோசனைகளையும், திட்டத்தையும் வெளியிட்டிருந்தார்:

"செல்வந்தராய் இருப்பது தேவபக்தியற்ற ஒரு நிலையா? தேவபக்தியுடன் இருக்க ஏழ்மை அவசியமா? பிச்சைக்காரர்கள்



மட்டுமே பரிசுத்தவான்களா? பரலோகம் ஒரு ஏழ்மையின் இடமா? அப்படியானால் கால் நடைகளும், வெள்ளியும், பொன்னுமாய் மிகவும் செல்வந்தராய் இருந்த ஆபிரகாமை நாம் என்ன செய்வது? *7000 ஆடுகள், 3000 ஒட்டகங்கள், 4000 எருதுகள், 500 கழுதைகள், 30,000 ஏக்கர் நிலமும், 3,000 வேலையாட்களையும் கொண்டிருந்த யோபுவை என்ன செய்வது?.......*

"செல்வத்தை சம்பாதிப்பது என்பது ஒரு தெய்வீக ஈவு தொழிலும் அளவோடு செலவிடுதலும் சிக்கனத்தின் சட்டங்கள். மிகப்பெரிய செல்வத்திரட்சியென்பது ஒரு விசேஷித்த மானியமாகும். கவிஞர், தத்துவஞானிகள், மற்றும் சொற்பொழிவாளர்கள் இப்படிப்பட்டவராய் பிறந்தது போலவே, பணக்காரர்களும் செல்வத்தில் சிறப்பானவர்களாய் இருக்கிறார்கள். தனது உள்உணர்வில் தேவை மற்றும் விநியோகத்தின் சட்டங்களை அவன் அறிந்தவனாய் இருக்கிறான்; வியாபாரச் சந்தையில் வரப்போகும் மாற்றங்களை அறிந்துகொள்ளும் தீர்க்கதரிசன பார்வையை ஈவாக பெற்றவனாக காணப்படுகிறான்; எப்போது சரக்குகளை நிறுத்தி வைக்கவேண்டும் என்று அறிந்திருக்கிறான்; நிலத்தை வாங்கி விற்கும் வியாபாரத்திலும் ஜனங்களின் இடமாற்றத்தையும் அதன் விளைவுகளையும் முன்கூட்டியே அறிந்து கொள்கிறான். காவியக்கலை கவிஞரிடம் இருப்பதனால் அவன் பாடவேண்டியிருப்பதைப் போலவே, நிதியாளனும் பணத்தை ஈட்டவேண்டியிருக்கிறது. அதை தவிர்க்க அவனால் இயலாது. இப்படிப்பட்ட ஈவுகளைக் குறித்து வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது 'ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்கு கொடுக்கிறவர்.' *(உபா 8:18)* இப்படிப்பட்ட எல்லா வாக்குத்தத்தங்களும் உலகின் பொருளாதாரத்தை, கட்டுக்குள் வைத்திருக்கிற, கிறிஸ்தவ நாடுகளுக்கு அவைகளின் தற்போதைய நிதி நிலவரத்தின் நிலையைக் குறித்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

"இப்படிப்பட்ட இயற்கையான, சட்டபூர்வமான உரிமைகளால் சொத்துக்களுக்கு உரிமையாளராக இருப்பதற்கு எதிராக சொத்துகளை பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிற கூக்குரல் யாருடையது எனில் பரம்பரையாகவோ, தங்களது திறமையினாலோ

அல்லது தொழி-னாலோ செல்வத்தை பெறாதவர்களே. இது இயற்கையின் நியதியின்படியோ அல்லது மனித சமுதாயத்தின் ஒழுங்கின்படியோ எந்த ஆதாரமுமே இல்லாத ஒரு கம்யூனிசமாக இருக்கிறது. மூலதனத்திற்கு எதிராக உழைப்பின் கொடூரமான, பகுத்தறிவுக்கு புறம்பான ஒரு கூக்குரல், இயற்கையின் பொருளாதாரத்திலும், அரசியல் பொருளாதாரத்திலும் பொதுவான பகைமை ஒன்று இவைகளுக்கு இடையில் இருக்கக்கூடாது."

மேலும் பிஷப் கூறுகிறார்:

"முதலாளியும் தொழிலாளியும் மீறக்கூடாத உரிமைகளை பெற்றிருக்கின்றனர்; முதலாளி யாரை எதற்காக பணிக்கு அமர்த்திக்கொள்ளலாம், தொழிலாளி எப்பொழுது பணியை ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்யலாம்." மேலும் பேராயர் உறுதியாய் கூறுவதாவது: "உழைப்பாளி வர்க்கத்தாரின் பொறாமையும் பகைமையும் பணக்காரர்களுக்கு எதிரானது அல்ல, ஆனால், அவர்களது சுகபோகத்துக்கும் அலட்சிய போக்குக்கும் எதிரானதாகும்." மேலும் கூறுகிறார் :

"சேவைகளின் உயரிய பண்பை உடையதாக செல்வம் இருக்கிறது. இது சேமித்து வைப்பதற்காகவோ அல்லது திருப்தி கொள்ளவோ கொடுக்கப்படவில்லை, அதோடு ஆடம்பரத்தையும் அதிகாரத்தையோ வெளிக்காட்டிக் கொள்ளவும் அளிக்கப்படவில்லை. செல்வந்தர்கள் சர்வ வல்லவருடைய தர்ம கர்த்தாக்கள்; அவருடைய பட்டுவாடா செய்யும் பிரதிநிதிகள்; அவர்கள் ஏழைகளின் பாதுகாவலர்கள்; பெரும்பாலானவர்களுக்கு சிக்கனத்தைக் கொண்டுவரும் இப்படிப்பட்ட மாபெரும் ஸ்தாபனங்களை செல்வந்தர்கள் ஆரம்பிப்பதற்காக இருக்கிறார்கள்; மிகப்பெரிய லாப பங்குகளுக்காக அல்ல; மாறாக, மாபெரும் செழுமைக்காக. நேர்மையான தொழிலகத்திற்காக காத்திருக்கும் சந்தோஷத்தை தொழிலாளர்கள் அனுபவிப்பதை மூலதனமானது சாத்தியமாக்குகிறது. ஏழைகளின் வீடுகளை முன்னேறச் செய்ய வேண்டியது பணக்காரரின் கடமையாகும். ஆனால் உண்மையும், புத்தி கூர்மையும் உடைய இயந்திர தொழிலாளியின் தங்கும் இடத்தோடு ஒப்பிடும் போது, அநேக செல்வந்தருடைய தொழுவம் கூட மாளிகையைப் போல இருக்கிறது.



"சமூகத்தை மேம்படுத்தும் சமுதாய சீர்திருத்தங்களை செய்வதற்கு உபகாரிகளாக செல்வந்தர் இருக்கும்போது, ஏழைகளின் ஆசீர்வாதத்தை அவர்கள் பெறுவார்கள். சமுதாயத்தின் உரிமைகள் மற்றும் நன்மைகளை பாதுகாப்பதற்கான அத்தியாவசிய சட்டங்களை உருவாக்க அறிவுரைகளை கொடுக்கவேண்டியது செல்வந்தர்களே. கல்விக்காக நூலகங்கள், கலைக்காக அருங்காட்சியகங்கள், ஆராதிப்பதற்காக ஆலயங்களை அவர்கள் கட்டும்போது அதை உபயோகிப்பவர்கள் இவர்களது இரக்க குணத்தை பெரிதும் மதிப்பார்கள். மூலதனம் செல்வமானது - புத்தி கூர்மையின் செல்வத்துடனும், சரீரபெலத்தின் செல்வமுடனும், பொது நலத்துக்கான நன்மையின் செல்வத்துடனும் ஒன்று சேர்ந்தால் ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையையும், சுதந்திரத்தையும் மற்றும் சந்தோஷத்தையும் அளிக்கும் சமமான காரணிகளாக மூலதனமும் உழைப்பும் மதிக்கப்படும்."

தற்காலத்தின் முரண்பாடு மற்றும் எதிர் வரும் போராட்டம் ஆகிய இருபக்கங்களை குறித்த தெளிவான ஒரு கண்ணோட்டத்தை காண பேராயர் உண்மையில் பெருமுயற்சி செய்தார். ஆனால் செல்வத்தை சார்ந்திருத்தலும் அதோடு ஐக்கியப்படுதலும் சந்தேகமின்றி அவரது தீர்ப்புக்கு ஒருதலைப் பட்சமான கருத்தை கொடுத்தது. உண்மையில் பண்டைய காலத்தினர் பெரும்பாலோர் மிகவும் செல்வந்தர்களாகவே இருந்தனர், உதாரணத்திற்கு ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் காலத்தை பார்க்கும் போது கானான் தேசமானது அந்நாட்களின் சுதந்தரிக்கப்பட்டிருந்தாலும், அதை உபயோகிப்பவருக்கு கட்டுப்பாடின்றி இருந்தது, அதற்கென்று வே-யடைப்புகள் எதுவும் இருக்கவில்லை. இந்த மூன்று முற்பிதாக்களும் தங்களுடைய வேலையாட்கள், மிருகஜீவன்கள் மற்றும் கால்நடைகளோடு கூட கானான் தேசமுழுவதும் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் இஷ்டம் போல் சுற்றித்திரிந்தனர். அப்படியிருந்தும் கூட தங்களுக்கே சொந்தமாக வேண்டும் என்று ஒரு அடி நிலத்திற்காக கூட உரிமை கொண்டாடவில்லை. (அப் 7:5) அதோடு தேவனுடைய ராஜ்யத்திற்கு நிழலான இஸ்ரயே-ன் சட்டமுறைப்படி ஏழைகளுக்கும், உள்நாட்டவருக்கும், வெளி நாட்டவருக்கும் இதற்கான உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. யாரும் பட்டினியாய் இருக்க வேண்டியதில்லை. விளை நிலங்களில் அடியோடு தானியங்களை சேகரிக்க வேண்டியதில்லை, ஏழைகளுக்கென்று சேகரித்துக்கொள்ள தானியங்கள் விடப்பட்டன. பசியாய் இருக்கும் யாரும் எந்த திராட்சை தோட்டத்திலோ, வய-லோ, பழத்தோட்டத்திலோ பிரவேசித்து திருப்தியாய் புசித்து

பசியாறிக்கொள்ளலாம். மேலும் பாலஸ்தீனத்தின் நிலமானது இஸ்ரயே-ன் கோத்திரங்களுக்கும் குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் போது அதன் மீதிருந்த அடமானங்கள், கடன்கள் யாவும் ரத்து செய்யப்படுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 50 வருடத்துக்கு ஒருமுறை நடைபெறும் யூபி- வருடம் இந்த நிகழ்வினால், செல்வம் படைத்த சிலரிடத்தில் மக்கள் ஏழ்மைபட்டு, அடிமைப்பட்டிருப்பது முழுமையாய் தடுக்கப்பட்டது.

கிறிஸ்தவ நாடுகளின் சட்டங்களும் அமைப்புகளும் தேவனால் ஒழுங்கு செய்யப்பட்ட சட்டங்கள் அல்ல என்பதை பிஷப் மறந்து விட்டதாக தெரிகிறது. அபூரண சிந்தையும் எண்ணமும் ஒருங்கிணைந்து உருவாக்கியவைகளைப் போல இந்த சட்டங்கள் தவறானவைகள் அல்ல; ஒரு காலத்தில் மேலானவைகளாக உருவாக்கப்பட்டிருந்தாலும், சமூகம் மற்றும் பொருளாதார நிலையின் மாற்றங்களினால் நிச்சயமாய் கடந்த கால சட்டங்களில் மாற்றங்கள் தேவைப்பட்டன. அந்நாட்களின் சுயநலம் மற்றும் மிகுந்த பழமைவாதங்கள் எதிர்த்தபோதிலும் மற்ற மாறுதல்கள் சரியானவையே என்று இப்பொழுது கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும், பிஷப் அவர்கள் மறந்துவிட்டதாக தெரிகிறது. அப்படியிருக்கும் போது, நமது சட்டங்கள் வெறும் மாம்சீக குறைவுடையவைகள் என்று ஒப்புக்கொள்ளப்படக்கூடியது, அதோடு கூட ஒருவேளை மாறிவிட்டிருக்கும் சூழ்நிலைக்கு பொருந்தும்படி அந்த சட்டங்கள் ஏற்கெனவே மாற்றப்பட்டு, திருத்தப்பட்டிருக்குமேயாகில், அவைகள் புனிதமானவை, சந்தேகத்திற்கு இடமளிக்கதாவை மாற்றப்பட கூடாதவை என்ற முறையில் நடத்துவது பிஷப் அவர்களுக்கு முன்னுக்குப்பின் முரணானதாக இருக்கவில்லையா? அப்படியானால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த அந்த உரிமைகள் மீறக்கூடாதவைகள், இயற்கையின் நியதியிலோ அல்லது மனுக்குலத்தின் சட்ட முறைகளிலோ "இயற்கையானதும், விவாதத்திற்கு இடமில்லாததும் என்பது முரணானதாக இருக்கவில்லையா? சட்டங்களையும் சமூக ஒழுங்குகளையும், தற்கால நிலைமையில் சிறப்பாய்



கைக்கொள்ளும்படி மாறுதல் செய்யும் ஆலோசனை "கொடூரமும்," "பகுத்தறிவுக்கு புறம்பானதுமாய்" இருக்கவில்லையா?

டாக்டர் அபாட் அவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட - தேவை மற்றும் விநியோகத்தின் நிலையை ஆதாரமாகக் கொண்டு, உழைப்பு ஒரு வியாபாரப் பொருள் என்ற கேள்வியின் மேல் எதிர்மாறானதொரு ஆதாரத்தை பிஷப் எடுத்தார் என்பது கவனிக்கப்படும். இதில் அவர் நமது தற்கால சமுதாய அமைப்பின் சட்டத்தைக் கொண்டு பார்த்து, அது அப்படியே தொடரவேண்டும் என்று கூறினார். தற்போதைய சமூக அமைப்பு தொடருகின்ற வரையில் உழைப்பு ஒரு வியாபாரப் பொருளாக தொடர வேண்டும் என்று அவர் கண்டது சரியே (மூலதனத்திற்கு சமமாய் ம-வாக வாங்கப்படவேண்டும், உழைப்பு அதற்குண்டான, கூடுமானவரை நல்ல விலைக்கு விற்கப்பட வேண்டும்) தீர்க்கதரிசனத்தினாலும், மக்களுடனும் அவர்களது கவலையுடனும், மிக நெருங்கிய தொடர்புடைய தெளிவான எண்ணமுடையவர்களாலும் உணர்ந்து கொண்ட விதமாகவும் இந்த காரியங்கள், எப்படியிருந்தாலும், அநேக வருஷங்களுக்கு தொடராது.

மூலதனம் மற்றும் உழைப்பு ஆகியவைகளுக்கு இடையிலான வேற்றுமைகளுக்கு சமாதானமான தீர்வுக்கு ஒரே நம்பிக்கை பிஷப் அவர்களின் கருத்துப்படி : (1) மேலே கடந்த இரண்டு பத்திகளுக்கு முன் குறிப்பிட்டப்படி செல்வந்தர் யாவரும் அன்புள்ளவர்களாய் தயாளகுணமுடையவர்களாய் மாறுவது;(2) எல்லா ஏழைகளும், நடுத்தர மக்களும் தெய்வபக்தியும் மனநிறைவும் கொண்ட ஒரு நிலைக்கும் மாறி பூமியும் அதன் நிறைவினாலும் அவர்கள் பெற்றுக்கொள்ளும்படி எந்த அளவு செல்வம் கொடுக்கப்படுகிறதோ அதை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு "ஏழைகளாகிய நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" என்று ஆர்ப்பரித்தல். இதுதான் தொழிலாளர் பிரச்னைக்கு உடனடியாயும் முழுமையாயும் தீர்வை கொடுக்கும் என்று நாம் ஒப்புக்கொள்கிறோம்; ஆனால் எந்த அறிவுள்ள மனுஷரும் இப்படிப்பட்டதொரு தீர்வை வரும் சமீப காலத்தில்

எதிர்பாக்கவில்லை. சத்திய வேதமும் இவ்விதமாய் விவரிக்கவில்லை. உண்மையில் இந்த புத்திசா-த்தனமான பிஷப் விமோசனத்துக்காக தனது ஆலோசனைகளை கொடுப்பதாக நாம் நினைத்துக்கொள்ள முடியாது; அதற்குமாறாய் வெகுசீக்கிரத்தில் நாகரீக வளர்ச்சியானது அராஜகத்தின் சாபத்தினால் தாக்கப்படும் நிலையில் இப்படிப்பட்டதொரு சாத்தியப்படாத தீர்வைத் தவிர வேறு எதையும் இவரால் காணஇயலவில்லை என்று வேண்டுமானால் நாம் எண்ணிக்கொள்ளலாம். அந்த கனவான் தேவனுடைய தீர்வை காணுவாரா - இதற்காக நம்பிக்கையுடன் நம்மை ஜெபிக்கும்படி நம் கர்ததர் கற்றுகொடுத்ததாரே - "உம்முடைய ராஜ்யம் வருவதாக"- அப்படிப்பட்டதான ராஜ்ஜியம் வல்லமையிலும் மகிமையிலும் எப்படி கட்டப்படும் என்பதையும் காணுவாரா? *தானி 2:44, 45; 7:22,27; வெளி 2:27*

## கற்றுத்தேர்ந்த ஒரு நீதிபதியின் கருத்துக்கள்

அமெரிக்க நாட்டின் பிரசித்திபெற்ற ஒரு கல்லூரியில் சட்டப்படிப்பில் பட்டம் கொடுக்கும் விழாவில் உலகப்புகழ் பெற்ற நீதிபதி ஒருவர் தனது கருத்தை கீழ்க்கண்டவாறு கூறுகிறார்; 'கன்ஸாஸ் சிட்டி ஜர்ன-ல்' வெளியிடப்பட்டது:

"மூர்க்கமும் பேராசையும் நிறைந்த நமது மனுக்குலத்தின் சரித்திரமானது - தனி மனித சுதந்திரத்துக்காக இடைவிடாமல், ரத்தம் சிந்தும் போராட்டங்களைக் கொண்டது. போர்கள் நடத்தப்படுகின்றன. பேரரசுகள் தூக்கியெறியப்பட்டு, முடியாட்சியின் மன்னர்கள் சிரச்சேதம் செய்யப்படுகின்றனர், ஜெயத்துக்காகவோ, குறிக்கோள்களுக்காகவோ, மகிமைக்காகவோ அல்ல, ஆனால் மனிதனுடைய விடுதலைக்காக - சலுகையும் உரிமையும், தணியாத தனிமனித சுதந்திரத்தின் பேராவ-னால் பிடிவாதமாயும், வேண்டா வெறுப்புடனும் குரூரமான பல நூற்றாண்டுகள் போராடி பெறப்பட்டன. "மேக்ன சாத்ரா" முதல் "அப்போம்மடாக்ஸ்" வரை ஒரு முடிவில்லாத புலம்பல்; சட்டத்தின் முன் எல்லா மனிதனும் சமம் என்பதற்கான உறுதியும், அச்சமில்லாத 652 வருட போரில் ஒரு நிமிடம் கூட அதன் ஓட்டம் தடைபடவோ, தயக்கமடையவோ இல்லை. இந்த ஒரு காரணத்திற்காகவே சீமான்கள்



மன்னர் ஜான் அவர்களை கொடுமைப்படுத்தினர். லேட்டிமரை எரித்தனர்; ஹேம்ப்டன் வீழ்த்தப்பட்டார்; மேப்ஃளவரின் மந்திரிசபையில் உடன் இருந்தவர்கள் மூழ்கடிக்கப்பட்டனர்; சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டது; ஓசாவாடோமியின் ஜான் பிரவுன் மரித்தார்; கிரான்ட் மற்றும் ஷேரிடனின் படைகள் அணிவகுத்து வந்து வெற்றிபெற்றன. இவர்கள் ஓட்டுரிமை சுதந்திரத்தை விட்டுக்கொடுப்பதை விட தங்களுடைய எல்லா உடைமைகளையும் உயிரையும் கூட துறக்கத் தயாராக இருந்தனர்.

'கலப்பையினாலும் கப்ப-னாலும் பயன் என்ன
வாழ்வோ, அல்லது நிலமோ, சுதந்திரம் இல்லாவிடில்?'

"நூற்றாண்டுகளாய் காணப்பட்ட கனவு கடைசியில் உணரப்படுகிறது. மிருகத்தனமான ரத்தக்கறை படிந்த அமளியின் சரித்திரத்தி-ருந்து, மனிதன் கடைசியாக தானே எஜமானன் என்ற நிலைமைக்கு எழும்பினான்; ஆனால் விசுவாசத்தின் குழப்பமான புதிர் அப்படியே தங்கிவிட்டது. மனிதர் யாவரும் சமமானவர், ஆனால் சமத்துவம் இல்லை. ஓட்டுரிமை உலகளாவிய ஒன்று, ஆனால் அரசியல் அதிகாரமோ மிகச் சிலரால் கையாளப்படுகிறது; ஏழ்மையோ ஒழிக்கப்படவில்லை. சமூகத்தின் சுமைகளும், சலுகைகளும் சமமின்றி பெறப்படுகின்றன. ஒரு சிலரிடம் வீணடிக்கக்கூடிய அளவிற்கும் ஆடம்பரமாய் இருக்கக்கூடிய அளவிற்கும் மேலாக செல்வம் குவிந்திருக்கிறது. வேறு சிலரோ அன்றாட உணவிற்குக் கூட வீணாய் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடையூறுகளினாலும் ஏமாற்றங்களினாலும் ஏழ்மை மற்றும் துன்பத்தி-ருப்பவர்கள் எரிச்சலடைந்திருக்கிறார்கள். தனிநபரின் மேம்பாட்டிலும் சந்தோஷத்திலும் இருக்கும் அரசியல் சுதந்திரத்தின் விளைவுகளில் ஏமாற்றம் அடைந்து, அநேகர் அமைதியிழந்த ஒரு நிலையை அடைந்துவிட்டபடியால் - நமது சமுதாயத்தில் பழைமைவாத சக்திகளின் முனைப்பானதொரு கூட்டணிக்கான அவசியத்தை சுட்டிக்காட்டுகின்றனர்.

"அமெரிக்க ஐக்கிய நாட்டின், சமுதாயத்தினுள் நுழைந்திருக்கும் பரிணாமவாத இயக்கத்தில் - அதன் சரித்திரத்தில் முன்னோடிகள் யாரும் இருக்கவில்லை; ஏனெனில் அதனுடைய

நிலைமை முரண்பாடான ஒன்றாக இருக்கின்றபடியால், விஞ்ஞானப் பூர்வமான தீர்வு கூடாத காரியமாக இருக்கிறது. சமூக மேம்பாடு, தொழி-ல் விஞ்ஞானத்தின் ஈடுபாடு மற்றும் இயந்திரங்களின் கண்டுபிடிப்பு ஆகியவைகளினால் பெருவாரியாக மக்களின் நிலைமை மிகப்பெரிய அளவில் முன்னேறி வருகின்றபோது, ஏழ்மையானது சமூகத்தோடு மிகவும் பகைமையுணர்வுடன் இருக்கிறது என்றோ, சுய - நிர்வாக நிறுவனங்களுக்கு அதிக ஆபத்தை விளைவிக்கக் கூடியது என்றோ, எப்போதும் இல்லாத அளவிற்கு நூற்றாண்டு காலமாய் போராடி பெறப்பட்ட தனி மனித சுதந்திரத்துக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியது என்றோ சந்தேகப்பட முடியாததாய் இருக்கிறது. அதனுடைய காரணங்கள் தெளிவாக இருக்கின்றன. உழைப்பாளி சுதந்திரமாக இருக்கிறான்; அவன் ஓட்டுரிமை உடையவனாயிருக்கிறான், அவனது சுய - கௌரவம் அதிகரித்திருக்கிறது. அவனது அறிவுக்கூர்மை மிகவும் நேர்த்தியாய் இருக்கிறது; அவனது மனநிறைவுக்கான காரியங்களைக் காட்டிலும் அவனது தேவைகள் அதிவேகமாக பெருகிவிட்டன; கடுமையான சரீர உழைப்பின் நிலையைவிட்டு கல்வியானது அவனை மேலும் உயர்த்தியிருக்கிறது; தினசரி பத்திரிக்கைகளின் செய்திகளினால் அனுகூலங்களைக் குறித்து அவருக்கு நன்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. எல்லா மனிதரும் சமமாகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அவன் போதிக்கப்பட்டிருக்கிறான். உரிமைகள் சமமாக இருப்பினும், வாய்ப்புகள் சமமாக இல்லை என்று அவன் நம்புகிறான். நவீன விஞ்ஞானம் அவனுக்கு வ-மையான ஆயுதங்களை கொடுத்திருக்கிறது; பசி வரும்போது தனது மனைவி மற்றும் பிள்ளைகளின் அவசியத்தைக் காட்டிலும் பூஜிக்கத்தக்கது எதுவுமில்லை.

"சமூக நெருக்கடி என்பது எல்லா வளரும் நாடுகளிலும், முக்கியமாய் நமது நாட்டிலும் அதிக வ-மை பெற்றதாய் மாறிவருகிறது. மௌனம் சாதிக்கிற அதிருப்தியின் மெல்-ய இடிமுழக்கம் ஒவ்வொரு மணிநேரமும் அருகில் நெருங்கிக் கொண்டேயிருக்கிறது. தன்னுடைய நம்ப முடியாத தியாகங்களினால்



பெறப்பட்ட ஸ்தானத்தை விட்டுக்கொடுக்காதது அமைதலும் உறுதியுடைய பேரறிவுடன் கூடிய ஆங்கிலோ - சாக்சனுடைய ஓட்டம் இதற்கு இணையென்று என்று நான் நம்புகிற பட்சத்தில் இந்த போரானதோ முடிவுக்கு வரவில்லையென்று தெளிவாய் தெரிகிறது; ஏனெனில் உரிமைகளில் சமத்துவமும் - வாய்ப்புகளில் சமத்துவமும் பெறுவதில் மனிதன் திருப்தியடையவில்லை, ஆனால் சீரிய நிலையின் சட்டமானது, சூழ்நிலைகளின் சமத்துவம் என்றிருக்கவேண்டும் என்று மனிதன் உரிமையுடன் கேட்பான்.

"சமூக அவமதிப்பு சுய நிர்வாகத்துடன் முரண்பாடாக இருப்பது மிகத் தெளிவாய் தெரிகிறது. அதோடு கூட நம்பிக்கை ஏதுமற்ற, உதவியற்ற ஏழ்மையானது தனிப்பட்டவரின் சுதந்திரத்தோடு ஒத்துப்போகவில்லை. ஒரு மனிதன் தன்னுடைய மற்றும் தன் குடும்பத்தினுடைய தேவைகளுக்காய் தொடர்ந்து ஒருவர் மீது இன்னொருவர் முற்றிலும் சார்ந்து வாழ்வது, முதலாளி ஒருவரின் திருப்திக்காக குடும்பம் முழுவதும் அப்புறப்படுத்தப்படுவது - சுதந்திரம் என்ற அர்த்தத்திற்கு எவ்விதத்திலும் நியாயமானதாய் இருக்கவில்லை. ஒரு நூற்றாண்டு காலத்தில் நாம் உலக நாடுகளிலேயே மிகவும் செல்வந்தர்களாகி விட்டோம். நமது வருவாய் மிக பிரமாண்டமாய் இருக்கிறது. நமது வருமானம், சேமிப்புகளின் புள்ளிவிவரங்கள் நம்பமுடியாத அளவிற்கு இருக்கிறது. பணம் மிகுதியாய் இருக்கிறது, உணவு திரளாய் இருக்கிறது; துணிமணிகளும் உழைப்பும் போதிய அளவிற்கு கிடைக்கின்றது; ஆனால் இந்த செழுமையை எதிர்த்து நிற்கமுடியாத அளவில் நாகரீகத்தின் உண்மை நிலை இன்றும் இருக்கிறது: பெரும்பாலான ஜனங்கள் வாழ்வதற்கே போராடுகின்றனர். மற்றொரு பிரிவினர் இழிவான, மற்றும் பரிதாபகரமான ஏழ்மையில் வாழ்கின்றனர்.

"இப்படிப்பட்டதானதொரு நிலைமை நீடிப்பதைப் பார்க்கும் போது தெய்வீக ஞானத்தை குற்றம் சாட்டத்தோன்றுகிறது. இப்படி சொல்வதை ஒப்புக்கொள்ளதக்கதாக வறுமையின் கொடுமையும் அல்லது அறியாமையும் சேர்ந்து தொன்று தொட்டு வருவதனால் மனிதனின் சகோதரத்துவத்தை பரிகசித்து உலக நீதியை மூடத்தனமாக ஆக்குகின்றது. இப்படிப்பட்ட நிலைமைகளினால்

உண்டாகும் ஏமாற்றமானது சமுதாயம் ஸ்தாபிக்கப்பட்ட கொள்கைகளின் மீதிருக்கும் அவநம்பிக்கையை இன்னும் அதிகமாக்குகிறது. அதோடு சமுதாயம் நிற்கின்ற அஸ்திவாரத்தையே மாற்றும்படி செய்கிறது. இந்த அவநம்பிக்கையை தணிப்பது தான் உங்களுடைய மிக முக்கியமான வேலை, இந்த புரட்சியை எதிர்த்து நிற்பதுதான் உங்களது மிக முக்கியமான கடமை.

"நவீன சமுதாயத்தின் குறைகள், தவறுகள் மற்றும் தீமைகளின் சீர்திருத்தத்திற்காக அறிவுறுத்தப்படும் மிகப் பிரபலமான தீர்வுகள் பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். முதலாவது - மனக்குறைகளை தீர்ப்பதற்காக அரசியல் அமைப்புகளை மாற்றுதல். இந்த முறையானது தவறானதும், பலனற்றதுமாய் இருக்கக்கூடும். ஏனெனில் பொருளாதார செழுமையே சுதந்திரத்தின் பலன் என்ற தவறான வாதத்தின் மீது அது ஆதாரப்பட்டிருக்கிறது, ஆனால் அரசியல் சுதந்திரம் என்பது அதற்கான பிரதிபலனாகும். பொருளாதார மேம்பாட்டின் காரணமாய் அல்ல என்பதே உண்மை. ஏழ்மையை புகழ்ந்தும், பண ஆசையே எல்லா தீமைக்கும் மூலக்காரணம் என்றும் வெளிப்படையாய் தாக்கி கவிஞர்களும், கற்பனையாளர்களும் நிறையவே எழுதிவிட்டார்கள். ஆனால் உண்மையாய் சம்பாதித்து ஞானமாய் பயன்படுத்துவது என்பதே உண்மையாகும். பணத்தோடு இணைந்திருக்கக்கூடிய மிக உறுதியாய் கட்டப்பட்ட, முற்போக்கான, தெளிவாய் தெரியக்கூடிய ஒரு சக்தி வேறு எந்த வடிவத்திலும் இல்லை.

"நம்பிக்கையின்மை, இழிவானநிலை, உதவியற்றநிலை, ஏழ்மை, வறுமை, பசி, அதிக வேலை, குறைந்த கூ-, கந்தை மற்றும் ரொட்டி துணிக்கையின் ஓரம் போன்ற நிலைமையைக் காட்டிலும் அவ்வளவு வருந்தத்தக்க, அவ்வளவு சோர்வுற செய்கின்ற அவ்வளவு தீங்குவிளைவிக்கக்கூடிய காரியங்கள் உண்மையில் மனித வாழ்வில் இல்லை. மிக அதிக அளவில் மனதில் பாதிப்பை உண்டாக்குவதும் இல்லை. உங்களது பயிற்சி பெற்ற அறிவுத்திறன் இக்காலத்தின் பிரச்னையை ஆராயும்படி உங்களை தூண்டுமாயின், இந்த சமுதாய பிரச்னை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருவதை நீங்கள் கவனிக்கத் தவறமாட்டீர்கள்."

ஏழை, பணக்காரர் யாவருமே அங்கீகரிக்கக்கூடிய தெளிவான



மற்றும் தரமானதொரு உண்மை அறிக்கையை இங்கே நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் அதற்கான தீர்வு இங்கே இல்லை. வழக்கறிஞர் மற்றும் அரசியல் வாதிகளின் புதிய குழு ஒரு தீர்வை காணும்படி கூற ஒரு ஆலோசனை கூட இல்லை. பிறரில் இருக்கும் அவநம்பிக்கையை தணிக்கும் வகையில் கூறப்பட்ட வெறும் ஆலோசனையே. தற்கால முறைமைகளின் ஒவ்வொரு மாற்றத்திலும் எதிர்த்து நிற்கும் போதும், அதனுடைய நசுக்குத-ல் இருந்து தங்களை காத்துக் கொள்ளும்படி முயற்சி செய்யும் போதும் அவரவர் எவ்வளவாய் உணருகிறார்களோ அந்த அளவுக்கான ஆலோசனையே.

ஏன் இந்த புத்திமதி? இந்த தகுதிபடைத்த மனிதர் தனது சகோதரரை இழிவு படுத்துகிறாரா? அப்படி ஒருகாலமும் இல்லை; எவ்விதத்திலும் இல்லை; ஆனால் 'சுயநலம்', தனித்தன்மை ஆகிய சுதந்திரத்தின் தவிர்க்க முடியாத செயல்பாட்டை அதன் குறிப்பாக உணர்த்தும் சுதந்திரத்துடனும் ஒவ்வொருவரும் தன்னால் முடிந்த மிகச் சிறப்பானவைகளை தனக்காக செய்து கொள்வதை அவர் கண்டதினாலும் மட்டுமே கடந்தவைகளை உற்றுக் கவனித்து அவர் கூறுகிறார். "எது நடந்ததோ அது நடந்ததே தீரும்." நாம் தற்கால யுகத்தின் முடிவிலும் ஆயிரவருட யுகத்தின் உதயத்திலும் இருப்பதை அவர் பார்க்கவில்லை. தேவனால் அபிஷேகம் செய்யப்பட்ட இப்பூமியனைத்துக்குமான ராஜாவின் வல்லமை மட்டுமே இந்த எல்லா குழப்பங்களி-ருந்தும் ஒரு ஒழுங்கை கொண்டுவர இயலும் என்பதையும் அவர் காணவில்லை; மேலும் தேவனுடைய ஞானமான முன்னேற்பாட்டினால் - எவ்விதத்திலும் மனுஷீக ஞானத்தால் தீர்த்து வைக்கமுடியாத இப்படிப்பட்ட குழப்பமான பிரச்சனைகள் மனிதர் யாவருக்கும் முன் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதோடு எவ்விதத்திலும் மனித முன் அறிவோ அல்லது திட்டங்களோ எண்ணிப் பார்க்கமுடியாத, தவிர்க்க முடியாததொரு பேராபத்துக்குரிய சூழ்நிலை இப்போதிருக்கிறது. எனவே குறித்த காலத்தில் தெய்வீக தலையீட்டை மனுஷர் சந்தோஷத்துடன் உணர்ந்துக்கொண்டு தங்களை முற்றிலுமாய் ஒப்புக்கொடுப்பார்கள்; அதோடு தங்களுடைய சொந்த முயற்சிகளை கைவிட்டு தேவனால் போதிக்கப்படுவார்கள். ராஜ்யத்துக்கே உரிமையானவர் வந்து "அவரது மகா வல்லமையையும் ஆளுகையையும் எடுத்துக்கொண்டு"

குழப்பங்களை நீக்கி ஒழுங்கை கொண்டுவரவும், அவரது மணவாட்டியாகிய சபையை மகிமைப்படுத்தவும், அதோடு அதன் மூலமாக பாவ துயரத்திலும் வேதனையிலும் இருக்கும் சர்வ சிருஷ்டிகளையும் விடுவித்து பூமியின் குடும்பங்கள் அனைத்தையும் ஆசீர்வதிக்கவும் செய்வார். "சத்திய வெளிச்சத்தை" பெற்றிருக்கிறவர்கள் மட்டுமே - ஞானிகளுக்கு புதிராக இருக்கும் - தற்கால மகிமையின் வெளிப்பாட்டை காணமுடியும்.

## திரு.ராபர்ட் ஜி.இங்கர்சால், மற்றவர்களைப் போலவே காரியங்களின் நிலைமையைக் கண்டு வருந்தினர். ஆனால் தீர்வுக்கு எந்த ஆலோசனையையும் அளிக்கவில்லை

கர்னல் இங்கர்சால் என்பவர் இவ்வுலக ஞானப்படி மிகுந்த புத்திமானாக அறியப்பட்டிருந்தார். பிரபலமான ஒரு நாத்திகனாக இருந்தபோதும், குறிப்பிடும்படியான தகுதியும், மத விஷயங்களைத் தவிர மற்ற காரியங்களில் தெளிந்த அறிவும் நல்ல ஞானம் உடையவராய் இருந்தார். ஆனால் தேவவார்த்தையும் கர்த்தருடைய ஆவியும் போதித்து, வழி நடத்தாத வரையிலும் எந்த மனிதனுடைய தீர்ப்பும் சரியானது அல்ல. ஒரு வழக்கறிஞரான திரு. இங்கர்சால் அவர்களின் ஆலோசனைகள் மிகவும் உயர்வாய் மதிக்கப்பட்டன. 30 நிமிடம் அவரிடம் கலந்தாலோசிக்க அவர் 2000 டாலர்கள் பெறுவது யாவருக்கும் தெரிந்ததே. இந்த குழப்பமான காலத்தின் மாபெரும் பிரச்னைகளை தீர்ப்பதற்கு இந்த சுறுசுறுப்பான மூளையும் கூட பணிக்கு அமர்த்தப்பட்டது; அப்படியிருந்தும் அவராலும் கூட எந்த பரிகாரத்தையும் ஆலோசனையாக அளிக்க முடியவில்லை. 'ட்வென்டியத் சென்ச்சுரி' என்ற பத்திரிக்கையில் இந்த பிரச்னைகள் குறித்ததான தனது கருத்தை மிகவும் நீளமானதொரு கட்டுரையாக அளித்திருந்தார். அதைச் சுருக்கமாக உங்களுக்குத் தருகிறோம். அவர் கூறுவதாவது:

"கண்டுபிடிப்புகள் போட்டியாளர்களை உலகமுழுவதும் நிரப்பிவிட்டது. தொழிலாளிகளை மட்டுமல்ல அதிலும் மிக உயர்ந்த வேலைத்திறன் படைத்த இயந்திரத் தொழிலாளிகளையும் நிரப்பிவிட்டது. பெரும்பாலான இடங்களில் இந்நாட்களில் சாதாரண ஒரு தொழிலாளி ஒரு பல் சக்கரத்தின் ஒரு பல்லாக இருக்கிறான். சோர்வில்லாமல் அவன் வேலை செய்கிறான், அந்த மாபெரும் அரக்கன் (இயந்திரம்) நின்று போனால் இந்த மனிதன் வேலையிழக்கிறான் - உணவின்றி நிற்கிறான். அவன் எதையும் சேமித்து வைக்கவில்லை. இவன் போஷித்துக் கொண்டிருந்த அந்த இயந்திரம் இவனை போஷித்துக் கொண்டிருக்கவில்லை - கண்டுபிடிப்புகள் இவனது நன்மைகளுக்காக அல்ல. ஒருசமயம் ஒரு மனிதன் சொல்வதை நான் கேட்டேன் - ஆயிரக்கணக்கான திறமைமிக்க இயந்திர பணியாளருக்கு வேலை கிடைப்பதென்பதே பெரும்பாலும் இயலாத காரியமாகிவிட்டது. எனவே அவனது யோசனையின்படி ஜனங்களுக்கு வேலை வாய்ப்பினை நிச்சயமாய் அரசாங்கமே அளிக்கவேண்டும். ஒரு சில நிமிடங்களுக்கு பிறகு வேறொருவர் சொல்வதை நான் கேட்டேன் - அந்த மனிதர் துணிகளை வெட்டுவதற்கான இயந்திரம் ஒன்றை விற்றுக்கொண்டிருந்தான். இப்படிப்பட்டதான இயந்திரம் ஒன்று 20 தையற்காரரின் வேலையை செய்யக்கூடும். இரண்டு வாரங்களுக்கு முன்புதான் நியூயார்க்கில் இருக்கும் ஒரு பெரிய கடைக்கு இவ்வித இயந்திரங்கள் இரண்டை விற்றிருக்கிறான். ஆகவே 40 தையற்காரர் வெளியேற்றப்பட்டனர். இப்படிப்பட்ட இவனது பிரத்தியேகமான இயந்திரத்தை வாங்க முதலீட்டாளர்கள் முன் வருகின்றனர். வேலையாட்களைப் பார்த்து அவர்கள் சிக்கனமாய் இருக்கவேண்டும் என்று கூறுகிறார். ஆனால் தற்கால சூழ்நிலையில் சிக்கனம் என்பது, வெறும் கூ-யை மட்டுப்படுத்துகிறதாய் இருக்கிறது. தேவை மற்றும் விநியோகம் என்ற மாபெரும் சட்டத்தின் கீழ், சேமிக்கும், சிக்கனப்படுத்தும், சுயத்தை வெறுக்கும் தொழிலாளி - அவனை அறியாமலேயே தனக்கும் தன் உடனாளிகளுக்கும் கிடைக்கக்கூடிய வருமானத்தை குறைப்பதற்கான வழிகளை முடிந்த அளவிற்கு செய்கிறான். ஊதியங்கள் போதுமான அளவுக்கு அதிகமாய் இருக்கிறது என்பதற்கு சேமிக்கும் இந்த இயந்திர பணியாளர் ஒரு சான்றிதழாக இருக்கிறார்.

"முதலீடானது இணையும் உரிமைக்காக எப்போதுமே போராடியுள்ளது, இன்னும் போராடிக்கொண்டு தான் இருக்கிறது. தேவை மற்றும் விநியோகத்தின் சிறப்பான சட்டங்கள் இருந்தும் கூட தயாரிப்பாளர்கள் கூடி விலைகளை நிர்ணயம் செய்கின்றனர்.

உழைப்பாளிகளும் அதேவிதமாய் கூடி, விவாதிப்பதற்கு உரிமை உண்டா? பணக்காரர்கள் வங்கிகளிலும், கேளிக்கை கூடங்களிலும், மதுபான கடைகளிலும் சந்தித்துக் கொள்வர். தொழிலாளிகள் கூடும் போதோ தெருவில் ஒன்று சேர்கிறார்கள். சமூகத்தின் எல்லா அமைப்புகளும் இவர்களுக்கு எதிராயிருக்கின்றன. மூலதனக்காரர்களிடம் தான் படைகளும், கப்பற்படையும், சட்டங்களும் நீதி மற்றும் மேலதிகாரிகளின் இலாக்காக்களும் இருக்கின்றன. பணக்காரர் ஒன்று சேரும்போது அது 'சிந்தனைகளை பரிமாறிக் கொள்ளும்' காரணமாகும், ஏழைகள் ஒன்று சேரும்போது அது 'சதி ஆலோசனை' ஆகும். இவர்கள் ஒருமைபட்டு செயல்படுவார்களேயாகில், உண்மையில் இவர்கள் எதையாவது செய்வார்களேயாகில் - அது ஒரு 'கும்பல்.' இவர்கள் தங்களை தற்காத்துக்கொள்வார்களேயாகில் அது 'துரோகம்.' அரசாங்கத்தின் இலாக்காக்களை செல்வந்தர்கள் கட்டுப்படுத்துவது என்பது எப்படி? நேர்மையும், தைரியமும் சேர்ந்த உரிமைக்கான போரின் போது, கந்தை துணிகள் கொடிகளாக மாறவும் யாசகரும் கூட புரட்சியாளராக மாறவும் சந்தர்ப்பங்கள் உண்டு.

"மனிதனுக்கும் இயந்திரத்துக்கும் இடையிலான சமமற்ற போட்டியினை நாம் எப்படி சரிப்படுத்தமுடியும்? கடைசியில் இயந்திரங்கள் தொழிலாளிகளுடன் பங்குதாரராகிவிடுமா? இயற்கையின் இந்த சக்திகள், துன்பப்படும் இயற்கையின் பிள்ளைகளுடைய நன்மைக்காக கட்டுப்படுத்தப்படுமா? ஆடம்பரம் என்பது புத்திக் கூர்மையுடன் இணைந்து நடைபோடுமா? பணியாளர்கள் இயந்திரங்களின் உரிமையாளர்களாக மாறும் அளவிற்கு போதுமான புத்தி கூர்மையும் வ-மையும் பெற இயலுமா? உதாரத்துவமுடனும் நீதியுடனும் இருக்க போதுமான அறிவுடையவனாய் மனிதன் மாறமுடியுமா; மிருக மற்றும் தாவர உலகத்தை கட்டுப்படுத்தும் அதே சட்டம் தான் மனிதனையும் கட்டுப்படுத்துகிறதா? நரமாமிசத்தை உண்ணும் காலக்கட்டத்தில் பெலவீனரை பெலவான்கள் பட்சித்தனர் - உண்மையில் அவர்களது மாமிசத்தை உண்டனர். மனிதனால் எல்லாச் சட்டத்திட்டங்களும் உண்டாக்கப்பட்டும், விஞ்ஞானத்தில் எல்லா முன்னேற்றமும் கண்டபோதும், இன்னும் கூட பெலவீனர்,



துர்பாக்கியசா-, அறிவீனர் ஆகியவர்களின் மீது வ-மையானவர், இதயமற்றவர் அதிகாரம் செலுத்துகின்றனர். நாகரீக வளர்ச்சியடைந்த வாழ்வின் - தோல்விகள், எதிர்பார்ப்புகள், கண்ணீர், உதிர்ந்து போன நம்பிக்கைகள், கசப்பாக உண்மைகள், பசி, சட்ட ரீதியான குற்றங்கள், அவமரியாதை, அவமானம் ஆகிய கடும்துயரை நான் கருத்தில் கொண்டால், 'நரமாமிச முறையே' மிகுந்த இரக்கமுடைய வழியாக இருக்கும் என்று கூறும்படி உந்தப்படுகிறேன். ஏனெனில் மனிதன் காலகாலமாய் தன் உடன் மனிதனின் மீதே வாழ்ந்து வருகிறான்.

"உலகம் தற்போதிருக்கும் நிலையில் நல்ல உள்ளம் படைத்த ஒரு மனிதனால் திருப்தியோடு வாழ முடியாது. அவனது உடன் மனிதர்கள் கோடிக்கணக்கானோர் பரிதாபத்திலும், தேவையிலும் வாழுகிறார்கள் என்று அறியும்போது தனக்குரியது என்று அறிந்து, தானே சம்பாதித்தாலும் கூட எந்த மனிதனும் உண்மையில் சந்தோஷமாய் இருக்க இயலாது. பஞ்சத்தில் இருப்பவரை நாம் நினைக்கும் போது நாம் உண்பது, இதயமே இல்லாததற்கு சமம் என்று உணர்கிறோம். கந்தையையும், கடும் குளிர் நடுக்கத்தையும் போக்காதபோது இதமான நல்ல உடைகள் உடுத்துவது ஒருவரை பெரும்பாலும் வெட்கப்படுத்தும். அவரது உடலைப் போலவே தனது இதயமும் அப்படி குளிராயிருப்பதை அவன் உணர்வான்.

"இதற்கு எந்த மாறுதலும் இருக்கக்கூடாதா? தேவை மற்றும் விநியோகத்தின் நியதிகள், கண்டு பிடிப்புகளும் விஞ்ஞானமும், வியாபார ஜாம்பவான்களும், போட்டியும், முதலீடும் சட்டமுறைகளும் இவையாவும் பாடுபட்டு உழைக்கிறவர்களது எதிரிகளாகத்தான் இருக்ககூடுமா? உழைப்பாளிகள் கூடுமான மட்டும் பிரயோஜன மற்றவர்களுக்காக தங்களது வருமானத்தை கொடுப்பதற்கு போதுமான அறிவீனர்களாக இருப்பார்களா? மற்ற பணியாளர்களுடைய மகன்களை கொல்வதற்கு லட்சக்கணக்கான போர் வீரர்களை அவர்கள் ஆதரிப்பார்களா? கோயில்களை அவர்கள் கட்டிவிட்டு தாங்கள் மட்டும் குகைகளிலும் குடிசைகளிலுமே எப்போதும் வாழ்வார்களா? தங்களுடைய இரத்தத்தின் மீதே சார்ந்து வாழும்படி ஒட்டுண்ணிகளையும், இரத்தவெறி பிடித்தவர்களையும் என்றைக்கும் அனுமதித்துக்கொண்டிருப்பார்களா? தாங்கள்

காப்பாற்றுகின்ற பிச்சைக்காரருக்கு அடிமைகளாகவே இருந்து விடுவார்களா? ஜெயம் பெறும் ஏமாற்றுக்காரருக்குத் தலை வணங்குவதை உத்தமமான மனுஷர் நிறுத்திக் கொள்வார்களா? முடிசூட்டப்பட்ட சோம்பேரிதனத்துக்கு முன்னால் தொழிற்சாலைகள், என்றுமே முழங்கால்படியிட்டுக் கொண்டிருக்குமா? பிச்சைக்காரர்கள் தாயாளமனதுடன் இருக்கமுடியாது என்றும், ஆரோக்கியத்துடன் இருக்கும் ஒவ்வொரு மனிதனும் வாழ்வதற்கான உரிமையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் அவர்கள் புரிந்துகொள்வார்களா? முடிவாக எந்த ஒரு மனிதனும் பிறமனிதருடன் ஒப்பிடும் போது சமமான உரிமைகளை பெற்றிருக்கும் சமயத்தில் குறைபட்டுக்கொள்வதற்கு உரிமை கிடையாது என்று கூறுவார்களா? அல்லது தங்களை நசுக்குகின்றவர்கள் செய்வதைக் கண்டு அதே விதமான உதாரணத்தை அவர்களும் பின்பற்றுவார்களா? ஜெயங்கொள்ளுவதற்கான சக்தி, தனக்குபின் இருப்பவைகளை குறித்து சிந்தித்திருக்கவேண்டும், அதோடு தொடர்ந்து நீடிக்கும் பொருட்டு எதையும் செய்வதாக இருப்பின் அது நீதியின் மூலைக்கல்-ன் மீதே ஆதாரப்பட்டிருக்கவேண்டும் என்பதையும் அவர்கள் கற்றுக்கொள்வார்களா?”

இங்கு வாதத்துக்காக முன் வைக்கப்பட்டிருப்பது அற்பமானதும், பெலனற்றதும், நம்பிக்கையற்றதும், ஆலோசனையற்றதுமாய் இருக்கிறது; அதோடு ஞானமுள்ள ஒருவனிடத்திலும், தர்க்கரீதியான ஒருவனிடத்திலும் இருந்து வருகின்றவைகளைப் பார்க்கும்போது உலகஞானமுள்ளவர்கள் பேராபத்தை மட்டுமே பார்க்கின்றனர், ஆனால் தீர்வு எதையும் காணமுடியவில்லை. கற்றறிந்த பண்பாளர்கள் பிரச்சனைக்கான காரணத்தை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றனர், அதோடு அவர்கள் தவிர்க்கமுடியாத சூழ-னால் தொழிலாளருக்கு கூறுகின்றனர். “அவைகள் (கண்டுபிடிப்புகள், அறிவியல், போட்டி முதலானவை) உங்களை சூழ்ந்துகொண்டு, கீழே தள்ளி உங்களை காயப்படுத்த விடாதீர்கள்!” ஆனால் விடுதலைக்கான காரியம் எதையும் அவன் யோசனையாக அளிக்கவில்லை, “தொழிலாளிகள் இயந்திரங்களின் உரிமையாளராகும் அளவிற்கு போதுமான அறிவாளியாகவும், பலவானாகவும் மாறமுடியுமா?” என்ற



கேள்வியை கேட்பதைத் தவிர வேறு ஏதும் செய்யவில்லை.

ஆனால் ஒருவேளை தொழிலாளிகளுக்கு இயந்திரங்களும் அவைகளை இயக்கப் போதுமான அளவிற்கு மூலதனமும் இருக்குமேயாகில், மற்றவர்களைக் காட்டிலும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளையும், இயந்திரங்களையும் இதைக் காட்டிலும் வெற்றிகரமாய் செயல்படுத்தக்கூடுமா? லாபத்துக்காக அன்றி தயாள குணத்தினராய் இருந்து வெற்றிகரமாய் தொடர்ந்து செயல்பட இவர்களால் கூடுமா? “அதிகப்படியான உற்பத்தியை” எட்டும் அளவிற்கு தங்களது பங்குகள் பெருகும்படி இவர்கள் செய்யமாட்டர்களா, இதனால் “கதவடைப்புகள்” நடத்தப்பட்டு தாங்களும், தங்களுடனான பிற உழைப்பாளிகளும் வேலையற்ற நிலைமைக்கு உள்ளாக்கப்பட மாட்டார்களா? எந்த ஒரு ஆலையோ அல்லது கடையோ, அதன் எல்லா ஊழியருக்கும் சம அளவு ஊதியம் என்ற அடிப்படையின் கீழ் இயங்குமாயின் - அதிகப்படியான ஊதியத்தை கொடுத்ததின் நிமித்தம் அந்த தொழில் வெகுவிரைவில் திவாலாகி விடும், அல்லது மற்றவரைப் பார்க்கிலும் அதிக வேலைத்திறன் உள்ளவர்கள், இதற்கும் அதிகமான ஊதியம் கொடுக்கப்பட்டு பிற இடங்களுக்கு கவர்ந்திழுக்கப்படலாம். அல்லது தங்களுடைய தனிப்பட்ட வருமானத்தை பெருக்க சுயமாய் செயல்படுவார்களே என்பதெல்லாம் நாம் அறியாததா? ஒரே வார்த்தையில் சொல்வோமேயானால், சுய விருப்பம், சுயநலம் ஆகியவை வீழ்ந்துபோன மனுகுலத்தின் சுபாவத்தில் மிக ஆழமாய் பதிந்து விட்டிருக்கிறது. அதோடு பெரும்பாலும் இதை ஒரு பொருட்டாக கருதாத எவரும் தன் தவறை மிக விரைவாக கற்றுக்கொள்ளும் வகையில், தற்போதைய சமூக அமைப்பின் ஒரு பகுதியாக ஆகியிருக்கிறது.

கடைசியாக சொல்லப்பட்ட வார்த்தை மிகவும் மென்மையாய் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போதைய அவசரத்துக்கு பயனற்ற ஒன்றாய் இருக்கிறது. இது கண்ணாடி கூடின் முட்டையைப் போல் இருக்கிறது. அதை உடைத்து உண்பதற்கு பிரயத்தனம் செய்யும்வரை அது தீர்வு எதையும் கொடுக்காது. “வெற்றி பெறுவதற்கான இப்படிப்பட்ட ஒரு சக்தியினை இவர்கள் (உழைப்பாளிகள்) கற்றுக்கொள்ளவார்களா? அதற்கு

பின்னானவைகளை சிந்தித்திருக்கவேண்டும்; அப்படிப்பட்ட அறிவு நல்ல தரமானதாகவும் நல்ல அமைப்புடையதாகவும் இருக்கவேண்டும். மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான போரில் ஒருவேளை எல்லாருக்கும் சமஅளவு ஆற்றலும் வ-மையும் இருக்குமாயின் ஒவ்வொருவருக்கும் உரிய உரிமைகள் மற்றும் விருப்பங்களுக்கு உட்பட்டதான அதிவிரைவாக தற்கா-க சமாதானம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் அல்லது கூடுமான அளவு சண்டையானது இதைவிட முன்னதாகவும், கடுமையாகவும் வந்திருக்கக் கூடும். ஆனால் பூமிக்குரிய சக்தி எதுவுமே இப்படிப்பட்ட சமமான மன பலத்தை ஏற்படுத்த முடியாது என்பது திரு.இங்கர்சாலைக் காட்டிலும் அதிகமாக யாருக்கும் தெரியாது.

இந்த நான்காவது பாராவில் கூறப்பட்டிருக்கும் காரியம் இந்த மாமனிதருக்கு பெரும் மதிப்பை கூட்டுகிறது. ஒவ்வொரு உத்தமமான மனிதருக்கும் இந்த காரியம் ஒரு எதிரொ-யை காண்கிறது. இப்படிப்பட்டவர்கள் அநேகராக இருக்கிறார்கள் என்று நாம் நம்புகிறோம். ஆனால் நயாகரா நீர்வீழ்ச்சியின் முன் தாங்கள் அனைவரும் தங்களுடைய சரீரங்களை எறிந்து அதன் ஓட்டத்தை தடைசெய்ய முயற்சி செய்வதைப்போல் - தங்களுடைய பணத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி - விழுந்து போன மனித சுபாவத்தின் ஓட்டத்தில் அடித்துச் செல்லும் சமூக போக்கினை தடுக்கவோ, மாற்றவோ தாங்கள் அவ்வளவு வ-யையானவர்கள் அல்ல என்பதை வேறுசில நாகரீக சூழ-ல் இருப்பவரும் திரு. இங்கர்சாலைப் போல் செல்வம் படைத்தவர்களும் எவ்வித சந்தேகமும் இன்றி முடிவு செய்கின்றனர். இந்த இரண்டிலுமே ஒரு கண நேர சிந்தனையும், குழப்பமும் தோன்றுகிறது.

### தொழிலாளர் சட்டம் குறித்து
### உயர்திரு. ஜெ.எல். தாமஸ் அவர்களின் கருத்து

செல்வந்தருக்கு சாதகமாகவும் ஏழைகளுக்கு பாதகமாவும் சட்டம் இருப்பதால் தொழிலாளர் பாரபட்சமாய் நடத்தப்படுவதாக அடிக்கடி குரல் எழுப்பப்படுகிறது; இதற்கு நேர்மாறான காரியம் ஒன்றே சர்வநிவாரண பரிகாரமாக இருக்கக்கூடும் இதற்கு மேலும்



உண்மை இருக்கமுடியாது, முன்னாள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் துணை பொது வழக்கறிஞர் தாமஸ் அவர்கள் 'தி நியூயார்க் ட்ரிப்யூன்' (New york Tribune) என்ற பத்திரிக்கையில் அக். 17 1896ல் அமெரிக்க ஐக்கிய நாட்டு தொழிலாளர் சட்டம் குறித்து வெளியிட்டதை கீழேக் கொடுக்கிறோம் :

"ஏழைகள் உழைப்பாளி வர்க்கத்தினரின் முன்னேற்ற நிலைமையை குறித்த கடந்த 50 வருட சட்டத்தின் சரித்திரத்தை எழுதினால் அநேக தொகுப்புகள் தேவைப்படும், ஆனால் அதனை கீழ் கண்ட விதத்தில் சுருக்கி கூற முடியும் :

"கடனுக்காக சிறையிலடைப்பது ஒழிக்கப்பட்டது.

"சுற்றுக்கட்டு வீடுகளுக்கு விலக்கு அளிப்பதற்கும், கடன் பட்டவரது விதவை மனைவி மற்றும் திக்கற்றவர்களது திரளான தனிப்பட்ட சொத்துக்களுக்கு ஜப்தி செய்வதி-ருந்து விலக்கு அளித்து சட்டங்கள் இயற்றப்பட்டன.

"மெக்கானிக் மற்றும் தொழிலாளர்களுக்கு அவர்களது உழைப்பிற்கு ஊதியமாக கொடுக்கப்பட்ட நிலத்தின் மீதோ அல்லது பொருளின் மீதோ சட்டப்படி அவர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டது.

"மாநில அல்லது தேசிய நீதிமன்றங்களில் ஏழைமக்கள் வழக்குத் தொடருவதற்கு கோர்ட் கட்டணம் கட்டவேண்டிதில்லை அல்லது அதன் மதிப்பிற்குரிய உத்தரவாதத்தை அளிக்கவேண்டியதில்லை.

"ஏழை மக்களுக்காக கிரிமினல் நீதிமன்றங்களிலும், சில குறிப்பிட்ட வழக்குகளுக்காக சிவில் நீதிமன்றங்களிலும் எவ்வித கட்டணத்தையும் பெறாமல் அவர்களுக்காக வாதிட வழக்கறிஞர்களை மாநில மற்றும் தேசிய நீதிமன்றங்கள் பணிக்கு அமர்த்தியுள்ளன.

"தன்னுடைய உழைப்பின் ஊதியத்தை திரும்பப் பெறும்படியோ அல்லது தனக்காய் வாதிட்ட வழக்கறிஞருக்கு செலுத்தவேண்டிய கட்டணத்தை பெறுவதில் தனக்குள்ள உரிமையை அமுல்படுத்திக்கொள்ள எந்த ஒரு கம்பெனிக்கும் எதிராய் வழக்கு தொடரும் தொழிலாளிக்கு சாதகமாய் தீர்ப்பு

சொல்வதற்கு முனையும்படி அநேக சந்தர்ப்பங்களில் நீதிமன்றங்கள் உத்தரவிடுகின்றன.

“பொதுச் சேவை அல்லது பொது வேலைகளுக்கான ஒரு நாள் வேலை நேரம் 7 மணி, சில சமயங்களில் 8 அல்லது 9 மணி என்று சட்டம் உத்தரவிடுகிறது.

“திவாலாகிப்போன பண்ணைகளில் பணியாளரின் கூ-க்கு முன்உரிமை கொடுக்கப்படுகிறது. மேலும் சில சந்தர்ப்பங்களில் கூ-யானது பொதுவாகவே முதல் உரிமையாக்கப்பட்டிருக்கிறது.

“இரயில் பிரயாணிகள் மற்றும் சரக்கு கட்டணங்களையும், அதோடு மற்ற போக்குவரத்துகளையும் ஒழுங்குபடுத்தவும், பொது சேமிப்பு கிடங்குகள் மற்றும் தூக்கும் இயந்திரங்களுக்கான சட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இரயில் போக்குவரத்தை மேற்பார்வையிட தேசிய, மாநில அளவிலான குழுக்கள் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் கட்டணங்கள் 2/3பாகம் அல்லது அதற்கும் மேலாய் குறைக்கப்பட்டிருக்கிறது,

“ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலும் வட்டி விகிதத்தை குறைக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் டிரஸ்ட்டுகளின் அடமானம் அல்லது பத்திரம் போன்றவற்றை மீட்டுக் கொள்வதற்கு காலவரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

“ரயில்வே பாதையின் வழிகள் வே-யிடப்படவேண்டும் அல்லது அப்படி வே-யிடப்படாததினால் ஏற்படும் சேதங்களுக்கு இரட்டிப்பாய் அபராதம் செலுத்தவேண்டும்; அதோடு தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான இடமும், உபகரணங்களும் அளிப்பது கட்டாயமாக்கப்பட்டது.

“தயாரிப்பாளர்கள் மற்றும் சுரங்க தொழிலதிபர்கள் தங்களுடைய பணியாளரின் பாதுகாப்பு மற்றும் சௌகரியத்துக்கு ஏற்ற இடமும் இயந்திரங்களும் அளிக்கும்படி கட்டாயமாக்கப்பட்டது.

“தொழிலாளர் சங்கங்களின் ஒருங்கிணைப்புகள் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டன.

“தொழிலாளர் தினம் தேசிய விடுமுறையாக்கப்பட்டது.

“மாநில மற்றும் தேசிய அளவில் ‘தொழிலாளருக்குக்கான ஆணையர்கள்’ நியமிக்கப்பட்டு, அவர்கள் மூலம் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அதிநிமித்தம் உழைக்கும் வர்க்கத்தாரின் நிலைமை கூடுமான மட்டும் உயர்த்தப்பட்டது.



“விவசாயத்துறை ஏற்படுத்தப்பட்டது, அதோடு அதனுடைய தலைவர் கேபினெட் அதிகாரியாக்கப்பட்டார்.

“150,000 டாலர் மதிப்புள்ள விதைகள் வருடந்தோரும் மக்களுக்கு இலவசமாய் விநியோகிக்கப்படுகிறது.

“அநேகமான மாநிலங்களில் சிறுகுற்றங்களை கண்டறியும் மையம் அமைக்கப்பட்டு, அதன்மூலம் வேலையி-ருந்து விலக்கப்பட்டுவிட்ட அல்லது தனது கடனை செலுத்துவதற்கு தவறிய எளியவர் யாவரையும் பட்டிய-டப்பட்டது, அவ்விதம் சிறுசிறு குற்றம்புரிபவரை தபால் கடிதம் மூலம் மிரட்டவும், கடிதங்கள் மூலம் கடன்பட்டவன் மீது வழக்கு தொடுக்கவும், அல்லது வேறு வழிகளில் அவன் மீது பாதிப்பை உண்டுபண்ணவும் செய்தது.

“விவேகமற்றவர், அஜாக்கிரதையானவர்களை பாதுகாக்கும் பொருட்டு, இந்த தபால்முறை சாதனத்தின் மூலம் மோசடி அல்லது லாட்டரி திட்டங்களை செயல்படுத்த முயல்பவருக்கு இந்த தபால்முறை மறுக்கப்பட்டது.

“தபால் கட்டணங்கள் வெகுவாய் குறைக்கப்பட்டன. இலவச தபால் மூலம் தேசத்தின் செய்தித்தாள், மற்றும் மிகச் சிறந்த மாதப்பத்திரிக்கைகள், வாராந்திர வெளியீடுகள் விலை குறைக்கப்பட்டு, ஏழைகளின் கரங்களை சென்றடையும்படி செய்யப்பட்டது. இதனால் அரசாங்கத்துக்கு வருடந்தோறும் 8,00,000 டாலர் நஷ்டம் ஏற்பட்டது.

“ஆயுள் காப்பீடு பா-சிகள் மற்றும் கட்டிடம் கட்டுதல் மற்றும் கடன்கொடுக்கும் சங்கங்களின் பங்குகள் யாவும் ஒரு குறிப்பிட்ட காலவரைக்குப்பின் கட்டப்படும் பிரிமியம் அல்லது தவணைக்களுக்கு அபராதம் போடுவது தடைசெய்யப்பட்டது.

“மாநில மற்றும் தேசிய வங்கிகள் பொதுமேற்பார்வைக்கு உட்பட்டதாகவும் அவைகளின் கணக்கு வழக்குகள் பொது பரிசோதனைக்கு உட்பட்டதாகவும் இருக்கிறது.

"அரசாங்க வேலையில் இருப்பவர்களுக்கு சில காரணங்களுக்கு சம்பளத்துடன் கூடிய 30 நாள் விடுமுறையும், வேறு சில சந்தர்ப்பங்களில் 15 நாட்களும், அதோடு கூட அவரது அல்லது குடும்பத்தினரின் சுகவீன சமயத்தில் 30 நாட்கள் கூடுதல் விடுமுறையும் அனுமதிக்கப்பட்டது.

"கூ-ப்பணியாளர் முறை ஒப்பந்தத்தின் கீழ் இறக்குமதி செய்யும் தொழிலாளிகள், அமெரிக்க ஐக்கிய நாட்டின் குற்றவாளி தொழிலாளர் மற்றும் சீனாவி-ருந்து இனிமேல் குடிபெயர்ந்து வருபவர்கள், குற்றவாளி தொழிலாளரின் உற்பத்தி பொருட்களின் இறக்குமதிகள், மற்றும் சேவகர் முறை ஆகியவை சட்டத்தால் தடை செய்யப்பட்டன.

"மாநில மற்றும் தேசிய அளவில் தொழிலாளரது சச்சரவுகளை தீர்த்துவைப்பதற்கென 'மத்தியஸ்தக் குழுக்கள்' உருவாக்கப்பட்டன.

"அரசாங்கப் பணியில் இருக்கும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட தேசிய விடுமுறை நாட்களுக்கான சம்பளம் அனுமதிக்கப்பட்டது. ஜனவரி முதல் தேதி, பிப்ரவரி 22ம் தேதி, டெக்கரேஷன் நாள், ஜூலை 4ம் நாள், உழைப்பாளர் தினம், நன்றியறிதல் நாள் மற்றும் டிசம்பர் 25ம் நாள்.

"சுற்றுக்கட்டு வீடுகளுக்குச் சென்று தங்கி வாழ விருப்பமுடையவர்களுக்கு அவ்வீடு அளிக்கப்பட்டது, நிலத்தில் பயிர் செய்து மரம் வளர்ப்பவர்களுக்கு நிலம் அளிக்கப்பட்டது.

"எந்தவித இடையூறின்றி, அச்சமின்றி ஓட்டுப்போட மக்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கென்று 'ஆஸ்திரே-ய ஓட்டுபெட்டி, மற்றும் பிற சட்டங்கள் அமல்படுத்தப்பட்டன.

"நான்கு மில்-யன் அடிமைகள் விடுதலை செய்யப்பட்டனர், இதினிமித்தம் நூறாயிரம் சொத்து - உரிமைக்காரர் தரித்திரர் ஆயினர்.

"பொது நூலகங்கள் நிறுவப்பட்டன.

"வியாதியஸ்தர் மற்றும் ஏழைகளை கவனித்துக் கொள்வதற்கான பொது மருத்துவமனைகள் கட்டப்பட்டன.

"நமது போர் வீரர்கள், விதவைகள், மற்றும் திக்கற்றவருக்காக அரசாங்க கருவூலத்தி-ருந்து 140 மில்-யன் டாலர் வருடந்தோறும் செலவிடப்பட்டது.



"கடைசியாக ஆனால் குறைவில்லாமல், அரசாங்க கல்விக் கூடங்கள் நிறுவப்பட்டன. அதிலுள்ள மாணவர்களின் படிப்புக்காக மட்டுமே 160,000,000க்கும் அதிகமான டாலர் வருடந்தோறும் செலவிடப்படுகிறது, அத்துடன் கட்டடங்கள், கடனுக்கான வட்டி, மற்றும் இதர செலவுகள் சுமார் 40,000,000 டாலர் அல்லது அதற்கும் மேலேயே ஆகலாம்.

"காங்கிரஸ் மற்றும் பல்வேறு மாநில சட்டசபைகளில் சட்டங்கள் இயற்றப்பட்டு, நகராட்சி கழகங்கள், தனியார் மற்றும் கூட்டு வியாபாரங்கள் ஆகியவற்றின் எஜமானர்களுக்கும் இடையிலான உறவுகுறித்த மிகத்துல்-யமான விவரங்களில் கவனம் செலுத்தப்பட்டன.

"பணக்காரர் மற்றும் ஏழைகளின் நன்மையைக் கருதி, இந்த எல்லா சட்டங்களும் செயல்படுத்தபட்டன. உண்மையில், இந்நாட்டின் சரித்திரத்தில் கடந்த கால் நூற்றாண்டுகளில் பொதுமக்களின் உயர்வுக்காகவும், கல்வி மற்றும், நன்மைகளுக்கான சட்டத்தை கூடுமானவரை அமுலாக்குவதற்கு எல்லா வகுப்பின் ஆண்களும், பெண்களும் ஒரே விதமாய் அதிகபட்சமாக தங்கள் சக்தியை பயன்படுத்தினது தெரிகிறது. மேலும் இப்படிப்பட்ட நிலை தொடருமானால் அது சோஷ-ச அரசாட்சியில் போய் முடியும் என்று சிந்தனை உள்ள மனிதர் அச்சப்படும் அளவிற்கு இந்தக் காரியங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. இந்த ஒரு திசையை நோக்கியே அநேக காலமாக மக்களிடையேயான பொதுவான கருத்து இருந்திருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை."

இப்படியாக செய்யக்கூடிய யாவையும் சட்டத்தின் உதவியால் செய்யப்பட்டிருந்தும் ஏன் அமைதியின்மை இன்னமும் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆகையால் அதே திசையில் இதற்கொரு விமோசனத்தை எதிர்பார்ப்பது நம்பிக்கையற்றது என்பது தெளிவாகிறது. இது கட்டுப்படுத்தமுடியாத போராட்டம் என்ற முடிவுக்கே வரவேண்டிய கட்டாயத்தில் திரு. தாமஸ் அவர்கள் இருப்பது தெளிவாகிறது.

கனவானும், திறமைசா-யுமானவர்களின் வார்த்தைகளைக் கவனிக்கவும் :

## வென்டெல் பி-ப்ஸ், அவர்களின் கருத்து

“சமுதாயத்தின் மேல்தட்டு வகுப்பினரிடமிருந்து நீதிநெறி மற்றும் அறிவுபூர்வமான சீர்திருத்தம் என்பது எப்போதுமே வராது. வருகின்ற எல்லாமே எதிர்ப்பவரின் தியாகத்தாலும் ப-யாலும் வருவதே. உழைக்கும் மக்களின் அடிமைத்தன விடுதலையென்பது உழைக்கும் மக்களாலேயே தான் முயன்று பெறப்படவேண்டும்.”

மிகவும் உண்மையான மிகவும் ஞானமான வார்த்தை. ஆனால் திரு. பி-ப்ஸ் அவர்கள் ‘தேவை மற்றும் வினியோகத்தின் விதி’யின் சுயநலமான கோட்பாட்டி-ருந்து உழைக்கும் மக்கள் விடுதலையாவதற்குரிய நடைமுறைக்கு ஏற்ற ஆலோசனை எதையும் கொடுக்கவில்லை. தேவை மற்றும் விநியோக விதி புவியீர்ப்பு சக்தி கோட்பாட்டிற்கு இணங்காத ஒன்றாக இருக்கிறது. எதை சிபாரிசு செய்வது என்று அவருக்கு தெரியவில்லை. சீர்திருத்தம் என்பது, யாவரும் அறிந்தவண்ணம், அது உள்ளுக்குள் தாற்கா-க மாற்றத்தை செயல்படுத்தவும், அநுகூலமானதாயும் இருக்க வேண்டும். அப்படியில்லாவிடில், உலகளாவிய நிலைக்கும் போட்டிக்கும் எதிராக இந்த புரட்சி எண்ணத்தை என்ன செய்யக்கூடும்? எழும்பும் சமுத்திர அலைகளுக்கு எதிராக நம்மால் கலகம் செய்ய முடியுமா? அல்லது அதை துடைப்பத்தால் பெருக்கி பின்னுக்குத் தள்ளிவிட முடியுமா? அல்லது அதன் திரட்சியை பீப்பாய்களில் சேகரிக்க முடியுமா?

## மேக்குலேயின் (Macaulay) முன்னறிவிப்பு

திரு. மேக்குலே, மாபெரும் ஆங்கில சரித்திர ஆசிரியரானவர் 1857ல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருக்கும் தன் நண்பருக்கு எழுதிய ஒரு கடிதத்தின் சாராம்சத்தை கீழ்க்கண்ட விதத்தில் ‘தி பாரிஸ் ஃபிகாரோ’ கோடிட்டுக் காட்டுகிறது :

“துன்பத்திலும், கோபத்திலும் இருக்கும் பெரும் பான்மையோரைக் கட்டுப்படுத்துவது என்பது உங்களது அரசாங்கத்தால் என்றுமே செய்ய முடியாத ஒன்று என்பது பகல் வெளிச்சத்தைப் போல் மிகவும் தெளிவாக இருக்கிறது, ஏனெனில் உங்கள் தேசமானது பெருங்கூட்டத்தினரின் கையில் இருக்கிறது - பணக்காரரான சிறுபான்மையானவர்களின் இரக்கத்திலேயே பெருங்கூட்டத்தினர் இருக்கின்றனர். பாதி அளவே காலை உணவை உண்டு, பகல் உணவு பாதியாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிற திரளான ஜனங்கள், உங்கள் சட்டமன்றப் பிரதிநிதிகளை தெரிந்தெடுக்கும் நாள் ஒன்று நியூயார்க் மாகாணத்திற்கு வரும். இப்படிப்பட்டதொரு சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பவடுவதில் சந்தேகம் ஏதும் உண்டோ?



“செழுமையை கொடுக்க முடியாத அப்படிப்பட்ட விஷயங்களை நீங்கள் செய்யவேண்டிவரும். அப்பொழுது ஏதோ ஒரு சீசரோ அல்லது நெப்போ-யனோ அரசாங்க ஆளுகையைத் தன் கையில் எடுத்துக்கொள்வார். ரோம பேரரசு 5ம் நூற்றாண்டின் காட்டுமிராண்டிகளால் கொள்ளையடிக்கப்பட்டது போல உங்கள் ஜனநாயக நாடும் கூட 20ம் நூற்றாண்டில் கொள்ளையிடப்பட்டு, சூறையாடப்பட்டு நாசமாகும்; ரோம பேரரசின் நாசக்காரர்கள் வெளிநாடுகளி-ருந்து வந்த ஹன்ஸ் மற்றும் வண்டல்கள் ஆக இருந்தனர்; ஆனால் உங்களுடைய நாசக்காரர்களோ உங்கள் நாட்டின் சொந்த ஜனமாகவும் உங்கள் சொந்த கல்வி நிறுவனங்களில் படித்தவர்களுமாகவே இருப்பார்கள்.”

செல்வந்தரானாலும் ஏழையானலும் விஷய ஞானம் உள்ள மனுஷருக்கு இது சம்பவித்தது இல்லை; பெரும்பான்மையை காரணம்காட்டி சுயநலமின்றி செல்வந்தர் ஆதரிப்பதும், இப்படிப்பட்ட மிகப்பெரிய தயாள குணத்துடனான சட்டங்களை இயற்றி பெரும்பான்மையோர் வாழ்க்கைத் தரத்தை படிப்படியாக உயர்த்துவதும், அதோடு அரை மில்-யனுக்கும் மேலான மதிப்புடைய சொத்தினை எவரும் குவிக்க முடியாதபடி செய்யக்கூடியதும் நடக்கக்கூடியதும் எனவும் ஒருவேளை யோசிக்கலாம். இல்லை, இப்படிப்பட்ட உத்தேசமானது ஏற்றுக்கொள்ள தகுதியற்றது என்று திரு. மேக்குலே அறிந்திருந்தார். ஆகவே தேவனுடைய சாட்சிக்கு ஒத்துப்போகின்ற வகையில் சுயநலத்தின் முடிவானது, மாபெரும் உபத்திரவத்தின் காலம் என்பது அவரது முன்னறிவிப்பு.

அதோடு மட்டுமன்றி, இவர் இவ்வண்ணமாய் எழுதியதி-ருந்து, திரு. மேக்குலேயின் சொந்த நாட்டின் (இங்கிலாந்து) ஜனங்களும் கூட உரிமையை வற்புறுத்திக்கேட்டு பெற்றுக்கொண்டனர்; ஓட்டுரிமை பெல்ஜியர்கள் ஜெர்மெனியர்களாலும் கூட கேட்டு, பெறப்பட்டது; பிரான்சு நாட்டவர் வற்புறுத்திக்கேட்டு வலுக்கட்டாயமாய் எடுத்துக்கொண்டனர். ஆஸ்டிரோ - ஹங்கேரியினரால் கேட்கப்பட்டு வருகிறது. ஆகவே அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கென முன்னறிவிக்கப்பட்ட அந்த ஓட்டுரிமையானது கிறிஸ்தவ ராஜ்யம் முழுவதிலும் வெகு சமீபத்தில் சம்பவிக்கும். மேக்குலேவுக்கு எந்த ஒரு நம்பிக்கையும் தென்படவில்லை; வேறு எந்த ஒரு ஆலோசனையும் சொல்வதற்கில்லை; பணம் படைத்தவரும், செல்வாக்கு மிகுந்தவரும் வலுக்கட்டாயமாய் அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, வெடித்து சிதறிவிடும் நிலைவரைக்கும், கூடுமான மட்டும் பாதுகாப்பு வால்வு (அடைப்பின்) மீது அமர்ந்து கொள்வர் என்பதே அவரது ஆலோசனை.

### திரு. ச்சாவுன்சி (Chauncey) எம். டிப்யூவின் நம்பிக்கைகள்

இன்றைய உலகில் திறமைக்கும் பரந்த சிந்தனைக்கும் பேர்போன மனிதருக்குள் மேன்மை மிகு ச்சாவுன்சி எம். டிப்யூ, L.L.Dயும் ஒருவர்; நல்ல ஞானமுள்ளவர், அடிக்கடி அவர் நல்ல ஆலோசனைகளை வழங்குகிறார்; மேலும் இன்றைய சூழ்நிலையை குறித்த அவரது கண்ணோட்டத்தை பெறுவதில் நாம் சந்தோஷப்படுகிறோம். சிக்காகோ பல்கலைக் கழகத்தின் 10வது பட்டமளிப்பு வைபவத்தின் போது பட்டதாரிகளிடையே சொற்பொழிவாளராய் அவர் கூறியதாவது:

“கல்வி நமது தேசத்தின் ஆச்சரியமான வளர்ச்சியை மட்டும் ஏற்படுத்தவில்லை, அதோடு கூட வேலைவாய்ப்பையும், சாதகமான சூழ்நிலைக்கான அருமையான சந்தர்ப்பத்தையும் கூட அது உருவாக்கி கொடுத்திருக்கிறது. மேலும் பழங்கால பழக்கங்கள் மற்றும் முறைமைகளி-ருந்தும் கூட நமது மக்களை முன்னேற்றியிருக்கிறது. அதோடு நமது பிதாக்கள் வாழ்ந்து வந்த விதமாய் இனிமேலும் நம்மால் வாழமுடியாது.



“பொதுப்பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் அவைகளின் சிறப்பியல்புகளினால் நம்மை வளர்த்திருக்கின்றன; அவைகள் வாழ்வின் நற்பண்புகளை மேம்படுத்தி, புத்தி கூர்மையான ஆண்களையும், அதிகமான அழகும் உயிரோட்டமுமுள்ள பெண்களையும் உருவாக்கியிருக்கின்றன. ஐரோப்பிய குடியானவரின் நிலையைக்காட்டிலும் அவர்களை அது உயர்த்துகிறது. கல்வியும், சுதந்திரமும் அமெரிக்க மக்களை ஒரு அற்புதமான ஜனங்களாய் மாற்றியிருக்கின்றபோது, பழம்பெரும் ஐரோப்பிய நாடுகளில் அதனுடைய வாழ்வின் தரத்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உயர்த்தியிருக்கிறது. ஒரு இந்தியத் தொழிலாளி ஒரே ஒரு அறையைக் கொண்ட, கூரைவீட்டினுள் உடுக்க ஒட்டுத்துணியும், உணவுக்கு கலயம் அரிசியும் இருந்தாலே போதும் என்று வாழ்ந்துவிடுவார். ஆனால் அமெரிக்க மெக்கானிக்கிற்கு தனது வீட்டில் அநேக அறைகள் தேவைப்படும். கலைப்பணியின் மதிப்பை அவன் கற்றிருக்கிறான்; அதோடு அவனது குழந்தைகளும் கற்றிருக்கிறார்கள்; அவர்கள் யாவரும் இதைவிட நல்ல வாழ்வுமுறை ஆகியவற்றுக்கு நன்கு பழக்கப்பட்டிருக்கின்றனர்; இது ஆடம்பரத்தை அல்ல சௌகரியத்தையே உண்டாக்குகிறது; மேலும் இது நமது குடியரசின் குடிமக்களை தயார்படுத்துகிறது - தயார் படுத்தியாகவேண்டும்.

“மிகத்திரளான செல்வத்தினை சேர்க்கும் அமெரிக்கரின் சந்தர்ப்பத்தினை, திறமைசா-களின் மிகச்சிறந்த தொலைநோக்கும் தைரியமும் தடை செய்துவிட்டது. செல்வத்தை சேர்க்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்காத திரளான மக்கள் இவர்களை பார்த்து கூறுகின்றனர்: ‘இந்த சந்தர்ப்பங்களில் எங்களுக்கு சமபங்கு இல்லை;’ இந்த கஷ்டங்களை குறிப்பிடவோ அல்லது இவ்வகையான பிரச்னைகளை தீர்க்கும்படியான இடமோ இது இல்லை, அதோடு எனக்கு அதற்கு நேரமும் இல்லை. நம்மிடையே இப்போதிருக்கிற மேதைகள் தேவைப்படுமாயின் சட்டத்தின் உதவியோடு கூட, அல்லது தேவையான வேறு செயல் முறைகளின் உதவியோடு இவ்விஷயத்தினை சந்திக்கவேண்டும். இதில் சந்தேகப்படுவதற்கு எதுவும் இல்லை. நமது நாட்களில் இன்னும் அதிகமான கல்வியும், இன்னும் அதிகமான கல்லூரி மாணவர்களும், இன்னும் அதிகமான

கல்லூரி வாய்ப்புகளும் தேவைப்படுகிறது. இந்த அஸ்திபாரங்களி-ருந்து வெளியே போகும் ஒவ்வொரு வா-பனும் வெளிச்சமும் ஞானமும் உடைய ஒரு மிஷினரியாகவே உலகத்துக்குள் போகிறான். அவன் சமுதாயத்தில் எங்கு சென்று வாழ்ந்தாலும், உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் நிலவும் சூழ்நிலைக்குத்தக்கதாக அறிவுக்கூர்மையும், பரந்த தேசபக்தி உடையவனாகவும் நிற்பான். நாட்டின் நானூறு பல்கலைக்கழகங்களி-ருந்தும் பட்டம் பெற்றவர்களே நமது அமெரிக்க நாட்டு இராணுவத்தில் லெஃப்டினென்ட்டுகளாகவும், கேப்டன்களாகவும், கர்னல்களாகவும், பிரிகேடியர் - ஜெனரல்களாகவும் மற்றும் மேஜர் - ஜெனரல்களாகவும் இருக்கின்றனர்.

“நமது இளைஞர்கள் இன்று நுழைகின்ற உலகமானது நூறு ஆண்டுகளுக்கு முன் அவர்களது தகப்பன், பாட்டன் மற்றும் மூதாதையர்கள் எதுவுமே அறிந்திராத ஒன்றாக இருக்கிறது. 50 வருடங்களுக்கு முன் ஏதோ ஒரு சபைப்பிரிவின் கல்லூரியில் அவன் பட்டம் பெற்று, அவனது தகப்பனுடைய சபையை தழுவியிருப்பான். அவன் தன்னுடைய மத நம்பிக்கைகளை கிராம போதகரிடம் இருந்து பெற்று ஏற்றுக் கொண்டிருப்பான். அதோடு அரசியல் கோட்பாடுகளையோ தன்னுடைய தகப்பனார் சார்ந்திருக்கும் கட்யி-ருந்தும் பெற்றிருப்பான். ஆனால் இன்று அவன் பட்டம் பெறும் கல்லூரிகளில் மதபிரிவுகளைக் குறித்த கட்டுகள் தளர்ந்து காணப்படுகிறது. மேலும் அவனது குடும்ப அங்கத்தினர்கள் அநேக சபைகளுக்குள்ளும் அலைந்து திரிந்து எல்லா விசுவாசப் பிரமாணங்களையும் ஏற்றுக் கொள்கின்றனர். எனவே அவன் தன்னுடையது என்று எதாவது ஒரு சபையையும் விசுவாசத்தையும், போதனைகளையும் தெரிந்தெடுக்க வேண்டியிருக்கிறது. போ-யான தலைவர்கள் அல்லது தகுதியற்றவர்களால் கட்சிகளின் ஒருங்கிணைப்பு தளர்ந்துவிட்டதால், தேசத்தின் நெருக்கடிகளையும் காலத்தின் பிரமிக்கத்தக்க வளர்ச்சியினுடைய அத்தியாவசியங்களையும் சந்திக்க தவறிவிட்டதை அவன் கண்டுபிடித்திருக்கிறான். “மகனே உனக்காகவும், உன் நாட்டுக்காகவும் நீ தீர்ப்பு செய்” என்று அவனது ஆலோசனைக்காரர்கள் அவனுக்கு கூறியிருக்கக்கூடும்.



இவ்வண்ணமாய் ஒரு குடிமகனுக்குரிய கடமைகளை செய்யவும் அல்லது தனது விசுவாசத்துக்கும் கோட்பாடுகளுக்கும் உரிய அஸ்திவாரத்தை பெறவும், இவனது தகப்பனுக்கு தேவைப்பட்டிராத ஒரு உபகரணம், இவனது வாழ்வின் நுழைவுவாயி-லேயே இவனுக்குத் தேவைப்படுகிறது. பிரசங்க மேடைகளினாலும், பிரசுரங்களினாலும், தன்னுடைய சொந்த அபிப்பிராயத்தினாலும் கண்டு கொண்டதாகிய அரசியல் ஸ்திரநிலைக்கும், சபையின் நிலைமைக்கும், சமுதாயத்தின் அஸ்திவாரங்களுக்கும் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்புக்கும் அச்சத்தை ஊட்டக்கூடிய புரட்சிகரமான சூழ்நிலையொன்று இந்த அற்புதமான 19ம் நூற்றாண்டின் முடிவில் நிலவுகிற நிலையில் தன்னுடைய வாழ்க்கைப் பிரயாணத்தை துவங்குகிறான். ஆனால் போதனைகளும், தீர்க்கத்தரினங்களும் அழிவைக் குறித்து இருக்கும் பட்சத்தில் அவன் நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது. ஒவ்வொரு வா-பனும் “எல்லாம் நன்மைக்கே என்னும் கொள்கை” உடையவனாய் இருக்கவேண்டும். நாளைய தினம் இன்றைய நாளைக் காட்டிலும் மேலானதாக இருக்கும் என்று ஒவ்வொரு வா-பனும் நம்ப வேண்டும்; மேலும் இந்த நாளுக்குரிய தனது கடைமையை முழுமையாய் செய்யும் போது நாளைய தினத்தை குறித்த நிச்சயமான ஒரு நம்பிக்கையோடு முன்னோக்கி பார்வையை செலுத்தவேண்டும்.

“பிரச்னைகள் கடினமாயும், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மிகுந்த தீவிரமாயும் இருக்கிறது என்பதை நாம் யாவரும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் பிரச்னைகளை தீர்ப்பதும் தீவிரமான சூழலை அகற்றுவதும் கல்வியின் எல்லைக்கு உட்பட்டதாக இருக்கிறது. நமது காலக்கட்டம் நாகரீக வளர்ச்சியின் முரண்பாட்டைப் போல் தோற்றமளிக்கும் காலமாய் இருக்கிறது. கடந்தகால நடவடிக்கைகள் சாதாரண கப்பல் பிரயாணத்தைப் போல, எளிய விளக்கத்திற்கு உரியதுமான விஷயமாக இருந்திருக்கின்றன. ஆனால் 20ம் நூற்றாண்டிற்கு ஐந்து வருடம் முன்னதாக நாம் நின்று கொண்டு, ஏதோ ஒரு பெரிய கொந்தளிப்பு வந்து நம்மை வான மண்டலத்துக்குள் பலமாய் தூக்கி வீசி எறிந்தது போலவும்,

செவ்வாய் கிரகத்தின் கால்வாய் ஒன்றின் ஓரம் நாம் அமர்ந்திருப்பது போலவும் தோன்றுகிற விசித்திரமானதொரு சூழ்நிலையை எதிர் கொண்டு இருக்கிறோம்.

“கிறிஸ்தவ சகாப்தத்தின் நூற்றாண்டுகளை நீராவியும், மின்சாரமும் வெறுமையாக்கிப் போடும் அளவிற்கு நம்மை கீழே கொண்டுவந்து விட்டன. இவை தயாரிப்பு மற்றும் வியாபார சந்தையை ஒரு கூட்டணிக்குள் கொண்டுவந்து, கடந்த காலத்தின் எல்லா கோட்பாடுகளையும், கணிப்புகளையும் நிலைகுலையச் செய்துவிட்டன. அவைகள் உடனுகுடனான ஒரு தகவல் தொடர்பின் மூலம் உலகத்தையே ஒருங்கிணைத்து விட்டன. இதன் மூலம் இதற்குமுன் காலத்தாலும், தூரத்தாலும் அல்லது சட்டத்தினால் முடிவு செய்யக்கூடிய வரையறைகளை கவிழ்த்துவிட்டன. கங்கைகரை அல்லது அமேசானின் பருத்தியினுடைய விலை, இமயமலையின் சமவெளி அல்லது நைல் நதியின் டெல்டா அல்லது அர்ஜென்டீனாவின் கோதுமையினுடைய விலை, இன்றைய நாணய மதிப்பு, உற்பத்தி பொருளின் விலையை கட்டுப்படுத்தும் கூ-யின் நிலைமை, அவைகளின் பிரதிப-ப்பு உடனுக்குடன் அன்று பகல்வேளைக்குள் -வர்பூ-லும், நியூ ஓர்லென்சிலும், சாவன்னாவிலும், மொபை-லும், சிக்காகோவிலும், நியூயார்க்கிலும் தெரிந்துவிடும். தென்பகுதியின் பயிர்கள் மூலமாகவும் மேற்குப்பகுதியின் பண்ணை வீடுகளின் மூலமாகவும் அவைகள் ஒரு ஆச்சரியத்தை அனுப்புகின்றன. அமெரிக்க, ஐரோப்பிய விவசாயிகள் தங்களுடைய நிலைமையை குறித்து நியாயமாய் புகார் கூறுகின்றனர். கிராமப்புற ஜனத்தொகையானது நகர்புறத்தை நோக்கி விரைகிறது. இதனால் நகராட்சியின் கஷ்டங்கள் அளவின்றி அதிகரிக்கின்றது. முதலீட்டாளர்களோ சமச்சீர்ப்படுத்த, கூட்டுச் சேர போராடுகின்றனர். தொழிலாளர் சங்கங்களோ குறிப்பிட்ட அளவு வெற்றியுடன், அவைகளுக்கு மிகச்சிறந்தது என்று நம்புகிறதான ஒரு சூழ்நிலையை உருவாக்க தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றன. நீராவி, மின்சாரம் மற்றும் கண்டுபிடிப்புகளின் உதவியால் கடந்த ஐம்பது வருடங்களில் ஏற்பட்ட அதிதீவிர முன்னேற்றம் உலகத்தின் உழைப்பின் சக்தியை ஒருபக்கமும், மறுபக்கத்தில் உடனுக்குடன் உற்பத்தி செய்யும் விளைவுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய், மக்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையிலான உறவை அத்தனை சுலபமாக மாற்றிவிட்டன; உலகமோ தன்னை இதற்காக இன்னும் தயார்படுத்திக் கொள்ளவில்லை. தற்கால மற்றும் வருங்காலத்தின் நம்பிக்கையானது கல்வியின் மீதே இருக்கவேண்டும். அப்பொழுதுதான் மேதாவிகள், சந்தர்ப்பங்கள் மற்றும் வல்லமையினால் இருபதாம் நூற்றாண்டின் பூகம்பத்தினால் உருவாக்கப்பட்ட பெரும் குழப்பத்தி-ருந்து ஒரு ஒழுங்கை ஏற்படுத்துவார்கள்.



“உலகத்தில் என்றுமே நெருக்கடிகள் இருந்துகொண்டு தான் இருக்கின்றன. இவைகள் தான் மனுகுலத்துக்கு இதைவிட மேலான மற்றும் உயர்வான நிலைக்கு உந்துதலாகவும், கடினமான முயற்சியாகவும் இருந்திருக்கின்றன. இதுவே சுதந்திரத்துக்கான இயக்கங்களின் உச்சகட்டத்துக்கும் காரணமாயிருந்தன. இந்த சீர்திருத்தங்கள் அளவற்ற வேதனைகள், கோடிக்கணக்கானோரின் உயிர்ப-, மற்றும் ராஜ்யங்கள், பிரதேசங்கள் ஆகியவைகளின் பாழாக்குதலுக்கும் காரணமாயிருக்கின்றன. அடிமைத்தனத்தை குருசேடுகள் (கிறிஸ்தவ மதப்போர்) ஐரோப்பாவி-ருந்து நீக்கின. பிரெஞ்சு புரட்சி ஜாதி கட்டுகளை உடைத்தெறிந்தது. சுயநலமே காரணமாயினும், உலகளாவிய நவீன வாக்குரிமை மற்றும் பாராளுமன்ற அரசாங்கத்தினால், நெப்போ-யனே தலைவரானார். பல நூற்றாண்டுகளாய் இருந்த வேட்கையானது சுதந்திரம் இன்னும் கூடுதலான சுதந்திரத்துக்காகவே இருந்தது. சுதந்திரத்தை அடையும் போது உலகனைத்திலும் சந்தோஷமும் சமாதானமும் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்தது. ஆங்கிலம் பேசும் மக்கள் சுதந்திரத்தை அதன் முழு அளவுடன் பெருமளவில் அடைந்தனர். இந்த சுதந்திரம் என்பது தங்கள் சொந்த ஜனங்களையே தங்களது ஆளுநர்களாகவும், சட்ட வல்லுநர்களாகவும் அதிகாரிகளாகவும் பெறவைத்தது. முரண்பட்டதைப் போ-ருந்தாலும் உண்மையான கூற்று என்னவெனில் நாம் மாபெரும் ஆசீர்வாதம் என்று கருதி கொண்டிருக்கும் சுதந்திரம் என்பது உலகம் இதுவரைக்கும் அறிந்திராத அளவிற்கு பெருத்த அதிருப்தியாகியிருக்கிறது. ஜெர்மனியின் சோஷ-ச இயக்கங்கள் 10 வருடங்களுக்கு முன்

நூறாயிரம் ஓட்டுகளாயிருந்தவை, 1894ல் சில மில்-யனாக வளர்ந்திருக்கிறது. பிரான்சினுடைய குடியரசுவாத சக்திகள் மாதத்துக்கு மாதம் இன்னும் தீவிரமாகவும் அச்சுறுத்தக்கூடியதாகவும் மாறிவருகிறது. விவசாய புரட்சியாளர்களும் தொழிலாளிகளும் கிரேட் பிரிட்டனின் ஆட்சியாளர்களின் சக்திக்கும் மேலாய் தொல்லை தருவதால் ஒவ்வொரு நாளும் மாற்றங்களை உருவாக்குவதைத் தவிர வேறு எவ்விதத்திலும் இதை மேற்கொள்ள முடியவில்லை. சிக்காகோவில் ஒரு அராஜகவாத கலகம் இருந்தது. பலசா-களான பயிற்சி பெற்ற ஒரு சிறிய போலீசார் குழுவே கொள்ளை மற்றும் சூறையாடல்களி-ருந்து அந்த மாபெரும் பட்டணத்தை காப்பாற்றினது. ஒரு தனி மனிதன் ரயல்வே தொழிலாளிகளுக்கான ஒரு ஒருங்கிணைப்பை சில மாதங்களுக்குள்ளாகவே உருவாக்கினான். இது எவ்வளவு உறுதியானது என்றால், அவரது ஒரே ஒரு கட்டளையின் கீழ் தொழிற்சாலைகளிலும் இயக்கங்களிலும் 20 கோடி ஜனங்கள் செயலாற்றுகின்றனர். சமுதாயங்களின் ஆதரவை ஏற்படுத்தும் சக்திகள் யாவும் தற்கா-கமாக முடக்கி வைக்கப்பட்டன. இரண்டு ஆளுநர்கள் சரணடைந்துவிட்டனர். அதோடு நமது தலைநகரின் மேற்குப் பகுதியின் மேயர் தனது கட்டளைகளை கலகக்காரரின் தலைவனிடமிருந்து பெற்றார். அந்த அளவுக்கு கலகக்காரரின் சக்தி இருந்தது. தொழில் மற்றும் வர்த்தகத்தில் கணக்கிட முடியாத அளவிற்கு இழப்புகள் இருந்தன. ஐக்கிய அரசாங்கத்தின் வ-மையான கரத்தினால் மட்டுமே இதை தடுக்க முடிந்தது.

"மூப்பது வருடங்களுக்கு முன்னிருந்ததைக் காட்டிலும் ஒவ்வொரு கலைஞரும், மெக்கானிக்கும், தொழிலாளியும் எல்லாத்துறைகளிலும் இன்று குறைந்த நேர உழைப்பிற்கு 25% அல்லது 50% கூடுதலாய் ஊதியம் பெறுகிறான். இது நமது கால் நூற்றாண்டு காலத்தின் முரண்பாடாக தோன்றினாலும் உண்மை கூற்றே. ஆகவே 30 வருடங்களுக்கு முன் வாங்கியதைக் காட்டிலும் தற்போது கிடைக்கும் மூன்றில் ஒரு பங்கு அதிகமான ஊதியமானது, 30 வருடங்களுக்கு முன் வாங்கியதைக் காட்டிலும் இருமடங்கு உடையையும் உணவையும் அவர்களுக்கு கொடுக்கிறது.



முற்காலத்தை தற்கால நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது தொழிலாளிகள் நிச்சயமாய் அதிகமான மகிழ்ச்சியில் இருப்பார்கள் என்றும், அதோடு தன்னுடைய வாழ்க்கையின் தேவைக்கும் அதிகமாய் கிடைக்கும் அந்த சம்பளப் பணத்தை, ஒரு சேமிப்பு வங்கியில் நிச்சயம் போட்டு வைப்பார்கள் என்றும், அந்த நிதியானது மிகவேகமாய் இவரை ஒரு முதலீட்டாளராக்கும் என்றும் யாருமே நினைக்கக்கூடும். ஆனால் 30 வருடங்களுக்கு முன் மூன்றில் ஒரு பங்கு கூ-யுடனும் அவரது பணத்தினால் வாங்கக் கூடியதைக் காட்டிலும் இரண்டில் ஒருபாகம் அதிகமாய் வாங்கினாலும் கூட இன்றும் தற்கால உழைப்பாளிகள் அதிருப்தியாய் தான் இருக்கின்றனர். இது என்றுமே புரியாத ஒன்று. இவை யாவும் கல்வியால் வருகின்றது."

(மூப்பது வருடங்களுக்கு முன் அபரிமிதமான வேலைவாய்ப்பு இருந்தது என்ற உண்மையை திரு.டிப்யூ கருத்தில் கொள்ளவில்லை. மனித திறமைகளும், சரீர உழைப்பும் தேவைக்கும் மிகக் குறைவாகவே இருந்தது. தொழிற்சாலைகளிலும், ஆலைகளிலும் "இரட்டை வேலை நேர முறைமையில்" வேலை செய்யும்படி தொழிலாளிகள் கட்டாயப் படுத்தப்பட்டனர். வெளியிடங்களி-ருந்து குடிபெயருகிறவர்கள் லட்சக்கணக்காய் வந்தும் கூட, மிகச்சரியாக வேலைகளை பெற்றுக் கொண்டனர். ஆனால் தற்போது தொழிலாளிகள் அபரிமிதமாக இருக்கின்றனர். தொழிலாளிகள் தேவையோ இயந்திரங்களின் உபயோகத்தால் எல்லாத் திசைகளிலும் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது. தற்போது சம்பளங்கள் அந்த அளவுக்கு மோசமாக இல்லாவிடினும், ஜனங்களில் பெரும்பாலானவர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்று உழைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனவே தவிர்க்க முடியாமல் ஊதியம் குறைகிறது.)

"நாம் போராடும் களமானது இன்றைய தேவைக்காய் மட்டுமன்றி எல்லா காலத்துக்குமானது; இந்த தேசத்தை நாம் முன்னேற்றுவது நமது தேவைகளுக்காய் மட்டுமன்றி பின்வரும் காலங்களுக்கும் சேர்த்துதான். அடிமைத்தனத்தை நாம் மேற்கொண்டுவிட்டோம். பல திருமணங்களை செய்துக் கொள்ளும் முறைமையையும் அழித்துவிட்டோம். இப்போது மீதமுள்ள நமக்குள்ள விரோதி 'அறியாமை' மட்டுமே.

(கல்வியின் மூலமாக அறியாமையின் ஒரு பகுதி மட்டுமே நீக்கப்பட்டதினாலேயே, இந்த அனைத்து அதிருப்திகளும் தீமைகளும் வந்திருக்கிறது. ஆனால் முழுமையான கல்வியை பெற்றுவிட்டால் எவ்வளவுக்கு அராஜகமும், அச்சம் தரும் துன்பங்களும் வரக்கூடும்!; இப்படிப்பட்ட தீமைகள் மற்றும் அதிருப்திகள் அனைத்திற்கும் ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்காக நான் இங்கு வரவில்லை என்கிறார் திரு. டிப்யூ. ஆனால் அப்படிப்பட்டதொரு தீர்வை தான் அறிந்தால், அதை செய்வதில் தான் மிகுந்த மகிழ்ச்சி உடைவராக இருப்பேன் என்றும் கூறுகிறார். மேலும் "ஏதாவது ஒரு வழியில்" இதற்கான விமோசனம் பிறக்கும் என்கிறார். குறிப்பிட்டதொரு தீர்வை தன்னால் கூற முடியவில்லை என்று மௌனமாய் ஒப்புக்கொள்கிறார்.)

"அதிருப்தியாய் இருப்பவர்கள் கவர்னர்களும், ஆட்சியாளர்களுமே. இவர்கள் தங்கள் சொந்த பிரச்னைகளை தாங்களே தீர்த்துக் கொள்ளவேண்டும். தங்களுடைய சட்ட சபைகளையும் மற்றும் தலைவர்களையும் தாங்களே தேர்வு செய்து கொள்ள முடியும். தங்களுக்கு எதிராக தாங்களே கலகத்தை உண்டு பண்ணவோ, தங்களுடைய சொந்த கழுத்துக்களை தாங்களே அறுத்துக் கொள்ளவோ (துரோகம் செய்யவோ) முடியாது. விரைவாகவோ தாமதமாகவோ, ஏதாவது ஒரு வழியில் தங்களது பிரச்னைகளை தாங்களே தீர்த்துக் கொள்வார்கள். ஆனால் அது சட்டத்தின் மூலமாய் சட்டத்தைக் கொண்டே செய்யப்படும். அது ஒரு அழிவுக்குரிய அல்லது ஆக்கத்துக்குரிய முறையாக இருக்கும்."

"எல்லாவித செல்வச் செழிப்பும் உலக முன்னேற்றமும் இருந்தும் கூட ஏன் இந்த அதிருப்தி? என்ற கேள்வி இயற்கையானதே. இயந்திர கண்டுபிடிப்புகளின் படுவேகமும், நீராவி மற்றும் மின்சாரத்தின் செல்வாக்கும் கடந்த 25 ஆண்டுகளில் 60% உலக முதலீட்டையும், 40% தொழிலாளிகளின் வேலையையும் அழித்து விட்டது. இயந்திரங்களின் மூன்று மடங்கு விரிவாக்கமும், புதிய மோட்டாரின் கண்டுபிடிப்பும், இயந்திரங்களை உபயோகிக்கும் புதிய முறையும், பழையவைகள் யாவற்றையும் உபயோகமற்றதாய் மாற்றிவிட்டன. இன்னும் கூட அது கலைஞர்கள் தன்னுடைய வேலைக்கு பயன்படுத்திய கருவிகளை ஒன்றுக்கும் உதவாததாக்கிவிட்டு திரளாய் இருக்கும் சாதாரண தொழிலாளிகளில் ஒருவராய் அவர் ஆகும்படி நிர்பந்திக்கிறது. பெரும்பான்மையான மதிப்பிற்குரியவைகளை அழித்து, எத்தனையோ மக்களை வேலைகளி-ருந்து தூக்கியெறிந்து விட்ட அந்த சக்திகள், அதே சமயத்தில் உலகத்தில் ஆஸ்திகளுக்கான கணக்கிட முடியாத ஒரு புதிய சூழ்நிலையையும், அதனுடைய ஜனங்கள் சௌகரியங்களையும் சந்தோஷத்தையும் பெறுவதற்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்கி இருக்கின்றன. ஆனால் அதனுடைய சௌகரியங்களையும், அதனுடைய சந்தோஷங்களையும் அனுபவிக்க மேலானதொரு கல்வி அவசியமாகிவிட்டது."



திரு.டிப்யூ அவர்கள் தொழிலாளருடைய விஷயங்களில் கற்று தேர்ந்தவராகவும், தற்போது உலகை எதிர்கொண்டிருக்கும் நிலைமைக்கு வழி நடத்தி வந்தவைகளை குறித்தும் ஆராய்ந்திருப்பது மிகவும் தெளிவாக தெரிகிறது. ஆனால் இதற்கு அவர் அளிக்கக்கூடிய "பரிகாரம்" தான் என்ன? ஒருவேளை இரக்கமும், தகுதியுடைய உணர்வும் மட்டுமே, எதிர்காலத்தை அச்சுறுத்துவதும், தற்கால தீமைக்கு காரணமாக இருப்பதும் அறியாமை என்ற "எதிராளி" என்று ஆலோசனை அளிக்கும் படியும், கல்லூரி வகுப்புகளில் விரிவுரை அளிக்கும்படியும் இந்த கனவானைத் தூண்டியிருக்கக்கூடும். ஆனால் அந்த கல்வி மட்டுமே ஒரு நிவாரணத்தை கொடுத்துவிடாது என்பதை திரு. டிப்யூவைக் காட்டிலும் தெளிவாய் வேறுயாருக்கும் தெரியாது. இன்றைய தினத்தின் கோடீஸ்வரரில் வெகுசிலரே கல்லூரி வரை பயின்றுள்ளனர். கொர்நெ-யு வான்டர் பில்ட் படிக்காதவர். ஒரு படகோட்டி. இவரது இயற்கையான தொழில் திறமையே இவரை செல்வந்தனாக்கியது. பிரயாணங்களின் அதிகரிப்பை முன்னறிந்த இவர் ரயில்பாதைகளிலும், நீராவிப் படகுகளிலும் முதலீடு செய்தார். ஜான் ஜேக்கப் ஆஸ்டர் - தோல் வியாபாரியான இவரும் படிக்காதவர். இவர் நியூயார்க் பட்டணத்தின் வளர்ச்சியை முன்னறிந்து நிலங்களை வாங்கி விற்கும் தொழி-ல் முதலீடு செய்தார். இதன் மூலமாய் தற்கால ஆஸ்டர் சந்ததியாரின் திரளான சொத்துக்களுக்கு அஸ்திவாரத்தைப் போட்டார்.

"கீழ்க்கண்ட பட்டிய-ல் இருக்கும் அமெரிக்க கோடீஸ்வரர்கள் கல்லூரிகளுக்கு கோடிக்கணக்கில் நிதிஉதவி

வழங்கினர். இவர்கள் பத்திரிக்கைகளுக்கு அளித்த பேட்டியில் இந்த செல்வச் செழிப்பும் புத்திக் கூர்மையும் உடையவர்களில் எவருமே கல்லூரியில் படிக்கவில்லை என்று கூறினர்.

"கிரார்ட் கல்லூரிக்கு, ஸ்டீபன் கிரார்ட் $8,000,000; ஜான் டி.ராக்ஃபெல்லர், சிக்காகோ பல்கலைக்கழகத்துக்கு $ 7,000,000; ஜார்ஜ் பிபோடி, பல்வேறு நிறுவனங்களுக்கு $ 6,000,000; -லேண்ட் ஸ்டேன்ஃபோர்டு, ஸ்டேன்ஃபோர்டு பல்கலைகழகத்துக்கு $5,000,000; ஆசா பார்க்கர், ஸிஹை பல்கலைக் கழகத்துக்கு $ 3,500,000; பால் தூலானே, தூலானே பல்கலைகழகத்துக்கு மற்றும் நியூ ஒர்லெனுக்கு $ 2,500,000; ஐசக் ரிச், போஸ்டன் பல்கலைக்கழகத்துக்கு $2,000,000; ஜோனஸ் ஜி. கிளார்க், கிளார்க் பல்கலைகழகத்துக்கு, வோர் செஸ்டர் மாசுக்கு $ 2,000,000; தி வாண்டர்பில்ட்ஸ், வான்டர்பில்ட் பல்கலைகழகத்துக்கு குறைந்தது $ 1,775,000; ஜேம்ஸ் -க், க-போர்னியா பல்கலைக்கழகத்துக்கு $1,600,000; ஜான் சி.கிரீன், பிரின்ஸ்டனுக்கு $ 1,500,000; -யோனார்ட் கேஸ், க்ளீவ் லேண்ட் விஞ்ஞான பள்ளிக்கு $ 1,500,000; பீட்டர் கூப்பர், கூப்பர் சங்கத்துக்கு $1,200,000; எஸ்ரா கார்னல் மற்றும் ஹென்றி டயுள்யூ சேஜ், கார்னல் சார்லஸ் பிராட், பிராட் புரூக்ளின் நிறுவனத்துக்கு $ 2,700,000 கொடுத்திருக்கின்றனர்."

இதற்கு விதிவிலக்காக திரு.செத் லா கல்லூரியில் பயின்ற, கல்லூரி முதல்வர் ஒரு சமயம் கொலம்பியா கல்லூரியின் நூலகத்துக்கு ஒரு மில்-யன் டாலர் வழங்கினார்.

கல்லூரி படிப்பு விலைமதிப்புடையதாக இருப்பினும், இப்போதைய நிலைமைக்கு அது எவ்விதத்திலும் ஒரு நிவாரணம் ஆகாது. உண்மையில், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இப்போது இருப்பவர்கள் பட்டதாரிகளாக இருப்பார்களேயாகில், நிலைமை இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் மோசமாக இருந்திருக்கும். திரு. டிப்யூ இதை மேற்கண்ட வரிகளில் ஒப்புக் கொள்கிறார். "ஒரு மெக்கானிக் தன்னை அறியாமலேயே தன் தகப்பன் காலத்தில் 30 வருடங்களுக்கு முன் மூன்றில் ஒரு பாகம் ஊதியமும், பாதி அளவே இந்த பணத்தால் பொருள் வாங்கக்கூடிய நிலையும் இருந்தாலும் இன்னும் கூட அதிருப்தியாகவே இருக்கிறார். ஏனென்றே புரியவில்லை. இவை யாவும் கல்வியால் வந்தது என்று தான் கூறினார். ஆம், உண்மையில் பொதுவாகவே கல்வி அதிகமாக அதிகமாக அதிருப்தியும் அதிகரிக்கிறது. கல்வியென்பது மிகச்சிறந்த ஒன்று. பெரிதும் வாஞ்சிக்கக்கூடிய ஒன்று; ஆனால் அதுவே ஒரு நிவாரணம் ஆகாது. உண்மையில் சில நேர்மையான கனவான்கள் பணக்காரராய் இருக்கும் போது மிகவும் வஞ்சகமான மனிதர் கல்வி கற்றவராய் இருப்பதும், தூய்மையான மனிதரில் அநேகர் "கல்லாதவராக" அப்போஸ்தலரைப் போல இருப்பதையும் காணலாம். வஞ்சகமானவர்கள் எந்த அளவுக்கு படிப்பறிவு உள்ளவர்களாக இருக்கிறார்களோ அந்த அளவுக்கு அதிருப்தியும், தீயவைகளை செய்யும் சக்தியும் இருக்கிறது. இவ்வுலகத்துக்கு புதிய இருதயங்கள் தேவை "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்." (சங்:51:10) இவ்வண்ணமாய் உலகத்தின் தேவையானது தீர்க்கதரிசனமாய் கூறப்பட்டுள்ளது. சந்தோஷத்துக்கும் சமாதானத்துக்கும் கல்வி மற்றும் அறிவுக் கூர்மை தேவைப்படுவதைக் காட்டிலும் மேலானவைகள் தேவை என்று விளக்கப்பட்டிருக்கிறது. சந்தோஷமும் சமாதானமும் வருகிறது. இது ஒரே சமயத்தில் பொதுவாய் அறியப்படும். "போதுமென்ற மனதுடன் கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்." இந்த அஸ்திபாரம் முத-ல் அமைக்கப்பட்டால் தான் கல்வியென்பது ஒரு மாபெரும் ஆசீர்வாதம் என்று உத்தரவாதம் அளிக்க முடியும். தன்னலமுள்ள இருதயமும், உலகப்பிரகாரமான ஆவியும், அன்பின் ஆவியோடு கூட மாறுபாடு உள்ளதாய் இருக்கிறது. எனவே விட்டுக் கொடுத்து போவதென்பது இருக்காது. "கல்வியும் அறிவும் பெருகிப் போனது." பெருவாரியான மக்களிடையே சமூக இக்கட்டுகளை இது கொண்டுவருகிறது. இதனுடைய இறுதியான விளைவு அராஜகம் ஆகும்.

### பிஷப் ஓர்த்திங்டனின் பேட்டி

நியூயார்க் நகரில் புராட்டஸ்டன்ட் எப்பிகோஸ்பல் சபையின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் போது பிஷப் ஓர்த்திங்டன் "சமூக கலவரத்தினை" குறித்து பேசியவைகளை நாளிதழ்களின் நிரூபர்கள் அக்டோபர் 25, 1896ல் பிரசுரம் செய்தனர். அவர் கூறியதாக சொல்லப்பட்டவை:

“என்னுடைய கணிப்பின் படி நமது இலவச கல்வி முறையை முற்றிலும் வெகு தூரத்துக்குக் கொண்டு சென்றுவிட்டது தான் விவசாயிகளின் கஷ்டம். உண்மையில், இந்த கண்ணோட்டமானது மதங்களுக்கு எதிரான கொள்கையாக எண்ணப்படக் கூடும் என்பதை நான் அறிவேன். விவசாயிகளின் மகன்கள் - இவர்களில் பெரும்பாலோனோர் - முன்னேற எந்தவித தகுதியும் கொஞ்சமும் இல்லாதவர்கள் - கல்வியின் ருசியை அறிந்து அதை பின்பற்றுகின்றனர். இவர்கள் எதிலும் கணக்கிடப்படமாட்டார்கள். இவரில் அநேகர் - தேவன் வைத்துள்ள வழியை பின்பற்றுவதில் அதிருப்தியடைந்து, பட்டணங்களுக்கு செல்கிறார்கள். கல்வி பெறத் தகுதியற்றவர்கள், அதிகப்படியாய் கல்விபெறுவதானால் இவர்கள் பட்டணங்களை நிரப்புகிறார்கள்; நிலங்களோ வெறுமையாய் கிடக்கின்றன. ”

திரு.டிப்பூ அவர்களின் வாக்கி-ருந்து பிஷப் அவர்கள் எதிர்மறையானதொரு கண்ணோட்டத்தை பெற்றிருக்கிறார். ஏழை வகுப்பினரை கல்வி பெற செய்வதற்கு எதிராக கூறியிருக்கும் “ரஷ்யாவின் கல்வி பொது இயக்குநரின்” வார்த்தைகளை ஏற்கெனவே நாம் கோடிட்டு காட்டியிருப்பதை அவர் வெகுவாக ஒப்புக் கொள்கிறார். கல்வியென்பது பொதுவாகவே வாஞ்சைகள் மற்றும் அதிருப்தியினை கொடுக்கிறது என்கிற உண்மையை இவர்கள் இருவருடன் சேர்ந்து நாமும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் நிச்சயமாய் இந்த பூமியின் சுதந்திரம் மற்றும் கல்வியினால் இந்த விஷயம் வெகுதூரத்துக்கு சென்றுவிட்டது என்பதை பிஷப் அவர்கள் ஒப்புக் கொள்வார். அதோடு கல்வியென்னும் விளக்கினை அணைத்துவிடுவதனால் எழும்பிவரும் அதிருப்தியினை அடக்கிவிட முடியும் என்றும் நம்பிக்கை கொள்ள முடியாது. நல்லதோ, கெட்டதோ கல்வியும், அதிருப்தியும் இங்கிருக்கின்றன. இதனை அசட்டை செய்யமுடியாது, அசட்டை செய்யவும் கூடாது.

### மதிப்பிற்குரிய டபிள்யூ.ஜெ. ப்ரேயனின் பதில்

பிஷப்புடைய ஆலோசனையைக் குறித்து திரு.டபிள்யூ ஜெ. ப்ரேயனிடம் பதில் கூறும்படி நாம் விட்டு விடுகிறோம். பத்திரிக்கைக்கு கொடுத்த பதி--ருந்து கீழ்க்கண்டவைகளை குறிப்பிடுகிறோம்:



“விவசாயிகளின் பிள்ளைகளுடைய மிதமிஞ்சிய கல்வியை குறித்தும், மிதமிஞ்சிய கல்வியினால் நம்மை சூழ்ந்திருக்கும் கஷ்டங்கள் குறித்தும் எண்ணி பேசும் போது, மனிதன் செய்வதற்கு துணிந்த பயங்கர காரியம் இது என்று என் மனதுக்கு தோன்றுகிறது. விவசாயிகளின் மகன்கள், வாழ்வில் உயரவே முடியாதவர்கள், கல்வியின் ருசியை அறிந்து கொண்டு, அந்த ருசியை அதிகமாய் ருசிப்பதனால், விவசாயத்தில் அதிருப்தியாளர்களாகி, அதைத் தொடர்ந்து பட்டணங்களுக்குச் செல்கிறார்கள். நம்மிடையேயுள்ள விவசாயிகளின் மகன்களுக்கு மிதமிஞ்சிய கல்வி கொடுக்கப்படுகிறது. என் நண்பர்களே இதற்கு என்ன அர்த்தம் என்று உங்களுக்குத் தெரியுமா? நாகரீக வளர்ச்சியின் முன்னேற்றத்தின் தலைகீழ் மாற்றம், மற்றும் இருண்ட காலத்தினை நோக்கி மறுபடியும் நடைபோடுதல் என்று அர்த்தம்.

“அவர்கள் யாவரையும் நீங்கள் கற்றுக் கொள்ளச் செய்யும் வரைக்கும் விவசாயிகளின் மகன்களில் யாரொருவர் மாமனிதராய் வரப்போகிறார் என்று உங்களால் எப்படி கூற முடியும்? அல்லது கல்வி கற்கக் கூடியவரை மட்டும் தேர்வு செய்யும்படி, எல்லா இடங்களுக்கும் செல்ல ஒரு குழுவினை நாம் தேர்வு செய்ய வேண்டுமா?

“ஓ! என் நண்பர்களே! பண்ணைகளை விட்டு பட்டணங்களுக்குச் செல்ல மக்களுக்கு வேறொரு காரணம் கூட உண்டு. அது என்னவெனில் விவசாயிகள் மீதும் பண்ணைகள் மீது அடமானம் வைப்பதில் சட்ட நிர்பந்தங்களை நீங்கள் அமல்படுத்துவதினால் தான். உங்களது சட்டத்தினால் தான் விவசாய வாழ்க்கை விவசாயிகளுக்கு கடினமாக்கப்படுகிறது. உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்யாத வகுப்பினர், உற்பத்தி செய்கிறவர்கள் மீது சட்டங்களை ஏவி விட்டு, விவசாய பொருட்களை பெருக்குவதை விட சட்டங்களினால் விவசாய பொருட்களில் அதிக லாபம் காணும்படி சூதாடுகின்றனர்.

“இந்த கருத்து தற்போதைய நிலைக்கான குற்றத்தை விவசாயிகளின் மேல் வைக்கும்படி இருக்கிறது. மக்கள் அதிருப்தியாளராய் மாறாமல் இருக்கும் பொருட்டு பள்ளிகளை

மூடுவது என்ற பரிகாரத்தை யோசனையாய் கூறும்படியான கருத்து இது! ஏன் நண்பர்களே, அதிருப்திக்கான காரணங்கள் இருக்கும் வரை அதிருப்தி என்பது இருக்கும். தங்களது சூழ்நிலையை உணர்வதற்கு ஜனங்களை தடை செய்தவற்கு பதிலாக இந்த தேசத்தின் விவசாயிகளது நிலைமையை உயர்த்துவதற்கு இந்த விமர்சனங்கள் ஏன் முயற்சி செய்யக் கூடாது?"

"ராக்" என்கிற ஆங்கில பத்திரிக்கையி-ருந்து நாம் குறிப்பிடுவது:

"அமைதியானது, முரண்பாடான .... மற்றும் எதிர்மாறான நிகழ்வுகள் யாவும் நாகரீக வளர்ச்சி பெற்ற மனுக்குலத்தை தொடர்ந்து மனக்கிளர்ச்சியானதொரு நிலையில் வைக்கிறது. நரம்பு மற்றும் மனதின் இறுக்கமானது பெரும்பாலும் வாரத்துக்கு வாரம் தீவிரமடைகிறது. அடிக்கடி பூகம்பத்துக்குரிய வேகத்துடன் அரசியல் மற்றும் வர்த்தக உலகத்தை ஒருவித திடுக்கிடச் செய்யும் சம்பவங்கள் அசைத்து விடுகின்றன. இவ்வித சக்திகளின் காரியங்களை மாற்றி அமைக்க அரசியல்வாதிகள் போராடும் போது இவைகளை முற்றிலும் கட்டுப்படுத்தவோ அல்லது அவைகளின் விளைவுகளை முன்குறித்து சொல்லவோ தங்களால் முடியவில்லை என்று வெளிப்படையாய் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

"தத்துவங்கள், திட்டங்கள், ஆய்வுகள் மற்றும் தீர்க்கதரிசனங்கள் ஆகியவற்றின் முடிவில்லாத குழப்பங்களில், இரண்டே இரண்டு விஷயங்களை மாபெரும் சிந்தனையாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர். இதன் ஒரு புறத்தில் உலகமனைத்தையும் உலுக்கி, தற்போதைய சமுதாய, அரசியல் கட்டமைப்பை அடித்து நொறுக்கி சுக்கு நூறாக்கும்படியான பெரிய ஆபத்து ஒன்று எதிர்கொண்டுவருவதை இவர்கள் காண்கிறார்கள். நிச்சயமான அஸ்திபாரத்தின் மேல் மறுகட்டுமானத்தை கட்டும் முன் அழிவினை உண்டாக்கும சக்திகள் முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. மற்றொரு புறத்தில் பார்க்கும் போது ஜனங்கள் இதுவரையிலும் எப்போதுமே சமாதானத்துக்காக இவ்வளவு ஏங்கியது இல்லை. அல்லது ஒருமைப்பாட்டினை, சகோதரத்துவத்தின் இசைவை வளர்த்துக் கொள்வதன் அனுகூலங்களையும் தேவையையும் இவ்வளவு அதிகமாய் தெளிவாய் கண்டதில்லை."



நாகரீக வளர்ச்சியடைந்த உலகின் எல்லாப் பகுதியிலும் இதே விதமாய் இருந்து வருகிறது. எல்லா புத்திகூர்மையான ஜனங்களும் சிக்கலானதொரு சூழ்நிலையை தெளிவாகவே காண்கிறார்கள். ஆனால் சிலருக்கு மட்டுமே பரிகாரம் எதையாவது கூற முடிகிறது. இந்த பிரச்னையை தீர்க்கக்கூடும் என்று அறிவுள்ளவர்கள் சிலர் நினைக்கின்றனர். ஆனால் அவர்களது மனக்கண்முன் தெளிவான சூழ்நிலையின் நிலையை காண அவர்கள் தவறிவிடுகின்றனர். பின் வருகிற பகுதிகளில் இவைகள் ஆராயப்படும்.

## சூழ்நிலையைக் குறித்து திரு.பெல்லாமியின் கூற்று

திரு.எட்வர்ட் பெல்லாமி, பூஸ்டனில் பேசியவற்றின் சாராம்சத்தை ஆர்வத்துடன் படிக்கலாம். அவர் கூறியதாவது:

"தொழிற்சாலைகளின் முறைமைகளின் போட்டிகளை குறித்த பொருளாதார இழிவுகளை குறித்த தீவிரமான கருத்து ஒன்றை உங்களால் உருவாக்க கூடுமானால் தரத்தை உயர்த்துவதற்கு அல்லது பொருட்களின் விலையை குறைப்பதற்கு, உற்பத்தியை தேவைக்கு அதிகமாய் பெருக்கி விடுவிவது என்ற ஒரே ஒரு வழிதான் உண்டு என்ற உண்மையை கவனிக்க வேண்டும். "ம - வு" என்பதை வேறுவிதத்தில் சொல்வதானால், போட்டியின் நிமித்தம் அசலைப் போன்று போ-களை உருவாக்குவதிலும், பிரயாசத்தை வீணடிப்பதிலும் மட்டுமே போய் முடியும். ஆனால் பிரயாசத்தின் வீணடிப்பினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அவைகள் எப்படி அழைக்கப்பட்டாலும் அவைகள் அருமையானவைகளாக இருக்கும். எனவே போட்டியினிமித்தம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அதிகமாவதினால் தான் ம-வாக்கப்படுகிறது. குறிப்பிட்ட இந்த முறைமை முடிவில் அர்த்தமற்றதாய் இருக்கும். நாம் மிகக் குறைவாய் பணம் செலுத்தி பெறும் அதே பொருட்கள் முடிவில், காரணமற்ற விலை குறைப்புக்கான வீணான போட்டியில் தேசமுழுவதும் மிக அதிக விலை கொடுக்க வேண்டியவைகளாகிவிடும் என்ற ஒரு விஷயம் பலமுறை மெய்யாகிறது. வீணானவைகள் எல்லாம் முடிவில் நஷ்டமாகவே இருக்கவேண்டும். அதனால் 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை நாடு "திவாலாகி" விட்டதாய் அறிவிக்க வேண்டியதாகிறது. இதன்

விளைவால் ஒருவர் செய்யக்கூடிய வேலைக்கு 3 பேர் போட்டியிடும்படி அமைந்து விடுகிறது.

"போட்டி என்ற நேர்மையற்ற நெறியைக் குறித்து பேசுவதென்பது இந்நாட்களில் ஒரு மிகப்பெரிய ஆய்வுக்குரிய பொருளாக இருக்கக்கூடும். நமது தற்போதைய தொழில் முறைமைக்கான ஒரு அம்சத்தை நான்தான் தடை செய்கிறேன். இதில் மிருகத்தனமும், பொருளாதார அறிவீனமும், மிகுந்த வ-மை பெற்றதாய் இருக்கிறதா என்றும், அதோடு கூட வேலைகளின் பளுவை பகிர்ந்தளிப்பதில் இருக்கும் கேவலமான விதத்தையும் குறிப்பிடுவது மிகவும் கடினமாய் இருக்கும். தொழிற்சாலைகளின் கசக்கிப் பிழியும் கூட்டமானது தொட்டிலையும் சவக்குழியையும், கொள்ளையிட்டு, மனைவிகளையும் தாய்மார்களையும் அடுக்களையி-ருந்தும், தணல் சூட்டி-ருந்து வயோதிகரையும் வெளியே எடுத்து விடுகிறது. அதே சமயத்தில் ஆயிரமாயிரம் வ-மைமிக்க மனிதரையோ வேலை செய்வதற்கான வாய்ப்புகளுக்காக கூக்குர-டும் களத்தை நிரப்பும்படி செய்கிறது. பெண்களும், குழந்தைகளும், பிள்ளைகளும் கடுமையாய் வேலை வாங்குபவரிடத்தில் அனுப்பப்படும் வேளையில் ஆண்களோ ஏதும் செய்ய முடியாமல் நிற்கிறார்கள். தகப்பன்மாருக்கு வேலையில்லை, ஆனால் குழந்தைகளுக்கோ ஏராளமாய் இருக்கிறது.

"பிறகு, என்ன, எதிர்கொண்டு வருகிறதான அழிவுக்குரிய ஒரு முறைமையை குறித்த ஒரு எச்சரிப்பு என்ற இரகசியமே. இதன் கீழ் - இதை இரண்டுதரம் செய்வதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. தேவைக்கு அதிகமாக செய்வதை தவிர்த்து எந்த வியாபாரமும் செய்யமுடியாது. தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்வதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது. தேவை நிறைந்து இருக்கும் தேசத்தில் வ-மையும் ஆர்வமும் உள்ள கரங்களுக்கு வேலை வாய்ப்பை காண முடியாது. முடிவில் பிணி நீங்கியபின் குணம் அடைதல் தாமதமாகும். ஒரு நிலையைத் தொடர்ந்து ஒவ்வொரு சிலவருட இடைவெளியிலும் முழுமையான வீழ்ச்சியை மட்டும் பலனாகப் பெறும்.

"ஒரு தீய ராஜாவுக்காக அவனுடைய ஜனங்கள் துக்கம்



அனுஷ்டிக்கும் போது, அந்த அரியணைக்கான வாரிசு இதைவிட மோசமாக இருப்பான் என்பதுதான் முடிவாக இருக்கும். போட்டிகள் நிறைந்த முறைமைகளின் சிதைவினால் ஏற்பட்டிருக்கிற தற்போதைய துன்பத்திற்கு இதுவே விளக்கமாக அமைகிறது. ஏனெனில் மோசமான காரியங்கள் படுமோசமாய் போய்க் கொண்டிருப்பதற்கான பயம் இருக்கிறது. சுண்டுவிரல் அளவுக்கான கூட்டானது இடுப்பளவு ஆன போட்டியைக் காட்டிலும் பருமனாக இருக்கும். பின்னான முறைமையானது ஜனங்களை சாட்டையால் அடிக்கும் போது, டிரஸ்டுகளோ அவர்களை தேள்களைக் கொண்டு துன்புறுத்துகின்றன. வனாந்திரத்தில் இருந்த இஸ்ரயேல் பிள்ளைகளைப்போல இந்த விநோதமான ஆபத்து பார்வோனின் இரும்புக் கோலாட்சிக்கு கூட பெருமூச்சு விடவைக்கிறது. உற்சாகமற்ற இதயங்கள் உற்சாகப்படும்படியானதொரு நம்பிக்கை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமி விஷயத்திலும் இருக்காதா என்று நாம் பார்க்கலாம்.

"முதலாவது சுதந்திரமான போட்டி முறைமைகளான பழைய நிலைமைக்கு வருவதற்கு சாத்தியம் இருக்கிறதா என்று நாம் விசாரிப்போம். வியாபாரத்தில் கூட்டு முயற்சிக்கு பதிலாக "போட்டி" என்பது தற்போதைய உலகளாவிய - இயக்கமாய் மாறும்படி வழிநடத்திய காரணங்களை குறித்த ஒரு யோசனை, நிச்சயமாய் யாரையும் சமாதானப்படுத்தக் கூடிய ஒன்றாக இருக்கும். கடைசியானதும் தற்போது இருக்கக்கூடியதுமான சந்ததியாரின் கண்டுபிடிப்புகளின் பலனாய் பெருமளவில் முதலீட்டின் திறமை அதிகரித்து இருக்கிறது. இதற்கு முன்னிருந்த யுகங்களில் வியாபாரத்தின் அளவும், நோக்கமும், இயற்கையான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தன. ஒரு நிறுவனத்தினால் அனுகூலப்படக் கூடிய முதலீட்டிற்கு வரைமுறைகள் இருந்தன. உலகத்தின் எல்லையை காக்கவோ எந்தவொரு வியாபாரத்தின் நோக்கத்துக்கோ இன்று எந்த வரைமுறையும் இல்லை. ஒரு நிறுவனத்தால் உபயோகப்படுத்தக்கூடிய முதலீட்டுக்கு மட்டுமின்றி அதனால் இருக்கும் முதலீட்டின் அளவுக்குத் தக்கதாக வியாபாரத்தின் பாதுகாப்பிலும் திறமையிலும், அதிகரிப்புக்கும் கூட ஒரு எல்லையில்லாமல் இருக்கிறது. கூட்டினால் ஏற்படும் பொருளாதார

நிர்வாகமும், அதே விதமாய் முக்கிய தொழி-ன் பிரத்தியோக உரிமையினால் வரும் வியாபார சந்தையின் மீதான கட்டுப்பாடும் டிரஸ்டுகளின் தோற்றத்துக்கான மிக திடமான காரணங்களாக இருக்கின்றன. ஆனால் "டிரஸ்ட்" என்று தங்களை அழைத்துக் கொள்ளும் வியாபாரங்களில் மட்டுமே கூட்டு முயற்சியின் கொள்கை இருக்கிறது என்று மட்டும் நினைத்துக் கொள்ளக்கூடாது. இது இந்த இயக்கங்களை பெரிதும் குறைத்து மதிப்பிட்டு விடுவதாக ஆகிவிடக்கூடும். டிரஸ்டுகளுக்கு மிக நெருக்கமான கூட்டு முயற்சிகளின் நிலைகள் அநேகம் இருக்கின்றன. மேலும் தங்களுக்கு முன்னிருந்த போட்டியாளர்களின் கூட்டணி இன்றி சில வியாபாரங்கள் நடத்தப்படுவதை தற்போது காணலாம். தொடர்ந்து மிகவும் நெருக்கமாய் வரும்படியான நோக்கத்தில் இருக்கிறார்கள்.

"இப்படிப்பட்டதான புதிய நிலைமைகள் நிலவ ஆரம்பித்த காலம் முதல், பெரிய வியாபாரங்களின் முன்னால் சிறுசிறு வியாபாரங்கள் மறையத் துவங்கிவிட்டன. ஆனால் மக்களுடைய கவனத்தை கவரும்படியாய் இந்த நடவடிக்கைகள் மிகுந்த தீவிரமாய் இருக்கவில்லை. ஆனால் நாளாக நாளாக அவைகள் கவனத்தை கவர ஆரம்பித்தன. இவைகளின் நாசத்தால் அழிந்துவிடக் கூடிய சுதந்திரமான போட்டி முறைகளின் முக்கிய அம்சங்களாகிய சிறிய வியாபார நிறுவனங்களின் கூட்டங்களுக்கு எதிராக கடந்த 20 வருடங்களாய் பெரிய கூட்டு நிறுவனங்கள் அவைகளை கூண்டோடு அழித்துவிடும், ஒரு யுத்தத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றன. வியாபாரத்தில் தனி நபர்கள் முதலீடு செய்யும் கொள்கைகளை நாம் கைவிட்டு விட முடியு மா என்று பொருளாதார நிபுணர்கள் விவேகத்துடன் வாதிட்டுக் கொண்டிருக்கும் போதே, இந்த கொள்கைகள் கடந்துபோய் சரித்திரங்களாகிவிட்டன. மிகப்பெரிய முதலீட்டினால் தாங்கப்பட்டால் ஒழிய, தற்போதைய வியாபார உலகத்தில் தனிநபருக்கு வியாபாரம் செய்ய இயலாத காரியமாக இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் சிறு வியாபாரிகளை அழித்த கூட்டத்தின் முதலீட்டுக்கான திறமைகள் அதே விதத்தில் அதிகரித்திருக்கிறது. தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் நிபந்தனைகளை விதித்துக் கொள்வதற்கான அவசியத்தினால் தங்களை அழித்த அரக்கர்களை அது கட்டுப்படுத்தியிருக்கிறது. வரும் சந்ததி போரை கைவிடவேண்டும். ஏனெனில் பரஸ்பர சர்வ நாசத்துக்கான அச்சுறுத்தலை அளிக்கும் அளவிற்கு அவர்களது கரங்கள் அத்தனை அழிவுக்குரியதாய் ஆகிவிட்டது. ஆகவே முதலீட்டு நிறுவனங்கள் எண்ணிக்கையிலும், சக்தியிலும் அதிகரிப்பது தங்களது சுய-பாதுகாப்பிற்காக போட்டியைக் குறைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருப்பதை நவீன வியாபார உலகம் உணர்கிறது.



"போட்டி" க்கு பதிலாக "கூட்டுறவு" என்ற கொள்கையை மிகப்பெரிய வியாபார நிறுவனங்கள் முதல் முத-ல் பயன்படுத்திய போது மற்ற குழுவினர் எல்லாம் உடனடியாகவோ அல்லது கொஞ்சகாலம் கழித்தோ இதையே கடைபிடித்தன. இல்லாவிடில் அழிந்தன. தனி நபரைக் காட்டிலும் நகராட்சி அதிக வ-மையுடையதாய் இருந்தது போல கூட்டுறவு ஸ்தாபனங்கள் நகராட்சியை மிஞ்சிவிட்டன. இந்தப் பொருளாதார வளர்ச்சியின் அவசியத்தை பரிசோதிக்கும் படியான அரசாங்கத்தின் செயலானது காலத்துக்குரிய ஓட்டத்தில் ஒரு சூழலை உண்டாக்குவதைக் காட்டிலும் வேறு எந்த பரிசோதனையும் செய்யமுடியவில்லை. முற்காலத்தில் வியாபாரத்திற்காக கடல்வழி மூலமாக ஒவ்வொரு வாரமும் ஒரு புதிய நிலப்பரப்பைக் கண்டுபிடித்தனர். ஆனால் தற்போது அது அடைக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் தனியாரின் ஒரு புதிய கூட்டுறவு ஸ்தாபனம் உருவாகிக் கொண்டிருக்கிறது. நாட்டின் தற்போதைய பல்வேறு தொழிலக குழுக்களின் உறுதியான ஒருமைப்பாட்டை பார்க்கும் போது மாபெரும் வணிக கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஒரு சில வெற்றியின் அம்சங்களினால், 15 வருட காலத்துக்குள் (1889-1905) ஒரு முழுமையை பெற்றுவிடும் என்பது நிச்சயம்.

"ஜனங்களுடைய கைகளில் இருந்து நாட்டின் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தை எடுத்து, அதை சில சிறப்பான டிரஸ்டுகளின் நிர்வாகத்துக்குள் கொண்டு வருவதற்கு நிச்சயமாய் மிக முக்கியமாக சமூக பின் விளைவுகள் இல்லாமல் இருக்கமுடியாது. அதுவும் இப்படிப்பட்ட விளைவுகள் நடுத்தரவர்க்கத்தின் மீது அசாதாரணமாய் இருக்கும். ஏழைகளுக்கும் படிக்காதவர்களுக்கும் இது ஒரு பிரச்சனையாக இனி இருக்காது. அவர்கள் வேலையை அவர்கள் செய்ய வேண்டும். ஆனால் படித்தவர்களுக்கும்

வசதிபடைத்தவர்களுக்கும் பிரச்சினை. ஏனெனில் வியாபாரம் செய்யவும் முதலீடு செய்யவும் வியாபாரத்தை கண்டுபிடிக்க வேண்டும். முன்பெல்லாம் போட்டி சுதந்திரம் உடைய வியாபாரங்கள் எல்லாம் இப்போது கூட்டுறவு ஸ்தானத்தில் மூடப்படுகிறது. இந்தக் கஷ்டம் தொடர்ந்து அதிகரிக்கும். நடுத்தரவர்க்க வியாபார வகுப்பினர் பாமரர்களாக மாறிவருகின்றனர்.

*"தற்போது குறிப்பிட்ட வழியில் தொழிற்சாலைகள் நடத்தப்படுமாயின் அதன் இறுதி முடிவை முன் குறிப்பது அவ்வளவு கடினம் அல்ல. முடிவாக இன்னும் குறுகிய காலத்துக்குள்ளேயே வியக்கத்தக்க அளவிற்கு சொத்துக்களுடைய ஒரு நூறு குடும்பங்கள் ஒரு புறமும், மறுபுறத்தில் தங்களது ஜீவனத்துக்காய் தொழி-ல் மீது சார்ந்திருக்கும் சம உரிமையை இழந்து பணியாளர் என்ற நிலைமைக்கும் அதற்கு கீழாகவும் தாழ்த்தப்பட்டு, பெருந்திரளான உழைப்பாளிகளான ஆணும், பெண்ணும் தங்களுடைய நிலைமையை உயர்த்திக் கொள்ள எந்தவித நம்பிக்கையும் அறவே இல்லாமல் வருடத்துக்கு வருடம் நம்பிக்கையற்ற நிலையில் அடிமைத்தனத்துக்குள்ளாய் மூழ்கிக் கொண்டிருக்கும் மற்றொரு கூட்டம் என்று சமுதாயம் இரண்டு பிரிவாக பிரிந்துவிடும். இது மிகவும் மனதுக்கு ரம்மியமான ஒரு சூழல் அல்ல. ஆனால் இது வணிக கூட்டுறவு முறையினால் சமுதாய பின் விளைவுகளை மிகைப்படுத்திக் கூறும் கூற்று அல்ல என்று நான் உறுதியாய் கூறுகிறேன்."*

இப்படிப்பட்ட எல்லாத் தீமைகளுக்கும் "தேசியமயமாக்குதலே" பரிகாரம் என்று திரு.பெல்லாமி குறிப்பிடுகிறார். அதை நாம் பிறகு ஆராயலாம்.

### போதகர் டாக்டர் எட்வர்ட் மெக்லைன் என்பவரது கருத்து

தொழில் மறுமலர்ச்சி மற்றும் குறிப்பாய் "ஒற்றை வரிக் கோட்பாடு" மீதான தன்னுடைய வாதத்தின் நிமித்தம் தன்னுடைய ரோமன் கத்தோ-க்க சபையின் மத அதிகாரிகளுடன் ஒரு முரண்பாட்டுக்கு டாக்டர் மெக்லைன் சில வருடங்களுக்கு முன் வந்ததை நினைவுபடுத்த முடியும். தன்னுடைய ரோம சபையுடன் சமரசமாகிவிட்டாலும் ஒற்றைவரி நபராகவே அவர் இருந்துவிட்டார். "டோனாஹோ" பத்திரிக்கை (போஸ்டன், ஜூலை 1895) யில் வெளிவந்த "திராளான சொத்துக்களை தடைசெய்வது மற்றும் உழைக்கும் மக்களுடைய தரத்தை உயர்த்துவது" என்ற தலைப்பில் அவரது கட்டுரையின் சாராம்சத்தை கீழே காணலாம் :



*"வியாபார நேர்மையை உலகம் தற்போது கடைபிடித்தால் வேண்டர்பில்ட் அல்லது ஆஸ்ட்டர்ஸ் அவர்களைப் போலவே பலநூறு கோடி சொத்துக்களை நேர்மையுடன் சம்பாதிக்க மனிதனால் கூடும். இவர்கள் நேர்மையற்றவர்களாய் இருப்பதனால்தான் இவர்களது ஆஸ்திகள் பெருகவில்லை. ஆனால் பொது கருவூலத்திற்கு தனிப்பட்ட தொழிலாளியின் சொத்து போய் சேரும் வழிகளை கவனிக்க தலைவர்களின் அறியாமையோ அல்லது கவன குறைவோ காரணமாக இருப்பதால் அரசாங்க கருவூலம் நிரம்பவில்லை. விநியோகத்தின் செயல்முறை தான் தவறாய் இருக்கிறது. ஆகவே உலகத்தின் செல்வத்திற்காக அதன் அனுதின பங்கை உழைப்பானது அளிக்கும் போது, அந்த பங்கின் செயல்முறையை குறித்து மிக கவனமான சிரத்தை எடுக்கப்பட்டால், உழைப்பாளி கச்சாப் பொருட்களின் மீது கையை வைத்து அதனை செல்வமாக மாற்றுவதற்கு துவங்கும் அந்த நிமிடம் முதல், முழுமைபெற்ற அந்த பொருள், அதன் ஒவ்வொரு நிலையிலும் கவனம் செலுத்தப்பட்டால், கோடிக்கணக்கில் பணம் அரசாங்க கருவூலத்தை சென்றடையும்."*

மிகத்திரளான சொத்துக்கள் மற்றும் குறைந்த ஊதியம் இவைகளை கணக்கிட்டுப் பார்ப்பதில் மூன்று அடிப்படை காரியங்கள் மிக கவனத்துடன் ஆராயப்படவேண்டும் என்று டாக்டர் மெக்லைன் அறிவுறுத்துகிறார். (1) மனிதன் தனது திறமையை செலுத்துகிறதான நிலம் மற்றும் இயற்கை வளங்கள் (2) போக்குவரத்து சாதனங்கள் (3) தயாரிப்புகளைப் பண்டமாற்ற உதவுகின்ற காரணியான பணம். பணம் உண்டாக்குபவர்கள் இந்த முக்கியமான விஷயங்களில் ஜனங்கள் மாறுபட்டவர்களாய் இருந்திருக்கின்றதை காணக்கூடும் என்று அவர் கூறுகிறார். நாம் குறிப்பிடுவது:

*(1) இந்த இயற்கை வளங்களை சுயாதீனப்படுத்திக்*

கொள்வதும் (2) சட்டம் மற்றும் பழக்கம் என்ற போர்வையின் கீழ் பிரத்தியேக உரிமையை எடுத்துக் கொள்வதும் (3) இவைகளை உபயோகிப்பதற்கு முன்னமே அதன் அனுகூலங்களுக்காக எல்லா மனிதரும் முன்பணம் செலுத்தும்படி செய்வதும், ஆரம்ப காலம் தொட்டு பணம் உண்டாக்குபவர்களது குறிக்கோளாக இருந்து வருகிறது. நிலத்தி-ருந்து வரும் அனைத்தையும், பருத்தி, கம்பளி, மரம், நிலக்கரி மற்றும் உணவு, இறைச்சி ஆகியவைகளை விலை கொடுத்து வாங்க வேண்டிய மில்-யன் ஜனங்களை 20 அல்லது 30 வருட காலமாக வரிவசூ-க்க முடியும் போது, நூறு மில்-யன் மதிப்புள்ள சொத்துக்களுக்காக தீவிரிப்பது ஒரு எளிய காரியமே. இதுதான் ஐரோப்பிய நாடுகளில் நேரடியாகவே செய்யப்படுகிறது. ஆனால் அயர்லாந்து மற்றும் பிரிட்டிஷ் நாட்டிலோ சட்டம் என்ற போர்வையின் கீழ் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பு ஒரு சிலரால் கைப்பற்றப்பட்டு, பின்பு அந்த நிலத்தை பெறுவதற்காக முத-ல் பணத்தைச் செலுத்தும்படி மக்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அதன் பிறகு அதில் அவர்கள் தொடர்ந்து உழைப்பதற்கான அனுமதிக்காகவும் பணம் செலுத்தவேண்டும்.

“மாபெரும் ரயில் பாதைகளுக்காக இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கொடுக்கப்பட்டு, பல்வேறு சூழ்ச்சிகளினால் இலட்சக்கணக்கான நிலங்களை வைத்துக் கொள்ளும்படி முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்பட்டு, இவையாவும் குடியேற்றம் என்ற அலை அடித்து இந்த சொத்துக்களை சொல்ல முடியாத அளவு மதிப்பிற்கு பெரிதும் உயர்த்தும் வரை மிக கடுமையான பிடிக்குள் வைத்திருக்கும்படி செய்து, இவைகள் விற்கப்படுவதினால் இங்கிலாந்தில் கோடீஸ்வரர்களை உண்டாக்கியதைப் போல், இந்த நாட்டிலும் ஐரோப்பாவிலும் கோடீஸ்வரர்களாக ஆவது சாதாரணமானதாகிவிட்டது. இவையாவும் இந்த நாட்டில் மறைமுகமாய் நடந்தது. பென்சில்வேனியா மற்றும் பிற இடங்களில் நிலக்கரி வியாபாரிகளது தொழில் மற்றும் செயல் முறைகளை குறித்து செய்தித்தாள்களை வாசிப்பவர்கள் மிகவும் பழக்கப்பட்டு போனார்கள். இவர்கள் சட்டம் என்ற போர்வையின் கீழ் மிகப் பெரிய



அளவில் நிலக்கரி உற்பத்தி செய்யும் மாவட்டங்களை பிடித்து வைத்துக் கொண்டு 40 வருடங்களாக நுகர்வோர் மற்றும் சுரங்கத்தொழிலாளிகள் மீதும் ஒரே விதமாய் வரிவசூ-த்து வந்தனர்.

“சிலர் இயற்கை வளங்களை தங்கள் முழு கட்டுப்பாட்டில் வைத்திருந்தது போலவே, நாட்டின் போக்குவரத்து சாதனங்களையும் கூட தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். வியாபார பொருட்கள் மிக சரியான முறையில் பரிமாற்றம் செய்யப்படாவிட்டால் சமுதாயம் எந்த முன்னேற்றத்தையும் அடையாது. நாகரீக வளர்ச்சி எல்லா பக்கங்களிலும் அபிவிருத்தியாக வேண்டுமாயின் தங்களுடைய கரத்தின் வேலைகளை பரிமாறிக்கொள்வதற்கு மனிதனுக்கு பெருமளவில் வசதிகள் இருக்கவேண்டும்.... ஆகவே போக்குவரத்து சாதனத்தின் வசதியானது, இயற்கை வளங்களின் வசதிகளைப் பெறுவதற்கு தொழிலாளருக்கு இன்றியமையாத அவசியமாயிற்று. மேலும் உண்மையான அர்த்தத்தில் சொல்லப்போனால் எல்லா மனிதருமே தொழிலாளர் ஆனபடியால், ஒரு தேசத்தின் போக்குவரத்து வசதிகளுக்கு தங்களை பொறுப்பாளராக வைத்துக் கொண்டிருக்கும் வெகுசிலர் மிகக் குறுகிய காலத்திலேயே மிக ஆச்சரியமான அளவிற்கு செல்வந்தராகிவிடுகின்றனர். ஏனெனில் அரசாங்கமே செய்வதைக் காட்டிலும் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் எல்லா மனுஷரிடமும் மிகுந்த செவ்வையாகவும் கிரமமாகவும் வரி வசூ-த்து விடுகின்றனர்.

“இன்றைய நிலைமையில் வேன்டர்பில்ட்ஸ் அவர்களின் சொத்துமதிப்பு 333 மில்-யன். இதை இவர்கள் எப்படி பெற்றார்கள்? கடின உழைப்பினாலா? இல்லை. முட்டாள்தனமான ஜனங்களால் முட்டாள்தனமாய் இடம்கொடுத்த சலுகைகளை உபயோகித்துதான்; நியூயார்க் நகரத்தின் மீது அவர்களுக்கு இருந்த அதிகார உரிமையின் மூலமாய்; தங்களுடைய சொந்த சாலைகளை உபயோகிக்க மக்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை நிர்ணயிப்பதற்குரிய உரிமை மூலமாக; தங்களுடைய சொந்தக் கரங்களின் சிருஷ்டிப்புகளைப் போல தேசத்தின் மீதான அளவுக்கு மிஞ்சிய ஆதிக்கத்தைக் கையாள்வதற்கான உரிமை... எந்த ஒரு தனிநபரோ அல்லது கூட்டுறவு ஸ்தாபனமோ இப்படிப்பட்ட பொது சொத்துக்களின்

மூலமாய் பில்-யன் கணக்கில் பெருமளவில் பெருந்தொகையை திரட்டுவதற்கு அனுமதிக்கப்படக்கூடாது……

“இதே போல் ‘பணம்’ என்ற பரிமாற்ற சாதனத்தையும் கூறலாம். இங்கே மறுபடியும் இந்த பிரச்னையின் ஆரம்ப கோட்பாடுகளை பொருத்தமட்டில் இந்த உலகமே ஒரே கடனுக்குள் மிதக்கிறது; பணத்தை கடன் கொடுப்பவர்களே லாபகரமான கோட்பாடுகளை நிர்ணயிக்கின்றனர். இதனால் பணத்தை உபயோகிக்கும் ஒவ்வொரு மனிதனின் மீதும் இவர்களால் வரிவிதிக்க முடிகிறது. மனிதனுக்கும் பரிமாற்ற சாதனத்துக்கும் இடையில் தங்களை இவர்கள் நிறுத்திக் கொண்டனர். அதே போல் மற்றவர்கள் மனிதனுக்கும் இயற்கை வளங்களுக்கும் நடுவிலும், மனிதனுக்கும் பொருட்களை சந்தைக்குக் கொண்டு செல்லும் போக்குவரத்து வசதிகளுக்கு நடுவிலும் நிறுத்திக் கொண்டனர். ரோத்ஷில்ட் செய்தது போல மில்-யன்களை சேகரித்துக் கொள்ள இவர்களால் எப்படி முடியும்? இதன் பெரும்பகுதி சமுதாயத்தின் கருவூலத்தை போய் சேரவேண்டியவை.”

இப்படியாக டாக்டர். மெக்லைன் தன்னுடைய முடிவுரையை சுருக்கி கூறுகிறார்:

“உழைப்பின் விலையை சரியாய் கடைபிடிக்கவும், சட்டத்தை தீவிரமாய் பாதுகாக்கவும், முதலீட்டாளர்கள் தங்களுடைய பணியாளரை சரியானபடி வைத்து நடத்தவும், நிலச் சொந்தக்காரரர்கள் நல்ல வாடகையை அளிக்கவும் மற்றும் இது போன்ற பல காரியங்களுக்கு “சங்கங்கள்” நல்லதே. ஆனால் நமது எல்லா கஷ்டங்களின் வேரும், சமுதாயத்தில் நமது சமமற்ற நிலைமைக்கான காரணமும், மிகப்பெரிய சொத்துக்களுக்கும் மிகக் குறைந்த ஊதியத்துக்குமான காரணமும், சமுதாய நாகரீக வளர்ச்சியின் வாழ்வுக்கான மூன்று அத்தியாவசிய தேவைகளில் வேறுபாடுகள் பொதுவாகவே இருப்பது காணப்படவேண்டும். ஊதியத்தை நிரந்தரமாய் உயர்த்தி, “வேன்டர் பில்ட்” மற்றும் “கேர்ணகி”யின் சொத்துக்குவிப்பு அவசியமற்றதால் அதை இனிமேலும் தொடரவிடாமல் நாம் செய்வதற்கு முன்பு , பரிமாற்ற சாதனத்தையும் இயற்கை வளங்களையும், வியாபாரிகளின் கையி-ருந்து விடுவிப்பது எப்படி என்பதை நாம் கற்றுக் கொள்ளவேண்டும்.”



“ஒற்றை வரி” கோட்பாடு தான் டாக்டர் மெக்லைனின் பரிகாரமாக இருக்கிறது. இதை பின்வரும் பகுதியில் நாம் ஆராயலாம். எனினும் தன்னுடைய சக குடிமக்களை கட்டுப்படுத்தும் அதே சட்டத்தின் கீழே தான் ஆஸ்டர்களும் வேன்டர்பில்களும் தங்களுடைய சொத்துக்களை ஈட்டியிருக்கின்றனர். இந்தச் சட்டம் இதுவரையிலும் உலகம் கண்டிராத மிகுந்த நியாயமும், நடுநிலைமையும் கொண்டதொரு சட்டம் என்று மதிக்கப்படுகிறது என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். சுய-நலத்துடன் பொது நலனில் அக்கறை இல்லாமல் “வேன்டர்பில்ட்” அவர்கள் மாபெரும் பொதுச்சேவை மற்றும் மாபெரும் பொதுநலனுடன் தொடர்பு கொண்டே பல மில்-யன்களை சொந்தமாக்கி கொண்டார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகள் சமுதாய சமநிலையில், மூளையும் உடல்வ-மையும் குறைத்து மதிப்பிடப்பட்டு நிலம், இயந்திரம், செல்வம் இவைகளின் பிடிப்பினால் ஒரு பூரண சீர்திருத்தத்தை உண்டாக்கியிருப்பது குறிப்பான விஷயமாய் கவனிக்கப்படவேண்டும். புதிய நிலைமைக்கு பொருந்துகின்றபடி சரியாய் மாற்றியமைக்கப்பட்ட சட்டத் தொகுப்பு தேவைப்படுகிறது. ஆனால் இங்குதான் கஷ்டமிருக்கிறது; முதலீடு மற்றும் உழைப்பு ஆகியவற்றில் ஆர்வமுடைய இரு வகுப்பாருமே சூழ்நிலையை மிகவும் நியாயமாகக் கருத்தில் கொள்ளமாட்டார்கள். ஆகவே திருப்திகரமானதொரு மாற்றத்தை உருவாக்க முடியாது. பொதுவாகவே கட்டாயப்படுத்தினால் ஒழிய சமநிலையை பொருத்தவரை இரு வகுப்பாருமே குருட்டாட்டமான சுயநலத்தினால் ஆளப்படுவதால், நீதியை காண முடியாது என்று கூறலாம். புதிய சூழ்நிலையானது “அன்பை” ஆதாரமாகக் கொண்டு அமைக்கும்படியான விவகாரமாய் இருக்கிறது; மேலும் முரண்பாடான இரு கூட்டத்தாருக்குள்ளும் மிகவும் சிறுபான்மையோர் மட்டுமே இந்தக் குணாதிசயத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே சுயநலத்தை அடிப்படையாகக்

கொண்ட தற்கால சமுதாய ஒழுங்குமுறையை மட்டுமே தாக்கக்கூடியதாக இல்லாமல், எல்லா வகுப்பினரும் அனுபவரீதியாய் புதிய சமூதாய ஒழுங்குமுறையை வரவேற்கும் விதமாகவும், மேசியாவின் ஆளுகையின் கீழ் நிர்மாணிக்கப்பட வேண்டிய “புதிய வானம், புதிய பூமியை” உருவாக்கும் படியாகவும் ஒரு உபத்திரவம் வரும்.

**பேராசிரியர் டபிள்யூ.கிரஹாமின் (W.Grahem) கண்ணோட்டம்**

பேராசிரியர் டபிள்யூ கிரஹாம் என்ற மற்றொரு எழுத்தாளர், “தி நைன்டீன்த் சென்சுரியில்” *(பிப் 1895)* இங்கிலாந்தில் “பொதுவுடமைக் கொள்கை” என்று அறியப்பட்ட சமுதாய பிரச்சினையின் கோணத்தில் விவாதித்தார். இது உற்பத்தி முறை மற்றும் உற்பத்தி சாதனங்களை முற்றிலுமாய் ஜனங்கள் சொந்தமாய் அடையவோ அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவோ கூடியதான ஒரு கோட்பாடாகும்; இது முதலாளித்துவத்துக்கு எதிரானது. மனிதருடைய இருதயங்களை புதிதாக்குதல் என்பது எண்ணிப்பார்க்க முடியாததாக இருக்கின்றபடியினால், நீண்ட காலத்துக்கு பிறகே ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மட்டுமே இந்த முறை அறிமுகப்படுத்தக் கூடியது என்று பேராசிரியர் கிரஹாமின் முடிவாக இருக்கிறது. அவர் கூறியதாவது:

“இது நடைமுறைப் படுத்த முடியாதது. குறைந்தபட்சம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிதானமாய் தொடங்கி தீவிரமடையும் சமூக பரிமாண வளர்ச்சியின் விளைவாக, நிரந்தரமாய் வேர் ஊன்றியிருக்கும் மனித சுபாவத்தில் பொதுப்படையான அற்புதத்தினால் பெருவாரியான மனிதரில் மாறுதல் உண்டானாலொழிய இது சாத்தியமில்லை. மேலும் நான் நம்புவது என்னவெனில், ‘சோஷ-ஸம்’ என்பதை முழுவீச்சில் இந்த நாட்டில் கொண்டு வர முயற்சி செய்தாலும் அதிக வோட்டு எண்ணிக்கையையுடைய பார்-மென்டின் அதிகபட்ச ஆதரவு இருந்தாலும் கூட மிகவும் தைரியமான அபிப்பிராயத்துடன், சிறுபான்மையினரால் தீவிரமாய் எதிர்க்கப்படும்; அது எதிர்க்கப்படும் காரணம் என்னவெனில் அதனால் பறிமுதல் மற்றும் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார புரட்சியும் கூட நிச்சயமாய்



உண்டாகும். ஒருவேளை அது சில சந்தர்ப்பங்களில் கட்சிகளின் கூட்டு அமைப்பினால், பிரான்சு போன்ற நாட்டில் இருந்தது போல சோஷ-ஸம் ஏற்படுத்தப்பட்டாலும் அது நிலைத்திருப்பது கூடாத காரியமாகும். இதை நடைமுறைப்படுத்த முடியாத காரணத்தினால், குறைந்தபட்ச அளவு கூட சேமிப்பை காட்ட இயலாது. ஒரு வேளை சாத்தியமானால், பங்குகள் (ஷேர்கள்) வீழ்ச்சியடைந்து, பொதுவான சமூக கலவரம், எல்லா வகுப்பினரிடையேயும் ஏழ்மையுடன் கூடிய தீமைகள், மேலும் இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் அதிகமாக வறுமை ஆகியவை உண்டாகக்கூடும்.”

“பொதுவுடைமை” என்பது வேறு ஏதவாது வழியில் நிறுவப்பட்டு நடைமுறைக்கு வந்திருக்குமேயாகில் அது திருப்திகரமாய் செயல்பட்டிருக்கக்கூடுமோ? என்று பேராசிரியர் இந்த கருத்துகளின் சரியான தோற்றத்தை கொடுப்பதற்கு கேள்வி கேட்கிறார். பதிலோ எதிர்மறையாய் இருக்கிறது. அவர் கூறுகிறார்:

“தங்களால் முடிந்ததை மிகச்சிறந்த முயற்சியோடு அளிப்பதற்கு அவர்களை தூண்டும் விதத்தில் கூடுதலான ஊதியத்தை அவர்கள் முன்வைத்தால் ஒழிய, கண்டுபிடிப்பாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், மேஸ்திரிகள் ஆகிய எல்லாரிடத்திலுமே முயற்சிகளில் ஒருவித மந்தநிலை இருக்கவே செய்யும்; சுருக்கமாய் சொல்லப்போனால் தற்போது நிலவுகிற தனிப்பட்டவரது விருப்பங்களுடைய மிதமிஞ்சிய மற்றும் அளவு கடந்த தூண்டுதலானது நீக்கப்பட்டாலொழிய அதன் விளைவாய் இனிவரும் தயாரிப்புகள் அவற்றின் அளவிலும் தரத்திலும் குறைந்து போகக்கூடியது தவிர்க்கமுடியாததாகிவிடும். குறைந்த பட்சம் ‘தாராளமான உற்பத்தியாவது’ கொடுக்கப்படவேண்டும். மேலும் மனிதர்கள் மாறாமல் அப்படியே இருக்கின்ற வரையிலும், அப்படி இருக்கவே இஷ்டப்படுவதினாலேயும் அவர்களது சம்பளமாவது சற்று தாராளமாய் இருக்கலாம். அதாவது இந்த மேலான உழைப்பாளிகளை பொருத்தமட்டிலாவது ஊதியம் கொடுப்பதில் இருக்கும் சமத்துவம் நீக்கப்படவேண்டியதாயிருக்கும். அப்படியில்லாவிடில் யாவருமே சமமாய் பகிர்ந்து கொள்ளக்கூடியதாக ஏழ்மையே இருக்கும். தங்களை விட சற்றே மேல் மட்ட வகுப்பில் இருக்கும் யாவரையுமே தங்களுடைய ஏழ்மையில்

பங்கு கொள்ளும்படி அவர்களையும் கீழே இழுத்துவிட்ட அல்ப திருப்தியையே சாதாரண உழைப்பாளிகளும் பெறுவார்கள்."

நாகரீக வளர்ச்சியின் வீழ்ச்சியை தவிர்க்கவும், மறுபடியும் காட்டுமிராண்டித்தனத்துக்கே திரும்பிப் போய் விடாதிருக்கவும் பேராசிரியர் கூறுவது : ஊதியத்தில் வேறுபாடும், தனியார் வியாபாரங்களையும், மறுபடியும் அறிமுகப்படுத்தவேண்டியதன் அவசியம் மிக விரைவில் வந்துவிடும். போட்டி, தனியார் கடன்கள், கொடுக்கல் வாங்கல், வட்டி போன்றவை படிப்படியாய் அனுமதிக்கப்படவேண்டும். அப்போது முடிவில் இந்த புதிய முறையானது தற்போதிருக்கும் முறையைக் காட்டிலும் கொஞ்சமாகிலும் மாறுதலைக் கண்டிருக்கும். முடிவாக அவர் கூறியதாவது :

"காரியங்கள் மாற்றியமைக்கப்படும் வரையில் இன்னும், இன்னும், இன்னும் பழைய திசையிலேயே சென்று, முடிவில் தவிர்க்கமுடியாததாகிய புரட்சித் தாக்குத-ல் சென்றடையும். அநேகமாய் தங்களது ஆதரவாளர்களின் விழ்ச்சியையும், தங்களது மத வைராக்கியத்தின் தோல்வியையும் எதிர்கொள்ள இனிமேல் ஆட்சி செய்யும் வகுப்பினர் விருப்பம் கொள்ளாததினால் இதற்கு மேல் புதியதொரு உள்நாட்டுக் கலவரம் இருக்காது. ஆளும் அரச பரம்பரையில் அல்ல, சமூக அமைப்பில் ஒரு பிரம்மாண்டமான சீர்திருத்தம் இருக்கக்கூடும். ஒவ்வொரு நாகரீக வளர்ச்சியின் கீழும் ஒரு நிதானமான பரிணாம வளர்ச்சியாகவும், கூடிவாழும் நிலையாகிய மனித சுபாவத்துக்கு மிகவும் பொருத்தமானதொரு அமைப்பாகவும் மற்றும் நமது சிக்கலான நவீன வளர்ச்சியின் சரீர மற்றும் சமுதாய சூழ்நிலையின் கீழ் இன்னும் அதிகமான பொருத்தத்துடனும் தனியார் ஆஸ்தி மற்றும் ஒப்பந்தங்களின் மீது ஆதாரம் கொண்டிருக்கிறதான பழைய அமைப்பில் சீர்திருத்தம் இருக்கும்."

பொதுவுடைமை மூலமாய் ஜனங்களுக்கு ஏற்கெனவே அக்கறை காட்டப்பட்டுவிட்டது என நாம் நம்புகின்றோம். உதாரணமாய் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொதுபள்ளிமுறை, வளர்ச்சியடைந்த உலகின் தபால் முறைகள், தண்ணீர் விநியோகத்தில் முனிசிபா-டியின் உரிமை போன்றவை. இன்னும் கூட அநேக காரியங்கள் இதே விதத்தில் செயல்படக்கூடும். உலகத்தையே இன்று அசைத்துக் கொண்டிருக்கும் சுயநலம் என்பது துண்டிக்கப்பட்டு அதே அளவிற்கு ஒரு புதிய உத்வேகமானது (அன்பு) அந்த இடத்தைப் பிடித்து இவர்களையோ அல்லது உலக வியாபரத்தையோ சட்டென்று ஒரு ஸ்திரமான நிலைக்கு கொண்டு வரக்கூடும் என்றதொரு வாதத்தை விவேகமுடைய எல்லா மனிதரும் ஒப்புக் கொள்ள வேண்டும். அல்லது உலக வியாபாரம் திடீரென ஸ்தம்பித்து விடும். தொழி-ன் இடத்தை சோம்பேறித்தனமும், சௌகரியம் மற்றும் செல்வ செழிப்பை, ஏழ்மை மற்றும் பற்றாக்குறைகள் பிடித்துவிடும்.



நமக்கென்று பரிந்து பேசக் கூடிய சொந்தமான ஒரு தனிப்பட்ட கொள்கை இருக்கிறது என்பதனால் இந்த கஷ்டங்களை நாம் எடுத்துக் கூறவில்லை. ஆனால் வேதத்தின் மூலமாய், பரத்தி-ருந்து வரக்கூடிய ஞானத்திற்காக வேண்டி நிற்பவர்களுக்கு, தற்கால இக்கட்டின் ஒரு உதவியற்ற நிலைமையில் மனிதன் இருப்பதைக் காணமுடியும். அதோடு அதற்குண்டான பரிகாரத்தை ஏற்ற காலத்தில் கர்த்தர் செயல்படுத்துவார் என்று கர்த்தரின் மீது விசுவாசத்தோடு நம்பிக்கைக் கொண்டு இருப்பவர்களுக்கும் இதைச் சொல்லுகிறோம்.

## உச்சநீதிமன்ற நீதிபதியின் கருத்துக்கள்

ஏல் கல்லூரியின் சட்டப்பிரிவு முன்னாள் மாணவர்கள் கூட்டத்தில் ஜஸ்டிஸ் ஹென்றி பி.பிரௌன் தனது உரையில் மையப்பொருளாய் எடுத்துக்கொண்டது, "இருபதாம் நூற்றாண்டு" என்பதாகும். இருபதாம் நூற்றாண்டின் மாற்றங்களாக இவர் குறிப்பிடுவது , அரசியல் மற்றும் சட்ட ரீதியாக இருக்கும் என்பதை விட சமூகரீதியாய் இருக்கும் என்றும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் மிக நெருங்கிய எதிர்காலத்தை அச்சுறுத்துகிறதான மிகத் துல்-யமான சுழற்காற்றுகளானவற்றை (1) முனிசிபல் ஊழல் (2) கூட்டுறவு சங்கங்களின் பேராசை (3) உழைப்பாளர்களின் கொடுமை என்று அந்த மூன்றுக்கும் பெயரிடுகிறார். அதோடு கூட அவர் கூறுவதாவது:

"சொத்துக்களின் வ-மை இந்த நாட்டைப்போல் வேறு எந்த நாட்டிலும் இல்லை. அதோடு நமது நாட்களில் இருப்பது போன்ற வல்லமையுடன் சரித்திரத்தில் நம்நாடு எந்த காலக்கட்டத்திலேயுமே

இருந்ததில்லை. கலகக்கார கூட்டத்தினர் நியாயமற்று இருக்கின்றனர். தங்களுடைய பகையை தீர்த்துக் கொள்வதற்குச் சரியான காரணம் இன்றி. சமுதாயத்தின் எல்லா வகுப்பினர் மீதும் தாக்குதலை நடத்த சாக்குபோக்கு சொல்லும் சுபாவம் உடையவர்களாய் இருக்கின்றனர். கடந்த கோடை கால (1895) த்தில் நடந்த மிகப்பெரிய கலவரத்துக்கு, அனுதாபம் காரணமான தாக்குதல், என்ற பெலவீனமான சாக்கைத் தவிர வேறு எந்தக் காரணமும் கிடையவே கிடையாது. ஆனால் அதற்குப் பின்னால் மிக ஆழ்ந்த மனவருத்தங்கள் இருந்தன. செல்வமானது பொதுவான நியாயத்தின் சட்டங்களை மதிக்காவிட்டால் அதனுடைய ஆக்கிரமிப்பை எதிர்ப்பவர்களின் பட்சத்தி-ருந்து விவேகத்தையும், நிதானத்தையும் அது எதிர்பார்ப்பதில் எந்தவித நியாயமும் கிடையாது.

"கூட்டுறவு சங்கங்களின் பேராசையை குறித்து, அது நாட்டின் பேராபத்துகளுக்கான மற்றொரு முக்கிய காரணம் என்று பேசினேன். ஒரு பகுதியி-ருந்து மற்றொரு இடத்தில் வியாபாரம் செய்வது ஒன்றையே நோக்கமாகக் கொண்டு கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டன. நீதிமன்றத்தில் உள்ள அவர்களது சச்சரவுகளை நீக்குவதற்காக "மிசிசிப்பி"யின் கிழக்கு மாகாணம் கொடுத்த உரிமையின் கீழ் க-போர்னியாவில் ரயில்பாதைகள் கட்டப்பட்டன. இதனுடைய இயக்குனர்களே இதை கட்டும் பணியில் மாபெரும் ஊழலை செயல்படுத்திவிட்டனர். வேறொரு கம்பெனியானது - கட்டுமான பணியின் கம்பெனியின் பினாமியாக இருந்து அனைத்து பத்திரங்கள், அடமானங்கள் மற்றும் எல்லா பங்குகளையும் சாலைகளின் சரியான மதிப்பு இன்றி விற்றுவிட்டது. இயக்குனர்களால் உருவாக்கப்பட்ட மற்றொரு ஸ்தாபனம் அந்த இரயில் பாதையில் இரயிலை வாங்கி குத்தகைக்கு விடுகிறது. எனவே அடமானம் வைத்துக் கொள்பவரது லாபத்துக்காய் பங்கு வைத்திருப்பவர் பரிமுதல் செய்யும் தவிர்க்கமுடியாத சூழ்நிலை வரும்போது வஞ்சகம் செய்வதாகத் தெரிகிறது. மேலும் இயக்குனர்களின் ஆதாயத்துக்காக மோசடி செய்கின்றனர். இப்படியாக செல்வமானது நேர்மைக்கு மாறான முறையில் சம்பாதிக்கப்பட்டது. மற்றும் தன்னுடைய பாதுகாப்புக்காக சட்டத்தின் உதவியை வேண்டி நிற்கும் சாதகமான நிலையில் அறநெறி இல்லை.



"இதை விட மோசமாய் "டிரஸ்டுகள்"என்று தங்களை அழைத்துக் கொள்ளும் கூட்டுறவு ஸ்தாபனங்களின் கூட்டணிகள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தி வாழ்வின் தேவைகளுக்கான போட்டியை குறைத்து சர்வாதிகாரம் செலுத்துகின்றன. இதனுடைய காரியங்கள் ஏற்கெனவே எல்லையை மீறிவிட்டதால் அபாயக்குரல் எழுகிறது. இதற்கும் மேல் போவதென்றால் அது புரட்சிகரமானதாக இருக்கும். உண்மையென்னவென்றால் கூட்டுறவுகளின் எல்லா சட்டங்களுமே முற்றிலும் சீர்படுத்தப்படவேண்டியிருக்கிறது. ஆனால் நாற்பத்தி நான்கு மாநிலங்களுக்காகவும் ஒருமுகப்படுத்திய செயலை பெறுவது ஒரு கடிமான காரியமாக இருக்கிறது.

"முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் இருந்து வருகிற மூன்றாவது மிகத்தீவிரமான ஆபத்தாகிய - உழைப்பாளர்களின் கொடுமைக்கு நேராகத்தான் நான் உங்கள் கவனத்தை திருப்புகிறேன். உழைக்கும் மனிதன் வற்புறுத்திப்பெறும் தனது உரிமைகளுக்கு இணங்கவும் வேண்டும் என்பதை உணர்வதில் இருக்கும் இயலாமையில் இருந்து தான் இது உதயமாகிறது. உழைக்கும் மக்கள் நாட்டின் சட்டங்களை எதிர்த்து தங்களுடைய சொந்த வீடுகளையும், தங்களுக்கு மே-ருக்கும் முதலாளிகளின் வீடுகளையும் இழுத்து எறியலாம். ஆனால் இயற்கைச் சட்டங்களைக் கட்டுப்படுத்த அவர்களுக்கு சக்தியில்லை. விநியோகம் மற்றும் தேவை என்கிற மகத்தான சட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் கொஞ்சகாலம் செழுமையடைந்து பிறகு அழிந்து, மூலதனம், உழைப்பு ஆகிய இரண்டும் தங்களுக்குரிய பலன்களை பெற்று விடுகின்றன."

மிகுந்த நியாயமான மனதுடன் இருக்கின்றபடியால் எதிரான திசைகளை நோக்கிச் செல்லும் இவைகள் என்றுமே ஒன்றாக இணைய முடியாது. இந்த மூலதனம் மற்றும் உழைப்பிற்கு இடையில் ஒப்புரவு என்பதற்கே எந்த நம்பிக்கையையும் நீதிபதி பிரௌன் காணவில்லை. மேலும் அவர் கூறுவதாவது :

"இவைகளுக்கு இடையிலான இந்த முரண்பாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ந்து, கசப்பானது இன்னும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இதற்கு ஒரு முடிவு என்பதே இல்லாமல் போய்விட்டது. ஒரு அமைதியான கொலை அல்லது ஒரு

நட்புடனான போர் குறித்து பேசுவதைப் போல் இது இருக்கும். ஒவ்வொரு உழைப்பாளியும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஒரு மூலதனக்காரராய் ஆகக்கூடிய அளவிற்கு ஒத்துழைப்பு அல்லது லாபத்தில் பங்கீடு என்ற ஒரு சமரசம் சாத்தியமானதாக இருக்கிறது. ஒருவேளை மேலான கல்வி, பரந்த அனுபவம் மற்றும் அதிகமான அறிவுக்கூர்மை ஆகியவற்றின் உதவியோடு 20ம் நூற்றாண்டின் உழைப்பாளி தனது குறிக்கோளாகிய தன்னுடைய பாடுகளின் முழுமையான லாபத்தினை அடையக் கூடும்."

கூட்டுறவு ஸ்தாபனங்களின் தீமைகளினால் உண்டாகிற சமுதாய அமைதியின்மையை குறிப்பிடும் பொழுது, இதை ஒரு பரிகாரமாக அல்ல, ஆனால் "இயற்கையான உரிமை" என்பது தணிக்கக்கூடிய ஒன்று என்று கருதுகிறார். இந்த அனுகூலமான காரியங்களை அரசாங்கம் அல்லது முனிசிபா-ட்டி நேரடியாக நடைமுறைப்படுத்திப் பார்க்கவேண்டும் என்று நினைக்கிறார். கார்ப்பரேஷன்கள் லஞ்சத்தினால் பதவிக்காக போட்டியிட்டு சண்டையிடுவதைக் காட்டிலும் இது மேலானது என்கிறார். அவர் மேலும் கூறுவதாவது:

"பொது மக்களின் நலனுக்காக இருக்கவேண்டிய ஓட்டெடுப்பு என்பது பொது மக்களால் ஏன் நேரடியாய் நடத்தப்படக் கூடாது என்பதற்கு வலுவான காரணம் இருப்பதாக தெரியவில்லை. நவீன சட்டதிட்டங்களை பொறுத்தமட்டில் அப்படி நன்கு வளர்ச்சியடைந்த நாடுகளில் அல்ல. ஆனால் நம்மிடையே அப்படித்தான் இருக்கிறது. இங்கே 'பேட்டர்ன-ஸம்' (குடும்பவழி அதிகாரம்) மற்றும் சோஷ-ஸம் ஆகியவற்றின் ஆபத்துக்களை காண்பித்து மாபெரும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் பொதுமக்களுக்கு உரியதான ஓட்டுரிமையைத் தங்களிடம் தக்க வைத்துக்கொள்வதில் வெற்றியடைந்து விட்டன."

இந்த கனவான், அமெரிக்க ஐக்கிய நாட்டின் உச்சநீதிமன்றத்தில் ஆயுசுகாலம் முழுவதும் பணியாற்றக் கூடிய தன் உறுப்பினர் நிலையைக்குறித்து பேசுகிறார். எனவே தற்போதைய சூழ்நிலைக்கு ஒரு நிவாரணமாய் அமையக்கூடியதை எல்லாம் தன் அறிவின் நிமித்தம் இவர் சுட்டிக்காட்டக்கூடும், அநேகமாய் அவர் செய்தும் இருக்கிறார். ஆனால் தற்கா-க நிவராணமாய் கூறப்பட்ட



காரியம் தான் என்ன? வங்கி வைத்திருப்பவர்கள், கார்ப்பரேஷன்காரர்கள் மற்றும் கம்பெனி பங்குதாரர்கள் ஆகியவர்களைத் தவிர மற்றெல்லாரும் ஒரு தற்கா-க லாபம் பெறக்கூடிய சோஷ-சம் (தேசீய - பொதுவான உரிமை) என்பது மட்டுமே - இதைவிட அதிகமாய் ஒன்றுமில்லை; மூலதனம் அத்தனை வலுவான நிலையி-ருப்பதால் இந்த யோசனையும் கூட ஒப்புக்கொள்ளக்கூடியதா என்பது சந்தேகமாய் காணப்படுகிறது.

## 'கிளமென்சு'வின் "சமுதாய பூசல்"

பாரிசின் 'லாஜஸ்டிஸ்' என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் சில காலங்களுக்கு முன் '- மி- சோஷ-' என்ற புத்தகத்தை வெளியிட்டார். அதனுடைய ஆசிரியர் ஒரு சட்டசபை அங்கத்தினர் என்ற முக்கியத்துவத்தாலும், ஒரு பத்திரிக்கை ஆசிரியர் என்பதாலும் அந்த புத்தகம் அனைவரது கவனத்தையும் மிகவும் கவர்ந்தது. மிருக மற்றும் தாவர உலகத்தில் இருப்பது போன்று, மனித சமுதாயத்திலும் வாழ்வுக்கான கொடூரமான, இரக்கமற்ற போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துகிற சமூக பிரச்னையைக் குறித்து அது தீவிரமாய் ஆராய்கிறது. மேலும் நாகரீக வளர்ச்சி என்பது உண்மையில் ஒரு மெல்-ய மேல்பூச்சாகும். இது மனிதனுடைய அடிப்படையான மிருகத்தனத்தை மூடிமறைக்கிறது. சமுதாயத்தின் மொத்த சரித்திரமே முதலாவது கொலைகாரனான காயீன் மூலம் அடையாளமாய் காட்டப்பட்டிருக்கிறது என்பதை இவர் காண்கிறார். ஆனால் இந்த நவீன காயீன்கள் தங்களுடைய சகோதரரை நேரடியாய் கொல்லாமல், மோசடி அல்லது பலாத்காரம் என்பவைகளினால் நசுக்க முயன்று, தனது அதிகாரம் என்னும் அனுகூலத்தை பெற்றுவிட்டனர். இப்புத்தகத்தின் சில ஆணித்தரமான விஷயங்களின் சாராம்சத்தை நாங்கள் கீழே அளிக்கிறோம்:

"மனித வம்சம் தோன்றியது முதல், மனிதன் மற்றொரு மனிதனுடன் என்றுமே சண்டை செய்து கொண்டுதான் இருந்திருக்கிறான் என்ற வெளிப்படையான மற்றும் எளிமையாக உண்மையை கண்டுபிடிக்க, மனுக்குலத்திற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் தியானமும், மாபெரும் சிந்தனையாளரின் ஆராய்ச்சியும் தேவையாக இருந்திருக்கிறது என்று குறிப்பாய் எனக்குத்

தோன்றுகிறது. உண்மையில், ஒழுங்கின்மை முதல்முத-ல் இது உலகில் ஆரம்பித்தது முதல் ரத்தம் படிந்த, உலகளா-ய படுகொலையானது தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. இந்த ஆச்சரியமான காட்சியை கற்பனை செய்து பார்ப்பது கடினமானதாயிருக்கிறது.

“பலவந்தமாய் வேலை வாங்கப்படும் அடிமையும் கூ-க்காக உழைக்கும் சுதந்திரமான தொழிலாளியும் ஆகிய இருவருமே - ந-ந்தவரது தோல்வி மற்றும் வ-யவரது சுரண்டல் என்ற பொதுவான ஆதாரத்தின் மீதே இருக்கிறார்கள். பரிணாம வளர்ச்சியானது போரின் நிலைமையை மாற்றியமைத்திருக்கிறது. ஆனால் இன்னும் அதிகமான அமைதியான தோற்றத்துடன் உயிருக்கான இந்த போராட்டம், இன்னும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. தனது சொந்த தேவைகளுக்காக பிறருடைய உயிரையும் உடலையும் அபகரிப்பதுதான் - பெரும் முதலாளிவர்க்கம், அடிமைகளின் உரிமையாளர், நரமாமிச உண்ணிகள், மற்றும் நமது காலத்தின் முதலாளிகள் வரை மனிதரில் பெரும்பான்மையானவர்களின் நோக்கமாக இருந்து வருகிறது.”

“பசிஎன்பது தான் மனுகுலத்தின் எதிரி. இந்த கொடூரமான, எதிரியை மனிதன் ஜெயங்கொள்ளாத வரைக்கும் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் அவனது துக்கத்தை அதிகப்படுத்தும் கருவியாக மட்டுமே இருக்கக்கூடும். இது வாழ்வின் மிக அத்தியாவசியத் தேவைகள் கூட அளிக்கப்படாதபோது, ஒரு மனிதனுக்கு வாழ்வின் ஆடம்பரங்களைக் கொடுப்பதைப்போல் இருக்கும். இது தான் இயற்கையின் நியதி, அதனுடைய சட்டங்களிலேயே மிகவும் கொடூரமானது. அது மனுக்குலத்தை தன்னைத்தானே சித்திரவதை செய்து அழித்துக்கொண்டு வாழ்வு என்று அழைக்கப்படும் அதிமேன்மையான நன்மை அல்லது தீமையானதை எந்த விலை கொடுத்தாகிலும் பாதுகாக்க கட்டாயப்படுத்துகிறது.

“மற்ற உயிர்கள் மனிதனின் ஜீவாதார உரிமையை சர்ச்சை செய்கிறது. அவன் சமுதாயங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் தன்னைத்தானே தற்காத்துக்கொள்ளுகிறான். அவனது தோல்விக்கான முதல் காரணமாகிய மாம்சீகமான பெலவீனத்துடன் தற்போது அவனது சமூக பெலவீனமும் சேர்ந்து கொண்டது. ஏழ்மை அல்லது



பசியினால் ஏற்படக்கூடிய சாவை அறவே நீக்கிவிடக்கூடிய ஒரு சமுதாய அமைப்பை திட்டமிடவும் அதை நிறுவவும், கூடிய அளவிற்கு நாகரீக வளர்ச்சியை அடைந்து விட்டோமோ? இதற்குண்டான பதிலைக் கொடுக்க பொருளாதார வல்லுனர்கள் தயங்கமாட்டார்கள். அவர்கள் மிகத் தைரியமாக எதிர்மறையில் தான் (இல்லை என்று) கூறுவர்.”

திரு.எம்.கிளமென்சு வின் பார்வையில் பசியை ஒழிப்பதும் வாழ்வுக்கான உரிமையை அங்கீகரிப்பதும் அரசாங்கம் மற்றும் சமூகத்தின் செல்வம் படைத்த அங்கத்தினர்களின் கடமை என்கிறார். உரிமை என்ற விஷயத்துக்காக மட்டுமே அன்றி தகுதியானதும் கூட என்பதால் இந்த துரதிருஷ்டவசம் மற்றும் இயலாமையை குறித்து சமுதாயம் அக்கரை கொள்ளவேண்டும். நாம் மறுபடியும் குறிப்பிடுவது:

“துரதிஷ்டசா-களைக் காப்பாற்றுவது என்பது செல்வந்தர்களின் கடமை அல்லவா? அடிமைத்தனம் இன்று இந்த சமுதாயத்தில் இருக்கும் போது ஒரு மனிதன் (பசியினால்) சாகும்போது, மற்றொருவன் என்ன செய்வது என்று தெரியாமல் பல கோடிகளை வைத்திருக்கும் பரிதாபமான காட்சி, உண்மையில் சகிக்க முடியாத ஒன்றாக மாறக்கூடிய நாள் ஒன்று வரும். பாமர மக்களின் கஷ்டங்கள் ஐரோப்பாவிலும் கூட எவ்விதத்திலும் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகத் தெரியவில்லை. சுதந்திர அமெரிக்காவில் இருப்பது போலவே, அட்லாண்டிக்கின் இந்த புறத்திலும் அதே அளவிற்கு மோசமானதாகவே, ஒவ்வொரு ஏழையின் துர்ப்பாக்கியம் இருக்கிறது.”

மேலே கூறப்பட்டிருப்பது ஒரு பிரெஞ்சு நாட்டவரின் கருத்து. அமெரிக்க ஐக்கிய நாட்டைக்காட்டிலும் பிரான்சில் இந்த விஷயங்கள் மோசமானதாக இருக்கும் என்பது உண்மையாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஆனால் இங்கே தாராளமான வரியும் அதோடு கூட தாராளமான நன்கொடைகளும் இருக்கிறது - பட்டினியினால் மரணம் இல்லை - என்ற ஒரு காரணத்துக்காகவாவது நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். தேவைகள் - வெளிப்படையாய் தற்போது இருப்பதைக் காட்டிலும் மிக அதிகமாக

இருக்கிறது. வாழ்வினை விரும்பத்தக்கதாக மாற்ற சந்தோஷம் அத்தியாவசியமாய் தேவைப்படுகிறது.

எம். கிளமென்சு தற்கால சமூக அமைப்பைப் பார்த்து அதன் தவறுகளை கண்டிக்கிறார். ஆனால் அதற்குரிய மிக பொருத்தமான தீர்வு ஒன்றை கொடுக்கவில்லை; ஆகவே இவரது புத்தகமானது மனதை உருக்குகிறதும் சர்ச்சைக்குரியதுமாய் இருக்கிறது. இது நமக்கும் பிறருக்கும் இன்றும் அதிகமான அதிருப்தியை ஏற்படுத்த மிகவும் போதுமானதாய் இருக்கிறது; எனவே நிவாரணத்துக்கான மருந்தை கொடுக்காத எந்த ஒரு புத்தகமோ அல்லது கட்டுரையோ, தத்துவமோ அல்லது நம்பிக்கையோ - எழுதப்படாமலேயே, வெளியிடப்படாமலேயே இருப்பது நலம். வேதமானது, சுகத்துக்கான மருந்தை கொடுப்பதோடு மட்டுமின்றி, உலகத்தின் பாவம், நோய், சுயநலம் ஆகியவற்றிற்கு மருந்தாகவும் இருக்கிறது. இது மாபெரும் மத்தியஸ்தரும், நல்ல வைத்தியரும், ஜீவனை கொடுக்கிறவருமானவருடைய கையி-ருக்கிறது, தேவனுக்கு ஸ்தோத்திரம். மேலும், இந்த குறிப்பிட்ட தொகுப்பானது இந்த பரலோக விளக்கங்களுக்கு நேராய் நமது கவனத்தை கவர பெருமுயற்சி செய்கிறது. ஆனால், அதே சமயத்தில் நோயின் தீவிரத்தையும், நிவாரணங்களின் நம்பிக்கையற்ற தன்மையையும் நாம் முன்வைக்கிறோம்.

அ அ

## அத்தியாயம் 10

# உத்தேசிக்கப்பட்ட பரிகாரங்கள் சமூகம் மற்றும் பொருளாதாரம்

*மதுவிலக்கு மற்றும் பெண்களின் வாக்குரிமை - தாராளமயமாக்கப்பட்ட வெள்ளி மற்றும் பாதுகாக்கப்பட்ட விலைப்பட்டியல் - "கம்யூனிசம்" - "எல்லாவற்றையும் அவர்கள் பொதுவாய் பெற்று இருந்தனர்" - அராஜகவாதம் - "சோஷ-சம்" அல்லது "பொதுவுடைமைக் கொள்கை" - சமுதாய கட்டுமான பணியில் பாபிட் - சோஷ-சம் குறித்து ஹெர்பட் ஸ்பென்சர் - இரண்டு சோஷ-ச சமுதாயங்களின் உதாரணங்கள் - "நாட்டுடமை" (நேஷன-சம்) - ஒரு பரிகாரமாக பொதுவான இயந்திர தொழில் கல்வி - "ஒற்றை வரி" என்ற பரிகாரம் - உழைப்பாளிகளைப் பற்றி போப் 13ம் -யோவுக்கு ஹென்றி ஜார்ஜின் பதில் - சூழ்நிலையை பற்றி டாக்டர். லேமேன் அபாட் - ஒரு எம்.இ. பிஷப்பின் ஆலோசனைகள் - பிற நம்பிக்கைகளும் அச்சங்களும் - ஒரே நம்பிக்கை - "ஆசீர்வதிக்கப்பட்ட அந்த நம்பிக்கை" - இந்தக் காரியங்களைப் பார்க்கும் தேவ ஜனங்களுக்கு சரியாகப்படுகின்ற மனோநிலை - உலகத்தில் இருந்தும் கூட அதற்குரியவர்களாக அல்ல.*

*"கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ?" "பாபிலோனைக் குணமாக்கும்படி பார்த்தோம், அது குணமாகவில்லை; அதை விட்டுவிடுங்கள்; நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்கு போகக்கடவோம்; அதின் ஆக்கினை வானமட்டும் ஏறி ஆகாய மண்டலங்கள் பரியந்தம் எட்டினது." எரே 8:22; 51:7-9*

தற்போது மிகத்தீவிரமான வேதனையில் இருக்கும் சிருஷ்டிகளின் உதவிக்கான 'சர்வ நிவராணி'யாக பல்வேறு மாற்றுவழிகள் பரிந்துரைக்கப்படுகின்றன; துயரப்படும்

மக்களுக்காக அனுதாபம் காட்டுகிற யாவரும், இந்த விஷயத்தை ஆராய்ந்து அறிந்திருக்கும் அதனுடைய பல்வேறு மருத்துவர்களின் விடாமுயற்சியைக் குறித்தும் அனுதாபப்படவேண்டும். இந்த மருத்துவர்கள் தங்களுடைய மருந்துகளை முயன்று பார்க்கவேண்டும் என்பதில் மிகவும் தீவிரமான ஆர்வம் காட்டுகின்றனர். ஒரு நிவாரணத்தை கண்டுபிடிக்க முயன்று, அதை பிரயோகப்படுத்திப் பார்ப்பது என்பது நிச்சயமாய் மெச்சத்தகுந்தது, அத்தோடு இளகிய உள்ளம் கொண்ட மக்களுடைய பாராட்டையும் பெறுகிறது. அத்தோடு மட்டுமின்றி, தேவனுடைய வார்த்தையினால் உணர்த்தப்பட்ட நிதானமான நியாயத் தீர்ப்பானது நமக்கு சொல்வது என்னவெனில் இப்படியாய் உத்தேசிக்கிற எந்த நிவாரணமும் இந்த வியாதியை குணப்படுத்தாது என்பதே. மிகச்சிறந்த மருத்துவரின் பிரசன்னமும், சேவையும் - அவரது நிவாரணங்களான - மருந்துகள், சிம்புகள், கட்டுத்துணிகள், உயிர்காக்கும் உடுப்புகள் மற்றும் கத்தி ஆகியவை இன்றியமையாததாய் இருக்கும்; அத்தோடு மனித குலத்தின் ஒழுக்கக்கேடு மற்றும் சுயநலமாகிய தீராவியாதிக்கான நிவாரணத்தை இவர்களது குறைசொல்ல முடியாத, திறமைமிக்க, உறுதியான பிரயோகங்கள் செயல்படுத்தமுடியாது. ஆனால் மற்ற மருத்துவர்களது மருந்து சீட்டையும் நாம் சோதித்து பார்ப்போம். அப்போது தேவ ஞானத்துக்கு ஏறக்குறைய ஒத்துப்போகும் அளவிற்கு இவர்களில் சிலர் எப்படி இருக்கிறார்கள் என்பதையும், சிலர் அதி-ருந்து எவ்வளவு தூரம் (தேவைக்கும்) அதிகமாய் விலகி நிற்கிறார்கள் என்பதையும் நாம் கண்டுகொள்ளக்கூடும். முரண்பாட்டுக்காக அல்ல, ஆனால் தேவைப்படுகிற உதவியை எதிர்பார்க்ககூடிய ஒரே ஒரு திசையை அவர்கள் யாவருமே இன்னும் தெளிவாக காணும் பொருட்டாகவே.

## நிவாரணங்களாக மதுவிலக்கும் பெண்களின் ஓட்டுரிமையும்

இவ்விரண்டு பரிகாரங்களும் சாதாரணமாய் ஒன்றோடொன்று கலந்தே இருக்கின்றன. மது விலக்குக்கு பெண்களது ஓட்டுரிமை இல்லாமல் பெரும்பான்மையான ஆதரவு கிடைக்காது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். ஓட்டுரிமை இருந்தால் கூட அது சந்தேகத்துக்குரியதே. இந்த பரிகாரத்தை முன்வைக்கும் பரிந்துரையாளர்கள் இதை நிரூபிப்பதற்காக காட்டும்



புள்ளி விவரக் கணக்கு என்னவெனில் - கிறிஸ்தவ ராஜ்யத்தின் உபத்திரவமும், பஞ்சமும் பெரும்பாலும் மதுவகைகளின் வியாபாரத்தினால் தான் என்றும், அத்தோடு இந்த வியாபாரம் ரத்து செய்யப்படுமேயாகில் சமாதானமும் அபரிமிதமும் ஆளுகை செய்யும் என்றும் இவர்கள் உறுதியாய் அறிவிக்கிறார்கள்.

இப்படி கூறுவதை நாம் மனப்பூர்வமாய் மிகவும் அனுதாபத்தோடு ஏற்கிறோம்: குடிப்பழக்கம் என்பது நிச்சயமாய் நாகரீக வளர்ச்சியின் பலன்களில் மிகவும் தீமை விளைவிக்கின்ற ஒன்றாக இருக்கிறது; மேலும் ஓரளவிற்கே நாகரீக வளர்ச்சி பெற்றவர்களிடையேயும், நாகரீகமற்றவர்களிடையேயும் கூட இது தீவிரமாய் பரவிவருகிறது. அது என்றென்றைக்கும் ரத்து செய்யப்படுவதைக் காண நாங்கள் மிகவும் ஆனந்தம் அடைவோம். மதுவை ஒழித்துக்காட்டுதல் இன்றைய ஏழ்மையின் பெரும் பகுதியை அகற்றிவிடக் கூடும் என்று கூட நாங்கள் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறோம், ஏனெனில் பல நூறு மில்-யன்கள் செல்வமானது இதனால் வருடந்தோறும் படுமோசமாய் வீணடிக்கப்படுகிறது. ஆனால் சுயநலமிக்க தற்போதைய சமுதாய சூழ்நிலைக்கும் மற்றும் ஜனத்தின் ரத்தத்தை பிழிந்தெடுக்கக்கூடிய அளவிற்கு முன்னேறக் கூடியதான தேவை மற்றும் விநியோக விதியின் கொடுமையான அழுத்தத்தை தவிர்க்கவும் சந்திக்கவும் இது ஒரு பரிகாரமே அல்ல.

உண்மையில் கோடிக்கணக்கான பணத்தை 'மது'வுக்காக வருடந்தோறும் செலவழித்து விரயம் செய்வது யார்? மிகவும் ஏழையாய் இருப்பவரா? இல்லை, உண்மையில் பணக்காரர்களே! முக்கியமாய் செல்வந்தர்களும், இரண்டாவது நடுத்தர வர்க்கதாருமே! வரும் நாட்களில் மதுவின் வியாபாரம் ஒருவேளை ரத்து செய்யப்படுமேயாகில், மிகவும் ஏழ்மையில் இருப்பவர் மீதான பொருளாதார அழுத்தத்தை இலகுவாக்குவதை பொருத்தமட்டில், தலைகீழான விளைவையே அது ஏற்படுத்தக்கூடும். மற்ற தானியங்களை விளைவிக்க உதவிபுரியும் என்று நம்பி மதுபான தயாரிப்பில் உபயோகப்படுத்தப்படும் கோடிக்கணக்கான மூட்டை பார்- மற்றும் ரை போன்ற தானியங்களை ஆயிரக்கணக்கான விவசாயிகள் விளைவிக்கின்றனர். இதற்கு மாற்றாக மற்ற

பொருட்களை விளைவிக்கும் போது (தானியங்களின்) பண்ணை பொருட்களின் விலையில் இன்னும் இறக்கம் ஏற்படும். மேலும் மதுபானம் காய்ச்சி வடிகட்டுபவர், பீப்பாய்களைத் தயாரிப்பவர், புட்டிகளை நிரப்புகிறவர், கண்ணாடி சம்பந்தமான வேலையாட்கள், மற்றும் மதுபான கடையில் அதை விநியோகிப்பவர் என்று இந்த வியாபாரத்தின் உள்ளேயும் வெளியேயும் பணியில் இருக்கும் பெரிய சேனையாகிய ஆயிரக்கணக்கானோர் வேறு வேலைகளை தேடிக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்படுவர். இதனால் உழைப்பாளர் சந்தையில் சரிவு ஏற்பட்டு அதன் விளைவாக தினசரி ஊதியத்தின் அளவு இன்னும் சரியும். இந்த வியாபாரத்தில் தற்போது முதலீடு செய்யப்பட்டிருக்கும் கோடிக்கணக்கான மூலதனம் பிற தொழில் பிரிவுகளில் நுழையக்கூடும். அதனால் வியாபார போட்டியும் ஏற்படும்.

அதற்குரிய பெரும்பான்மையான ஆதரவு கிடைப்பது சாத்தியமாகும் பட்சத்தில், இந்த சாபத்தை நீக்குவதற்கான விருப்பத்தி-ருந்து இந்த காரியங்கள் எல்லாம் நம்மை தடுத்து நிறுத்தக்கூடாது. ஆனால் பெரும்பான்மை ஆதரவு என்ற ஒன்று என்றுமே காணமுடியாது (சில பிரத்தியேக இருப்பிடங்களில் தவிர). நேரடியாகவோ, மறைமுகமாகவோ அதனுடைய பொருளாதாரத்தில் ஆர்வமுடையவர்கள் மற்றும் அதன்மீது ஆவல் கொண்ட அடிமைகளே பெரும்பான்மையாக இருக்கிறார்கள். மதுவிலக்கு என்பது தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரையிலும் நடைமுறைப்படுத்தப் படமாட்டது. செயல்முறைக்கு வந்தாலும் கூட, தற்கால சமூக - பொருளாதார பிணியை சுகப்படுத்த முடியாது. என்பதை இங்கே சுட்டிக்காட்டுகிறோம்.

### தாராளமான வெள்ளி மற்றும் பாதுகாப்பான விலை போன்ற பரிகாரம்

கிறிஸ்தவ ராஜ்யங்கள் மூலம் வெள்ளியின் மதிப்பைக் குறைத்தல் என்பது, பணத்தின் மதிப்பை குறைப்பதற்காக பணம் - கடன் கொடுப்பவரது மகாப்பிரதானமான சுயநல கொள்கை என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். மேலும் அவர்கள் கொடுக்கும் கடனின் மதிப்பானது உயர்த்தப்படும்; மற்ற வியாபார முதலீடுகள்,



பணியாளர்கள் ஆகியோர், விநியோகம் மற்றும் போட்டி கூடிக்கொண்டே போவதனால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சட்டப்பூர்வமான பணத்தின் குறைவினால் இப்படிப்பட்ட கடன்களின் மீதான வட்டி விகிதத்தினை உயர்த்த அனுமதி வழங்கவும், இப்படி செய்கின்றனர்.

அநேக வங்கியாளர்களும், பணம் கடன் கொடுப்பவர்களும் சட்டப்படியான நேர்மையின் தரத்தின்படி நேர்மையான மனிதர்களே. ஆனால், ஐயோ! சிலரது தரம் மிகமிக குறைவாக இருக்கிறது. வங்கியாளர்களும், பணம் கடன் கொடுப்பவருமாகிய நாம் நமது சொந்த லாபங்களைப் பார்த்துக்கொள்ளலாம், விவசாயிகளும், விவேகமற்றவர்களும் அவர்களே தங்களை பார்த்துக்கொள்ளட்டும் என்றும் சொல்கிறார்கள். தங்கத்தை “நேர்மையான பணம்” என்றும் வெள்ளியை “நேர்மையற்ற பணம்” என்றும் அழைப்பதன் மூலம் ஏழைகளையும் விவேகம் அற்றவர்களையும் தவறான நம்பிக்கையில் நாம் ஏமாற்றலாம். ஏழைகளில் அநேகர் நேர்மையானவர்களாகவே இருக்க விரும்புகின்றனர், ஆகவே நமது திட்டங்களை ஆதரிப்பதற்காக அவர்களை அதட்டி அடக்கி, இச்சகம்பேசி பணிய செய்துவிடலாம், இது ‘அறுவடையாளர்களுக்கு’ எப்படியானாலும் கடினமானதாகவே இருக்கும். “நேர்மையான பணம்” என்பதை குறித்த நமது பேச்சினுடைய செல்வாக்கின் கீழும், அதோடு ‘மதிப்பிற்குரிய மனிதர்’ என்ற நமது கௌரவத்தினாலும், நிதிநிர்வாகிகள் மற்றும் செல்வச்செழிப்புள்ள மனிதர் என்ற நமது தரத்தினாலும், நமது கருத்துக்கு முரணான எந்த கருத்துமே தவறானதாகவே இருக்கும் என்று அவர்கள் முடிவு செய்துகொள்வார்கள்; சரித்திரத்தின் ஆரம்ப காலங்களில் இருந்து உலகத்தின் நியமமாக வெள்ளிப்பணமே இருந்திருக்கிறது என்பதையும் உலக வியாபாரத்தை செய்வதற்கு பணத் தேவையை சமாளிக்க வெள்ளியுடன் கூட சேர்க்கப்படும் வரை, தங்கமானது விலையேறப் பெற்ற கற்களில் ஒன்றாக இருந்து, அது முற்காலத்தின் ‘வியாபார சரக்காகவே’ இருந்திருக்கிறது என்பதையும் அவர்கள் மறந்துவிடுவார்கள். வட்டி விகிதத்தின் அளவு நமது பண சந்தையில் வீழ்ச்சியடைகிற ஒன்றாக இருக்கிறபடியால், எல்லா வெள்ளிக்கும் ஒரு நாணய மதிப்பு இருந்து அத்தோடு அதன்

காரணமாய் பணமும் அபரிமிதமாக இருக்குமேயானால் வட்டிவிகிதமானது எவ்வளவு குறைவாக இருக்கக்கூடும்? எல்லா காகித பணத்தையும் விலக்கி விடுவதே நமது அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்கவேண்டும். அதன் மூலமாய் வட்டி விகிதத்தை நிலைநிறுத்த முடியும்.

விநியோகம் மற்றும் தேவை என்ற விதியின் கீழ் கடன் வாங்குகிற ஒவ்வொருவரும் ஏராளமான பணத்தை - வெள்ளி, தங்கம் மற்றும் காகிதத்தை பெற்றுக்கொள்ள விருப்பமுள்ளவராய் இருக்கின்றனர்; அதே விதியின் கீழ் காகித பணத்தை ஒழித்துவிட்டு வெள்ளியின் மதிப்பை குறைப்பதில் வங்கியாளர்களும் கடன் கொடுப்பவர்களும் விருப்பம் உள்ளவர்களாய் இருக்கின்றனர்; ஏனெனில் அந்த குறைந்த பணத்துக்கும் கூட கடனை ரத்துசெய்யும் மதிப்பு இருக்கின்ற படியால் அளவில் குறைந்த அந்த பணத்தின் தேவை மிக அதிகமாகி வருகிறது. ஆகவே, உழைப்பு மற்றும் வர்த்தக மதிப்புகள் வீழ்ச்சியடைந்து வருகையில், பணம் தட்டுப்பாடாகிறது. மேலும் வட்டியானது அநேகமாய் தன்னைத்தானே தாங்கிக் கொள்கிறது.

ஏற்கெனவே காண்பிக்கப்பட்டபடி, நாகரீக வளர்ச்சியடைந்த உலகத்தில் தங்கத்துக்குக் கிடைக்கக்கூடிய முக்கியத்துவத்துக்கு இணையாக வெள்ளியின் மதிப்பை சரிசமமாய் திரும்பபெறமுடியாது என்பது தீர்க்கதரிசனத்தின் வெளிப்பாடாக இருக்கிறது. ஒருவேளை முழுமையாய் அது பழைய நிலையை அடைந்துவிட்டதைப் போல் காணப்பட்டாலும் கூட அதன் மாறுதல் ஒரு தற்கா-கமானதாகவே இருக்கக்கூடும்: ஜப்பான், இந்தியா சீனா மற்றும் மெக்சிகோ போன்ற நாடுகளின் தயாரிப்பாளர்களுக்கு தற்போது அளிக்கப்படுகின்ற விசேஷமான ஊக்கத்தொகையை அது நீக்கக்கூடும்; கிறிஸ்தவ ராஜ்யத்தின் விவசாய காரணிகளை தளர்த்த அதனால் கூடும்; எனவே,"இரு முனைகளையும் இணைப்பதற்காக" ஒவ்வொருவரும் பாடுபடுகின்ற தற்கால நிலைமையின் ஒரு பகுதியை நீக்கக்கூடும்; அதோடு கொஞ்சகாலத்துக்கு அழிவினை தள்ளிப்போடவும் இதனால் கூடும். ஆனால் இவ்வண்ணமாய் "தீங்கு நாளை," தள்ளிப் போடுவதை தேவன் விரும்பவில்லை என்பது தெளிவாக இருக்கிறது; மேலும் அதனால் மனித சுயநலமும், எல்லா



விவேகத்தைக் குறித்த குருட்டாட்டமும், பாதிப்பை உண்டாக்கி, அழிவை சடுதியாக்கும்; இது "அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டுபோகும்" மற்றும் "கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டது" என்று எழுதப்பட்டிருக்கிறபடியே இவை இருக்கும். *செப் 1:18; எசே 7:19; ஏசா 14:4-7; ஏசாயா 29:14*

சர்வாதிகாரங்களை உருவாக்குவதை தவிர்க்கவும், பூமியின் எல்லா இயற்கை வளங்களையும் மேம்படுத்தவும் மிக ஞானமாய் பாதுகாப்பு என்பது சரியாய் அளவிடப்பட்டிருக்கிறது, இது சந்தேகமின்றி ஒருசில அனுகூலங்களினால் உலகெங்கிலும் தொழிலாளர் சமன்படுத்துதல் தீவிரப்படுத்துவதை தடுத்துக்கொண்டிருக்கிறது. எப்படியாயினும், ஊதியமானது கீழ்மட்டத்துக்கு சரியப்போகிறது. விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ, தற்போது கட்டுப்படுத்திக்கொண்டிருக்கும் போட்டி முறைமைகளினால் சரக்குகளும், ஊதியங்களும் உலகெங்கிலும் ஏறக்குறைய ஒரு சமனான நிலைக்கு பலவந்தமாய் கொண்டு போகப்படும்.

"தாராளமான வெள்ளி" அல்லது "பாதுகாப்பான விலைவாசி" என்ற இரண்டில் ஏதோ ஒன்று, தற்போதைய மற்றும் விரைவில் வரப்போகிற ஆபத்துக்கு ஒரு பரிகாரம் என்று கூறப்பட்டாலும், அது வெறும் தற்கா-கமானது மட்டுமே.

## கம்யூனிஸம் என்ற ஒரு பரிகாரம்

கம்யூனிஸமானது சமுதாய சரக்குகள் உடைய ஒரு சமூக அமைப்பை உத்தேசித்து கூறுகிறது; அதில் சொத்துக்கள் யாவும் பொதுவாய் வைக்கப்பட்டு பொது நன்மைகளுக்காக பயன்படுத்தப்படும்; மேலும் எல்லா உழைப்பி-ருந்தும் வரும் லாபங்கள் யாவும் பொது நலனுக்காக "அவரது தேவைகளுக்கேற்ப ஒவ்வொருவருக்கும்" என்று அர்பணிக்கப்படும். கம்யூனிஸத்தின் சுபாவப்போக்கானது பிரான்சு தேச ஸ்தல ஆட்சி பிரிவினால் விளக்கி சொல்லப்பட்டது. போதகர் ஜோசப் குக் என்பவரது கருத்துப்படி - "கம்யூனிஸம் என்றால் வாரிசு முறைமையை ரத்து செய்வதும், குடும்ப முறையை ரத்து செய்வதும், சொத்துரிமையை ரத்து செய்வதுமாகும்."

கம்யூனிஸத்தின் சில அம்சங்களை நாம் மெச்சிக்கொள்ளலாம் (சோஷ-ஸத்தை பார்க்கவும்), ஆனால் முழுமையாய் பார்த்தால் அது நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்றாகும். எல்லாம் பூரணமாய், சுத்தமாய் மற்றும் நல்லவைகளாய், அன்பு மட்டுமே ஆளுகிறதான இடமாகிய பரலோகத்துக்கு வேண்டுமானால் இப்படிப்பட்டதொரு ஏற்பாடு மிகச் சரியான ஒன்றாக ஒருவேளை இருக்கக்கூடும்; ஆனால் தற்போதிருக்கிற நிலையில் இப்படிப்பட்டதொரு திட்டம் முற்றிலும் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதை எந்த ஒரு மனிதனுடைய கருத்தும் அனுபவமும் ஏற்றுக்கொள்ளும். எல்லாரையும் சோம்பேறியாக ஆக்கிவிடக் கூடும். மிக மோசமான, தரக்குறைவான வேலையை யார் செய்வது என்ற ஒரு போட்டியே நம்மிடையே விரைவில் எழக்கூடும்; மேலும் மிக விரைவான நாசத்துக்கான காரணமாகும் வகையில் சமுதாயமும் வெகுவிரைவில் காட்டுமிராண்டித்தனம் மற்றும் நெறியற்ற தன்மைக்குள் சென்று விடக்கூடும்.

ஆனால் வேதத்தில் கற்பிக்கப்பட்டிருக்கும் கம்யூனிஸத்தை குறித்த சில கற்பனைகளின் காரணமாய் அதுவே உண்மையான பரிகாரமாக இருக்கும். இதுவே மிக உறுதியான வாதமாய் அநேகரிடம் இருக்கிறது. நமது கர்த்தராலும், அப்போஸ்தலராலும் நியமிக்கப்பட்டபடியால், இது தொடரப்படவேண்டும் என்பது நியதியாயும், கிறிஸ்தவர்களின் நடைமுறையாகவும் இருக்கவேண்டும் என்பது பொதுவான அபிப்பிராயமாக இருக்கிறது. எனவே எங்களது சொந்த பத்திரிக்கையி-ருந்து இந்த விஷயத்தைக் குறித்த ஒரு கட்டுரையை கீழே கொடுக்கிறோம்.

## "சகலத்தையும் பொதுவாய் வைத்து அவர்கள் அனுபவித்தார்கள்"

"விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்கு தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத



இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனை துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்." *அப் 2:44-47*

ஆதி சபையின் இயற்கையானதொரு உணர்வு இப்படியாய் இருந்தது: சுயநலம் அன்புக்கும் பொது நலன்களுக்கும் இடம் கொடுத்தது. எப்படிப்பட்ட ஆசீர்வாதமானதொரு அனுபவம்! இதே போன்றதொரு உணர்வானது சந்தேகமின்றி மெய்யாகவே மனத்திருந்திய எல்லாருடைய இருதயங்களிலும் வரும். தேவனுடைய அன்பு மற்றும் மீட்பு குறித்த உணர்த்துதல் நாம் முதன் முத-ல் பெற்றபோது, கர்த்தருக்காக நம்மை முற்றிலும் அர்ப்பணித்து, இம்மைக்கு மட்டுமின்றி மறுமைக்கும் நமக்குண்டான அவரது ஈவுகளை உணர்ந்தபோது கர்த்தருக்கு சொந்தமான, அவரது ஆவியை பெற்றிருக்கும் எந்த ஒரு சகோதரனும் சகோதரியும் பரம கானானை நோக்கி, புனிதபயணம் போய் கொண்டிருக்கும் ஒவ்வொரு உடன் பிரயாணிகளிடமும் காணப்படுகிறதான - அபரிமிதமான சந்தோஷத்தை நாம் உணர்கிறோம்; மேலும் நமது மீட்பருடன் நாம் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வதுபோல் - நமக்குண்டான யாவற்றையும் இவர்கள் யாவருடனும் பகிர்ந்து கொள்ள நாம் எதிர்பார்க்கப்படுகிறோம். மேலும் நாமோ அல்லது மற்றவர்களோ மாம்சத்தில் பூரணராய் இல்லை என்ற உண்மைக்கு நாம் விழிப்புள்ளவர்களானோம் என்பதுதான் பல சந்தர்ப்பங்களில் இருந்திருக்கிறது; ஆகவே ஆண்டவரின் ஆவியை எவ்வளவுதான் அவரது ஜனங்கள் இப்போது பெற்றிருந்தாலும் மானிட பலவீனம் மற்றும் குறைவுள்ள "இந்த மண்பாண்டத்தில் தான் இந்த பொக்கிஷத்தை பெற்றிருக்கிறார்கள்."

அதோடு கூட பிற மனிதனுடைய மாம்சீக பெலவீனங்களை நாம் கவனத்தில் கொள்ளவேண்டி இருப்பதோடு மட்டுமின்றி, நமது மாம்ச பெலவீனமும் கூட தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியிருக்கிறது என்பதையும் நாம் புரிந்துகொண்டோம். ஆதாமின் வீழ்ச்சிக்குள் நாம் யாவரும் பங்கெடுக்கும் போது, எல்லாருமே ஒரே மாதிரியாய் அல்லது அதேவிதமான காரியங்களில் விழவில்லை என்பதையும் நாம் கண்டிருக்கிறோம். எல்லோருமே தேவ சாயல் மற்றும் அன்பின் ஆவியி-ருந்து சாத்தானின்

சாயலுக்கும், சுயநலத்தின் ஆவிக்குள்ளும் வீழ்ந்துவிட்டனர்; அன்புக்கு பல்வேறு கிரியைகள் இருப்பதுபோலவே சுயநலத்துக்கும் உண்டு. இதன் விளைவாக ஒருவரிடத்தில் செயல்படும் சுயநலமானது மந்தமான, சோம்பலான, சுறுசுறுப்பற்ற நிலையை உருவாக்குகிறது; மறுபக்கத்தில் சக்தி, இவ்வுலக வாழ்வின் இன்பங்களுக்கான உழைப்பு, சுய -திருப்தி நிலை முதலானவைகளை அது உற்பத்தி செய்கிறது.

தீவிரமாக சுயநலத்துடன் செயல்படுகிறவர்களில் சிலர்‘அவர் செல்வசெழிப்பானவர்’ என்று சொல்லப்படும் அளவிற்கு செல்வத்தை குவிப்பதில் சுய-திருப்தியடைகின்றனர்; மற்றவர்கள் மனிதரிடையே மதிப்பை பெரும் சுயநலத்தில் திருப்திபடுகின்றனர், சிலர் துணிமணிகளிலும், சிலர் பிரயாணிப்பதிலும், சிலர் தீயபழக்கவழக்கங்களிலும், வேறுசிலர் மிகவும் தரக்குறைவான, கீழ்த்தரமான வழிமுறைகளிலும் சுயநலமாய் செயல்படுகின்றனர்.

கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரும், அதனுடைய புதிய அன்பின் ஆவியை பெற்றவர்களாய் - உள்ளேயும் புறம்பேயும் போராட்டம் ஆரம்பமாகி விட்டதை கண்டு கொள்கின்றனர்; ஏனெனில் இதற்குமுன் நம்மை ஆண்டு கொண்டிருந்தது சுயநலம், அல்லது பாவம் நிறைந்த தன்மை எதுவாக இருந்தாலும் புதிய ஆவியானது அதனுடன் போராடுகிறது. நீதியையும் அன்பையும் நியதியாகக் கொண்டிருக்கும் கிறிஸ்துவின் புதிய சிந்தையானது தன்னைத்தானே நிலைப்படுத்திக்கொள்கிறது; மேலும் இந்த மாறுதலுக்காகவே அது இணங்கியதையும் ஒப்பந்தம் செய்ததையும் நினைவுபடுத்துகிறது. மாம்சீக விருப்பங்களானது (அது எப்படிப்பட்ட மனப்பாங்காக இருப்பினும், நண்பர்களின் வெளிப்புறத்து ஆதிக்கத்தின் உந்துத-னால், இந்த பிரச்சினையை விவாதித்து, வாதிட்டு, தீவிரமான எந்த நடவடிக்கையையும் எடுக்கக்கூடாது என்று அறிவுறுத்துகின்றன - ஏனெனில் இப்படிப்பட்டதொரு செயல் மூடத்தனமானதும், அறிவீனமானதும் நடக்க முடியாததுமாய் இருக்கக்கூடும் என்று கூறுகின்றன. பழையவைகள் மாற்றப்பட முடியாதவை என்று மாம்சம் வற்புறுத்தி கூறுகிறது, ஆனால் முன்னைப்போல் அவ்வளவு தீவிரமாய் இல்லாமல், மிகச்சிறிய திருத்தங்களுக்கு ஒப்புக்கொள்ளும்.



சுயநலத்தின் ஆளுகையிலேயே இன்றும் உண்மையில் காணப்படுகிற இப்படிப்பட்ட நட்புறவுக்கு பெருவாரியான தேவனுடைய ஜனங்கள் ஒத்துப்போவதாகத் தெரிகிறது. ஆனால் கிறிஸ்துவின் சிந்தையோ அல்லது ஆவியோ இதன் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் என்று மற்றவர்கள் அறிவுறுத்துகின்றனர். இதன் விளைவாக வரும் போராட்டம் மிக கடினமான ஒன்று (கலா 5:16,17);ஆனால் புதிய சிந்தை ஜெயம் கொள்ளவேண்டும். சுயம் தனது சுயநலத்தோடும் அல்லது துன்மார்க்க இச்சைகளோடும் மரித்துப்போனதாக எண்ணப்படும். கொலோ 2:20; 3:3; ரோம 6:2-8

ஆனால் இந்த முடிவு பேராட்டத்தை நிரந்தரமாய் முடிவுக்குக் கொண்டுவருமா? இல்லை-

“வெற்றியடைந்துவிட்டோம் என்று எப்போதுமே
எண்ணவேண்டாம்,
ஒருபோதும் இளைப்பாறி அமர்ந்துவிடவேண்டாம்;
உன்னுடைய கீரிடத்தை நீ ஜெயிக்கும் வரை
உன்னுடைய கடின உழைப்பு முடிந்துவிடாது.”

ஆம், நாம் போராட்டத்தை தினமும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். நமது ஓட்டத்தை சந்தோஷத்துடன் முடிப்போம் என்று தெய்வீக உதவியை மன்றாடி பெற்றுக்கொள்வோம். சுயத்தை ஜெயம் கொள்வது மட்டுமின்றி, அப்போஸ்தலர் செய்ததுபோல், நாமும் நமது சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்தவேண்டும். (1 கொரி 9:27) மேலும், இதுவே நமது சுயநலத்தின் ஆவிக்கு எதிராக ஜாக்கிரதையுடன் தொடர்ந்து இருக்கும் அனுபவம் ஆகும். அன்பின் ஆவியை நமக்குள் ஆதரித்து, விருத்தி செய்வதை நமது அனுபவமாக்கி கொள்வதே “கிறிஸ்துவை தரித்துக்கொண்டு” அவரது சித்தத்தை தங்களுடையதாக்கிக் கொண்டவர்களின் அனுபவமாகவும் இருக்கிறது. “இதுமுதற்கொண்டு (கிறிஸ்துவுக்குள்) நாங்கள் மாம்சத்தின்படி ஒருவனையும் அறியோம்,” என்று அப்போஸ்தலரின் குறிப்பு உள்ளது. எனவே கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் தங்களது புதிய ஆவியின்படியே இருப்பார்களேயன்றி, வீழ்ந்துபோன அவர்களது மாம்சத்தின்படி இருப்பதில்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். மேலும் ஒருவேளை, புதிய சிந்தையின்

வெற்றிக்காக இன்னும் அவர்கள் போராடுவதற்கான அடையாளங்களை நாம் கண்டாலும், அவர்களது தோல்வியானது சிலநேரமோ அல்லது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தொடர்ந்து இருந்தாலும், அவர்களது சிறு தோல்விகளுக்காக அவர்களை திட்டுவதற்கு பதிலாக இரக்கம் பாராட்டுவதே நாம் செய்யக்கூடிய மிகச்சரியான ஒன்றாகும்; "*(அன்பின் பரிபூரண பிரமாணத்தின் சில அம்சங்களை மீறுவதில் நமக்கிருந்த பழைய மாம்ச சுபாவத்தில்)* நாமும் கூட சோதிக்கப்படும்போது நாம் நடந்து கொண்ட விதத்தை நினைவுப்படுத்திக் கொள்வோம்."

ஆகவே தற்போதிருக்கும் துன்பத்தின் கீழ், அன்பின் ஆவியின் கட்டுப்பாட்டின் கீழ், தெளிவாக தீர்மானிக்கும் திறனினாலும் சுய அனுபவத்தினாலும் தனது சொந்த சரீரத்தைக் கட்டுக்குள் வைத்துக்கொள்வதற்காக தன்னால் கூடுமான யாவற்றையும் செய்யும்படி ஒவ்வொருவரும் இருக்கும் பட்சத்தில், கம்யூனிச திட்டங்களை முயன்று பார்ப்பதினால் காரியங்களை இன்னும் சிக்கலாக்காமல் இருப்போமாக என்று வேதம் நமக்கு கூறுகிறது: ஆனால் தனது கால்களுக்கு கூடுமான அளவிற்கு நேரான பாதையையே ஒவ்வொருவரும் உருவாக்குகின்றனர்; ஆனால் அப்படிப்பட்ட பாதையோ சுகப்படுத்த கூடிய அளவிற்கு, முற்றிலும் வேறுபட்டதாக இல்லாமல் நமது வீழ்ந்துபோன மாம்சத்தில் அது ஊனமானதாகவே இருக்கிறது.

*(1)* தெளிவாக தீர்மானிக்கும் திறன் சொல்கிறது - சுயநலத்தை அன்புக்கு கீழ்ப்படுத்த ஒரு தொடர்ச்சியான போராட்டத்தை தெய்வீக உதவியுடன் பரிசுத்தவான்கள் கைக்கொண்டால், அதனுடைய அங்கத்தினர் பெரும்பாலானவர்களின் சிந்தைக்கு முற்றிலும் புறம்பான ஒரு சட்டத்தாலே ஆளப்படுவதில், ஒரு ஒழுங்கற்ற சமுதாயம் நிச்சயமாய் வெற்றியடைய முடியாது. மேலும் பரிசுத்தவான்கள் மட்டுமே அடங்கிய ஒரு கம்யூனிஸத்தை நிறுவுவது என்பது முடியவே முடியாத ஒன்றாக இருக்கக்கூடும், ஏனெனில் நம்மால் இருதயங்களை ஆராய்ந்து அறிய முடியாது. "கர்த்தர் (மட்டுமே) தம்முடையவர்களை அறிவார்:" மேலும் ஒருவேளை இப்படிப்பட்ட பரிசுத்தவான்கள் அடங்கிய ஒரு குடியிருப்பு உண்டாகுமேயானால், மேலும் எல்லா பொருட்களுமே பொதுவில் கொண்டு, அது செழிப்படைய வேண்டுமேயானால், எல்லா வகையான தீயவர்களும் தங்களது உரிமைகளை பெறவும் அல்லது அவைகளில் பங்கேற்கவும் நாடக் கூடும். அத்தோடு எல்லா வகையிலான தீமைகளும் தங்களுக்கு எதிரானவைகள் என்று அவர்கள் சொல்லக்கூடும்; தீமை கூடவே இருக்குமானால், அந்த துணிகர முயற்சியானது ஒரு உண்மையான வெற்றியாக இருக்கமுடியாது.



சில பரிசுத்தவான்கள் உலகின் பெரும்பாலானவர்களைப் போலவே, சுய நல சோம்ப-ல் விழுந்துவிட்டால் அவசியத்தைத் தவிர வேறு எதுவும் அவர்களை "அசதியாயிராமல், ஜாக்கிரதையாக இருக்கவும், ஆவியிலே அனலாயிருக்கவும், கர்த்தருக்கு ஊழியம் செய்யவும்" மாற்ற உதவி செய்ய முடியாது. சுயநல பேராசையுடன் இருக்கும் பலரை பக்குவப்படுத்த, மற்றவர்களிடம் இரக்கம் காட்ட, மற்றவர்களோடு நீதியாக இருக்க துன்பமும் சோதனையும் தேவைப்படுகிறது. மேலும் மற்ற அநேகர் - தோல்வியான மற்றும் துரதிருஷ்டமான இந்த இரண்டு கூட்டத்தினருக்கும் - தேவையான மற்றும் சரியான பாடங்களை கற்றுக்கொள்வதற்கு தடையான ஒன்றாகவே 'சமுதாயம்' என்ற ஒன்று செயல்படக்கூடும்.

இப்படிப்பட்ட சமுதாய முறைகள், பெரும்பான்மையுடைய ஆட்சிக்கு அனுமதிக்கப்படுமேயாகில் - பெரும்பான்மை என்ற அளவு வரைக்கும் மூழ்கிப்போகக்கூடும்; இதன் விளைவாக முன்னேறிக் கொண்டிருக்கும் சிறுபான்மையினர் சக்தி, மற்றும் சிக்கனத்தினால் எவ்வித லாபத்தையும் அடையவில்லையென்பதை கண்டு இவர்களும் கூட பொறுப்பில்லாமலும், சோம்பலாயும் வளரக்கூடும். ஆயுட்கால பொறுப்பாளர் மற்றும் மேலாளராக வழி வழியாய் வந்த உரிமையின் கீழ் - ஸ்திரமான நோக்கத்துடன் ஆளக்கூடுமேயாகில், பொருளாதார ரீதியில் அதன் விளைவு மிகவும் சாதகமாய் இருக்கக்கூடும்; ஆனால் பொது ஜனமோ, சுய பொறுப்புகளினால் கவரப்பட்டவர்களாய், பொறுப்பாளர்களின் கையில் வெறும் உபகரணங்களாய் மற்றும் அடிமைகளாய் சீரழிந்து போகக்கூடும்.

ஆகவே தெளிவான தீர்மானம் என்பது அதனுடைய தனிநபர்

முறையில், அதனுடைய சுதந்திரம் மற்றும் பொறுப்புகளோடு, மிகவும் புத்திகூர்மை உடையவர்களது வளர்ச்சிக்கு மிகச்சிறந்த ஒன்று என்பதைப்போல் தோன்றுகிறது; அநேக சமயங்களில் யாவருக்கும் சில சமயங்களில் அநேகருக்கும் அது பெருங்கஷ்டத்தை கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது.

பூமியில் ஆயிரவருட அரசாட்சி ஸ்தாபிக்கப்படும்போது வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தெய்வீக ஆட்சியாளர்களால், தவறே இல்லாத ஞானம் மற்றும் அதை உபயோகிக்கும் முழு அதிகாரத்துடன் "நியாயத்தை நூலாகவும் நீதியை தூக்கு நுலாகவும்" "இரும்புக் கோலாட்சி" செயல்படுத்தப்படும் - அன்று கம்யூனிஸமானது வெற்றிபெறக்கூடும்; அதுவே ஒருவேளை மிகச்சிறந்ததொரு சூழ்நிலையாக இருக்கக்கூடும், அப்படியாக இருக்குமேயாகில் அதுவே ராஜாதி ராஜாவினால், தெரிந்தெடுக்கப்பட்ட வழிமுறையாக இருக்கும். ஆனால் அதற்காக நாம் காத்துக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட தெய்வீக சட்டத்தின் அதிகாரத்தை பயன்படுத்த போதிய அளவு ஞானம் அல்லது வ-மை இல்லாமையால், தெளிந்த புத்தியுள்ள ஆவியானது கர்த்தரின் நேரத்துக்காக காத்திருக்கிறது, அதுவரையில் "உமது ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுப்போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று ஜெபித்துக்கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் ராஜ்யம் விருப்பமுள்ளவர்களை தேவனிடத்திற்கும் நீதியினிடத்திற்கும் கொண்டுவந்த பிறகு, விருப்பமில்லாதவர்கள் யாவற்றையும் அழிக்கும். பின்பு பரலோகத்தை போலவே பூமியிலும் அன்பின் ஆட்சி பரலோக ஈவுகளை தூதர்கள் அனுபவிப்பதுபோல் மனிதனும் இவ்வுலக ஈவுகள் யாவையும் பொதுவில் வைத்து பகிர்ந்து கொள்வான் என்று நாம் நினைக்கலாம்.

*(2)* இந்த காலக்கட்டத்தில் கம்யூனிஸ முறையின் தோல்வியை அனுபவம் நிரூபிக்கிறது. இப்படிப்பட்ட அநேக சமுதாயங்கள் இருந்திருக்கின்றன; அதன் விளைவுகள் எப்போதுமே தோல்வியாகத் தான் இருந்திருக்கின்றன. நியூயார்க் நகரின் 'ஒனிடா' சமுதாய முறைமையின் தோல்வியானது நீண்ட காலமாய் அறியப்பட்டிருந்த ஒன்று. மற்றொன்று, பென்சில்வேனியாவின் சமுதாய முறைமையான ஹார்மொனி; இது அதனை தோற்றுவித்தவர்களுடைய நம்பிக்கையை வெகுவிரைவிலேயே ஏமாற்றிவிட்டது. பிரிந்துபோகும் அளவிற்கு முரண்பாடுகள் நிலவியிருந்தது. பிட்ஸ்பர்க்பா, அருகில் அமைந்திருந்த 'எக்கனாமிட்ஸ்' என்றொருகிளை அமைக்கப்பட்டது. இது சிறிது காலம் தழைத்திருந்தது. ஆனால் இப்போது முற்றிலும் அழிந்துபோனது. மேலும், இதனுடைய சொத்துக்களை குறித்த தகராறு சமுதாய நீதிமன்றத்தில் இருக்கிறது.



பிற கம்யூனிஸ சமுதாய முறைமைகள் தற்போது எழும்புகின்றன, இவைகள் முந்தியவைகளைக் காட்டிலும் குறைவாக வெற்றிபெறுபவைகளாகவே இருக்கும். ஏனெனில் நாட்கள் வித்தியாசமானவைகளாய் இருக்கின்றன; சுதந்திரம் என்பது மிகச்சிறந்தது. மரியாதையும், கனமும் குறைந்து இருக்கிறது, பெரும்பான்மை ஆளுகை செய்யும்; தெய்வீக தன்மையுடைய தலைவர்கள் இல்லாவிட்டால் தோல்வி நிச்சயம். ஞானமுள்ள உலகத் தலைவர்கள் தங்களுக்குரியவைகளை தேடிக் கொண்டிருக்கின்றனர், ஞானமுள்ள கிறிஸ்தவர்கள், நீங்கள் போய் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்ற கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

*(3)* வேதம் கம்யூனிஸத்தை போதிக்கவில்லை, ஆனால் அன்புடனான, கரிசனையுள்ள தனிமனித்தத்துவத்தை போதிக்கிறது - குடும்ப ஐக்கியம் என்ற அர்த்தத்தை தவிர - ஒவ்வொரு குடும்பமும் ஒரு அமைப்பாக செயல்படுகிறது, இதில் தகப்பன் தலையாகவும், மனைவி அவருள் ஒருவராகவும், தனது உடன் குடும்ப அங்கத்தினரை, தனது பங்காளியாக்கி ஒவ்வொரு சந்தோஷத்திலும், லாபங்களிலும் அது மட்டுமின்றி துக்கங்களிலும் துன்பங்களிலும் பங்கு பெறுகின்றனர்.

மெய்யாகவே, ஆதி சபையில் தேவன் ஒரு கம்யூனிஸ அமைப்பை அனுமதித்திருந்தார். இந்த கட்டுரையின் ஆரம்பத்தில் இது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது; ஆனால் இந்த முறையின் அறிவீனத்தை நமக்கு விளக்குவதே இதன் நோக்கமாய் இருந்திருக்கவேண்டும்; ஆனால் சிலர் அப்படி இல்லாதபடி,

இப்படிப்பட்ட முறைகளைக் கையாள நினைக்கின்றனர். திட்டமிட போதிய ஞானம் இல்லாமையால் அப்போஸ்தலர்கள் இந்த முறைமையை கட்டளையிடவோ, ஸ்தாபிக்கவோ இல்லை. ஆகையால் இதை கைவிடவேண்டும். ஏனெனில் கம்யூனிஸ தத்துவங்களை பரிந்துபேசி நமது கர்த்தரோ அல்லது அப்போஸ்தலரோ ஒரு வார்த்தையையும் குறிப்பிட்டிருக்கவில்லை. ஆனால் அதற்கு எதிர்மாறானவைகளையே அதிகமாகக் குறிப்பிட்டிருக்கக்கூடும்.

உண்மையில், அப்போஸ்தலர் பேதுரு (ஒருவேளை மற்ற அப்போஸ்தலரும்) இந்த கம்யூனிஸ செயல்முறையை கற்றுக் கொடுக்காவிட்டாலும் கூட, அந்த முதல் கம்யூனிஸம் அடங்கிய அமைப்பை அறிந்தவராய் அதற்கு ஒத்துழைப்பை கொடுத்தவராய் இருந்தார். மேலும் அனனியா சப்பிராளின் மரணமானது, விசுவாசிகளின் எல்லா பொருட்களுமே பொதுவில் கொடுக்கப்பட்டுவிட வேண்டும் என்பதை குறிப்பிடுவதாகவே யூகிக்கப்படுகிறது. ஆனால் அது அப்படியல்ல; பேதுரு இந்த விஷயத்தை மறுபடி பரிசீ-ப்பதி-ருந்து - பொய் சொன்னதே அவர்களது பாவமாக இருந்தது என்பது தெரிகிறது. தங்களுக்குரிய நிலத்தை அவர்கள் நேர்மையான முறையில் பெற்றிருந்தால் அதை அவர்களே வைத்துக்கொண்டிருந்தால் அதில் எந்த தீங்கும் இல்லை; அதை அவர்கள் விற்ற போதும் கூட எந்த தீங்கும் நேரவில்லை: ஆனால் அதை விற்ற பணமானது மொத்தமும் அவர்களுக்கு உரியதல்லாத போது, அதை தங்களுக்கே உரியது என்று தவறாக எடுத்துக்கூறியது தான் அவர்களது தவறு. தங்களுக்குரிய எல்லாவற்றையும் கொடுக்காமல், தங்களுக்குரியவைகளின் பங்கை பெற்றுக்கொள்வதின் மூலம் பிறரை ஏமாற்ற அவர்கள் முயற்சி செய்தனர்.

உண்மையென்னவெனில், எருசலேமில் இருந்த கிறிஸ்தவ சமுதாயம் ஒரு தோல்வியே. "தங்களுடைய விதவைகள் அன்றாட பந்திவிசாரிப்பில் சரிவர கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுகிறார்கள்" என்ற ஒரு முறுமுறுப்பு அங்கே எழுந்தது. அப்போஸ்தலரது மேற்பார்வையின் கீழ் சபையானது பரிசுத்தமாய், "களைகள்" அற்றதாய் இருந்தபோதிலும், "கிறிஸ்துவின் புதிய சிந்தை" அல்லது "ஆவி" என்ற பொக்கிஷத்தை யாவரும் பெற்றிருந்த போதிலும் கூட, அந்த பொக்கிஷமானது மண்பாண்டங்களில் வைக்கப்பட்டிருந்தது - இதனால் எந்த விஷயத்திலும் சரிவர ஒத்துப்போக முடியவில்லை.



சபை மக்களை மேற்பார்வையிடும் இந்த பணியானது தங்களது உண்மையான பணியாகிய - சுவிசேஷத்தை பிரசங்கிப்பதை பெருமளவில் பாதிக்கும் என்பதை அப்போஸ்தலர் மிக விரைவிலேயே கண்டு கொண்டனர். எனவே அந்தக் காரியங்களை பிறரிடம் விட்டுவிட்டனர். அப்போஸ்தலர் பவுலும் மற்றவர்களும் கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் பட்டணம் தோறும் பிரயாணம் செய்து பிரசங்கித்தனர். வேதத்தைப் பார்க்கும்போது, அவர்கள் கம்யூனிஸத்தை ஒருபோதும் குறிப்பிடவும் இல்லை. அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தவும் இல்லை; "தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" என்று பவுல் அறிவிக்கிறார். கம்யூனிஸம் என்பது சுவிசேஷ யுகத்தின் ஒரு பகுதி அல்ல என்பதையும் இந்த யுகத்திற்குரிய தேவ ஆலோசனையும் அல்ல என்பதையும் இது நிரூபிக்கிறது.

ஆனால் அதற்கு மாறாக ஒரு கம்யூனிஸ சமுதாயத்தின் அங்கத்தினர் முற்றிலும் செய்யக்கூடாத காரியங்களை செய்யும்படி பவுல் கூறுகிறார். "தன் சொந்த ஜனங்களை தாங்களே விசாரிக்கவேண்டும்" என்றும், "கர்த்தருடைய ஊழியத்துக்காக வாரத்தின் முதல் நாள்தோறும் தன் தன் வரவுக்குத்தக்கதாக சேர்த்துவைக்க வேண்டும்" என்றும், கர்த்தர் அவர்களுக்கு கூறியவைகளையே செய்யும்படி பரிசுத்த பவுல் சபைக்கு போதிக்கிறார்; மேலும் எஜமானரும் கூட கிறிஸ்துவுக்குள்ளான சகோதரராய் இருப்பாரேயாகில் - இரட்டிப்பான நல்லெண்ணத்தோடு தங்களுடைய எஜமானருக்கு ஊழியக்காரர்கள் கீழ்ப்படிவார்களாக; கிறிஸ்து என்னும் மேன்மையான எஜமானருக்கு அவர்களும் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறபடியால், எஜமானர்களும் வேலைக்காரருக்கு செய்யவேண்டியதை செய்வார்களாக என்றும் கூறுகிறார். *1 தீமோ 5:8; 6:1; 1 கொரி 16:2; எபே 6:5-9*

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவர் வாழ்ந்த காலத்தில் ஒரு சமுதாயத்தை ஸ்தாபிக்கவில்லை என்பதோடு மட்டுமின்றி அப்படிப்பட்ட ஒன்று நிறுவப்பட வேண்டும் என்று போதிக்கவும் இல்லை. ஆனால் அதற்கு மாறாக, தன்னுடைய உவமைகளில் எல்லாருமே ஒரே அளவான இராத்தல்களையோ அல்லது தாலந்துகளையோ பெற்றிருக்கவில்லை; ஆனால் ஒவ்வொருவரும் ஒரு உக்கிராணக்காரரே; எனவே தனிப்பட்ட முறையில் ( ஒரு கூட்டாக அல்ல,) தன் தன் காரியங்களை நிர்வகித்து, தனது சொந்தக் கணக்கை ஒப்புவிக்க வேண்டும் என்று கற்றுக்கொடுத்தார். (மத் 25:14-28; லூக் 19:12-24; யாக் 4:13:15 ஐயும் பார்க்கவும்) நமது கர்த்தர் மரிக்கும் போதும்கூட தன்னுடைய சீஷன் யோவானிடம் தன் தாயை கவனித்துக்கொள்ளும்படி கட்டளையிட்டார்; யோவானின் குறிப்பில் (19:27)ல் பார்க்கும் போது, "அந்நேர முதல் அந்த சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்" என்றிருக்கிறது. ஆகவே யோவானுக்கும் மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவைப் போலவே ஒரு வீடு இருந்திருக்கிறது. நமது கர்த்தர் ஒரு சமுதாயத்தை உருவாக்கியிருப்பாரேயாகில், சந்தேகமின்றி தனது தாயை பொறுப்பெடுக்கும்படி யோவானிடம் கட்டளையிடுவதற்கு பதில் அந்த சமுதாயத்திடம் கூறியிருந்திருப்பார்;

அதுமட்டுமின்றி, விசுவாசிகளின் ஒரு சமுதாயத்தை உருவாக்குவது என்பது சுவிஷேச யுகத்தின் நோக்கத்திற்கும், முறைமைக்கும் விரோதமானதாக இருக்கிறது. இந்த உலகுக்கு கிறிஸ்துவை சாட்சிபகருவதும் அதன் நிமித்தமாய் அவர் "தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தை தெரிந்துகொள்வதுமே" இந்த யுகத்தின் நோக்கமாக இருக்கிறது. மேலும் இதன் முடிவில் சாதாரணமாய் ஒருவருக்கு ஒருவர் முன்பாக இல்லாமல் எல்லா மனுஷருக்கும் முன்பாகவும் பொதுவாய் உலகத்தின் முன்பாக ஒவ்வொரு விசுவாசியும் ஒரு ஒளி வீசுகின்ற, எரிகிற தீபமாய் இருக்கும்படியாய் அறிவுறுத்தப்படுகின்றனர். ஆகவே, முதல் கிறிஸ்தவ சமுதாயத்தை நிறுவ அனுமதித்த பிறகு, பொதுவாகவே சமுதாயங்கள் நிறுவப்படுவதில், ஏற்படும் தோல்வியானது ஒரு அஜாக்கிரதையின் நிமித்தமானது அல்ல என்பதை காண்பிக்கும் பொருட்டு, கர்த்தர் இதை உடைத்து, ஒவ்வொரு சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை



பிரசங்கிக்கும் பொருட்டு, விசுவாசிகளை எல்லா இடங்களிலும் சிதறடித்தார். நாம் இதை "அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உணடாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறிப் போனார்கள். சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" என்று வாசிக்கிறோம். அப் 8:1,4; 11:19

இந்த உலகத்தின் மத்தியில் விளக்குகளாய் பிரகாசிப்பது தேவனுடைய ஜனத்தின் வேலையாகவே இன்னும் இருக்கிறதே தவிர, மடங்களிலோ, ஆசிரமங்களிலோ அல்லது சமுதாயங்களாகவோ தங்களை மூடி மறைத்துக் கொள்வதற்காக அல்ல. பரதீசின் வாக்குத்தத்தங்களை இப்படிப்பட்ட சமுதாயங்களுடன் இணைவதால் உணரமுடியாது. ஆனால் இப்படிப்பட்ட குழுக்களுடன் சேர்ந்துக் கொள்வதற்கானக விருப்புவது நமது காலத்துக்கே உரியதான பொதுவான ஒரு சிந்தையாக இருக்கிறது. இதற்கு எதிராக நாம் முன்னெச்சரிக்கப்பட்டும் இருக்கிறோம். (ஏசா 8:12) "கர்த்தரில் நம்பிக்கை வைத்து, அவருக்காக பொறுமையோடே காத்திருங்கள்." "இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்." லூக் 21:36

## அராஜகம் ஒரு பரிகாரம்

அராஜகவாதிகளுக்கு சட்டமின்மையின் எல்லைவரைக்குமான சுதந்திரம் தேவைப்படுகிறது. மனித ஒருமைப்பாட்டின் எல்லா முறைகளுமே தோல்வியைத்தான் நிரூபிக்கின்றன என்கிற முடிவுக்கு அவர்கள் வந்து விட்டனர், மேலும் மனித ஒருமைபாட்டின் கட்டுப்பாடுகளையும் அழிக்க அவர்கள் தீர்மானித்துவிட்டனர். ஆகவே சிலர் அவர்களை குழப்பினாலும் அராஜகம் என்பது கம்யூனிஸத்துக்கு நேர் எதிரிடையானது கம்யூனிஸம் முதலாளித்துவத்தை அழித்துவிட்டு, எல்லாவற்றையும் பொதுவில் பங்கிட்டுக்கொள்ளும்படி உலகமனைத்தையும் செய்யும், அராஜகமோ எல்லா சட்டங்களையும் மற்றும் சமூக கட்டுப்பாடுகளையும் அழித்துவிட்டு அதன் மூலம் தனிமனிதன்

தனது விருப்பப்படியான காரியங்களை செய்யும்படி செய்துவிடும். அராஜகம் என்பது வெறும் அழிவுக்குரியது; இது ஆக்கப்பூர்வமான சிறந்த பண்புகள் எதையும் கொண்டிருக்கவில்லை. இந்த உலகத்தை அழித்துவிடுவது என்ற கடினமான வேலை போதுமான அளவுக்கு தன் கையில் இருப்பதாகவும், வருங்காலத்து போராட்டங்களையே அந்த சீரமைப்பு பணிகளுக்கென்று விட்டுவிடுவதே மேலானது என்றும் ஒருவேளை கருதிக்கொண்டிருக்கலாம்.

லண்டன் அராஜகவாதிகளால் வெளியிடப்பட்டு அவர்களது மாபெரும் மே-தின அணிவகுப்பின் போது விநியோகிக்கப்பட்ட பதினாறு பக்கமுள்ள புத்தகத்தி-ருந்து கீழ்க்கண்ட சாராம்சங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இது இவர்களது கொடூரமான / மற்றும் துணிச்சலான எண்ணங்களை குறித்த சில கருத்துகளை வெளிப்படுத்துகிறது.

"அதிகாரம் எங்கோ ஒரு இடத்தில் இருக்கவேண்டும் என்பதும், அத்தோடு அதிகாரத்துக்கு பணிந்து போவது என்பதும் நம் அனைவருடைய துக்கத்திற்கும் வேராய் இருக்கிறது. எனவே இதற்கு ஒரு பரிகாரமாய் அரசாங்க அதிகாரம் அல்லது போதனைகளுக்குரிய அதிகாரத்திற்கு எதிரான வாழ்வா அல்லது சாவா என்கிறதான போராட்டத்தை நாங்கள் அறிவுறுத்துகிறோம். மதம், தேசபக்தி போன்றவற்றின் மீதான மூட நம்பிக்கைகள், சட்டத்துக்கு கீழ்ப்படிதல், அரசாங்கத்தின் நன்மையின் மீதான நம்பிக்கை, பதவியில் இருப்போருக்கும், செல்வம் படைத்தவருக்கும் அடிபணிதல் போன்ற நூற்றாண்டு காலமான அறியாமையின் விளைவுகள் - சுருக்கமாய் சொல்லப்போனால், உழைப்பாளி கள் யாவரையும் அடிமைப்படுத்தவும் மதிமயக்கவும் வடிவமைக்கப்பட்டிருக்கும் எல்லா, ஒவ்வொரு மோசடிக்கும் எதிரான ஒரு போராட்டத்தை நாங்கள் அறிவுறுத்துகிறோம். அதிகாரங்களை உழைப்பாளிகள் அழித்தே ஆகவேண்டும்; ஆனால் இவைகளால் லாபமடையும் எவரும் நிச்சயமாய் இதை செய்யமாட்டார்கள். தேசபக்தியும், மதமும் அயோக்கியர்களின் சரணாலயமும், அரணுமாய் இருக்கிறது; மதம் என்பது மனுக்குலத்துக்கே உரிய மாபெரும் சாபமாகும். ஆனாலும் 'உழைப்பு' என்ற மேன்மையானதொரு வார்த்தையை - உழைப்பாளரின் (உழைப்பின்) சபை என்பதனுள் அருவருப்பான பதமாகிய 'சபை' என்பதோடு இணைந்து விபச்சாரம் செய்வதைக் காணமுடிகிறது. 'உழைப்பாளரின் காவலன்' என்ற ஒன்றை பற்றிக்கூட பேசலாம்.



"அரசாங்கம் என்பது நன்மை பயக்கும் ஒரு ஸ்தாபனம் என்று நம்புகிறவர்களது கருத்துகளை நாம் ஆதரிக்கவில்லை. மாற்றம் என்பது ஒரு ஒநாயை ஆட்டுக்குட்டியாய் மாற்றுவதற்கு ஒப்பான சிரமமான காரியமாய் இருக்கும். அல்லது சோஷ-ஸ்டுகளால் குறிக்கோளாக கொள்ளப்பட்டிருக்கும் எல்லா தயாரிப்புகள் மற்றும் செலவழித்தல் யாவையும் ஒரு அதிகாரத்தின் கீழ் மையப்படுத்துதல் என்பதில் கூட நாம் நம்பிக்கை வைக்கவில்லை. இன்னும் அதிகப்படுத்தப்பட்ட அதிகாரம், அடிமைத்தனம் மற்றும் கொடுங்கோ-ன் ஒரு நிஜமான அரக்கத்தனம் இவைகளோடு கூடிய தற்கால அரசாங்கத்தின் ஒரு புதிய அமைப்பைத் தவிர சரியான ஒன்று வேறெதுவும் இருக்கமுடியாது.

"அராஜகவாதிகள் வேண்டுவது என்னவெனில் யாவருக்கும் சமமான சுதந்திரம் ஒவ்வொரு மனிதருடைய திறமைகளும் மனோ நிலைகளும் வேறுபடும். ஒவ்வொருவருக்கும் தன்னால் என்ன செய்யமுடியும் மற்றும் தனக்கு என்னவேண்டும் என்பது மிக நன்றாகத் தெரியும்; சட்டங்களும், ஒழுங்குகளும் தடங்கலையே உண்டுபண்ணும்; நிர்பந்திக்கப்பட்ட உழைப்பு என்றுமே சந்தோஷமாக இருக்காது. அராஜகவாதிகளால் லட்சியமாய் எண்ணப்படும் அரசாங்கத்தில் ஒவ்வொருவரும் தனக்கு திருப்திபடுத்துகிற மிகச்சிறந்த வேலைகளையே செய்வார்கள், அத்தோடு தன்னை திருப்தி செய்துகொள்வதற்கான தன்னுடைய தேவைகளை பொதுவான கையிருப்புகளில் இருந்து எடுத்துக்கொள்வான்."

"மிகவும் மோசமான தீர்மானமும் மிகக்குறைந்த அனுபவமும் கூட இந்த திட்டத்தை பார்க்கும் போது அப்பட்டமான அறிவீனமான செய்கை என்று தான் கூறும். இதில் எதிர்பார்க்கவோ அல்லது திட்டமிடவோ கூடியதான தீர்வு ஏதும் இல்லை; ஆனால் நம்பிக்கையற்ற, நம்பிக்கையை இழக்கச்செய்கிற யோசனையாக இது இருக்கிறது; ஆயினும் சுயநலத்தினால் உந்தப்படும் சூழ்நிலையின்

உத்வேகத்தினால் திரளான மக்கள் விரட்டப்படுவதன் எல்லையாகவே இது இருக்கிறது.

## சோச-ஸம் அல்லது பொதுவுடைமை ஒரு தீர்வு

சமுதாய சீரமைப்பு, செல்வத்தை அதிகரித்தல், நிலம் மற்றும் முதலீட்டின் (நிலம் வாங்கிவிற்கும் வியாபாரம் தவிர்த்த பிற செல்வம்) பொதுவுடைமை உரிமையின் மூலமாக உழைப்பின் உற்பத்திகள், அதிகபட்ச சமஅளவு விநியோகம், அனைத்து தொழிற்சாலைகளின் நிர்வாகமும் மக்களால் பொதுவான ஒன்றாக செயல்படுத்துதல் ஆகியவற்றை உத்திரவாதம் அளிக்க, சோஷ-சம் ஒரு பொதுமக்களின் அரசாங்கமாய் இருக்கக்கூடும். இதன் இலட்சியம் "ஒவ்வொருவரும் அவரது தேவைக்கேற்ப வாழ்தல்" என்பதாகும்.

இது 'தேசியமயம்' என்பதி-ருந்து வேறுபடுகிறது, இதில் எல்லா தனிமனிதனையுமே ஒன்றுபோல மதிப்பளிப்பது திட்டமிடப்படவில்லை. இது கம்யூனிஸம் என்பதி-ருந்து வேறுபடுகிறது, பொருட்களோ அல்லது சொத்துக்களோ அடங்கிய சமுதாயத்தை இது பரிந்துரைக்கவில்லை. இவ்வண்ணமாய் இது, நமது கருத்தின்படி இரண்டின் தவறுகளையுமே தவிர்க்கிறது, அத்தோடு கூட ஞானமுள்ள, மிதமான, சுயநலமற்ற மனிதனால் படிப்படியாக இது அறிமுகப்படுத்தப்படுமேயாகில் இது மிகவும் நடைமுறைக்கு ஒத்த கோட்பாடாக இருக்கும். பல்வேறு இடங்களில் ஒரு சிறு அளவில் ஏற்கெனவே இந்த தத்துவம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் பல நகரங்களில், தண்ணீர் விநியோகம், சாலை மேம்பாடுகள், பள்ளிகள், தீயணைப்பு மற்றும் போலீஸ் இலாக்காக்கள் பொது நலம் கருதி இப்படித்தான் செயல்படுத்தப்படுகின்றன. ஆனால் இந்த விஷயத்தை பொறுத்தமட்டில் ஐரோப்பா நம்மைக் காட்டிலும் முன்னணியில் இருக்கிறது; அங்கு அவர்களது பெருவாரியான ரயில் பாதைகளும் தந்தித் தொடர்புகளும் கூட இப்படித்தான் செயல்படுகின்றன. பிரான்சு நாட்டில் புகையிலை வியாபாரம் அதனுடைய எல்லா லாபங்களுடன் அரசாங்கத்தை, மக்களையே சார்ந்ததாக இருக்கிறது. ரஷ்யாவில் மதுபான வியாபாரம் , பொதுமக்களின் லாபத்துக்காகவே



அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது. அத்தோடு நேர்மையான ஒன்றாக இருப்பதாகவும் அது கூறப்படுகிறது.

கீழ்க்கண்ட சுவாரசியமான புள்ளிவிவரங்கள் நியூஜெர்சியை சேர்ந்த ராணுவ கல்லூரியின் இ.டி.பேபிட். எல்.எல்.டி என்பவரின் **"சமூக மேம்பாட்டு கட்டுமானம்"** என்ற நூ--ருந்து கொடுக்கப்படுகிறது. அறுபத்தியெட்டு அரசாங்கங்கள் தங்களது சொந்த தந்திதகவல் முறைகளை வைத்திருக்கின்றன. ஐம்பத்திநான்கு அரசாங்கங்கள் தங்களது சொந்த ரயில்ரோடுகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பெற்றிருக்கின்றன. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளிடையே பத்தொன்பது மட்டுமே இருக்கின்றன.

"ஆஸ்திரே-யாவில் ஒருவர் 5.50 டாலருக்கு (முதல் வகுப்பில்) தேசத்தில் 1000 மைல்கள் பிரயாணம் செய்யமுடியும். அல்லது 6 மைல்களுக்கு 2 சென்ட்டுகள் என்ற கணக்கில். அதோடு இரயில்பாதை ஊழியர்களுக்கு அமெரிக்க நாட்டில் 10 மணிநேர உழைப்புக்கு கொடுப்பதைக்காட்டிலும் இங்கு 8 மணிநேர உழைப்புக்கே அதிகமான ஊதியம் கொடுக்கப்படுகிறது. இது நாட்டை வளம்குறைக்கச் செய்துவிட்டதா? இந்த ஊதிய விகிதம் நிலவும் விக்டோரியாவில் 1894ம் ஆண்டுகளில் நிகர வருமானம் அரசாங்க வரியை செலுத்த போதுமானதாய் இருந்தது.

"ஹங்கேரியில் சாலைகள் அரசாங்கத்தை சேர்ந்தவைகளாய் இருக்கின்றபடியால் ஒரு சென்ட்டுக்கு ஒருவர் 6 மைல்கள் வரை பிரயாணிக்கலாம். இங்கு கூ- இரட்டிபாகிவிட்டது.

"பெல்ஜியத்தில் பிரயாண செலவு பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது. தொழிலாளியின் கூ- இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. எல்லா சாலைகளின் மூலமும் வருடத்திற்கு 4 மில்-யன் டாலர் வருமானம் அரசாங்கத்திற்கு கிடைக்கிறது.

"ஜெர்மனியில், ஒரு சென்ட்டுக்கு 4 மைல் தூரம் ஒருவர் பயணிக்கலாம். கார்ப்பரேஷன்களின் உடமைகளாயிருந்ததைக் காட்டிலும், இப்போது இதன் ஊழியரது ஊதியம் 120 விழுக்காடு அதிகமாகிவிட்டது. இப்படிப்பட்ட முறைமைகள் அழிவை

நிரூபித்துவிட்டனவா? இல்லை. கடந்த 10 வருடத்தில் நிகர லாபமானது 41 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கடந்த வருடம் (1894)ல் ஜெர்மனியில், சாலைகள் அரசாங்கத்துக்கு 25 மில்-யன் டாலர் நிகர லாபத்தை ஈட்டி தந்திருக்கிறது.

"அரசாங்கம் சாலைகளை உடமையாக்கிக் கொள்வதன் மூலம் அமெரிக்க நாட்டின் மக்களுக்கு ஒரு பில்-யன் டாலர் பணத்தை மிச்சப்படுத்துவதுடன் அதன் தொழிலாளிகளுக்கு மேலான ஊதியத்தை கொடுக்கக் கூடும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போதிருக்கும் ஏழு லட்சம் பேருக்கு பதிலாக சந்தேகமின்றி 2 மில்-யன் வேலை ஆட்கள் தேவைப்படுவார்கள்.

"ஜெர்மனியில் பெர்-ன் நகரமே உலகிலேயே மிக தூய்மையானதும், மிக நேர்த்தியாய் அமைக்கப்பட்ட சாலைகளை உடையதும், மிகச் சிறந்த முறையில் நிர்வாகிக்கப்படுவதுமாய் இருக்கிறது. இது தனக்குச் சொந்தமாக வாயுவேலைகள் மின்சாரவிளக்குகள், நீர்-வேலைகள், சாலை ரயில்பாதைகள், நகர தொலைபேசிகள் மற்றும் அவைகளுக்குரிய தீ-காப்பீடு உட்பட அனைத்தையும் தன்னிடம் கொண்டுள்ளது. எனவே இவ்வண்ணமாய், மொத்த செலவுகளும் போக ஒவ்வொரு வருடமும் 5 மில்-யன் மார்க் அல்லது 1.25 மில்-யன் டாலர் லாபத்தை பெறுகின்றது. இந்த நகரத்தில் அந்த நகரவாசிகள் வருடம் முழுவதிலும் ஒவ்வொரு நாளும் அவர்கள் வேண்டும் போதெல்லாம் அடுத்தடுத்து 5 மைல் அளவிற்கு 4.50 டாலருக்கு பிரயாணம் செய்யலாம், ஆனால் உயர்த்தப்பட்ட நியூயார்க் ரயில்பாதைகளில் ஒரு நாளைக்கு 2 முறை பிரயாணிக்கலாம், இதற்கு 36.50 டாலவராகும்."

"இருபதாம் நூற்றாண்டு" என்ற புத்தகத்தில் திரு. எஃப்.ஜி.ஆர். கோர்டன் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களின்படி அநேக அமெரிக்க நகரங்களின் விளக்குகளை பார்க்கும்போது வருடத்துக்கு ஒவ்வொரு பிறைவிளக்கின் சராசரி விலை - முனிசிபா-டியின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்போது 52.125டாலரும், பல்வேறு நகரங்களின் தனிப்பட்டவர்கள் செலுத்தும் விலையோ சராசரி 105.13 டாலருமாக இருக்கிறது. அல்லது இது நகரங்களே இயங்கிக் கொண்டிருந்தபோது இருந்ததைக் காட்டிலும் 2 மடங்கை விட சற்று அதிகமே.



"1891ல் அமெரிக்க நாட்டில் ஒரு தந்திக்கு ஆகும் சராசரி செலவு 32.5 சென்ட். ஜெர்மெனியில், அரசாங்கமே உரிமை கொண்டிருக்கும் தந்தித் தொடர்பில், 10 வார்த்தைகள் அடங்கிய தந்தி செய்தி நாட்டின் எந்த பகுதிக்கும் 5சென்ட்களில் அனுப்பப்படுகிறது. இங்கோ, தூரம் அதிகப்பட, அதிகப்பட கூ- அதிகமாகிறது, தூரத்தை பொறுத்து 5-ருந்து 20 சென்ட்கள் வரை அநேகமாய் நாம் கூடுதலாய் கொடுக்க வேண்டியதாயிருக்கும். ஒவ்வொரு முனிசிபா-டியும் தங்கள் கட்டுப்பாட்டில் சமையல்வாயு, நீர், நிலக்கரி, சாலை ரயில்பாதை போன்றவற்றை சொந்தமாக கொண்டிருப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க லாபங்களை கிரேட் பிரிட்டனின் பர்மிங் ஹாம், கிளாங்கோ மற்றும் பிற நகரங்களில் செயல்படுத்திக் காட்டப்பட்டிருக்கின்றன."

மிகவும், நல்லது, இப்படியாக நாம் பதில் கொடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனாலும் கூட இவ்விதமான எல்லா சோஷ-ச கோட்பாடுகளும் செயல்முறையில் அவர்கள் மத்தியில் இருந்தாலும் ஐரோப்பாவின் ஏழைகள் ஆயிரவருட ஆசீர்வாதங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதாக எந்த நியாயமான அறிவுள்ள மனுஷரும் கூறிவிட முடியாது. நன்கு கற்று அறிந்த எவருமே ஐரோப்பாவின் உழைக்கும் வார்க்கமானது பொதுவாகவே அமெரிக்க நாட்டின் உழைக்கும் மனிதருடன் எவ்விதத்திலுமே ஒரு சமநிலையின் அருகில் கூட இருப்பதாகச் சொல்வதற்கு துணியமாட்டர்கள். இது இன்னும் இவர்களது சொர்க்கமாகவே இருக்கிறது, அத்தோடு கூட இந்த சொர்க்கத்தில் பங்குபெற வரவேண்டும் என்று விரும்பும் இன்னும் ஆயிரக்கணக்கானோரை கட்டுப்படுத்தும் வகையில் தான் இப்போதும் கூட சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன.

ஆனால் ஐரோப்பிய ஏழைகளின் ஒவ்வொரு முன்னேற்ற சூழ்நிலையிலும் நாம் மனமகிழ்ச்சி கொள்ளுகிற வேளையில், கிரேட் பிரிட்டனைத் தவிர, தேசிய மயமாக்கும் இயக்கங்களினால் மக்களை பொருத்தமட்டில் தர்ம சிந்தையினாலோ அல்லது முதலீட்டின் பக்கமிருக்கும் தேக்கத்தினாலோ பலன்கள் மிகப்பெரிய அளவில் இல்லை. ஆனால் அமெரிக்க நாட்டில் செயல்படாததற்கு மற்றொரு காரணம் அரசாங்கம் தான். திவாலாகும் நிலையை தவிர்ப்பதற்காக

இவைகளின் பொறுப்புகளை அவைகள் கையில் எடுத்துக்கொண்டன. இராணுவம், கப்பற்படை, கோட்டை பராமரிப்பு போன்ற மிகப் பெரிய அளவிலான செலவுகளின் கீழ் இவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அதிக வருவாயை பெற்றிருக்கவேண்டும். குறைந்த கட்டணத்தில் பிராயணம் என்பது மக்களை திருப்திபடுத்துவதுடன், வியாபாரத்தை கவரும் எண்ணத்துடன் செயல்படுத்தப்படுகிறது; ஏனெனில் கட்டணங்கள் குறைவாக இல்லாவிட்டால் குறைந்த ஊதியம் ஈட்டும் அநேகர் பிரயாணம் செய்யமுடியாதல்லவா. அவ்வகையில் ஜெர்மனியில் 4ம் வகுப்பு பிரயாண பெட்டிகள் இருக்கைகள் எதுவும் இல்லாத வெறும் சரக்குப்பெட்டிகளைப் போன்றே இருக்கின்றன.

இப்படிப்பட்ட உண்மைகளின் முழுமையான நோக்கில் பார்க்கும்போது, இப்படிப்பட்ட நடவடிக்கைகள் உழைப்பாளரின் கஷ்டங்களை தீர்த்துவிடும் என்றோ அல்லது ஓரளவிற்காவது 6 வருடங்களுக்குமேல் காரியங்களி-ருந்து சற்று விலக்கை அளித்துவிடும் என்றோ ஒரு தவறான நம்பிக்கையில் நம்மை ஏமாற்றிக் கொள்ளாமல் இருப்போமாக.

அடுத்த சில வருடங்களில் சோஷ-ஸமானது மாபெரும் முன்னேற்றத்தை உண்டாக்கும் என்று நாம் நம்புவதற்கு நம்மிடம் காரணங்கள் உண்டு. ஆனால் அது ஞானமான வழியில் முன்னேற்றாமல் போய்விடுகிறது. அதற்காக பரிந்துரைக்கும் சிலரை வெற்றி மதிமயங்க செய்துவிடும், அதோடு தோல்வியானது மற்றவர்களை நம்பிக்கை இழக்கச் செய்துவிடும், மேலும் இதன் விளைவாக பொறுமையின்மை, பேரழிவிற்கு வழிவகுக்கும் முதலாளித்துவமும் மற்றும் ஏகாதிபத்தியமும் சோஷ-சத்தை ஒரு பகைமையுடன் பார்க்கின்றன. அத்தோடு பொது ஜன கண்ணோட்டத்தில் மிக துணிச்சலோடு இதை கூடுமானவரை அவைகள் ஏற்கனவே எதிர்க்கின்றன. பெயரளவிலான சபை என்பது களைகளும், உலகத் தனமும் நிறைந்து காணப்பட்டாலும், இந்த விஷயத்தில் அது இன்னும் ஒரு வ-மை நிறைந்த காரணியாகவே இருக்கிறது; ஏனெனில் சமூகத்தின் மேல் வகுப்பினரையும், கீழ் வகுப்பினரையும் சரிக்கட்டும் சக்தியையுடைய நடுத்தர வர்க்கத்தினரை பெரும்பாலும் தன் கட்டுக்குள் வைத்திருப்பதுடன்,



அவ்வகுப்பு மக்களின் பிரதிநிதித்துவமாகவும் சபை இருக்கிறது. இவர்களுக்கு சோஷ-ஸம் என்பது இதுவரையில் அதனுடைய நண்பர்களால் குறிப்பிடத்தக்க அளவிற்கு தவறான விதத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் இதுவரையில் அவர்கள் பொதுவாகவே நம்பிக்கையற்றவர்களாய் இருக்கின்றனர். ஆட்சியாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் குருமார்கள் ஆகியவர்கள் (சிலரைத் தவிர) சோஷ-ஸத்துக்கு அவப்பெயரை முத்திரையிடவும், தற்கா-கமாய் அதனை முடுக்கிவிட்டு, சுய-லாபம் மற்றும் பயத்தின் காரணமாய் எழும்பும் போ-யான விவாதங்களால் தங்களைத் தாங்களே உற்சாகப்படுத்திக் கொண்டு சோஷ-ஸத்தின் முதல் எல்லையினையே செய-ழக்கச் செய்துவிடுவார்கள்.

சமத்துவத்தின் கோட்பாடுகள் தற்கா-கமானதும், முழுமை பெறாததுமாய் இருக்கின்ற போதிலும், அந்த செயல்பாட்டில் சபை அமைக்கப்பட்டிருப்பதை காண்பதில் நாம் மகிழ்ச்சி அடையலாம். இதன் நிமித்தமாய் தங்களது சுயவிருப்பம் பாதிக்கப்படும் என்பவர்கள் யாவரும் ஒரு பரந்த நோக்குடன் இதை எடுத்துக்கொள்ள பிரயத்தனம் செய்யவேண்டும். மேலும் பொது நன்மைக்காகத் தங்களுடைய சுயலாபங்களின் ஒருபகுதியை கைவிட வேண்டும்.

ஏற்கெனவே முன்கூறப்பட்டபடியே சபை, அரசாங்கம், மூலதனம் ஆகிய கூட்டு சக்திகளின் கீழ் இந்த இயக்கமானது நசுக்கப்படும், பின்பு இது அராஜகத்திற்கு அழைத்துச் செல்லும்; வேதத்தில் குறிப்பிடப்பட்டது போலவே தற்போது இருக்கும் ஸ்தாபனங்கள் யாவும் அழிந்து நாசமாக்கப்படும் - "யாதொரு ஜாதியாரும் தோன்றியது முதல் அக்காலம் மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்."

ஆனால் சோஷ-ஸம் என்பது கூட முற்றிலும் தனக்கே உரிய ஒரு தனிப்பட்ட விதத்தில் இருக்கவேண்டும். சுயநலம் என்பது மனுக்குலத்தின் பெரும்பான்மையோரின் மனங்களில் ஆளுகை செய்யும் இது தற்கா-கமான ஒரு தீர்வாக இருக்கும். மிகுந்த திட்டமிடுவதில் மிகுந்த திறமைசா-கள் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களுக்கென பொதுப்பணிகள் மற்றும் நஷ்ட ஈடுகளைப் பெறுவதற்கான வழிகளை மிக துரிதமாய் கண்டுக்கொள்வார்கள்.

சமூக அமைப்பின் மீது சுரண்டி வாழ்பவர் அதிகரித்து, செழித்து எல்லா இடங்களையும் சூழ்ந்து கொள்ளக்கூடும். ஒரு கோட்பாட்டை மக்கள் அடையாளம் கண்டுகொண்டு, அதை ஆராதிக்கின்ற வரையில், கூடுமானவரையில் அதற்கு அவர்கள் அனுசரித்து போய்விடுவார்கள்; ஆகவே சோஷ-ஸம் என்பது ஆரம்பத்தில் ஒப்பிட்டுப்பார்க்கும் போது அப்பழுக்கற்றதும், பொதுமக்களின் நலனுக்காக பொது சேவையில் இருந்தவர்களும் அதன் அலுவலக பிரதிநிதிகளும் உண்மை ஊழியராய் இருந்திருக்கக்கூடும். ஆனால் அதே சோஷ-சம் பிரபலமாகும் போது இப்போது அதை எதிர்க்கின்ற அதே மதிநுட்பமான, சுய நலமிக்க திட்டம் தீட்டும் திறமைசா-கள் தங்கள் சுய நலத்திற்காக அதனுள் நுழைந்து அதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளக்கூடும்.

கம்யூனிஸ்டுகளும், தேசிய மயமாக்குதலுக்காக பாடுபாடுகிறவர்களும், நஷ்ட ஈடுகளின் பேதம் அனுமதிக்கப்படும் வரையிலும் சுயநலமானது சத்தியத்தையும் நீதியையும் மூடிமறைத்து, புரட்டிவிடும் என்பதை காண்கின்றனர்.பெருமை மற்றும் இலட்சியங்களை திருப்திப்படுத்துவதற்காக, மனிதனால் எழுப்பப்படக்கூடிய ஏழ்மைக்கெதிரான எல்லா தடைகளையும் அது மேற்கொள்ளும். இந்த கஷ்டத்தை சந்திக்கின்ற மனிதன் பாவி, அவன் பரிசுத்தவான் அல்ல, அவன் சுயநலவாதியே அன்றி அன்புடையவன் அல்ல என்று கோருகிற தற்போதைய நடைமுறைக்கு சாத்தியமற்ற எல்லை வரைக்கும் அவர்கள் போகிறார்கள்.

## சோஷ-ஸம் குறித்து ஹெர்பர்ட் ஸ்பென்சரின் கருத்து

மிகவும் பிரபலமான ஆங்கில தத்துவஞானியும், பொருளாதார நிபுணருமான திரு.ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் - தன்னுடைய தத்துவ விளக்கத்தை ஆதரித்து இத்தா-ய சோஷ-ஸ்டு ஃபெரி என்பவர் கூறியிருக்கும் விஷயத்தைக் கண்ணோக்கி எழுதியிருப்பதாவது : "சோஷ-ஸத்தை ஆதரிக்கும் எனது கருத்து எதையும் பிறர் மீது திணிப்பது எனக்கு மிகவும் எரிச்சலை உண்டாக்கும். சோஷ-ஸத்தின் தோற்றம் தான் இவ்வுலகம் என்றுமே அறிந்திடாத மாபெரும் அழிவாக இருக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன்."



போட்டி அல்லது தனிமனிதத்துவம் மிகுந்த தீவிரமான தீர்வு தேவைப்படுகிற அளவிற்கு தனக்குள் தீமையை கொண்டிருக்கிறது என்பதை மாபெரும் சிந்தனையாளர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இந்நிலையில் சமூக அமைப்புகளுக்கு தனிப்பட்டவர் அடிமைப்படுதலை அவர்கள் கண்டனம் செய்கிறனர்; அல்லது இன்னும் சரியாக கூறுவதனால் சோஷ-ஸத்தினுள் தனிமனிதத்துவம் புதைக்கப்படுதல் என்பது கடைசியில் மிகப்பெரிய அழிவாகிவிடும். பொதுப்பணியாளர்களை ஒரு படையாக இது திரட்டும் போது, தற்போதிருப்பதைக் காட்டிலும் அரசியலை இன்னும் வியாபாரமயமாக்கி, அதன் விளைவாய் பொது ஊழல்களுக்கு என்றுமில்லாத அளவிற்கு அதிகமான வழிகளை திறந்துவிடும்.

'-ட்ரரி டைஜஸ்ட்' (ஆக 10, 1895) -ருந்து கீழ்க்கண்ட பகுதி எடுக்கப்பட்டுள்ளது. இது சோஷ-ஸக் கோட்பாடுகள் சில வகையான சக்திகளால் ஆதரிக்கப்படாவிடில் அது நிலைக்க முடியாது - சுயநலம் என்பது மனுக்குலம் முழுவதிலுமே அவ்வளவு வ-மையானதாக இருக்கிறது என்பதை காட்டும் வகையில் விஷயத்தை கொண்டிருக்கிறது.

## " இரண்டு சோஷ-ஸ சமுதாயங்கள் "

"வெளிநாட்டில் இருக்கும் சமூக பொருளாதார மாணவர்களின் கவனத்தை சோஷ-ஸத்தின் இரண்டு நடைமுறையிலான முயற்சிகள் கவர்ந்திழுக்கின்றன. இந்த இரண்டு நடைமுறைகளிலுமே சோஷ-ஸத்தை ஆரம்பித்து வளரச் செய்தவர்கள் மிக நல்ல விதத்தில் செயல்படுகின்றனர், அதில் ஒன்று மிக செழுமையாயும் கூட இருக்கிறது. ஆனால் சோஷ-ஸ தத்துவங்களின் போதனைகள் மீதே சார்ந்து வாழச் செய்த முயற்சியானது இரண்டிலுமே தோற்றுப்போனது. இவை தங்களை சுற்றியுள்ள நடுத்தர வர்க்கத்தினரி-ருந்து அரிதாக வேறுபடுகிற வழிகளுக்கு முன்னிருந்த இந்த கம்யூனிஸ்டுகள் திரும்பிவிட்டன. இரண்டு வருடங்களுக்கு முன்பு ஆஸ்திரே-யாவின் உழைப்பாளிகளின் கூட்டம் ஒன்று, கூ-க்கு அடிமைகளாயிருந்த வாழ்க்கை அலுத்துப்போய், மிகுந்த கட்டாயத்தின் நிமித்தமாக

பராகுவேவுக்கு இடம் பெயர்ந்து போயினர். இந்த இடத்தில் தங்களது விற்பனைக்கு அதிகமான இயந்திரங்களை பெற்றிராத விவசாயிகளுக்கு ஏற்றதான நிலங்களை அடைந்தனர். தங்களுடைய இந்த குடியேற்றத்தை புதிய ஆஸ்திரே-யா என்று அழைத்தனர், அதோடு அதை உழைப்பாளிகளின் கனவு ராஜ்யமாக மாற்றும் நம்பிக்கையில் இருந்தனர். பிரிட்டனின் வெளியுறவு அலுவலகமானது சமீபத்திய தன்னுடைய அலுவலக குறிப்பில், ஆஸ்திரே-யாவை விட்டு மாற்றி தென்னமெரிக்காவின் பொன் நிறைந்த நாட்டிற்கு செல்ல அநேக மனிதருக்கு காரணமாயிருந்த இந்த இயக்கத்தை குறித்து ஒரு சிறு சரித்திரத்தை அளிக்கிறது. அப்படிப்பட்ட அறிக்கையி-ருந்து கீழ்க்கண்டவற்றை நாம் எடுத்துத் தருகிறோம் :

"அந்த குடியிருப்பு பகுதியின் இலக்கானது அதன் சட்டதிட்டங்கள் வாயிலாக வரையறுக்கப்பட்டது, இது கீழ்க்கண்டவாறு ஒரு கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது: 'எல்லா உழைப்புமே அதன் ஒவ்வொரு அங்கத்தினரின் நலனுக்காக இருக்கும்படியான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே நமது நோக்கமாகும். இதில் ஒருவரை ஒருவர் கொடுமைப் படுத்துவதென்பது முடியாத ஒன்றாக இருக்கும். ஒவ்வொருவரும் சமுதாயத்தின் நலனைக் கருதுவதே தனது தலையாய குறிக்கோளாக இருப்பது ஒவ்வொரு தனிமனிதனின் கடமையாக இருக்கும். இவ்வண்ணமாய் ஒரு குறிப்பிட்ட அளவு சௌகரியம், சந்தோஷம் மற்றும் கல்விக்கு உத்தரவாதம் பெறமுடியும். இது எந்த ஒரு சமுதாயத்தின் அரசியல் அமைப்பிலும் கூடாத ஒரு காரியம். இதில் யாருமே தான் பட்டினி கிடக்கப்போவதில்லை என்ற நிச்சயமில்லாமல் இருக்கின்றனர்.'

"இந்த குறிக்கோள் உணர்ந்து கொள்ளப்படவில்லை. குடியேறியவர்களில் 85 பேர் பெரும்பான்மையோர் தங்கள் மீது திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகளினால் விரைவில் சோர்ந்து போய், கீழ்ப்படிய மறுத்தனர். இந்தப் பிரிவில் நிகழ்ந்த சம்பவத்தினால் ஆஸ்திரே-யாவின் புதியதாக வந்தவர்கள் நஷ்டத்தை ஏற்படுத்தினர், ஆனால் அந்த இயக்கத்தின் தலைவரால் அதிருப்தியடைந்த புதியதாக



குடியேறியவர்கள், தங்களுக்கென சுயமாய் ஒரு தலைவரை தேர்வு செய்து கொண்டனர், இதனால் குடியேற்றப்பகுதியில் தற்போது மூன்று பிரிவுகள் இருக்கின்றன. தங்களது உழைப்பின் பலனில் சமபங்கீடு அநேக உழைப்பாளிகளை விரைவில் அதிருப்திக்குள்ளாக்கியது. இவர்கள் சோஷ-ஸ சட்டங்களுக்கு எதிரானவர்களாகி, தாங்கள் செய்த வேலைக்கேற்ற பங்கை வேலைக்குரிய விகிதத்தில் இருக்கும்படியாய் வற்புறுத்திக்கேட்டனர். தீவிரமாய் மதுவிலக்கு என்பது அதிருப்திக்கான மற்றொரு காரணமாக இருந்தது. விசேஷமாய் அதனுடைய அத்துமீறலானது அசல் மூலதனத்தில் தனது பங்கைப் பெற முடியாமல் வெளிறேயக் கூடிய தண்டனைக்குரியதாக இருந்தது. பராகுவேயின் அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட நீதிபதியாக அந்த இயக்கத்தின் முன்னாள் தலைவர் நியமனம் பெற்று போலீஸ்படையால் சூழப்பட்ட போது அந்தக் குடியேற்றப்பகுதியானது சிதைவுபெறும் நிலையில் இருந்தது. இப்போது அந்த குடியேற்றப்பகுதி செழுமை பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது, ஆனால் சோஷ-ஸ சட்டத்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன.

"மன்தியக்ஸின் சுரங்க தொழிலாளர்களின் அனுபவமானது ஒரு விதத்தில் வித்தியாசமானதாக இருக்கிறது. இவர்களது விஷயத்தில் சோஷ-ஸ கோட்பாடுகளை ஒதுக்கிவைப்பதற்கு செழிப்பு தான் காரணமாய் இருந்தது. பெர்-னின் கெவர்ப் செயிட்டங் அவர்களது கதையை கீழ்கண்டவாறு கூறுகின்றது.

"செயின்ட் எட்டினுக்கு அருகில் மான்தியக்ஸில், இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு கம்பெனிக்கு சொந்தமான சுரங்கம் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. அதனுடைய சுரங்கத்தொழிலாளிகள் வேலையி-ருந்து அனுப்பிவிடப்பட்டனர். அருகில் வேலை வாய்ப்பு ஏதும் இல்லாமையால், அந்தச் சுரங்கத்தை தங்களுக்கு விட்டுக்கொடுக்கும்படி அந்த பணியாளர்கள் கெஞ்சிகேட்டுக் கொண்டனர். ஆதலால் லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை அந்த உரிமையாளர்கள் இழந்து விட்டதால் அதற்கு ஒப்புக்கொண்டனர். சுரங்கத் தொழிலாளிகளிடம் இயந்திரங்கள்

ஏதும் இல்லை, ஆனால் ஒரு தீர்மானத்துடன் அவர்கள் உழைத்து புதிய நம்பிக்கையை காணும்படி சமாளித்து நிர்வகித்தனர். மனித சக்திக்கும் மேலான முயற்சிகளை அதிகபட்சம் அவர்கள் செய்து, தங்களுடைய வருமானத்தில் இயந்திரங்களை வாங்குவதற்கு போதுமான அளவிற்கு சேமித்தனர். அதன் மூலமாய் மாந்தியக்சினால் கைவிடப்பட்ட சுரங்கங்கள் புதிய உரிமையாளர்களின் செல்வத்துக்கான மூலதனங்களாகிவிட்டன. முன்னாள் உரிமையாளர்கள் இதற்கு பிறகு தங்களது உரிமை ஸ்தானத்தை திரும்ப அடையும்படி தீவிரமாய் முயற்சி செய்தனர். ஆனால் அவர்களது வழக்குகளில் தோற்றுப்போயினர். அத்தோடு சுரங்க தொழிலாளர்கள் முதலீட்டாளர்களின் பேராசைக்கும் லாபத்துக்கும் இடையேயுள்ள பேதத்தை காண்பிக்க தவறிவிடவில்லை. மான்தியக்ஸின் இந்த சுரங்கங்கள் தனியார் முதலீடுகளின் தன்னலத்தின் மீது பொதுவுடமையின் வெற்றிக்கானதொரு சம்பவமாக சுட்டிக் காட்டப்பட்டன.

"இதற்கிடையில் உதவியில்லாமல் இனிமேல் எந்த வேலையையும் செய்யமுடியாது என்கிற அளவிற்கு சுரங்கத் தொழிலாளிகள் தங்கள் செயல்பாட்டை விரிவுபடுத்தினர். பிற சுரங்கத் தொழிலாளிகளும் வரவழைக்கப்பட்டு, பணிகளை தொடர தங்களால் முடிந்தவைகளை செய்தனர். ஆனால் சுரங்கத்தை லாபகரமான ஒன்றாக மாற்றும்படி உழைத்த பழைய ஆட்கள் புதியதாக வந்தவர்களுக்கு சமமான பங்கீட்டை கொடுக்க மறுத்தனர். தங்களது காலடியில் இருக்கும் செல்வமானது பெரும்பாலும் மனித உழைப்புகளுக்கும் மிஞ்சிய ஒரு முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்டது என்று அவர்களுக்குத் தெரியும். சொல்லப்போனால், ஒன்றுமில்லாததி-ருந்து அவர்கள் இதை உருவாக்கினர். எனவே இவ்வளவு நாட்களாக எங்கோ பணிபுரிந்து இப்போது இங்கு வேலை செய்யும் இந்த புதியவர்களுடன், தங்களுடைய கடின உழைப்புக்கு பலனை ஏன் பகிர்ந்துக்கொள்ள வேண்டும்? புதிய கூட்டாளிகள் நடாததில் ஏன் அவர்களுக்கு அறுவடையின் பலனைக் கொடுக்க வேண்டும்? புதியவர்களுக்கு நல்ல ஊதியம் அளிக்கப்படவேண்டும், அதுவும் பிற சுரங்கங்களை காட்டிலும் அதிகமாக, ஆனால் அவர்கள் சக உரிமையாளர்களாக ஆகக் கூடாது. அதோடு புதிதாக வந்தவர்கள்



ஒரு இடையூறை உருவாக்கியபோது 'முதலீட்டாளரான' உழைப்பாளிகள் போலீசை வர வழைத்து தங்களுடைய 'ஆலோசனை அறை'யி-ருந்து அவர்களை வெளியே தூக்கியெறிந்துவிட்டனர்."

## தேசியமயம் ஒரு தீர்வு

தேசியமயம் என்பது சோஷ-ஸ கோட்பாட்டின் பிற்கால வளர்ச்சியினால் வந்தது. எல்லா தொழில்களும் நாட்டின் அரசாங்கத்தால் நடத்தப்படவேண்டும்; பணிகளின் பொதுவான கடமையுணர்ச்சியின் அடிப்படை மற்றும் உயிர்வாழ்வுக்கு பொதுவான உத்தரவாதத்தின் அடிப்படையில் என்பது அதன் கோட்பாடு; ஒரே அளவு ஊதியம் பெறும் பொருட்டு ஒரே அளவான வேலையை எல்லா ஊழியரும் செய்யவேண்டும் என்பது போன்ற கோட்பாடுகளை உடையது. தேசியமயம் கோருவது என்னவெனில்:

"தற்போது ஜனங்கள் முறையிடுகிற டிரெஸ்டுகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களின் கூட்டானது, நமது சங்கங்களின் அடிப்படை கோட்பாடுகளின் நடைமுறை செயல்பாட்டை விவரிக்கிறது. இந்த கோட்பாட்டை நாம் இன்னும் சற்று முன்னுக்குத்தள்ள கொஞ்சம் முயற்சிசெய்து பார்க்கிறோம். இதன் மூலம் எல்லா தொழில்களும் எல்லாருடைய நன்மைக்காகவும், தேசத்தால் - ஒருங்கிணைக்கப்பட்டவர்களான ஜனங்களால் - மொத்த ஜனமும் அங்கம் வகிக்கும் ஒரு குழுவாக செயல்படவேண்டும்.

"தற்போதைய தொழிற்சாலை முறைமைகளானது தானே உருவாக்கிக் கொண்டிருக்கும் கட்டுக்கடங்காத தவறுகளை தானே நிரூபித்துக்கொண்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து வருவதாக ஒப்புக்கொள்ளப்படும் அபரிமிதமான சக்தி மற்றும் பொருட்களின் வீணடிப்பால் தன்னுடைய அசட்டுத்தனத்தை அது தானே நிரூபிக்கிறது. இந்த முறைமைக்கு எதிராக எங்கள் எதிர்ப்பை நாங்கள் தெரிவிக்கிறோம். அடிமைத்தனத்தின் ஒழிப்புக்காக அது உருவாக்கப்பட்டது. அது அழியாமல் நிலைத்து நிற்க எங்களது முழு முயற்சியை நாங்கள் உறுதி கூறுகிறோம்."

இரண்டுக்கும் பொதுவான சில சாதகமான குறிப்புகளை "சோஷ-ஸம்" அல்லது "பொதுவுடமை" என்ற தலைப்பின் கீழ் தீர்வாக நாம் குறிப்பிட்டிருக்கிறோம். எனினும் மொத்தத்தில்

"தேசியமயம்" என்பது முற்றிலும் நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்று; பொதுவாகவே அதற்குரிய எதிர்ப்பு நாம் கம்யூனிஸத்துக்கு எதிராய் முன்னமே குறிப்பிட்ட அதே விஷயம் தான். கம்யூனிஸத்தைப் போல் தேசியமயம் என்பது குடும்ப சீரழிவை நேரடியாய் அச்சுறுத்தாவிட்டாலும், அதன் நோக்கம் என்னவோ நிச்சமாய் அந்த திசையை நோக்கியே இருக்கக்கூடும். அதற்காக வாதிடுகிறவர்களில் அநேகர் பரந்த எண்ணமுடையவர்களும், தயாள குணமுடையவர்களும், சுய லாபத்தை எதிர்பார்க்காமல் உதவி செய்த சிலரும், தேசியமயத்தின் கொள்ளைகள் ஒரு பொதுப்படையான எடுத்துக்காட்டாய் செயல்படுத்தப்பட குடியிருப்புகளை நிறுவ வேண்டியவர்களாய் இருந்தனர். இவைகளில் சில படுதோல்வியடைந்தன. நடைமுறையில் வெற்றியடைந்தவைகளும் கூட, தங்களது குடியிருப்புகளுக்கு வெளியே உள்ள உலகத்தோடு தொடர்பு கொண்டபோது, "தேசியமய கோட்பாடுகளை" அசட்டை செய்யும்படி வற்புறுத்தப்பட்டிருக்கின்றன; அத்தோடு கூட, அவைகள் யாவற்றுக்குள்ளும் எதிர்பார்த்தபடி குறிப்பிட்டமோதல்கள் இருந்திருக்கின்றன. "ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம்" என்பதுடன் "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துகொள்வதற்கு" தேவனுடைய பரிசுத்தவான்களுக்கே கடினமாகத் தோன்றுமேயாகில், அப்படிப்பட்ட எந்த ஒரு சிந்தையும் ஒரு பிடிப்பாக இல்லாத பலதரப்பட்ட கூட்டங்கள் எப்படி உலகத்தின் சுயநலத்தின் ஆவி, மாம்சம் மற்றும் பிசாசை முறியடிப்பதில் ஜெயம் கொள்ளமுடியும்?

அமெரிக்க நாட்டில் இந்த தேசியமயம் திட்டத்தின் கீழ் அநேக குடியிருப்புகள் ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகளுக்குள் தோற்றுப்போயின. இதில் போதகர் இ.பி. பேனி என்பவர் "எல்லாம் ஒருவருக்கே மற்றும் ஒருவருக்கே எல்லாம்" என்ற தத்துவத்தின் கீழ் க-ஃபோர்னியாவின் அல்ட்ரூரியா குடியிருப்பு தோற்றுவிக்கப்பட்டு, அதன் தோல்வி மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாய் இருந்தது. பிற குடியிருப்புகளைக் காட்டிலும் அநேக சிறப்புகளை இது பெற்றிருந்தபடியால் அது எல்லா வகையினரையும் ஏற்றுக்கொள்ளாமல், தனது அங்கத்தினர்களை பொறுக்கி எடுத்தது. அத்தோடு மட்டுமின்றி, பூரணகட்டுப்பாட்டிற்குள் ஒரு உபகார



சிந்தையுடைய ஸ்தாபனத்திற்கு ஒப்பான ஒரு அரசாங்கத்தை அது கொண்டிருந்தது. அதன் தோல்விக்கான காரணத்தை அதன் நிறுவனர் "சான் பிரான்சிஸ்கோ எக்ஸ்ஸாமின"ரில் டிசம்பர் 10, 1896ல் கூறியதாவது:

"அல்ட்ரூரியா ஒரு முழுமையான தோல்வியல்ல... ஒரு சந்தோஷமான சமூக வாழ்வை உருவாக்கிய - ஒரு குறிப்பிட்ட காலமே நிலவியதாகிய - நம்பிக்கை, நல்ல நோக்கம் மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றை நாங்கள் மெய்ப்பித்து காண்பித்தோம். மேலும் அதன் மறுபக்கத்தில், அவநம்பிக்கை, பகை மற்றும் சுயநல நோக்கம் என்பவைகள் மனித சுபாவத்தை கொடூரமாக்கி, வாழ்வை பிரயோஜனமற்றதாக ஆக்குகிறது... முத-ல் நாங்கள் செய்தது போல் ஒருவரை ஒருவர் நம்பி, அனுசரித்து போவதை நாங்கள் தொடரவில்லை. ஆனால், மீதமுள்ள உலகத்தின் வழிகளில் நாங்கள் விழுந்துவிட்டோம்."

சில மனிதர் அனுபவத்தினால் மெய்ப்பிப்பதை மற்றவர்கள் தனிப்பட்ட அனுமான விவேகத்துடன் அறிந்துகொள்வது மனித சுபாவமாகும். மனித இதயங்களை சுயநலமானது இன்னமும் ஆளுகை செய்து கொண்டிருக்கும் இப்படிப்பட்ட காலக்கட்டத்தில் நம்பிக்கையின் பயனற்ற தன்மையின் மீது ஒரு பாடத்தை கற்றுக்கொள்ள யாராவது விரும்பினால், மூன்று அல்லது நான்கு இரண்டாம் தர சாப்பாட்டு விடுதிகளில் ஒவ்வொரு வாரம் தங்கி பார்த்தால் மிக எளிமையாக அனுபவத்தை அவர் பெற்றுக்கொள்ளலாம்."

## மெக்கானிக்குகளின் பொதுக்கல்வி ஒரு தீர்வு

திரு. ஹென்றி ஹால்ட் என்பவர் தி ஃபோரம் என்ற பத்திரிக்கையில் ஒரு கட்டுரையை வெளியிட்டார். இதில் எந்த ஒரு வேலைக்கும் தன்னை மாற்றிக்கொள்ளும் விதத்தில் ஒரு மெக்கானிக்கை தகுதிபடுத்தும் விதத்தில் - ஒரு டஜன் தொழில்களை ஒருவன் கற்றுக்கொள்ள வேண்டும் - அப்படிப்பட்டதொரு தொழில் நிறைந்ததாக கல்வியிருக்கவேண்டும் என்று காட்ட அவர் முயற்சி செய்கிறார். சில தனிப்பட்டவருக்கு இது தற்கா-கமான ஒரு உதவியாக இருந்தாலும் இது பிரச்சனையை தீர்க்காது என்பது

தெளிவாக இருக்கிறது. தற்போதிருக்கும் நிலைமையே போதுமான அளவிற்கு மோசமாய் இருக்கிறது. பூச்சு வேலை செய்பவரும், செங்கல் வேலையாட்களும் வேலையுடன் இருக்கும் போது, காலணி செய்பவரும், நெசவாளரும் வேலையின்றி இருக்கின்றனர்; ஒருவேளை காலணி செய்பவரும், நெசவாளரும் கூட செங்கல் வேலை மற்றும் பூச்சுவேலையை அறிந்திருந்தால் அதன் விளைவு எப்படி இருக்கும்? வேலையில்லாத யாவருமே இருக்கிற வேலைகளுக்கே போட்டியிட்டால் எல்லா துறைகளிலும் அது போட்டியை பெருக்கிவிட்டிருக்கும். இந்த கனவான் எப்படியோ கல்வி அவசியமானது என்ற உண்மையை மதித்து, மிக நன்றாகவே இரண்டு விசாலமான உண்மைகளைக் கையாளுகிறார். அவர் கூறுவதாவது :

“இயற்கை தேர்வு அவசியம் என்பது சற்று கடூரமானதாக இருப்பினும் இதில் உள்ள எளிமையான உண்மைகள் தவிர்க்க முடியாதது. இது நியாயமான ஒன்று என்று நான் சொல்லவில்லை. இயற்கைக்கு நியாயத்தை குறித்து ஒன்றும் தெரியாது. அவளுடைய தராசு பாரபட்சம் இன்றி, மிகக் கடினமான சூழ்நிலைகளுக்கிடையில் எடை பார்க்கிறது. ஆனால் கடைசியில் அந்தச் சூழ்நிலைகளின் மத்தியில் அவைகளின் மிகச்சிறந்ததையே பலனாகக் கொடுக்கும். உண்மைதான், அவளது நடவடிக்கையை சிறிதளவு வழிநடத்துவதற்கான மதிநுட்பத்தை நமக்குள் விருத்தியாக்கியுள்ளாள்; மேலும் அவைகளை உபயோகிப்பதன் நிமித்தம் நீதியின் செயல்பாடு வெளிவருகிறது. ஆனால் அவளது சொந்த போக்குகளுக்கு பொருத்தமான வழிகளில் மட்டுமே அவளை நாம் வழி நடத்திச்செல்ல முடியும்; இல்லாவிடில் நாம் மேற்கொள்ளப்படுவோம். தற்போது, இயற்கையான தேர்வு என்பதைக் காட்டிலும் வேறு எதுவும் அவளது எந்த ஒரு செயலையும் அத்தனை தெளிவாக புலப்படச் செய்யவில்லை. மேலும் நமது குறைந்த சுதந்திரங்கள் மற்றும் வாக்குரிமையை செயல்படுத்துவதினால், நாம் அதோடு கூட அதனுள் விழுந்த போது இருந்தவிதமாய் எப்போதும் நாம் ஞானமாய் இருக்கவில்லை - எப்போது என்றால், உதாரணமாய் ஒரு -ங்கனை உயர்த்தியபோது- ஆனால் இது வரையில், திறமையான பிரசங்கிமாருக்கு முன்னுரிமை



தருவதில் நாம் பெரும்பாலும் மிகச் சிறந்தவர்களாய் இருக்கிறோம், அதன்பிறகு நாம் வருத்தமும் படுகிறோம்.சோஷ-ஸமானது இந்த பாடுகளை உற்பத்தி என்கிற துறைக்கு விரிவுபடுத்துவதற்கு உத்தேசிக்கிறது. தொழிசாலைகளின் தலைவர்கள் இயற்கையான தேர்வு மூலமாகவே தற்போது தேர்வு செய்யப்படுகிறார்கள். சில சமயங்களில் இயற்கைக்கு மாறாக வம்சாவழியில் வருகிறார்கள். ஆனால் வம்சாவழியில் வந்த மகனானவன் சரியான தகுதியை பெற்றிருக்கவில்லையெனில், அதி-ருந்து அவன் நீக்கப்படுவான். ஆனால் போட்டிக்கான சுதந்திரத்தின் அதிகரிப்பும் தொழில் செய்ய முதலீடு இல்லாவிடினும் நல்ல திறமைசா-களுக்கு சௌகரியங்கள் அதிகரித்திருப்பதும் தொழில்கள் தற்போது இயற்கையான தேர்வினால் தான் செயல்படுத்தப்படுகிறது என்பதற்கு சாட்சியாயிருக்கிறது. இதனால் தான், செயற்கையான தேர்வு என்பதை மாற்று வழியாக வைப்பதற்கு சோஷ-ஸ்டுகள் உத்தேசிக்கின்றனர், அதுவும் மிகப்பிரபலமான ஓட்டுகள் மூலமாய். இயற்கை வழியின் மேம்பாட்டைக் குறித்த ஒரு பொது அறிவே இந்த மடத்தனத்தை குணப்படுத்தக் கூடும்.

“பிற உண்மைகளை தெளிவாய் அறிவிப்பது அத்தனை கடினம் என்பது உண்மை என்றாலும் அதன் கருத்துக்கள் சிலவற்றை கூறுவது என்பது முடியாததல்ல என்பதே இதில் மிகவும் முக்கியமானது. அது கடினமானது தான், கொஞ்சம் ஆரம்பக்கல்வி இதற்குத் தேவைப்படுவதனால் அவ்வளவு கடினமானது அல்ல. ஏனெனில் மறுக்கக்கூடாத கொள்கைகள் இதற்கு எதிராக பல்லாயிரம் ஆண்டுகளாய் போராடி வந்திருக்கின்றன. அதனுடன் இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கிறது. இதை வாசிக்கும் அநேகருக்கு - சட்டத்தின் உலகளாவிய ஆளுகை - என்ற பிரபலமான வார்த்தை ஜாலத்தினால் இது அழைக்கப்படுவது உண்மையாக இருக்கும் பட்சத்தில், இதனுடைய ஒவ்வொரு கருத்தும் பெரும்பாலும் விசித்திரமாகவே தோன்றும். ஆனால் தங்களைப் பொருத்தமட்டிலும் விதிவிலக்கு இருக்கவேண்டும் என்று- தினந்தோறும் ஜெபித்து, தாங்கள் இதில் நம்பிக்கை வைத்திருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் பெருவாரியான மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பது தான் உண்மை. பொதுவாக ஜனங்களும், சட்டசபை அங்கத்தினரும்

ஒரு நோயாளியும் ஒரு மருத்துவரிடம் அனுப்பப்படுவார்; அல்லது இயந்திரங்களை பொருத்த மட்டில் ஒரு இயந்திர நிபுணரிடமும் இரசாயனங்களை பொருத்தமட்டில் ஒரு இரசாயன நிபுணரிடமும் சென்று அவரது அபிப்பிராயத்தை ஒரு சிறு குழந்தையின் விசுவாசத்துடன் பின்பற்றுவர்; ஆனால் பொருளாதாரத்தை பொருத்தமட்டில் யாருடைய கருத்தும் வேண்டியிராமல் அவர்கள் சொந்த கருத்தை மட்டுமே சார்ந்திருப்பர். இயற்கை நியதியின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் உடற்கூறு சம்பந்தமான விஷயங்களைப் போன்றே, பிற விஷயங்களையும் - அவற்றின் நியதிகளை அல்லது ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்ட அவைகள் சம்பந்தமானவைகளை குறித்து கற்றுக்கொள்ளவேண்டுமாயின், அதற்கென்று பிரத்தியேகமான கல்வி அவசியம் என்பதை அறியாமல் இருக்கின்றனர். எனவே அறியாமையில் வரும் இவர்களுக்கான தாக்குதல் என்பது மரணத்திற்கேதுவான பேராபத்தைக் கொண்டு வரக்கூடியதாக இருக்கும்....

"பின்பு, தொழிற்பள்ளி மற்றும் குறிப்பிட்ட பொருளாதார விவரங்களின் குறிப்புகள் மட்டுமே உழைக்கும் மக்களுக்கு வேண்டியிராமல், அத்தோடு கூட கொஞ்சம் இயற்கை விதியின் எண்ணத்தை அவனுக்கு கொடுக்கக்கூடிய விஞ்ஞானம் மற்றும் சரித்திர அறிவும் அவனுக்கு அவசியம். இப்படியாக கொடுக்கப்படுகிற அடிப்படை அறிவின்மூலம் சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தைக் குறித்த கருத்தை சிறிது வளர்க்கக்கூடும்; அத்தோடு மனித கோட்பாடு உபயோகமற்றது அல்லது மோசமானது என்றும் கூட, மிக கூர்ந்து கவனிப்பதினாலும், ஜாக்கிரதையுடன் கூடிய சோதனைகளினாலும் இயற்கையின் நியதியானது நிரூபணமாக்கப்படுகிறது என்ற உணர்வும் வளரும். ஆகவே யாரோ ஒருவருடைய செலவின் மூலமாக அன்றி, எந்த மனித நியதியும் தகுதியற்றவரை பிழைக்கச்செய்யமுடியாது என்ற நம்பிக்கை வரக்கூடும். எனவே அவர்களை சுயமாய் பிழைக்க வைப்பதற்கான ஒரேவழி, அவர்களை தகுதிபடுத்துவதுதான்."

ஆம், நமது தற்போதைய சமூக அமைப்பில் இந்த இரண்டு நியதிகள் தான் ஆளுகை செய்கின்றன என்பதையும், இயற்கையையோ அல்லது இயற்கையின் நியதியையோ மாற்றுவது



மனிதனுடைய கையில் இல்லை என்பதையும் அறிந்துகொள்வது நலமாக இருக்கும். இதனால் தற்போதைய சமூக நிலவரத்தை ஒட்டுப்போட்டு சரிசெய்து தற்கா-கமாய் சற்றே ஒரு முன்னேற்றத்தைக் கொண்டு வருவதைக் காட்டிலும் அவனால் வேறு எதுவும் செய்யஇயலாது. பூரணமான சீரானதொரு சமூகத்துக்கு அவசியமான புதிய மற்றும் அதிகம் விரும்பத்தக்க சட்டங்கள் தேவை, அதை அமுல்படுத்த தெய்வீக வல்லமை தேவைப்படும். இந்தப் பாடத்தை கற்றுக்கொள்வது சீர்கேட்டை தானே அதிகமாய் தூண்டிவிட்டுக் கொள்ளக்கூடியதான ஒரு அதிருப்திக்கு பதிலாக "உமது ராஜ்ஜியம் வருவதாக, உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று தேவனுடைய ராஜ்யத்துக்காக ஜெபித்து காத்துக்கொண்டிருக்கும் வேளையில், "போதுமென்கிறமனதுடனே கூடிய தேவபக்தியை" கொண்டுவர உதவும்.

## ஒற்றை வரி தீர்வு

மேலே குறிப்பிடப்பட்ட விதமாய் கம்யூனிஸம், தேசியமயம் மற்றும் சோஷ-ஸம் ஆகியவைகளின் விளைவுகளை பார்த்ததினால் சந்தேகமின்றி திரு. ஹென்றி ஜார்ஜ் என்பவர் "ஒற்றை வரி கோட்பாடு" என்ற கொஞ்சம் மதிப்புடைய ஒரு திட்டத்தை வரையறுத்தார். இது சில விஷயங்களில் சோஷ-ஸத்திற்கு நேர்மாறானது என்று கூறலாம். தனிமனித செல்வாக்கு பல முக்கிய சாராம்சங்களில் ஒத்திருக்கிறது. ஒருவருடைய சொந்த குணாதிசயம், முயற்சிகள் மற்றும் சூழ்நிலை ஆகியவற்றை பொருத்து இருக்கிறது. நீர், காற்று, நிலம் என்ற சிருஷ்டிகரின் பொதுவான ஆசீர்வாதங்கள் நீங்கலாக, ஒவ்வொருவருக்கும் பங்கிட்டுக் கொள்வதற்காக பறிக்க முடியாத உரிமையை அது பாதுகாக்கக் கூடும். தற்போதிருக்கும் சமூக முறைமையில் மிகச் சிறிய நேரடியான மாற்றத்தை மட்டுமே அது பரிந்துரைக்கிறது. தற்போது சமநிலையற்ற நிலையில் செல்வங்கள் இருப்பதற்கு காரணம் நிலங்கள் தனியார் உரிமைகளாய் இருப்பதுதான் என்று கூறுகிறது. இந்த கோட்பாடு உத்தேசிக்கிறபடி எல்லா நிலங்களும் இன்னும் ஒருமுறை ஆதாமின் சந்ததியார் யாவருக்கும் ஒட்டுமொத்தமான சொத்தாகப் போகிறது. மேலும் இதனிமித்தமாய் நமது தற்போதைய சமூக அமைப்பின் கேடுகள்

யாவும் தானே மிக விரைவாய் சரியாகும் என்றும் கூறுகிறது. மனித குடும்பங்களுக்கிடையே சமமாக பகிர்ந்தளிப்பதன் மூலம் நிலங்களின் இந்த மறு-விநியோகமானது முற்றுப் பெற்றுவிடாது. ஆனால் இவை எல்லாவற்றையும் ஒரே பெரிய பண்ணையாக பாவித்து, ஒவ்வொருவரையும் குத்தகையாளராக தற்போது அவர் பெற்றிருக்கும் அளவில் தன்னால் இயன்றதை அவர் உபயோகப்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டு, அவரவர் அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலத்தின் அளவிற்கு தக்கதாக வாடகையோ அல்லது நிலவரியோ வசூ-க்கப்படவேண்டும் (இந்த நிலத்தில் காணப்படும் கட்டிடம் அல்லது வேறு வளர்ச்சிகளின் மதிப்பு தவிர) என்று இது உத்தேசிக்கிறது. இவ்வண்ணமாய் ஒரு தரிசுப் பகுதியானது ஒரு வரி அல்லது வாடகையை உடன்கொண்ட பகுதியானதாக மாற்றி வரி விதிக்கப்படும். இது வளர்ச்சி பெற்று, பயிரிடப்படாத வயல் பலன்தரும் ஒன்றாக கூடுமான அளவிற்கு சேர்த்துக் கொள்ளப்படக் கூடும். இப்படியாக வசூ-க்கப்படும் வரியானது பொதுநலப் பணிகளான பள்ளி, சாலைகள், வீதிகள், நீர் முத-ய எல்லா காரியங்களுக்கும் பயன்படும் ஒரு நிதியாக உண்டாக்கப்படும். அத்தோடு உள்ளூர் மற்றும் பொது அரசாங்கத்துக்கு உபயோகிக்கப்படும்; ஆகவே இந்த கோட்பாட்டின் பெயர் "ஒற்றை வரி" ஆகும்.

இதன் பலனானது ஆயிரக்கணக்கான நகர பகுதிக்கும் தரிசு நிலங்களுக்கும் தற்போது நடைபெறும் உத்தேசமான காரணத்துக்காக நிச்சயமாய் பரவக்கூடும்; ஏனெனில் எல்லா வரிகளும் ஒன்றாக சேர்க்கப்படுகிறது. மேலும் கால்நடை, இயந்திரங்கள், வியாபாரம் மற்றும் எல்லா விதமான வளர்ச்சி ஆகியவற்றி-ருந்து அகற்றப்பட்டு, நிலத்தின் மீது குவிக்கப்பட்டிருப்பவைகள் யாவும் நில-வரியை முழுமையான ஒரு விஷயமான மாற்றக்கூடும். பாரபட்சம் என்பது காட்டப்படாத அளவிற்கு எப்படியும் கிரமமாய் வகுக்கப்படும் வகையில் மிக ஏழ்மையான நிலங்கள் அல்லது போக்குவரத்துக்கு தூரமாய் இருக்கும் நிலங்களுக்கு, போக்குவரத்துக்கு அருகில் உள்ள நிலங்களுக்கான வரி விகிதத்தை விட குறைவாக வசூ-க்கப்படும். அதே விதத்தில் நிலத்தின் மதிப்பு, அமைந்திருக்கும் இடம் மற்றும் சுற்றுப்புறங்களை கருத்தில் கொண்டு நகரப் பகுதியின் நிலங்களுக்கு வரி நிர்ணயிக்கப்படக் கூடும்.



இப்படிபட்டதொரு சட்டம், அதன் அமலாக்கத்துக்கு 10 வருடங்களுக்குப்பிறகு செயல்படும்படி செய்யப்பட்டது. இது நிலம் வியாபார மதிப்பை குறைப்பதற்கான அத்தனை விரைவான பலனை உடையதாக இருக்கும். அத்தோடு காலப்போக்கில் - விதிக்கப்பட்ட வாடகையை செலுத்திவிட்டு, நிலத்தை யார் வேண்டுமாயினும் உபயோகிக்க மில்-யன் ஏக்கர் நிலங்களும், ஆயிரக்கணக்கான நகரப் பகுதிகளும் செயல்பாட்டுக்குள் வரக்கூடும். போப் 13ம் -யோ அவர்கள் உழைப்பாளர் குறித்த ஒரு கடிதத்தை எல்லா பிஷப்புகளுக்கும் அனுப்பினார். இதற்குப் பதிலாக திரு.ஹென்றி ஜார்ஜ் வெளியிட்ட பிரதியின் தலைப்பானது "போப் 13ம் -யோவுக்கான ஒரு பகிரங்க கடிதம்" ஆகும். நமது தலைப்பை சார்ந்த சில நல்ல கருத்துக்கள் இதில் அடங்கியிருந்தபடியாலும், அத்தோடு நமது விவாதத்தின் கீழ் இருக்கும் ஒரு அறிக்கையும் கூட இதில் இருந்ததாலும் இதன் சாராம்சங்களை கீழே அளிக்கிறோம்.

**போப் 13ம் -யோ உழைப்பாளர் பிரச்சனை குறித்து பிஷப்புகளுக்கு அனுப்பிய கடிதத்துக்கு பதிலாக திரு.ஹென்றி ஜார்ஜ் வெளியிட்ட ஒரு பகிரங்க கடிதத்தின் சாராம்சம்:**

"புனிதரான நீங்கள் தெரிவிக்க வேண்டிய மெய்யான விசேஷத்தை விட்டுவிட்டதாக எங்களுக்குத் தோன்றுகின்றது. அது என்னவெனில் கிறிஸ்துவானவர் தான் ஒரு தச்சரின் மகனாவதிலும், அவரே ஒரு தச்சராக பணி செய்ததிலும் காட்டிய உண்மை என்னவெனில், 'உழைப்பின் மூலம் ஒருவன் தனது பிழைப்பை தேடிக் கொள்வதில் வெட்கப்பட ஏதுமில்லை' என்பதைக் கூற நீங்கள் தவறிவிட்டீர்கள். ஜனங்களிடமிருந்து கொள்ளையிடுவதன் மூலமாக அன்றி நேர்மையுடன் இருப்பதில் வெட்கப்பட ஏதுமில்லை என்பதைத்தான் ஏறக்குறைய அவர் கூறியிருக்கிறார். நீங்கள் பரந்த கண்ணோட்டத்துடன் இது எப்படிப்பட்ட உண்மை என்பதை யோசனை செய்வீர்களாகில் எல்லா மனிதரையும் உழைப்பாளிகள், பிச்சைக்காரர், திருடர் என்று தரம் பிரித்தால், கிறிஸ்துவானவர் இவ்வுலகில் இருந்த காலத்தில் ஒரு உழைப்பாளியின் கூட்டத்தில்

ஒருவராகத்தான் இருந்திருக்ககூடும். ஏனெனில் இவர் பிரமாணத்தை நிறைவேற்ற வந்தவராகையால், சொல்லாலும் செயலாலும் தேவனுடைய உழைப்பின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

"கிறிஸ்துவின் வாழ்க்கை இவ்வுலகில் எவ்வளவு முழுமையாயும் எவ்வளவு அழகாயும் இந்த நியதியை விளக்கியிருக்கிறது. குழந்தைப் பருவத்துக்குரிய பெலவீனங்களில் நமது உலக வாழ்வு நுழையும்போது யாவருமே அதில் நுழையவேண்டும் என்று முன் குறிக்கப்பட்டுவிட்டபடியால், அவர் இயற்கையால் கொடுக்கப்பட்ட கட்டளையை அன்போடு எடுத்துக் கொண்டார். அதாவது உழைப்பினால் ஈட்டப்படும் ஜீவாதாரத்தை ஒரு தலைமுறையினர் தனது பின் சந்ததிக்கு அளிக்க கடமைப்படுகிறது. பின்பு வளர்ந்து அவர் தக்க வயதை அடையும் போது தமக்குரிய சொந்த வாழ்வாதாரத்தைப் பெரும்பான்மையான ஜனங்கள் சம்பாதித்துக் கொள்கிறது போல உழைப்பின் மூலம் அவரும் பெற்றுக் கொள்கிறார். அதன்பின்பு உயர்ந்து, மிக உன்னதமான உழைப்பின் வரம்புக்கு கடந்துபோய், நீதி மற்றும் ஆவிக்குரிய சத்தியங்களை போதிப்பதன் மூலம் தமது ஜீவாதாரத்தை அவர் சம்பாதிக்கிறார். அப்போது மரியாள் அவரது பாதத்தை அபிஷேகிக்க விலையுயர்ந்த பரிமள தைலத்தை ஊற்றிய போது மறுக்காமல் ஏற்றுக் கொண்டார். இவர் பேசுவதை கேட்கும் நன்றியுள்ளம் கொண்டவர்களின் அன்பு காணிக்கைகளில் உலக சம்பந்தமான கூ-யை பெறுகிறார். ஆகவே, இவர் தனது சீஷர்களைத் தெரிந்தெடுக்கும் போது, பிறருடைய உழைப்பில் வாழ்பவராகிய நிலச்சுவான்தாரர்களிடமும், பெரும் செல்வந்தரிடமும் செல்லாமல், உழைக்கும் சாதாரண மக்களிடமே சென்றார். மேலும் அதைவிட உன்னதமான உழைப்பின் எல்லைக்கு அவர்களை அழைத்த போதும், நெறிமுறை மற்றும் ஆவிக்குரிய சத்தியங்களை போதிக்க அவர்களை வெளியே அனுப்பிய போதும், ஒரு கையில் பொறுமையையும், மறு கரத்தில் தாழ்மையையும் எடுத்துக் கொள்ளச் சொன்னார். இப்படிப்பட்ட உழைப்புக்கு அன்பான கைமாறாக 'வேலையாள் தன் கூ-க்குப் பாத்திரனாயிருக்கிறான்' என்று அவர்களிடம் சொன்னார். உழைப்பால் வந்தவை என்று நாம் கையாண்டு கொண்டிருப்பவை எல்லாம் மனித உழைப்பில் மட்டும் அடங்கிவிடுபவை அல்ல. ஆனால் பொருட்கள், புத்தி கூர்மை, வாழ்வின் நெறி அல்லது ஆவிக்குரிய முழுமை ஆகியவையும் சேர்ந்துக் கொள்ள உதவி செய்பவர்களும் கூட உழைப்பாளிகளாகிறார்கள்* என்று போதிக்கிறார்.

*"ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. அது என்னவெனில் புலன் விசாரிப்பாளர், தத்துவமேதை, ஆசிரியர், கலைஞர், கவிஞர், குருமார் ஆகியோர் செல்வத்தின் உற்பத்தியில் நேரடியாய் தொடர்பு கொண்டிராவிட்டாலும் இவர்கள் செல்வ உற்பத்திக்கு காரணங்களான பிரயோஜனம் மற்றும் திருப்தி ஆகியவைகளில் மட்டுமே இவர்கள் பங்கு கொள்ளாமல், அறிவை பெற்று அதை பரப்புவதினாலும், மன வ-மையை தூண்டிவிட்டு, நெறிகளுக்கான உணர்வை மேம்படுத்தவும் செய்கின்றனர். இது செல்வ செழிப்பின் உற்பத்தித் திறனை பெரிதும் அதிகரிக்கும். ஏனெனில் மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் பிழைப்பதில்லை......... ஒருவன் எவ்விதத்திலாவது மனம் அல்லது சரீரத்தின் முயற்சியினால் அனுபவிக்கும் செல்வத்தை மேலும் அதிகப்படுத்துவதால் மனித அறிவின் அளவு பெருகுகிறது, அல்லது மனித வாழ்வுக்கு இன்னும் மேன்மையை அல்லது முழுநிறைவை கொடுக்கிறது. இப்படிப்பட்டவர் ஒரு "உற்பத்தியாளர்," ஒரு "உழைப்பாளி," ஒரு "தொழிலாளி" என்ற மகா பெரிய அர்த்தமுடைய வார்த்தைகளால் தன்னுடைய நேர்மையான ஊதியத்தை நேர்மையாய் சம்பாதிக்கிறார். ஆனால் மனுக்குலத்தை இன்னும் அதிகமான செல்வந்தராகவோ, ஞானமுடையவராகவோ, மேலான நிலைமையுடையவராகவோ, சந்தோஷமானவராகவோ மாற்றுவதற்கு சிறிதளவாவது எதுவும் செய்யாமல், பிறருடைய உழைப்பில் வாழ்பவர்கள், அவர் எந்த மதிப்புடைய பெயரால் அழைக்கப்பட்டாலும், பணப் பேய்களின் பாதிரிகள் எவ்வளவு தீவிர உற்சாகத்துடன் தங்கள் தூப கலசங்களை ஆட்டினாலும், கடைசியில் அவரை பகுத்தறிந்தால் அவர் ஒரு பிச்சைக்காரனாகவோ அல்லது திருடனாகவோ இருக்கிறார்.

"உழைப்பாளிகள், சாதாரண உடல் உழைப்பை கொடுப்பவர்களும் கூட, உண்மையில் ஏழைகளே என்று நினைக்கிறீர்கள். ஆனால் உழைப்பாளி தான் செல்வத்தை உற்பத்தி பண்ணுகிறவர் என்பதை நீங்கள் கவனிக்கத் தவறி விடுகிறீர்கள். அத்தோடு தன்னுடைய தாராள நோக்கினால் வரும் பக்தியின்மையின் மீறுதலால் சிருஷ்டிகருடைய இயற்கையின் பிரமாணம் என்பது நியாயமற்ற ஒன்று என்றும் காரணம் காட்டுகின்றீர்கள். கபடதனத்தின் நிலையில் இது சாத்தியமாக இருக்கிறது. ஆனால்

நியாயம் நிலவும் இடத்திலோ, எல்லா நன்மக்களுமே வாழ்வுக்காய் சம்பாதித்தே ஆகவேண்டும். உழைப்பை மிச்சப்படுத்தும் சாதனங்கள் நிறைந்த நமது காலத்தில் இன்னும் அதிகமாய் சம்பாதிக்க எல்லாராலும் முடியவேண்டும். ஆகவே ஏழ்மை என்பது ஒரு அவமானம் அல்ல என்று சொல்வதினால் ஒரு காரணமற்ற கருத்தை நீங்கள் எடுத்துச் சொல்கிறீர்கள். ஏழ்மை என்பது ஒரு அவமானமாகவே இருக்கவேண்டும். ஏனெனில் சமூக நீதியின் நிலைமையில் தவிர்க்க முடியாத துரதிருஷ்டங்களினால் வஞ்சிக்கப்படாத இடத்தில் அது சோம்பேறித்தனம் அல்லது அஜாக்கிரதையை உணர்த்துவதாக இருக்கக்கூடும்.

“உங்களுடைய இரக்கமானது உழைப்பாளிகளாகிய ஏழைகளை நோக்கியே விசேஷமாய் செல்கிறது. இது ஏன் இப்படியாக இருக்க வேண்டும்? பணக்கார வேலையற்றவர்கள் மீது கூட இரக்கம் பாராட்டப்படக் கூடாதோ? சுவிசேஷ வார்த்தைகளின் படி ஏழைகளை விட பணக்காரரே பரிதாபப்படக்கூடியவர்கள். எதிர்கால வாழ்வினை நம்புகிற ஒருவனுக்குப் பின்னால் விடப்பட்டிருக்கும் கோடிக்கணக்கானோரின் நிலைமை பரிதாபமானதாக காணப்படும். ஆனால் இந்த வாழ்க்கையிலும் கூட உண்மையில் பணக்காரர் எவ்வளவு பரிதாபத்துக்குரியவர்கள். தீமை என்பது செல்வத்தினுள் அடங்கியிருக்கவில்லை. அதனுடைய பொருளின் மீதுள்ள ஆதிக்கத்தில் இருக்கிறது; பிறர் ஏழ்மைக்குள் மூழ்கியிருக்கும் போது செல்வத்தின் உரிமையில் அது இருக்கிறது. மனித வாழ்வுடன் இருக்கும் தொடர்புக்கு மேலாய் உயர்த்தப்பட்ட நிலையில், அதனுடைய வேலை மற்றும் அதனுடைய போராட்டங்கள், அதனுடைய நம்பிக்கை மற்றும் அதனுடைய அச்சங்கள் இவை யாவற்றுக்கும் மேலாக, வாழ்வை இனிமையாக்குகிறதாகிய அன்பி-ருந்து, அதோடு மனிதனில் இருக்கும் விசுவாசம் மற்றும் தேவன் மீதான நம்பிக்கை ஆகியவைகளை திடப்படுத்துகிறதான அன்புள்ள அனுதாபத்திலும், தர்ம சிந்தையுள்ள செயல்களிலும் அது இருக்கிறது. மனித சுபாவத்தின் இழிவான பக்கத்தை செல்வந்தர்கள் எப்படி பார்க்கிறார்கள் என்று யோசனை செய்யுங்கள். முகஸ்துதியாளர் மற்றும் இச்சகம் பேசுகிறவர்களால் அவர்கள் எப்படி



சூழப்பட்டிருக்கிறார்கள்; எப்படி துன்மார்க்கமான உணர்ச்சிகளை திருப்திப்படுத்துவதற்காக தயார்நிலை கருவிகளை மட்டும் தேடுகிறவர்களாக இல்லாமல், அவைகளை தயார்படுத்தி தூண்டுகிறவர்களாயும் இருக்கிறார்கள்; வஞ்சிக்கப்படாதபடி தொடர்ந்து அவர்கள் கண்காணிக்கப்பட வேண்டியிருக்கிறது; அன்பான செய்கை அல்லது நட்பான வார்த்தைக்கு பின்னால் இருக்கும் உண்மையான எண்ணத்தை எவ்வளவு தடவை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது; வெட்கமற்ற பிச்சைக்காரர் மற்றும் சதி செய்யும் வஞ்சகரால் சூழ்ந்து கொள்ளப்படும் போது தாங்கள் இரக்கமுடன் இருக்க முயற்சி செய்வது எப்படி; எத்தனை முறை குடும்பத்தின் பாசம் அவர்களை உறையச் செய்து, அவர்களது மரணமானது எதிர்பார்க்கப்பட்ட உடைமையின் மறைக்கமுடியாத சந்தோஷத்தோடு கூட எதிர்பார்க்கப்பட்டது. ஏழ்மையின் மிக மோசமான தீமையானது பொருட்களின் தேவையில் இல்லை. ஆனால் மேலான சுபாவங்களின் சாதுர்யம் மற்றும் அவலட்சணத்தில் தான் இருக்கிறது. ஆகவே வேறு வழியில் சொல்வதானல் சாதுர்யம் மற்றும் அவலட்சணம் போன்றவைகளே சம்பாதிக்காத சொத்துக்களின் சுவாதீனமாய், மனிதனில் சிறப்புடையதாக இருக்கிறது.

“தேவனுடைய கட்டளையானது தண்டனைக்கு அப்பாற்பட்ட ஒன்றாக தவிர்க்க முடியாதது. மனிதன் தன்னுடைய ஜீவனத்தை உழைத்து பெறக்கடவன் என்பது தேவ கட்டளையாய் இருக்குமேயாகில், வீணாய் பொழுதுபோக்கும் செல்வந்தர் கஷ்டப்பட்டே ஆக வேண்டும். அத்தோடு அவர்கள் அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றனர். சந்தோஷத்துக்காக வாழ்பவர்களுடைய வாழ்க்கையில் உள்ள முழுமையான வெறுமையை பாருங்கள்; ஏழ்மையினால் சூழப்பட்டவர்கள், செல்வத்தின் திரட்சியினால் திகட்டும் அளவிற்கு இருக்கும் வகுப்பினரிடையே அருவருப்பான ஒழுக்கக்கேடுகள் பெருகிவருவதைக் காணுங்கள்; ச-ப்பினால் வரும் பயங்கரமான தண்டனையை பாருங்கள். இவைகளை ஏழைகள் அறிவதில்லை. தேவனை புறம்பே தள்ளுபவர்களும், மனிதனை இகழுபவர்களும், இதில் உயிர் வாழ்வது என்பதே ஒரு தீமையென்று கருதி, மரணத்தை

கண்டு பயந்து, முழு அழிவுக்காய் ஏங்கி நிற்பவர்களும் செல்வந்தரிடையே வளர்ந்து வருகிறார்கள். இன்னும் அவர்களிடையே வளர்ந்துவரும் சோர்வு மனப்பான்மையையும் பாருங்கள்.

“தன்னை தேடின ஐசுவரியவானான வா-பனிடம் அவனுக்குரிய எல்லாவற்றையும் விற்று தரித்திரனுக்கு கொடு என்று இயேசு சொல்லும்போது அவர் ஏழைகளை நினைத்து அப்படி சொல்லாமல் ஐசுவரியவானையே நினைவில் கொண்டு அதை கூறினார். ஐசுவரியவான்கள் அதிலும் முக்கியமாய் சுய சம்பாத்தியத்தால் செல்வந்தனானவர்கள் மத்தியில் சில சமயத்தில் அநேகர், தங்களுடைய செல்வத்தின் அறிவீனம் குறித்து ஆழமாய் உணரவும், குழந்தைகளை இவற்றின் ஆபத்தும் தூண்டுதல்களும் இழிவுபடுத்திவிடும் என்று அச்சப்படுகிறார்கள் என்றும் நான் சந்தேகப்படவில்லை. ஆனால் நீண்ட நாளைய பழக்கத்தின் பலம், பெருமையின் தூண்டுதல்கள், அவர்கள் ஏற்றுக் கொண்ட உரிமைகளின் குணா லட்சணம் என்ற குடும்பத்தின் எதிர்பார்ப்புகள், அத்தோடு தங்களுடைய செல்வத்தின் மூலம் ஏதாவது நற்பயனை உண்டாக்குவதில் அவர்கள் உண்மையில் உணரும் மிகுந்த கஷ்டம் ஆகியவை வலுவிழந்த கழுதையின்மேல் இன்னும் சுமையேற்றுவதைப் போல, இந்த வாழ்வை முடிவுக்குக் கொண்டுவருகிற செங்குத்தான சரிவில் இடறும்வரை தங்களுடைய சுமைகளுடன் தங்களை பிணைத்துக் கொள்கிறார்கள்.

“உணவு கிடைக்கும் என்ற நிச்சயம் உடைய மனிதர் அது தேவைப்படும் சமயத்தில் பசி எடுக்கும் அளவிற்கு மட்டுமே உண்பார்கள். ஆனால், இப்பூமியின் விளிம்பில் வசிக்கும் இனங்களின் பெரும்பான்மையோருக்கு வாழ்வு என்பது பஞ்சமாகவோ அல்லது பெரும் விருந்தாகவோ இருக்கிறது. பல நாட்கள் நீடிக்கும் பசியை குறித்த பயமானது - தங்களுடைய உணவு வேட்டையில் வெற்றி பெறும்போது ‘அனகோண்டா’ (மலைப்பாம்பு) வைப்போல் விழுங்கும்படி அவர்களைத் தூண்டுகிறது. ஆகவே, செல்வம் கொடுக்கும் சாபம் என்னவெனில், அதை தேடுவதில் மனிதனை விரட்டுவதும், தேவையின் அச்சத்தினால் பொறாமைப்படவும், மேன்மையாய் மதிக்கச் செய்வதும் தான். மிதமிஞ்சிய செல்வம் என்பது மிதமிஞ்சிய ஏழ்மை



என்கிற விதமாய் பணக்காரரின் ஆத்துமாவை, அழிக்கக்கூடிய குணமும் இந்த செல்வத்திற்கு இருக்கிறது. உண்மையான தீமை என்பது அநீதியில் அடங்கியிருக்கிறது. அதி-ருந்தே செயற்கையான உடைமை மற்றும் செயற்கையான இழப்பு ஆகிய இரண்டும் உற்பத்தியாகின்றன.

“ஆனால் இந்த அநீதியானது தனிப்பட்டவரையோ அல்லது ஒரு பிரிவினரையோ குற்றப்படுத்துவது அரிது. தனியார் சொத்துக்களாக இருப்பது மிகப்பெரிய சமூகத் தவறு; இதன் மூலமே சமுதாயம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது; இரண்டு எதிர்மாறான எல்லைகளில் இருந்தபோதும் மிகுந்த பணக்காரரும் மிகுந்த ஏழைகளும் இதனால் ஒரேவிதமாய் பாதிக்கப்படுகின்றனர். இதைக் காணும்போது ஏழைகளின் கஷ்டங்களுக்கு செல்வந்தரே தனிப்பட்ட முறையில் காரணமாய் இருக்கின்றதைப் போல் பேசுவது, கிறிஸ்தவ தர்ம ஸ்தாபனம் எல்லை மீறுவதைப் போல் நமக்குத் தோன்றுகிறது. ஆகிலும் இதை நீங்கள் செய்யும் போது மாபெரும் சொத்து மற்றும் இழிவான ஏழ்மைக்கான காரணமானது தொடப்படாதபடிக்கு நீங்கள் வ-யுறுத்துவீர்கள். அவலட்சணமும், பயங்கரமான உருக்குலைப்புடன் கூடிய ஒரு மனிதர் இங்கு இருக்கிறார். ஒரு வைத்தியர் அன்போடு, மிருதுவாக, ஆனால் நிரந்தரமாக இதை அகற்றக்கூடும். மற்றொருவர் இது அகற்ற முடியாத ஒன்று என்று அறிவுறுத்துகிறார். ஆனால் அதே சமயம் பாதிக்கப்பட்ட பரிதாபமானவர்களை வெறுப்பு மற்றும் பரிகாசத்தி-ருந்து தடுத்து நிறுத்துகிறார். இதில் எது சரி?

“எல்லா மனிதரையும் அவர்களது சரிசமமான, இயற்கையான உரிமைகள் திரும்ப கிடைக்கும்படியாகப் பார்க்கும் போது, இதில் எந்த ஒரு தனிப்பட்ட வகுப்பினரின் லாபத்தையும் நாம் பார்க்காமல் எல்லாருடைய நன்மையையுமே பார்க்கிறோம். ஏனெனில் விசுவாசத்தினால் அறிந்ததும், நேரடியாகப் பார்த்ததுமாகிய இரண்டிலும் அநீதி என்பது யாருக்கும் லாபமானது அல்ல. அத்தோடு நீதியோ யாவருக்கும் நன்மையான ஒன்றாகவே இருக்கவேண்டும்.

“பயனற்றதும் அபத்தமானதுமான சமத்துவத்தை நாம் தேடவில்லை..... நாம் கொண்டுவரக்கூடியதான சமத்துவம் என்பது

அதிர்ஷ்டத்தின் மூலமாக வருவது அல்ல. ஆனால் இயற்கையான சந்தர்ப்பத்தின் மூலம் வரும் சமத்துவமாகிய ஒன்று......

"மேலும் சமூகத்தின் உபயோகத்துக்கென்று நாம் தெளிவாகப் பார்க்கின்றவைகள் தெய்வீக ஒழுங்கில் சமூகத்துக்காக உத்தேசிக்கப்படும் மாபெரும் நீதியாகும். செல்வந்தர்கள் மீது மிக எளிமையான வரியைக் கூட நாம் வசூல் செய்ய மாட்டோம். அவர்கள் எந்த அளவுக்கு செல்வந்தராக இருந்தாலும் சரி. இப்படிப்பட்ட வரிகள் சொத்துக்களின் உரிமையை மீறுவதாக நாம் எண்ணுகிறோம். மட்டுமன்றி, சிருஷ்டிகரின் பொருளாதார சட்டங்களை மிக நேர்த்தியாய் தழுவுகிற பண்பினால் செல்வத்தை நேர்மையுடன் பெறுவது யாராலும் கூடாத காரியம். அதே சமயம் உலகத்தின் சம்பத்தை இன்னும் சேர்க்காமல் இருப்பது....

"கனம் பொருந்திய உங்களது ஆணை இதனுடைய ஒரு உதாரணத்தைக் கொடுக்கின்றது, இவ்வுலக வாழ்வுக்கான அடிப்படை பொருட்களின் உரிமையில் சமத்துவம் மறுக்கப்படுதல், வாழ்வதற்கான உரிமை உண்டு என்பதை குறித்த அறிவு இருந்தும் கூட, வேலையில் அமர்வதற்கு தொழிலாளருக்கு இருக்கும் உரிமையையும், ஒரு குறிப்பிட்ட ஊதியத்தை தங்களுடைய முதலாளிகளிடம் இருந்து பெறுவதற்கான உரிமையையும் நீங்கள் வ-யுறுத்துகிறீர்கள். இப்படிப்பட்டதொரு உரிமை வழக்கத்தில் இல்லை. வேறு ஒருவருடைய வேலையை வற்புறுத்தி கேட்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. அல்லது பிறர் கொடுக்கக்கூடிய ஊதியத்துக்கும் மேலான ஊதியத்தை வற்புறுத்தவும் உரிமை கிடையாது. அல்லது ஒருவரது விருப்பத்துக்கு மாறாக ஊதியத்தை உயர்த்தும்படி வற்புறுத்துவதற்கும் உரிமை கிடையாது. முதலாளிகளின் மீது தொழிலாளிகளின் இப்படிப்பட்ட வற்புறுத்தலுக்கு - தாங்கள் விரும்பி பெற்றுக் கொள்வதற்கும் குறைந்த ஊதியத்தை ஒப்புக்கொண்டு தங்களுக்கு விரும்பாத வகையில் வேலை செய்யும்படி ஊழியர்களை முதலாளிகள் வற்புறுத்துவது தான் காரணம் என்பதற்கு இதை விட மேலான நெறியுடைய காரணம் இருக்க முடியாது. தொழிலாளிகளுடைய இயற்கையான உரிமைகள் மறுக்கப்படுதல் என்ற ஒரு முந்தைய தவறே. எந்த ஒரு எதிர்ப்பும் எழும்புவதற்குக் காரணமாகத் தெரிகிறது....



"பசியினால் உந்தப்பட்டு சமூகத்து அப்பங்களை ஆலயத்தி-ருந்து எடுத்ததன் மூலம் சாதாரணமாய் 'பாவம்' என கருதப்படும் தாவீதின் செயலுக்கு கிறிஸ்து நியாயம் கற்பிக்கிறார். ஆனால் ஆலயத்தின் உடமைகளை திருடுவது என்பது வாழ்வுக்குரியதை பெறுவதற்குரிய சரியானதொரு வழி என்று சொல்ல அவர் எத்தனிக்கவில்லை.

"உங்கள் ஆணையில் எப்படியாகிலும், தர்மத்தின் கோட்பாடுகள் அசாதாரண சூழ்நிலையில் மட்டுமன்றி, சாதாரண சூழ்நிலையின் கீழும் சகித்துக் கொள்ளக் கூடியவைகளே என்று நீங்கள் கூறுகிறீர்கள். உண்மையான உரிமைகளை நீங்கள் மறுப்பதன் மூலம் இந்த பொய்யான உரிமைகளை திணிப்பதற்கு நீங்கள் உந்தப்படுகிறீர்கள். ஒவ்வொரு மனிதனும் பெற்றிருக்கும் இயற்கையான உரிமை என்பது வேலை கேட்டு கெஞ்சுவதோ அல்லது வேறுமனிதனிடம் ஊதியத்தை எதிர்பார்ப்பதோ கிடையாது; ஆனால் தன்னுடைய சொந்த உழைப்பை உபயோகித்து எல்லா மனிதருக்கும் சிருஷ்டிகர் அளித்திருக்கிற பூமியின் குறையாத வைப்பிடத்தில் இருந்து பெறுவதுதான். அந்த வைப்பிடமானது திறந்துள்ளதா? ஒற்றைவரி என்பதன் மூலம் நாம் அதை திறக்கக்கூடும். உழைப்பின் இயற்கையான அவசியமானது விநியோகத்துடன் முன்னேற்றத்தை அடையக்கூடும். உழைப்பை தருபவரும், அதை வாங்குகின்ற மனிதரும் ஒருவருக்கொருவர் பரஸ்பர நன்மைகளுக்காய் தாராளமான பரிமாற்றம் செய்பவராய் மாறக் கூடும். இதனால் தொழிலாளிக்கும், முதலாளிக்கும் இடையில் இருக்கும் எல்லா தகராறுகளும் மறைந்து போகக் கூடும். அப்பொழுதி-ருந்து, யாவரும் தங்களை தடையின்றி வேலையில் ஈடுபடுத்திக் கொள்ள முடியும் என்பதால் வேலை வாய்ப்புகள் ஒரு வரத்தைப் போலக் காணப்படுவது ஒழியும்; மேலும் குறைந்த ஊதியத்துக்கு யாருமே பிறருக்காய் உழைக்கமாட்டார்கள். தனக்காக உழைப்பதினால் சம்பாதிக்க முடியும். அவர்களுடைய முழு உழைப்பின் அளவிற்கு ஊதியம் உயரக் கூடும். அத்தோடு உழைப்பாளிக்கும் முதலாளிக்கும் இடையிலான பரஸ்பர உறவு ஒழுங்குபடுத்தப்படும்."

"திருப்திகரமாய் ஒழுங்குப்படுத்த ஒரே வழி இதுவே.

"முதலாளிகள் கொஞ்சம் நியாயமான ஊதியத்தை கொடுக்க தயாராக இருக்க வேண்டும், அத்தோடு உழைப்பாளிகளும் அதை பெற்றுக் கொள்வதில் திருப்தி கொள்ளவும் வேண்டும் என்று மேன்மை தங்கிய நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட காரியங்களுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டால் சச்சரவுக்கு ஒரு முடிவு வரக்கூடும். உழைக்கும் மக்களுக்கு ஒரு சிக்கனமான வாழ்வை கொடுக்கக்கூடியது என்று இதைக் குறித்து நீங்கள் வெளிப்படையாய் யோசிக்கிறீர்கள். மேலும் கடின உழைப்பாலும் சிக்கனமான முறைகளினாலும் பிற்கால சேமிப்பாக சிறிதளவாவது வைக்கும்படி அவர்களை சாத்தியப்படுத்தக் கூடும்.

"ஆனால் 'பேரம் பேசிக்கொண்டிருக்கும் வியாபார சந்தையை' தவிர்த்து சோளம், பன்றிகள், கப்பல்கள் அல்லது ஓவியங்களின் விலைகளை, நிர்ணயிக்க முடிகிறபோது ஊதியத்தின் நியாயமான விகிதத்தை இதைவிட எப்படி நிர்ணயிக்கமுடியும்? மேலும் ஒரு விஷயத்தில் இருப்பதைப் போல் மற்றவைகளில் தனிச்சையான நியதிகள் - உற்பத்தி திறன்களின் பொருளாதார சரிக்கட்டுதலை மிகுந்த பயனளிக்கும் வகையில் உயர்த்தக்கூடிய உள் கிரியைகளை சரிபார்க்க முடியாதா? ஒரு தாராள சந்தையில் தாங்கள் பெறக்கூடியதைக் காட்டிலும் அதிகப்படியான விலையைச் செலுத்தும்படி பொருட்களை வாங்குபவரைக் காட்டிலும், உழைப்பை வாங்குபவர்கள் ஏன் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்? ஒரு தாராள சந்தையில் தங்களால் பெறக்கூடியதைக் காட்டிலும் குறைவான ஒன்றுக்கு உழைப்பை விற்பவர்கள் ஏன் திருப்தியடைய வேண்டும்? உலகம் இவ்வளவு செல்வச் செழிப்புடன் இருக்கும் போது உழைக்கும் மக்கள் ஏன் குறைவான சம்பளத்தில் திருப்தி கொள்ளவேண்டும்? உலகம் இவ்வளவு நிறைவுடன் இருக்கும் போது அவர்கள் ஏன் வாழ்க்கை முழுவதும் வேதனையுடன் எளிமையான ஒன்றில் திருப்தியடைய வேண்டும்? அவர்களும் கூட மேலான இயற்கை சுபாவங்களுக்கும், சிறந்த ரசனைகளுக்கும் ஏன் விருப்பம் கொள்ளக் கூடாது? மற்றவர்கள் தங்கள் பிரயாணப் பெட்டியை சொகுசாக அனுபவிக்கத்தக்க வகையில் தேடிக் கொள்ளும் போது இவர்கள் மட்டும் அடிதட்டிலேயே பிரயாணம் செய்வதில் ஏன் நிரந்தரமாய் திருப்தி கொள்ளவேண்டும்?



"இனி இப்படியில்லாமல் இருப்பார்களா? நமது காலத்தில் பொங்கி வரும் கிளர்ச்சியானது - உழைக்கும் மக்களுக்கு அதே அளவிலான சௌகரியம் கிடைக்கவில்லை என்ற உண்மையி-ருந்து மட்டுமே எழும்பிவிடவில்லை. இதைவிட மேலான சௌகரியத்தின் மீதான அவர்களது விருப்பத்தின் அதிகரிப்பினாலேயேயும் கூட, உண்மையில் இன்னும் அதிக அளவில் எழும்புகிறது. இந்த விருப்பங்களின் அதிகரிப்பானது நிச்சயம் தொடரவேண்டும். ஏனெனில் உழைக்கும் மக்களும் மனுஷரே, அத்தோடு மனுஷன் ஒரு திருப்தியடையாத மிருகமாய் இருக்கிறான்.

"இவ்வளவு புல், இவ்வளவு தானியம், இவ்வளவு தண்ணீர் அத்தோடு சிறிது உப்பு எனவே திருப்திப்படு என்று சொல்வதற்கு அவன் ஒரு மாடு அல்ல. அதற்கு மாறாய், எவ்வளவு அதிகம் கிடைக்கிறதோ, அவ்வளவு அதிகமாய் அவன் விரும்புவான். போதுமான உணவு கிடைக்கும் போது அதைவிட மேலான உணவு அவனுக்கு தேவை. தங்குவதற்கு வசிப்பிடம் ஒன்று கிடைக்கும் போது இன்னும் சௌகரியங்களும் ரசனைகளும் அவனுக்கு தேவைப்படும். அவனுடைய மாம்சீக தேவைகள் திருப்தி செய்யப்பட்டபோது, அவனது மனத்திற்குரிய மற்றும் ஆன்மீக விருப்பங்கள் எழுகின்றன.

"இந்த தீராத அதிருப்தி என்பது மனிதனின் சுபாவமாக இருக்கிறது. இந்த மேன்மைமிகு சுபாவமே மிருகங்களைவிட மேலானவனாக அவனை உயர்த்தி, தேவசாயலாக உண்மையில் அவன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான் என்பதை காட்டுகிறது. எல்லா முன்னேற்றங்களுக்குமே இதுவே இயக்கும் சக்தியாக இருப்பதால், இவைகளுடன் சண்டை போட வேண்டியதில்லை. இதுதான் பரி.பேதுருவின் மண்டபத்தை எழுப்பக் காரணமாயிருந்தது; மேலும் மாதாவின் தேவதை போன்ற முகத்தை, மங்கிய உயிரற்ற கித்தான் துணி ஒளிரச் செய்தது; இதுதான் சூரியனை எடைபார்த்து, நட்சத்திரங்களை பகுத்தாராய்ந்து, சிருஷ்டிப்பின் மதிநுட்பத்தின் அதிசயமான கிரியைகளை பக்கம் பக்கமாய் விவரித்தது; இதுதான்

அட்லாண்டிக்கை ஒரு கடல் படகாக குறுக்கி, நமது செய்திகளை வெகுதூரத்திலுள்ள தேசங்களுக்கு எடுத்துச் செல்ல மின்னலை தயார்படுத்தியது; இன்னும் சிறிதளவே முழுமை பெற்றதாய் காணப்படும் நமது நாகரீக வளர்ச்சியை அதிகரிக்க சாத்தியக் கூறுகளை திறந்து கொடுப்பதும் இதுவே. அல்லது ஐரோப்பாவை ஆசியாவின் அளவிற்கு சுருக்குவதன் மூலமோ, மனிதனை இழிவுபடுத்துவதன் மூலமோ அதனை கட்டுப்படுத்தி தடுக்க முடியாது.

"ஆகையால் உழைப்பாளியின் மீதிருக்கும் கட்டுப்பாடு யாவும் நீக்கப்படும் போது, யாவருக்கும் உறுதியளிக்கப்படும் இயற்கையான சந்தர்ப்பங்கள் மீதான சமமான நிபந்தனைகளுக்கு வழி உண்டாக்குவதால், நியாயமானதாக கருதப்படும் ஊதியத்தின் விகிதத்தை நிர்ணயிக்கவும் அல்லது உழைப்பாளிகள் அதிகமாய் பெறும்படி முயற்சிக்கும் எந்த ஊதிய அளவை தடுக்கவும் இதனால் முடியாது. தங்களுடைய சூழ்நிலையை சிறிதளவு மேம்படுத்துவதில் திருப்தியடையும்படி தொழிலாளிகளை கூறுவதன் மூலம் அவர்களை இன்னும் அதிருப்தியாளர்களாய் உருவாக்குவது நிச்சயம்.

"தொழிலாளிகளுக்கு அவர்கள் கேட்கும் ஊதியத்துக்கும் மேலாகக் கொடுக்கும்படி முதலாளிகளை நீங்கள் கேட்பது நீதியல்ல. நீங்கள் தர்மத்தைக் கேட்கிறீர்கள். எனவே பணக்கார முதலாளியானவர் இவ்விதம் அதிகப்படியாய் கொடுப்பது உண்மையில் ஊதியம் அல்ல, நிச்சயமாய் அது பிச்சைதான்.

"மேன்மை தங்கிய நீங்கள் உழைப்பாளிகளுடைய நிலைமையின் மேம்பாட்டுக்கான நடைமுறை நடவடிக்கைகளை குறித்து பேசும்போது தர்மம் மீது நீங்கள் கொடுக்கும் அதிகப்படியான அழுத்தத்தை நான் குறிப்பிடவே இல்லை. ஆனால் ஏழ்மைக்கு ஒரு தீர்வு என்ற இந்த பரிந்துரை, நடைமுறைக்கு ஒவ்வாதது. அல்லது அப்படிப்பட்டதாக இதை யாரும் எடுத்துக் கொள்ளவும் மாட்டார்கள். ஒருவேளை ஏழ்மையை ஒழிப்பது என்பது தருமம் செய்வதினால் முடியும் என்று இருக்குமேயாகில் கிறிஸ்தவ ராஜ்யங்களில் ஏழ்மை என்ற ஒன்று இருந்திருக்கவே முடியாது.

"தர்மம் என்பது உண்மையில் ஒரு நல்ல, மேன்மையான குணம், மனிதனுக்கு நன்மையான காரியம். தேவனும் இதை அங்கீகரித்திருக்கிறார். ஆனால் தர்மம் என்பது நீதியின் மேல் கட்டப்படவேண்டும். அது நீதியை தள்ளிவிடக் கூடாது.



"தொழிலாளர்களின் நிலமை குறித்து கிறிஸ்தவ ராஜ்யத்தின் தவறு என்னவென்றால், உழைப்பு திருடப்படுகிறது. அந்த திருட்டின் தொடர்ச்சியை நீங்கள் நியாயப்படுத்தும் போது ஈகையை வற்புறுத்துவது வெட்டிப் பேச்சாகும். நீதிக்கு ஒரு மாற்றாக ஈகையை வற்புறுத்துவது என்பது மதக் கொள்கைக்கு எதிரான ஒன்றாகவே உண்மையில் இருக்கிறது. இது உங்கள் முன்னோடிகளால் கண்டிக்கப்பட்ட ஒன்று. சுவிசேஷம் பிரமாணத்தை மிஞ்சிவிட்டது என்றும், கடமையுணர்ச்சியி-ருந்து மனிதனை தேவனுடைய அன்பு விடுவித்து விட்டது என்றும் இது கற்றுக் கொடுத்தது.

"ஈகை என்பது செய்யக்கூடியது என்னவென்றால் ஆங்காங்கே இருக்கும் இந்த அநீதியின் பாதிப்புகளை சாந்தப்படுவது ஆகும். அதனால் அவைகளை குணப்படுத்த முடியாது. இந்த குறைந்த அளவு அநீதியின் பாதிப்புகளை தீமையின்றி செய்ய இயலாது. ஏனெனில் இந்த வகையில் பார்த்தால் இது இரண்டாம் தர நேர்மை என்று மேலான இடத்தில் வைக்கப்படுமேயாகில், அடிப்படையான அல்லது முதல்தரமான நற்பண்பு இல்லாத இடங்களில் இது தீமையான முறையில் கிரியை செய்யும். எனவே நிதானம் என்பது ஒரு நற்பண்பு, ஊக்கம் என்பதும் ஒரு நற்பண்பு. ஆனால் மிக நிதானமான ஊக்கமுடைய ஒரு திருடன் மிகவும் ஆபத்தானவனே. ஆகவே பொறுமை என்பது ஒரு நற்பண்பு. ஆனால் தவறை கவனியாமல் இருக்கும் பொறுமை தவறாகும். ஆகவே நற்பண்பு என்பது ஞானத்தை தேடி, மனவ-மையை வளர்க்க தீவிர முயற்சி செய்வதாகும். ஆனால் தந்திரமுள்ள மனிதன் தனது புத்திகூர்மையினால் தீமை செய்ய மிகவும் தகுதி படைத்தவனாகிறான். பிசாசுகள் புத்திசா-த்தனமானவை என்று நாம் எப்போதும் நினைக்கிறோம்.

"இப்படியாக போ-யான இந்த ஈகை தான் நீதியை நிராகரித்து ஒதுக்கி தீமை செய்கிறது. ஒரு பக்கத்தில் அது தன்னைக் கொண்டிருப்பவரை ஒழுக்கம் கெட செய்யும், மனித கௌரவத்தையே மானபங்கப்படுத்திவிடும். இது நீங்கள்

சொல்வதைப் போல் ‘தேவனே அதற்குரிய மரியாதையுடன் நடத்துகிறார்.’ அத்தோடு மனிதனை பிச்சைக்காரராகவும், திவாலானவராகவும் மாற்றிவிடும். இவர்கள் சுயமாய் சார்ந்திருப்பவர்களாகவும் சுயமதிப்புடைய குடிமக்களாகவும் மாற, அவர்களுக்காக தேவன் வைத்திருக்கிற மறுசீரமைப்பு என்பது மட்டுமே தேவைப்படுகிறது. மற்றொரு பக்கத்தில் தங்களுடைய சகமனிதனை கொள்ளையிட்டு வாழ்பவரது மனசாட்சிக்கு ஒரு பிணி நீக்கும் மருந்தாக செயல்படுகிறது. அத்தோடு மாயமான நெறியையும், ஆவிக்குரிய பெருமையையும் பேணி வளர்க்கிறது. சந்தேகமின்றி கிறிஸ்து இதைத்தான் மனதில் கொண்டு, பரலோகத்தில் ஐசுவரியவான் பிரவேசிப்பதைக் காட்டிலும் ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது என்று கூறினார். ஏனெனில் இது மனிதனை அநீதிக்குள் அநியாயமாய் வழிநடத்தி, அவர்களது பணத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்தி அநீதியை நிலை நிறுத்தும். மேலும் பிச்சை அளிப்பதனால் மனிதனுக்கு தனது கடமைகளுக்கு மேலாக எதையோ செய்துவிட்டதாயும், தேவனால் நினைவு கூறப்பட மிகவும் தகுதியான ஒன்று என்று நினைக்கவும் செய்யும். அத்தோடு தேவனுக்குரிய நற்குணம் தங்களிடம் இருக்கிறது என்று தெளிவில்லாத வகையில் கூறும். ஏனெனில் சர்வத்தையும் அளிப்பவர் யார்? என்றுமே குறையாத ஒரு சேமிப்புக் கிடங்கை மனிதனுக்கு வாக்களித்தவர் யார்? பூமியின் வற்றாத செழுமையை மட்டுமே காணக்கூடியதாகக் கொடுத்தவர் யார்? அது தேவனல்லவா? மேலும், மனிதன் தங்களுடைய தேவனின் தயாள குணத்தை விட்டு நீக்கப்பட்டு, தங்களது சக சிருஷ்டிகளுடைய தயாள குணத்தின் மீது சாரும்படி செய்யப்படும்போது, அந்த சிருஷ்டிகள் தேவனுடைய ஸ்தானத்தில் வைக்கப்பட்டு, நீங்கள் சொல்லுகிற தேவன் வாக்குதத்தம் செய்தவைகளை பிறருக்கு இவர்கள் கடமையாய் நினைத்து செய்வதினால் தேவனுக்குரிய நன்மதிப்பை இவர்களே பெற்றுக் கொள்வதாய் அர்த்தமில்லையா?

“ஆனால் எல்லாவற்றிலும் மோசமாக, ஒருவேளை நீதிக்காக நியாயமான தேவையாகிய ஈகைக்கான மங்கலான தடையுத்தரவை ஒரு மாற்றுவழியாக வைக்கும் போது, கிறிஸ்தவ மதத்தின் எல்லா பிரிவுகளின் போதகர்களுக்கு தாங்கள் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் என்று தங்களையே தூண்டும் பொழுது பணப்பேய்களை சமாதானம் செய்ய ஒரு சுலபமான வழி திறக்கப்படுகிறது…



இல்லை, பரிசுத்தரே, கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாக இருப்பதைப்போலவே தன் சகமனிதனுக்கும் தேவன் கொடுத்திருக்கும் உரிமைகளை மறுக்கும் மனிதனால், தேவனுக்கு செலுத்த வேண்டியவைகளை ஒருவனும் செலுத்த முடியாதது போலவே நீதியால் தாங்கப்படாத ஈகையும், நிலவிவரும் உழைப்பின் கஷ்டங்களை தீர்க்க எதையும் செய்துவிடமுடியாது. செல்வந்தர்கள் ‘தங்களுக்குண்டான யாவற்றையும் அன்னதானம் பண்ணினாலும், தங்கள் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்கு கொடுத்தாலும்’ பூமியில் சொத்துக்கள் இருக்கும் வரை ஏழ்மையும் தொடரவே செய்யும்.

“உழைப்பாளிகளின் முன்னேற்றத்துக்காக தனது சொத்து முழுவதையுமே தானம் செய்து விட மிகவும் நேர்மையாய் விரும்பும் ஒரு செல்வந்தனின் காரியத்தை இன்றைக்கு எடுத்துக் கொள்ளுங்கள். அவனால் என்ன செய்ய முடியும்?

“தேவைப்படுகிறவர்களுக்கு தனது சொத்தைக் கொடுப்பாரா? தேவைப்படும் சிலருக்கு அவர் உதவி செய்யக்கூடும். ஆனால் பொதுவான நிலைமையை மேம்படுத்த அவரால் முடியாது. எனவே அவர் நன்மைக்கெதிராய் கேடு செய்யும் ஆபத்தையே விளைவிக்கக்கூடும்.

“ஆலயங்களை கட்டினால்? ஆலயங்களின் நிழ-ன் கீழ் ஏழ்மை கெட்டுப் போகும். அதற்கு பிறக்கும் வாரிசு கெட்ட குணத்தை இனப்பெருக்கம் செய்யும்.

“பள்ளிகள், கல்லூரிகளை கட்டுவது? நிலங்களில் தனியார் சொத்துரிமையின் அநீதியைக் காணுவதி-ருந்து மனிதரை காக்குமா? இந்த கல்வியின் பெருக்கம் உழைப்பாளிகளுக்கே பாதிப்பை உண்டுபண்ணக்கூடும். ஏனெனில் கல்வியானது பரவுவதால் கல்விக்கான ஊதியமும் குறைந்து போகிறது.

“மருத்துவமனைகளை நிறுவுதல்? ஏற்கெனவே வேலை தேடுகிறவர்கள் அதிகமாய் இருப்பதாக உழைப்பாளிகளுக்கு

தோன்றுவதால் அவர்களை காப்பாற்றி நீண்ட வாழ்வை அளிப்பது இந்த இக்கட்டான நிலையை அதிகப்படுத்துமே.

"மாதிரி குடியிருப்புகளை கட்டுவது? வீட்டு வாடகையை குறைக்காவிட்டால் நன்மை பெறக்கூடிய வகுப்பினரை இவரே இன்னும் விரட்டுவதாகிவிடும். அத்தோடு வாடகையை குறைப்பாரேயாகில் வேலை தேடுபவரை பெருக்கி ஊதியத்தை இன்னும் ம-வாக்கிவிடுவார்.

"ஆராய்ச்சிக்காக கூடங்களையும் விஞ்ஞான பள்ளிகளையும், பட்டறைகளையும் நிறுவினால்? இதனால் கண்டுபிடிப்புகளையும் புதிய படைப்புகளையும் ஊக்குவித்தபின், அந்த சக்திகள் பூமி மீதான தனிமனித உரிமைமீது ஆதாரமாக் கொண்டு சமுதாயத்தில் கிரியை செய்து, இயந்திரக் கற்களுக்கு இடையில் மாட்டிக் கொண்டதைப் போல் உழைப்பாளிகளை நசுக்கச் செய்கின்றன.

"இங்கிருப்பதை விட சற்று மேலான ஊதியம் கிடைக்கும் இடங்களுக்கு குடிபெயர்ந்து போவதை ஊக்குவித்தால்? மு த - ல் இவனால் உதவிபெற்று குடிபெயர்ந்தவர்களே இவனை திருப்பிக் கொண்டு இப்படிப்பட்ட குடிபெயற்சியை நிறுத்தும்படி வற்புறுத்துவர். ஏனெனில் அது அவர்களது ஊதியத்தை குறைத்து விடுகிறது என்பதினால்.

"ஒருவனுக்கு இருக்கும் நிலங்களை தானம் செய்தால் அல்லது அதற்குரிய வாடகையை வாங்கிக் கொள்ள மறுத்தால் அல்லது சந்தை விலையைக் காட்டிலும் குறைந்த வாடகைக்கே விட்டால்? அவன் இதினால் புதிய நிலச் சொந்தக்காரரையோ அல்லது பங்குதாரர்களையோ உருவாக்கி விடுவான். தனிப்பட்ட சிலரைச் செல்வந்தனாக்கலாம்; ஆனால் உழைப்பாளிகளின் பொதுவான நிலைமையை மேம்படுத்த அவன் எதையுமே செய்யமாட்டான்.

"புராதன காலத்தின் - பொது நல விரும்பிகளான குடிமக்களைப் போல் தன்னை நினைத்துக் கொண்டு தன்னுடைய பிறப்பிடம் அல்லது வளர்ந்த இடத்தை அழகுபடுத்தவும், தனது சொந்த நகரத்தை மேம்படுத்த பெரும்பணத்தை செலவு செய்தால்? குறுகலான கோணலான வீதிகளை அவன் விரிவுபடுத்தி, நேராக்கட்டும்; பூங்காக்களை கட்டி, நீரூற்றுகளை எழுப்பட்டும்;



டிராம் வண்டி பாதைகளை திறந்து, புதிய ரயில் பாதைகளை கொண்டுவரட்டும். அல்லது அவன் தெரிந்து கொண்ட பட்டணத்தை எப்படி வேண்டுமானாலும் அழகுபடுத்தி, கவர்ச்சியாய் மாற்றிக் கொள்ளட்டும். இதனால் வரும் விளைவு என்ன? தேவனுடைய தயாள குணத்தை பாராட்டத் தெரியாதவர்கள், இவருடைய செயலை பெரிதாய் எடுத்துக் கொள்வார்களா? நிலத்தின் விலை இதனால் கூடிவிடாதா, இதன் விளைவாக வாடகைகள் கூடிப் போய் நில உரிமையாளர்களை இன்னும் செழுமைப்படுத்தாதா? ஏன் இப்படிச் செய்யப்போவதாக இவர் ஒரு அறிவிப்பை வெளியிட்டாலே போதும் அது நடக்கப்போவதை எதிர்ப்பார்த்து நிலத்தின் மதிப்பை உச்சிக்கே கொண்டு சென்றுவிடும்.

"பிறகு உழைப்பாளிகளின் நிலைமையை மேம்படுத்த செல்வந்தர்கள் என்னதான் செய்யமுடியும்?

"பிறப்புரிமையை மனிதனிடமிருந்து திருடும் மாபெரும் முதன்மையான தவறை ஒழிப்பதற்காக தனது சக்தியை உபயோகிப்பதைத் தவிர அவனால் வேறு ஒன்றும் செய்ய முடியாது. இதைத்தவிர இதற்கான ஒரு மாற்றாக எதைச் செய்ய மனிதன் முயன்றாலும் தேவ நீதியானது அதனைக் கண்டு நகைக்கும்."

*** *** *** *** ***

"தொழிற்சங்கங்கள் பரஸ்பர விருப்பங்களின் எண்ணங்களை ஊக்குவிக்க முயன்றன; தைரியத்தை கூட்டி இன்னும் அதிக அரசியல் கல்வியை அவ்வப்போது கொடுத்து உதவின; குறிப்பிட்ட அளவு உழைக்கும் மக்கள் தங்களுடைய நிலைமையை ஓரளவிற்கு உயர்த்திக் கொண்டு லாபம் அடைய அது உதவி செய்தது; ஆனால், உழைப்பாளியின் நிலைமையின் பொதுவான காரணங்களை தீர்மானிக்க அது குறிப்பிடத்தக்க எந்த அக்கறையையும் எடுக்கவில்லை. அத்தோடு அந்த மாபெரும் கூட்டத்தில் ஒரு சிறு பகுதியினரின் மேம்பாட்டுக்கு மட்டும் பாடுபடுகிறது; மீதமுள்ள பெரும்பான்மையானவர்களுக்கு எந்த உதவியும் செய்யமுடியவில்லை. போட்டிகளின் கட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு - உழைப்பாளிகளின் உரிமைகளின் எல்லைகள், அதன் முறைகள் ஒரு ராணுவத்தைப் போல் இருக்கிறது. மிகுந்த

நேர்மையான காரணத்திலும் கூட அதன் சுதந்திரமும், பங்கமடைவதாக இருக்கின்றது. வேலை நிறுத்தம் என்ற அவர்களது ஆயுதமானது, அதன் சுபாவத்திலேயே நாசப்படுத்தும் குணமுடையதால், யுத்தவீரனுக்கும் யுத்த வீரனல்லாதவனுக்கும் சேர்ந்து, இது ஒரு அஹிம்சை முறை யுத்தத்தைப் போல் இருக்கிறது. தொழிற்சங்கங்களின் கோட்பாடுகளை எல்லா தொழி-லும் அப்பியாசப்படுத்துவது என்பது, ஒரு கனவில் நடக்கும் செய்கை போல் இருக்கிறது; அத்தோடு ஜாதி முறையில் மனிதனை அடிமைப்படுத்திவிடவும் கூடும்.

“அல்லது வேலை நேரக் கட்டுப்பாடு மற்றும் குழந்தைகள், பெண் வேலையாட்களைக் குறித்த கட்டுப்பாடு போன்ற மிதமான வழிமுறைகளும் கையாளப்பட்டுவிடும். ஆண், பெண், சிறு பிள்ளைகள் ஆகியோர் மிதமிஞ்சி வேலைசெய்வதைத் தவிர வேறு எதிலும் அக்கறை காட்டுவதில்லை. வறுமை என்பது மனுக்குலத்தை அப்படி செய்கிறது. அதன் காரணத்தை அடியோடு புறக்கணித்து மிதமிஞ்சிய வேலையை தடுப்பதற்கு தீவிரமாய் விருப்பம் தெரிவிக்கின்றனர். இந்த தடங்கல்களை நிறைவேற்றும் முறைமைகள், தனிப்பட்ட சுதந்திரத்தின் தலையீட்டுடன், லஞ்சம் மற்றும் தவறானவைகளில் அதிகாரிகளை ஈடுபடுத்தி விருத்தியாக்குகிறது.

“திடமான நம்பிக்கையை உடையது என்பதாக மதிக்கப்படும் பரிபூரண சோஷ-ஸம் இந்த துன்மார்க்கத்தை முழுமையாகக் கொண்டிருக்கிறது. காரணங்களை கண்டுபிடிப்பதற்கு முன்பே முடிவுக்கு வருவதால், இந்த கொடுமையானது முதலீட்டின் தன்மையி-ருந்து வரவில்லை என்பதை காணத்தவறிவிடும். ஆனால் தவறான முறையில் நிலத்தி-ருந்து அதை விலக்கி முதலீட்டின் உழைப்பை சூறையாடி, அதன்மூலம் உண்மையிலேயே ஆதிக்கம் செய்யும் போ-யான ஒரு முதலீட்டை உருவாக்கி விடுகிறது. இயற்கைப் பொருட்களின் உற்பத்தியில் சுதந்திரமாய் இருக்கும் தொழிலாளியை முதலீடு துன்புறுத்துவது என்பது கூடாத காரியம் என்பதைக் காண அது தவறுகிறது; அத்தோடு ஊதிய முறைமைகள் தானாகவே பரஸ்பர சௌகரியங்களுக்குள் எழும்புகிறது என்பதையும் கூட்டான ஒரு அமைப்பில் இருந்தபடி,



அவைகளில் ஒரு பகுதியினர் அவ்வப்போது நேரும் ஏதோ ஒரு விளைவை விரும்பி நாடுகின்றனர் என்பதையும் காணத் தவறுகிறது. மேலும் ‘ஊதியத்தின் இரும்புச்சட்டம்’ என்று அழைக்கப்படுவது உண்மையில் ஊதியத்துக்கான இயற்கை சட்டம் அல்ல. ஆனால் அந்த இயற்கைக்கு மாறான நிலைமையின் கீழ் அந்த ஊதிய சட்டத்தின் மூலம் - வாழ்வுக்கும் உழைப்புக்கும் உரிய மூலகங்களி-ருந்து விலக்கப்பட்டவனாய், உதவியற்றவனாய் மனிதன் ஆக்கப்பட்டுவிட்டான். ‘போட்டியின் தீமைகள்’ என்று தவறாய் நினைத்துக் கொண்டிருப்பது உண்மையில் ‘கட்டுப்படுத்தப்பட்ட போட்டியின் தீமைகளை ’ தான் என்பதைக் காண அது தவறிவிடுகிறது. ஏனெனில் நிலங்கள் பறிக்கப்படும் போது மனிதன் கட்டாயமாய் தள்ளப்படும் ஒருபக்க போட்டியே இவைகளுக்குக் காரணம் என்பதையும் இதனுடைய செயல்முறைகள் மனித அமைப்புகள் தொழிற்சாலையின் படைகளாயும், தயாரிப்பு மற்றும் பரிமாற்றத்தின் எல்லா கட்டுப்பாட்டையும், நிர்வாகத்தையும் கவனிக்கும் அரசாங்க அதிகார முறைகள் அல்லது பகுதி - அரசாங்க அதிகாரமுறைகள் - எகிப்திய ஏதேச்சதிகாரத்தை ஒத்த முழு தோற்றத்தை உடையதாய் இருக்கிறது என்பதையும் காண அது தவறிவிடுகிறது.

“தீமைகளைக் கண்டறிவதில் சோஷ-ஸத்தி-ருந்து நாம் வேறுபடுகிறோம். மேலும் அதற்கான தீர்வுகளிலும் கூட நாம் வேறுபடுகிறோம். முதலீட்டை குறித்து நமக்கு பயம் இல்லை. ஏனெனில் ‘உழைப்பின் இயற்கையான உதவியாளன்’ என்று இதனை கருதுகிறோம். இயல்பானதாக மற்றும் நியாயமானதாக அதை நாம் பார்க்கிறோம்; இது குவிக்கப்படுவதற்கு நாம் எந்த கட்டுப்பாட்டு எல்லையையும் வரையறுக்கமாட்டோம். அல்லது ஏழைகள் மீதும் சரிசமமாய் சுமத்தப்படாத எந்த சுமையையும் பணக்காரர் மீது வற்புறுத்தி திணிக்க மாட்டோம்; போட்டிகளில் தீமை ஏதும் இருப்பதாய் நாம் காணவில்லை. ஆனால் முழுஅளவு ஒத்துழைப்பு உறுதியளிக்கப்படும் வகையில் கட்டுப்பாடுகளற்ற போட்டி இருக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோம். சமுதாயத்துக்கு உரியவைகளை சமுதாயத்துக்கென்று சாதாரணமாக நாம் எடுத்துக் கொள்வோம்; சமூகத்தின் வளர்ச்சியோடு இணைந்திருக்கும்

நிலத்தின் மதிப்பைத் தனிப்பட்டவருக்கு உரிய எல்லாவற்றையும் தனிப்பட்டவருக்கே விட்டுக் கொடுத்துவிடுவோம்; அத்தோடு அரசாங்கத்தின் பணிகளுக்குரிய அவசியமான பிரத்தியோக உரிமைகளை நடைமுறைப்படுத்தி பொது ஆரோக்கியம், பாதுகாப்பு, நீதி, நெறி, நியாயம் மற்றும் சௌகரியங்களுக்குத் தேவையானவைகளை பாதுகாக்கும் வகையில் எல்லாத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளையும் ஒழித்துவிடுவோம்.

"ஆனால் இதி-ருக்கும் அடிப்படை வித்தியாசங்களை புனிதராகிய உங்களை விசேஷமாய் கவனிக்கும்படி நான் கேட்டுக் கொள்வதாவது: செயற்கையாய் ஒருங்கிணைத்து அல்லது வளர்ந்துவிட்ட இயற்கையான உறவுகளின் பற்றாக்குறை மற்றும் இசைவற்ற தன்மைகளி-ருந்து பெருகிவரும் நமது நாகரீக வளர்ச்சியின் தீமைகளை சோஷ-ஸம் தன் எல்லா நிலைகளி-ருந்தும் கவனிக்கிறது. அது மனிதனின் தொழில் உறவுகளை சாதுர்யமாய் ஒருங்கிணைப்பதன் அவசியத்தை அரசாங்கத்தின் மீது சுமத்துகிறது. இந்த காரணத்தினால் தான் சோஷ-ஸமானது நாஸ்திகத்தை நோக்கிப் போக ஆரம்பித்தது. இயற்கை நியதியின் வழிமுறை மற்றும் ஒழுங்கை பார்க்க தவறுவதால் தான் அது தேவனை அங்கீகரிக்க தவறுகிறது.

"மற்றொரு புறத்தில், ஒற்றை வரி மனிதர் (இந்த வார்த்தை நமது நடைமுறை விஷயத்தையே வெளிப்படுத்துகிறது) என்று நம்மை அழைத்துக் கொள்ளும் நாம் சமூகம் மற்றும் தொழில் உறவுகளை நிர்மாணிக்க வேண்டிய ஒரு கருவியை அல்ல, ஆனால் வளருவதற்காக கஷ்டப்படும் ஒரு ஜீவி மட்டுமே தேவைப்படுகிறது என்பதை பார்க்கிறோம். மனித உட-ன் சரிக்கட்டும் செய-ல் காண்பது போன்ற இப்படிப்பட்ட ஒருமைபாட்டை இயற்கை, சமூக, தொழில் நியதிகளில் நாம் காண்கிறோம். இது கூடுமான மட்டும் மனித புத்திகூர்மையில் ஆதிக்கம் செலுத்தி, வழிகாட்டி, ஆணையிட அது மனித புத்திக் கூர்மையின் வ-மையை காட்டிலும் மீறிப்போன ஒன்றாய் இருக்கிறது. அதே அதிகாரத்துவத்தி-ருந்து வர வேண்டிய நெறிமுறையான கோட்பாடுகளும் இந்த சமூக மற்றும் தொழில் நியதிகளும் ஒரு நெருங்கிய உறவுடன் இருப்பதை நாம் காண்கிறோம். அத்தோடு மனிதனின் அறிவுக்கூர்மை அலைபாய்ந்து, தறிகெட்டுப் போகும் போது, அவனது மெய்யான



வழிகாட்டி இந்த நெறிமுறை நியதிகளே என்றும் நிரூபிக்கின்றன. இவ்வண்ணமாய் நமக்கு நமது காலக்கட்டத்தின் தீமைகளுக்கான தீர்வு வேண்டுமாயின் அது நியாயத்தை செய்து சுதந்திரத்தை அளிப்பதால் மட்டுமே முடியும். இந்த காரணத்தினால் தான் நமது நம்பிக்கைகள் - உண்மையில் தேவன் மீதான ஒரு ஸ்திரமான விசுவாசம் மற்றும் பக்தி அடங்கிய நம்பிக்கையினால் மட்டுமே பாதுகாக்கப்படுகிறது. செழுமையை காத்து அழிவை தவிர்க்க வேண்டுமாயின், தேவனுடைய நியதி ஒன்று மட்டுமே மிகமேன்மையான நியதி என்ற மனிதன் அதை ஏற்று கடைபிடிக்க வேண்டும். இதனால் தான் சாதாரண சத்தியத்தில் இருக்கும் ஞானத்தின் ஆழத்தை காண்பிக்க மட்டுமே நமக்கு அரசியல் பொருளாதாரம் செயல்படுகிறது. இதைத்தான் பொதுமக்கள் 'இவர் நாசரேயனாகிய தச்சன் அல்லவா?' என்று ஆச்சரியத்துடன் அவரது வாய்வழியாய் இதைப்பற்றி கேட்டபோது கூறினார்கள்.

"ஏனெனில் தங்களுடைய சக்திகளை செயல்படுத்திக் கொள்வதற்காக சமஅளவு இயற்கையான சந்தர்ப்பங்களை எல்லா மனிதருக்கும் உறுதிபட அளிப்பதிலும் அதற்காக நியாயமான எல்லா சட்டரீதியான தடங்கல்களையும் நீக்குவதிலும் தான் - மனித நியதிக்கு இசைவாக நீதி முறைகள் உறுதிப்படுவதை நாம் காண்கிறோம். நாம் நம்பிக்கை வைத்திருக்கிற இது, நீங்கள் இத்தனை தெளிவாய் விவரித்துக் கூறும் எல்லாத் தீமைகளுக்கும் போதுமானதொரு தீர்வாக மட்டுமன்றி, அதுவே சாத்தியப்படக்கூடிய ஒரே தீர்வாகவும் இருக்கிறது.

"இதைத்தவிர வேறு ஒன்று இருக்கமுடியாது. மனிதனுடைய ஒருங்கிணைந்த சங்கங்களின் நிலை இப்படி இருக்கின்றது-அவன் உலகத்தோடு வைத்திருக்கும் உறவுகளும் அப்படிப்பட்டவைகளாகவே இருக்கின்றன- ஆகவே தேவனுடைய மாற்றமுடியாத பிரமாணங்கள் அப்படிப்பட்டவைகளாய் இருக்கின்றன. இதனால்தான் அவர்களது பிறப்புரிமையில் இருந்து விலக்கி மனிதனை அபகரிக்கும் அநீதியி-ருந்து பிறந்த தீமைகளுக்கு எதிராக நீதியை செய்வதைத் தவிர தேவன் யாவருக்காகவும் வைத்திருக்கும் திரளான ஆசீர்வாதங்களைத் திறந்து கொடுப்பதைத் தவிர வேறு எந்த வழியும் மனித சாதுர்யத்தின் சக்திக்கு மிஞ்சியதாய் இருக்கிறது.

"மண்ணின் மீதும், மண்ணில் இருந்து கிடைப்பவைகளினால் மனிதன் வாழ மட்டுமே முடியும் என்பதாலும், மனித உடலே எடுக்கப்பட்டிருக்கும் இந்த மண்ணே சக்திக்கும், பொருட்களுக்கும் களஞ்சியமாய் இருப்பதினாலும், அவனால் உற்பத்தி செய்யக்கூடிய யாவற்றுக்காகவும் இதன் மீதே சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. எனவே ஒரு சில மனிதருக்கு அந்நிலத்தின் மீது உரிமையும் வேறுசில மனிதருக்கு அது மறுக்கப்படுவதும், இதன் மூலமாய் பணக்காரர், ஏழை என்றும், வசதி படைத்தவர், வசதியற்றவர் என்றும் மனுக்குலம் பிரிக்கப்படுவது தடுக்கப்படாமலேயே தொடர்கின்றதல்லவா? நிலத்தை உபயோகிக்க உரிமை இல்லாதவர்கள் - அந்த நில உரிமையை பெற்றவர்களுக்கு தங்கள் உழைப்பை விற்பதினால் தான் வாழமுடியும் என்பது பின்பற்றப்படவில்லையா? 'கடுமையான ஊதிய நியதி' என்று சோஷ-ஸ்டுகள் அழைப்பதும், 'குறைந்த பட்ச அளவுக்கு ஊதியத்தைக் குறித்த மனப்போக்கு' என்று அரசியல் பொருளாதாரத்தால் பெயரிடப்படுவதும், நிலமற்ற பொதுமக்களாகிய வெறும் உழைப்பாளிகளாய் இருப்பவர்களிடத்தி-ருந்து எடுக்கப்படவேண்டும். இவர்கள் தங்களது உழைப்பையே உபயோகிக்கவும் வ-மையின்றி இருக்கின்றனர். சாத்தியமான ஏதாவது ஒரு முன்னேற்றம் நிலங்களின் பிரிவில் நடக்கும் அநீதியை மாற்றியமைக்காதா? ஏனெனில், தங்களையே பணிக்கு அமர்த்திக் கொள்ள சக்தியற்றவர்கள் - உழைப்பை விற்பவர்களாகவோ அல்லது நிலக் குத்தகைக்காரராகவோ ஆகி உழைக்க அனுமதி பெறுவதற்குப் போட்டி போட வேண்டியிருக்கிறது. மனிதருக்கிடையேயான இந்த போட்டியானது தேவனுடைய என்றும் குறையாத சேமிப்பு கிடங்கை மறைத்து விடுகிறது; பட்டினியைத் தவிர வேறு வழியில்லை. அதே சமயம் தங்கள் கூ-யை மிகவும் குறைக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு, இனவிருத்தியை மட்டும் தொடர முடிகிறது.

"இதனால் மற்ற எல்லா ஊதியங்களும் இந்த அளவுக்கு குறைய வேண்டும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் சாதாரண அறிவும், திறமையும், ஆற்றலும் உடைய பெருவாரியான



உழைப்பாளிகளின் ஊதியம் அந்த அளவு குறைய வேண்டும். விசேஷ வகுப்பாரின் ஊதியம் - சிறப்புமிக்க அறிவுத் திறமை மற்றும் பிற காரணங்களால் போட்டிகளி-ருந்து விலகி நிற்போரின் ஊதியமானது, சாதாரண அளவைவிட மேலாய் இருக்கலாம். இவ்வண்ணமாய் எழுதவும், படிக்கவும் தெரியாத இடங்களில் இவைகளைப் பெற்றிருக்கக் கூடிய மனிதன் சாதாரண உழைப்பாளியைக் காட்டிலும் உயர்ந்த ஊதியத்தைப் பெறச் செய்கிறது. ஆனால் பொதுவாகவே எழுதவும் படிக்கவும் கூடிய நிலைக்கு கல்வியின் நிலை உயர்த்திருப்பதால், இந்த அனுகூலமான சூழ்நிலையும் இல்லாமல் போனது. ஆகவே, ஒரு தொழிலுக்கு விசேஷ பயிற்சியோ அல்லது திறமையோ தேவைப்படும்போதோ அல்லது செயற்கையான கட்டுப்பாடுகளினால் அடைய முடியாதபடி கடினமாக்கப்படும் போதோ, இந்த போட்டிக்கான தடைகள் ஊதியத்தை மிக உயர்வாக வைக்க முற்படுகிறது. ஆனால் புதிய கண்டுபிடிப்புகளின் வளர்ச்சியானது விசேஷ திறமை அல்லது செயற்கையான கட்டுப்பாடுகளோடு விநியோகிக்கப்படும் போது , இந்த உயர்ந்த ஊதியங்கள் சாதாரண நிலைக்கு அமிழ்ந்து போகிறது. மேலும் அதனால் தொழிலை பொறுத்தவரை இப்படிப்பட்ட குணங்கள் விசேஷமானவைகளாய் இருக்கும் வரையிலும், புத்திக் கூர்மை மற்றும் சிக்கனம் என்பது வெறும் வாழ்வை மட்டுமே கொடுக்கக்கூடிய நிலையை காட்டிலும் சற்று மேலான நிலைமையைத் தக்க வைத்துக் கொள்ள சாத்தியமாக்கக்கூடும். பொதுப்படையாய் பார்க்கும் போது - நிலம் தனிமனித உரிமையாகவும், தொழிலாளி உதவியற்றவனாகவும் உயிரை மாய்த்துக் கொள்வதுதான் அடுத்து இறங்கிப் போகக்கூடிய நிலை என்று இருக்கும் பட்சத்தில், போட்டியின் நியதிகள் சம்பாத்தியத்தை சாதாரண அளவிற்கு கொண்டுவர வேண்டும்.

"இதே கருத்தை வேறுவிதமாகக் கூறலாம். ஜீவியத்திற்கும் உழைப்பிற்கும் நிலம் தேவைப்படுகிறது. நில உரிமைதாரர்கள் நிலத்தை உபயோகித்துக் கொள்ள அனுமதித்து, அந்த உழைப்பாளர்களின் உழைப்பினால் உருவாக்கப்படுகின்ற அனைத்தையும் நில உரிமைதாரர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் தாங்கள் விரும்பியவாறு ஜீவியத்தை நடத்திச் செல்ல உதவுகிறது."

"இவ்விதமாய் சமுதாயத்தை, நில உரிமை பெற்ற வகுப்பார் மற்றும் நிலமற்ற வகுப்பார் என்று நிலத்தின் தனிப்பட்ட சொத்துரிமை பிரித்துவிட்டபடியால், தொழிலோ, சமூகமோ, நெறிமுறையோ எதுவானாலும் நில உரிமையை பாதிக்காத வரையில், எந்த கண்டுபிடிப்போ அல்லது முன்னேற்றமோ, ஏழ்மையை தடுக்கவோ அல்லது வெறும் தொழிலாளிகள் என்ற பொதுவான நிலைமையி-ருந்து விடுதலையையோ கொடுக்க முடியாது. ஏனெனில் ஏதாவது கண்டுபிடிப்போ அல்லது முன்னேற்றத்தின் விளைவோ தொழிலாளிகளுக்குப் பலன் அளிக்கக்கூடிய ஒன்றாக இல்லாமல், அது நில உரிமையாளர்களுக்கு வருமானத்தை அதிகப்படுத்துவதாகவே இருக்கிறது. உழைப்புக்கான வெறும் சாதாரண சக்தியை உடையவர்களால், உழைப்புக்கு அவசியமான கருவிகள் இன்றி இவர்களது சக்தி உபயோகமற்று அவர்களது பெரும்பாலான வருமானம் உயிர்வாழ மட்டுமே போதுமானதாக இருக்கிறது.

"இன்றைய நாளின் காரியங்களில் இது எவ்வளவு உண்மை என்பதை நாம் காணலாம். இந்த காலத்தில் கண்டுபிடிப்புகளும் புதிய உருவாக்கங்களும் உழைப்பின் உற்பத்தித்திறனை பெருமளவில் பெருக்கியிருக்கிறது. அதே சமயத்தில உழைப்பின் மதிப்பை பெருமளவில் குறைத்து விட்டது. இந்த முன்னேற்றங்கள் வெறும் உழைப்பாளிகளாய் இருப்பவரது வருமானங்களை எங்காவது உயர்த்தியிருக்கிறதா? அவைகளது லாபங்கள் முக்கியமாய் நிலச் சொந்தக்காரர்களையே போய் சேரவில்லையா - இதனால் நிலத்தின் மதிப்புகளும் அபரிமிதமாய் பெருகிவிடவில்லையா?

"முக்கியமாய் நான் சொல்லவேண்டியது என்னவெனில், லாபங்களின் ஒரு பகுதி இராணுவ செலவுக்காகவும், போருக்கான ஆயத்ததங்களுக்காவும் போய்விடுகிறது. அடுத்து அரசாங்க கடன்களுக்கான வட்டி செலுத்துவதிலும், நில சொந்தக்காரர்களைத் தவிர வேறு உரிமையாளர்களான ஏகாதிபத்தியர்களின் போ-யான முதலீடுகளின் மீது வட்டியாக பெருமளவு செலவிடப்படுகிறது. ஆனால் இந்த முன்னேற்றங்களினால் விரயம் மென்மேலும் தொடர்வதால் உழைப்பாளிகளுக்கு எந்த லாபமும் இருக்க முடியாது. நிலச்சுவான்தாரர்களின் லாபத்தையே பெருக்கும். அணிவகுத்து



நிற்கும் இராணுவமும் அவர்களுடைய நிகழ்வுகளும் அழிக்கப்பட்டுவிட்டால், நிலச் சொந்தக்காரர்களைத் தவிர பிற ஏகாதிபத்தியங்கள் தொடரப்படாமல் போனால், அரசாங்கம் பொருளாதாரத்துக்கு ஒரு உதாரணமாக மாறிவிட்டால், இடைத்தரகராகிய வியாபாரிகளின் லாபம், எல்லாவித தரகருடைய பணமும் மிச்சப்படுத்தப்பட்டால், ஒவ்வொருவருமே நேர்மையானவர்களாக மாறிவிட்டால், போலீசாரோ, நீதிமன்றங்களோ, சிறைச் சாலைகளோ, நேர்மையற்றவைகளுக்கு எதிராய் எந்த முன்னெச்சரிக்கையோ அவசியமிருக்காது - இதன் பலன் உற்பத்தித் திறனின் அதிகரிப்பு தொடர்ந்து வரக்கூடியதாகவே இருக்கும்.

"தற்போது வாழ்வாதாரத்தை மட்டுமே சமாளித்துக் கொண்டிருக்கும் அநேகருக்கு இதே ஆசீர்வாதங்கள் பஞ்சத்தைக் கொண்டுவந்துவிடாதா? எல்லாக் கிறிஸ்தவர்களும் ஜெபிக்க வேண்டியதாகிய ஐரோப்பாவின் எல்லா இராணுவங்களும் முற்றிலுமாய் கலைக்கப்படவேண்டும் என்ற வேண்டுத-னால், வேலையற்றவர்களுக்கு மாபெரும் அச்சம் எழக்கூடும் என்று இன்றைய நாளில் எண்ணப்படுவது உண்மையல்லவா?

"இந்த விளக்கத்தையும் எல்லா திக்கிலும் பரவியிருக்கும் குழப்பத்தையும் எளிதாய் காணக்கூடும். விரயங்களை மிச்சப்படுத்தவும், சிக்கனத்தை அதிகரிக்கவும், உற்பத்தி திறமையையை மேம்படுத்தவும் காரணமான எல்லா கண்டுபிடிப்புகள் மற்றும் முன்னேற்றங்களும் உழைப்பை குறைப்பதற்காகவே இருக்கிறது. ஆகையால் இவைகளை உழைப்பை மிச்சப்படுத்தும் கண்டுபிடிப்புகள் அல்லது முன்னேற்றங்கள் என்று நாம் கூறலாம். இப்போது, பூமியை உபயோகிப்பதற்கு எல்லாருக்கும் உரிமை இருப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டதொரு சமுதாயத்தின் நிலைமையில், மனிதனின் அத்தியாவசியத் தேவைகளை குறைத்துவிடாத வகையில் மிக உச்ச நிலைமைக்கு உழைப்பை மிச்சப்படுத்தும் முன்னேற்றங்கள் போகக்கூடும். ஏனெனில் இப்படிப்பட்ட இயற்கை சூழ-ல் மனிதனின் சொந்த வாழ்வின் அனுபவத்திலும் அத்தோடு சிருஷ்டிகர் மனித இருதயத்தில் வைத்திருக்கும் ஆணித்தரமான பிறவிக்

குணத்திலும் அவனது தேவைகள் இருக்கிறது. ஆனால் பெருவாரியான மனிதர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு... பிறரால் தங்களுக்கு உழைப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்படும் போது, உழைப்பதற்கு மட்டுமே சக்தி உடையவர்களாய் இருக்கும் இந்த சமுதாயத்தில், இந்த அதிகாரங்களை வைத்திருப்பவர்களால் அவர்களுக்கான மனித உழைப்பு என்பது அவர்களது சேவைக்கான அவசியமாகவே மாறிவிடுகிறது. ஆகையால் மனிதனே ஒரு வியாபாரப் பொருளாகி விடுகிறான். ஆகவே, உழைப்பைக் குறைக்கும் முன்னேற்றங்கள் ஊதியத்தை உயர்த்துவதற்காக என்று இருந்தாலும் கூட ராணுவம் கலைக்கப்படுதல், உழைப்பை மிச்சப்படுத்துதல், வர்த்தகத் தேவையை குறைத்தல் ஆகியவைகளின் மூலம் ஊதியத்தை மட்டுபடுத்தி அதன் மூலம் உழைப்பாளிகளை பட்டினி நிலைக்கோ அல்லது வறிய ஏழ்மைக்கோ தாழ்த்தி விடும். உழைப்பைக் குறைக்கும் கண்டுபிடிப்புகள் மற்றும் முன்னேற்றங்கள் உழைப்பின் அவசியத்தையே ஒழித்து விடுவதற்காகவே கொண்டு வரப்பட்டால் அதன் விளைவு என்னவாக இருக்கும்? அப்படியானால் நில உரிமையாளர்களே நிலத்தினால் வரும் எல்லா செல்வங்களையும் பெறும்படியாய் இருக்குமல்லவா? அப்போது தொழிலாளிகளே தேவைப்படாத நிலை உண்டாகுமல்லவா? அப்பொழுது இவர்கள் பட்டினி கிடக்கவோ அல்லது நில உரிமையாளர்களின் தாராள குணத்தை நம்பி வாழ நேருமல்லவா?

“இப்படியாய் நில உரிமைகள் தனிப்பட்டவர்களின் சொத்தாக தொடர்கின்ற வரையில், சில மனிதர் மட்டும் நில உரிமையாளராய் மதிக்கப்பட்டு மற்ற மனிதர்கள் அவர்களது இரக்கத்தினாலேயே இந்த பூமியில் வாழ முடியும் என்று இருக்கும் வரையில் - இந்நாட்களின் தீமைகளை தவிர்க்கும் வகையில் எந்த ஒரு வழிமுறையையும் மனித ஞானம் வகுக்க முடியாது.”

இலவச நிலம் (அதன் மீதான வரியைத் தவிர) என்பதன் தத்துவமானது தனிப்பட்ட முறையில் நாம் பலன் அடைய முடியாவிட்டாலும் கூட, உடனடியாய் செயல்படுத்தப்படுவதை காண்பதில் நாம் திருப்திப்படக் கூடிய ஒரு நல்ல தத்துவமாகும். இதனால் ஏற்படும் நிலமதிப்பு சீரழிவானது சோஷ-ஸம் சொல்வதைப் போல் அல்லது அதைவிட அதிகப்படியானதொரு அதிர்ச்சியை தோற்றுவிக்கக் கூடும். ஆயினும் இந்த சமுதாயத்துக்கு ஒரு தற்கா-க தீர்வை நிச்சயமாய் அது காண்பிக்கும். இது சோஷ-சத்தின் கொள்கைகளுக்கு இன்னும் கூடுதலாய் நிலைத்து நிற்கும் தன்மையை கொடுக்கக்கூடும். ஏனெனில் செல்வத்திற்கு ஆதாரமான நிலமானது எல்லா மக்கள் கையிலும் இருக்கும் பட்சத்தில், ஆரோக்கியமான தொழிலைச் சார்ந்த மக்கள் பட்டினி கிடக்கவேண்டிய அவசியம் என்றுமே இருக்கமுடியாது. குறைந்தபட்சம் தங்களது தேவையின் அளவிற்காவது எல்லாராலும் பயிர் செய்ய முடியும். இப்படிப்பட்ட சமயத்தில் திரு. ஜார்ஜ் அவர்களால் மிகவும் திறம்பட காண்பிக்கப்பட்டபடி, இது ஒரு ஞானமும் நியாயமும் உடைய வழியாகவும், அத்தோடு தெய்வீகப் பிரமாணத்துடன் இசைந்து போகிற ஒன்றாகவும் இருக்கக்கூடும் என்று நாம் நம்புகிறோம். ஆனாலும் மனுகுலத்தின் எல்லா பாடுகளுக்கும் இது ஒரு “சர்வலோக நிவாரணி”யாக இருக்கமுடியாது. நீதியும், சத்தியமும் அவைகளுடன் எல்லா இருதயங்களும் இசைந்து வரும்படி கொண்டு வரப்படும் வரை தவித்து வேதனைப்படும் சிருஷ்டிகள் தவித்து வேதனைப்பட்டுக் கொண்டே இருக்கும். மேலும் சுயநலம் என்பது பா-ன் சத்தான ஆடையை எடுத்துக் கொண்டு, சத்தற்ற பாலை மட்டுமே விட்டுவைக்கும்.

இதுவரை கூறியபடி, நிலத்தின் மீதான ஒற்றை வரி மட்டுமே சமூக மற்றும் பொருளாதார கஷ்டத்தை எதிர் கொண்டுவிட முடியாது; அல்லது வரப்போகும் அழிவையோ அல்லது சமுதாய சீரழிவையோ தடுத்துவிட முடியாது; இதற்கான ஒரு எடுத்துக்காட்டை நாம் குறிப்பிடுகிறோம். இந்தியா பல நூற்றாண்டுகளாய் ஒற்றை வரியை, ஒரு நிலவரியை மட்டுமே கொண்டிருந்தது - நிலமானது பொதுவான ஒன்றாய் வைக்கப்பட்டு, கிராம கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுத்தப்பட்டது. இதன் பலனாய் இதனுடைய ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பாகத்தினர் விவசாயிகளாய் இருக்கின்றனர். இது உலகில் வேறு எந்த நாட்டையும் விட இது பெரிய விகிதத்தில் இருக்கிறது. அநேக வருடங்களுக்குப் பிறகுதான் தனிமனித நில உரிமை என்பது அங்கு ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதுவும் வெகு குறிப்பிட்ட குறைந்த பரப்பளவில் மட்டுமே. “திருப்தியும் சௌகரியமும்” உடையவர்கள்

என்று இந்திய மக்களை குறித்துக் கூறப்படலாம். ஆனால் நிச்சயமாய் அது அவர்கள் பணக்காரராயும் - ஆடம்பர, சௌகரியங்கள் யாவும் பெற்றவர்கள் என்பதனால் அல்ல. நவீன இயந்திரங்கள் வெகுவேகமாய் ஏற்கெனவே இருக்கும் மிகக் குறைவான அவர்களது வருவாயை இன்னும் குறைத்து, இதைவிட தரக்குறைவாய் வாழவோ அல்லது பட்டினி கிடக்கவோ அவர்களை கட்டாயப்படுத்துகிறது. பெருவாரியான ஏழைகள் மிகச் சாதாரணமான உணவை அரிதாய் உண்ணக்கூடும் என்பதை காட்டும் மிக நேர்த்தியான ஆதாரத்தை நாம் ஏற்கெனவே சுட்டிகாட்டியிருக்கிறோம். பக்கம் 527ஐ பார்க்கவும்.

ஒற்றை வரி அல்லது இலவச நிலம் என்ற ஆலோசனை தற்கா-கமான விமோசனமாகவே இருக்கக்கூடும். இதை அனுமதிக்க மட்டுமே நம்மால் முடியும்; ஏனெனில் சுயநலம் என்பது ஒரு திசையில் தடைசெய்யப்பட்டால் அது மறுதிசையில் வெடித்துவிடும்; “புதிய இதயங்கள்” மற்றும் “நல்ல எண்ணங்கள்” ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் பலனளிக்காது; அத்தோடு இந்த “ஒற்றை வரிக் கொள்கையோ” அல்லது வேறு எந்தவொரு மனித தத்துவங்களோ இவைகளை ஏற்படுத்த முடியாது.

ஒரு வேளை மக்கள் நிலத்தை பெற்று இருக்கும் போது தங்களுக்கு உரியவைகளைத் தவிர வேறு பண்ணை உற்பத்தி பொருட்களை வாங்க மறுப்பது ஒரு முதலீட்டின் கூட்டுக்கு வெகு சாதாரணமான காரியமாக இருக்கக்கூடும். உற்பத்தியாளர்கள் வாழ்வதற்கு மட்டுமே போதுமானவற்றிற்கு அனுமதியளித்து அத்தோடு விவசாய உரம், பண்ணைக் கருவிகள், அவரது குடும்பத்தினரின் உடை மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் வரை - விவசாயிகள் வாங்கியே தீர வேண்டிய எல்லாப் பொருட்களின் மீதும் கட்டுப்பாட்டையும் அதிகபட்ச விலை நிர்ணயமும் செய்வதும் இவர்களுக்கு எளிதாக இருக்கும்.

தேவை மற்றும் விநியோகத்தின் நியதியானது இன்றைய நாளின் செல்வத்தின் மீதான பேராசையை திருப்தி செய்வதற்கு மிகவும் மந்தமாகவே செயல்படுகிறது.தொழிலாளி இந்த பிரமாணத்தின் செயல்பாட்டை நிறுத்த முடியாது. அதுமட்டுமன்றி இவர்கள் இயந்திரம் மற்றும் வளர்ந்துவரும் ஜனத்தொகை என இரண்டினாலும் நெருக்கப்படுகிறார்கள்; ஆனால் டிரஸ்டுகள்,



வியாபார குழுக்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், முத-யவற்றை அமைத்து ஓரளவிற்கு விநியோகம் மற்றும் விலைகளை கட்டுப்படுத்தக் கூடும். நிலக்கரி வியாபார குழு என்பது இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இந்த ஒற்றைவரி முறையானது சுயநலத்திற்கு எதிரான ஒன்றாக இருக்கக் கூடுமா? அது சக்தியற்ற ஒன்றாக இருக்கக்கூடும்!

ஆனால் ஒருவேளை அந்த இலவச நிலம் மற்றும் ஒற்றை வரி முறையானது வரும் நாட்களில் செயல்முறைக்கு வருமானால், ஒருவேளை பயிர் செய்யும் நிலங்கள் வரி விலக்கு அளிக்கப்படுமானால், ஒவ்வொரு பண்ணைக்கும் ஒரு வீடு, குதிரை, மாடு, கலப்பை மற்றும் அத்தியாவசிய பொருட்கள் கொடுக்கப்பட்டால், இதன் நிமித்தம் பயிரிடப்படும் தற்கால பரப்பளவு இரட்டிப்பாகி, தற்போதைய விளைச்சலும் இரட்டிப்பாகும். இது ஆரோக்கியமாக சாப்பிடுவதற்கு பயிர்கள், கோதுமை மற்றும் காய்கறிகளை பெருமளவில் உற்பத்தி செய்ய உத்தரவாதம் அளிக்கக்கூடும். உற்பத்தி அதிகமாக இருப்பதால் அதன் விலை குறையக் கூடும். அதனால் அது சந்தைக்கு அனுப்பப்படாமல் இருக்கக் கூடும். கையாளுவதற்கு சரியாக பணம் செலுத்தப்படாததால் ஆயிரக்கணக்கான எடை கொண்ட உருளைக் கிழங்கும், முட்டைக் கோசும் அழுகிப் போகும்படி விட்டுவிடப் படலாம். முதல் வருடத்தில் உழைக்க விருப்பமுள்ள வ-மையான ஆட்கள் இந்த முன் சொல்லப்பட்ட பண்ணைகளுக்கு ஆயிரக்கணக்கில் நகரங்களி-ருந்து கவரப்படலாம்; இது நகரத்து தொழிலாளர் போட்டியைச் சற்று தளரச் செய்து, நகரத்திலேயே தங்கிவிட்ட தொழிலாளிகளின் ஊதியத்தை தற்கா-கமாக உயர்த்தக் கூடும். ஆனால் இது ஒரேயொரு வருடம் தான் நீடிக்கும். தானியம் மற்றும் உருளைக் கிழங்குகளை உற்பத்தி செய்வதால், துணி மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் வாங்க இயலாத நிலையை இந்த விவசாயிகள் கண்டு கொள்ளும் போது, விவசாயத்தை கைவிட்டு, நகரங்களுக்கு திரும்பிச் சென்று அடிப்படை வசதிக்கு மேலாக கொஞ்சம் அதிகம் கிடைக்கக்கூடிய வேலையை ஏற்றுக் கொள்வர். இதனால் வாழ்வின் வசதி மற்றும் சௌகரியங்களின் பங்காக எது கிடைத்தாலும் அதற்கு தயாராகிவிடுவர்.

இலவச நிலம் என்பது பட்டினியை தவிர்க்கின்ற ஒன்று, ஆகையால் நல்லது. நமது வள்ளலான சிருஷ்டிகர் ஆதாமுக்கும் அவனது குடும்பத்துக்கும் பொதுவான வம்சாவழி சொத்தாக பூமியை கொடுத்தார் என்ற உண்மையை பார்க்கும் போது இதுவே சரியான ஒரு நிலையாகவும் இருக்கிறது. மேலும் யூதர்களுக்கு இருந்தது போல், ஒவ்வொரு ஐம்பதாவது வருடமும் கடனை ஒழிப்பதும், நிலங்களை திரும்பப் பெறுவதற்குமான யூபி-யை உலகம் முழுவதுமே பெற்றிருக்குமாயின் நமது நாட்களில் இருக்கும் கஷ்டங்களுக்குப் பெரும் உதவியாய் இருந்திருக்கக் கூடும். ஆனால் யூதர்களிடையே இருந்தது போல் இப்படிப்பட்ட காரியங்கள் தற்போது இன்னும் இந்தியாவில் இருப்பது போலவே வெறும் சமன்படுத்தும் மருந்தாகவே இருக்கக்கூடும். உண்மையான நிவாரணம் என்பது - வரப்போகும் இப்பூமியில் ராஜாவாகிய - இம்மானுவேல் நிறுவப் போகும் மாபெரும் நிஜமான யூபி-யேயாகும்.

## பிற நம்பிக்கைகளும் அச்சங்களும்

தற்கால நிலைமையின் மேம்பாட்டுக்கான முற்போக்கான அநேகக் கொள்கைகளை நாம் கவனத்துடன் ஆராய்ந்தோம். ஆனால் இவைகள் எதுவுமே போதுமானவைகள் அல்ல என்பது தெளிவாகிறது. அத்தோடு கூட எண்ணிலடங்கா ஜனங்கள் இவைகள் தவறு என்று கண்டு இடைவிடாமல் பிரசங்கம் செய்து ஜெபித்தும் வருகிறார்கள்; அத்தோடு உலகின் இந்த செயல்பாட்டை நிறுத்துவதற்கு இவர்களுக்கு யாராவது ஒருவர் வேண்டியிருக்கிறது. ஆனால் சாத்தியமான ஒன்றை யாருமே பார்க்கவோ அல்லது பரிந்துரைக்கவோ இல்லை.

ஆனால் இதனுடன் சம்பந்தப்பட்டதை நாம் குறிப்பிட மறந்துவிடக் கூடாது. அதாவது சபைகள், சமீபத்தில் நடக்கப்போகிற பேராபத்தைத் தடுத்து சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தி புதிய மேலானதொரு அஸ்திவாரத்தின் மேல் அதை மறு நிர்மாணம் செய்ய முடியும் என்று சில ஆத்துமாக்கள் வீணாய் கற்பனை செய்கின்றனர். மேலும் அவர்கள் சபைகள் எழுச்சி பெற்றால் தான், கிறிஸ்துவுக்காக உலகை ஜெயித்து, அன்பை ஆதாரமாகக் கொண்டு தேவனுக்கும் உண்மையுள்ளவர்களாயும், சகமனிதருக்கான சமமான அன்பு ஆகியவற்றின் மீது தேவனுடைய ராஜ்யத்தை பூமியின் மேல் அவர்களால் ஸ்தாபிக்க முடியும் என்கின்றனர். அவர்களில் இன்னும் சிலர் சபைகளில் கிறிஸ்துவின் - சிந்தையை பெற்றிருப்பதே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையாக இருக்கக்கூடும் என்றும் கூட சொல்கிறார்கள்.



இந்த கோட்பாடு எவ்வளவு நம்பிக்கையற்ற சாத்தியமில்லாத ஒன்றாக இருக்கிறது. இதை குறிப்பிடுவது மிகவும் அவசியமாய் இருக்கிறது. அதனுடைய பலம் என்று அவர்களால் கருதப்படும் - எண்ணிக்கை என்பது உண்மையில் அதனுடைய பலவீனமே. அவர்கள் 30 கோடி கிறிஸ்தவர்கள் என்ற எண்ணிக்கையை பார்த்து எவ்வளவு பலம் என்று கூறுகின்றார். நாம் அதே எண்ணிக்கையை பார்த்து - எப்படிப்பட்டதொரு பலவீனம் என்று நாம் கூறுகிறோம்.

இந்த மிகப்பெரும் எண்ணிக்கை அன்பினால் கட்டுப்படுத்தப்பட்ட பரிசுத்தவான்களுடையதாக இருக்குமானால் உண்மையில் ஒரு சக்தி இருக்கக்கூடும். அத்தோடு இவர்கள் இந்த உண்மை சூழ்நிலையை கண்டு விழித்தெழுந்தால், சமுதாயத்தை உடனே அவர்களால் புரட்சிகரமானதாக மாற்றிவிடக்கூடும். ஆனால் ஐயோ! "களைகளும்," "பதரும்" அதிகமாய் நிற்கின்றன. "கோதுமை" வகுப்பாரோ மிகச்சிறிய அளவிலேயே இருக்கின்றனர். மாபெரும் மேய்ப்பனானவர் கூறியபடி அவருடையது ஒரு "சிறு மந்தையே," அது அவர்களது மேய்ப்பனைப் போன்று "புகழோ, செல்வாக்கோ" இல்லாதவர்கள். மேலும் அவர்களில் "மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை." *(1கொரி 1:26)* "என் பிரியமான சகோதரரே கேளுங்கள், தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியான்களாகவும், தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்து கொள்ளவில்லையா?" *(யாக் 2:5)*

இல்லவே இல்லை! சிறுமந்தையில் இருப்பவர்களுக்கு கிறிஸ்துவின் சிந்தை அவர்களிடத்தில் ராஜ்யத்தைக் கொடுக்கும் அளவிற்கு போதுமானதாக இல்லை! இந்த சிந்தையைப் பெற்றவர்கள் இல்லாமல் சபை என்றுமே இருந்ததில்லை. நம்மை

விட்டு கர்த்தர் பிரிவதற்கு முன் கூறியபடி, யுகத்தின் முடிவுவரை அவர் நம்முடன் இருப்பார். எனவே அது நிறைவேறிற்று. ஆனால் (சரீரப் பிரகாரமாய்) யூத யுகத்தின் முடிவில் அவர் நம்மைவிட்டுப் போனதுபோல அதேவிதமாய் இந்த யுகத்தின் முடிவில் அவர் மறுபடியும் வருவதாகவும் கூட வாக்குத்தத்தம் செய்தார். அவர் இல்லாதபோது அவருக்காக உண்மையுள்ளவர்கள் யாவரும் "உபத்திரவத்தை அனுபவிப்பார்கள்" என்று நமக்கு உறுதிப்படுத்தியிருக்கிறார். அதாவது அவர் மறுபடியும் திரும்பவந்து அவர்களை மீட்டுக் கொள்ளும்வரை, தமது ராஜ்யத்தின் உடன் சுதந்திரவாளிகள் "தீமையை அனுபவிக்க" வேண்டும் என்றார். அதன் பிறகு அவர்களது உண்மை விசுவாசத்துக்கும் பாடுகளுக்கும் வெகுமதியாக மகிமை, கனம் மற்றும் சாவாமையை அவர்களுக்கு கொடுத்து அவரது சிங்காசனத்தில் அதன் அதிகாரத்தில் ஒரு பங்களித்து, நீதியான அரசாட்சியாலும், சத்தியத்தின் அறிவினாலும் இவ்வுலகத்தை ஆசீர்வதிக்கவும், மேலும் நீதியின் ஊழியக்காரரிடையே வேண்டுமென்ற அநீதி செய்வோரை முடிவில் அழிக்கவும் அதிகாரம் கொடுப்பார். அதுவுமல்லாமல் ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமும் கூட (ரோம 8:23) நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருவதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவித்து பிதாவின் வேளைக்காகவும், பிதாவின் ஈவளிக்கும் விதத்துக்காகவும் காத்திருக்கவேண்டும். இந்த ஆசீர்வாதங்களுக்கான நேரம் தற்போது சமீபத்தில் இருக்கிறது என்பதை அவர் மிகத் தெளிவாய் காண்பித்திருக்கிறார். அப்பொழுது இவ்வுலகத்திற்கு உபத்திரவ காலம் தண்டனையாகக் கொடுக்கப்படும். அதற்குமுன் சிறுமந்தையான பரிசுத்தவான்கள் தப்பி மறுரூபமாக்கப்பட்டு அவரது ராஜ்யத்தில் மகிமையடைய வேண்டும்.

ஆனால் செல்வமும், கல்வியும் இவ்வுலகை ஜெயம் கொள்ள தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று யாராவது துணிச்சலாய் கூறமுடியுமா? "கிறிஸ்தவ ராஜ்யங்களான" பேர் சபைக்கு இந்த சிலாக்கியத்தை தேவன் கொடுத்திருக்கிறார். ஆயினும் அந்த சந்தர்ப்பங்கள் பெருமை, அகந்தை மற்றும் நம்பிக்கை துரோகம் ஆகியவற்றை வளர்க்கும்படி - எதிராக செயல்படுவதாகக் காணப்படுகிறது. இது சமுதாயத்தின் சீரழிவில் தான் போய் முடியும்.



"மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?"

### ஒரே நம்பிக்கை - நம்பியிருக்கிற "அந்த ஆனந்த பாக்கியம்"

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்." "அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது." "உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்." *தீத்து 2:13; எபி:6:19; 1பேது 1:13*

மனுக்குலத்தையே ஏழை, பணக்காரர் என்று இரண்டு பிரிவுகளாய் பிரிப்பதற்காக இவ்வளவு செயல்படுகிற "தேவை மற்றும் விநியோகம்" குறித்த இந்த வெறுப்பான கேள்வியை கண்ணோக்கும் போது, இருவகுப்பார் மீதும் கூடுமான வரையில் கடுமையான விமர்சனத்தை தவிர்த்திருக்கிறோம். ஏழை, பணக்காரர் யாவரையும் ஒரேவிதமாக - மனுகுலத்தின் மிகப் பெரும்பான்மையோரின் மீது ஆதிக்கம் செய்கின்ற சுயநலத்தின் (ஆதாமின் வீழ்ச்சியின் பலன்) விளைவுதான் தற்கால நிலைமை என்பதைக் காண்பிக்க நாம் பிரயத்தனம் செய்திருக்கிறோம். ஆழப்பதிந்து விட்ட இந்த சுயநலத்தின் அடிப்படை நியதிகள் ஒரு சிறு எண்ணிக்கையாரால் (முக்கியமாய் ஏழைகள்) மிகவும் வெறுக்கப்படுகின்றன. இவர்கள் கிறிஸ்துவைக் கண்டுக் கொண்டவர்களாய், இதய பூர்வமாய் அவரது சிந்தைக்கும், அன்பின் பிரமாணத்துக்கும் கீழ் வந்து, எல்லா சுயநலத்தையும் விருப்பத்துடன் விட்டுவிலகலாம். ஆனால் அது முடியவில்லை. இந்த பிரமாணங்கள் அவ்வப்பொழுது சிறு வியாபாரிகள், ஒப்பந்தக்காரர் மற்றும் தொழிலாளிகளை சூழ்ந்து நெருக்குகிறது. இருப்பினும் ஒருவேளை இன்று இருக்கும் பணக்காரர்கள் எல்லோரும் இறந்து, அவர்களது செல்வம் யாவும் விகிதாச்சாரப்படி பிரித்து விநியோகிக்கப்பட்டாலும், மறுபடியும் ஒரு சில

வருடங்களுக்குள்ளேயே இந்த விதிகள் இதேவிதமான ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிடும் என்கிற அளவிற்கு இதன் நடவடிக்கை இருக்கிறது. உண்மையில், இன்றைய கோடீஸ்வரர்களில் அநேகர் ஏழைச் சிறுவர்களாய் இருந்தவர்களே. பெரும்பாலான மனிதர்கள் எப்படிப்பட்ட சட்டத்தை இயற்றினாலும் அது மனிதனுடைய பேராசை மற்றும் சுயநலத்தை அப்பியாசப்படுத்த அவனை கவர்ந்து இழுக்கும். மேலும் இது முன்னேற்றத்தை அழித்துவிட்டு - மிக வேகமாய் நாகரீக வளர்ச்சியை அஜாக்கிரதை, சோம்பேறித்தனம் மற்றும் பண்பற்ற நிலைமைக்கு பின்னோக்கி திருப்பிவிடும்.

ஆயிரவருட அரசாங்கமாகிய நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்தில் தான் இவ்வுலகத்துக்கு ஒரேயொரு நம்பிக்கையிருக்கிறது. தேவனால் அநேக காலங்களுக்கு முன்னமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒரு தீர்வு. அதன் குறித்த காலம் வரும்வரை தாமதப்படுகிறது. மேலும் தற்போது அது வாசலருகே நிற்கிறது. தேவனுக்கு ஸ்தோத்திரம். இன்னும் ஒருமுறை மனிதனுடைய முடிவானது தேவனுடைய சந்தர்ப்பமாக இருக்கும். மனுகுலத்தின் புத்திசாதுர்யம் மற்றும் திறமை யாவும் தீர்ந்து, தீர்வு ஒன்றைத் தேடி பெறாதிருக்கும் நிலைமையில் "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்." உண்மையில் அனுபவம் என்னும் பள்ளியில் மாபெரும் பாடத்தை கற்பிக்க இது ஒரு தெய்வீக ஏற்பாடாக காணப்படும். இவ்வாறாகவே யூதர்களுக்கு நேரடியாய் (நாமும், மற்றெல்லா மனிதரும் மறைமுகமாய்) நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் (வீழ்ந்துபோன) எந்த மனுஷனும் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை என்ற மாபெரும் பாடம் கற்றுக் கொடுக்கப்பட்டது. இவ்வாறாக கிறிஸ்துவின் மூலமான மேலான புதிய உடன்படிக்கையின் கிருபைக்கு தமது பிள்ளைகளை இழுக்கிறார்.

"நீதியைச் சரிக்கட்டும் நாளாகிய" உபத்திரவத்தின் காலத்துடன் இந்த யுகம் முடிவு பெற்று, ஆயிரவருட அரசாட்சியின் காலம் துவங்கும். இது தவறாய் உபயோகிக்கப்பட்ட சிலாக்கியங்களுக்காக பதிலளிப்பதாய் மட்டுமே இல்லாமல், மனிதனுடைய முரட்டாட்டத்தை மாற்றி தாழ்மைப்படுத்தி அவர்களை "ஆவியில் எளிமை" உள்ளவர்களாய் மாற்றி மாம்சமான யாவர் மீதும் ஊற்ற தயாராயிருக்கும் பெரிய ஆசீர்வாதங்களுக்கு தயாராக்கவுமே ஆகும். (யோவே. 2:28) இவ்வாறாய் அவர் காயத்தை ஆற்றுகிறார்.



ஆனால் தெய்வீக ஏற்பாடுகளைக் குறித்து அறியாதவர்கள், இந்த மனித முறைமைகள் யாவும் தோற்றுப்போகும் போது, தேவனுடைய ராஜ்யம் எப்படி நிறுவப்படும்? என்றும் எப்படிப்பட்ட மாறு பட்டதொரு திட்டத்தை அது அறிமுகப்படுத்தும் என்றும், அதனுடைய திட்டங்கள் தேவவார்த்தையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றால், இப்போதே ஏன் அதை மனிதன் செயல்படுத்தி, பெரிய உபத்திரவத்தை தவிர்க்கக் கூடாது என்றும் ஒரு வேளை கேள்வி எழுப்புவர்.

தேவனுடைய ராஜ்யம் மக்களுடைய ஓட்டெடுப்பின் மூலமோ அல்லது பிரபுக்கள் மற்றும் ஆட்சியாளரது ஓட்டெடுப்பின் மூலமோ நிறுவப்படாது என்று பதிலளிக்கிறோம். ஏற்ற காலத்தில் "உரிமைக்காரரான" அவர் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தால் அதை வாங்கியவர் ஆளுகையை எடுத்துக் கொள்வார். தம்முடைய மாபெரும் அதிகாரத்தையும் ஆளுகையையும் தாமே எடுத்துக் கொள்வார். அதிகாரத்தைப் பயன்படுத்தி, "இரும்புக் கோலால் அவர்களை (ஜாதிகளை) ஆளுவார்; அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படுவார்கள்." (வெளி 2:27) அவர் "தமது சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளை சேர்த்து ராஜ்யங்களைக் கூட்டுவார். பூமியெல்லாம் அவரின் எரிச்ச-ன் அக்கினியினால் அழியும்; (அவர்கள் தாழ்மையடைந்து அவரது ஆலோசனையைக் கேட்டு, பின்பற்றத் தயாரான பின்பு) அப்பொழுது அவர்களது பாஷையை சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவார். அதனால் அவர்கள் ஒருமனப்பட்டு அவரது நாமத்தைத் தொழுதுகொண்டு அவருக்கு ஆராதனை செய்வார்கள்." செப் 3:8,9

மனிதனால் எதிர்க்க முடியாத ஒரு வல்லமை மற்றும் அதிகாரத்தினால் மட்டும் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படாமல், ஆயிரவருட

ஆட்சிகாலம் முழுவதும் அது தொடரும் படியானதாகவும் கூட இருக்கும். ஏனெனில் நீதியின் சத்துருக்களை அழிப்பதே இந்த ஆளுகையின் முழுமையான முக்கிய நோக்கம் ஆகும். “எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிப் போடும் வரை அவர் ஆளுகை செய்வார்.” “அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்.” “அந்தத் தீர்க்கத்தரிசியின் (மோசேக்கு நிஜமான மகிமையான கிறிஸ்து) சொற்கேளாதவன் எவனோ, அவன் ஜனத்தி-ராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்,” இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவான்.

சாத்தான் கட்டப்பட்டு - அவனது ஒவ்வொரு வஞ்சகமும், தவறான வழிகாட்டுதலும் தடுக்கப்படும் - இதனால் மனிதருக்கு தீமை நன்மையைப் போல் தோன்றுவது இனிமேலும் இருக்காது. அல்லது நன்மை தீமையைப் போல தோன்றுவதும் இருக்காது; சத்தியம் மனிதனுக்கு இனிமேல் பொய்யைப் போலவும் அல்லது பொய் மெய்யைப் போலவும் தோற்றமளிக்காது. (வெளி 20:2)

ஆனால் இதுவரை காண்பித்தபடி அந்த ஆளுகை அதிகாரம் உடையதாக மட்டுமே இருக்காது. அத்தோடு கூட இரக்கமும் சமாதானமும் கொண்ட ஒ-வ மரக்கிளையாக - உலகமனைத்திலும் இருந்து பூமியிலே அவரது நியாயதீர்ப்புகள் நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக் கொள்ளும்படியான அதிகாரமுடையதாயும் இருக்கும். (ஏசா 26:9) பாவத்தால் குருடாக்கப்பட்ட கண்கள் திறக்கப்படும்; உலகமே நன்மை தீமையையும், நீதியையும், அநீதியையும் - தற்போதிருக்கும் வெளிச்சத்துக்கு முற்றிலும் மாறுபட்ட “ஏழத்தனையான” வெளிச்சத்தில் காணும். (ஏசா 30:26; 29:18-20) இப்போதிருக்கும் தகாததைச் செய்யும் வெளித் தோற்றமான தூண்டுதல்கள் பெரும்பாலும் களைந்துவிடப்படும்; தீமைகள் அனுமதிக்கப்படவோ, இடங்கொடுக்கப்படவோ மாட்டாது; ஆனால் பாவிகள் மீது தீவிரமான, நிச்சயமான ஒரு தண்டனை சடுதியில் வரும்; அந்த காலத்தின் தகுதியும் மகிமையும் உடைய நியாயதிபதிகளால் நீதியாக நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படும். எளியவர் மீது மனதுருக்கம் உடையவராயிருப்பார்கள். 1கொரி 6:2; சங் 96:13; அப் 17:31



இந்த நியாயதிபதிகள் தங்கள் கண் கண்டபடி நியாயம் தீர்க்காமலும் தங்கள் காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும் நீதியின்படி நியாயம் விசாரிப்பார்கள். (ஏசா 11:3) எந்தத் தவறும் நடக்காது; தீய செயல்கள் அனைத்தும் அதனுடைய நியாயமான பலனை பெறும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தீமை செய்யக்கூடிய முயற்சியும் கூட விரைவாய் முடிவுக்கு வரும். முழங்கால்கள் யாவும் முடங்கும் (அப்போது இருக்கிற அதிகாரத்திற்கு), நாவுகள் யாவும் பாவங்களை அறிக்கை பண்ணும் [நீதியினிடத்தில்]. (பி- 2:10,11) பின்பு அநேகரிடையே படிப்படியாய் பெரும்பாலும், புதிய செயல்பாட்டின் காரியங்கள் சிலருடைய இருதயங்களில் தோன்ற ஆரம்பிக்கும், முதலாவது கீழ்ப்படிதல் என்பது ஆதிகாரத்தினால் வந்து கொண்டிருந்தது மாறி, கீழ்ப்படிதல் என்பது அன்பினாலும் நீதியை மதிப்பதினாலும் வரும். மேலும் முடிவில் கட்டாயத்தினால் மட்டுமே கீழ்ப்படிகிற யாவரும் - இரண்டாம் மரணத்தின் மூலம் நிர்மூலமாக்கப்படுவார்கள். வெளி 20:7-9; அப் 3:23.

இவ்வண்ணமாய் அன்பின் பிரமாணமும், சட்டமும் அமுல்படுத்தப்படும். பெரும்பான்மையினரின் சம்மதத்தோடு இல்லாமல், எதிர்ப்போடு இது நடக்கும். இது குடியரசு ஆட்சியி-ருந்து பின்னிட்டு போய் ஒரு ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் தற்கா-கமாய் ஒரு ஆயிர வருடத்துக்கு இருக்கும். இப்படிப்பட்ட இந்த ஏகாதிபத்திய ஆட்சி ஒரு துன்மார்க்கனிடமோ அல்லது ஒரு தகுதியற்றவனிடமோ இருந்தால் அது மிகப்பயங்கரமாய் இருக்கும்; ஆனால் அந்த யுகத்தின் சர்வாதிகாரியானவர் - சமாதானப் பிரபுவாகிய நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று கூறும் போது நமது எல்லா பயங்களி-ருந்தும் தேவன் நம்மை விடுவிக்கிறார். இந்த கிறிஸ்து மனிதனுடைய நலன்களின் மேல் அக்கரை கொண்டு, நமது “ஈட்டுக்கிரயமாக” தமது ஜீவனைக் கொடுத்தவர்; புதிய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிந்து அவரது கிருபையை ஏற்றுக் கொள்ளும் யாவரையும் அவர்களது பாவ அழுக்கி-ருந்து தூக்கியெடுத்து பூரணத்துக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களுக்கும் திருப்புவர்.

தேவன் வரையறுத்த இந்த வழிமுறை ஒன்று மட்டுமே பாவம், துரோகம், சுயநலம் நிறைந்த உலகத்தின் சூழ்நிலைக்கு

தேவை என்பது ஆயிரவருட அரசாட்சியின் ஆரம்பத்தில் யாவருக்கும் வெளிப்படையாய் தெரியும். உண்மையில், உலகத்தின் மாபெரும் தேவை என்பது வ-மையும் நீதியுமான ஒரு அரசாங்கம் என்று சிலர் ஏற்கெனவே கண்டிருக்கின்றனர். இன்னும் அதிகமதிகமாய் அவர்கள் காணத்துவங்கியது என்னவெனில் - புதிதாக்கப்பட்ட சித்தங்கள், புதிதாக்கப்பட்ட இருதயங்கள், கிறிஸ்துவின் சிந்தை ஆகியவற்றைக் கொண்டிருக்கும் - பெரிதும் மனமாற்றம் அடைந்தவர்கள் மட்டுமே மிகச்சரியான சுதந்திரத்தை பத்திரமாக பாதுகாக்கமுடியும் என்பதாகும்.

## தேவ ஜனத்தின் மிகச்சரியான மனோபாவம்

ஆனால் சிலர் கேள்வியெழுப்பக்கூடும். சத்தியத்தின் வெளிச்சத்தில் இந்த காரியங்களை காண்பவர்கள் இப்போது செய்ய வேண்டியது என்ன? நமக்குச் சொந்த நிலம் இருப்பின் அதை கொடுத்துவிடவோ அல்லது கை விடவோ வேண்டுமோ? இல்லை ; உண்மையாகவே தேவைப்படும் ஏழைக்கு அதை கொடுத்தால் தவிர வேறு எந்த நன்மையும் இதனால் ஏற்படாது. அத்தோடு அதை பயன்படுத்துவதில் அவன் தோல்வியைக் கண்டால், அவன் தனது துரதிருஷ்டத்துக்குக் காரண கர்த்தாவாகிய உங்களைத்தான் நிந்திக்கக்கூடும்.

ஒருவேளை நாம் விவசாயிகளோ, வியாபாரிகளோ அல்லது உற்பத்தியாளராகவோ இருந்தால், ஆயிரவருட அரசாட்சியை அடிப்படையாகக் கொண்டு நாம் வியாபாரம் செய்ய ஆரம்பிக்கலாமா? இல்லை ; ஏனெனில் ஏற்கெனவே காண்பிக்க பட்டபடி, இப்படிச் செய்வது உங்களுக்கு பொருளாதார சீர்கேட்டையும், உங்களுக்கு பணம் கொடுப்பவர்களுக்கும் உங்களை சார்ந்தவர்களுக்கும் தீங்கையும் கொடுப்பதுடன், உங்கள் தொழிலாளர் மீதும் இது கேடு விளைவிக்கும்.

இப்போது நாம் அறிவுறுத்துவது எல்லாம் நமது சாந்தகுணம் எல்லா மனிதருக்கும் தெரியவேண்டும் என்பதே ; யாரையும் கஷ்டப்படுத்துவதை தவிர்க்கலாம்; நியாயமான ஊதியம் அல்லது லாபத்தில் பங்கைக் கொடுக்கலாம்; எவ்விதத்திலும் நேர்மையின்மையைத் தவிர்ப்போம்; "மனுஷருக்கு முன்பாக யோக்கியமானவைகளை செய்ய நாடுங்கள்." "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்திக்கு" முன் மாதிரியாக இருப்போமாக - அத்தோடு எப்போதும் சொல்லாலும், கிரியையாலும் கொடுமையை மட்டுமன்றி அதிருப்தியையும் தடைசெய்வோமாக; விசுவாசத்தோடும் முழுமையான அர்ப்பணிப்போடும் - வருத்தப்பட்டு பாரம் சுமப்பவரை கிறிஸ்துவிடமும் தேவ வசனத்திடமும் வழி நடத்த பார்ப்போமாக. தேவனுடைய கிருபையால் நீங்கள் செல்வத்தின் உக்கிராணக்காரரானபடியால் - அதை பூஜிக்க வேண்டாம். அல்லது உங்களது வாரிசுகள் துஷ்பிரயோகம் செய்யவோ, அதன் மீது சண்டையிடவோ காரணமாக்கக்கூடிய அளவிற்கு - அதை எவ்வளவு அதிகமாய் சேர்த்துவைக்க முடியும் என்று தேடாமலும் இருக்கவேண்டும்; ஆனால் அதை - உங்கள் சௌகரியப்படி உபயோகப்படுத்துங்கள் - அது உங்களுடையதோ அல்லது உங்களுக்காக மட்டுமே உபயோகிக்க சேர்த்துவைக்கப்பட வேண்டிய ஒன்றோ அல்ல. ஆனால் அது உங்களுடைய பாராமரிப்பின் கீழ் மகிழ்ச்சியாக ஊழியத்திற்கு செலவு செய்யப்படவும், நமது ராஜாவின் மகிமைக்காகவும் தேவனால் கொடுக்கப்பட்ட ஒன்று.



நடைமுறை வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய விஷயங்களைக் குறித்து ஒரு ஆலோசனையாக நாம் கீழ்க்கண்டவைகளைக் கூறுகிறோம். இது நமது அரை மாத சஞ்சரிகையின் வாசகர் ஒருவர் அனுப்பிய கடிதம் மற்றும் அதற்குண்டான பதிலும் ஆகும். அதில் பிரசுரிக்கப்பட்ட இது பிறருக்கும் உபயோகமாய் இருக்கும்.

## இந்த உலகத்தில் ஆனால் இந்த உலகத்துக்குரியவர்களாய் அல்ல

பென்சில் வேனியா

*அன்புள்ள சகோதரரே : கடந்த ஞாயிறு எங்களது கூட்டத்தில் ரோமர் 12:1 -ருந்து ஒரு பாடத்தை நாங்கள் பெற்றோம். இதி-ருந்து நமது அர்ப்பணிக்கப்பட்ட காலத்துக்கு உபயோகமான விதத்தில் உங்களுக்கு சிலவற்றை அளிக்கிறோம். நான் மளிகை கடை*

வியாபாரத்தில் இருக்கிறேன். ஆனால் இந்த வியாபாரம் பெரும்பாலும் 'நிரந்தர விழிப்பை' இக்காலத்தில் எதிர்பார்க்கிறது.

எனக்கு அநேக முறை எழும்பும் கேள்வி என்னவெனில், அர்ப்பணம் செய்தவர்களில் ஒருவனாக இருக்கும் நான், இப்போது செயல்படுவதைப் போல் செய்து, பழக்கவழக்கத்தை பாராமரித்து, அதற்காக இப்படிப்பட்ட முயற்சிகளை செய்ய வேண்டுமா? நான் வாரந்திர விலைப்பட்டியலை வெளியிடுகிறேன். அநேக சமயங்களில் பொருட்களை அதன் கொள்விலைக்கும் குறைவாக உண்பதற்கு கொடுத்துவிடுகிறேன். அத்தோடு மிகவும் லாபகரமான பொருட்களைப் 'பரிசு'களாக நான் கொடுத்துவிடுகிறேன்; இப்படிப்பட்ட செயலை விருப்பத்தின் காரணமாய் செய்யவில்லை. ஆனால் எனது எல்லா போட்டியாளர்களுமே இதையேதான் செய்கின்றனர். அத்தோடு எனது வியாபாரத்தையும் வாழ்க்கையையும் பாரமரிக்கும்படி (நான் வசதியற்றவன்) இந்த விதத்தைப் பின்பற்றும்படி வற்புறுத்தப்படுகிறேன்.

இவ்வகையான செயல்முறையின் மற்றொரு ஆட்சேபனைக்குரிய அம்சம் என்னவெனில், அது இதே வியாபாரத்தில் இருக்கும் எனது பெலவீனமான சகோதரரை இது பிழிந்தெடுப்பதுதான். அவர்களில் அநேகரை நான் அறிவேன். அவர்களில் சிலர் விதவைகள் - இவர்கள் இந்த பொருட்களை விற்பதன் மூலம் ஒரு நேர்மையான வாழ்வை பெறுவதற்கு முயற்சி செய்பவர்கள்; ஆனால் என்னுடைய மேலான எண்ணங்களை காற்றில் பறக்கவிட்டு, யாரை அது நோகடித்தாலும் கூட அதை தொடரும்படி கட்டாயப்படுத்தப்படுகிறேன். சமீபத்தி-ருப்பதாக நாம் நம்புகிற யுகத்தில், சுயநலம் என்னும் பள்ளத்தாக்கி-ருந்து மனுக்குலத்தை கைதூக்கிவிட வேண்டிய வேலையில் வித்தகருக்கு உடனிருக்க முயற்சி செய்கிற ஒருவனுடைய பாவ அறிக்கை. இந்த எனது செயலை நீங்கள் நியாயப்படுத்த வேண்டும் என்று நான் முயற்சி செய்யவில்லை. ஆனால் தேவனுடைய வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பிள்ளையாக - தற்காலத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் எனக்கு, பெரிய மீன் பல சின்ன மீன்களை சாப்பிடுவது போன்ற இந்த ஒரு விஷயத்தில் உங்களது கருத்துக்களை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.



கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரன்,

*இதற்கான பதில்:* நீங்கள் குறிப்பிட்டிருக்கும் இந்த நிலைமை பெரும்பாலும் எந்தவகை வியாபாரத்திலும் சாதாரணமாய் காணப்படுகிற ஒன்று. அதிலும் நாகரீக வளர்ச்சியடைந்த உலகத்தில் இது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இது நமது காலக் கட்டத்தின் பொதுவான உபத்திரவத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. இயந்திரங்களின் பெருக்கம் - மனித குடும்பங்களின் பெருக்கம் ஆகிய இரண்டுமே ஊதியத்தை குறைத்து, நிலையான வேலைவாய்ப்பை மிகவும் நிச்சயமில்லாததாக்குகிறது. வியாபாரத்தில் ஈடுபட பலபேர் நாட்டமுடன் இருக்கின்றனர். போட்டிகள், சிறு லாபங்கள் ஆகியவை ஏழைகளுக்கு உபயோகமாய் இருந்தாலும்,வியாபார ரீதியில் சிறு கடைகளையும், விலை உயர்வையும் நசுக்குகிறது. இதன் விளைவின் பலனாய், சிறு கடைகளும் சிறு தொழிற்சாலைகளும் பெரியவைகளுக்கு வழிவிட்டுவிடுகின்றன. மேன்மையான பொருளாதார ஒழுங்குகள், நல்ல சேவை மற்றும் குறைந்த விலையுமே இதற்கு காரணம். பழங்காலத்து சிறிய கடையில் - ஊசிப்போன சரக்குகள், அதிகவிலை, அலட்சியமான சேவை ஆகியவற்றை ஒப்பிடும் போது, அதிக அளவு சரக்குகளின் கையிருப்பு, புத்தம் புது சரக்குகள், குறைந்த விலை மற்றும் மேலான சேவை ஆகியவை மக்களுக்கு சாதகமாய் இருக்கின்றன. கடைகளை நவீனப்படுத்த முடியாதவர்களாக சில ஏழை விதவைகள் அல்லது குறைந்த வசதி படைத்தவர்கள் மன ரீதியில், சரீர ரீதியில் மற்றும் பொருளாதார ரீதியில் கஷ்டப்படவும் கூடும். ஒருவேளை இவர்களும் கூட நிலவுகிற சூழ்நிலையை பரந்த கண்ணோட்டத்தில் பார்ப்பார்களேயாகில் தங்களுடைய சொந்த விஷயத்தில் அசௌகரியம் திணிக்கப்பட்டாலும் பொது நலனில் மனமகிழ்வார்கள். இவர்கள் தற்போது லாபமடைபவர்களுடன் சேர்ந்து மனமகிழ்ந்து, வரப்போகும் ராஜ்யத்துக்காக பொறுமையுடன் காத்திருக்கக்கூடும். அந்த ஆட்சியில் தற்காலத்தைக் காட்டிலும் தேவ ஆசீர்வாதங்கள் அதிகமாய் எல்லோருக்கும் பொதுவான ஒன்றாக இருக்கும். ஆனால் 'புதிய சுபாவத்தையும்' அதன் அன்பையும் பெற்றுக் கொண்டவர்களாலேயே இப்படியான

சுயநலமற்ற விதத்தில் காரியங்களை கண்ணோக்கும்படி எதிர்பார்க்க முடியும். எனவே தற்போதைய வர்த்தக போட்டியானது கலப்படமில்லாத தீமை அல்ல. மாபெரும் ஆயிரவருட யுகத்துக்குள் நுழைவதற்கு முன்னால் உலகுக்கு கொடுக்கப்படும் ஒரு மாபெரும் ஆயத்த பாடங்களில் இதுவும் ஒன்றாகும். வியாபார உலகமானது முழுமையாக இல்லையென்றாலும் பெரும்பாலும் சோஷ-ஸ நோக்குடன் அடியெடுத்து வைக்கப் போகும் போது, அது தனிப்பட்டவரின் சொத்துக்கோ லாபத்துக்கோ அனுகூலமாக இல்லாமல் பொது நலனுக்காகவே இருக்கும்.

அதுவரையில் உயரிய பெருந்தன்மையானவர்களிடம் - கிறிஸ்தவர்களாயிருந்தாலும், இல்லாமற்போனாலும் - சுயநலமான போட்டியின் கடுமையான உணர்ச்சி மிகவும் வருந்தத்தக்க வகையில் தொடர்ந்து வளரும். இந்த விஷயத்தை குறித்த உங்களது சொந்த கருத்தையும், தற்போதைய நிலைமையை குறித்த உங்கள் அதிருப்தியையும் குறித்து அறிவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

நமது யோசனை என்னவெனில் கவனமாய் கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருங்கள் - ஒருவேளை இன்னும் அதிகமான லாபத்துடன், குறைந்த போட்டியுடன் இருக்கும் வியாபாரம் ஏதாவது ஒன்றை நீங்கள் காண நேர்ந்தால் - அதற்கு மாறிவிடுங்கள். அல்லது இன்னும் லாபகரமான தொழிலை பார்க்கும் வரை அல்லது அனுகூலமான சூழ்நிலை கிடைக்கும் வரை நீங்கள் இருக்கும் இடத்திலேயே உங்கள் ஓட்டத்தை ஓரளவிற்கு மாற்றி அமைத்துக் கொண்டிருக்கும்படி நாம் ஆலோசனை கூறுகிறோம். அதாவது மூன்று முரண்பட்ட விருப்பங்களை - உங்கள் சொந்த விருப்பம், உங்கள் போட்டியாளர்களின் விருப்பம் மற்றும் உங்களது ஆதரவாளர் அல்லது அயலாரின் விருப்பங்களை உங்களால் முடிந்தவரை சமமாய் பிரித்துவிடவும். உங்களது வியாபாரம், செலவுகளை சமாளிக்கும் வகையில் அதற்குமேல் நியாயமான லாபம் கொடுத்தால், அதை அப்படியே தொடர முயற்சிக்கவும். ஆனால் 'பணக்காரராகும்படி' பிரயத்தனம் பண்ண வேண்டாம். ஏனெனில் "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் .....விழுவார்கள்." (1தீமோ 6:9) அவமரியாதைக்குரிய போட்டி அல்லது போட்டியாளருக்கு எதிரான தரக்குறைவான செயல்கள், மேலும் வாடிக்கையாளருக்கு கொடுக்கும் பொருட்களில் போ-ஆகியவைகளை நாம் தவிர்க்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நீதியும், நேர்மையும் மிகவும் ஜாக்கிரதையுடன் காக்கப்படவேண்டும். அதோடு உங்களது போட்டியாளரது அனுகூலத்துக்கு சூழ்நிலை அனுமதிக்கின்றபடி அன்பினால் செய்யக்கூடிய எல்லா நடுநிலைமையையும் கடைபிடிக்கவும்.



"தீமை செய்ய திரளானபேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக?" (யாத் 23:2) என்பதையோ அல்லது அநீதியோடு சிறிதளவாவது இசைந்து போகும் ஆலோசனை எதையும் பின்பற்றாதிருப்பாயாக என்ற கட்டளையையும் நாம் மறந்துவிடவில்லை. உங்கள் கேள்வியை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். நீங்கள் நியாயத்தை செய்பவர் என்பதற்காக அல்ல. ஆனால் பழக்கவழக்கம் அனுமதியளிக்கின்ற, நியாயம் ஆட்சேபனை தெரிவிக்காத, உங்கள் அன்பு அனுமதிக்கும் எல்லாவற்றையும் நீங்கள் செய்வீர்களா? என்று மட்டும் பார்க்கிறோம். இப்படிப்பட்ட "அற்பகாரியங்களை"க் குறித்து உலகத்தோடு ஒத்த இருதயம் நியாயப்படி யோசனை செய்யாது; உங்களது 'புதிய சுபாவமே' அன்பை பிரமாணமாகக் கொண்டதாகிய இது, உங்கள் போட்டியாளருடைய செழுமையையும் குறித்து அக்கறை கொண்டு சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் எல்லா மனிதருக்கும், விசேஷமாய் விசுவாச வீட்டாருக்கும், நன்மை செய்ய ஏங்கும். இந்த 'புதிய சுபாவத்தை' கூடுமான எல்லா வழிகளிலும் அன்பின் பிரமாணமானத்திற்கு கீழ்படிவதன் மூலம் மேலும் வளர்க்கவும். "கூடுமானல் உங்களால் ஆன மட்டும், எல்லா மனிதரோடும் சமாதானமாய் இருங்கள்" - தாராள மனதுடன் பாவித்து அன்பின் வழியிலேயே நடவுங்கள். அன்பின் ஆவியோடு ஊறிப்போய் விட்டவர்கள், தங்கள் போட்டியாளருக்குக் கூட தீங்கு நினைக்க மாட்டார்கள். தனது சுய லாபத்தை மட்டுமே நோக்கமாலும், போட்டியாளரின் தோல்வியில் மனமகிழ்ச்சி அடையாமலும் இருப்பார்கள்.

அன்பிற்கு முற்றிலும் ஒவ்வாத, சுயநலத்தின் இழிவான அஸ்திபாரத்தின் மேல் முழு உலகமே ஓடிக்கொண்டிருப்பது தான் கஷ்டமான விஷயம். சிலரிடம் இந்த அளவு அதிகமாகவும் சிலரிடம

சற்று குறைவாகவும் இருக்கிறது. சிலர் நியாயமான முறையில் தங்களது சுயநலத்தை கட்டுப்படுத்திக் கொள்கின்றனர். மற்றவர்கள் சுயநலத்தினால் அநீதி, நேர்மையின்மையின் அளவிற்கு இறங்கிவிடுகின்றனர். அதன் நோக்கம் எப்போதும் கீழ்நோக்கியே இருக்கிறது. கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டியானது எப்போதுமே நீதி, நேர்மைக்கு கீழாக போய்விடக் கூடாது. அத்தோடு இந்த உலகின் மிக மேன்மையான தகுதியை விட பூரண அன்பை நோக்கி கூடுமானவரைக்கும் உயர்ந்து நிற்க முயற்சிக்க வேண்டும். வாங்குபவரது ஆர்வமும், விற்பவரது ஆர்வமும் எப்போதுமே முரண்பட்டதாய் இருப்பதே இப்போதைய போட்டி முறைமையின் குறையாக இருக்கிறது. தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கும் ஆயிர வருட அரசாட்சியின் அதிகாரத்தை தவிர வேறு எந்த சக்தியும் இவை யாவற்றையும் சரிசெய்யவோ, கட்டுப்படுத்தவோ, சீராக மாற்றியமைக்கவோ முடியாது. இந்த அதிகாரம் மட்டுமே அன்பின் சட்டத்தை வ-யுறுத்தி, இந்த மனோபாவங்கள் மற்றும் சுயநலத்தின் கட்டுகளி-ருந்து விடுவிக்கமுடியும். அதன்பிறகு யாவருமே மேலானதொரு வழியைக் கண்டும் அறிந்தும் அப்பொழுது அளிக்கப்படும் உதவியை ஏற்றுக் கொள்ளவும் செய்வார்கள்.

*** *** *** ***

தற்போதைய சமூக சட்டங்களின் கீழ் நாம் தெளிவாய் கண்டவைகள்: ஒன்று செல்வத்துக்கும், புத்தி கூர்மைக்கும் அடிமைகளைப் போன்று பெருவாரியான மனுகுலம் நசுக்கப்படுதல் அல்லது வேதத்தின் வெளிப்பாடாய் இனிவரும் காலத்தில் இருக்கப்போகிறதான அராஜகத்தின் ஆளுகையின் கீழ் தற்போதைய சமூக முறைமைகள் நசுக்கப்படுதல்; மேலும் இது ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவர் என எல்லா மனிதர் மீதும் ஒரு பயங்கரமான தெய்வ தண்டனையை கொண்டுவரும். அத்தோடு உண்மையான செயல் விளக்கத்தால் சுயநலத்தின் முட்டாள்தனத்தை மனிதனுக்குக் கற்பித்து, எதிர்காலத்தில் தேவனுடைய அன்பின் பிரமாணத்தின் ஞானத்தை பாராட்டுவதற்கு அவர்களுக்கு உதவி செய்யும்; மேலும் “மகா உபத்திரவமானது” பயங்கரமான, ஆனால் அதே சமயத்தில் மிகவும் பிரயோஜனமுள்ள பாடத்தை கற்றுக் கொடுக்கும். எனவே



இந்த யுக முடிவில் நடைபெறவிருக்கும் போராட்டத்தில் “பாபிலோனாகிய கிறிஸ்தவ ராஜ்யங்கள்” விழுந்துபோவதைக் குறித்து வேதம் நமக்கு சொல்வதை அடுத்த பாடத்தில் ஆராய தயாராக இருக்கிறோம்.

கிறிஸ்துவின் சிந்தையைக் குறித்த போதனைகளை கடைபிடிப்பதில் கிறிஸ்தவ ராஜ்யத்தின் தோல்வி, அத்தோடு அவரது போதனைகளால் பெறப்பட்ட ஞானம் மற்றும் சுதந்திரம் ஆகியவை, தீமை மற்றும் சுயநலத்தின் சிந்தையுடன் எப்படி கலந்துவிட்டது என்பதையும் நாம் பார்க்கிறோம். அத்தோடு தற்கால எச்சரிக்கையி-ருந்து நாம் தெளிவாய் குறிப்பிடும் பயங்கரமான பேராபத்தை - அராஜகம் மற்றும் ஒவ்வொரு தீய செயல் - நாம் குறிப்பிடுகிறோம். இது அனுமதிக்கப்படுவதற்கான நியாயத்தையும் நாம் காண்கிறோம். அதி-ருந்து தெய்வீக சட்டத்தின் தண்டனையையும் நாம் அறிகிறோம். மேலும் உபத்திரவத்திற்கு உள்ளாக்கும் தீமைகளை குறித்து நாம் புலம்பினாலும் கூட, அதனுடைய அவசியத்தையும் நியாயத்தையும் உணர்ந்தவர்களாய் இதன் காரணமாய் முடிவில் பெறப்போகும் இரக்கத்தின் பலன்களை கற்றறிந்தவர்களாய் நமது இதயம், “சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்” என்று ஆர்ப்பரிக்கும். *(வெளி 15:3)*

*“காலைப்பொழுதுக்காய் காத்திரு -நிச்சயம் அது வரும்,*
*இரவு தேவையை கொடுத்திருக்கும் அளவிற்கு அது அத்தனை நிச்சயமானது;*
*ஆவல் நிறைந்த கண்கள் கடைசியில் தங்கள் பார்வையில் பிரயாசைப்படும்,*
*காலை ஒளியால் பதிலளிக்காத ஏதும் இனிமேல் இராது;*
*கண்ணீரால் இனிமேலும் அவர்கள் வீணாய் போராடவேண்டியதில்லை,*
*உங்கள் சந்தேகங்கள் மற்றும் பயத்தின் இருட்டை துளைப்பதற்கு,*
*கடந்துவிட்ட இருளைக் குறித்த புன்னகை பரவசமாய் வரும்.*

*“காலைப் பொழுதுக்காய் காத்திரு, ஓ தாக்குண்ட பிள்ளையே ,*
*இகழப்பட்டு, தண்டிக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு,*
*நிந்திக்கப்பட்டு*
*தாகத்தோடும், பட்டினியோடும் இருக்கும் உங்களுக்கு*
*இரங்குவாரில்லை,*
*துயரத்தின் முட்களால் பின்னப்பட்ட கிரீடத்தால் சூட்டப்பட்டு*
*அடர்ந்த இருட்டினூடே சூரிய ஒளியின் மங்கலான ஒளிக்கதிர்*
*கூட இல்லை.*
*அப்போதிருந்து உங்களை வழிநடத்த எல்லையில்லா*
*அதிகாலைப் பொழுதுக்காய் காத்திரு - நிச்சயம் அது வரும்,*
*இரவுத் தேவையை கொடுத்திருக்கும் அளவிற்கு*
*அது அத்தனை நிச்சயமானது.”*

-ஜேம்ஸ் ஒயிட்கோம் ரிலே.

அ அ

## அத்தியாயம் 11

# அர்மகெதோன் யுத்தம்

தீர்க்கதரிசிகளால் பல்வேறு விதங்களில் அடையாளமாய் கூறப்பட்ட வரப்போகும் உபத்திரவம் - கி.பி. 70ல் இஸ்ரவே-ன் வீழ்ச்சியிலும் பிரெஞ்சு புரட்சியிலும் அடையாளப்படுத்தப்பட்டது - அதனுடைய பொதுவான குணாதிசயமும் விஸ்தாரமும் - தேவனுடைய மாபெரும் சேனை - “புறஜாதிகளின் துஷ்டர்கள்” - “யாக்கோபின் இக்கட்டுக் காலம்” - அவரது விடுதலை - கோகு மற்றும் மாகோகுவின் தடை

*“இதோ, தீங்கைக் கட்டளையிட நான் என் நாமம் தரிக்கப்பட்ட நகரத்திலே (கிறிஸ்தவ ராஜ்யம் - பாபிலோன்)...... நான் பூமியின் எல்லா குடிகளின் மேலும் பட்டயத்தை வரவழைக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்..... கர்த்தர் உயரத்தி-ருந்து கெர்சித்து, தமது பரிசுத்த சத்தத்தைக் காட்டி, தம்முடைய தாபரத்துக்கு விரோதமாய் (பெயர் சபை) கெர்சிக்கவே கெர்சித்து (கிறிஸ்துவ ராஜ்யம்), ஆலையை மிதிக்கிறவர்கள் ஆர்ப்பரிப்பது போல் பூமியினுடைய எல்லா குடிகளுக்கும் விரோதமாக ஆர்ப்பரிப்பார்...*

*“ஆரவாரம் பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும்; ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; மாம்சமான யாவரோடும் அவர் நியாயத்துக்குள் பிரவேசிப்பார்; துன்மார்க்கரை பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார் என்று கர்த்தர் சொல்கிறார்.*

*“இதோ ஜாதி ஜாதிக்குத் தீமை பரம்பும், பூமியின் எல்லைகளி-ருந்து மகா புசல் எழும்பும். அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவக்கி, பூமியின் மறுமுனை மட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் அடக்கம் பண்ணப்படாமலும் பூமியின் மேல் எருவாவார்கள்.” எரே **25:29-38***

எந்த ஒரு அடையாளத்தாலும் விவரிக்க முடியாததாகிய இந்த நீதியைச் சரிக்கட்டும் நாளின் போராட்டமானது அத்தனை சிக்கலாயும், விசேஷமாயும் இருக்கும். வேத வசனத்தின்படி யுத்தம், பூமியதிர்ச்சி, அக்கினி, புயல், கொந்தளிப்பு மற்றும் வெள்ளம் என்பது போன்ற அநேக வ-மை மிக்க அடையாளங்கள் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன.

இதுவே "சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகா நாளிலே நடக்கும் யுத்தம்," அவரது சினமாகிய உக்கிர கோபத்தை எல்லாம் அவர்கள் மேல் சொரியும் படி ஜாதிகளைச் சேர்த்து, ராஜ்யங்களைக் கூட்டும் போது, சேனைகளின் கர்த்தர் யுத்த ராணுவத்தை இலக்கம் பார்க்கிறார். வெளி. *16:14;* செப் *3:8;* ஏசா *13:4*

"பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின் மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை." அது "பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப் பண்ணும்." வெளி *16:18;* எபி *12:26*

இதுவே "யேகோவாவின் எரிச்ச-ன் அக்கினி." இது பூமியையெல்லாம் அழிக்கும். இப்போதைய வானங்கள் (கிறிஸ்தவ ராஜ்யங்களின் மத அதிகாரங்கள்) மற்றும் பூமி (மதம் மற்றும் அரசாங்க செல்வாக்கின் கீழ் உள்ள சமூக ஒருங்கிணைப்புகள்) ஆகிய இரண்டும் நியாயத் தீர்ப்பின் நாளின் அக்கினிக்காக முன்குறித்து வைக்கப்பட்டிருக்கின்றது. "அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம், (தற்போதைய அதிகாரங்கள்) பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் (சமுதாயம்) அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம்...... வானங்கள் வெந்து அழிந்துபோம்." அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும், கொப்பையும் வைக்காமற் போகும்." செப் . *3:8;* 2பேது. *3:10,12;* மல்கி *4:1*

"கர்த்தருடைய வழி சுழல் காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது." "அவருடைய கோபத்துக்கு முன்பாக நிற்பவன் யார்? அவருடைய உக்கிர கோபத்திலே தரிப்பவன் யார்?" நாகூம் *1:3,6*



"இதோ, திராணியும் வல்லமையுமுடைய ஒன்று ஆண்டவரிடத்தில் இருக்கிறது. அது கல்மழைப் போலவும், சங்காரப் புசல் போலவும், புரண்டு வருகிற பெருவெள்ளம் போலவும் வந்து அதைப் பெருமையின் கிரீடத்தால் தரையில் தள்ளிவிடும்."

"அவர் சமுத்திரத்தை அதட்டி, அதை வற்றிப் போகப்பண்ணி, சகல ஆறுகளையும் வறட்சியாக்குகிறார்...... பர்வதங்கள் அதிர்ந்து மலைகள் கரைந்து போகும். அவர் பிரசன்னத்தினால் பூமியும் (தற்போதைய எல்லா காரியங்களுடைய அடையாளங்கள்) பூச்சக்கரமும் அதில் குடியிருக்கிற அனைவரோடும் எரிந்துபோம்..... புரண்டு வருகிற வெள்ளத்தினால் சர்வசங்காரம் பண்ணுவார். இருள் அவர் சத்துருக்களைப் பின்தொடரும்." ஏசா. *28:2;* நாகூ. *1:4,5,8*

இவைகள் மெய்யாகவே சொல்லர்த்தமான வெள்ளமும் நெருப்பும் நமது பூமியையும் அதன் மக்களையும் அழிக்கக்கூடியவை அல்ல. (அடையாளமாய்) தற்கால ஒழுங்குகள் அழிக்கப்படும் பொழுது, புதிய ஒழுங்குகள் அதாவது ஒரு புதியவானம் (தேவனுடைய மகிமையான சபையின் காரியம்) மற்றும் ஒரு புதிய பூமி (சுயநலத்துக்கு பதிலாக அன்பை அடிப்படையாகக் கொண்ட தேவனுடைய ராஜ்யத்தின் கீழ் மறுசீரமைக்கப்பட்டதொரு மனித சமுதாயம்) உண்டாகும் என்று தெரிகிறது. தேவனுடைய பழி வாங்கும் நாளின் அக்கினியால் தற்கால தீர்க்கதரிசிகள் மூலம் தேவன் கூறுவது: "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு ஆராதனை செய்யும்படிக்கு நான் அவர்கள் பாஷையை (சத்தியத்தை) சுத்தமான பாஷையாக (சத்தியமாக) மாறப்பண்ணுவேன்." செப் *3:9*

## விரைவில் சம்பவிக்கப்போகும் பேராபத்தைக் குறித்த இரண்டு குறிப்பிடத்தக்க நிழல்கள்

இந்த பல்வேறு விளக்கங்கள் சொல்லர்த்தமாக இல்லாமல் அடையாளங்களாய் இருப்பதனால் அவைகள் வெறும் மனித ஆர்வத்தின் கிளர்ச்சியோ அல்லது வார்த்தையின் ஒரு யுத்தத்தையோ, பயத்தின் ஒரு யுத்தத்தையோ பிரதிப-க்கக்கூடியவை தான் என்று யாரும் முடிவுக்கு வரவேண்டாம். ஏனெனில்முரணானபோதும், இந்த யுத்தத்தில் உபயோகிக்கப்பட்ட ஆயுதங்களைக் குறித்து

சர்ச்சையும், தீவிர ஆர்வமும் இருக்கிறது, இருக்கவும் செய்யும். விசேஷமாய் இவைகள் அதன் ஆரம்பத்தில் இருந்தாலும் கூட இதோடு கூட முடிவு பெற்றுவிடாது. முடிவின் சமயத்திற்கு முன்பாக ஒரு தீவிர குரூரமான போராட்டமும், பயங்கரமும், கோரமான புயலாகவும் இருக்கும் என்று ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் குறிப்பிடுகிறது. யூத யுகத்தின் முடிவில் மாம்சீக இஸ்ரயே-ன் மீது வந்த மாபெரும் உபத்திரவத்தின் குணாதிசயத்தை நாம் ஏற்கெனவே (அத்தி. 3 & தொகுதி II, அத்தி.7) கவனித்திருக்கிறோம். தற்போது அதற்கு இணையானதொரு காலக்கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம். அதாவது சுவிசேஷ யுகத்தின் அறுவடையில் கிறிஸ்தவ ராஜ்யமாகிய அதனுடைய நிஜத்தின் மீது இதைவிட பெரிதான ஆபத்தின் காலத்தில் இருக்கிறோம். யூதேயா மற்றும் எருசலேமின் மீது தீர்ப்பு வந்தபோது, அது பயங்கரத்தின் எல்லையாகவே இருந்தது. மாபெரும் உபத்திரவத்தோடு ஒப்பிடும் போது அவர்கள் மிகச்சிறிய அளவிலேயே இருந்தனர். இப்போது கிறிஸ்தவ ராஜ்யத்தின் மீது, தீவிரமாய் எதிர்கொள்ளப்போவதோடு, முழு உலகத்தையும் ஈடுபடுத்தும்.

ரோம ராணுவமும் மற்றும் வழக்கமான யுத்தங்களும் யூத யுகத்தின் முடிவில் ஒரு சிறு பாக உபத்திரவத்தையே கொண்டுவந்திக்கிருன்றன. சரித்திரத்தின் ஏடுகளைப் பார்க்கும்போது, பிரெஞ்சு புரட்சியினால் ஏற்பட்டது மட்டுமே மிகப் பயங்கரமாக இருந்தது. இது தேசிய ஒருமைப்பாட்டின் சிதைவி-ருந்தும் சட்டம் ஒழுங்கு சீர்கோடாகிய அராஜகத்தி-ருந்தும் முக்கியமாய் உதயமாகிறது. கிறிஸ்தவ ராஜ்யத்தின் மீது வரப்போகிற உபத்திரவத்தை (இதற்கிடையில் மேன்மையான ஆவிக்குரிய ஆலயமான, தேவனுடைய தெரிந்தெடுக்கப்பட்ட சபை, முழுமை பெற்று மகிமையடையும்) முன்கூறியதைப் போலவே, சுயநலமானது தெளிவாய் முழு கட்டுப்பாட்டையும் எடுத்துக்கொண்டு அவனவனது அயலானுக்கு எதிராக அணிவகுத்து நிற்கிறது. கிறிஸ்தவ ராஜ்யங்களின்மேல் வருகிற உபத்திரவத்தைக் குறித்து முன் சொல்லப்பட்டது போலவே இருக்கிறது. “இந்நாட்களுக்கு முன்னே மனுஷனுடைய வேலையால் பலனுமில்லை, மிருகஜீவனுடைய வேலையால் பலனுமில்லை; போகிறவனுக்கும், வருகிறவனுக்கும் நெருக்கிடையினிமித்தம் சமாதானமும் இல்லை; எல்லா மனுஷரையும் ஒருவரையொருவர் விரோதிக்கச்செய்தேன்.” *சக 8:10.*



அந்த காலம் மாறாமல் அப்படியே இருந்து நமது காலத்திலும் பேரழிவு நடப்பதற்கான நிலைமை இருக்கிறது. இதை யாரேனும் சந்தேகித்தல் பிரான்சை சமூக அழிவின் எல்லைக்கே கொண்டு போய் உலக சமாதானத்தையே பயமுறுத்திய ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்னதான மாபெரும் புரட்சியை கவனத்திற்கு கொண்டுவரட்டும்.

பண்டைய காலத்து காட்டுமிராண்டித் தனத்தை விட உலகம் முன்னேறி வளர்ந்துவிட்டது என சிலர் தவறான கருத்தைக் கொண்டிருக்கின்றனர். மேலும், கடந்த காலத்தில் சம்பவித்தது போன்ற பேராபத்துகள் உலகத்தில் இனிமேல் சம்பவிக்காது என்றும் கற்பனை செய்கின்றனர். ஆனால், நமது இருபதாம் நூற்றாண்டின் சீரமைப்பு மிகவும் ஒரு மெல்-ய மேற்பூச்சாக இருக்கிறது. அது எளிதில் போய்விடக்கூடியது. சமீபகால சரித்திர நிகழ்வுகளோடு மனுக்குலத்தின் தற்கால நிலையை சரியானபடி சீர்துக்கிப் பார்த்தால் பழைய நிலைமை மறுபடியும் வரும் என்பது உறுதியாகிறது. ஜாதிகள் தோன்றினது முதல் இருந்திராத ஒரு உபத்திரவத்தின் காலம் என்று முன் அறிவிக்கப்பட்ட உறுதியான தீர்க்கதரிசன வசனம் இல்லாதிருந்தாலும் கூட இது சாத்தியமாகும்.

வெளிப்படுத்தின விசேஷத்தின் அடையாள மொழியில், பிரெஞ்சு புரட்சி உண்மையில் ஒரு மாபெரும் பூகம்பமாய் இருந்தது. அது முடிவு பெறும் வரை எல்லா கிறிஸ்தவ ராஜ்யங்களுமே நடுநடுங்கும் வகையிலான அந்த சமுதாய அதிர்ச்சி அவ்வளவு பெரிதாய் இருந்தது. ஒரு நூற்றாண்டுக்கு முன், வெடித்த ஒரே ஒரு தேசத்தின் ஆக்கினையானது எல்லா தேசங்களின் சட்டம் மற்றும் ஒழுங்கினை சீர்குலைத்து அராஜகத்தின் ஆளுகைக்கு ஒரு முன் உதாரணமாகிவிடும். அவை போப்பரசுக்கு முதன்மையான ஆதரவாய் ஆயிரம் ஆண்டு இருந்த தேசமாகிய, உலகிலேயே மிக உச்சிதமான கிறிஸ்தவ ராஜ்யம் என்று எண்ணப்பட்ட தேசத்தில் நடந்தவைகள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். சபை

மற்றும் அரசாங்க ஆட்சியில் பாபிலோனின் பொய் உபதேசமாகிய மதுவினால் மதிமயங்கி இருந்த ஒரு தேசமானது, மதகுருக்களின் தந்திரத்தினால், மூடநம்பிக்கைகளில் நெடுங்காலமாய் கட்டுண்டிருந்த ஒரு தேசமானது, தன்னுடைய அசுத்தங்களை இப்படியாய் வாந்தி பண்ணி, தனது வெறித்தனமான மூர்க்கத்தின் வ-மையைப் பிரயோகித்தது. உண்மையில் இந்த பிரெஞ்சு புரட்சி என்பது யோவானுக்கு பத்முதீவில் வெளிப்படுத்தப்பட்ட ஒரு முன்னோடியாகவும், தற்போது எதிர்கொண்டு வரும் பேராபத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் காணப்படுகிறது.

அந்த மாபெரும் ஆபத்தைக் கொண்டு வந்த அதே காரணங்கள் தான் மீண்டும் அப்படியொரு ஆபத்தை கொண்டுவர தற்போது செயல்பட்டு கொண்டிருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். ஆனால், இது இன்னும் அதிக விஸ்தாரமாக உலகளாவியதொரு புரட்சியாக இருக்கும். அந்த பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணங்கள் கீழ்க்கண்டவாறு சரித்திர ஆசிரியர்களால் சுருக்கமாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. (நெப்போ-யனின் போர் விவரங்கள் பக்-12)

“மக்களின் துன்பமும் அமெரிக்கக் காலனிகளின் சுதந்திரத்துக்காக பிரான்சு ஆதரவளிக்க ஈடுபட்ட, போரின் அபரிமிதமான செலவுகளினால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட தர்மசங்கடமான நிலையும் தான் பிரெஞ்சு புரட்சிக்கான முக்கிய காரணங்கள் என்று குறிப்பிடப்பட வேண்டியிருக்கிறது. நீதிமன்றத்தின் நெறிதவறிய முறைகள், மத குருமார்களின் அபிப்பிராய பேதங்கள், புத்திக்கூர்மையின் படிப்படியான முன்னேற்றம், அமெரிக்க போட்டியினால் பரவிய சீர்திருத்த கொள்கைகள் மற்றும் நீண்டகாலமாய் பெருவாரியான மக்கள் அனுபவித்து வந்த கொடுங்கோன்மை ஆட்சி ஆகிய யாவுமே அதற்குக் காரணமாயிருந்தன..... கொடுங்கோன்மையால் ஏற்பட்ட களைப்பு, தொடர்ச்சியாய் நிலவிய நிந்தையால் ஏற்பட்ட எரிச்சல், தங்களுடைய தவறுகளின் மனக்கசப்பினால் ஏற்பட்ட உத்வேகம் மற்றும் தங்களுடைய உரிமைகளைப் பற்றிய அறிவு ஆகியவற்றால் பிரான்சு நாட்டுமக்கள் விழித்தெழுந்தனர். சுதந்திரத்துக்கான இந்த கூக்கூரல், தலைநகரி-ருந்து நாட்டின் எல்லை வரையிலும், ஆல்ப்ஸ் மலையி-ருந்து பிரினுஸ் வரையிலும், மத்திய தரைக்கடற்கரையி-ருந்து அட்லாண்டிக் கடற்கரை வரை எதிரொ-த்தது. நேர்மையற்ற அரசாங்கத்தின் தீவிரமான மாற்று வழிகளைப் போல், பழங்கால கொடுங்கோன்மையின் குற்றங்கள் முக்கியமற்றவைகளாய் மறைந்து போவதற்கு முன், தீமைகள் மற்றும் கொடூரத்தோடு புரட்சி வெடித்தது.”



மற்றொரு சரித்திர ஆசிரியர் கூறுகிறார் : (Universal History -P.497 - by Prof. Fisher, Yale Collage)

“பிரெஞ்சு புரட்சிக்கான காரணங்களுள் முதன்மையானது, ராஜா, பிரபுக்கள் மற்றும் மதகுருக்களிடையே ஏற்பட்ட பகைமையே. இவர்களுக்கு கீழ் இருந்த வகுப்பினர் மீது சுமத்தப்பட்ட வரி மற்றும் சட்டங்களின் மூலம் வந்த சுமைகளே இதற்கு காரணம்.

“நிலம் - ஏறக்குறைய 2/3 பாகம் பிரான்சின் நிலப்பரப்பு பிரபுக்கள் மற்றும் மதகுருமார்களின் கரத்தில் இருந்தது. பாரீசின் உல்லாசத்தைத் தங்களுடைய பண்ணை வீடுகளில் பெற்றிருப்பதை பிரபுக்கள் விரும்பினார்கள். பல சிறு நில உரிமையாளர்களும் அப்போது இருந்தனர். ஆனால், ஜீவனத்துக்கு உரியதைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாதபடி நிலம் மிகவும் சிறியதாய் இருந்தது. தன்னுடைய எஜமானரின் மாளிகையை அண்ணாந்து பார்க்கும் குடியானவன் அதனுள் இருக்கும் எல்லா கடன் பத்திரங்களுடன் (அடமான பத்திரங்களுடன்) சேர்த்து எரித்துவிடவேண்டும் என்பதே அவனது மன விருப்பமாய் இருந்தது. குருமார்கள் அளவில்லாமல் நிலங்களை உடையவர்களாயிருந்தனர். ஆயிரக்கணக்கான குடியானவர்கள் பிரபுத்துவ கட்டுப்பாட்டை உடையவர்களாயிருந்தனர். மேலும், அவர்களுக்கு தசம பாகம் மற்றும் பிற வழிகளில் மிகப்பெரிய அளவில் வருமானம் இருந்தது. சில மாகாணங்களில் பிற இடங்களைக் காட்டிலும் மேலானதொரு நிலைமை இருந்தது. ஆனால், பொதுவாக, பணக்காரர் இன்பத்தை அனுபவித்தனர், ஏழைகளோ சுமைகளைச் சுமந்தனர்.

“ஏகாதிபத்தியர் - உற்பத்தியாளர் மற்றும் வியாபாரிகள், உற்சாகப்படுத்தப்பட்டாலும் கொடுமையான ஏகாதிபதிகள் மற்றும் சங்க அமைப்பினால் விலங்கிடப்பட்டிருந்தனர்.

"நேர்மையற்ற அரசாங்கம் - அரசாங்கத்தின் நிர்வாகமானது தன்னிச்சையானதும், ஊழல் நிறைந்ததுமாய் இருந்தது.

"மரியாதையை இழந்த ராஜவம்சம் - அரியாசனத்துக்கான மரியாதை இழப்பு.

"சீர்திருத்த முயற்சியின் தோல்வி : பிரான்சு மற்றும் பிற தேசங்களில் அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தத்தின் முயற்சிகள் பெரும் யுத்தங்களுக்குப் பிறகு ராஜாக்களிடமிருந்து உற்பத்தியாகி, சமுதாய மறுசீரமைப்பு என்ற அவர்களது நோக்கத்தை பாதிக்காமல் ஒரு அமைதியற்ற உணர்வை பிறப்பித்தது.

"அரசியல் யூகம் - தற்போதைய சிந்தனை ஒரு சீர்திருத்த திசையில் இருந்தது. மத நம்பிக்கைகளின் பாரம்பரியங்கள் குறித்து தைரியமாய் கேள்விகள் கேட்கப்பட்டன. அரசியல் யூகம் அபரிமிதமாய் இருந்தது. ஆங்கில சட்டத்தினால் பெறப்பட்ட சுதந்திரத்தை நோக்கி மாண்டெஸ்க்யூவின் கவனம் ஈர்க்கப்பட்டது. வால்டேர் மனித உரிமைகளின் மீது தீவிர சிந்தனை செய்தார். ரோசேயு பெரும்பான்மையினரின் அரசு உரிமை குறித்து தீர்க்கமாய் எழுதினார்.

"அமெரிக்காவின் எடுத்துக்காட்டு - இந்த காரணங்களோடு கூட அமெரிக்க புரட்சியின் தாக்கமும், அமெரிக்காவின் சுதந்திரம் மற்றும் அதனுடைய மனித உரிமை குறித்த பிரகடனம் மற்றும் அரசாங்கத்தின் அஸ்திவாரம், மக்களின் சம்மதம் ஆகியவையும் இருந்தன."

பிரஞ்சு புரட்சியை உச்சநிலையை அடையச் செய்த இந்த எல்லா முதன்மை காரணங்களும் தற்காலத்தில் உலகளவில் தீவிரமாகியிருப்பது அதேநிலை இப்போது வந்திருப்பதை நினைவூட்டுவதை நாம் காண்கிறோம். வாய்ப்புகள் நிறைந்த வகுப்பாருக்கும் (ராஜரீகம் மற்றும் பிரபுக்கள்) மற்றும் உழைக்கும் வகுப்பினருக்கும் இடையே வளர்ந்துவரும் பகைமை, சரி, தவறு என்பவற்றைக் குறித்த மக்களின் விவாதம், மற்றும் சமூக, மத அதிகாரங்களின் மீது ஏற்படும் மரியாதை குறைச்சல் ஆகியவற்றை கவனிக்கவும், அத்தோடு கூட அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஆளும் அதிகாரங்களுடன் பெருவாரியான மக்களுக்கு வளர்ந்துவரும் அதிருப்தி என்ற சீர்திருத்த போக்கின் சிந்தை மற்றும்



வெளிப்பாட்டையும் குறிப்பாய் கவனிக்கவும். மேலும், ஒருவேளை சுதந்திரத்தைக் குறித்த அமெரிக்காவின் பிரகடனம், அதனுடைய மனித உரிமைகளின் அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் அஸ்திவாரம் மற்றும் மக்களின் ஒப்புதல் ஆகியவை விடுதலை மற்றும் சுதந்திரத்துக்கான ஒரு வாஞ்சையை பிரெஞ்சு மக்களின் சிந்தனையைத் தூண்டியிருக்குமேயாகில், கடந்த ஒரு நூற்றாண்டாய் இங்கு அனுபவிக்கப்பட்ட சுதந்திரம் மற்றும் செழுமையின் அளவானது மக்களால் மக்களுக்கு இருக்கின்ற இந்த அரசாங்கத்தின் வெற்றிகரமான செயல்பாடு, பழமை உலக மக்களின் பாதிப்பை வெளிப்படுத்துகிறது. பிறநாடுகளி-ருந்து இந்த நாட்டிற்கு மக்கள் குடிபெயரும் போக்கானது பிறநாட்டு மக்களின் மீது இந்த முயற்சி ஏற்படுத்தியிருக்கும் நல்ல எண்ணத்துக்கு ஒரு அத்தாட்சியாக இருக்கிறது.

ஆனாலும் கூட, இங்குள்ள மக்கள் அனுபவிக்கும் சுதந்திரமும் செழுமையும் திருப்தியாக இல்லை. இவர்கள் இதைவிட மேலான நிலைமையை ஆவலுடன் விரும்பி, அதை அடைவதற்கான வழிகளைத் தேடுகின்றனர். இங்கிருப்பதைக் காட்டிலும் கிறிஸ்தவ ராஜ்யங்கள் வேறெங்கிலும் இவ்வளவு அதிகப்படியான நேர்மையான, தைரியமான, திடமான நோக்கத்துடன் இருக்கவில்லை. தன்னுடைய மெய்யான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு மனிதனும் விழிப்புடன் இருக்கிறான். இங்குள்ள சிந்தனை மற்ற இடங்களைப் போல புரட்சியின் சிந்தனையில் இருப்பதுடன், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டும் வருகிறது.

பிரெஞ்சு புரட்சியானது இருளுக்கு எதிரான ஒரு போராட்டத்தின் வெளிச்சமாக இருந்தது. நீண்டகாலமாய் நடைமுறையி-ருக்கும் அடக்குமுறைக்கு எதிராக விடுதலையின் உணர்ச்சியாகவும் பழைய தவறுகள் மற்றும் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான சத்தியத்தின் ஒரு செயல்பாடாகவும், நீண்டகாலமாய் சமூக மற்றும் மத அதிகாரங்கள் தங்களது சொந்த உயர்வுகளுக்காய் ஊக்குவித்து, பேணிக் காக்கப்பட்டதற்கும் ஜனங்கள் கொடுமைப்படுத்தப்பட்டதற்கும் எதிராக இந்த பிரெஞ்சு புரட்சி ஒரு

போராட்டமாக இருந்தது. அத்தோடு கூட, நீதி மற்றும் தெளிந்த புத்தியுடைய ஆவியினால் வழிகாட்டப்படாத சுதந்திரத்தின் ஆபத்தை அது வெளிப்படுத்தியது. (தீமோ 1:7) அரைகுறை அறிவு உண்மையில் ஒரு ஆபத்தான காரியமாய் இருக்கிறது.

சார்லஸ் டிக்கன்ஸ் அவர்களின் கதைகள் ஒன்றில், பிரெஞ்சு புரட்சிக் காலத்தின் பாடுகளைக் குறித்த காட்சியில், இப்படியாய் ஆரம்பமாகிறது. அது தற்காலத்துக்கு மிகச் சரியாய் பொருந்தும்படியாயும் இருந்தது. அவர் கூறியவை :

"காலங்களிலேயே அது மிகச் சிறந்ததாயும், மிக மோசமானதாயும் இருந்தது. அது ஞானத்தின் காலமாகவும், அறிவீனத்தின் காலமாகவும் இருந்தது; அது நம்பிக்கையின் சகாப்தமாகவும், சந்தேகம் நிறைந்த சகாப்தமாகவும் இருந்தது; அது இருளின் காலமாகவும், நம்பிக்கையின் காலமாகவும் இருந்தது. அது நம்பிக்கையிழந்த குளிர்காலமாய் இருந்தது; எல்லாமே நம் முன் இருந்தது, நம் முன் எதுவுமே கிடையாது; நாம் யாவரும் பரலோகத்துக்கு நேராய் போய்க் கொண்டிருந்தோம். நாம் யாவரும் வேறுபாதையில் போய்க் கொண்டிருந்தோம்; சுருக்கமாய் கூறினால், அந்த காலகட்டம் தற்போதைய காலத்தைப் போலவே இருந்தது. அதாவது அதனுடைய வ-மை மிக்க அதிகாரிகள் நன்மையோ அல்லது தீமையோ எதையும் பெறுவதைக் குறித்து அறிவுறுத்தியது. ஒப்புமையில் மட்டுமே உயர்ந்த தரத்தில் இருந்தது."

இதேவிதமான காரியங்கள் இதைவிட அதிகமாக உலக முழுவதும் இன்று செயல்படுவதை நாம் காணும்போது கற்பனையான பாதுகாப்பின் எண்ணத்துடன் நம்மை தேற்றிக் கொள்ள முடியாது; சமாதானம் இல்லாதபோது, சமாதானம், சமாதானம் என்று அறிவிக்க முடியாது. அதுவும் விசேஷமாய் தீர்க்கதரிசனத்தின் எச்சரிக்கை இருக்கும் போது வரப்போகும் இந்த யுத்தத்தை குறித்த முன்னறிவிப்பின் வெளிச்சத்தில், பிரெஞ்சு புரட்சியை வரவிருக்கும் புயலுக்கு எச்சரிக்கை கொடுக்கும் இடிமுழக்கமாகவும் பூகம்பத்திற்கு முன்வரும் மெல்-யதொரு நடுக்கமாகவும் மட்டுமே எடுத்துக் கொள்ள முடியும். இது ஏற்கெனவே விழித்துக் கொண்டிருப்பவர்களுக்கு எச்சரிக்கை



கொடுத்து இருக்கின்றபடியால், அது தற்போதைய முறைமையை முடிவுக்குக் கொண்டுவந்து, புதிய முறையில் யூபி- வருடத்தை, நடுஇரவு வேளையில் மணியடித்து கட்டியம் கூறும். அது முழு உலகையும் எழுப்பி மகா பெரிய அதிகார வல்லமைகளை செயல்படுத்தி பழைய முறைமைகளை கவிழ்த்துப் போடும்.

மாபெரும் புரட்சிக்கான சூழ்நிலை முழுவதுமாய் கனிந்து வரும் போது, உலகமனைத்தும் இருக்கும் தற்போதைய சமூக அமைப்புகள் மீது அக்கினியைக் கொளுத்த பொருத்தமான மிகத்துல்-யமான சந்தர்ப்பத்தைக் கொடுக்கக்கூடும். உதாரணமாக பிரெஞ்சு புரட்சியில் முதலாவதான அந்த பகிங்கர செயலானது, பசியுடன் இருக்கும் பிள்ளைகளுடைய தாய் வாண-யின் மீது தட்டுவது போல் அது இருந்ததாக கூறப்படுகிறது. வெகுவிரைவிலேயே தாய்மார்களின் சேனை ஒன்று உணவு கேட்டு ராஜ மாளிகையை நோக்கி நடைபோட்டது. அது மறுக்கப்பட்டபோது, அவர்கள் ஆண்களால் ஒன்று கூட்டப்பட்டனர். அதோடு விரைவில் தேசத்தின் ஆக்கினையானது தூண்டப்பட்டு புரட்சியின் ஜூவாலை முழுதேசத்தையும் அழித்தது.

ஆனாலும் கூட, ஜனங்களுடைய நிலையைக் குறித்து ராஜவம்சத்தினர் அத்தனை அசட்டையாய் இருந்தனர். அத்தோடு திடீர் எழுச்சி வந்தபோது கூட, மகாராணியால் சூழ்நிலையை அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு சுகபோகத்தில் இருந்தனர். மக்களின் கிளர்ச்சியை மாளிகையி-ருந்து கேட்ட ராணி இது என்ன என்று கேட்டாள். ரொட்டிக்காக மக்கள் கூக்குர-டுகிறார்கள் என்று சொல்லப்பட்டபோது "ரொட்டிக்காய் இப்படியொரு ஆரவாரம் செய்கிறார்கள். ஒருவேளை ரொட்டி கிடைக்காமல் தட்டுப்பாடு இருந்தால், கேக்குகளை அவர்கள் வாங்கிச் செல்லட்டுமே, அதுதான் இப்போது ம-வாய் இருக்கிறதே" என்று ராணி பதிலளிக்கிறாள்.

அக்காலத்தை போன்ற சூழ்நிலை தற்போது நிலவுவது மிகவும் தெளிவாய் தெரிகிறது. மற்றவர்களால் இந்த சூழ்நிலை உணரப்படாதபோது, இந்த காலத்தின் அடையாளங்களை அறிந்து கொண்ட சிந்தனையுள்ளவர்களால் ஒரு அபாய அறிவிப்பு எழுப்பப்பட்டு வருகிறது. பிரெஞ்சு புரட்சியைத் தொடர்ந்து வருகிற

அழுகுரல்கள், உலகமனைத்திலும் அதிகாரம் மற்றும் செல்வாக்குடைய மக்கள் கூட்டத்தில் தற்போது எழும்பி வரும் கவன ஈர்ப்போடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அது ஒன்றுமில்லாததைப் போல் இருக்கும்.

பேராசிரியர் ஜி.டி.ஹெரான், யோவா (Iowa) கல்லூரியைச் சேர்ந்தவர், சில ஆண்டுகளுக்கு முன் கூறியதாவது:

"உலகளாவிய மாறுதல்களுக்கான அறிகுறிகள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. போட்டியின் ஓட்டமானது எதிர்பார்ப்பின் மனோபாவத்துடன், அதனுடைய புதிய ஞானஸ்நானம் நிறைவு பெறும் வரையில் கடினமாக இருக்கிறது. உலகில் வாழும் எல்லாவற்றின் மேல் வரும் மாபெரும் ஆபத்தின் முதலாவது வேதனையை சமூகத்தின் ஒவ்வொரு நரம்பும் உணர்கிறது. மேலும், ஒரு தெய்வீக விடுதலை வெளிப்படவேண்டியுள்ளது. (அந்த விடுதலை எப்படியிருக்கும், அது எப்படி கொண்டுவரப்படும் என்று அவர்கள் அறியவில்லை) தற்போது நடைமுறையில் இருக்கும் எல்லா மத மற்றும் அரசியல் சக்திகளையும் வருத்தப்படுத்தும் ஒரு புரட்சியின் ஆரம்பத்தில் நாம் இருக்கிறோம்... சமூக புரட்சியானது நமது நூற்றாண்டை முடிவுக்குக் கொண்டுவந்து அடுத்த நூற்றாண்டை ஆரம்பித்து மனுஷ குமாரனின் சிலுவை மரணம் முதல் உண்டான கிறிஸ்தவ ராஜ்யத்தை கிறிஸ்தவராக்குவதற்கு அழைக்கிறது."

ஆனால் ஐயோ, இந்த அழைப்பு கவனிக்கப்படவில்லை. அதிகாரத்தில் சிறுபான்மையாய் உதவியற்ற நிலையில் இருந்தவர்களைத் தவிர மற்றவர்களுக்கு உண்மையில் கேட்கப்படவில்லை. சுயநலத்தின் கூக்குரல் அத்தனை அதிகமாகவும், சம்பிரதாய கட்டுக்கள் அத்தனை வ-மையானதாகவும் இருக்கிறது. வரப்போகிற சமூக பேரதிர்ச்சி-புரட்சி-யின் வேதனை இந்த மாறுதலை பாதிக்கும். "நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்" (ஏசா 28:17) என்று வேதம் கூறுவதற்கு ஏற்ப பூமியனைத்துக்குமான நீதியான நியாயதிபதி ஏற்பாடு செய்யும் நியாயமான தெய்வ தண்டனையின் அடையாளங்களை இதைவிட அதிகமாய் வெளிக்காட்டக்கூடிய ஒன்று இருக்காது.



யூத யுகத்தின் அறுவடையில் மாம்சீக இஸ்ரயேலர் மீது வந்த மாபெரும் உபத்திரவம் மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அதைப் போன்ற ஒன்றாகவே பிரெஞ்சு புரட்சியும் இருந்தது. அதைப் போலவே தற்காலத்தின் துயரம் உச்ச நிலையை அடையும் போது அதுவும் வெளிப்படையாய் தெரியும். தி பாப்பல் டிராமா என்ற தனது புத்தகத்தில் திரு.தாமஸ் எச். கில் என்பவர் கூறும்போது, பிரெஞ்சு புரட்சியின் துன்பத்தை கோடிட்டுக் காட்டி முழு கிறிஸ்தவ ராஜ்யத்தின் மேல் வரப்போகும் உபத்திரவத்தையும் கூட அறிவுறுத்துகின்றார். அவர் கூறுவதாவது:

"பிரெஞ்சுப் புரட்சியைக் கூர்ந்து கவனித்தால் பூமியின் மேல் வந்திருக்கிற பயங்கரமானவைகள் எல்லாவற்றுக்கும் மேல் அதன் கடுமை வெளிப்படையாய் தெரியும்....... நியாயமான தண்டனையின் ஒரு பகுதியை இதற்குமுன் உலகம் கண்டதில்லை. ஒருவேளை அது ஏராளமான தீமைகளை அனுபவித்திருக்குமேயானால், அது ஏராளமான தீமைகளை முன்கூட்டியே சிந்தித்து தூக்கியெறிந்திருக்கும்.... ஒரு தேசத்தில், எல்லா பழமை வாய்ந்த நிறுவனமும், காலத்தால் மதிக்கப்படும் பழக்கங்கள் யாவும் ஒரே நிமிடத்தில் மறைந்து போனது. சமூக, அரசியல் முறைமைகள் தாக்குதலுக்கு முன்னமே வீழ்ந்து போனது. ஏகாதிபத்தியமும், பிரபுத்துவமும், சபையும் ஏறக்குறைய எதிர்ப்பை காட்டமுடியாமல் அழிக்கப்பட்டு, அரசாங்கத்தின் மொத்த திட்டமும் உபயோகமற்றதாக போய்விட்டது. அங்கே ராஜரீகமும், பிரபுக்கள் ஆட்சியும், ஆசாரியத்துவமும் பெரும் பாவம் செய்திருக்க வேண்டும். இந்த உலகத்தின் நல்ல காரியங்களாக கொஞ்ச காலங்கள் இருந்த பிறப்பு, பதவி, செல்வம், நல்ல உடைகள், மேன்மையான மரியாதைகள், எல்லாம் இவ்வுலகத்தின் ஆபத்தாகவும் துன்பங்களாகவும் மாறிவிட்டன.

"கிறிஸ்தவத்தை ஒழித்துத் தடை செய்து, நியாயமான காரணத்துக்காக மதத்தை முடியிழக்கச் செய்து, நோட்டர் டேம் மில் வேசியின் இடத்தில் புதிய பெண் தெய்வத்தை அரியணையேற்றிய தேசமானது, கறைபட்ட கிறிஸ்தவத்தால் மிகுந்த நியாயமற்ற முறையில் பெருந்துன்பம் அடைய வேண்டும். பொதுவான

அறிவிப்பு முறைகளையும் வணக்கத்தையும் காலத்தைக் கணிக்கும் பொதுவான முறையையும் அழிப்பதற்கும், பூரண அழிவிற்கும் ஜனங்கள் போர் தொடுத்தனர்; 'நீ' ஒரு பாவம் என்று அருவருப்புடன் நோக்கவும், மேன்மையான கனத்தி-ருந்து ஒரு அருவருப்பு என சிறுமைப்படவும் வாரங்களை வருடக்கணக்காக மாற்றவும், கடந்த மாதங்களை அறியப்படாமல் பண்ணவும் நல்ல காரணங்கள் இருக்கவேண்டும். சிறுமைக்குத் தள்ளப்பட்ட பழைய வழிகளை வெறுப்பதற்கு காரணம் வேண்டும்.

"உயர்குலத்தோரின் சிதையுண்ட மண்டபங்கள், ராஜ குடும்பத்தின் கொள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள், சிரச்சேதம் செய்யப்பட்ட மன்னரும், ராணியும், பரிதாபமாய் மரணத்தைத் தழுவிய பிரெஞ்சு இளவரசர்கள், கொலை செய்யப்பட்ட குருமார்களும், பிரபுக்களும், வ-மைமிக்க சிரச்சேத இயந்திரம் தாராளமான திருமணங்கள், மிடானின் தோல் பதனிடும் ஆலை, லாய்ரா ஆற்றுக்குள் ஒரு சேர கட்டி வீசப்பட்ட ஜோடிகளும், அதோடு ஆண், பெண் இவர்களது தோலால் செய்யப்பட்ட கையுறைகள் ஆகிய இவை யாவுமே படுபயங்கரமானவைகளாய் இருக்கின்றன. ஆனால், அவைகள் யாவும் தெய்வ தண்டனைக்கான வார்த்தை ஜாலங்கள், பழிவாங்கும் தேவதையின் கம்பீரமான தோற்றத்துக்கு இவைகள் சான்றாக விளங்குகின்றன. செல்வந்தரும் பிரபுக்களும் சந்தோஷமாக இருப்பதற்குக் காரணமான வரி சுமையின் கீழ் நசுக்கப்பட்டு துர்பாக்கியமான குடிமக்கள், அநியாயமான யுத்தங்கள் மற்றும் நேர்மையற்ற வரிச்சுமையால் ஏற்பட்ட பஞ்சங்கள், அதன்பிறகு பட்டினியைக் குறித்து முறையிட்டதற்காக மட்டும் இருபது அல்லது ஐம்பது பேராக சுட்டுவீழ்த்தப்படுதல் அல்லது தூக்கில் தொங்கவிடப்படுதல், இவை யாவும் பல நூற்றாண்டுகளாய் சம்பவித்து வருகின்றன.போய்ட்டு மற்றும் பியார்னில் வருடக்கணக்காக இராணுவத்தினால் வதைக்கப்பட்டு, சிவன்னிசில் மிருகங்களைப் போல் வேட்டையாடப்பட்டு பல்வேறு வேதனைக்குரிய வழிகளில் பல்லாண்டுகளாக பல்லாயிரக்கணக்கானோர் கொன்று குவிக்கப்பட்டதையும், பாரீஸின் தெருக்களில் கோடிக்கணக்கான புரட்டஸ்டன்ட் சபையார் கொலை செய்யப்பட்டதையும் இவைகள் நினைவுக்குக் கொண்டு வருகின்றன...



"ரோம சபை மற்றும் போப்பின் அதிகாரத்தோடு தொடர்பு கொண்டதை விடவும் அதிக வன்மையும் அல்லது தீர்க்கமான தெளிவுடன் பிரெஞ்சு புரட்சியின் பழிதீர்க்கும் செயல் வேறு எதிலும் இருந்ததில்லை. மிகவும் பயங்கரமானதொரு போராட்டத்துக்குப் பின் சீர்திருத்தத்தை நிராகரித்ததில் பிரான்சு விசேஷ இடத்தில் இருந்தது. மேலும் இந்த நிராகரிப்பின் நடவடிக்கையில் இப்படிப்பட்ட ஏராளமான குற்றங்கள் அழியாமல் நினைவில் நிற்கின்றன. இவ்வளவு கடுங்கோபத்துடன் இருப்பதற்குக் காரணமான அதே ரோம சபைக்கு எதிராக தனது உக்கிரத்தைத் திருப்பவும்... ரோம சபையின் ஆராதனையை ஒழிக்கவும், அவளது மாபெரும் மிகப் பிரபலமான நகரங்களின் தெருக்களில் திரளான குருமார்களை படுகொலை செய்யவும், அவள் பல்லாயிரக்கணக்கான புராட்டஸ்டன்டாரைக் கொலை செய்து, வேட்டையாடி, நாடுவிட்டு நாடு கடத்தியது போலவே, அவர்களை அவர்களுடைய எல்லை மட்டுக்கும் வேட்டையாடி, வேறு தேச கரைகளில் அவர்களைத் தூக்கியெறியவும்... போப்பு எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குள் யுத்தத்தை எடுத்துச் செல்லவும் பாதுகாப்பாற்ற போப்பு ராஜ்யத்தின் மீது எல்லாவித சாபத்தையும், அவமானத்தையும் குவிப்பதற்காகவும், .... பிரபுத்துவ, ராஜரீக மற்றும் போப்பல் பிரான்சின் தகாத செயல்களின் நேரடி விளைவுகளைக் காட்டிலும் பிரெஞ்சு புரட்சியின் அதீத செயல்கள் அத்தனை தண்டனைக்குரியவைகளாக இருக்கவில்லை....

"புரட்டஸ்டன்ட் சபையின் மீதான ரோமன் கத்தோ-க்க சபையின் துன்புறுத்தல், ஆன்மீக மற்றும் மத மீறுதல்களுக்கு எதிரான ஒரு விளைவு என்று புரட்சியினை விவரிப்பது அதனுடைய நிலைகளில் ஒன்றாகும். ரோமசபை மற்றும் போப் ராஜ்யத்துக்கு மிகவும் நேர் எதிராய் அந்த பிரவாகமானது வெடித்துச் சிதறிய உடனேயே ...... சபையின் சொத்துக்களானவை அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கப்பட்டன. பிரெஞ்சு மதகுரு தனது மேன்மைமிகு ஸ்தானத்தி-ருந்து தாழ்ந்து ஒரு சம்பளம் வாங்கும் ஸ்தானத்திற்கு

வந்துவிட்டார். சந்நியாசிகளும், கன்னியாஸ்திரிமார்களும் உலக நிலைக்கு விடுவிக்கப்பட்டனர். அவர்களது ஸ்தாபனங்களுடைய சொத்துக்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. புரட்டஸ்டன்டார்கள் முழு மத சுதந்திரத்துக்கும் அரசியல் சமநிலைக்கும் உயர்த்தப்பட்டனர்.... அதன் பிறகு விரைவில் ரோமன் கத்தோ-க்க மதமானது சம்பிரதாயப்படி ஒழிக்கப்பட்டது.

“நெப்போ-யன் போனபார்ட் நாதியற்ற 6ம் பயசுக்கு எதிராக போர் தொடுத்தான்..... புனித மதகுரு (போப்பாண்டவர்) பிறருடைய ஆதரவில் இருக்கும் நிலைக்கு ந-வடைந்தார்...... பெர்தியர் ரோமுக்கு நேராக படையெடுத்து ரோமக் குடியரசு ஒன்றை நிறுவி, போப்பை கைது செய்தான். மேன்மைமிகு போப்பாண்டவர் நாஸ்திகரின் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டு .... ஒரு சிறையி-ருந்து மற்றொன்றுக்கு மாற்றப்பட்டு..... முடிவில் அவர் பிரான்சுக்கு கைதியாகக் கொண்டு செல்லப்பட்டார். இங்கு ...... வேலேன்சில் மரித்தார். இங்கு தான் இவரது குருமார்கள் கொல்லப்பட்டனர். அவரது அதிகாரம் நீக்கப்பட்டது. அவரது நிர்வாகமும், கீர்த்தியும் கே-க்குரியதானது. காமன்வெல்த்தின் மூர்க்கமான போர்வீரனின் பாதுகாப்பில், கசப்பான வாழ்க்கையைப் பத்து வருட காலம் அனுபவித்தார்.... பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் உலகத்தையே வியக்கவைக்கும் வகையில் அது மிகச்சரியானதொரு நியாயம் வழங்குத-ன் ஒரு பகுதியாக இருந்தது. எண்ணிலடங்கா புராட்டஸ்டன்ட்டாரைத் தனது கட்டளையினால் கொலை செய்த அதே பிரான்சு தேசத்தினால் ரோமானிய சபை தடை செய்யப்பட்டது. பிரெஞ்சு போர் வீரரால் மிகவும் இரக்கமற்ற முறையில் வேல்டன்சஸ்கள் வேட்டையாடப்பட்ட இடமாகிய அந்த ஆல்பின் பள்ளத்தாக்கின் அருகே புரட்டஸ்டன்டாரின் போராட்டத்தினால், அதே டாஃபின் மேதகு போப்பின் துக்ககரமான முடிவால் புனிதமாக்கப்பட்டது. ரோம சபை அரசாங்கம் ரோம குடியராக மாறியது. ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் போப்பின் மற்றும் சார்ல்மேக்னே என்பவர்களின் கீழ் ரோம சபை ராஜ்யமானது. அதே பிரெஞ்ச் தேசம் இப்போது அதைத் தூக்கி எறிந்துவிட்டது.

“போப்பின் சாம்ராஜ்யம் பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில் வீழ்ச்சியடைந்தது. இதனால் ஆறாம் பயஸ் தான் கடைசி போப் என்றும் போப்பரசு அழிந்துவிட்டது என்றும் பெரும்பாலான ஜனங்கள் நினைத்தனர். ஆனால் பிரெஞ்சுப் புரட்சி நியாயத்தீர்ப்பின் ஆரம்பமே அன்றி முடிவு அல்ல. தண்டனை நிச்சயமும் தவிர்க்க முடியாததுமாகும். இது நீண்ட காலத்திற்குரியதும் தாமதமாகிறதுமாயிருக்கும்; இது பலவித விநோதமான சம்பவங்களால் நிறைந்திருக்கும். அவ்வப்போது இதி-ருந்து தப்பித்துக் கொள்வது போல் தோன்றும். ஆனால் இந்த தண்டனை மிகுந்த வேதனைக்கும் அவமானத்திற்குரியதாகவும் இருக்கும்.”



பின்வரும் இந்த இரண்டு எடுத்துக்காட்டுக்களை காட்டிலும் எவ்விதத்திலும் கசப்பும், கடுமையும் குறைந்ததாய் இல்லாமல் அதற்கு மாறாய் அதைவிட பயங்கரமாய் அத்தோடு மிகவும் பொதுவானதாகவும் இருக்கும் என்று வரப்போகும் உபத்திரவம் குறித்து நாம் எதிர்பார்க்க வேண்டும். ஏனெனில் (1) சௌகரியங்கள் மற்றும் ஆடம்பரங்களுக்காக மட்டுமன்றி, வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளுக்காகவும் கூட, எப்போதும் இருந்ததைக் காட்டிலும், மனிதர் அதிகப்படியான சார்ந்திருக்கக் கூடிய நிலையை தற்கால நிலைமைகள் கொடுக்கின்றன. நிறுத்தப்பட்ட இரயில் போக்குவரத்தினால் மட்டுமே நமது மிகப்பெரிய நகரங்களில் ஒரே வார காலத்தில் பட்டினியின் நிலைமையைக் கொண்டு வரக்கூடும். அதோடு வர்த்தகம் மீது ஆதாரப்பட்டிருந்த ஒவ்வொரு தொழிலையும் ஸ்தம்பிக்கச் செய்யக்கூடிய அளவிற்கு பொதுப்படையான அராஜகம். (2) கர்த்தர் விசேஷமாய் அறிவிப்பது என்னவெனில் “வரப்போகும் உபத்திரவமானது யாதொரு ஜாதியும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம்” என்கிறார். தானி *12:1; யோயே 2:2; மத் 24:21*

ஆனால் இந்த உபத்திரவத்தைத் தவிர்க்கக்கூடிய நம்பிக்கை எதுவும் இல்லை. ஆனால் வரப்போகும் புயலுக்கு தனிப்பட்டவர் ஒளிந்துக் கொள்ளக்கூடிய வழிமுறைகள் வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

*(1)* புய-ன் முழுமூச்சான வீச்சு ஆரம்பிப்பதற்கு முன் உண்மையுள்ள சபைக்கு விடுதலை வாக்குத்தத்தம்

பண்ணப்பட்டிருக்கிறது. *(2)* "கட்டளை பிறக்கும் முன்னும், பதரைப் போல் நாள் பறந்து போகும் முன்னும், கர்த்தருடைய கோபத்தின் நாள் உங்கள் மேல் வரும்முன்னும், நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள். தேசத்திலுள்ள எல்லா சிறுபான்மையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள்; மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்." *செப் 2:1-3*

இந்த சூழ்நிலைக்கு விழிப்படைந்தவர்களாகிய யாவரையும் யோயேல் தீர்க்கதரிசி அழைத்து காரியங்களை நோக்கும்படி கூறுகிறார். "சீயோனில் எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்; (கிறிஸ்தவ ராஜ்யம், தீர்க்கதரிசனமான கர்த்தருடைய ராஜ்யம் அல்லது பரிசுத்த பர்வதம்) தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்; ஏனெனில், கர்த்தருடைய நாள் வருகிறது. அது சமீபமாயிருக்கிறது." (யோயேல் 2:1) சங்கீதக்காரன் கூறுகிறார்: "துன்மார்க்கர் மேல் கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார்; அக்கினியும், கந்தகமும் (உபத்திரவம், அழிவு இவைகளின் அடையாளங்கள்) கடுங்கோடைக் கொந்தளிப்பும், அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு, கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின் மேல் பிரியப்படுவார்." *சங் 11:3-7*

சர்வ வல்லமையுள்ள தேவனுடைய யுத்தத்தின் இந்த மாபெரும் நாளானது இதுவரை உலகம் கண்டிராததொரு மாபெரும் புரட்சியாய் இருக்கும். ஏனெனில், இதில் அநீதியின் எல்லா கொள்கைகளும் ஈடுபடக்கூடிய ஒன்றாக இருக்கும். ஏனெனில் "வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை. அறியப்படாத இரகசியமும் இல்லை." *(மத் 10:26)* என்கிறபடி, தனிப்பட்டவருடைய நியாயத்தீர்ப்பைப் போலவே, ஜாதிகளின் நியாயத்தீர்ப்பும், அத்தனை உண்மையானதாய் இருக்கும். பொதுவான புத்தி கூர்மையினால் அரசியல் சதி ஆலோசனை, பொருளாதார கொள்கை, மத உரிமைகள் போன்றவற்றின் இரகசியமான ஆரம்ப இடம் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அத்தோடு நீதிமன்ற கூண்டுக்குள் யாவரும்



மனுஷராலும், அத்தோடு தேவனாலும் கொண்டுவரப்படுகிறார்கள். பொன்னான கட்டளையினாலும், அன்பின் பிரமாணத்தினாலும் கிறிஸ்துவின் உதாரணம் போன்றவைகளினால் தேவனுடைய வார்த்தையின் போதனைகளால் நியாயம் தீர்க்கப்பட்டு சரி அல்லது தவறு என்று அறிவிக்கப்பட்ட யாவும், இந்த காலங்களின் விவாதத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்துக்கு வருகின்றன.

மகாநாளின் யுத்தமானது, வேறு எந்த சீர்திருத்த யுத்தத்தையும் போலவே, அதன் வளர்ச்சியில் படிப்படியான நிலைகளைப் பெற்றிருக்கிறது. சச்சரவுகள் ஒவ்வொன்றிலும் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. அது உண்மையானதாகவோ அல்லது கற்பனையானதாகவோ, தேசிய மற்றும் தனிப்பட்ட தவறுகளாக இருக்கலாம். அடுத்து வருவது அதனால் பாதிக்கப்பட்டவரால் அந்தத் தவறுகளுக்கு வரும் மிகத் தீவிரமான பாராட்டுகள், அடுத்து சீர்திருத்த முயற்சிகள், மாபெரும் முரண்பாடுகளுக்கு வழிகாட்டுதல், சொற்போர்கள், பிரிவினைகள், கருத்துக்களின் சச்சரவு, கடைசியில் பழிவாங்குதல், ஆயுதப்போர் ஆகியவற்றைப் போல் சீர்திருத்தத்தில் பல்வேறு படிகள் பொதுவாகவே தொடரும். சர்வ வல்லமையுள்ள தேவனின் மகாநாளின் யுத்தத்தினுடைய ஒழுங்குமுறை இப்படியாக இருக்கிறது. இருளுக்கு எதிராய் வெளிச்சத்தின் போராட்டம், தவறுகளுக்கு எதிராக உண்மையின் போராட்டம் என்பதைப் போன்றதாக இதன் பொதுவான குணாதிசயம் இருக்கிறது. இது உலகமெங்கிலும் இராஜாவுக்கு எதிராக விவசாயி, பிரசங்கிக்கு எதிராக விசுவாசி, மூலதனத்திற்கு எதிராக உழைப்பு ஆகியவற்றின் ஆயுதமேந்திய போராட்டம். தங்களுடைய உரிமையாக இருக்கவேண்டியவைகளாக வெகுநாட்களுக்கு முன்பே அவர்கள் கருதுகிறவைகளுக்காகவும், அடுத்தவருடைய உரிமைகள் அபகரிக்கப்படுவதை பார்க்கும் போதும் அதனை தடுப்பதற்காகவும் உபத்திரவப்பட்டவர்கள் ஆயுதமேந்தியிருக்கின்றனர்.

### கர்த்தருடைய மாபெரும் சேனை

ஒருங்கிணைப்பது, ஆயத்தப்படுத்துவது, எண்ணிலடங்கா சேனைகளை பயிற்றுவிப்பது, மாபெரும் கடற்படையைக் கட்டுவது

போருக்கான புதிய மற்றும் விநோதமான ஆயுதங்களை கண்டுபிடிப்பது, புதிய சக்திவாய்ந்த வெடி பொருட்களை தயாரிப்பது, இராணுவ தளவாடங்கள் நிமித்தமாய் எல்லா நாடுகளிலும் அதன் அதிகாரங்கள் அனைத்தையும் முழுவதுமாய் செலவிடுவது போன்ற இந்தத் தீங்கின் நாளுக்கான ஆயத்த வேலைகளை நாம் இதற்கு முந்தைய அத்தியாயங்களில் கவனித்திருக்கிறோம். மேலும் ஒருவருக்கு எதிராய் ஒருவர் கோபத்துடன் முகம் சுளித்து, பூரணமாய் ஆயுதமணிந்து அவர்கள் யாவரும் நின்றிருப்பதைப் பார்க்கும் போது கோபத்துடன் இருக்கும் தேசங்களின் முணுமுணுப்பை நாம் கவனித்திருக்கிறோம்.

இந்த ஆயுதமணிந்த, பயிற்சி பெற்ற பல்லாயிரக்கணக்கான போர் வீரர்களை நாம் பார்க்கும் போது இந்த வல்லமையுள்ள திரளான சேனைகளுக்குள், கர்த்தருடைய மாபெரும் சேனை என்று தீர்க்கதரிசிகளால் சுட்டிக்காட்டப்பட்டது எது? தீர்க்கதரிசனம் குறிப்பிட்டுச் சொல்வது இவைகளில் ஏதாவது இருக்குமா? ஒருவேளை அப்படியெனில், கர்த்தரின் சேனை என்று எந்த அர்த்தத்தில் அவைகள் கருதப்படக்கூடும்? ஏனெனில், அவைகளில் அவரது ஆவியால் தூண்டப்பட்டது எதுவுமே இல்லை. அல்லது அப்போஸ்தலர் பவுல் அவர்களால் போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது (2 கொரி 10:3-5) என்று இவர்களது ஆயுதங்கள் விவரிக்கப்பட்டபடியான, சிலுவை வீரர்களான தேவனுடைய பிள்ளைகளை இது சுட்டிக்காட்டுகிறதாய் இருக்க முடியுமா? “தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்” (எபே 6:17) தேவனுடைய ஆவியால் நிரம்பியிருப்பவர்களாகிய தேவனுடைய பிள்ளைகளின் கரத்தில் இருக்குமா? அவர்கள் இவ்வுலகத்தின் ராஜ்யங்களைத் தூக்கியெறிந்து ஒரு நித்திய சுதந்திரத்துக்கென அவைகளைக் கிறிஸ்துவிடம் கொடுத்து மாபெரும் பணியை முடிப்பார்களா?

ஒரு வேளை அது அப்படியாக இருக்குமேயாகில், நாம் ஏற்கெனவே பார்த்த காரியம் தீர்க்கதரிசன பார்வையிலும், காலங்களின் அடையாளங்களினாலும் அது அப்படிப்பட்டதாக இருக்காது. அதற்கு மாறாக, நீதியின் எதிர்ப்பும் எச்சரிப்பும் உலகத்தால் மிகச்சீராக அசட்டை செய்யப்பட்டு வருகிறது. அத்தோடு ஜாதிகள் தொடர்ந்து காரிருளிலும் நடந்து, பூமியின் அஸ்திவாரங்கள் யாவும் (தற்கால சமூக அமைப்புகள்) அசைகின்றன. (சங் 82:5) அதே போல் தற்போது பயங்கரமாய் அசைக்கப்படுகின்ற ஒட்டுமொத்த சமுதாய கட்டுமானங்களுக்கு அச்சத்தைக் கொடுக்கிறது. “பாபிலோனைக் குணமாக்கும்படி பார்த்தோம்” என்று தீர்க்கதரிசி கூறுகின்றார். “ஆனால் அது குணமாகவில்லை; அதை விட்டு விடுங்கள். (என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள், வெளி 18:4) அதின் ஆக்கினை வானமட்டும் ஏறி ஆகாய மண்டலங்கள் பரியந்தம் எட்டினது.” எரே 51:9.



தீர்க்கதரிசிகளால் குறிப்பிட்டபடி, இந்த உலக ராஜ்யங்களை தூக்கியெறிவதற்கான கர்த்தருடைய மகா சேனையை அமைப்பவர்கள் பரிசுத்தவான்கள் அல்ல, அவர்களது போராயுதங்கள் இதற்குப் போதுமானவைகளும் அல்ல என்பதும் தெளிவாக இருக்கிறது. அப்போஸ்தலர் சொல்வது போல் அவர்கள் ஆயுதங்கள் மிகவும் பரிச்சயமானவர்களுக்கு மட்டுமே உண்மையில் மிக மேன்மையானவை. தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிற அவருடைய ஜனங்களுக்கு அவருடைய வார்த்தைகள் இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்தைக் காட்டிலும் கூரானவைகள். உண்மையில் அது “தர்க்கங்களையும் (மனுஷீக விளக்கங்கள்) தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவைகளாயிருக்கிறது.” (2 கொரி 10:4,5); ஆனால் இந்த யுத்த களத்தின் ஆயுதங்கள் உலகத்தின் மீது வேறு எவ்விதத்திலும் செயல்படாது. மேலும் இந்த பரிசுத்தவான்களின் சேனையானது, ஒரு “மாபெரும் சேனையாக” இல்லாமல் நமது கர்த்தர் கூறியதுபோல ஒரு “சிறுமந்தையாகவே” இருக்கிறது. லூக் 12:32; யோயேல் 2:11ஐ ஒப்பிட்டு பார்க்கவும்.

இந்த சேனையைக் குறித்த தீர்க்கதரிசன விளக்கத்தைக் கேளுங்கள்:

“ஏராளமான ஒரு பலத்த ஜாதி தீவிரமாக வந்து பரவும்; அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானதுமில்லை, இனித்

தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை. அவைகளுக்கு முன்னாக அக்கினி பட்சிக்கும், அவைகளுக்குப் பின்னால் ஜூவாலை எரிக்கும்; அவைகளுக்கு முன்னாக தேசம் ஏதேன் தோட்டத்தைப் போலவும், அவைகளுக்குப் பின்னாகப் பாழான வனாந்தரத்தைப் போலவும் இருக்கும்; அவைகளுக்கு ஒன்றும் தப்பிப் போவதில்லை. அவைகளின் சாயல் குதிரைகளின் சாயலை ஒத்தது; அவைகள் குதிரை வீரரைப் போல ஓடும். அவைகள் ஓடுகிற இரதங்களின் இரைச்சலைப் போலவும், செத்தைகளை எரிக்கிற அக்கினி ஜூவாலையின் இரைச்சல் போலவும், யுத்தத்துக்கு ஆயத்தப்படுத்தப்பட்ட பலத்த ஜனத்தின் இரைச்சல் போலவும், பர்வதங்களுடைய (இராஜ்யங்கள்) சிகரங்களின் மேல் குதிக்கும்.

"அவைகளுக்கு முன்பாக ஜனங்கள் நடுங்குவார்கள்; எல்லா முகங்களும் கருகிப் போகும். அவைகள் பராக்கிரமசா-களைப் போல ஓடும்; யுத்த வீரரைப் போல மதிலேறும்; வரிசைகள் பிசகாமல், ஒவ்வொன்றும் தன் தன் அணியிலே செல்லும். ஒன்றை ஒன்று நெருக்காது; ஒவ்வொன்றும் தன் தன் பாதையிலே செல்லும்; அவைகள் ஆயுதங்களுக்குள் விழுந்தாலும் காயம்படாமற் போகும்; அவைகள் பட்டணம் எங்கும் செல்லும்; மதி-ன் மேல் ஓடும், வீடுகளின் மேல் ஏறும்; பலகணி வழியாய்த் திருடனைப் போல உள்ளே நுழையும். அவைகளுக்கு முன்பாகப் பூமி (தற்போதிருக்கும் சமூக அமைப்பு) அதிரும்; வானங்கள் (சபை அதிகாரங்கள்) அசையும்; சூரியனும், சந்திரனும் (சுவிசேஷம் மற்றும் மோசேயின் பிரமாணம் ஆகியவற்றின் ஒளி) இருண்டு போகும்; (அவநம்பிக்கை பரவலாக எங்கும் காணப்படும்); நட்சத்திரங்கள் [அப்போஸ்தல வெளிச்சமானது (வெளி 12:1)] ஒளி மங்கும். (ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. யோவா 9:4; ஏசா 21:9, 11,12) கர்த்தர் தமது சேனைக்கு முன் சத்தமிடுவார்; அவருடைய பாளையம் மகா பெரியது, அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளது; கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும். அதை சகிக்கிறவன் யார்?" (யோயே 2:2-11)

தற்போது போராட்டத்துக்குத் தேவையானவைகள் தயாராகும் போது கர்த்தருடைய இந்த சேனை தீங்கு நாளின் பயங்கரமான நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டும். அந்த அக்கினியானது தயார் நிலையின் உச்சத்தை அடையவேண்டியிருக்கிறது. இந்த சேனையானது கர்த்தருடைய அதிகாரத்தினால் "ராஜ்யங்களின் சிங்காசனத்தைக் கவிழ்த்து, ஜாதிகளுடைய ராஜ்யங்களின் பெலத்தை அழித்துவிடும்." (ஆகா 2:22) ஆனால் அப்படிப்பட்டதொரு சேனை எங்கிருக்கிறது? அது ஜெர்மனியின் சேனையாக இருக்குமா? அல்லது பிரெஞ்சு அல்லது ரஷ்யாவின் அல்லது அமெரிக்க நாடுகளின் சேனையா? தீர்க்கதரிசியினால் இது இங்கு மாபெரும் சேனையாக விவரிக்கப்படுகிறது. மேலும், இது மிகவும் ஆச்சரியமான காரியங்களை நிறைவேற்றுகிற ஒன்றாக இருக்கிறது. முன் குறிக்கப்பட்டிருக்கிறபடியே, அறுவடை காலத்தின் இன்னும் பாக்கியிருக்கும் வெகு சில வருடங்களுக்குள் முடிக்கவேண்டும். தற்காலத்தில் இது வரப்போகிற மனுக்குல அழிவிற்கான சில ஆயத்த காரியங்களில் ஈடுபட்டு இருக்கிறது. போர்க்கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் மிக எளிதாய் சமாளித்து விடக்கூடிய பயிற்சி பெறாத ஒரு ஒழுங்கற்ற கும்பலாக அது தீர்க்கதரிசிகளால் விவரிக்கப்படவில்லை. ஆனால் மிக உயர்தரமான நல்ல பயிற்சியைப் பெற்று இருக்கக்கூடிய வல்லமை மிக்க சேனையாக அது இருக்கும்.



அப்படியெனில், அப்படிப்பட்டதொரு சேனை தற்கால போதனை மற்றும் பயிற்சியின் கீழ் எங்கிருக்கிறது? என்று நாம் கேட்கலாம். இப்படிப்பட்ட சேனையின் முன்பாக பூமி (சமூகம்) அதிரும், வானங்கள் (மத அதிகாரங்கள்) அசையும். (யோவேல் 2:10) இந்த சேனை தைரியமாய் கிறிஸ்தவ ராஜ்யங்களின் அரசாங்கம் மற்றும் மத அதிகாரம் ஆகிய இரண்டின் அதிகாரங்களுக்கு எதிராக அணிவகுத்து நிற்கும். தன்னுடைய தற்கால வ-மையோடு கூட சமாளிக்க முடியும் என்று நம்பமுடியுமா? வெகுசீக்கிரத்தில், காலத்தால் மதிக்கப்பட்ட கிறிஸ்தவ ராஜ்யத்தின் போதனைகளையும், அதன் இராஜதந்திரம் மற்றும் மதகுருக்களின் தந்திரங்களையும் தைரியமாய் நிராகரிக்கக்கூடிய சேனையானது எங்கே? அது பிடிவாதமாய் அதனுடைய எல்லா சாபத்தையும், கட்டளைகளையும் அலட்சியப்படுத்தி, அதனுடைய ஒழுங்குபடுத்தப்பட்ட சக்தி மற்றும்

ஆதிக்க அதிகாரத்தை தூக்கியெறிந்துவிடுமா? வெசுவியன் எரிமலையைப் போன்ற அதன் காலாட்படையின் சீற்றத்தை எதிர்கொள்ளுமா? அதனுடைய ஏவுகணை மற்றும் வெடிகுண்டுகளைத் தடுத்து, போராயுதங்கள் அடங்கிய அதன் கப்பற்படையின் இடையே முன்னேறி, கிரீடம் சூட்டிய தலைவர்களின் மகுடத்தைப் பறித்து, இராஜ்யங்களை சமுத்திரத்தின் நடுவே தள்ளிவிடுமா? அது வானங்களை தீயிட்டு, பூமியினை கடும் வெப்பத்தினால் உருக்கி, இவ்வண்ணமாய் தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டபடி பழைய முறைமைகளின் மேல் ஒரு மாபெரும் உலகளாவிய நாசத்தை உருவாக்குமா?

"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்தை"க் காட்டிலும், காலத்தின் அடையாளங்கள், வரும் பேராபத்தை நமக்கு நிச்சயப்படுத்தி, அப்படிப்பட்டதொரு சேனையானது நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகின்றன. மேலும், இந்த உண்மையை அறிந்து கொண்டதினால் (தீர்க்கதரிசன வார்த்தையின் ஞானமோ அல்லது அதற்குரிய ஆலோசனையோ இன்றி) கிறிஸ்தவ தேசங்களை முன்குறித்தே சொல்லப்பட்ட பயங்கரம் தற்போது ஆட்கொண்டு எல்லா இடங்களிலும் தற்காப்பு மற்றும் பாதுகாப்பிற்காக அசாதாரணமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசியல்வாதிகளை கவனம் செலுத்தும்படி செய்கிறது.

ஆனால்,"உண்டாயிருக்கிற அதிகாரங்களால்" தற்காப்புக்காக திட்டமிட்டபடி இந்த நடவடிக்கைளில், அவர்களால் உணரப்படாத கண்ணி ஒன்று இருக்கிறது. தற்காப்புக்காக அவர்கள் சார்ந்து இருக்கும் சேனைகள், பொதுமக்களின் சேனை என்பது நினைவில் கொள்ளப்படவேண்டும். நல்ல பயிற்சி பெற்ற இந்த லட்சக்கணக்கான போர் வீரர்களுக்கு மனைவிகளும், மகன்களும், மகள்களும், சகோதரரும், சகோதரிகளும், உறவினரும், நண்பர்களும் இருக்கின்றனர். இவர்களது நலன் அவர்களுடைய நலன்களோடு இயற்கையான பந்தத்தினால் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இராஜாங்கத்துக்கும், இராஜாவுக்கும் அளிக்கப்படும் அவர்களது சேவையோ கட்டாயமான ஆணைகளால் மட்டுமே பெறப்படுகிறது. மேலும் தங்களது உயிரையும் உடலையும் பணயம் வைத்து செய்யும்



இந்த உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை என்பது அவர்களது எண்ணம். மேலும் தங்களது குடும்பத்தினரின் வறுமையைப் போக்கவே இந்த வேலையில் இருக்கின்றனர். வருடத்துக்கு வருடம் போரின் மீதான விருப்பம் இந்த ஆயுதமேந்திய படைகளுக்கு குறைந்துகொண்டே வருகிறது. அத்தோடு கூட கஷ்டப்படும் படைகளும், வீடுகளில் இருக்கும் பொதுமக்களும், தங்களது பங்கைக் குறித்து மேலும், மேலும் அதிருப்தியும், எரிச்சலும் அடைந்து, எதிர்காலத்தைக் குறித்து மேலும் மேலும் அச்சம் கொண்டிருக்கையில், தங்களது சேவைக்காக உத்தரவு இடும் பேரரசின் அதிகாரங்களுக்கு நாளுக்கு நாள் கீழ்ப்படியும் போக்கும் குறைந்து வருகிறது.

இவைகளெல்லாம் பலமான ஆயுதம் தரித்த, பயிற்சி பெற்ற கிறிஸ்தவ ராஜ்யத்தின் திரளான சேனையானது வரப்போகும் பேராபத்தில், தாங்களே அதிகாரம் பெற்றவர்கள் என்று கூறிக் கொள்பவர்களைக் காப்பாற்றுவதற்கு மாறாக, அவர்களுக்கு எதிராய் அவர்களது அதிகாரத்தையே புரட்டிப் போட்டுவிடக்கூடிய சாத்தியத்தைச் சுட்டிக்காட்டுபவையாகவே இருக்கின்றன. பஞ்சம் நிலவியபோதும், பொதுமக்களிடையே கலகத்துக்கு வழிவகுத்த போதும், அதற்கான காரணங்களைப் பொறுத்தவரை, ரஷ்ய இராணுவத்தில் தங்களுடைய நண்பர் மற்றும் சகோதரருக்கு தூரமாய் அது அக்கறையுடன் பாதுகாக்கப்பட்டது. அத்தோடு கலகத்தை அடக்குவதற்குக் கட்டளையிடப்பட்ட வீரர்கள் தூரத்திலுள்ள மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். ரஷ்யாவில் இந்த நிலைமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டதால், ஆட்சியாளர்களால் இதன் சாத்தியக்கூறு சிந்திக்கப்படாத ஒன்று அல்ல.

இந்த வல்லமையான சேனையை ஒழுங்குபடுத்த தமது "சத்தமாக" கர்த்தரால் உபயோகிக்கக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைத் தெளிவாக யூகிக்க தற்போது நம்மால் முடியாது. ஆனால் சரித்திரத்தை வேகமாய் படைக்கும் நாட்களில் நாம் வாழ்கிறோம். அத்தோடு எந்த நேரத்திலும் இந்த திசையை நோக்கி இயக்கங்களை எதிர்பார்ப்பது பொதுவான நியதிகளின் காரணமாக இருக்கிறது. ஆனால் நமது முந்தைய

தொகுதிகளில் (வால்யூம் 2 & 3) தேவன் தமது திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்துக்கும் பிரத்தியேகமான நேரத்தை ஒதுக்கியிருப்பதையும், நீதியைச் சரிக்கட்டும் நாளில் தற்போது நாம் இருப்பதையும், 40 வருட கால அளவான இது 1874 அக்டோபர் மாதத்தில் இது ஆரம்பமானது என்பதையும், அது மிக விரைவில் முடியும் என்பதையும் நாம் பார்த்தோம். சபை, அரசாங்கம், பொருளாதாரம், சமூகம் மற்றும் வேதத்தில் முன் கூறப்பட்ட மாபெரும் சம்பவங்கள் யாவற்றிலும், இந்த நாளின் ஏற்கெனவே கடந்துவிட்ட அபசகுனமான வருடங்கள் நிச்சயமாய் ஒரு பரந்த ஆழமான அஸ்திவாரத்தை பதித்திருக்கின்றன. இவை யாவும் உலகத்தின் மீது ஏற்கெனவே பாதிப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், முன் கூறப்பட்டவைகளைப் போலவே அத்தனை நிச்சயமாய் சம்பவிக்கவும் போகிறது. அவைகளின் முழுமையான நிறைவேறுதலுக்கு ஒரு சில வருடங்களே போதுமானதாக இருக்கிறது. "காலம் சமீபமாய் இருக்கிறது" என்ற புத்தகத்தில் (1916) ஆசிரியரது முகவுரையில், ஆசிரியர் ஜாதிகளின் வெளியேற்றம் மற்றும் ராஜ்யத்தின் நிர்மாணம் குறித்தும் கூறியுள்ளார். "பூமியின் மேல் வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர்பார்க்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகிறது."

இந்த நீதியைச் சரிக்கட்டும் நாளின் ஆரம்பம் முதலே பகிரங்கமாய் அறிவிக்கப்பட்டதும், நமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட தீர்க்கதரிசனங்களும் மிகத் தீவிரமாய் உச்சநிலையை அடைந்து கொண்டிருக்கின்றன. அத்தோடு கூட முன் அத்தியாயங்களில் காண்பித்திருப்பது போல, இப்போது வரைக்கும் இன்னும் அருகருகே வந்து கொண்டிருக்கும் உபத்திரவத்தின் எல்லைக் கோடுகளில் சிலவற்றை எல்லா மனிதருமே பார்க்க முடிகிறது. சமுதாயமானது ஒரு தீப்பெட்டியைப் போல் உராய்ந்து எரிவதற்கு தயாராய் இருப்பதும், ஒரு வெடிமருந்து கிடங்கைப் போல் எந்த கணமும் வெடிப்பதற்குத் தயாராக இருப்பதும், ஒழுங்குபடுத்தப்பட்ட சேனையைப் போல் தாக்குதலுக்கு ஒரு கட்டளைக்காக தயாராய் இருப்பதும் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் ஷேக்ஸ்பியர் உண்மையாய் எழுதியது:

"ஒரு தெய்வீகத் தன்மை இருக்கிறது. அதுவே நமது முடிவுகளை



சீரமைக்கிறது, நாம் இருக்கவேண்டிய நிலைக்கு, நமது கரடுமுரடை அது செதுக்குகிறது."

இந்த யுத்தத்தில் கர்த்தருக்கு உள்ள ஆர்வத்தைக் குறித்து மனுக்குலம் பொதுவாகவே உணர்வில்லாமல் இருக்கிறது. அத்தோடு பெரும்பாலும் எல்லா போட்டியாளர்களுமே போராயுதங்களையும் தங்களுடைய சொந்த, சுயநலமான ஆர்வங்களுக்காய் அணிந்து கொண்டிருக்கின்றனர். இதில் கர்த்தர் பங்குபெற முடியாது என்பதை மிகச்சரியாய் உணர்ந்து கொண்டிருக்கின்றனர். மேலும், இதனால், கர்த்தருடைய ஆசீர்வாதத்துக்காக எல்லா பக்கங்களிலும் இருக்கும் அனைவரும் மன்றாடி நிற்கும் போது, சிலர் அதன் மீது நம்பிக்கை கொண்டனர். மற்ற யாவரும் தங்கள் சுயத்தின் மீதும், நிறுவனங்கள் மீதும், எண்ணிக்கைகள் மீதும் சார்ந்திருந்தனர். கர்த்தருடைய வசனம் கூறுகிற அவரது திட்டத்தை நிராகரித்தவர்கள், தாங்களாகவே கர்த்தருக்கென்று ஒரு திட்டத்தை நிறுவப்போகிற "வானத்தின் அதிகாரங்கள்" ஆகிய இவர்களைவிட வேறுயாரும் அதிகமாய் ஆச்சரியப்படப் போவதில்லை. இப்படிப்பட்ட இவர்களுக்கு அடுத்து வரப்போகும் சில வருடங்களில் கர்த்தருடைய கிரியைகள் உண்மையில் "அபூர்வமான செயல்களாக" இருக்கும். இந்த விஷயத்தைக் குறித்து கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்:

"கர்த்தர் தமது கிரியையாகிய அபூர்வமான கிரியையைச் செய்யவும், தமது வேலையாகிய அபூர்வமான வேலையை நிறைவேற்றவும், அவர் பெராத்சீம் மலையிலே எழும்பினது போல எழும்பி, கிபியோனின் பள்ளத்தாக்கில் கோபம் கொண்டது போல் கோபம் கொள்வார். இப்பொழுதும் உங்கள் கட்டுகள் பலத்துப் போகாதபடிக்கு பரியாசம் பண்ணாதிருங்கள்; தேசம் அனைத்தின் மேலும் நிர்ணயிக்கப்பட்ட சங்காரத்தின் செய்தியை (ஒரு முடிவை, ஒரு நிறைவேறலை) சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவராலே கேள்விப்பட்டிருக்கிறேன்." ஏசா 28:21,22

சமூக அமைப்பு, "பூமி," "பூதங்கள்" இயற்கையின் செயல்பாடு ஆகியவைகளைக் கர்த்தர் தீக்குச்சியை உரசும்படி அனுமதியளிக்காத வரையில் தீயிட்டுக் கொளுத்த முடியாது. இதற்கு முன் அடிக்கடி ஆங்காங்கே சிறுசிறு போர்கள் இருந்த போதிலும், நமது இரட்சிப்பின்

அதிபதியாகிய மகா "மிகாயேல்" எழும்பி கட்டளை கொடுக்கும் வரையில் (தானி 12:1) மாபெரும் இறுதி யுத்தமானது துவங்காது. இராஜாவுக்குச் சொந்தமான "சிறுமந்தையானது" தெரிந்தெடுக்கப்பட்டு, "முத்திரையிடப்பட்டு," கூட்டிச் சேர்க்கப்படும் வரையில் அந்த பெரும் ஆபத்து (உடனடியாய் நேரக்கூடிய ஒன்றாக இருப்பினும் கூட) நடைபெறாது என்று மாபெரும் அதிபதியானவர் தமது ராஜரீகக் கூட்டமான சபைக்கு அறிவிக்கிறார்.

இதனிடையில் இந்த உபத்திரவத்தைக் குறித்த அப்போஸ்தலரின் விளக்கத்தை நாம் நினைவுகூறுவோம். அந்த உபத்திரவம் பிள்ளைக்காய் ஸ்திரீ படும் பிரசவ வேதனையைப் போன்று இருக்கும். இது கொஞ்சம் இடைவெளி விட்டு வரும் வ-யைப் போலவும், மரண வேதனை போலவும் இருக்கும். இப்படியாக இதுவரைக்கும் இருந்து வந்த இது, இனிவரும் காலத்தில் ஒவ்வொரு வ-க்கும் இன்னும் தீவிரம் அதிகரித்துக் கொண்டே போகும். தற்கால நிறுவனங்களின் அழிவில் புதிய ஒழுங்குகள் பிறக்கும் வரையில் கடைசிகட்ட கடும்வேதனை தொடரும்.

கடந்த ஆறாயிரம் வருடங்களில் அதனுடைய சொந்த வழிகளில் போகும்படி இந்த உலகத்தை, இஸ்ரயேலருடைய காரியத்தை தவிர, கர்த்தர் பொதுவாக விட்டுவிட்ட காரணத்தினால் ஏழாவது ஆயிரம் வருடத்தின் துவக்கத்தில் யுக மாற்றங்களைப் புரிந்து கொள்ளாதவர்களுக்கு அவரது தலையீடானது மிகவும் விசித்திரமாகவும், விநோதமாகவும் காணப்படும். ஆனால் இந்த யுத்தத்தில் அவர் தம்மை துதித்து, தமக்கு ஊழியம் செய்யும்படியாக கடுங்கோபத்தை மனுஷர் மேல் வரப்பண்ணுவார். (அவர்களது வாஞ்சைகள், சுயநலம் மீதும்) மீதம் இருப்பவர்களை அவர் அடக்குவார். மிகவும் நீண்டதொரு பாடுகளுடன் பாவம், சுயநலம் மற்றும் மரணத்தின் ஆளுகையை அவர் நீண்டகாலத்துக்கு அனுமதித்திருந்தார். ஏனெனில், அவரது தெரிந்தெடுக்கப்பட்ட சபையின் சோதனைக்காக அது ரத்து செய்யப்படக்கூடும். அத்தோடு பாவத்தின் மிதமிஞ்சிய பாவத் தன்மையை எல்லா மனிதருக்கும் அது கற்றுக் கொடுக்கும். ஆனால், உலகமானது பொதுவாகவே அவரது அன்பு, சத்தியம் மற்றும் நீதியின் பிரமாணத்தை வெறுப்பதைக் கண்டபோது, தனது நேசக் குமாரனின் ஆயிரமாண்டு அரசாட்சியின் கீழான நீதியின் அனுகூலங்களுக்கு மெய்யானதொரு விளக்கமாக இருக்கும்படியாக அடுத்த பாடத்தினைக் கொடுப்பதற்கு முன், ஒரு பொதுவான ஒழுங்கினை அவர் திட்டம் செய்கிறார்.



மாம்சத்துக்குரிய போராயுதங்களால் போராடாதபடி தன் ஜனங்களை கர்த்தர் தடை செய்கிறார். தம்மை சமாதானத்தின் தேவன், அன்பு மற்றும் ஒழுங்கின் தேவன் என்று தம்மைக் குறித்து கூறுகிறார். மேலும் நீதியின் தேவனாகவும் தம்மை அறிக்கையிடுவதோடு, பாவம் இந்த உலகில் நிரந்தரமாய் ஜெயம் கொண்டிராது, ஆனால், அது தண்டிக்கப்படும் என்றும் காண்பித்தார். "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதில் செய்திடுவேன் என்று கர்த்தர் சொல்கிறார்." (ரோம 12:19; உபா 32:35) மேலும் ஜாதிகளுக்கு எதிராய் நியாயம் விசாரிக்க அவர் எழும்பும்போது, வஞ்சகர் யாவர் மீதும் வஞ்சம் தீர்க்கும் போதும், "யுத்தத்தில் வல்லவர்" என்றும், "யுத்தத்தில் பராக்கிரமர்" என்றும் மகத்துவமானதொரு சேனையைத் தனது கட்டளையின் கீழ் வைத்திருக்கிறார் என்றும் அறிவிக்கிறார். தற்போது அணிவகுத்து நிற்கும், கிறிஸ்தவ மண்டலத்தின் படையாய் திரண்டிருக்கும் திரளானவர்களே, தற்போதைய சமூக அமைப்பின் அரண்களுக்கெதிராய் தமது வல்லமையான பராக்கிரமத்தை அனுப்பப்போகும் மகா சேனையை பிறகு நிர்மாணிக்கமாட்டார்கள் என்று யாரால் சொல்லக்கூடும். யாத்.15:3; சங் 24:8; 45:3; வெளி 19:11; ஏசா 11:4; யோயேல் 2:11

"கர்த்தர் பராக்கிரமசா-யைப் போல் புறப்பட்டு, யுத்த வீரனைப் போல் வைராக்கியமூண்டு, முழங்கி கெர்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்." அவரது சேனையின் முழக்கமும் கர்ஜனையும், அவரது திட்டத்தை நிறைவேற்றுவதில் அவைகளின் ஜெயமும் இப்படியாக தமது குணத்தை வெளிப்படுத்துகிறார். ஏனெனில் அவரது அழிவின் வேலையை அவைகள் அறியாமலேயே நிறைவேற்றுகின்றன. "நான் வெகுகாலம் மவுனமாயிருந்தேன்; சும்மாயிருந்து எனக்குள்ளே அடக்கிக் கொண்டிருந்தேன்; இப்பொழுது பிள்ளை பெறுகிறவளைப் போலச் சத்தமிட்டு அவர்களைப் பாழாக்கி விழுங்குவேன்." ஏசா 42:13,14

ஆனால் கர்த்தருடைய வல்லமையான சேனையின் ஒரு பகுதியையும் கிறிஸ்தவ மண்டலத்தின் கலகம் நிறைந்த படைகளையும் மிஞ்சி உருவாக்குவதற்கு சிலர் இருப்பார்கள் என்ற தகவல்களும் கூட வேதத்தில் இருக்கின்றன. மேலும் தீர்க்தரிசி எசேக்கியேல் மூலமாய் கர்த்தர் இதே காலத்தைக் குறித்தும் வரப்போகும் கிறிஸ்தவ மண்டலத்தின் பேராபத்துக்களைக் குறித்தும் கூறுவதாவது:

"நான் அதை அந்நியர் கையிலே கொள்ளையாகவும், பூமியில் துஷ்டர்களுக்குச் சூறையாகவும் கொடுப்பேன்; அவர்கள் அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவார்கள்..... ஒரு சங்கி-யை பண்ணினவை; (அவர்களை ஒன்றாக சேர்த்துக் கட்டு, அவர்கள் யாவரும் பொதுவான ஒரு காரணமாகட்டும்) தேசம் நியாயந்தீர்ப்புக்குள்ளான இரத்தப் பழிகளால் நிறைந்திருக்கிறது; நகரம் (பாபிலோன், கிறிஸ்தவ மண்டலம்) கொடுமையால் நிறைந்திருக்கிறது. ஆகையால் புறஜாதிகளின் துஷ்டர்களை வரப்பண்ணுவேன். அவர்கள் இவர்களுடைய வீடுகளைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்; பலவான்களின் பெருமையை ஒழியப் பண்ணுவேன். அவர்கள் பரிசுத்த ஸ்தலங்கள் (அவர்களின் பரிசுத்த ஸ்தலங்கள், அவர்களது மத நிறுவனங்கள், போன்றவை) பரிசுத்தக் குலைச்சலாகும்." எசே *7:21-24*

கிறிஸ்தவ ராஜ்யங்களில் அராஜகத்தினால் எழும்பும் திரளான ஜனங்கள், சட்டம், ஒழுங்கு இல்லாதிருக்கும் போது, புறஜாதிகளின் படையெடுப்பின் போது நிகழ்ந்ததைப் போல மிகவும் கொடூரமாகவும் அநாகரிகம் நிறைந்தவர்களாகவும் இருப்பார்கள்- இது பிரெஞ்சுப் புரட்சிக்கு ஒத்ததாக இருக்கும். அல்லது இது கிறிஸ்தவ ராஜ்யங்களுக்கு எதிராக இந்தியா, சீனா மற்றும் ஆப்பிரிக்க மக்களின் கிளர்ச்சியைக் குறிக்கின்றதாகவும் இருக்கக்கூடும். துருக்கியின் மறுமலர்ச்சி மற்றும் லட்சக்கணக்கான முகமதியரின் கிளர்ச்சி சம்மந்தமாய் பொது பத்திரிக்கையில் ஏற்கெனவே ஒரு யோசனை கூறப்பட்டிருக்கிறது. "புறஜாதிகளின் துஷ்டர்கள்" கிறிஸ்தவ மண்டலத்திலேயே இருக்கின்ற தேவன் அற்றவர்களும், கிறிஸ்தவ உணர்வோ அல்லது நம்பிக்கையோ இல்லாதவர்களும் தான்



என்பதே நமது கருத்தாகும். இவர்கள் இதுவரையில் அறியாமை, மூடநம்பிக்கை மற்றும் பயம் ஆகியவற்றால் அடக்கிவைக்கப்பட்டும், தடுக்கப்பட்டும் வந்திருக்கின்றனர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் உதயத்தில் இவர்கள் வேகமாய் இந்தத் தடைகளின் ஆதிக்கத்தி-ருந்து விடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நீதியின் அரசாட்சிக்கு மனிதனை தயாராக்கவும், தற்கால நிறுவனங்களை தூக்கியெறிவதில் தம்முடைய மாபெரும் அதிகாரத்தை செயல்படுத்தவும், தமது தெய்வீக ஞானத்தின் படி, தேச பக்தர்கள், சீர்திருத்தவாதிகள், பொதுவுடைமைவாதிகள், அறநிலையவாதிகள், அராஜகவாதிகள், அறியாமையில் இருப்போர் மற்றும் நம்பிக்கையில்லாதவர்கள் ஆகியோரின், நம்பிக்கை, பயம், அறிவீனம் மற்றும் சுயநலத்தைப் பயன்படுத்தி, கர்த்தரானவர் தமது தெய்வீக அருளால் அதிருப்தியாளர்கள் அடங்கிய இந்த மாபெரும் சேனையினுடைய ஒரு பொதுவான பொறுப்பை எடுத்துக் கொள்வார். இந்த காரணத்தினால் தான் "கர்த்தரின் மகா சேனை" என்று அழைக்கப்படுகிறது. அவரது பரிசுத்தவான்கள், தேவனுடைய குமாரர்களாக தேவ ஆவியால் வழிநடத்தப்படுகிற யாருமே இந்த "யுத்தத்தினை" பொறுத்தவரை எதையுமே செய்யமுடியாது.

## இதுவரை சம்பவித்திராத இந்த யுத்தத்தின் நிலைமைகள்

தீர்க்கதரிசிகளின் முன்னறிவிப்பின்படி இந்த யுத்தத்தின் தன்மைகள் சரித்திர மேற்கோளுடன் இருக்காது. ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டபடி, இந்த இறுதி போராட்டமானது சித்திரத்தைப் போல் அடையாளங்களால் 46ம் சங்கீதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. (சங் *97:2-6;* ஏசா *24:19-21;* 2பேது *3:10* ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்) குன்றுகள் (குறைந்த உயரம், குறைந்த எதேச்சதிகாரம் கொண்ட அரசாங்கங்கள்) ஏற்கெனவே மெழுகுபோல் உருகுகின்றன. தங்கள் உருவத்தை இன்னும் அவைகள் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், பூமியானது (சமூகம்) சூடேறுவதால் அதனுடைய தேவைகளுக்கு அவைகள் இணங்கிப் போகின்றன. படிப்படியாய் பிரபலமாகின்ற கட்டாயத்தின் நிலைக்கு இறங்கி

வருகிறது. கிரேட் பிரிட்டன் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது. உயர்ந்த பர்வதங்கள் (எதேச்சாதிகார அரசாங்கங்களை வர்ணிக்கிறது) புரட்சிகளால் அசைக்கப்படும். மேலும் "ஒரு சமுத்திரத்தில் சாய்ந்து போக" கொண்டு செல்லப்பட்டு, அராஜகத்தினால் முற்றிலுமாய் அழியும். ஏற்கெனவே தற்கால சமூக அமைப்பின் அரண்களுக்கு எதிராக "சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கின்றன." வெகுசீக்கிரத்தில் பூமியானது (தற்கால சமூக அமைப்பு) குடிகாரனைப் போல் தள்ளாடி, தடுமாறி நடக்கும், தன்னைச் சரிசெய்து கொள்ளவும், ஸ்திரமாய் கால் ஊன்றி தன்னை மறுபடியும் நிர்மாணித்துக் கொள்ளவும், வீணாகத் தொடர்ந்து முயற்சி செய்யவும். விரைவில் நீதியும், நியாயமும், நிலவக்கூடிய "புதிய பூமிக்கு" (புதிய சமூக அமைப்பு) அது இடங்கொடுக்கும் வகையில் முற்றிலுமாய் "அகற்றப்படும்."

தற்கால அமைப்புகளை மறுபடியும் ஸ்தாபிப்பது கூடாத காரியமாய் இருக்கும். ஏனெனில், (1) அதனுடைய நன்மைகளுக்காக இது நீண்டகாலம் வாழ்ந்தாயிற்று. மேலும் அது தற்கால சூழ்நிலையின் கீழ் நியாயமற்றதாக இருக்கிறது. (2) உலகப் பிரகாரமான அறிவு பொதுவாகவே பரவியிருக்கிறது. (3) மதகுருமார்களின் தந்திரம் பொது ஜனங்களை வெகுகாலமாய் தவறான காரியங்களாலும், பயத்தாலும் குருடாக்கி, பிணைத்து வைத்திருந்தது. பொதுவாக எல்லா மதங்களும் அவமரியாதைக்குரியதாகி அதனுடைய போதனைகள் மோசடிகளாக காணப்படுகிறது. (4) பொதுவாகவே மத நம்பிக்கை உடைய ஜனங்கள், யுக மாறுதலுக்கான தேவனுடைய நேரம் வந்துவிட்டது என்பதை உணராதிருப்பதால், தற்கால ஒழுங்குகளை தற்காப்பதற்காக, காரணங்கள், நீதி நியாயங்கள் மற்றும் வேத வசனம் யாவற்றையும் அசட்டை செய்வார்கள்.

அப்பொழுது மத அதிகாரமாகிய வானங்கள் (மத அதிகாரங்கள், போப்பு சபை மற்றும் புராட்டஸ்டன்ட்) புத்தகச் சுருளைப் போல் சுருட்டப்படும். (ஏசா 34:4; வெளி 6:14) கிறிஸ்தவ மண்டலத்தின் ஒட்டுமொத்த மத அதிகாரமும், அச்சப்படும் ஆபத்து நெருங்கிவிட்ட போது எழும்பும் அராஜகத்தின் அலைகளுக்கு எதிராக முற்றிலும் பயனற்றதாக இருக்கும். அந்த வல்லமையான



சேனையின் முன்பு, "வானத்தின் சர்வ சேனையும் (பெயரளவிலான சபை) கரைந்து, வானங்கள் புத்தகச் சுருளைப் போல் சுருட்டப்பட்டு, (இந்த மதத்தின் வானங்கள்-போப்பு சபையும் புரட்டஸ்டன்ட் சபையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மாபெரும் இரண்டு முக்கிய பாகங்களும், நாம் காண்பித்த வண்ணமாய், சுருளின் இரண்டு பிரத்தியோகமான முனைகளும் சுருண்டு, இப்போதும் கூட மிகவேகமாய் ஒன்றை ஒன்று நெருங்கி வருகின்றன) அவைகளின் சர்வ சேனையும் திராட்சை செடியின் இலைகள் உதிருகிறது போலவும், அத்திமரத்தின் காய்கள் உதிருகிறது போலவும் உதிர்ந்து விழும்."(எல்லாம் ஒரே சமயத்தில் அல்ல, வேகமாக ஆனால், படிப்படியாக) ஏசா 34:4 மேலும், முடிவில் "வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து (அவைகள் ஒன்று சேர்ந்ததினால்) உருகிப்போம்." 2பேது 3:12

"அவர்கள் சன்னபின்னலாயிருக்கிற முட்செடிகளுக்கு ஒப்பாயிருக்கையிலும் (புரட்டஸ்டன்ட் மற்றும் போப்பு சபை என்றுமே முழுமையாக ஒரே விதமாக இருக்கமுடியாது. ஒருவருக்கொருவர் முட்களாய் தான் இருப்பர்), தாங்கள் மதுபானத்தினால் வெறி கொண்டிருக்கையிலும் (உலகத்தின் ஆவியால் மதிமயங்கியிருக்கின்றனர்) அவர்கள் முழுவதும் காய்ந்து போன செத்தையைப் போல் எரிந்து போவார்கள். (இந்த மகா உபத்திரவத்தில் அவர்கள் மூழ்கடிக்கப்படுவார்கள். மத அமைப்பாக இருந்தவர்கள் முற்றிலும் அழிக்கப்படுவார்கள்) அவர் சங்காரம் பண்ணுவார். இடுக்கம் மறுபடியும் உண்டாகாது." ஆசீர்வாதமான வாக்குதத்தம்! "இதோ சூளையைப் போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களை சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும், கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (மேற்கொண்டு எந்த முன்னேற்றமும் அடையக்கூடாதபடி எல்லாம் அழியும்) நாகூ 1:9,10; மல் 4:1

### "**யாக்கோபின் இக்கட்டுக் காலம்**"

கர்த்தருடைய இந்த நாளின் உபத்திரவமும், துன்பமும்

முத-ல் விசேஷமாய் கிறிஸ்தவ ராஜ்யத்தின் மீது வரும். பிறகு எல்லா ஜாதிகள் மேல் முடிவாய் வரும்போது, தீர்க்கதரிசி எசேக்கியேல் *(38:8-12)* மூலமாய் நமக்குத் தெரிவிக்கப்பட்டபடியே, பாலஸ்தீனாவில் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்ட இஸ்ரயேல் ஜனத்தின் மீது அது இருக்கும். இதுவரையிலும் சம்பவிக்காத அளவிற்கு இந்த அறுவடை காலத்தினிடையே பாலஸ்தீனாவில் இஸ்ரயேலரின் கூடுகை மிகப்பெரிய அளவில் இருக்கும் என்று தீர்க்கதரிசி குறிப்பிடுவது தெரிகிறது. ஜாதிகளி-ருந்து சேர்க்கப்படும் அவர்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் இருப்பார்கள் என்றும், கணிசமான ஆஸ்திகளுடனும், முந்தைய நாட்களில் பாழாய்க் கிடந்த ஸ்தலங்களில் திரும்பக் குடியேறி பத்திரமாய் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்றும், மீதமுள்ள உலகமனைத்தும் அதனுடைய கொடூரமான குழப்பத்தில் இருக்கும் என்றும் கூறுகிறார். எசே *38:11,12*

இஸ்ரயேலர் பாலஸ்தீனத்தில் இப்படியாக சேர்க்கப்படுதல் ஆரம்பித்துவிட்டது என்ற உண்மைக்கு எல்லா மனிதரும் சாட்சிகளாய்இருக்கின்றனர். ஆனால் இந்த தீர்க்கதரிசனம் குறிக்கப்பட்ட காலத்துக்குள் முடிவடையும் பொருட்டு, பிற தேசங்களி-ருந்து இவர்கள் குடியேறுதல் ஒரு பெருத்த, திடீர் உத்வேகத்தைப் பெறவேண்டியிருக்கிறது. இந்த உத்வேகம் மட்டுமே இன்னும் நிறைவேற வேண்டிய ஒன்றாக இருக்கிறது. ஆனால், அது நிச்சயமாய் வரும் என்று தீர்க்கதரிசி (எரேமியா *16:14-17,21*) மூலமாய் குறிப்பிடப்படுகிறது.

"இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரயேல் புத்திரரை எகிப்து தேசத்தி-ருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு இனிமேல் சத்தியம் பண்ணாமல்; இஸ்ரயேல் புத்திரரை வடதேசத்திலும் (ரஷ்யா) தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சத்தியம் பண்ணுவார்கள்; நான் அவர்கள் பிதாக்களுக்கு கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்ப வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்கிறார். இதோ, நான் மீன் பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களைப் பிடிப்பார்கள்; அதற்குப் பின்பு வேட்டைக்காரராகிய அநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களை எல்லா மலைகளிலும், எல்லா குன்றுகளிலும் கன்மலைகளின் வெடிப்புகளிலும் வேட்டையாடுவார்கள். என் கண்கள் அவர்களுடைய எல்லா வழிகளின் மேலும் நோக்கமாயிருக்கிறது; அவைகள் என் முகத்திற்கு முன்பாக மறைந்திருக்கிறதில்லை; அவர்களுடைய அக்கிரமம் என் கண்களுக்கு முன்பாக மறைவாயிருக்கிறதுமில்லை..... என் கரத்தையும் என் பெலத்தையும் அவர்களுக்குத் தெரியப் பண்ணுவேன்; என் நாமம் யோகோவா என்று அறிந்து கொள்வார்கள்."



இதை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் அபரிதமான தகுதிபடைத்தவர் என்பதில் நமக்கு எந்த சந்தேகமும் இல்லை. "யூதர்களைக் கொண்டு என்ன செய்யப்படக்கூடும்" என்ற கேள்வியே எல்லா ஜனங்களிடையேயும், தேசங்களிலும் இருக்கிறது. இது கர்த்தரால் திடீரென்று விரைவில் கொண்டு வரப்போகும் இக்கட்டுக்கள் சிலவற்றால், இது தீர்க்கதரிசியால் குறிப்பிட்டபடி சந்தேகமின்றி, வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு அவர்களை உரிய காலத்தில் எடுத்துச் செல்லும். "என் ஜனங்களை விட்டு புறப்பட்டுப்போய்.....நீங்கள் சொன்னபடியே உங்கள் ஆடு, மாடுகளையும் ஓட்டிக்கொண்டு போங்கள்" என்று சொன்னபடி எகிப்தியரது தயவுகளுடனும், உதவியுடனும் தங்களுடைய ஆடு, மாடுகள் மற்றும் வஸ்துகளுடன் எகிப்தை விட்டு அவர்கள் துரிதமாய் புறப்பட்டார்கள். கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்ததினால் வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் பெற்றார்கள். (யாத் *12:31-36*) அந்தப்படியே அடுத்துவரும் குடியேற்றத்திலும், தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டபடியே, வெறுமையாய் வெளியே அனுப்பப்படாமல், அதற்கு பதிலாக இஸ்ரயேலுக்கு சாத்தியமாகும் வண்ணமயமான விளைவைக் கொடுக்கும் ஏதோ ஒரு அழுத்தம் ஜாதிகளின் மீது சுமத்தப்படுவது நிச்சயமான ஒன்று, இப்படியாக எசேக்கியே-ல் மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

இந்தத் துணிச்சலான ஓட்டம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட

தேசத்தில் ஒரு முறை மறுபடியும் நிர்மாணிக்கப்பட்டது. இப்படியாக குறைந்த பட்சம் ஒரு காலகட்டம் வரைக்கும், வெகு சாதாரணமாய் எல்லா இடத்திலும் நிலவிரும் தேசத்தின் துன்பங்களி-ருந்து விடுபட்டு, வெகுசீக்கிரத்தில் புதியதொரு சூழ்நிலையை ஏற்றுக் கொள்ளும். இதுவரையில் பாழாய் கிடந்த தேசமானது மறுபடியும் மக்கள் வசிக்கும் இடமாக மாறும்.

ஆனால், இன்னமும் ஒரு துன்ப அலையானது அந்த தண்டிக்கப்பட்ட மக்களின் மீது வர வேண்டியிருக்கிறது. இந்த மகா நாளின் யுத்தத்தினுடைய கடைசி போர் பாலஸ்தீன தேசத்தில் இருக்கும். இந்த உபத்திரவ நாளின் முடிவின் அருகாமையில் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்ட இஸ்ரயே-ன் தற்போதுள்ள செழுமையும், நேர்த்தியும் அத்தோடு கூட அவர்களது வெளிப்படையான பாதுகாப்பற்ற நிலையும், விரைவில் பிற ஜனங்களின் பொறாமையைத் தூண்டி அவர்களது சூரையாடலை வருவித்துக் கொள்ளும். மேலும், சட்டமும், ஒழுங்கும் இஸ்ரயேலை அலைக்கழித்த பிறகு, கோகு, மாகோகின் சேனைகள் என்று தீர்க்கதரிசிகளால் பெயரிடப்பட்ட, இரக்கமற்ற கொள்ளையர்களால் முடிவில் முற்றுகையிடப்படும். *(எசே 38)* பாதுகாப்பற்ற இஸ்ரயே-ன் இந்த துன்பம் மிகப் பெரியதாக இருக்கும். எரேமியா தீர்க்கதரிசி கூறுகிறார்: *"ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப் போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும், அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்." எரே 30:7*

கோகு, மாகோகின் சேனைகள் ஒருவனாக வர்ணிக்கப்பட்டு கூறுவதாவது. *"நான் மதில்களில்லாமல் கிடக்கிற கிராமங்களுள்ள தேசத்துக்கு விரோதமாக போவேன்; நிர்விசாரமாய்ச் சுகத்தோடே குடியிருக்கிறவர்களின் மேல் வருவேன்; அவர்கள் எல்லோரும் மதில்கள் இல்லாமல் குடியிருக்கிறார்கள்; அவர்களுக்கு தாழ்ப்பாளும் இல்லை, கதவுகளும் இல்லை."* தீர்க்கதரிசி மேலும் கூறுகிறார்: *"நீ கொள்ளையிட அல்லவோ வருவாய், நீ சூறையாடி வெள்ளியையும், பொன்னையும் ஆஸ்தியையும் எடுத்துக்கொள்வதற்கும், ஆடுகளையும், மாடுகளையும் பிடிக்கிறதற்கும் அல்லவோ உன்னுடைய கூட்டத்தைக் கூட்டினாய்." (எசே 38 : 11-13)* இந்த



சேனைகள் சொல்வதைப் போல் இந்த சம்பவங்களை தீர்க்கதரிசி முன்னுரைத்து சொல்கிறார். *"நீயும் உன்னுடனே கூடத் திரளான ஜனங்களும் வடதிசையிலுள்ள (ஐரோப்பா, ஆசியா அல்லது பாலஸ்தீனத்தின் வடபகுதி) உன் ஸ்தானத்தி-ருந்து வருவீர்கள்; அவர்கள் பெரிய கூட்டமும், திரளான சேனையுமாயிருந்து, எல்லோரும் குதிரைகளின் மேல் ஏறுகிறவர்களாயிருப்பார்கள். நீ தேசத்தைக் கார்மேகம் போல் மூட, என் ஜனமாகிய இஸ்ரயேலுக்கு விரோதமாக எழும்பி வருவாய்; கடைசி நாட்களில் இது சம்பவிக்கும்; (உபத்திரவத்தின் நாளின் கடைசி கட்டம்) கோகே, ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உன் மூலமாய் நான் பரிசுத்தர் என்று விளங்கப்படுகிறதினால், அவர்கள் என்னை அறியும்படிக்கு உன்னை என் தேசத்துக்கு விரோதமாக வரப்பண்ணுவேன்." எசே 38:15,16*

இந்த உபத்திரவத்தின் நடுவில், பூரண நாட்களில் தமது அக்கரை அவர்கள் தேசமனைத்திலும் இருந்தது போலவே, தேவன் தாமே இஸ்ரயேலரின் பாதுகாவலர் என்பதை வெளிப்படுத்துவார். அவர்களது மீறுதல்கள் அவருக்கு தக்க சமயமாய் இருக்கும். மேலும், அங்கே அவர்களது குருட்டாட்டம் நீக்கப்படும். நாம் வாசிப்பதாவது: *"எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ண சகல ஜாதிகளையும் (கோகு, மகோகுவின் சேனைகளாய் குறிப்பிட்டவை) கூட்டுவேன்; நகரம் பிடிக்கப்படும்; வீடுகள் கொள்ளையாகும்; ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்; நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைபட்டுப் போவார்கள்; மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டு போவதில்லை. கர்த்தர் புறப்பட்டு, யுத்த நாளிலே போராடுவது போல் அந்த ஜாதிகளோடே போராடுவார்." (சக 14:2,3)* ஏசாயா *28:21*லும் இதே விஷயத்தைக் குறிப்பிடுகிறார். கர்த்தர் இஸ்ரயேலை, பெ-ஸ்தரிடமிருந்து பெராத்சீமிலும், எமோரியரிடமிருந்து கிபியோனிலும் விடுவிக்கும் சந்தர்ப்பங்களில் கூறுவதாவது: *"அவர் பெராத்சீம் மலையிலே எழும்பினது போல எழும்பி, கிபியோனின் பள்ளத்தாக்கில் கோபம் கொண்டது போல் கோபங்கொள்வார்." (2 சாமு 5:19-25; 1நாளா 14:10-17; யோசு 10:10-15 ஐப் பார்க்கவும்).* இதில் தேவன் மனிதத் திறமைகளையோ அல்லது படைத்தலைமையையோ சார்ந்திராமல், தமது யுத்தத்தை தமது

வழக்கப்படியே நடத்தியிருக்கிறார். எனவே அப்படியே இந்த மாபெரும் யுத்தத்திலும் தேவன் தமக்கு விருப்பமான நேரத்தில் தமது வழியில் விடுதலையைக் கொண்டு வருவார்.

எசேக்கியே-ன் (38:1-13) தீர்க்கதரிசனத்தில் கர்த்தர், பாலஸ்தீன போராட்டத்தின் முக்கிய கதாபாத்திரங்களைக் குறிப்பிடுகிறார். ஆனால், நமது விளக்கத்தில் நாம் அவ்வளவு நிச்சயமாய் இல்லாமல் இருக்கலாம். மாகோகு, மேசேக், தூபால், கோமேர், தோகர்மா, யாவான், தர்ஷீஸ் ஆகியவை நோவாவின் குமாரனாகிய யாபேத்தின் பிள்ளைகளுடைய பெயர்களாயிருந்தன. இவர்களே ஐரோப்பாவில் ஆரம்பகாலத்தில் குடியேறியவர்கள் என எண்ணப்படுகின்றனர். சேபா மற்றும் திதான் என்பவர்கள் நோவாவின் குமாரன் காமின் சந்ததியாராக இருந்தனர். இவர்களே ஆப்பிரிக்காவின் வடபகுதிகளில் ஆரம்பகாலத்தில் குடியேறியவர்கள் என கருதப்படுகின்றனர். ஆபிரகாமும் அவரது பின் சந்ததியாரும் (இஸ்ரயேல்) நோவாவின் குமாரர் சேமின் குமாரர்கள், இவர்கள் ஆர்மீனியா மற்றும் மேற்கு ஆசிய நாடுகளில் குடியேறியவர்கள் எனவும் கருதப்படுகிறது. (ஆதி 10:2-13 ஐப் பார்க்கவும்) எனவே, தாக்குதலானது ஐரோப்பாவின் வடபகுதியி-ருந்து, பலதரப்பட்ட ஜனங்களின் கூட்டாக வரும் என்று ஒரு பொதுப்படையான வகையில் சுட்டிக்காட்டுவது போல் இது காணப்படுகிறது.

இஸ்ரயேலரின் எதிரிகளை மூழ்கடிக்கும் அழிவானது (உபத்திர காலத்தின் முடிவும் தேவனுடைய ராஜ்ய நிர்மாணத்துக்குரிய காலமும்) தீர்க்கதரிசி (எசே 38:18 முதல் 39:20 வரை) எசேக்கியேலால் வரைபடத்தைப் போல் விளக்கப்பட்டிருக்கிறது. தேவன் விடுவித்த இஸ்ரயேலை மறுபடியும் கைப்பற்ற முயற்சி செய்த பார்வோனையும் அவரது சேனைகளையும் பயங்கரமாக அழித்துப் போட்டதோடுதான் இதை ஒப்பிட்டுப் பார்க்க முடியும். இந்த குறிப்பிட்ட விஷயத்திலும் கூட இஸ்ரயே-ன் மீட்பானது "எகிப்து தேசத்தி-ருந்து புறப்பட்ட நாளில்" நடந்தது போலவே அதிசயமான காரியங்களாக இருக்கும். மீகா 7:15

இந்த சேனை வடபகுதியி-ருந்து இஸ்ரயேலுக்கு (பின்



நாட்களில் பாலஸ்தீனாவில் கூட்டிச் சேர்க்கப்பட்டு ஆஸ்திகளை சம்பாதித்து, சுகமாய், சமாதானமாய் குடியிருக்கும்) எதிராக திடீரென்று தேசத்தின் மேல் கார்மேகம் மூடுவது போல (எசே 38:1-17) வருவதை விவரிக்கும் போது, அதில் இருக்கும் செய்தி என்னவெனில், "உன்னை அவர்களுக்கு விரோதமாக வரப்பண்ணுவேன் என்று பூர்வ நாட்களிலே அநேக வருஷகாலமாய் தீர்க்க தரிசனம் உரைத்து, இஸ்ரயே-ன் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரைக் கொண்டு அந்நாட்களிலே நான் குறித்துச் சொன்னவன் நீ அல்லவோ? என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார்." பின்பு துன்மார்க்க சேனையின் மீதான தமது நாசவேலையை கர்த்தர் அறிவிக்கிறார். பிறகு பல்வேறு சக்திகள் ஒன்றுபட்டு உருவாகும் மாபெரும் கூட்டு சேனையினிடையே ஏற்படும் பொறாமை, புரட்சி மற்றும் அராஜகத்தின் மூலமாய் இது நிறைவேற்றப்படும் என்பதை இந்த விளக்கங்கள் குறிப்பிடுகின்றன. வெளிப்படுத்துத-ல் கூறப்பட்டுள்ள அந்த மாபெரும் பூமியதிர்ச்சியாகிய புரட்சியும், கலகமும் இன்னமும் மீதம் உள்ள பல்வேறு ஜனங்கள் அடங்கிய உள்நாட்டு அரசாங்கங்களுடன் சேர்ந்துகொண்டு உலகளாவிய அராஜகத்தையும், கலகத்தையும் முடிவுக்குக் கொண்டுவரும். (வெளி 16:18-21)

தேவன் இஸ்ரயேலருக்காகச் செய்யப்போகும் யுத்தத்தினால் (அதேசமயம் எல்லோருக்காகவும்) கொள்ளை நோய் மற்றும் பல்வேறு பேராபத்துக்களையும் சேர்த்து, எந்த மானிட சக்தியும் தடுக்க முடியாத ஆயுதங்களை, வஞ்சகர் மீது (இஸ்ரயேலரின் பகையாளிகளும், தேவனுக்கு எதிராளிகளும்) கர்த்தர் இஸ்ரயேலரை மறுபடியும் தனக்கு பிரியமானவர்களாக ஏற்றுக் கொண்டார், முற்காலத்தைப் போலவே, அவர்களுடைய இராஜாவாகுவார் என்று விரைவாக உலகம் முழுவதும் அறிந்துக்கொள்ளும் வகையில், ஊற்றுவார். அத்தோடு கூட அவர்களும் இஸ்ரயேலரும் தேவனுடைய ராஜ்யத்தை மேன்மையாய் உணர ஆரம்பித்த உடனேயே, இதுவே எல்லா ஜாதிகளாலும் விரும்பப்பட்ட ஒன்றாக விரைவாய் மாறிவிடும். இப்படியாக இஸ்ரயேலரின் மீட்பில் தேவனுடைய வல்லமை அதி அற்புதமாய் வெளியாகும் என்பதே எல்லா தீர்க்கதரிசனங்களின் சாட்சியாகும்.

தீர்க்கதரிசி எசேக்கியேல் *(39:21-29)* கர்த்தருடைய பிரதிநிதியாக நின்று, இந்த வெற்றியின் மகிமையையும் அதன் விளைவையும் இஸ்ரயேலுக்கும், உலகமனைத்துக்கும் கூறுகிறார். அவர் சொல்வதாவது:

"இவ்விதமாய் என் மகிமையை நான் புறஜாதிகளுக்குள்ளே விளங்கப்பண்ணுவேன்; நான் செய்த என் நியாயத்தையும் அவர்கள் மேல் நான் வைத்த என் கையையும் எல்லா ஜாதிகளும் காண்பார்கள். அன்று முதல் என்றும் நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று இஸ்ரயேல் வம்சத்தார் அறிந்துக்கொள்வார்கள். இஸ்ரயேல் வம்சத்தார் தங்கள் அக்கிரமத்தினிமித்தமே சிறைபட்டுப் போனார்கள் என்று அப்பொழுது புறஜாதிகள் அறிந்து கொள்வார்கள்; அவர்கள் எனக்கு விரோதமாய் துரோகம் பண்ணினபடியால், (கிறிஸ்துவை மறுத-த்து தள்ளியதால் ரோ 9:29-33) என் முகத்தை நான் அவர்களுக்கு மறைத்து, அவர்கள் சத்துருக்களின் கையில் (கிறிஸ்தவ கால கட்டத்தின் நூற்றாண்டுகள் முழுவதுமாயும், அதற்கு மேலும்) அவர்களை ஒப்புக் கொடுத்தேன்; அவர்கள் அனைவரும் பட்டயத்தால் விழுந்தார்கள். அவர்களுடைய அசுத்தத்துக்குத் தக்கதாகவும், அவர்களுடைய மீறுதல்களுக்குத் தக்கதாகவும், நான் அவர்களுக்குச் செய்து, என் முகத்தை அவர்களுக்கு மறைத்தேன்."

"ஆதலால், (தண்டனை தற்போது முடிவு பெற்றுவிட்டபடியால்) கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறது என்னவென்றால், அவர்கள் தங்கள் அவமானத்தையும், பயன்படுத்துவார் இல்லாமல், தாங்கள் சுகமாய்த் தங்கள் தேசத்தில் குடியிருக்கும் போது எனக்கு விரோமாய் தாங்கள் செய்த எல்லா துரோகத்தையும் சுமந்து தீர்த்த பின்பு, நான் யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பி, இஸ்ரயேல் வம்சமனைத்துக்கும் இரங்கி (உயிரோடு இருப்பவரும், மரித்தவரும் மறுசீரமைப்பின் காலம் வந்துவிட்ட படியினால் அப் 3:19-21) என் பரிசுத்த நாமத்துக்காக வைராக்கியமாயிருப்பேன். நான் அவர்களை ஜனசதளங்களி-ருந்து திரும்பி வரப்பண்ணி, அவர்களுடைய பகைஞரின் தேசங்களி-ருந்து அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து, திரளான ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக அவர்களுக்குள் நான் பரிசுத்தர் என்று விளங்கும் போது, தங்களை புறஜாதிகளிடத்தில் சிறைபட்டுப் போக பண்ணின நான் தங்களில் ஒருவரையும் அங்கே அப்புறம் வைக்காமல், தங்களைத் தங்கள் சுயதேசத்திலே திரும்பக் கூட்டிக் கொண்டு வந்தேன் என்பதினால், நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அறிந்துக் கொள்வார்கள். நான் இஸ்ரயேல் வம்சத்தார் மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கின்றார் என்றார்." "அப்பொழுது சூரியன் அஸ்தமிக்கும் திசை தொடங்கி கர்த்தரின் நாமத்துக்கும், சூரியன் உதிக்குந்திசை தொடங்கி அவருடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்; வெள்ளம் போல் சத்துரு வரும் போது, கர்த்தருடைய ஆவியானவர் (சுவிசேஷ யுகம் முழுவதிலும், ஆவிக்குரிய இஸ்ரயே-ன் கையில்) அவனுக்கு விரோதமாய் கொடியேற்றுவார். மீட்பர் சீயோனுக்கும், (சபையாகிய கிறிஸ்துவின் சரீரம்) யாக்கோபிலே மீறுதலை விட்டுத் திரும்புகிறவர்களுக்கும், வருவார் என்று கர்த்தர் சொல்கிறார்." ஏசா *59:19,20;* ரோம *11:25-32* ஐ ஒப்பிடவும்.

"கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; நம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்." ஆனால் "அவருடைய கோபத்துக்கு முன்பாக நிற்பவன் யார்? அவருடைய உக்கிர கோபத்திலே தரிப்பவன் யார்?...... அவர் சர்வ சங்காரம் (அநியாயத்தை) பண்ணுவார்; இடுக்கம் மறுபடியும் உண்டாகாது." நாகூ *1:7,6,9*

இப்படியாக சர்வ வல்ல தேவனின் மகா நாளின் யுத்தம் இந்த உலகமனைத்தையும் புதிய நாளுக்காகவும், அதனுடைய மாபெரும் புதுப்பிக்கும் வேலைக்காகவும் ஆயத்தமாக்கும். விடிய-ன் அந்த நேரமானது மப்பும், காரிருளும் நிறைந்த ஒன்றாக இருந்தபோதும், அழிவுக்குரிய அந்த கிரியையானது குறைக்கப்படும் என்ற அவரது ஆசீர்வாதமான வாக்குத்தத்தத்துக்காக தேவனுக்கே ஸ்தோத்திரம். *(மத் 24:22)* மேலும் அதற்கு அடுத்து சடுதியாய் மகிமையான நீதியின் சூரியன் பிரகாசிக்க ஆரம்பிக்கும். "பூமியானது (தற்போதைய பழமையான சமூக அமைப்புகள்) ........ ஒரு குடிலைப் போல பெயர்த்துப் போடப்படும்." (ஏசா 24:19,20) இப்படியாய் நீதிவாசமாயிருக்கிற "புதிய வானத்தையும், புதிய பூமியையும்" நிர்மாணிக்க தேவனுக்கு வழியை ஆயத்தம் செய்யும். 2 பேது *3:13;* ஏசா *65:17*

முன்னமே குறிப்பிடப்பட்டவைகள் எல்லாம் அடையாளமாய் இருக்கின்றபடியால், ஒரு பழைய / முந்தைய என்.ஒய். ட்ரிபியூனில் (ஜூன் 26, 1897) ஒரு குறிப்பிட்ட பகுதி ஒரு கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது நமது கவனத்திற்கு வந்தது. அது தற்போது தயாராகிக் கொண்டிருக்கும் கர்த்தரின் வல்லமையான சேனைக்கு அத்தனை முழுமையாய் இசைந்து போகிறது. அதன் சாராம்சத்தை நாம் கீழே அளிக்கிறோம்:

**"கீரிடமா அல்லது ஜனங்களா? என்று ஐரோப்பாவின் சேனைகள் சிலவற்றைத் தெரிந்துக் கொள்ளும்படியாக விரைவில் வரும் எதிர்காலத்தில் கேட்கப்படலாம்**

"நாற்பது வருடங்களுக்கு முன்பும் கூட, படைகள் தங்களுடைய மன்னர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தங்களுடைய துப்பாக்கிகளை ஜனங்கள் மீது திருப்பி, ஆண், பெண் மற்றும் சிறுவர்களைக் கூட பெர்-ன், வியன்னா மற்றும் பண்டைய உலகத்தின் அநேக தலைநகரங்களில் இரத்தம் ஆறாக தெருக்களில் ஓடும் அளவிற்கு சுட்டுக் கொன்றனர். இப்படியாக இராணுவம் கையாளும்படி அழைக்கப்பட்டது, உழைக்கும், நாடோடிகளான வெறும் ஒரு கும்பலுக்கு எதிராக மட்டுன்றி, வசதி படைத்தவர் மற்றும் உயர் கல்வியாளராகிய குடிமக்களும், உத்தியோகஸ்தர், வியாபாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் சட்டசபை அங்கத்தினர் மீதுதான். உண்மையில் பழமை உலகத்தால் "பூர்ஷ்வா" என்று அழைக்கப்பட்ட நடுத்தவர வகுப்பினர் மீது தான். இவர்கள் தங்களது மதிப்பிற்குரிய ஆட்சியாளர்களின் அரசியல் சட்டத்தின் பெயரால் தங்களுக்கு முறைப்படி வாக்களிக்கப்பட்ட அரசியல் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக விடா முயற்சி செய்தார்கள். ஆனால் இது பிற்காலங்களில் மக்களால் கட்டாயபடுத்தப்படும் அளவிற்கு தாழ்ந்துவிட்டது.

**"இத்தா-யில் யுத்த முனைக்குக் கொண்டு வரப்பட்டது**

"தங்களுடைய சக தேசத்தாரின் மீது தாக்குதல் நடத்தும்படி இன்று படைகளை ஒன்று கூட்டி அழைத்தால், 'கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவரின்' கட்டளைக்கு அதேவிதமான கீழ்ப்படிதலைக் காட்டுமா? இந்த நிமிஷத்தில் இந்த நாட்டில் ஜனத்தொகையை விட



அதிக அளவில் ஒரு கேள்வி நிரம்பியிருக்கிறது. இது ஐரோப்பாவின் முடிசூட்டப்பட்டவர்களது கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு இருக்கக்கூடுமோ? மேலும் இராணுவத்தின் அங்கீகரிக்கப்பட்ட வார்த்தைகளில், 'ராஜரீகம்' என்ற பதத்துக்கு பதிலாக 'தேசீயம்' என்ற வார்த்தையை அளிக்கும்படி, இத்தா-ய பாராளுமன்றத்துக்கு ஒரு தீர்மானத்தின் மூலமாய் பகிரங்கமாக மக்கள் முன்னிலையில் சில நாட்களுக்கு முன் அது சமர்ப்பிக்கப்பட்டது. தீர்மானத்தின் சர்ச்சைக்குரிய விவாதங்கள் இதன் ஆதரவாளர்களால் வைக்கப்பட்டது. ஆனால் கடைசியில் இது சட்டசபையில் பெரும்பான்மையுள்ள மினிஸ்டீரியல் கட்சியினால் தோற்கடிக்கப்பட்டது. அது சக்தி வாய்ந்ததாக, இத்தா-ய மக்களைக் கவருவதற்கு தவறிவிட முடியாததும், அதோடு ஹம்பர்ட் மன்னர் மற்றும் அரியாசனத்துக்குரிய அவரது சகோதர சகோதரிகளுக்கு பாதிப்பை உண்டாக்குவதற்கான மிகத்தீவிரமான ஆதாரத்தை உத்தரவாதமளிக்கும்படியானதாகவும் அது இருக்கிறது."

*(இந்த கட்டுரை குறிப்பிடுவது என்னவெனில், எந்த விசேஷ கிளர்ச்சியுமின்றி, ஆங்கிலேய இராணுவத்தின் அதிகாரமானது இராணுவ மந்திரியால் சொல்லப்பட்டபடி பாராளுமன்றத்துக்கு மூன்று வருட சட்ட நடவடிக்கைக்குள் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால், இதற்கு முன்னால் இராணுவமானது, இளவரசரின் கீழ் இருந்த காரணத்தினால், மன்னருடன் நேரடியாய் பிணைக்கப்பட்டிருந்தது. இவர் மகாராணியின் பிரதிநிதியாக தனது அலுவலகத்தை நடத்தி வந்தவர். இந்த முடியாட்சியின் மீதமுள்ள ஆதாரத்தை ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமாவது தக்க வைத்துக் கொள்வதற்கு மகாராணி முயற்சி செய்ததாகத் தோன்றுகிறது. ஆனால், அது உபயோகமற்றதாகப் போனது. பிரான்சு நாட்டிலும் கூட இராணுவத்தை மக்கள் கட்டுப்படுத்துவதில் இருந்த வைராக்கியம் தளபதி ஒருவர் சேனாதிபதியாக அமர்த்தப்பட்டதை நிராகரித்ததன் மூலம் காண்பிக்கப்பட்டது. அத்தோடு கூட கட்டுப்பாடானது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட போர் காரியதரிசியின் கைகளில் கொடுக்கப்பட்டது. இவர் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்துபவர். இப்படியாக இந்த கட்டுரை தொடர்கிறது.)*

## ஜெர்மனியில் நேரிடக் காத்திருக்கும் ஒரு போராட்டம்

"இப்படிப்பட்டதொரு போராட்டம் இத்தா-யில் நடக்கப்போகிறது என்று இனியும் கருதமுடியாது. ஆனால், ஜெர்மனியில் இதே போன்ற ஏதோ ஒன்றுக்காக அச்சப்பட வேண்டியிருப்பதை மறுக்க முடியாது. அதுவும், விசேஷமாய் புரூஷியாவில், மன்னரும், மக்களும் தினந்தோறும் மேலும் வெவ்வேறு திசையில் தூரமாய் விலகிக் கொண்டிருக்கின்றனர். தன்னுடைய படைகளிடம் உரை நடத்தும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இப்படிப்பட்டதொரு போராட்டம் எதிர்பார்க்கப்படுகிறது என்பதை பேரரசர் வில்-யமின் பேச்சில் தெளிவாக தெரிகிறது. குறிப்பாக, கடந்தவாரம் பிலஃபெல்டில் பேசியபோது தெரிந்தது. தங்களுடைய உயிரைப் பணயமாக வைத்து, இராஜங்கம் அல்லது சாம்ராஜ்யத்தில் எல்லைப் புற விரோதிகள் மற்றும் வெளிநாட்டு பகைவருக்கு எதிராக தற்காப்பு செய்வதைக் காட்டிலும் மாமன்னரையும், அவரது அரியாசனத்தையும், பாதுகாக்கவே ஒரு ராணுவ வீரன் தயாராக இருக்கவேண்டியது அவனது கடமை என்று கூறுவதே மன்னருக்கு மிகவும் பிரியமான பேச்சு. புதியதாகப் பணிக்கு அமர்த்தப்படுபவர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் விழாவினைத் தலைமை வகிக்கும் போது, தங்களுக்கு ஊதியம் அளிக்கும் பொதுமக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை விட, தனக்கு அவர்கள் கடமை ஆற்றுவதே முதன்மையானது என்பதை நினைப்பூட்ட அவர் தவறியதே இல்லை. அத்தோடு ராஜ உடை என்பதைக் குறித்து விவரிக்க அவர் ச-ப்படைந்ததே இல்லை. இந்த சீருடையை மற்ற பேரரசர்களைப் போலவே தானும் ஒரு சிறப்பு பிரத்தியோக உடையான ஒன்றாக மதிப்பளிப்பதற்குத் தெரிந்து கொண்டது எதற்கெனில், ராஜவிசுவாசம், உண்மை மற்றும் கண்மூடித்தனமான கீழ்ப்படிதல் போன்றவைகளை அந்த விசேஷ உடையை அணிபவர் அரசாங்கத்துக்கோ அல்லது தேசத்துக்கோ அல்லாமல் ஏகாதிபத்தியத்துக்கு கட்டுப்பட்டவராக இருக்க கடமைப்பட்டவர் என்பதற்காகவே ஆகும். பொதுமக்களுக்கும் இராணுவ வீரருக்கும் இடையே முரண்பாடுகள் மற்றும் பகை எழும்பும் சந்தர்ப்பங்களில் எல்லாம் பேரரசர் எப்போதுமே கலகத்துக்குக் காரணமான இராணுவத்தையே ஆதரிப்பார்



என்பதையும் மறந்துவிடக்கூடாது. மேலும் குடிபோதையில் இருக்கும் இராணுவ அதிகாரி குற்றமற்ற நிராயுதபாணியான குடிமக்களை படுமோசமாய் காயப்படுத்தும்போதும், சில நேரங்களில் கொலையும் செய்யும் போது அந்த குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரிகளுக்கு உண்மையில் எப்போதுமே குறைவான தண்டனையையோ அல்லது மன்னிப்போ தான் வழங்கப்பட்டது என்பதையும் மறக்கக்கூடாது."

## ஜெர்மானிய இராணுவத்தின் போக்கு

"மன்னருக்கும், மக்களுக்கும் இடையே எதிர்பார்க்கப்பட்ட போராட்டம் குறித்து இராணுவத்தின் போக்கு எப்படிப்பட்டதாக இருக்கக்கூடும்? மாமன்னர் தன்னுடைய படைகள் மீது நம்பிக்கை வைத்திருக்கக்கூடும் என்று பெர்-னில் இருக்கும் அரண்மனை மற்றும் அதிகாரிகளின் வட்டாரத்தில் நம்பப்பட்டது. ஆனால், இந்தக் கருத்து மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு வாய்ப்பே இல்லை. அத்தோடு அந்நாட்களில் ஜெர்மனியின் முன்னணி அரசியல்வாதிகளுக்கும் இதில் உடன்பாடு இல்லை. பண்டைய நாட்களைப் போல் எழுதவோ, படிக்கவோ அல்லது தங்களைப் பற்றிச் சிந்திக்கவோ கூட இயலாத அறியாமையுடைய பட்டிக்காட்டு ஜனங்களால், இராணுவத்தின் பதவிகளும், பொறுப்புகளும் இனிமேலும் வகிக்கப்படாமல், அதற்குப் பதிலாக வீணாய் தங்களது தகப்பன்மாரும், பாட்டனாரும் பலனின்றி போராடியவைகளான உரிமைகள் மற்றும் சட்டப்படியான தனிப்பட்ட விசேஷ உரிமைகளைப் பற்றி பள்ளியில் நன்கு பயிற்று விக்கப்பட்டவர்களாகிய நல்ல கல்வியாளரும், சிந்திக்கக் கூடியவர்களும் நிறைந்த ஒன்றாய் இருக்கும். மன்னருக்கும் மக்களுக்கும் இடையேயான ஒவ்வொரு போராட்டத்திலும், மக்களே ஜெயம் கொள்ளும்படியாக தான் முடிந்திருக்கிறது என்ற உண்மையை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்."

### <u>தேவனுடைய கோபாக்கினை</u>

"தேவனுடைய கோபாக்கினை அன்பின் உக்கிரமே
பாவத்தை குணப்படுத்துவதில் - நீதியின் ஆர்வம்
அநியாயத்தை மேற்கொள்வதில் - நியாயத்தின்

பரிகாரம் யாவும் உலகத்தைப் பழுதுபார்க்கவே.

"தேவனுடைய கோபாக்கினை பாவத்துக்கான தண்டனை,
எல்லா மீறுதல்களுக்கும் நேரான ஒரு நடவடிக்கை,
அகந்தையான பாவங்கள் மற்றும் லேசாய் கண்டிக்கப்பட
வேண்டிய பாவங்கள்
இடையேயான சரியான மற்றும் நியாயமான சீர்தூக்கிப் பார்த்தல்.

"தேவனுடைய கோபாக்கினை அவசியமற்ற வேதனையை சுமத்தாது வெறும் பழிவாங்கவோ அல்லது தம்மைத் திருப்திபடுத்திக் கொள்ளவோ அல்ல ; ஆனால் கிருபை பெறவேண்டும் என்ற முடிவை இலட்சியமாய் நினைத்து, தீமையை வேரறுத்து நலமானதை விருத்தியாக்கும்.

"தேவனுடைய கோபாக்கினையானது பட்சிக்கும் அக்கினி,
அழிக்கும்படியான தீமைகள் வரும்போது அல்லது புனிதப்படுத்த
நன்மை வரும்போது
சுட்டெரிக்கும்; பாவத்தின் கலப்பி-ருந்து
எல்லா காரியங்களும் விடுவிக்கப்படும் வரை ஓயாது.

"தேவனுடைய கோபாக்கினையானது அன்பின் பெற்றோர் கை பிரம்பு,
கீழ்படியாதவரை தண்டிக்கவும் வெல்லவும், அதோடு
தேவனுடைய சித்தத்துக்குப் பணிவுடன் வளைந்து கொடுக்கும்,
அந்த அன்பே எல்லாக் காரியங்களும் புதிதாக்கப்படும் போது ஆளுகை செய்யும்.

"தேவனுடைய அன்பு வீணிலே என்றும் தாக்காது,
பாவம் என்பதே இனி இல்லை என்னும் வரை ஓயாது,
தேவனுடைய கிருபையுள்ள நோக்கங்களை அடையும் வரையும்,
நீதியும் சாமாதானமும் பூமியில் திரும்பவும் கொண்டுவரப்படும்
வரையும் ஓயாது."

*அ அ*

## *அத்தியாயம் 12*

# நமது கர்த்தரின் மாபெரும் தீர்க்கதரிசனம்

## *மத்தேயு 24; மாற்கு 13; லூக்கா 21:5-36; 17:20-37*

இந்தத் தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவம் - இதை முன் வைக்கும்படியான மூன்று கேள்விகளும், நிபந்தனைகளும் - கள்ள கிறிஸ்துக்களை குறித்து எச்சரிக்கையாய் இருங்கள் - 18 நூற்றாண்டுகளைப் பற்றிய சுருக்கமான சரித்திரபூர்வமான முன்குறிப்பு - எல்லா சுவிசேஷகர்களுடைய பாஷையில் கலந்திட்ட, யூத யுக மற்றும் சுவிசேஷ யுக முடிவின் கால உபத்திரவம் - பாழாக்கும் அருவருப்பு-மலைகளுக்கு ஓடிப்போங்கள் - பிள்ளைகளை உடையவர்கள் முதலானோர் - மாரிகாலத்துக்கும் ஒய்வு நாளுக்கும் முன்னதாக - இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொன்னால் நம்பாதிருங்கள் - அந்நாட்களின் உபத்திரவம் - அடையாளமாய் சூரியனும் சந்திரனும் இருளடைதல் - நட்சத்திரங்கள் விழுதல் - அடையாளமான நிறைவேறுதலும் கூட - மனுஷ குமாரனுடைய அடையாளம் - பூமியின் கோத்திரத்தார் எதை காண்பர் - அத்திமரம் - "இந்த சந்ததியார்" - விழித்திருங்கள்! - "நோவாவின் நாட்களில் இருந்தது போல அவர்கள் எதையும் அறியமாட்டார்கள்" - லோத்தின் மனைவியை நினைவு கூறுங்கள் - ஒருவர் ஏற்றுக்கொள்ளப்பட்டு மற்றவர் கைவிடப்படுதல் - சத்தியத்துக்குள்ளாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுதல் - சாத்தானின் வீட்டார் உடைத்தெறியப்படுதல் - விசுவாச வீட்டாரை போஷிப்பதற்கான முன்னேற்பாடுகள்.

நமது கர்த்தர் - இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவை கடைசி காலம் என்று குறிப்பிட்டு, மிகவும் விசேஷமானதொரு தீர்க்கதரிசனத்தை கூறியிருக்கிறார். தமது உலகப்பிரகாரமான ஊழியத்தின் முடிவில், கல்வாரியின் சோகத்துக்குப் பின், முழுமையாய் கொண்டுவரப்போகும் புதிய உலகத்திற்கு படிப்படியாய் தனது சீஷரை தயார் படுத்த முயற்சி செய்து கொண்டிருந்த போது இதைக் கூறினார். தம்மிடம் உண்மையாய் இருப்பவர்கள் பெற்றுக் கொள்ளப்போகும் இவரது வாக்குத்தத்தங்களான ராஜ்யத்தின் கனம் மற்றும் மகிமைகளை இப்பொழுதே எதிர்பார்க்கக் கூடாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்று அவர் விரும்பினார். இந்த மகிமை மற்றும் ஆசீர்வாதங்களுக்கு முன் சோதனைகளும் பாடுகளும் வரவேண்டியிருக்கிறது. அவர்களது ஆண்டவராகிய ராஜா தீர்க்கத்தரிசன வார்த்தைகளுக்கு இசைவாக, இஸ்ரயேலரால் மறுத-க்கப்பட்டு, சிலுவையிலறையப்படவேண்டும். பின்பு இஸ்ரயேலர் அவர்களது பகைஞரின் கையில் ஒப்புவிக்கப்பட்டு, அவர்களது பரிசுத்த நகரமும், விலையேறப்பெற்ற ஆலயமும் முற்றிலுமாய் அழிக்கப்படவும் வேண்டும். அதுமட்டுமின்றி, அவரது சீஷர்கள் தங்களுடைய ஆண்டவருக்கும் மேலானவர்களாகும்படி எதிர்பார்க்காமல், அவர் மீது விழும் பாடுகள் மற்றும் நிந்தனைகளுக்குத் தப்பித்துக் கொள்ளாமல், அவரது நிமித்தமாய், அவருக்கும் அவரது போதனைகளுக்கும் உண்மையாய் இருப்பதனால் எல்லோராலும் அவர்கள் வெறுக்கப்படுவதற்குக் காணரமாகவும் இருக்கக்கூடும்; ஆனால் மிகுந்த உபத்திரவங்கள் இருப்பினும் முடிவில், மரணபரியந்தம் உண்மையுள்ளவர்கள் எவர்களோ - அவர்களைத் தன்னிடம் ஏற்றுக்கொண்டு, தனது மகிமையைப் பகிர்ந்து கொள்வதற்கு அவர் மறுபடியும் வருவார்.

தம்முடைய ஊழிய கால முடிவு பரியந்தம் இந்த முறையில் தான் நமது கர்த்தர் விசேஷமாய் போதனை செய்தார். ஆரம்பத்தில் சீஷர்கள் இதை ஆட்சேபிக்க முடிவு செய்து, தங்களுடைய உபதேசத்தின் பலனாய், கர்த்தருடைய காரியமே உலகை ஜெயிக்கவேண்டும் என்று (இன்று சிலர் செய்வதைப் போல்)



வற்புறுத்தினர்; பேதுரு "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது (மரணமும், அவரது ஜனங்கள் சிதறடிக்கப்படுதலும், பொதுவாய் பாவம் ஜெயம் கொள்ளுதலும்) உமக்கு சம்பவிப்பதில்லை" *(மத் 16:22; மாற் 8:31,32)* என்று கூறுவதன் மூலம் கர்த்தரிடம் தனது அபிப்பிராய பேதத்தைத் தெரிவிக்கிறார். ஆனால் நமது கர்த்தர் பேதுருவை கடுமையாகக் கண்டித்தார்; மேலும் இராஜ்யத்தின் மகிமை அனைத்தும் இன்னும் வெகுதூரத்தில் இருக்கின்றன. அத்தோடு தங்களை விட்டுப் பிரிந்து போகவேண்டும் என்பதையும் பிதாவின் ராஜ்யத்தின் மகிமையில் அவர் மறுபடியும் வரும் வரைக்கும் தங்களைப் பாதுகாத்து, வழிநடத்த தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை அனுப்பவேண்டியிருக்கிறது என்பதையும் புரிந்துகொள்ளும் நிலைமைக்கு எல்லா சீஷரும் படிப்படியாக வந்தனர்.

ஆலயத்தைக் குறித்த நமது ஆண்டவரின் கடைசி கூற்றில் அவர்களுடைய மனதின் நிலை இப்படியாக இருந்தது, அதாவது இவைகளைக்குறித்து கேட்டபோது, ஆண்டவரிடமிருந்து வந்த தீர்க்கமான பதில்கள் அவர்கள் மனதில் தெளிவாகாமல் இன்னும் காதுகளில் ஒ-த்துக்கொண்டிருந்தது.

## மூன்று கேள்விகள்

"பின்பு இயேசு ஒ-வமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து: இவைகள், ஆலயத்தின் அழிவு போன்றவை :

*(1) எப்போது சம்பவிக்கும்? (2) உம்முடைய (பரோஷியா என்ற கிரேக்கபதம் பிரசன்னம் என்று வழக்கமாய் குறிக்கும் வகையில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது) வருகைக்கும், (3) உலகத்தின் (யுகத்தின்) முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்." மத் 24:3*

சந்தேகமின்றி இந்த சந்தர்ப்பமும் கேள்வியும் தெய்வீக அருளானவைகள்; ஏனெனில் அந்தக் கேள்வியைக் கேட்டவர்களைக் காட்டிலும் நிச்சயமாக இந்த அறுவடை காலத்தில் வாழ்கின்ற தேவனுடைய பிள்ளைகளுக்குரிய அறிவுரையாக இந்த தீர்க்கதரிசனம்

இருக்கிறது. இந்த தீர்க்கத்தரிசனத்தை ஆராயும் போது இந்த கருத்தாழமிக்க பதிலுக்குக் காரணமான கேள்விகளை நினைவில் கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாய் இருக்கிறது. இந்த தீர்க்கதரிசனம் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா என்ற மூன்று சுவிசேஷகர்களினாலும் ஒரே மாதிரி கொடுக்கப்பட்டிருக்கிறது: ஆனால் மத்தேயுவின் சுவிசேஷம் முழுமையாகவும், ஒழுங்குடனும் இருப்பதனால் அதனுடைய விவரங்களையே பொதுவாய் நாம் பின்பற்றுவோம். மற்ற சுவிசேஷங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் திருத்தங்களையும் நாம் ஆராய்வோம்.

### கள்ளக் கிறிஸ்துக்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்

"ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு, நானே கிறிஸ்து என்று சொல்-, அநேகரை வஞ்சிப்பார்கள்." *மத் 24:4,5*

அப்5:36,37ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கமா-யேல் தனது உரையில் இந்த கள்ள கிறிஸ்துக்களில் இருவரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்; மேலும் யூதரில் சிலரை வஞ்சித்த அநேகரைக் குறித்தும் சரித்திரம் நமக்குச் சொல்கிறது. இவைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவொன்று - சிமிர்னாவைச் சேர்ந்த 'சபத்தாய் லேவி' என்பவன், கி.பி.1648ல் வெளியிட்ட அறிவிப்பு. இந்த 'சபத்தாய் லேவி' தன்னை, "தேவனுடைய முதற்பேரான குமாரன், மேசியா, இஸ்ரவே-ன் மீட்பர்" என்று அழைத்துக்கொண்டு, ராஜ்யத்தைத் திரும்பப் பெறுதலுக்கும் அதன் செழுமைக்கும் உறுதிமொழி கொடுத்தான். சபத்தாயின் (சிமிர்னாவில்) சீடர்களில் சிலர் தீர்க்கதரிசனம் சொல்-, விநோதமான பரவசத்துக்குள்ளாகி, நானூறு ஆணும் பெண்ணும் அவரது வளர்ந்துவரும் இராஜ்யத்தைக் குறித்துத் தீர்க்கதரிசனம் சொல்லும் அளவிற்கு அங்கு நிலைமை இருந்ததாக சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். அந்த ஜனங்கள், ஒரு சமயத்தில் ஆவிபிடித்தவர்களைப் போல் நடந்து கொண்டனர்; சிலர் நினைவிழந்து, வாயில் நுரைதள்ளி, தங்களுடைய எதிர்காலத்தின் வளங்களையும், யூத ராஜசிங்கத்தைக் குறித்த தங்களது காட்சிகளையும் சபத்தாயின் வெற்றியைக் குறித்தும் விவரித்தனர்.



இது யோயே-ன் தீர்க்கத்தரிசனத்தை (2:29) சாத்தான் பொய்யாய் நிறைவேற்றியது என்பதில் சந்தேகம் இல்லை. பரிசுத்த ஆவியை நிரூபிக்கும் போ-யான சம்பவங்களும் கூட மிக நவீன காலத்தின் எழுப்புதல் கூட்டங்களில் நடைபெறுகிறது. ஒட்டுமொத்தமாய் ஏறக்குறைய ஐம்பதுக்கும் மேற்பட்ட கள்ளக்கிறிஸ்துக்கள் - ஆணும் பெண்ணுமாய் சந்தேகமின்றி அதில் பலர் - அசுத்த ஆவியைப் பெற்று - புத்தி சுவாதீனம் அற்றவராவர். ஆனால் யாருமே அல்லது எல்லாரும் சேர்ந்தும் "அநேகர் வஞ்சித்தார்கள்" என்று சொல்வதற்கில்லை. ஆயினும் "அநேகரை வஞ்சித்தல்" என்பதைக் குறித்து கர்த்தர் நம்மை இங்கு மறுபடியும் எச்சரிக்கிறார். இதனோடு தொடர்புடைய அநேகரை வஞ்சித்த அந்திக்கிறிஸ்துவைக் குறிப்பாய் நாம் சோதித்தறியலாம்.

### பதினெட்டாம் நூற்றாண்டின் சரித்திரத்தைக் குறித்த சுருக்கமான முன்னறிவிப்பு

*- மத் 24:6 -13; மாற்கு 13:7-13; லூக் 21: 9 -19 -*

"யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் (மிரட்டல், சதியாலோசனைகள்) கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்." *மத் 24:6-8*

இப்படியாக உலக சரித்திரத்தை நமது கர்த்தர் சுருக்கமாய் தொகுத்துக் கூறியிருக்கிறார்; மேலும் தமது இரண்டாம் வருகையையும், மகிமையான ராஜ்யத்தையும் வெகு விரைவில் எதிர்பார்க்க வேண்டாம் என்றும் கர்த்தர் போதிக்கிறார். உலகத்தின் சரித்திரம் எத்தனை சரியாய், நிச்சயமாய் இதே விதமாய் இருக்கிறது - போர்கள், சதி ஆலோசனைகள், பஞ்சங்கள் மற்றும் கொள்ளை நோய்கள் - போன்ற இன்னும் சிலவற்றின் நிகழ்வுகளால் இது நிரூபணமாகிறது. உண்மை சபை மற்றும் அரசாங்கத்தின் சரித்திரத்தை வெவ்வேறாகப் பிரித்து, சுருக்கமாக கூறுகிறார். ஆகவே:

"அப்பொழுது (சுவிசேஷ யுகத்தின் அதே காலக்கட்டத்தின் போது) உங்களை உபத்திரங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலை செய்வார்கள்; என் நாமத்தின் நிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். அப்பொழுது, (அதே காலகட்டத்தில்) அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள். அநேக கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்." *மத் 24:9-13*

சரித்திரத்தின் வெளிச்சத்தில் சில வார்த்தைகளினால் தேவனுடைய உண்மை சபையின் செயல்பாட்டை விவரிப்பது சாத்தியமாகக் கூடுமா? நிச்சமாய் முடியாது. உவமையானது சரியான ஒன்றாக இருக்கும். "தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறயாவரும் துன்பப்படுவார்கள்" என்பது அப்போஸ்தலரின் அறிவிப்பு. எனவே இதில் பங்கு கொள்ளாத எவரும் தேவனுடைய பிள்ளை என்று சொல்லமுடியாது. (எபி 12:8) எனவே முழுமை பெற்ற ஒரு சபையாக, இஸ்மாயில் மற்றும் ஏசா வகுப்பாரால் துன்பப்படுத்தப்படாததற்கு உலகத்தின் ஆவியின் மிகுதியோ அல்லது கர்த்தரிடமும் அவரது சத்தியத்தின் மீதும் அன்பு தணிந்து போனதோ தான் காரணமாகும். இதனால் இவர்கள் சிட்சைக்குப் பாத்திரவான்கள் அல்லாமல் போகிறார்கள். ஆனால் இதே அளவின்படியும், நமது கர்த்தருடைய தீர்க்கத்தரிசனத்தின்படியும் நியாயம் தீர்க்கப்பட்டவர்கள், "ஒரு சிறுமந்தை" இந்த சுவிசேஷ யுகமுழுவதிலும், கடைசி வரை, மரணபரியந்தம் உண்மையாக இருந்திருக்கின்றனர்.

### உலகளாவிய - சுவிசேஷத்தின் சாட்சி

*- மத் 24:14; மாற் 13:10 -*

"ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோக மெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்."

யுகத்தின் முடிவு சீஷர்கள் எதிர்பார்த்ததை விட இன்னும் வெகுதூரத்தில் இருக்கிறது என்பதை நமது கர்த்தர் மறுபடியும் இங்கே தெளிவாய் காண்பித்திருக்கிறார்; அதாவது அவரது ராஜ்யத்தைக் குறித்த செய்தி, இஸ்ரயேலுக்கு மட்டுமன்றி, எல்லா ஜனங்களுக்கும் நற்செய்தியாக இருந்திருக்கவேண்டும். ஆனால் இஸ்ரயேல் நிராகரித்த இந்த சுவிசேஷத்தை மற்ற ஜாதிகள் ஏற்றுக்கொள்ளும் என்று இதற்கு அர்த்தமல்ல. மாறாக, இந்த உலகத்தின் தேவனானவன் இஸ்ரயேலரைக் குருடாக்கினது போலவே, பிற தேசங்களின் திரளான ஜனங்களை குருடாக்கி, அத்தோடு கிறிஸ்துவுக்குள் இருக்கும் தேவபெலனையும், தேவஞானத்தையும் - (1கொரி 1:24) அவர் கூறியுள்ளபடியே - அவர்கள் காணாதபடி குருடாக்கக்கூடும் என்பதை நாம் எதிர்பார்க்க வேண்டும். இஸ்ரயே-ல் மீதம் இருப்பவர் மட்டுமே (விசேஷமாய் நூற்றாண்டுகளாக பிரமாணத்தின் கீழ் வழிநடத்தப்பட்டவர்கள்) "ராஜரீக ஆசாரியத்துவத்துக்கு" தகுதியானவர்களாகக் காணப்பட்டார்கள். நீண்ட காலமாகவே "தேவன் அற்றவர்களும், நம்பிக்கையில்லாதவர்களுமாய்" இருந்த புறஜாதிகளிடத்தில் வேறு எதை நியாயமான முறையில் எதிர்பார்க்கக்கூடும்?



நமது கர்த்தருடைய வார்த்தைகளை நாம் மிகவும் ஜாக்கிரதையாய் கவனிப்பது நல்லது. அதாவது, சுவிசேஷமானது 'ஜனங்களை மனந்திருப்புவதற்காக' பிரசங்கிக்கப்படாமல், 'ஜனங்களுக்கு சாட்சியாக' இருக்கும்படியாகவே பிரசங்கிக்கப்பட வேண்டும்; அத்தோடு "தெரிந்து கொள்ளப்பட்டவர்களை," எல்லா ஜாதிகளி-ருந்தும் அழைத்து, பூரணப்படுத்தி, ஒன்று சேர்ப்பதற்காகவே பிரசங்கிக்கப்பட வேண்டும். அதன்பின்பு ராஜ்யமாக "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்," சுவிசேஷத்தைக் கேட்கமுடியாத செவிடான காதுகளையும், சத்திய ஒளியைக் காணமுடியாத குருடான அவர்களது கண்களையும் திறந்து, ஜாதிகளை ஆசீர்வதிப்பார்கள்.

இந்த சாட்சியானது ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது; கர்த்தருடைய வார்த்தையாகிய ராஜ்யத்தின் சுவிசேஷம் பூமியின் எல்லா தேசங்களிலும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தனிமனிதனும் இதை கேட்கவில்லை; ஆனால் தீர்க்கதரிசனத்தின் கூற்றும் அப்படி இல்லை. இது ஒரு தேசிய பிரகடனமாய் இருக்கவேண்டிய ஒன்று, அது அப்படியாகத் தான் இருந்திருக்கிறது.

மேலும் முடிவு வந்தாயிற்று, "அறுப்பு உலகத்தின் முடிவு" *(மத் 13:39)* என்று நமது கர்த்தர் விவரிக்கிறார். முன்கூட்டியே சொல்லப்பட்ட இந்தக் காரியம் நிறைவேறவேண்டுமா அல்லது நிறைவேறிவிட்டதா என்ற கேள்வியை சிலர் கேட்கின்றனர், ஏனெனில் "ராஜ்யத்தின் நற்செய்திகள்" என்று நமது கர்த்தரால் விசேஷமாய் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கும் நற்செய்தியைக் குறித்து பொதுவாகவே சிறிதேனும் அறியாதவர்களே - புறஜாதிகளுடைய பூமியில் மிஷினரிகளாய் போயிருக்கிறார்கள். ஆனால் அச்சிடப்பட்ட சுவிசேஷங்களான மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியவை - நாம் பெற்றிருக்கும் வண்ணமாகவே, ராஜ்யத்தின் நற்செய்தியானது அவர்களுக்கும் பூரணமாய் கிடைத்திருக்கிறது - என்பதே நமது பதில்.

இவ்வாறாக பதினெட்டு நூற்றாண்டுகளாக தமது சபையின் மீதான சோதனைகள் மற்றும் உபத்திரவங்களையும் எல்லா தேசங்களுக்கும் வெற்றிகரமாய் சாட்சி கூறுவதில் அவர்களது பாடுகளின் பலன் குறித்தும் நமது கர்த்தர் சுருக்கமாய் தொகுத்தளித்திருக்கிறார்; அத்தோடு அவரது இரண்டாம் வருகையின் காரியத்தையும் நேரத்தையும் ஜீவிப்பவர்கள் எப்படி அறிந்து கொள்ளக்கூடும் என்பதைக் குறித்த முக்கியமான கேள்விக்கான பதில் மீது தீவிரம் காட்டுவதும் கூறப்பட்டுள்ளது. எப்போது ஆலயம் இடிக்கப்படும் என்பதைக் குறித்த கேள்வியை அவர்கள் தமது இரண்டாம் வருகையின் சம்பவத்துடன் இணைத்து விடக் கூடாது என்பதற்காக அவர் புறக்கணித்தார்; மேலும் ஆட்சி கவிழ்க்கப்பட்டதால் மாம்சீக இஸ்ரயே-ன் மீதான உபத்திரவத்தை இந்த யுகத்தின் முடிவில், ஆவிக்குரிய இஸ்ரயே-ன் உபத்திரவத்தோடு நிழலும், நிஜமுமாக இணைப்பதில் அவர் அதிக விருப்பமுள்ளவராய் இருப்பதும் ஒரு காரணம்.

சுவிசேஷகர்களால் அறியப்படாத ஒன்றாக இருப்பினும், தேவனுடைய பட்சத்தில் இது மிகவும் தெளிவானதொரு நோக்கமாயிருந்தது - அதாவது இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாய் - நமது கர்த்தருடைய தீர்க்கத்தரிசனத்தில் இந்த காரியம் பிரித்து, கொடுக்கப்பட்டிருக்கிறது; நிழலான இஸ்ரயே-ன் நிழலான அறுவடையில் நிழலான உபத்திரவத்துக்கான ஒரு குறிப்பு இங்கேயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவமண்டலமாகிய நிஜப் பொருளான இஸ்ரயே-ன் மீது இந்த யுகத்தின் முடிவில் அதேவிதமான மிகவும் பொதுவான மகா உபத்திரவத்துக்கான ஒரு குறிப்பை அங்கே வைத்திருக்கிறார். "உவமைகளினாலேயன்றி அவர்களோடே பேசவில்லை" என்று தீர்க்கதரிசிகள் மெய்யாகவே நமது கர்த்தரைப் பற்றிக் கூறினதால், அவர் உவமைகளாலும், மறைபொருள்களினாலும் தம் வாயைத்திறந்தார். ஆயினும் தெய்வீக நோக்கத்துக்கு இசைவாக மறைபொருள்களும், உவமைகளும் உண்மையான க-க்கத்தினால் அபிஷேகிக்கப்பட்ட கண்களுடைய யாவருக்கும் இது தற்போது பிரகாசமாய்த் தெரிகிறது.



## யூத யுகத்தின் முடிவிலான உபத்திரவம்

கி.பி.70ல் உச்சநிலையை அடைந்த, மாம்சீக இஸ்ரயே-ன் மீதான உபத்திரவத்தை குறித்து லூக்காவின் வசனமே மிகவும் தெளிவாக இருக்கின்றபடியால், அதை இங்கே நாங்கள் முன்வைக்கிறோம்.

"எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள். அப்பொழுது யூதேயாவி-ருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமி-ருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களி-ருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாம-ருக்கவும் கடவர்கள். எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே. அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும், பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ, பூமியின்மேல் மிகுந்த இடுக்கணும் இந்த ஜனத்தின்மேல் கோபாக்கினையும் உண்டாகும். பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும்." லூக் *21:20-24*

நமது கர்த்தரின் தீர்க்கதரிசனத்தினுடைய இந்தப் பகுதி மாம்சீக இஸ்ரயே-ன் மீதான சம்பவங்களுக்கு தெளிவாகத் தொடர்பு உடையதாயிருக்கிறது. மேலும் யூதயுகமும் அதன் அரசியல்

அமைப்பும் ஒரு முடிவுக்கு வந்தபோது நடந்த துன்பம் நிறைந்த சம்பவங்களிலும் இந்தத் தீர்க்கத்தரிசனம் உண்மையாகவே நிறைவேறிற்று என்று சரித்திரம் நமக்கு எடுத்துச்சொல்கிறது. "அவர்களைக் குறித்து பிரமாணத்திலும் தீர்க்கத்தரிசனத்திலும் எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டுகிற நாட்கள் இவைகளே."

ஆனால் மத்தேயு மற்றும் மாற்கு இவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகள் இவைகளில் இருந்து மாறுபடுகிறது. இது சுவிஷேச யுகத்தின் முடிவில் ஆவிக்குரிய இஸ்ரயே-ன் மீது வரும் உபத்திரவங்களுக்குச் சரியாகப் பொருந்துகிறது. சந்தேகமின்றி நமது கர்த்தர் இரண்டு விஷயங்களைக் குறித்தும் பேசியிருக்கிறார். ஆனால் இரண்டு அறுவடைகளைப் பற்றியும், இரண்டு உபத்திரவ காலங்களைப் பற்றியும் சுவிசேஷகர்கள் அறியாமல், இவைகள் உண்மையில் மறுபடியும் மறுபடியும் சொல்லப்பட்டிருப்பதாக இவர்கள் கருதி, இரண்டு விவரங்களையும் பதிவு செய்யவில்லை. ஆனால் கர்த்தர் வெளிப்படுத்துவற்கு ஏற்ற வேளை வரும் வரைக்கும் இந்த அறுவடை சம்பந்தமான உண்மைகளை மறைப்பதற்கு மிகுந்த வல்லமை உடையவராய் இருக்கிறார்.

### சுவிசேஷ யுகத்தின் முடிவிலான உபத்திரவம்

மத்தேயு மற்றும் மாற்கின் குறிப்புகள் இங்கு பெரும்பாலும் ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன. மத்தேயு கூறுகிறார்:

"மேலும், பாழக்குகிற அருவருப்பைக் குறித்து தானியேல் தீர்க்கத்தரிசி சொல்-யிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள். வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன். வய-ல் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்கு திரும்பாதிருக்கக்கடவன். அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ. நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வு நாளிலாவது, சம்பவியாதபடிக்கு



வேண்டிக் கொள்ளுங்கள். ஏனெனில், உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்நாட்கள் குறைக்கப்படும்." *மத் 24:15-22; மாற் 13:14-20.*

யூத யுக முடிவின் உபத்திரவத்துக்கு ஒரு நிழலாகவும் சுவிசேஷ யுக உபத்திரவத்துக்கு உண்மைப் பொருளாகவும் இது இருக்கும் என்பதை இந்த விளக்கத்தின் நான்கு குறிப்புகள் காண்பிக்கின்றன. (1) தானியேல் தீர்க்கத்தரிசனத்தில் கூறப்பட்டுள்ள "பாழாக்குகிற அருவருப்பு" பற்றிய குறிப்பு. (2) இதுவரை உலகம் அனுபவித்திராததும் அல்லது இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உச்சகட்டமாக அந்த உபத்திரவம் இருக்கும் என்று கூறும் வார்த்தை. (3) அந்த மனிதவர்க்கத்தின் படுகொலை, குறைக்கப்படாவிட்டால் ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை என்பது. (4) சுவிசேஷ யுகத்தின் முடிவில் சம்பவிக்கப் போகிறவைகளை சந்தேகத்திற்கு இடமின்றி இந்த பகுதி விளக்குகிறது - இந்த சம்பவங்கள் யூத யுகத்தின் அறுவடையையோ அல்லது முடிவையோ குறிப்பிட முடியாது. அத்தோடு கூட அவைகள் அங்கே நிறைவேறித் தீரவும் இல்லை. இவைகளில் இரண்டு குறிப்புகள் விசேஷ ஆய்வுக்கு உரியவைகள்.

தானியேல் தீர்க்கத்தரிசி (9:27), உடன்படிக்கையை உறுதிப்படுத்தும் எழுபதாவது வாரத்தின் நடுவில் மேசியா சங்கரிக்கப்பட்ட பிறகு, பாவநிவிர்த்திக்கான நிஜமான ப-யை செலுத்தியதன் மூலம், பிரமாணத்தின் ப-யையும், காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார் என்று பதிவு செய்திருக்கிறார். மேலும் அதனால் அதன்பிறகு, அருவருப்பு இனியும் கூட வியாபித்திருக்கிறபடியால், தேவனால் ஏற்கெனவே கூறியபடியே, இவர் பாழானவைகளின் மீது (தள்ளப்பட்ட ஜாதிகள்) அழிவை ஊற்றுவார்.

இவையாவுமே மாம்சீக இஸ்ரயே-ன் அரசாங்க அமைப்பின் சீரழிவில் நிறைவேறியது. இதைக்குறித்து நமது

ஆண்டவர் கூறியது: "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும் யேகோவாவின் நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள்." அவர்களுடைய மதம் ஒரு அருவருப்பானதாக, வெறுமையானதாக, தேவன் அளித்த-பாவத்துக்கான ஒரு ப-யின் மறுத-ப்பினுடைய ஒரு சின்னமாக மாறிவிட்டது. அத்தோடு கூட தாங்களே தங்கள் மீது வருவித்துக்கொண்ட (குருட்டாட்டம் மத் 27:25) சாபத்தின் கீழ் இருந்து, தேவன் தீர்ப்பளித்ததும், முன்னறிவித்ததுமான அழிவின் பாதையில் மிக வேகமாக சென்றனர்.

ஆனால் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயே-ன் பாழாக்கும் அருவருப்பைக்குறித்து தானியேல் தீர்க்கத்தரிசி கூறுவதற்கு நிறையவே இருக்கிறது; போப்பரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி கிறிஸ்துவின் சபையாகிய தேவனுடைய ஆவிக்குரிய வீடு அல்லது ஆலயத்தில் ஆவிக்குரிய பாழாக்குதலை உண்டாக்கியது. இந்தத் தவறுகளடங்கிய அருவருப்பின் முறைமையானது பரிசுத்த வகுப்பினர் தூய்மையாக்குதல் வரைக்கும் தொடரவேண்டியிருந்தது; மேலும் அதற்கும் அப்பால் - யாவருக்காகவும் நிரந்தரமாகக் கொடுக்கப்பட்ட ஈடுப-யை பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர் அநேகர் நிராகரிக்கும் வரையில் தொடரவேண்டியிருந்தது; மேலும் இதனுடைய அதீத பெருக்கத்தின் செல்வாக்கின் விளைவு தான் நிராகரிக்கப்பட்ட கிறிஸ்தவ மண்டலத்தின் பாழாக்குதலாக இருக்கமுடியும். தானி 11.31; 12:11 ஐ பார்க்கவும். வேதாகமப் பாடங்களான மூன்றாம் தொகுப்பில் 4வது அத்தியாயத்தை பார்க்கவும்.

ஆலய வழிபாட்டு பூஜை ப- (பாவத்தை சுத்திகரித்து நீக்குவதற்கான கல்வாரியின் மேன்மைமிகு ப-க்குப் பதிலாக மனிதனால் ஏற்படுத்தப்பட்ட) உபதேசத்தின் மீது அஸ்திபாரமிட்டிருக்கும் மாபெரும் பாழாக்கும் அருவருப்பானது தற்போது சுய-பாவநிவிர்த்தியின் கொள்கைகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. எங்கும் வியாபித்திருக்கும் இந்த அருவருப்புகள் - அநேகரை "கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவரையும்" வஞ்சிக்கக்கூடியதும் கிறிஸ்தவ மண்டலத்தின் அழிவுக்கு முன்னோடியாயும் இருக்கிறது.



பின்னால் திரும்பிப் பார்க்கும் போது, இந்த யூக யுக அறுவடையின் முடிவுக்கும் சுவிசேஷயுக அறுவடைக்கும் இடையில் மற்றொரு ஒப்புமை இருப்பதையும் நாம் காணலாம். பாவத்துக்கான மெய்யான ப-யைக் குறித்த மாம்சீக இஸ்ரயே-ன் நிராகரிப்பும், நிழலான ப-யின் அவர்களது நினைவுகூறுதலும் தேவனுக்கு இனியும் ஏற்புடையதாக இல்லாமல் அருவருப்பாகக் காணப்படுவது - அவர்களது தேசத்தின் மற்றும் சபையின் வீழ்ச்சியோடு தொடர்புடைய மிக முக்கியமான நிகழ்ச்சியாக இருந்தது. ஆகவே இங்கு, ஈடுப-யின் உபதேசத்தின் நிராகரிப்பும், அதற்குப் பதிலாக அவர்களது பூஜைப- அல்லது நற்கிரியைகள் அல்லது உபவாசங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதும் தேவனுடைய பார்வைக்கு அருவருப்பானவைகளாக இருப்பதுடன், கிறிஸ்தவ ராஜ்யம், அரசாங்கம் மற்றும் மதம் ஆகியவைகளின் வீழ்ச்சியுடன் தொடர்புடைய மிக முக்கியமான சம்பவமாகவும் இருக்கிறது.

ஏற்கெனவே குறிப்பிடப்பட்டபடியே தேவனுடைய பரிசுத்த ஸ்தலம் அல்லது மெய்யான ஆலயமாகிய சபையை பரிசுத்த குலைச்சலாக்கிய அந்த "பாழாக்கும் அருவருப்பு" என்பது "போப்பரசு" (போப்) சம்பந்தப்பட்டதே. பூஜை ப-யே தெய்வதூஷணமான போதனையின் மூலைக்கல்லாகவும் இருக்கிறது. பாழாக்குதல்; பரிசுத்த குலைச்சல் மற்றும் அருவருப்பு ஆகியவை பழமையானவை; ஆனால் மீறுதல்களின் இருளானது பல நூற்றாண்டுகளாக மிகுந்த முரட்டாட்டமாய் இருந்தது என்பதை வெகு சிலரால் மட்டுமே காண முடிந்தது. சீர்திருத்தவாதிகளாலும் அந்த பூஜை ப-அருவருப்பானதாகப் பார்க்கப்படவில்லை என்பது தெளிவான ஒன்று; எப்படியெனில் மீண்டும் மீண்டும் கிறிஸ்து ப-கொடுப்பதற்காக அப்பம் மற்றும் திராட்சை ரசத்தால் கிறிஸ்துவை மீண்டும் உருவக்கக்கூடிய குருமார்களின் வல்லமையைக் குறித்து தன்னுடைய கட்டுரையில் 'இங்கிலாந்து சபை'யானது மறுப்பு கூறியிருப்பினும் கூட, இந்தப் பாவம் நிறைந்த முறை பெருங்குற்றமாகக் கண்டு கொள்ளப்பட்டதாய் எந்தக் குறிப்பும் அல்லது விவரமும் நமக்கு இல்லை. மேலும் 'லூதர்' அவர்கள், போப்பினுடைய அநேக பாவங்கள் மற்றும் துரோகங்களைக் குறித்து

கண்டிக்கிறவராக இருந்த போதும், பூஜைப- என்பதே ஒரு மாபெரும் பாழாக்கும் அருவருப்பு என்பதைக் கண்டுகொள்ளவில்லை. அதற்கு மாறாக "வார்ட் பர்க்" மாளிகையில் தங்கியிருந்து 'லூதர்' மறுபடியும் தனது ஆலயத்துக்கு வந்தபோது பூஜைப-, சிலைகள் மற்றும் மெழுகு வர்த்திகள் யாவும் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டு வேதாகம அதிகாரம் இல்லாததால் அப்படிப்பட்ட பூஜை ப-யை 'லூதர்' மறுபடியும் நிர்மாணித்தார்.

இந்த விஷயத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது நமது கர்த்தருடைய வார்த்தையோடு பெரிதும் ஒத்திருக்கிறது- "ஆகவே பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதை நீங்கள் பார்க்கும் போது" தானியேல் தீர்க்கதரிசி ஏற்கெனவே முன்னறிவித்தபடி (வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்) "யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப் போகக் கடவர்கள்." இங்கே இரண்டு அறுவடைகள், இரண்டு உபத்திரவ காலங்கள் மற்றும் இரண்டு ஓட்டங்கள் ஆகியவைகளுக்கிடையே இருக்கும் ஒற்றுமையை நாம் நினைவு கூற வேண்டும். மேலும் யூதேயா என்பது தற்கால கிறிஸ்தவ மண்டலத்தை குறிக்கிறதைக் கவனிக்கவேண்டும்.

'மலைகள்' என்று கிரேக்க வார்த்தையானது கொடுக்கும் அர்த்தத்துக்குச் சமமான அல்லது அதற்கும் மேலான முக்கியத்துவம் ஒருமையில் அழைக்கப்படும் 'மலை' என்பதாகும். இப்படித்தான் 'பொதுவான மொழிபெயர்ப்பில்' பெரும்பான்மையான சம்பவங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. உண்மையில் யூதோவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு அல்லது மலைக்கு ஓடிப் போகக்கடவர் என்பது விசித்திரமான ஒன்றாக காணப்படுகிறது. ஏனெனில் உண்மையில் யூதேயா "ஒரு மலைநாடு," இங்கே எருசலேம் மலைமீது அமைந்துள்ளதொரு பட்டணமாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நமது கர்த்தருடைய வார்த்தையை தற்காலத்தோடு பொருத்திப் பார்த்தால், தற்கால சத்தியத்தின் ஒளியில் தற்போது இருக்கும் கிறிஸ்தவ மண்டலத்தின் அவரது ஜனங்களுக்கு ஒப்பிடும் போதும், பரிசுத்த ஸ்தலத்தில் இருக்க வேண்டிய உண்மையான ப-க்குப் பதிலாக அருவருப்பு நின்றிருப்பதைக் காண்பது எளிதான காரியமாக இருக்கிறது. இவர்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தை (பர்வதம்) போன்று தோற்றமளிக்கும் பாழாக்கும் அருவருப்பி-ருந்து இப்பொழுதே சடுதியாக மெய்யான மலைக்கு அல்லது ராஜ்யத்துக்கு ஓடவேண்டும். ஏனெனில் கிறிஸ்து தற்போது மகிமையும் வல்லமையும் நிறைந்த ராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்திருக்கிறார்.



ஆனால் கிறிஸ்தவ மண்டலத்தை, அதனுடைய ஆலயத்தை அதனுடைய தெய்வீக அமைப்புகளை, அதனுடைய சமூக வசீகரங்களை, அதனுடைய முகஸ்துதி மற்றும் மேன்மைகளை விட்டு விலகி (அ) மறுத-த்து, கர்த்தரிடமும் அந்த மெய்யான ராஜ்யத்திடமும் ஓடிவருவது என்பது உலக ஞானிகளாலும், மேன்மக்களாலும் வெறுக்கப்பட்ட, அசட்டைபண்ணப்பட்ட, மறுக்கப்பட்ட ஒன்றாகும். இது உண்மையில் ஒரு ஓட்டமும், உண்மையில் ஒரு பிரயாணமுமாய் இருக்கிறது. மேலும் வெகு சிலராகிய 'பரிசுத்தவான்கள்' அதைத் தொடங்குவதற்காகவாவது நினைப்பார்கள். இதை யூத அறுவடையின் முடிவு காலத்தில் யூதேயாவி-ருந்து ஓடிவந்த விசுவாசிகளின் சரீரப்பிரகாரமான பாடுகளுக்கு மட்டுமே பொருத்தி பார்ப்போமேயானால் இது வழக்கமான நமது கர்த்தரின் முறைமைக்கு முரண்பட்டதாகவும், மிகைப்படுத்தப்பட்டதாகவும் காணப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஆனால் ஆவிக்குரிய ஓட்டத்திற்கும் இந்த அறுவடை காலத்தின் சோதனைக்கும் மிகப் பொருத்தமானதாக அவரது வார்த்தைகள் இருக்கின்றன. "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்ற வெளிப்படுத்துத-ன் *(18:4)* கட்டளையோடு இணைத்தால் மட்டுமே ஓடிவரும்படியான இந்த கட்டளையையும், அதனுடைய சோதனைகளின் விளக்கத்தையும் மிகச்சரியாய் புரிந்து கொள்ள முடியும் என்று ஒரே வார்த்தையில் கூறிவிடலாம்.

### "என் ஜனங்களே, அவளைவிட்டு வெளியே வாருங்கள் !"

"வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன். வய-ல் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக்கடவன்." *மத் 24:17,18*

இந்த வார்த்தைகள் பாழாக்கும் அருவருப்பினைக் கண்டவுடன் "பாபிலோனை" விட்டு ஒவ்வொருவரும் வெளியே ஓடிவருவதற்கான அவசரத்தைக் குறிப்பிடுகிறது. கர்த்தருடைய வார்த்தையை கால தாமதம் செய்வதோ அல்லது சமரசம் செய்வதோ அல்லது மனுஷீக முறையில் நியாயப்படுத்துதலோ ஆபத்தானதாக இருக்கும்; பாபிலோன் மற்றும் கர்த்தருடைய பெயரால் அதனோடு உறவு கொண்ட யாவருக்கும் வைக்கப்பட்டிருக்கும் பாழாக்குதலை நாம் காணும்படி அவர் செய்த உடனேயே கீழ்ப்படிவதில் காலத்தை கடத்தக் கூடாது. ஐயோ! ஆண்டவரின் வார்த்தையை கவனிக்கத்தவறிய எத்தனை பேர், கை கால்கள் கட்டப்பட்டவராய் உபத்திரவப்படும்படி தங்களை உட்படுத்திக் கொண்டனர். ஏனெனில் தற்போது விரைந்து ஓடுவது என்பது பெரும்பாலும் கூடாத காரியமாகிவிட்டது. ஆனால் "என் ஆடுகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கிறது. அவைகள் எனக்குப் பின் செல்லுகின்றன" என்று ஆண்டவர் கூறுகிறார்.

இந்த வசனங்களில் மற்றொரு பாடமும் கூட இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் ஒரு இடத்திலோ அல்லது ஒரு நிலையிலோ இருக்கின்றதாகவும் வேறுசிலர் வேறு ஒரு இடத்திலும் நிலையிலும் இருக்கின்றதாகவும் அவைகள் காட்டுகின்றன. சிலர் 'வ ய - ல்' இருக்கின்றனர். அந்த வயல் உலகத்தில் எல்லா மனித அமைப்புகளுக்கும் வெளியே இருக்கிறது. இவர்கள் பெயரளவிலான சபைகளில் சேர்வது நல்லது என்று நினைத்துவிடக் கூடாது; ஆனால் அவர்களது சுதந்திரத்தை பயன்படுத்தி, இந்த உலகத்தில் அவர்களுக்கு இருக்கும் அந்தஸ்தி-ருந்து விலகி மலைக்கு - அதாவது அவரது ராஜ்யத்தின் ஒரு அங்கத்தினராகக் கர்த்தருடன் ஐக்கியப்பட ஓட வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களில் (வேறு) சிலர் வீடுகளில் அதாவது பாபிலோனிய சபை அமைப்புகளில் இருக்கின்றனர். ஆனால் இங்கு சொல்லப்பட்டபடி, கூரையின் மீது இருப்பவர்கள் பரிசுத்தவான்கள், வேறு சாதாரணமான பெயர் சபையின் அங்கத்தினர்களைவிடவும் மேலான வாழ்வையும், அனுபவத்தையும் விசுவாசத்தையும் உடையவர்களாக இருக்கிறார்கள். எனவே இவர்கள் தப்பி ஓடும்போது வீடுகளுக்குள் (பெயரளவிலான சபை ஒழுங்குகள்) தங்கள் உடைமைகளை எடுத்துக் கொள்வதற்கு, இறங்கிப் போக வேண்டியதில்லை. மனிதனுடைய மதிப்பீட்டில் தங்களது விலைமதிப்புடையவைகளாகக் காணப்படும் பட்டங்கள், கௌரவம், மரியாதை, நல்லதும் நிரந்தரமுமான ஸ்தானங்கள் ஆகியவற்றைக் கிறிஸ்துவுக்காக விட்டுவிட்டு, மெய்யான ராஜ்யத்துக்கு ஓடி வரவேண்டும்.



## ஓடிப்போவதின் கஷ்டங்கள்

"அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ." மத் *24:19*

ஆவிக்குரிய "குழந்தைகளைப்" போலவே மாம்சீக குழந்தைகளும் இருக்கின்றனர். அத்தோடு பிள்ளைகளைப் போலவே வேசியின் பிள்ளைகளும் இருக்கின்றனர். அப்போஸ்தலர் பவுல் சுவிசேஷ ஊழியத்தில் தனக்கிருக்கும் ஆர்வத்தை கர்ப்ப வேதனைப்படும் தாய்க்கு ஒப்பிட்டு கூறுகிறார். அவர் கூறுவதாவது: "என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகும் அளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்." கலா *4:19* அதேவிதமாகவே கிறிஸ்துவுக்கு உண்மையற்ற எல்லா ஊழியக்காரரும், ஆத்துமாக்களுக்காக உத்தமமாகப் பாடுபடும் யாவரும், "கர்ப்பத்துடன்" இருப்பதாக இந்த வசனத்தில் கூறப்படுவதைப் போலவே இருக்கின்றனர். ஆவிக்குரிய பிள்ளையைச் சுமப்பது என்பது அப்போஸ்தல உதாரணத்துக்கு (பிறகு) அடுத்ததான மிகுந்த மதிப்புக்குரிய சேவையாக இருக்கிறது. அர்ப்பணிப்பு மிகுந்த தேவனுடைய பிள்ளைகளில் சிலரது கவனத்தை இது கவர்கிறது. ஆனால் ஐயோ! தேவனுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்படாத முறையில் உதவும்படியான ஆபிரகாம் மற்றும் சாராளின் விருப்பத்தைப் போலவும், இதனால் இஸ்மயேல் என்ற வகுப்பாரை மாம்சத்தினால் உருவாக்கி முறைப்படியான வித்தின் பிறப்பை அது துன்புறுத்தும்படியாகப் போனது. இது போலவே பிள்ளைகளை உடையவர்களில் அநேகரும் இருக்கின்றனர். 'தேவனுடைய

பிள்ளைகளை' முறையற்ற விதத்தில் பிறப்பிப்பதற்கு அவர்கள் உதவி செய்கின்றனர். முறைப்படியான காரியங்களை மட்டுமே செய்ய வேண்டும் என்பதை யாவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எல்லா தேவனுடைய பிள்ளைகளும் சத்தியத்தின் வார்த்தையினாலும், ஆவியினாலும் ஜநிப்பிக்கப்படுவார்கள். மனித கொள்கைகளினாலும், உலக ஆவியினாலும் அல்ல.

சிலருக்குள் இருக்கும் தெய்வீக திட்டத்தைக் குறித்த தவறான கண்ணோட்டமானது (தெரிந்தெடுக்கப்பட்ட சபையைத்தவிர மற்றெல்லாரும் நித்திய உபத்திரவத்துக்கு உள்ளாவார்கள்) "பிள்ளைகளை" உருவாக்கும் அவர்களது விருப்பத்தை மிகவும் தூண்டிவிடுகிறது. எனவே அவர்களைப் பெற்றெடுக்க பல்வேறு மனுஷீக உபாயங்களை மேற்கொண்டனர். எல்லாரும் "தேவனால் பிறந்தவர்கள்" அல்ல என்ற உண்மையையும் "சத்திய வசனத்தினால்" எல்லாரும் பிறந்தவர்கள் அல்ல என்பதையும் (வெறும் வசனத்தின் எழுத்தினால் அல்ல சத்திய ஆவியினால் பிறந்தவர்கள்) கவனியாதபடியால் இவர்கள் போ-யானவர்களாக, தேவனுடையவர்களாக எண்ணப்படாமலும், புத்திரராய் நடத்தப்படாமலும் இருக்கின்றனர். (எபி 12:8) இதன் விளைவாக தற்கால பெயரளவிலான சபையானது எண்ணிக்கையிலும், பொருளாதாரத்திலும், புத்திக் கூர்மையிலும் "மாம்சத்தில் நல்வேஷத்தை" உண்டாக்குகிறது. மேலும், பெரும்பாலும் இருதயத்தைக் கட்டுப்படுத்த மெய்யான ஆவியோ அல்லது வல்லமையோ இல்லாத "தேவ பக்தியின் வேஷத்தை" தரித்துக் கொண்டு இருக்கிறது. இது "குழந்தைகள்" நிறைந்த ஒன்றாய் இருக்கிறது. சிலரோ உண்மையில் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாய் இருக்கின்றனர். ஆனால் அநேகர் தேவனுடைய பிள்ளைகளாய் இல்லாமால் வேசியின் பிள்ளைகளாய் இருக்கின்றனர். இவர்கள் சத்தியத்தினால் அல்ல, வஞ்சகத்தினால் பிறந்தவர்களாக, "பதர்களாக" இருக்கின்றனர். இரக்கமற்ற தேவன் என்று எண்ணிக் கொள்ளக்கூடியவரது அநீதியான தீர்ப்பின் நித்திய சித்திரவதை (நரகம்)யி-ருந்து மக்களைக் காப்பாற்றுவதாக நம்பிக் கொண்டு



மேலும் தொடர்ந்து முயற்சி செய்து இன்னும் அதிகமான "போ-சந்ததியாரை" உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

"கர்ப்பவதிகளுக்கு ஐயோ!" என்று நமது இரட்சகரது வார்த்தையில் மறைபொருளாகக் கூறப்பட்டிருக்கும் இந்த தேவனுக்கு அருமையான பிள்ளைகளுக்கு தாங்கள் மகிமைப்படவும், பெருமை கொள்ளவும் கற்றுக் கொண்டிருக்கும் திரளான கூட்டத்தினரைச் சேர்க்கும் ஊழியத்தின் மூலமாக, போ-யான சந்ததி என்று சொல்பவரை உருவாக்கிக் கொண்டிருக்கும் பேர் கிறிஸ்தவ சபைகளி-ருந்து ஓடிவருவது எத்தனை கடினமானதாக இருக்கும். ஆம், எல்லாவற்றையும் விட்டுவிட்டு கர்த்தரிடத்திலும் அவரது மலையினிடத்திலும் (ராஜ்யம்) ஓடிவருவது மிகவும் கடினமாகவே இருக்கும். கர்த்தர் உண்மையிலேயே நல்லவர், நீதியானவர், இரக்கம் நிறைந்தவர் என்பதையும் அத்தோடு கூட "எல்லாரையும் மீட்கும் பொருள்" மூலம் யாவருமே மீட்கப்பட்டு, ஆதாமின் சந்ததியாரின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் முழுமையாக தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதான ஒரு கிருபையுள்ள திட்டத்தை அவர் வைத்திருக்கிறார் என்பதையும் நம்புவதற்கு அவர்களுக்குக் கடினமாகவே இருக்கும்.

"பால் கொடுக்கிறவர்கள்" என்ற இந்நாட்களின் கூட்டத்தாரில் கூட அநேக மேன்மையான நல்ல நற்பண்புடைய தேவ பிள்ளைகள் அடங்கியிருக்கின்றனர். இதில் "பாலை" வழங்கும்படியான மத ஊழியங்கள் அடங்கிய அநேக ஊழியக்காரரும், ஓய்வு நாள் பாடசாலை ஆசிரியரும் இதில் அடங்குவர்; "திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலை" அவர்கள் எப்போதுமே கொடுப்பதில்லை. ஆயினும் அவர்கள் அந்தப்பா-ல் பாரம்பரியம், தத்துவம் மற்றும் போதையூட்டும் உலக ஞானம் ஆகியவைகளைக் கலந்து பாலை நீர்க்கச் செய்து, கலப்படம் செய்து - தங்கள் குழந்தைகளை சாந்தமாய், நல்ல உறக்கத்தில் வைக்கக்கூடிய இவைகளை கொடுக்கின்றனர். புத்தி மற்றும் கிருபையின் வளர்ச்சியை தடை செய்து அதை அவர்கள் ஆபத்து என்று கருதும்படி செய்கின்றனர்.

இந்த போதகர்களில் வெகு சிலர் தங்களுடைய "குழந்தைகள்" வளரும்படியான "திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலை" கொடுக்கவும் இதன் மூலம் அந்த குழந்தைகள் வளர்ந்து பலமான ஆகாரத்தை உண்ணவும் ஜீரணிக்கவும் கற்றுக் கொண்டு கிறிஸ்துவுக்குள் முழு மனிதனாக வளர உண்மையில் முயற்சி செய்கின்றனர்; ஆனால் பெரும்பாலான தங்களுடைய 'குழந்தை'களுக்கு "திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலைக்" கூட (ஜீரணிக்கமுடியாமல்) ஏற்றுக் கொள்ள முடியாமல் போனதை தங்களுடைய தொடர்ச்சியான முயற்சிகள் நிரூபிப்பதால், இனிமேல் தங்களுடைய "குழந்தைகள்" வியாதிபட்டு, இறந்து போகாதபடி பயந்து போய் பாலைக் கலப்படம் செய்து புகட்டுவதே தங்களுடைய கடமையாகக் கருதுகின்றனர். ஐயோ! பெரும்பாலான இவர்களுடைய "குழந்தைகள்" சத்திய ஆவியினால் பிறக்காதவர்களானபடியினால் இவர்களால் ஆவிக்குரிய "பாலை" என்றுமே ஜீரணிக்க முடியாது என்பதை இவர்கள் அறிந்து கொள்ளவில்லை; ஏனெனில் "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவும் மாட்டான்." (1 கொரி 2: 14,12) "காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க வேண்டிய" (எபி 5:12) இவர்களது பராமரிப்பின் கீழ் உண்மையான ஆவிக்குரிய குழந்தைகளையும் பட்டினி போட்டு, வளர்ச்சி குன்றச் செய்து, விஷமும் கொடுத்துக் கொண்டிருப்பதையும் கூட அறியாமல் இருக்கின்றனர்.

இந்த வகுப்பினரில் இருக்கும் அநேகர் தேவனுடைய உண்மையான பிள்ளைளைப் போல் "என் ஜனங்களே, அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்ற அழைப்பைக் கேட்பார்கள். இவர்கள் இந்த நாளில் பெரும் உபத்திரவத்துக்கும் கூட ஆளாவார்கள். தற்கால சத்தியத்தை அவர்கள் காண நேரிடும்போது, அதைத் தங்களது பராமரிப்பின் கீழ் இருப்பவர்களுக்கு அளிக்க பயப்படுவது மட்டுமன்றி, தங்களுடைய பதவிகளை விட்டு தங்களைப் பிரித்துவிடுமோ என்ற அச்சத்தினால் கேட்ட அந்த சத்தியத்தின்படி



நடக்கவும், அவர்கள் இந்த நாளில் ஓடிப்போகவும் பயப்படுவார்கள்; ஏனெனில் தங்களுடைய "குழந்தைகளில்" வெகுசிலர் இந்த ஓட்டத்தில் கலந்து கொள்ளக் கூடியவரும், விருப்பம் கொண்டவருமாய் இருக்கின்றனர் என்பதை உணருவார்கள். மேலும் உண்மையில் ஆவிக்குரியவர்கள் மட்டுமே இந்த கடும் சோதனையை தாக்குபிடிக்கக்கூடும். பயப்படுகிறவர்கள் மகா உபத்திரவத்தின் மூலமாய் வந்து சேரும்படியாகக் கைவிடப்படுவார்கள். சிலர் "ஜெயம் கொண்டவர்களாக" இந்த ஆபத்தைப் பாதுகாப்புடன் கடந்து செல்வார்கள்.

## மாரிகாலத்துக்கு முன் ஓடிப் போங்கள்

"நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வு நாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள். ஏனெனில், உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை; தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்." *மத் 24:20-22*

சாதகமான கோடை காலத்தின் முடிவில் "அறுவடை" என்று அழைக்கப்படும் காலத்தில் சபையைக் கூட்டிச் சேர்ப்பது நடக்கும். இந்த அறுவடையில் கோதுமையை தமது களஞ்சியத்தில் சேர்த்துவிட்டு - தொடர்ந்து வரப்போகும் மகா உபத்திரவத்தின் காலத்தில் களைகளைச் சுட்டெரிப்பேன் (மத் 13:30, 37-43) என்று நமது கர்த்தர் விளக்குகிறார். மாரிகாலம் வரைக்கும் கழிவுகளை எரிக்காமல் விட்டுவிடுதல் கிராமப்புறங்களில் இன்னும் வழக்கமாக இருக்கிறது. பாபிலோனின் மீது அவளது மாரிக்காலத்து உபத்திரவம் வரும்முன்பே அவளிடமிருந்து தப்பித்துக் கொள்ள உதவியையும், பெலத்தையும் நாம் தேடவேண்டியதாக இருக்கிறது என்பதையே நமது கர்த்தர் குறிப்பிடுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இயற்கைக்கு ஒவ்வாததாக இருப்பினும் இந்த அறுவடையில்

இரண்டு வகுப்பாரான கோதுமை மணிகள் பாதுகாக்கப்படும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். *(1)* “மாரிக் காலத்துக்கு” முன் வெளியேறிவிடும் உண்மை உள்ளவரும், ஏற்ற காலத்தில் கீழ்ப்படிதல் உள்ளவருமான “ஜெயம் கொண்டவர்களும்” மற்றும் “இனி சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் தப்பிக் கொள்ள பாத்திரவான்களாக எண்ணப்பட்டவர்களுமே.” *(லூக் 21:36)* *(2)* விசுவாசமுள்ளவர்களாக, ஆனால் தேவனுடைய பிள்ளைகளாக ஏற்ற வேளையில் கீழ்ப்படியாமல், அறிவுக்கேற்ற வைராக்கியம் இல்லாமல் உலக ஆவியினால் ஏறக்குறைய களங்கப்பட்டவர்களாக இருப்பார்கள். பாபிலோன் விழும் போது வெளியேறுவதற்கு இவர்கள் உதவியைப் பெறுவார்கள்; தீர்க்கத்தரிசி கூறும் வார்த்தைகளாகிய “அறுப்புகாலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை” *(எரே 8:20)* என்று கூறிக் கொண்டு மாரிகாலத்தில் ஓடுவார்கள். விசுவாசமுள்ள இவர்கள் யாரும் கடைசியில் “மிகுந்த உபத்திரவத்தி-ருந்து வருவார்கள்.” அத்தோடு ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே தங்கள் அங்கிகளைத் தோய்த்து வெளுத்தவர்களாய் சிங்காசனத்தின் முன் (கிறிஸ்துவோடு உடன் சுதந்திரவாளிகளாய் ராஜ்யத்தில் வாரிசுதாரர்களான “சிறுமந்தையாக சிங்காசனத்தில் கிறிஸ்துவோடு இருப்பவர்களாக” அல்லாமல்) நிற்பார்கள் *(வெளி 7:14-15)* என்று மிகுந்த இரக்கத்துடன் கர்த்தர் குறிப்பிடுகிறார். நாமும் இந்த “மாரிகாலத்தின்” உபத்திரவம் வரும் முன்பு ஓடிப்போய் தப்பித்துக்கொள்ளும்படியாக நாம் பிரயாசப்படும்படி ஜெபிப்போமாக.

நாம் ஓடிப்போவது ஓய்வு நாளிலாவது இருக்காதபடி நாம் முயன்று, ஜெபிக்க வேண்டியதாய் இருக்கிறது. ஓய்வு நாள் என்பது என்ன? இது வாரத்தின் ஏழாவது நாளோ அல்லது முதல் நாளோ அல்ல; ஏனெனில் “மாதப்பிறப்பும், ஓய்வு நாட்களும்” நிச்சயமாய் கிறிஸ்தவர்களின் மாம்சீக ஓட்டத்திற்கு எந்தத் தடையையும் உண்டாக்காது *(கொலே 2:16)* ஓய்வு நாள் என்று இங்கு குறிப்பிடப்படுவது மாபெரும் நிஜமான ஓய்வு நாளாகிய - ஆயிரமாண்டு ஆட்சியை - ஏழாவது ஆயிரம் ஆண்டாகிய ஓய்வு



நாளையே குறிக்கிறது. நமது ஓட்டத்தை காலக்கிரமப்படி இது தொடங்குவதற்கு முன்னமே தொடங்கிவிட்டிருப்போமாகில், அது மிகவும் உதவிகரமான ஒன்றாகவும் இருக்கும். அதற்குள் நீடிக்க நீடிக்க, பாபிலோனைக் கைவிட்டு, விடுதலையாகி ஓடுவது இன்னும் கடினமாக இருக்கும். அதே சமயத்தில் தான் நீடித்து நிற்க, அது (பாபிலோன்) நமது உதவியை நாடி அதிகமாய் வேண்டி நிற்கும். ஆனால் பாபிலோன் வீழ்ந்தாக வேண்டும் என்று தேவன் அறிவித்து விட்டார். எனவே எந்த சக்தியும் அவளைத் தாங்கி நிறுத்த முடியாது. மேலும் அவளது கிரியைகள் எவ்வளவு தவறானவை என்பதையும், அவள் நீக்கப்பட்ட பின்பு உண்மை சபை மகிமைப்படும் போது கர்த்தருடைய கிரியைகள் எவ்வளவு நன்மையும் கிருபையுமானவைகளாக இருக்கும் என்பதையும் உணர்ந்த எவருமே கர்த்தருடைய கிரியைகளுக்கு தடையாக இருக்கும்படி ஒரு நிமிடம் கூட விரும்பமாட்டார்கள்.

“மாரி” காலத்தின் இந்த மாபெரும் உபத்திரவமானது இதுவரை சம்பவித்திராத, புதுமையானதாக இருக்கும்; மேலும், இதுவரை உலகம் கண்டிராததும் காணக்கூடாததுமான ஒப்பிட முடியாத உபத்திரவமாய் அது இருக்கும் என்பது நமது கர்த்தரின் உறுதி மொழி. “பெரிய அதிபதியாகிய மிகாயேல் (கிறிஸ்து) எழும்புவான் (ஆளுகையை குறிக்கிறது). யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்” *(தானி 12:1)* என்று தீர்க்கதரிசி கூறியது இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவின் உபத்திரவத்தை குறிப்பிடுகிறது. அது வெளிப்படுத்துத-ல் *(11:17,18)* குறிப்பிடப்பட்டிருக்கும் காலத்தையும் கூட அடையாளம் காட்டுகிறது. “ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்பு அடைகிறதற்கும்.... காலம் வந்தது.” ஏதோ ஒரு வல்லமை குறுக்கிட்டு இந்த உபத்திரவத்தை குறைக்காவிட்டால் நிச்சயமாக சந்ததிகள் முழுவதுமே பூண்டோடு நிர்மூலமாக்கப்படக்கூடிய அளவிற்கு இந்த உபத்திரவமானது அத்தனை பெரிதாக இருக்கும். ஆனால் தேவன் இந்த குறுக்கிடும் வல்லமையாக - தமது ராஜ்யத்தையும், கிறிஸ்துவையும், “தெரிந்தெடுக்கப்பட்ட” அவரது சபையையும்

தயார்படுத்தி வைத்திருக்கிறார். இந்த தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் ஏற்ற வேளையில் குறுக்கிட்டு பூமியின் குழப்பத்தை நீக்கி, ஒழுங்கை ஏற்படுத்துவார்கள்.

## கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும்

"அப்பொழுது, இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கத்தரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்." மத் 24:23-25

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் வஞ்சகர்கள், நிச்சயமாய் அவ்வப்போது எழும்பி, தங்களைக் கிறிஸ்து என்று கூறிக் கொண்டு கொஞ்சமேனும் பொது அறிவோ அல்லது சீர்தூக்கி பார்க்கும் திறனோ அற்ற சிலரை வஞ்சிக்கும் மதவெறியர்களை அல்ல, பல நூற்றாண்டு காலமாய் ஆவிக்குரிய ஆலயத்தில் அமர்ந்து கொண்டு, கிறிஸ்துவுக்கு தான் ஒருவனே பிரதிநிதி என்பதைப் போல் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளும், அந்த மாபெரும் வஞ்சகனான (தொகுதி 2, அத்தியாயம் 9) அந்திக் கிறிஸ்துவை அதாவது போப்பிசத்தை நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறோம். "ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புத்தகத்தில்" பேரெழுதப்பட்டிருப்பவர்களைத் தவிர, உலக முழுவதுமே அவனை வணங்கும் (வெளி 13:8) என்று இவனைக் குறித்து மிகச் சரியாக ஏற்கெனவே நமது கர்த்தர் கூறியிருக்கிறார். அதேவிதமாகவே, இங்கிலாந்து சபையானது ஒரு சபையோ அல்லது "சரீரமோ" அல்ல, அது "மகாராணி" என்ற அரசாங்க அதிகாரத்தினாலான உலகப்பிரகாரமான தலையைக் கொண்டிருக்கிறது. கிரேக்க கத்தோ-க்க சபையும் கூட இதேவிதமாக அத்தனை குறிப்பிடும்படியாக இல்லாவிடினும் அதிகப்படியான அதிகாரத்தை உபயோகிப்பவரான ரஷ்ய சக்கரவர்த்தியை தனது தலையாகக் கொண்டிருக்கிறது. போப்பிசம் தான் அந்திகிறிஸ்து



அல்லது கள்ள கிறிஸ்து என்றால், மற்ற போ- சரீரத்தையும் போ-தலையையும் பெற்று இருப்பவைகள் ஒரு போ-யான அல்லது கள்ளக் கிறிஸ்துவாகவோ அல்லது அந்திக் கிறிஸ்துவாகவோ இருக்கமுடியாதா? - எப்படியாயினும் அவர்களுக்குள் அநேக அல்லது சில தேவனுடைய மெய்யான பரிசுத்தவான்களும் அடங்கியிக்கக்கூடும்.

கிறிஸ்துவைத் தவிர வேறு எதையும் தலையாகக் கொள்ளவில்லை என்றுகூறிக் கொள்பவராக இருப்பினும், பல்வேறு புராட்டஸ்டன்ட் பிரிவினர், ஒரே உண்மையான சபையின் ஒரே தலையினிடத்தில் இருந்து பெறுவதற்கு பதில், தங்களுடைய சட்டங்கள், பயன்பாடுகள் மற்றும் விசுவாசபிரமாணங்கள் ஆகியவைகளை இவர்கள் தங்களுடைய ஆலோசனை சபை, ஆலோசனை கூட்டம் மற்றும் தலைமை சபையிடமிருந்து பெற்று அதையே உண்மையில் தலையாகக் கருதுகின்றனர்.

நீண்ட காலமாக மனிதனுடைய இந்த முறைமைகள், உண்மையான மேசியாவுக்கு (தலை மற்றும் சரீரம்) பதில் போ-யானவைகளாய் நின்று அநேகரை ஓரளவிற்கு வஞ்சிக்கும்படியாகச் செயல்படுகின்றன. ஆனால் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாய் இந்த ஏமாற்று வேலைகள் யாவும் தோற்றுப் போய்க் கொண்டிருக்கின்றன. தற்போது பிரிஸ்படேரியன் சபையைச் சேர்ந்த சிலர் தங்களது சபையே ஒரே உண்மையான சபை என்று நம்புகின்றனர். அதுவுமில்லாமல் மெத்தடிஸ்ட், பேப்டிஸ்ட், லுத்தரன் இன்னும் மற்ற சபையாரும் தங்களுடைய அமைப்பைக் குறித்து இப்படித்தான் நினைக்கின்றனர். மேலும் ஆங்கி-க்கன், கிரேக்க மற்றும் ரோமன் கத்தோ-க்கரும் கூட தங்களுடையது மட்டுமே உண்மைச் சபை என்றும் அதற்கு வெளியே இருப்பவரில் ஒருவர் கூட தெரிந்து கொள்ளப்பட்டவர் அல்ல என்றும் நினைத்து அந்த மாயத் தோற்றத்தி-ருந்து விடுதலை பெறவில்லை. ஆனால் தீர்க்கதரிசனத்தில் "அப்பொழுது" அதாவது "இப்பொழுது" கள்ளக் கிறிஸ்துவின் ஆபத்துக்களைக் குறித்து நம்மை நமது கர்த்தர் எச்சரிக்கிறார். இதற்கு ஒத்துப்போகக் கூடியதொரு தீர்க்கதரிசனத்தை நாம் வெளி 13 : 14-18ல் காணலாம். அதில் - புராட்டஸ்டன்ட்

பிரிவினரும் இணைக்கப்படும் வகையில் - தனித்தனியாக இருந்தாலும் போப் சபையுடன் ஒத்துழைத்து இதன்மூலமாய் இரு பிரிவுகளுக்குமே இன்னும் கூடுதல் அதிகாரங்கள் கிடைக்கும் விதத்தில் கொண்டுவரப்பட்டு, மேசியாவின் பணியைச் செய்யக்கூடிய தேவனுடைய கருவிகள் என்பது இந்த கூட்டுச் சேர்க்கைதான் என்று எண்ணக் கூடிய விதத்திலும், இப்படியாக அவர்கள் தான் அவரது பிரதிநிதி என்றும் அநேகரை வஞ்சகத்துக்கு உள்ளாக்கும் என்று நாம் காண்கிறோம்.

## நீதியின் சூரியன் உதிக்கும்

*"ஆகையால்: அதோ, வனாந்திரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால் புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல் (சூரியன்) கிழக்கி-ருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷகுமாரனுடைய வருகையும் (பரோஷியா என்ற கிரேக்க பதம்) இருக்கும்." மத் : 24:26-27.*

அந்த மாபெரும் வஞ்சகம், சாத்தானுடைய "கொடிய வஞ்சகம்," இப்பொழுது நமக்கு முன்பாக இருக்கின்றது என்பதை கர்த்தருடைய வார்த்தை மட்டும் அல்ல, அப்போஸ்தலர் பவுலும் கூட கூறுகிறார். *(2 தெச 2:10-12)* இந்த வஞ்சகங்கள் எப்படிப்பட்ட ரூபத்தில் இருக்கும் என்பது ஏற்கனவே திட்டமாய் கூறப்பட்டிருக்கிறது; இது அவர்களுடைய வஞ்சக சக்திக்கு சிறிதளவு தடங்கலை ஏற்படுத்தக்கூடும். மற்றெல்லாரி-ருந்தும் "ஜெயம் கொள்ளுகிறவர்களை" பிரித்தெடுக்கும் முக்கியமான காரணத்திற்காக தேவன் இந்த வஞ்சகங்களை அனுமதித்திருக்கிறார். அதுமட்டுமன்றி "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" வீழ்ந்து போகாமல் காக்கப்படுவார்கள் என்ற நிச்சயத்தையும் நமக்குக் கொடுக்கிறார். ஆயினும் இந்த சோதனைகள், ச-த்து பிரித்தெடுத்தல் மற்றும் வஞ்சகங்களில் சில தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தை பெருமளவில் பெற்றிருப்பவர் மீது மிகவும் நெருக்கமாக வரக்கூடும். "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்" என்பது எவ்வளவு முக்கியமான ஒன்றாய் இருக்கிறது. அத்தோடு சத்தியத்தின்



அறிவை மட்டுமே நாம் பெற்றிருந்தால் அது இருமாப்பு கொள்ளக்கூடும். ஆனால் அதனோடு கூட கிறிஸ்துவின் ஆவியையும் பெற்றிருக்க வேண்டும். அது தேவன் மீதான அன்போடு கூட, மற்றெல்லார் மீதும் அன்பையும் அனுதாபத்தையும், இரக்கத்தையும் பிறப்பிக்க வேண்டும். ஏனெனில் நமது கர்த்தருடைய சாய-ல் நம்மை "அன்பு வளரச் செய்யும்."

"இதோ அவர் அறைவீட்டிற்குள் இருக்கிறார்" என்ற குரல் ஏற்கெனவே ஆவியுலக தொடர்பின் கொள்கைக்காரர்களால் எழுப்பப்பட்டு விட்டது. அதாவது கர்த்தருடன் முகமுகமாய் ஆவியுலகக் கூட்டங்கள் சிலவற்றில் உரையாடியதாகவும், அத்தோடு தங்களுடைய கருத்துக்கு இணக்கமுடையவர்களும் இதே சிலாக்கியத்தைப் பெறமுடியும் என்றும் கூறுகின்றனர். "கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் அது வஞ்சிக்கக்கூடும்" என்ற எச்சரிப்பு, ஒருவேளை அதில் இருக்கும் "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" இந்த தீங்குநாளில் கடும் சோதனைக்கு உட்படக் கூடுமோ? அப்படியானால் "யார் நிலைநிற்கக்கூடும்?" *(வெளி 6:17)* இதற்கான தீர்க்கதரிசியின் பதில்: *"கைகளில் சுத்தமுள்ளவனும் (நேர்மையானதொரு வாழ்வு) இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து (தேவனுக்கும் மனுஷருக்கும் விரோதங்கள் அற்ற ஒரு மனசாட்சி) ..... கர்த்தருடைய பர்வதத்தில் (ராஜ்யம்) ஏறுவான்... பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்." சங் 24:3,4.*

ஆனால் இந்த வெளிப்பாடுகள் யாவும் நிஜமானவைகள் அல்ல என்று தேவனுடைய ஜனங்கள் எப்படி நிச்சயமாய் அறிந்து கொள்ள முடியும்? இந்த நாள் இரவில் திருடன் வருவதைப் போல் வரும் என்றும், தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை கூட்டிச் சேர்க்கும் அறுவடைப் பணியை மேற்பார்வையிட அவர் பிரசன்னமாவதை இவ்வுலகத்தால் காண முடியாது என்றும் அவர் நமக்கு குறிப்பிட்டுச் சொல்-யிருக்கிறார். "அறை வீட்டிற்குள்" அதாவது கிறிஸ்தவ ஆவியுலக கோட்பாடுள்ளவர்களாய் தங்களை அழைத்துக் கொள்ளும் இவர்களது கூட்டங்களில் மட்டும் கர்த்தர் காணப்படக்கூடியவரென்று கூறிக் கொள்ளும் போது, விழிப்புடன்

கண்ணோக்கிக் கொண்டிருக்கும் தன்னுடைய ஜனங்களுக்கு அவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள மாட்டார் என்பதை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்?

அவர் தம்மை வெளிப்படுத்திக் காண்பிக்க மாட்டார் என்று நாம்அறிந்திருக்கிறோம். ஏனெனில் (1) நாம் "அவரைப் போல் மாற்றப்படுவோம்" அப்போது "அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைக் காண்போம்" என்பதே அவரது போதனை; மேலும் (2) "இதோ வனாந்தரத்தில் இருக்கிறார் அல்லது அறைவீட்டில் இருக்கிறார் என்று சொல்வார்களானால் அதை நம்பாதிருங்கள்." ஏனெனில் இப்படிப்பட்ட விதத்தில் அவர் வெளிப்படமாட்டார் என்று கூறி மாம்ச ரீதியான நிலையில் அவரை நமக்கு வெளிப்படுத்திக் காட்டுவதாகக் கூறப்படும் இவ்வித வஞ்சகங்களுக்கு நேராய் அவர் நம்மை முன்னதாகவே எச்சரித்திருக்கிறார். அதற்கு மாறாக, "மின்னல் (சூரியன்) கிழக்கி-ருந்து தோன்றி, மேற்கு வரைக்கும் (ஒரு பிரத்தியேக இடத்தில் அல்லது ஒரு அந்தரங்க அறையின் எல்லைக்கு உட்பட்டோ அல்ல) பிரகாசிக்கிறது போல (எல்லா இடங்களிலும்) தொலைவிடங்களிலும் மனுஷ குமாரனுடைய பிரசன்னமும் இருக்கும்."

நமது கர்த்தருடைய வெளிப்பாடு அவரது இரண்டாம் வருகையில் - ஒரு அறைக்குள்ளோ அல்லது வானந்தரத்திலோ, பாலைவனத்திலோ ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துக்காக மட்டுமோ இருக்காது அல்லது முதல் வருகையின் போது இருந்ததைப் போல் ஒரே ஒரு தேசத்துக்காகவும் இருக்காது; ஆனால் அது ஒரு பொதுவான உலகமனைத்துக்கும் உரிய வெளிப்பாடாகவே இருக்கும். "உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்." இதுவே நீதியின் சூரியனிடத்தி-ருந்து வருகிறதான சத்தியத்தை தேடும் ஒளி கிரகணங்கள் - இது ஏற்கெனவே இருளின் மீது பிரகாசித்து மீறுதல்களையும், எல்லாவிதமான களங்கங்களையும் கண்டுபிடித்து, மனிதரிடையே மிகுதியான குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே வெளிப்பாடு என்பது ஏதாவது வருமேயாகில் அது வெளிச்சமாகத்தான் இருக்கும். மேலும் அதுவே உலகத்தின் மாபெரும் வெளிச்சமாகிய கிறிஸ்து (முடிவில் அவரோடு கூட அவரது சபையும் சேர்ந்தாதகவும் இருக்கும்). அவர் இருளி-ருக்கும் மறைபொருட்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதன் மூலம் மனுக்குலத்தை ஆசீர்வதிப்பார். ஏனெனில் வெளிப்படாத மறைபொருள் ஒன்றுமில்லை. "அந்த நாள் இதை அறிவிக்கும்." மேலும் கிழக்கி-ருந்து மேற்கு வரை சூரியன் பிரகாசிக்காத நாள் ஒன்று என்பதே இருக்காது. "உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற (ஏற்ற வேளையில்) ஒளியே அந்த மெய்யான ஒளி."



*(மத் 24:28 ஐ 41ம் வசனத்தின் முடிவாகவும் மத்தேயுவின் குறிப்புகளுக்கு மாற்கு, லூக்காவின் வார்த்தைகள் ஒத்துப் போவதையும் நாம் சோதிப்போம்)*

## சூரியனும் சந்திரனும் அந்தகாரப்படும் அடையாளங்கள்

*"அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்தி-ருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்." மத் 24:29; மாற் 13:24,25*

"அந்நாட்களின்" உபத்திரவமானது அந்நாட்களின் முடிவில் இந்த யுகமும் அறுவடையும் முடியும்போது உண்டாகும் உபத்திரவத்தி-ருந்து தெளிவாய் வேறுபடுத்திக் காட்டப்படவேண்டும். ஆனால் லூக்காவின் குறிப்புகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவைகள் மத்தேயு மற்றும் மாற்கின் பதிவுகளில் அத்தனை தெளிவாய் விளக்கப்படவில்லை என்று தெரிகிறது. இவை சுவிசேஷ யுகத்தின் நிகழ்வுகளைச் சுருக்கமாய் தொகுத்திருக்கிறது. "அந்நாட்களின் உபத்திரவத்தை" தவிர்த்து யுகத்தின் முடிவிலான மற்ற உபத்திரவங்களை மட்டுமே குறிப்பிடப்பட்டிருப்பதும் காணப்படுகிறது. அவர் கூறுவதாவது:

*"பட்டயக் கருக்கினாலே (யூதர்கள்) விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும். சூரியனிலும், சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத்*

*தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்." லூக் 21:24-26*

உண்மையென்னவெனில், சுவிசேஷயுகம் முழுவதுமே ஒரு உபத்திரவ காலம் என்று மத் 24: 9-12 லும் வசனம் 29லும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (1) ஆதி சபையானது ரோம அரசாங்கத்தால் துன்புறுத்தப்பட்டது. அதன் பிறகோ, போப்பரசு ரோம் அதிகாரத்தை பெற்றவுடன், அதனுடைய அருவருப்புகளை அங்கீகரிக்க மறுத்தவர்கள் யாவரும் அவளால் (யேசபேல்) நேரடியாகவும் தான் மணமுடித்துக் கொண்ட (ஆகாப்) அரசாங்க அதிகாரத்தினால் மறைமுகமாகவும் துன்புறுத்தப்பட்டனர். அவளது அதிகாரத்துக்கு அவர்கள் ஒப்புவிக்கப்பட்டனர். அவள் மிக உன்னதமானவரது பரிசுத்தவான்களை காலம், காலங்கள் மற்றும் அரைக்காலம் மட்டும், 1260 ஆண்டுகள், கி.பி.1799 வரையிலும் ஒடுக்கினாள். மேலும் இந்த நீண்டதொரு துன்புறுத்த-ன் போது, "அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு புடமிடப்பட்டவர்களாய் விளங்கினார்கள்." மேலும் அந்த வேசிகளின் தாய் "பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருந்தாள்." (வெளி17:6) இது ஏற்கெனவே காண்பிக்கப்பட்டிருக்கிறபடியே நடைமுறையில் 1776லும் உண்மையில் 1799ல் போப்பும் அவரது அதிகாரமும் உலகத்தின் முன் அவமானப்படுத்தப்பட்ட போது முடிவுக்கு வந்தது. (தொகுதி 2. அத்தி.9 & தொகுதி 3, அத்தி.4)

"அந்நாட்களின்" உபத்திரவத்தைப் பற்றி நமது கர்த்தர் குறிப்பிட்டிருந்த அடையாளங்களே இவைகள் என்று புரிந்து கொண்ட பின்பு - அடையாளங்கள் என்று மிகவும் திட்டமாக விளக்கப்பட்டிருக்கும் சூரியனும், சந்திரனும் அந்தகாரப்படுவது மற்றும் நட்சத்திரங்கள் விழும் என்பதை குறித்து நாம் ஆராயலாம். இந்த அடையாளங்கள் நேரடியாய் அர்த்தம் கொள்ளப்படவேண்டுமா அல்லது அடையாளமாய் கூறப்பட்டவையா? மேலும் இவை இன்னும் நிறைவேறித் தீர வேண்டியிருக்கிறதா?

நாம் கூறும் பதில், அவைகள் ஒரு நேரடியான



நிறைவேறுதலைப் பெற்றவையாகவும், மேலும் தற்போது மிக முக்கியமான ஒரு அடையாள நிறைவேறுதலையும் உடையதாக இருக்கிறது என்பதே.

மே மாதம் 19ம் தேதி, 1780 ம் வருடத்தில் ('அந்நாட்களில்' அந்த 1260 வருட போப்பரசு அதிகாரத்தின் போதே, அந்த அதிகார செல்வாக்கை இழக்கத் தொடங்கி, உபத்திரவத்தின் தாக்குதல் கடந்துபோன பிறகு) சூரியன் அந்தகாரப்பட்ட ஒரு அபூர்வம் நிகழ்ந்தது. அதற்கான காரணத்தை அந்தகாலத்து விஞ்ஞானிகளோ அல்லது இதுவரையிலும் உள்ளவர்களோ கூறமுடியவில்லை. இது ஒரு சாதாரண சம்பவம் அல்ல என்பதை நிரூபிக்க மட்டும் கீழ்க்கண்ட சாட்சிகள் போதுமானவைகளாய் இருக்கின்றன.

மிகவும் பிரபலமான வானசாஸ்திர வல்லுநர் "ஹெர்ஷெல்" கூறுகிறார்:

"வட அமெரிக்காவின் அந்த இருண்ட நாள் எப்போதுமே ஆர்வத்தோடு படிக்கக்கூடிய ஒரு விசித்திரமான இயற்கையின் அபூர்வங்களில் ஒன்றாக இருந்தது; ஆனால் இதற்கு விளக்கமளிக்க தத்துவத்தினால் முடியவில்லை."

வெப்ஸ்டர் அகராதியில் 1869ம் ஆண்டின் பதிப்பில், "பிரபலமான பெயர்களின் சொல் அகராதியின்" தலைப்பின் கீழ் கூறுவது:

"அந்த இருண்ட நாள் மே 19, 1780ம் ஆண்டு - இந்த குறிப்பித்தக்க விசேஷமான இருளான அந்த நாள் புது இங்கிலாந்து (அமெரிக்காவின் வடகிழக்கு பகுதி) முழுவதும் பரவியிருந்தது. சில இடங்களில், சாதாரண அச்சு எழுத்துக்களைத் திறந்த வெளியிலும் கூட பல மணி நேரம் ஜனங்களால் படிக்க முடியாமல் போனது. பறவைகள் அவைகளின் மாலை நேரப் பாடலைப் பாடி மறைந்துபோய், அமைதலாகிவிட்டன; கோழிகளும் தங்களுடைய தங்குமிடத்துக்குப் போய்விட்டன; கால் நடைகளோ தொழுவங்களை தேடிப் போயின; மேலும் வீடுகளில் மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டன. இந்த இருளானது காலை 10 மணியளவில் தொடங்கி, மறுநாள் நடு இரவு வரைக்கும் தொடர்ந்தது. ஆனால் வெவ்வேறு இடங்களில் வெவ்வெறு கால அளவுகளில் காணப்பட்டது."

அமெரிக்காவின் வடகிழக்கு மாகாணத்தின் சட்டசபையானது அந்த சமயம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது அன்று ஒத்திவைக்கப்பட்டது. சபையின் குறிப்பில் இந்த காரியம் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"ஒரு தீவிரமான இருளின் அசாதாரண கருமை 10 மணிக்கு முன் ஆரம்பமாகி - பதினோரு மணிக்கு முன் வடக்கி-ருந்த மேற்கு வரை இன்னும் அதிகமான கரிய மேகங்கள் கரிய திரையை போட்டது. வெளிச்சம் இல்லாது போனதால், தங்கள் வீடுகளிலும், ஜன்னலருகேயும் கூட ஒருவராலும் வாசிக்கவோ எழுதவோ முடியவில்லை; அல்லது வெகு அருகில் இருப்பவரை அடையாளம் காணவோ, அருகாமையில் இருப்பவரது உடைகளின் வேறுபாட்டை காணவோ முடியவில்லை ; அதன் காரணமாய் சட்ட சபையானது வெள்ளிக்கிழமை மே மாதம் 19ம் தேதியின் பகல் பதினோரு மணிமுதல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டது."

அந்நாட்களின் ஊழியக்காரரான, நேரடியான சாட்சியான போதகர் இலாம் போட்டர், இதற்கு 9 நாட்கள் கழித்து அம்மாதத்தின் 28ம் தேதி பிரசங்கித்த போது கீழ்க்கண்ட வாசகங்களை உபயோகித்ததாகக் கூறப்படுகிறது:

"விசேஷமாய் நான் அந்த ஆச்சரியமான மே 19ம் தேதியின் இருளின் சம்பவத்தை குறிப்பிடுகிறேன். பிறகு, நமது வசனத்தில் சூரியன் இருளடைந்தது என்றிருக்கிறது; இப்படிப்பட்டதொரு இருள் ஏறக்குறைய நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதி-ருந்து இதுவரை என்றுமே ஏற்பட்டதில்லை. ஜனங்கள் வீடுகளிலும், வயல்களிலும் தங்கள் வேலைகளை கைவிட்டனர்; பிரயாணங்கள் நிறுத்தப்பட்டன; பள்ளிகள் 11 மணிக்கு மூடப்பட்டன; பகல் வேளையில் மக்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றினர்; நெருப்பு இரவில் தெரிவது போல் ஜொ-த்தது. என்னிடம் சிலர் தாங்கள் திகில் அடைந்ததாகவும், நியாயத்தீர்ப்பின் வேளை நெருங்கி வந்துவிட்டதோ எனவும் கூறினார்கள். அதைத் தொடர்ந்து அன்றைய இரவும் கூட விநோதமான இருட்டுடன் இருந்தது. நமது வசனத்தின் பகுதியில் கூறப்பட்டதைப் போலவே நிலவு முழுமையாய் இருந்த போதும் அது வெளிச்சத்தை கொடுக்கவில்லை."



கைப்பிரதி எண்:379 , அமெரிக்க கைப்பிரதி கழகத்தால் பிரசுரிக்கப்பட்ட "எட்வர்டு லீயின்" வாழ்க்கை வரலாறு கூறுவதாவது:

"1780 மே மாதத்தில், எல்லாருடைய முகங்களும் ஒட்டு மொத்தமாய் இருளடைந்து போகும்படியானதொரு மிகவும் பயங்கரமான இருளான நாளாக இருந்தது. ஜனங்கள் முற்றிலுமாக பயத்தால் நிரம்பியிருந்தனர்.எட்வர்ட் லீ வாழ்ந்த கிராமத்தில் மாபெரும் துயரம் உண்டானது; மனிதருடைய இருதயமோ நியாயத்தீர்ப்பின் நாள் நெருங்கிவிட்டது என்று பயத்தினால் தொய்ந்து போனது; அதோடு கூட, இந்த பரிசுத்தவானை அண்டை அயலார் எல்லாம் கூட்டமாய் சூழ்ந்துக் கொண்டனர். ஏனெனில் அந்த அசாதாரண இருட்டின் மத்தியில் அவரது விளக்கு சீராக்கப்பட்டு, கூடுதலான ஒளியுடன் ஜொ-த்தது. தேவனுக்குள் சந்தோஷமாய் களிகூர்ந்து, வரப்போகிற ஆக்கினையி-ருந்து புக-டம் தரக்கூடியவர் தேவன் ஒருவரே என்பதை அவர்களுக்கு சுட்டிக்காட்டி, வருத்தம் நிறைந்த திரளானவர்களுக்காக ஜெபத்தில் அந்த இருளுள்ள நேரத்தைச் செலவழித்தார்."

நீதிபதி ஆர்.எம். டெவினஸ் அவர்களின் "நமது முதலாம் நூற்றாண்டு" என்ற புத்தகத்தி-ருந்து நாம் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகிறோம்:

"ஒட்டுமொத்தமாய் இல்லாவிடினும், ஏறக்குறைய கடந்த நூற்றாண்டில் மிகவும் மர்மமான, இதுவரையிலும் விளக்கிக் கூறமுடியாத ஒரு அதிசயமானதொரு விதமாக, இயற்கையின் பற்பல நிகழ்வுகளிலேயே குறிப்பிடத்தக்கதாய் 1780, மே 19ம் நாளின் இருட்டான தினம் நிற்கிறது. புதிய இங்கிலாந்தின் வானமண்டலத்திலும் ஆகாயத்திலும் முழுவதுமாய் காணக்கூடியதொரு விவரிக்க முடியாத இருளாய் அது இருந்தது. இது திரளானவர்களின் உள்ளத்தில் கடுமையான அபாய எச்சரிப்பையும் துயரத்தையும் கொண்டுவந்தது. அதே விதமாக மிருக ஜீவன்களுக்குள்ளும் திகைப்பூட்டியபடியினால் பட்சிகள் திகைப்படைந்து புக-டம் தேடி ஓடின. கால்நடைகளும் தொழுவங்களுக்கு ஓடின. உண்மையில் அந்நாட்களில் ஆயிரக்கணக்கான நன்மக்கள் - இவ்வுலகின் எல்லா காரியங்களும்

முடிவுக்கு வந்துவிட்டன என்ற நம்பிக்கைக்கு முழுமையாய் வந்துவிட்டனர். அநேகர் தங்களுடைய இவ்வுலக தொழில்களை அந்நேரமே கைவிட்டு, மத பக்திக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தனர். அது ஒரு ஆச்சரியமான இருண்ட நாள்."

நீதிபதி சாமுயேல் டென்னி,எல்.எல்.டி., என்பவர் "சரித்திர கழகத்துக்கு"1785ல் இந்த "இருண்ட நாளைக்" குறித்து எழுதினார்.

"இந்த அபூர்வ தோற்றமுடைய சம்பவத்துக்கான கேள்வியை தீர்த்துவைக்க உண்மையிலேயே திறமைமிக்கவரான அநேக கனவான்கள் தொடர்ந்து முயன்றும் கூட இதுவரையிலும் ஒரு திருப்திகரமான தீர்வு கிடைக்கவில்லை என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்."

நோவா வெப்ஸ்டர், எல்.எல்.டி., 1843ல் எழுதிய, நியூ ஹெவன் ஹெரால்டில், இந்த இருண்ட நாளைக் குறித்துச் சொல்லும் போது. "ஆச்சரியமாக அந்த சம்பவத்தை நான் நின்று பார்த்தேன். இதுவரையிலும் திருப்திகரமான காரணம் ஏதும் காட்டப்படவில்லை" என்கிறார்.

போதகர் எட்வர்ட் பேஸ். டி.டி.,வெர்மென்ட்டின் முதலாவது எபிஸ்கோப்பல் பிஷப்பான இவர் 1780 ன் மே 19ம் தேதியின் நாட் குறிப்பில் எழுதியிருப்பது: "இருட்டு என்பதைக் குறித்த மனிதனுடைய ஞாபகார்த்தத்துக்கு இந்த நாள் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்."

அந்த நாளைத் தொடர்ந்து வந்த இரவில் முழுமையாய் இருளடைந்த நிலவின் காரியம் - அந்நாளின் சூரியன் இருளடைந்ததைக் காட்டிலும் சற்று குறைத்துக் குறிப்பிடும்படியானதாகவே இருந்திருக்கிறது. எக்ஸ்டர் பட்டணத்தின் நீதிபதி டென்னி, ஒரு சாட்சியாக கீழ்க்கண்டவற்றை கூறுகிறார்:

"தொடர்ந்து வந்த அன்று மாலை நேரத்தினுடைய இருட்டு சர்வ வல்லமையுள்ள தேவன் வெளிச்சத்தை முதன்முத-ல் உண்டாக்கின பிறகு அநேகமாய் இதுவரையிலும் காணப்படாத வகையிலானதொரு அடர்த்தியான காரிருளாய் இருந்தது. ஊடுருவமுடியாத இருளில் உலகில் உள்ள அனைத்து ஒளிவிடும் வஸ்துக்களும் சவச்சீலையால் மூடப்பட்டு விட்டதோ, அல்லது அழிந்து போனதோ என்று கற்பனை செய்வதை அந்த நேரத்தில் என்னால் கட்டுப்படுத்த முடியாமல் போனது. இத்தனை முழுமையானதாக இதுவரை இருள் இருந்திருக்கவே முடியாது. கண்ணுக்கு சில அங்குல தூரத்திலே பிடிக்கப்பட்ட ஒரு வெள்ளைத் தாள், ஒரு கருப்பு பட்டுத் துணிக்கு சமமானதாகவே, கண்ணுக்கு புலப்படாததாய் இருந்தது."



விவரிக்க முடியாத இந்த நாள், கர்த்தருடைய அடையாளம் என்பதைத் தவிர, பாலஸ்தீனத்தின் பரப்பளவைவிட ஏறக்குறைய 25 மடங்கு கூடுதலான பரப்பளவிற்கு - 320,000 சதுர மைல் தூரத்துக்கு இது பரவியிருந்ததாக நம்பப்படுகிறது. முதலாம் வருகையின் அடையாளங்களோ இதனோடு ஒப்பிட்டால் ஒரு குறிப்பிட்ட அளவிலேயே இருந்தது. உண்மையில் (மத் 25:1-5)ன் கன்னிகைகளிடையேயான முதல் இயக்கத்தை நினைவு கூறும் போது இந்த இருளின் எல்லைப் பரப்பு புதிய இங்கிலாந்து மற்றும் மத்திய பிரதேசத்திலும் குறிப்பாக அதே இடம் தான் என்பது தெரிகிறது. "சுதந்திர பூமியான" இந்தப் பகுதியை தேவன் உபயோகித்து உலகுக்கு இந்த அடையாளங்களின் செய்தியை அனுப்புவது என்பது ஆச்சரியமான ஒன்று அல்ல. ஏனெனில் இதே பகுதியி-ருந்துதான் அநேக நவீன ஆசீர்வாதங்களையும், கண்டுபிடிப்புகளையும், பாடங்களையும் உலகம் முழுவதும் அறிந்து கொள்ளும்படியாக அனுப்பி வைப்பதில் அவர் பெரிதும் மகிழ்ச்சியடைகிறார். மேலும் மாபெரும் பிரென்சு கலைஞர், "பார்த்தோல்டி"யின் நியூயார்க் துறைமுகத்துக்கான - "சுதந்திர தேவியின்" அல்லது "உலகுக்கு ஒளி ஊட்டும் சுதந்திர" சிலையின் அன்பளிப்பால் இது சமயோசிதமாக முத்திரை பதிக்கப்பட்டிருக்கிறது.

## நட்சத்திரங்கள் விழுதல்

வானத்தி-ருந்து நட்சத்திரங்கள் விழும் என்ற அந்த அடுத்த "அடையாளம்" தோன்றுவதற்குமுன் பாதி நூற்றாண்டு கடந்துவிட்டது. பலமான காற்றினால் அசைக்கப்படும் போது அத்திமரமானது தன்னுடைய பழுக்காத கனிகளை உதிர்த்துவிடுவது

போல் இது இருந்தது. 1833, நவம்பர் 13ம் தேதியின் அதிகாலை நேரத்தில் அற்புதமான எரிநட்சத்திரங்களின் பொழிவில் நமது கர்த்தருடைய வார்த்தைகள் ஒரு நிறைவேறுதலை (நாம் பின்வரும் படியாய் பார்க்கப்போவது போல், முழுமையான ஒன்றாக இல்லாவிடினும்) கண்டது. "நிலையாக ஸ்தாபிக்கப்பட்ட நட்சத்திரங்கள் விழவில்லை என்பதாக நினைக்கத் தூண்டும் சிலேடை பேச்சுக்கு கவனத்தைச் செலுத்துபவர்களுக்கு நிலையான நட்சத்திரங்கள் விழுவதைக் குறித்து நமது கர்த்தர் ஏதும் சொல்லவில்லை என்பது நினைவுறுத்தப்படுகிறது. மேலும் நிலையாக ஸ்தாபிக்கப்பட்ட அந்த நட்சத்திரங்கள் விழ முடியாது; அவைகளின் வீழ்ச்சியென்பது - அவைகள் ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்படாதவைகள் என்பதையே நிரூபிக்கக்கூடும். தற்காலத்தில் உள்ளது போல் நட்சத்திரத்துக்கும், எரி நட்சத்திரத்துக்கும் இடையேயான வேறுபாட்டை, வேதம் கூறுவதில்லை."

எரி நட்சத்திரங்கள் விழுவதும் மற்றும் கந்தக நெருப்பு மழையும் கூட ஒவ்வொரு வருடம் நடக்கின்ற சாதாரணமான காரியம். சில வருடங்களில் மற்ற வருடங்களைக் காட்டிலும் அதிகமாக நடைபெறுகிறது. வருடத்துக்கு ஏறக்குறைய 4 லட்சம் சிறு எரிநட்சத்திரங்கள் நமது பூமியின் மேல் விழுவதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் 1833, நவம்பர் 13ம் தேதியின் லட்சோபலட்சம் எரிநட்சத்திர வீழ்ச்சியானது இவைகளோடு ஒப்பிடவே முடியாத ஒரு மாபெரும் பொழிவாகும்.

பேராசிரியர் கெர்க்வுட், மெட்டிராலஜி என்ற தலைப்பில் தனது எழுத்தில் கூறுவதாவது: "கடந்த நூற்றாண்டின் முடிவு வரைக்கும் அவை (எரி நட்சத்திர மழை) விஞ்ஞானிகளின் கவனத்தை என்றுமே கவர்ந்ததே கிடையாது."

பேராசிரியர் டி.ஆம்ஸ்டட், எல். எல்.டி. யேல் கல்லூரியை சேர்ந்தவர். "நியுஹெவன் பிரஸ்"சில் எழுதியதாவது:

"1883 நவம்பர் 13ம் தேதி காலை நேரத்து நட்சத்திர பொழிவின் காட்சியை காணும்படி பெரும் சிலாக்கியம் பெற்றவர்கள்,



ஏறக்குறைய இவ்வுலகம் உண்டாக்கப்பட்டது முதலாய் கண்டிராத மாபெறும் வானமண்டலத்து வான வேடிக்கையாகும். சரித்திர ஏடுகளினால் பொறிக்கப்பட்டிராத, நடந்திராத காட்சியாகக் கண்டனர்... இதை ஒரு பூமிக்குரிய காரியமாக இனிமேலும் கருதமுடியாது, இது வானத்துக்குரியதொரு சம்பவம், ஆகாயமண்டலத்தின் மேற்பரப்பில் மிகச் சாதாரணமாக உற்பத்தியாகும் ஒன்று என்ற கண்ணோட்டத்தில் இந்த நட்சத்திர வீழ்ச்சியானது இனிமேலும் கவனிக்கப்படாது; ஆனால் பிற / வேற்று உலகத்துப் பார்வையாளராகவோ அல்லது கிரகங்களின் வெறுமையி-ருந்துதான் கவனிக்கக்கூடும்."

திரு.ஹென்றி டேனா வோர்ட், ஒருகாலத்தில் நியூயார்க்கின் வியாபாரியும், பின்பு ஒரு எழுத்தாளரும் எப்பிஸ்கோபல் சபையின் ஊழியருமானவர் எழுதியதாவது:

"நேற்று காலையின் சம்பவத்தைப் போன்ற ஒன்றை எந்த வேதாந்தியோ, பண்டிதரோ, சொல்லவோ, எழுதிப்பதிவு செய்யவோ இல்லை என்று நான் நினைக்கிறேன். ஒருவேளை நட்சத்திர வீழ்ச்சியை, நட்சத்திரம் வீழ்ச்சியானது எப்படி என்று புரிந்து கொள்ள கஷ்டபடுவோமாகில், பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு தீர்க்கதரிசி மிகச் சரியாகவே முன்கூறியிருக்கிறார்... உண்மையில் வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ளது போலவே வானத்து நட்சத்திரங்கள் பூமியின் மேல் வீழ்ந்திருக்கின்றன. தீர்க்கதரிசியின் இந்த மொழியானது எப்பொழுதுமே உருவக மொழியிலேயே ஏற்கப்படுகின்றன. நேற்றோ அது உண்மையிலேயே நிறைவேறி விட்டது." ஜர்னல் ஆஃப் காமர்ஸ், நவம்பர் 14, 1833.

அமெரிக்கன் சைக்கிளோபிடியா தொகுதி x1 பக்கம் 431 ன் குறிப்பி-ருந்து நாம் கீழ்கண்டதை சுட்டிக்காட்டுகிறோம்.

"1833ம் ஆண்டு என்பது அதனுடைய மாபெரும் அற்புதமான நிகழ்ச்சியின் நிமித்தம் மறக்க முடியாத ஆண்டாக இருக்கிறது. இது நவம்பர் 12ம் தேதியின் இரவில் அமெரிக்க ஐக்கிய நாடு முழுவதிலும், மெக்சிகோவின் ஒரு பகுதி மற்றும் மேற்கிந்திய

தீவுகளி-ருந்தும் காணக்கூடிய ஒன்றாய் இருந்தது. சிறிய எரி நட்சத்திரங்கள் உறைபனியைப் போல் பரஸ்பர தீக்கோடுகளை அதன் வழி நெடுகிலும் உருவாக்கியதோடு கூட இடையிடையே கலந்து வந்த பெரிய நெருப்புக் கோளங்கள் சீறிப் பாய்ந்து 30 அல்லது 40 கோணம் கொண்ட வட்டவில்களை ஒரு சில விநாடிகளில் வரைந்தன. இவை பின்னால் பிரகாசமான வால் போன்றவைகளை விட்டு சென்றன. அவைகள் அநேக நிமிடங்களுக்கு சில சமயம் அரைமணி நேரத்துக்கும் அதிகமாகக் காணக்கூடியவைகளாக நின்றன. அதில் வட கரோ-னாவில் காணப்பட்ட ஒன்று நிலாவைக் காட்டிலும் அளவில் பெரியதும், அதிகப்படியான பொ-வுடனும் இருந்தது. பிரகாசமான கோளங்களில் சில ஒழுங்கற்ற வடிவத்திலும் குறிப்பிடும்படியாய் அதிகப்படியான நேரத்துக்கு ஒளிக்கீற்றுகளை கக்கிக்கொண்டும் காணப்பட்டன. நயாகரா பகுதியின் காட்சியானது விசேஷமான பொ-வுடனும் ஒருவேளை இதைவிட பயங்கர கம்பீரமும், வியப்பும் நிறைந்த அதிசய காட்சி இதுவரை மனித கண்கள் முன் நடந்து இருந்திருக்காது. வானவெளியே கருத்த, பேரிரைச்சலுள்ள நீர் வீழ்ச்சியின் மீது தீப்பறக்கும் பிரவாகமாய் இறங்கிவந்ததைப் போல் அது இருந்தது. ஒருவேளை எல்லா எரிநட்சத்திரத்தின் கோடுகளையும் கண்டுபிடித்து அவைகளை வானத்தின் ஒரு பகுதியில் குவித்தால் அது -யோனிஸ் மெஜாரிஸ் (Leonis Majoris) போல் இருக்கும் என்று கருதப்படுகிறது. இந்த புள்ளி நட்சத்திரங்களின் பிரதியட்சமான இயக்கம் பூமியோடு சேர்ந்து கிழக்கு நோக்கி நகர்வதற்குப் பதில் மேற்கு நோக்கிச் செல்லுகிறது. எனவே எரி நட்சத்திரங்கள் புறப்பட்டு வந்த இடமானது பூமியோடு தொடர்பு இல்லாத, சம்பந்தப்படாத சுயேச்சையான ஒன்று என்பதும், நமது வான மண்டலத்துக்கு புறம்பான ஒன்று என்பதும் இவ்விதமாய் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

பேராசிரியர் வோன் ஹம்போல்ட் "பர்சனல் நரேட்டிங்" என்று இந்த ஆச்சரிய சம்பவத்தைக் குறித்த தனது 15 பக்க விளக்கத்தை சமர்ப்பிக்கிறார். இதில் இந்த காரியம் 11 மில்-யன் சதுர மைல் பரப்பளவிற்கும் அதிகமாக காணக்கூடியதாக இருந்தது என்று உறுதியாகக் கூறுகிறார்.



எம். பூப்லேண்ட் என்ற பிரெஞ்சு அறிஞர் ஹம்போல்ட் உடன் சேர்ந்து இதைக் குறித்து சாட்சி கூறுகிறார். அவர் கூறுவதாவது: "ஒவ்வொரு முறையும் சந்திரனைப் போன்று மூன்று மடங்கு விட்டத்திற்கு சமமான விண் வெளிப்பரப்பு இது போல் விழும் நட்சத்திரங்களால் நிரப்பப்படாமல் இருந்ததில்லை."

1866ல் மறுபடியும் நடந்த இதே போன்ற புதிய சம்பவத்துக்கு ஒரு குறிப்பிட்ட எல்லை இருந்தது. ஆனால் 1833ன் சம்பவமோ "அடையாளம்" என்பதன் நோக்கத்தைப் பூர்த்தி செய்துவிட்டதாகக் காணப்பட்டது. மணவாளனைச் சந்திக்க முதலாவது எழும்புகிற மணவாட்டிக்குக் குறிப்பிடத் தகுந்த நிரூபணமாயிருக்கிறது. இது அடுத்த அத்தியாயத்தில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது. (மத் 25:1-5)

## அடையாளமான நிறைவேறுதல்கள்

சொல்லர்த்தமான இந்த அடையாளங்கள் கடைசி காலத்தின் பொதுவான கவனத்தை ஈர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டதின் நோக்கத்தை நிறைவேற்றின. அடையாளமான நிறைவேறுதல்கள் மானசீக, ஆவிக்குரிய அறிவு உணர்ச்சியை விழிப்படையச் செய்து அதை மதிக்கக்கூடியவர்களுக்கு மிகவும் விருப்பமுடையதாக இருக்கின்றன.

சூரியனானது சுவிசேஷ வெளிச்சமாகிய சத்தியத்தையும் - அதன்மூலம் இயேசு கிறிஸ்துவையும் குறிக்கிறது. சந்திரன் மோசேயின் பிரமாணத்தை அடையாளப்படுத்துகிறது. அது சூரிய ஒளியின் பிரதிப-ப்பாய் இருக்கிறது போலவே நியாயப்பிரமாணமானது சுவிசேஷத்திற்கு ஒரு நிழலாய் அல்லது பிரதிப-ப்பாக இருக்கிறது. நட்சத்திரங்கள் சபையின் எழுச்சிமிகுந்த போதகர்களை - அப்போஸ்தலர்களை அடையாளப்படுத்துகிறது. வானம் என்பது ஏற்கெனவே காண்பிக்கப்பட்டது போல், கிறிஸ்தவ மண்டலத்தின் சபை அதிகாரங்களுக்கு அடையாளமாக இருக்கிறது. இந்த அடையாளங்களின் ஒரு இணைப்பு வெளி 12:1ல் காணப்படுகிறது.

இதில் ஆதி சபையானது ஸ்திரீக்கு அடையாளமாகவும்,

மேகங்களால் சூழப்படாத முழுமையான மிகத்தெளிவான சுவிசேஷ ஒளிக்கு அடையாளமாக சூரியனை அவள் அணிந்திருப்பதும் காண்பிக்கப் பட்டிருக்கிறது. தன்னுடைய ஒளிக்கு தானே காரணமற்ற சந்திரன் அவளது காலடியில் இருப்பது, அந்த சபையைத் தாங்கி நிற்கிறதான நியாயப் பிரமாணத்தைக் குறிக்கிறது. அவளது தலையின் கிரீடத்திலுள்ள 12 நட்சத்திரங்களின் அடையாளம் என்பது (சபை) அவளுடைய தெய்வீக நியமனம் பெற்ற எழுச்சிமிக்க போதகர்களாகிய அந்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களைக் குறிக்கிறது.

இந்த அடையாளங்களின் அர்த்தத்தின் குறிப்புகளை நமது மனதில் வைத்துக் கொண்டு, இந்தயுகத்தின் முடிவை குறிப்பிடும்படியான நமது கர்த்தருடைய மேன்மையான அடையாளங்களின் தீர்க்கதரிசனத்தின் விசேஷ அம்சங்களை நாம் மீண்டும் ஆராய்வோமாக.

நாம் எங்கு பார்த்தாலும் ஒரு உண்மையை உணரக்கூடும். அதென்னவெனில், தற்காலத்தில் தேவனுக்குத் தன்னை அர்ப்பணம் செய்த ஜனங்கள் விசேஷமாக போஷிக்கப்பட்டு, விழிப்படையச் செய்யப்படுகிறார்கள். ஆனால் பெயர்ச் சபைகளில் அவ்விதமாய் காணப்படவில்லை என்பதாகும். அந்த சபைகளின் சூரியன் இருளடைந்திருக்கிறது. அதன் சந்திரன் இரத்தமாய் மாறிப் போயிருக்கிறது. அதனுடைய நட்சத்திரங்களோ வீழ்கின்றன. கிறிஸ்துவின் சிலுவையான ஈடுப-யி-ருந்தே சுவிசேஷ வெளிச்சத்தின் மையம் முத-ல் ஆரம்பித்தது; இருப்பினும் போட்டியாக பூஜை ப-யை போப் சபை துணிச்சலாக ஸ்தாபித்தது. ஆனால் தேவனுடைய பரிசுத்தவான்களோ தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்களுக்கும் அவருடைய ஜனங்களின் எல்லா நம்பிக்கைகளுக்கும் காரணமான, ஆசீர்வாதமான இந்த மையத்தை என்றுமே உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தனர். அவைகளுடைய தத்துவங்கள் தங்களுடைய பார்வையி-ருந்து முற்றிலுமாக பெரும்பாலும் மறைக்கப்பட்டிருந்தாலும் கூட அந்த பரிசுத்தவான்கள் அவைகளைப் பற்றிக் கொண்டிருந்தனர்.

மெய்தான், நீண்ட காலமாக ஈடுப-யைப் புரிந்து



கொள்ளாமல் மற்ற சத்தியங்களோடு அதைப் பொருத்திப் பார்க்க அதிலும் விசேஷமாகத் தங்களுடைய மீறுதல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத ஒரு சிலர் இருந்தனர். அப்படிப்பட்டவர்கள் இதை ஏற்க மறுத்துவிட்டனர். ஆனால் 1878ல் இருந்து வேதத்தில் குறிப்பிட்டிருக்கும் சோதனைக் காலமும் - யூதர்களுக்கு கிறிஸ்துவின் சிலுவை ஒரு தடுக்க-ன் கல்லாக மாறிய அவரது முதல் வருகையின் நிராகரிப்பு காலமும் இணையானது. ஆனால் இந்த தடுக்க-ன் கல் இங்கு ஒரு மாபெரும் முன்னேற்றத்தை உண்டாக்கியது. இன்றுவரையிலும் சிலுவையின் ஊழியரில் ஒரு சிறுபான்மையினர் மட்டுமே அதனுடைய மதிப்பை உணர்ந்திருக்கின்றனர் அல்லது பிரசங்கிக்கின்றனர். அதற்கு மாறாக, “கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற ரத்தத்தினால் நாம் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள்” என்பதை மறுக்கிற அல்லது ஏற்றுக் கொள்ளாத போதனைகளே இப்போது பெரும்பாலும் இருக்கின்றன. பாவிகளுக்காகக் கிறிஸ்துவின் அர்ப்பணம் அவரது வசனங்களும் அவரது முன்னுதாரண வாழ்க்கையுமே என்று கூறி தத்துவத்தை மாற்றாக வைக்கின்றனர்.

இவ்வண்ணமாக சுவிசேஷத்தின் சூரிய ஒளியானது அனுதினமும் மேன்மேலும் மங்கி வருகிறது. நமது மீட்பின் கிரயமாகிய விலையேறப்பெற்ற இரத்தத்தின் இந்த நிராகரிப்பு அவ்வளவு பொதுவாக பிரசங்க மேடையி-ருந்து பக்தர்களுக்கு அளிக்கப்படாவிட்டாலும் கூட, தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கனத்தோடு நீண்டகலமாக புனிதமாக கருதப்பட்ட கள்ள போதகங்களும் சேர்ந்துகொண்டு, முதல் வீழ்ச்சி மற்றும் அதற்கான ஈடுப-யின் வேதாகம போதனைகளை மறுக்கிற, பரிணாம கொள்கையில் அதிகமான விழிப்புணர்வு கொண்டிருந்த பெரும்பான்மையானவர்களை எளிதாக இரையாக்கக்கூடிய ஒரு வழியை மிகவும் சுலபமானதாக மாற்றிவிட்டது. இந்த மாபெரும் வீழ்ச்சியைக் குறித்தும், இந்த காலத்தினுடைய சபையின் விசுவாசம் இருண்டு போவதைக் குறித்தும் வேத வசனங்கள் பல்வேறு வகையில் நம்மை முன்னெச்சரிக்கை செய்கின்றன. ஆதலால் மனுஷகுமாரன் வரும்போது பூமியில் விசுவாசத்தைக் காண்பரோ? (லூக் 18:8)

சங்கீதம் இந்த காலகட்டத்தை விவரிக்கிறது: "உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது." ("கிறிஸ்துவின் சரீர அங்கங்களும் அவரது தெரிந்து கொள்ளப்பட்டவர்களுமான உண்மையுள்ள பரிசுத்தவான்களின் தெரிந்தெடுத்தல் இப்பொழுது வெகுவிரைவில் நிறைவு பெறும்)"சங் 91:7

ஈடுப- போதனையாகிய சூரிய வெளிச்சம் மங்கலாகி வருவதனால் இந்த ஈடுப-யை நிழலாகக் காட்டிய மோசேயின் நியாயப்பிரமாணமான சந்திரனின் ஒளியும் கூட மங்கிவிட வேண்டியதும் அவசியம் ஆகிறது. நியாயப்பிரமாணத்தின்படி இஸ்ரயேலர்கள் செய்துவந்த இரத்தம் சிந்தும் ப-களை காட்டுமிராண்டித்தனமானது என்று போதகர்கள் போதிப்பது இனி புதுமையாக இருக்காது. ஒரு காலக்கட்டத்தில் தேவனுடைய வார்த்தையின் சத்திய வெளிச்சத்தில் அவர்கள் பார்த்தபோது இஸ்ரயேலரது ப-கள் பாவத்துக்குரிய "மேலான ப-களின்" நிழலாய் இருக்கிறது என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளை அவர்கள் மதித்தனர்; ஆனால் இப்பொழுது ஈடுப-யின் உண்மைப் பொருளை நிராகரித்தும், எல்லாவிதத்திலும் ப- தேவைப்படுகிற அந்த உண்மையான பாவத்தை மறுத-த்தும் - அந்த நிழலான ப-கள் மறுக்கப்பட்டு மிருகத்தனமானவை என்றும் கருதப்படுகின்றன. இவ்வண்ணமாய் சுவிசேஷ சூரிய ஒளியின் மங்கும் தன்மையானது சந்திர ஒளியை மங்கப் பண்ணுகிறது. "சந்திரன் இரத்தம் போலாயிற்று." மேலும் யோயேல் (2:10) இத்தோடு கூறுகிறார்: "நட்சத்திரங்கள் ஒளி மங்கும்." இது குறிப்பிடும் விதத்தில் சுவிசேஷ ஒளி மங்கும்போது, நியாயப்பிரமாணம் என்பது ஒரு அர்த்தமற்ற மிருகத்தனமான ரத்தத்தின் சடங்கு என்று அற்பமாய் எண்ணப்படும் காலம் வரும்போது, தேவனால் நியமனம் பண்ணப்பட்ட சபையின் பன்னிரெண்டு நட்சத்திரங்களின் (அப்போஸ்தலர்களின்) போதனைகளும் கூட பார்வையி-ருந்து மங்கிப் போகும்; வழிகாட்டியாகவோ அல்லது ஒளியாகவோ அறியப்பட்டதும் முற்றிலுமாய் நிறுத்தப்படும்.



நாம் பார்த்த வண்ணமாகவே சபைக்குரிய பன்னிரெண்டு அப்போஸ்தல நட்சத்திரங்களை தேவன் தெரிந்து கொண்டிருக்கிறார், அல்லது நியமித்திருக்கிறார். இவர்களி-ருந்தும் ஒளியாகிய சூரியன் மற்றும் சந்திரனி-ருந்தும் சபைக்கு வெளிச்சம் புறப்பட்டுச் செல்ல வேண்டியிருந்தது. மேலும் அழிவி-ருந்து உண்மையான சபையை ஆசீர்வதித்த அந்த மெய்யான ஒளி தொடர்ந்து சென்றது. ஆனால் பூமியின் மத அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, போப்பரசு பலதரப்பட்ட நட்சத்திரங்கள், "அதிகாரங்கள்," மத சாஸ்திரிகள் ஆகியோரைத் தன்னுடைய (வான) மண்டலத்தில் 'பிரதிஷ்டை' செய்து வைத்திருக்கிறது. மேலும் இவர்களது எண்ணிக்கை எண்ணிலடங்காதவைகளாகும் வரையில், புராட்டஸ்டன்ட் பிரிவினரும் கூட இதேவிதமான காரியங்களைச் செய்தனர். ஆனால் தேவன் தமது உண்மை சபைக்கு உதவும் வகையில் சுவிசேஷகரையும், போதகர்களையும் கொடுத்த போது அவர்களுக்கு வெளிச்சம் அல்லது நட்சத்திரம் என்ற அதிகாரத்துடன் அபிஷேகம் செய்து வைக்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக அதற்காகவே அபிஷேகம் செய்யப்பட்ட சூரியன் மற்றும் சந்திரன் மற்றும் 12 நட்சத்திரங்களி-ருந்து புறப்பட்டுவரும் சத்தியத்தின் ஒளிக்கதிர்களை மட்டுமே ஒளியாக ஏற்றுக் கொள்ளும்படி அவருடைய உத்தமமான சீடர்கள் யாவரும் கற்பிக்கப்பட்டிருக்கின்றனர்.

மற்றெல்லா தேவனுடைய ஜனங்களும் எரிகிற, ஒளிவீசுகிற தீபங்களாய் இந்த யுகத்தில் ஒளி வீசிக்கொண்டிருக்க வேண்டும். மேலும் தங்களுடைய விளக்குகளை மரக்காலுக்கு அடியில் மறைத்து வைக்காமல், பரலோகத்தில் இருக்கும் தங்களுடைய பிதாவை மகிமைபடுத்தும் வகையில் ஒளி வீசவேண்டும். நட்சத்திரம் என்ற (கிரேக்கில் ஆஸ்டர்) வார்த்தை தற்காலத்தில் எந்த உத்தமமான வரையும் (அப்போஸ்தலரைத் தவிர) குறிப்பிடும் வகையில் உபயோகிக்கப்படவில்லை; ஆனால் சத்தியத்தை விட்டு விலகிப்போய் "மதிமயக்கமடைந்தவர்கள்," "கள்ளப்போதகர்கள்," "வீணிலே தன்னை மேன்மைப் படுத்திக் கொள்பவர்கள்," அப்போஸ்தலரைப் போல் அதிகாரத்தைப் பெறும்படி பேராசை கொண்டவர்கள் மற்றும் "மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரங்கள்"

என்றும் “கள்ள அப்போஸ்தலர்” என்றும் பெயரிடப்பட்டவர்கள் ஆகியோரையும் சுட்டிக்காட்டவே உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. *2கொரி 11:13; வெளி 2:2; யூதா 13*

இதற்கு மாறாக, இக்காலத்தின் உத்தமமானவரும், விளக்கின் வெளிச்சம் போல் தாழ்மையாய் பிரகாசிப்பவரும், “வானத்து நட்சத்திரங்களைப் போல்” மகிமை நிறைந்ததும், கனம் பொருந்தியதுமான ஆபிரகாமின் வித்தாக, கிறிஸ்துவினுடனே கூட விரைவில் இருப்பார்கள் என்ற வாக்குத்தத்தமே வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் விரைவிலேயே மகா பெரிய குழப்பத்துடன் அகன்று போகப்போகின்ற இந்த தற்காலத்து “வானத்தில்” இவர்கள் ஜொ-க்காமல் - “புதிய வானமாகிய” - புதிய ஆவிக்குரிய ஆயிரவருட (ஆட்சியில்) ராஜ்யத்திலேயே ஜொ-ப்பார்கள். இந்த வகுப்பினரையும், அதே உயிர்த்தெழுகின்ற நேரத்தையும் குறித்து தானியேல் தீர்க்கதரிசி *(12:3)* கூறுவதாவது: “ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.” அப்போஸ்தலர் பவுல் கூட முதலாம் உயிர்த்தெழுத-ல் சபைக்கு வரப்போகும் மகிமையைக் குறித்து பேசுகிறார். அப்படிக் கூறும் போது,“மகிமையில் நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது போல,” அவர்களது மகிமைகளும் வித்தியாசப்படும் என்கிறார்.

வெளிப்படுத்துத-ல் *(12:1)* வர்ணிக்கப்பட்டிருக்கும் வகையில், தமது சபைக்குண்டான வெளிச்சமாய் வெறும் பன்னிரெண்டு நட்சத்திரங்களை மட்டுமே தேவன் நியமித்திருப்பாரேயாகில், தங்களையே அப்போஸ்தலரின் வாரிசுகள் என்றும் நட்சத்திரங்கள் என்றும் கூறிக் கொள்ளும் போப்புகளும், பிஷப்புகளும் எவ்வளவு பெரிய தவறு செய்கிறார்கள்? மேலும் இப்படி அப்போஸ்தலருக்கு இணையாகவும் அல்லது உண்மையில் மேலானவர்களுமாய், ஒளிவீசுபவராகவும், நட்சத்திரங்களாகவும் தங்களைத் தாங்களே கருதுவதும் பிறரால் மதிக்கப்படுவதும் “கர்வமுள்ள விமர்சனம்” என்றுதான் நிச்சயமாக அழைக்கப்படும்



என்பது மெய்யான ஒன்று அல்லவா? மேலும் தங்களுடைய சொந்த கருத்துக்களைப் பிரசங்கித்து, பல்வேறு விஷயங்களின் மேல் தங்களுடைய சொந்த ஒளியை வீசி, அவைகளுக்கு அப்போஸ்தலரது வார்த்தைகளி-ருந்து ஒரு ரூபகாரத்தைக் கொடுக்க வேண்டிய அவசியத்தைக் கூட அவர்கள் யோசனை செய்தே பார்க்கவில்லை என்பதை இவர்களும் மற்றவர்களும் இதனால் காண்பிக்க வில்லையா? மேலும் ஒருவேளை இவர்கள் மெய்யான நட்சத்திர ஒளியாகிய, அந்த பன்னிரெண்டு அப்போஸ்தலரின் போதனைகளைக் கோடிட்டு அல்லது சுட்டிக்காட்டி பேசுவது, அவைகளைத் தங்களுடைய கருத்தாகவோ அல்லது வெளிச்சமாகவோ உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே என்பதைக் காட்டிலும் அந்த போதனைகள் அப்போஸ்தல நட்சத்திரங்களின் ஒளியாகும் என்று காட்டுவதற்காகவே இருக்கக்கூடுமல்லாவா? மேலும், இந்த“மார்க்கம் தப்பி அலைகின்ற நட்சத்திரங்களான”கள்ள நட்சத்திரங்களின் வெளிச்சம் என்பது பரிசுத்த ஆவியினால் உந்தப்பட்ட பன்னிருவரின் வெளிச்சத்துக்கு மிகவும் எதிரிடையான ஒன்றாகவே வழக்கமாக இருக்கிறது. அதாவது அப்போஸ்தலர்களுடைய எழுத்துக்களி-ருந்து பொருத்தமானதொரு பகுதியை கண்டுபிடிப்பது என்பது அவர்களுக்கு மிகவும் அரிதானதாக இருக்கும்.

சுவிசேஷ சூரிய ஒளியைப் போலவே இந்த உண்மையான நட்சத்திர ஒளியானது நமது கர்த்தருடைய தீர்க்கதரிசனத்தில் இருண்டு, ஒளியிழந்து போனதாகக் கணக்கிடப்படுகிறது; அதே வேளையில், போ- நட்சத்திரங்களும் உலக-ஞானமும், தற்கால வானங்களின் விளக்குகளாக மனிதனால் - நியமிக்கப்பட்டு அவைகள் பூமிக்குரிய நிலைமைக்கு இறங்கி வருவதைப் போன்ற ஒரு பெரிய காட்சியாக வர்ணிக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் இருந்த ஆவிக்குரிய மேன்மையி-ருந்து விலகி, தங்களுடைய போதனைகளில் உலக நெறியாளர் மற்றும் வேதாந்திகளின் நிலைமைக்கு இறங்கி வந்து கிறிஸ்தவ குடியுரிமைக்குரியவைகளான அரசியல் நிலைமைக்கு இறங்கிவிட்டனர்.

அடையாளமான மத அதிகாரமாகிய வானங்கள்

"அசைக்கப்படுதல்" என்பது கிறிஸ்தவ மண்டலத்தின் விளக்குகள் - பொதுவான போதனைகளின் தாழ்ந்த நிலைமைக்கு இறங்கிவருவதைக் குறிப்பிடுவதாக இருக்கிறது. இந்த அசைவு என்பது நாம் எல்லாக் காரியத்திலும் காண்கிறதைக் குறிப்பிடுகிற ஒன்றாக இருக்கும். கிறிஸ்தவ மண்டத்தின் விசுவாசப்பிரமாணங்கள் மற்றும் மாறாத கொள்கைகளில் ஒரு அசைவு, ஏனெனில் அவை தப்பறைகளின் கலவையாய் இருக்கிறது. இதை எப்பொழுது குறிப்பிட்டாலும் குழப்பத்தையே உண்டாக்குகிறது. உதாரணமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட மற்றும் தெரிந்தெடுக்கப்படாத பாலகரைப் பற்றிய போதனை, ஜெயம் கொண்டவர்கள், பரிசுத்தவான்கள் ஆகியோரைத் தவிர மற்றெல்லாருக்கும் வைக்கப்பட்டிருக்கும் நித்திய நரகம் என்ற போதனை போன்றவை.

இதன் விளைவாக பொதுமக்களின் முன் (புகழ்பெற்று) நடித்துக் கொண்டிருக்கும் உலக-ஞானவான்களில் அநேகர் இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றி-ருந்தும் கவனத்தை திருப்பும்படியான எல்லா முயற்சிகளையும் ஏற்கெனவே செய்து கொண்டிருக்கின்றனர். தெரிந்தெடுத்தலை குறித்த உண்மையான அல்லது பொய்யான போதனையை பற்றியோ அல்லது மனுக்குலத்தின் எதிர்கால வாழ்வுக்கான தேவனுடைய முன்னேற்பாடு குறித்த உண்மையான அல்லது பொய்யான போதனையைப் பற்றியோ அல்லாமல் வேறு எந்த விஷயத்தை அவர்களால் காணமுடியும்? மெய்யான, யுகங்களின் தெய்வீக ஏற்பாட்டை அறியாமலும், நரகம் மற்றும் பாலகரின் நரக தண்டனை சம்பந்தமான சச்சரவுக்குரிய காரியங்களில் விழித்துக் கொள்ள விருப்பம் அற்றவர்களாகவும் இருக்கும் இந்த நட்சத்திர அந்தஸ்துடைய பிரசங்கிமார்கள் - உலகத்தின் கவனமே தங்களை நோக்கி இருக்கும்படியாக எதை இவர்களால் பிரசங்கிக்க முடியும்?

இவர்கள் ஆவிக்குரிய விஷயங்களையே முழுவதுமாய் கைவிட்டுவிட்டு, நெறிமுறை மற்றும் அரசியல் சீர்திருத்த பிரச்சனைகளுக்கும் இயற்கையான மனுஷருடைய நிலைமைக்கும் இறங்கிப் போகலாம். இவர்கள் "சேரி" (குடிசைப் பகுதிகளுக்கு)களுக்குச் சென்று சேரிகளுக்கு (அசுத்தங்களுக்கு) எதிரான (ஒழிப்பு) சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கட்டும். கிறிஸ்தவ-



குடியுரிமையின் புனிதப் போர், போன்றவற்றில் அவர்கள் இணைந்து கொள்ளலாம். மேலும் இப்படிப்பட்ட காரியங்கள் இந்த பிரசங்கமேடை நட்சத்திரங்களை மேன்மேலும் பங்குகொள்ளச் செய்யும். அதே சமயம் மற்றவர்களோ தாங்கள் நம்பிக்கை வைக்காத மிகவும் பிரபலமான நாத்திக கொள்கைகளில் மிதமிஞ்சிய வார்த்தைகளால் கிளர்ச்சியை உண்டுபண்ணுவார்கள். (அதோடு) தங்களுடைய பரிணாம தத்துவத்துக்கு இசைந்து போகும் வகையில் பாவத்தில் ஆதாமின் வீழ்ச்சி, மற்றும் மீட்பை குறித்த வேதத்தின் பதிவுகளுக்கு எதிராக அதை கட்டுக்கதை என்று கூறி பரியாசம் செய்வார்கள்.

இந்த அடையாளங்கள் இன்று எல்லா விதத்திலும் நிறைவேறிவருவதை யாரால் காணாமல் இருக்கமுடியும்? ஆனால் சூரியன், சந்திரன் மற்றும் பன்னிரெண்டு நட்சத்திரங்கள் ஆகியவைகளில் ஒரு பகுதி மட்டும் இதுவரையில் மங்கலாயிருக்கிறது; ஆனாலும் இந்த போ- நட்சத்திரங்களில் அநேகர் - தங்களுடைய ஜொ-ப்பை யாருக்குக் காட்டுகிறார்களோ அதே மக்களின் மனோநிலைக்குச் சமமான அளவிற்கு போ-யான சுவிசேஷ பிரகாசத்தி-ருந்து வீழ்ந்து விட்டனர்.

இதற்கு ஏற்ற வகையில் லூக்கா *(21:25,26)* இக்காலத்துக்குரிய பிற அடையாளங்களை மேலும் சேர்க்கிறார். "பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் (அமைதியற்ற, நீதிநியமங்கள் இல்லாத சக்திகள்) முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின் மேல் (ஜனங்களின் மேல்) வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்."

முழக்கமிடும் அலைகளும், சமுத்திரமும் - அமைதியிழந்த மனுகுலத்தின் திரளான ஜனங்கள், சமூக சட்டம் மற்றும் ஒழுங்கினால் முழுமையாக அடைக்கப்படாமல் கடிவாளமிட்டு கட்டுப்படுத்திவைக்கப்பட்டருப்பதை அடையாளமாகக் காட்டுகிறது. அவ்வப்போது புயலுடன் கூடிய திடீர் கிளர்ச்சி, கொந்தளிக்கும் பேரலையைப் போன்று பூமியின் மீது அடித்து அதை அப்படியே

விழுங்கிவிடப் போவதைப் போன்ற சில "முழக்கங்களை" கடந்த 20 வருடங்களாக எல்லாரும் கேள்விப் பட்டுவருகிறோம். கொஞ்ச நேரத்துக்கு கட்டுப்படுத்தப்படும் இவைகள் மறுபடியும் பலம் வாய்ந்த சக்தியை ஒன்று சேர்க்கின்றன. மேலும் தீர்க்கதரிசனமாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறபடி அராஜகத்தினால் "மலைகள் (ராஜ்யங்கள்) நிலைமாறி சமுத்திரத்தில் சாய்ந்து போவதற்கு" இன்னும் சில வருடங்கள் மட்டுமே இருக்கின்றன. (சங் 46:1,2) பணத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத ஒவ்வொரு செய்தித்தாளும் அமைதியற்ற "சமுத்திர" வகுப்பாரின் முழக்கத்தைக் குறித்து ஆதரவு குரல் எழுப்புகின்றன. மற்றவைகளோ விருப்பமில்லாவிடினும், இந்த முழக்கத்தின் எதிரொ-யை செய்தியாகக் கொடுக்கவேண்டியுள்ளது. இதுவே, "ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாக்கும்" ஒரு காலகட்டத்தின் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய சமாதானம் ஆகும்.

மேலும் மனுஷர் உணர ஆரம்பித்திருக்கும் வண்ணமாய் இந்த சமுத்திரத்தின் முழக்கத்திற்கும் அமைதியின்மைக்கும், செல்வாக்கு இழந்த மூடநம்பிக்கையும், மத அதிகாரங்களுமே காரணமாகும். மேலும் வானத்தின் (மத விசுவாசப் பிரமாணம் மற்றும் முறைமைகள்) அதிகாரங்கள் அசைக்கப்படுவதை அதிகமதிகமாய் அவர்கள் காணும் போது, பூமியின் மீது (சமூகத்தின் மீது) திகிலான காரியங்கள் வரும் என்ற அச்சத்தினால் அவர்களது இருதயம் சோர்ந்து போகிறது. ஆயினும் அதிகாரத்தையும், செல்வாக்கையும் மறு-சீரமைத்து, ஒன்று சேர்க்க மிகுந்த ஊக்கமான முயற்சிகள் செய்யப்படுகின்றன. இவைகள் ஒரு குறுகிய காலகட்டத்துக்கு மட்டுமே மிகப்பெரிய வெற்றி பெறும். ஆயினும் அது நிச்சயமாய் முழுவதுமாக நொறுக்கப்படும்.

"அப்பொழுது, (அதே சமயம்) மனுஷகுமாரனுடைய அடையாளம் (அத்தாட்சி, நிரூபணம்) வானத்தில் காணப்படும்." இதுவே மனுஷகுமாரனின் இரண்டாம் வருகைக்கான அத்தாட்சி அல்லது நிரூபணம்.

இந்த மொத்த தீர்க்கத்தரிசனமுமே சில குறிப்பிட்ட



கேள்விகளுக்கு விடையாக கொடுக்கப்பட்டவை என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. அப்படிப்பட்ட கேள்விகளுள் ஒன்றுதான், உமது இரண்டாம் வருகையின் போது "உமது பிரசன்னத்துக்கான அடையாளம் என்ன?" என்பதாகும். முதல் வருகையின் போதே சிலர் மேசியாவை அடையாளம் கண்டு கொண்டதையும், மேலும் அந்த விஷயத்தைக் குறித்து ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் அவர்களே சந்தேகமும், பயமும் கொண்டு, எப்படி நிச்சயமாய் தங்களால் அவரை அடையாளம் காணக்கூடும் என்பதை அறிய அவர்கள் விருப்பம் கொண்டதையும், கிறிஸ்து மனதில் கொண்டவராய் இருந்தார். முதலாம் வருகையில் கர்த்தர் தம்மைத் தாமே வெளிப்படுத்தினார்; அடையாளங்களினாலும் தனது அற்புதமான வார்த்தை மற்றும் கிரியைகளினாலும், அத்தோடு யோவான் ஸ்நானகனாலும் சாட்சிபகரப்பட்டார். அவரது இரண்டாம் பிரசன்னத்தை குறிப்பிட்டுக் காட்டும் வகையில் எப்படிப்பட்ட அடையாளத்தை தாங்கள் எதிர்ப்பார்க்கலாம்? என்பதே அவர்களது முக்கியமான கேள்வி.

தன்னுடைய ஜனங்கள் ஒரு பொருத்தமான, போதுமானதொரு அடையாளத்தைப் பெறாமல் (கை)விடப்பட மாட்டார்கள் என்று நமது கர்த்தருடைய பதில் அவர்களுக்கு உறுதியளிக்கிறது; ஆனால் அவைகளுடைய குணாதிசயம் குறித்து அவர் ஏதும் சொல்லவில்லை. "அப்பொழுது மனுஷ குமாரனுடைய அடையாளங்கள் தோன்றும்." இதுவே உத்தமமும், விழிப்புணர்வும் கொண்ட தேவஜனத்திற்குப் போதுமானதாக இருக்கும்; ஆனால் இது மற்றவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட ஒன்று அல்ல. இந்த வகுப்பினர்தான் அவரது முதல் வருகையின் அடையாளங்களையும், நிரூபணங்களையும் கண்டும், புரிந்து கொண்டவர்களுமாவர், அதே சமயத்தில் பெயரளவிலான திரளான இஸ்ரயேலர்கள் தங்களுடைய காலத்தின் அடையாளங்களை பகுத்து உணரமுடியாமல் போனார்கள். மேலும் மற்றவர்கள் இதை அறிந்துகொள்ள வேண்டும் என்பதை தேவன் விரும்பவும் இல்லை. ஆகையால் அற்புதமான அநேக ஜீவ வார்த்தைகள் உவமைகளாகவும், மறைபொருளாகவும், பேசப்பட்டன. இதன்நிமித்தம் அவர்கள் கண்டும் காணாமலும் கேட்டும் உணராமலும் இருந்தார்கள்; இந்த வெளிச்சத்தைக் காண

அவர்கள் அருகதை அற்றவர்களாய் இருந்தார்கள். உத்தமமாய் வாழ்பவருக்கு மட்டுமே இது புரியும்படி கொடுக்கப்பட்டிருந்தது. மேலும் கர்த்தருடைய இரண்டாம் பிரசன்னத்தைக் குறித்த அடையாளம் அல்லது நிரூபணம் இதேவிதமாகத்தான் இருக்கும். இது மனுக்குலம் முழுவதற்கும் வெளிப்படுத்தப்படமாட்டாது; உண்மையில் ஆவிக்குரிய இஸ்ரயேலரால் மட்டுமே இது அடையாளம் காணப்படக்கூடும். மேலும் அவர்கள் நேர்மையானவர்களாயும் வஞ்சகம் அற்றவர்களாயும் இருக்கவேண்டும்.

'அடையாளம்' (வசனம் 30) என்ற வார்த்தை கிரேக்க மொழியில் 'சீமியன்' (Seemion) என்று இருக்கிறது. இதற்கு நிரூபணம் அல்லது சாட்சி என்ற அர்த்தமும் உண்டு. இது கீழ்க்கண்ட வசனங்களில் விளக்கப்பட்டிருக்கிறது:

"வேறு அநேக அற்புதங்களையும் இயேசு ....... செய்தார்." யோவா 20:30

"அவர் (கர்த்தர்)..... அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் (பவுல், பர்னபா) கைகளால் செய்யும்படி அநுக்கிரகம் பண்ணினார்." அப் 14:3

"அந்நிய பாஷைகள்... அவிசுவாசிகளுக்கு அடையாளமாய் இருக்கிறது." 1 கொரி 14:22

"அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே." 2 கொரி 12:12

இதனால், "மனுஷ குமாரனுடைய அடையாளத்தை நீங்கள் காண்பீர்கள்" என்பது அப்போது வாழ்ந்த சீஷர்கள் அவரைக் காண்பார்கள் என்று குறிப்பிடவில்லை. ஆனால் அந்த நாட்களில் அவரது பிரசன்னத்துக்கான ஒரு நிரூபணத்தை அல்லது அறிகுறியை அவர்கள் பெறுவார்கள் என்பதையே குறிக்கும். முதலாம் வருகையைப் போலவே நமது கர்த்தருடைய இரண்டாம் பிரன்னத்தின் அடையாளமானது தீர்க்கதரிசிகளின் சாட்சிகளுக்கு இசைந்துபோகும் வண்ணம் காணப்படும். லூக் 24:44-46



"வானத்தில்": அவரது பிரசன்னத்தின் அடையாளம் அல்லது ரூபகாரம் வானத்தில் கொடுக்கப்படும். பிதாவுக்கு முன்பாக, பரிசுத்த தூதர்கள் இருக்கும் பரலோகத்தில் அல்ல; அடையாளமான வானத்தில், மத அதிகாரங்களான வானத்தில் ஆகும். தன்னுடைய நட்சத்திரங்கள் உதிரும் அளவிற்கு பயங்கரமாய் அசைக்கப்பட வேண்டியதும் பின்வரும் வசனம் நமக்கு கூறுகிறதுமான அதே வானத்தில் தான்; இந்த வானத்தில் தான் வெளிப்படையான ஆவிக்குரிய வகுப்பாருக்குத்தான் முத-ல் கர்த்தருடைய பிரசன்னத்தின் அடையாளம் அல்லது நிரூபணம் காணப்படும். யுகங்களைப் பற்றிய தெய்வீக ஏற்பாட்டின் அற்புதமான வெளிப்படுத்துத-ல், இந்த இரண்டாம் பிரசன்ன காலத்தின் தீர்க்கத்தரிசன நிறைவேறுதலை சிலர் 'கண்டு' அவரது பிரசன்னத்தின் அடையாளங்களில் ஒன்றாக உணர்ந்து கொள்வார்கள். (லூக் 12:37) பாபிலோனாகிய கிறிஸ்தவ மண்டலத்தின் சமூக மற்றும் மத அதிகாரங்களின் நியாயத்தீர்ப்பானது நியாயதிபதி வந்துவிட்டதற்கான மற்றொரு அடையாளமாக இருக்கிறது. தம்முடைய சொத்துக்களை ஒப்புவித்திருந்த உக்கிராணக்காரர்களிடம் கணக்குக் கேட்பதே முதலாவது அடையாளமாக இருக்கிறது. (மத் 25:19; லூக் 19:15) "தேவனுடைய வீட்டில் தான் நியாயத்தீர்ப்பு முத-ல் ஆரம்பிக்கப்பட வேண்டும்." மேலும் நமது கர்த்தருடைய முதலாம் வருகையானது - இப்பொழுது நடப்பதைப் போலவே, அக்காலத்திலே அவரது பிரசன்னம் அங்கீகரிக்கப்படவில்லை. தற்கால வேதபாரகர்களும் பிரதான ஆசாரியர்களும் தங்களுடைய போதனைகளை (வழக்கங்கள் மற்றும் விசுவாசங்கள் ஆகியவற்றை) சரிப்படுத்தும்படி பீதியிலும் குழப்பத்திலும் இருக்கின்றனர். இதே போலவே பரிசேயர், ஆசாரியர்கள், நியாய சாஸ்திரிகள் ஆகியோர் இருந்தனர்.

ஆனால் முதலாம் வருகையில், உண்மையில் தகுதியானவர்களாய் தேவன் எண்ணிய தாழ்மைமிக்க இஸ்ரயேலர்கள், குழப்பம் அடைவதற்குப் பதிலாக தெளிவைப் பெற்றிருந்தனர். ஆகவே தான் அவர்களைப் பார்த்து, "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும், நீதிமான்களும்

நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்கள்" என்று நமது கர்த்தர் கூறினார். (மத் 13:16,17) அந்தப்படியே தற்போது மனுஷ குமாரனுடைய இரண்டாம் பிரசன்னத்தில் தெய்வீக வார்த்தைகள் வெளியரங்கமாக்கப்பட்டது. தெய்வீக திட்டத்தின் தெய்வீக காலத்தையும் வேளையையும் குறித்த பகுத்தறியும் உணர்வும், மற்றும் "பாபிலோனின்" குழப்பம் ஆகியவை இராஜாவின் பிரசன்னத்திற்கு மிகுந்த திருப்திகரமான அத்தாட்சிகள்.

"அப்பொழுது, மனுஷ குமாரன் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்." மத் 24:30

பூமியின் சகல கோத்திரங்களோ கர்த்தருடைய பிரசன்னத்தைக் குறித்து "வானத்தில்" மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிற அடையாளம் அல்லது நிரூபணத்தைக் காணமாட்டார்கள். வஞ்சனையற்ற சபையினராலும் மட்டுமே இது கண்டு போற்றப்படும். அதுமட்டுமன்றி மாம்சீக கண்களால் கர்த்தரை அவர்கள் என்றுமே காணவும் மாட்டார்கள். ஏனெனில் மாம்சீக கண்களால் காணும்படி அவர் இனியும் மாம்சீக ஜீவி இல்லை. (தொகுதி 2, அத்தி.5) "இன்னும் கொஞ்சகாலத்திலே உலகம் என்னைக் காணாது" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளை நினைவு கூற வேண்டும். (யோவா 14:19) "நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்," மேலும் "அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதற்கு" முன் நமது கர்த்தரைப் போலவே ஆவியில் மறுரூபமாக்கப்படுவோம் (1 கொரி 15:51-53; 1 யோ :3:2) என்று சபைக்கான அப்போஸ்தலரின் வார்த்தைகளும் நினைவில் வைத்துக் கொள்ளப்படவேண்டும். ஆனால் இதற்கு மாறாக, பூமியின் கோத்திரங்கள் எல்லாம் உபத்திரவத்தின் மேகங்களையும், வானங்களை அசைக்கும்படியான குழப்பங்களையும் கண்டு, இதுவே பூமியையும் அசையப்பண்ணும் ஒரு புயல் என்பதை உணர்ந்து கொள்வர். (எபி 12:26,27 ஐ பார்க்கவும்) அது மட்டுமன்றி அந்த மகா உபத்திரவ காலத்தின் நாட்களில் பொதுவாகவே யாவரும் புலம்புவார்கள்; மேலும் அந்தப் புய-ன் முடிவில் மனுக்குலம் முழுவதும் தங்களுடைய அறிவின் கண்களால்



புதிய ராஜாவை உணர்ந்து அடையாளம் கண்டுகொள்வார்கள்; தங்களுடைய பாவத்துக்காகவும், தங்களுடைய நீங்காத குருட்டாட்டத்தினால் அவரை நிராகரித்ததற்காகவும் (யூதர் முத-ல் செய்தது) புலம்புவார்கள். சக.12:10-12 ஐ பார்க்கவும்.

"வலுவாய்த் தொனிக்கும் எக்காள (சத்த)த்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்." (சினயாட்டிக் மூலப் பிரதியில் "சத்தம்" என்ற வார்த்தை இல்லை.) மத் 24:31

"அறுவடை" என்னும் இந்தப் பணியானது இந்த இடைக்காலத்தில் முன்னேற்றம் அடையும். தூதர்கள் (பூமியின் புதிய ராஜாவின் தூதர்கள்) இந்த பிரித்தெடுக்கும் பணியைச் செய்வார்கள். இது உலகுக்கும் சபைக்கும் இடையில் அல்ல- பெயரளவிலான சபையில் தற்கால வானங்களில் இருக்கும் பெயரளவிலான ஊழியர்களிடையே ஒரு பிரித்தெடுக்கும் பணி நடைபெறும். இந்த பணியானது பல்வேறு அடையாளங்களின் மூலமாய் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இது பதர்களி-ருந்து கோதுமையைப் பிரித்து எடுத்து களஞ்சியத்தில் சேர்க்கும் பணியாகும்; (மத் 13:30) மேலும் நல்ல மீன்களை கூடையில் சேர்த்து, ஆகாதவைகளை (சுவிசேஷ வலையினால் பிடிக்கப்பட்டவைகளை) கட-ல் எறியும்படியான பணியாகும்; (மத் 13:47-49) இதுவே அவரது சம்பத்தைச் சேர்க்கும் பணி; (மல் 3:17) இதுவே "என் ஜனங்களை" பாபிலோனை விட்டு வெளியே புறப்படச் சொல்லும் அழைப்பு (வெளி 18:14); இதுவே புத்தியற்ற கன்னிகைகளிடையே இருந்து புத்தியுள்ள கன்னிகைகளை பிரித்தெடுக்கும் நடுராத்திரி சத்தம்; (மத்:25:6) மேலும் நான்கு காற்றுகளினால் எல்லா திசைகளி-ருந்தும் கிறிஸ்தவ-மண்டலத்தின் தெரிந்து கொள்ளப்படாதவரில் இருந்து, "தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக்" கூட்டிச் சேர்த்தல் இந்த தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது.

ஆவியின் சரீரத்தில் உள்ள தூதர்கள், இறக்கைகளோடு தோன்றி, ஒரு மாபெரும் எக்காளத்தை ஊதிக் கொண்டு வானில்

பறந்து, இங்கும் அங்கும் சில பரிசுத்தவான்களை பிடிப்பது போன்ற காட்சியையோ அல்லது சொல்லர்த்தமான மீன்கள், சொல்லர்த்தமான கூடைகளில் போடப்படுவதையோ அல்லது சொல்லர்த்தமான கோதுமை மணிகள் சொல்லர்த்தமான களஞ்சியத்தில் சேர்க்கப்படுவதையோ நாம் எதிர்பார்க்கக்கூடாது. நமது கர்த்தரால் இந்த அறுவடையில் பயன்படுத்தப்படும் தேவதூதர்கள் அல்லது தூதுவர்கள் என்பது இந்த யுகம் முழுவதிலுமாக தமது சுவிசேஷ வேலையில் அவர் உபயோகப்படுத்திய பூமிக்குரிய பணியாளர்கள், பரிசுத்த ஆவியினால் உற்பவித்து பிறந்தவர்களான “கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டிகளே” என்று நாம் நம்புகிறோம்.

நிஜமான “யூபி-யின் எக்காளம்” என்று நாம் புரிந்துகொள்ளுகிறதான “அந்த வலுவாய் தொனிக்கும் எக்காளம்” *(வெளி 11:15-18)* ஆறாம் எக்காளத்தை தொடர்ந்து அடையாளமாய் கூறப்பட்டிருக்கும் ‘ஏழாவது எக்காளம்’ ஆகும். ஆனால் எந்த எக்காளமும் உண்மையான சத்தத்தை என்றுமே எழுப்பியது இல்லை. அது 1874 அக்டோபர் முதல் ஆயிர வருட ஆட்சியின் முடிவுவரைக்கும் அடையாளமாய் தொடர்ந்து ஒ-த்துக் கொண்டேயிருக்கும். இந்த எக்காளத்தொனி தொடங்கியதி-ருந்து ‘அறுவடை’யும், சேகரிப்பும், பிரித்தெடுத்தலும் ஆரம்பித்து, இந்த தற்போதைய வானங்களி-ருந்து (சபை அதிகார ஒழுங்குகள்) ‘தெரிந்தெடுக்கப்பட்ட கோதுமை’கள் யாவும் சேகரிக்கப்பட்டு கர்த்தரிடத்தில் சேர்க்கப்படும் வரை தொடர்ந்து நடக்கவேண்டும். அந்த “தேவ தூதர்கள்” (தூதுவர்கள்) பிரித்தெடுத்தலை உண்டாக்கக்கூடிய கர்த்தருடைய வார்த்தையின் செய்தியைக் கொண்டு சென்று அவரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களைச் சேகரித்து அவரிடத்தில் ஒப்புவிப்பார்கள்.

இப்பொழுது அந்தகார இருளினின்று ஆச்சரியமான ஒளிக்கு மாற்றப்பட்டிருக்கிற தேவனுடைய உத்தமமான ஜனங்களுக்கு - பிறர் காண முடியாததைக் காணவும், கேட்க முடியாதவைகளைக் கேட்கவும் அனுமதிக்கப்பட்டவர்கள், தங்களுடைய கர்த்தருடைய தூதர்களாக, செய்தியாளராக, பணியாளராக, அவருடன் உடன்-வேலையாட்களாக யுகம் முழுவதிலும், இந்த வேலையிலும், இன்னும் அதே போன்ற பிற வேலைகள் எல்லாவற்றிலும் இருக்கக்கூடிய ஒரு சிலாக்கியமாக இருக்கிறது. அவரது கிருபையினால் உழுது, விதைத்து, நீர்பாய்ச்சிய அதே வகுப்பினர் தற்போது பிரதான அறுவடையாளருடன் அறுக்கவும் செய்வார்கள்.



## தேவனுடைய ராஜ்யத்தின் அருகாமை

“அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும் போது (தேவனுடைய ராஜ்யம் லூக் 17:21), அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.” *மத் 24:32-35*

வெளியரங்கமாக நிறைவேறவில்லை என்று கூறி இந்தப் பகுதியை அவிசுவாசிகள் தடுத்து வைத்தனர். ஆகவே இதனால் நமது கர்த்தர் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி என்று நிரூபிக்கப் பார்க்கின்றனர். கி.பி.70 ம் ஆண்டின் இஸ்ரயே-ன் தேசிய அரசிய-ன் வீழ்ச்சியோடு தொடர்புடைய உபத்திரவங்களுடன் இந்த தீர்க்கதரிசனத்தை இவர்கள் முழுவதுமாய் ஒப்பிட்டு “அந்த சந்ததியார் மற்றும் அநேகர் இவைகள் எல்லாம்” சம்பவித்து நிறைவேறுவதைக் காணாமல் மரித்துவிட்டனர் என்று அவமரியாதையாக குறிப்பிடுகின்றனர். நமது கர்த்தருடைய தீர்க்கதரிசனம் சரியாக புரிந்துக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் கி.பி.70ல் இஸ்ரயேலரின் மீதான உபத்திரவத்தின் உச்சநிலையினுடைய ஒரு பகுதியையே இது குறிப்பிடுகிறது என்பதே இதற்குரிய நமது பதில்.

ஆனால் இந்த ஆட்சேபனையை எதிர்கொள்வதற்காக, சில குறிப்பிட்ட கிறிஸ்தவ எழுத்தாளர்கள் - “இந்த சந்ததி” என்ற வார்த்தை உண்மையில் ‘இந்த இனம்’, ‘யூதர்கள்’ என்பதையே குறிக்கின்றது என்றும், இவர்கள் இந்த தீர்க்கதரிசனம் எல்லாம் நிறைவேறித்தீரும் மட்டும் ஒழிந்து போவதில்லை என்றும் கூறி வழிநடத்திச் சென்றனர்.

ஆனால் இந்த விளக்கத்தை பல்வேறு காரணங்களினால் நாம் மறுக்கவேண்டியதாக இருக்கிறது.

*(1)* 'சந்ததி' அல்லது 'இனம்' என்ற வார்த்தைகள் பொதுவான ஒரே அடிப்படை அல்லது ஆரம்ப இடத்தி-ருந்து வருவதாக இருப்பினும், அவைகள் ஒரே மாதிரியானவைகள் அல்ல ; வேதாகம உபயோகத்தில் அந்த இரு வார்த்தைகளுமே முற்றிலும் வேறுபட்டவைகளாக இருக்கின்றன.

புதிய ஏற்பாட்டில் சந்ததி என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்படும் போது அது இனம் அல்லது வருங்கால தலைமுறை என்ற அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இது எப்போதுமே கிரேக்க பாதம் 'ஜென்னேமா' (Gennema) *(மத்3:7; 12:34; 23:33; லூக் 3:7ன்படி)* அல்லது 'ஜெனோஸ்' (Genos) *(1பேது 2:9)* என்பதி-ருந்து வந்தது என்பதை கவனிக்க வேண்டும். ஆனால் இந்த தீர்க்கதரிசனத்தின் 3 வேறுபட்ட பதிவுகளிலும் நமது கர்த்தர் முற்றிலும் மாறுபட்ட கிரேக்க வார்த்தையான 'ஜெனியா' (Genea) என்ற பதத்தைப் பயன்படுத்தி சிறப்பைக் கூட்டியிருக்கிறார். இது இனம் என்று அர்த்தம் கொடுக்காமல், நமது ஆங்கிலம் குறிப்பிடும்படியான அதே 'சந்ததி' என்ற வார்த்தையைக் குறிப்பிடுகிறது. இந்த கிரேக்க வார்த்தையான 'ஜெனியா' (Genea) என்பது இனம் என்ற அர்த்தத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படவில்லை என்பது இதனுடைய பிற உபயோகங்களில் நிரூபணமாகிறது. ஆனால் ஒரே காலகட்டத்தில் வாழும் ஜனங்களைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது; இதற்கு ஆதாரமாக நாம் காண்பது *மத் 1:17; 11:16; 12:41; 23:36; லூக் 11:50,51; 16:8; அப் 13:36; கொலோ 1:26; எபி 3:10*

*(2)* நமது கர்த்தர் யூத இனத்தைக் குறிப்பிட்டிருக்கமாட்டார், மேலும் இனம் என்று குறிக்கும் ஒரு கிரேக்க பதத்தை உபயோகப்படுத்தியிருப்பார் என்பதும் சரியாக இருக்கமுடியாது. ஏனெனில் யூத இனம் என்பது அப்போஸ்தலரது கேள்வியோ அல்லது அதற்குரிய நமது கர்த்தரின் பதிலோ அல்ல. இந்த தீர்க்கதரிசனத்தில் இஸ்ரயேல் குறிப்பிடப்படவோ, சொல்லப்படவோ இல்லை. இவைகளெல்லாம் சம்பவிக்கும் முன்னே இந்த சந்ததி



ஒழிந்துபோகாதென்று - இது எந்த இனத்தை, எப்படிப்பட்ட இனத்தை குறிக்கிறது என்ற விஷயமானது கேள்விக்குறியாகவே விடப்பட்டிருக்கிறது. ஏனெனில் குறிப்பிட்ட எந்த இனமும் இதில் சுட்டிக்காட்டப்படவில்லை. ஆகவே, ஒருவேளை, யூத இனம் என்று குறிப்பிடுவதாகக் கூறப்படும் இது மனுகுலத்தையே சந்ததி என்ற வார்த்தையால் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டதாக இருக்கும் என்பதே சரியாக இருக்கக்கூடும்.

ஆனால் இங்கு ஜெனியா(Genea) என்று குறிப்பிடப்பட்ட மற்ற இடங்களில் இருப்பதைப் போலவே சந்ததி என்று பொருள்படுவதாகவும், நமது கர்த்தருடைய வார்த்தை சுவிசேஷ யுகம் முழுவதையும் வியாபிக்கும் ஒரு தீர்க்கதரிசனம் என்பதையும் புரிந்து கொண்டுவிட்டால் "இந்த சந்ததி (சூரியன், சந்திரன் அந்தகாரப்படுதல், நட்சத்திரங்கள் உதிர்தல் போன்ற - நமது கர்த்தரால் விவரிக்கப்பட்டு, அப்போஸ்தலரால் கேட்கப்பட்ட அடையாளங்களை சாட்சி கூறும்படியான) இவைகளெல்லாம் சம்பவிக்கும் முன்னே ஒழிந்து போகாது" என்ற வாக்கைப் புரிந்து கொள்வதில் நமக்கு கஷ்டம் ஏதும் இருக்காது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் - குறிப்பிடப்பட்ட அடையாளங்கள் யுகத்தின் முடிவு சமயத்தில் ஒரு சந்ததியின் சகாப்தத்திற்குள் நடந்துவிடும் என்பதாகும்.

அத்திமரம் துளிர்விடுவது என்பது ஒரு சாதாரண குறிப்பாக இருக்கலாம். ஆனால் அது அப்படி அல்ல. ஒரு அத்திமரத்தின் மீதான நமது கர்த்தரின் சாபத்தைக் குறித்த விசித்திரமான சூழ்நிலையின் விளக்கமானது - அந்த மரத்தில் பழம் காணப்படாததால் நேரடியாகப் பட்டுப்போவதைக் *(மத் 21:19,20)* குறிப்பிடும் போது, இந்த தீர்க்கதரிசனம் யூத தேசத்தைக் குறிப்பதாகவே நம்மை நம்பச்செய்யும் விதத்தில், கவனத்தைக் கவர்கிறது. அப்படியானால் அடையாளமான வகையில் அது நிறைவேறிக் கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான இஸ்ரயேலர் பாலஸ்தீனத்திற்குத் திரும்பி வருவதற்காக மட்டுமே அன்றி, யாவரும் அறிந்தவண்ணமாய் சீயோன் இயக்கம் ஆண்டுக்கு ஆண்டு, உலகின் எல்லா பகுதிகளி-ருந்தும் வரும் பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டி பாலஸ்தீனத்தில் யூத அரசாங்கம் மறுகட்டமைப்பு

செய்வதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான காரியங்களைச் செய்துவருகிறது. இந்தத் துளிர்கள் வளர்ந்து விருத்தி அடையலாம். ஆனால் 1914 அக்டோபருக்கு முன் "புறஜாதியாரின் காலத்தின்" பூரண முடிவுக்குமுன் நல்ல கனியை கொடுக்காது. (1914க்கு பிறகு நவ.2, 1917ல் ஏற்பட்ட "பால்ஃபோர் பிரகடனம்" தான் யூத நாடு உருவாக முதல் படி.)

ஒரு "சந்ததி" என்பது ஒரு நூற்றாண்டுக்குச் சமமாக (நடைமுறையில் தற்கால அளவு) அல்லது நூற்றியிருபது ஆண்டுகளுக்கு சமமாக மோசேயின் காலகட்டத்தின் மற்றும் வேதாகம அளவுப்படி எண்ணப்படலாம். (ஆதி 6:3) முதலாவது அடையாளத்தின் தேதிப்படி 1780ம் வருடத்தி-ருந்த ஒரு நூறு வருடத்தை கணக்கிட்டு, அந்த அளவு 1880ஐ அடையக் கூடும். மேலும் நமக்குத் தெரிந்தபடி ஒவ்வொரு முன் குறிக்கப்பட்ட காரியமும் அந்த நாளில் நிறைவேறித்தீர ஆரம்பித்திருந்தன. அறுவடை அல்லது கூட்டிச் சேர்க்கும் காலம் அக்டோபர் 1874ல் ஆரம்பிக்கிறது; இராஜ்யத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் ராஜாவாக நமது கர்த்தர் தமது மகாவல்லமையான அதிகாரத்தை எடுத்துக் கொள்வது ஏப்ரல் 1878லும், மேலும் உபத்திரவத்தின் காலம் அல்லது "கோபாக்கினையின் நாள்" தொடங்கியது அக்டோபர் 1874. (காலம் சமீபமாயிருக்கிறது என்ற தொகுதியில் 1916ல் ஆசிரியர் தனது முகவுரையில் உலக ராஜ்யங்கள் படிப்படியாக நீக்கப்படுவதைக் குறித்து எழுதுகிறார்.) மேலும் அது 1915ல் முடிவுபெற்று அத்திமரம் துளிர்விடுதல் ஆரம்பமாகும். இதற்கு முரண்பாடில்லாதவர்கள் கூறுவது என்னவெனில், சூரிய சந்திரன் அந்தகாரப்படும் முதல் அடையாளத்தி-ருந்து கணக்கிடுவது போல, நட்சத்திரங்கள் உதிரும் கடைசி அடையாளத்தி-ருந்து இந்த நூற்றாண்டு அல்லது சந்ததி சரியாகக் கணக்கிடப்படக் கூடும்; மேலும் 1833ல் ஒரு நூற்றாண்டின் ஆரம்பம் பயன்படுத்துவதற்கு இன்னும் தூரத்தில் இருக்கிறது. அந்த நட்சத்திரங்கள் விழுந்த அடையாளத்தைக் கண்டவர்கள் பலர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தில் நம்முடன் நடந்து கொண்டிருப்பவர்கள், ஏற்கெனவே இங்கு இருப்பவைகளை இனியும் வரட்டும் என்று எதிர்நோக்குவதில்லை. ஆனால் ஏற்கெனவே முன்னேறிக் கொண்டிருக்கும் காரியங்களின் பூரண நிறைவுக்காகக் காத்திருக்கின்றனர். அல்லது ஆண்டவர் சொல்-யிருக்கிற படியினால், "இவைகளையெல்லாம் நீங்கள் காணும் போது," மேலும் அத்தோடு "மனுஷ குமாரனின் அடையாளம் வானத்தில் தோன்றுவது," துளிர்விடும் அத்திமரம் மற்றும் "தெரிந்தெடுக்கப்பட்ட"வரை கூட்டிச் சேர்த்தல் ஆகிய யாவும் அடையாளங்களாகக் கணக்கிடப்படுவதால், 1878 முதல் 1914 வரையிலான 36 1/2 வருடங்கள் - இன்று ஒரு சராசரி மனிதனுடைய வாழ்நாள் - 'சந்ததி' என்று கணக்கிடுவது முரண்பாடாக இருக்க முடியாது.



"அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர, மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்." (மத் 24:36, சினயாட்டிக் மூலப் பிரதி. மாற் 13:32,33 ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்) "அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்."

அநேகருக்கு இந்த வார்த்தைகள் விவரிப்பதைவிட அதிகமான பொருளை உணர்த்துவதாகத் தெரிகிறது; இது ஒரு பூட்டைப் போட்டு வேதத்தின் தீர்க்கத்தரிசனங்கள் யாவையும் உபயோகமற்றவையாக மாற்றி விட்டதாக, இவர்கள் இதைக் குறித்து எண்ணுகின்றனர். "எந்த மனுஷனுமே என்றுமே அறியமாட்டார்கள்" என்று நமது கர்த்தர் சொல்-விட்டதைப் போல் நினைக்கின்றனர். ஆனால், "எந்த மனுஷனும் (இப்பொழுது) அறியான்," என்று மட்டுமே கூறியிருக்கிறார். அதுவும் காலங்களையும், வேளைகளையும் வெளிப்படுத்துவதற்கு யாருக்கு ஏற்ற காலமாயில்லாது இருந்ததோ அவர்களிடம் கூறினார். அவர்கள் அவரைப் பற்றி அறிந்திருந்தார்கள். நிறைவேறித்தீரும் அளவிற்கு மிகவும் அருகாமைக்கு முன்னேறிவிட்ட விஷயங்களை "பரலோகத்திலுள்ள தூதர்கள்" மற்றும் "குமாரன்" ஆகியோர் முழுமையாயும் தெளிவாயும் தற்போது அறிந்திருப்பார்களா என்று யாரால் சந்தேகிக்க முடியும்? மேலும் ஒருவேளை இந்த வார்த்தையின்படியே அறியப்படுவது தற்போது தடுக்கப்படாமல் இருக்குமேயாகில், "நமக்கு போதனையாக முன்பு எழுதப்பட்ட" எல்லா சத்தியத்தையும் புரிந்து கொள்ளத் தேடுவதி-ருந்து தேவனுடைய பரிசுத்தவான்கள் தற்போது இந்த

வார்த்தையினால் தடை செய்யப்படவில்லை. உண்மையில் அப்பொழுது இருந்த தன்னுடைய ஜனங்களோ அல்லது முத்திரையை உடைக்கும் காலம் வரையிலோ அந்த தேதியை அறிந்து கொள்வது என்பது பிதாவின் சித்தமாக இருக்கவில்லை. ஏனென்றால் நமது கர்த்தர் அந்த சம்பவங்களின் மார்க்கத்தை விவரித்து, அவர்கள் விழித்திருந்து ஜெபம் செய்து, இவ்வண்ணமாக உத்தமமாகத் தொடர்ந்து இருந்தால், அவர்கள் ஏற்ற வேளையில், இருளில் விடப்படாமல் காணவும், உணரவும் செய்வார்கள் என்று அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

தேவன் தனது தீர்க்கத்தரிசி தானியேல் மூலமாய், இந்த வேளையில் தீர்க்கதரிசனத்தையும், தரிசனங்களையும் "ஞானவான்கள் உணர்ந்து கொள்வார்கள்," மேலும் "துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்" என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார். *(தானி 12:9,10)* இத்தோடு கூட அப்போஸ்தலர் பவுல் தனது சாட்சியையும் சேர்க்கிறார். "சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல் உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்தி-ருக்கிறவர்களல்லவே," முழு உலகத்தின் மேலும் இவ்வண்ணமாக இது வரக்கூடியதாக இருக்கிறது. "ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு ஜெபம் பண்ணி விழித்திருங்கள்." லூக் *21:36*

## நோவாவின் காலத்தைப் போல "அவர்கள் உணராதிருந்தார்கள்"

"நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் பிரசன்ன (கிரேக்கபதம்-பரோஷியா) காலத்திலும் நடக்கும், எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தும், குடித்தும், பெண் கொண்டும், பெண் கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷ குமாரன் பிரசன்ன காலத்திலும் நடக்கும்." மத் *24:37-39*



நோவாவின் காலத்தினுடைய துன்மார்க்கத்தையும், கிறிஸ்துவின் பிரசன்னத்தின் காலத்தினுடைய துன்மார்க்கத்தையும் ஆண்டவரின் வார்த்தைகள் ஒப்பிட்டு பேசுகிறது. அநேகரால் இந்த எடுத்துக்காட்டின் உண்மையான கருத்து கவனிக்கப்படாமல் போகிறது. ஆனால் இப்படிப்பட்டதொரு ஒப்புமை நியாயமானதும், சரியானதுமாக இருக்கின்ற போதிலும், இப்படிப்பட்ட ஒப்புமை புரிந்து கொள்ளப்படாமல் தவிர்க்கப்பட்டுவிட்டது. அறியாமையின் ஒற்றுமையை புரியவைக்கவே இந்த உவமை கூறப்பட்டது. நோவாவும் அவன் குடும்பத்தினரும் மட்டுமே அறிந்திருந்தனர். ஜனங்களோ இதை அறியாதிருந்தனர். ஆனால் எப்போதும் போல திருமணம் செய்தல், நடுதல், கூடுதல், புசித்தல், குடித்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து செய்து வந்தனர். இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்துவின் பிரசன்னத்தின் போதும் அதேவிதமாய், வரவிருக்கும் மகா உபத்திரவத்தின் சமயத்தில் அவரது பிரசன்னத்தை அறிந்திருப்பவர்களே, அல்லது வரப்போகிற காரியங்களையும் அல்லது காரணத்தையும் அல்லது அதன் விளைவுகள் குறித்த தெளிவான அறிவைப் பெற்றிருப்பவர்களே, கர்த்தருடைய ஜனமாக இருப்பார்கள். மற்றவர்கள் இதை அறியமாட்டார்கள்.

லூக்கா *(17: 26-29)*லும் இதே பாடம் போதிக்கப்படுகிறது. மேலும் நோவா மற்றும் லோத்தின் அயலாருக்கு அவரவர் காலத்தில் வரப்போகும் உபத்திரவத்தைக் குறித்து அறியாமை சுட்டிக் காட்டப்படுகிறது. அதேவிதத்தில் மனுஷகுமாரனின் நாட்களில் வரப்போகும் உபத்திரத்தைக் குறித்த அறியாமையில் அவர் வந்து பிரசன்னமான பிறகும் இருப்பார்கள். இன்று நம்மைச் சுற்றி இவை நிறைவேறியிருப்பதை நாம் தெளிவாகக் காண்கிறோம். இந்த உலகம் குழப்பமும் திகிலும் நிறைந்ததாக இருக்கிறது. ஆனால் மனுஷகுமாரனுடைய பிரசன்னத்தையும், 'அறுவடை' தற்போது நடந்து கொண்டிருப்பதையும் அது அறியாமல் இருக்கிறது. வரப்போகும் உபத்திரவத்தை அவர்களால் ஓரளவுக்கு யூகிக்க முடிந்தாலும் அதற்கு அப்பால் இருக்கும் ஆசீர்வாதத்தை அவர்களால் அனுமானிக்க முடியாது.

"மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் (ஏற்கெனவே

வந்திருக்கிறார்) அப்படியே நடக்கும். (முத-ல் விழித்திருக்கும் அவரது கன்னிகைகளுக்கும் பிறகு உபத்திரவத்தில் எல்லா மனுஷருக்கும் வெளிப்படுத்தப்படும்.) அந்நாளிலே வீட்டின் மே-ருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக் கொண்டு போக இறங்காமல் இருக்கக்கடவன்; அப்படியே வய--ருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமலும் இருக்கக்கடவன்; லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள். தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் (மனசாட்சியினை விட்டுக் கொடுத்தும், பாபிலோனிலேயே தங்கியிருந்தும்) அதை இழந்து போவான்; இழந்து போகிறவன்(தற்போதைய வாழ்வின் தேவைகளை தியாகம் செய்பவன்) அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான்" - நித்ய காலமாக. லூக் 17:30-33

இவ்விதமாய் "மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலே" சுவிசேஷயுக முடிவுக்கான இந்த வார்த்தைகளை லூக்காவின் சுவிசேஷம் பிரயோகப்படுத்துகிறது.

"லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" என்பது நமது கர்த்தருடைய குறிப்பிடும்படியான எச்சரிப்பு. கி.பி. 70ல் யூதேயாவி-ருந்து ஓடிவந்தவர்களுக்கு இந்த கட்டளை ஓரளவிற்கே பொருத்தமானதாக இருக்கக்கூடும். ஆனால் சுவிசேஷ யுகத்தின் இந்த முடிவு காலத்தில் இருக்கும் தேவனுடைய ஜனத்திற்கு எத்தனை கடுமையான ஓர் எச்சரிப்பாக இருக்கிறது. பாபிலோன் தண்டிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொண்டு, "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படி அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்ற கர்த்தருடைய செய்தியைக் கேட்கும் போதும், லோத்தையும் அவனது குடும்பத்தினரையும் சோதோமைவிட்டு வெளியேறும்படி துரிதப்படுத்திய தூதர்களின் குரலைப் போலவே இருக்கிறது; அவர்கள் கூறியது: "இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே, உன் ஜீவன் தப்ப ஓடிப் போ, பின்னிட்டுப் பாராதே, நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப் போ." ஆதி 19:17

கிறிஸ்தவ மண்டலமாகிய "அந்த மகா நகரம் (பாபிலோன்)



சோதோம் என்று ஞானார்த்தமாய் அழைக்கப்படுகிறது." வெளி 11:8 என்பதை நாம் நினைவு கூறும் போது இந்த எடுத்துக்காட்டு இன்னும் முக்கியத்துவம் பெறுகிறது.

அறிவுறுத்தப்பட்டபடியே ஓடிப்போக ஆரம்பித்தபின் லோத்தின் மனைவி பின்னால் இருந்தவைகளை அடையும் விருப்பத்துடன் "பின்னிட்டுத் திரும்பிப் பார்த்தாள்." அந்தப்படியே தற்போது பாபிலோனை விட்டு கர்த்தருடைய பர்வதத்துக்கு (ராஜ்யத்துக்கு) ஓடிப் போகும் சிலரும் இருக்கின்றனர். அவர்களுக்கு முன் இருக்கும் காரியங்களைவிட, பின்னிருக்கும் காரியங்களில் அதிக அக்கரை உடையவர்களாய் இருக்கின்றனர். கீழானவைகளை நாடாமல் மேலானவைகளை நாடுபவர்களே ஓட்டத்தை கடைசி மட்டும் ஓடி முடிப்பார்கள். பரிசுத்தவான்களின் இந்த ஊக்கத்துடனான விடாமுயற்சியானது இருதயத்தின் முழுமையான அர்ப்பணிப்பி-ருந்து ஊற்றெடுத்து வருகிறது; மற்றவர்கள் யாவரும் பந்தயப் பொருளை பெறும்படியாய் ஓடாமல் தோற்றுப் போவார்கள்.

## ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான் மற்றவன் கைவிடப்படுவான்

"அந்த ராத்திரியிலே ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்." லூக் 17:34

ஆயிரவருடத்தின் விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது (ஏசா 21:12) என்று தீர்க்கத்தரிசியின் மூலமாய் கர்த்தர் நமக்கு தெரிவிக்கிறார். அது ஒரு உபத்திரவத்தின் இரவாக இருக்கும். இதன் முற்பகுதியில் பரிசுத்தவான்கள் யாவரும் பாபிலோனை விட்டு வெளியேற்றப்பட்டு கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். ஏசாயா உபயோகித்திருக்கும் (ஏசா 28:20) 'படுக்கை' என்ற வார்த்தையோடு கூட இது ஒத்துப் போகும்படியாக இருக்கிறது. இது மனித விசுவாசப் பிரமாணங்களை அடையாளமாகக் காண்பிக்கலாம். இவைகள் கிறிஸ்துவில் "பாலகராக" இருப்பவருக்குப் போதுமான நீளமுடையதாகவும், ஆனால் வளர்ந்துவிட்ட "மனிதன்" கால்

நீட்டிப்படுக்க அதன் நீளம் போதாததாகவும் இருக்கிறது. இது பல்வேறு "மனித போதனைகள்" என்பதே உண்மை ; ஆனால் இவை தேவனுடைய வார்த்தையின் போதனைகளி-ருந்து மிகவும் மாறுபட்டவை; தேவ வார்த்தையின் நீளமும், அகலமும், மனித அறிவை மிஞ்சியது. உதாரணமாய், நமது நண்பர்களான "கேல்வனிஸ்ட்"டுகளால் போதிக்கப்பட்ட "தெரிந்தெடுத்தலைக்" குறித்த போதனை, கிறிஸ்துவின் பாலகராக மட்டுமே இருக்கும் அநேகருக்கு ஓய்வெடுக்க மிகவும் போதுமான ஒன்றாக இருக்கிறது.

இவர்களது அறிவு அதிகப்படியான பயிற்சியை என்றுமே பெற்றிருக்கவில்லை ; ஆனால் தற்கால பகல் வெளிச்சத்தின் அறிவில் அந்தக் குழந்தைகள் விழித்தெழுந்து, கிருபையினாலும் ஞானத்திலும் வளர்கின்றனர். மேலும் ஒரு தப்பறையான இறையியல் மூலமாய் குறைக்கப்பட்டு விட்ட தேவனுடைய வாக்குத்தத்தங்களால் தங்களைச் சுற்றி மூடிக் கொள்ள ஒவ்வொருவரும் முயற்சி செய்கின்றனர். ஆனால் தன்னை திருப்திகரமாக மூடிக்கொள்ள அவனால் முடியவில்லை; இவை எல்லாவற்றுடன் இவனும் இவனது எல்லா நண்பர்களும் "தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்" என்ற நிச்சயம் இல்லாமல் சில்-ட்டுப் போகும் பயத்துடன் சந்தேகம் இவர்கள் மீது பரவுகிறது; மேலும் விரைவில் இப்படி வளர்ந்த கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்டதொரு சங்கடமான இக்கட்டி-ருந்து வெளிவருவதை ஒரு விடுதலையாகக் காண்கின்றனர்; மேலும் பிதாவின் சித்தத்தை அறியவும் அதன்படி செய்யவும் விரும்புகிற யாவருக்கும் தேவன் பொதுவாக தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தை அனுப்பி, "இதைவிட இடவசதியுள்ள" சத்தியத்துக்கு வழிநடத்திச் சென்று அபரிதமான போர்வையுடன் கூடிய உண்மையான ஓய்வை அளிக்கிறார். எனினும் மிகவும் பெரும்பான்மையான மற்றவர்கள், தங்களுடைய பல்வேறு சிறு தொட்டில்களில் மிகுந்த திருப்திகரமாக, சௌகரியத்துடன் தங்கிவிடுகின்றனர். ஏனெனில், கிறிஸ்தவ அறிவிலும் அனுபவத்திலும் அவர்கள் 'மனிதர்கள்' அல்ல 'பாலகரே.' "ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான். மற்றவன் கைவிடப்படுவான்."

"அப்பொழுது, இரண்டு பேர் வய-ல் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான்." *மத் 24:40*



"உலகமே அந்த வயல்" நமது கர்த்தர் மேலும் விளக்குகிறார்; மேலும் இந்த விளக்கத்தில் பாபிலோனுக்கு வெளியில் பேர் சபையான "வீட்டிற்கு" வெளியில் இருக்கும் ஒரு நிலை எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இப்படியாக நாம் போதிக்கப்படுவதாவது: "வெளியில் வரும்" எல்லாருமே "சேர்க்கப்படுவது" இல்லை. ஆனால் "சம்பத்துக்கள்" எங்கிருந்தாலும் தேடி கண்டுபிடிக்கப்படுவார்கள். "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்." மேலும் இந்த அறுவடையின் சேகரிப்பில் தம்முடைய சம்பத்துக்களை அவர் அடையாளமிடுகிறார். தம்முடைய ராஜ்யத்தில் தம்முடன் உடன் சுதந்திரவாளிகளாகும்படி - தமது "தெரிந்து கொள்ளப்பட்டவர்களைச்" கூட்டிச் சேர்க்கிறார்.

"இரண்டு ஸ்திரீகள் எந்திரம் (அரைக்கும் கல்) அரைத்துக் கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்." *மத்: 24:41; லூக் 17:35*

எந்திரம் (அரைக்கும் கல்) என்பது உணவு தயாரிக்கப்படும் ஒரு இடமாக இருக்கிறது; ஊழியர்களும், இறையியல் பள்ளிகளும், "பாபிலோனுக்குரிய" ஆவிக்குரிய உணவை அரைத்துக் கொண்டிருக்கின்றனர். மேலும், இதில் மிகவும் மோசமான தானியத்தை, "அசுத்தமான உணவை" அரைக்கும் பணியைச் செய்கின்றனர். இங்கு விநியோகிக்கப்படும் உணவு உமியும், தவிடும் நிறைந்ததாக இருக்கிறது. இது ஆவிக்குரிய வாழ்வையும், வ-மையையும் நிலைநிறுத்தக் கூடியது அல்ல என்ற புகாரானது அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. மேலும் எந்திரம் அரைக்கும் ஒவ்வொருவனும் தன்னுடைய சொந்த சபையினர் கொடுப்பதையே தயாரிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கின்றான். இவனால் தனக்கென்று ஒரு ஸ்தானத்தைத் தக்கவைத்துக் கொண்டு "ஏற்ற வேளையிலே போஜனத்தை," "சுத்தமான உணவை" விசுவாச வீட்டாருக்குக் கொடுக்க முடியாது. ஆகையால் "தற்கால சத்தியம்" சில எந்திரம் அரைப்பவர்களை மட்டும் சேகரித்துக் கொண்டு மற்றவைகளை விட்டுவிடுகிறது. ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான். தேவனுக்கும், அவரது மந்தைக்கும் விசுவாசமாய் இருப்பவர்கள் எடுத்துக்

கொள்ளப்படுவதால், மற்றவர்கள் யாவரும் கைவிடப்படுவர். பெயரளவிலான சபைகளும், உலகமும் ஒன்று சேருவதற்கும் "கட்டுப்பாடு" செய்யவும் இதுவே சமயம் என்று கூறுகையில் இதுவே பிரிப்பதற்குரிய ஒரு காலம் என்று தேவன் அறிவிக்கிறார். *ஏசா 8:12*

## எங்கே கூடுவார்கள் - கவருதல்

*"அவர்கள் (சீஷர்கள்) அவருக்குப் பிரதியுத்தரமாக: எங்கே, ஆண்டவரே (இவைகள் எங்கு கொண்டு செல்லப்படும்?) என்றார்கள். அதற்கு அவர் : பிணம் (மாமிசப் பிண்டம், இரை) எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் என்றார்." லூக் 17:37 ; மத் 24:28*

அந்த நாளில், வானத்தின் நான்கு காற்றுகளி-ருந்தும் - சபையின் எல்லா திசைகளி-ருந்தும் தம்முடைய "தெரிந்தெடுக்கப்பட்டவர்களைக்" கர்த்தர் சேகரிக்கும் போது - கூரிய பார்வையும், பசியும் கொண்ட கழுகுகள் இரையினால் கவரப்படுவதைப் போல் - அவர்களைக் கவருவார்; மேலும் ஏற்ற வேளையில், சரியான உணவை கர்த்தர் அளிப்பார்; அதை அவருடைய ஜனங்கள் அடையாளம் கண்டறிந்து - அதனிடத்திற்கு கூடி வருவார்கள் - தயாராக இருக்கும் தகுதியானவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள், மற்றவர்கள் கைவிடப்படுவார்கள் என்பதே இதில் இருக்கும் பாடம்.

"தற்கால சத்திய" உணவு தற்போது நமது கர்த்தரால் அளிக்கப்படுவதும், அதனால் தமது பரிசுத்தவான்களை அதனிடத்திற்குக் கூட்டிச் சேர்ப்பதும், இந்த தீர்க்கத்தரிசனத்தின் விளக்கத்திற்கு மிகவும் சரியாகப் பொருந்துகிறது. ஒரு எந்திரக்கல்--ருந்து வெளியேறி மற்றொரு எந்திரக்கல்லுக்கு வரும்படி அழைப்பதல்ல, இந்த தற்கால அழைப்பு; அத்தோடு ஒரு படுக்கையி-ருந்து அதே அளவு கொண்ட மற்றொன்றுக்கு அழைப்பதும் அல்ல. ஒரு புதிய சபை பிரிவுக்குள் ஒருவரால் அல்லது அநேகரால் தன்னிடமோ அல்லது தங்களிடமோ கூட்டிச் சேர்ப்பது அல்ல இது; ஆனால் மெய்யான ஒரே ஆண்டவரும் போதகருமான கிறிஸ்துவான அவருடனே கூட்டிச் சேர்க்கும் ஒரு சேகரிப்பு.



கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தில் நம்பிக்கை வைத்த யாவரும், அவருக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்கள், ஒரே விசுவாச வீட்டாராகவும்- எல்லா சகோதரரும் - மனித விசுவாசங்கள் மற்றும் பிற விஷயங்கள் மீதான நம்பிக்கைகள் ஆகியவற்றைக் குறித்து அக்கறைக் கொள்ளாதவர்கள் யாவரும் ஒட்டுமொத்தமாக ஒரே நியாயப்பிரமாணிகர் கிறிஸ்துவை இதற்கு முன் எப்பொழுதாவது எங்கேயாகிலும் வெளியரகங்மாக அங்கீகரித்ததுண்டா? நாம் தீர்மானம் செய்யும் அளவிற்கு, அப்போஸ்தலரின் நாட்கள் முதலாக எங்குமே, எப்பொழுதுமே இருந்ததில்லை.

அத்தோடு கூட, மாபெரும் மனித ஆற்றல், சொல்வன்மை போன்றவைகள், பிற இயக்கங்களுடன் குறிப்பிடும் அளவில் இருக்கின்றன. ஆனால் கர்த்தரிடத்தில் தற்போது கூட்டிச் சேர்க்கப்படுபவர்களோடு இது இல்லை என்பதை கவனிப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். சத்தியமே, கர்த்தர் அளிக்கும் ஆவிக்குரிய ஆகாரமே, இங்கு இருக்கும் முழுமையான ஈர்ப்பு; மனித பகட்டு மற்றும் சொல்வன்மை இங்கு செயல்படுவதற்கு மிக சொற்பமான சந்தர்ப்பத்தையே காணமுடியும். அவைகள் இங்கு குறைவுபட்டிருக்கிறது. "நீதியின் மேல் பசி தாகம் உள்ளவர்களாக" இருப்பதனாலேயே அவர்கள் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கப்பட்டனர், சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்; மேலும் கர்த்தர் தாமே அளித்த திருப்திகரமான உணவை அவர்கள் கண்டுகொண்டு, அவரவர் தனக்குரியதைத் தாங்களே உண்ணுகிறார்கள்.

## நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்

*"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். (அடையாளங்கள் மற்றும் உவமைகளின் கீழ் இரகசியமாய் இந்த வேளை மறைத்து வைக்கப்பட்டிருப்பதால் ) திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள்." மத் 24:42, 43*

இந்த யுகத்தின் "வீட்டெஜமான்" அல்லது "வீட்டின் உரிமையாளர்" நமது கர்த்தர் அல்ல, ஆனால் நமது எதிராளியான, பிசாசுதான். "இப்பிரபஞ்சத்தின் தேவனும்', 'ஆகாயத்து அதிகாரப் பிரபுவும்,' "இவ்வுலகத்தின் அதிபதி"யுமானவன் கீழ்ப்படியாத பிள்ளைகளை ஆண்டு கொண்டு, கர்த்தருடைய க-க்கத்தினால் தங்களுடைய அறிவுக் கண்களை அபிஷேகித்துக் கொள்ளாதவர்களாகிய - விசுவாசியாத எல்லாருடைய மனதையும் குருடாக்கிக் கொண்டு வருகிறான். *(2 கொரி 4:4; எபே 2:2; யோ 12:21; வெளி 3:18)* இந்த எதிராளியானவன் ஒரு கபட வஞ்சகன், மிகுந்த தந்திரவாளி; தெய்வீக காலத்தையும், வேளையையும், ஏற்பாடுகளையும் குறித்து அவன் பெற்றிக்கும் ஞானத்தைக் கொண்டு, நமது கர்த்தர் முன்னமே அறிவித்திருக்கும் தெய்வீகத் திட்டத்தை எதிர்க்க தவறாதிருக்கிறான்.

பரமபிதா தம்முடைய தெய்வீகத் திட்டம் நிறைவேறுவதைத் தடைசெய்யாத வரையில் சாத்தான் தன் இஷ்டப்படி கிரியை செய்ய அனுமதித்தார். அப்படி ஏதாவது செய்தால் தமது அதிகாரத்தால் அதை நீக்குகிறார். ஆகையால் சாத்தான் வெகுகாலத்துக்கு முன்னமே வேதத்தை அறிந்திருந்தாலும் அதை மிகக்குறைந்த அளவிற்கே புரிந்து கொண்டிருக்கிறான். இதே காரணத்தினால் தான் மனிதனும் வேதத்தைப் புரிந்து கொள்ளவில்லை; ஏனெனில் அது உவமைகளாகவும், அடையாளமாகவும் உருவக பாஷையிலும் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் அவைகளைப் புரிந்துக் கொள்வதற்கு இது ஏற்ற காலமாக இருப்பதால் நமது கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறபடியே "எல்லா சத்தியத்துக்குள்ளும் வழி நடத்தும்" பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலைப் பெற்றிருப்பவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். ஆனால் இதை உலகம் புரிந்து கொள்ள முடியாது. சாத்தான் பரிசுத்த ஆவியைப் பெறாமலும், அதன் வழி நடத்துதல் இல்லாமலும் இருப்பதால் பெரும்பாலான தெய்வீக வார்த்தைகள் அவனுக்கு அறிவீனமாய் காணப்படுகிறது. ஆனால் உலகம் ஓரளவிற்குக் கற்றிருக்கிறபடியே பிசாசும் கற்றிருக்கிறான் என்பதில் சந்தேகமே இல்லை. "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது." *(சங் 25:14)* எனவே விழுந்துபோன



தூதர்களாகிய அவனது பிரதிநிதிகள் - கர்த்தருடைய உண்மையான அர்ப்பணம் செய்த ஜனங்கள், தெய்வீக திட்டத்தில் சிலவற்றை கற்றுக் கொள்ளுவதற்காக கூடும் சிறு கூட்டங்களிலும், வேதாகமப் பாடங்களிலும் (போன்றவற்றில்) அடிக்கடி இருப்பதை நாம் யூகித்துக் கொள்ளலாம்.

தெய்வீக திட்டத்தைக் குறித்து சாத்தான் இன்னும் முன்னதாகவே அதிகமாய் அறிந்திருந்தால், தன் நடவடிக்கைகளை எந்த விதத்தில் வித்தியாசமாய் செய்திருக்கக்கூடும் என்பதை நாம் யூகிக்க தான் முடியும். ஆனால் இப்படிப்பட்ட சாத்தானின் அறிவினால் சுவிசேஷ யுகத்தின் முடிவு மாறுதலான ஒன்றாக இருந்திருக்கக்கூடும், அத்தோடு கூட ஆயிரவருட ஆட்சியின் ஆரம்பமும் கூட தேவன் திட்டமிட்டு அறிவித்தி-ருந்து மாறுபாடாக இருந்திருக்கக்கூடும், என்பதைக் குறித்த நமது கர்த்தரின் உறுதியான சாட்சியம் நமக்கு உண்டு. ஆனால் தன் வீட்டை ஒழுங்காக அமைப்பதைக் குறித்து அறிந்து கொள்வதற்கு முன்னதாக, 1874ல் கர்த்தருடைய பிரசன்னத்தினால் அவன் அறியாதபடி எடுக்கப்பட்டுவிட்டான். பின்பு அறுவடைப் பணிகள் ஆரம்பமாயின. இதின் நிமித்தம் அவனது எல்லா கபட்டு வஞ்சகங்கள், மோசம் போக்குதல், சத்திய ஒளியைப் போன்று போ-யாக நடத்தல் முத-யவைகள், அவனது "வீடு," தற்காலத்து நிறுவனங்கள் எல்லாம் முற்றிலுமான அழிவைக் காணும். இதை அவன் உணர்ந்து கொண்டதால் வஞ்சிப்பதற்கான மிகத் தீவிரமான முயற்சிகளை அவன் மேற்கொள்கிறான். அவனே வியாதி, சுகவீனம் மற்றும் மரணத்தின் அதிபதியாக இருந்தும் கூட தன்னால் ஏமாற்றப்பட்ட ஊழியரின் மூலம் சரீர சுகம் போன்ற அற்புதங்களிலும் ஈடுபட்டான். *(எபி 2:14)* ஆனால் ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாக பிரிந்திருந்தால் அந்த வீடு நிலைநிற்க மாட்டாதே. மேலும் பாபிலோனின் அந்த வீழ்ச்சி மகாபெரியதாக இருக்கும். பெரிய எந்திரக் கல் ஒன்று சமுத்திரத்திலே எறியப்படுவது போல் அது விழும். வெளி *18:21*

"நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்." மத் *24:44*

இங்கு "நீங்களும்" என்று விசுவாசிகள், கர்த்தருக்கு உத்தமமானவர்கள் - சாத்தான் மற்றும் அவனது வீட்டாருக்கு எதிரிடையாக குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். கர்த்தருடைய பிரசன்ன நேரம் அவரது பரிசுத்தவான்களாலும் கூட முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியாது. அவரது தட்டும் ஓசையானது தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலரின் வார்த்தைகளால் அறிந்து கொள்ளப்பட்டிருந்தாலும் அக்டோபர் 1874 க்கு பிறகு ஒரு வருடம் வரையிலும் அறியப்படாமலேயே இருந்தது. அப்பொழுதி-ருந்து மனுஷகுமாரனின் பிரசன்னத்தைக் குறித்த வெளிப்படையான அடையாளங்களும், நிரூபணங்களும் அபரிமிதமாக இருக்கின்றன; மேலும் வானத்தின் நான்கு திசைகளின் காற்றினாலும் ஒன்று சேர்க்கப்பட்ட அவரது விசுவாசமுள்ள ஜனங்கள், அவரது விருந்து சாலைக்குள் கொண்டு செல்லப்பட்டு, உலகத்தால் அறிந்து கொள்ள முடியாததொரு பந்தியில் இருக்கச் செய்து, முத-ல் ஆண்டவர் தாமே அவர்களுக்குப் பரிமாறுவார். அதன்பின் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வர். லூக் 12:37 ஐ பார்க்கவும்.

### வீட்டாருக்கு போஜனத்தைப் பகிர்ந்தளித்தல்

*-மத் 24:45-51; லூக் 12:42-46-*

"ஏற்ற வேளையில் தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்? எஜமான் வரும்போது அப்படி செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான். தன் ஆஸ்திகள் எல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத் 24:45-51; லூக் 12:42-46

இங்கு கொடுக்கப்பட்டுள்ள விவரத்தைப் பார்க்கும் போது தீர்க்கதரிசனத்தால் தெரிவிக்கப்பட்ட அந்த குறிப்பிட்ட காலத்தில் - கர்த்தருடைய பிரசன்னம் என்று அழைக்கப்படும் காலத்தில் தெரிந்தெடுக்கப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்க்கும் சமயத்தில் - அவரது ஜனத்தின் மாபெரும் பணிவிடைக்காரரான நமது கர்த்தர், ஏற்ற காலத்தில் போஜனத்தைப் பகிர்ந்தளிப்பதற்கென ஒரு வழியைத் தெரிந்து கொள்வார். "உடன் பணிவிடைக்காரர்களும்" வீட்டாருக்கு போஜனத்தைக் கொண்டுவருவதற்கு பயன்படுத்தப்படுவார்கள். ஆனால் பணிவிடைக்காரன் வெறும் விசாரணைக்காரன் மட்டுமே. ஆனால் எஜமானரின் - கிறிஸ்து என்ற "உடன்படிக்கையின் தூதனானவர்"- தேவன் மற்றும் அவரது ஜனத்தின் மேன்மைமிகு பணிவிடைக்காரரின் - ஒவ்வொரு கட்டளையையும் முழுவதுமாக சரியாக ஏற்றுக் கொள்வதில் தவறிவிட்டால், எந்த நிமிடமும் அவன் நீக்கப்படவேண்டியவனாக இருக்கிறான்.



மேற்கூறப்பட்ட விசாரணைக்காரன் (எஜமானருக்கும், தன் உடன்-ஊழியக்காரருக்கும், வீட்டாருக்கும்) உண்மையுள்ளவனாக இருப்பதின் வெகுமதியை அந்த விசாரணைக்காரனாகவே நீடிப்பதன் மூலம் பெறுகிறான். அவன் உண்மையாய் ஊழியம் செய்யும் வரையிலும், அவன் அதில் தொடரக்கூடும். அத்தோடு விசுவாச வீட்டாருக்குப் புதியதும் பழையதுமானவைகளையும் ஏற்ற காலத்துக்குரிய போஜனத்தையும் பகிர்ந்து அளித்து - முடிவு பரியந்தம், தெய்வீக நியமனத்தி-ருந்து விலையேறப் பெற்ற பொருட்களைக் கொண்டுவந்து அளித்து, ஊழியம் செய்யலாம். ஆனால் ஒருவேளை உத்தமனாய் இல்லாது இருந்தால், முற்றிலுமாய் அவன் நீக்கப்பட்டு, புறம்பான இருளிலே போடப்படுவான். அதேசமயம் அந்த இடத்தை எதிர்பார்த்தபடியே வேறொருவன் - அதே சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டவனாக நிரப்புவான்.

நமது அறிவுக்கு எட்டியபடி "ஏற்ற வேளையில் போஜனம்" கொடுத்து விசாரிக்க ஒரு வழியாக இருக்கிற அந்த "பணிவிடைக்காரன்" அல்லது "விசாரிப்புக்காரன்" அந்த போஜனத்தை உண்டாக்கியவன் என்று பொருள் படவில்லை. இதற்கு முற்றிலும் மாறாக ஒரு சத்தியத்தை விநியோகிக்கும் பிரதிநிதியாக, கர்த்தரால் உபயோகிக்கப்படுபவர் மிகவும் தாழ்மையும், அடக்கமும் உள்ளவரும், அத்தோடு ஆண்டவரின் மகிமையில் மிகுந்த அக்கறை உள்ளவருமாக இருப்பார்; அதன்நிமித்தமாக சத்தியத்துக்கான "காரணகர்த்தா" என்றோ "உரிமையாளர்" என்றோ உரிமைகொண்டாடும் எண்ணம் இல்லாதவராய், ஆனால் அந்த சத்தியத்தில் மிகுந்த ஆர்வமுடன், அதை எஜமான் கொடுத்த

வெகுமானமாக கருதி தனது எஜமானரின் ஊழியருக்கும், வீட்டாருக்கும் விநியோகிப்பார்.

மற்ற எந்த ஆவியோ, செயல்பாடோ நிச்சயமாக வேறுபட்ட விசாரிப்புப் பணியையே செய்யும். இது நமது கர்த்தரால் கீழ்க்கண்டபடி விவரிக்கப்பட்டுள்ளது:

*"அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து (மாறி) : என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே (விசுவாசத்தை இழந்து) சொல்-க் கொண்டு, தன் உடன் வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி, வெறியரோடே (அவர்களுடைய கள்ள போதகத்தை) புசிக்கவும், குடிக்கவும் தலைப்பட்டால், அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும், அவனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து (தனது ஊழியனாக இல்லாமல் செய்து), மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்." மத் 24:48-51*

**** **** **** **** ****

நமது கர்த்தரே எல்லாத் தீர்க்கத்தரிசியைக் காட்டிலும் மேன்மையானவர். அதேபோல் அவரது தீர்க்கதரிசனமும் மிகவும் தெளிவானது. மோசே மற்றும் எரேமியா ஆகியோரின் தீர்க்கதரிசனங்களும் மற்ற தீர்க்கதரிசனங்களும் முக்கியமாக மாம்சீக இஸ்ரயே-ன் நிராகரிப்பு மற்றும் மீண்டும் கூட்டிச் சேர்க்கப்படுதலையும் தான் மிக முக்கியமாகக் குறிப்பிடுகின்றன. ஏசாயாவின் தீர்க்கதரிசனம் மாம்சீக இஸ்ரயேலரைக் குறித்தும் நமது பாவங்களுக்கான பாடுகளை அனுபவிப்பவராய் கிறிஸ்து இயேசுவைக் காண்பித்து, அவரே புறஜாதியாருக்கான ஒரு ஒளியாகவும், அத்தோடு மனுக்குலத்தின் ஒட்டு மொத்த குருட்டுக் கண்களைத் திறக்கும் "அந்த மெய்யான ஒளியாகவும்" இருப்பதைக் கூறுகின்றன. தானியே-ன் தீர்க்கதரிசனமோ மேசியாவின் வருகை மற்றும் வெட்டப்படுதலையும், பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தமுள்ளவர்களை அபிஷேகம் செய்தலையும் மற்றும் புறஜாதிகளின் அதிகாரத்தின் முடிவுவரையிலுமான



சரித்திரத்தையும், வானத்தின் கீழெங்கும் மேசியாவின் இராஜ்யம் நிறுவப்படுவதையும் கூறுகிறது. மேலும் அவர் போப்பரசின் சிறிய கொம்பின் துன்புறுத்தும் வல்லமையையும், அந்த யுகத்தின் போது பரிசுத்தவான்களை அது ந-வடையச் செய்வதையும் மற்றும் ராஜ்யத்துக்காகக் காத்திருக்கும் நாட்கள் போன்றவைகளையும் காண்பிக்கிறார். ஆனால் நமது கர்த்தரைத் தவிர வேறு எந்தத் தீர்க்கதரிசியும் இந்த "அறுவடை" காலத்திற்கான நமக்குத் தேவைப்படும் விவரங்களைக் கொடுக்கவில்லை. இவைகளை மற்ற தீர்க்கதரிசிகளுடைய விசேஷமான நிகழ்வுகளின் குறிப்புகளோடு தொடர்புபடுத்தியும் இருக்கிறார்.

நமது கர்த்தருடைய தீர்க்கதரிசனம், மற்றவர்களுடையதைப் போலவே அதே காரணத்துக்காகவே அடையாளம், உவமான பாஷையில் மறைக்கப்பட்டு இருக்கிறது; இதை "துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்," ஆனால் தேவனுடைய ஜனமாகிய தாழ்மையும், உண்மையும், விசுவாசம் கொண்டவர் மட்டுமே - தேவனுடைய ஏற்ற வேளையிலும் ஏற்ற வகையிலும் புரிந்து கொள்வார்கள்.

*"தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; மற்றவர்களுக்கோ, அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கத்தக்கதாக, அவைகள் உவமைகளாகச் (மறைமுகமாக) சொல்லப்படுகிறது." லூக் 8:10*

அ அ

## அத்தியாயம் 13

# ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் மற்றும் அது தன்னை வெளிப்படுத்தும் விதம்

விசுவாசத்தில் நடத்தல் - ராஜ்யத்தை யார் அமைப்பது - ஆவிக்குரிய ராஜ்யத்தை நிர்மாணித்தல் "பூமியெங்கும் பிரபுக்களை" நியமித்தல் - சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் - ராஜ்யத்துக்கும் அதன் மந்திரிகள் அல்லது பிரபுக்களிடையேயான நெருக்கமான தொடர்பு - யாக்கோபின் ஏணி - மோசேயின் முக்காடு - மாபெரும் மாறுதல்கள் தொடங்கப்படுதல் - புதிய சக்கரவர்த்தியின் கரத்தில் இருக்கும் அத்தனை வல்லமையினால் ஆபத்து இருக்குமா? - இரும்புக் கோ-ன் ஆட்சி எவ்வளவு காலத்திற்கு? - உலகத்தின் மனமாற்றம் - ஒரே நாளில் பிறந்த ஒரு ஜாதி - "பிரேதக் குழியிலுள்ள அனைவரும்" - அவரது ராஜ்யத்தின் பெருக்கம் - பிரதிநிதித்துவம் ஒப்புவிக்கப்பட்டது - தேவனுடைய சித்தம் பூமியில் செய்யப்பட்டது.

"சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்." "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாக உயர்த்தப்பட்டிருக்கும்."

"அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள். சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதனிடமாகச் சேர்வார்கள்; அவர்கள் இனி தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள்." ஆகா. *2:7; மீகா 4:1,2;* எரே. *3:17*

தெய்வீக திட்டத்தின் நமது பாடங்களைப் படித்து அந்த உக்கிரகத்தின் நாளின் உபத்திரவத்தின் முடிவை நெருங்கி, பாவம் மற்றும் சுயநலத்துக்கு எதிராகத் தெய்வீக கோபம் எப்படி எரியும்

என்பதைப் பார்த்திருக்கிறோம். தேவனுடைய ராஜ்யம் எப்படி நிறுவப்பட வேண்டும், பூமியின் குடும்பங்கள் யாவும் எதன் மூலம் ஆசீர்வதிக்கப்படவேண்டும், அத்தோடு தற்போதைய மற்றும் கடந்த காலத்தின் தவறான ஒழுங்கு முறைகளுக்குப் பதிலாக ஒரு புதிய, நிரந்தரமான அத்தோடு மிகவும் மேலான ஒழுங்குமுறைகள் அமைக்கப்படுதல் ஆகியவை குறித்து வேதத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கும் நிலைமைக்கு வந்திருக்கிறோம்.

ஒருவேளை வெகுசமீபத்தில் நடக்கப்போகும் பயமூட்டும் சம்பவங்கள் தங்களுடைய நிழலை இந்த உலகத்தின் முன் அச்சத்தையும் நடுக்கத்தையும் விளைவிக்கும் விதமாக ஏற்கெனவே அளித்திருக்குமேயாகில், "உன்னதமானவரின் மறைவி-ருந்து" பார்க்கின்றவர்கள் தங்களுடைய மீட்பு சமீபமாயிருக்கிறபடியால், அவர்கள் நிமிர்ந்து பார்த்து தங்கள் தலைகளை உயர்த்தும்படியான ஒரு வெற்றிக்கோட்டினை உபத்திரவத்தின் மேகங்களில் காண்பார்கள்; மேலும் "செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும். நீதியின் சூரியன் உதிக்கும்போது" விலையேறப்பெற்ற ரத்தத்தால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட எல்லாருக்கும் கூட விமோசனம் கிடைக்கும். மல் *4:2*

ஏற்கனவே விவரித்து பேசப்பட்டிருக்கும் அநேக விஷயங்களால், சாதாரண மனிதரும் கூட பெரிதும் கவரப்படக்கூடும் என்பது மிகவும் வெளியரங்கமாகத் தெரிகின்றது. ஆனால், இப்போது, கர்த்தருடைய வார்த்தையில் அதிக ஜாக்கிரதையான ஆராய்ச்சியும் தெளிவானதொரு கண்ணோட்டமும் உறுதியானதொரு விசுவாசமும் தேவைப்படுகிற ஒரு பகுதியை நாம் நெருங்கி வருகிறோம். ஏனெனில், அது விசுவாசக் கண்களுக்கு மட்டுமே காணக்கூடியதாக இருக்கிறது. தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கும்படியும், "தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்" என்று நம்பும்படியாகவும் தேவனுடைய ஜனங்கள் எதிர்பார்க்கின்றனர். ரோம *4:18-21*

இந்த விஷயங்களில் எதையுமே ஒருவன் தன் சொந்த அறிவினாலோ அல்லது ஞானத்தினாலோ அறிந்து கொள்ள முடியாது. ஆனால் அவர் தாம் "வாக்குத்தத்தம் பண்ணியவைகளில் ஒரு வார்த்தையானாலும் தவறிப்போகவில்லை" *(1 ராஜா 8:56)* என்று



தேவனுடைய வல்லமையில் விசுவாசம் வைத்து பரிசுத்தமுள்ளவரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் மட்டுமே உணரக் கூடும். அவர்கள் மட்டுமே எதிர்கால நற்காரியங்களில் முழு நம்பிக்கை வைத்து பொறுமையோடு காத்திருப்பார்கள்.

இஸ்ரயே-ன் நிழலான ராஜ்ய காலத்துக்கும் மேசியாவின் ராஜ்யத்தின் முழுமையான நிர்மாணத்துக்கும் இடையேயான காலத்தின் தற்கா-க ஆக்கிரமிப்பே "புறஜாதிகளின் காலம்" என்றும், ["காலம் சமீபித்திருக்கிறது" என்ற தொகுப்பின் ஆசிரியர் முகவுரையில் *(1916)* தேசங்களுடைய முறைப்படியான ஆட்சி மாற்றமும், ராஜ்யத்தின் நிர்மாணத்தை குறித்தும் ஆசிரியர் விளக்கியுள்ளார்] இது கி.பி. *1914* அக்டோபரில் முடிவடையும் என்றும் நமது முந்தைய பாடங்களில் நாம் கற்றோம். நமது கர்த்தரின் பிரசன்னத்தின் காலகட்டமான *1874* முதல் *1914* வரையிலானது ஒரு அறுவடையின் காலமாக இருக்கிறது. இதனுடைய ஆரம்ப பகுதியானது தெரிந்தெடுக்கப்பட்ட மணவாட்டியைக் கூட்டிச் சேர்ப்பதற்கும், அதன் பின்பகுதி உபத்திரவ காலமாகிய தற்போதிருக்கும் நிறுவனங்களைக் கவிழ்ப்பதற்கும், புதிய இராஜ்யத்துக்கான ஆயத்தத்துக்கும் உரியது என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். மற்ற ராஜ்யங்கள் பெருமளவில் ஏமாற்றமும், கொடுங்கோலாட்சியையும் சிருஷ்டிகள் மீது கொண்டு வந்திருகையில், 5ம் உலகப் பேரரசாகவும், முடிவற்றதுமான, உன்னதமானவரின் இந்த ராஜ்யத்தின் ஸ்தாபகத்துடன் தொடர்புடைய சில விவரங்களை தீர்க்கதரிசன விளக்கின் வெளிச்சத்தில் *(சங் 119:105; 2* பேது *1:19)* நாம் இப்போது ஆராய்வோம். இது ஒரு யூபி-யின் எக்காளத்தின் முன்னறிவிப்புடனேயே வரவேண்டியிருக்கிறது என்பது நிழலாக காட்டப்பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. *(லேவி 25:9)*; மேலும் இதுவே "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டதாக" முடிவில் அறிந்து கொள்ளப்படும் என்று தீர்க்கதரிசி ஆகாய் *(2:7)* நமக்கு உறுதியளிப்பது ஆச்சரியமானதும் அல்ல.

தேவனுடைய ராஜ்யம், பரலோக ராஜ்யத்தின் ஸ்தாபகம் நடைமுறையிலான ஒரு செயல்பாட்டை பெற்றிருப்பதனால், வேதவசனங்களி-ருந்து இந்த ராஜ்யத்தின் ராஜாக்கள் மற்றும் அதை

அமைப்பது யார் என்பதையும் நாம் ஏற்கெனவே கற்றிருப்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வோமாக.

*(1)* பரலோகப் பிதாவானவரே மகத்துவமுள்ள ராஜா, இவரே மீட்பிற்காக ஒரு திட்டத்தை ஒழுங்கு செய்திருக்கிறார். ஆயிர வருட அரசாங்கம் இதன் ஒரு பாகமாக இருக்கும். அவரது வல்லமையினால் நிறுவப்பட்டு நிலை நிறுத்தப்படுகிற அவரது ராஜ்யமாக இருக்கும். *(1கொரி 25:24-26)* மேலும், தம்மால் அமர்த்தப்பட்ட மத்தியஸ்தர் மூலமாய் தமது பிரமாணங்களையும் தம்முடைய அன்பையும் இரக்கத்தையும் கொண்டதாகிய, அவரையே பிரதிப-க்கச் செய்வது அவரது இராஜ்யமே.

*(2)* இதுவே கிறிஸ்துவின் ராஜ்யமாகவும் இருக்கிறது. தேவனின் பிரிய குமாரனுடைய ராஜ்யம். தீமையை ஜெயிப்பதற்கும், பாவத்தை அழிப்பதற்கும், தெய்வீக சாயலுக்கும், சலுகைக்கும், நித்திய வாழ்வுக்கும், திரும்பக் கொண்டுவரப்படும் மீட்கப்பட்ட மனுக்குலமாகிய இவர்கள் யாவரும் பிதாவிற்கும் அவருடைய பிராமணங்களுக்கும் இருதயபூர்வமான பூரண கீழ்ப்படிதலுக்குள் கொண்டு வருவதற்கும் அதில் பிதாவின் பிரதிநிதியாய், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக, இந்த ஆயிரவருட இராஜ்யத்தின் திறமைமிக்க இராஜாவாக கிறிஸ்து இருப்பார்.

*(3)* தங்களுடைய கர்த்தராகிய இயேசுவுடன் இணைந்து இவ்வுலகை ஆளவும், நியாயம் தீர்க்கவும் ஆசீர்வதிக்கவும் கூடிய "ராஜரீக ஆசாரியர்களாக" *(வெளி 5:10)* இருக்கப்போகும் பரிசுத்தவான்களின் ராஜ்யமாகவும் இது இருக்கும். *(ரோ 8:17, 18)*

ராஜரீக வகுப்பார் என்பது நமது கர்த்தரையும் இந்த சுவிசேஷ யுகத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையுமே கொண்டதாக இருக்கும். இவர்களை பார்த்து, "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்று கூறியிருக்கிறார். இவர்களைக் குறித்து தானியேல் தீர்க்கதரிசிக்கு கர்த்தர் கூறியது: "வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும், ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்கு கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்." *தானி 7:27*



ஆனால் இவர்கள் தங்களுடைய உயிர்த்தெழுத-ல் மறுரூபம் அடைந்து இனியும் மனிதர்களாக இல்லாமல், தெய்வீக சுபாவத்தின் பங்காளர்களாக தேவனைப் போலவும் வானத்து தூதரைப் போலவும் மனுக்குலத்தின் கண்களுக்குப் புலப்படாதவர்களாக இருப்பார்கள் என்பது நினைவில் கொள்ளப்படவேண்டும். *(முதலாம் உயிர்த்தெழுதல் (வெளி 20:4,6; 1 கொரி 15:42-46,50-54; யோவா 3:5,8)* இந்த மகிமையான சபைக்கும், அது நியாயந்தீர்க்கப்போகும் பாவம் மற்றும் மரணத்தின் இழிவி-ருந்து உயர்த்தப்படப்போகின்றவர்களுக்கும் இடையே ஏதோ ஒருவிதமான தொடர்பு எப்படியாகிலும் அவசியப்படும். கடந்த காலத்திலே இப்படிப்பட்ட பரிமாற்றம் என்பது ஆவிக்குரியவர்களுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே தேவைப்பட்டபோது, ஆவிக்குரியவர்கள் மாம்சீக சரீரத்தில் தோன்றி, அதன் மூலம் தெய்வீக ஏற்பாட்டைக் குறித்து சில குறிப்பிட்ட முக்கிய மனிதர்களுடன் தொடர்பு கொண்டார்கள். இவ்வண்ணமாகவே ஆபிரகாம், சாராள், லோத், கிதியோன், தானியேல், இயேசுவின் தாய் மரியாள் மற்றும் அநேகருக்கு தூதர்கள் தோன்றினார்கள். இப்படிப்பட்ட பரிமாற்றத்தைத் தன்னுடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு ஆவிக்குரிய சரீரத்தில் அப்போஸ்தலருடன் ஏற்படுத்தினார். ஏனெனில், சில குறிப்பிட்ட புத்திமதி / அறிவுரைகளை அவர்களுக்குக் கொடுப்பதற்கு அது அவசியமாக இருந்தது. அத்தோடு "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்ததினால், பரிசுத்த ஆவி இன்னும் அருள்படவில்லை." யோவா *7:39*

ஆனால், ஆயிரவருட அரசாட்சியின் போது ஆவிக்குரிய ஆளுநர்களுக்கும், அவர்களுடைய பூமியின் பிரஜைகளுக்கும் இடையிலான தொடர்பு இதே விதத்தில் தான் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட மனித வகுப்பார் ஏற்கெனவே சோதிக்கப்பட்டு (சுவிசேஷ யுகத்தின் முந்தைய காலகட்டத்தின் போது), பரிபூரணம் மற்றும் நித்திய வாழ்வுக்குத் தகுதி வாய்ந்தவர்களாகக் காணப்பட்ட இவர்கள் ஆயிரவருட ஆட்சிகாலம் முழுவதும் ஆவிக்குரிய ராஜ்யத்தின் பரிசுத்தவான்களுக்கும், பிரஜைகளான மனுக்குலத்திற்கும் இடையில் மத்தியஸ்தர்களாக ஊழியம் செய்வார்கள் என்பது தேவனால்

முன்னேற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம்.

*(4)* இந்த மத்தியஸ்தரானவர்கள் மனுஷர் முன்பாக தேவராஜ்யத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, அதனுடைய கண்ணுக்குப் புலப்படும் பிரதிநிதிகளாக இருப்பார்கள். ஆகையால் மனுஷரிடையே காணப்படக்கூடிய இதை நாம் "தேவராஜ்யத்தின் பூமிக்குரிய நிலை" என்று அழைக்கிறோம். *லூக் 13:28*

"ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் சகல தீர்க்கதரிசிகளும்," பழைய ஏற்பாட்டு காலத்து பரிசுத்தவான்களும் தங்களுடைய சோதனையை ஜெயித்துவிட்டபடியினால், மரணத்தி-ருந்து பூரணமான மனிதத் தன்மைக்கு முழுமையாய் எழுந்திருப்பார்கள் என்று நமது கர்த்தராலும் அப்போஸ்தலராலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். *(மத் 8:11; எபி 11:4-40)* மேலும், மீதமுள்ள மனுக்குலத்தைப் போல் ஆயிரம்ஆண்டு கால நியாயத் தீர்ப்புக்குரிய உயிர்த்தெழுதல் அவர்களுக்குத் தேவையில்லை. மேலும் இந்த பூரணத்துவம் ஆவிக்குரிய இராஜாக்களுடனும் ஆசாரியர்களுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கு இவர்களைத் தகுதி படுத்தும். பிரமாணங்களையும், மற்ற காரியங்களையும் உலகத்துக்கு எடுத்துரைக்க ஆவிக்குரிய ஜீவிகள் மாம்ச சரீரத்தில் வரவேண்டியது அவசியமே இல்லை. ஆதாம் தனது மீறுதல்களுக்கு முன்னதாக, பரிபூரணமாக இருந்தபோது, பரலோக வல்லமைகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடிந்தது போலவே, இந்த தகுதி மிக்க பரிசுத்தவான்களும் அதே பூரண நிலைக்கு புதுப்பிக்கப்படும் போது நேரடியாகத் தொடர்பு கொள்ளுவார்கள்.

ஆனால், பூமியின் ஆளுநர்கள் "இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும்" இருக்கமாட்டார்கள். இராஜாவின் நியமனத்தின் கீழ் அவர்கள் "பூமியின் மேல் பிரபுக்களாக," முக்கியஸ்தராக, போதகர்களாக இருப்பார்கள்.

## இராஜ்யத்திற்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் இடையேயான மிக நெருக்கமான தொடர்பு

பூமிக்குரிய தேவராஜ்யமானது ஆவிக்குரிய



ஆளுகையாளர்கள் மற்றும் ராஜ்யத்துடன் நெருங்கிய தொடர்பும், ஐக்கியமும், கூட்டுறவும் கொண்டிருக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் தகப்பனையும், பிள்ளைகளையும் போலவே ஒருவரோடு ஒருவர் உறவு உடையவர்களாய், ஒரே பரலோக அரசாங்கத்தின் கூட்டுறவு துறைகளைப் போல் இருப்பார்கள். மேலும் ஆவிக்குரியவர்கள் சட்டத்தை அளிக்கின்றவர்களாகவும் பூமிக்குரியவர்களோ சட்டத்தை அமுல்படுத்துகிறவர்களாவும் இருப்பார்கள். எழுதப்பட்டிருக்கிறபடியே, "சீயோனி-ருந்து (ஆவிக்குரிய ராஜ்யம்) வேதமும், எருசலேமிருந்து கர்த்தருடைய வசனமும், (பிரபுக்கள் மூலமாய் தெய்வீக செய்திகள்) வெளிப்படும்." *ஏசா 2:3*

## இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல்

"தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாக அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் (அதை தேவனிடமிருந்து வரும் செய்தியாக ஏற்றுக்கொண்டு) பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்." *(லூக் 16:16)* கடந்த 18 நூற்றாண்டுகளாக இந்தச் செய்தி, இராஜ்யத்துக்கான அழைப்பு இவ்வுலகில் இருந்து ஜெயம் கொண்டவர்களை, தெரிந்து கொள்ளப்பட்டவர்களைத் தெரிந்தெடுக்கும் பணியைச் செய்து கொண்டு வருகிறது. இந்தக் காலம் நெடுகிலும் விசுவாசம் மற்றும் கீழ்ப்படித-ன் மூலமாய் நித்திய வாழ்வுக்கான வாய்ப்பை பூமியின் மீட்கப்பட்ட ஜனங்களுக்காகக் கொண்டுவரும்படியாகவும், போதித்து அவர்களை ஆளுவதற்கு தேவனுடைய ராஜாக்களாகவும், ஆசாரியராகவும், தாங்கள் உயர்த்தப்பட பிதாவுடைய வேளைக்காக இவர்கள் காத்திருக்கின்றனர். ஆயினும் இத்தனை காலமாகவும் இந்த இராஜரீக கூட்டத்தார் இஸ்மாயில் மற்றும் ஏசா வகுப்பினரிடமும் இந்தப் பிரபஞ்சத்தின் அதிபதியான பிசாசு மற்றும் அவனது குருட்டாட்டமுள்ள ஊழியக்காரரிடமும் கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர். இதை நமது கர்த்தர் கூறுகிறபடி, "பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்." *(மத் 11:12)* நமது கர்த்தர், ராஜ்யத்தின் தலையானவர், மரண பரியந்தம் பாடுபட்டார். அவரைப் பின்பற்றுகிற யாவரும் பூமிக்குரியவைகளை இழந்து போகும் அளவிற்கு பாடுபட்டு,

அதற்குப் பிரதிபலனாக இருளின் அந்தகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, அவரது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர். கொலோ 1:13

பதினெட்டு நூற்றாண்டு காலமாக இவர்கள் தீமையின் கொடுமைக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டதற்கு காரணம் தமது ஜனத்தை பாதுகாக்கும்படி உயிர்த்தெழுந்து, பரத்துக்கேறி மகிமையடைந்த நமது கர்த்தருக்கு வல்லமை குறைவு என்பது காரணம் அல்ல. ஏனெனில், உயிர்த்தெழுந்தபின் அவர் கூறியதாவது, "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது." (மத் 28:18) ஒரு காரணத்துக்காகவே வல்லமையை உபயோகப்படுத்துவதில் தாமதம் ஏற்படுகிறது. பிதாவினுடைய திட்டத்தில் பாவத்துக்காக மேன்மையானதொரு ப-செலுத்தப்படவேண்டிய "ஏற்றவேளை" ஒன்று இருந்தது. அத்தோடு தேவராஜ்யம் நிறுவப்பட்டு, பூமியை வல்லமையோடும், உன்னதமான மகிமையோடும் ஆளுகை செய்வதற்கும் ஆசீர்வதிப்பதற்கும் மற்றொரு ஏற்ற வேளை உண்டு. எனவே, இவை இரண்டுக்கும் இடையே உள்ள காலம் கிறிஸ்துவோடு இராஜ்யத்தில் உடன் சுதந்திரவாளிகளாகும்படியான தெரிந்து கொள்ளப்பட்ட சபையை அழைப்பதற்கும் தயார் படுத்துவதற்கும் போதுமான காலம் ஆகும். தீமையின் செல்வாக்கும் பாவிகளுடைய எதிர்ப்பும் இராஜ்ய வகுப்பின் அங்கத்தினரை சுத்தப்படுத்தவும், சோதிக்கவும், மெருகேற்றவும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. தலைக்கு சம்பவித்ததைப் போலவே சரீரத்துக்கும் சம்பவிக்கும்படியாக, "பாடுகளினால் பூரணமாக்கப்பட்டு" ஒரு புதிய சிருஷ்டியைப் போல் ஒவ்வொரு அங்கத்தினரும் ஆவது தேவனுடைய திட்டமாக இருக்கிறது. எபி 5:8,9

ஆனால், நாமோ இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் இருக்கிறோம். அத்தோடு தேவ ராஜ்யமும் நிறுவப்பட்டுக் கொண்டிருக்கிறது. நமது கர்த்தர், நியமிக்கப்பட்ட ராஜாவானவர் தற்போது கி.பி. 1874 அக்டோபர் முதல் பிரசன்னமாகி இருக்கிறார், தீர்க்கதரிசிகளின் சாட்சியங்களின்படியே, காதுள்ளவன் இதைக் கேட்கக்கடவன். மேலும் அவரது ராஜாங்கத்தின் அலுவல்கள் கி.பி.1878 ஏப்ரல் மாதம் முதல் முறைப்படியாக



ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. தமது உவமைகள் மற்றும் தீர்க்கதரிசனத்தின் மூலம் காண்பிக்கப்பட்டபடியே நமது கர்த்தர் தெரிந்தெடுக்கப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்க்கும் தேவராஜ்யத்தின் முதல் பணியானது தற்போது நடந்து வருகிறது. "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" என்று அப்போஸ்தலர் மூலமாய் கர்த்தர் விளக்கியிருக்கிறார். அத்தோடு சபையின் உயிர்த்தெழுதலானது ஒரு கணப்பொழுதில் நடக்கும். (தொகுதி 3, அத்தி.6) அவரது ராஜ்யம் நமது ஆண்டவரோடும் அவரது சரீரமாக, மணவாட்டியாக ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திரைக்குள் இருக்கும் பரிசுத்தவான்களோடும் 1878ல் அமைக்கப்பட்டுவிட்டது. மேலும் அது முழுமை அடையும்படி இன்னும் மீதமுள்ள யாவரும், சோதனைகள் இன்னும் முழுமையடையாத, இன்னமும் உயிருடன் இருக்கும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கர்த்தரிடத்தில் ஒன்று கூட்டி சேர்க்கப்பட வேண்டியதாயிருக்கிறது.

இருப்பினும் உயிருடன் இருக்கும் அங்கத்தினர்கள் தங்களுடைய ஓட்டத்தை முடிக்கும் வரையில் இராஜ்யம் காத்திருப்பதற்கு பதிலாக, ராஜ்யத்தின் பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட்டுவிட்டன. திரைக்கு இப்புறத்தில் உயிருடன் இருப்பவர்கள் "இராஜ்யத்தின் இரகசியங்களை" அறிவதற்காக சிலாக்கியம் பெற்றவர்களாக மறுரூபத்திற்கு முன்னமே இராஜ்யத்தின் பணிகளில் ஈடுபட ஆரம்பித்துவிடுகின்றனர். மேலும் அவர்கள் மரிக்கும்போது (நித்திரைக்குள் விழாமல்) மரித்த அந்த கணப்பொழுதிலேயே மறுரூபமாக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்ட, பரிசுத்தமான முதலாம் உயிர்த்தெழுத-ல் உயிர்த்தெழுவர். எழுதப்பட்டிருக்கிறபடியே, "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழித்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார்." வெளி 14:13

1914 அக்டோபர் "புறஜாதியாரின் காலத்தின்" முடிவில் அரசியல், பொருளாதார மற்றும் மதம் என்னும் இந்த பொல்லாத உலகத்தின் வல்லமை மற்றும் செல்வாக்கைப் பூரணமாக அழிவிற்குக் கொண்டு வருவதற்கும் முன்னதாக தேவனுடைய

ராஜ்யம் முத-ல் நிறுவப்படவேண்டும் என்னும் வேதகாமக் குறிப்புகளுக்கு இவை யாவும் ஒத்துப்போகின்றன. இதற்கிசைவான வசனங்களைப் பார்ப்போம்.

ஏழாவது எக்காளத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவங்களைக் கூர்ந்து கவனிக்கும் போது இந்த ஒழுங்கு தெரிகிறது. (1) பூமியின் ராஜாவாக, அதிகாரமானது நமது கர்த்தரால் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும் அவரது ஆளுகை தொடங்குகிறது. (2) இதன் விளைவாக அந்த மகா நியாயத் தீர்ப்பின் உபத்திரவம் உலகத்தின் மீது வருகிறது. தீர்க்கதரிசனமாக, நமக்கு உரைக்கப்பட்டபடி, அந்த ஆளுகையானது உபத்திரவ காலத்துக்கு முன்னதாகவும், பரிசுத்தவான்களின் மற்றும் தீர்க்கதரிசிகளின் உயிர்த்தெழுதலுக்கு முன்னதாகவும் ஆரம்பமாகும். ஆனால் அது (ஒரு ஆயிரமாண்டு கால மட்டும்) நீண்ட நாட்களுக்கு நீடித்து, எல்லா மனிதரும் நியாயம் தீர்க்கப்பட்டுத் தீரும் வரை அதாவது கர்த்தரைக் கனம் பண்ணுகிறவர்களுக்கு சன்மானம் அளித்து, தங்களுடைய செல்வாக்கினால் களங்கப்படுத்துகிறவர்களை அழிக்கும் வரை தொடரும். இந்தக் குறிப்புகளை கீழ்க்கண்ட வசனங்களில் கவனிக்கவும்.

“இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்; தேவரீர் உமது மகா வல்லமையைக் கொண்டு ராஜ்ய பாரம் பண்ணுகிறீர். (பிதாவினால் சகலமும் உண்டாயிருக்கிறது. அவரது கனமுள்ள பிரதிநிதியான குமாரனின் மூலமாக சகலமும் உண்டாயிருக்கிறது). (ஆளுகை ஆரம்பமாகிவிட்டதன் விளைவாக) ஜாதிகள் கோபித்தார்கள். அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது. மரித்தோர் நியாயத் தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும், பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின் மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது.” வெளி *11:17,18.*

அதேவிதமாக நாம் வாசிக்கிறோம் : “பாபிலோனின்” வீழ்ச்சிக்கு முன்னதாகவே தேவராஜ்யத்தின் ஆளுகை



தொடங்கிவிடும். மேலும், தேவ ராஜ்யத்தின் நியாயத் தீர்ப்பின் விளைவாக பாபிலோன் விழும். பின்பு அவளிடம் இருக்கும் சிலர் அவளுடைய வீழ்ச்சிக்குப் பின் கிறிஸ்துவின் மூலமாக வெளிச்சத்தையும் விடுதலையையும் பெற்றவர்களாகக் காணப்படுவார்கள். அவர்கள் கூறுவது :

“அவருடைய நியாயத் தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகாவேசிக்கு அவர் நியாயத் தீர்ப்புக் கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள்.” வெளி *18;19:1-7*

மாபெரும் சிலையின் மூலம் குறிப்பிட்ட புறஜாதிகளின் அதிகாரம் குறித்து நேபுகாத் நேச்சாரின் தரிசனத்தை தானியேல் தீர்க்கதரிசி பரிசுத்த ஆவியால் விளக்கினார். அந்த தரிசனம் காட்டியபடி ஒரு கல் அந்த சிலையின் பாதத்தின் மீது மோதுகிறது. இதன் விளைவு தான் புறஜாதியாரின் ஆளுகை அடியோடு அழிக்கப்படுதல். மேலும், அதன் பிறகு இந்த முழு பூமியையும் நிரப்பும் மட்டும் கல் விரிவடைகிறது. கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம் காட்டுவது என்னவெனில், தேவனுடைய ராஜ்யம் நிறுவப்பட்டு முழுமையாக அதிகாரம் பெற்றதின் விளைவால் உலக அரசாங்கங்கள் அழிக்கப்படும். தானியேலுடைய சாட்சியம் கீழ்க்கண்டவாறு இருக்கிறது:

“அந்த ராஜாக்களின் நாட்களிலேயே (சிலையின் பாதத்துக்கு ஒப்பிடப்பட்ட கடைசி புறஜாதியாரின் அதிகாரம்), பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; (உலகத்தால் ஒரு ராஜாங்கம் என்று அறிந்து கொள்ளப்படாத ஒன்று சுவிசேஷயுகம் முழுவதிலும் தற்போது பிரதிநிதித்துவப்படுத்தும்) அந்த ராஜ்யம் (சிலையின் பிரதிப-த்தது போன்ற மாற்றம் அடையும் புறஜாதிகளின் ராஜாங்கத்தை போல இல்லாமல்) வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; (சிலையின் அதிகாரம் ஒருவரிடத்தி-ருந்து வேறு ஒருவருக்கும் மாற்றப்படுவது போல்) ஆனால் அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.” தானி *2:44*

தம்முடைய ராஜ்யம் நிறுவப்படும் நேரத்திலும், புறஜாதியாரின் அதிகாரங்கள் தூக்கியெறியப்படும் போதும், ஜெயம் கொண்ட சபையானது தம்முடன் இருக்கும் என்றும் அந்தப் பணியில் சபையும் பங்கு பெறும் என்றும் தம்முடைய உண்மையுள்ளவர்களுக்கு நமது கர்த்தர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அவரது சொந்த வார்த்தைகளாவன :

"ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றது போல, ஜாதிகளின் மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படுவார்கள்." *(வெளி 2:26,27)*, சங் *149:8,9*ஐ ஒப்பிடவும்.

நமது கர்த்தராலும் அவரது மகிமையடைந்த பரிசுத்தவான்களாலும் திரைக்குப் பின்னால் அந்த உன்னதமான பணியின் எந்தப் பகுதி, எவ்விதத்தில் கையாளப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை உண்மையில் தீர்மானிப்பதற்கு நம்மால் முடியாமல் போகலாம். ஆனால் திரையின் இந்தப்புறம் முடிவுக்கு வராத ஓட்டமும், சேவையும் கொண்ட அதே ராஜரீக வகுப்பாருக்கு கொடுக்கப்பட்ட பணியில் அவர்கள் ஈடுபட்டிருப்பார்கள் என்று நிச்சயமாக கூறமுடியும். அறுவடைப் பணிகள்: *(1)* ஜீவித்துக் கொண்டிருக்கும் தெரிந்து கொள்ளப்பட்டவரை கூட்டிச் சேர்த்தல் *(2)* ராஜ்யம் நிறுவப்பட்டுக் கொண்டிருக்கிறது, உங்கள் தேவன் ஆளுகை செய்கிறார் என்று சீயோனுக்கு சொல்லுதல், மற்றும் *(3)* நமது தேவனின் கோபாக்கினையின் நாளை அறிவிப்பது.

## பூமிக்குரிய அரசாங்கத்தை நிறுவுதல்

புறஜாதியாரின் காலம் *(கி.பி.1914, அக்டோபர்)* முடிவுக்கு வரும் வரையில் தேவனுடைய ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியை நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஏனெனில் புறஜாதியாருக்கு அந்த நாள் வரையிலும் ஆளுகையின் உரிமையை அளித்ததில் தேவன் எந்தத் தவறையும் செய்துவிடவில்லை. அத்தோடு அவரது திட்டம் மாறாது. தேவனுடைய ராஜ்யத்தின் பூமிக்குரிய பாகம் நிறுவப்படும் போது அது இஸ்ரயேலருக்குரியதாக இருக்கும். ஏனெனில், ஆபிரகாம்



மற்றும் அவனது மாம்சீக வித்தோடு தேவனின் உடன்படிக்கை அப்படியாக இருக்கிறது. முதன்மையான ஈவு, ஆவிக்குரிய ராஜ்யமும் கூட, மாம்சீக இஸ்ரயேலருக்கே முதன்முத-ல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. மேலும், கிறிஸ்துவோடு பாடுபட்டு, பின்பு அவரோடு கூட மகிமையடைய வேண்டும் என்ற நிபந்தனையை அவர்கள் இருதயப் பூர்வமாக ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருந்திருப்பார்களேயானால், அதுவும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும். *(ரோம 8:17)* இஸ்ரயேல் உண்மையில் தேவன் கொடுக்க இருந்ததில் மிகவும் சிறந்த ஒன்றினை வாஞ்சித்து நாடியது. ஆனால், "இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாம-ருக்கிறார்கள்; தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ ("சிறுமந்தை" - யூதரிலும் புறஜாதிகளிலும் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்) அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் கடினப்பட்டிருக்கிறார்கள்"- நிரந்தரமாக அல்ல. ஆனால், ராஜ்யம் முழுமை பெறும் வரையில், ஆவிக்குரிய வித்துக்களின் தேர்வு முடியும் வரையில். ரோ *9:31-33; 11:7,23,25-32*

வாக்குத்தத்தத்தின்படியே, தெய்வீக ஈவின் நிமித்தம், அவநம்பிக்கையின் பல்வேறு நிலைகளி-ருக்கும் போதும் இஸ்ரயேலர் மறுபடியும் பாலஸ்தீனத்திற்குள் கூட்டிச் சேர்க்கப்படும் போது அந்த பூமிக்குரிய இராஜ்யத்தின் பகுதியோடு இணைந்து செயல்படவோ, அல்லது ஆதரவாளர்களாகவோ அல்லது ஒரு பகுதியினராகவோ எந்த ஒரு கோணத்திலும் எண்ணிப் பார்க்கவே இல்லை; முத-ல் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்றும் இஸ்ரயேலுக்கும், உலகத்துக்கும் உரிய ஒரே மீட்பரும் இரட்சகரும் என்றும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

கி.பி.*1914*ன் முடிவில் தேவராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியின் ஆரம்பத்தில் பழைய ஏற்பாட்டு காலத்தின் பரிசுத்தவான்களாகிய ஆபேல் தொடங்கி யோவான் ஸ்நானகன் வரை "ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் சகல தீர்க்கதரிசிகளும்" அடங்கிய உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களை முழுமையாகக் கொண்ட ஒன்றாக இருக்கும் என நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். *(மத் 11:11; லூக் 13:28; எபி 11:39, 40ஐ ஒப்பிடவும்)* இந்த பழைய ஏற்பாட்டு கால பரிசுத்தவான்கள், ஆவிக்குரிய ராஜ்யத்தில் ஒரு பாகமாகவோ அல்லது மொத்தமாகவோ

காணப்படமாட்டார்கள். ஏனெனில், அவர்கள் இதற்கு அழைக்கப்பட்டவர்கள் அல்ல. அந்த உன்னத அல்லது “பரம அழைப்பானது” நமது இயேசு கிறிஸ்துவினால் ஈடுப-செலுத்தப்பட்டுத் தீரும் வரையில், அது சாத்தியமான ஒன்றாக இருக்கவில்லை. ஆனாலும், தீமை ஆளுகை செய்த காலத்திலேயே தங்கள் விசுவாசத்தையும் அன்பையும் காண்பித்தபடியினால், தேவனால் ஒரு விதத்தில் இது அங்கீகரிக்கப்பட்டபடியினால், உலகத்தின் மீது ஒரு உயர்வான ஸ்தானத்தைப் பெறுவார்கள். இவ்வண்ணமாக பூமிக்குரிய மந்திரிகளாகவும், ஆவிக்குரிய ராஜ்யத்தின் பிரதிநிதிகளாகவும் இருப்பதற்குத் தகுதி படைத்தவர்களாக இவர்கள் நிரூபித்து, தங்களை தயார்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இதற்கு இசைவாக கிறிஸ்துவுக்குத் தெரிவிப்பதைப் போல் சங்கீத புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. “உமது பிதாக்களுக்கு (நீண்ட காலம் கவனிக்கப்பட்டு) பதிலாக (அவர்கள்) உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக (பிரதானிகளாக, தலைவர்களாக) வைப்பீர்.” சங் 45:16

இந்த பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் மற்ற மனுக்குலத்தாரைப் போல் இருக்கமாட்டார்கள். பொதுவாகவே உலகத்தின் உபத்திரவம் தற்போதுதான் ஆரம்பித்திருக்கும் போது, அவர்களுடைய உபத்திரவம் முடிந்துவிட்ட ஒன்று என்ற உண்மையினால் மட்டுமன்றி, ஆதாமில் இழந்துபோன தேவசாயல், சரீரப்பிரகாரமான பூரண வல்லமை ஆகியவற்றை எல்லாம் அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டவர்களாக, பூரண மனிதராக இருப்பார்கள். இப்படியாகத் தங்களுடைய உத்தமத்திற்கு உரிய பலனை அவர்கள் அடைந்துவிட்டபடியினால் மாறுபட்டவர்களாக இருப்பார்கள். இப்படியாக பூமியின் பிரபுக்களாகவும், அதிகாரிகளாகவும் மட்டும் இல்லாமல் (கிறிஸ்து மற்றும் அவரது சபை என்ற பரலோக ராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளாய்) அவர்கள் ஒவ்வொருவரும் புதிய உடன்படிக்கையின் கீழ் விருப்பத்துடன் கீழ்ப்படிகிற அனைவருக்கும் உரிய பிரதிநிதிகளாகவும் இருப்பார்கள்.

“ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் சகல தீர்க்கதரிசிகளும்” உயிர்த்தெழும்போது, மறுபடியும் ஒன்று கூட்டிச்



சேர்க்கப்பட்ட இஸ்ரயேலரின் இடையே தோன்றுவார்கள். யாக்கோபின் கோகு, மாகோகுடன் ஆன கடைசி உபத்திரவ காலத்தின் முடிவில் அவர்களுடைய மிக உயரிய மனவ-மையானது விரைவில் இவர்களை மற்றவர்களிடத்தி-ருந்து வேறுபடுத்திக் காட்டும். அதுமட்டுமன்றி அவர்களுடைய பூரண சிந்தையானது இந்நாளின் ஞானத்தையும், கண்டுபிடிப்புகளையும் மிக விரைவில் கிரகித்துக் கொள்ளும். மேலும் இவர் கல்லாதவராயிருந்தும், வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஜனங்கள் (யோவா 7:15) கேட்ட இயேசுவைப் போல் பலவிதங்களில் அசாதாரணமானவர்களாக இருப்பார்கள். வேதபாரகரைப் போல் குழப்பமான விதத்திலும் சந்தேகம் நிறைந்ததுமாக இல்லாமல், முற்போக்காக, திட்டமாக, தெளிவாக, ஜனங்களுக்குப் போதித்த இயேசு போல் பூரணப்படுத்தப்பட்ட இந்த பழைய ஏற்பாட்டுக் கால பரிசுத்தவான்களும் கூட ஜனங்கள் மத்தியில் தோன்றுவார்கள். அதுமட்டுமன்றி, இந்த பழைய ஏற்பாட்டுக் கால பரிசுத்தவான்களாகிய “பிரபுக்கள்” ஆவிக்குரிய ராஜ்யத்துடன் (கிறிஸ்து மற்றும் சபை) நமது கர்த்தர் தூதர்களோடு வைத்திருந்த தொடர்பு போலவும், இவர்களும் நேரடியான தொடர்புடைவர்களாக இருப்பார்கள். மேலும், ஆதாம் மீறுத-னால் தெய்வீக தண்டனைக்குட்படுவதற்கு முன் அனுபவித்த அதேவிதமான தனிப்பட்ட முறையிலான தொடர்பைப் போல இருக்கும். புதிய பூமியின் (புதிய ஒழுங்குடனான சமூகம்) இந்த பிரபுக்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மேன்மையான ஸ்தானத்திற்கு முழுத் தகுதி உடையவர்களாக இருப்பார்கள்.

இவ்வண்ணமாக மனுஷரிடையே தம்முடைய ராஜ்யம் ஆரம்பிக்கப்படும் தேவனுடைய நேரம் வரும்போது, அதனுடைய சேவைக்கு அவரது பிரதிநிதிகள் தயாராக இருப்பார்கள். மேலும் அவர்களது ஞானமிக்க செயல்திட்டத்தின் கை தேர்ந்த முயற்சி, அவர்களது நிதானம் மற்றும் சுயகட்டுப்பாடு, மற்றும் அவர்களது முன்மாதிரியான தனிப்பட்ட வாழ்க்கை, நல்லொழுக்கம் ஆகியவை மனிதரை அவர்களிடம் கவர்ந்து, மிகுந்த உபத்திரவத்தின் கீழ் தண்டனை அனுபவித்துத் தெளிந்தவர்கள், முழுமையான

ஒத்துழைப்புடன் மிக விரைவில் இவர்களுடைய பட்டி-ல் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவர்கள் தங்களுடைய இசைவை வெளிப்படுத்துவதற்கு முன்பாகவே, இஸ்ரயேல் ஜனங்கள் மற்ற மனுஷரை விட தங்களுடைய மேன்மையைக் குறிப்பிடும்படி நிலைநாட்டிவிடுவர்.

மேலும், தற்போது ஒரு உச்ச நிலையை நெருங்கி வரும் மகா உபத்திரவ காலத்தின் திட்டத்தை நாம் நினைவுகூறுவோமாக. இது உலகமனைத்திலும் உள்ள கல்லான இருதயங்களை உடைக்க வல்லது; பெருமை மிக்கவர்களைப் புழுதியில் தலைவணங்கச் செய்ய வல்லது; மேலும், தரிசு நிலங்களை ஆழமான கலப்பையாகிய வேதனை, உபத்திரவம், துயரம் இவைகளால் உடைத்தெறிகிறது. இப்படியாக அந்த ஆயிரவருட அரசாட்சியின் மேன்மையான ஆசீர்வாதங்களுக்கு உலகைத் தயார்படுத்துகிறது. மேலும், இது தீர்க்கதரிசி தெரிவித்தவண்ணமாய் திட்டமிட்ட காரியத்தை செய்யும். "உம்முடைய (கர்த்தர்) நியாயத்தீர்ப்புகள் பூமியில் நடக்கும் போது (எல்லா இடத்திலும்) பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக் கொள்வார்கள்." *(ஏசா 26:9)* அக்காலத்தில், சுயநலமான திட்டங்களும், வீழ்ந்து போன மனிதனால் திட்டமிட்டு செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் யாவும் குறைபாடு உள்ளவை என்றும் அவைகள் பல்வேறு கோணத்தில் உபத்திரவத்துக்கும் குழப்பத்துக்கும் மட்டுமே வழிநடத்திச் செல்லும் என்பதையும் யாவரும் கற்றுக் கொண்டிருப்பார்கள். மேலும், அந்த சமயத்தில் ஒரு நீதியின் ஆளுகைக்காக ஏங்கி, நம்பிக்கையை இழந்திருந்த போதிலும் அது எவ்வளவு சமீபித்திருக்கிறது என்பதை சிறிதளவு உணர்ந்து கொள்வார்கள்.

இஸ்ரயே-ன் நீண்டநாளைய வாஞ்சையாகிய ராஜ்யத்தின் நம்பிக்கைகள் அந்த காலத்தில் புதுப்பிக்கப்பட்டு, வாக்குத்தத்தத்தின் மீது மரியாதை வைத்திருப்பவர்கள் பலஸ்தீனாவில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். இப்படிப்பட்டவர்களுக்குப் பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் தங்களுடைய உயிர்த்தெழுதலையும், நீதியின் ராஜ்யம் நிறுவப்படப்போகும் விதத்தையும் அறிவிக்கும்



போது, இது கர்த்தருடைய திட்டமே என்று சந்தேகமின்றி மிகவும் சரியானபடி தாமதமின்றி அறிந்து கொள்ளப்படும். அத்தோடு தங்கள் மீதிருக்கும் உண்மையான ராஜ்யமானது ஆவிக்குரியது என்றும், சிலுவையில் அறையப்பட்ட இயேசு தான் இராஜாவாக இருக்கிறார் என்றும் அறிந்து கொண்டு, மனதளவில் விசுவாசக் கண்களால் "தாங்கள் குத்தினவரை நோக்கி பார்ப்பார்கள்." அப்பொழுது "ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள். அந்நாளிலே.... எருசலேமின் புலம்பல் பெரிதாயிருக்கும்." அப்போது "தேவன் தாவீதின் குடும்பத்தாரின் மேலும் எருசலேமின் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார்." *சக 12:10-11*

கோகு, மாகோகுவின் சேனைகளுடைய தோல்வியின் செய்தியும், இஸ்ரயேலுக்கு அவர்களது பகைவரிடமிருந்து கிடைத்த அற்புதமான மீட்பையும் தொடர்ந்து விரைவாய் தங்களுடைய பிரசித்தி பெற்ற பிதாக்களின் உயிர்த்தெழுதலும், இவர்களை தலைவர்களாகக் கொண்டு ஒரு அரசாங்கம் நிறுவப்பட்டிருப்பதும், நீண்ட காலமாக மறுத-க்கப்பட்டிருந்த மேசியாவினிடத்திற்கு இஸ்ரயே-ன் மனமாற்றம் அடையும் செய்தியும் தொடர்ந்து பரவும். சந்தேகமின்றி, இவைகள் யாவும் வஞ்சனையான தந்திரங்கள் என்றே புறஜாதியாரின் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்படும். ஏமாளிகளாக இருப்பதாக யூதர்கள் பரிகசிக்கப்பட்டு நகைக்கப்படுவார்கள். அத்தோடு பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்களும், வேஷதாரிகள் என்று கூறப்படுவார்கள்.

ஆனால் பாலஸ்தீனத்தில் புதியதொரு ஆதரவின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட அரசாங்கத்தால் வந்திருக்கும் ஆசீர்வாதங்கள், அப்போதைய அராஜகவாதிகளும், அதைரியப்பட்டு இருக்கும் உலகமும் வியக்கும் அளவிற்கு, இஸ்ரயே-ன் நல்வாழ்வில் மிகவேகமான, அற்புதமான மாறுதலை உண்டாக்கும். அத்தோடு இவர்கள் வேஷதாரிகள் அல்ல, உயிர்த்தெழுந்து வந்த தீர்க்கதரிசிகள் தான் என்று கூறி, இவர்களுடைய பணிதான் உலகுக்குத் தேவைப்பட்ட ஒன்றாக இருக்கிறது என்று அநேகரைக் கூறும்படி

செய்யும். தேவனுக்காக இந்த பூலோகம் முழுவதையும் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொள்வார்கள். அத்தோடு நமது உலகளாவிய ஒழுங்கின்மையை மாற்றி ஒழுங்கையும், சமாதானத்தையும் கொண்டுவருவார்கள். பிறகு இந்த அற்புதமான பிரபுக்களைத் தங்களுடைய அரசாங்கம் முழுமைக்கும் அனுப்புவார்கள். அவர்களது நீதியின் நுகமானது இஸ்ரயேலுக்கு அத்தனை லாபகரமானதாகக் காணப்படும். இது தீர்க்கதரிசியால் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது.

*“கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் (ராஜ்யம்) பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு (எல்லா ராஜ்யங்களையும் மேற்கொள்ளும் அளவிற்கு) மலைகளுக்கு மேலாக (உயரமான சிகரங்கள்) உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நம் கர்த்தரின் பர்வதத்துக்கும் (ராஜ்யத்துக்கு) யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனி-ருந்து (ஆவிக்குரிய ராஜ்யமான, மகிமையடைந்த கிறிஸ்துவாகிய - தலையும், சரீரமும்) வேதமும், எருசலேமி-ருந்து (பிரபுக்களின தலைமையிலான பூமிக்குரிய அரசாங்கத்தின் தலைநகர்) கர்த்தருடைய வசனமும் வெளிப்படும். அவர் (முன்பு மகா உபத்திரவத்தின் நாளிலே) ஜாதிகளுக்குள் நியாயத்தீர்த்து திரளான ஜனங்களைக் கடிந்துக் கொள்வார்; அப்பொழுது (கர்த்தருடைய கண்டனத்தையும், அவரது பிரமாணம் மற்றும் வசனத்தையும் தொடர்ந்து) அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தை கற்பதுமில்லை.” ஏசா 2:2-4; மீகா 4:1-4*

## இராஜ்யத்துக்கும் அதன் பூமிக்குரிய பிரபுக்களுக்கும் உள்ள நெருக்கம்

நாம் எதிர்பார்க்கவேண்டியபடி, ராஜ்யத்தின் இரண்டு பகுதிகளுக்கும் இடையேயான தொடர்பு எளிதானதாகவும், நேரடியானதாகவும் இருக்கும். மேலும், அதன் காரணமாக



மேற்பார்வையும், மனுக்குலத்துக்கான வழிகாட்டுதலும் முழுமையானதாக இருக்கும். ஏனெனில், அந்த பிரபுக்கள் தெய்வீகத் தொடர்பின் வாய்க்கால்களாக இருக்கின்றனர். இது நமது கர்த்தர் நாத்தான் யேலுக்கு கூறியது போல் காணப்படுகிறது. *“வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷ குமாரனிடத்தி-ருந்து ஏறுகிறதையும், இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள்.” (தேவனுடைய தூதுவர்கள் - புதிய சகாப்தத்தின் பிரபுக்கள்) (யோவா 1:51)* பூமிக்கும், வானத்துக்கும் இடையேயான ஏணியில், தூதுவர்கள் மேலும் கீழுமாய் போயும் வந்துகொண்டும் இருந்ததாகிய யாக்கோபின் சொப்பனமானது ஒரு தீர்க்கதரிசனமாக, அதே சமயம் ஒரு கனவாக பரலோக ராஜ்யத்துக்கும் பூமிக்கும் இடையிலான மிக நெருங்கிய தொடர்பினைக் காண்பிக்கவில்லையா? இதில் தொடர்புகொள்ளும் தூதுவர்களில் ஒருவராக யாக்கோபு தானே இவ்வுலகை ஆசீர்வதிப்பதில் ஒரு பங்கைப் பெற்றிருப்பதாக முன்னறிவிக்கவில்லையா? இது மிகவும் திட்டமிடப்பட்ட ஒன்று என்று நாங்கள் நம்புகிறோம். *ஆதி 28:10-12*

நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய மோசே, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய கிறிஸ்துவுக்கு நிழலாக இருக்கிறார். இது தெளிவாக வேதத்தில் கற்பிக்கப்பட்டும், பொதுவாகவே வேதமாணவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் இருக்கிறது. ஆனால் மோசே தலை மற்றும் சரீரம் சேர்ந்த முழு கிறிஸ்துவுக்கும் ஒரு நிழலாக இருந்தார் என்பது யாவராலும் அறிந்துகொள்ளப்படவில்லை. மேலும் இந்த அர்த்தத்தில் சுவிசேஷ யுகத்தின் முழுமையும் கிறிஸ்துவின் எழுப்புத-ன் காலமாக இருந்தது. இது எப்படியாயினும், இது ஒன்று மட்டுமே பல்வேறு விஷயங்களுக்கு பொருந்தி வருகிற நிழலாக இருக்கிறது. உதாரணத்துக்கு: *அப் 3:22,23*

பழிதீர்க்கும் நாளின் மகாபெரிய பூமியதிர்ச்சி, இருண்ட காரிருள், மற்றும் மாபெரும் (ஏழாவது) எக்காள சத்தம் ஆகியவற்றிற்குப் பிறகு, உலகத்துக்கு புதிய உடன்படிக்கை அறிமுகப்படுத்தப்படும் பொழுது, இவைகள் மனுக்குலத்தை கடுமையாகத் திடுக்கிடச் செய்யும்; மாபெரும் போதகரின் குரலைக்

கேட்பதற்கும் அவரது புதிய உடன்படிக்கையை ஏற்றுக் கொள்வதற்கும் அவர்களை தயார்படுத்தும். சீனாய் மலையில் நியாயப்பிரமாண உடன்படிக்கையை ஏற்படுத்தும் போது மோசே, ஆயிர வருடயுக அறிமுக சமயத்தின் முழு கிறிஸ்துவுக்கு நிழலாகவே காணப்படுகிறார். இதன் இணையான தன்மையின் ஒவ்வொரு படியையும் அப்போஸ்தலர் மிகவும் சிறப்பாகச் சுட்டிக்காட்டுகிறார். (எபி 12:18-22) இஸ்ரயேலானது சீனாய் மலையை நெருங்கி கடைசியில் அதை வந்தடைந்தது. அது ஒருவேளை தொடப்பட்டிருக்கலாம். அதனால், அங்கிருந்து அத்தனை பயங்கரமான காட்சியும், சப்தமும் உண்டாகி அனைவரையும் அச்சுறுத்தி அதிரச் செய்தது. ஆனால், அந்த சீனாயில் சம்பவித்தவைகளைக் காட்டிலும், மிகவும் மேன்மையுடைய, அற்புதமான மகிமைகளையும் ஆசீர்வாதங்களையும் கொண்டதாகிய ஒரு சீயோன் மலையை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த மேன்மையான ஆசீர்வாதங்களுடன் இணைந்து வரப்போகும் எக்காளமும், காரிருளும், பூமி அதிர்ச்சியும் மிகுந்த கொடூரமானதாக இருக்கும். அந்தக் கடைசி அதிர்ச்சி அசையக்கூடிய எல்லாவற்றையும் அசைத்துவிடும் (தெய்வீக சித்தத்துக்கு முரணானதும், பாவகரமான யாவையும்), சத்தியமும், நிரந்தரமுமானவைகள் மட்டுமே மீதமாக நிற்கும். இந்த முழு விஷயத்துக்கான தீர்வும், இந்த வசனத்தில் இருக்கிறது. "ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் (இதை எதிர்பார்த்திருக்கிறவர்கள்) தேவனுக்குப் பிரியமாக ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக் கடவோம்." எபி 12:28

இந்த விளக்கத்தைத் தொடர்ந்து, நாம் காண்பதாவது, இந்த மோசே மலையின் மேலே (ராஜ்யம்) சென்று நிழலாக மகிமை அடைந்தபிறகு, அவரது முகம் பிரகாசித்தது. அவரை இஸ்ரயேலரால் ஏறெடுத்து பார்க்கவும் முடியவில்லை. இது மகிமையின் சபையின் (கிறிஸ்து, தலை மற்றும் சரீரம்) முழுமையை அடையாளமாகக் காட்டுவதாகத் தெரிகிறது. மேலும் அதன் பின் ஜனங்களுக்கு முன்னதாக ஒரு முக்காடை மோசே அணிவதும், சீனாய் மலையில் கர்த்தரோடு இருக்கும் போது அதை விலக்கிவிடுவதும், ராஜ்யத்தின்



பூமிக்குரிய பகுதியில் மகிமையானது மறைக்கப்பட்டதாக இருந்து, ஜனங்களிடம் பேசுவதற்கும், பிரதிநிதிகளாக இருந்து கிறிஸ்துவிடம் நேரடியாகக் கேட்டு மக்களுக்குத் தெரிவிக்கப் போகிறவர்களாகிய "பூமியெங்கும் பிரபுக்களாக" இருக்கப் போகிறவர்களை நிழலாகக் காட்டுவதாகத் தெரிகிறது. பூமிக்குரிய பிரபுக்கள் மற்றும் பரலோக ராஜரீக ஆசாரியர்களுக்கும் இடையில் இருக்கப்போகும் மிக நெருங்கிய உறவுக்கான எடுத்துக்காட்டாக இது காணப்படுகிறது. மலையானது மேகத்தால் மூடப்பட்டு, மின்னல்கள் பளிச்சிட்டு, இடி இடித்து, பூமியே அதிர்ந்துக் கொண்டிருந்த வேளையில், தேவனோடு பேசுவதற்காக மோசே மலையின் மீது ஏறிப்போவது என்பது, உண்மையில் உலகம் இதுவரை அனுபவித்திராத மகா உபத்திரவத்தின் நடுவில், தற்கால ஒழுங்கு முறைகள் மாற்றப்பட்டுக் கொண்டு வரும்பொழுது, கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கத்தினரும், மறுரூபமாகி ராஜ்யத்துக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது சரீரம் முழுமை பெறும் சம்பவத்தையே குறிக்கின்றதாக இது இருக்கிறது.

பத்து கட்டளைகளின் முதலாவது கற்பலகை உடைக்கப்பட்டது. "மாம்சீக பெலவீனத்தின்" காரணத்தால் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் தோல்வியை எடுத்துக்காட்டுவதாக இருப்பது போலவே, இரண்டாவது கற்பலகை தோல்வியடையாத கிறிஸ்து மத்தியஸ்தராய் இருக்கிற புதிய உடன்படிக்கையை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. இந்த புதிய உடன்படிக்கையானது "கிறிஸ்துவின் சரீரம்" முழுமை பெற்ற பிறகே பூமியின் மீது செயல்பட ஆரம்பிக்கும். அதுவரையிலும் மோசேக்கு ஒப்பான அந்த மேன்மையான தீர்க்கதரிசி(இயேசு)யின் அங்கத்தினர்களின் தேர்வு தொடரும். (அப் 3:23) இரண்டாவது கற்பலகையானது (புதிய உடன்படிக்கையை குறிக்கும்) அளிக்கப்பட்ட போது மோசேயின் முகம் மறுரூபமாகி ஒளிவீசியதின் காரணமாக, ஜனங்கள் முன் வரும்போது அவன் ஒரு முக்காடை முகத்தின் மேல் அணிந்து கொண்டதைக் கவனிக்கவும்.

தேவராஜ்யம் ஆரம்பிக்கப்படும் போது, முழு உலகத்தையே அச்சத்தால் நடுங்க வைக்கக்கூடிய காட்சிகள் உடன்வந்து, முழு

உலகத்துக்கும் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட கர்த்தரை அறிந்துக் கொள்வார்கள். சீனாய் மலையின் பயங்கரமான காட்சிகள் மற்றும் சத்தங்களினிமித்தம் இனிமேல் தங்களுடன் கர்த்தர் பேச வேண்டாம் என்று இஸ்ரயேல் மன்றாடியதைப் போலவே இங்கும் கூட யேகோவா தேவன் தமது கோபத்தில் தங்களோடு பேச வேண்டாம் என்று எல்லாரும் விரும்பி, மகா மத்தியஸ்தராகிய இம்மானுயேலை, தேவன் ராஜாவாக ஏற்படுத்தியவரை, அங்கீகரித்து அவரிடமிருந்து கேட்க விரும்பங்கொள்வார்கள். இந்த இம்மானுயேல் தான் மோசேயின் உண்மைப் பொருள். எபி 12:19 மற்றும் சங் 2:5,6ஐ ஒப்பிடவும்.

"உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வம் உள்ளவர்களாக இருப்பார்." (சங் 110:3) என்று எழுதப்பட்டிருப்பதைப் போல், புதிய ராஜ்யத்துக்காக இஸ்ரயேல் விருப்பமுடன் ஆவலுள்ளவர்களாக இருப்பார்கள். இதுதான் இஸ்ரயேலர்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்தது. (சுவிசேஷ யுகத்தின் மேன்மையான ஆவிக்குரிய அழைப்புக்கு குருடாக்கப்பட்டிருந்தனர்) "அப்பொழுது உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் (பிரசங்கம்) உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா?" (மத் 7:21,22) என்று பரிதாபத்துக்குரிய, தவறாகப் போதிக்கப்பட்ட, கிறிஸ்துவில் ஓரளவிற்கு விசுவாசமுள்ள பெருவாரியானவர்கள் கூறுவார்கள். இவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள். ஆனால் மகா உபத்திரவ காலத்துக்குரிய அழுகைக்கும் பற்கடிப்புக்கும் விடப்படுவார்கள். அத்தோடு அவர்கள் சந்தேகமின்றி சபைப் பிரிவினராக இருப்பதற்குப் பதிலாக அவருடைய ஜனமாகவே மாறுவார்கள். "அவரது பராக்கிரமத்தின் நாளிலே மனப்பூர்வமான ஜனங்களாகவே இருப்பார்கள்." மேலும் உண்மையில் வெகுசீக்கிரத்தில் நமது பாடப்பகுதி தெரிவிப்பது போல் "சகல ஜனங்களாலும் விரும்பப்பட்டதாக" தேவனுடைய ராஜ்யம் அங்கீகரிக்கப்படும்.

## நீதி நெறி மற்றும் சமூக சீர்திருத்தம்

அப்பொழுது சீயோன் மலையாகிய தேவராஜ்யத்தி-ருந்து கர்த்தருடைய பிரமாணம் புறப்பட்டு உலகின் புதிய தலைநகரமான எருசலேமின் மூலம் சகல ஜனங்களுக்கும் பிரகடனப்படுத்தப்படும். கூக்குர-டும் தீமைகள் உடனடியாய் அகற்றப்படும். எல்லா வழிகளிலும் ஒழுங்கு, சீர்திருத்தம் நிலை நிறுத்தப்படும். பொருளாதார, சமூக பிரச்சனைகள் நீதி அன்பு ஆகிய இரண்டுடன் இசைந்து போகும்படி மாற்றியமைக்கப்பட்டு, நியாயம் நூலாகவும், நீதி தூக்கு நூலாகவும் வைக்கப்படும். (ஏசா 28:17) பூமி முழுவதும் சமன்படுத்தப்பட்டு, நீதியினால் சீராக்கப்படும். மேலும், அப்போதி-ருந்து எல்லாம் கண்டிப்பான ஒழுங்கு நிலைக்குக் கொண்டுவரப்படும்.



மனிதனுடைய வீழ்ந்துபோன சுபாவத்தினாலும், சமநிலையை இழந்த நீதிநெறி மற்றும் மன ஒழுக்க குணங்களின் பெலவீனத்தினாலும், வியாபார உலகின் எல்லா திசைகளிலும் மனுகுலத்தை வசீகரித்து எவ்வளவு தீயவழியில் நடத்துகிறது! மது, போதை பானங்கள், மதுபான சாலைகள், விபச்சார விடுதிகள், சூதாட்ட மையங்கள் போன்ற உயிரை குடிக்கும், ஒழுக்கத்தைச் சீரழிக்கும் வியாபாரங்கள் நிறுத்தப்பட்டுவிடும். மேலும் அதில் உள்ள ஊழியர்களுக்கு பயனுள்ள வேலைகள் வேறு ஏதாவது கொடுக்கப்படும்.

அதே விதமாகவே போர் கப்பல்களைக் கட்டுதல், போர் மற்றும் தற்காப்பு ஆயுத தளவாடங்களின் உற்பத்தியும் நிறுத்தப்பட்டுவிடும். மேலும், இராணுவங்கள் கலைக்கப்பட்டுவிடும். புதிய ராஜாங்கத்திற்கு இவைகளின் அவசியமே இருக்காது. ஆனால், தீமைகளை செயல்படுத்த யாராவது எண்ணம் கொண்டால், பிறருக்குத் தீமையை விளைவிக்கும் முன்னமே அவர்களைத் தண்டிக்கக்கூடிய அபரிமிதமான அதிகார வல்லமையைப் பெற்றிருக்கும். நீதியான நியாயதிபதிகளால் திருத்தமுடியாதவர்கள் மேல் இரண்டாம் மரணத்தைக் கொண்டுவரமுடியுமே அன்றி பரிசுத்த ராஜ்யமெங்கும் வேறு தீகைள் இருக்காது. ஏசா 32:1-8; 65:20-25; சங்:149:9; 1கொரி 6:2

வங்கிகள் மற்றும் தரகு தொழில் போன்ற மற்ற வேலைகளும், தற்போதைய சூழ்நிலைக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்

இவைகளுக்கு அப்போது இடமிருக்காது. ஏனெனில், புதிய சூழ்நிலையின் கீழ் மனுக்குலம் யாவும் பிறரை ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களைப் போல் பாவிக்க வேண்டியிருக்கும். தனியார் முதலீடுகள், கடன் வாங்குவதோ, கடன் கொடுப்பதோ அவசியம் அற்றதாக மாறிப்போய், இவை யாவும் கடந்த காலத்துக்கு உரியவைகளாகிவிடும். நிலச் சொந்தக்காரர்கள் மற்றும் வாடகைத் தரகர்களும் கூட வேறு புதிய வேலைகளைத் தேடிக்கொள்வார்கள். ஏனெனில் இவைகள் புதிய ராஜாவால் அங்கீகரிக்கப்படமாட்டாது. அவர் கூறுவது என்னவெனில், அவர் கல்வாரியில் ஆதாமையும், அவனது சந்ததியையும் விலைக்கு வாங்கிய போது, ஆதாமின் ஆளுகையி-ருந்த பூமியையும் (எபே 1:14) வாங்கியிருக்கிறார். மேலும், அதை சுயநலம், பேராசை உள்ளவர்களுக்குக் கொடுக்காமல், அதன் செழுமையான பிரதேசங்கள் யாவும், மலைப்பிரசங்கத்தின் தம்முடைய வாக்குத்தத்தத்திற்கு தகுந்தபடி, "சாந்தகுணமுள்ளவர்களுக்கு" கொடுக்கப்படும். மத் 5:5

இதுவே, மோசேயினால் நிழலாக கூறப்பட்டதாகிய அந்த மேன்மையான ராஜாவும், நியாயதிபதியும் (தலை மற்றும் சரீரம்) ஆகும். இதைக் குறித்து கர்த்தர் அறிவிப்பது:

"ஞானத்தையும், உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும், பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய யேகோவாவின் ஆவி அவர் மேல் தங்கியிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்கு தீர்ப்பு செய்து, பூமியைத் தனது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்." ஏசா11:2-5

இந்தத் தெய்வீக திட்டம் ஏழைகளுக்கு இந்த பூமியை சொர்க்கமாக மாற்றிவிட்டு, தற்போது ஆடம்பரங்களுக்கு



அடிமையாகி ஒரு அனுகூலமான நிலையையும், நல்ல அதிர்ஷ்டத்தினாலேயோ அல்லது மேன்மை மிக்க திறமை மற்றும் சந்தர்ப்பங்களினாலேயோ அல்லது நேர்மையற்ற செயல்களினாலேயோ மேலான நிலையில் இருப்பவர்களுக்கு வேதனைமிக்கதொரு இடமாக்கிவிடும் என்று சிலருக்குத் தோன்றலாம். ஆனால் அப்படிப்பட்டவர்கள் 18 நூற்றாண்டுகளுக்கு முன்னரே நியாயாதிபதியால் கூறப்பட்ட வார்த்தைகளை நினைவு கூறுவார்களாக. "ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ; உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்து தீர்ந்தது. திருப்தி உள்ளவர்களாயிருக்கிற உங்களுக்கு ஐயோ; பசியாயிருப்பீர்கள்." (லூக் 6: 24,25) முத-ல் இவர்கள் தங்களுடைய அனுகூலங்களை இழந்து புலம்பலுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவார்கள். மேலும் தற்போது கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பங்கு பெறும் நிலைமைக்குள் போவதற்கு தேவனுக்குள் ஐசுவரியவான்களாக இருப்பவர்கள் துன்பத்தைக் காண்பது போலவே, வரும் காலத்தில் ஏற்கெனவே ஐசுவரியத்திற்குப் பழகிப்போனவர்களும் கூட துன்பத்தின் அனுபவத்தை பெறாததினால், மிகவும் கஷ்டப்படுவார்கள்.

ஆனால் பழிதீர்க்கும் நாளுக்குரிய தவிர்க்க முடியாத சமூக சீரமைப்பினை ஏற்றுத்தான் ஆகவேண்டும். மேலும், போகப்போக (சிலருக்கு வேகமாகவும், சிலருக்கு மெதுவாகவும்) அன்பின் ஆளுகையின் அனுகூலங்கள் அறிந்து கொள்ளப்பட்டு எல்லோராலும் பாராட்டப்படும். இந்த தெய்வீக ஏற்பாட்டின் கீழ், உண்மையாகவே விரும்பினால் யாவருமே மெய்யாகவே சந்தோஷப்பட்டு, மனிதனின் மனபூரணத்துக்குரிய (தெய்வீக சாயல்) பரிசுத்தமான பெரும்பாதையான வழிக்குள்ளாக போய்ச் சேர்வார்கள். (ஏசா 35:8) ஏற்கெனவே பொதுவானதாக ஒப்புக்கொள்ளப்பட்டவைகள், மிகச்சரியானவைகளாகக் காணப்படும். அதாவது, தற்போதைய சௌகரியங்களின்படி, மொத்த ஜனங்களும் ஞானமாகவும் முறைப்படியும் வேலையில் அமர்த்தப்பட்டால், ஒவ்வொரு தனிமனிதனுக்கும் மூன்று மணி நேர உழைப்பே போதுமானதாக இருக்கும். இயற்கையாக அமைந்துவிட்ட பெலவீனத்தை சாதகமாக்கிக் கொள்ளும் வகையில் தீமைகள் மற்றும் எல்லா

தூண்டுதல்களினாலும், தற்போதைய சூழ்நிலையின் கீழ் செயல்படுகிறது. நிச்சயமாக பரலோக ராஜ்யத்தின் வழிகாட்டுத-ன் கீழ் கடுமையான உழைப்பி-ருந்து விடுவிக்கப்பட்ட நேரமானது ஒழுக்கத்துக்கோ அல்லது சரீரத்திற்கோ நிச்சயமாகக் கேடு விளைவிக்கும்படியாகச் செலவிடப்படமாட்டாது.

அதற்கு மாறாக, சாத்தான் கட்டப்பட்டிருக்கும் போதும், (தீமைகள் தடை செய்யப்பட்டபோது) வெளிப்பிரகாரமான தூண்டுதல்கள் அகற்றப்பட்டுவிட்ட போதும், உழைப்பி-ருந்து விடுவிக்கப்பட்டிருக்கும் அந்த நேரமானது, இயற்கை, தேவனுடைய சுபாவங்கள், அவரது மகிமை நிறைந்த பண்புகளான, அவரது ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை ஆகியவைகளைக் குறித்த பாடங்களைப் படிப்பதில் மகிமையடைந்துவிட்ட சபையின் வழிகாட்டுத-ன் கீழ் கற்றுக் கொள்வதில் செலவிடப்படும். மேலும் இவ்வண்ணமாக மகிழ்ச்சியளிக்கும் வகையில் தங்களுடைய ஓட்டத்தின் நிறைவுக்கு அல்லது சோதனைகளின் முடிவுக்கு அதாவது மனித பூரணத்தினை நோக்கி முன்னேறக்கூடும். ஏனெனில், புதிய அரசாங்கமானது தன்னுடைய பிரஜைகளின் உன்னதமான காரியங்கள் மற்றும் விருப்பங்களைக் குறித்து மட்டுமே அக்கறை கொள்ளாமல், அவர்களது மிகச்சிறிய காரியத்தைக் குறித்தும் கூட கவனம் செலுத்தும். இது ஒரு “தந்தை வழி வந்த ஆட்சியாக” அதனுடைய வார்த்தையின் முழு அர்த்தம் நிறைந்த ஒன்றாக இருக்கும்.

எங்கும் காணாத வகையில் மிகவும் லாபகரமான முறையில் தன்னுடைய பிரஜைகளுக்கென உருவாக்கப்பட்ட ராஜ்யத்தின் ஒவ்வொரு ஒழுங்கும், செயல்பாடும் இருப்பதாக இந்த ராஜ்யத்தைக் குறித்த மிகவும் பூரணமான, திருப்திகரமான நிரூபணம் நமக்கில்லையா, இதனுடைய ஏதேச்சதிகாரத்தால் உலகம் கண்டிராத வண்ணமாக, எந்த ஒரு முறையீடும் புகாரும் இன்றி, எல்லா மனிதரும் இந்த ராஜாவின் கரத்தினை முற்றிலுமாகச் சார்ந்திருப்பார்கள் என்று மனிதன் கருதக்கூடிய ஒரு முக்கியமான புரிந்துகொள்ளுதல் அடங்கியதாக இது இருக்கும். நித்திய ஜீவனை பெற்றுத்தரக்கூடிய ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் உரிய சோதனைகளுக்கான உரிமையை அவர்களுக்கு உறுதிபடுத்தும்படியாக, அவர்களுக்குரிய



ஈடுப-யாக தம்முடைய சொந்த ஜீவனைக் கொடுத்து மீட்டுக்கொண்டு, அந்த மத்தியஸ்தமான ராஜ்யத்தின் ராஜாவானவர் ஆளுகை செய்ய வேண்டும். மேலும் அந்த சோதனையில் அவர்களுக்கு உதவி செய்வதே அவரது ஆயிர வருட அரசாட்சியின் மிகவும் அடிப்படையான உத்தேசம் அல்லது நோக்கம் ஆகும். இதைவிடவும் வேறு எதைக் கேட்க முடியும்? ஒரு மீட்பராக, தன்னுடைய சொந்த ரத்தத்தினால் கிரயமாக வாங்கியதை ஆளுகை செய்வதற்கு அவர் நியாயமான உரிமை உடையவராக இருக்கிறார். இவர் தனது அன்பை வெளிப்படுத்திய விதத்தைப் பாராட்டும் எவரும், கேள்வியே கேட்காத அளவிற்கு, எல்லா வல்லமையும், அதிகாரமும் தன்னுடைய நியாயமான சித்தத்தின்படியே தவறாமல் அவருக்கே உரிய பொருத்தமான ஒன்று என்று சந்தோஷமடைவார்கள்.

ஆனால், அவர்கள் ராஜ்யத்தின் உடன் சுதந்திரவாளிகளும் உடன் நியாயதிபதிகளுமான பரிசுத்தவான்களின் முழுமையான அந்த ஏதேச்சாதிகார அதிகாரத்தில் பாதுகாப்பான நம்பிக்கை வைக்க முடியுமா?

ஆம். இயேசு கிறிஸ்து தான் பரலோகப் பிதாவின் ஆவியை உடையவராகவும், “பிதாவின் தன்மையின் சொரூபமாக” இருப்பதையும், நிரூபித்திருக்கிறபடியினால், சிறுமந்தைக்குரிய யாவரும், ராஜ்யத்தில் அவரது உடன் சுதந்திரவாதிகளுமானவர்களும் கூட “கிறிஸ்துவின் ஆவியை,” அன்பின் பரிசுத்த ஆவியை உடையவர்களாக இருப்பார்கள் என நிரூபிப்பார்கள். “தேவனுடைய குமாரனின் சாயலாக” மாறவேண்டும் என்பது அவர்களுக்குரிய அழைப்பின் நிபந்தனைகளுள் ஒன்றாக இருக்கிறது. அப்படி இல்லாத எவரும் தங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதி செய்து கொண்டதாக ஒப்புக் கொள்ளப்படமாட்டார்கள். உண்மையில் தங்களுடைய பராமரிப்புக்கும், வழி நடத்துதலுக்கும் கீழ்ப்பட்டவர்களின் மீது இரக்கம் காட்டுவதற்கு இவர்களால் கூடும் என்பது ஒழுங்கு முறையில் இருக்கிறது. ஏனெனில், இவர்கள் பெலவீனரும், பரிபூரணமற்றவர்களுமானவர்களிடமிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு, பாவத்துக்கும், மீறுதல்களுக்கும் எதிராக

சத்தியத்துக்காகவும், நியாயத்திற்காகவும் ஒரு நல்ல போராட்டத்தை போராட கற்றுக் கொடுக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். ஆம், ராஜரீக ஆசாரியத்துவத்தில் பிரதான ஆசாரியரிடத்திலும், அவருக்கு கீழான ஆசாரியரிடத்திலும் எந்த ஒரு பயமும் இன்றி நம்பிக்கையுடன் இருக்கலாம். தேவன் இவர்களிடத்தில் ஆளுகையை ஒப்படைப்பார். மேலும் உலகத்தின் ஆசீர்வாதத்துக்காக, நேர்மையாக, ஞானத்துடன், அன்புடன் உபயோகப்படுத்தப்படும் என்பதற்கு மிகச்சிறந்த உத்திரவாதமானதாக இது இருக்கும்.

## இருப்புக் கோலாட்சி

பொதுவான ஒரு கீழ்ப்படித-ன் மூலமாக ஒரு நீதியின் ஒழுங்குமுறை நிறுவப்படும் வரையிலும், எதிர்த்து நிற்க முடியாததொரு சக்தியால், ஜாதிகள் ஆளப்படுவார்கள். முழங்கால் யாவும் முடங்கி, நாவுகள் யாவும் தெய்வீக வல்லமையை மகிமையைத் துதிக்கும்; வெளிப்படையானதொரு கீழ்ப்படிதல் கட்டாயமானதாக இருக்கும். “அவன் இருப்புக் கோலால் அவர்களை ஆளுவான். அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படுவார்கள்” என்று எழுதியிருக்கிறபடியே இது இருக்கும். *(வெளி 2:27)* இந்த அடித்தலும், நொறுக்குதலும் சரியாகப் பழிதீர்க்கும் நாளுக்குரியதாக இருக்கும். ஆயிரவருட அரசாட்சி முழுவதிலும் இந்த வ-மையின் அதிகாரமும், கோலும் தொடர்ந்து இருந்தாலும் கூட அதன் பயன் அதிகமாக தேவைப்படாது. அந்த மகா உபத்திரவத்தின் நேரத்தில் வெளியரங்கமான எதிர்ப்புகளும் முற்றிலுமாகக் கடிந்து கொள்ளப்படுவதாக இருக்கும். இந்த காரியத்தைக் குறித்து தீர்க்கதரிசி கூறுவதாவது: பிதற்றுகின்ற, கூக்குரல் இடுகின்ற, சுய பிடிவாதமுள்ள மனுக்குலத்தைப் பார்த்து, “நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன்,பூமியிலே உயர்ந்திருப்பேன்” *(சங் 46:10)* என்று இந்த நொறுக்கப்படும் காலத்தில் தேவன் கூறுவார். ஓட்டத்தை ஓடும் ஒவ்வொரு தனி நபரின் சிறிய, பெரிய காரியங்கள் எல்லாவற்றிலும் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பதும், இதனால் இவர்கள் யாவரும் தமது உடன்படிக்கையின் ஊழியக்காரராகிய தெரிந்தெடுக்கப்பட்டவர், பிரதான தீர்க்கதரிசியும், ஆசாரியரும், ராஜாவுமான (தலை மற்றும் சரீரம்) வர்கள் மூலமாகத்



தேவனைக் குறித்து போதிக்கப்படுவதே இந்த ஆயிரவருட ஆட்சி காலத்தின் முழு பணியாக இருக்கும். போதகர் என்று அர்த்தமுடைய தீர்க்கதரிசி, ராஜா என்று அர்த்தமுடைய ஆளுநர், ஆசாரியர் என்று அர்த்தமுடைய மத்தியஸ்தர் ஆகிய இவர், மீட்பின் நிமித்தம், ஜனங்களுடைய பரிந்து பேசுபவராகவும், தெய்வீக ஈவுகளைப் பகிர்ந்து அளிப்பவராகவும் இருக்கிறார். இந்த பணிகள் யாவும் ஐக்கியப்பட்டிருக்கின்றன. “நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்.” அவர் தனது சிங்காசனத்தின் மேல் ஆசாரியராக இருப்பார். *எபி 7:17; சக 6:13; அப் 3:22; உபா 18:15*

ஞானத்தின் அவதாரமான அந்த புதிய ராஜா அறிவிக்கிறார்: “ஆலோசனையும், மெய்ஞ்ஞானமும் என்னுடையவைகள்; நானே புத்தி, வல்லமை என்னுடையது. என்னாலே ராஜாக்கள் அரசாளுகிறார்கள், பிரபுக்கள் நீதி செலுத்துகிறார்கள். என்னாலே அதிகாரிகளும், பிரபுக்களும், பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளும் ஆளுகை செய்து வருகிறார்கள். (தேவ ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதி) என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு. பொன்னையும், தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் என் வருமானம் நல்லது. என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப் பொருளை சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும், நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்... என்னைக் கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைகிறான்; கர்த்தரிடத்தில் தயவையும் பெறுவான். எனக்கு விரோதமாய் பாவஞ்செய்கிறவனோ, தன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிறான்; என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறார்கள்.” *நீதி 8:14-21,35,36*

## இஸ்ரயேல் ஒரு எடுத்துக்காட்டு

இஸ்ரயே-ல் தெய்வீக அரசாட்சியின் செயல்பாடுகளைக் காண உலகத்துக்கு வெளிப்படையாக நேரம் அளிக்கப்படும்.

அத்தோடு கூட அதனுடைய நடைமுறை அனுகூலங்கள் அப்போதிருக்கும் அராஜகத்தோடு மிகவும் முரண்பட்டவைகளாகவும் இருக்கும். ஆகவே, பெரும்பாலும் எல்லா ஜாதிகளுமே இந்த ராஜ்யத்தின் ஆளுகையை "விரும்புவார்கள்." இது அந்த காலத்தில் இஸ்ரயேலுக்கு உரைக்கப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகளில் ஆணித்தரமாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

*"எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன் மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் (பூமியின் முக்கியஸ்தர்கள்) நடந்து வருவார்கள்." (இது ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு, நீதியின் சூரியனுக்குப் பொருந்தும். ஆனாலும் இது பூமியின் பிரதிநிதிகளான, ஆசீர்வாதத்துக்குத் திரும்பவும் மீட்டுக் கொண்டு வரப்பட்ட மாம்சீக இஸ்ரயேலுக்கும் கூட பொருந்தும்.)*

*"சுற்றிலும் உன் கண்களை ஏறெடுத்துப்பார்; அவர்கள் எல்லோரும் ஏகமாகக் கூடி உன்னிடத்திற்கு வருகிறார்கள்; உன் குமாரர் தூரத்தி-ருந்து வந்து, உன் குமாரத்திகள் உன் பக்கத்திலே வளர்க்கப்படுவார்கள். (எசே 16:61ஐ ஒப்பிடவும்) அப்பொழுது நீ அதைக் கண்டு ஓடிவருவாய்; உன் இருதயம் அதியசப்பட்டுப் பூரிக்கும்; கடற்கரையின் திரளான கூட்டம் (அராஜவாத கூட்டம் வெளி 21:1ஐ பார்க்கவும்) உன் வசமாகத் திரும்பும்; ஜாதிகளின் பலத்த சேனை உன்னிடத்தில் வரும்...... கர்த்தரின் துதிகளைப் பிரசித்தப்படுத்துவார்கள்." ஏசா 60:1-6, 11-20*

உண்மையில், குருடான கண்கள் திறக்கப்பட்டு, அநேகர் நீதியின் பாதைக்கு திரும்புவது ஒரு மகிமையான நாளாக இருக்கும். பயத்தின் வழியில் அச்சமும், தவறான வழிநடத்துதலுமாக இல்லாமல், சத்தியத்தின் பாதையிலே மனமாறுதல்களும் எழுப்புதல்களும் நிறைந்த ஒரு நாளாக இருக்கும். இதுவே தீர்க்கதரிசியால் குறிப்பிடப்பட்ட நேரம்: *"ஒரு தேசத்துக்கு ஒரே நாளில் பிள்ளைப் பேறு வருமோ?" (ஏசா 66:8)* இஸ்ரயேல் தான் அந்த ஜாதியாக இருக்கும்; (1) ஆவிக்குரிய இஸ்ரயேல், பரிசுத்த ஜாதி; (2) மாம்சீக இஸ்ரயேல், அதனுடைய பூமிக்குரிய பிரதிநிதி. மேலும் இஸ்ரயே-ல் இருந்து உலகை அதன் முழங்கால் முடங்க தண்டித்து கொண்டு வந்து சேர்க்கும்படியான வெளிச்சம் பிரகாசிக்கும். அத்தோடு *"மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்"* என்று அவரது உண்மையான ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மீதும் இந்நாட்களில் ஊற்றுவது போல் ஊற்றுவேன் என்று கர்த்தரின் பரிசுத்த ஆவியானது ஊற்றப்படுவதை வாக்குத்தத்தமாக முன்னரே கூறுகிறார். யோயேல் *2:28*



இதுவே இரட்சண்ய நாள், எனவே தான் தீர்க்கதரிசி தாவீது பாடுகிறார்: *(சங் 118:18-27)*

*"இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்:*
*இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம் !*
*வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே*
*மூலைக்கு தலைக்கல்லாயிற்று!*

*கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர்*
*ஸ்தோத்திரிக்கப்பட்டவர்,*
*கர்த்தாவே ரட்சியும், கர்த்தாவே காரியத்தை வாய்க்கப்பண்ணும்!*
*கர்த்தர் என்னை வெகுவாகத் தண்டித்தும்;*
*என்னைச் சாவுக்கு ஒப்புக் கொடுக்கவில்லை.*

*நீதியின் வாசல்களைத் திறவுங்கள்;*
*நான் அவைகளுக்குள் பிரவேசித்து கர்த்தரை துதிப்பேன்.*
*எகோவாவின் வாசல் இதுவே ;*
*நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள்.*

*நீர் எனக்கு செவிகொடுத்து, எனக்கு ரட்சிப்பாயிருந்தபடியால்,*
*நான் உம்மை துதிப்பேன்.*
*கர்த்தர் நம்மை பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்."*

இவ்வண்ணமாகக் கல்வியின் சீர்திருத்தங்களும் எதிர்காலத்தைக் குறித்த வழிகாட்டுதல்களும் மனிதனுடைய இருதயத்தில் ஆரம்பமாகும் என்பதை நாம் காணலாம். அவர்கள் *"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதி 9:10)* என்ற

பாடத்தி-ருந்து ஆரம்பிப்பார்கள். தற்காலத்துக் கல்வியின் மிகப்பெரிய கஷ்டங்களில் ஒன்று, அதில் ஆரம்ப ஞானமே இல்லை, அது பெருமைக்கும், கர்வத்துக்கும், அதிருப்திக்குமே காரணமாயிருக்கிறது. ராஜ்யத்தின் ஒழுங்குகளின் கீழ் கிருபையின் எல்லா கிரியைகளும் மிகச்சரியாக ஆரம்பமாகி முழுமையாக முடிவுபெறும்.

ராஜ்யத்தின் வல்லமையுள்ள, ஆசீர்வாதமான பிரதிநிதித்துவத்தின் மூலமாக, தெய்வீகக் கிருபை போய் சென்றடைய முடியாத அளவிற்கு மீட்கப்பட்ட எந்த சிருஷ்டியும் இருக்காது. இரத்தத்தால் கிரயமாகக் கொள்ளப்பட்ட ஆத்துமாவைக் காப்பாற்றுவதற்கு, பாவத்தின் இழிவானது கிருபையின் கரம் சென்றடைய முடியாத அளவிற்கு அதிகமாக இருக்காது. தெய்வீக சத்தியம் மற்றும் அன்பு என்பவை புதிய நாளுக்குரிய சந்தோஷத்தையும் குதூகலத்தையும் கொடுக்கக்கூடிய அறிவுக்குள் கொண்டு வருவதற்கு புகமுடியாத அளவிற்கு அறியாமை மற்றும் மூடநம்பிக்கையின் இருளானது எந்த இருதயத்திலும் அவ்வளவு அடர்ந்ததாக இருக்காது. உன்னதமான வைத்தியரின் நேர்த்தியான கட்டுப்பாட்டையும் மிஞ்சி எந்த வியாதியும் சரீரத்தைத் தாக்கவோ அசுத்தப்படுத்தவோ முடியாது. மேலும் அவரது சுகமாக்கும் தொடுதலுக்கும் எதிர்த்து நிற்க எந்த அங்கவீனமோ அல்லது அரக்கத்தனமோ அல்லது மிதமிஞ்சிய நிலைமையோ அல்லது மிகைப்பட்ட நிலையோ அல்லது சித்த சுவாதீனம் இல்லாத நிலையோ இருக்காது.

### பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் எழுந்து வருவார்கள்

உன்னதமான சீரமைப்புப் பணியானது, இவ்வண்ணமாக ஜீவனுள்ள ஜாதிகளிடம் ஆரம்பிக்கப்பட்டது போல பூமியின் நித்திரையில் இருக்கும் எல்லாக் குடும்பங்களுக்கும் நீட்டிக்கப்படும். ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் மனுஷ குமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அது தூரத்தில் இல்லை. "சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும், மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும்." *(யோவா 5:28,29; வெளி 20:13)* ஆம், அந்த மகாநாளின் யுத்தத்தில் நாசமடையப்போகும் இஸ்ரயே-ன் பாவிகளும்,கோகு, மாகோகின் சேனைகளும் கூட ஏற்ற சமயம் வரும்போது எழுந்து வருவார்கள். சட்டத்துக்குப் புறம்பாக நாசப்படுத்துகிற ஒரு சேனையாக மறுபடியும் வராமல், ஒரு தண்டனையால் திருந்தி, மனம் திருந்திய தனி மனிதர்களாக, அந்த நாளின் வெளிச்சத்தில் அவமானமும். குழப்பமும் நிறைந்த முகத்துடன் வருவார்கள். ஆனால், மறுபடியும் கனத்துக்கும், தூய்மையான ஒழுக்கத்துக்கும் வருவதற்கான ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, இப்படியான இரக்கம் காண்பிக்கப்படக்கூடியவர்களாக வருவார்கள்.



விசுவாசமுள்ள ஜெபம் கேட்கப்பட்டு வியாதியஸ்தர் சுகமாக்கப்படுவார்கள். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் உயிர்தெழுதலும் மனிதனுக்கு சிந்திக்கக்கூடிய நேரமும், மகா உபத்திரவ காலத்தின் அழிவி-ருந்து குணம் அடைவதற்கான நேரமும் கிடைக்கும் போது, ஒருவேளை, மற்றவர்களுடைய அதாவது அவர்களது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர்கள் மரணத்தி-ருந்தும் பிரேதக் குழிகளி-ருந்தும் உயிர்த்தெழுவதற்கான சாத்தியக்கூறுகளை அவர்களிடத்தில் சுட்டிகாட்டி, பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்டு எழுந்து வருவார்கள் என்ற கிறிஸ்துவின் வாக்குத்தத்தம் நிறைவேறுதலையும் சுட்டிக்காட்ட முடியும். மேலும் இழந்து போன நண்பர்களின் மறுசீரமைப்புக்கான விசுவாசமுள்ள ஜெபத்திற்கான பதி-ல், இந்த உன்னதமான பணி ஆரம்பித்து, தொடர்ந்து முன்னேறக்கூடும் என்று சுட்டிக்காட்டுவது நியாயமான ஒன்றாக இருக்கும். இப்படிப்பட்ட விதத்தில் ஒரு நியாயமான காரியத்தை பிறர் மீது திணிப்பது என்பது நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று. உதாரணத்திற்கு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டவர்கள் பின்னா-ருந்து வரும் பட்டிய-ன்படி, படிப்படியாகத் திரும்ப அழைக்கப்படுவார்கள். மேலும் இதன்படி உயிர்பெற்று மறுபடியும் எழுந்து வந்தவுடன், அவர்களுக்குத் தங்குவதற்கு வீடும், நல்ல வரவேற்பும், மற்றும் அவசியமான சௌகரியங்களும், அளிக்கப்படக்கூடும். அத்தோடு அவர்களுடைய பாஷைகள், நடவடிக்கைகள், பழக்கவழக்கங்களுடன் இவ்வண்ணமாகப் பரிச்சயம் ஏற்படுத்தி வைக்கக்கூடும். ஒருவேளை, இந்த பட்டியல் மே-ருந்து கீழாக வரும்படியான

ஒன்றாக இருக்குமேயானால், தற்போதிருக்கும் புதிய சூழ்நிலைக்கு சற்றும் ஆயத்தமற்றவர்களாக அந்த உயிர்த்தெழுந்தவர்கள் தடுமாறி, புதியதொரு கூட்டமாக முற்றிலும் அந்நியராக சந்ததியாரின் மத்தியில் இவர்கள் காணப்பட வேண்டியிருக்கும். தீர்க்கதரிசிகளுக்கும், பிற பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கும் மேற்கூறப்பட்டவிதமான ஆட்சேபனை பொருந்தாது. ஏனெனில் பூரண மனிதராக, அறிவு ஒழுக்கம் மற்றும் சரீர ரீதியில் மற்றெல்லா மனிதரைக் காட்டிலும் மிக உன்னத மேன்மையுடையவராக, பூரண மனிதராக உயிர்த்தெழும் இவர்கள், தங்களுடைய சோதனைக் காலத்தை ஜெயித்தவர்கள்.

பிரிந்துபோன தன்னுடையவர்களுக்காக ஜெபிக்கப்படும் எல்லா ஜெபங்களுக்கான பதில்களும் ஏற்ற வேளையில் நிச்சயமாகக் கொடுக்கப்படுமேயன்றி, சந்தேகத்துக்குரியதாக இருக்காது. ஏனெனில், இப்படிப்பட்ட சில ஜெபங்கள் இசைவு இல்லாமல் இருந்தாலும் கூட, இவர்களுடைய உயிர்த்தெழுதலுக்கான நிச்சயமானதொரு திட்டத்தைக் கர்த்தர் வைத்திருப்பார். அவரது பட்டியல் ஒருவேளை சபை மற்றும் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுத-ல் சுட்டிக் காட்டப்பட்ட விதத்தில் இருக்கலாம். உயிர்த்தெழும் பிரஜைகளுடைய தகுதியும், அவர்கள் எழுந்து வந்து புதிய வாழ்வைத் தொடங்கி, ஜீவிக்கப்போகும் நண்பர்களுடைய மற்றும் சூழ்நிலையின் பொருத்தமும், அந்த பட்டிய-ன் தகுதிக்குப் பொருந்தியதாக இருக்கும். இப்படிப்பட்ட கோரிக்கையை வைப்பவர்களின் சார்பாகவும் ஓரளவிற்கான ஆயத்தங்களை இவை அவசியப்படுத்தும். இருதயம் மற்றும் வாழ்வின் ஒரு ஆயத்தம், மேலும் பரிசுத்தமான பெரும்பாதைக்குரிய தங்களுடைய முன்னேற்றத்துக்கான ஆயத்தம் ஆகியவை அவசியமாக இருக்கும். இவ்விதமாக இப்படிப்பட்ட மறுசீரமைப்புகள் ஜீவித்துக் கொண்டிருப்பவர்களது விசுவாசத்துக்கு சன்மானங்களாகவும், உயிர்தெழுந்தவர்களுக்கும் (கூட) தேவைப்படும் சாதகமான சூழ்நிலையைப் பெற்றுத்தரக் கூடியதாகவும் இருக்கும்.

## மிக அற்புதமான தோற்றம்

புதிய யுகத்தின் நிர்வாகம் முழுவதுமாக ஆரம்பிக்கப்படும்



போது என்ன அற்புதமானதொரு தோற்றத்தைக் கொடுக்கும்! ஒரு யுகத்தி-ருந்து மற்றொரு புதிய யுகத்துக்கு மாறும் போது ஏற்படும் மாறுதல்கள் (இதுவரை) முந்தைய காலங்களில் குறிப்பிடும்படியாக இருந்திருக்கின்றன. ஆனால் இந்த மாறுதலோ எல்லாவற்றையும் விட மிக முக்கியமான ஒன்றாகவே இருக்கும்.

துதிகீதங்களுடனும், நித்திய சந்தோஷத்தைத் தங்கள் தலை மீது வைத்துக்கொண்டும், மனுக்குலம் முழுவதுமே தேவனிடத்தில் திரும்புகின்ற ஒரு அதிசயமான காட்சியைக் குறித்த சிந்தனையானது சந்தேகமின்றி, இதை நம்புவது என்பதே மிக நன்மையானதாகக் காணப்படுகிறது. ஆனால் வாக்குத்தத்தம் செய்திருப்பவர் தமது நல்விருப்பங்கள் யாவையும் செயல்படுத்துவதற்கு அவர் வல்லமை உடையவராகவும் இருக்கிறார். துக்கமும், பெருமூச்சும் நம்மிடமிருந்து பெரும்பாலும் பிரிக்கமுடியாததைப் போல் தோன்றினாலும், துக்கமும் பெருமூச்சும் விலகி ஓடிப்போய்விடும். பாவமும், மரணமும் ஆண்டு கொண்ட மிகவும் நீண்ட இரவு முழுவதும் இரட்டுடுத்த-ன் அழுகையும், சாம்பலும் நீடித்திருந்தாலும், ஆயிர வருட ஆட்சியின் விடிய-ல் சந்தோஷம் காத்திருக்கிறது. எல்லா முகங்களின் கண்ணீரும் துடைக்கப்படும். சாம்பலுக்கு பதில் சௌந்தர்யமும், வருத்தத்தின் ஆவிக்குப் பதிலாக சந்தோஷத்தின் எண்ணெயும் கொடுக்கப்படும்.

## அவரது ராஜ்யத்தின் அபிவிருத்தி

"ஒரு பெரிய பர்வதமாகி (ராஜ்யம்) பூமியெல்லாம் நிரப்பும்" (தானி 2:35) அளவிற்கு அது வளரும்வரை பூமியின் ராஜ்யங்கள் பெருகுவதைப் போலவே தேவனுடைய ராஜ்யம் பல்வேறு பகுதிகளில் பரவும் அல்லது அபிவிருத்தி அடையும். இதை விளக்கலாம்: கிரேட் பிரிட்டனின் ராஜ்யம் ஆரம்பத்தில் மாமன்னரையும் அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்களிடம் மட்டுமே ஆளுகை செய்தது. அதன் இரண்டாம் கட்டத்தில் பாராளுமன்றத்தையும், அரசாங்கத்தின் பலதரப்பட்ட மந்திரிகளையும் சேர்த்துக் கொண்டது. அதற்கும் மேல் இன்னும் விரிவடைந்து எல்லா ராணுவ வீரரையும் சேர்த்துக் கொண்டது. பிறகு இன்னும் சற்று தூரத்துக்குப் போய் போரிட்டு வெற்றி பெற்று

இந்தியா போன்ற நாடுகளின் பிரஜைகளாகிய அந்த ராஜ்யத்தின் சட்டத்தை வெளிப்படையாக எதிர்க்காதவர்களையும் தனது ஆளுகைக்குள் சேர்த்துக் கொண்டது.

அந்தப்படியே தேவனுடைய ராஜ்யமும் கூட இருக்கும். ஆதியில் அது பிதாவின் ராஜ்யமாக அனைவரையும் ஆளுகின்ற ஒன்றாய் இருந்தது. *(மத் 13:43; 26:29)* ஆனால் பிதாவானவர் இந்த பூமியின் ஆளுகையை ஆயிரமாண்டு காலம் வரைக்கும் கிறிஸ்து மற்றும் தெய்வீக சுபாவத்துக்கும், மகிமைக்கும் உயர்த்தப்பட்ட சபையாகிய ஒரு பிரதிநிதியின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து, தீமையை அழித்து, புதிய உடன்படிக்கையின் கிருபை நிறைந்த சூழ்நிலையின் கீழ் பிதாவுடன் முழுமையான இசைவுக்கு வரும் யாவரையும் உயர்த்துவதற்காக அவராகவே தீர்மானித்திருக்கிறார். அதன் இரண்டாம் கட்டமாக பூமிக்குரிய அதன் மந்திரிகளை அல்லது பிரபுக்களான மனிதரிடையே கண்ணுக்குப் புலப்படும்படியான பிரதிநிதிகளையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும். இன்னும் விரிவடையும் போது யூதர்கள், புறஜாதியார் என்று இந்த ராஜ்யத்தின் நிர்மாணத்தை அறிந்துகொண்டு, தங்களுடைய நேர்மையான கீழ்ப்படிதலையும், பக்தியையும் சமர்ப்பிக்கும் யாவரையும் அது தன் ஆளுகையில் சேர்த்துக் கொள்ளும். இன்னும் அதிகமாக விரிவடைந்து முடிவில் தனது பிரமாணத்துக்குக் கீழ்படியாதவரை அழித்துவிட்டு படிப்படியாகக் கீழ்ப்படியும் எல்லா பிரஜைகளையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும். *அப் 3:23; வெளி 11:18*

ஜெயம் பெற்ற சமாதானமும் நீதியின் ஆளுகையும் நிலவுகின்றதொரு நிலையில், தெரிந்தே எதிராளிகளாகிவிட்டவர்கள் அனைவரும் இருப்பு கோ-ன் ஆளுகையால் அழிக்கப்பட்டதொரு நிலைமையே தேவனுடைய ராஜ்யத்தின் ஆயிரவருட ஆளுகையின் முடிவில் இருக்கும். *(வெளி 2:27)* ஏசாயா தீர்க்கதரிசி இந்த காலக்கட்டத்தை விளக்கி எழுதியிருக்கிறதாவது: *"நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான் (அழிக்கப்படுவான்);"* அந்த வயதில் மரித்தாலும், அவன் ஒரு குழந்தையைப் போ-ருப்பான். ஏனெனில் ராஜ்யத்தின் நியாயமான, நீதியான ஒழுங்குகளுக்கு வெளியரங்க கீழ்ப்படிதலைக் காட்டினாலும் கூட, அவன் ஆயிரவருட ஆட்சியின் முடிவுவரையிலுமாவது உயிருடன் வாழ்வான். *ஏசா 65:20; அப் 3:23*



ஆனால், இப்படிப்பட்ட ஒரு சமாதானம், ஜெயம் கொண்டு அமுல்படுத்தப்பட்டதொரு சமாதானம், நீதிநிறைந்த, பாரபட்சமற்றதொரு அரசாங்கத்தின் ஆசீர்வாதங்களையும், அனுகூலங்களையும் நிரூபிக்கும் வகையில் சரியான ஒன்றாக இருப்பினும், தேவனுடைய சீரிய கொள்கைக்கு இது மிகவும் தொலைவிலேயே இருக்கிறது. தேவனுடைய சிறந்த ராஜ்யம் என்பது ஒவ்வொரு தனி மனிதனும் தனது சொந்த விருப்பத்தைச் செய்வதற்கு சுதந்திரம் உடையவனாக இருக்க வேண்டும். ஏனெனில், தெய்வீக நிலையாகிய நீதியை நேசித்து, மீறுதல்களை வெறுக்கும் ஒரு கடுமையான உறுதியை உடையவராக ஒவ்வொருவரும் இருப்பார்கள். இந்த தரமனது பூமியெங்கும் இறுதியாக நிலவி ஆகவேண்டும். அத்தோடு கூட ராஜரீகப் பிரதிநிதியின் ஆயிரவருட அரசாட்சியின் முடிவு காலத்தில் மனுக்குலத்தின் கண்ணியத்துக்கு இதுவே அளவுகோலாகக் கொண்டுவரப்படும்.

*வெளி 20:7-10*ல் நமக்குக் காண்பிக்கப்பட்டிருக்கும் விதமாக, ஆயிரவருட ஆட்சியின் முடிவில் அப்பொழுது வாழும் கோடிக்கணக்கான மனிதரில், பூரணம் அடைவதற்கான ஒரு முழுமையான சந்தர்ப்பத்தைப் பெற்ற இவர்கள் ஒவ்வொருவரையும் தூற்றி, பிரித்தெடுப்பதற்கு ஒரு அறுவடைக்காலம் இருக்கும். இது தற்கால அறுவடைக் காலத்தில் பாபிலோனாகிய கிறிஸ்தவ மண்டலத்தைத் தூற்றுவதற்கு ஒப்பானதாகவே இருக்கும். அத்தோடு யூத யுகத்தின் அறுவடையின் தூற்றும் பணிக்கும் ஒப்பானதாகவே இருக்கும். நமது கர்த்தரின் உவமையில் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதைப் போன்று "வெள்ளாடுகளை" கர்த்தருடைய "செம்மறியாடுகளி-ருந்து" முழுமையாகப் பிரித்தெடுப்பதை ஆயிரவருட யுக அறுவடையானது நிரூபணமாக்கும். *மத் 25:31-46*

ஆனால், யூத மற்றும் சுவிசேஷயுக அறுவடைகள் ஒவ்வொன்றும் ஒரு சிறு மந்தையை மட்டுமே கூட்டி சேர்த்ததாகவும், மீதமுள்ள திரளான கூட்டமான மனுக்குலத்தினை இந்தக் காலம் வரையில் சாத்தான் வஞ்சித்து, குருடாக்கி வைத்திருப்பதினால், இந்த பெரும் கூட்டத்தினர் தகுதியற்றவர்கள் என்பதே அறுவடைகளின் விளைவுகளாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் போது, ஆயிரவருட

யுக அறுவடையில் நித்திய, ஜீவனுக்குள் வரும் விசுவாசமுள்ள செம்மறி ஆடுகள் பெரும் கூட்டமாக இருப்பார்கள் என்றும், சிறுபான்மையாக இருக்கும் வெள்ளாடுகள் அழிக்கப்பட்டுவிடுவார்கள் என்றும் நியாயமற்ற முறையில் நாம் எதிர்பார்க்கக்கூடாது. எப்படியாயினும், எண்ணிக்கையை அல்ல தரத்தைக் குறித்தே நமது கர்த்தரின் பரீட்சை இருக்கும். "இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின" *(வெளி 21:4)* என்று சொல்லப்பட்டிருப்பதைப் போல் இருக்கப்போகின்ற நித்தியமான சந்தோஷம், சமாதானம் மற்றும் உன்னதமான நித்திய வாழ்வின் ஆசீர்வாதத்திற்கு ஆபத்து விளைவிக்கும் பாவமும், பாவிகளும், தீமைகளுக்கு இரக்கம் காட்டுபவர்களும் ஆயிரவருட ஆட்சியைத் தாண்டிப் போக மாட்டார்கள் அல்லது அதன் பிறகும் வாழமாட்டார்கள் என்பதே கர்த்தருடைய உத்திரவாதம்.

இவ்வண்ணமாகத் தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படும். அவ்வண்ணமாகவே, பிதாவாகிய தேவனின் ஞானத்தையும் நீதியையும், அன்பையும், வல்லமையையும் ஏற்றுக் கொண்டு, எல்லா முழங்கால்களும் முடங்கி, நாவுகள் யாவும் துதிப்பதற்குத் தடையாக இருக்கும் எல்லா அதிகாரங்களையும், வல்லமைகளையும் கீழாக்கிப் போடும்வரையில் பிதாவின் ராஜரீக பிரதிநிதியைப் போல கிறிஸ்து ஆளுகை செய்வார். மேலும், இறுதியாக வெளிப்படையாகக் கீழ்ப்படிதலைக் காட்டினாலும், பாவத்தை குறித்த ஒரு அனுதாபம் உள்ள யாவருமே தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பதைப் போலவே ஆயிரவருட ஆட்சியின் முடிவு காலத்தின் மிகவும் கடினமான சோதனையால் இனியும் ஜனத்தாரிடையே இராதபடிக்கு அழிக்கப்படுவார்கள். *(வெளி 20:9)* அதன்பின் அந்த ராஜரீக பிரதிநிதித்துவத்தின் ஆளுகையை பிதாவினிடத்தில் அவர் ஒப்படைப்பார். இப்படியாக இந்த விஷயத்தைக் குறித்து அப்போஸ்தலர் விவரிக்கிறார்:

*"எல்லா சத்துருக்களையும், தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும்வரைக்கும், அவர் (கிறிஸ்து) ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம் (ஆதாமுக்குரிய மரணம்). அதன் பின்பு முடிவு உண்டாகும்; (அவரது ஆட்சியின் முடிவு, அதன் குறிக்கோளை செய்துமுடித்துவிட்டபடியினால்) அப்பொழுது அவர் (கிறிஸ்து) சகல (எதிர்க்கும்) துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து..... சகலமும் அவருக்குக் (பிதாவுக்கு) கீழ்ப்பட்டிருக்கும் போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்கு சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் (பிதாவுக்கு) கீழ்ப்பட்டிருப்பார்." (1 கொரி 15:24-28)*



கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சி முடிந்துவிட்டபின் பரலோகத்தைப் போலவே பூமியிலும் தேவனுடைய சித்தம் செய்யப்படுவது நிறுத்தப்படுமா? ஓ, இல்லை. இதற்கு மிகவும் நேர் மாறாக, கிறிஸ்துவின் ஆளுகையின் விளைவாக அப்படிப்பட்ட ஒரு நிலையை அப்பொழுது தான் அடையக் கூடும். அந்த காலத்தில் தான் ஆதாம் படைக்கப்பட்ட போது (முழு மனதுடன் பாவம் செய்பவர் அழிக்கப்பட்டு) இருந்த பூரண நிலையில் எல்லா மனிதரும் இருப்பதோடு கூட, நீதியின் நன்மைகளைக் குறித்த ஒரு அறிவையும், பாவத்தின் அத்துமீறதல்கள் மற்றும் அதன் தீங்கிழைக்கும் தன்மையைக் குறித்த அறிவையும் பெற்றவர்களாகத் தங்களுடைய சோதனைகளை வெற்றியுடன் ஜெயித்துவிட்டவர்களாகத் தெய்வீக குணத்திற்கு முழுமையாக இசைந்து போகும் குணாதியசங்களை முழுமையாகத் திட்டவட்டமாகத் தங்களுக்குள் உருவாக்கிவிட்டதை வெளிப்படுத்துகிறவர்களாகவும் இருப்பார்கள்.

இப்பொழுது தூதர்களிடையே பரலோகத்தில் இருப்பது போலவே, தேவனுடைய ராஜ்யம் மனுஷரிடையேயும் அப்பொழுது இருக்கும். பாவிகளின் பெலவீனத்துக்காக புதிய உடன்படிக்கையின் கீழ் கிருபையின் ஈவுகளுடனான கிறிஸ்துவின் மத்தியஸ்தமான ராஜ்யத்தின் விசேஷ அம்சங்கள், இனிமேல் எந்த பெலவீனரோ அல்லது குறையுள்ளவர்களோ அதனால் பலனடைய வேண்டிய அவசியமே இருக்காது என்பதனால் முடிவுக்கு வரும்.

தேவனுடைய சாய-ல் யாவரும் பூரணமாக இருக்கும்போது கூட, எப்படியாயினும் ஒழுங்கு அப்பொழுதும் கூட பராமரிக்கப்படும். "ஒழுங்கு என்பது பரலோகத்தின் முதல் பிரமாணம்" ஆக இருக்கிறபடியினால், பூமியின் முதல்

பிரமாணமாகவும் அது இருக்கும் என்று நாம் தாராளமாக எதிர்பார்க்கலாம். மேலும் இதுவே நீதியின் கோட்பாடுகளையும் வல்லமையையும் உணர்த்தும். அங்கு தான் முதன்முத-ல் முழுவதும் வெற்றிகரமான குடியரசு இருக்கும். ஒவ்வொரு மனிதனையும் மன்னராகவும், ஒவ்வொரு சகமனிதனும் சமத்துவம் உடையவராகவும், சக மன்னர்களுடைய ஒரு பணியாளராக ஒரு பிரதம மந்திரியையோ அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியையோ வைத்துப் பார்ப்பதற்கான தற்போதைய முயற்சிகள் யாவும், பல்வேறு கோணங்களிலும் தோல்வியையே அடைந்திருக்கின்றன. ஏனெனில், மன ரீதியாகவோ, சரீர ரீதியாகவோ, நெறிகளிலோ அல்லது பொருளாதார ரீதியாகவோ அல்லது வேறு எந்த விதத்திலுமே மனிதர்கள் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் அல்ல; மேலும், ஒருவராகிலும் தன்னிகரற்றவர் என்று கூறுவதற்கு உண்மையில் தகுதி அற்றவர்கள். ஆனால், பெலவீனத்தின் நிமித்தம் அனைவருமே பிரமாணங்கள் மற்றும் கட்டுப்பாடுகளின் கீழ் இருப்பது தற்போது அவசியம்.

ஆனால், மத்தியஸ்தமான ராஜ்யத்தின் மூலம், பூரணத்தை மனுக்குலம் அடைந்திருக்கும் போது, ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு இருந்ததைப் போலவே, மக்கள் யாவருமே ராஜாக்களைப் போல் இருப்பார்கள். மேலும், இந்த ராஜாக்களிடத்தில் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து தேவனுடைய ஆயிரவருட ஆட்சிக்குப் பிறகு உள்ளவைகள் அளிக்கப்படும். அதன்பிறகு அன்பின் பிரமாணத்தின் கீழ் இவர்கள் யாவரும் ஒருமனதாகக் கூடி ஆளுகை செய்வார்கள். அவர்களது பிரதானியானவர் அவர்களிடத்தில் ஊழியம் செய்து அவர்களது பிரதிநிதியாக இருப்பார். கர்த்தாவே, உமது ராஜ்யம் வருவதாக என்று தற்காலத்துப் பரிசுத்தவான்களின் நலனுக்காகவும், உலகத்தின் நலனுக்காகவும் நாங்கள் ஜெபிக்கிறோம்.

அ அ

## அத்தியாயம் 14

# யேகோவாவின் பாதபடியை மகிமைப்படுத்துதல்

தேவனுடைய பாதபடி பாவத்தினால் தூய்மையை இழந்து, கைவிடப்பட்டது - அதனுடைய மகிமையின் மறுமலர்ச்சிக்கான வாக்குத்தத்தம் - கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட சொத்து புதுப்பிக்கப்படுதல்-அதனுடைய மிக பிரகாசமான ஆபரணம் - "ஒ-வ மலையின் மேல்" யேகோவாவின் பாதம் மறுபடியும் நிறுவப்படுதல் - அதன் பலனான ஆசீர்வாதங்கள் - உண்மையில் பாதபடி முடிவில் மகிமைப்படுதல்.

"யேகோவா சொல்கிறது என்னவென்றால், வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி." "என் பாத ஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்." "அந்நாளிலே அவருடைய (யேகோவாவின்) பாதங்கள்..... ஒ-வ மலையின் மேல் நிற்கும்." *ஏசா 60:13; 66:1; சகரி 14:4; மத் 5:35 ; அப் 7:49*

தேவனுடைய பாதபடியில் கடந்த ஆறாயிரம் வருடங்களாக மகிமையைத் தவிர மற்றெல்லா காரியங்களும் நடந்துவருகின்றன. பாவம், வேதனை, அழுகை, மன உபாதைகள், சரீர உபாதைகள் மற்றும் மரணம் போன்றவைகள் யாவும் சேர்ந்து இந்த பூமியை ஒரு மிகப்பெரிய சவக்கிடங்காக மாற்றிவிட்டிருக்கிறது. குறைந்தபட்சம் 50 ஆயிரம் மில்-யன் மனிதர்கள் தெய்வீக நீதியின் சாபம் எப்போது நீக்கப்படும் என்றும், தெய்வீகக் கிருபையின் ஒளியானது நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முகத்தில் வீசி நீதியின் சூரியனாக எப்போது எழும்புவார் என்றும் காத்திருக்கின்றனர்.

"பாவத்தினுடைய சோக சாயலை ஓட்டிவிடு, சுகமளிக்கும் ஒளியால் இருட்டை வெளிச்சமாக்கு."

இந்த முடிவிற்காக தேவன் அபரிமிதமான முன்னேற்பாடுகள் செய்திருக்கிறார். ஆதாம் மற்றும் அவரது உபத்திரவப்படும் பிள்ளைகள் யாவருக்குமான ஈடுப-யினால், இவ்வுலகம் முழுவதையும் கிரயத்துக்கு வாங்கி, சாதகமான சூழ்நிலையின் கீழ் நித்திய ஜீவனுக்காக ஒரு சந்தர்ப்பத்தினை நமது சந்ததியான ஒவ்வொரு அங்கத்தினருக்கும் வைத்திருக்கிறார். ஆனால் அது இதைவிடவும் அதிகமாகச் செய்திருக்கிறது, அது ஆதாமின் சொர்க்கத்தைப் போன்ற வீட்டை (அவனது மீறுத-னால் இழக்கப்பட்ட) திரும்பவும் பெற்றிருக்கிறது. அத்தோடு பூமியின் ராஜாவாக அவனது ஆளுகை, அவனது சிருஷ்டிகர் மற்றும் பிதாவின் பிரதிநிதித்துவம் ஆகிய யாவும் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

ஆகையால் நாம் வாசிப்பது : "மந்தையின் துருக்கமே, சீயோன் குமாரத்தியின் அரணே, முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்." *(மீகா 4:8)* அப்போஸ்தலர் பவுலும் கூட, "மீட்கப்படும் சுதந்திரத்தின் அச்சாரத்தைக்" குறித்துப் பேசுகிறார். *(எபே 1:14)* நமது கர்த்தர் தம்முடைய உவமைகள் ஒன்றில், தமது சொத்தாகிய மனுக்குலத்தை மட்டும் கிரயமாகக் கொள்ளாமல், நிலத்தையும் கூட சாபத்தின் கீழ் இருக்கும் பூமியை, இந்த உலகத்தையும் கிரயமாக வாங்கியிருக்கிறார். மேலும், அவரது ராஜரீக கூட்டத்தின் அங்கத்தினராக, அவரோடு சேருபவர்கள் எல்லாம், விலை கொடுத்து வாங்கப்பட்ட நிலத்தையும், பொக்கிஷங்களையும் அவருடன் பகிர்ந்து கொள்வார்கள். *மத் 13:44*

ஆயிர வருட ஆட்சியின் பணி முழுவதுமே மறுசீரமைப்பு மற்றும் தேவனுடைய பாதபடியை மகிமைப்படுத்துவதுமே அடங்கியிருக்கும். பாவத்தின் மூலமாய் தொலைக்கப்பட்டுவிட்ட சொர்க்க பூமியானது, பூமியின் ஒரு மூலையில் ஒரு தோட்டமாக இருந்தது. ஆனால் தெய்வீக நோக்கத்திற்கு இசைவாக இந்த பூமியை நிரப்பும் அளவிற்கு ஆதாமின் சந்ததி பலுகிப் பெருகிவிட்டபடியே *(ஆதி 1:28)*, அவர்கள் அனைவரும் மீட்கப்படப் போவதினால், அவர்கள் அனைவரையும் தங்க வைப்பதற்கு போதுமான அளவிற்கு பெரியதொரு சொர்க்க பூமியை அளிக்க வேண்டியதும் அவசியமாகிறது. எனவே, இந்த பூமி முழுவதுமே அழகும், பூரணமும் பலனும் உடையதாக ஏதேன் தோட்டத்தைப் போலவே



மாறிவிடும் என்பதையே இது உணர்த்துகிறது. இவை யாவுமே தெய்வீகத் திட்டத்தின் எதிர்கால இலக்காக வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கின்றன. *அப் 3:20,21; வெளி 2:7; II கொரி 12:4*

ஆனால் ஆயிரவருட ஆட்சியின் முடிவில் மகிமைப்படுத்தப்பட்ட கர்த்தருடைய பாதபடியின் மிக விலை உயர்ந்ததொரு சம்பத்தாக இருக்கப்போவது மனுக்குலமே. இவர்களுடைய பூரணத்துவம், சுதந்திரம், ஒழுங்கு மற்றும் அறிவின் கிருபைகளில் தெய்வீக சாயல் ஆகியவை தேவனுடைய தற்சொரூபமாய் பிரதிப-க்கும். பூரண மனுஷனானவன் தன்னுடைய சிருஷ்டிகர் மீதும் அவரது சிருஷ்டிப்பு, மீட்பு மற்றும் மறுசீரமைப்பு ஆகிய ஆச்சரியமான திட்டத்தின் மீதும் மிகுந்த மகிமையான வகையில் தன்னுடைய தகுதியைப் பிரதிப-ப்பான். எனவே, அந்த ஆச்சரியமான திட்டம் என்பது முதலாவது கர்த்தராகிய இயேசு என்னும் யேகோவாவின் வார்த்தையானவரும் இரண்டாவதாக மணவாட்டி என்னும் ஆட்டுக்குட்டியின் மனைவியும், உடன் சுதந்திரவாளியுமானவர்கள் ஈடுப-யினால் உத்திரவாதம் அளிக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களைப் பகிர்ந்தளிப்பதில் பங்கு பெறுவார்கள்.

நமது கர்த்தராகிய இயேசு, பிதாவினுடைய கனம் பொருந்திய பிரதிநிதியாய் நின்று, ஆயிர வருட ஆட்சியில் "சகல துரைத்தனத்தையும் (எதிர்க்கும்) சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து..... எல்லாச் சத்துருக்களையும் தன்னுடைய பாதத்திற்குக் கீழாக்குவதற்கு" முன்பாகக் கர்த்தருடைய பாதபடியை அழகு படுத்துவதும், மகிமைப் படுத்துவதும் முழுமை பெறாது. *1 கொரி 15:24 - 28*

பாவமும் மரணமும் ஆளுகை செய்யும் காலமானது, "தமது கோபத்தின் நாளிலே தமது பாத பீடத்தை நினையாமல் இருந்தார்" *(புல 2:1)* என்று கூறும்படியான காலத்துக்கு ஒப்பிடும்படியாக இருக்கிறது. ஆனால், ஆயிர வருட ஆட்சியின் ஆரம்பத்தினைத் தொடர்ந்து, "நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர்" என்று ஜனங்கள் யாவரும் தீர்க்கதரிசனமாக அழைக்கின்றனர். *(சங். 99:5)* மேலும் இந்த சிந்தனையானது சகரியா தீர்க்கதரிசியால் மிகவும் தெளிவாகக்

கூறப்பட்டிருப்பதாவது: தேவனால் மகிமைப்படுத்தப்பட்ட சபையாகிய புதிய எருசலேமானது, பூமியில் புதியதொரு அரசாங்கமாக நிறுவப்படும் என்பது, யேகோவாவின் பாதபடி தெய்வீக ஆசீர்வாதங்களைத் திரும்பப் பெறுவதற்கான ஆரம்பத்தையே குறிக்கும். (சக 14:4,5)

## ஒ-வ மலையின் மேல் நிற்கும் யேகோவாவின் பாதம்

இந்தத் தீர்க்கதரிசனமானது பொதுவாகவே தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அவரது பாதத்துக்கே இது பொருந்தும் என்று தவறாக நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில், இதைத் தவறாகப் புரிந்துகொண்டவர்கள் பொதுவாகவே நமது கர்த்தர் தமது மனுஷீக சுபாவத்தை, முற்றிலுமாகவும், நிரந்தரமாகவும் நமக்கான ஈடுப-யாக செலுத்திவிட்டார் என்பதையும், பிதாவின் வல்லமையினால், ஒரு மகிமையான ஆவிக்குரியவராக, "பிதாவின் தன்மையின் சொரூபமாக" மரணத்தி-ருந்து எழுப்பப்பட்டார் என்பதையும் மறந்து, கல்வாரியின் ஆணிகள் துளைத்த, மாம்சீக பாதம் தான் ஒ-வ மலை மீது நிற்கும் என்று வ-யுறுத்தி கூறுகின்றனர்.

ஆனால் அதற்கு முன்னால் வரும் 3ம் வசனத்தைக் கவனிக்கும்போது அது யேகோவாவின் பாதத்தின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசன மேற்கோளைச் சுட்டிக்காட்டுகிறது. ஏனெனில், (தேவனுடைய ராஜ்யம் நிறுவப்படும்போது சம்பவிக்கும் உபத்திரவங்களைக் குறிப்பிட்டு) கூறப்பட்டிருக்கும் வார்த்தை இப்படியாக இருக்கிறது : "கர்த்தர் புறப்பட்டு, யுத்த நாளிலே (இஸ்ரவே-ன் முந்தைய காலத்தில்) போராடுவது போல் அந்த ஜாதிகளோட போராடுவார். அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒ-வ மலையின் மேல் நிற்கும் ; அப்பொழுது, மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒ-வமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காக எதிராகப் பிளந்துபோம் ; அதினாலே, ஒருபாதி வட பக்கத்திலும ஒருபாதி தென்பக்கத்திலும் சாயும்."

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் பாதம் யேகோவாவின் பாதமே என்ற உண்மை அறிந்துகொண்ட உடனே, அவர்கள் இது அடையாள மொழியில் இருக்கிறது என்பதற்கு எதிராக வாதிடமாட்டார்கள். அத்தோடு இது இந்த அடையாள பூமியில் கர்த்தருடைய ஆளுகையின் மறு சீரமைப்புக்கு ஒப்பிடப்பட்டிருப்பதையும் ஆட்சேபிக்க மாட்டார்கள். இந்த பூமி நீண்ட காலமாக "இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய "சாத்தானிடம் விடப்பட்டிருக்கிறது. கர்த்தர் முதன்முத-ல் நிழலான ஆசரிப்புக் கூடாரத்திலும், இரண்டாவது எருசலேமின் ஆலயத்தின் மூலமாகவும், கடைசியாக சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் சபையினுடைய தற்போதைய நிலைமை மூலமாகவும், கர்த்தர் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டிருக்கிறார். நிச்சயமாக யாவரும் இந்த பூமியின் மீது, தமது பாதபடியாகத் தமது பாதத்தை உண்மையிலேயே யேகோவா வைப்பார் என்று தவறான எண்ணம் கொள்ளமாட்டார்கள்.



மேலும் யேகோவாவின் பாதம் வைக்கப்படுவது அடையாளமாகவும், தெய்வீக ஆசீர்வாதமும், ஆளுகையும் திரும்பவும் பூமி மீது வருவதையே சுட்டிக்காட்டுவதாகவும் இருக்குமேயாகில், இத்தோடு கூட தொடர்புடைய இதே தீர்க்க தரிசனத்தின் மற்ற அம்சங்களும் அடையாளமானவைகளே என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். அதாவது, ஒ-வமலை அதனுடைய விசேஷமான பிரிவுகள், அதனுடைய பள்ளத்தாக்கு, ஜனங்கள் பயந்து ஓடுவதும், எருசலேமி-ருந்து வரும் ஜீவத்தண்ணீர் போன்ற யாவுமே அடையாள மொழிகளும், ஆவிக்குரிய சத்தியத்தின் சித்திரங்களுமே. (எசே 47:1-8ஐ 8ம் வசனத்துடன் ஒப்பிட்டு பார்க்கவும்)

ஒ-வமரம் என்பது மிகுந்த அடையாள அர்த்தம் உள்ளது. செயற்கையான வெளிச்சத்துக்குரிய மூல காரணமாக பழங்காலத்தில் இருந்தது. இதனுடைய (ஒ-வ) எண்ணை பெரும்பாலும் இந்த காரணத்துக்காகவே உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. (யாத் 27:20) உண்மையில் எபிரேய பாஷையில் இந்த ஒ-வ ஷீமென் அல்லது எண்ணெய் மரம் என்று அழைக்கப்பட்டது. மேலும் இந்த ஒ-வ எண்ணெயானது பழங்காலத்து விலையேறப் பெற்ற களிம்புகளின் மூலப் பொருளாகவும் உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. அதாவது ராஜரீக ஆசாரியத்துவத்துக்கு அடையாளமானவர்களாகிய ஆசாரியர் மற்றும் ராஜாக்கள் மீதும் பரிசுத்த ஆவியின் நிழலாக அபிஷேகம்

செய்வது போன்றவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது (யாத் 30:24) மேலும் நினைவுக் கெட்டாத நாளில் இருந்து ஒ-வ மரக்கிளை என்பது சமாதானத்தின் சின்னமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆதி. 8:11; நெகே. 8:15

அப்படியாக ஒ-வ மரம் என்பது வெளிச்சம், சமாதானம் போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்குமேயானால், மலை என்பது வேறு இடங்களில் குறிப்பிடுவது போலவே ஒரு இராஜ்யத்தின் அடையாளமாகவே இருக்குமேயானால், ஒ-வ மலை என்று இங்கு இருக்கும் பதத்தின் அர்த்தம், ஒளி, சமாதானம், தெய்வீக ஆசீர்வாதம், நிறைந்த ராஜ்யம் என்று மிகவும் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். மேலும் யேகோவாவின் பாதம் அதன் மீது நிற்பது என்பது இந்த பூமியில் பரிசுத்த ராஜ்யத்தினாலும், பரிசுத்த ராஜ்யத்தின் மூலமாகவும் தெய்வீக ஆசீர்வாதங்கள் மற்றும் தெய்வீக சட்டங்களும், மறுபடியும் நிறுவப்படுவதையே குறிப்பிடுவதாகவும் இருக்கிறது.

ஒ-வமலை என்ற பதத்தின் இந்த அர்த்தம் அப்போஸ்தலருடைய வார்த்தையுடன் (ரோம.11:17,24) முழுமையாக ஒத்துப்போகிறது. இதில் இவர் மாம்சீக இஸ்ரயேலரை நல்ல ஒ-வ மரத்துக்கும், புறஜாதிகளி-ருந்து மனம் மாறி வருபவர்களை காட்டொ-வ மரத்தின் வெட்டப்பட்ட கிளைக்கும், இது நல்ல ஒ-வ மரத்தின் முறிக்கப்பட்ட கிளையின் இடத்தில் ஒட்ட வைப்பதற்கும் ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார். (எரே 11:16, 17ஐ ஒப்பிடவும்) இங்கு அந்த மரத்தின் வேரானது தேவனுடைய வாக்குத்தத்தமாகிய ஆபிரகாமினுடனான வாக்குத்தத்தத்தில் அடங்கியிருப்பதாகவும், ஆபிரகாமின் வித்து தான் முடிவில் பூமியின் அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதிக்க வேண்டும் என்று விவரிக்கிறார். இறுதியில் அந்த ஒரே வேரானது அல்லது வாக்குத்தத்தமானது இரண்டு விதமான கிளைகளைக் கொண்டிருக்கும், ஒன்று ஒட்ட வைக்கப்பட்ட காட்டொ-வ மரக் கிளையும், மற்றொன்று நல்ல ஒ-வ மரக்கிளையுமாம். மாம்சீக இஸ்ரயே-ன் குருட்டாட்டம் நீங்கி சிலுவையில் அறையப்பட்ட இரட்சகரை விசுவாசக் கண்களோடு ஏறெடுத்துப் பார்ப்பார்கள். மர்மசீக இஸ்ரயேலர் தேவனுடைய நிழலான ராஜ்யம் அல்லது பர்வதமாக, வெகு



காலத்தி-ருந்தே அழைக்கப்பட்டு வருவதையும், ஆவிக்குரிய சுவிசேஷ யுகத்தின் இஸ்ரயேலரை நமது கர்த்தர் அறிவித்தபடி, "பயப்படாதே சிறுமந்தையே" என்று கூறும்படியான மெய்யான தேவனுடைய ராஜ்யம் என்பதையும் கூட நாம் நினைவு கூறுகிறோம்.

அத்தோடுகூட, இந்த இரண்டு ராஜ்யங்களில் இருந்து தான் (உலகமனைத்திலும் உள்ள மனுக்குலத்திற்கான தம்முடைய ஆசீர்வாத வாய்க்கால்களாக அவர்களை மாற்றுவதற்காக, அவர்கள் மீது யேகோவாவின் மகிமை வந்து தங்குவதற்கும் முன்னதாகவே) கடந்த காலத்தின் எல்லா இருளிலும் உலகுக்கு ஒளியானது முன் சென்றிருக்கிறது. ஏனெனில் இவைகள் பழைய, புதிய உடன் படிக்கைகளாகிய பழைய ஏற்பாடுகளின் பிரதிநிதிகள் இல்லையா ? இவைகள் கர்த்தருடைய இரண்டு சாட்சிகளுக்கும், சகரியா (4:3,11,12)வின் இருண்டு ஒ-வ மரங்களுக்கும், வெளிப்படுத்துத-ல் (11:4) கூடத் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பவைகளான இவைகளுக்குப் பொருந்துபவைகளாக இல்லையா? இந்த மலையின் இரண்டு பாகங்களும் அந்த உடன்படிக்கைகளின் விளைவுகளான, தேவ ராஜ்யத்தின் பரலோக மற்றும் பூலோக பாகங்களை அடையாளமாகக் கூறவில்லையா?

மேலும் இங்கு நாம் காண்பது என்னவெனில், அந்த ஒ-வ மலையின் இரண்டு பாதிகளும் தெய்வீகக் கட்டளை அல்லது ஒழுங்கின்படியே பிரிக்கப்பட்ட தேவ ராஜ்யத்தின் இரண்டு பாகங்களைக் குறிக்கிறது என்பதாகும். இந்த பிரிவானது இராஜ்யத்தின் இரண்டு பாகங்களுக்கும் இடையே, எந்த எதிர்ப்பும் இருப்பதாகக் குறிப்பிடவில்லை. ஆனால் அதற்கு மாறாக, இவை இரண்டுக்கும் இடையே "ஆசீர்வாத பள்ளத்தாக்கை" உருவாக்கும் காரணத்திற்காகத் தான் இந்த பிரிவு. இங்கு தான் பரலோகத்துக்கும், பூமிக்கும் உரிய தேவனுடைய ராஜ்யத்தின் இரண்டு பகுதிகளின் ஆசீர்வாதமான பாதுகாப்பை, தெய்வீக உதவியை விரும்பும் யாவரும் தேடி ஓடிவந்து பெறுகிறார்கள்.

தாவீது தீர்க்கதரிசி (சங் 84:1-7) யேகோவாவின் பாதத்தை ஒட்டிய, இந்த மாபெரும் "ஆசீர்வாதங்களின் பள்ளத்தாக்கை" குறித்த ஒரு முன்னோட்டத்தை அளித்திருப்பதாகத் தெரிகிறது. அவரது பாட-ல் முதலாவது சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்களைக்

குறித்தும் அடுத்து வரப்போகும் யுகத்தில் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பவர்களைப் பற்றியும் பாடும்போது, இப்படியாகக் கூறுகிறார்:

*"சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்!*
*என் ஆத்துமா யேகோவாவின் ஆலயப்பிரகாரங்களின் மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது;*
*என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கி கெம்பீர சத்தமிடுகிறது.*
*என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே, உம்முடைய பீடங்களண்டையில், அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் (எனக்கு கிடைத்தது போலவே) கிடைத்ததே.*
*உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்;*
*அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக் கொண்டிருப்பார்கள். (சேலா)*

*உம்மிலே பெலன் கொள்ளுகிற மனுஷனும்,*
*தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.*
*அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை (மனமகிழ்ச்சியின்) நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்;*
*(ஆசீர்வாதத்தின் பள்ளத்தாக்கு)*
*மழையும், குளங்களை நிரப்பும். (யோயே 2:28)*
*அவர்கள் பலத்தின் மேல் பலம் அடைந்து,*
*சீயோனிலே தேவ சந்நிதியில் வந்து (பூரணமாய்) காணப்படுவார்கள்."*

ஆயிர வருட அரசாட்சியின் கீழ் ஒ-வ மலையின் (ராஜ்யத்தின்) இரு பிரிவுகளில் தெய்வீக இரக்கமும், ஆசீர்வாதமும் திரும்பி வருவதை எண்பத்து ஐந்தாம் சங்கீதமும் கூட சித்தரிக்கிறது.

அந்த பர்வதத்தின் ஒரு பாகம் வடக்கு நோக்கியும், மற்றொரு பாகம் தெற்கு நோக்கியும் பிரிக்கப்படுவது விசேஷ அர்த்தமுள்ளது. வடதிசை என்பது அறுமீன் கூட்டத்தின் திசை ; பூமிக்கான ஆகாய மண்டல தலைமை ஸ்தலம், தெய்வீக அரசின் இருக்கையாகும். சுவிசேஷ சபையானது இந்த சமயத்தில் தான், "தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாய்" மனித நிலைமையி-ருந்து ஆவிக்குரிய



நிலைமைக்கு மாறுவதை இது குறிப்பதாக காணப்படுகிறது. அடுத்தப்பகுதி, தேவனுடைய ராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளாய் எண்ணப்படும் பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் பூரண நிலைமையை, முழுமையான மறுசீரமைப்பை குறிப்பதாக காணப்படுகிறது.

இவ்வண்ணமாய் உருவாக்கப்பட்ட பள்ளத்தாக்கானது, நிழல் இல்லாத முழுமையான வெளிச்சம் நிறைந்த ஒன்றாய் இருக்கும். ஏனென்றால், அப்பொழுது கிழக்கி-ருந்து மேற்கு வரை சூரியனின் ஒளிக்கதிரானது ஊடுருவக்கூடும். இது அடையாளமாய் பேசும் காரியங்களாவது, நீதியின் சூரியனும், அதனுடைய தெய்வீக சத்தியத்தின் முழுமையான வெளிச்சமும், ஆசீர்வாதமும் சேர்ந்து பாவம், அறிவீனம், மூடநம்பிக்கைகள் மற்றும் மரணத்தின் நிழலை சிதறடித்து, இந்த ஆசீர்வாத பள்ளத்தாக்கினிடத்தில், இரக்கத்தின் பள்ளத்தாக்கினிடத்தில் ஓடிவரும் வாஞ்சையுள்ள, கீழ்ப்படிதலுள்ள மனுக்குலத்தை குணப்படுத்தி சீர்படுத்தும். வெளிச்சம் மற்றும் சமாதானத்தின் ராஜ்யத்தின் (யேகோவாவின் பாத ஸ்தாபனம்) ஆவிக்குரிய மற்றும் மனுஷீக பகுதிகள் இடையே உள்ள இந்த இரக்கத்தின் பள்ளத்தாக்கானது அதனிடம் நொறுங்குண்டதும், நறுங்குண்டதுமான இருதயத்துடன் வந்து சேரும் அனைவருக்கும் நிச்சயமாக ஒரு "ஆசீர்வாத(மான) பள்ளத்தாக்காகவே" இருக்கும்.

"*மலைகளின் பள்ளத்தாக்கு வழியாக ஓடிப்போவீர்கள்*" என்று இஸ்ரயேலரைப் பார்த்து தான் கூறப்பட்டிருக்கிறது என்பதை நாம் நினைவு கூறவேண்டும். அத்தோடு கூட இஸ்ரயேல் என்ற ஒரு பெயரே "கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனம்," "தேவனுடைய ஜனம்," "கர்த்தருடைய ஜனம்," என்பதையே குறிக்கிறது. (2 நாளா 7:14) நாம் பார்த்த வண்ணமாகவே, ராஜ்யத்தின் முதல் அல்லது ஆவிக்குரிய ஆசீர்வாதம் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கே வரும், இரண்டாவது அல்லது பூமிக்குரிய ஆசீர்வாதம் மாம்சீக இஸ்ரயேலரி-ருந்து ஆரம்பிக்கும், இருந்தாலும் அது அங்கேயே நின்றுவிடாது; ஏனெனில் ஆபிரகாமின் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் கைக்கொள்வதினால், எல்லா மானிடருமே இஸ்ரயேலராக, உண்மையில் தேவனுடைய ஜனமாக மாறமுடியும் என்பதால் இஸ்ரயேலராக மாறக்கூடிய யாருக்குமே இந்த ஆசீர்வாதம்

கிடைக்கும். ஆகையால் ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறபடி, தேவனுடைய ராஜ்யத்தின் நிர்மாணத்தில், தெய்வீக ஆசீர்வாதத்தை பெறுவதற்காக இஸ்ரயேல் திரும்பவும் அழைக்கப்படுகிறபோது, அது "என் நாமம் (யேகோவாவின்) தரிக்கப்பட்ட யாவரையும்" சேர்த்து அழைக்கும். (ஏசா 43:7) ஏனெனில், "நான் என் மகிமைக்கென்று (அவர்களை) சிருஷ்டித்து, உருவாக்கி படைத்தேன்." (அப்பொழுது இஸ்ரயேல் என்ற பெயர் தேவனுடைய ஜனமாகிய யாவருக்கும் பொருந்தும்). ரோம 9:26,33 ; 10:13

மேலும் (இவ்வண்ணமாக) "என் தேவனாகிய யேகோவா வருவார். தேவரீரோடே (இவ்வண்ணமாக) எல்லா பரிசுத்தவான்களும் (இணைக்கப்பட்டு) வருவார்கள்." (சக 14:5) தேவனுடைய நேரம் முழுமையாக வந்துவிட்டபோது புறஜாதியாரின் ஆளுகைக்குரிய காலம் கடந்து போனபோது, மேன்மைமிகு ஒப்புரவாகுத-ன் நாளுக்கான ப-கள் யாவும் நிறுத்தப்படும்போது, பிரதான ஆசாரியர் தம்முடைய சொந்த சரீரமாகிய சபைக்கு மட்டுமின்றி, தன் வீட்டாருக்கும் எல்லா மனுஷருக்கும் உரிய ஒப்புரவை ஏற்படுத்தித் தீரும்போது, அவர் எல்லா ஜனத்தையும் ஆசீர்வதிக்கும்படியாக எழுந்து வருவார். அப்பொழுது யேகோவாவின் சாபம் அல்லது மரணம், பூமியி-ருந்து நீக்கப்பட்டு, அவரது பாதபடி மறுபடியும் தெரிந்து கொள்ளப்பட்டு, நீதி, சத்தியம் மற்றும் அன்பின் பரிசுத்த ஆவியினால் அதனை அழகுபடுத்துவது ஆரம்பமாகி, ஆயிரவருட ஆட்சியின் முடிவு வரையிலும் முன்னேறி, முழுமனதுடன் நீதியாக இருக்கும் யாவரும் பூரணமடையும் வரையிலும், அல்லது (யேகோவாவின் இடத்திற்கு) யேகோவாவோடு மறுபடியும் இணைக்கப்படும் வரையிலும், தொடரும். இதை விரும்பாத மற்றெல்லாரும் அழிக்கப்படுவார்கள். அப். 3.23; வெளி 20:9

இந்த விளக்கத்தை இன்னும் தொடர்ந்து விவரிக்கும் தீர்க்கதரிசி, இந்த பூமி படிப்படியாக மகிமை பெற்று யேகோவாவின் பாதபடியாக மாறும் அந்த நாளைக் குறித்துத் தெரிவிப்பதாவது :

"அந்நாளில் வெளிச்சம் இல்லாமல், ஒருவேளை பிரகாசமும், ஒருவேளை மப்புமாயிருக்கும். ஒருநாள் உண்டு, அது கர்த்தருக்கு



தெரிந்தது. அது பகலுமல்ல, இரவுமல்ல; ஆனாலும் சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும்". சக 14:6,7

இங்கு விவரிக்கபட்டிருக்கும் நாளை சிலர் "பழிவாங்கும் நாள்" ஆகிய "இருளும் அந்த காரமுமான நாள், அது மப்பும், மந்தாரமுமான நாள்" என்பதுடன், குழப்பிக் கொள்கின்றனர். (யோயே 2:2; செப் 1:15). மேலும் மொழி பெயர்ப்பாளர்களும் கூட இதற்கு இசைவாக மொழி பெயர்த்திருப்பது தெரிகிறது. ஆனால் அது அப்படி அல்ல; இங்கு சகரியாவால் அரையிருட்டாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பது ஆயிர வருட ஆட்சியையே. ஆயினும் இதில் நீதியின் சூரியன் பாவம், மூடநம்பிக்கை, மரணம் ஆகிய தீமைகளை பூமியின் மீது உண்டாக்கும் சக்தியைச் சிதறடிக்கும் வண்ணம் எழும்பிப் பிரகாசிக்கும். இருப்பினும் அது பாதியளவிற்கே வெளிச்சமாக இருக்கும். ஏனெனில் கல்லறையில் இருந்து எடுக்கப்பட்டவர்களான வீழ்ந்து போன சந்ததியாரை, பூரணத்தை நோக்கி பல்வேறு நிலைகளான சீரமைப்பின் முலமாக தலைமுறை தலைமுறையாக அது செயல்படுத்தும். ஆனால் யேகோவாவின் பாதம் அவரது பாதபடியின் மீது மறுபடியும் நிறுவப்படப்போகும் அந்த நாளுக்குப் பிறகு காரிருள் என்பது இருக்கப் போவதில்லை. அத்தோடு கூட அந்த ஆயிர வருட நாளின் முடிவில், இருள் கூடிப்போவதற்கு பதிலாக, யேகோவாவைப் பற்றி அறிவின் வெளிச்சத்தின் உச்சத்திற்கு உலகம் சென்றடையப்போகிறது. அதன் சூரியன் இனி என்றுமே மறைவதில்லை என்றும் நிச்சயப்படுத்துவது எத்தனை புத்துணர்ச்சியை ஊட்டுகிறதாக இருக்கிறது.

அந்நாளிலே ஜீவதண்ணீர் எருசலேமி-ருந்து புறப்படும் என்று சுட்டிக்காட்டியிருப்பது ஆயிரவருட அரசாட்சியின் போது யேகோவாவின் பாதபடியின் மேல் அவரது ராஜ்யம் மறுபடியும் நிறுவப்படும் போது தான். (சக 14:8,9) இது எசே 47:1-12 மற்றும் யோவானின் வெளிப்படுத்துதல் (22:1,2) ஆகியவற்றின் சாட்சிகளோடு ஒத்துப்போகிறது. இதே ஜீவதண்ணீர்தான் ஆயிரவருட ஆட்சியின் சிங்காசனத்தி-ருந்து புறப்படும் என்று திரும்பப்பெறும் ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்தி நமக்குக் காட்டுகிறது. இதனிடத்திற்கு வரும் எவரும் இலவசமாக அந்த நீரை பருகலாம், கனி தரும் ஜீவ விருட்சத்தின் இலைகளோ பூரணமற்ற மனந்திருந்திய ஜனங்கள் யாவரும் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவாயிருக்கும்.

ஆம், அந்நாளிலே கர்த்தர் தாமே இப்பூமியனைத்தின் மேலும் ராஜாவாக இருப்பார். அவருடைய உண்மையுள்ளவர்களின் நெடுநாளைய ஜெபத்தின்படியே அவரது ராஜ்யம் வந்திருக்கும். மேலும், அந்த நாளின் முடிவிலே பரலோகத்தில் அவரது சித்தம் செய்யப்படுவது போலவே பூமியிலேயும் செய்யப்படும். எழுதப்பட்டிருக்கிறவிதமாகவே தேவனுடைய பாதபடியானது உண்மையில் மகிமைப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

**"பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்."**
***எண். 14:21; ஏசா 11:9; ஆப 2:14***

*"இந்த உலகத்தை நாசப்படுத்தும் ஏதொன்றுக்கும்*
*அந்த புதிய பூமியில் இடமிருக்காது;*
*அந்த இரண்டாம் பிறப்பை எந்த தீங்கும் களங்கப்படுத்தாது-*
*எந்த சாபமும் இனி இராது.*
*நொறுங்குண்ட இருதயத்தாரே ,*
*உங்கள் புலம்பலை நிறுத்துங்கள்;*
*வாக்குத்தத்தத்தின் நாள் உங்களுக்காகவே உதிக்கிறது;*
*ஏனெனில் நான் சிங்காசனத்தில் அமர்ந்திருப்பவர் கூறுகிறார்,*
*'நான் எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன்.'*

*"மரித்தோருக்காக நாம் துதிக்கிறோம்,*
*ஆனால் அவர்கள் எழும்புவார்கள் !*
*இழந்தவர்கள், ஆனால் மீண்டும் திரும்ப*
*கொடுக்கப்படுவார்கள் !*
*ஓ ! பரிசுத்த வார்த்தைகள் இல்லாதிருப்பின்*
*நமது மனித இருதயம் உடைந்துபோயிருக்கும் !*
*மங்கிய கண்களே காணுங்கள் !*
*துக்கமான இருதயமே களி கூறுங்கள் !*
*தேவனுடைய வாக்குதத்தத்தின் வானவில்-ன் மூலமாய்*
*பார்த்து, 'நான் எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன்' என்ற*
*தீர்க்கதரிசன குரலைக்கேட்டு."*

***அ அ***